# குமுதம்

1-9-1991
TO
16-12-1991

[இதழ். 5,6,7,8,
9,10,11,12]

JL-
V211ɱ N46
N11.225

# தமிழரசு

1-9-1991 ரூ.1





## உடல் ஊனமுற்றோர் பேருந்தில் பயணம் செய்ய இலவச அட்டைகள்

உடல் ஊனமுற்றோருக்குப் போக்குவரத்துக் கழக நகர-புறநகரப் பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய அடையாள அட்டைகள் வழங்குவது பற்றி அரசு ஆராய்ந்தது.

சமூக நலத்துறை வழங்கும் அடையாள அட்டையிலுள்ள ஊனத்தின் தன்மை-அளவு பற்றிய மருத்துவ அலுவலரின் சான்றிதழின் அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்கள் இலவசப் பயணச் சலுகை வழங்கும்.

ஊனத்தின் தன்மை, அளவு, விகிதம் ஆகியவை பற்றி அளவிடப்படும் ஊனத்தின் அளவு 50 சதவிகிதம் அல்லது அதற்கு மேல் இருக்கும் ஊனமுற்றவர்கள் மட்டுமே இலவசப் பயணச் சலுகை பெறத் தகுதியுடையவராவர்.

தற்போது நடைமுறையில் உள்ளவாறு கல்வி நிறுவனம் மருத்துவமனை பணியிடம் செல்லும் ஊனமுற்றவர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து ஓர் சான்றிதழ் வாங்கி அளித்தல் வேண்டும்.

மருத்துவமனை, பள்ளி, பயிற்சி நிலையம், கல்லூரி, பணியிடம் மற்றும் அனைத்து இடங்களுக்கும் சென்று வருவதற்கான அனைத்துப் பயணங்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ளது போல் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை தொடரப்படும் (நடைமுறையில் மாற்றம் ஏதும் இல்லை).

மருத்துவமனை, பள்ளிக்கூடம் ஆகியவற்றுக்குச் சென்றுவர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) 15 வயது வரை உள்ள மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வரும் இலவசப் பயணச் சலுகை, இனி கல்லூரிப் பயிற்சி நிலையம் சென்று திரும்ப 20 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் அனுமதிக்கப்படும்.

மருத்துவமனை தவிர, பள்ளிக்கூடம், பயிற்சி நிலையம் பணியிடம் சென்று திரும்பி வருவதற்கு வழங்கப்படும் இலவசப் பயணச் சலுகை, இனம் ஆறில் உள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்ட 13 நிறுவனங்கள் மட்டுமல்லாமல் அரசு சமூக லத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட மனவளர்ச்சி ன்றியவர்களுக்கான நிறுவனங்களில் கல்வி யிற்சி பெறும், பணிபுரியும் மனவளர்ச்சி குன்றிய ர்களுக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் ழகம் தவிர) இலவசப் பயணச் சலுகை வழங்கப் டும். மேலும் அவருடன் ஒரு உதவியாளர் அட்டெண்டர்) சென்றால், அவருக்கும் இலவசப் யணச் சலுகை வழங்கப்படும். ●

## இந்த இதழில்...


ஒற்றுமை காப்போம்
உரிமைகளை மீட்போம்!
—முதல்வர் உரை ... 2
மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற மாபெரும் அரசு நலத்திட்ட விழா ... 7
நல்லாசிரியர்களை நாடு மறவாது ... 15
தென்னாட்டுத் திலகர் வ.உ.சி. ... 17
நாணயத்தின் கதை ... 19
மகளிர் கல்வி வளர்ச்சி ... 20
மதுவை மறப்பீர் ... 22
வளரும் வேளாண்மை ... 23
நிலம், நீர், பயிர் ... 27
குழந்தைத் தொழிலாளர் பிரச்னைகள் ... 30
ஒவ்வாமை ... 33
மத்திய அரசுக்கு மாண்புமிகு முதல்வர் கோரிக்கை ... 41
துரித இரயில் போக்குவரத்து ... 44



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஆவணித் திங்கள் - 16

மலர்:22 இதழ்:5

1-9-1991




162343

# ஒற்றுமை காப்போம் உரிமைகளை மீட்போம்!

## 45-ஆம் விடுதலை நாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் முழக்கம்

இந்தியாவின் 45-வது சுதந்திரநாள் விழா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

15.8.1991 அன்று காலையிலேயே புனித ஜார்ஜ் கோட்டை, விழாக் கோலம் பூண்டிருந்தது. கோட்டைக் கொத்தளம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் எனப் பலரும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்தனர்.

சரியாக 8.30 மணிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கோட்டைக் கொத்தளத்தின் அருகே அமைந்திருந்த வணக்கம் ஏற்கும் மேடையருகே வந்தார். அவரைத் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்று அங்கு ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் கோவாவைச் சேர்ந்த முப்படை ராணுவ உயர் அதிகாரிகளையும், மாநிலக் காவல்துறை உயர் அதிகாரிகளையும், சென்னை மாநகர ஷெரீப் அவர்களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். பின்பு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்று அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்துச் சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களின் விடுதலை நாள் விழா கொடியேற்றுச் சிறப்புரை:

மகிழ்ச்சிகரமான இவ் விடுதலை நாளில், தமிழக அரசின் தலைமையகத்தில் நடைபெறும் கொடியேற்று விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள, என் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தாய்த்திரு நாட்டின் மணிக்கொடியை, வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கோட்டையில் ஏற்றுவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்; இத்தகைய அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ள தமிழகத்துச் சான்றோர்கள் - பெருமக்கள் - தாய்மார்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்வதோடு, அனைவருக்கும் என் இனிய விடுதலை நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



அந்நியர்கள் நம் மண்ணில் முதன் முதலில் காலெடுத்து வைத்துக் கட்டிய இக்கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல், உடைமைகளை ஈந்த பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.



இந்திய நாட்டில் அமைந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்றரசுகள் நமது பெருமைகளை மறந்து, தங்களுக்குள் சண்டையிடுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்ததால்தான், தேசிய உணர்வு அவர்களிடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்றுவிட்ட நிலையில், அடிமை வாழ்வு நாம் அழைக்காமலேயே குடியேறியது; நமது சுயமரியாதையையே அடித்து வீழ்த்தியது.

இந்தப் படிப்பினை நமது நினைவில் இன்றும் நிலைத்திருப்பதால்தான் பல்வேறு மொழியினர், வெவ்வேறு இனத்தவர் நிறைந்து வாழும் நிலையிலும், நாம் பெருமையோடு உலக அரங்கில் மிகப் பெரிய மக்களாட்சி எனும் மாட்சிமையோடு தலை நிமிர்ந்து நிற்கிறோம். இப்பெருமையை நாம் ஒவ்வொருவரும் என்றென்றும் கட்டிக் காக்க வேண்டும் என்று உறுதி கொள்ள வேண்டும் என்பதை இவ்வேளையில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

மக்களாட்சி சிறப்பு கொண்ட இந்திய நாடு, என்றென்றும் இதே புகழோடு திகழ வேண்டு

பலவீனத்தின் தன்மைகளை உணர்ந்துதான், இந்தியாவின் முதல் சுதந்திர தினத்தை வாழ்த்தி வரவேற்றபோது டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் - "நாளைக் காலை முதல் நமது தவறுகளுக்காக நாம் வெள்ளைக்காரர்களைக் குறைகூற முடியாது" என்று கருத்துத் தெரிவித்தார். அவரது இந்த வார்த்தைகளுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு. நம் ஒவ்வொருவரது கடமையினையும், பொறுப்பினையும் உணர்த்தும் வாசகங்களாகவே அவை திகழ்கின்றன.

# நாமிருக்கும் நாடு இந்தியா; நாம் அனைவரும் இந்தியரே!

மெனில், நமக்குள் போட்டி பொறாமைகளை வித்திட்டு, வேதனைகளை வளர்ப்பதைத் தவிர்த்து, ஒற்றுமை உணர்வோடு, ஒருமைப்பாட்டைப் பேணிக் காப்பது ஒவ்வொருவரின் இன்றியமையாக் கடமை ஆகும். நமக்குள்ளே மறைவாக உறங்கிக் கொண்டிருக்கும் சாதி, இன, மதவாத

சாதி, மத, இன, மொழி, வேறுபாடின்றி 'இந்தியா எங்கள் நாடு' என்னும் ஒற்றுமை உணர்வைப் பேணுதல் தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். பல்வேறு இன மக்கள் வாழும் மொழிவாரி மாநிலங்கள் சேர்ந்த கூட்டாட்சியின் தொகுப்புதான் நம் குடியாட்சி.

# கச்சத் தீவைத் திரும்பப் பெற வாதாடவும் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைத் தான் இந்தியா திரும்பப் பெற்றதேயன்றி, தான் இழந்த செல்வச் செழிப்பைப் பெற இயலவில்லை. ஆயினும், அறிவும், ஆற்றலும் நிரம்பிய மக்களையும், இயற்கை வளம் கொழிக்கும் நாட்டையும் பெற்றுள்ள நாம், பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ளது மிகவும் வேதனைக்குரியது. வெறும் பேச்சுக்களால் வெற்றியை உருவாக்கிட முடியாது. சுதந்திரம் பெற்ற நரட்டில் உரிமை கேட்கிற மக்கள், தங்கள் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற முன் வரவேண்டும். நம்மை வாய்ச்சொல் வீரர்களாக்கப் பெறப்பட்டதல்ல சுதந்திரம். பல நூறு ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த சோம்பலை விரட்டி, நம்மை நாமே -வளர்த்துக் கொண்டு, வாய்மை மிக்க ஓர் சமுதாயத்தை உருவாக்க, நாம் பெற்ற உந்து சக்தியே சுதந்திரம் ஆகும்.

ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியிலும் நாட்டின் ஒருங்கிணைந்த நலன் உறைந்து கிடக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். அதேபோல் பல்வேறு மாநிலங்களின் வளர்ச்சிதான் பரந்துபட்ட இந்தியாவின் உயர்வுக்கு ஊக்கமளிக்கும் என்பதையும் நாம் உணர வேண்டும். இதனைத் தான்- தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர் சமுதாயப் புரட்சி பூத்துக் குலுங்கும் கருத்துக்களாகத் தெரிவித்துள்ளனர். ஒன்றுபட்ட நமது இந்தியாவின் ஒருமைப்பாடு காக்க உறுதி பூணும் அதே நேரத்தில், நமது உரிமைக்காகக் குரல் கொடுக்கவும் நாம் தயங்க மாட்டோம் என்பதை இதன் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



இத்தகைய கடமை உணர்வுகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான், பொறுப்பேற்றுள்ள எங்கள் புதிய அரசு தீமைகளைக் களைந்து மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும், துரித வளர்ச்சிக்கும் வேண்டிய திட்டங்களைத் தீட்டி, அவைகளைக் காலத்தோடு செயல்படுத்திட அளவு கடந்த ஆர்வம் கொண்டுள்ளது. குறிப்பாக - தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்திய நாட்டின் முதன்மை மாநிலமாக்குவது என்பதை இலட்சியமாகக் கொண்டு இந்த அரசு தற்போது முனைப்பான பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழில் மேம்பாட்டுக்காகத் தொழில் முனைவோருக்கு எவ்வகையிலெல்லாம் உதவ முடியுமோ அத்தனை வகையிலும் எங்கள் அரசு உதவிட முன் வந்துள்ளது. அரசு அளித்து வரும் இந்த ஊக்கம், தொழில் துறையில் நமது மாநிலம் ஆக்கம் பெற அடிகோலும் என்பது திண்ணமாகும்.

சமூகப் பிரச்சினையை அணுகுவதிலும் இவ்வரசு மிகுந்த அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளது. கோடிக்கணக்கான தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதை இலட்சியமாகக் கொண்டு, மக்களுக்குத் தேர்தலின்போது கொடுத்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், ஆட்சி ஏற்றதும் முதல் நடவடிக்கையாக மலிவு விலை மதுக்கடைகளை மூடியதை நீங்கள் அறிவீர்கள். ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே நாங்கள் பிறப்பித்த முதல் ஆணை இதுதான்! மேலும், பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கிற வகையில், தொழில் துறையில் அவர்கள் துணிந்து பங்கேற்கிற வகையில் எல்லா ஏற்பாடுகளும் செய்து வருகிறோம். நமது மக்கள் தொகையில், ஏறத்தாழ பாதிப்பேராய் இருக்கிற மகளிரைப் பாதுகாப்பாக உயர்த்தி விடுவதுதான் சுதந்திரம் பெற்ற நாகரிகமுள்ள சமூகத்தில் ஒரு அரசின் கடமை என்ற கருத்தில் பெண்கள் முன்னேற்றம், பெண்கள் உயர்வு ஆகியவற்றுக்கு எல்லா முன்னுரிமைகளும் வழங்கப்படும்.

அடுத்து - பொது அமைதி எந்த வகையில் நாட்டில் பாதிக்கப்பட்டாலும், அது ஒருவகையில் நாம் பெற்ற சுதந்திரத்தை ஊனப்படுத்தும் ஒரு தீமையேயாகும். என எங்கள் அரசு உறுதியாக நம்புகிறது. பண்பட்ட நமது மக்களைத் தவிப்பிற்கும், குழப்பத்திற்கும் ஆளாக்கும் எந்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டுத் தீய சக்திகளையும் நம் தமிழ்நாட்டில் வளர அனுமதிக்க முடியாது. அமைதிப் பூங்காவாய்த் திகழ்ந்த தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டதால் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் இருப்பதை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதை அனைவரும் அறிவீர்கள். அவர்கள் தங்களின் முகவரியைக் காவல் நிலையங்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நம் அரசு காட்டுகிற அனுதாபத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மறைமுகமாக அநீதிகளைக் கட்டவிழ்த்துவிட்டுப் பழியைப் பலவீனமானவர்கள் மீது போட, நாம் எவரையும் அனுமதிக்க இயலாது என்பதால் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசு கண்டிப்புடன் நடந்துகொண்டது.

தமிழகத்தின் பொது அமைதிக்குப் பங்கமுண்டாக்கியதோடு, சமீப காலமாக இந்தியப் பாதுகாப்புக்கும் சவால் விடும் போக்கில் தமிழகத்தில் நடந்து கொண்ட வெளிநாட்டுத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கண்டிப்புடன் அடக்கியுள்ள

திரும்ப நாம் பெற மைய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்படின் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இது எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்த ஓர் வாக்குறுதி ஆகும். இந்திய விடுதலை நாள் விழாவில் நாம் இழந்த இந்த மண்ணின் ஓர் பகுதியைத் திரும்ப மீட்கும் தூளுரையாக இதனைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அனைத்துத் துறைகளிலும் நமது மாநிலம் ஒருங்கிணைந்த முன்னேற்றம் காணவேண்டுமென்பதற்காகவும், எங்களது இலட்சியங்கள் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகவும், அதற்கான நிதி உதவியினைக் கோரும் பொருட்டு, நாங்கள் மைய அரசை அணுகியிருக்கிறோம். பல்வேறு நலத் திட்டங்களுக்கும், ஆக்கப் பணிகளுக்கும், மற்றும் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு போன்ற அவசர நடவடிக்கைகளுக்கும் தற்போது அதிக நிதி உதவி தேவைப்படுகிறது. எனவே, வரலாறு காணாத வெற்றியை அளித்து ஆட்சிப் பொறுப்பில் எங்களை அமர்த்தியுள்ள தமிழகத்து மக்களின் மேம்பாட்டிற்காக, மைய அரசிடம் நமக்கு வேண்டிய நியாயமான நிதி உதவியை நட்புறவோடு

# தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக்குவோம்!

தமிழகக் காவல் துறையினை, இத்தருணத்தில் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். பொதுமக்களுடனும், அப்பாவி அகதிகளுடனும் இரண்டறக் கலந்து, திட்டமிட்டு நம் மாநில அமைதியைக் கெடுத்துவந்த கூட்டத்தின் நடமாட்டம், இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதற்குத் தமிழகக் காவல் துறையின் தனித் திறமையும், அவர்களது கைகளைக் கட்டிப்போடாது சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்த அரசின் அணுகுமுறையுமே காரணம் என்பதை நல்லுள்ளம் கொண்டோர் அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

இலங்கைப் போராளிகளைக் கட்டுப்படுத்த அரசு எடுத்த சில தீவிர நடவடிக்கை காரணமாக, தமிழகக் கடற்கரை மீனவர்கள் சில சிரமங்களுக்கு ஆளானதை அறிந்து அரசு அவர்கள் பாதிப்புக்குள்ளாகாத வகையில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக, இராமேஸ்வரம் மீனவர்களின் பாதிப்புக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள கச்சத் தீவு பிரச்சினையில் ஓர் தீவிர முடிவை அரசு எடுக்க உள்ளது. நம் தாயகத்திற்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரை வார்த்த காரணத்தால், இன்று நம் மீனவர்கள் தங்கள் வலைகளைக் கூட உலர்த்திக் கொள்ள அத்தீவின் அருகில் நெருங்க முடியாத அவல நிலை உள்ளது. எனவே கச்சத் தீவைத்

கேட்டுப் பெறுவது கூட, இந்திய சுதந்திரம் நமக்கு வழங்கியுள்ள ஆரோக்கியமான ஒரு நிர்வாக நடைமுறை ஆகும்.

பரந்த எல்லைகள் கொண்ட நம் இந்தியா போன்ற ஒரு பெரிய நாட்டில் நாம் விரும்பாமலேயே நமக்குள் தோன்றுகிற பிரச்சினைகள் ஏராளமாய் உள்ளன. மாநிலங்களிடையே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும்போது நியாயமும், நியாயத்தின் அடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க முடியும். அதுதான் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவும். அடிப்படையான நியாயத்திற்குப் புறம்பாக எம் மாநிலமும் சென்றிடாது கண்காணித்துக் கட்டுப்படுத்தும் பொறுப்பு மைய அரசுக்கு உண்டு.

இந்த அடிப்படையில்தான் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் நாம் நியாயத்தை எடுத்துக் கூறி வருகின்றோம். காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை இந்த அரசின் முழு முயற்சியையும், கவனத்தையும் தற்போது ஈர்த்துள்ளது.

தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையும், மாநிலம் முழுவதும் ஒட்டுமொத்தமாகக் குரல் கொடுத்துச் செயல்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையுமான, காவிரி நதி நீர்ப்

பங்கீட்டுப் பிரச்சினையில் நாம் நியாயம் கேட்டு மைய அரசைத் தலையிடக் கோரி வருகிறோம். நீதி எவர் பக்கம் என்பதை இந்தியத் துணைக்கண்டமே அறிந்துள்ளதால், இப்பிரச்சினையில் நாட்டை ஆளும் தலைமைப் பொறுப்பிலுள்ள மைய அரசு தனது கடமையைச் செய்தாலே போதுமானது. இந்தச் சுதந்திர நன்னாளில் அந்த நியாயத்தின் குரலை அனைவரும் கேட்கிற வகையில் நாம் உரத்த குரலில் மீண்டும் முழங்குவோம். காவிரி நதி நீர்ப் பிரச்சினை தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனி மனிதனின் பிரச்சினை ஆகும். "There is no scope any more for negotiations or talks to settle this issue. We want only a judicial settlement which must be honoured by one and all".

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க இனிப் பேசிப் பயனில்லை. நீதிமன்ற ஆணை ஒன்றே இனி இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்பதை வற்புறுத்திட விரும்புகிறேன். அத்தகைய நீதித்துறை ஆணை ஒவ்வொருவராலும் மதிக்கப் பட வேண்டும்: ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அது தவிர, இனி பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை அரசின் சார்பில் ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1981-ஆம் ஆண்டு தனது சுதந்திர தின உரையினை வானொலியில் நிகழ்த்தும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் - ''வேறு சில நாடுகளைப் போலல்லாமல் ஜனநாயக நெறியிலேதான் பொருளாதார மாற்றம் வந்தாக வேண்டும் என்பது நமது தெளிவான கொள்கையாக இருந்து வருகிறது. சிலருக்கு நோக்கங்கள் மட்டும் முக்கியமாக இருக்கலாம். நமக்கு, அவற்றை அடைய நாம் கடைப்பிடிக்கும் வழிகளும் முக்கியமானவை'' என்று தெளிவுபடக் கூறினார். அதே கருத்தைத்தான் நானும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் இந்த நாளில், தமிழ்நாட்டு மக்களின் உரிமைக்காகவும், நியாயத்திற்காகவும் ஜனநாயக முறையில் நாங்கள் கடைசி வரை போராடுவோம், அதை அடையும்வரை ஓயமாட்டோம் என்று உறுதி கூறுகிறேன்.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அயலாரின் ஆதிக்கம் தனி மனிதனையும், நம் செல்வ வளர்ச்சியையும் சிதைத்தாலும், நமது வரலாற்றையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் அதனால் காயப்படுத்த முடியவில்லை. எனவேதான் இவைகளின் தொன்மையை, மேன்மையை, செழுமையைத் தேடி இன்று வரை மேற்கத்திய நாடுகள் நம்மை நாடி வந்து கொண்டிருக்கின்றன. நமது பண்பாட்டின் நிலைக்கலன்களாய், பழமையின் தூதுவர்களாய், கலை மற்றும் கலாச்சாரத்தின் காவலர்களாய் நின்று நிலைபெற்று வரும் திருக்கோயில்களை அந்த நோக்கத்தோடுதான் பொதுமக்கள் உதவியோடு செப்பனிட்டுச் சீரமைக்கிற பணியினை நான் தற்போது துவக்கியுள்ளேன். நமது

> முதலில் தொண்டு, பின்பு தன்னலம் என்ற மனப்பக்குவம் அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் நல்ல சமுதாயம் உருவாகும்.
>
> —டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்

வாழ்வில் நல்லவை, கெட்டவைகளை ஆராய்ந்து அறிந்து வழிகாட்டுகிற ஆசிரியர்களாகத் தமிழகத் திருக்கோயில்கள் விளங்கி வருகின்றன. அவைகளைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் நமது தலையாயப்பணி; பராமரிப்பது நமது பாரம்பரியக் கடமை ஆகும்.

மக்களின் நலன் காக்கவே இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது. சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட - புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கும், மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் அடிகோலும் எங்கள் அரசு, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதில், பாதுகாப்பு அரணாகத் திகழும் என்பதை, இந்த நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையினையும் பேணிக்காப்போம். இழந்த நம் உரிமைகள் அனைத்தையும் விரைந்து மீட்போம்.

''நாம் இருக்கும் நாடு இந்தியா
நாம் அனைவரும் இந்தியரே'' -
என்ற முழக்கம் திக்கெட்டும் பரவச் செய்வோம்.

இருபத்தி ஒறாம் நூற்றாண்டை நோக்கி - தொலைநோக்கப் பார்வையோடு இந்தியாவை வளமுள்ளதாகவும் - வலுவுள்ளதாகவும் உருவாக்கிட அயராது உழைப்போம்! வெல்வோம்! என இச்சுதந்திர நாளில் கூறுரைத்து,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

●●●●●●

சுதந்திர நாள் சொற்பொழிவு நிறைவு பெற்ற பின், ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்களையும், உணவுப் பொருட்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். சுமார் 3000 ஏழைகளுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதும் நடைபெறும் முதல் சுதந்திர நாள் விழா இனிதே நடந்து முடிந்தது.

நமது செய்தியாளர்





# மாண்புமிகு முதல்வர் பங்கேற்ற மாபெரும் அரசு நலத்திட்ட விழா!

## இலட்சோப இலட்சம் மக்களிடையே மாண்புமிகு முதல்வரின் எழுச்சிமிகு உரை!

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பர்கூர் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை (21-8-1991)**

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நல்லாட்சியை மீண்டும் தமிழகத்தில் உருவாக்கிய பின், நான் முதலாவதாகக் கலந்து கொள்ளும் முதல் பொதுக்கூட்ட நிகழ்ச்சியான இச்சீரிய விழா நிகழ்ச்சியின் தலைவர், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

என் வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே! இதய தெய்வம் புரட்சித் தலைவரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான அருமை உடன்பிறப்புக்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! தலைமைச் செயலர் அவர்களே! அரசு அலுவலர்களே! அனைவருக்கும் முதற்கண் என் அன்புகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயக இந்தியாவில் இது வரை எந்தக் கட்சியும் எம்மாநிலத்திலும் பெறாத ஓர் மகத்தான வெற்றியைப் பெற்று, மக்களாட்சி மாண்பின் எடுத்துக்காட்டான ஒரு நல்லாட்சியை அமைத்தபின், இன்று தான் முதன்முதலாக் இலட்சோப இலட்சமென, சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் எதிரே இருக்கும் வங்கக் கடல் மெல்ல மெல்லக் கடந்து வந்து, பர்கூர் அருகே அலை வீசுகிறதோ என வியக்கும் வண்ணம், திரண்டு வந்து கூடியுள்ள உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றமைக்காக, என் பெருமகிழ்ச்சியினையும் நன்றியினையும் உங்கள் அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக, இன்றைய தினம் அமைந்துள்ள நல்லாட்சிக்குத் தலைமை ஏற்கும் வாய்ப்பினை நான் பெற, அடிப்படைக் காரணகர்த்தாக்களான என் மரியாதைக்கும் வணக்

## சென்னையிலிருந்து பர்கூர் வரை

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் சொந்தத் தொகுதியான பர்கூரில் உள்ள (தர்மபுரி மாவட்டம்) மாதேபள்ளி எனும் கிராமத்தில் நடைபெறும் அரசுவுயர் விழாவில் கலந்து கொள்ள, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.8.91 அன்று காலை 5.30 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டார்.

முதல் அமைச்சராகப் பொறுப்பு ஏற்றபின் அவர் தலைநகர் சென்னையை விட்டு வெளியூரில் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி இதுவே ஆகும். அவர் சென்னையிலிருந்து பர்கூர் செல்லும் வழி நெடுக அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பில் முதல்வருக்குக் குதிரைகள், யானைகள் அணிவகுப்புடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நூறு பெண்கள் கைகளில் விளக்குகளை ஏந்தி முதல்வரை அன்புடன் வரவேற்றார்கள். ஏராளமான கார்கள் பின்தொடர, போரூர், பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம் வழியாக முதல்வர் அவர்கள் காஞ்சிபுரத்தை அடைந்தார். அங்கே அவரை செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஷீலா பிரியா அவர்கள் வரவேற்றார். சென்னையிலிருந்து பர்கூர் வரையில் உள்ள பாதை முழுவதும் அலங்கார வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டு திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

பர்கூர் மாதேப்பள்ளியில் கூடியிருந்த பத்து இலட்சம் மக்களின் பலத்த ஆரவாரத்திற்கிடையே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் காலை 11.30 மணிக்கு நன்கு அலங்கரிக்கப்பட்ட விழா மேடைக்கு வந்தார். பர்கூர் இதுவரை கண்டிராத பிரம்மாண்டமான இவ்வினிய அரசுவுயர் விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றுச் சொற்பொழிவாற்றினார்.

அதையடுத்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழில் வளாகம், குடிநீர், குடியிருப்பு, பாலங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், புது மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் சில கட்டடங்கள் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி புதிய பேருந்து வழித்தடங்கள், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

விழாவில், தமிழ்நாடு கனிம நிறுவன நிர்வாக இயக்குநர் திரு.அ.ந.தியாகேசுவரன்,இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து தொழிற்துறைச் செயலர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., தலைமைச் செயலர் திரு.டி.வி.வெங்கட்ராமன், இ.ஆ.ப., டெல்லியில் உள்ள மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு.மு.தம்பிதுரை, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. பி.எம்.செல்வகணபதி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.இந்திரகுமாரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ.மதுசூதனன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அதைத் தொடர்ந்து பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். கிணற்றில் தவறி விழுந்தவர்களைக் காப்பாற்றிய கூத்தாளைப்பட்டி சம்பத்குமார், சொத்தூர் வேடியப்பன் ஆகியோருக்கு அரசு சார்பில் தலா ரூ.4 ஆயிரமும், தமது சொந்தப் பணத்தில் இருந்து ரூ.5 ஆயிரமும், குடியரசுத் தலைவரின் பதக்கங்களையும் வழங்கினார்.

இம் மாபெரும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தங்கக் கிரீடம் உள்பட பல நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

— தொகுப்பு: என். இளங்கோ

---

கத்திற்கும் உரிய பெருமை மிக்க பர்கூர் வாக்காளப் பெருமக்கள் அனைவரையும் சந்திப்பதிலும், அவர்கள் அனைவர்க்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குவதிலும் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் நான் பர்கூர், காங்கேயம் ஆகிய இரு தொகுதிகளிலும் பல்லாயிரகணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெற்றேன். இருந்தும் காங்கேயம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, பர்கூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் நான் தக்கவைத்துக் கொண்டிருப்பதில் இருந்து, மிகப் பின்தங்கிய நிலையில் உள்ள இத்தொகுதியின்பால் நான் கொண்டிருக்கும் பிடிப்பினை அனைவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

பொதுவாகத் தர்மபுரி மாவட்டமே மிகப் பின்தங்கிய வறட்சி மிகுந்த மாவட்டமாகும். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இம்மாவட்டத்திலேயே மிகப் பின்தங்கிய தொகுதி பர்கூர் தொகுதியாகும். தர்மபுரி மாவட்டத்தில், நாடு சுதந்திரம் அடைந்த கடந்த 44 ஆண்டுகளாக இங்கே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் தமிழக அமைச்சரவையில் இடம் பெறவே இல்லை என்ற குறைபாடு இருந்து வந்துள்ளது. அந்தக் குறையைப் போக்கும் வகையிலும், அமைச்சராகத் தானே இதுவரை எவரும் இந்த மாவட்டத்தில் இல்லாத குறை இருந்துள்ளது - அக்குறையினை வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் போக்குகிற வகையிலும், தற்போது, முதலமைச்சராகவே நான் உங்களுக்குப் பணியாற்ற வந்துள்ளேன் என்பதில் எனக்குள்ள அதே அ[illegible] மகிழ்ச்சி, உங்கள் அனைவர்க்கு[illegible] இருந்திடும் என நம்புகிறேன் அனைவர்க்கும் மகிழ்ச்சி தானே?...

இன்றைக்கு நான் பர்கூர் தொ[illegible]தியின் சட்டமன்ற உறுப்பினரா[illegible] இருந்து கொண்டு காங்கேய[illegible] தொகுதியை விட்டுக் கொடுத்து[illegible]ளேன் என்றாலும், என்னை இ[illegible] அளவுக்குப் பெருமைப்படுத்திய[illegible]ளதில் காங்கேயத்திற்கும் சமபங்[illegible] உண்டு என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்வது எனது நீங்காக் கடமையாகும்.

நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போலத் தர்மபுரி மாவட்டத்தின் பின்தங்கிய நிலைமையை எண்ணிப் பார்த்தும், இந்த மாவட்டத்தில் இதுவரை எந்த ஒரு அமைச்சரும் இல்லாதிருக்கும் நிலைமையைக் கருதியும்தான் இதனைத் தேர்ந்தெடுத்தேன். காங்கேயம் தொகுதி அமைந்துள்ள பெரியார் மாவட்டத்தில் ஏற்கெனவே பலர் அமைச்சர்களாக இருந்துள்ளனர். தற்போது கூட இரண்டு அமைச்சர்கள் - மாண்புமிகு முத்துசாமி அவர்களும், மாண்புமிகு செங்கோட்டையன் அவர்களும், அம்மாவட்டத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். மேலும், தற்போது காங்கேயம் தொகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அண்ணன் ஆர்.எம். வீரப்பன் அவர்களையும் சேர்த்தால், மூன்று அமைச்சர்கள் அம்மாவட்டத்திற்கென உள்ளனர்.

அதன் காரணமாகத்தான் காங்கேயம் தொகுதியை விட்டுள்ளேனே தவிர, பர்கூரோடு காங்கேயமும் எனது தொகுதிதான். காங்கேயம் மட்டுமல்லாது என்னை முதன் முதலாகச் சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய மதுரை மாவட்டம்-பேரடி நாயக்கனூர் தொகுதிகூட இன்றும் எனது தொகுதிதான். இவை மட்டுமல்லாது, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மிகப் பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள , நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய காலகட்டத்தில் என்மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும், நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும் என்பதை உணர்ந்து செயல்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்கூர் தொகுதியை நான் எனது தொகுதியாகத் தேர்வு செய்த நேரத்திலேயே இந்த என் மனநிலையை வெளிப்படுத்தினேன். மிகமிகப் பின்தங்கிய மக்களைக் கொண்டதாகவும், இயற்கையிலேயே சுக்காங்கல் மிகுந்திருக்கும் தரைப் பகுதியைக் கொண்டதாகவும் உள்ள இத்தொகுதியின் பிரதிநிதியாகி, இதன் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே, இத்தொகுதியைத் தேர்ந்தெடுத்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலேயே இத்தொகுதியின் ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரில் சென்று வாக்குச் சேகரிக்க எண்ணியிருந்தேன். அதற்கேற்றவாறு எனது சுற்றுப் பயணத்திட்டமும் வகுக்கப்பட்டு, பர்கூரில் நடைபெற்ற இதேபோன்றதொரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் மே 14-ந் தேதி கலந்து கொண்டு விட்டு, சில கிராமங்கள் வழியாகக் கடந்த மே மாதம் 21-ந் தேதி சென்று கொண்டிருந்தபோதுதான், மனிதருள் போற்றுதற்குரிய சிறப்புமிகு பண்பாளரான திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட துயரச் செய்தி எனக்குத் தெரிவிக்கப்பட்டு, உடனடியாக நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்திட டெல்லி செல்ல வேண்டியதாயிற்று. அதன் காரணமாகவே பர்கூர் தொகுதியின் பல கிராமங்களுக்கும் என்னால் நேரில் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. தேர்தல் தள்ளிவைக்கப்பட்ட சூழ்நிலையில், நான் வீட்டைவிட்டே வெளியேற முடியாத அளவுக்கு எனது உயிருக்குக் குறிவைத்து அலைந்த கூட்டத்தின் நடமாட்டம் மிகுந்திருந்ததால், நான் எங்கும் செல்லவே கூடாது என அறிவுறுத்தப்பட்டு, பர்கூர் தொகுதிக்கு மட்டுமல்லாது எத்தொகுதிக்கும் திரும்பச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தும், நான் வர இயலாத சூழ்நிலைக்கு ஆட்பட்டதைக் கருத்தில் கொண்டு, பர்கூர் தொகுதியிலும், காங்கேயம் தொகுதியிலும், தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் எங்கள் அணிக்கு "குருக்ஷேத்திரப் போரின் முடிவு தர்மத்திற்கே வெற்றி" என அமைந்ததைப் போல, மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தீர்கள். அத்தகைய உங்களின் மேலான நல்லாதரவிற்கு எனது மனமுவந்த நன்றியினை மீண்டும் மீண்டும் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் இருந்த பாதுகாப்பற்ற நிலை காரணமாக வர இயலாவிட்டாலும், தேர்தல் முடிந்தவுடன், நிலைமைகளைச் சீர்படுத்தி, சட்டம்-ஒழுங்கு பராமரிப்பில் தமிழகத்தில் ஏற்பட்ட சரிவைச் சரிபடுத்திக் கொண்டு, உங்களை





எல்லாம் நேரில் சந்தித்து நன்றி கூறுவேன் என, ஒவ்வொரு வீட்டிற்கும் எனது நேரடியான வேண்டுகோள் கடிதத்தினைக் கொடுத்திருந்தேன். சொன்னது சொல்லியபடி மீண்டும் உங்களை நேரில் சந்தித்து நன்றி கூற வந்துள்ளேன்.

நான் வெறுங்கையோடு வரவில்லை. பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நலப்பணிகளைத் தொடங்கி, அவற்றைச் செயல்படுத்தும் திட்டங்களோடு வந்துள்ளேன்.

இப்போது உங்கள் மூலம் கேட்கிறேன்; தேர்தல் நேரத்தில் என்னைப் பற்றி என்னென்ன விமர்சனங்களை எல்லாம் சில ''அரசியல் மேதாவிகள்'' செய்தார்கள்! தேர்தலுக்காக மட்டுமே தலை காட்டுவேன் என்றும், தேர்தல் முடிந்தால் ஓடி ஒளிந்து கொள்வேன் என்றும், ஜெயித்தால் கோட்டைக்குக் கூட வரமாட்டேன் என்றும், உயிருக்குப் பயந்து ஒளிந்து கொள்வேன் என்றும், என்னென்ன கூறமுடியுமோ அத்தனையும் கூறிப்பார்த்தார்களே! அத்தனை ஏச்சையும் பேச்சையும் மீறித்தானே என்னை வெற்றி பெறச் செய்து ஆட்சி அமைக்கச் செய்துள்ளீர்கள்?... இன்றைக்கு நான் கேட்கிறேன், ''நான், இதோ இன்றும் என் உயிருக்கு ஊறு விளைவிக்க ஒரு கூட்டம் அலைந்து கொண்டுள்ளது'' என்ற எச்சரிக்கை இடையிலும் உங்களை எல்லாம் சந்திக்க ஓடோடி வந்துள்ளேன்! ஆனால், நான் ஓடி ஒளிந்து கொள்வேன் என வசை பாடியவர்கள் எங்கே?... நீங்கள் தான் சொல்ல வேண்டும் - அவர்கள் எங்கே?...

சட்டமன்றத்திற்குக் கூட ''வந்தால் முதலமைச்சராகத்தான் வருவேன்; எதிர்க்கட்சி வரிசையில் வந்து அமர மாட்டேன்'' எனத் தனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கே துரோகம் செய்துவிட்டு, பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஓடி ஒளிந்துள்ளது யார்? நானா? அல்லது என்னைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமான விமர்சனங்களைச் செய்த அவர்களா?, என்பதை நாட்டு மக்கள்தான் நல்ல முடிவெடுத்துத் தீர்ப்பு வழங்க வேண்டும்.

வினை விதைத்தவர்கள் இன்று வினையை அறுவடை செய்து கொண்டுள்ளனர். நாம் தினை விதைத்தோம், எனவே அதை நாட்டு மக்களுக்கான நல்ல திட்டங்களாக அறுவடை செய்து படைத்துக் கொண்டிருக்கிறோம்.

இச்சிறப்புக்குரிய நிகழ்ச்சியைக் கூட, தொழில்துறையில் பின்தங்கியுள்ள தமிழகத்தை, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக்கிடும் எங்கள் இலக்கின் முதற்படிக்கான தொடக்க விழா எனச் சொன்னால் மிகையாகாது. பெரிய அளவிலான ஒரு தொழிற் கூடத்தைக்கூடக் கண்டிராத எனது பர்கூர் தொகுதியில், மிகப் பெரிய அளவில் உருவாக உள்ள ''கருங்கல் மெருகூத் தொழிற்சாலையும், மெருகிட்ட கருங்கல் பலகைகள் உற்பத்தித் தொழிற்சாலையும்'' இணைந்த தொழில் வளாகத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவாகும். இதற்கான மொத்த மதிப்பீடு 15 கோடி ரூபாய் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுமட்டுமல்லாது, பர்கூர் தொகுதியும் ஒட்டுமொத்த தர்மபுரி மாவட்டமும் பயன்பெறும் வகையில், அரசின் பல்வேறு நலத்திட்டங்

**தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள் மீது பெரும் நம்பிக்கை வைத்து, எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய கால கட்டத்தில் என்மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்.**

களும் இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதுவரையிலும் கவனிப்பாரற்றுக் கிடந்த பர்கூர் தொகுதியில், பல்வேறு சாலைகளின் மேம்பாட்டுக்காக மட்டும் 2 கோடியே 53 இலட்சம் செலவில் சாலைகள் மராமத்துப் பணியும், பாலங்கள் கட்டும் வேலையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நேரத்தில், பர்கூர் தொகுதியிலிருந்து திருப்பதி செல்லும் பக்தர்கள் நலனுக்காக, நேரடியான சாலை வசதி செய்து தரப்படும் என்ற வாக்குறுதியினை வழங்கி இருந்தேன். சொன்னபடி அவ்வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கிருஷ்ணகிரியில் இருந்து ஓர் நெடுஞ்சாலை பர்கூர் தொகுதி வழியாக மாரண்டஹள்ளி - குப்பம் தடத்தில் நேரடியாகத் திருப்பதி செல்ல, 66 இலட்ச ரூபாய் செலவில் சாலை மராமத்துப் பணி இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினைக் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். முக்கியமான இடங்களில் பாலங்கள் இல்லாததால், இத்தொகுதியின் போக்குவரத்துக்குப் பெரும் பாதகமாக இருந்துவரும் சூழ்நிலையை மாற்றி, 5 பெரிய பாலங்களைக் கட்டுவதற்கு மட்டும், ரூ.75 இலட்சம், ரூ.50 இலட்சம், ரூ.30 இலட்சம், ரூ.20 இலட்சம், ரூ.12 இலட்சம் என்ற வகையில் ஏறத்தாழ ஒரு கோடியே 87 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பெரிய பாலங்கள் குன்னத்தூர், பர்கூர், மாட்ரபள்ளி, பாம்பாறு, சிண்டகம்பள்ளி ஆகிய இடங்களில் அமைய உள்ளன.

''தேர்தல் நேரத்தில் மட்டும்தான் வருவேன்; மற்றபடி திரும்பிப் பார்க்கமாட்டேன்'' எனத் தேர்தல் நேரத்தில் இத்தொகுதியில் வந்து பேசாமல், மற்றபடி சென்ற இடமெல்லாம் என்னைப் பற்றி விமர்சித்தார்களே சில ''மேதாவிகள்'', அவர்களுக்காக இவற்றை எல்லாம் தெரிவிக்கவில்லை; என்னை நம்பி ஏற்றுக் கொண்டீர்களே - உங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை விளக்கும் வகையில், சொன்னதைச் சொல்லியபடி செய்து முடித்துள்ளோம் என்பதை விளக்கிக் கூறவே இவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

இவை மட்டுமல்லாது, இத்தொகுதியின் மருத்துவ வசதியைப் பெருக்கும் வகையில், ஏற்கெனவே தொகுதியில் இருந்துவரும் மருத்துவமனைகளோடு, பெருங்கோப்பனப்பள்ளியில் இன்று முதல் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்வதோடு, புதிதாக இன்று தொடங்கப்படும் மருத்துவமனைக்கு இன்றே கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பர்கூர் மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், அடிக்கடி ஏற்படும் சாலை விபத்துக்களால் பாதிக்கப்படுவோரைப் பாதுகாக்க, புதிதாக இரு ஆம்புலன்ஸ் வண்டிகள் இம்மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.



பர்கூர் தொகுதிக்காக மட்டுமல்லாமல் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தொச்சிக்குப்பம், ஆலப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள சுகாதார நிலையங்களுக்கும், அரூர், ஊத்தங்கரை மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு வார்டுகளுக்கும், தனித்தனியே கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்படுகின்றன. முத்துக்கணபதி, புத்தா நத்தம் ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளுக்கும், கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்க உள்ளன. புலிக்கரையில் மாணவர் தங்கும் விடுதி ரூ.7.97 இலட்சம் செலவில் கட்டப்பட உள்ளது.

பர்கூர் தொகுதியில் உள்ள ஏறத்தாழ 300 பெரிய, நடுத்தரமான மற்றும் குக்கிராமங்கள் போதிய குடிநீர் வசதியற்று, செய்யப்பட்ட குடிநீர் வாரிய வேலைகளும் அரையும் குறையுமாக உள்ளது என்ற நிலை என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி வரும் எங்கள் அரசு, உடனடியாக அக்குறைபாடுகள் நீங்கிக் குடிநீர்த் தட்டுப்பாடற்ற நிலைமை உருவாக்க, 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் ஆதிதிராவிடர்களுக்காகவே உள்ள 66 குடியிருப்புகளும் அடங்கும், இத்திட்டங்கள் அனைத்தும் வரும் ஓராண்டுக்குள் செய்து முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் எவ்விதக் குடிநீர் ஆதாரமும் இன்றி, இவ்வளவு காலமும் இன்னலுற்றுவரும் தேன்கனிக்கோட்டை பேரூராட்சியின் துயரத்தைத் துடைக்கும் வகையில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் 1992 டிசம்பருக்குள் முடிக்கப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் துறையின் மூலம் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் 1791-க்கும் பள்ளிக் கட்டடங்கள் 19-க்கும், ஊராட்சி மன்ற அலுவலகங்கள் 76-க்கும், சத்துணவுக் கூடங்கள் 23-க்கும், தற்போது அடிக்கல் நாட்டப்படுகிறது. இவை அனைத்திற்கும் ரூபாய் 3 கோடியே 94 இலட்சம் மதிப்பீடாகும் என்பதைத் தர்மபுரி மாவட்ட மக்களும், குறிப்பாக பர்கூர் தொகுதி மக்களும் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

நூற்றுக்கணக்கான பெற்றோர்களின் நீண்ட நாளைய வேண்டுகோளை நிறைவு செய்கிற வகையிலும், கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கு மேலும் ஊக்கம் தருவதற்காகவும், தர்மபுரி மாவட்டத்திலுள்ள மாத்தூர் மற்றும் சிங்காரப்பேட்டை ஆகிய இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்காக, இப்போது தனியாக இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்திக்கானூர் என்ற ஊரில் இயங்கி வந்த உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகவும் மாற்றப்பட்டு உள்ளது. மேலும் வள்ளிப்பட்டி, கந்தனஹள்ளி முதலான 5 இடங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளித் தகுதிக்கு உயர்த்தப்பட்டுள்ளன. ஏனெனில் கல்விதான் எத்தனையோ ஏழைக்

குடும்பங்களில் ஒளியேற்றி, அவர்களுக்கு வாழ வழிகாட்டி உள்ளது. அந்த அடிப்படையில்தான் இன்று கல்விக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது எங்கள் அரசு.

இவைமட்டுமல்லாது, தர்மபுரி மாவட்டம் முழுவதும் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 150 தொகுப்பு வீடுகள், 15 ஊராட்சி மன்ற அலுவலகங்கள், 5 பள்ளிக் கட்டடங்கள் ஆகியவை இங்கே திறந்து வைக்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ 1000 பேருக்கு ரூ.24.35 இலட்சம் கடனுதவி இன்று வழங்கப்படுகிறது.

மள்ளம்பாடி கிராமத்திலும், குருவிநாயனப்பள்ளி கிராமத்திலும், மண் சாலையைக் கல் சாலையாக மாற்றவும், கழிவுநீர்க் குட்டை அமைக்கவும் ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப் படுகின்றன.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பர்கூரில் சமுதாயக்கூடம் அமைக்க ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டு இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது. பர்கூர் பேருந்து நிலையத்தைச் சீராக்கவும், விரிவுபடுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ள 10 இலட்ச ரூபாய் திட்டத்தை ஏனைய திட்டங்களோடு இணைத்து, பர்கூர் பேரூராட்சி ஒருங்கிணைந்த எல்லா நலன்களையும் பெறத் திட்டமிடப்பட்டு, ஒரு கோடி ரூபாய் அளவுக்கான செயல் திட்டம் இன்று தொடங்கப்படுகிறது என்னும் மன நிறைவு அளிக்கத்தக்க அறிவிப்பை வெளியிடுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவை மட்டுமல்லாமல், தொகுதியின் அனைத்துப் பகுதி மக்களும் பயன்பெறும் வகையில், ஏற்கெனவே விடப்பட்டுள்ள பேருந்துகளோடு இன்று முதல் 7 புதிய பேருந்துகள் விடப்படுகின்றன. இவைதவிர, கிருஷ்ணகிரியிலிருந்து மேட்டூர் - பவானி வழியாக ஈரோடு சென்று வரும் அனைத்துப் பேருந்துகளும், இனிமேல் பர்கூரில் இருந்து புறப்பட ஆணையிடப்பட்டுள்ளது. இவை தவிர, தர்மபுரி மாவட்டம் முழுவதும் உள்ள ஊர்களில், சந்தை நாட்களில் மட்டும் இயங்குவதற்காக நான்கு சந்தைப் பேருந்துகள் விடப்பட உள்ளன. இவற்றின் மூலம் சந்தைகளுக்குப் பொருள்களைக் கொண்டு செல்வோரும், வாங்கிச் செல்வோரும் பயன் அடைவார்கள்.

மாவட்டத் தலைநகரான தர்மபுரியில் எல்லா வசதியுமிக்கதாக, நகரப் பேருந்து நிலையம் ஒன்று தியாகி தீர்த்தகிரியார் மைதானத்தில், 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் திட்டத்திற்கு, இன்று அடிக்கல் நாட்டப் படுகிறது.

கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையத்திற்கெனவும், அங்கே அங்காடிகள் கட்டவும், ரூ.88 இலட்சம் ஒதுக்கப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் இங்கே நடைபெறுவது, கிருஷ்ணகிரி நகர மக்களுக்கு மட்டுமல்லாது, ஒட்டு மொத்தமாகத் தர்மபுரி மாவட்ட மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் செய்திகளாகும்.

ஏழை எளியோர் மற்றும் சாதாரண மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் அரசின் இயக்கம், அவர்களது நியாயமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராய் இருக்கிறது.

எந்த வசதியும் தொடமுடியாத தொலைதூரத்தில் உள்ள கிராமங்களில் தேவையான வசதிகளைப் பெருக்குவதும், அங்குள்ள கிராம மக்களுக்கு வாழ்வு வளங்களை உருவாக்கி வழங்குவதும், எங்களது அரசின் தலையாய கடமை ஆகும். நகரத்து மக்களின் வாழ்வும், வளமும், கிராமத்து மக்களுக்கும் கிடைக்க வழிவகைகள் செய்து தர வேண்டும் என்ற எண்ணத்தை மனதில் இருத்தித்தான், ஒரு நகரத்திற்கு முன்னுரிமையோடு வழங்கப் படுகிற அனைத்து வசதிகளையும், கிராமப் பகுதிகளிலும் கிடைக்கிற வகையில், 'மாதிரி கிராமம்' ஒன்று ரூ.3 கோடி மதிப்பீட்டுச் செலவில் பர்கூரில் அமைக்கப்பட உள்ளது. இதில் சாலைகள், விற்பனைக் கூடங்கள், தொடக்கப்பள்ளி, சமுதாய நலக் கூடம், விளையாட்டு மைதானம், தாய்சேய் நல மையம், நூலகம், வழிபாட்டு மையம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவைகளைக் கொண்ட 300 தொகுப்பு வீடுகள் கட்டப்படும். இவைகள் எல்லாம் விஞ்ஞான வசதிகளைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லவேண்டியது, காலத்தின் கட்டாயம் என்பதை உணர்த்தத்தான்.

இதுவரை பர்கூர் தொகுதி மக்களுக்கும் தர்மபுரி மாவட்ட மக்களுக்கும் இன்று தொடங்கிவைக்கப் பட்டுள்ள திட்டங்களை மட்டுமே சொல்லி உள்ளேன். இன்றைய விழா நிகழ்ச்சியிலேயே நான் தேர்தல் நேரத்தில் கூறியிருந்த இன்னொரு வாக்குறுதியான 'மாம்பழக்கூழ் தயாரிப்புத் தொழிற்சாலை'-க்கும் அடிக்கல் நாட்டவே திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதற்கான அடிப்படை வேலைகள் சில பூர்த்தியாக வேண்டியுள்ளதால், இன்று அது தொடங்கப்படவில்லை. விரைவில் இதே போன்ற இன்னொரு விழா இங்கே நடைபெற உள்ளது; அப்போது அத்தொழிற்சாலைக்கான பணி தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடைபெறும் இவ்விழா நிகழ்ச்சியின் மூலம் தர்மபுரி மாவட்டமும், பர்கூர் தொகுதியும் பயன் பெறும் வகையில் தொடங்கப் பட்டுள்ள திட்டங்கள் எல்லாவற்றிற்குமான மொத்த மதிப்பீடு ரூ.33 கோடியே 97 இலட்சம் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன்.

இவை எல்லாம் புதிதாக அமைந்துள்ள உங்கள் அரசு, வறட்சியான இம்மாவட்டத்திற்கு வழங்கியுள்ள சில திட்டங்களாகும். இதேபோன்ற பல திட்டங்கள் தமிழகத்தின் அனைத்துத் தொகுதிகளுக்கும் வழங்கப்படும் என்பதை முதலமைச்சர் என்னும் நிலையில் இருந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு ஆஸ்திரேலிய தூதரகம் புத்தகங்கள் நன்கொடை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆஸ்திரேலிய பாடத்திட்டத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பில், 71 ஆஸ்திரேலிய மொழிப் புத்தகங்கள் ஆஸ்திரேலிய" தூதரகத்தால் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் அவர்களது இன்னலை முடிந்தவரை காலத்தோடு தீர்த்து வைக்கிற வகையில், நாங்கள் காரியம் ஆற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 30 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைக்கிற வகையில், நூல் விலையினைக் குறைக்க வேண்டும் எனவும், நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் சிட்ட நூல் வழங்க வேண்டும் எனவும், நான் சில நாட்களுக்கு முன்பு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தேன் என்பதை, இங்கு நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

கோரிக்கை விடுத்ததோடு மட்டும் நான் நின்றுவிடவில்லை. 'நூல்' என்றால் அதில் நிறைய சிக்கல் இருக்கும் என்பது எனக்குப் புரியும்; என் அளவில் அந்த சிக்கலைத்தீர்க்கிற வழிகளும் எனக்குத் தெரியும்.

எனவே, ஜூலை மாதத்தில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு என்ன விலையில் நூலினை கைத்தறி நூல் இயக்குநர் வழங்கினாரோ, அதே குறைந்த விலையில் 2,000 பேல்களை ஆகஸ்டு மாதத்திற்குத் தனிப்பட்ட நெசவாளர்கள் பயன்பெறுகின்ற வகையில் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளேன்.

இது தினந்தோறும் பல்வேறு பிரச்சினைகளால் பரிதவிக்கும் சாதாரண மக்களின் பாதுகாப்பிற்கு, இந்த அரசு ஓடோடி வந்து உதவும் என்பதற்கான சாட்சியமே அன்றி வேறல்ல.

எங்கள் பயணம் தொடர்கிறது; பணிகள் துரிதப்படுத்தப்படுகின்றன. எதிர்ப்பட்ட மிரட்டல்களையும் உருட்டல்களையும் தவிடுபொடியாக்கித் தகர்த்து எறிந்துதான் கழக ஆட்சி மக்களாட்சியாக மலர்ந்திருக்கிறது! எனவே நாங்கள் -

- தமிழகம், இந்தியத் துணைக் கண்டத்தின் முதன் மாநிலமாகத் திகழவும்;




- சமுதாயத்தின் நலிந்த மற்றும் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவும்; உரிய பல நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளோம்.

தேர்தல் காலத்தில் நான் நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருந்த வாக்குறுதிகளைக் கடந்த இரண்டு மாத கால அளவிலான எங்கள் ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி வருகின்றோம்.

அவ்வகையில், நான் தேர்தல் நேரத்தில் பிரதானமாக ஒவ்வொரு ஊரிலும் அறுதியிட்டுக் கூறிவந்த ஓர் வாக்குறுதி - "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதல் வேலையாக, கடந்த இரண்டாண்டுக் காலத் தி.மு.க. ஆட்சியில் புகுத்தப்பட்ட தீமையான மலிவு விலை மதுக்கடைகளை ஒழிப்போம்" என்பதாகும்.

அவ்வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில் முதலமைச்சராகக் கோட்டையில் சென்று அமர்ந்தவுடன், நான் போட்ட முதல் கையெழுத்தே "மலிவு விலை மதுக்கடைகளை மூட வேண்டும்" எனப் போடப்பட்ட உத்தரவாகும். இதன் மூலம் ஏழைத் தாய்மார்களின் கண்ணீரை ஓரளவேனும் துடைத்தோம் என்ற மன நிம்மதியைப் பெற்றுள்ளோம்.

மலிவு விலை மதுக்கடைகளை மூடிய பின்னரும்கூட இன்னும் தாய்மார்களின் துயரத்தை முழுமையாகத் துடைக்க முடியவில்லையே என்ற ஏக்கம் என்னுள் இருந்து கொண்டு தான் உள்ளது.

காரணம், மலிவு விலை மதுக்கடைகளை மூடிய பின், ஆங்காங்கே கள்ளச் சாராயம் பெருகி வருவது பற்றிய தகவல் என் கவனத்திற்கு வந்து கொண்டுள்ளது. இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில்தான், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களே கூட, மதுவிலக்கில் தனது விடாப்பிடியான கொள்கையைத் தளர்த்திக் கொண்டார். ஆனால் - இன்றைய தினம் அமைந்துள்ள உங்களது புதிய அரசு, மலிவு விலை மதுக்கடைகளை ஒழித்ததைப் போல, கள்ளச் சாராயத்தையும் அடியோடு ஒழிக்க உறுதி பூண்டுள்ளது.

கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்போர் மட்டுமல்லாது, அதற்குக் காரணமானவர்களும் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள் யாராக இருந்தாலும், எக்கட்சியை அல்லது சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் அரசின் நிர்வாக அமைப்பும் பரிபூரணமாக ஒத்துழைத்தால் தான், முழுமையாக இதனை ஒழிக்க முடியும். எனவே அரசின் சார்பில் ஓர் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதனை இன்று அறிவிக்கின்றேன். கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குரிய பொறுப்பு உயர்மட்ட அதிகாரிகளோடு நின்று விடாமல், ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலர் (V.A.O.) மற்றும் சம்பந்தப்பட்ட காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டரைச் சார்ந்ததாகும்.

எங்கேனும் கள்ளச் சாராயம் காய்ச்சுவதோ அல்லது விற்பதோ கண்டுபிடிக்கப்பட்டால், முதல் தடவையாக - சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர் எச்சரிக்கப்படுவார்கள்.

இரண்டாவது முறையும் அவர்கள் பகுதியில் கள்ளச் சாராயம் கண்டு பிடிக்கப்பட்டாலோ, பிடிபட்டாலோ, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக

அலுவலர் மற்றும் சப்-இன்ஸ்பெக்டர்கள், வேலையை விட்டே சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்ற திட்டவட்டமான ஓர் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, தவறு முதல் முறை என்றால் கண்டிக்கப்படுவார்கள்; மறுபடியும் நடைபெற்றால் தண்டிக்கப்படுவார்கள். சப்-இன்ஸ்பெக்டர்கள் மட்டுமல்லாது அவர்களின் நேரடி மேற்பார்வை அதிகாரிகளான இன்ஸ்பெக்டர்கள், மற்றும் டி.எஸ்.பி.க்களுக்கும் கூட, இத்திட்டத்தில் உரிய பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் கள்ளச் சாராயமும் விரைவில் ஒழிக்கப்படும் என்பதை, நமது அருமைத் தாய்மார்களுக்கு இந்த நல்ல வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையில் மட்டுமல்லாது, சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும் கடந்த இரண்டு மாத காலத்தில் தமிழகத்தில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளோம். ''அமைதிப் பூங்கா'' வாகத் திகழ்ந்த நமது தமிழ் மண்ணை ''அமளிக் காடாக'' மாற்றிடத் திட்டம் தீட்டிய தீயவர்கள், இன்று நமது காவல் துறையின் உரிய நடவடிக்கைகள் காரணமாக, மெல்ல மெல்லத் தலை மறைவாகி வருவதை அறிவீர்கள்.

நமது காவல்துறையின் இடுக்கிப்படி எவ்வளவு கடுமைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை, அந்தத் தீயசக்திகள் தமிழகத்தில் தாக்குப்படிக்க முடியாது, அண்டை மாநிலமான கர்நாடகத்தில் சென்று ஒளிந்து கொண்டிருப்பதில் இருந்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் காவல் துறையினை நவீனப்படுத்திடவும், அவர்களுக்குத் தேவையான பல நவீன ஆயுதங்கள் மற்றும் சாதனங்களைப் பெறவும், மத்திய அரசின் உதவியை நாடியுள்ளோம். அத்தகைய உதவிகளையும் விரைவில் பெற்று, ''அமைதிக்குத் துளியும் பங்கமில்லாத தமிழகமாக'' நம் தாயகத்தை மாற்றுவோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்கள் அனைத்தும் நல்ல சாலை வசதியையும், சுகாதாரம், குடிநீர், தெரு



★ கல்வியும் அறிவும் பெறுவது,
மனிதன் மற்றவர்களுக்குத்
தொல்லை கொடுக்காமல்
மனிதத்தன்மையோடு வாழவே!

விளக்குகள் போன்ற அடிப்படைத் தேவைகளையும் பெற்றிடும் வகையில், தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு திட்டங்கள் செயல்பட உள்ளன.

தமிழகத் திருக்கோயில்கள் பல நலிவுற்ற நிலையில் இருப்பதை உணர்ந்து, அவை அனைத்தையும் சீர்படுத்தி உடனடி மராமத்துப் பணிகள் மேற்கொள்வோம் என அறிவித்திருந்தோம். கோயில்கள் நம் கலாச்சாரத்தின் சின்னங்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் இத்திட்டத்தில் பொது மக்களையும் நேரடியாக ஈடுபடுத்தும் வகையில், இன்று செயல்படத் தொடங்கியுள்ளோம். பல்லாயிரக்கணக்கான புராதனம் மிக்க திருக்கோயில்களைத் தமிழகம் எங்கும் பராமரிக்க வேண்டியுள்ளது. இதுவரையில் பொது மக்கள் மூலம் சில இலட்சங்களே கிடைத்துள்ளது. எனவே, தெய்வ பக்தியுள்ள நற்சிந்தனையாளர்கள் அனைவரும் அவரவர் சக்திக்கேற்ப, ஒரு ரூபாய் அளிக்க முன்வந்தாலும்கூட, அவ்வாறு சிறுகச் சிறுகச் சேரும் நிதிகளையும் ஒன்றாகச் சேர்த்து, நாம் நினைத்தபடி அனைத்துக் கோயில்களையும் உரிய முறையில் சீர்படுத்தி பராமரித்து, நம் கலாச்சாரத் தொன்மையைப் பாதுகாப்போம் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இரண்டு மாத காலத்தில் வேறு எந்த அரசும் நிகழ்த்திடாத சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளோம். விரைவில் உங்களது அரசின் புதிய பட்ஜெட், தமிழகச் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது. பட்ஜெட் வெளிவருகிற போது நாங்கள் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படுகிறது என்பதை நீங்கள் அறியலாம். விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் பட்ஜெட்டாக அது அமைந்திருக்கும் என்பதை மட்டும் இப்போது உங்கள் மத்தியில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மொத்தத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில்,

திறமைக்கும் - நேர்மைக்கும் -
வளர்ச்சிக்கும் - உயர்வுக்கும் -
லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் -

எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே, எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.

தமிழகம் தலைநிமிர்ந்து தன் தனித்தன்மையோடும், தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதிநிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன்.

இன்று வரையிலும் என் உயிருக்கு உலை வைக்கும் முயற்சி சிலரால் மேற்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையிலும், வழங்கிய வாக்குறுதிப்படி உங்களுக்குத் தொண்டாற்ற விரைந்து வந்துள்ளேன். தொடர்ந்து உங்களுக்காகப் பணியாற்றுவதை என் வாழ்வின் மகிழ்ச்சியான கடமையாகக் கருதி ஓயாது உழைத்திடுவேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் புகழும் பெருமையும் என்றென்றும் தமிழகத்தின் நிலைத்திடும் வகையில், என் பணி, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் என்றென்றும் தொடரும் என்பதைத் தெரிவித்து, அதற்கு உங்களது மேலான நல்லாதரவும், ஒத்துழைப்பும் இருந்திட வேண்டும் என வேண்டி,

அனைவருக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக்கி,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக்கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்



# நல்லாசிரியர்களை நாடு மறவாது

செப்டம்பர் திங்கள் 5-ஆம் ஆசிரியப் பெருந்தகைகள் யாவரும் நினைவில் வைத்துப் போற்றும் பொன்னாளாகும். இந்தியத் திருநாடு முழுவதும் இந்நாள் கொண்டாடப்பட்டாலும், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தனிச்சிறப்புடனும், பெருமையுடனும் கொண்டாடப்படும் நாளாகும். காரணம் தமிழகத்தில் கல்வி பயின்று, தமிழகத்திலேயே ஆசிரியராகவும் பணிபுரிந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள் தான் ஆசிரியர் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய தோடல்லாமல், துணை வேந்தர், அரசதூதர், குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் இந்திய நாட்டிலேயே மிக உயர்ந்த பதவியாகக் கருதப்படும் குடியரசுத் தலைவர் பதவியும் பெற்று சிறப்புடன் பணியாற்றினார். தத்துவமேதையாக விளங்கிய போதிலும், உயர்பதவிகள் பலவகித்த போதிலும் மக்களால் பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டப்பட்ட பெருமைக்குரிய தலைவராகப் பணியாற்றிய போதிலும், அவர் விரும்பிப் போற்றிய பணி ஆசிரியப் பணியேயாகும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக விளங்கியவர் என்றால் மிகையாகாது. அறிவுத்திறன் மிக்கவராகவும், கடினமானவற்றையும் எளிமையாக விளக்கும் ஆற்றல் மிக்கவராகவும், மாணவர்களின் உள்ளத்தையே ஈர்க்கும் காந்த சக்தியாகவும் விளங்கினார். ஆசிரியப் பெருமக்கள் அவரது போதனைகளையும், வாழ்ந்துகாட்டிய விதத்தையும் மனதில் கொண்டு பணியாற்றினால், வருங்காலச் சந்ததியினரை சிறந்த முறையில் உருவாக்கலாம்.

''ஆசிரியர் இன்று ஏங்கினால், நாளை நாடு ஏங்கும்'' என்றார் பேரறிஞர் அண்ணா. தமிழக அரசு ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பும், ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி உரிய ஊதியமும் வழங்கியுள்ளது. ஆசிரியர்களின் குறைகளைத் தீர்ப்பதிலும் அரசு கவனம் செலுத்துகிறது. மேலும், பள்ளி ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் பின்வரும்


தருமபுரி மாவட்டக் கூட்டுறவு ஆவின் பால்
உற்பத்தியாளர்கள்—ஒன்றியம் DPD
கிருட்டிணகிரி-635 002.




''ஆரோக்கியமான வாழ்விற்கு

ஆவின் பால்




பால் உபபொருட்களை வாங்கி உபயோகியுங்கள்''

தருமபுரி மாவட்டத்தில் மென்மேலும் தொழில் வளம் பெருகி நலிவுற்ற மக்கள் மேம்பட எங்களது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வணம்

கிராமப்புறத் தொழில்வளம் பெருக்கப் பாடுபடும்
தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப்
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கிருட்டிணகிரி-2.

டாக்டர் ஆர்.சாலமோன், பி.வி.எஸ்சி., நிர்வாக இயக்குநர்

மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

த.முருகன், இ.ஆ.ப. மாவட்ட ஆட்சியர் ஒன்றியத் தலைவர்

IPRO 492/91 DPI Dt.8.8.91

விவரப்படி 228 ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படுகின்றன.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்-112, உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்-112, ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆசிரியர்கள்-2, மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள்-2, கூடுதல்-228.

இவ்விருதுகள் ஒவ்வொன்றும் ரூ.1,000 பணமுடிப்பு, வெள்ளிப்பதக்கம், தகுதிச்சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டது. இந்திய அரசும் ஆண்டுதோறும், தேசிய விருதுகளை வழங்கி ஆசிரியர்களைச் சிறப்பிக்கிறது. ஆசிரியர்களும் தங்களது கடமைகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என அரசு எதிர்பார்க்கிறது.

''கல்வி நிலையங்களில் பயின்று திரும்பும் போது ஒரு மாணவன் அனைத்துப் பண்புகளும் கொண்ட மானிடனாக வெளியே வரவேண்டு மென்பதுதான், கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்'' என்றார் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன்.

''ஆசிரியர்களுக்கு நான் சொல்லக் கூடியது ஒன்றுதான், சுதந்திரத் தத்துவத்தைக் கற்றுக் கொடுங்கள் என்பதுதான். பாண்டித்யத்தைக் காட்டி கற்பிப்பது பயனில்லை. ஆசிரியர்களது உண்மையான ஒழுக்கத்தாலே, மாணவர்கள் தாங்களாகவே உணர்ந்து கொள்ள வேண்டும். அதுவே சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதாகும்'' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

மேலும், ''நமது ஆசிரியர்கள் மிகவும் உயர்ந்த தார்மீக ஒழுக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மிகவும் ஏழையான இந்தியன்கூட மிகச் சிறந்த கல்வி பெறுவதற்கான நிலைமையைத் தோற்று விக்க வேண்டும்'' என்றும் அண்ணல் காந்தியடிகள் கூறியுள்ளார்.

நமது தேசத் தந்தையும், அறிஞர் பெருமக்களும் காட்டிய வழியை ஆசிரியப் பெருந்தகைகள் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியம். ஆசிரியப் பெருமக்கள், கல்வியறிவோடு ஒழுக்கம், தூய சிந்தனை, நற்பண்புகள், கட்டுப்பாடு, உழைப்பில் ஆர்வம், மூத்தோரை மதிக்கும் பண்பு, சேவை மனப்பான்மை ஆகிய தன்மைகளும் மாணவர்கள் உள்ளத்தில் விதைத்துப் பயிராக்கப்பாடுபட வேண்டும்

ஆசிரியப் பணியைப் பிறபணிகளைப் போன்று கருதிவிடாமல் ''பேச்சிலே பொழுதைப் போக்காமல் செயலில் இறங்க வேண்டிய காலம் இது. தேச நலனுக்காக இந்தப் பணியில் உங்களாலான தியாகத்தைச் செய்யும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்ற அண்ணல் காந்தியடிகளின் வேண்டுகோளை நிறைவேற்றுவதுதான், ஆசிரியப் பெருமக்கள் நம்நாட்டிற்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

அனைத்திற்கும் மேலாக ''நல்லாசிரியர்களை நாடு என்றும் மறவாது நல்லாசிரியர்கள் நாட்டினை என்றும் மறவாதவர்கள்'' எனும் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களின் வாக்கிற்கிணங்க, அந்த நிலை தோன்றிட ஆசிரியப் பெருமக்கள் பாடுபட வேண்டியது தலையாய கடமையாகும்.



**இந்தியாவுக்கான இங்கிலாந்து நாட்டுத் தூதர் திரு.டேவிட் குட்ஆல் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களைச் சென்னையில் சந்தித்தார் (23.8.91).**



# தென்னாட்டுத் திலகர் வ.உ.சி.

இந்திய சுதந்திரப் போரின் தளபதிகளுள் ஒருவரான வ.உ. சிதம்பரனார் 1872-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். தமிழ்நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தக் கிராமம் உள்ளது. இந்தப் பகுதியில் வசித்தவர்கள் தங்கள் வீரத்திற்கும் அறிவுக்கும் பெயர் பெற்றிருந்தனர். ஆதி சுதந்திர வீரர் கட்டபொம்மனும், மாக்கவி பாரதியாரும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாம்.

சிதம்பரனாரின் தந்தை உலகநாதன் அந்நாட்களில் நல்ல வருவாயுள்ள வக்கீலாக இருந்ததுமன்றித் தம்முடைய அறிவினாலும் தாராள மனப்பான்மையாலும் நன்னடத்தையாலும் மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தார். தந்தையின் பெருமை பிள்ளையின் மனதைக் கவர்வது இயற்கையல்லவா? தந்தை தம்முடைய அன்புப் பிள்ளையின் படிப்புக்கும் வளர்ச்சிக்கும் நல்ல ஏற்பாடு செய்தார்.

சிதம்பரனார் ஆறாவது வயதில் தூத்துக்குடியிலுள்ள ஆங்கிலப்



இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமாயிற்று, அரசியலில் சூடு ஏறத் தொடங்கியது. 1905-ஆம் ஆண்டில் அரசியல் கிளர்ச்சி எழுந்தது. சிதம்பரனாரும் தேசிய இயக்கத்தில் குதித்தார். இந்திய நாட்டின் விழிப்பை அடக்கிவிடும் நோக்கத்துடன் வைசிராய் லார்டு கர்ஸன் 1905-ஆம் ஆண்டில் வங்கத்தை இரு மாகாணங்களாகத் துண்டாக்கினார். இதனால் வங்கத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது. இக் கொந்தளிப்பு இந்தியா முழுவதிலும் பரவிற்று. லாலா லாஜ்பத்ராய், பாலகங்காதர திலகர், விபின சந்திர பால் ஆகியோரிடம் நாட்டின் தலைமை இருந்தது. சிதம்பரனார் தீவிரவாதியாக விளங்கினார். தென்நாடு முழுவதும், குறிப்பாகத் தமிழ்நாட்டில், அவர் சுதந்திர நெருப்பை மூட்டிவிட்டார். அதிலிருந்து அவர் ஆங்கிலேயர்களின் கண்களை உறுத்தலானார். 1907-ஆம் ஆண்டு நடந்த சூரத் காங்கிரஸில் அவர் கலந்து கொண்டார்., அவர் இயல்பாகவே திலகரைப் பின்பற்றினார். சிறிது காலத்திற்குப் பின் மக்கள் அவரைத் 'தென்னாட்டுத் திலகர்' என்று அழைக்கலாயினர்.

பள்ளியில் சேர்க்கப்பட்டார். பிறகு திருச்சியில் கல்லூரிப் படிப்புப் பெற்றார்: சிதம்பரனார் இளம் வயதிலிருந்தே மேதையாக விளங்கினார். படிப்பிலும் விளையாட்டிலும் எப்பொழுதும் முதல்வராகத் திகழ்ந்தார். தம்முடைய இனிய சுபாவம், தொண்டு மனப்பான்மை, கூர்மையான புத்தி ஆகியவற்றின் மூலம் எல்லா ஆசிரியர்களின் அன்பையும் அவர் பெற்றிருந்தார்.

சிதம்பரனார் 1895-இல் சட்டத் தேர்வில் தேறினார். பின்னர் வக்கீல் தொழிலைத் தொடங்கினார். ஏற்கெனவே தந்தை நடத்திவந்த தொழில்தான் அது. ஆரம்பத்திலிருந்தே சிதம்பரனாருக்கு இத்துறையில் நல்ல வெற்றி கிட்டிற்று; அவர் பெரும் புகழும் பணமும் சம்பாதித்தார். தொழில் வாயிலாக அவருக்கு மக்களுடன் தொடர்பு ஏற்பட்டதால், அவர்களுடைய சுகதுக்கங்களை அவர் நன்கு தெரிந்து கொண்டார். மக்களின் ஏழ்மையையும் அடிமைத்தனத்தையும் பார்த்து அவருக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. ஏழை மக்களிடம் பணம் வாங்காமலேயே அவர்களுடைய வழக்குகளில் அவர் வாதாடத் தொடங்கினார். இதனால் அவருடைய பெயர் குன்றின்மேல் விளக்காய் ஒளி வீசியது.

• • •

***'தென்னாட்டுத் திலகர்' என்று போற்றிப் புகழப்படும் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனாரின் வீர வரலாற்றை விளக்கும் இக் கட்டுரை, அன்னாரின் பிறந்த நாளையொட்டி (செப்டம்பர்-5) வெளியிடப்படுகிறது.***

• • •

சிதம்பரனார் தென்னாட்டில் சுதேசி இயக்கத்தின் தந்தையானார். வெளிநாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்குமாறு மக்களைத் தூண்டினார். மக்களிடையே ஒற்றுமை வளர்ந்து எழுச்சி ஏற்படச் செய்தார். சாதாரணமாகவே மக்களுக்கு அவரிடத்தில் மிகுந்த அபிமானம் இருந்தது. ஐம்பதினாயிரம் ஆங்கிலேயர்களை நாம் ஒரே நாளில் ஓட்டிவிட முடியுமென்று அவர் முழக்கமிட்டார். நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் ஆங்கிலேயர்கள் இங்கு நிலைக்க முடியாதென்று கூறினார்.

சிதம்பரனாருடைய சாதனைகளுள் மிகப் பெரியது சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியது தான். அந்நாளில் கப்பல்கள், சிறிய-பெரிய துறைமுகங்கள் எல்லாம் ஆங்கிலக் கப்பல் கம்பெனியின் ஆதிக்கத்திலேயே இருந்தன. அவர்கள் மக்களைத் தங்கள் இச்சைப்படி

கொள்ளையடித்தனர். இந்திய ஊழியர்களுக்குச் சொற்ப கூலியே கொடுத்து வந்தனர். எல்லா வியாபாரமும் அவர்கள் கையிலிருந்தது. சிதம்பரனார் இவைகளை ஒடுக்க விரும்பினார். அந்நியக் கம்பெனிக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றை ஆரம்பிக்க அவர் தீர்மானித்தார். இந்த வேலை அவர் நினைத்தபடி அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஒரு பக்கம் ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்க்க வேண்டியிருந்தது. மற்றோர் பக்கம் மூலதனம் திரட்ட வேண்டியிருந்தது. ஆனால், அவர் சிறிதும் மனந்தளரவில்லை. கப்பல் கம்பெனிக்கு அவர் பணம் திரட்ட ஆரம்பித்தார். மக்கள் அவர் சார்பில் இருந்தனர். அதனால் விரைவிலேயே தேசியக் கப்பல் கம்பெனியொன்று நிறுவப்பட்டது.

இம்முயற்சியைக் கைவிட்டால் சிதம்பரத்திற்கு இலட்சக்கணக்கில் பணம் கொடுப்பதாக ஆங்கிலேயர்கள் பேராசை காட்டினர். ஆனால், அவர் அசைந்து கொடுக்கவில்லை. வெள்ளையர்கள் தங்கள் கப்பல்களில் கட்டணத்தைக் குறைத்தனர். இலவசமாகக் கூட ஆட்களை ஏற்றிச் செல்ல முன்வந்தனர். ஆனாலும் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. முடிவாக, அரசினர் சிதம்பரனாரை ராஜதுரோகி எனக் குற்றஞ்சாட்டிக் கைது செய்தனர். நியாயம் வழங்குவதுபோல் நாடகமாடிக் காண்பித்தனர். அந்நிய ஆட்சியில் இந்தியருக்கு நியாயம் எங்கே கிடைக்கும்? அவருக்கு ஆறரை ஆண்டுகள் சிறைவாசம் கிட்டியது. நியாயத்தில் விருப்பமுள்ளவரான லார்டு மார்லே என்பவர் இதைக் கண்டித்து லார்டு மின்டோவுக்குக் கடிதம் எழுதினார். சிறையில் செக்கு இழுப்பது, கல்லுடைப்பது போன்ற கடின வேலைகளைச் சிதம்பரனார் செய்ய வேண்டியிருந்தது.

சிறைவாசத்தை முடித்துக் கொண்டு சிதம்பரனார் வெளி வந்ததும் மக்கள் அவரை மனதார வரவேற்றனர். அவர் உடல் நலம் குன்றியிருந்தார். குடும்பத்தின் பொருளாதார நிலையும் மோசமாக இருந்தது. கப்பல் கம்பெனி முறிந்து விட்டதால் அதன் பங்குதாரர்கள் தங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படிக் கேட்டனர். ஆனால், இவையெல்லாம் அவர் மனத்தைக் கலங்கவைக்கவில்லை. பொருளைத் திருப்பிக் கேட்ட அனைவருக்கும் திருப்பித் தருவதாக வாக்களித்தார்; திரும்பவும் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார்.

சிதம்பரனார் தமிழ் மொழியில் சிறந்த அறிஞராக இருந்தார். இளம் வயதிலிருந்தே அவருக்கு நூல் எழுதும் ஆர்வம் இருந்தது. சுதேசிக் கிளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் மக்களிடையே தேசபக்தியைப் பரப்புவதற்காக "விவேகபானு" என்னும் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார். சிறையில் இருந்தபோது மூன்று தமிழ் நூல்களை இயற்றினார். அவர் திருவள்ளுவரிடம் பக்தியுள்ளவர். ஆகையினால் தம்முடைய நூல்களில் வள்ளுவரின் வாழ்க்கைத் தத்துவங்களை அவர் எடுத்து விளக்கியிருக்கிறார்.

அவருடைய படைப்புகளில் தேசபக்தியும், வேதாந்தமும் முக்கிய இடம் பெற்றிருந்தன. அவரிடம் உற்சாகம் இருந்தது. ஆரம்பத்தில் அவருடைய எழுத்துக்களில் தேசபக்தி ததும்பியது. பிற்காலத்தில் அவர் எழுதியவைகளில் ஆன்மிக விஷயங்கள் நிறைந்திருந்தன. அவர் அரவிந்தரின் நண்பர். வாழ்க்கை சம்பந்தமாக அவர்களிடையே மிகுந்த கருத்தொற்றுமை காணப்பட்டது.

சிதம்பரனாரின் புத்தகங்கள் இப்போது கூடப் பள்ளிகளில் படிக்கப் படுகின்றன.

முதுமையில்கூட அவருடைய துணிவும் செயல்திறனும் குன்றவில்லை. திலகருக்குப் பிறகு காந்தியடிகள் காங்கிரசின் தனிப்பெரும் தலைவரானார். காந்தியடிகளின் அகிம்சை முறையில் சிதம்பரனாருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதற்காக அவர் அந்த முறையை எதிர்க்கவுமில்லை. தமது சொந்த வழியில் நாட்டு முன்னேற்றத்திற்காக அவர் வாழ்நாள் முடிவுவரை பாடுபட்டார்.

சிதம்பரனார் ஏழ்மையை வெறுத்தார்; அதனால் ஏழைகளிடத்தில் மிக்க அனுதாபம் கொண்டிருந்தார். ஏழைகளுக்காக, 'பீஸ்' வாங்காமலேயே வழக்குகளில் அவர் வாதாடினார். தாம் அணிந்திருந்த உடைகளைக்கூட ஏழை எளியவர்களுக்கு எடுத்துக்கொடுக்கும் இயல்பு வாய்ந்தவர் அவர்.

1936-ஆம் ஆண்டில் சிதம்பரனார் காலமானார். அப்போது அவருக்கு வயது அறுபத்துநான்கு. நாடு முழுவதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில், உள்ள மக்கள் அனைவரும் தங்கள் அன்புத் தலைவரின் மரணத்தினால் மிகவும் மனம் வருந்தினர்.

தமிழ்நாட்டில் அவருடைய நினைவுச் சின்னம் நிறுவப்பட்டிருக்கிறது. பாரதியார் பல கவிதைகளில், தம்முடைய அன்புத் தோழரும், வீரத் தளபதியுமான வ.உ.சிக்குப் புகழ்மாலைகள் சூட்டியுள்ளார். அவையெல்லாம் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன. தமிழ் மக்கள் அவைகளைப் படித்துத் தங்கள் அன்பிற்குரிய தலைவரைப் போற்றுவதுடன், அவர் வாழ்க்கை வரலாற்றிலிருந்து துணிவையும், உற்சாகத்தையும், பலத்தையும் பெறுகின்றனர்.

சிதம்பரனார் நம் நாட்டின் தவப்புதல்வர். அவர் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காகப் பணி புரிந்தார். அவர் உயர்ந்த பண்பு நிறைந்தவர், மக்களின் பெருந்தலைவர், திறன்மிக்க படைத் தலைவர், நாவலர், ஆழ்ந்த வேதாந்தி, தெளிந்த கவி, உயரிய இலக்கிய கர்த்தா. அவரை நாடு என்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை!

—'பாரதப் பெரியார்கள்' நூலிலிருந்து.



## வ.உ.சிதம்பரனாரின் மகன் மறைவு

**கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் மகன் திரு. வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள் 17.8.91 அன்று காலமானார். அவருக்கு வயது 66.**

**திரு.வ.உ.சி.சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்.**

**'சுதேசமித்திரன்' 'தினமணி' ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர். சென்னையிலுள்ள அமெரிக்கத் தகவல் நிலையத்தில் தமிழ்ப் பிரிவில் முதன்மை ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.**

**அன்னாரின் மறைவுக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.**



# நாணயத்தின் கதை





ஆதியில் மனிதர்கள் தங்களிடம் உள்ள பொருட்களைக் கொடுத்து, தங்களுக்கு வேண்டும் பொருட்களைப் பண்டமாற்று முறையில் வாங்கினார்கள். பின்னர் மக்கள் தாங்கள் தூரமான இடத்தில் கிடைக்கும் பொருட்களை வாங்க, தங்களது பொருட்களைக் கொண்டு செல்லும் இடர்ப்பாட்டைத் தவிர்க்க, அபூர்வப் பொருட்களைப் பண்டங்கள் வாங்கப் பயன்படுத்தினர்.

பூமியிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை மனிதன் அறிந்ததும் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு, பித்தளை, வெண்கலம் போன்ற உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளை அடித்தும் அச்சில் வார்த்தும் நாணயங்களை உருவாக்கினர். முதன் முதலில் நாணயம் வெள்ளியில்தான் உருவாயின.

முதலில் உருவான நாணயத்தின் பெயர் 'அச்சு குத்திய காசுகள்' என்பதே. முதன்முதலில் கி.மு.680-இல் வாழ்ந்த வணிகர் ஒருவர் தம் முத்திரையைப் பதித்து நாணயங்களை வெளியிட்டார். இன்று போல் அன்றெல்லாம் வங்கிகள் கிடையாது. அன்று நாணயங்கள் பூமிக்கடியில் புதைக்கப்பட்டன. மட்பாண்டத்திலும், செப்புப் பாத்திரத்திலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன. மண் சுவர்களிலும் மறைத்து வைத்தார்கள்.

அகஸ்டஸ், வெருசஸ், டைபிரியஸ் போன்ற ரோமானியப் பேரரசர்கள் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் தங்களது உருவங்களைப் பதித்து நாணயங்களை உலாவ விட்டார்கள். அதனைத் தொடர்ந்து பல நாடுகளிலும் குறிப்பாக இந்திய அரசர்கள் தங்களது முத்திரை - உருவம் பொறித்த நாணயங்களை உருவாக்கி புழக்கத்தில் விட்டார்கள்.

தோலினாலும் நாணயங்கள் உருவாக்கப்பட்டன. குப்தர்கள், கங்கர்கள், சோழர்கள் போன்ற அரச மரபினர் நாணயங்களைத் தங்கத்தால் உருவாக்கி வெளியிட்டார்கள்.

பல்லவர்கள் காலத்தில் கற்களால் கோயில்களைக் கட்டினர். பின் செங்கல், சுதை கொண்டு கோயில்களையும் கட்டினர். சோழர்கள் காலத்தில் கற்சிற்பங்களைச் செய்து அவற்றைக் கோயில்களில் வைத்து வழிபட ஆரம்பித்தனர். சிலைகளைக் கோயில்களில் வைக்கையில் அவற்றின்கீழ் தங்க நாணயங்களைப் போட்டு வைத்தனர்.

**வே. ஜெயராஜ்**
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம், வேலூர்.

இந்திய அரசு 1878-இல் இந்தியப் புதையல் சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன்படி, பூமிக்குள்ளிருந்து நாணயங்களை யார் கண்டெடுத்தாலும் அவை அரசுக்குச் சொந்தமானவை என அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்களையும் ஆங்காங்கே (தொல்பொருள்) அகழ்வைப்பகங்களையும் நிறுவி வருகிறது.

ஆய்வில் ஈடுபட்ட தொல்பொருளார் முற்காலங்களில் மக்கள் வாழ்ந்து அழிந்த பகுதிகளை இனங்கண்டு, பூமியைத் தோண்டி நாணயங்களை வெளியே கொண்டு வந்தார்கள். அவற்றைத் துல்லியமாக ஆய்வு செய்தனர். அவற்றைப் படம் பிடித்துப் பத்திரிகைகளிலும் விளம்பரப்படுத்தினர்.

தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத் துறையின் கீழ் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சி, வேலூர், ஈரோடு, உதகமண்டலம், கோவை, கடலூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்களை நிறுவியுள்ளது.

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களிலுள்ள நாணயங்களை அநேகர் கண்டுகளிக்க வசதியாக, வேலூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் இலட்சுமணசாமி டவுன் ஹாலில் அரசு அருங்காட்சியகம் உள்ளது.

# மகளிர் கல்வி வளர்ச்சி



டி. நாச்சிமுத்து
இயக்குநர்
பள்ளிக் கல்வி, தமிழ்நாடு அரசு

அரும்பெரும் தலைவர்கள் யாவரும், ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் முன்னேற வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இப்பெரியோர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதையே இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது தமிழக அரசு.

கல்லாமை என்பது இல்லாமையினும் கொடிது எங்கே கல்வியின்மையும், ஏழ்மையும் பெண்களிடையே காணப்படுகிறதோ அங்கெல்லாம் பிரச்சினைகள் அதிகம் உருவாகக் காணலாம். கல்வி பெற்ற, நகர்ப்புற, வறுமைக்கு உட்படாத மக்களைப் போன்று கிராமப்புறத்தில் வாழும் பெண்களும், கல்வி அறிவு பெற்றால்தான் நமது நாடு பல பிரச்சினைகளிலிருந்து மீள முடியும். எனவே பெண்கள், கல்வியில் முன்னேற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தமிழக அரசு கீழ்க்கண்டவாறு பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

ஒன்றுமுதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் ஏழை மாணவிகளுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள், சீருடை மற்றும் காலணிகள் வழங்கப்படுகின்றன.

வறுமை அகலாத குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்கு எட்டாம் வகுப்போ அதற்கு மேலோ படித்தவர்களாக இருப்பின், அவர்களின் திருமணச் செலவுக்கென மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தின் கீழ் ரூ.5,000 வழங்குகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனப் பெண்களில் ஐந்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினால் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை பயனடைந்துள்ளர். மேலும் ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சார்ந்த மாணவிகள் கல்லூரிகளில் சேர்ந்து பயிலுவதை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேல் இல்லாத பெற்றோரின் பெண் குழந்தைகளுக்கு இளங்கலை பட்டப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

**புதியதோர் திட்டம்**

கொடைத்தன்மை வாய்ந்தோர் 1-8 வகுப்புகளில் பயிலும் சிறுமியரைத் தத்து எடுத்து, அச்சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ.250 வழங்குவதற்கான ''வளர்ப்புப் பெற்றோர் திட்டம்'' என்ற புதுமையான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல் இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே அதிகமாக உள்ளது. இதனைச் சீர் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவ/மாணவிகளின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணிதம் மற்றும் அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடிப் பொறுப்பில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட 625 உயர்நிலைப் பள்ளிகளில், 8, 9, 10-ஆம் வகுப்புகளில் இச்சமுதாயத்தைச் சார்ந்த 62,799 மாணவர்களுக்கும் 375 மேல்நிலைப் பள்ளிகளில் 24,057 மாணவர்களுக்கும் இத்திட்டம் பயனளித்து வருகிறது.

இவ்வாறாகத் தமிழக அரசு வழங்கியுள்ள கல்விச் சலுகைகள் காரணமாகப் பள்ளிகளில் சேரும் **பெண்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு** ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது மட்டுமல்ல; இடையில் படிப்பை நிறுத்திவிடும் பெண்களின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. இதன் காரணமாகப் பெண்களுக்கெனப் புதிதாக ஆண்டு தோறும் புதிய உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்படுகின்றன. இதனால் படித்த பெண்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே வருகிறது.

அத்தியாவசியத் தேவைகளை மட்டுமே கூட பூர்த்தி செய்துகொள்ள இன்றைக்குக் குடும்பத்தில் ஒருவரது வருமானத்தால் மட்டும் சாத்தியப்படுவதில்லை. எனவே, குடும்பச் சுமையைப் பகிர்ந்து கொள்ளப் பெண்களும் அவரவர் கல்வித் தகுதிக்குத் தக்கவாறு ஏதேனும் ஒரு வேலையைச் செய்து அதனால் வரும் வருமானத்தைக் கொண்டு, குடும்பத்தின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

படித்த பெண்களுக்கு உரிய வேலைவாய்ப்புகள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசுப் பணிகளில், பொதுத்துறை நிறுவனங்களில், உள்ளாட்சிகளில் வேலைவாய்ப்பில் 30 சதவிகித இடம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தாய்க்குலம் உயர, கல்வித் துறையில் பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் தரும் வகையில், முதல் ஐந்து வகுப்புகளுக்குப் பாடம் கற்பிக்கப் பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்யத் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இச்சிறப்புச் சலுகையால், அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாகியுள்ளன. பெண்களைக் கல்வியில் நாட்டம் கொள்ளும்படி செய்துள்ளது. தென் மாநிலங்களில் பெண் ஆசிரியர்கள் நியமனத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பள்ளிக் கல்வித் துறையில் 1979-80-ஆம் ஆண்டு முதல் 1990-91-ஆம் ஆண்டு முடிய பெண்கள், ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்ட வகையில் அடைந்துள்ள வளர்ச்சி விவரத்தைக் கீழே உள்ள அட்டவணை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

*1979-80-இல், நியமிக்கப்பட்ட 2,58,462 ஆசிரியர்களில் பெண்கள் மட்டும் 1,02,571 பேர்; அதாவது 39.7 சதவிகிதம்.*

*1980-81-இல், மொத்த ஆசிரியர்கள் 2,68,574-இல் பெண்கள் 1,06,619; 39.7 சதவிகிதம்.*

*1981-82-இல், 2,71,287 பேர்களில், பெண்கள் 1,09,178; 40.2 சதவிகிதம்.*

*1982-83-இல், 2,76,370 பேர்களில் 1,11,489 பேர் பெண்கள் ; 40.3 சதவிகிதம்.*

*1983-84-இல், 2,81,022 பேர்களில், 1,14,654 பேர் பெண்கள் ; 40.8 சதவிகிதம்.*

*1984-85-இல், 2,84,414 பேர்களில் 1,16,166 பேர் பெண்கள் ; 40.8 சதவிகிதம்.*

*1985-86-இல், 2,87,869 பேர்களில் 1,17,882 பேர் பெண்கள் ; 40.9 சதவிகிதம்.*

*1986-87-இல், 2,90,728 பேர்களில் பெண்கள் 1,19,598 பேர்; 41.1 சதவிகிதம்.*

*1987-88-இல், 2,93,155 பேர்களில், பெண்கள் 1,21,357 பேர்; 41.4 சதவிகிதம்.*

*1988-89-இல், 2,94,339 பேர்களில் 1,21,823 பேர் பெண்கள் ; 41.4 சதவிகிதம்.*

*1989-90-இல், நியமனம் பெற்ற 2,97,918 ஆசிரியர்களில் 1,24,493 பேர் பெண்கள்; 41.8 சதவிகிதம்.*

*1990-91-இல் 3,00,857 பேர்களில் 1,27,841 பேர் பெண்கள் ; அதாவது 42.5 சதவிகிதம் பேர்.*

ஆண்டுக்கு ஆண்டு, ஆசிரியர் பணியேற்கும் பெண்கள் தொகை வளர்ந்துகொண்டே வந்திருக்கிறதல்லவா?

பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியப் பணி அல்லாத பிற பணிகளிலும் பெண்கள் பணியாற்றுகின்றனர். அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் போன்ற பணிகளில் பெண்கள் பணிபுரிகின்றனர்.



தமிழக அரசின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணிபுரிகின்றனர். அவற்றில் பள்ளிக் கல்வித் துறையில்தான் மற்ற துறைகளைக் காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையில் பெண்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்கள் 1/3 பங்கு பெண்கள் உள்ளனர். பெண் பணியாளர்களில் பாதிப்பேர் பள்ளிக் கல்வித் துறையில்தான் பணியாற்றுகிறார்கள். மேலும் 30 சதவிகித வேலை வாய்ப்பைப் பெண்கள் பெறுவதற்கான கல்வியைப் பெண்களுக்கு அளிப்பதிலும், படித்த பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலும் பள்ளிக் கல்வித்துறையின் பணி மகத்தானது என்பதில் ஐயமில்லை.

# மதுவை மறப்பீர்!



என். மோகன்ராஜ்

இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் நிச்சயமாக உடன் பிறந்தவர்களேயென்றால் யாரும் ஐயப்பட வேண்டியதில்லை. நமக்குள் பல மதம் இருக்கலாம். பல பிரிவுகள் இருக்கலாம். பல சாதிகள் இருக்கலாம். ஏன் பல மொழிகள்கூட இருக்கலாம். அவையெல்லாம் நமது ஒற்றுமையைக் கெடுப்பதற்கோ அல்லது பகைமையை வளர்ப்பதற்கோ என்று நாம் வைத்துக் கொள்ளக்கூடாது. நமது பெருமையை வளர்ப்பதற்கும், நமது பண்பை வளர்ப்பதற்கும் நமது கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும்தான் அதெல்லாம் பயன்பட வேண்டுமேயன்றி, நமக்குள் பிரிவினையை உண்டாக்கப் பயன்படுத்தக் கூடாது. அப்படிப் பயன்படுத்தும் காலத்தில் நமது முக்கியக் கடமைகள் யாவும் தவறிவிடும். கடமைகள் தவறிவிட்டால் அங்கு மகிழ்ச்சி நிலவ வாய்ப்பில்லை, அமைதி நிலவ வாய்ப்பில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

இப்போதைக்கு நாம் உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய நமது தலையாய கடமை அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே! அது தான் "மதுவிலக்கு"!

எது எப்படியிருந்தாலும் இன்றைய சூழ்நிலையில், இன்றைய வாழ்க்கையில், இன்றைய பொருளாதாரத்தில், இன்றைய வளர்ச்சியில், மதுவிலக்கு என்பதை அனைவரும் நிச்சயமாக, கட்டாயமாக மறுக்காமல் ஏற்றுக்கொள்வதுடன், அதைச் செயல்படுத்தவும் வேண்டும்.

நமது நாடு முன்னேற வேண்டும் என்ற இலட்சியத்தின் கீழ் நாமெல்லாம் மதுவிலக்கைச் செயல்படுத்த முன்வரவேண்டும். நமக்கு ஏன் மதுவிலக்குத் தேவை என்ற கேள்விகள், ஒரு புறம் எழலாம்.

ஒருவன் மது குடித்துவிட்டால் அந்த மது மற்ற உணவுப் பொருள்களைப் போல் எளிதில் ஜீரணமாவதில்லை. ஜீரணப்பைக்குச் சென்ற மது, அங்கு உள்ள மற்ற ஜீரண நீர்களுடனும் ஜீரணிக்கப்பட்ட உணவுடனும் கலந்து சிறு குடலுக்கு வருகிறது. பிறகு ஒரு வழியாக இரத்தத்தில் கலந்து விடுகிறது. இப்படி இரத்தத்துடன் கலந்த மது என்ன செய்கிறது என்றால் காமாலை, கண் நோய்கள், பசியின்மை, குடல் புண், நரம்புத் தளர்ச்சி மற்றும் மூளைக்கோளாறுகள் மற்றும் பல நோய்களை அன்பளிப்பாகக் கொடுத்து விடுகிறது! ஆனால், மது அருந்தியவன், இதை எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அந்த அன்பளிப்புப் பெற்றவன், விரைவிலேயே ஒரு நோயாளியாகிவிடுகிறான். பாடுபட முடியாத ஒரு முடவனாகிறான். பார்த்தவர் நகைக்கும் ஒரு கேலிப் பொருளாகிறான். இவ்வளவும் யாரால் என்றால் நிச்சயமாக அவனால் தான். அவன் குடித்த மதுவால் தான். இந்த நிலைமை மது குடித்த நாளிலேயே வந்துவிடுவதில்லை. நாட்பட நாட்படத்தான் வருகின்றது. நாகப் பாம்பின் நஞ்சு நிமிடத்தில் ஒருவனைக் கொன்று முடித்து விடுகிறது. ஆனால், மதுவென்னும் நஞ்சோ ஒருவனை மாத்திரம் கொல்வதில்லை. அவன் குடும்பத்தையே அழித்து விடுகிறது. இதற்கெல்லாம் காரணமான மது தேவை தானா?

ஒரு தனி மனிதனின் வருவாயே நாட்டின் வருவாய் ஆகும். ஒரு தனி மனிதனின் உயர்வே நாட்டின் முன்னேற்றம் ஆகும். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்!

ஆகவே, மகிழ்ச்சி நாட்டுக்கும் வீட்டுக்கும் தேவையென்று உணரும் போது நாம் மதுவிலக்கை வரவேற்க வேண்டும். அப்படி வரவேற்கத் தவறும் தறுவாயில் நமது வீடும் நமது நாடும் மிகக் கேவலமான நிலைக்கு வர வாய்ப்பிருக்கிறது. மதுவை மட்டும் குறிப்பிடவில்லை; ஹெராயின், பெத்தடின், மார்பைன், காம்போஸ் கஞ்சா, அபின் போன்ற மற்ற போதை மருந்துகள் எதுவாக இருந்தாலும் அவற்றை உபயோகப் படுத்துபவர் அனைவரும் நாட்டு நலனைக் காக்க - போதை மருந்துகளையும் நீக்கவேண்டும் என்ற கொள்கை இலட்சியத்திற்கு வர வேண்டும். மேலும் நேற்றைய நாள் வரையில்கூட மதுவிற்கு அடிமையாகி இருக்கலாம். இனியும் அந்தத் தொடர் தொல்லை வேண்டாமே!

வீட்டைக் காப்பதன் மூலம் நாட்டைக் காப்போம் என்ற கடமை உணர்வுடன் அருகில் உள்ள சிறந்த மருத்துவரை அணுகி, நேற்றைய நாள் வரை நடந்ததை எடுத்துக்கூறி, தக்கவாறு பரிசோதனைகள் செய்து கொண்டு, பின்னர் மருத்துவர் அளிக்கும் நலம் தரும் மருந்துகளை நாளும் உண்டு, வரும் நாளிலும் தக்க அளவு பயிற்சிகள் - யோகா முதலானவற்றின் வாயிலாகவும் மேற்கொண்டு மதுப்பழக்கத்திலிருந்து விடுபட்டு புதிய மனிதனாக மாறலாம். வாழலாம், வாழ்ந்து காட்டலாம். இது பெரிய பிரச்சினை அல்ல! ●



ஒரு மனிதனின் எண்ணமும், நோக்கமும் மட்டுமே நல்லதாக இருந்தால் மட்டும் போதாது. செயலும், பண்பாட்டுடன் இருக்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் நாட்டில் நல்லவை நடக்கும்.



# வளரும் வேளாண்மை

## இலைவழியாக இரும்புச்சத்து அளித்தல்

நுண்ணூட்டங்கள் பற்றாக்குறைகளில் பயிரில் இரும்புச்சத்து பற்றாக் குறையை (Iron Deficiency Symptoms) மிக எளிதில் கண்டுபிடிக்கலாம். அந்த அளவுக்குத் தெளிவாக இரும்புச் சத்து பற்றாக்குறை அறிகுறி பயிரில் காணப்படும்.

இரும்புச்சத்து பற்றாக்குறை அறிகுறி ஒரு சில பயிர்களில் மிக எளிதில் காணப்படுகிறது. அதாவது கரும்பு, மஞ்சள், சோளம், மக்காச் சோளம் மற்றும் மல்லிகை, முல்லை, கனகாம்பரம் முதலிய பயிர்களில் அதிகமான அளவிலும், அடிக்கடியும் காணப்படுகிறது. மேற்கூறிய பயிர்கள் மண்ணில் இரும்புச் சத்துப் பற்றாக்குறையை எதிர்த்து விரைவாக வளர்வதில்லை.

## பற்றாக்குறை அறிகுறிகள்

ஆரம்பத்தில் செடியின் மேலிருந்து 3-வது அல்லது 4-வது இலைகளில் வெளிறிய மஞ்சள் நிறம் காணப்படும். 'பற்றாக்குறை அதிகமானால் இலை நரம்புகளுக்கு இடையே உள்ள பாகங்கள் நல்ல மஞ்சள் நிறமாக மாறிவிடும். அந்த நிலையிலும் இலை நரம்புகள் பசுமையாகவே காணப்படும். இந்த அறிகுறியை அடிப்படையாக் கொண்டு பயிரில் இரும்புச்சத்து பற்றாக் குறையை "இலை நரம்புகளுக்கு இடையே வெளுத்துத் தோன்றுதல்" என்ற பெயரோடு அழைக்கப் படுகிறது.

கரும்பில் இரும்புச்சத்து பற்றாக் குறையைத் தவிர்க்க அன்னபேதி எனப்படும் இரும்புச்சல்பேட்டை இலைவழியாகத் தெளித்துக் குறையைத் தவிர்க்கலாம்.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் இரும்புச் சல்பேட்டையும் 20 கிராம் யூரியாவையும் சேர்த்து கலக்கி கரும்பு நட்ட 90,105,120-வது நாளில் நன்கு தெளிக்கலாம். காலை அல்லது மாலை நேரங்களில் பயிர் நனையும்படி தெளித்தால் நல்ல பலன் பெறலாம்.

மண் பரிசோதனை செய்து, இரும்புச்சத்து பற்றாக்குறை இருந்தால் ஒரு எக்டேருக்கு 25 கிலோ அன்னபேதி 15 கிலோ மணலுடன் கலந்து, நடவுக்கு முன்பு சீராகத் தூவி விடலாம்.

மண்ணில் இரும்புச்சத்து இடுவதால் நல்ல பலன்பெற வாய்ப்பில்லை. மண்ணுக்கும் இரும்புச் சல்பேட்டுக்கும் இடையே பலவித இரசாயன மாற்றங்கள் நடைபெற்று, இரும்புச்சத்து விரைவில் பயிருக்குக் கிடைக்கும் தன்மை குறைந்துவிடுகிறது. இந்தச் சூழ்நிலை சுண்ணாம்புக்கல் அதிகமாக உள்ள மண்ணில் மிக அதிக விரைவில் இரசாயன மாற்றம் ஏற்படுகிறது.

ஆதலால், கரும்புப் பயிருக்கு இரும்புச்சத்தை இலைவழிமூலமும் தெளித்து நல்ல பலன்பெறக் கேட்டுக் கொள்கிறோம் என்று வேளாண் தகவல் பணி மையம் அறிவிக்கின்றது.

—தகவல்: தமிழ்நாடு ஜி.டி.நாயுடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

# மாநகராட்சியின் சொத்துக்களைப் பராமரிக்கப் பறக்கும் படைகள்!

மாநகராட்சியின் சொத்துக்களைச் சமூக விரோதிகளிடமிருந்து பாதுகாக்கத் தனிப் பறக்கும் படைகள் 1.9.1991 முதல் அமைக்கப்பட உள்ளன. இவை பகலிலும் இரவிலும் ரோந்து சுற்றி பொதுச் சொத்துக்களுக்குப் பாதுகாப்பளிக்கும்.

பொதுமக்களின் புகார்களை 24 மணி நேரமும் பெற 584670 என்ற தொலைபேசி மாநகராட்சியில் செயல்படும். புகார்கள் மீது 24 மணி நேரத்துக்குள் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பஸ் வழித்தடங்களைச் சீர்செய்து அமைக்கப் பொறியாளர்கள் அடங்கிய குழு அமைக்கப் பட்டுள்ளது. இதனால் இச்சாலைகள் விரைந்து பழுதுபார்க்கப்படுவதோடு அவற்றின் தரமும் உயரும். தற்போது சொத்துவரிக்கு ஒவ்வொரு அரை ஆண்டிற்கும் நோட்டீசு அனுப்புவது நிறுத்தப்பட்டு இந்த ஆண்டு முதல் 3 இலட்சம் பேர்களுக்கு வரிப் புத்தகம் வழங்கப்படும். இதன் மூலம் 5 ஆண்டுகளுக்குத் தடங்கலின்றிச் சொத்தின் உரிமையாளர் தம் வரியைச் செலுத்த வழி பிறக்கும்.

சென்னையை அழகுபடுத்த முதற்கட்டமாக 43 பூங்காக்கள் ரூ.75 இலட்சம் செலவில் சீர்திருத்தப் படும்:

சாலைகளில் மின்வாரியம், தொலைபேசி, குடிநீர் வடிகால் வாரியத்தினர் இணைப்புகளுக்காகவும், பழுது பார்க்கவும் சாலைகளை வெட்டுவதைக் குறைக்கவும் தேவையான இடங்களில் சாலபோடும் முன்பே இவற்றைச் செய்திடவும் ஒருங்கிணைப்புக்குழு செயல்படும்.

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

# காடு வளர்ப்பு

சுவீடன் பன்னாட்டு நிதி உதவியுடன், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில். உள்ள வனக்கோட்டத்தின் மூலம் தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடும் பணி செய்யப்பட்டு வருகிறது. 1991-92-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### சமுதாயத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடுவதற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு 700 எக்டேர் பரப்பு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செடிகள் நடுவதற்கு முன்னோடியாக 13,17,425 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 8,87,000 எண்ணிக்கை குழிகள் தோண்டப்பட்டுள்ளன. வடகிழக்குப் பருவமழை பெய்தபின் செடிகள் நடும் பணி மேற்கொள்ளப்படும்.

### சமுதாயத் தரிசு நிலப் பரிசோதனைத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், மலைக்குன்றுப் பகுதியை மேம்படுத்தும் வகையில் 50 எக்டேர் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மலைக்குன்றுப் பகுதிகளில் செடிகள் நடும் பணி, மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் செடிகள் நடுவதற்கு ஆயத்தமாக 7,500 குழிகள் தோண்டும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மண்வளப் பாதுகாப்புப் பணியான தடுப்பணை அமைக்கும் பணியும், நடைபெற்று வருகிறது.

### இடைப்படு காடுகள் திட்டம்

ஒதுக்குக் காடுகளின் (Reserved Forests) எல்லையோரப் பகுதியில் அமைந்துள்ள கிராம மக்கள் தரத்தை உயர்த்தவும், அந்தக் கிராம மக்களின் எரிபொருள், கால்நடைத் தீவனம் மற்றும் இதரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 150 எக்டேர் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தென்காசி சரகம் மாயமான் குறிச்சி மற்றும் கோட்டமலை சாவல் காட்டுப் பரம்புப் பாதுகாப்புக் காடுகளின் எல்லையோரப் பகுதிகளில் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தற்சமயம் இத்திட்டத்தின் கீழ், முன்னோடியாகச் செடிகள் நடுவதற்கு 1,48,852 நாற்றுகள் உற்பத்தி செய்தும், 1,23,956 குழிகள் தோண்டும் பணி செய்தும் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் மண் அரிப்பைத் தடுக்கவும், நீர் வளம் பெருகவும் 13 தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### பன்முகப்படுத்தப்பட்ட மக்கள் நாற்றங்கால்

மத்திய அரசு நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 7,00,000 கன்றுகள் உற்பத்தி செய்யக் குறியீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நாற்றங்கால் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்குத் தேவையான பாலிதீன் பைகள் மற்றும் விதைகள், துறை மூலம் விநியோகம் செய்யப்படுகிறது.

நாற்றங்கால் உற்பத்தி செய்யக் குறியீடு விவசாயிகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, நாற்றங்கால் உற்பத்தி செய்யும் செலவும் வழங்கப்படுகிறது. அந்த விவசாயிகளால் கன்றுகள் உற்பத்தி செய்து முடித்த பின்னர் துறை உபயோகத்திற்குத் திருப்பிப் பெற்றுக் கொள்வதற்கு கன்று ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக ரூ.0.70 காசு வீதம் வழங்கப்படும்.

1991-92-ஆம் ஆண்டு, இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே உற்பத்தி செய்து வந்த உழவர்கள் பயன் அடைய உள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம், சுமார் 70 விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

1991-92-ஆம் ஆண்டிற்கு மேலே குறிப்பிட்ட திட்டப் பணிகளைச் செயல்படுத்த ரூ.58 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், இது நாள் வரை ரூ.5.44 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ●



## இராமநாதபுரம் மாவட்டம்:

# கதர் கிராமத் தொழில்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தில் இதுவரை 18 நூற்புக் கூடங்கள் மூலமாக 600 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சம் வருமானம் பெறுகின்றனர்.

சாயல்குடி, கமுதி கதர் உற்பத்தி அலகுகளில் 75 நெசவாளர் குடும்பங்கள் கதர் நெசவு செய்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.20 இலட்சம் வருமானம் பெறுகின்றன.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 இலட்சத்திற்கு காதி கிராப்ட்கள் மூலம் விற்பனையாகின்றன.

காலணி அலகு மற்றும் நாகரிக சிப்பிக்கலைப்பொருட்கள் மூலமாக 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு ரூ.15-க்குக் குறையாமல் வருமானம் பெறுகின்றனர்.

150 கதர் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக 7,500 நபர்கள் நேரடி வேலை வாய்ப்பும், 35,000 நபர்கள் பகுதி நேர வேலைவாய்ப்பும் பெறுகின்றனர். ஆண்டு ஒன்றுக்கு ரூ.15 இலட்சம் வருமானம் பெறுகின்றனர்.

இம்மாவட்டக் கதர் கிராமத் தொழில் வளர்ச்சிக்கென 16 தொழிற்கூடங்கள் சுமார் ரூ.40 இலட்சம் செலவில் உத்திரகோசமங்கை, பாம்பன், ஆர்.எஸ்.மங்கலம், தாதனேந்தல், திருப்புல்லாணி, பாண்டிக்கண்மாய், பரமக்குடி, காத்தனேந்தல், கீழமுடிமன்னார்க்கோட்டை, மேலச்சிறுபோது, பூசேரி, பழங்குளம், ஓடக்கால், பெருங்களூர் ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

**1991-92-ஆம் ஆண்டிற்காகக் கீழ்க்கண்ட செயல்முறைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது:**

- நூற்பு மூலம் 500 கிராமப்புறப் பெண்களுக்கு ரூ.26 இலட்சம் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல்.
- கதர் உற்பத்தியின் மூலம் 50 நெசவாளர் குடும்பங்களுக்கு ரூ.14 இலட்சம் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல்.
- கிராமத் தொழில் அலகுகள் மூலம் 100 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் வருவாய் வாய்ப்பு அளித்தல்.
- தற்போது இயங்கும் 120 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 20 இலட்சம் ரூபாய் வருவாய் வாய்ப்பு ஏற்படுத்தல். ரூ.50 இலட்சம் செலவில் புதிதாகத் தோல் உற்பத்தி, காகித உற்பத்தி மற்றும் இதரத் தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி மேலும் ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தல்.
- புதிதாக மூன்று காதி கிராப்ட் ஆரம்பித்து, கதர் கிராமத்தொழில் பொருள் விற்பனையை ஊக்குவித்தல்.
- தனி நபர் கடன் மூலம் 300 கிராமத் தொழிலாளர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.12 இலட்சம் வழங்கல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, அபிராமம், கமுதி-1, முதுகுளத்தூர், கமுதி-2, பேரையூர்-1, பேரையூர்-2, மேட்டுப்பட்டி, உத்திரகோசமங்கை, பி.புத்தூர், ஆர்.எஸ்.மங்கலம், கே.எம்.கோட்டை, பெருங்களூர், நரிப்பையூர், மைக்கேல் பட்டினம், ஓரிக்கோட்டை, பாண்டிக் கண்மாய் ஆகிய இடங்களில் கிராமிய நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. ●



# நூல் நயம்

### கல்வி

**(அண்ணல் காந்தியடிகளின் கட்டுரைத் தொகுப்பு)**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-625 020.

விலை:ரூ.32 பக்கம்:510

கண்ணாகப் போற்றி மதிக்கப்படுவது கல்வியாகும்; கல்வி ஒன்றே மனிதனை மனிதனாக்கும் அடிப்படையாகும்.

அண்ணல் காந்தியடிகள் கல்வியின் அவசியம் குறித்து, எழுதியும் பேசியும் வந்திருக்கின்றார். அவற்றையெல்லாம் அழகுறத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

கல்வியின் நோக்கங்கள், இலக்கியக் கல்வி, தொழிற்கல்வி, சமயக் கல்வி, முதியோர் கல்வி - இவ்வாறு பல்வேறு நிலைகளை விளக்கிடும் அண்ணலின் கருத்துக்கள் நம் எண்ணத்தில் இருத்திக் கொள்ளத் தக்கவையாகும்.

பெற்றோர்களின் பொறுப்பு என்ன? ஆசிரியர்-மாணவர் கடமை என்ன? என்பன போன்ற வினாக்களுக்கான விளக்கமும் தெளிவுபடக் கூறியுள்ளார் காந்தியடிகள். எக்காலத்துக்கும் பொருத்த மான கருத்துரைகள் நிறைந்த பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

### ஜே.கே.யின் வாழ்க்கை

**ஆசிரியர்: மானோஸ்**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

பக்கம்:199 விலை:ரூ.20/-

**பொ**துவாக இந்தியத் தத்துவாசிரியர்களை இந்திய நாடு அடையாளம் கண்டு கொள்வதில்லை. வெளிநாடுகள் தான் அடையாளம் காட்டுகின்றன. டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் அவர்களைக் குறித்து அமெரிக்க நாடு அறிந்து கொண்ட பின்னர்தான் இந்தியத் திருநாடு புரிந்து கொண்டது. அது போலவே மதனபள்ளியைச் சேர்ந்த ஜே.கே. எனச் சுருக்கமாக வழங்கப் பெற்ற ஜே.கிருஷ்ணமூர்த்தி அவர்களையும் வெளிநாட்டினர் இனம் கண்ட பின்னரே இந்தியா புரிந்து கொண்டுள்ளது.

அன்னிபெசன்ட் அம்மையாரால் தத்தெடுக்கப்பெற்று, வளர்க்கப் பெற்ற பெருமைக்குரிய ஜே.கே. அவர்களின் வரலாறும் அவரது தத்துவங்களும் இந் நூலில் இனிய, எளிய நடையில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. பதினைந் தாவது வயதிலேயே ஆங்கில மொழியில் தத்துவ நூல் ஒன்றை எழுதியிருக்கிறார் ஜே.கே. என்னும் செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

நாம் புத்தகங்களில் மட்டுமே சந்தித் திருக்கின்ற கலீப் கிப்ரான், ஜார்ஜ் பெர்னாட்ஷா போன்ற இலக்கிய வாணர்கள் ஜே.கே.யைச் சந்தித்திருக் கிறார்கள் என்பதையும் அவருக்குப் புகழ் மாலைகள் சூட்டியிருக்கிறார்கள் என்பதையும் இந்நூலின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

—தமிழ்ப்பித்தன்

### ஒரு தேசத்துப் பறவைகள்

**ஆசிரியர்: சிற்பி சோமு**

**வெளியீடு:**

சரவணா பிரசுரம்
2497, தெற்கு ராஜ வீதி,
புதுக்கோட்டை-1.

விலை:ரூ.10/- பக்கம்:96

**இ**ந்நூலில் ஒன்பது சிறுகதைகள் உள்ளன. சிறுவர்களுக்குப் பயன்படும் வகையில் எளிய முறையில் படைத்திருக் கிறார் ஆசிரியர்.

அனைத்துக் கதைகளிலும் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு உயரிய பண்புகளை நேர்மை, நீதி, கடமையுணர்வு ஆகியன கருத்துச் செறிவுடன் சொல்லப்பட்டுள்ளன.

உள்ளமும், உடலும் நல்ல ஆரோக் கியத்துடனும், உறுதியுடனும் இருந்தால் தான் சிந்தனைத் தெளிவுடன் சீரிய செயல்களில் ஈடுபட முடியும். அதற்கு இதுபோன்ற கதைகள் இளஞ்சிறார் களுக்கு மிகவும் உதவும் என்பதில் ஐய மில்லை.

—ஜே.சந்திரன்

### அறிவுரைக் கதைகள்

**ஆசிரியர்: கடலூர் மணிமாறன்**

**வெளியிட்டோர்:**

விடியல் வெளியீட்டகம்
109, மேலைத் தெரு
கிருட்டிணராயபுரம்
திருச்சி மாவட்டம்-639 102.

பக்கம்:68 விலை:ரூ.10

சிறுவர்களுக்கான அறிவுரைச் சிறு கதைத் தொகுப்பு, பலகதைகள் நாம் கேள்விப்பட்ட புகழ்பெற்ற கதைகள் தான். அவற்றை குழந்தைகளுக்கு ஏற்ற வாறு சுருக்கி, எளிமையாக எழுதி உள்ளார் ஆசிரியர்.

முதல் இரண்டு கதைகளின் முடிவில் இறுதி வரியாகச் சொல்லப்பட்டுள்ள பழமொழிகளைப்போல் ஒவ்வொரு கதையின் கருவையும் பிரதிபலிக்கும் பழமொழிகளையும் அக்கதைகளின் முடிவில் வெளியிடப்பட்டிருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

### போக்கிரி பாலு

**ஆசிரியர்: என்.எஸ்.நாதன்**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
த.பெ.எண்.501
பூங்கா நகர்
சென்னை-600 003

விலை:ரூ.12.00 பக்கம்:53

தன் மகன் நல்லவனாக வாழ வேண்டும் என்ற எல்லாத் தாய்மார்களைப் போலவேதான் பாலுவின் தாயும் கனவு காண்கிறாள். ஆனால், பாலுவோ போக்கிரி பாலுவாக வளர்கிறான். இறுதி யில், தம் தவற்றையெல்லாம் உணர்ந்து மனம் திருந்துகிறான். குழந்தைகளுக் கேற்ற நல்ல கதை.

— குமாரசாமி

### பழத் தோட்டமும் பழத்தொழில்களும்

**ஆசிரியர்: அ. ராம்கோபால்**

**வெளியீடு:** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

விலை:ரூ.24 பக்கம்:16(

உடல் நலனைப் பாதுகாக்கும் உண வகைகளில் பழங்களுக்கும் முக்கியத்துவ உண்டு.

பழ வகைகளைப் பயிர் செய்வது அவற்றைப் பாதுகாப்பது உள்ளிட்ட ப வழி முறைகளைத் தெளிவாக விளக் கிறது இந்நூல்.

பழங்களின் குணங்கள், பழங்க கெடாமலிருக்க வழி ஆகிய குறிப் களுடன், பழச்சாறுகள், பழ ஜா ஊறுகாய், பழ வற்றல்கள் ஆகியவ செய்யும் முறை பற்றியும் கூறுகிறது இ நூல். இல்லத்தரசிகள் மட்டுமல் சுயமாகத் தொழில் தொடங்கும் இளைஞர் கூட இந்நூலில் கூறப்பட்டுள்ள வ முறைகளைப் பின்பற்றலாம். படித்து தெரிந்து கொள்ளலாம்.

—பி.வி.தி





# நிலம் நீர் பயிர்!

- ஆர். எம். சக்திவேலு
செயற் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை

நமது நாடு பண்டைக் காலம் தொட்டே விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளது. அதே சமயம் பெருகிவரும் மக்கட் தொகைக்கு ஈடாக விளைச்சலைப் பெருக்க வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயப் பெருங்குடி மக்களும், அதைச் சார்ந்த துறைகளும் செயல் படவேண்டும். இந்நிலையில், விவ சாயிகள் ப்யிர் வகைகளையும், அதன் நீர்த் தேவைகள் பற்றியும், நிலம் நீர் பயிர்களின் தொடர்புகள் பற்றியும் அறிந்திருத்தல் மிக அவசியம். அத்தொடர்புகளை அறிதலின் முக்கிய நோக்கமே குறைந்த செல வில் அதிக மகசூல் பெறுவதுதான். இது எப்படி? நவீன யுக்திகளைப் பயன்படுத்தி விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களைச் சீர்படுத்தி விளைநிலங்களாக்கியும், நிலங் களின் தன்மை, சூழ்நிலைகளுக்குத் தக்க பயிர்களைப் பயிரிட்டும், குறைந்த பரப்பில் சிக்கனப் பாசன முறை களைக் கையாண்டு அதிக மகசூல் பெறமுடியும். இந்த நவீன யுத்தி களை எப்போது கடைப்பிடிக்க முடியும்? நிலம் - நீர் - பயிர் அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு களை (ஏன் உறவு என்று கூடச் சொல்லலாம்) அறியும்போதுதான்.

ஒவ்வொரு பயிரும் அதன் வேர்ப் பிடிப்புக்குத் தக்க மண்ணும், உணர்ச்சிப் பருவத்திற்கேற்ற நீர் அளவும் இருக்கும்போதுதான், மண்ணின் 16 வகை இயற்கைத் தாதுப் பொருட்களும் நாம் இடும் உரங்களும் பயிரின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது.

உலகின் பெரும்பகுதி கடலால் சூழப்பட்டிருந்தாலும் விவசாயத்தின் நீர் வளம் மழை நீர்தான். நமது நாட்டைப் பொறுத்தவரையில் குறிப் பாகத் தமிழ்நாட்டில், ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென் மேற்குப் பருவ மழையும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவமழையும் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. இப்பருவமழைக் காலங்களில் வெள்ளமும், பிற காலங்களில் வறட்சியும் விவசாயத் தைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கிறது. மழைக்காலங்களில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்களைச் செயலாற்றுவதன் மூலம் நிலத்தடி நீரை மேம்படுத்தி, வறட்சிக் காலங்களிலும் விவசாயம் செய்ய இயலும். ஓடைகளின் நடுவே தடுப்பணைகள் அமைத்தும், சிற் றோடைகள் வளராதபடி மரச் செடிகள் நடுவதன் மூலமும், புன்செய் நிலங்களில் சரிவுக்குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைத்தும், ஆழ உழவு செய்தும், பின்னர் அதிக நீர்வரவு உள்ள சரிவான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், ஊற்றுநீர்த் தேக்கங்கள் அமைப்பதன் மூலமும் வெள்ளத்தைத் தடுத்து, நிலப்பரப்பின் மண்ணின் தன்மைக் கேற்ப நீரைச் சேமிக்க இயலும். சாதாரணமாக விளை நிலங்களில் களிமண், செம்மண், மற்றும் மணல் கலந்த வண்டல் பரப்புக்களே உள்ளது. இவற்றில் களிமண்ணில் நீர் ஊடுருவ அதிக நேரமும், செம் மண்ணில் சற்று குறைந்த நேரமும், மணல் கலந்த வண்டல் படிவங் களில் குறைந்த நேரமும் ஆகும். அதே சமயம் ஆழமான வேர்கள் கொண்ட பயிர்கள் மணல் கலந்த வண்டல் பகுதிகளில் எளிதாகவும், களிமண்ணில் கடினமாகவும் ஊடுரு விச் செல்லுதல் இயற்கை.

இது ஏன் என்றால், களிமண் மிகமிகச் சிறு தூசித் துகள்களால் இணைந்தது. இத்தூசித்துகள்கள் இடையில் உள்ள காற்றிடை வெளி அதிக நீளமாக இருந்தாலும் மிக மிகச் சிறிய இடைவெளிகளால் ஆனவை. ஆகவே, நீர் உட்செல்ல அதிக நேரம் பிடிக்கிறது. ஆனால், மணல் கலந்த வண்டல் பரப்பில் காற்றிடைவெளி செல்லத்தக்க வகையில் பெரியதாக இருப்பதால் நீர் உட்செல்லுதல் இலகுவாகிறது. ஆகவே, ஆணி வேரில்லாத சல்லி வேர்கள் கொண்ட பயிர்கள் (உதாரணமாக நெல், மிளகாய்) களிமண் நிலங்களிலும், சிறிது நீளமுள்ள ஆணிவேரும் சல்லி

வேர்களும் உள்ள பயிர்கள், செம்மண் பரப்பிலும் நீளமான ஆணி வேர்கள் கொண்ட பயிர்கள் (உதாரணமாக வேர்க்கடலை போன்ற பயிர்கள்) மணல் கலந்த வண்டல் நிலங்களிலும், பயிரிடுதல் நல்ல மகசூல் பெற வாய்ப்பளிக்கும்.

பயிருக்குத்தக்க பாசனம் செய்தலை விவசாயிகள் கடைப்பிடிப்பதன் மூலம் நீர் விரயம் ஆவதையும், களைகள் வளர்வதையும் தடுத்து அதிகப் பரப்பளவு பாசனம் செய்ய இயலும். பொதுவாகத் தோட்டக்கால் நிலங்களில் பாத்தி முறைப் பாசனமும், இதரப் பயிர்களுக்கு வாய்க்கால் பாசனமும், நடைமுறையில் உள்ளது. இதனால் நீர் ஆவியாவதன் மூலம் விரையமாவதுடன், களைகள் வளரவும் ஏதுவாகிறது. எனவே, பயிர்களின் வேர்ப்பிடிப்புக்குத் தக்கதாகவும், பயிர்களின் இடைவெளிக்குத் தக்கதாகவும் புதிய பாசன முறைகளான சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம், பைவால் எனப்படும் இரட்டைக் குழாய்ப்பாசனம் ஆகிய முறைகளின் மூலம் 40 முதல் 70 சதம் வரை நீரை மிச்சப்படுத்தி பண விரயத்தைத் தடுக்க முடியும். உதாரணமாக- தென்னை, வாழை, எலுமிச்சை, கொய்யா, மா, போன்ற அதிக இடைவெளியுள்ள மரவகைப் பயிர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசன முறை மிகச் சிறந்ததாகும். வேர்க்கடலை, கீரை, இதர குறுகிய இடைவெளிப் பயிர்களுக்குத் தெளிப்பு நீர்ப் பாசனம் ஏற்றதாகும். கரும்பு போன்ற பயிருக்குப் பயிர் குறுகிய இடைவெளியும் வரிசைக்கு வரிசை அதிக இடைவெளியுள்ள பயிர்களுக்குப்பைவால் பாசன முறையும் சாலச் சிறந்ததாகும். இந்த நவீன முறைகளால் விவசாயத்தை முன்னதாகவே சரியாகத் திட்டமிட்டு மகசூல் பெறமுடியும். ஏனெனில் பயிர்களின் நீர்த் தேவை, மண்ணின் ஈர்ப்புத் தன்மை வேர்களின் விஸ்தீரணம், பயிர்களின் எண்ணிக்கை அறிந்து சரியான அளவு திட்டவட்டமாக நீர்ப்பாய்ச்சலாம்.

எனவே, ஒரு முழுமையான சாகுபடி இப்பாசன முறைகள் மூலம் திட்டமாகச் செய்ய முடியும்.

**மண்ணுக்கேற்ற பயிர்:** ஒரு பயிரின் வளர்ச்சியில், நிலமும், நீரும் பயிரின் வேர்களும் ஒருங்கிணைந்து, செயல்படுதல் இன்றியமையாததாகிறது. பயிர்களின் நீர்த் தேவை பயிருக்குப் பயிர் வேறுபடுகிறது. உதாரணமாக, கரும்புக்கு 150 செ.மீட்டரும், நெல்லுக்கு 120 செ.மீட்டரும், நிலக்கடலைக்கு 60 செ.மீட்டரும், பருத்திக்கு 75 செ. மீட்டரும் நீர் வேண்டும். இதனை முறையே 40,55,10,15 தடவைகளாகப் பகுத்து பாசனம் அளித்தலும், மற்ற நிரந்தர மரவகைப் பயிர்களான தென்னைக்கு நாளொன்றுக்கு 25 முதல் 30 லிட்டரும், வாழைக்கு 10 லிட்டரும் தேவைப்படுகிறது. இந்த நீர்த்தேவை, நிலத்தின் ஈரப்பிடிப்புத் தன்மையைப் பொருத்தும், (Humidity) மற்றும் ஆவியாதல் (Evaporation) காரணமாக இடத்துக்கு இடம் மாறுபடும். எனவே, ஒரு பயிரின் நீர்த்தேவை- சிக்கனப்படுத்துவதற்கு முக்கியமாக நிலத்திற்கு ஏற்ற பயிர்களைப் பயிரிடுவதால் நல்ல மகசூலுக்கு உத்தரவாதமளிக்கும். உதாரணமாக, நெற்பயிருக்கு வண்டல் கலந்த களிமண் நிலமே உகந்தது. ஏனென்றால்-இம்மண்ணில் களிமண் துகள்களின் அளவு 60 சதவிகிதம் மேலிருப்பதால், ஈரப்பிடிப்புத்தன்மை அதிகம். ஆனால் நீர் உட்செல்லும் அளவு குறைவு. அதனால் நெல்லுக்கு மட்டும் 5 செ.மீ. வரை நீர்த் தேக்கம் அவசியமாகிறது. மலைப்பிரதேசங்களில் சரிவாக நிலம் இருப்பதால் நீர்த்தேக்கம் தேவைப்படாத தேயிலை மற்றும் காப்பி போன்ற பயிர்கள் நன்கு வளர்கிறது.



இப்போது ஒரு பயிரின் வளர்ச்சியில் நீரின் பங்கு என்ன - நீர் மண்ணுடன் சேரும்பொழுது மண்ணின் இயற்கைத் தாதுப் பொருட்களோடும் உரங்களுடனும் ஒன்றோடு ஒன்று கலந்து வேர் மூலம் உறிஞ்சப்பட்டு தாவரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றடைந்து நீர் மட்டும் இலைகள், தண்டுகள் மூலம் ஆவியாகிறது. இதனை விஞ்ஞான ரீதியாகவும் விளக்க முடியும். ஒரு வித ஊடுருவப்படிவத்தின் ஒரு புறம் அடர்த்தி அதிகமான கரைசலும், மறுபுறம் அடர்த்தி குறைவான கரைசலும் இருக்கும்போது, அடர்த்தி குறைவான கரைசலில் இருக்கும் திரவம் மட்டும் (Solvent) அடர்த்தி அதிகமான கரைசலை நோக்கி (சம அடர்த்தி திரவமாக்கும் நோக்கத்துடன்) செல்கிறது.

இதுபோலப் பயிரின் நீர் அளவு வேர்ப்பகுதி நிலத்தின் நீர் அளவை விடக் குறைவாக இருக்கும்போது நிலத்தின் சத்துள்ள நீர் வேர் என்ற மித ஊடுருவும் படிவத்தின் மூலம் பயிரை அடைந்து வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இதனைச் சவ்வூடு பரவல் முறை என அழைக்கிறோம். (Osmossis) அதே சமயம் நல்ல நாற்றங்களிலிருந்து பயிரை உப்பு நீர் உள்ள நிலத்தில் நடும்போது நிலத்திலுள்ள நீரின் அடர்த்தி பயிரின் திரவத்தைவிட அதிகமாக இருப்பதால் பயிரிலுள்ள திரவம் சவ்வூடுபரவல் (Osmossis) முறையால் வேர் மூலம் நிலத்திற்கும் செல்வதால் பயிர் மடிய ஏதுவாகிறது.

அதே சமயம் தேவைக்கு அதிகமாக நிலத்தில் நீர் நிற்கும்படி நீர்ப் பாய்ச்சினாலும், வளர்ந்த பயிரில் திடீர் வெள்ளத்தால் நீர் தேங்கினாலும், அதிகமாக வளர்ச்சி திரவம் வேர் மூலம் இழுக்கப்படுகிறது. இதனால் பயிரின் கட்டமைப்பு அளவுக்கதிகமாக விரிவடைந்து, மிதமிஞ்சிய வளர்ச்சி அடைகிறது. ஆனால், வளர்ச்சிக்கேற்ற வலுவைப் பயிரின் தண்டுப் பகுதி அடையாததால் பயிர் வலுவிழந்து மடியவும் ஏதுவாகிறது.

எனவே, நிலத்தின் நீர்ப்பிடிப்புத் தன்மைக்கும், வேர்களின் அமைப்புக்கும் ஏற்றவாறு, சரியான அளவு நீர்ப்பாய்ச்சுதல் பயிர்கள் சீராக வளரவும் நல்ல மகசூல் கிடைக்கவும் வழி வகுக்கிறது.

நிலங்களின் தன்மை, அமைப்பு மற்றும் சூழ்நிலைக்கு ஏற்றவகையில், பாசன வகைகள் கையாளப்படுகின்றன. ஏரிக்குளங்களைச் சார்ந்த நிலங்களில் ஏரிப்பாசனமும், ஆற்றுப் படுகைகளில் ஆற்றுப்பாசனமும், பிற நிலங்களில் கிணற்றுப் பாசனமும் செய்யப்படுகிறது. இவற்றில் கிணற்றுப் பாசனம்தான் மொத்த பாசன அளவில் 40 சதவிகிதம் விவசாயத்திற்குப் பயன்படுகிறது. குழாய்க் கிணற்றுப் பாசனமும் கிணற்றுப் பாசனத்துடன் சேர்ந்தது தான். இப்பாசனத்திற்கு மட்டும் மோட்டார் மற்றும் ஆயில் இன்ஜினுடன் கூடிய பம்ப் தேவை என்பது, நாம் அறிந்ததுதான், என்றாலும் பிற பாசன வகைகளைவிட கிணற்றுப் பாசனத்தில், கிணற்றின் அல்லது குழாய்க் கிணற்றின் நீர் மட்டம், ஊற்றின் அளவு ஒவ்வொரு பருவத்திலும், நன்கு அறியமுடிவதால் பயிர்ச் சாகுபடியைத் ஒரு திட்டமிட்டபடிச் செய்யமுடியும். பயிர் விதைக்கும் போதே கிணற்றுப் பாசனத்தின் மூலம் மகசூல் நிச்சயம் எனத் திட்டமான விவசாயம் செய்யலாம்.

எனவே, கிணற்றுப் பாசனத்தின் உயிர்நாடி நிலத்தடி நீர்தான். ஆக நிலத்தடி நீர் மட்டம் நிலைப்படுத்தி மேம்படுத்தும்போது கிணற்றுப் பாசனமும் சிறப்பாகச் செய்ய முடியும். நிலத்தடி நீர்வளத்தை மேம்படுத்துவற்கு ஏரி குளங்களைத் தூர் எடுப்பதும், புதிதாக ஊற்றுநீர்த் தேக்கங்கள் அமைப்பதும், சரிவுக்குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைப்பதும், ஓடைகளில் தடுப்பணைகள் கட்டுவதும் நிரந்தரமான பணிகள் ஆகும். இவை நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதுடன் மண் அரிப்பைத் தடுத்து மண்வளம் பாதுகாப்பதுடன், பருவ மழைக் காலங்களில் வெள்ளமும் தடுக்கப் படுகிறது.

ஆக, பயிரின் நல் வளர்ச்சிக்கும் மகசூலுக்கும் பயிரின் வேர்களின் அமைப்பும் மண்படிவம், நீரின் அளவு பயிரின் இடைவெளி சார்ந்தே இருக்கும். நிலம் நீர் பயிர் இவற்றின் உறவுகளை மேம்படுத்த வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிகள். நிலம் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேடுபள்ள நிலங்களைப் புல்டோசர் மூலம் நிரவு பாசனம் செய்ய ஏதுவாக விளை நிலங்களாக்கியும், வேர்கள் ஆழமாகச் செல்லவும் மழைநீர் பூமியில் இறங்கவும் இயந்திர உழுவை மூலம் நிலம் மேம்படுகிறது.

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் நிலத்தடி நீரை வெளியெடுத்து பாசனம் செய்ய விசைத்துளைக் கருவிகள் மூலம் குழாய்க் கிணறு அமைக்கும் பணியும் பாறைக் கிணறுகளைப் பாறை தகர்க்கும் கருவி மூலம் ஆழப்படுத்தும் பணியும் செய்யப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சரிவுக்குக் குறுக்காகச் சமஉயர வரப்புகள் அமைத்தும் ஆழ உழவு செய்து மண் அரிப்பைத் தடுத்தும், நிலத்தின் மழைநீர் இறங்க சாகுபடிக்கு ஏதுவாக்கும் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. மேலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் தடுப்பு அணைகள் அமைத்து வெள்ளத்தைக் கட்டுப் படுத்தியும், மலைப்பிரதேசங்களில் சரிவுக்குத் தக்கவாறு படிமட்ட வரப்புகளும் மரங்கள் வளர்த்தலும், சம உயரக் கற்சுவர்கள் அமைத்து நிலச்சரிவையும் பயிர்களையும் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. ●



**★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்போதும் நான் உணர்கிறேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.**

## கடலில் குப்பையைச் சேமிக்க ஜப்பானில் புதிய அணுகுமுறை

**ஜப்பான் நாட்டின் நிலப்பரப்பு மிகச் சிறிதளவே ஆனதாலும், இந்த நாடு நான்கு சிறிய தீவுகளையே கொண்டிருப்பதாலும் இங்கு நாள்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளைச் சேமித்து வைக்க தற்சமயம் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.**

**புதிதாக எரித் தொட்டிகளை (Incinerators) நிறுவ போதிய இடமில்லாமையைக் கண்டு ஜப்பான் நகராட்சிகள் திணறுகின்றன. இனிமேல் இந்த நாட்டில் சேகரிக்கப்படும் குப்பைகளைச் சேமித்து வைக்க தண்ணீரின் மேல் அதற்கான வசதிகளை அமைக்கலாமென ஜப்பான் நாட்டின் சில கட்டுமான நிறுவனங்கள் ஆலோசனை வழங்கியுள்ளன.**

**ஜப்பான் நாட்டின் விலையுயர்ந்த குறுகிய நிலபரப்பை இத்தகைய செயல்களுக்குப் பயன்படுத்துவதைவிட, கடலில் இதற்குப் போதிய இட வசதிகள் இருப்பதாக இந்நிறுவனங்கள் கருதுகின்றன. இத்திட்டத்தின்படி-**

**ஒரே நாளில் சுமார் 600 டன் குப்பைகளை எரிக்கக்கூடிய பெரிய அளவிலான எரித் தொட்டிகள் (Incinerators) அமைக்கப்படும். வழக்கமான முறையைக் காட்டிலும் மூன்றே ஆண்டுகளில் இந்த எரித்தொட்டிகளை அமைக்க முடியுமெனக் கருதப்படுகிறது. வழக்கமான முறையில் இதற்கு நான்கு ஆண்டுகள் ஆகிறதாம்.**

**—ஆதாரம் 'இந்து'**

# குழந்தைத் தொழிலாளர்

## பிரச்சினைகள்



வருமானத்திற்காகப் பணிக்குச் செல்லும் ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையிலான குழந்தைகளை நாம் குழந்தைத் தொழிலாளர்கள் (Child labour) என்கிறோம்.

மிகவும் அன்பு செலுத்திப் பராமரிக்கப்பட்டு, உடலும் மனமும் வளர்ச்சிபெற, பயிற்சி அளிக்கப்பட வேண்டிய வயதே குழந்தைப் பருவமாகும். ஆனால் பொருளாதார முன்னேற்றம் அடையாத, இந்தியா போன்ற பல நாடுகளில் குழந்தைகள் குழந்தைப் பருவத்தையும் அரவணைப்பையும் பெற இயலாத கொடுமையைத் தான் நாம் காண முடிகிறது. இந்தியாவில் இக்கொடுமை கிராமப்புறங்களில், படிப்பறிவில்லாத விவசாயத் தொழிலாளர்களிடையேயும், கால்நடைப் பராமரிப்புப் பணிகளிலும், பொதுவாக - ஏழைகளிடையேயும் பெரும்பாலும் காணப்படுகிறது.

*1-14* வயது வரையில் எனக் குழந்தைத் தொழிலாளர்கள் *1981*-இல் ஒரு கோடியே *36* இலட்சம் பேர் உள்ளனர். இதில் ஒரு கோடியே *26* இலட்சம் பேர் கிராமப்புறங்களில் பணிபுரிகின்றனர். இவர்கள் பெரும்பாலும் உணவு விடுதிகளிலும், வியாபார நிறுவனங்களிலும், கடைகளிலும், சிறுதொழில் பட்டறைகளிலும், பீடித் தொழிற்சாலைகளிலும், பஞ்சு மற்றும் பட்டு நூற்பாலைகளிலும், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும், ஊதுபத்தித் தயாரிப்பு நிறுவனங்களிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

**சிறுவர், சிறுமியர் பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படக் காரணம் என்ன? அந்தக் கொடுமை நீக்க என்ன செய்யவேண்டும் என்றெல்லாம் தெளிவுபடுத்தப்படுகிறது இந்தக் கட்டுரையில்:**

குழந்தைத் தொழிலாளர்களில் *80* சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் மலைஜாதியினராக உள்ளனர். *1971*-இல் ஒரு கோடியே *7* இலட்சமாக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை *1981*-இல் ஒரு கோடியே *36* இலட்சமாகவும் *1984*-இல் ஒரு கோடியே *75* இலட்சமாகவும் வளர்ந்துள்ளது. இந்த நூற்றாண்டு இறுதியில் இந்த எண்ணிக்கை கிராமப்புறங்களில் *50* சதவிகிதமும், நகர்ப்புறங்களில் *100* சதவிகிதமும் அதிகமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

வறுமையில் வாடும் இலட்சக் கணக்கான ஏழைகள், தங்களது வருமானத்தைப் பெருக்க தங்களது குழந்தைகளின் உழைப்பை எதிர்பார்ப்பதால், இப்பிரச்சினை தீர்க்க முடியாமல் உள்ளது.





### இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள் பெருகக் காரணங்கள்:

#### ஏழ்மை

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை பெருகுவதற்குப் பெரிதும் காரணமாக இருப்பது ஏழ்மையே. சம்பாதிக்கும் திறனை, பெற்றோர்கள் இழக்கும் போதும், பெற்றோர்களின் வருமானம் குடும்பச் செலவிற்குப் போதாதபோதும், அந்த வருமானத்தை ஈடுகட்ட குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். எல்லாப் பகுதிகளிலும் பிரிவுகளிலும் ஏழ்மை சீராக அமைந்துவிடவில்லை. நகரங்களைவிட, கிராமங்களில் ஏழ்மையின் கொடுமை அதிகமுள்ளது; நகரங்களைவிடக் கிராமங்களில் வருமானம் குறைவாகவும், நிச்சயமற்றதாகவும் உள்ளது. வருமானத்தை நம்பி வாழ்கின்ற சொந்தங்களும், வருமானம் மற்றும் சொத்துக்களில் உள்ள அடிப்படை, வித்தியாசங்களைப் பிரதிபலிக்கும் சுரண்டல்களும், நகரங்களைவிட கிராமத்தில் அதிகமாக இருக்கிறது. கிராமங்களில் சிறு விவசாயிகளிடையேயும் நிலமற்ற தொழிலாளர்களிடையேயும், ஏழ்மை அதிகமாகக் குடி கொண்டுள்ளது. நகர்ப்புறங்களில், நிச்சயமற்ற தொழில் புரிவோர்களிடையே ஏழ்மை பரவிக் கிடக்கிறது. இந்தச் சமூகப் பொருளாதாரப் பிரிவுகளிடையேதான் அதிகமாகக் குழந்தைத் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். கூடுதலான உழைக்கும் சக்திக்கும், வருமானத்திற்கும், வயதான காலத்தில் பாதுகாப்புக்கும் குழந்தைத் தொழிலாளர்கள் ஆதாரமாக உள்ளனர். எனவே, இப்பிரிவினர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதிலேதான் குழந்தைத் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவதும், அறவே நீக்கப்படுவதும் அடங்கியுள்ளது. (Extract from Child Labour - by International Labour Organisation, Geneva - 1983)

#### அடிப்படைக் கல்வி இல்லாமை

ஏழ்மையுடன் அடிப்படைக் கல்வி வசதிகள் இல்லாமையும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகள் கல்விக்காக ஏராளமாகச் செலவு செய்யவும், குழந்தைகளைக் கல்விக் கூடங்களுக்குத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கவும் தயாராக உள்ளன. ஆனால், இந்தியா போன்ற வளரும் நாடுகளில், அடிப்படைக் கல்வி வசதிகள் இருக்கும் இடங்களில்கூட பெற்றோர்கள், உடனடி வருமானத்தைக் கணக்கில் கொண்டு, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மறுக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வயது வரை கல்வியைக் கட்டாயமாக்குவதில் கீழ்க்கண்ட காரணங்கள் தடையாக உள்ளன. கல்வி இலவசமாகக் கிடைத்தாலும், ஒரு கட்டடத் தொழிலாளி தன் குழந்தையைப் பள்ளிக்கு அனுப்ப இயலாது. அவனுக்குப் படிக்காத குழந்தை ஒரு சொத்து; அவனைப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசை இருவகை நட்டத்தை ஏற்படுத்துகின்றது.

குழந்தை பள்ளிக்குச் செல்லாததால் ஏற்படும் வருமான இழப்பு.

கல்வியினால் ஏற்படும் செலவு ("Child Labour India" - by Jinesh Chandra kulshreshtha)

#### குழந்தைத் தொழிலாளர்கள் - மலிவான தொழிலாளர்கள்:

குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதால் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் ஈட்ட முடியும். அறுவடைக் காலங்களில் தேவைக்கு ஏற்ப, வேலைக்குப் பெரியவர்கள் கிடைக்காதபோது குழந்தைத் தொழிலாளர்களின் தேவை அதிகமாகிறது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதால், செலவு குறைந்து - அதிகம் இலாபம் கிடைப்பதால் பல தொழிற்சாலைகள் அவர்களையே நாடுகின்றன. உதாரணமாக, சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள், விம்கோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போடுகிறதென்றால் அதற்குக் காரணம் குழந்தைத் தொழிலாளர்களே. இந்த நிறுவனங்கள் வயது வந்த தொழிலாளர்களைப் பெரும்பாலும் பணிக்கு அமர்த்துவதே இல்லை. அதேபோல் பல்புகள், டியூபுகள், வளையல்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் உள்நாட்டு - பன்னாட்டு நிறுவனங்கள் குழந்தைத் தொழிலாளர்களை அதிகமாகப் பணியில் அமர்த்தி, அதன் காரணமாகவே இருபத்தைந்து சதவிகிதம் அதிக இலாபத்தை ஈட்டுகின்றன.

#### தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு இல்லாமை:-

இந்தியாவின் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு மற்றொரு காரணம். இவர்களது அடங்கிப்போகும் பணிவான தன்மையே. குழந்தைகள் வேலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, முதலாளிகள் தங்கள் வசதிக்கு அவர்களைச் சுரண்டுகிறார்கள். அவர்களது குறைவான சம்பளம், சுரண்டலுக்கு வழிவகுக்

கிறது. மணிக்கணக்கில் வேலை செய்தாலும், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடாமல், வயது வந்த தொழிலாளர்களைவிட அடங்கி ஒடுங்கி வேலை செய்கிறார்கள்.

**இத்தீமையைத் தடுக்கும் முறைகள்**

**ஏழ்மை ஒழிப்பு:**

ஏழ்மையை ஒழிக்க அனைத்துக் கோணங்களிலும் போராட வேண்டும். சீரான வட்டார வளர்ச்சித் திட்டங்களிலும் கிராமப்புற வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் ஏழைகளுக்கு நிலம், கடன், நல்ல விதைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடன் குடிநீர் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டும். இப்போதுள்ள - கிராமப்புற மகளிர் குழந்தைகள் வேலைவாய்ப்புத் திட்டம் (DWCRA), கிராமப்புற இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் (Trysem), ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP), ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் (RLEGP) போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் தீவிரமாக அமலாக்குவதன் மூலம் கிராமப்புற ஏழ்மையையும், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் குறைக்கலாம்.

**வளர்ச்சி**

நம் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போலப் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்.

நமது வறுமை ஒழிப்புத் திட்டங்களெல்லாம் கல்வியும் பயிற்சியும் இரண்டறக் கலந்துவிட்ட அங்கமாக விளங்க வேண்டும். அப்படி வழங்கப்படுகின்ற கல்வியும் பயிற்சியும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க ஏதுவாக விளங்க வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள இடங்களில் அவர்கள் தங்களுடைய தம்பி தங்கைகளைப் பராமரிக்கும் பணியிலிருந்து விடுபட்டுப் பள்ளிக்குச் செல்வதற்கு ஏதுவாகக் கைக் குழந்தைகளைப் பராமரிக்கச் சமூகக் கூடங்கள் அமைத்திடல் வேண்டும்.

**விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல்**

கல்வியைப் பற்றியும், குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றியும், அதன் தீமைகள் பற்றியும் மக்களிடையே விழிப்புணர்ச்சி முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

**பெண்களின் முன்னேற்றம்**

பெண்களின் நிலை முன்னேறினால் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் மிகுந்த முன்னேற்றம் காணலாம். பெண்கள் வேலைக்குச் சென்றால், அவர்களுக்குப் பதிலாகக் குழந்தைகளை அந்த இடத்தில் பணிக்கு அமர்த்தும் நிலை குறையும். இந்த முறையினால் மற்றொரு பயனும் உண்டு. குறிப்பிட்ட ஒரு சில பணிகளுக்கு மட்டுமே பெண்கள் செல்லும் பழக்கம் நாளடைவில் மாறி அநேகப் பணிகளுக்குப் பெண்கள் செல்லும் நிலைமை ஏற்படும்.

**தொழிற்சங்கங்களின் பங்கு**

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் தொழிற்சங்கங்கள் பெரிய பங்கினை வகிக்க முடியும். அனைத்துத் தொழிற்சங்கங்களின் தலைவர்களை கலந்தாலோசித்துக் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பெருமளவில் குறைக்கலாம்.

**குடும்பக் கட்டுப்பாடு**

சிறிய குடும்பம் அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தையும், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும், தொடர்ந்து வலியுறுத்தி வரவேண்டும். குடும்பம் சிறிதாக இருந்தால், தேவைகள் குறைவாக இருக்கும். அதனால் அதிகப்பணத் தேவைக்காகக் குழந்தைகளைப் பணிக்கு அனுப்பும் வழக்கம் நாளடைவில் மறைய வாய்ப்புகள் பெருகும்.

**மக்கள் தொடர்புப் பணிகள்**

1979-ஆம் ஆண்டு உலகக் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அல்லது முழுவதுமாக அகற்றிட, பாராட்டத்தக்க பல நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.



**ஜனநாயகவாதி சிறிதளவும் சுயநலம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அவனுடைய கருத்தும், கனவும், ஜனநாயகத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.**

**—பேரறிஞர் அண்ணா**

அந்த ஆண்டு முடிந்தவுடன் அந்த நடவடிக்கைகள் அனைத்தும் தூங்கிவிட வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை! தொடர்ந்து மக்களிடையே பிரசாரத்தை நடத்தி, குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினையை, இடைவிடாது கவனித்துச் சரி செய்ய வேண்டும்.

**சட்டங்களை அமல்படுத்துதல்**

குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைப் போக்க நிறைய சட்டங்கள் இருப்பினும், இப்போதைய உடனடித் தேவை, அந்தச் சட்டங்களை முழுமையாகவும் தீவிரமாகவும் அமல்படுத்துவதே ஆகும். ஆபத்தான பணிகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதைச் சட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதன் மூலம் தடுக்கமுடியும். தொழிலாளர் நல ஆய்வின் மூலம் இதை உறுதியுடன் செயலாற்றிட வேண்டும். பணிக்குக் கட்டாயமாகச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் மட்டும் பணிக்குச் சென்று கொண்டே, கல்வி பயிலலாம்.

குழந்தைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், குழந்தைத் தொழிலாளர்களே இல்லையெனும் நிலை ஏற்படவும் நாம் இன்னும் பல முனைகளிலும் முயலலாம். ஆனால் ஒன்று: இவைகளையெல்லாம் அரசு மட்டுமே சாதித்து விடமுடியாது. தொழில் அதிபர்கள், தொழிற்சங்கங்கள் மட்டுமல்லாது உலகம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரும் இந்தத் தீமையை எதிர்த்துத் தீவிரமாகத் தொடர்ந்து போராடினால் வெற்றி உறுதி.

**ஆதாரம்:-**

"Child labour" - by International Labour Organisation, Geneva-83 and 'Child Labour in India'- by Jinesh Chandra Kulshreshtha)

**தொகுப்பு:- என். இளங்கோ**



# ஒவ்வாமை



'**நோ**ய்களிலேயே மிகவும் மரியாதையோடு குறிப்பிடும் நோய் எது?' என்று கேள்வி கேட்டு - 'அலர்ஜி' என்று அதற்குப் பதிலும் சொல்லப்பட்டிருந்தது வார ஏடு ஒன்றில்!

படிப்பதற்கு வேடிக்கையாக இருந்தாலும், 'அலர்ஜி' என்பது மேனியெல்லாம் தடிப்பும், அரிப்பும் உண்டாக்கி மிகுந்த தொல்லையை ஏற்படுத்தக் கூடியதாகும்.

'அலர்ஜி' (Allergy) என்றால், 'ஒவ்வாமை' என்று தமிழில் பொருள் கொள்ளப்படுகிறது. ஒவ்வாமை என்றால் ஒத்துக் கொள்ளாமை. மருந்துகளோ, நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்களோ நம்முடைய உடலுக்கு ஒத்துக் கொள்ளாத போது, நமது உடலே அவற்றிற்கு எதிர்ப்புக் காட்டும். இந்த நிலைமையைத் தான் நாம் ஒவ்வாமை என்கிறோம்.

இந்த நோய் பற்றி, டாக்டர் எம்.ஜெயராஜா, எம்.பி.பி.எஸ்., எம்.டி., டி.எம்., அவர்களைச் சந்தித்து விளக்கம் கேட்டோம். இந்தச் சந்திப்பின்போது நாம் கேட்ட வினாக்களும், அவர் அளித்த பயன் மிகுந்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.

**ஒவ்வாமை (Allergy) என்றால் என்ன அதை நீக்கும் வழிகள் யாவை என்பதைப் பல கோணங்களிலும் இந்தக் கட்டுரை விளக்குகிறது:**

**"ஒவ்வாமை என்பது ஒருவருக்கு எவ்வாறெல்லாம் ஏற்படக்கூடும்? இதற்கான அறிகுறிகள் யாவை?"**

உதாரணமாக - ஒருவர், புதிய மருந்து ஒன்றை உட்கொள்வார்... சற்று நேரத்தில் உடலெல்லாம் தடிப்புத் தடிப்பாக ஏற்பட்டு, தோல் சிவந்து நமைச்சல் ஏற்படலாம்...

ஒருவர், வீட்டில் தூசி தட்டிக் கொண்டிருப்பார்... திடீரென மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு, வினோத ஒலியுடன் அவருக்கு மூச்சு இழுப்பு ஏற்படும்...

மற்றொருவர் ஒரு பூங்காவிற்குப் போயிருப்பார்... திடீரெனத் தலை வலிக்கும்... மூக்கு மற்றும் கண்களிலிருந்து நீர் வடியும்... மூக்கடைப்பும் தும்மலும் விடாது ஏற்படலாம்.

இவையனைத்தும் ஒவ்வாமையின் சில அறிகுறிகள்... இந்த ஒவ்வாமை அறிகுறிகள் ஆளுக்கு ஆள், நேரத்துக்கு நேரம் வேறுபடலாம். அதாவது ஒருவருக்கு ஒரு ஒவ்வாப் பொருள் ஒரு விதமான அறிகுறிகளை ஏற்படுத்தினால், அந்த பொருள் மற்றொருவருக்கு வேறுவிதமான அறிகுறிகளை ஏற்படுத்தலாம்.

**"ஒவ்வாமை என்பது பல வகைகளை உடையதா?"**

இந்த அறிகுறிகளுக்கு ஏற்ப ஒவ்வாமையை நாம் பல வகைகளாகப் பிரிக்கலாம். 'தும்மல் நோய்', ஆஸ்த்மா, விஷக்கடி, எக்ஸிமா என்ற தோலில் ஏற்படும் நமைச்சல் ஆகியவை ஒவ்வாமை நோய்களில் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

**"ஒவ்வாமை எவ்வாறு ஏற்படுகிறது?"**

நோய்க்கிருமிகளோ, அல்லது எதிர்ப்பொருட்கள் (Antigens) எனப்படும் அன்னியப் பொருட்களோ நமது உடலுக்குள் நுழைந்த உடனேயே அவற்றை அழிக்க நமது உடலில் பலவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன.

முதலாவதாக - நோய்க்கிருமிகளையோ, அன்னியப் பொருட்களையோ செயலிழக்கச் செய்யும் எதிர் அணுக்கள் (Antibodies) உடலில் உற்பத்தி செய்யப்படுவதைக் கூறலாம். இந்த எதிரணுக்கள் B-Lymphocytes எனப்படும் இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த எதிரணுக்கள் Immunoglobulins என்றழைக்கப்படுகின்றன. ஏதாவது தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள் உடலுக்குள் நுழைந்தால் அவற்றை இவை சிதைத்து விடுகின்றன. முக்கியமாக ஐந்து வகை எதிரணுக்கள் நமது ரத்தத்தில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. IgG, IgA, IgM, IgD, IgE என அவை குறிப்பிடப்படும். ஒவ்வொருவகை எதிரணுவுக்கும் அதற்கெனத் தனித்தனிப் பணிகள் உண்டு. முக்கியமாக IgE எதிரணு ஒவ்வாமை சம்பந்தமான



**டாக்டர் எம்.ஜெயராஜா**

நோய்க் குறிகள் ஏற்படக் காரண மாக உள்ளது.

உடலின் அடுத்த பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுபவை சில வகை வெள்ளையணுக்களாகும். Neutrophils, Phagocytes, Macrophages போன்ற வெள்ளையணுக்கள் இதில் அடங்கும்.

உடலின் பல பகுதிகளில் மாஸ்ட் செல்கள் (Mast Cells) எனப் படும் பிரத்தியேக செல்கள் உள்ளன; ஹிஸ்டமைன் (Histamine) மற்றும் பல்வேறு வகையான வேதிப் பொருட்களை - அதாவது கெமிகல் களை இவை உற்பத்தி செய்கின்றன. அதோடு ஒருவகை எதிரணுக்களை யும் இந்தச் செல்கள் கவர்ந்து இழுக்கின்றன. அதனால் அந்த எதிரணுக்கள் இந்த மாஸ்ட் செல் களின் மீது எப்போதும் ஒட்டிக் கொண்டிருக்கும். உடலில் நோய்க் கிருமிகளோ, அன்னியப் பொருட் களோ நுழையும் போது அவற்றை அழிப்பதற்காக மாஸ்ட் செல்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் எதிர ணுக்கள் விரையும். உடனே மாஸ்ட் செல்கள் வெடித்து அவற்றினுள் இருக்கும் ஹிஸ்டமைன் மற்றும் வேறு சில வேதிப் பொருட்கள் வெளியேற்றுகின்றன. இவை சிறிய ரத்தக் குழாய்களிலிருந்து அதிக அளவில் நிணநீர் எனப்படும் பிளாஸ் மாவை வெளியேறச் செய்யும். நோய்க் கிருமிகளை எதிர்ப்ப தற்கோ, அந்நியப் பொருட்களைச் சிதைப்பதற்கோ தேவையான பொருட் க்ளும் அந்த நிணநீரில் இருக்கும். இதனால் அந்தக் காயத்தைச் சுற்றி லும் வீக்கம் ஏற்படுகிறது. ஆகவே இத்தகைய வீக்கம் நமது உடலில் இயல்பாக உண்டாக்கப்படும் ஒரு பாதுகாப்பு ஏற்பாடுதான்.

இவை தவிர வேறு வகைகளிலும் நமது உடலுக்கு ஆபத்து ஏற்பட லாம். உதாரணத்திற்கு ஒரு விலங்கு நம்மைத் தாக்க வருவதாக வைத்துக் கொள்வோம். உடனே நாம் அந்த விலங்கை எதிர்த்துப் போரிடத் தயாராக வேண்டும். அல்லது தப் பித்து ஓடத் தயாராக வேண்டும். அதற்கு நமது உடலுக்கு அதிக அளவில் ஆற்றல் தேவைப்படும். இத்தகைய சூழ்நிலையில் நமது உயிரைப் பாதுகாக்க நமது உடலில் ஒரு விசேஷப் பாதுகாப்பு ஏற்பாடு

## நகராட்சிக் கழிவுகளிலிருந்து சரளைக் கற்கள்!

நகராட்சிக் கழிவுப் பொருட் களிலிருந்து எடை குறைந்த இலே சான சரளைக் கற்கள் தயாரிக்கும் முறையை, ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. இந்த முறையில் நகராட்சிக் கழிவுகள் களிமண்ணுடன் சேர்க்கப்பட்டு 'நியூட்ரலைட்' என்ற ஒரு வகையான மண் கல் தயாரிக்கப்படுகிறது. இந்தக் கற்களைக் கட்டடங்கள் மற் றும் பிற கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம்.

—ஆதாரம் 'இந்து'

உள்ளது. நமது உடலிலுள்ள தசைகள் பொதுவாக இரண்டு வகை நரம்பு களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒரு வகை நரம்புகள் பரிவு நரம்புகள் (அதாவது Sympathetic Nerves) என்றும், மற்ற வகை நரம்புகள் உபபரிவு நரம்புகள் (Parasympathetic Nerves) என்றும் அழைக்கப்படுகின்றன. பரிவு நரம் புகள் உடலைச் செயல்படுவதற்குத் தயார் செய்கின்றன; உபபரிவு நரம்புகள் உடலை ஓய்வெடுப்ப தற்குத் தயார் செய்கின்றன. பரிவு நரம்புகள் வெளியிடும் பொருட் களில் அட்ரீனலின் (Adrenaline) என்ற ஹார்மோன் முக்கியமானது. இது இதயத்தின் வேகத்தை அதிகரிக் கச் செய்கிறது; இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்கிறது. மூச்சுக் குழாய்களை விரிவடையச் செய்து நுரையீரல்களுக்குள் அதிகக் காற்றுச் செல்ல வழி செய்கிறது.

உபபரிவு நரம்புகள் வெளியிடும் பொருட்களில் அஸிட்டைல் கோலின் Acetylcholine) என்ற பொருள் முக்கியமானது. இது இதயத்தின் வேகத்தைக் குறைக்கச் செய்கிறது; மூச்சுக் குழாய்களையும் சுருங்கச் செய்கிறது.

***"மனித உடலுக்கு இவ்வாறான துன்பமெல்லாம் ஏற்படாதிருக்கத் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடு, இயற்கை யாகவே கிடையாதா?"***

உண்டு. நமது உடலின் பாது காப்பு ஏற்பாடுகளைப் பற்றிய விவரமும் இந்தப் பாதுகாப்பு ஏற் பாடுகளுக்கும் ஒவ்வாமைக்கும் உள்ள தொடர்பும் என்ன தெரி யுமா? எல்லோருடைய உடலிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உண்டு என் றாலும், சிலருடைய உடலில் மட்டும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனாவசியமாகச் செயல்படுகின்றன. ஒவ்வாமை உள்ளவர்களின் உடல் சாதாரணமாக உடலுக்குத் தீங்கு விளைவிக்காத பொருட்களைக் கூட ஏதோ காரணத்தினால் நஞ்சுப் பொருளாக, அல்லது நோய்க் கிருமி யாகத் தவறாக அடையாளம் கண்டு அவற்றைத் தாக்கத் தொடங்கிவிடு கிறது. இதனால் உடலின் இயல் பான ஆரோக்கியம் பாதிக்கப்படு கின்றது. இதையே ஒவ்வாமை என் கிறோம். ஆனால், சிலருக்கு மட்டும் ஏன் ஒவ்வாமை ஏற்படுகிறது என்ப தற்கான காரணம், இன்னும் முழுமை யாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒருவருக்கு ஒவ்வாமை இருந் தால் பொதுவாக அவரது குடும்பத் தில் மற்றவர்களுக்கும் ஒவ்வாமை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே ஒவ்வாமைக்கு மரபு முக்கியக் காரணமாக இருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

***"நம் உடலில் ஒவ்வாமை ஏற்பட எவையெல்லாம் மூல காரணமாக இருக்கின்றன?"***

சாதாரணமாகத் தீங்கு விளை விக்காத சில பொருட்கள் சிலரது



★ நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான், நமது முன்னேற்றம் இருக்கின்றது.



உடலில் கடுமையான எதிர்ப்பைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய பொருட்கள் 'ஒவ்வாப் பொருட்கள்' அல்லது 'அலர்ஜென்ஸ்' என அழைக்கப்படுகின்றன. ஒவ்வாமை யுள்ள ஒருவரது உடலில் ஒரு ஒவ் வாப் பொருள் முதல்முறையாக நுழையும் போது வெளிப்படையான பாதிப்புகள் எதுவும் ஏற்படுவ தில்லை. ஆனால் அந்த ஒவ்வாப் பொருளுக்கு அவரது உடலில் எதிர ணுக்கள் உற்பத்தி செய்யப்படுகின் றன. இவை மாஸ்ட் செல்களில் ஒட்டிக் கொள்ளும். மறுமுறை அந்த ஒவ்வாப் பொருள் உடலுக்குள் ஊடு ருவும் போது, மாஸ்ட் செல்கள் உடைந்து ஹிஸ்டமைன் மற்றும் இதர பொருட்கள் வெளியாகின் றன. இதனால் ஏற்படும் விளைவுகள் உடலின் எந்தப் பகுதியில் நிகழ் கிறது என்பதைப் பொறுத்தது.

- மூக்கில் இது நிகழ்ந்தால் மூக்கிலிருந்து நீர் ஒழுகும்; மூக்கு அடைக்கும்; தும்மல் வரும்; கண் களிலும் இது போல் நீர் வடியும், அரிப்பு ஏற்படும், கண் சிவக்கும். இதையே நாம் "Allergic Rhinitis" அல்லது தும்மல் நோய் என்கிறோம். பொதுவாகப் பூக்களின் மகரந்தம், தூசி உண்ணி (Dust Mites) எனப் படும் நுண்ணிய பூச்சிகள், அழகு சாதனப் பொருட்கள் இதை ஏற் படுத்தலாம்.

நுரையீரலிலுள்ள சிறிய மூச்சுக் குழாய்களில் இது நடந்தால், மூச்சுக் குழாய்களின் தசைகள் சுருங்கி, குழாய்கள் சிறியதாகி மூச்சு விடு வதில் சிரமமும், இருமலும் தோன் றும்; கஷ்டப்பட்டு மூச்சு விடுவதால் மூச்சுக் காற்று ஒருவித பிரத்தியேக ஒலியுடன் வெளியேறுகிறது. இதையே நாம் ஆஸ்த்மா என்கிறோம்.

குடலில் இத்தகைய விளைவுகள் தோன்றும்போது, வயிற்றுப்போக்கு, குமட்டல், வயிற்று வலி ஆகியவை தோன்றக்கூடும். இத்தகைய நோய்க் குறிகள் தோன்றக் காரணம் ஹிஸ்ட மைன் குடலில் உள்ள தசைகளைச் சுருங்கச் செய்வது தான். முக்கிய மாகப் பால், முட்டை, கோதுமை, சாக்லெட், கடல் உணவுகள், கொட்டைகள் இவற்றில் உள்ள சில புரதங்கள் சிலருக்கு ஒத்துக் கொள்வ தில்லை.

தோலில் ஒவ்வாமை தொடர் பான பாதிப்புகள் ஏற்படும்போது,



விஷக்கடி எனப்படும் உடலில் நமைச்சலுடன் ஏற்படும் தடிப்பு (Urticaria) உராய்வுத் தோல் நோய் (Contact Dermatitis) போன்ற தோல் வியாதிகள் தோன்றுகின்றன. குங்குமம், தோலில் தடவப்படும் கிரீம்கள், மருந்துகள், சிலவகை சோப்புகள் கூட சிலருக்குத் தோலில் ஒவ்வாமை ஏற்படுத்தலாம்.

எனவே ஒவ்வாமையின் நோய்க் குறிகள் பலவேறாக இருந்தாலும், அவற்றுக்குப் பின்னால் நடக்கின்ற நிகழ்பாடுகள் பொதுவானவையே. உடலின் எந்தப் பகுதி வழியே ஒவ்வாப் பொருள் தாக்குகிறது என் பதைப் பொறுத்து மேற்கூறிய நோய்கள் ஏற்படுகின்றன.

***'ஆஸ்த்துமா நோய்க்கும் மூல காரணம் ஒவ்வாமை தானா?'***

இந்த வகை நோய்களில் மிகவும் மோசமானது அதுதான். ஆஸ்த்மா வைப் பற்றிச் சற்று இங்கே கொஞ்சம் விவரமாகச் சொல்லலாம். பலவித உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழலில் உள்ள மாசுகள், நோய்க் கிருமிகள், மிதமிஞ்சிய உடற்பயிற்சி, மற்றும் மன எழுச்சிக் காரணங்களால் ஆஸ்த்மா தோன்றலாம்.

சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவ தால் ஏற்படும் Ozone, Nitrogen Dioxide மற்றும் Sulphur Dioxide போன்ற பொருட்களும் சிலருக்கு ஆஸ்த்துமா வரக் காரணமாக அமையும்.

சில வகைத் தொழில் செய்பவர் களுக்கு - அதிலும் முக்கியமாக மரத் தூள் காய்கறிகளின் தூசி ஆகிய வற்றினிடையே வேலை செய்பவர் களுக்கும், சிலவகை மருந்துத் தொழிற்சாலைகளில் பணிபுரி வோருக்கும், சிலவகைக் கெமிக் கல்கள் மற்றும் பிளாஸ்டிக் தொழிற் சாலைகளில் வேலை செய்பவர் களுக்கும், மிருகங்களின் ரோமம் மற்றும் சிறிய பூச்சிகளின் கழிவு களிடையே வேலையில் ஈடுபடு வோருக்கும் ஆஸ்த்துமா ஏற்படக் கூடும். வளர்ப்புப் பிராணிகளின் முடியின் காரணமாகச் சிலருக்கு ஆஸ்த்துமா தோன்றலாம்.

அதிக அளவு உடற்பயிற்சி அநேக மாக ஆஸ்த்துமா நோய் உள்ள வர்கள் அனைவருக்குமே நோயின் தீவிரத்தைக் கடுமையாக்கும்.

மனக்கிளர்ச்சி (Emotional Stress) ஏறக்குறைய 50 சதவிகிதம் ஆஸ்த்துமா நோயாளிகளுக்கு நோயின் அடிப் படைக் காரணமாக அமைகிறது. அதிகப்படியான சோகம் மட்டு மின்றி, அதிகப்படியான மன மகிழ்ச்சியும் கூட ஆஸ்த்துமாவை உண்டாக்கலாம்!

ஆஸ்த்துமா நோய் எந்த வயதின ரையும் தாக்கலாம் என்றாலும், இந் நோயால் அவதிப்படுபவர்களில், 100-க்கு 50 பேருக்கு, 10 வயதுக்கு உள்ளேயே இந்நோய் ஆரம்பித்து விடுகிறது. நாளடைவில் பலருக்குத் தன்னாலேயே இந்நோய் குணமாக வும் வாய்ப்புண்டு.

***"சாதாரணமாக எப்படிப்பட்ட பொருட்களினால் ஒருவருக்கு ஒவ் வாமை நோய் தோன்றக்கூடும்?"***

பொதுவாக நாம் சாதாரணமாக அன்றாடம் பயன்படுத்தக்கூடிய பல பொருட்களில் எது வேண்டுமானா லும் ஒவ்வாப் பொருளாக இருக்க லாம். உணவுப் பொருட்கள், மருந்



★ நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி, அடிவாரம் இல்லாத கிணற்றை ஆழம் காண முயற்சி செய்வதற்கு ஒப்பாகும்.

துகள் எதுவுமே அதற்கு விதிவிலக்கு இல்லை. எனவே ஒவ்வாப் பொருளாக இருக்கக் கூடிய பொருட்களையெல்லாம் நாம் பட்டியலிட்டு விட முடியாது.

மிக முக்கியமாக உணவுப் பொருட்கள், மருந்துகள், தூசி உண்ணி, மகரந்தம் போன்ற சில பொருட்களே பெரும்பாலும் ஒவ்வாமைக்குக் காரணமாக உள்ளன. உணவு ஒவ்வாமை உள்ள ஒருவனுக்கு எந்த உணவுப் பொருள் ஒவ்வாப் பொருளாக இருக்கிறது என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம். நீக்கிப் பரிசோதித்தல், அதாவது (Elimination Diet) என்ற முறையில் சந்தேகப்படும் பொருட்களை ஒவ்வொன்றாக ஐந்து தினங்களுக்கு நிறுத்திப் பார்த்து, ஒவ்வாமை அறிகுறிகள் மறைகின்றனவா எனப் பார்ப்பது ஒரு முறை. அல்லது, பொதுவாக ஒவ்வாமை உருவாக்கக் கூடிய பல்வேறு பொருட்களின் கரைசலை சிறிய ஊசி மூலம் தோலில் போட்டுப் பார்த்து எந்தப் பொருள் அந்த ஒருவரது தோலில் தடிப்பை உண்டாக்குகிறதென்று நோக்கி ஒவ்வாமை உருவாக்கும் பொருட்களைக் கண்டறியலாம்.

**"ஒவ்வாமை நோயுள்ளவர்களுக்கான சிகிச்சை முறைகளைப் பற்றிக் கொஞ்சம் தெரிவியுங்களேன்?"**

தங்களுக்கு ஒவ்வாத பொருட்களையும் மருந்துகளையும் தவிர்க்க வேண்டும். இதுவே சிகிச்சையின் மிக முக்கியமான அம்சமாகும். ஆஸ்த்துமா நோயுள்ளவர்கள் - புகை பிடிப்பதை அறவே நிறுத்த வேண்டும். சுற்றுப்புறச் சூழல் மாசுபடாத இடங்களில் வாழ முயற்சிக்கலாம். மித மிஞ்சிய மன எழுச்சிகளைத் தவிர்க்க வேண்டும். அளவுக்கதிகமான உடற்பயிற்சி கூடாது. அதிகக் குளிருள்ள சூழ்நிலைகளைத் தவிர்க்கலாம். மருந்து வகைகளில் ஆஸ்த்துமா நோயுள்ளவர்களுக்கு அட்ரீனலின், ஸால்பூடமால், டெர்பூடலின், அமினோஃபிலின், டெரிஃபிலின், கார்டிகோ ஸ்டீராய்டுகள் ஆகியவை மிகவும் பயனளிக்கின்றன. இவையனைத்தும் சுருங்கிய மூச்சுக் குழாய்களை விரிவடையச் செய்கின்றன. குரோமோலின் சோடியம் என்ற மருந்து மாஸ்ட் செல்கள் சிதறாமல் பாதுகாத்து ஆஸ்த்துமா அடிக்கடி வராமல் பாதுகாக்கக் கூடியதாகும்.

பொதுவாக மற்றவகை ஒவ்வாமை நோய்களுக்கும் குரோமோலின் சோடியம் மருந்து பயனுள்ளதாக உள்ளது. ஒவ்வாமை நோய்க் குறிகள் அடிக்கடி ஏற்படாமல் இது பாதுகாக்கிறது. இதே போல் கீடோடிஃபென் (Ketotifen) எனப்படும் புதியதோர் மருந்தும் ஒவ்வாமை அடிக்கடி வராமல் தடுக்க பயன்படுகிறது.

Antihistamines எனப்படும் ஹிஸ்டமைனுக்கு மாற்று மருந்துகளும், Glucocorticoids வகை மருந்துகளும் ஒவ்வாமை நோய்களின் தீவிரத்தைப் பெருமளவு குறைக்கின்றன.

ஆனால் இத்தகைய மருந்துகளை மருத்துவரின் அறிவுரைப்படி - தான் பயன்படுத்த வேண்டும்.

Desensitization Therapy எனப்படும் முறையில், உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருளையே கரைசலாக்கி ஊசி மூலம் சில நாட்கள் இடைவெளியில் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தி, உடலின் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கிறார்கள். இதுவும் ஓரளவுக்குப் பலனளிக்கிறது.

**"அதெல்லாம் சரி; நோய் தீர்க்கும் மருந்துகளே கூட சில நேரங்களில் ஒவ்வாமை நோயை உண்டாக்கி விடுகின்றன என்கிறார்களே; அதெப்படி?"**

எல்லா மருந்துகளும், எல்லோருக்கும் அப்படிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை; சில நேரங்களில் சில மருந்துகள் அப்படிப்பட்ட உபாதைகளுக்குக் காரணமாக இருந்து விடுவது உண்டு.

மருந்துப் பொருட்களை எடுத்துக் கொண்டால், முக்கியமாக ஆஸ்பிரின், அதே குணமுள்ள - வலி அல்லது வீக்கத்தைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் புரூஃபென் (Brufen), இன்டோமெதாசின் (Indomethacin) போன்ற வகை மருந்துகளும் - நிறமேற்ற வேண்டும் என்பதற்காக உணவுப் பொருட்களில் கலக்கப்படும் டார்ட்ராசின் (Tartrazine) என்ற பொருளும் அப்படிப்பட்ட விளைவை உண்டாக்கக் கூடும். உணவுப் பொருள் கெடாதிருக்கப் பயன்படுத்தப்படும் சல்பைடிங் ஏஜண்ட்ஸ் (Sulphiting Agents) அதிலும் குறிப்பாக சல்பர்-டை-ஆக்ஸைடு Sulphur Di-oxide) எனப்படும் பொருளும் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது; இதனால் அவர்களுக்கு அலர்ஜி நோய் ஏற்படக் கூடும். அவ்வளவே!"

- சந்திப்பு: இல. இராசேந்திரன்.

## புதிய சேமிப்புத் திட்டங்கள்

**தே**சிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் ஒன்றான பாங்க் ஆஃப் பரோடா, தனது 84-வது தொடக்க நாள் விழாவினையொட்டி இரண்டு புதிய சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. YATHA SHATHI JAMA YOJANA மற்றும் FAST ACCESS DEPOSIT SCHEME என்னும் பெயருடைய இவ்விரு சேமிப்புத் திட்டங்களும் சாதாரண மக்களும் சேமிப்பில் ஈடுபட வசதியாகப் புதுமையான முறையில் அமைக்கப் பட்டுள்ளது.

இந்த வங்கி 1990-'91-ஆம் நிதியாண்டில் ரூ.14,678 கோடியை டெபாசிட்டுக்கள் மூலம் பெற்றிருந்தது. இதில் 8,977 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளது. கடந்த ஆண்டில் இந்த வங்கியின் மொத்த இலாபத் தொகை ரூ.35 கோடி. இதில் ரூ.10 கோடியை ஈவுத் தொகையாக அரசுக்கு அளித்துள்ளது. கடந்த ஆண்டில் இந்த வங்கியின் வளர்ச்சி 19.4 சதவிகிதம். இது நமது நாட்டின் தொழில் வளர்ச்சியைவிட அதிகமானதாகும்.

பாங்க் ஆஃப் பரோடா இந்தியாவில் மொத்தம் 2,274 கிளை அலுவலகங்களையும் அயல் நாடுகளில் 48 கிளைகளையும் கொண்டு செயல்படுகிறது. தென் மண்டலத்தில் இந்த வங்கிக்கு 190 கிளைகள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 81 கிளைகள் இருக்கின்றன. கடந்த ஆண்டில் இந்த தென் மண்டலக் கிளைகள் மட்டும் ரூ.300 கோடிக்கு ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் செய்துள்ளன. இதில் இந்த வங்கியின் சென்னை அயல் நாட்டுக் கிளை மட்டும் ரூ.110 கோடி அளவுக்குக் கடந்த ஆண்டில் வியாபாரம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.







## காந்தியடிகளுக்குப் பிடித்த பாடல்

அண்ணல் காந்தியடிகளைக் கவர்ந்த பாடல் ஒன்று உண்டு. அது என்ன? அதை அவரே சொல்லக் கேட்போம்:

"ஒழுக்கமே எல்லாவற்றிக்கும் அடிப்படை; சத்தியமே ஒழுக்கமெல்லாவற்றின் சாரமும்" என்று நான் கொண்ட உறுதியே அது. சத்தியம் என் ஒரே இலட்சியமாயிற்று. ஒவ்வொரு நாளும் அதன் மகிமை வளரலாயிற்று. அதற்கு நான் கொண்ட பொருளும் விரிவாகிக் கொண்டே வந்தது.

"அதேபோல நன்னெறியைப் போதிக்கும் ஒரு குஜராத்திப் பாடலும் என் அறிவையும் உள்ளத்தையும், கொள்ளை கொண்டது. 'தீமை செய்தோருக்கும் நன்மை செய்' என்ற அப்பாடலின் போதனை, என் வாழ்க்கையின் வழி காட்டும் தருமமாயிற்று. அதில் எனக்கு அதிகப் பற்று உண்டாகி விட்டதால் அதை மேற்கோளாகக் கொண்டு பற்பல சோதனைகளையும் செய்யத் தொடங்கினேன். மிக அற்புதமானவை என நான் எண்ணும் அப்பாடலின் வரிகள் இவை:

'உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக் கைம்மாறாய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப் படைத்திடுவாய்
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீதொழுவாய்
செம்பான காசுக்குச் செம்பொன்னைத் தந்திடுவாய்
உயிர்காத்தோன் துன்பத்தை உயிர்கொடுத்து நீ
துடைப்பாய்

செயலாலும் சொல்லாலும் சிந்தையினாலும் பெரியோர்
சின்னஞ்சிறு உதவிசெய்தவர்க்கு எந்நாளும்
ஒன்றுக்குப் பத்தாய் உவந்துசெய்வர் பேருதவி
வையத்தார் எல்லோரும் ஒன்றெனவே மாண்புண்டயோர்
ஐயப்பா டின்றி அறிந்திருக்கும் காரணத்தால்
இன்னாசெய்தாரை ஒறுக்க, அவர் நாண
நன்னயம் செய்து விடுவர் இந்நானிலத்தே.'

—'சத்திய சோதனை' என்னும் நூலிலிருந்து



## திறமை வளர்க்கணும்

திட்ட மிட்டுச் செயல்கள் புரியும்
திறமை வளர்க்கணும்- அதைத்
தினமும் செய்தே வெற்றிக் கனிகள்
தட்டிப் பறிக்கணும்!
பெட்ட கம்போல் நமது நெஞ்சைப்
பேணிக் காக்கணும்- அதில்
பேர் அறிவாம் பெரும் பொருளைப்
பூட்டி வைக்கணும்!

-அழகு பழனிச்சாமி

● முதன் முதலாக 'டப்பிங்' முறையில் தயாரான இந்திப் படம் தமிழ் நாட்டில்தான் வெளியாகி இருக்கிறது. அது எது?

—1944ஆம் ஆண்டு ஏ.வி.எம். தயாரித்த 'ஹரிச்சந்திரா' என்ற படம் அண்டை மொழியிலிருந்து 'டப்பிங்' செய்யப்பட்டது.

● தமிழ்நாட்டில் முதன் முதலில் எம்.பி.பி.எஸ். மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணி யார்?

—டாக்டர் முத்துலட்சுமிரெட்டி

● ஐ.நா.சபையின் தலைவராக இருந்த முதல் பெண்மணி யார்?

—பண்டிட் விஜயலட்சுமி.

சந்திரனில் மலைகள் இருப்பதை முதன்முதலில் ஆராய்ந்து கூறியவர் யார்?

—கலீலியோ.

● விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?

—வாலண்டினா தெரஸ்கோவா.

## முதன் முதலில்

● முதன் முதலில் இரயில்வே கால அட்டவணை யாரால் வெளியிடப் பட்டது?

—ஜார்ஜ் பராட்ஸா.

● முதன் முதலாகத் தபால்களை விமானம் மூலம் எப்பொழுது ஏற்றிச் சென்றார்கள்?

—1911-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் தேதி.

● முதன் முதலில் இந்தியாவில் இருப்புப் பாதை எங்கு போடப் பட்டது?

—பம்பாயிலிருந்து தானாவிற்கு.

● முதலில் சைக்கிளைத் தயாரித்தவர் யார்?

—1839-இல் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த கிரிக் பாட்ரிக் மாக்மிலன்.










# டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்க்கைக் குறிப்பு



1888 : செப்.5. டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறப்பு.

1903 : மெட்ரிகுலேஷன் தேர்வு

1905 : எப்.ஏ.தேர்வில் முதலாவதாகத் தேர்வு.

1908 : பி.ஏ. தேர்வில் முதலாவதாகத் தேர்வு.

1917 : சென்னை மாநிலக் கல்லூரியில் தர்க்க இயல் பேராசிரியர்

தமது முதல் ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிடல்-டாக்டர் பட்டம் பெறுதல்.

1910 : சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் சேர்தல்.

1918 : 1921 : மைசூர் மகாராஜா கல்லூரியில் தத்துவ இயல் பேராசிரியர்

1927 : 1928 : 1930 : கல்கத்தா பல்கலைக் கழகத்தில், முதுகலைக் குழுத் தலைவர்.

1931 : பிரிட்டிஷ் அரசு, சர் பட்டம் வழங்கல்.

1931 : 1936 : ஆந்திரப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்.

1936 : 1942 : ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவப் பேராசிரியர்.

1936 : பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பல்கலைக் கழகங்களின் மாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளல்.

1937 : 1938 : லக்னோவில் நடந்த ஆசியக் கல்வி மாநாட்டுக்குத் தலைமை வகித்தல்.

1938 : பிரிட்டிஷ் அறிஞர் சங்கத்தில், 'கௌதம புத்தர்' பற்றிச் சொற்பொழிவு.

சங்கத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்படுதல்.

1939 : 1948 : காசி இந்துப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்.

1948 : பல்கலைக்கழகக் கல்விக் கமிஷன் தலைவர்.

1950 : இந்தியாவின் ரஷ்யத் தூதர்.

1952 : யுனெஸ்கோ தலைவர்.

1953 : 1956 இருமுறை அமெரிக்கா சென்றார்.

1952 1962 : மே. 11 இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர்.

1962 மே. 12: 1966 இந்தியக் குடியரசுத் தலைவர்.

1975 : ஏப்.16 டாக்டர் இராதாகிருஷ்ணன் அமரரானார்.

## திரைப்படத்துறையின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை

தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், திரைப்படத்துறையின் பல்வேறு துறை பிரதிநிதிகளுடன் திரைப்படத்துறையின் பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட திரைப்படத்துறையினர் கடந்த ஆண்டில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட சிறந்த 9 திரைப்படங்களுக்கு ரூ.10 இலட்சம் மானியத் தொகை வழங்கப்பட்டது. இத்தொகையை அதிகரித்தும், கூடுதல் எண்ணிக்கையிலான படங்களுக்கு மானியத் தொகை வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். மேலும், சிறந்த படங்களுக்கான விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று, குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட சிறந்த படங்களுக்கு இந்த ஆண்டில் மானியத் தொகை மொத்தமாக ரூ.60 இலட்சம் வழங்கப்படும் என அறிவித்தார்.

இந்தப் படங்கள் தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும். சிறந்த திரைப்படம், சிறந்த திரைப்பட இயக்குநர், சிறந்த திரைப்பட நடிகர், சிறந்த திரைப்பட நடிகையர், சிறந்த திரைப்படத் தொழில்நுட்ப விளைஞர்கள், சிறந்த கலைத்துறை வித்தகர்கள் அனைவருக்கும் தமிழக அரசு விருதுகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்றும் தெரிவித்தார்.

"நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்"

அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம்
திண்டுக்கல் - அண்ணா மாவட்டம்

தலைவர்
ஆர். கந்தசாமி
ஸ்ரீ கார்த்திகேயன் ரைஸ் மில்
நந்தவனம் ரோடு, திண்டுக்கல்.
போன்: 3193

*With Best Compliments From*

NAGALAKSHMI FLOUR MILLS LIMITED,
DINDIGUL

*Manufacturers and Suppliers of: 'Special' Quality Wheat Products under their famous 'AMMAN' Brand*

**Registered Office:**
Mill & Sales Department
No.1. Trichy Road.
Dindigul 624 009.
PHONE:4571, 4572
TELEX: 440 217 NFM IN

**Principal Office:**
377, Suryanarayana Street,
Madras 600 081.

PHONE: 555586, 556765
TELEX: 41 6179 NFM IN

GRAM: FLOURMILL



# மத்திய அரசு மாதந்தோறும் ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும்!

"பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட உடனேயே பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டி இருப்பது சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் நலனுக்காகப் பொது விநியோகத் திட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற பிரதமரின் ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது.

இன்று விவாதிக்கப்படும் பொருள்கள் என்ற குறிப்பில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து வலுவூட்டுவது என்பது முன்னுரிமை அளிக்கப்பட்டு இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.



— டெல்லியில், மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டிய பொது விநியோக முறையின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் உரை (23.8.1991).....

**நியாய விலைக் கடைகள்**

தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் பொது விநியோக முறை குறித்துக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாநிலத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்குதல் மூலம் பொது விநியோகத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இப்போது 125 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அட்டைகளுக்கு 22 ஆயிரம் நியாய விலைக் கடைகள் மூலமாக அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

**புரட்சித் தலைவர் எடுத்த முடிவு**

ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடை இருக்க வேண்டும் என்ற கொள்கை முடிவை 1978-ஆம் ஆண்டே, எங்கள் தலைவர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்து இருந்தார். அதன்படி எல்லா வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளைத் தொடங்கி விட்டோம். இப்போது தமிழ்நாட்டில் 16 ஆயிரத்து 843 கிராம நியாய விலைக் கடைகளும், 5 ஆயிரத்து 125 நகர்ப்புற நியாய விலைக் கடைகளும் இருக்கின்றன. இந்த 21 ஆயிரத்து 907 கடைகளில் 1,061 கடைகள்தான் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்படுகின்றன. மீதம் உள்ள 20 ஆயிரத்து 907 கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

**பகுதி நேர நியாய விலைக் கடைகள்**

ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடைகளைத் திறந்தது தவிர, சில இடங்களில் வருவாய்க் கிராமங்களின் பகுதியாகச் சில குடியிருப்புகளில் உள்ள மக்கள் வெகு தூரம் சென்று பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களைப் பெற வேண்டியது இருக்கிறது. இத்தகைய இடங்களில் கடைகள் நடத்த வாடகை இல்லாமல் கட்டடம் தர வேண்டும் என்ற நிபந்தனையோடு பகுதி நேர நியாய விலைக் கடைகள் தொடங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இம்முறைகளில் தமிழ்நாடு முழுவதும் சில்லறைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**நடமாடும் நியாய விலைக் கடைகள்**

வால்பாறை மலை, கல்வராயன் மலை, ஜவ்வாது மலை, கொடைக் கானல் மலை, சிறுமலை போன்ற மலைப்பகுதிகளில் உள்ள சில தனியான பகுதிகளில் மத்திய அரசின் உதவியோடு நடமாடும் நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன.

மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவற்றைப் பெறுவதற்காக மொத்த ஏஜெண்ட் ஆக, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் செயல்படுகிறது. இந்தப் பொருட்கள் இந்தக் கழகத்திற்குச் சொந்தமான கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாலுக்கா தலைநகரத்திலும் இத்தகைய கிடங்கு இருக்கிறது. நியாய விலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கூட்டுறவு மொத்தக் கடைகள் இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றன.

மத்திய அரசு அறிவுறுத்தியபடி 2 ஆயிரம் பேருக்கு ஒரு நியாய விலைக் கடை என்று இல்லாமல், 2,500 பேருக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற அடிப்படையில் தமிழ்நாட்டில் 5 கோடியே 56 இலட்சம் மக்களுக்கு, 22 ஆயிரம் கடைகள் இருந்தாலும் இது போதுமானதாகக் கருதப்படுகிறது.

எங்கள் அனுபவத்தில் இருந்து பொருளாதார ரீதியாக இலாபகரமானதாகவும், பயனுள்ளவாறும் இருக்க ஒரு நியாய விலைக் கடைக்கு 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்.

இதைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புறங்களில் ஒவ்வொரு கடையிலும் 800 அட்டைகள் இருக்குமாறு கடைகளைச் சீரமைக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. முதல் கட்டமாக 1,200 அட்டைகளுக்கு மேல் உள்ள கடைகளைச் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம்.

இது எந்த அளவில் இருந்தாலும் சரி; ஒவ்வொரு வருவாய்க் கிராமத்துக்கும் ஒரு கடை இருக்க வேண்டும் என்பது எங்கள் அரசின் கொள்கையாக இருப்பதால், 500 அட்டைகளுக்கும் குறைவாக இருக்கும் எண்ணிக்கையில் 10 ஆயிரம் கடைகள் இருக்கின்றன. இந்தக் கடைகள் ஒவ்வொன்றும் 2 ஆயிரம் பேர்கள் கொண்ட மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இந்தக் கடைகளில் இலாபம் இல்லாததால், இந்தக் கடைகளை நடத்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குகிறது.

**பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 'பாமாயில்' விநியோகிக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பற்றி நான் அறியாமல் இல்லை. ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளுக்கு இடையிலும் பண வீக்கத்தைக் குறைக்கும் வகையிலும் - சாதாரண மக்களுக்கு உதவும் வகையிலும் ஓரளவுக்காவது கூடுதல் சமையல் எண்ணெய் வழங்க நாம் முயற்சிக்க வேண்டும்.**

மிக அதிக அளவில் மக்களின் தேவைகளை இக் கடைகள் பூர்த்தி செய்வதால், அத்தியாவசியப் பண்டங்களை வீடு வீடாகக் கொண்டு போய்க் கொடுக்கும் முறை தேவை இல்லை என்று கருதுகிறோம். இத்தகைய முறையை அறிமுகப்படுத்துவதால் ஏராளமான சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொது விநியோக முறை மூலமாகக் கூடுதலாக அத்தியாவசியப் பண்டங்கள் விற்பதை வரவேற்கும்போது, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பொது விநியோக முறையின் கீழ், எந்த விஷயமானாலும் அது உரிமையாகவே கருதப்படும். எனவே, நாம் எல்லாக் குடும்ப அட்டைகளுக்கும் பொருட்களை வழங்க வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் எல்லோருக்கும் தேவையான அளவு அந்தக் குறிப்பிட்ட பொருளை 'இருப்பு' வைத்துக் கொள்ள வேண்டும். சில பொருட்களை ஒரு பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டும் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு மறுக்க முடியாது. மற்றொரு வழியாக இந்தப் பொருட்களை உரிமை என்ற அடிப்படையில் இல்லாமல், கிடைப்பதை, அடிப்படையாக வைத்து நுகர்வோர் கூட்டுறவுக் கடைகள் போன்ற மற்ற அமைப்புகள் மூலமாகக் கிடைக்கச் செய்யலாம். தமிழ்நாட்டில் இந்த முறைதான் செயல்படுத்தப்படுகிறது.

**குறைந்த விலையில் பருப்பு வகைகள்**

இத்தகைய முறைகள் மூலம் இந்தக் கடைகளில் பருப்பு வகைகளை வெளி மார்க்கெட்டைவிடக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய முடியும்.

மத்திய அரசு பொது விநியோக முறையின்கீழ் விநியோகிக்கத் திட்டமிட்டுள்ள பொருட்களைக் கொள்முதல் செய்து மத்திய அமைப்புகள் அல்லது தேசிய அளவிலான முதன்மை அமைப்புகள் மூலம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**பாமாயில்**

இந்த மாநாட்டில் விவாதிக்க, குறிக்கப்பட்ட பொருட்கள் தவிர வேறு சில பொதுவான பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவதாகக் கடந்த வாரம் ஐதராபாத்தில் நடந்த உணவு அமைச்சர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வற்புறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 'பாமாயில்' சப்ளை செய்ய மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பற்றி நான் அறியாமல் இல்லை. ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளுக்கிடையிலும் பண வீக்கத்தைக் குறைக்கும் வகையிலும் - சாதாரண மக்களுக்கு உதவும் வகையிலும் - ஓரளவுக்காவது கூடுதல் சமையல் எண்ணெய் வழங்க நாம் முயற்சிக்க வேண்டும்.

**ஒரு இலட்சம் டன் அரிசி**

மத்தியத் தொகுப்பில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு வேண்டும் என்று ஏற்கெனவே நான் கேட்டிருந்தேன். ஆனால், இப்போதுள்ள ஒதுக்கீடான 75 ஆயிரம் டன் அரிசிக்கு மேல் ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கு மேலும் 6 ஆயிரம் டன் அரிசி வழங்க மத்திய அரசு சம்மதித்துள்ளது. ஆண்டு முழுவதும் மாதந்தோறும் ஒரு இலட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மறுபடியும் நான் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

**புழுங்கல் அரிசி**

ஒவ்வொரு ஆண்டும் 8 இலட்சத்தில் இருந்து 9 இலட்சம் டன் அரிசியைத் தமிழ்நாடு கொள்முதல் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் புழுங்கல் அரிசியையே வாங்குவதால் தமிழ்நாட்டுக்குக் கூடுதலாக வழங்கும் அரிசியைப் புழுங்கல் அரிசியாகவே வழங்க வேண்டும். சமீபத்தில் நடந்த தென் மாநில உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தீர்மானித்தபடி, ஆந்திராவில் இருந்து புழுங்கல் அரிசியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**சர்க்கரை**

இதற்கு முன்பு நான் கேட்டுக் கொண்டதைப் போல, இப்போது வழங்கப்படுவது போல 1986-ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து இல்லாமல் - சமீபத்திய மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து மாநிலத்துக்குச் சர்க்கரை ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

**ஒத்துழைப்பு**

பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் கவுன்சில் கூட்டத்தைக் கூட்டியதற்காக நான் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கும், பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைத்து, வலுவூட்டுவதற்கும் மத்திய அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் தமிழக அரசு முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்று நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

மேற்கண்டவாறு மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

—நுகர்வோர் பாதுகாப்பு:

## தமிழகமெங்கும் தணிக்கை

**மா**ண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைக்கிணங்க கடந்த ஜூலை மாதத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலர்கள் தமிழகமெங்கும் திடீர் தணிக்கைகள் மேற்கொண்டனர்.

இத் திடீர் சோதனையில் ரூ.9,94,738/- மதிப்புள்ள 166 கடத்தல் தொடர்பான முறைகேடுகளும் ரூ.3,51,548/- மதிப்புள்ள 309 கள்ளச்சந்தை முறைகேடுகளும், ரூ.4,41,350/- மதிப்புள்ள 55 பதுக்கல் தொடர்பான முறைகேடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னை நகரில் மட்டும் 141 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.1,85,184/- மதிப்புள்ள பல்வேறு அத்தியாவசியப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ரூ.24,185/- மதிப்புள்ள பல்வேறு அத்தியாவசியப் பண்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு மாவட்டங்களில் நடந்த சோதனைகளில் 11 லாரிகள், 1 டிராக்டர், 2 வண்டிகள், 1 மினிலாரி, 1 வேன், 20 சைக்கிள்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் 5,614 போலி குடும்ப அட்டைகளும் சென்னை நகரில் 5,872 போலி குடும்ப அட்டைகளும் உட்பட மாநிலம் முழுவதும் 44,308 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. சென்னை நகரில் 3 மண்ணெண்ணெய்க் கைவண்டி உரிமம் மற்றும் ஒரு சில்லறைப் பதிவுச் சான்றிதழ் நீக்கப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது. 17 மண்ணெண்ணெய்க் கைவண்டி வணிகர்களுக்குத் தண்ட இழப்புக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.



## இந்த ஆண்டு திரு.வி.க. விருது: இராஜம் கிருஷ்ணன் பெறுகிறார்!

**ஆ**ண்டுதோறும் வழங்கப்படும் திரு.வி.க. விருது 1991-ஆம் ஆண்டிற்கெனப் புகழ்பெற்ற நாவலாசிரியை திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்படும் என மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்.

திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தமிழகத்தின் புகழ்வாய்ந்த நாவலாசிரியை; 45 நாவல்களையும் நூற்றுக்கணக்கான சிறு கதைகளையும் பல குறு நாவல்களையும் எழுதியவர். சாகித்ய அகாதமி விருதினையும் பல்வேறு மாநில விருதுகளையும் பெற்றவர் திருமதி இராஜம் கிருஷ்ணன். திரு.வி.க. விருது உருவாக்கப்பட்ட 12 ஆண்டுகளில் பெண்மணி என்ற நிலையில், எவருக்கும் இவ்விருது இதுவரை வழங்கப்படவில்லை. நாடறிந்த நாவலாசிரியையாகத் திகழும் திருமதி இராஜம் கிருஷ்ணன் அவர்களுக்குப் 'பெண்ணின் பெருமை' எழுதிய தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெயரில் அமைந்த விருது வழங்கப்படுவது பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரை

# துரித ரயில் போக்குவரத்து

சென்னை நகரில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கட் தொகையின் காரணமாக நகரப் பேருந்துகளிலும், புறநகர் மின்சார இரயில் வண்டிகளிலும் எப்போழுதும் கூட்டம் நிரம்பிய வண்ணமே காட்சியளிக்கிறது.

நகரின் சாலைகளில் ஏற்கெனவே பல இலட்சக்கணக்கான-மோட்டார் வாகனங்கள் சென்று கொண்டிருப்பதால், மீண்டும் கூடுதலாகப் பேருந்துகளை இயக்க முடியாத நிலை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு. இந்நிலையில் சென்னை நகரில் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, சென்னைக் கடற்கரை முதல் மயிலாப்பூர் - லஸ் வரை பெருநகர் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் என்ற புதிய திட்டம் மத்திய திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, இரயில்வே குழுவால் (Railway Board) 1983-ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தில் மொத்த மதிப்பீடு ரூ.108.21 கோடி. இந்தத் தொகை 1987-ஆம் ஆண்டு இரயில்வே குழுவால் அனுமதிக்கப் பட்டது. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து இதன் தலைமைத் திட்ட மேலாளர் திரு. ரா.நரசிம்மன் அவர்களை நேரில் சந்தித்தபோது அவர் இந்தத் திட்டம் குறித்து கீழ்க் கண்டவாறு விளக்கினார்:



### திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரையிலான இந்த துரிதப் போக்குவரத்துத் திட்டத்தின் மொத்த நீளம் 8.55 கி.மீ. இதில் சென்னைக் கடற்கரை முதல் பார்க்டவுன் வரையிலான சுமார் 2.75 கி.மீட்டர் தூரம் தரை வழியிலும், அதன்பின் பார்க்டவுன் முதல் லஸ் வரையிலான மீதி 5.80 கி.மீ. தூரம் உயரத்திலேயும் இரயில் செல்லும். இதனாலேயே இந்த வழித்தடத்தில் செல்லும் இரயில் 'பறக்கும் இரயில்' எனவும் அழைக்கப்படுகிறது.




இது இரட்டை வழித்தடங்களைக் கொண்ட அகல இரயில் பாதைத் திட்டமாகும். இந்தத் திட்டம் நிறைவடையும்போது சுமார் 6 இலட்சம் பயணிகள் தினந்தோறும் இதில் பயணம் செய்யலாமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 5 நிமிட இடைவெளியில் இருவழிப் பாதைகளிலும் மொத்தம் 310 இரயில் வண்டிகள் செல்லும். சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் வரையிலான தூரத்தை இந்த இரயில் சுமார் 17 நிமிடங்களில் கடக்கும். ஆனால், பேருந்திலோ இந்தத் தூரத்தைக் கடக்க சுமார் 40 முதல் 45 நிமிடங்கள் ஆகும். இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறி, இரயில் ஓடத் தொடங்கியதும், அரக்கோணம் மற்றும் கும்மிடிப்பூண்டி மார்க்கங்களிலிருந்து வரும் மின்சார இரயில்களை இந்தப் புதிய வழித்தடத்திலும் நீட்டிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தப் புதிய பாதையில் விடப்படும் இரயில் 3 எஞ்ஜின்களுடன் கூடிய 9 இரயில் பெட்டிகளைக் கொண்டதாக இருக்கும்.

இந்த இரயிலில் ஒரே சமயத்தில் சுமார் 2,844 பயணிகள் பயணம் செய்யலாம். அதாவது, கிட்டத்தட்ட 28 பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் ஒரே நேரத்தில் இந்த இரயிலில் பயணம் செய்யலாம்.



### இரயில் நிலையங்கள்

இந்தத் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின்படி, சென்னைக் கடற்கரை முதல் லஸ் வரையிலான 8.55 கி.மீ. தூரத்தில் மொத்தம் 8 இரயில் நிலையங்கள் உள்ளன. இவற்றில் கடற்கரை, கோட்டை, பார்க்டவுன் ஆகிய 3 இரயில் நிலையங்கள் தரையிலும், சிந்தாதிரிப் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக் கேணி, லாயிட்ஸ் சாலை, லஸ் ஆகிய 5 இரயில் நிலையங்கள் தரையிலிருந்து உயரத்திலேயும் அமைக்கப்படும்.

கடற்கரையிலிருந்து சிந்தாதிரிப் பேட்டை வரும்போது இந்த இரயில் தரை மட்டத்திலிருந்து சுமார் ஐந்தரை மீட்டர் உயரத்தில் செல்லும். எனவே தான் சிந்தாதிரிப்பேட்டை இரயில் நிலையம் மிக உயரமாக இரண்டு அடுக்கு மாடியுடன் கட்டப்படுகிறது.



ன்னை-சிந்தாதிரிப்பேட்டையில் அமையவிருக்கும் புதிய இரயில் லயத்தின் மாதிரிப்படம்.

### துரிதப் பணிகள்

இந்தத் திட்டத்திற்குத் தேவைப் படும் நிலத்தின் மொத்தப் பரப்பு 22.91 எக்டேர். இதில் 19.09 எக்டேர் நிலம் மாநில அரசுக்குச் சொந்தமானது. மீதமுள்ள நிலத்தில் 2.72 எக்டேர் தனியாருக்கும், 1.10 எக்டேர் மத்திய அரசுக்கும் சொந்தமானது. தனியார் நிலத்தை மாநில அரசு கையகம் செய்து, இந்தத் திட்டத்திற்குத் தேவையான அனைத்து நிலங்களையும் இரயில்வே துறைக்கு இலவசமாக வழங்கும்.

கடற்கரையிலிருந்து டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை வரையிலான 7.13 கி.மீ. தூரத்திற்கான நிலமும், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையிலிருந்து ½ கி.மீ. தூரத்திற்கான நிலமும் இதுவரை இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தற்சமயம் இங்குத் துரிதமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### முடியுந்தறுவாயில்...

சென்னைக் கடற்கரை - லஸ் துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பணிகள் 1983-இல் தொடங்கப்பட்டு, கடற்கரையிலிருந்து பார்க்டவுன் வரையிலான தரைமட்டப் பணிகள் அனைத்தும் தற்சமயம் முடியும் தறுவாயில் உள்ளன. பார்க்டவுன் முதல் சேப்பாக்கம் வரை

ராட்சதத் தூண்கள் அமைக்கும் பணி முடிவடைந்து விட்டது. சேப்பாக்கம் முதல் இராதாகிருஷ்ணன் சாலை வரை ராட்சதத் தூண்கள் அமைக்கும் பணி தற்சமயம் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

சென்னைக் கடற்கரை, கோட்டை இரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிவடைந்து விட்டன. பார்க்டவுன் மற்றும் சிந்தாதிரிப்பேட்டை இரயில் நிலையங்கள் அமைக்கும்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு இறுதிக்குள் இவை கட்டி முடிக்கப்பட்டு விடுமென எதிர்பாக்கப் படுகிறது.

சேப்பாக்கம் இரயில்வே நிலையத்திற்கான அடிக்கல் போடப்பட்டு இரயில் நிலையம் கட்டும் பணி விரைவில் துவங்கும். 1992-ஆம் ஆண்டு இறுதி வாக்கில் சென்னைக் கடற்கரையிலிருந்து சேப்பாக்கம் வரை முதல் கட்டமாக இரயில் விடப்படும் என்று இந்தத் திட்டத்தின் தலைமைத் திட்ட மேலாளர் அவர்கள் தெரிவிக்கிறார்.

சென்னைக் கடற்கரை - லஸ் வரையிலான இரயில் போக்குவரத்து 1994-95-ஆம் ஆண்டில் நடைபெறுமென எதிர்பார்க்கப் படுகிறது.

**இந்தியாவிலேயே...**

சென்னைக் கடற்கரை - லஸ் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முதல் மதிப்பீடு ரூ.53 கோடியாக இருந்தது. தற்போது இதன் மதிப்பீடு ரூ. 108.21 கோடியாக உயர்ந்துள்ளது. இதுவரை இந்தத் திட்டத்திற்கு 53.56 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து விட்டன. இவ்வாண்டு இத்திட்டத்திற்கு ரூ.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் முழுமையாக முடிந்து இரயில் ஓடத் தொடங்கும் போது, சென்னை நகர மக்களுக்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சாலைப் போக்குவரத்து நெரிசலும் வெகுவாகக் குறையும். இந்தத் திட்டத்தின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால், இரயில் பாதை பெரும்பாலும் பக்கிங்காம் கால்வாய் வழியாகச் செல்லும். அதுவும் சாலைப் போக்குவரத்துக்கு எந்த விதப் பாதிப்பும் ஏற்படாதவாறு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், சுமார் 5.80 கி.மீ. தூரத்திற்குத் தரையிலிருந்து உயரே இரயில் பறப்பதாகும். இத்தகைய திட்டம் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில்தான் செயல்படுத்தப் படுகிறது என்பதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்!

**- ஜே. சந்திரன்.**

## குடிநீர்த் தட்டுப்பாடு நீங்க ரூ.2.5 கோடி: மாண்புமிகு முதல்வர் ஆணை

**தமிழ்நாட்டில், சில மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் குடிநீர்த் திட்டங்களுக்காக இடர்ப்பாடு நிவாரண நிதியிலிருந்து** (CALAMITY RELIEF FUND) ரூ.2.5 கோடி வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

இந்த நிதியுதவியின் மூலம் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலமாக, 400 ஆழ் குழாய்க் கிணறுகள் ரூ.1.4 கோடி செலவில் அமைக்கப்படும். அதே போல சேலம், புதுக்கோட்டை, வடஆர்க்காடு அம்பேத்கார், பெரியார் ஆகிய மாவட்டங்களில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.80 இலட்சம் செலவிடப்படும். மேலும் கிணறுகளை ஆழப்படுத்த சேலம் மாவட்டத்தில் ரூ.20 இலட்சமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் குழாய்கள் அமைப்பை விரிவாக்கம் செய்ய ரூ.10 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை மூலம் சில மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கிற குடிநீர்ப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க உடனடியாக உதவுகிற வகையில் ரூ.2.5 கோடியைச் செலவிட மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

## பஸ் ஊழியர் இறந்தால், குடும்பத்துக்கு ரூ.60 ஆயிரம் உதவி

**போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் போது மரணம் அடையும் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு எந்தவிதப் பிடித்தமும் இல்லாமல் 20 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று மறைந்த முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் உத்தரவிட்டு இருந்தார்.**

**தி.மு.க. அரசில் 1.9.1989 அன்று இந்தத் தொகை 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்தனர். ஆனால், இதுவரையில் கொடுக்கவில்லை.**

**மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1.9.1989 முதல், இறந்த தொழிலாளர்களுக்குப் பிடித்தமே இல்லாமல் 40 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளார்.**

**தி.மு.க. அரசு அறிவித்து, 40 ஆயிரம் ரூபாய் வழங்கப்படாத அந்தக் காலகட்டத்தில் மரணம் அடைந்த தொழிலாளிகள் குடும்பத்துக்கு இந்தத் தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார். 1990-91-ஆம் ஆண்டில் மட்டும் 457 பேர் மரணம் அடைந்துள்ளனர்.**

**1.8.1991 முதல் ஒவ்வொரு தொழிலாளியிடமும் மாதம் 5 ரூபாய் பிடித்தம் செய்யவும், பணியில் இருக்கும்போது மரணம் அடையும் தொழிலாளர்கள் குடும்பத்துக்கு ரூ.60 ஆயிரம் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.**

**இத் தகவலை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் அவர்கள் சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.**



# இடைத்தேர்தல் (24-8-1991) முடிவுகள்

## பெரியார் மாவட்டம்

### 117. காங்கேயம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,60,773 |
| பதிவான வாக்குகள் | ... | 1,03,519 |
| செல்லாதவை | ... | 1,223 |

**இராம. வீரப்பன் (அஇஅதிமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| இராம. வீரப்பன் | அஇஅதிமுக ... | 98,783 |
| சி.எஸ். அருணாசலம் | சுயே ... | 1,072 |
| பொன். ரத்தினசாமி | சுயே ... | 800 |
| ஆ. கணேசமூர்த்தி | சுயே ... | 420 |
| பி.எம். பழனிசாமி | சுயே ... | 136 |
| வி.டி.ஆர். வீரப்பன் | சுயே ... | 131 |
| ஆர். குருசாமி | சுயே ... | 129 |
| எம்.எல்.ஜி.கே. ராஜேந்திரன் | சுயே ... | 108 |
| டி.கே. கருத்தப்பாண்டியன் | சுயே ... | 90 |
| ஜே. குமாரி | சுயே ... | 85 |
| வி.எம். சின்னப்பொண்ணு வாத்தியார் | சுயே ... | 78 |
| எஸ். முனுசாமி | சுயே ... | 67 |
| எஸ். பழனிசாமி | சுயே ... | 58 |
| கே. ரங்கசாமி | சுயே ... | 57 |
| பி. ஆறுமுகம் | சுயே ... | 54 |
| யு. நாகூர் மீரான் பீர்முகமது | சுயே ... | 51 |
| ஏ.பி. சின்னசாமி | சுயே ... | 40 |
| எஸ். சதாசிவம் | சுயே ... | 39 |
| கே.சி. ரங்கசாமி | சுயே ... | 37 |
| டாக்டர். கே. பத்மராஜன் | சுயே ... | 33 |
| பி. ராமநாதன் | சுயே ... | 28 |

## சென்னை மாவட்டம்

### 2. துறைமுகம்

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,21,040 |
| பதிவான வாக்குகள் | ... | 36,721 |
| செல்லாதவை | ... | 254 |

**அ. செல்வராசன் (திமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| அ. செல்வராசன் | திமுக ... | 19,347 |
| க. சுப்பு | காங்கிரஸ் ... | 16,111 |
| எ.கே. தாஜூதீன் | சுயே ... | 606 |
| ஒய். ஜலீல் | சுயே ... | 67 |
| டி.எச்.எம். நூருல் அமீன் | சுயே ... | 63 |
| டி.கே. தேவன் | சுயே ... | 52 |
| சர்மா நகர் எம். ஜலாலுதீன் | சுயே ... | 32 |
| கே. சீனி முகமது | சுயே ... | 24 |
| இ.எம். ஆறுமுகம் | (லோக்தள்) ... | 22 |
| எஸ். அன்பழகன் | சுயே ... | 16 |
| சி. அமீனா | சுயே ... | 16 |
| ஒ.அ. வரத தேசிகன் | சுயே ... | 16 |
| எ.கே. ஐநஸ் | சுயே ... | 15 |
| எம். மோகன் | சுயே ... | 13 |
| கடல் தன்சேகரன் | சுயே ... | 11 |
| ஜே. அந்தோணி | சுயே ... | 10 |
| எல். அரசு | சுயே ... | 10 |
| சி.வி. நாராயணன் | சுயே ... | 9 |
| யு. அயூப் | சுயே ... | 8 |
| ஜி. மதியழகன் | சுயே ... | 7 |
| மனக் சந்த் நகர் | சுயே ... | 7 |
| எம்.சி. விஜயகுமார் | சுயே ... | 5 |

### 7. எழும்பூர் (தனி)

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,28,272 |
| பதிவான வாக்குகள் | ... | 46,109 |
| செல்லாதவை | ... | 260 |

**இளம்வழுதி (தி.மு.க.) வெற்றி**

| | | |
|---|---|---|
| இளம்வழுதி | தி.மு.க. ... | 23,139 |
| டி. யசோதா | காங்கிரஸ் ... | 21,936 |
| வி. சிவகுமார் | சுயே ... | 276 |
| அரக்கோணம் மா.வரதராஜன் | ஜனதா ... | 221 |
| வெங்கடேசன்(எ) பி.அம்பெட் வெங்கடேஷ் | சுயே ... | 154 |
| இ. சாரதா | சுயே ... | 51 |
| எம். சுப்ரமணி | சுயே ... | 42 |
| ஆர். சாரங்கபாணி | சுயே ... | 30 |

## திருச்சி மாவட்டம்

### 158. முசிறி

| | | |
|---|---|---|
| மொத்த வாக்காளர் | ... | 1,81,551 |
| பதிவான வாக்குகள் | ... | 1,13,722 |
| செல்லாதவை | ... | 1,016 |

**எம். தங்கவேல் (அஇஅதிமுக) வெற்றி**

| | | |
|---|---|---|
| எம். தங்கவேல் | அஇஅதிமுக ... | 70,812 |
| ஆர். நடராஜன் | திமுக ... | 39,568 |
| எம். சிவபெருமாள் | சுயே ... | 584 |
| சரோஜா வீரப்பன் | தமம ... | 374 |
| எம். ராஜேந்திரன் | சுயே ... | 284 |
| கே. சிங்காரம் | சுயே ... | 220 |
| டி.கே. கருத்தபாண்டியன் | சுயே ... | 184 |
| எ. அலமேலு | சுயே ... | 149 |
| டி. பாலகிருஷ்ணன் | பாமக ... | 134 |
| எம். ராஜேந்திரன் | சுயே ... | 130 |
| எஸ். பெருமாள் | சுயே ... | 84 |
| எஸ். ராஜேந்திரன் | சுயே ... | 77 |
| எம். செல்வராஜூ | சுயே ... | 62 |
| வி. ரெங்கசாமி | சுயே ... | 44 |

**முதலாவது அட்டையில்...**

கோட்டைக் கொத்தளத்தில் ஆகஸ்ட் 15 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்தார்.

**இரண்டாவது அட்டையில்...**

ஆகஸ்ட் 15-ஆம் நாள், கோட்டைக் கொத்தளத்தின் முன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

**கடைசிப் பக்க அட்டையில்...**

தருமபுரி மாவட்டம் பர்கூரில், 21.8.91-இல் நடைபெற்ற அரசு நலத்திட்ட விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாபெரும் மக்கட் கடலிடையே உரையாற்றினார்.

# மாவட்டச் செய்திகள்

## கோவை-பெரியார் மாவட்டங்களில்:

பரம்பிக்குளம் முக்கியக் கால்வாயின் இரண்டாம் மண்டல ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் திருமூர்த்தி அணையிலிருந்து 1.8.1991 அன்று காலை முதல் பாசனத்திற்குக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. கலைவாணன், இ.ஆ.ப., அவர்களால் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதனால் இந்த முக்கியக் கால்வாயிலிருந்து 48.60 கிலோ மீட்டர் வரையுள்ள வலதுபுற ஆயக்கட்டுப் பகுதிகளும், 109.60 கிலோ மீட்டர் முதல் 124 கிலோ மீட்டர் வரை இடதுபுறமுள்ள ஆயக்கட்டுகளும் 1991 டிசம்பர் மாதம் முதலிரண்டு வாரங்கள் நீர்ப்பாசன வசதி பெறும்.

இதனால், உடுமலை வட்டத்தில் சுமார் 42,029 ஏக்கரும் பொள்ளாச்சி வட்டத்தில் 4,860 ஏக்கரும், பல்லடம் வட்டத்தில் 15,344 ஏக்கரும் ஆக, கோவை மாவட்டத்தில் 62,233 ஏக்கர் நிலம் பயனடையும்.

இந்தத் திருமூர்த்தி மலைப் பகுதியில் அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியடையும் வகையில் சுற்றுலா மையம் அமைக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இங்கு படகுக் குழாம் விரைவில் அமைக்கப் படவுள்ளது. விவசாயிகளுக்கும் அனைத்து மக்களுக்கும் உதவுவதில் இந்த அரசு தொடர்ந்து நல்ல பணிகளை ஆற்ற முனைந்துள்ளதற்கு இது சீரிய உதாரணமாகும்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறையின் சார்பாக விவசாயிகளுக்கு விதைகளையும், இடுபொருட்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உடுமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. மணிவாசகம், மற்றும் வேளாண்மைப் பெருங்குடி மக்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த நீர் மூலம், பெரியார் மாவட்டத்தில் தாராபுரம் வட்டத்தில் 7,849 ஏக்கர் நிலமும் காங்கேயம் வட்டத்தில் 5,174 ஏக்கர் நிலமும் ஆக, கோவை மாவட்டத்தில் பயனடையும் 62,233 ஏக்கரையும் சேர்த்து, மொத்தம் 75,256 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும். 1.8.1991 முதல் 13.12.1991 முடிய 135 நாட்களுக்கு முறை வைத்து அப்பகுதிகள் பாசன வசதி பெறும்.



கோவை மாவட்டத்தில் உடுமலை வட்டத்தில், ஜல்லிப்பட்டி, தளி, பெரிய வாளவாடி, சின்னவாளவாடி, முடக்குப்பட்டி, தென்போத்நாதன், தீபானப்பட்டி, சர்க்கார் புதூர், ஆர். வேலூர், போடிப்பட்டி ராகல்பாவி, வலசுப்பட்டி, பூலாங்கிணறு, கணபதிபாளையம், உடுமலைப்பேட்டை, அந்தியூர், கணக்கண்பாளையம் பூக்குளம், குரிஞ்சேரி, முக்கூத்து ஜல்லிப்பட்டி, பனக்கிநாறு, தோத்தம்பட்டி, சோமவாரப்பட்டி, கோட்டமங்கலம், வடுகபாளையம், கொண்டம்பட்டி, புதுப்பாளையம், விருகல்பட்டி, கொங்கல் நகரம், இலுப்பநகரம், அளிக்கடவு, மூங்கில் தோப்பு, அனந்தக்கடவு, பெரியபட்டி, வீதம்பட்டி, வாகத்தொழுவு, காசானம்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலமெல்லாம் பாசன வசதி பெறும்.

பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள உலகநாயக்கன்பட்டி, கோமங்கலப்புதூர், கோமங்கலம், பூசாரிப்பட்டி, ஆளப்பன்பட்டி, மூலனூர், ஏ.நாகூர், கொண்டகவுண்டன்புதூர் பாளையம், சின்ன நெகமம், பல்லடம் வட்டத்தில் ஜே. கிருஷ்ணாபுரம், வடக்கு அவிநாசிபாளையம், தொங்குட்டிபாளையம், அழகமலை, தெற்கு அவிநாசிபாளையம், காங்கயன் கோவில் ஆக மொத்தம் 52 கிராமங்களிலுள்ள விவசாய நிலமெல்லாம் பாசன வசதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



# தமிழரசு

16-9-1991 ரூ.1








★ மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை, முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல், அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.



★ காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்து விடும்.

## இந்த இதழில்...


அண்ணா கண்ட அன்புத் தத்துவம்
—புரட்சித் தலைவர்
டாக்டர் எம்.ஜி.ஆர். ... 2

தமிழகத்தில் கல்வி பயிலுவோர்
கட்டாயம் தமிழ் கற்க வேண்டும்
—மாண்புமிகு முதல்வர் ... 4

மாணவர் சமுதாயம் பயனுள்ள
சமுதாயமாக உருவாக வேண்டும்
—மாண்புமிகு முதல்வர் ... 8

1991-92-ஆம் ஆண்டிற்கான
நிதிநிலை அறிக்கை ... 11

அவர்தாம் பெரியார்!
—பாவேந்தர் பாரதிதாசன் ... 23

தந்தை பெரியார் புரட்சி மொழிகள் ... 24

பேரறிஞர் அண்ணா பொன்மொழிகள் ... 25

கிண்டி பொறியியற் கல்லூரியின்
200-வது ஆண்டுவிழாத் தொடக்கம் ... 47




### அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாளையொட்டி, அவர்களின் திருவுருவப் படங்கள் இவ்விதழ் முகப்பை அலங்கரிக்கின்றன.

**இரண்டாம் அட்டை:**

அண்ணாப் பல்கலைக் கழகப் பொறியியல் கல்லூரியின் 200-வது ஆண்டுத் தொடக்க விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு கல்வியமைச்சர் ஆகியோர் பங்கேற்ற காட்சி.

**நான்காம் அட்டை:**

1991-92-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சட்டப் பேரவையில் தாக்கல் செய்ய, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்களுடன், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சட்டப்பேரவைக்கு வருகை தருகின்றார்.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2022
ஆவணித் திங்கள் - 31
மலர்:22 இதழ்:6
16-9-1991



# அண்ணா கண்ட அன்புத் தத்துவம்

## —புரட்சித்தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர்

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தாம் வகுத்த இலக்கணங்களுக்குத் தாமே இலக்கியமாக வாழ்ந்து காட்டினார்கள்.

அண்ணா அவர்களால் அப்படி நடந்துகாட்ட முடிந்தது எதனால்? அவருடைய அகமும் புறமும் ஒன்று போல் ஒரு பாதையில், ஒரே குறிக்கோளை நோக்கிச் செயற்பட்டதே அதற்குக் காரணம்.

அவ்வாறு அகமும் புறமும் ஒன்றுபட்டு இயங்கப் பகுத்தறியும் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், அதைப் பயன்படுத்தத் தவறுவதனாலேயே மக்களிடையே மாறுபட்ட தன்மைகள் இடம் பெறுகின்றன.

ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நாம் போக வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். அப்படிப் போவதற்கு ஏற்ற பாதை வேண்டுமல்லவா?

பாதையே இல்லாத பகுதியில் அடியெடுத்து வைத்து, அல்லற்பட்டு நடந்து மற்ற இடத்தை அடையவும் கூடும்.

**நம்முடைய வாழ்வில் நாம் கண்ட தனிப் பெருந்தலைவர், மனித சமுதாயத்தின் ஒப்புயர்வற்ற வழிகாட்டி, நற்பண்புகளைக் காவல் செய்யும் 'காவல்காரர்' அறிஞர் அண்ணா அவர்கள் என்று கூறும்போதே என் அகமும் புறமும் மலர்கின்றன.**

ஏன், மலைமேலே ஏறி இறங்கிப் போகலாம்!

காட்டு வெளிகளில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து செல்லலாம்!

தண்ணீரில் நீந்தியும் செல்லலாம்! ஆனால், இப்படிப் போய்ச் சேருவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் பாதைகள் ஒழுங்கற்றவைகளாக இருப்பதால், பாதாசாரிகளுக்கு அந்தப் பாதைகள் தொல்லைகளையும் இடர்ப்பாடுகளையும் உண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையைத் தவிர்க்க எண்ணி, பாதையே இல்லாதிருந்த இடத்தில், ஓர் ஒழுங்கான பாதையை உருவாக்கி, 'இந்த வழியாகப் போனால் அங்கே போய்ச் சேரலாம்' என்பதையும் குறிப்பிட்டுப் பாதசாரிகளுக்கு உதவி செய்யும் வகையில் ஒரு வசதி ஏற்படுத்தித் தரப்படுமானால், அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா?

தேவையை உணர்ந்து அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு இடையில் குறுக்கிட்டு, ''நமது முன்னோர் இந்தப் பாதையில்தான் சென்றார்களா? நாம் ஏன் செல்ல வேண்டும்?'' என்று கேட்பார்களேயானால், அது சிந்தித்து விடையிறுக்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகும்.

விதவைத் திருமணத்திற்கும், விவாக விலக்கிற்கும், கலப்பு மணத்திற்கும், வாழ்க்கை ஒப்பந்தம், பதிவுத் திருமணம் ஆகியவைகளுக்கும் மக்களிடையே ஆதரவு பிறந்ததே, அது எப்படி? இவை யாவும் முன்னோர் பின்பற்றிய நெறிகளா? இல்லையே! அறிவு வளர்ச்சியின் விளைவுகளேயல்லவா?

சமுதாயத்தின் கட்டுப்பாடுகள் ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தின் கட்டுப்பாடுகளாக அமைய வேண்டும். புறத்தில் உள்ளது வேறு, அகத்தில் உள்ளது வேறு என்று இருந்தால் எந்தச் சமூகக் கட்டுப்பாடோ, அல்லது சட்டமோ இலட்சியத்தில் வெற்றி காண முடியாது.

இதனால்தான் அகமும் புறமும் மாறுபடக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியம் பிறக்கிறது. அதற்கு உறுதுணையாக உள்ளது தான் பகுத்தறிவு, அந்தப் பகுத்தறிவு வளர்க்கும் பணியில் தன்னிகரற்று விளங்கியதோடு, அமைதியான முறையில் மெல்லமெல்ல மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் அண்ணா அவர்கள்.

அண்ணா அவர்களின் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் திடீரென்று மக்களிடையே பரவிடவில்லை. திடீரென்று ஒருநாள், மக்கள் எல்லோரும், 'இதுதான் நமக்கு ஏற்றது' என்று முடிவெடுத்துவிடவில்லை.

முதலில் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆசை கொண்டார்கள். அதன்பின், 'அவர் பேசுவதிலும் சில நியாயங்கள் இருக்கின்றன' என்றார்கள். பிறகு 'அவர் கூறுவதுதான் உண்மை' என்று எண்ணத் தொடங்கினார்கள். இதன் பிறகு பல நேரங்களில், பற்பல சூழ்நிலைகளில் அவரவரும் தங்களின் அனுபவவாயிலாக அறிந்து, சிந்தித்துப் பிறகு, இதுதான் எற்றது என்ற முடிவுக்கு வந்து, அப்போதும் எதிர்ப்பட்ட பல எதிர்ப்புக்களைச் சமாளித்துப் பிறகுதான் அண்ணா அவர்களின் எண்ணத்தோடு கலந்தார்கள்.

அறிவு என்கிற வழிகாட்டி
பகுத்தறிவு என்கிற ஒளிவிளக்கு
தன்னம்பிக்கை என்கிற நடை
மனப்பக்குவம் என்கிற வலிமை

இவைகளைக் கொண்டுதான் மனிதன் தனது வாழ்க்கையைக் கடக்க வேண்டியவனாகிறான்.

ஆகவே, ஒவ்வொரு மனிதனும் எதை விரும்பவேண்டும் என்பது அவனுடைய அகத்திற்கும் புறத்திற்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். ஒரு பெரிய ஆற்றை நீந்திக் கடக்க வேண்டும் என்ற ஆசை உள்ளத்திலே எழுந்தால் மட்டும் போதுமா? உடலிலே வலிமையும் உறுப்புக்களுக்குப் பழக்கமும் வேண்டும் அல்லவா? அதுபோலத்தான் வாழ்க்கையும்!

பொருளாதாரத்தையும், சமூக அமைப்பையும், சமூக நாகரிக வளர்ச்சிக்காக ஏற்படும் மாற்றங்களையும் அனைத்தையுமே 'மக்கள் வாழ்வுக்காக' என்று சிந்திக்க வேண்டுமே தவிர, 'எனக்காக, என் ஒருவனுக்காக, என் ஒருவனுக்காகவே' என்று சிந்திக்கக் கூடாது என்ற முடிவைத்தான், அண்ணா அவர்களின் தத்துவக் கருத்துக்களைத் துணையாய்க் கொண்டு நான் சிந்தித்துப் பார்த்த அளவில் மிகவும் ஏற்புடையதாகக் கருதலானேன்.

உலகில் பூசலும் போராட்டமும் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? தகுதியுடையவன் தன் தேவையைப் பெறாதபோது விடுகின்ற கண்ணீர்த் துளிகள் கனலாக மாறுகின்றன.



**★ நாட்டில்**
**கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ,**
**அதைக் கொண்டு தான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.**

ஏராளமான பொருள்களுக்குரிய ஒருவர், தன் கண் எதிரில் கஞ்சிக்குப் போராடும் எளிய உருவங்களைக் காணும்போது இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஏன் அவர்கள் அந்த நிலையிலும், நாம் இந்த நிலையிலும் இருக்கிறோம் என்பதையாவது சிறிதளவு யோசிக்க வேண்டுமல்லவா?

அந்த யோசனை அவருக்கு உண்டாக வேண்டுமானால், இயற்கையான அன்பின் உயிரோட்டப் பண்பு அவரிடம் உண்டாக வேண்டும். அனுபவத்தால் அது எந்த அளவிற்கு வெற்றி பெறும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. அதனால்தான் நாட்டில் வேறு வேறுபட்ட நிலைகள் காலம் காலமாக வளர்ந்து வருகின்றன.

முந்தைய தலைமுறையில் செயற்பட்டவைகள் எல்லாம் தொடர்ந்து வரவேண்டும் என்று முடிவு செய்தால், நாட்டில் மக்களின் வாழ்க்கை அமைப்பும் பொருளாதார நெறியும் ஒரு கோணத்திலேயே நடை போட்டுக் கொண்டிருக்கும். மேம்பட்டவர்கள் மேலும் மேம்படவும், தாழ்ந்தவர்கள் மென்மேலும் தாழவும் தான் நேரும்.

மக்கள் தொகை பெருகிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் எல்லோருக்கும் நடுநிலையான வாழ்க்கை வசதி அளிக்கப்பட்டாக வேண்டும் என்ற பிரச்சினை எழுந்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன.

இந்தப் பிரச்சினைக்குச் சரியான முடிவு பிறக்க அண்ணா அவர்களின் அன்புத் தத்துவம் அதற்கு ஏற்றதொரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. மக்கள் அதை உள்ளும் புறமும் ஒருமைப்பாட்டுடன் ஏற்பதில் தான் வெற்றி அடங்கியிருக்கிறது.

குழந்தைக்குத் தேவையான உணவைத் தாய் அளிப்பது போல, மாணவனுக்குத் தேவையான கல்வியை ஆசிரியர் அளிப்பதுபோல, இல்லாதவர்களுக்குத் தேவையானதை இருப்பவர்கள் அளிக்க முன்வர வேண்டும் என்பதே அண்ணா அவர்களின் அந்த அன்புத் தத்துவம். இதைக் கடைப்பிடித்தால் பிரச்சினையைச் சமாளிப்பதற்கான உதயம் தென்படும்!

# தமிழகத்தில் கல்வி பயில்வோர்

"நமது குடியரசின் தலைவராகவும், உலகம் போற்றும் தத்துவ மேதையாகவும், ஆசிரியர் பணியில் தொடங்கி அறிவு உலகத்தின் ஆசானாகவும் திகழ்ந்து அனைவரும் போற்றும் உன்னதப்பெருமைபெற்றவர் டாக்டர் இராதாகிருஷ்ணன். அவர்களுடைய பிறந்த நாளை "நல்லாசிரியர் திருநாளாக"க் கொண்டாடும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டமற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினால் ஆசிரியராகத் தான் ஓய்வு பெற முடியும் என்பது நம்மிடம் நிலவும் பொதுவான கருத்தாகும். பெரும்பாலும் ஆசிரியர்கள் தம்மிடத்தில் பயிலும் மாணவர்களை முன்னேற்றி, அவர்கள் மட்டும் தாங்கள் உயராமல் இருக்கும் நிலையிலேயே உழைத்து வாழ்க்கையை நடத்துபவர்கள். 'ஏணிப் படிகள்' என்று புகழப்பட்டு, 'மெழுகுவர்த்திகள்' என்று மதிக்கப் பட்டாலும் அவர்கள் உழைப்பால் தேய்ந்து, உடலால் சோர்ந்து போவார்கள் என்கிற நடைமுறையை மாற்றி புதிய வரலாறு படைத்தவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள்.

40 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியர்களோடு தொடர்பு கொண்டிருந்த பெருந்தகையான அவரது பிறந்த நாளை, ஆசிரியர்கள் தங்களது புகழுக்குரிய நாளாகக் கருதுவது மிக்கப் பொருத்தமானது ஆகும். ஆசிரியர்களைக் கடவுளாகக் கருதி வழிபடும் வழக்கம் நம் நாட்டில் நீண்டகாலமாக இருந்து வருகிறது.

"எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்" என்பது மூதுரை, "என்னைப் பெற்றவர்கள் தசரதனும், கோசலையுமாக இருந்தாலும் வல்லமையில் என்னை வளர்த்தவர் வசிஷ்டர் தான்" என்று ராமன் பெருமைப் பட்டதாகக் கூறுவார்கள். அண்மைக் காலத்தில் ஆசிரியரின் பெயரையே தன் பெயராக நன்றியுணர்வோடு சூட்டிக் கொண்டவர் டாக்டர் அம்பேத்கர். இதுபோன்ற பல உதாரணங்கள் இதிகாச காலத்திலிருந்து இன்றுவரை நம்மிடம் ஏராளமாக உண்டு.

தமிழகத்து மக்களின் ஏகோபித்த அன்பினாலும், ஆதரவினாலும் முதலமைச்சராகி இருக்கிற நான் எனது அமைச்சரவை பதவி ஏற்பு விழாவிற்கு அழைப்பிதழ் அனுப்பும் போது எனது ஆசிரியருக்குத் தான் முதலில் அதை அனுப்பினேன் என்று உங்களுக்கு அறிவிப்பதில் மிகுந்த பெருமை கொள்கிறேன். ஏனெனில், இன்றைக்கு வாழ்க்கையில் நான் அடைந்துள்ள உயர்வுக்கெல்லாம் அடிப்படை அமைத்துத் தந்தவர்கள் எனது ஆசிரியர்களே ஆவர். ஆசிரியர் பணி ஒரு புனிதமான கடமை. தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.

இது தொடர்பாக நான் பதவியேற்றவுடன் எடுத்த இன்னொரு முடிவு பற்றியும் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தமிழகச் சட்டப்பேரவைக்கு ஆங்கிலோ-இந்தியப் பிரதிநிதி ஒருவரை நியமிக்கிற கோப்பு என்னிடம் வந்தது. அந்தக் கோப்பிலிருந்த பெரிய பட்டியலைப் பார்த்தேன். அதில் இடம் பெற்றிருந்த ஒரு பெண் ஆசிரியையின் பெயரை மட்டுமே நான் ஆளுநருக்குப் பரிந்துரை செய்தேன். நான் பரிந்துரை செய்த அந்த நபர் வேறு யாருமல்ல; மாநிலக் கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைமைப் பேராசிரியை திருமதி பியட்ரிக்ஸ் டிசௌஸா தான் அவர். அவர் இன்று நமது சட்டப்பேரவையின் பெண் உறுப்பினர்; ஆசிரியர் சமூகத்தின் பிரதிநிதி!

கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்து விடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறுவதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒருவகையில் நாம் கற்கும் கல்வி

'நல்லாசிரியர் விருது' வழங்குதல்.



# கட்டாயம் தமிழ் கற்க வேண்டும்!

என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை அனுபவம் இல்லாத எவரும் கல்வி கற்றவராக முடியாது என்று அறிஞர் பெர்னாட்ஷா குறிப்பிட்டதை நான் தற்போது நினைவுகூர விரும்புகிறேன். மனிதனை நல்ல வாழ்க்கையை நோக்கி

## ஆசிரியர் தின விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை.

அழைத்துச் செல்வதோடு, அவனை மனதாபிமானம் மிக்கவனாகவும், பண்புடையவனாகவும் மாற்றுவது தான் கல்வியின் நோக்கம். இத்தகைய கல்வியைப் புகட்டுகிற ஆசிரியர்களைத் 'தெய்வம்' என்று கூறினால் அது மிகையாகாது. அந்த நோக்கத்தில் தான் நல்லாசிரியர் பெருமக்களுக்கு இன்று இந்த விழாவில் விருதுகள் வழங்கப்பட உள்ளன. இதனால் விருது பெற்றவர்கள் மட்டுமே நல்லாசிரியர் என்பது பொருள் அல்ல. தமிழகத்தில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களும் எனக்கு நல்லாசிரியர்கள் தான். அவர்களின் பிரதிநிதிகளாகத் தான் பலர் இன்று விருது பெறுகிறார்கள் என நான் எண்ணுகிறேன்.

கல்வியில் முன்னேறிய மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக இருந்தாலும், கடந்த பல ஆண்டுகளாகத் தரமான கல்வியினைப் பெறுவதிலும், கல்வியில் நிலையான வெற்றியினை ஈட்டுவதிலும் நம்மிடையே ஒரு தேக்கம் தோன்றியுள்ளதைச் சுட்டிக் காட்டுவது என் கடமை எனக் கருதுகின்றேன். மேல்நிலைக் கல்வியிலும், உயர்கல்வியிலும் உயர்ந்த தரங்களில் நம்முடைய மாணவர்கள் மகிழ்ச்சியுறத்தக்க அளவில் வெற்றி பெறவில்லை என்பதையும், இந்திய ஆட்சிப் பணித் தேர்வுகளில் நம் இளைஞர்கள் அதிகமாக வெற்றி பெறவில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நிலையைப் போக்கி கல்வித் துறையை உயர்த்தவும், ஆசிரியர்களை ஊக்கப்படுத்தவும், மாணவர்களுக்கு உதவி செய்யவும் இந்த அரசு எப்பொழுதும் முன்னின்று உதவும் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன். கல்வித் துறையை உயர்த்துவது என்றால் கடும் உழைப்பை ஆசிரியர்கள் தான் முதலில் நல்கியாக வேண்டும்.

ஏனெனில், கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாக இருந்த காலம் மாறி இப்போது சமுதாய மாற்றத்திற்கு உதவும் மாபெரும் சக்தியாக விளங்கி வருகிறது. கல்வி தான் எத்தனையோ நாடுகளில் பெண்களின் அடிமைத் தனத்தை ஒழிக்கும் ஆயுதமாகச் செயல்பட்டு இருக்கிறது. வீட்டுக்கு உள்ளே பூட்டி வைக்கப்பட்டிருந்த பெண்களையும், அடுப்பறைக்குள்ளேயே உழன்று கொண்டிருந்த மகளிரையும் கல்வி தான் அகில உலகப் புகழ் பெற வைத்துள்ளது. மேலும் மற்ற நாட்டவர்கள் விரும்பி அழைத்து மரியாதை தருகிற பட்டியலில் முதலிடம் வகிப்பது அறிவார்ந்த கல்வியே ஆகும்.

ஒரு அரசுக்கு அதனுடைய கல்விக் கொள்கையே அதன் உயிர்க் கொள்கையாகக் கருதப்படுகிறது. தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்ட 'இரு மொழிக் கல்வித் திட்டம்', புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உரிய முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நமது மாநிலக் கல்வித் துறையின் பற்றுக்கோடாக விளங்கி வருகிறது. அதே இரு மொழிக் கொள்கைத் திட்டத்தை எங்கள் அரசு முழுமையாகச் செயல்படுத்தும் என்பதை இந்த நன்னாளில் நான் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மேலும் இரு மொழித் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு விளக்கத்தினை அளிப்பது முக்கியம் என்றும் நான் கருதுகிறேன்.

தமிழகத்தில் தொடக்கப் பள்ளிகளிலும், பள்ளிக் கல்வி நிலையங்களிலும் நமது தாய் மொழியான தமிழ் கற்பிக்கப்படாத ஒரு சூழ்நிலை உருவாகி விடுமோ என்கிற அச்சம் தற்போது ஏற்பட்டுள்ளது. ஆங்கில

'திரு.வி.க. விருது' வழங்குதல்.



மொழியின் ஆதிக்கத்தால் தமிழில் கல்வி கற்பதைத் தவிர்த்து விடலாம் என்கிற எண்ணம் எவருக்காவது இருந்தால் அவர்கள் தயவுசெய்து தங்களது எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி நிர்வாகத்திலும் அன்னை தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்துவதற்கு இந்த அரசு முந்தைய அரசுகளைக் காட்டிலும் முனைப்பாகச் செயல்படும் என்பதை இப்போது வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் வாழ்கிறவர்கள் தமிழ் பயிலாமல் தங்களின் கல்விப் பயிற்சியை நிறைவாக்கிக் கொள்ளலாம் என்னும் போக்கை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. மற்றைய மாநிலங்களில் அந்தந்த மாநிலத் தாய் மொழிகளில் மாணவர்கள் பள்ளிப் படிப்பைப் பெற்றாக வேண்டும் என்பது கட்டாயமாக்கப் பட்டு இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, தமிழ் மொழிக்கு முழு முதன்மை தருகிற வகையில் தமிழ்-ஆங்கிலம் என்ற நிலையில் தான் இரு மொழிக் கொள்கைத் திட்டம் இருக்க வேண்டுமே அல்லாமல், ஆங்கிலம் மற்றும் இந்திய மொழிகளில் ஒன்றினை இங்கு கற்கலாம் என்ற வகையில் அது அமையக் கூடாது என்பதைத் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் கட்டாயம் தமிழ் படித்தே ஆக வேண்டும் என்னும் திட்டவட்டமான நிலை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதே நேரத்தில் சிறுபான்மை மொழி பேசுகிறவர்களுடைய உரிமைகள் எவ்வகையிலும் பாதிக்கப்படாத வண்ணம் இரு மொழிக் கொள்கைத் திட்டம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப் படும்.

இந்த நன்னாளில் 'தமிழ்த் தென்றல்' என்று நம்மால் வணங்கப் பெறுகிற திரு.வி.க.-வின் பெயரால் அரசு வழங்கும் விருது நிகழ்ச்சியினையும், இவ்விழாவில் நாம் இணைத்துக் கொண்டு உள்ளோம். தன்னலம் அற்ற தியாகியாகவும், தேசியத் தலைவராகவும், தமிழ்ப் புலமை மிக்க அறிஞராகவும், தொழிலாளர் தலைவராகவும், 'எம் மதமும் சம்மதம்' என்ற உயர்ந்த

### மாணவர்க்கு

**குறளைக் கற்றுக் கொள்வதால்,**
**நீங்கள் செம்மைப்பட்டு,**
**நீங்கள் செம்மைப்படுவதால்,**
**நாடு செம்மைப்பட்டு,**
**நாடு செம்மைப்படுவதால்,**
**உலகு செம்மைப்படச்**
**செய்ய வேண்டும்**

—பேரறிஞர் அண்ணா

இலட்சியத்திற்காக உழைத்த சமரச ஞானியாகவும், எல்லா நிலைகளிலும் பெண்ணின் பெருமையைப் போற்றிய பேரறிவாளராகவும் திகழ்ந்தவர் திரு.வி.க. என்றால் அது மிகையாகாது.

பெண்மை - தாய்மை-இறைமை என்ற மூன்று நிலைகளிலும் பெண்களை மதித்துப் போற்றினால்தான் இந்த உலகம் பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்க முடியும் என்பதை வலியுறுத்துவதற்காகவே 'பெண்ணின் பெருமை' என்ற நூலை அவர் எழுதினார். எனவே தான் அத்தகைய பெரியவரின் பெயரால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அறிவிக்கப் பட்ட 'திரு.வி.க. விருது' பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு அதற்குரிய தகுதியானவர்களை நான் ஆராய்ந்த பொழுது 'பெண்ணின் பெருமை' பற்றி எழுதிய திரு.வி.க.-வின் பெயரில் விருது வழங்கப்பட்டவர்களின் பட்டியலில் இதுவரை எந்தப் பெண்மணியும் இடம் பெறவில்லை என்பதை உணர்ந்தேன். எனவே, தகுதியின் அடிப்படையில் தற்போது முதன்முதலாக ஒரு பெண்மணி 'திரு.வி.க. விருது' பெறுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் உங்களால் முதல் பெண் முதலமைச்சராக ஆக்கப் பட்டு உள்ள என்னால் வழங்கப் படுகிறது என்பதில் நான் பெருமையும், பெரு மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இப்பரிசு, இலக்கிய உலகத்தில் ஒரு சிந்தனைச் சாதனையை ஏற்படுத்தி, சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்க பல்வேறு வழிவகைகளைக் கூறும் ஆற்றல் மிக்க எழுத்தாளர் திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு இவ்வாண்டு வழங்கப் பட்டுள்ளது. வாழ்க்கையின் பல்வேறு நடைமுறை நிகழ்ச்சிகளை எழுத்தின் மூலம் அழுத்தமாக நமக்கு எடுத்துக்காட்டுவதில் கைதேர்ந்த நூல் ஆசிரியர், அவர். குறிப்பாக 'கூடுகள்' என்கிற அவரது நாவலில் ஒரு பள்ளிக்கூடத்தை மையமாக வைத்து, அதன் கல்விமுறை, ஆசிரியர் நிலை, மக்கள் முன்னேற்றம் ஆகியவற்றை அவர் அழகாகச் சித்திரித்துள்ளார். எனவே, ஆசிரியர் தின விழாவில் அவர் பரிசு பெறுவதே மிகுந்த பொருத்தமுடையதாகும். திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்களை என் சார்பாகவும், உங்கள் அனைவரின் சார்பாகவும் மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்றேன்!

அதுபோலவே அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவச் செல்வங்களுக்கும் இங்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த மாணவர்கள் தான் நமது எதிர்காலத்தைப் பூரணமாக உருவாக்கும் திறன் படைத்தவர்கள். இன்றைய மாணவர்கள்தான்நாளைநம் நாட்டைஆளப் போகிறவர்கள். பள்ளியில் படிக்கும் போது நான் பெற்ற பரிசுகளையும், பதக்கங்களையும், எனது அனுபவத்தையும், எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த நல்லாசிரியர்களையும் நான் இந்த நேரத்தில் நினைவு கூர்கிறேன்.

வெளிநாட்டில் இருந்து தற்போது எனக்குக் கடிதம் எழுதுகிற தோழிகள் முன்பு எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்கள் பற்றியும் நிறைய தகவல் கேட்டு எனக்குத் தவறாது எழுதி வருகிறார்கள். ஆசிரியர்கள் பள்ளியில் எங்களுக்குப் பாடம் சொல்லித் தந்தார்கள் என்பதற்காக மட்டும் இதை அவர்கள் எழுதவில்லை. ஆசிரியர்கள் எங்கள் குடும்பத்தின் பாசமிகு உறுப்பினர்களாக இப் போதும் இருந்து வருகிறார்கள் என்பதனால்தான் அப்படி எழுதுகிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களின் தொண்டினை நினைவுகூரும் இந்த நன்னாளில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



அரசிடமிருந்து என்ன நன்மைகள் இந்த நாளில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் என்பதைவிட, ஆசிரியர்களைத் திருப்திப்படுத்த நான் சில சலுகைகளை அறிவிப்பதைவிட, வணக்கத்துக்குரிய ஆசிரியர்களுடைய கவுரவத்தை, சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டுமென்பதில் நான் கவனமாக இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சூளுரைதான், தாய் மொழிக்கல்விக்குத் தளராது ஊக்கம் தந்து, இருமொழிக் கொள்கைக்கு வித்திட்ட பேரறிஞர் அண்ணா, ஏழைகளுக்கு இலவசக் கல்வி வழங்க முயற்சிகள் மேற்கொண்ட பெருந்தலைவர் காமராசர், பலரது எதிர்ப்புகளுக்கிடையேயும் ஏழை மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கத்திட்டம் தீட்டிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் ஆத்மா சாந்தி அடைய உதவும் என்று நான் எண்ணுகிறேன்.

அந்த வகையில் எங்கள் அரசு உங்கள் அரசு என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவும், தலைமைப் பொறுப்பில் இருக்கும் நான் உங்கள் குடும்பத்தில் ஒருத்தி என்கிற உணர்வினைப் பகிர்ந்து கொள்ளவும் இந்த விழா வழி செய்திருக்கிறது. முத்தான மூன்று நிகழ்ச்சிகளை ஒன்றாக இணைத்து வெற்றியுடன் விழாவினை நிகழ்த்திக் காட்டிய கல்வித் துறையினர் மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறையினரைப் பாராட்டுவதோடு நமது நாட்டின் கல்வி வளமும், ஆசிரியர் நலமும், மாணவர் திறமும், பண்பாட்டுச் செழுமையும் மேன்மேலும் உயர்வதற்குத் தமிழக அரசு ஆர்வத்தோடு ஆவன செய்யும்.

● ●



இராயல் காமன்வெல்த் சொசைட்டியால் 1990-91-ஆம் கல்வி ஆண்டில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில், இரண்டாவது பரிசு பெற்ற சென்னை மாணவி செல்வி பி. சுதாவிற்கு ஆசிரியர் தினவிழா அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசு வழங்கினார்.

ஆசிரியர் தினவிழா, 'திரு.வி.க. விருது' வழங்கும் விழா, 'நல்லாசிரியர் விருது' வழங்கும் விழா மற்றும் சிறந்த மாணவ மாணவியர்க்குப் பரிசளிக்கும் விழா ஆகிய அனைத்து விழாக்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 5.9.1991 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, தமிழக அரசின் இவ்வாண்டின் திரு.வி.க. விருதினை திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கினார்.

விழா முடிவில் 1990-91 கல்வி ஆண்டில் இராயல் காமன் வெல்த் சொசைட்டியால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2-வது பரிசு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னை மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி பி. சுதாவுக்குத் தமிழக அரசின் சார்பாக ரூபாய் ஆயிரமும், முதல்வரின் சார்பாக ரூபாய் பத்தாயிரமும் பரிசாக மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டது. 49 நாடுகளைச் சார்ந்த சுமார் 1,500 மாணவ மாணவியர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1990-91-ஆம் ஆண்டிற்கான 'நல்லாசிரியர் விருது' 228 ஆசிரியர்களுக்கும், சிறந்த மாணவ, மாணவியர்களுக்கான பரிசு 194 பள்ளிக் குழந்தைகளுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது.

விழாவிற்கு வந்திருந்தவர்களை தமிழகக் கல்வித்துறைச் செயலர் திரு ஜே.ஆர். இராமநாதன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேச, பள்ளிக் கல்வி இயக்குநர் திரு தி.நாச்சிமுத்து அவர்கள் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜெ. சந்திரன்.



★ நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத் தன்மையும், மனிதனின் பிறப்புரிமையான தன் மானத்திற்கு இயற்கைத் தடைகள்.

# மாணவர் சமுதாயம் பயனுள்ள சமுதாயமாக உருவாக வேண்டும்!

## மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை.

**பா**சத்திற்குரிய தமிழக மாணவச் செல்வங்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் நலன் கருதி சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

அண்மைக் காலமாகக் கல்லூரி மாணவர்கள் தங்களுடைய பலவேறு கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரும் வகையில் பொதுச் சொத்துக்களுக்கு, குறிப்பாக அரசுப் பேருந்துகளுக்குச் சேதம் விளைவிப்பது அதிகரித்து வருகிறது. தாங்கள் படிக்கும் கல்லூரியில் குடிநீர் வசதி இல்லையென்றாலும், தங்கும் விடுதியில் போதிய வசதிகள் இல்லை என்றாலும், கல்லூரி மாணவர் சங்கத் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறவில்லை என்றாலும், தாங்கள் பேருந்து நிலையத்தை அடைவதற்குச் சில நிமிடங்கள் முன்பாகப் பேருந்து புறப்பட்டுவிட்டது என்றாலும், நடு ரோட்டில் மாணவர்கள் கை அசைக்கும்போது பேருந்து நிறுத்தப்படவில்லை என்றாலும், கல்லூரியையும், நெடுஞ்சாலையையும் இணைக்கும் சாலை மராமத்து செய்யப்படவில்லை என்றாலும் - இதுபோன்ற தங்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு இக்கால கல்லூரி மாணவர்கள் காணும் ஒரே தீர்வு, அரசாங்கம் இயக்குகின்ற பொதுச் சொத்துக்களான பேருந்துகள் மீது கல் எறிவதும், சேதப்படுத்துவதும், பேருந்துகளின் ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் காயப்படுத்துவதும் தான்.

இது சரியா? நியாயமா? என்று நம் மாணவர்கள் சற்று நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதற்கெடுத்தாலும் அரசுப் பேருந்துகள் மீது கல்லெறிவதுதான் அவர்களது

### வன்முறை தேவைதானா?
### கல்லூரி மாணவர்கள்
### சிந்தித்துப் பார்க்க வேண்டும்

பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியா? நியாயமான கோரிக்கையாக இருந்தாலும், கோரிக்கையை எடுத்துரைக்க வேறு வழிகள் இல்லையா? இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற கடந்த இரண்டு மாதக் காலத்தில் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் தமிழகத்தின் ஏதோ ஒரு பகுதியில் கல்லூரி மாணவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக அரசுப் பேருந்துகளைச் சேதப்படுத்துவதாகத் தகவல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. காவல் துறையால் முதலமைச்சருக்கு அனுப்பப்படும் தினசரி அறிக்கையில், நாள்தோறும் இத்தகைய நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏற்கெனவே நடந்த இத்தகைய சம்பவங்கள் பற்றி நான் குறிப்பிடவில்லை. இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த இரண்டு மாத காலமாக நடைபெற்றுள்ள வன்முறை நிகழ்ச்சிகளை மட்டுமே குறிப்பிடுகின்றேன்.

இரண்டு மாத காலமாக நடைபெற்று வரும் இந்த வன்முறைச் சம்பவங்களுக்கெல்லாம் உச்சகட்ட நிகழ்ச்சியாக, திண்டிவனம் கோவிந்தசாமி அரசு கல்லூரி மாணவர்கள் கடந்த 26-ந் தேதி அன்று நடத்திய சாலை மறியல் போராட்டம் அமைந்துள்ளது. அக்கல்லூரியைச் சார்ந்த 300 மாணவர்கள் 30 அரசுப் பேருந்துகளைக் கல்லெறிந்து சேதப்படுத்தி, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களைக் காயப்படுத்தி, காலை முதல் மாலை வரை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்து அரசுக்குப் பெருத்த இழப்பையும், பொது மக்களுக்கு மிகுந்த சிரமத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை எல்லாம் எதற்காக? தங்கள் கல்லூரிக்கும் நெடுஞ்சாலைக்கும் இடையே உள்ள இணைப்புச் சாலை அவர்கள் எண்ணுகிற அளவிற்கு மராமத்து செய்யப்படவில்லை என்பதற்காகத்தான்.

சில நாட்களுக்கு முன்பு, சென்னை நகரில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்தின் படிகளில் பயணம் செய்த் கல்லூரி மாணவர் ஒருவர் தவறி விழுந்து காயம் அடைந்தார் என்பதற்காக, நந்தனம் அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் அப்பேருந்தைச் சேதப்படுத்தி ஓட்டுநரையும் காயப்படுத்தி உள்ளனர். இந்த வன்முறை எதற்காக? பேருந்தின் படிகளில் பயணம் செய்தது தவறில்லையா? தானே தவறி விழுந்த மாணவரின் செயலுக்காக, தவறேதும் செய்யாத அப்பாவி ஓட்டுநர், மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந்த வன்முறை தேவைதானா?

### மாணவர்கள் தங்கள்
### பொறுப்புகளை உணர்ந்து,
### ஆக்கப்பூர்வமான செயல்களில்
### ஈடுபட வேண்டும்

கடந்த 28.8.91 அன்று காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சுமார் 500 பேர் தங்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு சாலையில் கூடி அவ்வழியே சென்ற அரசுப் பேருந்துகளை எல்லாம் நிறுத்தி இனிமேல் அனைத்துப் பேருந்துகளும் அவர்கள் கல்லூரியின் முன் நிறுத்தித்தான் செல்ல வேண்டுமென்று ஓட்டுநர்களை அச்சுறுத்தியுள்ளனர். பேருந்துகளை எந்த இடங்களில் நிறுத்த வேண்டுமென்று முடிவு செய்வது ஓட்டுநர்களா? அவர்கள் தன்னிச்சையாகப் பேருந்துகளை நிறுத்தும் இடங்களை முடிவு செய்ய முடியுமா?

கல்லூரி மாணவர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். தங்களின் கோரிக்கைகளை முன் வைக்க வேறு வழிகள் இல்லையா? மாணவர்கள் தங்களின் பலதரப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்த ஜனநாயகத்தில் அங்கீகரிக்கப்பட்ட வழிகள் பல உள்ளனவே! பேரணி நடத்தலாம், கூட்டம் போட்டுப் பேசலாம்; உண்ணாவிரதம்கூட இருக்கலாம். இவை எல்லாம் முறையாகச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்ற பின்னும், அடுத்த கட்டமாக அவசியமிருப்பின் என்னை நேரில் சந்தித்து விவரங்களைத் தெரிவித்த பின்னும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில், போராட்டங்களை மேற்கொள்வதே நியாயமாகும்.

இப்படி அமைதியான எத்தனையோ வழிகள் இருக்க, அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு நேரிடையாக வன்முறையில் கல்லூரி மாணவர்கள் இறங்கி அரசுப் பேருந்துகளைக் குறிவைத்துத் தாக்குவது கண்டிக்கத்தக்கதாகும். மேலும் தேவையற்ற இதுபோன்ற வன்முறையில் ஈடுபடுவதால் பொதுமக்களுக்குப் பெரும் தொல்லையினை விளைவித்து, அவர்களுக்கு மாணவர்கள் மீது வெறுப்பு உண்டாக வழிவகுக்கிறது. அரசாங்கத்திற்கும் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்படுகிறது. இப்படி ஒரு வன்முறைத் தாக்குதல் நடைபெற்றால் உடனே காவல்துறையினர் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதிலும் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்வதிலும் இறங்கி விடுகிறார்கள்.

பத்திரிகைகளிலும் வன்முறைத் தாக்குதலுக்கும், பொதுச் சொத்துச் சேதத்திற்கும் தான் முன்னுரிமை தரப்பட்டு விளம்பரப்படுத்தப்படுகிறது. இவற்றிற்கிடையில் மாணவர்கள் எந்தக் கோரிக்கைகளை முன் வைத்து இந்த வன்முறைத் தாக்குதலில் ஈடுபட்டார்களோ, அந்தக் கோரிக்கைகள் வெளியே தெரிய வராமலேயே அமுங்கிப் போய்விடுகின்றன. கல்லூரி மாணவர்கள் என்றாலே எந்த நேரத்திலும் வன்முறையில் ஈடுபடக்கூடியவர்கள் என்ற ஒரு வெறுப்புணர்வு பொது மக்களிடையே உருவாகி வருகின்றது. இதனால் யாருக்கும் இலாபம் இல்லை, எல்லோருக்கும் நட்டம் தான்!

இன்று கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தான் எதிர் காலத்தில் நம் நாட்டை ஆளப் போகிறவர்கள். இவர்கள்தான் நாளை எல்லா முக்கிய பொறுப்புகளையும் வகித்து நாட்டை வழி நடத்திச் செல்ல வேண்டியவர்கள். இவர்களை நம்பித்தான் எதிர்கால இந்தியாவின் உயர்வே இருக்கின்றது. ஒரு பொருளை அழிப்பது என்பது மிகவும் எளிது. ஆனால், ஒரு பொருளை உருவாக்குவது என்பது மிக மிகக் கடினம். எனவே, மாணவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடவேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்துவது தவறல்ல, குற்றமும் அல்ல; இதற்கு ஜனநாயக முறைப்படி பல அமைதியான வழிகள் இருக்கின்றன. அந்த அமைதியான வழிகளைக் கடைப்பிடித்தலே சிறந்ததாகும். எனவே, மாணவர்கள் அமைதி வழியைக் கடைப்பிடிக்க வேண்டும். பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும். பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்க பழகிக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கும் இந்த நேரத்தில், இத்தகைய வன்முறைச் சம்பவங்கள் இனி மீண்டும் தொடர்ந்து நடைபெற்றால், அரசு அதனைப் பொறுத்துக் கொள்ளாது என்று எச்சரிக்க விரும்புகின்றேன்.

இதுவரை நடைபெற்ற இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் இளம் வயதினைக் கருதி அரசு அவர்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்காமல் சற்று மென்மையாக இருந்து வந்துள்ளது. மாணவர்கள் விஷயத்தில் எங்கள் அரசு சற்று அதிக அளவு பரிவு காட்டி வந்துள்ளது. ஆனால், இனியும் அமைதி வழியைக் கடைப்பிடிக்

காமல் தொட்டதெற்கெல்லாம் அரசுப் பேருந்துகள் மீது கல்லெறிவதும், போக்குவரத்துக் கழகப் பணியாளர்களைத் தாக்குவதும் போன்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தால் இனிமேல் மென்மை, பரிவு போன்ற போக்கினை அரசிடமிருந்து மாணவர்கள் எதிர்பார்க்க முடியாது. இத்தகைய வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபடுபவர்கள் மீது அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதோடு இனியும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க எத்தகைய கண்டிப்பான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை இந்த அரசு செய்தே தீரும்.

★ பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும் உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து, மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதைகளையோ, சாத்திரங்களையோ, இலக்கியங்களையோ, காணவும், கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.



நம் இளம் கல்லூரி மாணவர்கள் பொதுச் சொத்துக்கள், தங்களுக்கும் சொந்தம் என்ற உண்மையை உணர்ந்து, போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும் குடும்பம் உள்ளது, அவர்களை நம்பிப் பலர் உள்ளனர், அவர்களது குழந்தைகளும் கல்லூரியில் படிக்கின்றனர் என்பதை நினைவுகூர்ந்து நடந்து கொள்ளவேண்டும். போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களும், நடத்துநர்களும் உங்களைப் போன்ற ஒருவரே, அவர்களுக்கும் குடும்பம், வீடு, உறவினர்கள் என்று உண்டு. அவர்களது பொதுப் பணிக்குக் குந்தகம் விளைவித்துக்காயப்படுத்துவது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல, அனுமதிக்கக்கூடியதுமல்ல. அவர்களுக்கு முழுப் பாதுகாப்புக் கொடுப்பது அரசின் கடமையாகும். இந்நிலையில் பொதுமக்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படச் செய்து, பொதுப் பணியாளர்களைத் தாக்கும் வன்முறைச் செயல்களை அரசு இனி ஒருபோதும் அனுமதிக்காது. வளமான தமிழ்நாட்டை உருவாக்கும் பணியில் கல்லூரி மாணவர்கள் எங்களுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

கோப தாபங்களுக்கு இடமளிக்காது சிறிய காரணங்களுக்காக மாபெரும் இழப்பை ஏற்படுத்தும் வன்முறைச் செயல்களில் ஈடுபடாது மாணவர்கள் ஆக்கபூர்வமான, அமைதி வழியில் வீரநடை போட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். பொறுப்புள்ள நாட்டுப் பற்றுமிக்க குடிமகனாகத் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தவும் விழைகிறேன். அரசிற்கு மாணவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் மனிதாபிமானத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விரைவில் நல்ல முடிவுகள் எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

எனது இந்த அன்பு வேண்டுகோளுக்கு நீங்கள் செவிசாய்ப்பதன் மூலம், மிகுந்த நம்பிக்கையோடு உங்களைக் கல்லூரிக்கு அனுப்பியுள்ள இலட்சக்கணக்கான பெற்றோர்களின் வயிற்றில் பால் வார்க்கிறீர்கள். உங்களுக்குக் கல்விக்கண் திறக்கவும், எதிர்கால வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரவும் அயராது உழைக்கும் எங்கள் அரசின் ஊக்கத்திற்குத் துணை புரிகிறீர்கள் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களின் இம்மாபெரும் அமைதி வழி மாற்றத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். தங்களின் நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் இந்த அவசிய மாற்றத்தை மாணவர்களின் மனதில் பதியச் செய்ய உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவச சமுதாயம் இன்று முதல் இனியவர்களையும், நல்லவர்களையும், பண்பாளர்களையும் கொண்டதாக உள்ளது என்ற பெயர் எடுக்க வேண்டும். இதற்கு அனைத்து முயற்சிகளையும் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் மேற்கொள்வோம் என்று உறுதி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இச்சீரிய சமுதாய சீர்திருத்த முயற்சியில் நிச்சயம் நாம் வெற்றியடைவோம் என்று நம்புகிறேன். நம் மாணவர் சமுதாயத்திற்கு நல்ல ஒளிமயமான எதிர்காலம் உருவாக வேண்டும் என்ற எனது விருப்பத்தை இந்தத் தருணத்தில் தெரிவித்து அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

***— கல்லூரி மாணவர்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்னைத் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை (2.9.91)***

நம் மாணவர் சமுதாயத்திற்கு
நல்ல .ஒளிமயமான
எதிர்காலம் உருவாக வேண்டும்
என்பது எனது விருப்பம்.





# தமிழ்நாடு அரசின் 1991-92-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே !

'' அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு ''.

உலகம் போற்றும் பெரும்புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார், '' அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை, ஊக்கமுடைமை ஆகிய இந்த நான்கு பண்புகளும் குறைவுபடாமல் இருத்தலே ஆள்வோருக்கு இயல்பாகும் '' என வழங்கியுள்ள இந்த அறிவுரைகளைப் பின்பற்றி இயங்கும் இந்த அரசின் சார்பாக, 1990-91ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1991-92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் நான் இந்த அவை முன் வைக்க முற்படுகிறேன்.

2. மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது, இந்த நிதியாண்டின் முதல் ஆறு திங்கள்களுக்குச் செலவு செய்ய' நாடாளுமன்றத்தில் 'உடனடிச் செலவுக்கான மானிய முன் அனுமதி' பெறப்பட்டது என்பதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவுகூரலாம். எஞ்சிய ஆறு திங்கள்களுக்கான மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு இந்த அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

3. இந்தியக் குடியரசின் வரலாற்றிலேயே இதுவரை காணாத அளவுக்குப் பெரும் வெற்றியைப் பெற்று, புரட்சித்தலைவி செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் இந்த ஆட்சி அண்மையில்தான் பதவி ஏற்றது. இத்தேர்தல்கள், தமிழ் நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்திலும், நமது ஆட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் அசைக்க முடியாத முழு நம்பிக்கையைக் கொண்டுள்ளனர் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றன.

4. வரவு-செலவுத் திட்டத்தை அவை முன் வைப்பதற்குக் குறுகிய கால அளவே நேரம் கிடைத்த நிலையிலும், இவ்வரசு, தற்போது நடைமுறையிலுள்ள அனைத்துத் திட்டங்களையும் விரிவான முறையில் ஆய்வு செய்து, புதிய திட்டங்கள் பலவற்றை வகுத்துள்ளது. இம்மாநிலத்தில் நிலைத்த, நீடித்த வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முயற்சிகளை மேற்கொள்ளும் அதே சமயத்தில், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், ஆகியோரின் நலன்களை உடனடியாகப் பாதுகாத்து மேம்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

5. மேலும், நாடளாவிய வகையில், இன்று நிலவி வரும் பொருளாதார நிலையைக் குறித்த குறிப்புக்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகக் கடுமையான பொருளாதாரச் சிக்கல்கள் பலவற்றையும் உறுப்பினர்கள் நன்கு அறிவர். விலைவாசிகள் மிகப் பெரிய அளவில் உயர்ந்துள்ளன. மேலும் படிப்படியாக

★ ஆதாயம் இல்லாத கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத் தறிகளை நிறுவும் புதிய திட்டம். இதன்கீழ் 10 ஆண்டுகளில் 75,000 கைத்தறிகள் விசைத் தறிகளாக மாற்றப்படும்.

★ 30,000 கைத்தறிகளை ரூபாய் 42.3 கோடி செலவில் நவீனப்படுத்தும் புதிய திட்டம்.

★ கைத்தறித் துணிக்கான தள்ளுபடி முன் எப்போதும் இல்லாத அளவில் ரூபாய் 42 கோடிக்கு அதிகரிக்கப்படும்.

உயருகிற நிலைமையும் உருவாகியுள்ளது. 1990-ல் தொடங்கப்பட்டிருக்க வேண்டிய எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம், தொடங்கப்படாமல் காலந் தாழ்த்தப்பட்டுள்ளதால், வளர்ச்சிப் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டுப் பின்னடைந்துள்ளன. பெருமளவிலான அயல் நாட்டுக் கடனும், குறைந்த அளவிலான அந்நியச் செலாவணி கையிருப்புத் தொகை நெருக்கடியும், உலகில் நம் நாட்டின் பொருளாதார நம்பகத்தன்மையை, மிகவும் தாழ்த்தி விட்டன என்பது தெளிவு. நாட்டின் பொருளாதார நிருவாகம் குறித்த அதிகாரங்கள் பலவும், மத்திய அரசின் பொறுப்பில் உள்ளன என்றாலும், மாநில அரசுகளுக்கு அவற்றைப் பொறுத்து மிகுந்த அக்கறை ஏற்பட நியாயம் உள்ளது. எனவேதான், இந்தியாவைப் பாதுகாப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் மத்தியக் கூட்டாட்சியினிடத்திலும், மக்களை வாழ வைப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடத்திலும் அமைய வேண்டும் என்பதை இந்த ஆட்சி வலியுறுத்தி வருகிறது. பொருளாதார நிலையை முழு அளவில் சீரமைப்பதற்கு மத்திய அரசு எடுக்கின்ற நியாயமான முயற்சிகளுக்கு இந்த அரசு எப்பொழுதும் முழு ஒத்துழைப்பையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா வழியில், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். எடுத்துரைத்துள்ள ''கட்டுண்டு வாழோம், பிரிவினை நாடோம், சமநிலையில் இணைவோம்'' என்பதே இந்த ஆட்சியின் குறிக்கோளாக இருந்து வருகிறது. இக்கோட்பாட்டினைப் பின்பற்றி, நாட்டுச் சீரமைப்புப் பணியில் மாநிலங்கள் தங்களை முழு அளவில் ஈடுபடுத்திக் கொள்ள இயலும் வகையில், விரைவில் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

6. மத்திய அரசு ஏற்றுக் கொண்டு செயல்படுத்தியுள்ள ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் தமிழ் நாட்டிற்கு மன நிறைவளிப்பதாக இல்லை. ஏழாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், அடிப்படை ஆயத் தீர்வைகளில் மாநிலங்களுக்கு 40 சதவீதம், பற்றாக்குறை மாநிலங்களுக்கு 5 சதவீதம், ஆக மாநிலங்கள் அனைத்திற்கும் மொத்தம் 45 சதவீதம் வழங்கப்பட்டது. ஒன்பதாம் நிதிக்குழு, மாநிலங்களின் பங்கை 40 சதவீதம் என்பதிலிருந்து 37.575 சதவீதமாகக் குறைத்தும், பற்றாக்குறை மாநிலங்களின் பங்கை 7.425 சதவீதம் ஆக அதிகரித்தும், மாநிலங்களுக்குரிய மொத்தப் பங்கு 45 சதவீதம் ஆகத் தொடர்ந்து இருக்குமாறு பரிந்துரைத்துள்ளது. இக்குறைப்பானது, மாநிலங்களின் வருவாயின் முக்கிய வாயில்களில் ஒன்றாகத் திகழக்கூடிய அடிப்படை ஆயத் தீர்வை வருவாயில், மாநிலங்களுக்கான பங்கின் அளவைப் பெரிதும் குறைத்து விட்டது.

7. திட்ட வருவாய் மானியம் குறித்த ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள், தமிழ் நாட்டிற்கு மனநிறைவளிப்பதாக அமையவில்லை என்பது மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 1990–95ஆம் ஆண்டுக் கால அளவிற்கு, திட்ட வருவாய் மானியங்களாக ரூபாய் 9,000 கோடி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ் நாட்டிற்கு வெறும் ரூபாய் 43.79 கோடி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. உபரிகள், பற்றாக்குறை ஆகியவை குறித்து ஒன்பதாம் நிதிக் குழு எடுத்துக் காட்டியுள்ள கணக்கீடுகளும், திட்ட வருவாய்க் கூறுக்கான அதன் கணிப்பும் முழுவதுமாகப் பிழைபட்டுள்ளன என்பது இப்போது தெரிய வந்துள்ளது. கடந்த ஆண்டு ஏற்பட்ட விலை உயர்வு காரணமாக இது மேலும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஆகையால், மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளதான ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளை, தேசிய வளர்ச்சிக் குழு விரிவாக மறு ஆய்வு செய்ய வேண்டுமென இந்த அரசு வலியுறுத்த எண்ணியுள்ளது. குறிப்பாக, அடிப்படை ஆயத்தீர்வையில் மாநிலங்களுக்கான பங்கை 45 சதவீதத்திலிருந்து 55 சதவீதமாக உயர்த்த வேண்டுமெனவும், இவ்வாறு உயர்த்தப்பட்ட பங்கான 55 சதவீதத்தில், 7.5 சதவீதத்தைப் பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டுமெனவும் எஞ்சிய 47.5 சதவீதத்தை அனைத்து மாநிலங்களுக்கும் ஒதுக்கவேண்டுமெனவும் இந்த அரசு கேட்கும். திட்ட வருவாய் மானியங்களைப் புதிதாகக் கணக்கிட வேண்டும்; அல்லது, புதிய சம பங்கீட்டுக் கோட்பாட்டின்படி ஒதுக்கப்படவேண்டும். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் விரைவில் கூட்டப்படுமென நம்புகிறோம். அவ்வாறு கூட்டப்படும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தின் முன் இந்த வேண்டுகோள்கள் எடுத்து வைக்கப்படும்.

8. ''காட்கில் விதிமுறை'' என்பது மாநிலத் திட்டங்களுக்கு மத்திய நிதியுதவி கிடைப்பதற்கு வழி வகை செய்யும் ஒரு வாய்ப்பாடாகும். 1990 அக்டோபரில், மத்தியில் அப்போதிருந்த அரசு, திருத்தப்பட்ட காட்கில் விதி முறையில் வேக வேகமாகச் சில மாற்றங்களைச் செய்தது. இந்த மாற்றங்கள் தமிழ் நாட்டைப் பெரிதும் பாதித்துள்ளன. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். இந்தப் பிரச்சினை முழுவதையும் தேசிய வளர்ச்சிக் குழு மீண்டும் புதிதாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதே நமது விருப்பம். தமிழ் நாட்டின் சராசரி நபர்வாரி வருமானம் ஏறத்தாழ தேசிய சராசரி நபர்வாரி வருமானத்தின் அளவிற்கு ஒப்ப உள்ளது. எனவே, மத்திய நிதி உதவி ஒதுக்கீட்டில் தமிழ் நாட்டிற்குத் தனிப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது இன்றியமையாததாக இருந்து வருகிறது.

9. மைய-மாநில நிதி உறவுகள், கூட்டாட்சி அமைப்பில் ஒரு முக்கியப் பகுதியாக விளங்குகிறது. மைய-மாநில நிதி உறவுகள் குறித்துச் சர்க்காரியா கமிஷன் செய்துள்ள பரிவுரைகளைப் பற்றி உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நாங்கள் கேட்டுக் கொண்டவாறு கூட்டப்படவிருக்கும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், இந்தப் பரிவுரைகள் விரிவாகப் பரிசீலிக்கப்படுவதை நாங்கள் வரவேற்போம். மிகவும் அவசரத் தன்மை வாய்ந்த இரண்டு பிரச்சினைகள் பற்றி மட்டும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.



சரக்கு ஒப்படை வரி விதிப்பது தொடர்பாகப் பரிசீலிப்பதற்காக, மத்திய அரசு பலமுறை மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டியுள்ளது. இக்கூட்டங்கள் அனைத்திலும் இந்த வரி விதிக்கப்பட வேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வரியை விதிப்பதற்கு விரைவில் சட்ட முன் வடிவு ஒன்றைக் கொண்டு வருமாறு நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். இரண்டாவது பிரச்சினை, மாநில அரசுத் துறை நிறுவனங்களும், வாரியங்களும் பொது மக்கள், வங்கிகள், ஆகியோரிடமிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவது தொடர்பானதாகும். மத்திய அரசுத் துறை நிறுவனங்களைப் போல, மாநில அரசுத் துறை நிறுவனங்கள் இவ்வாறு நிதி திரட்டுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பது நல்வாய்ப்பற்ற நிலைமையாகும். கடனீட்டுப் பத்திரங்கள் மூலம் நிதி திரட்ட மாநில அரசுத் துறை நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டால், நாம் விரைவான வளர்ச்சியை அடைய முடியும் என்பது எங்களுடைய கருத்தாகும். இதுகுறித்து நான் மத்திய நிதி அமைச்சருக்கு எழுதியுள்ளேன் இது, விரைவில் பரிசீலிக்கப்படும் என நான் நம்புகிறேன்.

### எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

10. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் 1990 ஏப்ரல் 1ஆம் நாளிலிருந்து தொடங்குவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி, கடந்த ஆண்டு ஏற்பட்ட விலைவாசி உயர்வு ஆகியவற்றின் காரணமாக எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்க இயலவில்லை. அது தற்போது 1–4–1992 முதல்தான் தொடங்கும் என்றும், அது 1992ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளைக் கொண்டதாக இருக்கும் என்றும் மத்திய திட்டக் குழு இப்பொழுது தெரிவித்துள்ளது. இந்த மாற்றத்தை இந்த அரசு உள்ளத்தில் கொண்டு, தமிழ் நாட்டின் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை, சிறந்த வல்லுநர்களைக் கொண்டதாகத் திருத்தியமைக்கப் பெற்ற மாநிலத் திட்டக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. நடப்பு நிதி ஆதார எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில், 1992-97-க்குரிய எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மொத்தம் ரூபாய் 9,000 கோடியிலிருந்து ரூபாய் 9,500 கோடி வரை திட்ட ஒதுக்கீட்டுக்கு வகை செய்ய வேண்டி வரும். இது தொடக்க மதிப்பீடுதான். அதிக திட்ட ஒதுக்கீட்டைப் பெறும் பொருட்டு, நிதி ஆதார அடிப்படை குறித்து, நாம் விரிவாக ஆய்வு செய்ய வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்.

### நிதி நிலை

11. மாநிலத்தை எதிர் நோக்கியுள்ள தாங்கவொண்ணாத நிதி நெருக்கடியைப்பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள் என்று கருதுகிறேன். இந்த அரசு பதவி ஏற்றபோது எதிர்கொண்ட மிக மோசமான நிதி நிலையைப் பற்றி இந்த அவைக்குத் தெரிவிப்பது எனது முக்கிய கடமையாகும். 1990-91ஆம் நிதி ஆண்டு, மிகக் கடுமையான பற்றாக்குறையுடன் முடிவடைந்தது. நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள், இந்த ஆண்டில் ஏற்படும் பற்றாக்குறையை ஏற்கெனவே காட்டின. அதற்குப் பின்னர் பல புதிய செலவுப் பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி தவணைத் தொகை கொடுப்பது இரண்டு மடங்குக்கு மேல் பெருகி விட்டது. பொது விநியோக ஏற்பாட்டின் கீழ் அரிசி வழங்குவதற்கான உதவித் தொகை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட விவசாய-ஊரகக் கடன் நிவாரணத் திட்டத்தின்படி, அதற்குச் செலவிடும் தொகையில் பாதியை 3 ஆண்டுத் தவணைகளில் மாநில அரசு திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

12. இந்த அரசு பதவி ஏற்றவுடன், மலிவு விலை மதுக் கடைகள் அனைத்தையும் மூட ஆணையிட்டுள்ளது. இதன் மூலம், ''தமிழ் நாட்டின் தாய்மார்களின் துயரைத் துடைத்து இலட்சக் கணக்கான இல்லங்களில் ஒளியேற்றுவோம்'' என்று மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளது. இதனால், 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 322 கோடி அளவிற்கு மேலும் வருவாய் இழப்பு ஏற்படும் என்ற நிலையிலும், நாங்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை உறுதியாக நிறைவேற்றும் வகையில், இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

13. தமிழ் நாடு மின்வாரியம், பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நிலைமை மிகவும் சீர்கேடடைந்துள்ளது. அவற்றைப் போல, தமிழ் நாடு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் ஏனைய பல பொதுத் துறை நிறுவனங்களின் நிதி நிலைமையும் கணிசமான அளவிற்குச் சீர்கெட்டுள்ளது. இதனால், இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

14. இந்த நிலைமைகளையெல்லாம் சீர்செய்தாக வேண்டும். கடும் நிதி நெருக்கடி எழுந்துள்ள நிலையிலும், திட்டச் சாதனை பாதிக்கப்படாமலிருக்க இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஆய்வு செய்து தங்களது மேலான கருத்துக்களை நல்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

### ஆண்டுத் திட்டம்

15. திட்டமிட்ட வளர்ச்சிக்கு உயரிய முன்னுரிமை கொடுப்பதென்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். 1990-91-ல் தமிழ் நாட்டில் நபர்வாரி திட்ட ஒதுக்கீடு தேசிய சராசரி நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டைவிட மிகவும் குறைவாகவே இருந்தது. வரலாறு காணாத அளவுக்கு நிதி ஆதார நெருக்கடியை நாம் எதிர் நோக்கியுள்ள போதிலும், 1991-92-ல்

1991-92-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 1600.49 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1990-91-ஆம் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 1488.58 கோடியை விட கணிசமாக உயர்ந்த அளவாகும்.

★

ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கான சிறப்புத் தன்னிறைவுத் திட்டம், ரூபாய் 1[illegible]2 கோடி செலவில் 1991-92-இல் தொடங்கப்படும்.

ரூபாய் 1,600.49 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்குச் செலவு செய்ய நாம் முடிவு செய்துள்ளோம். மாநிலத்தில் உள்ள வளர்ச்சி நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்யும் வகையில் இது அமைந்துள்ளது. எங்களது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, திட்டங்களுக்கும் திட்டப் பணிகளுக்கும் முறைப்படி தொகைகளை ஒதுக்க நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இந்த மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வதே எங்கள் நோக்கமாகும். இனி, நான் இவ்வரசின் திட்டங்களைப்பற்றியும் திட்டப் பணிகளைப்பற்றியும் எடுத்துக்கூற முற்படுகிறேன்.




காவல் துறை

**16.** இம்மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்காவிடில், வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்து மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் எவ்விதப் பயனையும் அளிக்காமற் போகும். திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு சட்டம் — ஒழுங்கைப் பராமரிப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் நடவடிக்கைகள், விரும்பத்தகாத வகையில் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதையும், அதனால் நம் மக்களின் வாழ்க்கையில் குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டுள்ளதையும், இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். சட்டம் - ஒழுங்கைச் சீரமைத்து, மக்கள் அச்சமின்றி வாழ இயலும் வகையில், அமைதியை நிலை நாட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியான, தெளிவான, திண்மையான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். இம்மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கக் காவல் துறையினர் மிகச் சிறந்த முறையில் பணிபுரிய இயலும் வகையிலும், காவல் துறையை நவீனப்படுத்தி, அவர்கள் உள்ளம் தளராமல் ஊக்கத்துடன் பணிபுரியச் செய்யும் முறையிலும், அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் எடுப்போம். காவல் துறைக்கு, 1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 188.68 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாண்டில் நாங்கள் ரூபாய் 241.53 கோடி மொத்த ஒதுக்கீடு செய்துள்ளோம். காவற்படையை நவீனமயமாக்குவதற்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 80.45 கோடி செலவில் நவீனமயமாக்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்குமாறு நாட்டின் பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்கள்.

வேளாண்மை

**17.** முதன்மைத் துறையாக அமைந்துள்ள வேளாண்மையும், அதனைச் சார்ந்த பணிகளும் மாநிலத்தின் உற்பத்தியில் 21 சதவீதம் ஆகும். சென்ற ஆண்டு உணவு தானியங்களின் மொத்த உற்பத்தி திட்ட இலக்கான 80.50 இலட்சம் மெட்ரிக் டன்னைவிட குறைவாக 75.44 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் இருந்தது. இதில் அரிசி உற்பத்திக்கு இலக்கு 60 இலட்சம் மெட்ரிக் டன். ஆனால் உற்பத்தி 57 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே. வேளாண்மையில் தீவிர வளர்ச்சியை ஏற்படுத்த நாம் புதிய பல திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

**18.** எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தவாறு நிரந்தரமான தரிசு, கரம்பு நிலங்களில் சாகுபடி செய்வதற்குரிய புதிய திட்டமொன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப் படவிருக்கிறது. இத்திட்டம், தருமபுரி, மதுரை, திண்டுக்கல்-அண்ணா, இராமநாதபுரம், காமராசர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய 8 மாவட்டங் களில் மேற்கொள்ளப்படும். ஓராண்டு கால அளவில் ரூபாய் 1.50 கோடி செலவில் 25,000 ஏக்கர் பரப் புடைய இத்தகைய தரிசு நிலங்கள் விவசாயத்துக்குக் கொண்டு வரப்படும். இந்தப் புதிய திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூபாய் 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.** வேளாண்மை விரிவாக்கப் பணிகளை சீர்திருத்தி அமைத்துள்ளோம். விரிவாக்கப் பணியாளர் குழு பரந்த குறிக்கோளைக் கொண்டதாகவும், பல்வகைப் பிரச்சினைகளை சமாளிக்க வல்ல தாகவும் இருக்கும் வகையில், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும் நமது நோக்கமாகும். விவசாயி களுக்குத் தரமான விதைகளை வழங்குவதற்காக, மொத்தம் ரூபாய் 1.81 கோடி மூலதனச் செலவில் அரசு விதைப் பண்ணைகள் வலுப்படுத்தப்படும். கடலூரிலுள்ள நிலையத்தில் நுண்ணுயிர் வளர்ப்பு வசதிகள், 10 இலட்சம் பாக்கட்டுகளிலிருந்து 15 இலட்சம் பாக்கட்டுகளாக விரிவுபடுத்தப்பட இயலும் வகையில் வலுப்படுத்தப்படும்.

**20.** அரிசி உற்பத்தி மேம்பாடு குறித்த ஒருங்கிணைந்த திட்டம் ஏற்கெனவே செயற்படுத்தப் பட்டு வரும் பத்து மாவட்டங்களுடன் மேலும் மூன்று மாவட்டங்களில், அதாவது, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். 1991-92ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 5.33 கோடியாகும்.

**21.** புன்செய் நில வேளாண்மையில் சிறப்புக் கவனம் செலுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். மானாவாரிப் பகுதிகளுக்கான தேசிய நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 14 மாவட்டங்களிலுள்ள 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட இருக்கிறது. ரூபாய் 35.61 கோடி செலவிலான இத்திட்டம், 5 ஆண்டுகளில் சுமார் 2,20,000 ஏக்கருக்குப் பயனளிக்கும் வகையில் செயல் படுத்தப்படும். நடப்பாண்டில் ரூபாய் 2.09 கோடி செலவில் சுமார் 50,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

**22.** மேலும், மூன்று மாவட்டங்களுக்கு, அதாவது, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர் மாவட்டங்களுக்கு நீர்வரத்து மேம்பாட்டு விரிவுத் திட்டத்தை நீட்டிப்பதற்காக நாங்கள் 'டேனிடா' உதவியைக் கேட்டுள்ளோம். இப்புதிய திட்டம் நான்காண்டுகளில் ரூபாய் 10.50 கோடி ஒதுக்கீட்டுடன் 45,000 ஏக்கரில் செயல்படுத்தப்படும். அழிந்துபட்ட நிலங்களில் நிலைத்த வேளாண்மை வளர்ச்சியைக் கொண்டுவர இத்திட்டம் பெரு முயற்சியாக அமையும்.

**23.** வேளாண்மை உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டியிருக்கிறது. ''டேனிடா'' உதவியுடன், வேளாண்மையில் பண்ணை மகளிருக்குப் பயிற்சியளிக்கும் பெருந்திட்டமொன்றை நடப்பாண்டில் நடைமுறைப்படுத்துவோம். எட்டாண்டுகளில் ரூபாய் 18 கோடி செலவில் ஒவ்வோர் ஆண்டும் 9,000 மகளிருக்கு மேம்படுத்தப்பட்ட வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் வகையில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உள்ளோம். அதே சமயம், விவசாயிகளுக்கான 12 பயிற்சி மையங்கள் வலுப்படுத்தப்பட்டு, நவீனப் பண்ணை நடவடிக்கைகளில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டங்கள் தொடங்கப்படும்.

**24.** தருமபுரி, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணா மலை-சம்புவராயர், தென்னார்க்காடு, சேலம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூபாய் 50 இலட்சம் செலவில் நடப்பாண்டில் புதிய ஒருங்கிணைந்த எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம் இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்குத் தரமான எண்ணெய் வித்துக்கள் வழங்கப்படும். அத்துடன், பாசன வசதி பெறும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கத் தெளிப்பு நீர்ப்பாசன, சொட்டு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படும்.

**25.** பாசனத்தில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன் படுத்துவதை ஊக்குவிக்க வேண்டியது முக்கியமானதாக அமைந்துள்ளது. சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் குறித்த பழைய திட்டங்கள் நன் முறையில் செயல்படவில்லை. ரூபாய் 40 இலட்சம் செலவில் சொட்டு நீர்ப் பாசனத்தையும் தெளிப்பு நீர்ப் பாசனத்தையும் விளம்பரப்படுத்தும் வகையில் திருத்தப்பட்ட திட்டமொன்றை மேற்கொள்ள நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

**26.** ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டிற் கான திட்டங்களை நாங்கள் விரிவுபடுத்த வுள்ளோம். கடன் வழங்கு ஏற்பாடுகள் வலுப் படுத்தப்படும். தோட்டக்கலை உற்பத்திப் பொருளின் விற்பனையைக் குறிப்பாகப் பதப்படுத்தும் பணி களுக்கு முக்கியத்துவம் தந்து வலுப்படுத்துவது பற்றி நாங்கள் ஆய்வுசெய்து வருகிறோம்.

**27.** விவசாய ஊரகக் கடன் நிவாரணத் திட்டம் குறித்து முந்தைய மத்திய அரசு அறிவித்த தனால் ஏற்பட்ட நிலைமை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். நல்வாய்ப்பற்ற தன்மையால் இத்திட்டம் முறையான ஏற்பாடு களின்றி அறிவிக்கப்பட்டது. கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில், திட்டத்தின் பாதிச் செலவை மூன்றாண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்து மாறு மாநில அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூபாய் 289.43 கோடியாகும். இதுவரை, ரூபாய் 191.29 கோடி மட்டுமே மத்திய அரசு கொடுத்துள்ளது. இன்னும் வர வேண்டிய தொகை ரூபாய் 98.14 கோடியாகும். இந்த அரசு 1991-92-ல் ''நேபார்டு'' நிறுவனத்துக்கு ரூபாய் 37.22 கோடி கொடுக்க வேண்டியுள்ளது. நாங்கள் இப்பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். இத்திட்டத்தின் முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்க வேண்டும் அல்லது திருப்பிச் செலுத்துவதில் கால அவகாசம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளோம். எனவே, இத்தொகைக்கு நாங்கள் நிதியொதுக்க வில்லை. பயிர் விளைச்சல் இல்லாமற் போகும் நிலைமைக்கு ஆளாகிற விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க, உரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதே எங்களது நோக்கமாகும். தற்போதுள்ள பயிர்க் காப்புறுதித் திட்டங்களை நாங்கள் விரிவாக ஆய்வு செய்ய விருக்கிறோம். தற்போதுள்ள நிவாரணத் தொகை களைப் பயன்படுத்துவது பற்றியும் நாங்கள் ஆய்வு செய்யவிருக்கிறோம். உண்மையிலேயே இன்னலுறும் விவசாயிகளுக்கு நிவாரணமளிக்கும் நீண்டகாலத் திட்டம் ஒன்றை, நாங்கள் ''நேபார்டு'' நிறுவனத்திடம் எடுத்துக் கூறக் கருதியுள்ளோம்.



பாசனம்

**28.** தமிழ்நாடு, நில மேற்பரப்பு நீர் முழுவதை யும் பெரும்பாலும் பயன்படுத்தி விட்டது. நாட்டி லுள்ள அனைத்து நதிகளையும் இணைக்கும் தொலை நோக்குத் திட்டத்தின் முதல் கட்டமாக, மகா நதியையும் வைகையாற்றையும் இணைத்து இந்தியத் தீபகற்பப் பேராறுகள் இணைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசிடம் நாங்கள் எடுத்துரைத்துள்ளோம். இதனை, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு தேசியத் திட்டமாகச் சேர்க்க நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**29.** காவிரி நீர்த் தாவாவில் கருநாடக அரசு எடுத்த முடிவினால் ஏற்பட்ட நிலைமை குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். நீதிமன்றத் தீர்ப்பின் மூலமே இத்தாவா தீர்க்கப்பட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**30.** தென்மேற்குப் பருவமழை பரவலாக நன்கு பெய்துள்ளது. இதனால் முக்கியமான நீர்த் தேக்கங் களில் நிலைமை நன்றாக உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் நல்ல விளைச்சல் காண்பது உறுதியாகி யுள்ளது. நிலத்தடி நீர் பெருமளவில் பயன்படுத்தப் படுவதையும், நீர் மட்டம் குறைந்து வருவதையும் கருத்திற் கொண்டு, தமிழ்நாட்டில் நீரைச் சிக்கன மாகப் பயன்படுத்துவது குறித்த விரிவான சட்டம் இயற்றுவதற்கான நிலை தோன்றியுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அரிதாக உள்ள நம்முடைய நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க அனைவரின் ஒருமித்த பொதுக் கருத்து உருவாக வேண்டுமென நாங்கள் விழைகிறோம்.

**31.** நம்முடைய ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான விரிவான புதிய திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 200 கோடி செலவில் 2,500 ஏரிகள் நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக வெளி

உதவியைப் பெற நாங்கள் மத்திய அரசை அணுக உள்ளோம்.

32. தேசிய நீர் நிருவாகத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் ரூபாய் 6.69 கோடி செலவில் 'சேத்தியாத் தோப்பு பாசன நிருவாகத் திட்டம்' மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் 48,665 ஏக்கர் பயன் அடையும். ரூபாய் ஒரு கோடி செலவில் 6,580 ஏக்கர் பயன் அடையும் வகையில், மருத நதி அணைத் திட்டத்தை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்டம், தொழுதூர் பொறிமதகுத் திட்டம், ஆண்யாறு நீர்த் தேக்கத் திட்டம் ஆகியவற்றிற்கு இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்தும் நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம்.

33. ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயத்தின் (EEC) நிதியுதவியுடன் நடைபெற்றுவரும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம்-II, ரூபாய் 15 கோடி நிதி ஆதாரத்தோடு 1991-92 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும். இத்திட்டம் முடிவடையும் போது, மொத்தம் ரூபாய் 55 கோடி செலவில் 61,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பயனடையும்.

34. உலக வங்கியின் நிதியுதவியுடன் அணைக்கட்டுப் பாதுகாப்புத் திட்டமொன்று, 5 ஆண்டுகள் கால அளவில், ரூபாய் 41.85 கோடி செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், பெரியாறு, குடகனாறு, பேச்சிப்பாறை, மணிமுத்தாறு, சாத்தனூர், வீடூர், உப்பாறு, பொன்னியாறு, கோமுகி அணைக்கட்டுகளின் பாதுகாப்பிற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

35. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டத்தில் மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தை இவ்வாண்டு மேற்கொள்ளவிருக்கிறோம்.

36. பெரியாறு-வைகை திட்டத்தின்கீழ், நீர் வரத்து அணைக்கட்டிற்கும் பேரணை பொறி மதகிற்கும் இடையில், இணைப்புக் கால்வாயை அமைக்கும் பணி விரைவு படுத்தப்படும். ரூபாய் 25 கோடி முதலீட்டிலான இத்திட்டப் பணி, 1993 ஏப்ரல் அளவில் முடிக்கப்படும்.

37. இவ்வாண்டில் ரூபாய் 2 கோடி செலவில் புதிய சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். பாசன ஏற்பாடுகளின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான முதலீட்டிற்கு வகைசெய்யும் புதிய திட்டமொன்று தொடங்கப்படும்.

38. பாசன ஆதாரங்களின் பராமரிப்பும், பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பும் மன நிறைவளிப்பதாக இல்லை. அவற்றை நல்ல முறையில் பராமரிக்க அதிக நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. நீர் ஆதாரங்கள் அரிதாக உள்ள இச்சூழ்நிலையில், நீரைப் பயன் படுத்துவோருக்கு உரிய கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும். குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்வதற்கு உழவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் விரிவாக ஆய்வு செய்து, பாசன ஆதாரங்கள் அனைத்தையும் பராமரிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யக் கருதியுள்ளோம்.

காடுகள்

39. தற்போது இருக்கின்ற வனச் செல்வங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன், காடுகளை





விரிவுபடுத்தும் புதிய திட்டங்களையும் நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். குறிப்பாக, சந்தன மரம் கடத்தப்படுவதைத் தடுக்கும் பொருட்டுப் பாதுகாப்புப் பணியை நாங்கள் வலுப்படுத்த உள்ளோம். ரூபாய் 40 இலட்சம் செலவில் நவீன ரகத் துப்பாக்கிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவை வழங்கப்படும். விறகு மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டுத் தற்போது விறகுமரக் கிடங்குகள் நான்கு செயல்பட்டு வருகின்றன. அவற்றுடன், நடப்பாண்டில் புதிதாக மூன்று விறகு மரக் கிடங்குகள் திறக்கப்படும்.

40. தமிழ் நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ரூபாய் 60 கோடி மூலதனச் செலவில் எட்டாண்டுகளில் சுமார் 7,500 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடும் பெரிய அளவிலான புதிய திட்டமொன்றை மேற்கொள்ள உள்ளது. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் 75,000 ஏக்கரில் காகிதக்கூழ் தயாரிக்கப் பயன்படும் உயர்வகை மரங்களை வளர்க்கும் புதிய திட்டமொன்றைச் செயற்படுத்த உள்ளது. இத்திட்டம் ரூபாய் 85 கோடி செலவில் ஆறாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்க் காடு வளர்ப்புப் பணி ரூபாய் 48 கோடி செலவில் ஏழாண்டு காலத்தில் 45,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும். அழிந்து பட்ட காட்டுப் பகுதிகளில் விமானத்திலிருந்து விதைகளைத் தூவும் பணி ரூபாய் 117 இலட்சம் செலவில் 45,000 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்படும். இப்புதிய திட்டங்கள், இம் மாநிலத்திலுள்ள வனப் பகுதிகளை விரிவாக்கும் முயற்சிக்குப் பெரிய அளவில் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வண்டலூரில் உள்ள வன ஆராய்ச்சி நிறுவனம், இப்பெரும் முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் வலுப்படுத்தப்படும்.

41. 'சிடா' (SIDA) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்-II தொடர்ந்து செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் ரூபாய் 19.55 கோடி மூலதனச் செலவில் 41,500 ஏக்கர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்படும். மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் இவற்றின்கீழும், ரூபாய் 4.45 கோடி செலவில் சுமார் 9,500 ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். விவசாயிகள் அவர்களுடைய சொந்த நிலங்களில் மரங்களை வளர்ப்பதற்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

கால்நடைச் செல்வம்

42. கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், கால்நடைகளுக்கு மருத்துவப் பணிகளைச் சிறப்பான முறையில் வழங்கவும் நாங்கள் தனிக் கவனம் செலுத்துவோம். தற்போது உள்ள மொத்தம் 3,063 கால்நடை மருந்தகங்கள் மற்றும் துணை நிலையங்களில், 1,936 நிலையங்களில் மட்டுமே உறைவிந்து செயற்கை இனவிருத்தி வசதிகள் உள்ளன. இதுவரையில் இவ்வசதிகளைப் பெற்றிராத 1,127 நிலையங்களுக்கும் இந்த ஆண்டில் ரூபாய் 1.57 கோடி செலவில் இவ்வசதிகள் செய்து தரப்படும். ஈச்சங்கோட்டை, ஹோசூர் ஆகிய இடங்களில், உறைவிந்து உற்பத்தி செய்யப்படும் வசதிகள், ரூபாய் 7.05 கோடி செலவில் அதிகரிக்கப்படும். மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள உறைவிந்து சேமிப்பு வங்கிகள் மூலமாக உறைவிந்து வழங்கும் ஏற்பாடு உருவாக்கப்படும்.

43. நடப்பாண்டில் புதிதாக இருபது கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும். தற்போதுள்ள 10 கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்படும். கால்நடை மருந்தகங்களுக்கும் கால்நடை மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

44. தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன், ரூபாய் 78.48 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிற பால்பெருக்கத் திட்டம் III-ன் கீழ், சென்னைக்கருகே சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறனுடன் கூடிய புதிய பால் பண்ணை ஏற்படுத்தப்படும். வேலூர், சேலம், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், மதுரை, அம்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பால்பண்ணைகள் விரிவுபடுத்தப்படும். இரண்டு புதிய பால் குளிரவைக்கும் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். தற்போதுள்ள 14 நிலையங்கள் விரிவுபடுத்தப்படும். பால் குளிரவைக்கும் நிலையங்களில் தற்போது கையாளப்படும் பாலின் அளவு நாளொன்றுக்கு 5.87 இலட்சம் லிட்டர் ஆகும். இந்த அளவு 1994 இறுதிக்குள் நாளொன்றுக்கு 28.41 இலட்சம் லிட்டர் பாலாக அதிகரிக்கப்படும். இதனால் 18 இலட்சம் விவசாயிகள் பயனடைவர். பால் உற்பத்தி குறையும் கோடை காலங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்க நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூபாய் 4.90 கோடி செலவில் சிறிய பால் பண்ணை தொடங்கப்படும்.

ரூபாய் 11 கோடி செலவில் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்.
கடலில் மீன் பிடிக்கும்போது இறந்து விடும் மீனவர்களுக்கு வழங்கப்படும் குடும்ப நல நிதியை ரூபாய் 15,000-லிருந்து ரூபாய் 21,000 ஆக உயர்த்துதல்.
உப்பங்கழி மீன் வளர்ப்புப் பண்ணை தொடங்குதல்.

★

[illegible]ச்சாலைகள், வைப்பம்புகள், [illegible] இவற்றைப் பராமரிப்பதற்காக [illegible] நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படும்.

45. சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடார்க்காடு-அம்பேத்கர் மாவட்டங்களில் செம்மறியாடு வளர்ப்புத்திட்டம் தொடரப்படும். புதுக்கோட்டைப் பகுதியில் டேனிடா உதவியுடன் செயற்படுத்தப்படுகின்ற தீவிரக் கால்நடை வளர்ப்புத் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

மீன்வளம்

46. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் (NCDC) நிதியுதவியுடன், ரூபாய் 11 கோடி செலவில் புதிய ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டமொன்றைத் தொடங்கவுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் 6,050 மீனவர்களுக்குக் கட்டுமரங்கள், மோட்டார் பொருத்தப்பட்ட படகுகள், மீன்பிடி சாதனங்கள் ஆகியவை வழங்கப்படும். தனியார் மீனவர்கள் மீன் குஞ்சுகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் புதிய திட்டமொன்று இவ்வாண்டில் செயற்படுத்தப்படும்.

47. இம்மாநிலத்தில் உவர்நீர் இறால் வளர்ப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நாங்கள் விரிவாக ஆய்வு செய்ததில், கடந்த இரண்டாண்டுகளில் இதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலம் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்றும் தெரிய வருகிறது. இம்மாநிலத்தில் அதிக அளவில் இறால் மீன் வளர்க்க பெரிய நிறுவனங்களை ஊக்குவிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்துடன், சிறு உழவர்கள் இறால் வளர்ப்பை மேற்கொள்ள உதவும் பொருட்டு, மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்றை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தேவையான அடிப்படை வசதிகளுடன் ஏற்படுத்த உள்ளோம்.

48. நடப்பாண்டில் ரூபாய் 3.2 கோடி செலவில் 2,000 வீடுகள் மீனவர்களுக்கு இலவசமாகக் கட்டித் தரப்படும். நடப்பாண்டில் 10 மாதிரி மீன்பிடிக் கிராமங்கள் ஏற்படுத்தப்படும். கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது இறக்க நேரிடும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 15,000லிருந்து ரூபாய் 21,000 ஆக உயர்த்தப்படும்.

49. நம் மீனவர் நலனுக்காகக் கச்சத்தீவை மீண்டும் பெற மத்திய அரசிடம் வலியுறுத்துவோம். சென்னையில் கடல்வாழ் உயிரின அரும்பொருள் காட்சியகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்த ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ள இருக்கிறோம்.

ஊரக வளர்ச்சி

50. எங்களது தேர்தல் அறிக்கையில் நாங்கள் உறுதி கூறியுள்ளவாறு, நடப்பாண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை நாங்கள் தொடங்க உள்ளோம். தற்போதுள்ள நிதி ஆதாரங்களையும் கூடுதல் நிதி ஆதாரங்களையும் சேர்த்து, 1992 செப்டம்பருடன் முடிவடையும் அடுத்த ஓராண்டில், ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கிடைக்க நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.



51. ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க இந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் பின்வரும் பணித் திட்டங்கள் அடங்கும்.

* ஊரகக் குடிநீர் வழங்கல்
* கிராமச் சாலைகள்
* தெருவிளக்குகள்
* தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்
* பாசன ஏரிகளைப் புதுப்பித்தல்
* சத்துணவு மையங்களைக் கட்டுதல்
* தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குதல்

இவற்றில் குடிநீர் வழங்கல், சாலைகள், தெருவிளக்குகள் கியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

52. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் கோடி உட்பட, இவ் வரவு-செலவுத் திட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் இத் திட்டத்திற்கு ரூபாய் 192 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. இதே அளவுத் தொகை ரூபாய் 192 கோடி அடுத்த நிதி ஆண்டான 1992-93ஆம் ஆண்டில் வழங்கப்படும். அனைத்து ஊரகப் பகுதிகளிலும் திட்டமிட்ட முறையில் அடிப்படை பணிகளை இத்திட்டம் நல்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

53. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளூர் சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 5.32 கோடியிலிருந்து ரூபாய் 9 கோடியாக உயர்த்தியுள்ளோம். கைப்பம்புகள், விசைப் பம்புகளைப் பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீட்டை இவ்வாண்டில் ரூபாய் 0.75 கோடியிலிருந்து ரூபாய் 3 கோடியாக உயர்த்தியுள்ளோம். அனைத்து அடிப்படை வசதிகளும் சரிவரப் பராமரித்து வரப்படுவதுடன், அவை நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம்.

### ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம்

54. நம் மக்கள் தொகையில் சுமார் 66 சதவிதத்தினர் தொடர்ந்து கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய வருமானத்தைப் பெருக்க நாம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. வேளாண்மையிலும், அதனைச் சார்ந்த பணிகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, கிராமப் பகுதிகளில் வளமான வாழ்வு ஏற்பட இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் படம் பிடித்துக் காட்டுவனவாக இருந்தபோதிலும், இப்பகுதிகளில் உள்ள உழவுத் தொழில் சாராத பிற மக்களின்பாலும் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. குறிப்பாக, ஊரகத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் குறித்து முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது.

55. மாநிலக் கதர்—கிராமத் தொழில் வாரியம், தொழில் துறை ஆணையரகம், ஊரக வளர்ச்சி ஆணையரகம், மீனள ஆணையரகம், பட்டுப்புழு வளர்ப்பு இயக்ககம், சமூக நல இயக்ககம், கைத்தறி—துணித்தொழில் இயக்ககம் போன்ற பல்வேறு துறைகள் இந்த ஊரகத் தொழில்கள் சார்ந்த பணிகளை மேற்கொண்டுள்ளன. இவைகளுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பும் தொடர்பும் ஏற்படுத்துவது பற்றி நாம் கவனிக்க வேண்டியுள்ளது. கிராமத் தொழில்களில் உற்பத்தி பொருட்களின் விற்பனைக் கான முயற்சியையும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. கடன் வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. இத்துறையில் கூடுதல் வேலைவாய்ப்பு கிட்டப் பெரும் வாய்ப்பு உள்ளது. இது தொடர்பான பிற பணிகளும் பெருமளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் தன்மை யுடையவை. மொத்தத்தில், கிராமப் பகுதிகளில், ஊரகத் தொழில்களும், அவை தொடர்பான பிற பணிகளும், பெருமளவிற்கு வேலைவாய்ப்பை உரு வாக்கும் தன்மையுடையவையாக உள்ளன.

56. கிராமப் பகுதிகளில் ஊரகத்தொழில் களையும், அவை தொடர்பான பிற பணிகளையும் மேற்கொள்ள ஒரு புதிய துணைத் திட்டத்தைத் தொடங்க நடவடிக்கை எடுக்க உள்ளோம். இந்தத் துணைத் திட்டம், அனைத்துத் துறைகளின் நடவடிக் கைகளையும் ஒருங்கிணைத்து ஒரு இலட்சம் நபர் களுக்கு வேலைவாய்ப்பை நல்கும். இந்தத் துணைத் திட்டத்தைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பிடம் ஒப்படைக்க உள்ளோம். கதர் வாரியம், கூட்டுறவு சங்கங்கள் இவற்றின் மூலம் தக்க விற்பனை ஏற்பாடுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புக் குறித்து ஆய்வு செய்ய உள்ளோம். இந்த துணைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கப் போதிய நிதி ஒதுக்கப்படும். இந்தத் துணைத் திட்டத்தைச் செயல்படுத்த ரூபாய் 621 கோடிக்கான ஒரு கடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### கைத்தறி

57. தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளில் நாள்தோறும் ஏற்பட்டு வரும் புதுமைகளைக் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். தொழில் நுட்பவியலின் முன்னேற்றத்தை நாங்கள் கவனத்தில் கொண்டு, 'நேபார்டு' நிதியுதவியுடன் அடுத்த 10 ஆண்டுகளில் 75,000 கைத்தறி களைப் படிப்படியாக விசைத்தறிகளாக மாற்றுவதென முடிவு செய்துள்ளோம். நடப்பாண்டில் இந்தப் பெருந் திட்டத்திற்கான தொடக்கப் பணிக்கு ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

58. அதே சமயத்தில் 50,000 கைத்தறிகளை நவீனப்படுத்தும் 5 ஆண்டுப் பெருந் திட்டம் ஒன்றையும் ரூபாய் 42.30 கோடி செலவில் நாங்கள் தொடங்க உள்ளோம். இந்த மேம்படுத்தப்பட்ட கைத்தறிகள், நெசவாளர் களுக்கு அதிக வருவாய் ஈட்டித்தரும்.

59. கோ-ஆப்டெக்ஸ், ஏனைய கூட்டுறவுச் சங்கங் களின் தள்ளுபடித் தொகைக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இவ்வாண்டில் ரூபாய் 42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

60. பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் ரூபாய் 26.28 கோடி முதலீட்டில் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி உதவியுடன் நவீனப்படுத் தப்படும். இதற்காக நாங்கள் ரூபாய் 7 கோடியைப் பங்கு மூலதனமாக ஒதுக்கியுள்ளோம்.

61. இந்த ஆண்டில் நெசவாளர்களுக்குத் தறி நெசவுக் கூடம் இணைந்த வீடுகள் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 2,000 வீடுகள் கட்டப்படும். 'ஹட்கோ' (HUDCO) உதவி யுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இப்பணிக்கு ரூபாய் 5 கோடி செலவிடப்படும். நெசவாளர் ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 முறைப்படி வழங்கப்படுகிறது. இத்தொகையை நாங்கள் உடனடியாக ரூபாய் 15,000 ஆக உயர்த்த இருக்கிறோம்.

### கடன் திட்டம்

62. வெவ்வேறு துறைகளில் பல்வேறு திட்டங் களையும், திட்டப் பணிகளையும் அரசு செயல்படுத்தி வருகிறது. பயன்களை முழுமையாகப் பெறும் வகையில், கடன் வழங்கு ஏற்பாட்டுடன் வேறு பல அம்சங்களும் உரிய வகையில் இணைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. 1991-92ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,139 கோடிக்கு கடன் வழங்கு திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம். வேளாண்மை, அதற்குத் தொடர்புடைய நடவடிக் கைகள், தொழில் பணிகள் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் உள்ள பணிகள் அனைத்தையும் இத்திட்டம் நிறைவேற்றும். பல்வேறு திட்டங் களின்கீழ் தங்கு தடையின்றிக் கடன் வழங்கப்பட இயலும் வகையில், வங்கிகள், கடன் வழங்கு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் உரியவாறு ஒருங் கிணைப்பும், ஒத்துழைப்பும் நிலவ நாங்கள் நடவடிக்கை மேற்கொள்வோம். கடன் வழங்கு ஏற்பாடு தடையின்றிச் செயல்பட்டு வருவதற்கு ஏதுவான புதிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தர உள்ளோம். முன்னுரிமை கொண்ட துறைகளுக்குத் தடையின்றிக் கடன் வழங்கப்படுவதற்கு உரிய ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வது எங்களது முயற்சியாக இருக்கும்.

### மின் விசை

63. புனல் மின் உற்பத்திக்கான நீர்த் தேக்கங் களில் நிலைமை தற்பொழுது மன நிறைவளிப்பதாக உள்ளது. இதன் பயனாகப் பெருந் தொழில்களின் தேவையில் மின்வெட்டு மட்டுமே மிகச் சிறிய அளவிற்கு தொடரப்பட்டுள்ளது. மற்றபடி மின் வெட்டை முழுவதுமாக ஏற்கெனவே நீக்கியுள்ளோம். இந்த ஆண்டு மின் வெட்டு இல்லாத ஆண்டாக இருக்கும் என்று நம்புகிறோம்.

64. இந்த மகிழ்ச்சிகரமான நிலைமை, நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாமை ஆகிறது. தமிழ்நாட்டின் மின் தேவையளவில் நிரப்ப வேண்டிய பற்றாக்குறை அளவு கி.பி. 2000ஆம் ஆண்டில் 4,293 மெகாவாட் ஆகவும், 1995ஆம் ஆண்டில் 1,707 மெகாவாட் ஆகவும் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. பெரும் அளவிலான இந்தப் பற்றாக் குறையை நிறைவு செய்தாக வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்தக் கூடுதலான புதிய மின் உற்பத்தித் திட்டங்களை உருவாக்க, விரைவாகத் திட்ட மிட்டுச் செயல்படுத்த வேண்டியது இன்றியமையாதது ஆகிறது. நடைபெற்று வரும் திட்டங்கள் மூலம் 1995ஆம் ஆண்டில் மேலும் 818 மெகாவாட் மின் சக்தி கிடைக்கும் எனவும், அதன் பிறகும் பெரும் பற்றாக்குறை இருக்கும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

65. நெய்வேலியில் முதல் சுரங்கத்தை விரிவு படுத்தும் பணியும், அதன் மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கூடுதலாகப் பெறுவதற்கான பணியும், ரூபாய் 2,500 கோடி செலவில் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித் துள்ளது என்பதை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பழுப்பு நிலக்கரி மட்டுமே இம்மாநிலத்தில் கிடைக்கக் கூடிய எரி பொருளாக இருப்பதால், இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய எரிசக்தி முழுவதையும் தமிழ் நாட்டிற்கே ஒதுக்குமாறு மத்திய அரசை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

66. இந்நிலைமையை நாங்கள் கவனமாக ஆய்வு செய்ததில், ஜெயங்கொண்டம் பகுதியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி, மின் உற்பத்தி செய்யும் பணியில் கூட்டுத் துறையைப் பங்கு கொள்ள அனுமதிக்குமாறு மத்திய அரசை அணுகியுள்ளோம். ரூபாய் 5,000 கோடி செலவில் 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இந்த ஒருங்கிணைந்த சுரங்கப்பணி—மின் உற்பத்தித் திட்டம், அடுத்த பத்தாண்டுகளில் இம் மாநிலத்தின் மின் தேவையை நிறைவு செய்யும். இந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.

67. புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் அனைத்தையும் மேற்கொள்ள, புதிய மின் உற்பத்திக் கழகம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். காவிரி ஆற்றுப் பகுதியில் கிடைக்கும் எரிவாயு அடிப்படையில் 300 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திட்டத்தை அது உடனடியாக மேற்கொள்ளும். வடசென்னையில் 500 மெகாவாட் மின் உற்பத்திக்கான புதிய மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் பணியை ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் மேற்கொள்ள விருக்கிறோம்.

★ ஜெயங்கொண்டத்தில் கூட்டுத் துறையில் புதிய பழுப்பு நிலக்கரி சுரங்கம் வெட்டுதல் - மின்விசை உற்பத்தித் திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது - உற்பத்தித் திறன் 1,500 மெகாவாட் திட்டச் செலவு ரூபாய் 5,000 கோடி.

★ பொதுத் துறையில் மின்விசை தயாரிப்புத் திட்டங் களை, புதிய மின்விசை உற்பத்தி நிறுவனம் மேற் கொள்ளும்.

**68.** கூடங்குளம் அணு மின் உற்பத்தி திட்டப் பணியை விரைவுபடுத்துமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்வோம். இத்திட்டம் கி.பி. 2001ஆம் ஆண்டில் 2,000 மெகாவாட் மின் உற்பத்தியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**69.** மரபு சாராத மின் உற்பத்தி ஆதாரங்கள் அனைத்தையும் மேம்படுத்த ஊக்கம் அளித்து வருகிறோம். சூரிய வெப்பச் சக்தி, காற்றுச் சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்புக்கு நிதி வழங்கப்படும்.

**70.** புதிய மின் உற்பத்தித் திட்டங்களுக்கான ஆதாரங்களைப் பெருக்க இம்மாநிலத்தில் மின்விசை-அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்தை இப்போது ஏற்படுத்தியுள்ளோம்.

**71.** மின் உற்பத்திக்கான ஆதாரங்களைப் பெருக்கும் போது, பெரும் இடையூறுகள் இருந்த போதிலும், நடப்பாண்டில், புதிதாக 40,000 மின் இணைப்புகள் வழங்கவுள்ளோம் என்பதை அறிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதே போல, நடப்பாண்டில் 40,000 குடிசைகளுக்கு இலவசமாக மின் இணைப்பு அளிக்கவுமுள்ளோம்.

**72.** நடப்பாண்டில் மின் விசை மேம்பாட்டுக்குரிய மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூபாய் 425.65 கோடியாகும். இத்துடன் மின் விசை நிதி நிறுவனத்திடமிருந்து பெற இருக்கின்ற உதவியையும் சேர்த்து, இவ்வாண்டு மின் விசை மேம்பாட்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 577.79 கோடி என்ற அளவில் இருக்கும்.

**73.** விவசாயிகள் அனைவருக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை அவை உறுப்பினர் அறிவர். இதனால், ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு சுமார் ரூபாய் 550 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த ஆண்டில் இந்த வருவாய் இழப்பை ஈடு செய்வதற்காக ரூபாய் 350 கோடி ஒதுக்கியுள்ளோம். மாநில அரசின் நிதி நிலையைக் கருதிப் பார்க்கையில், ரூபாய் 250 கோடி மட்டும்தான் எங்களால் வழங்க இயலும். இந்நிலையில், தமிழ்நாடு மின் வாரியம் புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலாமல் போய்விடும். மின் உற்பத்தி நிதி நிறுவனம், ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற கடன் வழங்கும் நிறுவனங்கள், விவசாயிகளிடமிருந்து ஏதாவது ஒரு குறைந்த தொகையாவது வசூலிக்க வேண்டியது அவசியம் ஆகும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவதைக் கண்காணிக்க வேண்டுமெனவும் அவை வலியுறுத்தியுள்ளன. மிகவும் சிக்கலான இப்பிரச்சனைகள் குறித்து விரிவாக விவாதித்து ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

### தொழில்கள்

**74.** இவ்வரசு, தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்து, இந்தியாவிலேயே தொழில்துறையில் முன்னேற்றம் அடைந்த முதல் மாநிலமாகத் தமிழ் நாட்டை மாற்றிடப் பாடுபடும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 1991ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாளன்று தொழிலதிபர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் வெளிப்படையாகவும் எவ்வித நிபந்தனைகளுமின்றியும் அமைந்ததை யொட்டி, இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சி விரைந்து ஏற்படுவதற்குரிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

★ 'அரோமேட்டிக்ஸ்' தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி கோருதலும் ''பாம்பே ஹையில் கிடைக்கும் எரிவாயு''வை குழாய் இணைப்பின் மூலம் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வருவதும் வலியுறுத்தப்படும்.

★ தொழில் கொள்கை அணுகு முறை தெளிவுபடுத்தப்படுகிறது.

★ ரூபாய் 600 கோடி முதலீட்டுடன் 'டிட்கோ' நிறுவனம் ஒன்பது தொழிற்சாலைகளைத்தொடங்கும்.

★ சிறு தொழில்களை நவீனப்படுத்தும் முயற்சிகள் ஊக்குவிக்கப்படும்.

**75.** தமிழ்நாட்டில் மத்திய அரசின் முதலீடு குறைந்து வருகிறது. நாட்டின் மொத்த முதலீட்டில் தமிழ்நாட்டில் 8 சதவீத அளவில் இருந்த மத்திய அரசின் முதலீடு, தற்போது 5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் முதலீடு, மிக அவசியமானது. கீழ்க்கண்ட திட்டங்களுக்கு உடனடியாக அனுமதியளித்து, நிறைவேற்றுமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்:—

* ரூ. 1,433 கோடி செலவில் நேஷனல் அரோமேட்டிக் திட்டம் (NAPCO).
* "பாம்பே ஹை" பகுதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு எரிவாயு கொண்டுவர தென்மாநிலங்களுக்கான எரிவாயு இணைப்பு அமைக்கும் திட்டம்.
* ரூ. 250 கோடி செலவில் இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் நிறுவனம் வண்ணப் படச்சுருள் தயாரிக்கும் திட்டம்.
* சேலத்தில் ஒருங்கிணைந்த உருக்கு ஆலை அமைக்கும் திட்டம்.
* மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற்சாலையை ரூபாய் 314 கோடி செலவில் நவீனப்படுத்துதல்.

**76.** புதிய வர்த்தகக் கொள்கையையும், புதிய தொழில் கொள்கையையும் மத்திய அரசு அறிவித்துள்ளது. அயல்நாட்டுத் தொழில் முதலீட்டாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காகவும், அவர்களது முதலீடுகளுக்கு விரைந்து அனுமதி அளிப்பதற்காகவும், அயல்நாட்டு முதலீட்டை ஊக்குவிக்கும் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய முதலீடுகளில் தமிழ் நாட்டிற்கு உரிய பங்கு கிடைக்க நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

**77.** இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கான புதிய கொள்கை ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அக்கொள்கையின் சிறப்பு அம்சங்களாவன :—

ரூபாய் 50 கோடி முதல் ரூபாய் 100 கோடி வரை முதலீடு செய்யும் புதிய தொழில்களுக்கு ரூபாய் 25 இலட்சம் மூலதன உதவித் தொகை அளிப்பது; 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்வது அல்லது 10 ஆண்டுகளுக்கு விற்பனை வரி வசூலிப்பதை தள்ளி வைப்பது; ரூபாய் 100 கோடிக்கும் அதிகமான முதலீடு செய்யும் புதிய தொழில்களுக்கு ரூபாய் 50 இலட்சம் மூலதன உதவித் தொகை அளிப்பது; விற்பனை வரியை 6 ஆண்டுகளுக்குத் தள்ளுபடி செய்வது அல்லது விற்பனை வரி வசூலிப்பை 12 ஆண்டுகளுக்குத் தள்ளி வைப்பது. இம்மாநிலத்தில் புதிய பல பெருந்தொழிற் பிரிவுகள் ஏற்பட இது வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

**78.** தமிழ் நாட்டை விரைவாகத் தொழில் வளர்ந்து செழிக்கும் மாநிலமாக ஆக்குவதற்காக

இவ்வரசு, கீழ்க்கண்ட சில முக்கிய அம்சங்களைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு தொழில் வளர்ச்சிப் பணிகளைச் செயற்படுத்தும் :—

* தொழில்களுக்குப் பல்வகையிலும் சிறப்பான ஊக்கங்கள் அளித்தல்.
* ஊக்க உதவித் தொகைகளை உடனுக்குடன் வழங்குதல்.
* போதுமான அளவிற்கு அடிப்படைவசதிகள் செய்து தருதல்.
* தொழிலதிபர்கள் நட்புணர்வோடு எளிதாக செயல்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குதல்.
* தொழில் மேம்பாட்டிற்கு உகந்த, தொழில் வளர்ச்சிக்குத் துணைபுரியும் வகையில் அமைந்த வரி ஏற்பாட்டினைப் பின்பற்றுதல்.
* மும்முர வளர்ச்சி காணவேண்டிய தொழில் துறைப் பகுதிகளை இனங் கண்டறிதல்.
* ஏற்றுமதி வாய்ப்பு மிக்க தொழில்களை உருவாக்குதல்.
* தொழில் நுட்பவியலின் நிலையை உயர்த்துதல்.

**79.** இம்மாநிலத்தில் தொழில்கள் விரைவாக வளர்ந்து செழித்தோங்கச் செய்வதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) இவ்வாண்டில் 9 திட்டங்களை ரூபாய் 600 கோடி மொத்தச் செலவில் தொடங்க ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இவ்வாண்டில் ரூபாய் 225 கோடி அளவிற்குக் கடன் வழங்கவிருக்கிறது. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) ரூபாய் 70 கோடி அளவிற்கு தொழில்களுக்குக் கடன் வழங்கும். சில முக்கியத் தொழில்களில் விரைவாக வளர்ச்சி பெறுவதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கு நாங்கள் தனி முக்கியத்துவம் அளிப்போம்.




**80.** சிறு தொழில்களுக்கான புதிய திட்டம் ஒன்றை மத்திய அரசு அறிவித்துள்ளது. சிறு தொழில்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி நாங்கள் விரிவாக ஆய்வு செய்துள்ளோம். நலிந்த சிறு தொழில்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட மாநில உயர் நிலைக் குழுவை நாங்கள் உடனடியாக முடுக்கி விட்டு, அந்தச் சிறு தொழில்கள் மீண்டும் இயங்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகளைத் திறம்பட எடுப்போம். இது தொடர்பான பிரச்சினைகளில் விரைந்து முடிவு எடுப்பதற்கு இக்குழுவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளோம். சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவையான அளவிற்கு கடன் கிட்டாதிருக்கும் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தொகை பெறாதிருக்கும் பொருட் பட்டியலின் மீது பணம் பெறும் வசதிகளை (Factoring Services) ஊக்குவிப்போம். தொழில் நுட்பவியலை மேம்படுத்த நாங்கள் சிறப்பு முக்கியத்துவம் கொடுப்போம். இத்துறையில் நவீனத் தொழில் நுட்பவியலை மேன்மேலும் மேற்கொள்வதை ஊக்குவிக்க இருக்கிறோம்.

### சாலைகள்

**81.** நமது சாலைகளைத் தகுந்த அளவு பராமரிக்காமல் விட்டதன் காரணமாக, அவற்றின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. சாலைகளைப் பராமரிப்பதற்கு 1989-90ஆம் ஆண்டில் ரூபாய் 59.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 1990-91ஆம் ஆண்டில் ரூபாய் 70.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. நடப்பு ஆண்டில் இதற்கு ரூபாய் 102.25 கோடி மொத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிகவும் மோசமான நிலையிலுள்ள, சுமார் 8,000 கிலோமீட்டர் நீளத்துக்கான சாலைப் பகுதிகளை ரூபாய் 150 கோடி செலவில் செப்பனிடும், ''சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம்'' ஒன்று ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்படும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**82.** ஊரக அங்காடிச் சாலைகளை மேம்படுத்துவதற்குரிய சிறப்புத் திட்டமொன்று, ரூபாய் 45·28 கோடி செலவில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். அதன் கீழ், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வடஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள 19 அங்காடி மையங்களை இணைக்கும் 800 கிலோமீட்டர் தொலைவுடைய சாலைகள் மேம்படுத்தப்படும்.

**83.** தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதில், தொழில் நிறுவனங்களை ஈடுபடுத்தும் விரிவான செயற்குறிப்பு ஒன்றை நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். இத்திட்டத்தின்கீழ் சாலை மேம்பாட்டுப் பணியில் முதலீடு செய்யும் தொழிலதிபர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குச் சிறு தொகையைச் சுங்கக் கட்டணமாக வசூலிக்க அனுமதிக்கப்படுவர். இதன் மூலம் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் ஏனைய மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். சர்க்கரை ஆலைப்பகுதிகளில் விரிவான சாலை மேம்பாட்டுத் திட்டமொன்று ரூபாய் 16.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**84.** சென்னையிலிருந்து கடலூருக்குச் செல்லும் இழக்குக் கடற்கரைச் சாலையை மொத்தம் ரூபாய் 53 கோடி செலவில் அமைக்கும் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் சாலையைத் தேசிய நெடுஞ்

சாலையாக மாற்றுமாறு மத்திய அரசை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். ஏனெனில், இது பூகோள அமைப்பு ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் உடையது என்பதுடன், இது ஒன்று மட்டுமே இதுவரையில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்படாமலிருக்கும் கடற்கரைச் சாலையாகும்.

85. ஒசூர்-கிருஷ்ணகிரிக்கு இடையேயும், திண்டுக்கல்-மதுரைக்கு இடையேயும், நான்கு தட தேசிய நெடுஞ் சாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம்.

### சுற்றுச் சூழல்

86. நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியே எங்களது குறிக்கோளாகும். சுற்றுச் சூழலைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். தண்ணீர் மாசுபடுவதைத் தடுக்கத் தனி முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

87. தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் தூய்மைப் படுத்தும் பொது நிலையம் நிறுவும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும். வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தோல் பதனிடு தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் பொது நிலையம் நிறுவும் பணி விரைவுபடுத்தப்படும். புதிதாக, பம்மல், ஈரோடு ஆகிய இடங்களில் தோல் பதனிடு தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களைத் தூய்மைப் படுத்தும் பொது நிலையங்கள் நிறுவப்படும். இதே போன்று, கரூர், பவானி, அய்யம்பேட்டை, திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் சாயத் தொழிற்சாலைகளி லிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களைத் தூய்மைப்படுத்தும் பொது நிலையங்கள் ரூபாய் 18 கோடி செலவில் நிறுவப்படும்.

88. சென்னை மாநகரில் உள்ள முக்கிய நீர் வழிகள், அதாவது, அடையாறு, கூவம் ஆகிய ஆறுகள், பக்கிங்ஹாம் கால்வாய், முக்கிய கழிவுநீர் கால்வாய்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தூய்மைக் கேட்டினை உறுப்பினர்கள் நன்கறிவர். தூய்மைப்படுத்தப்படாத கழிவுநீர் நேரடியாக இந்த நீர்வழிகளில் வந்து விழுந்து கலப்பதால், 80 சதவிகிதம் தூய்மைக்கேடு ஏற்படுகிறது. சென்னை குடிநீர் வாரியம் ரூபாய் 6.50 கோடி செலவிலான கழிவுநீர் தூய்மைப்படுத்தும் திட்டத்தை, 1991 டிசம்பருக்குள் முடிக்கவிருக்கிறது. இக்காலகட்டத்தில், இப்பணி நிறைவேற்றப்படுவதன் மூலம் பெரிய அளவிலான தூய்மைக்கேடு தடுக்கப் பட்டு விடும். அதன் பின்னர், இந்த நீர்வழிகளில் தூர் வாரப்பட வேண்டும். தூர்வாரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் இங்கிலாந்து நாட்டின் 'அயல் நாடுகள் மேம்பாட்டு நிருவாக அமைப்பின்' உதவியை நாடியுள்ளோம்.

89. காவிரி ஆற்றில் தூய்மைக்கேடு ஏற்படு வதைத் தடுக்க நாங்கள் விரிவான அறிக்கை ஒன்றை ஆய்வு செய்து வருகிறோம். அனைத்து நாட்டுச் சுற்றுச் சூழல் கண்காணிப்பு திட்டத்தின் கீழ், ஆற்றில் தூய்மைக்கேடு ஏற்படுவதைக் கண்காணிக்க, காவிரி ஆற்றின் நெடுக நான்கு நிலையங்களைத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

★ ரூபாய் ஒரு கோடி செலவில் 6,580 ஏக்கர் பயன அடையும் வகையில், மருத நதித் துணைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

★ ரூபாய் 251 கோடி செலவில் காவிரி தூய்மைப் படுத்தும் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை அணுகுதல்.

★ ரூபாய் 41.85 கோடியிலான புதிய அணைக்கட்டுப் பாதுகாப்புத் திட்டம்.

★ தேசிய நீர் நிர்வாகத் திட்டத்தின் கீழ் சேத்தியாத் தோப்பு துணைத் திட்டம் அமைதல்.

காவிரி ஆற்றின் கரைகளில் உள்ள 35 நகரங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரும், 1,139 தொழிற்சாலை களிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருள்களும் காவிரி ஆற்று நீருக்குப் பெருத்த அளவில் தூய்மைக் கேட்டினைச் செய்வதாக உள்ளன என்று மதிப்பிடப் பட்டுள்ளது. காவிரி ஆற்று நீர் தூய்மைக்கேடு அடைவதைத் தடுக்கும் பெரும் திட்டத்திற்கு ரூபாய் 251 கோடி முதலீடு தேவைப்படும். கங்கை நீர்த் தூய்மைக்கேடு தடுப்புத் திட்டத்திற்கு நிதியுதவி யளிப்பது போலவே, இத்திட்டத்திற்கும் முழு நிதி யுதவி அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசை வலியுறுத்த உள்ளோம்.

90. மோட்டார் வண்டிகள் வெளியிடும் கழிவுப் பொருள்களால் காற்றுத் தூய்மை கெடுவதைக் கண்காணிக்கத் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக அவசியமான விதிமுறைகள் வகுக்கப்படும்.

91. 'ஹட்கோ', மத்திய அரசு ஆகியவற்றின் உதவிபெறும் குறைந்த செலவிலான ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டத்தின் கீழ் எஞ்சிய 41 நகராட்சிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள முடிவு செய்துள் ளோம். இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் உலர் கழிப்பிடங்கள் ரூபாய் 55 கோடி செலவில் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றப் படும். இத்துடன் அனைத்து நகராட்சிகளிலும் உள்ள ஏறத்தாழ 4 இலட்சம் உலர் கழிப்பிடங்கள் இவ்வாறு மாற்றப் படும்.

### குடிநீர் வழங்கல்

92. மாநிலத்தோர் அனைவர்க்கும் போதுமான அளவிற்குக் குடிநீர் வழங்குவோம் என்று நாங்கள் உறுதியளித்துள்ளோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமையும் உயர் அதிகாரக் குழு, குடிநீர் வழங்கல் குறித்தத் திட்டங்களின் செயல்பாட்டைக் கண்காணிக்க இருக்கிறது.

93. இதுவரையில், குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாமல் 2,483 குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. நடப்பாண்டில், ரூபாய் 10 கோடி செலவில் இந்தக் குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும். 1,007 குடியிருப்புகளில் ஆதிதிராவிடர் குடியிருக்கும் பகுதிகளில் மட்டும் இதுவரை குடிநீர் வசதி எதுவும் செய்து தரப்படவில்லை. அத்தகைய ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியளிக்கத் தனித் திட்டம் ஒன்று ரூபாய் 7 கோடி செலவில் நடப்பாண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும்.

94. மாநிலத்தில் 10,118 குடியிருப்புகளுக்குக் கோடை காலத்தில் மிகக் குறைந்த அளவிற்கே

(தொடர்ச்சி 27-ஆம் பக்கம் பார்க்க)



# அவர்தாம் பெரியார்



## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்



அவர்தாம் பெரியார்-பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தீங்கத் தேரில் ... (அவர்)

மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியி ருப்பு
விடுதலைப் பெரும் படையின் தொடுப்பு
... (அவர்)

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக் குகையில் சிறுத்தை எழும் ... (அவர்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலைமேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை ...(அவர்)

—'குயில்':26.8.1958



# தந்தை பெரியாரின் புரட்சி மொழிகள்

★ வாலிபர்களுக்கு வெறும் உற்சாகமும், துணிவும், தியாகபுத்தியும் மாத்திரம் இருந்தால் போதாது. நன்மை தீமையை அறியும் குணமும், சாத்தியம் அசாத்தியம் அறியும் குணமும், ஆய்ந்து ஓய்ந்து பார்க்கும் தன்மையும் இருந்தால்தான் வாலிபர்கள் பொதுவில் பயன்படக்கூடியவர்கள் ஆவார்கள்.

★ பள்ளிக்கூடங்கள் எழுத்து வாசனையையும் ஏதாவது ஒரு துறையில் விளக்கத்தையும்தான் உண்டாக்க உதவும். நூலகம் என்பது பொது அறிவு விளக்கத்தையும் பிற துறைகளிலும் அறிவையும் உண்டாக்கும்.

★ உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர்-பகுத்தறிவுள்ள உயிர் மனிதன் தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த செயல்களை எல்லாம் சாதிக்க முடியும்.

★ ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இராதவரிடத்து நாட்டுப்பற்று இராதென்பது நிச்சயம். நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப்பற்று பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

★ கூட்டுறவு என்கிற கொள்கை சரியான உயரிய முறையில் நம் நாட்டில் ஏற்பட்டு விடுமானால் மக்கள் சமூகமே சஞ்சலமற்று, நாளைக்கு என்ன செய்வதென்று ஏக்கமின்றி, திருப்தியுடன் நிம்மதியாகக் குதூகலமாக வாழ வழி ஏற்பட்டு விடும்.

★ மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீர வேண்டியது எவ்வளவு அவசியமோ அது போலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீர வேண்டியது அவசியமாகும்.

★ ஒரு சமூகமென்றிருந்தால் அச்சமூகத்தில் ஏழைகளில்லாமலும்; மனச்சாட்சியை விற்றுப் பிழைப்பவர்கள் இல்லாமலும் செய்வதுதான் சரியான சமூகச் சீர்திருத்தப் பணியாகும்.

★ சக்கி முக்கிக் கல்லால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக் காலத்து "எடிசன்". அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்பொழுது மின்சாரத்தில் நெருப்பைக் காண்கிறோம்; எனவே, மாற்றம் இயற்கையானது. அதைத் தடுக்க யாராலும் முடியாது.

★ சீர்திருத்தங்கள்-மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விரிவுபடுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும், அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.

★ ஒரு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமானாலும், அவர்கள் நாகரிகம் பெற்று உயர்ந்த நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானாலும், அரசியல், பொருளியல், தொழிலியல் ஆகிய துறைகளில் தகுந்த ஞானம் பெற வேண்டுமானாலும் அந்நாட்டு மக்களுக்கு முதலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.





# பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்

★ பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள்

★ சமுதாயக் கொடுமைகள் ஒரு புறமும் சாதிப் பூசல்கள் ஒரு புறமும், வைதீகம் ஒரு புறமும், வீண் வாய் வேதாந்தம் வேறோர் புறமும் இருந்து கொண்டிருப்பதால் தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர். மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

★ ஒற்றுமை-கூட்டுறவு-ஒப்பந்தம்-கூடிவாழ்தல்-நட்பு-அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக் கூடியவை. முழுத்திருப்தி தருபவை அல்ல - தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை.

★ மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல மாண்புகளை மாய்க்கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை.

★ மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

★ பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இரண்டும் நமது கொள்கை. இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக் கூடாது.

★ கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

★ நாம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான், நம்மிடமுள்ள பழைய கருத்துக்கள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும். மற்ற மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

★ சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதி முறையை, ஒழிப்பதும் சமதர்மத் திட்டம் தான்.

★ மொழிப்பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

★ எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்று பார்த்துத்தான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமில்லாமலும் பின்பற்றக்கூடாது.

★ மனிதனின் எல்லா உலகங்களையும் விடப் பெரியது மனம். அது பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது. நினைப்புக்கேற்றபடி குறுகத்தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

தந்தி: திகோசில்க்ஸ்
(திருபுவனம்)

போன்:20868
(கும்பகோணம்)

திருமணம் மற்றும் விழாக் காலங்களுக்கு ஏற்ற
அசல் பட்டு வெள்ளிச் சரிகைச் சேலைகள்
தயாரிப்பில் 35 ஆண்டுகளுக்கும்
மேலாகத் தனித்து விளங்குவது

# திருபுவனம் பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட், இசட்.322,

திருபுவனம்-612 103
தஞ்சை மாவட்டம்

தமிழகத்தின் முக்கிய நகரங்களில் உள்ள
எங்களது அனைத்துக்
கிளைகளிலும் திருபுவனத்து
விலைக்கே கிடைக்கும்.

ப.அழகு, பி.ஏ.,
துணை இயக்குநர்/தனி அலுவலர்

★ ரூபாய் 200 கோடி செலவில் 2,500 ஏரிகள் பயனடையும் வகையிலான திட்டமிட்ட புதிய ஏரிப்பாசனப் பெருந் திட்டம்.

★ ரூபாய் 2 கோடிக்கான புதிய சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்.

★ இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டத்தில் மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம்.

★ ஒரு இலட்சம் பேருக்கு வேலை அளிப்பதற்கு ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம்.

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடிநீர் வசதிகள் உள்ளன என்பதை இதுபற்றி நடைபெற்ற விரிவான ஆய்வு தெரிவிக்கிறது. இவை நீர் அரிதாகக் கிடைக்கும் பகுதிகளில் அமைந்துள்ளன. எனவே, இவற்றுக்கு உரிய அளவுக்கு நீர் வழங்கப் புதிய திட்டம் வகுக்கப்பட வேண்டியிருக்கிறது. குடிநீர் வழங்கலுக்கு நாங்கள் அளித்துள்ள முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு, முக்கியமாக இக்கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 5 ஆண்டுகால அளவில் செயல்படுத்தக் கூடிய வகையில் ரூபாய் 400 கோடி செலவில் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து நிதியுதவி கோரப்படும்.

95. 3,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள பெரிய குடியிருப்புப் பகுதிகளில், மேல்நிலை நீர்த் தொட்டிகள் அமைத்து, குடிநீர் வசதி செய்து கொடுப்பதில் கவனம் செலுத்துவோம். இதுவரை இவ்வசதி 97 குடியிருப்புப் பகுதிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் எஞ்சியுள்ள இத்தகைய 667 குடியிருப்புப் பகுதிகளுக்கு இவ்வசதிகளைச் செய்து கொடுக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம்.

96. மத்திய அரசின் முழு மானிய உதவியுடன் விரைவு படுத்தப்பட்ட குடிநீர் வழங்கு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். இத்திட்டத்தின்கீழ்த் தமிழ் நாட்டிற்கு வழங்கப்படும் தொகை மிகவும் குறைவானதாக உள்ளது. மத்திய அரசு இதற்கு அதிக நிதி வழங்குமெனில், எங்களால் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த இயலும்.

97. இதுவரை அடிப்படை குடிநீர் வசதி 4 நகராட்சிகளிலும், 2 நகரியங்களிலும் செய்து தரப்படவில்லை. சீர்காழி, பொன்மலை, குளச்சல், பத்மநாபபுரம் ஆகிய 4 நகராட்சிகளில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. கத்திவாக்கம், மாதவரம் நகரியங்களுக்குச் சென்னை மாநகர் குடிநீர் வழங்கு திட்டத்தின் மூலம் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

98. மொத்தம் 366 நகர்ப் பேரூராட்சிகள் உள்ளன. இவற்றில் 245 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 73 நகர்ப் பேரூராட்சிகளில் இப்பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். ஊரகப் பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்களின் எண்ணிக்கை மன நிறைவளிப்பதாக இல்லை. மொத்தமுள்ள இத்தகைய 266 பேரூராட்சிகளில், 61 பேரூராட்சிகளுக்கு மட்டுமே இதுவரையில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 91 ஊரகப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள புதிய திட்டத்தில், ஊரக, நகர்ப்புறப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கு வசதிகளையும் சேர்த்துள்ளோம்.

99. பெரிய அளவிலான குடிநீர் வழங்கும் புதிய திட்டங்களைக் குறிப்பிட்ட தொகுதிகளில் கொண்டு வருவதில் உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவார்கள் என்பதை நாங்கள் அறிவோம். தற்போது இத்திட்டங்கள் மிகவும் செலவு பிடிப்பவையாக உள்ளன. அரசு இப்போது ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் நிதியுதவியையும் 'ஹட்கோ' நிறுவனத்தின் நிதியுதவியையும் பெற்று இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. உள்ளாட்சி மன்றங்கள், அவற்றின் கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்தினாலும் செலுத்தாவிட்டாலும், அரசு இத்தொகையை திருப்பிச் செலுத்தியாக வேண்டும். இதனால், கடனாகப் பெறும் தொகையும், திருப்பிச் செலுத்தும் தொகையும் ஏறக்குறைய சமமாக இருக்கும் இடர்ப்பாடான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகப் புதிய திட்டங்களை எடுத்துக் கொள்ள இயலாத நிலை தோன்றியுள்ளது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து குடிநீருக்குரிய கட்டணங்களை வசூலித்தால் மட்டுமே நிலைமையைச் சமாளிக்க இயலும். எனவே, நகர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு அரசுக்கு உறுப்பினர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

100. சென்னை மாநகருக்குத் தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவது முக்கியமான பணியாகும். கிருஷ்ணா நதிநீர் வழங்கு திட்டத்தை விரைவுபடுத்த நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். நடப்பாண்டில் ஆந்திரப் பிரதேசத்திற்குள் நடைபெறும் பணிகளுக்காக ரூபாய் 45 கோடி நிதி ஒதுக்கீடும், தமிழ்நாட்டிற்குள் நடைபெறும் பணிகளுக்காக ரூபாய் 26 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளன. 1993ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னைக்கு நீர் கிடைக்கும் வகையில் இத்திட்டத்தின் பணி முன்னேற்றத்தை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். கிருஷ்ணா நீரைத் தகுந்த முறையில் பகிர்ந்தளிப்பதற்குச் சுமார் ரூபாய் 505 கோடி மதிப்பீட்டிலான சென்னை மாநகர நீர் வழங்கல் திட்டத்திற்கு விரைவில் அனுமதி அளிக்குமாறு உலக வங்கியுடன் தொடர்பு கொண்டு கேட்டு வருகின்றோம்.

101. இம்மாநிலத்தில் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதைக் கருத்திற் கொண்டு, கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்தும் திட்டத்தில் தனிக் கவனம் செலுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கு வாரியம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கும், சென்னை இரசாயன உர நிறுவனத்திற்கும் நாளொன்றுக்கு 5 மில்லியன் காலன் அளவுக்கு நீர் வழங்கும் திட்டத்தைத் தற்போதுதான் முடித்துள்ளது. இந்நிறுவனங்கள் இந்நீரைப் பயன்படுத்த மூன்றாம் முறை சுத்திகரிப்பு செய்யும் வசதிகளை ஏற்படுத்தி

யுள்ளன. இதுபோன்ற முயற்சிகளுக்குத் தீவிரமாக ஊக்கமளிக்கக் கருதுகிறோம். எக்காலத்திலும், குடிநீர் கடும் பற்றாக்குறை நிலவுகிற பகுதிகளுக்குத் தூய நீரைப் போதுமான அளவிற்கு வழங்க இயலும் வகையில், கடல்நீரை நன்னீராக்கும் நிலையத்தை நிறுவும் பணி குறித்து நடவடிக்கை எடுப்போம். இத்த நிலையங்களைச் சென்னைக் குடிநீர் வாரியமும், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியமும் நிறுவும். நாங்கள் இத்தகைய பெரிய நிலையங்களைப் படிப்படியாக நிறுவுவோம்.

### வீட்டு வசதி

**102.** " குடும்பத்திற்கு ஒரு வீடு " என்பது இவ்வரசின் குறிக்கோளாக அமையும். வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவதில் இன்னும் முடிவுறாமல் உள்ள பணிகளையும், இனிமேல் ஏற்படக்கூடிய புதிய தேவையையும் கருத்திற் கொண்டு, அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அரசு நிறுவனங்கள் அனைத்தின் செயல்பாட்டையும் மேம்படுத்துவதுடன், அதற்குமேல், தனியார் துறையிலும் வீட்டு வசதி வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குவோம். தற்போதுள்ள வீடுகளை மேம்படுத்துவதற்கான விரைவுத் திட்டம் ஒன்றிற்குத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**103.** நடப்பாண்டில் பல்வேறு அரசு நிறுவனங்கள் மூலம் மொத்தம் 1.22 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும். அவையாவன :—

* ஆதிதிராவிடர்களுக்கு அனைத்துப் பருவ நிலைக்கும் ஏற்ற 50,000 வீடுகள்.

* மீனவர்களுக்கு 2,000 வீடுகள்.

* கைத்தறி நெசவாளர்களுக்கு 2,000 வீடுகள்.

* கிராம வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 30,000 வீடுகள்.

* நகர்ப்புற வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 10,000 வீடுகள்:

* தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் 23,000 வீடுகள்.

* தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் 5,000 வீடுகள்.

**104.** அரசு நிறுவனங்கள் மூலம் வீட்டுவசதி ஏற்படுத்தித் தரும் இத்திட்டங்களுடன், தனியார் துறையிலும், கூடுதல் வீடுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளில் அடிப்படை வசதிகளோடு கூடிய மேம்படுத்தப் பட்ட வீட்டுமனைகள் குறித்தப் பெருந்திட்டம், நகர்ப் புற வளர்ச்சித் திட்டம், நெறிப்படுத்தப்பட்ட வீட்டு வசதிக்காகக் கடன் வழங்கும் திட்டம் முதலியவை அடங்கும்.

**105.** வீடுகளின் நிலை உயர்த்தும் திட்டத்தின்கீழ், 'ஹட்கோ'-வின் நிதியுதவியுடன் நகர்ப்புறங்களில் ரூபாய் 40 கோடி செலவில் ஒரு இலட்சம் வீடுகளின் நிலை உயர்த்தப்படும். கிராமப் பகுதிகளுக்காக வீடுகளின் நிலை உயர்த்தும் திட்டம் என்ற மாநில அளவிலான புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், மொத்தம் ரூபாய் 3 கோடி ஒதுக்கீட்டில் கிராமப் பகுதிகளில் 10,000 வீடுகளின் நிலை உயர்த்தப்படும்.

### நகர்ப் பகுதி வளர்ச்சி

**106.** தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 34 சதவீதம் பேர் நகர்ப் பகுதிகளில் வாழ்கின்றனர் என்று 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் தொடக்க முடிவுகள் தெரிவிக்கின்றன. நகர்ப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் பெருமளவிற்கு இருப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை வசதிகள் திட்டமிட்ட வகையில் உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும். நாள்தோறும் உயர்ந்துவரும் மக்கள் நெருக்கத்தின் அளவிற்கேற்ப நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் வலுப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

**107.** நகராட்சி நகர்ப்பகுதி வளர்ச்சி நிதிக்குக் கூடுதலாக ரூபாய் 15 கோடியை நாங்கள் ஒதுக்கீடு செய்துள்ளோம். அதிக அளவில் நகர்ப் பகுதித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் வகையில் இந்த நிதியைப் பயன்படுத்தும் முறையை நாங்கள் விரிவாக்க இருக்கிறோம். இந்த நிதியின் மூலம் நகராட்சிகளில் ரூபாய் 20 கோடியில் புதிய திட்டங்களும், சென்னை மாநகராட்சியில் ரூபாய் 30 கோடியில் புதிய திட்டங்களும் அனுமதிக்கப்படும்.

**108.** மாநில நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்ட நிதி, சிறிய நகரங்களிலும் புதிய திட்டப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் வலுப்படுத்தப்படும். மத்திய அரசின் உதவியுடன் திருவத்திபுரம், விருத்தாசலம், பரமக்குடி, திருப்பத்தூர் (வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்), இராசிபுரம், திண்டிவனம், புஞ்சைபுளியம்பட்டி, மாமல்லபுரம் ஆகிய நகரங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் ரூபாய் 1.2 கோடி ஒதுக்கீடு என்ற அளவில் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், பேருந்து நிலையம், லாரி நிறுத்துமிடங்கள், அங்காடிகள், சாலைகள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**109.** ஏழை மக்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படை வசதித் திட்டத்தை நாங்கள் இப்போது தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ்க் குடிநீர் வழங்கல், சாலைகள், விளக்குவசதி, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளுடன். சுகாதாரப் பாதுகாப்பு, பள்ளி சாராக் கல்வி போன்ற சமூகப் பணிகள் நகர்ப்பகுதி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும். மத்திய அரசின் நிதியுதவியுடன், 57 நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் மேலும் 42 நகரங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப் படும். நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்துவதற்கு இவ்வரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

### சென்னை மாநகர மேம்பாடு

**110.** சென்னை மாநகருக்குத் தென்னிந்தியாவின் முதன்மைப் பெருநகர் என்னும் பெருமையை மீண்டும் ற்றுத் தருவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். ன்னை மாநகரின் வளர்ச்சிக்காக ரூபாய் 1,250 கோடி தவீட்டில் 5 ஆண்டுகளில் நிறைவேற்றும் பெருந்திட்ட மான்றை நாங்கள் தொடங்கக் கருதியுள்ளோம். விரைவில் தொடங்கப்படவிருக்கும் ''எழில்மிகு சென்னை-2000'' ர்ஜும் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் அடங்கும்:

| | ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| ென்னை மாநகரக் குடிநீர் வழங்கல்—கழிவு நீரகற்று திட்டம்—சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம் .. .. | 600 |
| ின் வழங்கு ஏற்பாட்டில் சீரமைப்பு .. | 225 |
| ்பாக்குவரத்து ஏற்பாடுகளின் சீரமைப்பு. | 200 |
| மழைநீர் வடிகால்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல், கழிவுப் பொருட்கள் அகற்றும் பணி முதயலிவை உள்ளிட்ட நகராண்மைப் பணிகள் .. .. — — | 135 |
| நடிசைப் பகுதி மேம்பாடும், வீட்டு வசதியும் .. .. .. .. | 75 |
| ுற நகரங்களை ஏற்படுத்துதல் .. | 15 |
| மொத்தம் .. | 1,250 |

**111.** சென்னை மாநகரின் சுற்றுச் சூழல் மேம்பாடு மற்றும் மாநகரக் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று திட்டம் ஆகிய வளர்ச்சி வங்கி உதவியுடன் இறுதியாக்கப் படும். இத்திட்டத்தின்கீழ், கிருஷ்ணா நதி நீரைத் தேக்கி வைத்து வழங்கவும், மாநகரின் குடிநீர் வழங்கல்-கழிவுநீர் அகற்று ஏற்பாட்டைச் சரி செய்வதற்குமான நீண்டகாலத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

**112.** ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சென்னை மாநகரில் மின் வழங்கல் ஏற்பாட்டை மேம்படுத்துவதற்கான பெருந் திட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாயு காப்பிடப்பட்ட அகத் துணை மின் நிலையங்களை (Indoor gas insulated sub-stations) ஏற்படுத்துவது உட்பட மின் வழங்கல் ஏற்பாட்டுப் பணியை மேம் படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும்.

**113.** சென்னை மாநகரில் போக்குவரத்து ஏற்பாட்டை மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூபாய் 100 கோடி செலவில் அண்ணா சாலையில் ஒரு பகுதி மட்டும் உயர்த்தப்பட்ட நிலையில், பேருந்துகள் மட்டும் செல்லும் மேல் நிலைப் பாதை அமைத்தல், சாலைகள்-மேம்பாலங்கள் அமைத்தல், பேருந்துகள் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

**114.** நகராண்மைப் பணித் திட்டத்தின்கீழ், மழை நீர் வடிகால்களைப்பெருமளவில் மேம்படுத்துதல், தெரு விளக்கு வசதிகள் செய்து கொடுத்தல், கழிவுப் பொருட்களை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

**115.** நகரை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சி மேற்கொள் ளப்படும். பெரிய அளவில் மனை-பணிகள் திட்டமும், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டமும் மேற்கொள்ளப்படும்.

### கல்வி

**116.** இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கல்விக்காக மொத்தம் ரூபாய் 1,298.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூபாய் 47.97 கோடியும் அடங்கும்.

**117.** ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் அனைவரும் எட்டாம் வகுப்பு வரையில் படிக்க வேண்டும் என்பதற்கு நாங்கள் முக்கியத்துவம் அளிக்க இருக் கிறோம். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் பாதியில் படிப்பை நிறுத்தி விடுகின்ற நிலைமைக்கு நாம் தீர்வு காண வேண்டியிருக்கிறது. இது பற்றி நடத்தப் பட்டுள்ள சில ஆய்வுகள், ஐந்தாம் வகுப்பு வரையில் படித்து வரும் குழந்தைகளில் ஏறத்தாழ 20 சதவீதம் பேர் இடையில் நின்று விடுகிறார்கள் என்று காட்டு கின்றன. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் இடையில் படிப்பை நிறுத்தி விடும் நிலைமையை மாற்றிட "மாறும் பள்ளி சாராக் கல்வித் திட்டம்" எனப்படும் புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். இத்திட்டம் மாநிலம் முழுவதும் உள்ள ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான பள்ளிக்குச் செல்லா குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட வழிவகுக்கும் படித்த வேலையற்றோர்க்கு நிவாரணம் அளிப்பதற் என்று உள்ள திட்டம் திருத்தியமைக்கப்பட்டு அத்தகைய இளைஞர்கள், பள்ளி சாராக் கல்வி இயக்கத்திற்குப் பணிபுரியும் வகையில் அணி திரட்ட படுவர். படித்த வேலையற்ற இளைஞர் ஒவ்வொ வரும் ஓராண்டில் 10 குழந்தைகளுக்குக் கல்வி கற்பி பதற்குரிய பயிற்சி அளிக்கப்படுவார்கள். ஒ குழந்தைக்கு ரூபாய் 100 வீதம், அவர்களுக் மதிப்பூதியமாக ஓராண்டிற்கு மொத்தம் ரூபாய் 1,00 அளிக்கப்படும். இக்குழந்தைகளுக்குப் புத்தகங்களு கல்விச்சாதனங்களும் இலவசமாக வழங்கப்படும். இ திட்டத்தின் கீழ் ஓராண்டில் 15 லட்சம் குழந்தைகள் பய பெறுவர். இதற்கான ஆண்டுச் செலவு சுமார் ரூபாய் 20 கோ ஆகும். இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கு கட்டாயமாகத் தொடக்கக் கல்வியும், படித்து வேல வாய்ப்பற்றிருப்போருக்கு வேலை வாய்ப்பும் அளி கின்ற வகையில், நாங்கள் மேற்கொண்டுள்ள இப்பெ முயற்சியை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என் நம்புகிறோம்.

**118.** கிராமக் குழந்தைகளிடையே " சிறு படிப்பறிவுத் திறனுடையவர்களைத் தேர்ந்தெடுக் திட்டம் " எனப்படும் புதிய திட்டம் ஒன் தொடங்க முடிவு செய்துள்ளோம். இத்திட்டத் கீழ்க். கிராமப் பகுதிகளிலுள்ள பள்ளிச் சிறுவ சிறுமியருக்கு அவர்கள் எட்டாம் வகுப்பை முடிக் நிலையில் தேர்வு ஒன்று நடத்தப்படும். சாதி, வேறுபாடின்றி மாவட்டம் தோறும் இத்தேர் முதல் ஐம்பது இடங்களைப் பெறும் ஐம் சிறுமியர், ஐம்பது சிறுவர் தேர்ந்தெடுக்கப்படு



அவ்வாறு தெரிந்தெடுக்கப்படுகின்ற குழந்தைகள் தொடர்ந்து பன்னிரண்டாம் வகுப்பைப் படித்து முடிக்கின்றவரை, ஒவ்வொரு குழந்தைக்கும், ரூபாய் 1,000 வீதம் ஆண்டுதோறும் ஊக்கத் தொகை வழங்கப் படும். பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 12,000-க்குள் இருக்கும் குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெறுவார்கள்.

**119.** கல்வித் தரத்தை உயர்த்தும் பொருட்டு இவ்வாண்டில் புதிதாக 1,200 இடைநிலை ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்படும். மேலும், இந்த ஆண்டில் 145 பட்டதாரி ஆசிரியர்/தமிழ்ப்புலவர் பதவிகளும் உருவாக்கப்படும். சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், இவ்வாண்டு 1,000 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படும். உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் புதிய திட்டமும் இவ்வாண்டு தொடங்கப்படும். இதற்கு மொத்தம் ரூபாய் 2.25 கோடி செலவிடப்படும். 'ஹட்கோ' நிறுவனத்திடமிருந்து இதற்கு நிதியுதவி பெறப்படும். இவ்வாண்டு இத்திட்டத்தின்கீழ் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கான கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப் படும். மேலும் 39 மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடச் சாதனங்கள் வழங்குவதற்கும் நாங்கள் நிதி ஒதுக்கியுள்ளோம். ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியளிப்பதற்கு முன்னுரிமை அளிக்க இருக்கிறோம். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கல்விப் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும்.

**120.** விரிவான பள்ளிக் கல்வித் திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம். இத்திட்டம் 7 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது. உலக வங்கியிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்காக இத்திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பவிருக்கிறோம். இத்திட்டத்தில், வாழ்க்கைத் தொழிற் கல்வி, ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் பணித்திறனை உயர்த்துதல், பள்ளிகளுக்கு உரிய குறைந்த அளவு வசதிகளைச் செய்து தருதல் முதலியனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**121.** தொழில் நுட்பக் கல்விக்குப் பெரும் முக்கியத்துவம் அளிப்போம் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளோம். அதற்காகப் புதிய திட்டமொன்று செயல்படுத்தப்படவிருக்கிறது. இதன்கீழ் மொத்தம் ரூபாய் 76 கோடி செலவில் அரசினர் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் 21-ம் அரசினர் மானியம் பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் 34-ம் மேம்படுத்தப்படும். உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ்ப் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்படுவர். பாடப் பயிற்சித் திட்டங்களின் தரமும் உயர்த்தப்படும். நவீன தொழில் நுட்பவியல் யுகத்திற்குப் பொருந்துகின்ற வகையில், இந்த மாநிலத்தில் அளிக்கப்படும் பயிற்சிகள் உயர்ந்த தரமுடையனவாக இருக்க முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**122.** நமது பல்கலைக் கழகங்களின் நிதி நிலைமை நன்றாக இல்லை. பல்கலைக் கழகங்களுக்கு இதுகாறும் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மொத்த மானியம் ரூபாய் 11.70 கோடி, இவ்வாண்டில் ரூபாய் 18.83 கோடியாக உயர்த்தி வழங்கப்படும். பல்கலைக் கழகங்களில் பல்கலைக் கழக மானியக் குழு உதவி பெறும் திட்டங்களுக்காக ரூபாய் 50 இலட்சம் தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மாநிலத்தின் வளர்ச்சிக்கு நமது பல்கலைக் கழகங்கள் பயனுள்ள வகையில் பணியாற்றுவதற்கு ஆவன செய்வதே எங்களது இலட்சியமாகும்.

**123.** தருமபுரி மாவட்டத்தில் புதிதாக அரசு மகளிர் கல்லூரி ஒன்றை நாங்கள் தொடங்க உள்ளோம் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் இதற்குரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும். அடுத்த கல்வி ஆண்டிலிருந்து இக்கல்லூரி செயல்படத் தொடங்கும்.

**124.** அண்மையில் எடுக்கப்பட்ட 1991 ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள், தமிழ் நாட்டில் 64 சதவீத மக்கள் கல்வி அறிவு படைத்தவர்களாக உள்ளனர் என்பதையும், படிப்பறிவு பெற்ற மக்கள் தொகையில் கேரளத்திற்கு அடுத்த இடத்தில் நமது மாநிலம் உள்ளது என்பதையும் தெளிவாக்குகின்றன. இது ஓரளவுக்கு மன நிறைவு அளிப்பதாக இருந்தாலும், இம்மாநிலத்தில் எழுத்தறிவின்மையை அடியோடு ஒழிப்பதற்கு நாங்கள் ஒல்லும் வகை அனைத்தாலும் முயன்று செல்லும் வாயெல்லாம் செயற்படுவோம். நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான சிறார்களுக்குப் பள்ளி சாராக் கல்வி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதுடன், மத்திய அரசு உதவியுடன் பதினைந்து வயது முதல் முப்பத்தைந்து வயது வரையில் உள்ளவர்களுக்கு எழுத்தறிவு புகட்டும் இயக்கம் ஒன்றை நாங்கள் இந்த ஆண்டில் தொடங்கவுள்ளோம். இத்தகைய நிலையில், சுமார் 78 இலட்சம் பேர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர் எனத் தெரிய வருகிறது. முதற்கட்டமாக, நடப்பாண்டில் 7 மாவட்டங்களில் இந்த இயக்கத்தை நாங்கள் மேற்கொள்வோம். மூன்று ஆண்டுகளில் இது முடிவடையும். மாவட்ட ஆட்சியரின் நேரடி மேற்பார்வையின்கீழ்ச் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு, மொத்தம் ரூபாய் 46.80 கோடி செலவிடப்படும்.

### தமிழ் வளர்ச்சி–பண்பாடு

**125.** "பழங்கலை—பண்பாட்டு இயக்ககம்" புதிதாக ஏற்படுத்தப்படும். இவ்வியக்ககம் தற்போது கலைகள், பண்பாட்டு வளர்ச்சி தொடர்பான பணிகளை ஆற்றிவரும் பல்வேறு பிரிவுகளையும் ஒரே அமைப்பில் கொண்டு வந்து, இசை, நாட்டியம், நாடகம், ஓவியம் முதலிய பழங்கலைகள் பொலிவும் மேன்மையும் பெறத் துணை புரியும்.

**126.** அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழியாக பயன்படுத்தப்படுவதை ஊக்குவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்டங்கள் தோறும், தமிழில் மிகச் சிறந்த வரைவுகள் எழுதுவோர்களுக்கு, 5 பரிசுகள் வழங்குவதன் மூலம், தமிழில் வரைவுகள் எழுதுவதற்கு ஊக்கமளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிகள் மாவட்ட நிலையில் நடத்தப்பட்டுப் பரிசுகள் உடனுக்குடன் வழங்கப்படும். இதுபோல, மாநில அளவில் மிகச் சிறந்தவையாக அமையும் 3 வரைவுகளுக்கும் பரிசுகள் வழங்கப்படும்.

**127.** மாணவர்கள் தமிழ்மொழி மீது காட்டும் பேரார்வத்தைப் பேணி வளர்ப்பதற்கு நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். கல்லூரித் தமிழ் மன்றங்கள் தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு உரிய பல்வகைப் பணிகளையும் விரும்பி மேற்கொள்ள இயலும் வண்ணம், அவற்றிற்குத் தக்க முறையில் நிதியுதவி வழங்கப்படும்.




**128.** பண்டைத் தமிழர்கள் மிகச் சிறந்த கடலோடிகளாக விளங்கினர். தமிழகத்திற்கும் உரோமானியப் பேரரசிற்கும் இடையே நடைபெற்ற பெருங்கடல் வாணிகத்தின் நம்பத்தகுந்த ஆதாரங்களாக அமையும் தடயங்கள் வங்காள விரிகுடாப் பகுதிகளில் மூழ்கிக் கிடக்கக் கூடுமெனத் தெரிய வருகிறது. பெரும் வரலாற்றுச் சிறப்புடைய தொல்பொருள் சான்றுகள் மூழ்கிக் கிடக்கும் இடங்களில் ஆய்வுகள் நடத்தி, அவற்றை மீட்பதற்குத் தேசியக் கடலியல் நிறுவனத்துடன் கூட்டாகச் செயல்படுத்தப்படும் கடல் அகழ்வாய்வுத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### மக்கள் நல்வாழ்வு–குடும்ப நலம்

**129.** "அனைவர்க்கும் நல்வாழ்வு" அளிப்பதற்குப் பாடுபடுவதே இவ்வரசின் குறிக்கோளாகும். நடப்பாண்டில், மக்கள் நல்வாழ்வு–மருத்துவப் பணிகள் குறித்த மொத்த ஒதுக்கீடு ரூபாய் 343.17 கோடியாக இருக்கும். இது முந்தைய ஆண்டில் ரூபாய் 294.68 கோடியாக இருந்தது.

**130.** கிராமப்புற மருந்தகங்களை நிலை உயர்த்துவதன் மூலம், நடப்பாண்டில், மேலும் 76 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்படும். இதனால், ஆரம்ப சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 1,505 ஆக உயரும். இதன் மூலம் தமிழ் நாட்டில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற இலக்கை எய்துகிறோம். ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்கான நிதி ஒதுக்கீடு ஆண்டொன்றுக்கு ரூபாய் 30,000-லிருந்து ரூபாய் 40,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், ரூபாய் 1.5 கோடி கூடுதல் செலவாகும்.

**131.** வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும், உரிய மருத்துவ சிகிச்சை பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகள் குறித்து உறுப்பினர்கள் நன்கு அறிவர். நடப்பாண்டில் இரண்டு புதிய திட்டங்களைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். தற்போது அரசு மருத்துவமனை ஏதுமின்றி 15 வட்டங்கள் உள்ளன. மூன்றாண்டு கால அளவில், இந்த 15 வட்டங்களிலும், புதிய மருத்துவமனைகளை ஏற்படுத்தவுள்ளோம். தற்போது வட்ட மருத்துவமனைகள் சிலவற்றில் மருத்துவ வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன. வட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் நோயாளிகள் படுக்கைகளின் எண்ணிக்கையை குறைந்த அளவு 32 ஆக அதிகரிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதன் வாயிலாகக் கூடுதலாக 222 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும். புதியதாக வட்ட மருத்துவமனைகள் தொடங்குதல், தற்போதுள்ள மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய இத்திட்டம், ரூபாய் 4 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். வட்ட மருத்துவமனைகள் அனைத்திலும் நோயாளி ஊர்தியும் இருக்கும் வகையில், ரூபாய் 50.4 இலட்சம் சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நோயாளி ஊர்திகள் விபத்து, அவசர சிகிச்சைத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு மக்களுக்கு உரிய முறையில் சிறப்பாகப் பணியாற்றும்.

**132.** மாவட்ட மருத்துவமனைகளில் உள்ள வசதிகள் மேம்படுத்தப்படும். நடப்பாண்டில் ஒரு புதிய திட்டத்தின் கீழ் ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 ஆண்டு கால அளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும், நீராவிச் சலவை இயந்திரம், எரிவாயு சமையல் அடுப்புக்கள், விபத்து–அவசர சிகிச்சைப் பிரிவுகள் முதலியவை போன்ற அடிப்படை வசதிகளைப் படிப்படியாக வழங்கும் இன்னொரு திட்டம் ரூபாய் 11.22 கோடி செலவில் நிறைவேற்றப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் படுக்கைகளின் எண்ணிக்கையைக் குறைந்த அளவு 200 ஆக அதிகரிக்கும் திட்டத்தை மேற்கொள்ளவிருக்கிறோம். நடப்பாண்டில் முதல் கட்டமாக விருதுநகர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**133.** கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதிலும், இப்பகுதிகளில் மருத்துவர்களும், பிற பணியாளர்களும் சிறந்த மருத்துவப் பணியை வழங்க வேண்டியது அவசியமாகும். கிராமப் பகுதிகளில் பணி புரியும் மருத்துவர்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கும் திட்டம் குறித்து விரிவான ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் கீழ்நிலையில், அளிக்கப்படும் சுகாதாரப் பணிகளை மேம்படுத்துவதும் அவசியமாகும். சுகாதாரப் பணிகளையும், சத்துணவுப் பணிகளையும் ஒருங்கிணைத்து கிராம அளவில் அனைத்துப் பணிகளும் ஒரே இடத்தில், அதாவது சத்துணவு மையத்திலேயே, கிடைக்கும் வகையில் மாற்றி அமைக்கக் கருதியுள்ளோம்.

**134.** மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளின் நிலையை மேம்படுத்த அதிக முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம். ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி—ஆராய்ச்சி நிறுவனத்தில் புதிதாக வசதிகள் செய்துகொடுக்க ரூபாய் 3.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுக்கு, மருத்துவ சாதனங்கள் வாங்க ரூபாய் 3.5 கோடி தனி நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**135.** குடும்ப நலத் திட்டத்திற்கு இந்த அரசு உரிய முக்கியத்துவம் அளிக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு சிறப்பாகச் சாதனை எய்தியுள்ளபோதிலும், மக்கள் தொகைப் பெருக்கம் குறைவது நீடித்திருக்கும் வகையில், புதிய நடைமுறைகளும் அணுகு முறைகளும் கையாளப்பட வேண்டி இருக்கின்றன. இந்திய





மக்கள் தொகைத் திட்டம்—V தென்னார்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் 'டேனிடா' ஆதரவு பெறும் சுகாதாரத் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**சத்துணவு**

**136.** 'புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம்' வலுப்படுத்தப்படும். இத் திட்டத்திற்கு ரூபாய் 235.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆறு மாதத்தி லிருந்து இரண்டு வயது வரையிலான குழந்தைகளின் நலப்பணியையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். உலக வங்கியின் நிதியுதவியைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த உள்ளோம். இதன்மூலம், கிராமந்தோறும் உள்ள சத்துணவு மையங்கள் அனைத்தும் சத்துணவுப் பணியோடு, சுகாதாரப் பணியையும் கவனிக்கும் நிலையங்களாக மாற்றியமைக்கப்படும்.

**137.** சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் சத்துணவு மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டு வதற்காக ரூபாய் 5 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அத்துடன், இக்கட்டிடங்களை உடனடி யாகப் பராமரிப்பதற்கு ரூபாய் ஒரு கோடி வழங்கி யுள்ளோம். சமையற்பாத்திரங்களைப் படிப்படியாகப் புதிதாக வாங்குவதற்காக ரூபாய் ஒரு கோடியும் வழங்கியுள்ளோம். இந்தச் சத்துணவு மையங்களி லுள்ள கட்டடங்களையும் வசதிகளையும் பெருமள வுக்கு மேம்படுத்த வேண்டியுள்ளது. முதற்கண் 5 மாவட்டங்களில் இப்பணிகளை மேற்கொள்வ தற்காகத் தாமாகவே முன்வந்து உதவக்கூடிய நன்கொடையாளர்களின் ஒத்துழைப்பை நாம் பெறவுள்ளோம். படிப்படியாக, அனைத்து மாவட்டங்களிலும் இதுபோலத் தாமாக முன்வந்து உதவும் கொடையாளர்களிடமிருந்து உதவிபெறும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

**138.** பாலர் பள்ளி—சத்துணவு மையங்கள், சத்துணவு மையங்களாகச் செயல்படுவதோடு மட்டுமல்லாமல் இளஞ்சிறார் பள்ளிகளாகவும் செயல்படும் வகையில், அவற்றின் நிலை உயர்த்தப்படும். இத்திட்டத்தில் தற்போது இருந்துவரும் அனைத்துப் பணியாளர் களுக்கும் இதற்கெனத் தகுந்த தனிப் பயிற்சி அளிக்கப்படும். இதன்மூலம் இந்நிலையங்கள் சிறார் களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே சிறந்த கல்வியை அளிக்கும் கல்வி நிலையங்களாகவும் அமையும்.

**139.** கருவுற்ற தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் போதிய சுகாதாரப் பணிகளை அளிக்கும் புதிய திட்டம் ஒன்றை, நாங்கள் படிப் படியாக மேற்கொள்ள இருக்கிறோம். சத்தான உணவின்றி வாடும் ஒவ்வொரு தாய்மாருக்கும், மகப்பேற்றிற்கு முன்னர் நான்கு மாதத்திற்கும் மகப்பேற்றிற்குப் பின்னர் நான்கு மாதத்திற்கும் ஆக, எட்டு மாதங்களுக்குச் சத்துணவும், சுகாதார உதவியும் அளிக்கப்படும். அத்துடன், கருவுற்றுப் பேறுகாலத் தின்போது ஆபத்தான நிலை ஏற்பட வாய்ப்புள்ள தாய்மார்களைத் தேவையான மருத்துவச் சிகிச்சைக் காக மருத்துவமனைகளுக்கு அனுப்பி, சிறந்த மருத்துவக் கவனிப்பு பெறச்செய்வதற்கான திட்ட மொன்றும் மேற்கொள்ளப்படும். கருவுற்ற தாய்மார் களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் நல்ல சத்துணவையும் சிறப்பான சுகாதாரப் பணியையும் வழங்க இருக்கின்ற இத்திட்டத்தை, உறுப்பினர்கள் உளமார வரவேற்பார்கள் என நாங்கள் உறுதி கொள்கிறோம்.

**வேலை வாய்ப்பு**

**140.** நாட்டில் வேலை வாய்ப்பில்லாத நிலை மிகுந்த அளவிற்கு நிலவுகின்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். நமது வேலைவாய்ப்பகங்களில், படித்து வேலையற்ற சுமார் 32.44 இலட்சம் பேர் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ளனர். அரசு அலுவலகங்களில் மேலும் பதவிகளை ஏற்படுத்துவது அரசுக்கு இயலக்கூடியதல்ல ; விரும்பத் தக்கதும் அல்ல. எல்லாத்துறைகளிலும் வேலைவாய்ப் பைப் பெருக்கும் வகையில் பொருளாதார நடவடிக் கைகளை முடுக்கி விடுவதே நமது இலட்சியமாகும். வேளாண்மைத் துறையில் உள்ள தேக்க நிலை அகற்றப்பட வேண்டும் ; விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சிக்கு வழிகாண வேண்டும். புன்செய் நிலங் களில் மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன், தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொணர்தல், தண்ணீரைச் செவ்விய முறையில் பயன்படுத்துதல், உணவுப் பொருள்களைப் பதப்படுத்தல் ஆகியவற்றில் இவ்வாறு வளர்ச்சியை நாம் உருவாக்க வேண்டும். வேளாண்மையிலும் மீனளம், கால்நடை வளர்ப்பு போன்ற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் நல்ல வளர்ச்சியை எட்டினோமேயானால், கிராமப் பகுதி களில் வாழும் 66 சதவிகிதம் மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பும், நல்ல வருமானமும் கிட்டும். படித்துள்ள இளைஞர்களுக்குப் பயனுள்ள வேலை வாய்ப்பை அளிக்கும் வண்ணம், நாங்கள் விரைவான தொழில் மயத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுப்போம். வளர்ந்து வரும் பொருளாதாரத்தின் வாயிலாகப் "பணி வசதிகள் அளிக்கும் துறை" (Service Sector) மிகவும் முக்கியமானதாகும், இத்துறையில் வேலைவாய்ப்பு வசதிகள் எந்த அளவுக்கு அதிகரிக்கப்படலாம் என்பதை நாங்கள் விரிவாக ஆய்வு செய்வோம்.

**141.** வளர்ச்சியடைய வேண்டும் என்பது நமது குறிக்கோளாக இருக்கையில், வேலையில்லாதவர்கள் பயனுள்ள பணியொன்றை ஆற்றிட வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். படித்து வேலையற்றிருக்கும் 1.5 இலட்சம் பேருக்கு பயனுள்ள வேலை அளிக்கும் வகையில் மாநிலப் பள்ளி சாராக் கல்வித்திட்டத்தை நாங்கள் தொடங்குவோம். சுமார் 7 இலட்சம் பேருக்கு ஆண்டில் சராசரியாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் வகை செய்கிறது. நாம் தொடங்கியுள்ள ஊரகத் தொழில்கள் துணைத் திட்டம் ஒரு இலட்சம் பேருக்கு சுய வேலை வாய்ப்பை அளிக்கும். ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பை நல்கும். ஆதி திராவிடர் வேலை வாய்ப்புத் துணைத் திட்டம் 65,000 பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், நேரு வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம். இவ்வாறாக கூடுதலாக வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்க ஒருமித்த முயற்சி மேற்கொள்ளப்படும். அதே சமயத்தில், இவ்வேலை வாய்ப்பு வசதிகளை அளிக்க

வல்லதாகப் பொருளாதாரத்தில் போதிய வளர்ச்சியை ஏற்படுத்த நாங்கள் முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம்.

### ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலன்

**142.** ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் வறுமையில் உழலும் வாழ்க்கையை மேம்படுத்தவும், அவர்களுக்கு சமூகத்தில் சம உரிமையைப் பெற்றுத் தரவும் இந்த அரசு பாடுபடும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காகப் புதிய 10 அம்சத் திட்டமொன்றைத். தொடங்க முடிவு செய்துள்ளோம். இந்தத் திட்டம் ஐந்தாண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்பட விருக்கிறது. இதன் மூலம், நமது மாநிலத்தில் வாழும் ஆதிதிராவிடர்—பழங்குடி மக்கள் வாழ்க்கைத் தரம் பெருமளவிற்கு உயர்ந்திடும் என்பது எங்களது திண்ணமான நம்பிக்கையாகும்.

**143.** இந்தப் புதிய 10 அம்சத் திட்டத்தில் பின்வரும் பணிகள் அடங்கும் :—

* ஆதிதிராவிடர்—பழங்குடியின மக்களுக்காகப் பொருளாதார மேம்பாட்டுப் பணித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இவை அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் செயற்படுத்தப்படும். இதன் மூலம் 3.5 இலட்சம் குடும்பங்கள் உதவிபெறும். முதற்கண், 1991–92ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 65,000 குடும்பங்கள் பயன்பெறும்.

* ஆதிதிராவிடர்—பழங்குடி மக்களுக்கு 10,000 கிணறுகள் இலவசமாக வெட்டித் தரப்படும். இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர், பழங்குடி மக்களின் நிலங்களுக்குப் பாசனமளிக்கக் குடும்பத்திற்கு ஒரு கிணறு விதம் வெட்டித் தரப்படும்.

* ஆதிதிராவிடர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 5,000 ஆதிதிராவிடர்கள் / பழங்குடியினர் தொழில் தொடங்குவதற்கு உதவி பெறுவார்கள். நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ், 1,000 ஆதிதிராவிடர்களுக்குக் குறிப்பிட்ட உரிய உதவி அளிக்கப்படும்.

* தொழில் பயிற்சிப் பள்ளியில் கல்வித் தகுதி பெற்ற ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் 5,000 ஆதிதிராவிடர்கள் உதவிபெறுவார்கள். நடப்பாண்டில் 1,000 ஆதிதிராவிடர்களுக்கு உதவி நல்கப்படும்.

* அடுத்த ஐந்தாண்டுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் குடும்பங்களுக்கு இலவசமாக மொத்தம் 4 இலட்சம் வீட்டு மனைகள் வழங்கப்படும். நடப்பாண்டில், 75,000 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும்.

* ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினருக்காகப் பெருமளவில் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 50,000 வீடுகள் கட்டித்தரப்படும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த 5 ஆண்டுகளில் 3 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும்.

* இதுவரையில் குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாத 1,418 ஆதிதிராவிட குடியிருப்புப் பகுதிகளுக்கு நடப்பாண்டில் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படும். முக்கியக் குடியிருப்புகளில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருந்தாலும், ஆதிதிராவிடர் — பழங்குடி மக்கள் வாழ்ந்து வரும் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படாமலுள்ளது. அத்தகைய, 1,007 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். இவ்வாறாக அடுத்த 3 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்திற்கும் போதிய குடிநீர் வசதி செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 1,063 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு இதுவரை இணைப்புச் சாலைகள் அமைக்கப்படவில்லை. இந்தக் குடியிருப்புகளில் 500 குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலைகள் உருவாக்கப்படும். எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அடுத்துவரும் ஆண்டுகளில் அமைக்கப்படும்.

* ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குத் தெருவிளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். இப்பணி, இவ்வாண்டில் தொடங்கப்பட்டு, அடுத்துவரும் ஆண்டுகளில் முடிக்கப்படும்.

* அடுத்த 5 ஆண்டுகளில் 1.5 இலட்சம் ஆதிதிராவிடர் வீடுகளுக்கு 'குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின்விளக்கு வசதி செய்து கொடுக்கப்படும். நடப்பாண்டில், 30,000 ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்படும்.

**144.** ஆதிதிராவிடர்கள் அனைத்து வழிகளிலும் முன்னேறுவதற்கு அடிப்படை வசதிகளையும், பொருளாதார வளர்ச்சிப் பணிகளையும் அளிக்கும் இந்தப் பத்து அம்சத் திட்டத்தை உறுப்பினர்கள் அனைவரும் பெரிதும் வரவேற்பார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

### பிற்படுத்தப்பட்டோர் நலன்

**145.** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசுதான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி, இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக அதிக இட ஒதுக்கீடு செய்த மாநிலம் தமிழகமே என்னும் பெயரை ஈட்டித் தந்துள்ளது. மண்டல் கமிஷன் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் சமயத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதம் என மத்திய அரசால் ஒரு கொள்கை முடிவாகச் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த இட ஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் உள்ள வேலை வாய்ப்பிற்கும், கல்வி நிலையங்களில் சேருவதற்கும் பொருந்தச் செய்ய வேண்டும் என்றும் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.





**146.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீடு 1990–91-ல் ரூபாய் 30.70 கோடியாக இருந்தது. அது ரூபாய் 41.35 கோடியாகத் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குச் சிறப்பான கல்வி வசதிகளை அளிப்பதில் நாங்கள் கவனம் செலுத்துவோம். பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைக் கவனமாகத் தயாரிப்போம். துறை நடத்தும் 280 பள்ளிகளுக்குச் சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். மாணவ இல்லங்களுக்கு நல்ல கட்டிடங்களைக் கட்டித் தருவோம். நடப்பாண்டில் ரூபாய் 3.95 கோடி மொத்த செலவில் 44 மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும். அகில இந்தியப் பணிக்காகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சிறப்புப் பயிற்சி நிலையம் புதிய மையத்தில் செயல்படத் தொடங்கும்; அங்குள்ள வசதிகள் மேம்படுத்தப்படும்.

**147.** புதிய பொருளாதார வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு இவ்வாண்டில் ரூபாய் 1 கோடி கூடுதல் பங்கு மூலதனம் வழங்கப்படும். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களுக்குச் சிறு பாசன வசதி அளிக்கும் புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும். இதற்காக ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்கள் நிலங்களில் குழாய்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள், திறந்தவெளிக் கிணறுகள், முதலியவற்றை அமைக்க அரசு மூலதன உதவித் தொகை அளிக்கும்.

### மகளிர் மேம்பாடு

**148.** நமது சமுதாயத்தில் மகளிர் நிலை மேம்படுவதற்கு இவ்வரசு முழுமூச்சுடன் பாடுபடும். ஏற்கனவே, பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையில் மகளிரை மட்டுமே ஆசிரியர்களாக நியமித்திட இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மகளிர் வேலைவாய்ப்பு பெறுவது குறித்துக் கண்காணிப்பதற்காகச் சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிக்குழு நிறுவப்படும்.

**149.** மகளிருக்குக் கல்வி பெறும் வாய்ப்பு வசதிகள் தங்குதடையின்றி அளிக்கப்பட்டால் மட்டுமே நமது சமுதாயத்தில் மகளிர் நிலை உயர முடியும் என்பது தெளிவு. எனவே, பெண்குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுத் தொடர்ந்து பயின்று வரத்தேவையான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும்.

**150.** மகளிர் பொருளாதாரத் தன்னிறைவைப் பெறவேண்டும் என்பதே நம்முடைய குறிக்கோளாகும். தற்போது மகளிர்க்கான சிறுசிறு பணித்திட்டங்கள் பல்வேறு துறைகளில் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தையும் ஒன்றாக இணைத்து ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்க இவ்வரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இத்திட்டம் கிராமப் பகுதிகளில் உள்ள மகளிர் எல்லா வழிகளிலும் முன்னேற ஆவன செய்யும். இத்திட்டத்தின்கீழ் ஓர் இலட்சம் மகளிர் நிலையான சுயவேலைவாய்ப்புப் பெற்றிடவேண்டும் என்பதே எமது குறிக்கோள். கிராமப் பகுதிகளில் வாழும் பெண்களைக் குழுக்களாகச் சேர்க்கவும் இக்குழுக்கள் ஒவ்வொன்றும் பயனுள்ள வேலைகளில் ஈடுபட அவர்களுக்கு ஆர்வமும் ஈடுபாடும் வரும் வகையில் நாங்கள் பயிற்சி கொடுக்கவும் இருக்கின்றோம். இப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் அவர்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியும். இன்னும் சொல்வதானால், இம்மகளிர், தாமே ஒன்றுகூடி, அணிதிரண்டு தனித்தனிக் குழுக்களாக அமைத்துக்கொண்டு, அரசு அமைப்புகளிடமிருந்து உரிய உதவிகளைப் பெற்று, தமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள உரிய நடவடிக்கைகளை நாம் எடுக்கக் - கருதியுள்ளோம்.

இத்திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது அத்துணை எளிதான செயலன்று. ஏனெனில், அவர்கள் ஒன்றுகூடி, தங்களுக்குள் குழுக்களை அமைத்துக்கொண்டு, ஒவ்வொரு குழுவும் இன்னின்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டியுள்ளது. நாம் வெறுமனே ஏட்டளவில் இலக்கு குறிப்பிட்டு அதனை எய்த முனையவோ அவசர கோலத்தில் பணிகளைச் செய்யவோ மாட்டோம். மாறாக, இந்த மகளிர் குழுக்கள் உண்மையில் நிலையான முன்னேற்றம் பெற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். இந்தத் திட்டத்தை உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**151.** நடப்பு ஆண்டில் 'மகளிர் தொழில் முனைவோர் உருவாக்கும் திட்டம்' எனும் புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 800 மகளிர் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தொழில் முனைவோர் ஆவதற்கு உரிய பயிற்சி அளிக்கப்படும்.

**152.** நடைபாதைக் கடைகள், பூ, காய்கறி வியாபாரம், வீட்டுக்குப் பயன்படும் பொருட்கள் முதலியவை போன்ற, பல்வேறுபட்ட சிறு வணிகங்களில் பெண்கள் பெருமளவில் ஈடுபட்டுள்ளார்கள். இம்மகளிர் வியாபாரம் செய்வதற்காகக் கூடுதல் வட்டி விதங்களில் கடன் பெறுகின்றார்கள். இது, இவர்களுக்குக் கிடைக்கும் நிகர வருமானத்தை குறைக்கிறது. எவ்வித அமைப்பின்கீழும் வராத இத்தகைய சிறு வணிகத்தில் ஈடுபட்டுள்ள மகளிருக்கு உதவியளிக்கும் சிறப்புத் திட்டமொன்றைத் தொடங்க முடிவு செய்துள்ளோம். இதற்காகக் கூட்டுறவு மத்திய வங்கிகள் அனைத்திலும் மகளிர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடனில் குறைந்தது ஒரு சதவீதமாவது மகளிருக்கு வழங்குமாறு பார்த்துக் கொள்ளப்படும். தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 170 மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்படும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கும்.

### தொழிலாளர் நலன்

**153.** தொழிலாளர் நலனை மேம்படுத்த அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும், இவ்வரசு மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் ஏற்கெனவே அறிவித்தபடி, பெண் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு பெறும் நிலையை உருவாக்க, இரவு 7 மணிக்கு மேலும் பெண் தொழிலாளர் பணிபுரிய வகை செய்யப்படும். இரவு 7 மணிக்கு மேல் பணி புரியும் பெண் தொழிலாளர்கள் வீடு செல்லத் தேவையான போக்குவரத்து வசதிகளையும்,

அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வசதிகளையும் நிருவாகம் செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும்.

154. அமைப்பின் கீழ் வராத துறையில், குறிப்பாகப் பீடித் தொழிலில் பெண்களின் வேலை நிலைமைகளையும், பெண்கள் தொடர்பாகத் தொழிலாளர் நலச் சட்டங்கள் செயல்படுத்தப்படுவது குறித்தும் மேற்பார்வையிட, தொழிலாளர் நலத் துறையில் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவுள்ளோம்.

155. தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கு கொள்வதை நாங்கள் வரவேற்கிறோம். இதற்கு வகை செய்ய விரைவில் சட்ட முன்வடிவைக் கொண்டு வர வேண்டுமென மத்திய அரசைக் கேட்போம்.

156. தொழிலாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க தொழிலாளர் நல வாரியம் 3 புதிய வளாகங்களை ஏற்படுத்தும். இந்த வளாகங்களில் முதியோர் கல்வி, குழந்தைகள் காப்பகம், விளையாட்டு-மனமகிழ் வசதிகள், நூலகம் முதலியன அடங்கும்.

157. அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்குப் போதிய நல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும், உரிய பாதுகாப்பளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவர்களுக்குரிய சிறந்த பணி நிலைமைகளைப் பெற்றுத் தருவதற்கு உரிய பல்வேறு நலச் சட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவோம். தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இயலும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் குறைந்த அளவு ஊதியங்களை உயர்த்த உரிய நடவடிக்கை எடுப்பது எங்கள் கடமை. இவற்றைக் கருத்திற் கொண்டு, அச்சுப்பணி, தீப் பெட்டி, பட்டாசுத் தொழில், மலைத் தோட்டம், எண்ணெய் ஆலைகள், செயற்கை வைரக்கற்களைப் பட்டை தீட்டுதல், பொறியியல் சுட்டுமான த் தொழில், தையற் தொழில், திரையரங் கள், கம்பளி - தரை விரிப்புகள் - சால்வைகள் செய்தல், மோட்டார் வண்டிகள் பட்டறை, கைத்தறிப்பட்டு நெசவு, உப்பளங்கள், தேங்காய் நா உரித்தல், காகிதம் தயாரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குறைந்த அளவு ஊதியம் விரைவில் திருத்தியமைக்கப்படும். உழவுத் தொழிலாளர்களின் குறைந்த அளவு ஊதியங்களை மிக விரைவில் நாங்கள் மாற்றியமைக்க இருப்பதையறிந்து உறுப்பினர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைவார்கள் என நம்புகிறோம்.




158. பள்ளிக்குச் சென்று கல்வி கற்று மகிழ்ச்சியான வாழ்வை நோக்கி நடைபோட வேண்டிய காலத்தில் தொழிற்சாலைகளில் குழந்தைகள் தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படுவது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்கள் வேதனையைத் தெரிவித்துள்ளார்கள். கொடிய வறுமையே, பலவேளைகளில், கல்விச்சாலை செல்ல வேண்டிய துள்ளுநடைக் குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யத் துரத்துகிறது. இது போல, வறுமை வாய்ப்பட்ட குழந்தைகள் வேலைக்குச் செல்லும் அவல நிலையினை அறவே தடை செய்ய நமக்குப் போதிய அதிகாரங்கள் வேண்டும் என்று கூறும் அதே சமயம், 'குழந்தைத் தொழிலாளர்கள்' உருவாக இடம் தரும் சம்பந்தப்பட்ட அனைவரும்-பெற்றோரும் வேலை அளிப்பவர்களும் - கொண்டிருக்கும் மனப் போக்கில் மாறுதல் ஏற்படச் செய்யும்' வகையில் நாம் இதன் தீமைகளை எடுத்துக்கூறி அறிவுறுத்தப் பெரிதும் பாடுபடுவோம்.

## ஏழை மக்களுக்கான நலத் திட்டங்கள்

159. அனைத்துத் துறைகளிலும் விரைவான வளர்ச்சிக்கு உயர் முக்கியத்துவம் அளிக்க இருக்கும் அதே சமயத்தில், ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் நலனுக்கான சிறப்புத் திட்டங்களின் பலன், அவர்களைச் சென்று சேர ஆவன செய்வோம்.

160. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வாரத்திற்கு ஒருமுறை அரைக்கிலோ அரிசியும், இலவசமாக உணவும், அல்லது, அவர்கள் விருப்பத்திற்கு இணங்க வாரத்திற்கு ஒருமுறை ' ஒரு கிலோ அரிசி என்ற தன்மையில் இலவசமாக வழங்கி வந்தது. இத்திட்டத்தை முந்தைய அரசு நிறுத்தி விட்டது. நாங்கள் ரூபாய் 8.27 கோடி ஆண்டுச் செலவில், முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவசமாக அரிசி வழங்கும் திட்டத்தைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான 15–9–91 முதல் மீண்டும் கொண்டு வர இருக்கிறோம். அவ்வாறு முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்க்கு ஆண்டுக்கு இரண்டுமுறை இலவச வேட்டி அல்லது புடவை தொடர்ந்து வழங்க உள்ளோம்.

161. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், சிறு உழவர், உழவுத் தொழிலாளர், கிராமத்தொழிலாளர்கள் ஆகியோருக்கான காப்புறுதித் திட்டமொன்றைக் கொண்டு வந்தார். இத்திட்டத்தின்கீழ், வருவாய் ஈட்டும் தொழிலாளர் இறக்க நேரிடின் அவர் குடும்பத்திற்கு ரூபாய் 5,000 வழங்கப்பட்டது. இத்திட்டத்தை முந்தைய அரசு கைவிட்டு விட்டு. அவர்களுக்கு ரூபாய் 3,000 மட்டும் வழங்கும் புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இனி, நாங்கள் இத்திட்டத்தை மாற்றியமைத்து குடும்பத் தலைவர் இறக்க நேரிடின் அவரது குடும்பத்திற்கு பழையபடி ரூபாய் 5,000 வழங்கவுள்ளோம். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

162. கைத்தறி நெசவாளர்களுக்காகக் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் புதிய திட்டமொன்றைக் கொண்டு வரவிருக்கிறோம். இத்திட்டத்தின்கீழ், ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர் ஒருவர் இறக்க நேரிடும்பொழுது, பத்தாண்டு காலத்திற்கு அவருடைய குடும்பத்திற்கு மாதம் ரூபாய் 250 ஓய்வூதியமாக வழங்கப்படும். அவ்வாறு செய்யும்பொழுது அவருடைய குழந்தைகள் பிற்காலத்தில் தங்கள் வாழ்க்கையைத் திறம்பட அமைத்துக் கொள்ள முடியும்.

163. விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் தற்போது மோட்டார் வண்டி விபத்துக்கள் இடம் பெறவில்லை. ஏனெனில், அத்தகைய விபத்துக்களில் இழப்பீட்டுத் தொகை கோரிப் பெறமுடியும். மோட்டார் வண்டிகள் விபத்தில் இறந்து போவோருக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காக 1978–ல் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிவாரணத் தொகையைப் பின்வருமாறு உயர்த்த நாங்கள் முடிவு செய்துள்ளோம் :—

| | தற்போது வழங்கப் படுவது. | இனி வழங்கக் கருதி யுள்ளது. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| இறந்து விட்டால் | 1,000 | 3,000 |
| நிரந்தரமாக இயலாமையடைந்தால் | 800 | 1,500 |
| ஒரு கண் அல்லது உடலில் ஒரு உறுப்பை இழந்தால் | 400 | 1,000 |
| சிறு காயம் ஏற்பட்டால் | 50 | 100 |

இத்திட்டத்திற்குக் கூடுதலாக ரூபாய் 1.5 கோடி செலவாகும். இந் நிவாரணத் தொகை முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து கொடுக்கப்படும். மோட்டார் வண்டி வரி வரவுகளில் ஆண்டுதோறும் ஒரு சதவீதம் இந்நிதிக்கு மாற்றப்படும்.

164. இந்த அரசு முதியோருக்குப் படிப்படியாக வசதிகளைச் செய்துதரும். இத்திட்டத்தின்கீழ் முதியோர் இல்லங்கள் தொடங்கப்படும். பெரிய அளவிலான முதியோர் இல்லங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நடப்பாண்டில் ஐந்து இல்லங்கள் தொடங்கப்படும்.

## அரசுப் பணியாளர்களுக்குப் பயன்கள்

165. ஐந்தாம் சம்பளக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியதையடுத்துத் தீர்க்கப்படாமல் எஞ்சியுள்ள குறைகள் குறித்த முறையீடுகள் அனைத்தையும் பரிசீலிக்கும் பொறுப்பு, அலுவலர் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தொகுப்புச் சம்பளம் பெறும் பணியாளர் உள்பட அனைத்துப் பணியாளர்களுக்கும்; குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ்க் கிடைக்கும் தொகை ரூபாய் 40,000-லிருந்து ரூபாய் 60,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

166. அரசுப் பணியாளர் நல்வாழ்வு நிதி ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும். இந்நிதியானது, அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைப்பெற வசதி இல்லாத பெரிய, அரிய அறுவை சிகிச்சைகளுக்கு ரூ. 25,000 வரையிலும் மானிய உதவியாக அளிக்கப் பயன்படுத்தப்படும். செலவு அதிகம் ஆகும் தனிச் சிறப்பு வாய்ந்த இனங்களில் எளிமையான வட்டிவிகிதத்துடன் கூடிய கடனும் வழங்கப்படும். இந்நிதிக்காக அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 5 மட்டுமே தங்கள் பங்காக வழங்க வேண்டும். அதற்குச் சமமான தொகையை அரசு வழங்கும். இவ்வாறு, ரூபாய் 1 கோடி அளவிற்கு நிதி ஏற்படுத்தப்படும்.

167. அரசுப் பணியாளர்களுக்கான வீடு கட்டும் முன்பணத்துக்காக மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 16.36 கோடியாக இருந்தது ரூபாய் 18.88 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. வீடு கட்டும் முன்பணம் கேட்டு வந்த விண்ணப்பங்களில், வழங்கப்படாமல் அதிக விண்ணப்பங்கள் தேங்கியிருப்பதால், இவ்வாண்டில் நிதி நிறுவனங்களுடன் ஏற்பாடு செய்து கூடுதலாக ரூபாய் 10 கோடி கிடைக்கச் செய்ய இருக்கிறோம்.

168. ஓய்வூதியம், ஏனைய ஓய்வுக்கால அனுகூலங்கள் ஆகியவற்றை முடிவு செய்வதில் காலத் தாழ்வு ஏற்படுத்தக்கூடிய தற்போதைய நடைமுறைகளை விரிவாக ஆய்வு செய்தோம். ஓய்வூதியத்தை விரைந்து முடிவு செய்யும் நடைமுறையை எளிதாக்கும் வகையில், நீண்ட கால முன்பண விவரங்களையெல்லாம் பதிவு செய்ய, தாமே பணம் பெறும் அதிகாரிகளுக்குப் '' பாஸ் புத்தக ஏற்பாடு '' தொடங்கப்பட இருக்கிறது. கடைசி ஊதியச் சான்றிதழ்களை மாநிலக் கணக்குத் துறைத் தலைவருக்கு அனுப்புவதை விட்டு விட்டு, பணிக்கொடைக் கோரிக்கைகளை முடிவு செய்ய, துறைத் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் ஓய்வுகால அனுகூலங்களை விரைந்து முடிவு செய்வதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

## நிருவாகச் சீர்திருத்தம்

169. குறிக்கோள்களை அடையக்கூடியதாகவும் சிறந்த முறையில் பணியாற்றக் கூடியதாகவும் இருக்கத்தக்கவகையில் நிருவாகத்தைச் சீர்திருத்தி அமைக்க நாங்கள் விரும்புகின்றோம். மேலும், பொது மக்களின் தேவைகளை உணர்ந்து உடனுக்குடன் பணியாற்றும் வகையில் நிருவாகத்தைச் சீர்திருத்தி அமைக்கப்பாடுபடுவோம்.

170. மாவட்ட அளவில் சிறப்பாக நிருவாகப் பணிகள் நடந்தேறும் வண்ணம் பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கவுள்ளோம். தற்போதுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டம் என்ற புதியதொரு மாவட்டத்தை ஏற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எஞ்சியுள்ள பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் பணியைப் படிப்படியாக நிதி ஆதார வசதிக்கேற்ப மேற்கொள்வோம்.

171. நிருவாக அமைப்பானது, மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பணியாற்றும் வகையில் மாவட்ட வருவாய் நிருவாகத்தை மாற்றியுள்ளோம். ஒவ்வொரு வட்டமும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் துணை வட்டாட்சியர் பொறுப்பின் கீழ்ச் செயல்படும். சாதிச் சான்றிதழ் வழங்குதல், பட்டா மாற்றம் செய்து தருதல் போன்றவற்றில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

172. பொது மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்ற ஏதுவாக இருக்கும் வகையில் அலுவலக நடைமுறைகளையும் ஏற்பாடுகளையும் எந்த வகையில் சீர்திருத்தி அமைக்கலாம் என்பது குறித்து ஆய்வு செய்து







ஒரு திட்டவட்டமான செயல் திட்டத்தை மூன்று மாத கால அளவிற்குள் அளிக்குமாறு முக்கியத் துறைச் செயலாளர் குழு ஒன்று கேட்டுக் கொள்ளப்படும். இந்தக் குழு அன்றாட நடைமுறைகளிலுள்ள குறைபாடுகள் குறித்து ஆய்வு செய்து, செய்ய வேண்டிய மாற்றங்கள் குறித்துக் கருத்துகளைத் தெரிவிக்கும்.

173. கள அலுவலர்கள் ஆற்றும் பணித் தரத்தினை உன்னிப்பாகக் கண்காணித்து வருமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவர். கள அலுவலர்கள் சுற்றுப் பயணங்கள் மேற்கொள்ளும் பொழுது அவர்கள் ஆற்றும் பணி தரமிக்கதாக அமைவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். நல்ல சாதனைகளுக்கு ஊக்கமளிப்பதற்கான புதிய திட்டங்கள் தொடங்கப்படும்.

174. திட்டத்தின் மூலம் பயன்பெறக் கூடியவர்கள் அத்தகைய பயன்களை எவ்வித அலைக்கழிப்புமின்றிப் பெறக்கூடிய வகையில் திட்டங்கள் அனைத்தும் வடிவமைக்கப்படும். அனைத்து வகையான நலப் பணித் திட்டங்கள், பொது விநியோக முறை, சான்றிதழ்கள் வழங்குதல் ஆகியவற்றுக்கும் பொருந்தும். சுருங்கக்கூறின், சாதாரண மனிதன் அரசை அணுகக் கூடிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இது பொருந்தும்.

### வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

175. இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவது என்பது சுமை மிகுந்த ஒரு கடுமையான பணியாகவே இருந்தது. இந்த அரசு பதவி ஏற்ற போது, அரசின் நிதிநிலை பெருத்த இடர்ப்பாட்டிற்கு உள்ளாகியிருந்தது. நாங்கள் பதவி ஏற்றபோது 1991-92ஆம் ஆண்டுக்கான மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 898 கோடியாக இருந்தது. மலிவு விலை மதுவை ஒழிப்பது குறித்து மக்களுக்கு நாங்கள் அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டியிருந்தது. மதுக் கடைகளை மூடுவது என்னும் முடிவு புதிய அரசு மேற்கொள்ளும் முதல் கொள்கை முடிவாகும் என நமது முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்பதிலும், எங்கள் உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும் என்பதிலும் நாங்கள் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை காரணமாகக் கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழலிலும் பொது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். இவ்வாறாக, மலிவு விலை மதுக் கடைகளை மூடியதால் ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ. 322 கோடி உட்பட, மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 1,220 கோடியாக உள்ளது. ஆனால், நாம் நிறைவேற்ற வேண்டிய திட்டப் பணிகளுக்கான மதிப்பீடோ 1991-92ஆம் ஆண்டில் ரூபாய் 1,600 கோடி ஆக உள்ளது. நமது வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் நாம் தோல்வி அடையாதிருக்க வேண்டுமானால், மிகவும் நிதி நெருக்கடி நிறைந்த இச்சூழ்நிலையைச் சமாளிக்கச் சிறப்பு நடவடிக்கைகள் சிலவற்றை எடுக்க வேண்டியிருப்பதன் இன்றியமையாமையை, உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

176. வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 4,397.46 கோடி என்பதையும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவுகள் ரூபாய் 4,814.09 கோடி என்பதையும், இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 416.63 கோடியாகும் என்பதையும், 1990–91ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் காட்டுகின்றன. 1990–91ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்த பற்றாக்குறையுடன், மூலதனக் கணக்கிலும் ஏனைய கணக்குகளிலும் ஏற்பட்டுள்ள பற்றாக் குறையையும் சேர்த்து, 1990–91ஆம் ஆண்டிற்கான மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 510.10 கோடியாகும் என மதிப்பிடப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், இந்தப் பற்றாக்குறை ரூபாய் 268.10 கோடியாகக் குறையும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.



177. வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூபாய் 4,975.65 கோடியாகும் என்பதையும், வருவாய்க் கணக்கில் செலவுகள் ரூபாய் 5,295.16 கோடியாகும் என்பதையும் இதில் பற்றாக்குறை ரூபாய் 319.51 கோடியாகும் என்பதையும் 1990–91ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு காட்டுகிறது. மூலதனக் கணக்குகள், ஏனைய கணக்குகள் ஆகியவற்றின் மொத்தத்தில் ஏற்பட்ட விளைவைக் கருத்தில் கொண்டு, 1990–91ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

178. 1991–92ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, வருவாய் கணக்கில் வரவுகள் ரூபாய் 5,347.34 கோடியாகவும், செலவுகள் ரூபாய் 6,249.83 கோடியாகவும் இருப்பதால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 902.49 கோடி ஏற்படும். ஏனைய கணக்குகளின் கீழுள்ள மொத்தப் பற்று–வரவுகளைக் கருத்தில் கொண்டால், 1991–92-ல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 577.41 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. 1990–91 திருத்த மதிப்பீட்டின்படி, முடிவான பற்றாக்குறை ரூபாய் 207.94 கோடியுடன், 1991–92-ல் மொத்தப் பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும். இப்பற்றாக்குறை முக்கியமாக இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்பே நிலவிய சூழ்நிலைகளாலேயே ஏற்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடலாம். மொத்தப் பற்றாக்குறையை ரூபாய் 785.35 கோடியாகக் குறைப்பதில், விற்பனை வரி, வசூல் சீரமைப்பால் கிடைக்கும் கூடுதல் தொகை ரூபாய் 52 கோடியும் 'நெபார்டு'-க்கு கடன் நிவாரணத் திட்டத்தின் கீழான கடன் தொகையை மாநில அரசு திருப்பிச் செலுத்தாததால் ஏற்பட்ட மீதத் தொகையான ரூபாய் 37.22 கோடியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

179. இப்பற்றாக்குறை ரூபாய் 785.35 கோடி மாநில அரசுக் கணக்கில் மட்டுமே ஏற்பட்ட பற்றாக்

குறையைக் காட்டுவதாகும். தமிழ்நாடு மின் வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட ஈடு செய்யப்படாத பற்றாக்குறை இதில் அடங்காது. அவற்றில் ஏற்பட்ட பற்றாக்குறை சுமார் ரூபாய் 330 கோடி எனத் தனியே மதிப்பிடப்பட்டுள்ளது.

**180.** தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஓரளவுக்கு ஈடு செய்யத் தற்போது நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பாகவும் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது. இந்த நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளை நிறைவு செய்ய உரிய நடவடிக்கை எடுப்போம்.

**181.** நமக்குள்ள பெரும் பிரச்சினை, செலவினங்கள் மிகவும் பெருகியிருப்பதே ஆகும். செலவில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பைக் குறைப்பதற்கு நாங்கள் பாடுபட வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவது தொடர்பாகத் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மின் கட்டண இழப்பீட்டுத் தொகையாக ரூ. 350 கோடிக்கு ஒதுக்கீடு செய்துள்ள போதிலும், இந்த ஆண்டு அதனை ரூபாய் 250 கோடியாகக் குறைக்க நாம் முடிவு செய்துள்ளோம். உணவு மானியத் தொகை தொடர்பான நிதிச்சுமை கணிசமாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் நாங்கள் ரூபாய் 346 கோடியை மானியத் தொகையாக வழங்கியுள்ளோம். ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ளது போல, இங்கும் பொது விநியோக முறையிலிருந்து குறைந்த விலையிலான அரிசியை வாங்குவதற்கு ஒரு குறித்த வருமான வரம்புக்கு உட்பட்டவர்கள் மட்டுமே தகுதி பெற்றவர்கள் என அறிவிப்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

**182.** செலவில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். செய்யும் செலவிற்குரிய பயன் கிடைக்கும் அடிப்படையிலான வரவு-செலவுத்திட்டத்தின் ஒருபகுதியாகச் செலவினங்கள் அனைத்தையும் நாங்கள் ஆய்வு செய்வோம். வீணான செலவைக் குறைக்க நாம் நடவடிக்கைகள் எடுப்போம். செலவில் சிக்கனத்தைக் கொண்டு • வருவதற்கான இந்த நடவடிக்கைகளின் மூலம், பற்றாக்குறையை ரூபாய் 645.35 கோடியாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**183.** மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு மேலும் நிதி உதவி அளிப்பது குறித்து இந்தியப் பிரதமருடனும், மத்திய நிதி அமைச்சருடனும், மத்திய திட்டக்குழு துணைத் தலைவருடனும் ஜூலைத் திங்களில் விரிவாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தியுள்ளார்கள். தமிழ்நாட்டுக்கு நிதி உதவி அளிப்பது தொடர்பாக விரைவில் அனுமதி வழங்குமாறு, முதல்வர் மீண்டும் பிரதமருக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் அண்மையில் கடிதம் எழுதியுள்ளார்கள். மிகக் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிக்கத் தனி நிதி உதவியை அளிக்குமாறு நாங்கள் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம். இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்னரேயே இந்த நிலை ஏற்பட்டு விட்டதால், இந்த நிதி உதவியை அளிக்க வேண்டுவது மத்திய அரசின் கடமையாக இருக்கிறது.

**184.** சிறப்பு நிதி உதவிக்காக விரைவில் அனுமதி வழங்குமாறு மத்திய அரசிடம் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும், இப்பற்றாக்குறையை ஓரளவு ஈடு செய்யப் பிற நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

**185.** வறுமையில் உழலும் ஏழை எளிய மக்களுக்கு இயன்ற வழிகளிலெல்லாம் நிவாரணம் அளிக்க இவ்வரசு ஓயாமற்பாடுபடுவதுடன், வரிவிதிப்பு-வருமானப் பெருக்குக் கொள்கைகள் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்படும்.

வரிகள்

**186.** அரசின் மிகப் பெரிய நிதி ஆதாரம் வணிக வரியாகும். எங்களது தேர்தல் அறிக்கையில், நேர்மையாக வரியைச் செலுத்துவோர் மதித்து நடத்தப் படுவார்கள் என்றும், வரி ஏய்ப்பவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்றும் உறுதியளித்துள்ளோம். இவ்வாறு செயல்பட வரி விதிப்பு அமைப்புகளிலும், விகிதங்களிலும் மற்றும் நடைமுறைகளிலும் பெரிய சீர் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டியது அவசியம். வரி விதிப்புக் கட்டமைப்பை எளிதாக்க, சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருள்களையும் ஆராய்வதற்கு வல்லுநர்கள் அடங்கிய ஓர் உயர் நிலை வணிக வரிச் சீரமைப்புக்குழு அமைக்கப்படும்.

**187.** சென்ற ஆண்டு ''முடிவுற்றதாகக் கருதப் படும் வரிவிதிப்பு'' முறை (Deemed Assessment) அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால், இந்த மாற்றம் சீராகச் செயல் படவில்லை. ஆகவே, இதற்குப் பதிலாகப் புதிதாகத் ''தன் மதிப்பீடு'' (Self Assessment) முறையைச் செயல் படுத்த முடிவு செய்துள்ளோம். இந்த முறையின்படி ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு மிகாத விற்பனை அளவு கொண்ட வணிகர் தன் மதிப்பீட்டு அறிக்கையை அளிக்கலாம். அந்த வணிகர் முறைகேடுகள் ஏதும் புரியாதவராகவும், துறை விற்பனை செய்யும் குறிப்பிட்ட படிவங்களை வாங்கிப் பயன்படுத்தாதவராகவும் இருக்க வேண்டும். அவரின் அறிக்கை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றில் அங்கொன்று இங்கொன்றாக ஒரு சிறிய சதவீத அறிக்கைகள் மட்டும் சரி பார்க்கப்படும். இந்த முறையைச் செயல்படுத்துவதால் 80,000 வணிகர்கள் பயனடைவார்கள் ; தொல்லைகளிலிருந்தும் விடுவிக்கப் படுவார்கள். வரி விதிப்பு அமைப்பை எளிதாக்குவதில் ஒரு முக்கிய அடியெடுத்துவைக்கும் வகையில் வணிகர்கள் தங்கள் மதிப்பீட்டின்படி வரி செலுத்தும் முறை செயலாக்கப்படும்.

**188.** வணிகர்கள் நல வாரியம் திருத்தியமைக்கப் பட்டு, வணிகர்கள் நலனுக்கான பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

**189.** பல்வேறு வரி விகிதங்களைக் குறைத்து வரிகளைச் சீரமைப்பது எங்களது நீண்ட நெடுநோக்கு எண்ணமாகும். இதனால், வரி ஏய்ப்பைக் குறைக்கவும் சூழ்நிலை உருவாக்கப்படும். மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்கள் மீதான வரியைக் குறைத்து விலைவாசியைக் குறைப்பதும், வரிச்சலுகைகள் அளித்து மாநிலத்தில் புதிய தொழில்கள் தொடங்க வகை செய்வதும் எங்களது உடனடிக் கவனத்திற் குட்பட்டுள்ளது.

* காய்ந்த இலைகள் மீது தற்போது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்த இலைகளைத் தைத்து விற்பதன் மூலம் பல ஏழைப் பெண்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். ஆகவே, காய்ந்த இலைகளின் விற்பனைக்கு வரியிலிருந்து முழு விலக்களிக்கப்படுகிறது.

* பார்லி (Barley) மீது 1 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. பிற தானியங்கள் அனைத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இனி, பார்லிக்கும் முழு விலக்கு அளிக்கப்படும்.

* மோட்டார் பொருத்தப்படாத மிதி இழு வண்டி (Cycle Rickshaw) விற்பனை மீது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது ; மிதி இழு வண்டிகள் மீதான வரி முழுமையாக விலக்கிக் கொள்ளப்படும். மாட்டு வண்டிகள் தற்போது 8 சதவீத வரிக்குட்பட்டவை. இனி இவற்றுக்கு வரி இல்லை.

* மஞ்சள், மிளகாய், கொத்துமல்லி, புளி, சீயக்காய் மீதான வரி 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* தற்போது தங்க நகைகள் விற்பனையில் வரி ஏய்ப்பு அதிகமாக உள்ளது. இவற்றின் மீதான வரி விகிதங்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், வரிக்குறைப்பு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. தங்கப் பாளம் மீதான வரி 2 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படும். தங்கம், வெள்ளி ஆகியவற்றினால் செய்யப்படும் பொருள்கள் மீதான வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும். தங்க முலாம் பூசிய நகைகள் மீதான வரியும் 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும். இந்த மாற்றங்களைப் பெண்கள் மிகவும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

* தற்போது மருந்துகள், மருந்துப் பொருட்கள் மீது 8 சதவீத வரியும் சில குறிப்பிட்ட உயிர்காக்கும் மருந்துப் பொருட்கள் மீது சலுகையாக 4 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் எவையெனப் பாகுபாடு செய்வதில் பல குழப்பங்கள் உள்ளன. எல்லா மருந்து, மருந்துப் பொருட்களுக்கும் இனி ஒரே சீரான 6 சதவீத வரி விதிக்க முடிவு செய்துள்ளோம். அதே நேரத்தில், உயிருக்கு அபாயம் ஏற்படும் கட்டத்தில் பயன்படுத்தப் படும், விலை உயர்ந்த, பின்வரும் மருந்துகளுக்கு வரி விலக்கு அளிப்பதன் மூலம் நோயாளிகளுக்குச் சலுகை அளிக்க முடிவு செய்துள்ளோம் :—

1. சைக்ளோஸ்போரின் (Cyclosporine).
2. ப்ளியோமைசின் (Bleomycin).




3. சைடோஸைன் அரபினோஸைட் (Cytosine Arabinoside).
4. அஜாதியோப்ரின் (Azathioprine).
5. நைட்ரோ கிளிசரின் (Nitroglycerine).
6. பென்டாக்ஸிபைலின் (Pentoxifyline).

* துருப்பிடிக்கா எஃகுப் (Stainless Steel) பாத்திரங்கள் மீது தற்போது 10 சதவீத வரி விதிக்கப்படுகிறது. எல்லாக் குடும்பங்களிலும் பரவலாக இந்தப் பாத்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன, ஆகவே, வரியை 5 சதவீதமாகக் குறைக்க முடிவெடுத்துள்ளோம்.

* காகித உறைகள் விற்பனை 8 சதவீத வரிக்குட்பட்டது. இதை 5 சதவீதமாகக் குறைக்கக் கருதியுள்ளோம்.

* விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் மீதான விற்பனை வரி 3.5 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* இழுவை (Trailer) உதிரி பாகங்கள் மீதான வரி 15 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. காலி சாக்குகள் மீதான வரி 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* மூன்று சக்கர வண்டிகள் மீது தற்போது 15 சதவீத வரியும், சிறிய சரக்கு வண்டிகள் மீது 8 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. வரி விதிப்பில் சீரமைப்பு நடவடிக்கையாக இனி மூன்று சக்கர வண்டிகள் மீதும் 8 சதவீத வரியே விதிக்கப்படும்.

* பேருந்துகளுக்குக் கூடு கட்டும் தொழிலை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, முழுமையாக கட்டப்பட்டு விற்கப்படும் வாகனங்கள் மீதான வரி 15 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

* எஃகுக் குழாய்களை முலாமிடுவதற்குப் பயன் படுத்தும் துத்தநாகம் மீது 8 சதவீத வரி விதிக்கப்படுகிறது. தொழிலுக்கான மூலப் பொருட்கள் மீது குறைவான வரி விதிக்கும் எண்ணத்துடன், துத்தநாகம் மீதான வரியை 5 சதவீதமாகக் குறைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

* அலுமினியப் பாத்திரங்கள் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படும் பொழுது, 'C' படிவம் இருக்குமானால், 4 சதவீத வரியும், 'C' படிவம் இல்லாவிடில் 10 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் அலுமினியப் பாத்திரங்கள் தயாரிப்பை ஊக்குவிக்கும் வகையில், இனி, மாநிலங்களுக்கிடையிலான விற்பனையின் போது, 'C' படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரே சீராக 4 சதவீத வரிவிதிக்க முடிவு செய்துள்ளோம்.

* தற்போது பச்சைத் தோல் மீது 2 சதவீதமும், பதனிடப்பட்ட தோல் மீது 2 சதவீதமும் வெவ்வேறு கட்டங்களில் வரி விதிக்கப்படுகிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையும், தோல் பதனிடுவோர்களின் முறையீடுகளையும் கருத்தில் கொண்டு, ஒரு கட்டத்தில் மட்டும் வரி விதிப்பை மேற்கொள்ள வரிச் சீரமைப்பு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம். இனி பச்சைத் தோல் மீது, கடைசியாக மாநிலத்தில் வாங்கப்படும் கட்டத்தில் 4 சதவீத வரி விதிக்கப்படும். பதனிடப்பட்ட தோலின் மீது, முதல் விற்பனைக் கட்டத்தில் சதவீத வரி விதிக்கப்படும். பச்சைத் தோல் வாங்கும்போது 4 சதவீத வரி செலுத்தப்பட்டிருந்தால், பதனிடப்பட்ட தோல் மீது வரி செலுத்த வேண்டியதில்லை.

இதுவரை குறிப்பிட்ட சலுகைகளினால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 10 கோடி இழப்பு ஏற்படும்.

**190.** டீசல் (diesel) விற்பனை மீது தமிழ்நாட்டில் 14 சதவீதமும், கர்நாடகத்தில் 18 சதவீதமும், கேரளத்தில் 20 சதவீதமும் விதிக்கப்படுகிறது. இனி டீசல் மீது வரி வீதம் 16 சதவீதமாக ஆக்கப்படும். லிட்டருக்கு 10 பைசா மட்டுமே இதனால் உயர்வு ஏற்படும். இது ஒரு பாரமாகக் கருத முடியாது.

**191.** அண்டை மாநிலங்களில் காகிதம், காகித அட்டை மீது விதிக்கப்படும் வரி வீதத்தைக் கருத்தில் கொண்டு, இவற்றின் ' விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. அதே சமயத்தில் பத்திரிகைக் காகிதத்தின் விலையைக் குறைக்கும் வண்ணம், ' C ' படிவம் அல்லாத விற்பனை மீது 10 சதவீதம் விதிக்கப்படும் முறையை மாற்றி, ' C ' படிவம் இருப்பினும் இல்லாவிட்டாலும், ஒரே சீராக அனைத்துப் பன்மாநில விற்பனை மீதும் 4 சதவீத வரி விதிக்கப்படும்.

**192.** உருட்டாலைகள் வாங்கும் எஃகு உடைசல்களுக்கு (scrap) விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இனி, அறிவிப்புப் படிவம் (Declaration Form) அடிப்படையில் உருக்காலைகளால் வாங்கப்படும் எஃகு உடைசல்கள் மீது 2 சதவீத வரி விதிக்கப்படும்.

**193.** சோப்புகள் மீது விதிக்கப்படும் வரி 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படும். அதே நேரத்தில் கையினால் செய்யப்படும் சோப்புகள் மீதான வரி வீதம் 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

**194.** இந்தியாவிலேயே இரப்பர் உற்பத்தியில் இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ்நாட்டில், வரிவிதிப்புக் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் விற்பனையில் இரப்பர் விற்பனை சேர்க்கப்படவில்லை. தேயிலை தவிர்த்த அனைத்து விவசாய உற்பத்திக்கும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரள மாநிலத்தில் தேயிலை, காப்பி, இரப்பர், ஏலக்காய், மரம் ஆகியவற்றுக்கு விலக்களிக்கப்படவில்லை. அதாவது இரப்பர் மீது கேரளத்தில் வரி விதிக்கப்படுகிறது. தற்போது, கடைசியாக வாங்கப்படும் கட்டத்தில் இயற்கை இரப்பர், எந்த வடிவத்தில் இருந்தாலும், 5 சதவீத வரி விதிக்கப்படுகிறது. ஆகவே, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பிரிவு 2(r)-ஐத் திருத்தி இரப்பர் விற்பனையைச் சட்டத்திற்குட்பட்டதாக்க முடிவெடுத்துள்ளோம். அதே நேரத்தில் 8 சாதாரண ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு விலக்களிக்கப்படும். இதனால், பெரிய தோட்டச் சொந்தக்காரர்கள் மட்டுமே வரி செலுத்த வேண்டிவரும்.

**195.** நடைபெற்றுள்ள சில மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவர முடிவெடுத்துள்ளோம். தற்போது இச்சட்டத்தின் பிரிவு 3 (3) (i)-க்குட்பட்ட பல பொருட்களுக்கு சலுகை விகிதத்தில் வரி விதிக்கப்படுவதால், இப்பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருட்கள் வாங்கப்படும் போது 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டு, அப்பொருட்களுக்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரி வீதம் விதிக்கப்படும். வேலை ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்படும்போது அதற்காக வாங்கப்படும் பொருட்கள் மீது, பிரிவு 3 (3) (iii)-ன்கீழ் சலுகை நிலையில் 3 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மீது அவற்றுக்குரிய வழக்கமான வரி விதிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, வேலை ஒப்பந்தப் பணிகளில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான சலுகையை மீளப் பெறுவதற்கு பிரிவு 3 (3) (iii)-ஐத் திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**196.** தற்போது வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வீதத்தில் விற்பனைவரி மீது மேல்வரி விதிக்கப்படுகிறது. சென்னையில் 15 சதவீதம் முதல், கிராம, நகர, ஊராட்சிகளில் 8 சதவீதம் வரை மேல் வரி விதிக்கப்படுகிறது. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் 15 சதவீத மேல் வரி விதித்து வரி சீரமைப்பு செய்ய எண்ணியுள்ளோம். இதனால் கிடைக்கும் கூடுதல் வருவாயிலும் இருபது சதவீதம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியமாக அளிக்கப்படும்.

**197.** தற்போது மாநிலத்தில் கொண்டு வரப்படும் மோட்டார் வண்டிகள் மீது நுழைவு வரி (Entry Tax) விதிக்கத் தனிச் சட்டம் செயலாக்கப்படுகிறது. மோட்டார் வண்டி வர்த்தகம் மாநிலத்திலிருந்து வெளியே செல்வதனால் ஏற்படும் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்த வரி விதிக்கப்படுகிறது. நுழைவு வரி விகிதம் விற்பனை வரிச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரி வீதத்திற்குத் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிலையை மாற்றி, நுழைவு வரிச் சட்டத்திலேயே வரிவீதம் குறிப்பிடத் தேவையான சட்ட திருத்தம் கொண்டு வர எண்ணியுள்ளோம். 900 கன சென்டிமீட்டர் வரையிலுள்ள மோட்டார் வண்டிகளுக்குக் கூடுதல் விற்பனைவரியிலிருந்து அளிக்கப்பட்ட முழு விலக்கும் அகற்றப்படும்.

**198.** தமிழ்நாடு 1962ஆம் ஆண்டு மின்சாரம் (பயன்படுத்துதல் மீது வரி விதித்தல்) சட்டத்தின்

★ ஒரு குடும்பத்திற்கு [illegible]
வீட்டு வசதி மேம்பாட்டு [illegible]
[illegible] துறை அதிக அ[illegible]
★ நகராட்சி-நகர்ப்பகுதி [illegible] ரூபாய் [illegible]
கோடி செலவில் புதி[illegible] மேற்கொள்[illegible]
படும்.
★ மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 1,2[illegible] கோடியில்
எழில்மிகு சென்னை [illegible]
கப்படும்.

அடிப்படையில் மின்சார விற்பனை மீது வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிக்கப் பட்டுவந்த பல்வேறு வரிகள் தமிழ்நாடு மின் வாரியத்தினால் வசூலிக்கப்படும் மின் கட்டணத்துடன் சேர்க்கப்பட்டது. மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பல்வேறு மாநிலங்களில் இந்த வரி வசூலிக்கப்படுவது தெரிய வந்துள்ளது. அரசின் மிக நெருக்கடியான நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த வரியைத் திருத்திய முறையில் மீண்டும் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். மின் கட்டணத்தில் 4 சதவீதம் வரியாக அனைத்து நுகர்வோரிடமிருந்தும் வசூலிக்கப் படும். குடிசை இணைப்புகள் உள்ளிட்டு, அனைத்து வீடுகளுக்கான இணைப்புகளுக்கும் விவசாய இணைப்புகளுக்கும் சுய உற்பத்திக்கும் விலக்கு அளிக்கப்படுகிறது. இந்த மாற்றங்களைச் செயலுக்குக் கொண்டுவரத் தேவையான சட்டத் திருத்தம் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

**199.** இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வகைகள் மீதான வரிகளை மாற்றியமைக்க உத்தேசிக் கப்பட்டுள்ளது. உள்நாட்டில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகளின் உற்பத்தி மீது தற்போதுள்ள ப்ரூப் லிட்டருக்கு (proof litre) ரூபாய் 60 என்றுள்ள ஆயத் தீர்வை ப்ரூப் லிட்டருக்கு (proof litre) ரூபாய் 70 என உயர்த்தப்படுகிறது. உள்நாட்டில் தயாராகும் வெளி நாட்டு மதுவகைகளின் விற்பனையில் கடைசிக் கட்டம் தவிர்த்து, மற்ற ஒவ்வொரு கட்டத்திலும் 20 சதவீத விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது 25 சதவீதமாக உயர்த்தப்படும்.

**200.** தொழில்வரி உள்ளாட்சி நிறுவனங்களால் விதிக் கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொழில் வரிக்கான உச்ச வரம்பு தற்போது ஆண்டுக்கு ரூபாய் 250 ஆகும். அரசியல் அமைப்புச் சட்ட திருத்தத்தின் வாயிலாக இந்த வரம்பு ரூபாய் 2,500 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. குஜராத், மகாராஷ்டிரம், கர்நாடகம் போன்ற பல மாநிலங்கள் தொழில் வரியை உயர்த்திச் சட்டங்கள் நிறைவேற்றியுள்ளன. பல மாநிலங்களில் இந்த வரி மாநில அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப் படுகிறது.

**201.** உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரங் களைப் பெருக்குவது நமது நோக்கமாகும். ஆகவே, தொழில்கள் வணிகங்கள், கைவினைகள், மற்றும் வேலைகள் மீதான தொழில் வரியை ஆண்டுக்கு ரூபாய் 2,500 என்ற உச்ச வரம்போடு மாற்றியமைக்க புதிய சட்டம் கொண்டுவர முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விதமான தொழிலுக்கும் வெவ்வேறான குறைந்த அளவு, அதிக அளவு ஆகியவற்றைச் சட்டத்திலேயே நிர்ணயித்து, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் அளிக்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,500-க்குக் குறைவான ஊதியம் பெறும் அரசு அலுவலர்கள் உட்பட, அனைத்துப் பணியாளர்களுக்கும் வரிவிலக்கு அளிக்கப்படும். வரிவிலக்கு வரம்பு கணிசமாக உயர்த்தப் படுவதால் அரசு அலுவலர்களுக்கு அரசே தொழில் வரி செலுத்தும் முறை கைவிடப்படும்.

**202.** இந்த வரியை உள்ளாட்சி நிறுவனங்கள் வசூலித்துத் தம்மிடமே வைத்துக் கொள்ளும். மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் மாநில அரசே வரியை எடுத்துக் கொள்ளும் முறையிலிருந்து மாறுபட்ட ஒரு சிறப்பு அம்சம் இதுவாகும். வரி தொடர்பான அனைத்து முறையீடுகளும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வரி முறையீட்டுக் குழுக்களினால் முடிவு செய்யப்படும். வெகுநாட்களாக நிலுவையிலிருந்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி ஆதாரத்தை வலுப்படுத்தும் இந்த முயற்சியை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

**203.** மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழகம்தான் அதிக நகர்ப்புற வளர்ச்சியடைந்துள்ள மாநிலமாக இருப்பது மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலிருந்து வெளிப்படுகிறது. நகர்ப்புற வளர்ச்சி வேகம் மேன்மேலும் அதிகரித்து வருகிறது. சீரான திட்டமிட்ட நகர மேம்பாட்டிற்காக மேலும் அதிக ஒதுக்கீடுகள் செய்ய வேண்டிய அவசியம் மாநில அரசிற்கு ஏற்பட்டுள்ளது. நகர் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காகக் கூடுதலாக நிதி ஆதாரங்களைப் பெருக்குவது தவிர்க்க முடியாத அவசியமாகும். சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய பெருநகர்ப் பகுதிகளில் நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இந்த நகர்ப்பகுதிகளில், நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலங்களின் 1–7–1971 அன்றைய மதிப்பின் அடிப்படையிலும், புறநகர்ப் பகுதிகளில் 1–7–1981 அன்றைய மதிப்பின் அடிப்படையிலும் வரி விதிக்கப்படுகிறது. இந்த நிலையைச் சீரமைத்து, அனைத்துப் பகுதிகளிலும் 1–7–1981 அன்றைய நிலவரப்படி நிலங்களின் மதிப்பின் அடிப்படையில் இனி வரி விதிக்கப்படும். இந்த மாற்றத்தினால், புதிய வரி தற்போதைய வரியைப்போல் ஐந்து மடங்குக்கு மிகாமலிருக்கும்படி கட்டுப்படுத்தப்படும்.

**204.** மேலும், பல நகர்ப்பகுதிகள் விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதைக் கருத்தில்கொண்டு, அனைத்து சிறப்பு நிலை, தேர்வு நிலை நகராட்சிகளுக்கும் நகர்ப்புற நிலவரி விதிப்பு விரிவாக்கப்படும்.

ஈரோடு, பொள்ளாச்சி, தஞ்சாவூர், திருப்பூர் தூத்துக்குடி, வேலூர், உதகமண்டலம், திண்டுக்கல் கரூர், நாகர்கோவில், கும்பகோணம் ஆகிய சிறப்பு நிலை நகராட்சிகளிலும், கடலூர், புதுக்கோட்டை காஞ்சிபுரம், விழுப்புரம், மயிலாடுதுறை, உடுமலைப் பேட்டை, பழனி, காரைக்குடி, இராஜபாளையம் நாமக்கல் ஆகிய தேர்வுநிலை நகராட்சிகளிலும் கொடைக்கானல், மேட்டூர் நகரியங்களிலும் நகர்ப்புற நிலவரி இனி விதிக்கப்படும். தற்போது நகர்ப்புறங்களில் அமுலில் இருக்கும் முறைகள், வரி விகிதங்கள் இந்

நகர்ப் பகுதிகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு நிலங்களின் 1–7–1981 அன்றைய மதிப்பின் அடிப்படையில் வரி விதிக்கப்படும். இதற்கான சட்ட திருத்தங்கள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

**205.** தனி நபரின் மீதான வரிச் சுமையைக் குறைப்பது அரசின் கொள்கையாகும். இதன் அடிப்படையில் தனி நபர் போக்குவரத்திற்கு மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் 50 கன சென்டிமீட்டருக்குக் குறைவான இயந்திர இருசக்கர வாகனங்கள் மீதான வாகன வரி முற்றிலும் விலக்கப்படுகிறது. இதனால் 4.5 இலட்சம் மக்கள் பயன் பெறுவர். அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 7.45 கோடி இழப்பு ஏற்படும். இந்தச் சலுகையைக் கணக்கிற் கொண்டு, அதிகக் கொள்ளளவுடைய இயந்திர இரு சக்கர வாகன உரிமையாளர்களுடன் இந்த இழப்பைப் பகிர்ந்து கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. 50 கன சென்டிமீட்டர் முதல் 170 கன சென்டிமீட்டர் வரையிலுள்ள இயந்திர இரு சக்கர வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 90 என்ற நிலையிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 150 என உயர்த்தப்படும். 170 கன சென்டி மீட்டர் முதல் 300 கன சென்டி மீட்டர் வரையில் உள்ள வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 90 இலிருந்து ரூபாய் 200 ஆக உயர்த்தப்படும். 300 கன சென்டிமீட்டருக்கு மேற்பட்ட இரு சக்கர வண்டிகள் மீதான வரி ஆண்டொன்றுக்கு ரூபாய் 100 இலிருந்து ரூபாய் 300 ஆக உயர்த்தப்படும். இந்த மாற்றங்களுக்கு ஏற்பப் புதிய வாகனங்கள் மீதும், பழைய வாகனங்கள் மீதும் விதிக்கப்படும் ஆயுட்கால வரிகளும் மாற்றியமைக்கப்படும்.

**206.** மோட்டார் வாகன வரி அமைப்பில் சில மாற்றங்களைச் செய்ய கருதியுள்ளோம். மோட்டார் வாகனங்கள் மீது தற்போது வரி ஆண்டொன்றுக்கு பின்வருமாறு விதிக்கப்படுகிறது :—

| எடை. | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள். | நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. | மற்றவை. |
|---|---|---|---|
| | (ரூபாயில்) | | |
| 700 கிலோவிற்குக் குறைவானவை. | 900 | 600 | 300 |
| 700 கிலோவிற்கு மேல் 1,500 கிலோவிற்குள். | 1050 | 700 | 350 |
| 1,500 கிலோவிற்கு மேல் 2,000 கிலோவிற்குள். | 1200 | 800 | 400 |
| 2,000 கிலோவிற்கு மேல் 3,000 கிலோவிற்குள். | 1350 | 900 | 450 |
| 3,000 கிலோவிற்கு மேல் | 1500 | 1000 | 500 |

இந்த வரி விகிதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படும் :—

| எடை. | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள். | நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. | மற்றவை. |
|---|---|---|---|
| | (ரூபாயில்) | | |
| 700 கிலோவிற்குக் குறைவானவை. | மாற்றமில்லை. | | |
| 700 கிலோவிற்கு மேல் 1,500 கிலோவிற்குள். | 1500 | 1000 | 500 |
| 1,500 கிலோவிற்கு மேல் 2,000 கிலோவிற்குள். | 1800 | 1200 | 600 |
| 2,000 கிலோவிற்கு மேல் 3,000 கிலோவிற்குள். | 1950 | 1300 | 650 |
| 3,000 கிலோவிற்கு மேல். | 2250 | 1500 | 750 |



**207.** வாடகைக்கு விடப்படும் மோட்டார் வண்டிகள் மீதான காலாண்டு வரி விகிதங்களில் மாற்றங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா வாடகைச் சிருந்து மீதான காலாண்டு வரி ரூபாய் 120 இலிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்படுகிறது. சாதாரண வாடகைச் சிருந்து மீதான காலாண்டு வரி ரூபாய் 90 இலிருந்து ரூபாய் 120 ஆக உயர்த்தப்படுகிறது. பெரிய வாடகைச் சிருந்து (Maxi Cabs) மீதான வரி விதிப்பு இருக்கைகள் அடிப்படையில் மாற்றியமைக்கப் படுகிறது. இனி அது காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 125 என்ற அடிப்படையில் வசூலிக்கப்படும்.

**208.** சரக்கு வண்டிகள் மீதான வரி விகிதங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது.

| வண்டியின் எடை. | தற்போதைய காலாண்டு வரி | புதிய காலாண்டு வரி |
|---|---|---|
| | (ரூபாயில்.) | |
| 3,000 கிலோவிற்கு உட்பட்டவை | 450 | 520 |
| 3,000 கிலோவிற்கு மேல் 5.500 கிலோவிற்குள் | 750 | 845 |
| 5,500 கிலோவிற்கு மேல் 9,000 கிலோவிற்குள் | 1150 | 1290 |
| 9,000 கிலோவிற்கு மேல் 12,000 கிலோவிற்குள் | 1490 | 1690 |
| 12,000 கிலோவிற்கு மேல் 13,000 கிலோவிற்குள் | 1500 | 1840 |
| 13,000 கிலோவிற்கு மேல் 15,000 கிலோவிற்குள் | 1840 | 2090 கூடுதலான ஒவ்வொரு 250 கிலோ விற்கும் ரூ. 50 கூடுதல். |
| 15,000 கிலோவிற்கு மேல் | 1840 கூடுதலான ஒவ்வொரு 250 கிலோ விற்கும் ரூ. 50 கூடுதல். | |

**209.** பேருந்துகள் மீதான வாகன வரியிலும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மாநகரப் பகுதிகளில் இயங்கும் பேருந்துகள் மீதான வரி தற்போதைய நிலையிலேயே தொடர்ந்து இருக்கும். கிராமப்புறங்களில் இயங்கும் பேருந்துகள் மீதான காலாண்டு வரி இருக்கைக்கு ரூபாய் 275 என்ற நிலையிலிருந்து ரூபாய் 325 ஆக உயர்த்தப்படும். நகர்ப் புறங்களில் இயங்கும் பேருந்துகள் மீதான காலாண்டு வரி இருக்கைக்கு ரூபாய் 230 லிருந்து ரூபாய் 260 ஆக உயர்த்தப்படும். விரைவுப் பேருந்துகளுக்கான காலாண்டு வரி தற்போதைய நிலையான இருக்கைக்கு ரூபாய் 250 என்பதிலிருந்து ரூபாய் 300 ஆக மாற்றியமைக்கப்படும். பேருந்து வாகன வரி மீதான மேல் வரி தொடர்ந்து வசூலிக்கப்படும்.

**210.** வாகன வரி விதிப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் 1—10—1991 முதல் செயலுக்கு வரும். ஆண்டு வரி செலுத்தியவரிடமிருந்து அரையாண்டுக்கான கூடுதல் வரி 1992-93 ஆண்டுக்கான வரி 1992-மார்ச்சில் வசூல் செய்யப்படும்போது சேர்த்து வசூலிக்கப்படும்.

**211.** விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் வகையிலும், வரி வசூல் தொல்லைகளிலிருந்து விடுதலை அளிக்கும் எண்ணத்துடனும், நெல், கரும்பு, மஞ்சள், வெற்றிலை, வாழை, தென்னை, சோளம், கம்பு, கடலை, பருத்தி, எள் போன்ற மலைத் தோட்டப் பயிரல்லாத பிற பயிரினங்கள் மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரி அறவே விலக்கப்படுகிறது. இதனால் 45,000-த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவர்.

**212.** மேலும், மலைத் தோட்டப் பயிர்கள் மீது விதிக்கப்படும் விவசாய வருமான வரியையும் மாற்றியமைக்கக் கருதியுள்ளோம். வருமான விலக்கு வரம்பை ரூபாய் 10,000 லிருந்து ரூபாய் 22,000 ஆக உயர்த்த முடிவெடுத்துள்ளோம். இனி மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வரி விதிக்கப் படுவதால், நிலைப்படுத்தப்பட்ட ஏக்கர் (Standard Acre) முறையை மாற்றி சாதாரண ஏக்கர் அடிப்படை பின்பற்றப்படும். ஒட்டு மொத்த வரி செலுத்தும் முறையில் 8 ஏக்கர் வரை விலக்களித்து உச்ச வரம்பு 40 ஏக்கரிலிருந்து 50 ஏக்கராக உயர்த்தப்படும். தற்போதுள்ள சிக்கல் நிறைந்த படிமுறை விதங்கள் பின்வருமாறு சீரமைக்கப்படும் :—

| படிமுறை விதங்கள் | ஏக்கருக்கு வரி ரூபாயில். |
|---|---|
| 8 ஏக்கர் வரை | முழு விலக்கு |
| 8 முதல் 12 ஏக்கர் வரை | 150 |
| 12 முதல் 25 ஏக்கர் வரை | 200 |
| 25 முதல் 40 ஏக்கர் வரை | 300 |
| 40 முதல் 50 ஏக்கர் வரை | 500 |

இந்த மாற்றங்கள் சிறிய விவசாயிகள் ஒட்டு மொத்த வரி முறையைப் பின்பற்ற வகை செய்யும், கேரள, கர்நாடக மாநிலங்களில் உள்ளது போல தன்மதிப்பீடு முறை, முன்வரி செலுத்துதல் போன்றவற்றுக்கான திருத்தங்களும் மேற்கொள்ளப் படும். இந்த மாற்றங்களுக்கான திருத்தங்கள் இக்கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்படும்.




**213.** 1991–92ஆம் ஆண்டில் இறுதிப் பற்றாக் குறை ரூபாய் 785.35 கோடியாக இருக்கும் என்று நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளேன். செலவுகளைக் குறைக்கச் சில முடிவுகள் எடுப்பதன் மூலம், இப்பற்றாக்குறை ரூபாய் 645.35 கோடியாகக் குறைக்கப்படும். சற்றுமுன்னர் நான் அறிவித்த நடவடிக்கைகளின் மூலம், ஏறக்குறைய ரூபாய் 70 கோடி நிகரக் கூடுதல் வருமானம் பெற இயலும். அதன் பயனாக, 1991–92ஆம் ஆண்டு முடிவில் இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 575.35 கோடியாக இருக்கும்.

**214.** ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல சிறப்பு நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசை நாம் கோரியுள்ளோம். இதில், மாநிலத் திட்டத்திற்கான இயல்பான மத்திய நிதியுதவியில் அதிகரிப்பு, பொது மக்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெறும் கடன்களில் அதிகரிப்பு, வெளி உதவித் திட்டங்களுக்கான நிதியுதவியில் அதிகரிப்பு, சிறு சேமிப்புக் கடன் வடிவில் தொடக்கப் பற்றாக்குறைக்கு ஈடு செய்யத் தனி உதவி, மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பிற்கு இழப்பீடு, கடல் எல்லைப் பகுதி பிரச்சினைகளுக்குச் சிறப்பு நிதியுதவி ஆகியவை அடங்கும். 1990–91ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1991–92ஆம் ஆண்டில் மத்திய நிதியுதவி அதிகரிப்பு மிகக் குறைந்த அளவிற்கே கிடைக்கப் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. 1990–91ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு அளித்த மத்திய நிதியுதவியில் மிக அதிக உயர்வு 65 சதவீதமாகும். ஆனால், தமிழ்நாடு 1990–91ஆம் ஆண்டில் 9.7 சதவீத உயர்வே பெற்றது. பொதுமக்களிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் பெற்ற கடன்களிலும் இதே நிலைமைதான். தொடக்கப்பற்றாக்குறை நிலைமையைச் சமாளிப்பதற்கு, கடந்த காலத்தில் ஏனைய மாநிலங்களுக்கு மத்திய அரசு சிறப்பு நிதியுதவி வழங்கியுள்ளது. அத்தகைய சிறப்பு நிதியுதவியை நாமும் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

**215.** மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பிற்கு நாம் இழப்பீடு கோருவது முற்றிலும் நியாயமானதே. மதுவிலக்கினால் ஏற்படும் இழப்பிற்கு மத்திய அரசு மாநிலங்களுக்கு இழப்பீடு அளிக்கும் திட்டம் 1978ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையிலும் மத்திய அரசால் செயற்படுத்தப்பட்டு வந்தது. மதுவிலக்கு என்பது அரசமைப்புச் சட்டத்திலேயே இடம்பெற்றுள்ள நெறிமுறைக் கோட்பாடாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்நிலைமையைப் பிரதமரின் கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டுவரக் கடிதம் எழுதியுள்ளார்கள். முந்தைய திட்டத்தின் அடிப்படையில் 1987-88 முதல் 1989-90 வரையிலான கால அளவிற்கு 50 சதவீத இழப்பீட்டை அவர்கள் கோரியுள்ளார்கள். இந்நடைமுறையை மீண்டும் கொண்டுவர வலியுறுத்தியதுடன், நடப்பாண்டில் ஏற்படும் இழப்பை ஈடு செய்வதற்கு 100 சதவீத நிதியுதவி கோரியுள்ளார்கள்.

**216.** தமிழ்நாட்டிற்குக் கடற்கரை எல்லைப்பகுதி உள்ளது. அது நிலவியல் அமைப்பின்படி மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. கடற்கரை எல்லைப் பகுதிகள் மேம்பாட்டிற்காகக் கணிசமான அளவு செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே, கடற்கரை எல்லைப் பகுதி மேம்பாட்டிற்காகத் தனி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளோம். நம்முடைய கூட்டாட்சி முறையில் மாநில அரசு நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கும் போது, மத்திய அரசு உதவி செய்வதற்குக் கடமைப்பட்டுள்ளது. இப்பெரிய நாட்டின் ஒருமைப்பாட்டிலும், ஒற்றுமையிலும் நாம் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். மைய, மாநில நிதி உறவுகள் தொடர்பான முற்போக்கு அணுகுமுறை வாயிலாக இந்த நம்பிக்கைக்கு அரண் சேர்க்க வேண்டியது இன்றியமையாதது. மத்திய அரசு இந்த நிலைமையைக் கருத்திற்கொண்டு போதுமான நிதியுதவி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**217.** இப்போது, இந்த வரவு-செலவுத் திட்ட உரையை முடிக்கும் நிலையில் உள்ளேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழக மக்கள் மாபெரும் அளவில் வாக்களித்து வழங்கிய வெற்றி நம்மீது பெரும் பொறுப்பைச் சுமத்தி உள்ளது. மக்கள் வழங்கிய இந்த மாபெரும் வெற்றி மூலம் நமக்கு இட்டுள்ள ஆணையை நிறைவேற்றும் வகையில், நம்மீது பல பணிகள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை நாம் அறிந்துள்ளோம். இடர்ப்பாடான நிதி நிலை நிலவும் மிகவும் நெருக்கடியான கால கட்டத்தில் நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். இப்பொழுது நாம் எதிர்நோக்கி வரும் இத்தகைய சூழ்நிலையைக் கடந்த காலத்தில் எந்த ஒரு அரசும் எதிர்நோக்கி இருந்ததில்லை. அண்மையில்தான் பதவி ஏற்றுள்ள நாங்கள், மக்கட்குப் பல்வேறு நலப் பணிகளை ஆற்ற வேண்டும் என விழைந்த போதிலும், எல்லாவற்றையும் இவ்வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறச் செய்ய இயலவில்லை. இருந்தபோதிலும், நாங்கள் இப்பணியை இயன்ற அளவிற்குச் செவ்வனே செய்துள்ளோம். எனினும், இது போதுமானது அல்ல என்பதை நாங்கள் அறிந்துள்ளோம். மாநிலத்தில் உள்ள ஏழைகள், நலிவுற்றவர்கள், ஊனமுற்றவர்கள் இலட்சக் கணக்கானோருக்குப் பலவழிகளில் உதவி செய்ய நாங்கள் முயற்சி மேற்கொள்ளாமல் இல்லை என்பதை, இப்பேரவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கும் அவர்கள் மூலமாக மக்களுக்கும் நாங்கள் உறுதியளிக்க விழைகிறோம். நாங்கள் தற்போது அறிவித்துள்ள வருமானம் பெருக்கும் முயற்சிகள் இதற்குப் போதுமானதாக இருக்காது. எனினும், "செல்வந்தர்கள் சிறிது கூடுதல் வரியைச் செலுத்தினால் மட்டுமே உதவி தேவைப்படும் வறிய மக்களுக்குப் பயன் கிட்டும்" என்ற அனைவரும் அறிந்து ஏற்றுக்கொண்ட கோட்பாட்டின் அடிப்படையில், நாங்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து அளித்துள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தில் உரியவாறு இடம் பெற்றுள்ள கருத்துக்கள், கொள்கைகள், திட்டப்பணிகள் ஆகியவற்றை நமக்கு வழங்கும் ஊற்றுக்களனாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள். அவரது ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் நமது பொறுப்புக்களைத் துணிவுடனும் கருணை உணர்வுடனும் அறிவுடனும் ஆர்வத்துடனும் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புகிறோம்.

**218.** இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட எனக்கு எல்லா வகையிலும் செம்மையான முறையில் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து இருந்து சிறந்த பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**219.** 1991-92ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

**(மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 4.9.91 அன்று, 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை.)**

[illegible] 000 ஏக்கர் பரப்பில் ரூபாய் [illegible] தேயிலைத் தோட்டங்கள் அமைக்க[illegible] காகிதக் கூழ் தயாரிப்பிற்குப் பயன்படும் [illegible] தோட்டம். 75,000 ஏக்கர் பரப்பில் ரூபாய் [illegible] செலவில் அமைக்கப்படும்.

★ [illegible] பகுதிகளில் 45,000 ஏக்கர் [illegible] ரூபாய் 48 கோடி செலவில் காடு வளர்க்கும் [illegible] திட்டம்.

★ சாலைகளுக்கான பராமரிப்புச் செலவை [illegible] 70.07 கோடி என்பதிலிருந்து ரூபாய் 102.25 [illegible]

★ 800 [illegible] மீட்டர் நீளத்திற்குப் பழுதுபட்ட சாலைகளைச் [illegible] சிறப்புப் பழுது பார்க்கும் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு 1991-92 ஆண்டிற்கான செலவு ரூபாய் 20 கோடியாகும்.

★ [illegible] கோடி மொத்தச் செலவில் 800 [illegible] தொலைவிற்கு அங்காடிச்சாலைகளை அமைக்கும் திட்டம் ஒன்று அறிவிக்கப்படுகிறது.

★ தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலை மேம்பாட்டுப் பணி[illegible] தொழில் நிறுவனங்களை ஈடுபடுத்தும் [illegible] திட்டம் ஒன்று அறிவிக்கப்படுகிறது.

★ சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்லும் [illegible] சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக [illegible] மத்திய அரசு வலியுறுத்தப்படுகிறது.

★ ரூபாய் 235.94 கோடி செலவில் புரட்சித் [illegible] எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மேம்படுத்த[illegible]

# கிண்டி பொறியியல் கல்லூரியின் 200வது ஆண்டு விழாத் தொடக்கம்

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரி 1794-ஆம் ஆண்டு கிழக்கு இந்தியக் கம்பெனியினரால் தொடங்கப்பட்டது. 1994-ஆம் ஆண்டுடன் இந்தக் கல்லூரிக்கு 200 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது.

பழமை வாய்ந்த கல்லூரி என்பதால் 200-வது ஆண்டு விழாவை 3 ஆண்டுகள் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, கிண்டி தொழில்நுட்பக் கல்லூரியின் 200-வது ஆண்டு விழாவின் தொடக்க விழா, கல்லூரியின் விவேகானந்தா அரங்கில் 30.8.91 அன்று நடைபெற்றது.

கல்லூரியின் 200-வது ஆண்டு விழாவை மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கடராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். குடியரசுத் தலைவரின் துணைவியார் திருமதி ஜானகி அம்மாள் அவர்களும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும் குத்துவிளக்கு ஏற்றினார்கள்.

விழாவில், மேதகு குடியரசுத் தலைவர், திரு ஆர். வெங்கடராமன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"கிண்டி பொறியியல் கல்லூரியின் 200-ஆம் ஆண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வது எனக்குப் பெருமகிழ்வைத் தருகிறது. பத்தாண்டுக் காலத்திற்கும் மேலாக, பல்வேறு பொறுப்புகளில், தமிழ்நாட்டின் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சியில் பங்கெடுத்த பெருமை எனக்குண்டு. நவீன இந்தியாவின் சிற்பியான ஜவகர்லால் நேரு பிரதமராகவும், ஈடு இணையில்லாப் பெருந்தலைவர் காமராசர் நமது முதல்வராகவும் இருந்த கால கட்டத்தில்தான், தமிழ்நாட்டில் பெரும்பாலான தொழில்நுட்பக் கல்லூரிகளும், பொறியியல் கல்லூரிகளும், தொழிற்பயிற்சிக் கழகங்களும் உருவாயின. சுயநிதிக் கல்லூரிகளும், தொழில்நுட்பக் கல்லூரிகளும் தமிழ்நாட்டில் தோன்றியிருப்பது ஓர் அண்மைக்கால நிகழ்வு ஆகும். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட "கம்ப்யூட்டர்" உயர் தொழில் நுட்பச் சகாப்தத்தை முன்னறிவிப்புச் செய்கிறது. இந்த வளர்ச்சியின் காரணமாக, வளர்ந்த நாடுகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையேயான இடைவெளி மேலும் விரிவடைந்து உலக ஒற்றுமையையும், அமைதியையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. உலகின் மக்கள் தொகையில் பாதி அளவுள்ள, துரதிர்ஷ்டமான நலிவடைந்த மக்கள், காலனி ஆட்சி இருட்டிலிருந்து வெளிப்பட்டு ஏற்றத்தாழ்வைச் சரிசெய்ய முயன்றார்கள்.

நமது நாட்டின் சமூக-பொருளாதார மறுமலர்ச்சியில், அறிவியல்-தொழில்நுட்பத்தின் மிகப்பெரும் பங்கை உணர்ந்த ஜவகர்லால் நேருவின் தொலைநோக்குப் பார்வையையும், அழிவில்லா உதவியையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டும். நமது பொருளாதார வாழ்வின் பல துறைகளில், அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் மட்டுமே பயன்படுத்தி, வறுமையையும், வேலையின்மையையும் அகற்ற முடியும் என்ற நம்பிக்கையில் அவர் உறுதியாக இருந்தார். அறிவியல்- தொழில்நுட்பத்துக்கான செலவை, ஓர் ஏழை நாட்டினால் ஏற்க இயலாது என்ற விமர்சனத்தை அவர் அலட்சியப்படுத்தினார். மாறாக, அறிவியல்-தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் மட்டுமே, இந்தியாவின் வறுமையை ஒழிக்க முடியும் என்று அவர் வலியுறுத்தி வந்தார். இன்று இந்தியா ஒரு தொழில் துறை வல்லரசாக விளங்குகிறது என்றால், அதற்கு நேரு அறிமுகப்படுத்திய பல்வேறு திட்டங்களே காரணமாகும்.

1950-51-ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக ரூ.5 கோடியை நாம் செலவழித்தோம். இது 1989-90-ஆம் ஆண்டில் ரூ.4 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. அறிவியல், தொழில் நுட்ப வல்லுநர்கள் எண்ணிக்கையில் அமெரிக்கா, ரஷியா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நாம் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம். அறிவியல், மின் அணுவியல், விண்வெளி தொழில்நுட்பம், ஏவுகணை ஆய்வு, உயிரியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் நமது திறமை பல ஐரோப்பிய நாடுகளைவிட உயர்ந்ததாகும்.

குடியரசுத் தலைவர் அவர்களின் உரையைத் தொடர்ந்து விழாவிற்குத் தலைமையேற்ற மேதகு ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் உரையாற்றுகையில், "எரிசக்தி சுற்றுப்புறச் சூழல் போன்ற துறைகளில் கிண்டி தொழில்நுட்பக் கல்லூரி சிறந்த பங்கினை ஆற்றிட முடியும். சுற்றுப்புறச் சூழல் பாதிப்பைத் தடுக்க ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளது. பல்வேறு மட்டங்களில் இது குறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணியை இந்த அமைப்பு மேற்கொள்ளும். கல்விச் சூழலில் ஜப்பானிய முறையான 'குவாலிடி சர்க்கிள்' (Quality Circle) நாட்டிலேயே முதன்முதலாக இங்கு அறிமுகப்படுத்துவது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்-



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் பிறந்தநாளையொட்டி, மாண்புமிகு . முதல்வர் அவர்கள் சென்னைத் துறைமுகத்திலுள்ள வ.உ.சி.யின் சிலைக்கு மாலை அணிவித்தார் (5.9.91).

முன்னேறிய நாடுகளில் ஒரு ஆண்டுக்குத் தனி நபர் மின்சார உபயோகம் 12 ஆயிரம் 'யூனிட்' ஆகும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எரிசக்தி பெருக்கத்துக்கு என்ஜினியர்கள் உதவி செய்ய முடியும். எரிசக்தி வீணாவதைத் தடுக்கவும், அதைப் பாதுகாக்கவும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நம்முடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குச் சுகாதாரமான சுற்றுப்புறம் முக்கியம். தொழில் பெருக்கம் காரணமாகச் சுற்றுப்புறச் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. சுற்றுப்புறச் சூழல் கெடுவதைத் தடுப்பதற்கு என்ஜினியர்கள், விஞ்ஞானிகள் முயற்சி எடுக்க வேண்டும்.

படித்து வெளியே வரும் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவது, மிகப் பெரிய பிரச்சினை ஆகும். இந்தப் பிரச்சினையை மாநில அரசுகள் மட்டுமோ, மத்திய அரசாங்கம் மட்டுமோ, பெரும் தொழில் கூடங்கள் மட்டுமோ சமாளித்து விட முடியாது. எனவே, என்ஜினியர்கள் கல்லூரிகளில் தொழில் முனைவோருக்கான திட்டங்களைப் பாடத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் பட்டம் பெற்று வெளியே வருபவர்கள் வேலை தேடுபவர்களாக் இல்லாமல், வேலை கொடுப்பவர்களாக உருவாக முடியும்.

சிறு தொழில்களைத் தொடங்குவது அவசியம். இந்த நிலையில் நம்நாட்டில் படித்துத் தேறிய இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலைக்குச் செல்வது, நம்நாட்டின் பொருளாதாரத்திற்கும், விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவை நம் நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்துவதற்கும் மிகப்பெரிய இழப்பை ஏற்படுத்துகிறது. நம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தேவையான சிந்தனை, அறிவு போன்றவை நமக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது.

நிதி நெருக்கடி இருந்த நிலையிலும் நம்நாட்டு வரவு-செலவுத் திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கை நாம் கல்விக்காக ஒதுக்கி இருக்கிறோம் இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கிய போதிலும் நமது நாட்டு இளைஞர்கள் இந்தத் தொகையின் மூலம் கிடைத்த கல்வியைப் பயின்றுவிட்டு, வெளிநாடுகளுக்குப் பறந்து போய் விடுவதால், நாம் செலவிட்ட தொகைக்கான இலாபம் கிடைக்காமல் போய் விடுகிறது. ''கல்விக்காக இந்த அளவு தொகை ஒதுக்க வேண்டுமா?'' என்ற சிந்தனைகூட அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே நமது இளைஞர்கள் பணத்துக்காகவும், பதவிக்காகவும் தேசப் பற்றைத் தியாகம் செய்து விடக் கூடாது. நமது தாய் நாட்டுக்குச் சேவை செய்வதுதான் உண்மையான தேசப் பற்று ஆகும்.''

**விழாமலர் வெளியீடு**

விழா மலரை வெளியிட்டுப் பேசிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், அண்ணா பல்கலைக் கழகத்திற்குத் தேசிய ஆராய்ச்சிப் பல்கலைக்கழக மதிப்பு (National Research University Status) வழங்கப் பட வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் வெளிநாடு செல்வதைத் தடுக்கலாம் என்று குறிப்பிட்டார்.

விழா தொடக்கத்தில் அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர், திரு. மு. அனந்தகிருஷ்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

எம்.பி.ஏ. பட்ட மேல்படிப்புக் கட்டடம் மற்றும் விடுதியை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். கல்லூரி வரலாற்று நூலை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள்.

— நமது செய்தியாளர்


வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 







# இந்த இதழில்...


சட்டப்பேரவையில்...
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர்
தந்தை பெரியார்
-மாண்புமிகு முதல்வர் உரை ... 9

பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச்
செல்வங்கள் நாட்டுடைமையாக்கப்படும்!
—மாண்புமிகு முதல்வர் உரை ... 13

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு —
இம்மூன்றும் இணைந்திருந்தால்
உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?
—மாண்புமிகு முதல்வர் உரை ... 17

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ... 21

காந்தி வழி!(கவிதை)
—நாமக்கல் கவிஞர் ... 25

உலகவங்கி உதவியுடன் குடிநீர்
மேம்பாட்டுத் திட்டங்கள் ... 26

பொம்மைக் கண்காட்சி ... 33

நீரிழிவு நோய்-குணமும் நிவாரணங்களும் ... 37

வீரவரலாறு படைத்த செண்பகராமன் ... 42

நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் ... 44



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

புரட்டாசித் திங்கள் - 15

மலர்:22 இதழ்:7

1-10-1991




★ உரிமைகளை மட்டும் எண்ணிய எந்தச் சமுதாயமும் மேன்மை அடைந்ததில்லை; கடமைகளைக் கருதியவர்களே மேன்மை அடைந்திருக்கிறார்கள்; கடமையைச் செய்தால் உரிமைகள் தாமாகவே வந்து அடையும்.

— காந்தியடிகள்

★ மாவட்டங்கள் நம்மைப் பிரிப்பதில்லை; இதுபோன்றே மாநிலங்களும் நம்மைப் பிரிக்க முடியாது; மொழி வேறுபாடுகளும் நம்மைப் பிரிக்க முடியாது!

— ஜவகர்லால் நேரு

★ பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு, அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.

— தந்தை பெரியார்

தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

★ மனத்தில் மாசு, மத்வெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும்; அப்போதுதான் நம்நாடு முன்னேறும்!

— அறிஞர் அண்ணா

◎ திரைப்பட நகரம் ஒன்றை ரூ.70 இலட்சம் செலவில் உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது!

◎ திரைப்படங்களுக்கு ஆதரவு உதவித்தொகை வழங்குவதற்காக ரூ.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளத

◎ பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் கல்வி-பொருளாதார மேம்பாட்டுக் அரசு பல திட்டங்களை நிறைவேற்றும்!

# சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள்-செய்தித் துறை, சுற்றுலாத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை ஆகியவை தொடர்பான மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதத்தின் மீது பதிலளிக்கும் வகையில் சட்ட மன்றத்தில் 18.9.91 அன்று ஆற்றிய உரை விவரம் வருமாறு:

**செய்தித் துறை**

அரசுக் கொள்கைகளை, திட்டங்களை மற்றும் அதன் சாதனைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிற துறையாகச் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயங்கிவருகிறது. அது மட்டுமல்லாமல் ஜனநாயக மரபுகளைப் பலப்படுத்துகிற அமைப்பாகவும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை செயல்பட்டு வருகிறது.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறைக்குத் தமிழகத்திலுள்ள நினைவகங்களைப் பராமரிக்கும் பொறுப்பு இருந்து வருகிறது. நமது போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் 'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களது நினைவகம், மெரினா கடற்கரையில் அமைந்துள்ளது. அவருடைய சிறப்பினைப் போற்றுகின்ற வகையில் அவரது நினைவகம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், தற்போது இருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது நினைவகம் ரூ.70 இலட்சம் செலவில் மாற்றியமைக்கப்படும். இதற்கான மாதிரி வடிவம் தயாரிக்கப்பட்டு உள்ளது. மாற்றி அமைக்கப்பட உள்ள நினைவகத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர், மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்களுக்கு, ஸ்ரீபெரும்புதூரில் 12.19 ஏக்கர் நிலப்பரப்பில் நினைவகம் அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது மத்திய அரசே ராஜீவ் காந்தி அவர்களுக்கு நினைவகம் நிறுவ முடிவு செய்து, மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள்



தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப் பட்டுள்ளது. அதில் என்னையும் ஒரு உறுப்பினராக நியமித்துள்ளார்கள். மத்திய அரசு அமைத்துள்ள இக் குழுவின் தீர்மானத்தின்படிதான் நினைவகம் நிறுவப்படும். ஆகவே, இதைப்பற்றித் தற்பொழுது மேலும் விவரங்கள் அறிவிக்க முடியாத சூழ்நிலையில் மாநில அரசு உள்ளது.

தமிழகத்தில் திரைப்படத் தொழில் என்பது பல்லாயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல், சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சிறந்த தமிழ்ப் படங்களை உருவாக்கும் வகையில் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப் படங்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது. தி.மு.க. ஆட்சியிலே 1989-இல் ரூ.61 இலட்சத்தில் 27 படங்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. 1991-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே 9 படங்களுக்கு ரூ.10 இலட்சமாகக் குறைக்கப்பட்டது. இந்தத் தொழில் நசுக்கப்படாமல் இருப்பதற்காக அதற்கு மென்மேலும் ஊக்கம் தேவை என்ற அடிப்படையில் ஊக்கத் தொகையாக வழங்கப்படுவதற்கு மொத்தம் ரூ.90 இலட்சம் ஒதுக்கி, அதில் ஒரு படத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் 45 படங்களுக்கு ஊக்கத் தொகை தர முடிவு செய்யப் பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இது தவிர, சிறந்த தமிழ்ப் படத்திற்கு முதல் பரிசாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டிலிருந்து பரிசுத் தொகை ரூ.1.5 இலட்சமாக உயர்த்தப் படுகிறது. இரண்டாவது பரிசு ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.75 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் ஆறுதல் பரிசு ரூ.25 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. இந்த அறிவிப்புகளைத் திரைப்படத் துறையினர் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

இந்தியாவிலேயே திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஆனால் பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் உள்ளது போல் ஒரு 'Film City' 'திரைப்பட நகர்' - சென்னையில் இல்லை என்ற ஒரு பெரும் குறை இருக்கிறது.

மேலும் இது போன்ற 'திரைப்பட நகரினை' சென்னையில் உருவாக்குவோமேயானால், அரசிற்கு மிகப் பெரிய அளவிலே வருமானம் ஈட்ட முடியும். இந்தத் திரைப்பட நகரிலே படப்பிடிப்பிற்கான அனைத்து வசதிகளும் செய்து தந்தோமேயானால், அரசுத் துறை நிறுவனங்களும், திரைப்படத் தயாரிப்பாளர்களும், தொலைக்காட்சி நிலையத்தாரும் தங்களது தயாரிப்புச் செலவைக் குறைத்துக் கொள்ள, குறைந்த செலவிலே அதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு உருவாகும். ஆகையினால் சென்னை, அடையாறுக்கருகில் இருக்கிற தரமணியில் திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சி வளாகத்தில் உட்புற, வெளிப்புறப் படக்காட்சிகளை எடுப்பதற்குரிய சகல வசதிகளுடன் 'திரைப்பட நகர்' ரூ.70 இலட்சம் செலவில் உருவாக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் ஒரு கட்டமாக 'கேபிள் டி.வி.' என்ற புதிய முறை உருவாகியுள்ளது. ஒளிநாடாக்களைப் பயன்படுத்தி அந்தந்துப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குப் படக்காட்சி நிகழ்ச்சிகளைக் காட்டி வருகின்றனர். ஆரம்பக் கட்டத்தில் தொலைத் தொடர்புத் துறையின் அனுமதி பெற்றதாகக் காட்டி 'டிஷ் ஆண்டனாவைப்' பயன்படுத்தி இந்நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். தற்போது 'டிஷ் ஆண்டனா' இல்லாமல் இந்த நிகழ்ச்சிகள் காட்டப் படுகின்றன. இவை தற்போது புற்றீசல் போல் வளர்ந்துள்ளன. இந்தக் கேபிள் டி.வி. முறையை ஒரு வரையறைக்குள் கொண்டுவராவிடில் திரைப்படத் துறையிலுள்ள ஆயிரக் கணக்கானோர் பாதிக்கப்படுவதோடு அரசுக்கும் கணிசமான அளவு வருவாய் இழப்பு ஏற்படும். வீடியோ உரிமை வழங்கப்படாத புதிய படங்களையும், இவர்கள் காட்ட முற்படுவதால் இது வீடியோ திருட்டில் போய் முடியக்கூடும். எனவே உரிமம் பெறாமல் நடத்தப்படும் கேபிள் டி.வி. நிறுவனங்கள் மீது காவல் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்துடன் வீடியோ திருட்டை ஒழிக்கவும், உரிமம் பெறாமல் கேபிள் டி.வி. மூலம் படக் காட்சிகள் நடத்துவதை முறைப் படுத்தவும், தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு வீடியோ கேசட் ரிக்கார்டர் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவில் கூறியது போல், பேரறிஞர் அண்ணா, அவர்களின் எழுத்துச் செல்வங்களை எங்கள் அரசு நாட்டுடைமையாக்க முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது. இந்த முயற்சியை நிறைவு செய்வதற்காக அறிஞர் பெருமக்கள் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளது.

1. பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அவரது சிறு கதைகள், குறும் புதினங்கள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், மேடைச் சொற்பொழிவுகள் இவைகளை மலிவு விலையில் வெளியிட்டு மக்களுக்கு எளிதில் கிடைக்க வழிவகை செய்யப்பட உள்ளது.

2. மேலும் பேரறிஞர் அண்ணாவின் ஒளிப்படங்கள் (வீடியோ டேப்ஸ்) அறிஞர் அண்ணா வரைந்த ஓவியங்கள் ஆகியவைகள் கால வரிசையில் தொகுத்து வெளியிடப் பட உள்ளது.

## துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக்கோட்டு



தமிழ்நாட்டில் உள்ள சுமார் 33 ஆயிரம் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவசமாக மழைக் கோட்டு வழங்கப்படும். தமிழ்நாட்டில் மொத்தம் 33 ஆயிரத்து 269 துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர். அவர்களுக்குத் தலா ஒரு மழைக்கோட்டு இலவசமாக வழங்கப்படும். இதற்காகும் செலவு 94 இலட்சத்து 81 ஆயிரத்து 665 ரூபாய். ஒரு மழைக் கோட்டின் விலை ரூ.255 ஆகும்.

இந்தத் தொகையில் 50 சதவிகிதம் உள்ளாட்சி நிறுவனங்களால் மானியமாகவும், மீதித்தொகை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப் படும் என்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.அழகு திருநாவுக்கரசு அவர்கள் 17.9.'91 என்று அறிவித்தார்.

திருச்சி மற்றும் சேலம் நகராட்சிகள் மாநகராட்சிகளாக மாற்றப்படும் என்று தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு தமிழகச் சட்டப்பேரவையில் 17.9.91 அன்று அறிவித்தார்.



3. குறிப்பாகத் தனியாரிடமும், அரசிடமும், அகில இந்திய வானொலி நிலையத்திலும் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களது சொற்பொழிவுகளைத் தாங்கிய ஒலி நாடாக்களை (ஆடியோ டேப்ஸ்) வாங்கி, அவற்றைத் தொகுத்து 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

4. மேலும், அரசிடமும், தனியாரிடமும் உள்ள 16 எம்.எம். திரைப்படங்களை வாங்கி ஒளிப் படங்களாக (வீடியோ டேப்ஸ்-ஆக) மாற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றை 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிடவும் முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நான் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவில் கூறியதுபோல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சுயமரியாதையைப் பெற்றுத் தருவதற்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரல் கொடுக்கவும் வைக்கத்தில் தந்தை பெரியாரால் துவக்கி வைக்கப்பட்ட போராட்டத்தை, அவர் செய்த தியாகத்தை, நினைவில் நிறுத்துகிற வகையிலும், இந்தச் சரித்திர நிகழ்ச்சியை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க விரும்பியது. புரட்சித் தலைவர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களால் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்த இந்த நினைவாலயம், 'வைக்கத்தில்' விரைவில் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சுற்றுலாத்துறை**

1990-ஆம் ஆண்டினைப் பொறுத்த வரையில் இந்தியாவிலும், உலக அளவிலும் குறிப்பாக வளைகுடாப் போர் போன்ற பிரச்சினைகளால் சுற்றுலாப் பயணிகள் வருகை பெருமளவில் பாதிக்கப்பட்டது. இருப்பினும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சுற்றுலாப் பயணிகள் வருகை 1990-ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த இருபது ஆண்டுக் காலமாக, அரசின் சுற்றுலாக் கொள்கை, அரசுத் துறையில் விடுதிகள் மற்றும் பயணத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுத்தது. இத்திட்டங்களினால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிக விரைவாக வளர்ச்சியடைந்தது. இத்தகைய வளர்ச்சி தொடர்ந்து நீடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆனாலும், பிற்காலத்தில் ஏற்படும் சுற்றுலாத் தேவைகள் அனைத்தையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் மட்டும் ஈடு செய்ய இயலாது. அதனால் சுற்றுலா முன்னேற்றத்தில் தனியார் துறையையும் ஈடுபடுத்தி, சுற்றுலாத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதனை 1986-லேயே உணர்ந்து, அரசு சுற்றுலாவை ஒரு தொழிலாக அங்கீகரித்து அறிவித்தது. ஆனால் புதிதாகத் தொடங்கப்படும் மற்ற தொழில்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் சுற்றுலா சார்ந்த திட்டங்களுக்கு வழங்கப்படவில்லை. புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் ஒரு சில சலுகைகள் சுற்றுலாத் திட்டங்களுக்கு அளிக்கப்படவேண்டிய அவசியத்தை இவ்வரசு உணர்ந்துள்ளது.

வெளிநாடுகளில் இந்தியா பற்றி செய்யப்பட்டுள்ள எதிர்மறை விளம்பரங்களை முறியடித்து, வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவிற்கு அதிக அளவில் வருவதற்காக மத்திய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சுற்றுலா வருகைக்காக அயல்நாடுகளில் மத்திய அரசு செய்யும் விளம்பரப் பணியில் தமிழ்நாடு அரசும் இணைந்து செயல்படும். இந்த விளம்பரத்திற்காகத் தமிழ்நாடு அரசு மத்திய அரசிற்கு ரூ.10 இலட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த விளம்பரச் செயல்முறை, அயல்நாடுகளில் தென் இந்தியா ஓர் உகந்த சுற்றுலா உறைவிடம் என்பதை உணர்த்துவதற்காக மேற்கொள்ளப்படும். எல்லாத்தென் மாநிலங்களும் இந்த ஒருங்கிணைந்த விளம்பரத்திற்காகச் செலவைப் பகிர்ந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைந்து செயல்படும் விளம்பர ஏற்பாடு தகுந்த பயன்தருமாயின், இந்திய அரசாங்கம் இந்த ஒருங்கிணைந்த விளம்பரப்படுத்தும் பணியினை ஒவ்வோர் ஆண்டும் செயல்படுத்தக் கேட்டுக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையினை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' 1990- 91-ஆம் ஆண்டில் நல்ல முன்னேற்றத்தினைக் கண்டுள்ளது. இருப்பினும் அரசுத் துறையுடன் தனியார் துறையும் இத்துறையில் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த இந்த அரசு அதற்கான திட்டங்களைத் தீட்டி, அவ்வகையில் ஈடுபடுவோருக்கு நல்ல சில சலுகைகளையும் விரைவில் அறிவிக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க, முக்கியமான தமிழகத்து விழாக்கள் மற்றும் பண்டிகைகளை மிகச் சிறந்த முறையில் கொண்டாட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு இதற்காக ரூ.10 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

சுற்றுலா சொகுசுப் பேருந்துகளின் வரியை இருக்கைக்கு ஒரு காலாண்டுக்கு ரூ.2,000 என இருந்ததை ரூ.500 என அதே கால அளவிற்கு ஏற்கெனவே அரசு குறைத்து அறிவித்துள்ளது. இதனால் பயணச் செலவுகள் குறைக்கப்பட்டு, சுற்றுலா மேம்பாட்டையும், இவ்வரி குறைப்பு தவறான வழியில் பயன்படுத்துவதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

நடப்பு ஆண்டில் (1991-92)-இல் முக்கியத் தமிழகத் திருவிழாக்களும், பொருட்காட்சிகளும் சிறந்த முறையில் நடத்தப்படும்.

வைகை அணை, சாத்தனூர் அணை, மேட்டூர் அணை ஆகிய மூன்று சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிகளை மேம்படுத்தி அவர்களுக்குத் தங்க இடம், உணவு விடுதிகள், பூங்கா மற்றும் தோட்டங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு மையங்கள் ஆகியவை அமைக்கப்படும்.

கீழே குறிப்பிட்ட திட்டங்களைத் தமிழ்நாடு அரசு மத்திய அரசின் உதவியுடன் நடப்பு ஆண்டில் செயல்படுத்த உள்ளது.

1. உதகையில் ரூ.20 இலட்சம் செலவில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல்.

2. கொடைக்கானலில் ரூ.30 இலட்சம். செலவில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காகக் குடில்கள் அமைத்தல்.

3. ரூ.20 இலட்சம் செலவில் பல்வேறு சுற்றுலா இடங்களுக்குப் படகு வாங்குதல்..

4. மேலும் மத்திய அரசு கீழே குறிப்பிட்ட திட்டங்களுக்காக ரூ.10 இலட்சம் அளித்துள்ளது.

அ. மாமல்லபுரத்தில் தொல்பொருள் சின்னங்களுக்கு ஒளிவிளக்கு அமைத்தல்.

ஆ. கொடைக்கானல் மலைப் பகுதிகளில் மலை ஏற்றம் ஊக்குவித்தல்.

இ. விழா மற்றும் பண்டிகைகள் நடத்துதல்.

மேல் குறிப்பிட்ட திட்டங்களுக்கு நிலத்தை மாநில அரசு வழங்கி வெளிப்புறப் பணிகளையும் மேற்கொள்ளும். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிக்கப்பட்ட திட்டங்களை அழகுபடுத்துவதற்கு மற்றும் எடுத்து நடத்துவதற்

### காவிரி யாருக்கு உரியவள்?



**சோழ நாடானது 1,500 ஆண்டுகளுக்கு முன்பு பல்லவப் பேரரசன் மகேந்திரவர்மன் ஆட்சியின்கீழ் இருந்தது. அவன், காவிரியாற்றின் மீது மிகுந்த காதல் கொண்டிருந்தான். இதைச் சொல்லியே- கவின்மிகு காவிரி மீது தன் கணவனின் பார்வையும் விழாதபடி பார்த்துக் கொண்டாளாம் உமாதேவி!**

**இதைப்பற்றித் திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையில் அவனே உருவாக்கிய குடைவரைக் கோயிலில் ஒரு கவிதை காணப்படுகிறது. பல்லவ கிரந்த எழுத்தில் காணப்படும் அந்தக் கவிதையின் பொருள் வருமாறு:**

**'நதிகளிடம் மிகவும் ஆசை கொண்டவனான (நதிப்பிரியன்) சிவபெருமான்; கண்களுக்கு இனிய- குளிர்ச்சியான தெளிந்த நீரையும், வரிசையாக உள்ள கோயில்களான ஆபரணங்களையும், விரும்பத்தக்க பல நற்பண்புகளையும் உடையவளாகிய காவிரிப் பெண்ணைப் பார்த்துவிட்டு, அவள் அழகில் மயங்கிக் காதலுற்று விடுவாரே, என்று அஞ்சினாள் மணியரசனின் மகள் உமாதேவி; ஆகவே, அவள் தன் தந்தையின் இருப்பிடமான இமயமலையை விட்டுவிட்டு- இங்கு திருச்சிராப்பள்ளி மலைக்கு வந்து, சிவனருகில் நகராமல் இருந்துகொண்டு- "இக் காவிரிப் பெண் பல்லவனுக்கே உரியவள்" என்று அழுத்தமாகக் கூறியவாறே இருக்கிறாள்!'**





## அதங்கோட்டாசான் விழா!

மூன்று தமிழ்ச்சங்கங்களில் - இடைச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களுக்குள்ளே தலைசிறந்தவர் என்றும், தொல்காப்பியம் அரங்கேற்றும் போது அவைத் தலைமை வகித்தவர் என்றும் புகழப்படும் தமிழ்ப் பெரும் புலவர் அதங்கோட்டாசானின் விழா, அவர் பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அதங்கோட்டில் 6.9.91 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவர் பெயரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப்பட்ட அலங்கார மேடையில், அன்று பிற்பகல் 4.00 மணிக்கு வழக்காடு மன்றம் துவங்கியது. வழக்காடு மன்றத்திற்கு ஆலங்கோட்டை சிறுகதைத் தென்றல் திரு கணபதி தலைமை தாங்கினார். 'குடும்பத் தலைமையை மனைவி ஏற்பது குற்றம்' என்று புலவர் பா.லாசர் அவர்கள் வழக்குத் தொடுத்தார். அதை மறுத்து, புலவர் கொ.கோவிந்தநாதன் எதிர் வழக்காடினார். வாதங்களைக் கேட்ட பின்னர் மன்றத் தலைவர் - குடும்பத் தலைமையை இன்றைய சூழ்நிலையில் மனைவியும் ஏற்கலாம் என்று தீர்ப்புக் கூறினார்.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது.. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு எஸ்.துரைராஜ் விழாவிற்குத் தலைமை வகித்தார். திரளாக வருகை தந்த பொதுமக்கள், விருந்தினர்கள் மற்றும் ஏனையோரையும் மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு வை. புண்ணியமூர்த்தி வரவேற்றுப் பேசினார். அடுத்து, பேராசிரியர் திரு இரா.தியாகசுவாமி, புலவர் கொ.கோவிந்தநாதன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு என். குசேலப்பிரசாத் ஆகியோர் அதங்கோடு தந்த ஆசானின் பெருமைகளைக் குறித்துச் சிறப்புரை ஆற்றினார்கள். பின்னர் விழாத் தலைவர் அவர்கள் அதங்கோட்டாசான் திருவுருப் படத்தினைத் திறந்து வைத்துத் தலைமையுரையாற்றினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையினால் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அடுத்து, பள்ளிச் சிறார்களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சி கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது.

விழா இறுதியாக, பள்ளித் தலைமையாசிரியர் திரு எம். சையது உசேன் அவர்கள் நன்றி கூறினார்.

காக உண்டாகும் செலவினைத் தேவைப்பட்ட திட்டங்களுக்கு மேற்கொள்ளும். மத்திய அரசு உதவியுடன் செயல்படும் மேலே குறிப்பிட்ட திட்டங்கள் அல்லாமல் மேலும் சில முக்கியத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு 1991-92-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களை எடுத்து நடத்தவிருக்கிறது.

1. ஒருங்கிணைந்த விளம்பரச் செயல்முறை ரூ. 10 இலட்சம்.

2. விழா மற்றும் பண்டிகைகள் ரூ.10 இலட்சம்

3. மாவட்ட உலா மையங்கள் ரூ. 6 இலட்சம்

4. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகள் அழகு மேம்படுத்த ரூ.11.33 இலட்சம்.

சுற்றுலா முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை அமைத்துத் தர வேண்டும் என்ற நோக்கில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 24 விடுதிகள் 11 இளைஞர் விடுதிகள் 2 சுற்றுலா வளாகங்கள், 4 உணவகங்கள், 8 படகுக் குழாம்கள், 4 தொலை நோக்கி நிலையங்கள், ஒரு வழித்தட வசதி நிலையம், 2 சிறு பூங்காக்கள் மற்றும் சிற்றுண்டி நிலையம் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இக்கழகத்தின் விடுதிகள் பெரும்பாலும் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் உள்ள பயணிகளின் தேவைகளை நிறைவு செய்கின்றன. ஒருசில விடுதிகளில் நட்டம் ஏற்பட்டாலும்கூட சுற்றுலா முன்னேற்றம் கருதி அவைகளைத் தொடர்ந்து இக்கழகம் நடத்தி வருகிறது.

இக்கழகத்தின் வாகனப்பிரிவில் 22 சொகுசுப் பேருந்துகள் இயங்குகின்றன. இக்கழகம் நடத்தும் சில சுற்றுலாக்கள் மிகவும் பிரபலமடைந்தவை.

கடந்த 17 ஆண்டுகளாக வருடாந்திரச் சுற்றுலாத் தொழிற்பொருட்காட்சியைச் சென்னையில் தீவுத்திடலில் இக்கழகம் நடத்தி வருகிறது. கடந்த 1990-91-ஆம் ஆண்டில் சுமார் 30 இலட்சம் பேர் இப்பொருட்காட்சிக்கு வருகை புரிந்துள்ளனர்.





★ ஜனநாயகவாதி சிறிதளவும் சுயநலமில்லாதவனாக இருக்க வேண்டும்; அவனுடைய கருத்தும் கனவும் ஜனநாயகத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

—காந்தியடிகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இவ்வாண்டு இலாபம் ஈட்டியுள்ளது. வரும் ஆண்டுகளிலும் அதன் வளர்ச்சி மேலும் பெருகி, தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் வரவு அதிகரிக்கத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

### பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

சமூக நீதியைக் காத்திட-சமுதாய நிலையிலும், கல்வித் துறையிலும் பிற்படுத்தப்பட்டோரைக் கைதூக்கி உயர்த்தி முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்காகக் கல்விச் சலுகைகள், கல்வி நிறுவனங்களிலும், அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களிலும் உரிய ஒதுக்கீடு வழங்குதல், பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துதல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் முன்னணியில் இருந்து வருகிறது. பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு கல்வி நிறுவனங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் தனி ஒதுக்கீடு தரப்படுதல் வேண்டும் என்ற இலட்சியத்திற்கு ஒரு நீண்ட நெடிய வரலாறே உண்டு என்பதை அனைவரும் அறிவர்.

இந்த இலட்சியத்திற்கு 1921-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக இந்த மாநிலத்தில்தான் செயல்வடிவம் கொடுக்கப்பட்டு முதல் கம்யூனல் ஜி.ஓ. (First Communal G.O.) என்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு வெளியிடப்பட்டது. இந்த இலட்சியம் மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாகப் பரிணாம வளர்ச்சி பெற்று நமது புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் சேருவதற்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை செயல்முறைக்கு வந்தது. அத்தகைய பரிணாமத்தின் தொடர்ச்சியாகத்தான், மண்டல் கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்துகையில், 50 சதவிகித இடஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தும் என்ற உறுதியான நிலையை இவ்வரசு மேற்கொண்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மீண்டும் ஒரு முறை அறிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த 50 சதவிகித ஒதுக்கீடு என்பது ஏதோ அதிகமாகக் கேட்கவேண்டுமென்ற காரணத்தால் சொல்லப்படுகின்ற ஒன்றல்ல. நமது மாநிலத்தில் மொத்த மக்கட் தொகையில சுமார் 67 சதவிகிதம் பேர் பிற்படுத்தப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மக்களாவார்கள். மண்டல் கமிஷன் பரிந்துரைகளிலேகூட இந்திய நாட்டு அளவில் பிற்படுத்தப்பட்ட மக்கள் மொத்த மக்கட் தொகையில் 52 சதவிகிதம் பேர் உள்ளனர் என்ற குறிப்பு உள்ளது. எனவே, நாம் வலியுறுத்தி வரும் 50 சதவிகித இடஒதுக்கீடு என்பது அசைக்க முடியாத மக்கட் தொகைப்புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் கல்வி மற்றும்



• எந்த மனிதனும் எனக்குக் கீழானவன் அல்ல. அதுபோலவே எவனும் எனக்கு மேலானவனும் அல்ல. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் இருக்க வேண்டும் என்பதே அதன் பொருள். இந்த நிலை ஏற்படச் சாதி ஒழிய வேண்டும்.

பொருளாதார மேம்பாட்டிற்காக, 1991-92-ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை அரசு செயல்படுத்த எண்ணியுள்ளது:

1. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்காக ரூ.65.85 இலட்சம் செலவில் 7 மாணவரில்லங்கள் கட்டப்படும்.

2. 5 நடுநிலைப் பள்ளிகள் ரூ.5.98 இலட்சம் செலவில் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்;

3. பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 50 நபர்களுக்கு ரூ.1.72 இலட்சம் செலவில் கனரக வண்டிகள் ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படும்;

4. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 125 மாணவ, மாணவியர்களுக்காக ரூ.1.65 இலட்சம் செலவில் கணிப்பொறிக் கல்விப் (கம்ப்யூட்டர்) பயிற்சியளிக்கப்படும்;

5. பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 450 மாணவ மாணவியர்களுக்கு ரூ.5.40 இலட்சம் செலவில் சுருக்கெழுத்துப் பயிற்சியளிக்கப்படும்;

6. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்ககத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் புள்ளி விவரப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்;

7. தற்போது இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவரில்லங்களுக்கு ரூ.9.96 இலட்சம் செலவில் கூடுதல் வசதிகள் செய்து தரப்படும்;

8. சீர்மரபின மாணவ, மாணவியர் படிக்கும் இரண்டு பள்ளிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக் கூடமும், வகுப்பறைகளும் கட்டித் தரப்படும்.

9. மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குச் சிறுபாசன வசதிகள் செய்து தரப்படும். இதற்காக 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை தவிர மேலும் இரண்டு சலுகைகளை இந்த அவையில் அறிவிக்கிறேன்.

1. உயர்நிலைப் பள்ளிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ மாணவியருக்காக 746 மாணவர் இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 42,969 மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர். எனினும், மாணவ, மாணவியருக்கான விடுதிகள் மேலும் அதிகமாகத் துவக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினரைச் சார்ந்த கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவியர்கள் கல்விக்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் நோக்கத்தோடு இந்த நிதி ஆண்டில் மேலும் 25 விடுதிகள் திறக்கப்படும். விடுதி ஒன்றுக்கு 50 மாணவியர் வீதம் மொத்தம் 1,250 மாணவியர்கள் கூடுதலாகப் பயன்பெறுவர். இந்தப் புதிய விடுதிகளைத் திறப்பதற்கான மொத்தச் செலவினம் ரூ.57.50 இலட்சம் ஆகும்.

2. தற்பொழுது பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால் நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்க்கு, அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேற்படாமல் இருந்து, இதுவரையில் பட்டதாரி எவரும் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவர்கள் கல்விக் கட்டணங்கள், கல்விச் சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

அதேபோலப் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால் நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்க்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கல்விக் கட்டணங்கள், கல்விச் சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து இனி விலக்களிக்கப்படும்.

1. பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மேற்படக் கூடாது.

2. இதுவரையில் பட்டதாரிகள் எவரும் இல்லாத ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக அம்மாணவ மாணவியர் இருக்க வேண்டும்.

அத்தோடு, மாணவரில்லங்களின் பராமரிப்பைச் சீரமைக்கும் நோக்கத்தோடு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியரைத் தலைவராகவும், பெற்றோர் சங்கப் பிரதிநிதிகளில் இருவர், ஆசிரியப் பிரதிநிதிகளில் இருவர், மாணவரில்லத்தின் காப்பாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒவ்வொரு மாணவரில்லத்திற்கும் நிர்வாகக் குழுவொன்றை அமைத்திட இவ்வரசு கருதியுள்ளது. இந்த நிர்வாகக் குழு மாணவரில்லங்களில் பராமரிப்பைத் தொடர்ந்து சீரமைத்துக் கண்காணிப்பதிலும், மாணவ, மாணவியரின் ஆரோக்கியமான

மேம்பாட்டுக்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பெரிதும் உதவிகரமாக இருக்குமென்று நாம் நம்புகிறோம்.

தமிழ்நாட்டில் நாடோடிகளாக வாழ்ந்துவரும் நரிக்குறவர்களைத் தக்க இடங்களில் தங்கச் செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உறுதியான எண்ணம் இந்த அரசுக்கு உள்ளது. எனினும், நரிக்குறவர்கள் தங்களது நாடோடி வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ளும் எண்ணப்போக்கு இல்லாமல் இருந்து வருகிறார்கள். இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் சலுகைகள் அனைத்தையும் பெறுகின்ற உரிமை உடையவர்கள். ஆனால் இச்சலுகைகளை அவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுவதில்லை.

இவர்களுக்காகத் திருச்சிராப்பள்ளி மாவட்டம், தேவராயநேரி மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் அரும்பருத்தி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் அமைத்து நிரந்தரமாக அவ்விடங்களில் குடியிருக்கச் செய்ய மேற்கொண்ட முயற்சிகள் முழுமையாகப் பலன் அளிக்கவில்லை. என்றாலும், நரிக்குறவர்களை நாடோடி வாழ்க்கையிலிருந்து மீட்டாக வேண்டும். இவர்கள் நாடோடி வாழ்க்கையைக் கைவிட்டு, தக்க இடங்களில் நிலையாகக் குடியிருக்க முன்வருவார்களேயானால் அவர்களுக்கு இலவசமாகத் தொகுப்பு வீடுகளை இந்த அரசு அமைத்துக் கொடுக்கும் என்பதனையும், அவர்கள் தக்க தொழிலை ஏற்று நடத்துவதற்கான எல்லா உதவிகளையும் அரசு செய்யும் என்பதையும் இந்த அவையில் அறிவிக்கிறேன்.

இந்த நிலையில், பிற்படுத்தப்பட்டோரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒதுக்கீட்டுக் கொள்கை மாத்திரம் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளை முழுமையாக விரைவில் ஏற்படுத்திவிடாது. இன்றைய மாநிலங்களின் நிதி நெருக்கடி மிகுந்த சூழ்நிலையில், பிற்படுத்தப்பட்டோரின் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த நெருக்கடியைப் போக்கிட, மத்திய அரசு உதவிக்கரம் நீட்ட முன்வர வேண்டும்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் கிராமக் கைவினைஞர்கள் மற்றும் கைத்தொழிலையே நம்பி வாழும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் பொருளாதார மேம்பாட்டுக்கு அகில இந்திய அளவில் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயல்படுத்த மத்திய அரசு சிந்தனை செய்ய வேண்டும். பிற்படுத்தப்பட்டோரின் நல்வாழ்வுக்கெனத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு போதிய நிதியுதவி வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்த மாமன்றத்தின் மூலமாக எழுப்புவது என்னுடைய கடமையாகும்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பிறந்த நாட்கள் வரும் இந்த மாதத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மானிய விவாதத்தில் இந்தக் கோரிக்கையை வைப்பது மிகப் பொருத்தமாகும் என்று நான் கருதுகிறேன். ●

## பெரியார் பேசுகிறார்

- மனிதன் உலகில் தன் சுயமரியாதையை- தன்மானத்தை- உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.
- மானத்தைப் பற்றிக் கவலை இல்லாதவன் எவ்வளவு படித்தவனானாலும், அவனது படிப்பும் மானாபிமானம் உள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.
- மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது சிரமமான காரியம்.
- சோறு இல்லாதவனுக்குச் சோறும், உடை இல்லாதவனுக்கு உடையும், வீடு இல்லாதவனுக்கு வீடும் கொடுக்கப்பட வேண்டியது எவ்வளவு நியாயமோ, அதுபோல கல்வி இல்லாதவனுக்குக் கல்வி கொடுக்கவும் வேண்டும்.
- நம் மக்கள் சமுதாயமானது பல சாதி, பல மதம், பல பிரிவாக இருக்கிறது. நம் நாட்டிலிருக்கிற மனித சமுதாய பேதம் ஒழிய வேண்டும். இதை எவனோ ஒருவன் செய்யட்டும் என்று இருக்கக் கூடாது. நாம் ஒவ்வொருவம் நம் சமுதாயத்திற்காக ஏதாவது செய்யவேண்டுமென்று கருத வேண்டும்.
- நமது கல்வி முறை மாறவேண்டும். படிக்கும்போதே அத்துடன் தொழிலும் பயில வேண்டும். எந்த வகுப்பில் ஒருவன் படிப்பை நிறுத்தினாலும், அவன் தொழில் செய்து பிழைக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். மக்கள் அத்தனைப் பேரும் தொழில் பழகியவர்களாக இருக்க வேண்டும்.







பெண்கள் முன்னேற்றத்திற்கு உழைத்த

# உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர் தந்தை பெரியார்

### மாண்புமிகு முதல்வர் புகழாரம்!

தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்கிற தகுதியும், தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தமாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும், சமுதாய மேம்பாடு, முற்போக்கு எண்ணங்கள், புரட்சிகரச் சிந்தனை ஆகியவற்றைத் தனது வாழ்நாள் முழுவதும் கட்டிக் காத்து வளர்த்து, வெற்றி கண்ட தந்தை பெரியாரின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

வாயளவிலும், நூல் அளவிலும் சொல்லப்பட்ட எத்தனையோ சீர்திருத்தக் கருத்துக்களுக்குச் செயல் வடிவம் பெற்றுத்தர, அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும், அவரது உறுதியும், அஞ்சாமையும், சரித்திரப் புகழ் பெற்றவை.

தந்தை பெரியாரது வாழ்க்கை வரலாறு ஒரு பயன் மரம். பலரும் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய அனுபவச் சுரங்கம். இறக்கும் வரை சமூக மேம்பாட்டிற்காக உழைத்த ஒரு பெரிய தலைவர் நம்மிடம் உண்டென்றால் அது தந்தை பெரியார் தான்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசி அதற்காக உழைத்த உலகத் தலைவர்களின் வரிசையில் தந்தை பெரியார் அவர்களுக்கு முதலிடம் என்றைக்குமே உண்டு என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகிற மற்றொரு செய்தி, பெரியார் என்கிற சிறப்புப் பட்டம் 1938-இல் சென்னையில் நடத்தப்பட்ட தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாட்டில் தான் அவருக்கு வழங்கப்பட்டது.

ஒரு பெரியாரைக் கண்டுபிடிப்பதில் ஆண்களைவிடப் பெண்களுக்கு எப்படிப்பட்ட தொலைநோக்கு எண்ணம் இருந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது இன்றும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது! அதுவும் தமிழ்நாட்டுப் பெண்களுக்குத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கிற சாதுரியம், வேறு எந்த மாநிலப் பெண்களுக்கும் இல்லை என்றே கூற வேண்டும். இதைச் சகோதரர் வீரமணி அவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும்!

ஒரு பெண்ணை முதலமைச்சர் ஆக்கியிருக்கிற தமிழகத்தின் பெருந்தன்மைக்கு, தொலைநோக்குப் பார்

வைக்கு, அரசியல் துணிவுக்கு, தந்தை பெரியாரின் பெண்ணடிமை ஒழிப்புக் கருத்துக்களே உரமாய், ஊக்கமாய் இருந்துள்ளது என்பதை எவரும் மறுத்திட இயலாது.

தந்தை பெரியார் அவர்கள் இன்று நம்மிடையே இருந்தால், ஒரு பெண் தமிழகத்தின் முதல்வராய் இருப்பதைக் கண்டு பேரானந்தம் கொண்டிருப்பார்; பெருமகிழ்ச்சி அடைந்திருப்பார்; பெருமைப்பட்டிருப்பார். ஏனெனில், தனது வாழ்நாள் இலட்சியங்களில் மிக முக்கியமான பெண்ணுரிமை மேம்பாட்டிற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக இதைக் கருதியிருப்பார்.

சமுதாயச் சிந்தனைகளின் மூலம் புரட்சிக் கனல் வீசிய பெரியாரின் மென்மையான குணங்களைப் பற்றிப் படித்து, நான் நிறைய சந்தர்ப்பங்களில் மெய்சிலிர்த்துப் போயிருக்கிறேன்.

குறிப்பாக, நட்புக்குத் தமிழகத்தில் இலக்கணம் வகுத்தவர் தந்தை பெரியார்தான் என்றால் அது மிகையாகாது. 'ஈ.வே.ரா. அவர்களுக்கும், எனக்கும் உள்ள அகநகும் நட்பு யார் என்ன சொன்னபோதிலும் என்றும் குறையாது' என்றார் அவரது நண்பர் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். இராஜாஜி அவர்கள் மறைந்தபோது, அந்த இழப்பைத் தாங்காது குலுங்கிக் குலுங்கிக் கண்ணீர் விட்டு அழுதவர் தந்தை பெரியார். இருவருக்கும் கொள்கையில் பெரிய வித்தியாசம், ஆனால் கொண்டிருந்த நட்பில் அழுத்தமான பிடிப்பு; ஆழமான பாசம்! அரசியல் கட்சியிலிருக்கிற தலைவர்கள் பின்பற்ற வேண்டிய உன்னதமான பாடம் இது. பிரான்ஸ் நாட்டுத் தத்துவ மேதை வால்டரின் கூற்றுப்படி, 'நீ சொல்வதை நான் ஏற்காமல் போகலாம். ஆனால் அதை நீ சொல்வதற்கான உரிமையை, என் உயிர் கொடுத்தேனும் காப்பேன்'.

கருத்து வேற்றுமைகளுக்கு மதிப்பளிப்பது சாதாரண மனிதர்களுக்கு இயல்பாகவே வராது; சரித்திரப் புருஷர்களுக்கு மட்டுமே அது சாத்தியம். அந்த வகையில் பெரியார் அவர்களை அணுகி ஆராய்ந்தோமானால் நமக்குக் கிடைக்கிற அனுபவங்கள் ஏராளம்.

தேசிய கீதம் இசைக்கப்படுகிறபோது தள்ளாத வயதிலும் அவர் எழுந்து நிற்கிற பாங்கும், குறைந்த வயதுடையவர்களையும் 'வாங்கய்யா' என்று அவர் கூப்பிடுகிற நேசமும், தந்தை பெரியார் அவர்களுக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

தமிழ்நாட்டின் தலைவர்கள் எல்லாம் தந்தை பெரியாரைப் பற்றிப் புகழ்வதற்குக் காரணமே அவரிடம் இருந்த நேர்மை, நியாயம், கொள்கை உறுதி, வெற்றியை ஈட்டவிடா முயற்சி ஆகியவைகள்தான். நமது நாட்டில் தலைவராகவே தோன்றி, தலைவராகவே ஒருவர் மறைந்தார் என்றால் அவர் தந்தை பெரியார் ஒருவர்தான்!

நமது பாசத்திற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் கண்ட ஒரே தலைவர், நான் கொண்ட ஒரே தலைவர் பெரியார்தான்' என்றும், 'பெரியார் ஒரு தனி மனிதரல்ல; அவர் ஒரு சகாப்தம்' என்றும் தந்தை பெரியாருக்குப் புகழாரம் சூட்டினார். ஏனென்றால் தமிழர்களுக்கு வழிகாட்டியதோடு மட்டுமல்லாமல், தமிழகம் வளர்வதற்கான விஞ்ஞானச் சிந்தனைகளைத் தமிழ்நாட்டில் மன தைரியத்தோடு அறிமுகப்படுத்துவதற்கு அடிகோலியவர் தந்தை பெரியார்தான்.

இந்த வகையில், மக்கள் தொகை குறைப்பிற்காகக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அந்த நேரத்திலேயே ஆதரித்துப் பேசுகிற ஆற்றலும், தைரியமும் அவருக்கே இருந்தது! அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தமிழக அரசுக் குறிப்புகளில் நாம

## தந்தை பெரியார் பிறந்த நாள் விழா

தந்தை பெரியாரின் 113-வது பிறந்த நாள் விழா சென்னை கலைவாணர் அரங்கில் தமிழக அரசின் சார்பில் 17.9.91 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, தந்தை பெரியார் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துச்சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.க.இராசாராம், கல்வி அமைச்சர் திரு.இராம வீரப்பன், வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், சட்ட அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி.வீரமணி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழா முடிவில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா தொடர்பாக நடைபெற்ற போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ மாணவிகளுக்குப்பரிசுகளும், ரூ.15 இலட்சம் மதிப்பில் 361 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

முன்னதாக செய்தி மற்றும் சுற்றுலாத்துறை முதன்மைச் செயலர் திரு. கே.ஜே.எம்.ஷெட்டி இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. க.கணேசன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன.

—நிகழ்ச்சித் தொகுப்பு
ஜே.சந்திரன்





தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவின் போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

பயன்படுத்துகிற எழுத்துச் சீர்திருத்தத்திற்குத் தந்தை பெரியாரின் எண்ணங்களே வழிமுறைகளாகவும், அடிப்படையாகவும் இருந்தன. தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை எடுத்துக்கொண்டு அதைச் செயல்படுத்த ஆணையிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் இந்த நேரத்தில் நினைவுகூர்வது மிகப் பொறுத்தமாகும்.

நமது பெரியாரின் சாதனைச் செயல்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே வரையறுக்கப்பட்டவை அல்ல. வைக்கம் வீரரின் வரலாற்று உண்மைகள் ஒவ்வொரு தமிழனும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு பாடமாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சுயமரியாதையைப் பெற்றுத் தருவதற்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரல் கொடுக்கவும், தந்தை பெரியார் துவக்கிய போராட்டம் தான் வைக்கம் போராட்டம்!

இந்தப் போராட்டத்தில் தந்தை பெரியார் சிறைப்பட்டதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தனது மனைவி நாகம்மையாரையும் போராட்டத்தில் கலந்துகொள்ள வைத்தார். இறுதியில் சத்தியாகிரகம் வெற்றி பெற்று, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயத் தெருவில் நடக்கும் உரிமை வழங்கப்பட்டது.

தந்தை பெரியாரின் இந்தத் தியாகத்தை நினைவில் நிறுத்துகிற வகையிலும் இந்தச் சரித்திர நிகழ்ச்சியை எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்காகவும், தமிழ்நாடு அரசு ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க விரும்பியது. புரட்சித் தலைவர் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டு, அவருக்குப் பின் வந்தவர்களால் இதுவரை புறக்கணிக்கப்பட்டு வந்து இந்த நினைவாலயம், வைக்கத்தில் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்படும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரளத்தில் மட்டுமல்ல; தமிழகத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இலட்சக்கணக்கான ஏழை எளிய மக்களின் இன்றைய உயர்ந்த வாழ்க்கை நிலைக்கும், பெருமைக்கும், பெரியார்தான் காரணம் என்றால் அதனை எவராலும் மறுக்கவும் முடியாது; மறக்கவும் முடியாது.

எடுத்துக்காட்டுக்களாகச் சொல்லப்படுகிற வகையில் இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் அவர் வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளன.

தந்தை பெரியாரின் வழியிலிருந்து வழுவாது, அவர் காட்டிய பாதையில் சமுதாய சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்டு வரும் சகோதரர் வீரமணி அவர்கள் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தந்தை பெரியாரால் வளர்க்கப்பட்டு, கல்வி அறிவு மட்டுமல்லாமல் கொள்கை அறிவும் ஊட்டப்பட்டவர் சகோதரர் வீரமணி அவர்கள். சில நாட்களுக்கு முன்பு அவர் உடல்நலக் குறைவு காரணமாக வெளிநாடு சென்று சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்கள். சகோதரர் வீரமணி அவர்கள் எல்லா நலனும் பெற்று நீண்ட ஆயுளுடன் தந்தை பெரியார் அவர்களின் சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்ப வேண்டுமென்ற என்னுடைய ஆவலை நம் அனைவரின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய சீர்திருத்தப் பணிகளை நிறைவேற்றித் தந்தை பெரியார் அவர்கள் அடைந்திருக்கும் வெற்றியும், ஜாதி ஒழிப்பில் அவர் ஏற்று இருந்த இலக்கும், என்றென்றும்



விழாவின்போது தந்தை பெரியார் பிறந்த நாள் விழா பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவனுக்குப்பரிசு வழங்குதல்

இனி வரும் தலைமுறையினர் நினைவு வைத்துக் கொள்ள வேண்டிய சரித்திர நிகழ்ச்சிகளாகும். பெரியார் இன்று நம்மிடம் இல்லை; ஆனால் அவர் நமக்கு விட்டுச் சென்றிருந்த சமுதாய மேம்பாட்டுக் கொள்கைகளும், ஜனநாயக வழிமுறைகளும் நம்மிடையே நிலைத்து நின்றுவிட்டன. நமக்குப் பின்னால், வரும் சந்ததியினருக்கும் அவை வழிகாட்டுதல்களாக அமைய வேண்டுமென்ற பேராவலினால் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் என்ற அறக்கட்டளைக்கு அ.இ.அ.தி.மு.க. சார்பில் 5 இலட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்குகிறேன். இந்த அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு சகோதரர் வீரமணி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல் கமிஷன் பற்றிச் சகோதரர் வீரமணி பேசினார். மண்டல் கமிஷன் அறிக்கையை அமல்படுத்த வேண்டும். அவ்வாறு அமல்படுத்தும்போது மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று தமிழகச் சட்டமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரிலேயே தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை வற்புறுத்துவோம். பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்கள், சிந்தனைகள் பாடநூல்களில் இடம் பெறுவது பற்றியும் சகோதரர் வீரமணி விடுத்த மற்ற கோரிக்கைகள் பற்றியும் அரசு பரிசீலித்து விரைவில் நல்ல முடிவுகள் அறிவிக்கப்படும்.

தந்தை பெரியாரால் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள பெருமை அளப்பரியது; ஆராதனைக்குரியது! அந்த வரலாற்று நாயகருக்கு; தமிழகத்தின் வழிகாட்டிக்கு; சீர்திருத்தச் செம்மலுக்கு; பகுத்தறிவுப் பாசறைக்கு, அவரது இந்தப் பிறந்த நாளில் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். •

## சட்டப்பேரவையில்...

வேலூர், சேலம், திருச்சி ஆகிய இடங்களில் தொழில் நீதிமன்றங்கள் தொடங்கப்படும். ஏற்கெனவே சென்னை மதுரை நகரங்களில் உள்ள கூடுதல் தொழில் நீதிமன்றங்கள் கடலூர், நெல்லைக்கு மாற்றி அமைக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தமிழகச் சட்டப் பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு.அரங்கநாயகம் அவர்கள் (16.9.91) அறிவித்தார்.

கருவில் இருக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று கண்டறிந்து, பெண் சிசுவானால் கொன்றுவிடும் கொடுமை இருப்பதால், அவ்வாறு கண்டறிய நடத்தப்படும் சோதனை தடை செய்யப்படும் என்று தமிழகச் சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.முத்துசாமி அவர்கள் (16.9.91) அறிவித்தார்.



# பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச் செல்வங்கள் நாட்டுடைமையாக்கப்படும்!

## மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவிப்பு

இன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள், தமிழர்களின் வாழ்க்கையிலும், ஏழை எளியவர்களின் நெஞ்சத்திலும் நீங்காத நிலையான இடம் பெற்றுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாள் விழா.

இந்த விழா இன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், எனக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிபூரண ஆசிகள் உள்ளன என்று நம்புகின்றேன். ஏனெனில், அவரது இன்றைய 83-வது பிறந்த நாள் விழா, நான் முதலமைச்சராக 83 நாட்கள் பணியாற்றியுள்ள இத்தருணத்தில் சீரிய முறையில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. நான் இந்தச் சீரிய விழாவில் முதலமைச்சராகப் பங்கேற்கின்றேன் என்றால் அதனை என்ன என்று கூற முடியும்? அது மட்டுமல்ல, நான் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்டு, பாராளுமன்றம் சென்ற பொழுது எனக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண்:185 பேரறிஞர் அண்ணா அவர்களால் அலங்கரிக்கப்பட்ட இடமாகும். பண்டித நேரு அவர்களால் பாராட்டப்பட்ட மாபெரும் பாராளுமன்ற உரையினை அவர் நிகழ்த்திய ஆசனம் என்று நான் அறிந்ததும், அதனை வணங்கிய பின்னர்தான் அதில் அமர்ந்தேன். அன்று முதல் என் அரசியல் வாழ்க்கையில் பல சோதனைகளும் வேதனைகளும் எதிர்கொண்டபொழுதும், என்னால் சில சாதனைகளையும் புரிய முடிந்தது என்றால் அது பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிபூரண ஆசியுடன் தான் என்று நம்புகின்றேன்.

### பாடமும் பாதையும்

ஜனநாயகத்தில் மக்கள் சக்திதான் திறமையுள்ள சாதாரண மனிதர்களையும் சரித்திரப் புருஷர்களாக்கி இருக்கிறது. எனவே, தலைவர்களது நேர்மையும், நிதானமும், விழிப்புணர்ச்சியும், தியாகமும், பணிவும் நமக்குப் பாடங்களாகவும், நாம் நடக்க வேண்டிய பாதைகளாகவும் அமைந்துள்ளன.

அண்ணா அவர்களது பிறந்த நாளும், தந்தை பெரியார் அவர்களது பிறந்த நாளும் நம் தலைவர்களுக்கு நாம் வணக்கம் செலுத்துகிற நாட்கள் மட்டுமல்ல, அவை நமது பாரம்பரியமிக்க வரலாற்றுப் பாதைகளில் நாம் சரியாக நடக்கிறோமா என்பதைச் சரிபார்க்கும் நாட்களும் ஆகும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அண்ணா நமக்கு அனைத்திலும் வழிகாட்டியாக இருந்தவர். தனிப்பட்ட முறையில் அவருக்கு அவமானம் இழைக்கப்பட்டபொழுது கூட அவர் அமைதியாக இருந்தார். ஆனால், தனது மொழிக்கும், இனத்திற்கும், பண்பாட்டிற்கும் இன்னல் வந்தபொழுது எல்லாம் அவர் கனலாய்த் திகழ்ந்தார். அண்ணா நிதானமானவர்; அண்ணா பொறுமையானவர்; அண்ணா பண்பானவர் என்பது அவரின் ஒரு பக்கம்! தமிழக மக்களின் உரிமை, சுயமரியாதை பாதிக்கப்பட்டபொழுதும் தனது தாய்மொழியைச் சிதைக்க முயற்சித்தபொழுதும் கொதித்து எழுந்தவர் அண்ணா என்பது அவரின் மறுபக்கம்! அதனால்தான் ஆங்கிலத்தில் அவரைப்பற்றி குறிப்பிடும்பொழுது "Anna had the force of a tempest and the calm of the sea" என்று பெருமையோடு அழைத்தார்கள்

### வாழ்ந்து காட்டிய வழி

'அண்ணா' என்கிற அந்த மூன்றெழுத்து மந்திரத்தின் சக்தி உலகளாவி உள்ளது என்பதை இன்றும் எவரும் மறுக்க முடியாது. இந்த ஆழமான பற்றுதலுக்கும், அன்பிற்கும் பல காரணங்கள் உள்ளன. அண்ணா அவர்களின் செயல், பேச்சாற்றல், சகிப்புத் தன்மை, கொள்கைப் பிடிப்பு, பகுத்தறிவுப் பற்று, அறிவாற்றல், பொது நோக்கு, சகோதரத்துவம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், இவற்றிற்கு எல்லாம் மேலாக மனிதனை மனிதனாக மதித்து, எவர் மனதையும் தன் வாழ்நாளில் புண்படச் செய்யாத அவரது செயல், வாக்கு, இவைதான் அவரை உலகளவில் உயர்த்தியதோடு மட்டுமின்றி, அனைவரின் உள்ளத்திலும் இடம் பெறச் செய்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. 'நான் ஒரு சாமானியன், மிகவும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்' என்று அவர் சொல்லும்பொழுது, அவை வெறும் வாய் வார்த்தைகளாக இல்லாமல், உண்மையின் உருவாக அவரது உள்ளத்தில் இருந்து வெளியானவை என்பதற்கு அவர் வாழ்ந்து காட்டிய வழியே சான்றாகும்.

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

**பே**ரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாள் விழா 15.9.91 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழாத் தொடங்கியது.

செய்தி-சுற்றுலாத்துறை முதன்மைச் செயலர் திரு கே.ஜே.எம். ஷெட்டி, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

'வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் பேசவல்ல சிறந்த சொற்பொழிவாளர் அவர். அண்ணா சிறந்த எழுத்தாளர், கட்டுரையாளர், நாடகாசிரியர், திரைப்பட வசன கர்த்தா அத்துடன் நாடு போற்றிய நாளிதழ், வார கிழமை இதழ்களின் ஆசிரியராக விளங்கினார்.

'காந்தியடிகள், காமராசர் போற்றிய எளிமையைக் கடைப்பிடித்தார் அண்ணா. சமூகச் சீர்திருத்தவாதியாகவும், ஆற்றல்மிக்க அரசியல்வாதியாகவும் விளங்கினார். இளைஞர்கள் அண்ணாவின் புத்தகங்களைப் படிக்க வேண்டும்' என்றார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் முன்னிலையுரையாற்றுகையில், 'திருக்குறளின் கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் அறிஞர் அண்ணா. அண்ணாவின் வழித்தோன்றலாகப் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறார்' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். திருமதி, ராணி அண்ணா அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்குப் பரிசுகளும், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களுக்கு அண்ணா விருதுகளும் வழங்கினார்.

மேலும், சென்னை மாவட்டத்தின் சார்பில், நலிந்த பிரிவினர்க்குச் சுமார் ரூ.14 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழ்ங்கினார். இத்திட்டங்களின் கீழ் மொத்தம் 355 பேர் பயன் அடைகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் தனி நபர் தொழில் முனைவோர் சிறப்புத் திட்டத்தின் கீழ், 8 பேருக்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், ஒருவருக்கு அம்பாசிடர் காரும் வழங்கப்பட்டது. ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்குச் சலவைப்பெட்டிகள், 8 பேருக்குத் தோல் தைக்கும் இயந்திரங்கள், 3 பேருக்குத் தையல் இயந்திரங்கள், 2 பேருக்கு இலவசக் கருவிகள் வழங்கப்பட்டன. ஆதி ஆந்திரர்கள் 5 பேருக்கு இலவச மனைப்பட்டாக்களும், முதல் அமைச்சர் பொது நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதி உதவிகள் இருவருக்கும், முதியோர் உதவித் தொகை 250 பேருக்கும், துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் 25 பேருக்கும், சாலை விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் 50 பேருக்கும், விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒருவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் உதவிகள் வழங்கப்பட்டன.

விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு க. கணேசன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

**- நமது செய்தியாளர்.**

### அண்ணாவின் பொன்மொழிகள்

அரசியலில் கருத்து மாறுபட்டவர்களை அவர் வாழ்த்திய துணிவும், கட்சித் தொண்டர்களிடம் குடும்பப் பாசத்தைப் புகுத்திய திறனும், எழுத்தாற்றலில் பொருள் பொதிந்த அடுக்கு மொழிகளை அறிமுகப்படுத்திய விதமும், கலைத் துறையை முழுமையாக அரசியலுக்குப் பயன்படுத்தி வெற்றி கண்ட தன்மையும் அண்ணா ஒருவருக்கு மட்டுமே கைவரப்பெற்ற கலையாகும்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறேன்' என்ற அவரது முழக்கம் என்றென்றும் அவர் வழி நடப்போர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்;
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு;
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்;
நடந்தவைகள் நடந்தவைகளாக
இருக்கட்டும்,
இனி நடப்பவைகள் நல்லதாக
இருக்கட்டும்.
மாற்றான் தோட்டத்து
மல்லிகைக்கும் மணம் உண்டு.
மறப்போம்! மன்னிப்போம்!

போன்ற அவரது பொன்மொழிகள் என்றென்றும் நிலையாகத் தமிழ் மொழியில் அழியா இடத்தைப் பெற்றுள்ளன. இதனை எவரும் பயன்படுத்தலாம். அதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு பயன்படுத்துவோர் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்ணாவின் மனநிலையில் தங்களை ஆழ்த்திக் கொண்டு தான் அவர்கள் இந்த வார்த்தைகளை உச்சரிக்கின்றார்களா? அல்லது வெறும் வார்த்தை ஜாலங்களுக்காகவா? நான் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அண்ணாவின் பெருமையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் தயவு செய்து அண்ணாவின் பெயரை உச்சரிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணாவின் பெருந்தன்மை அகில உலகப் பெயர் பெற்றது. அண்ணாவின் சகிப்புத் தன்மை இமாலயப் பெருமை கொண்டது.

உறுதியான கொள்கைப் பிடிப்புள்ள வலுவான தொண்டர்களின் தலைவரான அண்ணா வன்முறை நாடாத வரலாற்று நாயகர். பல்வேறு இனத்தினர், மொழியினர் வாழும் மதச் சார்பற்ற மாபெரும் இந்தியத் துணைக் கண்டத்தில், தன்னை யார் என்று அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திக் கொள்கிறபோது, 'நான் ஒரு திருநீறு அணியாத இந்து, சிலுவை அணியாத கிறித்துவன், கைலி கட்டாத முஸ்லீம்' என்று பெருமையோடு தன்னை அழைத்துக் எல்லைகளை அண்டை நாடான சீனா ஆக்கிரமித்தபொழுது அவர் சாதாரண மனிதனுக்கும் புரிகின்ற வகையில், 'தம்பி! வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும்' என்று கூறிய வார்த்தைகளின் ஆழம் அவர் இந்திய தேச ஒருமைப்பாட்டைக் காக்க விடுத்த ஒப்பற்ற அறிவுரையாகும்.

பாராளுமன்ற மக்களாட்சி முறையின் மூலம் ஆட்சியில் அமர்த்தப்பட்டு இருக்கிற மத்திய மற்றும் மாநில அரசின் கைகளை வலுப்படுத்துவதில் எங்கள் அரசு முன்னுரிமையோடு செயல்படும் என்பபடுத்தத் தொடங்கியுள்ளது என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா பொது வாழ்வில் ஈடுபடுவதற்கு அடித்தளமாக இருந்தது நீதிக் கட்சியும், சுயமரியாதை இயக்கமும் தான். அந்த இயக்கங்களின் பரிணாம வளர்ச்சியின் வாரிசாகத்தான் அவர் வளர்ந்து, சிறந்து இன்று நமது வணக்கத்திற்குரிய வரலாறாகத் திகழ்கிறார். அவர் வழி நின்று, அவரது வாரிசாகத்தான் நாங்கள் இன்று தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை மகத்தான மக்கள் ஆதரவோடு நடத்தி வருகிறோம். 'அண்ணா எங்



கொண்டவர். 'பகுத்தறிவுப் பாதுகாவலர்' என்று பெருமையோடு அனைவராலும் அழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, பழமையின் பெருமைகளுக்கும் பிறரின் நம்பிக்கைகளுக்கும் வழங்க வேண்டிய மரியாதையை எந்த நேரத்திலும் வழங்கத் தவறியதில்லை.

'திராவிட நாட்டுக் கொள்கை'யை அவர் கைவிட்டதற்குக் கூறிய தெளிவான காரணங்கள் இன்றைக்கும் அவரை வணக்கத்திற்குரியவராக நம்மிடம் நிலைப்படுத்தியுள்ளது. இந்தியத் திருநாட்டின் தையும், நமது தாய்த்திரு நாட்டைத் துண்டாடும் முயற்சியில் எவர் ஈடுபட்டாலும், அவர்களை அடையாளம் கண்டு அப்புறப்படுத்துவதில் எங்கள் அரசு முன்னணியில் இருக்கும், அதுவே அண்ணாவின் எண்ணமுமாகும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நல்ல அரசு என்னென்ன திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கோடிட்டுக் காட்டினாரோ, அவற்றை எல்லாம் இந்த அரசு வழி வகுத்து முழுமையாகச் செயல்களுக்கு மட்டும் சொந்தம்' என்பவர்களை மக்கள் மறந்து விட்டார்கள். 'அண்ணா மக்களுக்குச் சொந்தமானவர்' என்ற புரட்சித் தலைவரின் வழியொட்டி நடப்பவர்களான நாங்கள், அண்ணாவின் அடிச்சுவட்டில் ஆட்சிப் பொறுப்பை இன்று நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### உண்மையான அண்ணாவின் ஆட்சி அமைய...

தனது வாரிசுகளின் வளர்ச்சிக்காகச் சிலர் அண்ணா பெயரைச் சொல்லலாம். ஆனால், நாங்கள்

**சட்டப்பேரவையில்...**

தமிழ்நாட்டில் மோட்டார் சைக்கிள் டாக்சியை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இந்த இரு சக்கர வாடகை வாகனங்களுக்குத் தனி வர்ணம் பூசப்படும். ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு ஒருவர் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு செல்லலாம். இந்த திட்டத்தின் மூலம் சுமார் 1 இலட்சத்திற்கும் மேலான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து இந்தத் திட்டம் கொண்டு வரப்படும் என்று தமிழகச் சட்டப்பேரவையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் (16.9.91) அறிவித்தார்.

அவரை மக்களின் வளர்ச்சிக்காகத் தான் உச்சரிப்போம். அவர் பெயர் இழிவுபட எத்தணிக்கமாட்டோம். இன்றைய தமிழகத்தில் அண்ணாவின் அடிச்சுவடுகளைத் தொடராதவர்கள் ஆட்சி அரியாசனம் ஏறவே முடியாது. அதில் முதல் வெற்றி இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு, இரண்டாவது வெற்றி உங்கள் சகோதரியான எனக்கு; இனி என்றென்றும் உண்மையான அண்ணாவின் ஆட்சி அமையவே மக்கள் தொடர்ந்து தீர்ப்பளிப்பார்கள்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் தனக்காக ரத்தம் சிந்திய தொண்டர்களின் மீது அபரிமிதமான பாசமும், நம்பிக்கையும் வைத்த தலைவர்கள். அவர்களது அந்தப் புனிதமான வழிகாட்டுதலைத்தான் நானும் பின்பற்றிக் கொண்டிருக்கிறேன். விரிந்து பரந்து இருக்கிற திராவிடப் பாரம்பரியமான மாபெரும் ஆலமரத்தின் விழுதுகளாக இலட்சக்கணக்கில் பரவிக் கிடக்கிற உடன்பிறப்புக்களே! உங்கள் சகோதரியாகிய நான் உங்களுக்குச் சேவை செய்யவே நீங்கள் என்னை முதலமைச்சராக்கியுள்ளீர்கள் என்று தான் எண்ணுகிறேனே தவிர, உங்களை ஆளுகிற அதிகாரத்தை எனக்கு அளித்திருப்பதாக என்றென்றும் எண்ணமாட்டேன் என்பதை, நமது அண்ணா பிறந்த இந்த நன்னாளில் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணாவின் புகழ்மட்டும் பாடிச் செல்வதற்காக நாங்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்படவில்லை என்பதை நான் நன்கு அறிவேன். அவர் உள்ளத்தால் விரும்பிய தமிழகத்தின் உயர்வை, தமிழ் மொழியின் உயர்வை அடைந்தே தீர்வதற்காகத்தான் நான் ஆட்சிப் பீடத்திற்கு ஏற்றப்பட்டுள்ளேன் என்பது எனக்குத் தெரியும். பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை நனவாக்க, அவர் வழியில் நடந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாதையில் தொடர்ந்து இந்த அரசு பணியாற்றும் என்று உறுதி கூறுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற என்னுடைய நீண்டநாள் அவா விரைவில் நிறைவேற உள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்துச் செல்வங்களை எங்கள் அரசு நாட்டுடைமையாக்க முயற்சிகள் மேற்கொள்ளும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சியை நிறைவு செய்வதற்காக அறிஞர் பெருமக்கள் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளது. பேரறிஞர் அண்ணாவின் எழுத்துச் செல்வங்களை நாட்டுடைமையாக்குவதன் மூலம் அவரது சிறு கதைகள், குறும் புதினங்கள், புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், மேடைச் சொற்பொழிவுகள் இவைகளை மலிவு விலையில் வெளியிட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட உள்ளது.

மேலும், பேரறிஞர் அண்ணாவின் ஒளிப்படங்கள் (Video Tapes) அறிஞர் அண்ணா வரைந்த ஓவியங்கள் ஆகியவைகளைக் கால வரிசையில் தொகுத்து வெளியிடப்பட உள்ளது.

குறிப்பாக தனியாரிடமும், அரசிடமும், அகில இந்திய வானொலி நிலையத்திலுமுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களது சொற்பொழிவுகளைத் தாங்கிய ஒலி நாடாக்களை (Audio Tapes) வாங்கி அவற்றைத் தொகுத்து **'அண்ணா வாழ்கிறார்'** என்ற தலைப்பில் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட உள்ளது.

மேலும், அரசிடமும், தனியாரிடமும் உள்ள 16 எம்.எம்.திரைப் படங்களை வாங்கி ஒளிப்படங்களாக (Video Tapes) மாற்றி, பேரறிஞர் அண்ணா அவர்களது வாழ்க்கை வரலாற்றை 'அண்ணா வாழ்கிறார்' என்ற தலைப்பில் வெளியிடவும் உடன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நன்றிக்கடன்**

இந்த மாபெரும் விழாவில் நான் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்ததிலும், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்களுக்கு அண்ணா விருதுகள் வழங்குவதிலும், அரசு நலத்திட்ட உதவிகளை ஏழை எளியோர்களுக்குக் கொடுப்பதிலும், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்குப் பரிசுகளை வழங்குவதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டு, மக்களின் விழிப்புணர்ச்சிக்கு வழிகோலிய அவரது எண்ணங்களுக்கு உருக்கொடுத்து, அவைகளை நிறைவேற்றுகிற உறுதியுடன் நமது பயணத்தைத் தொடர்வோம்! நமது சந்ததியினர் பெருமையோடு தலைநிமிர்ந்து நடக்க தெளிந்த பாதையை நாம் அமைத்துக் கொடுப்போம்! அதுவே நாம் அண்ணாவுக்குச் செலுத்துகிற நன்றிக் கடனாகும் என்று கூறி அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - என்று சொல்லி விடை பெறுகிறேன். ●





# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - இம்மூன்றும் இணைந்திருந்தால் உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?

## தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

**-15.9.91 அன்று நடைபெற்ற 'தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கு விழாவில் பேசியது.**

மக்களுக்குச் சேவை புரியும் மரியாதைக்குரிய சீருடை அலுவலர்களைச் சிறப்பிக்கும் இவ்விழாவில் நான் பங்கு கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-ஆம் பிறந்த நாளில் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று 83-நாட்கள் பணிபுரிந்து, இன்று உங்களிடையே இந்நன்னாளில் உரையாற்றிக் கொண்டிருக்கின்றேன் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது மட்டிலா மகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் சேவை நாட்டிற்குத் தேவை என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. ஒரு ஆட்சி நிலையானதாக, வலுவானதாக நிலைத்திருக்கக் காவல்துறையினரின் சீரிய பணி அத்தியாவசியமானது. காவலர்கள் இல்லையேல் நாட்டில் கட்டுப்பாடு இருக்காது.

அண்ணா அவர்கள் அழகாகக் குறிப்பிட்ட கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற' வாசகங்களுக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள் நீங்கள்! மக்களின் உயிரையும், உடைமையையும் காக்க வேண்டியது உங்கள் கடமை; இந்தக் கடமையை ஆற்றுவதில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியது கண்ணியம்; இவை இரண்டிற்கும் மேலாகக் கடமையைக் கண்ணியத்துடன் நீங்கள் ஆற்றும் பொழுது எதிர்வரும் ஆசாபாசங்களுக்கு அடிமையாகாது செயல்படுவது கட்டுப்பாடு. இம்மூன்றும் இணைந்திருந்தால் உங்கள் உயர்விற்கு ஏது தட்டுப்பாடு?

நான் சரித்திரப் பாடங்களில் படித்திருக்கின்றேன் - அந்நாளைய மன்னர்களுக்கு நால்வகைப் படைகள் உண்டு. அவை- ரத, கஜ, துரக, பதாதி என்று குறிப்பிடுவார்கள். இரதப்படை, யானைப்படை, குதிரைப்படை மற்றும் காலாட்படை- இந்த நான்கு வகைப் படைகளும் அன்றைய நாட்டைக் காக்க உருவாக்கப்பட்டன. இன்றைய விழாவில் சிறப்பிக்கப்படும் காவல்துறை, சிறைத்துறை, தீ அணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படையினரை அன்றைய நால்வகைப் படையினருக்கு ஒப்பிட்டு நோக்குகின்றேன். அக்காலப் படைவீரர்களின் துணைவியர்கள் தங்கள் கணவர் போருக்குப் புறப்பட்டால்தான் கலங்குவர். ஆனால் இன்று நமது நாட்டையும், மக்களையும் காக்கும் நீங்கள், நாள் தோறும் பணிக்குப் புறப்படும் பொழுதெல்லாம் உங்கள் இல்லத்தரசிகள் கலங்குகின்றனர் என்பதை நான் அறிவேன்.

சாதிக் கலவரம் என்றோ, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என்றோ, சாராயத்தை ஒழிப்பதற்கென்றோ அல்லது தமிழ்ப் போராளிகளை அடக்குவதற்கென்றோ தங்கள் கணவர் புறப்பட்டுச் சென்றால், அவர் வீடு திரும்பும் வரை அவர்களுக்கு நிம்மதி இல்லை. அவர்களது உள்ளம் இன்று எவ்வாறு பதை

பதைக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கின்றேன்.

அரசுப் பணிகளில் வேறு எந்தப் பணியிலும் சிறிது குறைவோ, தொய்வோ விழுந்தால் அதனை வரும் காலத்தில் சரிக்கட்டிக் கொள்ளலாம். ஆனால், இன்று விழாவில் பாராட்டப்படுகின்ற காவல் துறையினருக்கோ கரணம் தப்பினால் மரணம்தான்.

நீங்கள் நாட்டிற்கும், மக்களுக்கும் ஆற்றும் பணி மிகமிக முக்கியமான பணி. ஆனால், முறையாகப் பாராட்டப்படாத பணி. காவல் துறை இல்லையேல், இன்று அரசு நிர்வாகத்தின் இயக்கமே இல்லை என்பது உலகறிந்த உண்மை. இருப்பினும் அவர்களது நியாயமான சிறு சிறு கோரிக்கைகளைக்கூட உரிய நேரத்தில் முறையாகப் பரிசீலனை செய்து, துரித முடிவுகள் எடுக்காத நிலை முன்னர் நிலவியது. ஆனால், நான் பொறுப்பேற்ற 15 நாட்களுக்குள்ளாகவே, காலஞ்சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு டி.ஆர். விஜயராகவாச்சாரி அவர்களின் துணைவியார் திருமதி கல்யாணி அவர்களுக்கு 50 ஆண்டுகளாகக் கிடைக்காத ஓய்வு ஊதியத்தை வழங்கி ஆணையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; அதை எண்ணி நான் ஆறுதல் அடைந்தேன். ஆபத்தான பணிகளை நித்தம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள உங்களது சிரமங்களை நான் நன்கு அறிவேன். கடமை ஆற்றும் எவரும் கைவிடப்பட மாட்டார்கள். பாராட்டப்படுவார்கள் என்று உறுதி கூறுகின்றேன்.

மிக முக்கிய அத்தியாவசியப் பணியில் உள்ள நீங்கள், நாள்தோறும் பலதரப்பட்ட மக்களைப் பலவேறு சூழ்நிலைகளில், மனநிலைகளில் சந்திக்கின்றீர்கள். அவர்களது பிரச்சினைகளில் உதவுகிறீர்கள். மக்கள் உங்களை முழுமையாக நம்புகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு நன்கு தெரியும், அவர்களை உங்களால்தான் காக்க முடியும் என்று; இந்த நம்பிக்கையை நீங்கள் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று வேண்டுகிறேன்.

தற்போது தமிழகத்தில் ஒரு மாபெரும் தார்மீகப் போரையே தொடங்கியுள்ளோம். அது, மது என்ற மாய அரக்கனைத் தமிழகத்தின் மண்ணை விட்டு அடியோடு அப்புறப்படுத்தும் புனிதப் போர். இந்தப் போரில் முன்னணிப்படை வீரர்களாக நிற்பவர்கள் நமது சிறப்புமிக்க காவல்துறையினர். நாட்டின் நலன் காக்கவும், மக்களைப் பேரழிவிலிருந்து பாதுகாக்கவும் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புனிதப் போரில் நீங்கள் ஒவ்வொருவரும் கர்மவீரர்களாக முழுமனதோடு பங்கேற்றுச் செயல்பட்டு, இந்த அரசுக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றேன். இதுவரை நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றம் கண்டு பூரிப்படைகின்றேன். இப்புனிதப் பணி தொடரட்டும்; தமிழக ஏழை எளிய மக்கள் முழுமையாக இத்தீமையிலிருந்து விலகட்டும். இப்பணியினை நிறைவேற்றுவதற்கு உங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் அரசு செய்து தரும் என்று உறுதி அளிக்கின்றேன்.



மாண்புமிகு முதல்வர் அவர்களால் 15.9.91 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தீயணைப் புத் துறைக்கான புதிய நீட்டிப்பு ஏணி (Morita Turn Table Ladder 46m)

இன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு இடையே கனத்த மனதுடன் நமது காவலர்கள் பணிபுரிகின்றார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களது வாழ்க்கையை வளமடையச் செய்து, அமைதியான மனதுடன் அவர்களது கடமைகளை ஆற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது, உள்துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் என்னுடைய கடமையாகும். நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களை அரவணைத்துப் பாதுகாப்பது இந்த அரசின் கொள்கையுமாகும். அந்த அடிப்படையில், உங்களுக்கு என் இதயத்தில் ஓர் உயர்ந்த இடம் அளித்துள்ளேன். உங்களது உயர்விற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் கொண்டுள்ளேன். அவற்றை விரைவில் செயல்படுத்தவும் இருக்கின்றேன் என்று மட்டும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் நீண்ட நெடுநாட்களாகச் சில கோரிக்கைகளை அரசின்முன் வைத்துள்ளீர்கள் என்பதை நான் அறிவேன். குறிப்பாக, Risk allowance, Conveyance allowance, Uniform allowance மற்றும் Kit Maintenance allowance-களை உயர்த்தக் கோரியும் பயணப்படியின் உச்சவரம்பை நீக்கக் கோரியும் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கேட்டுவருகின்றீர்கள்.

மேலும் உங்கள் குடும்பங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையில் குழு ஈட்டுறுதித் திட்டம் (Group Insurance Scheme) மற்றும் பஞ்சாப், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் நடைமுறையிலுள்ள குடும்ப ஓய்வு ஊதியச் சிறப்புத் திட்டத்தை (Special Family Benefit Pension) தமிழகத்திலும் செயல்படுத்தக்கோரியுள்ளீர்கள். தமிழ்நாடு காவல்துறை தற்போது ஆண்டுதோறும் அரசு



வழங்கும் நலத்திட்ட உதவியான ரூ.5 இலட்சத்தை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றீர்கள். காவலர்களுக்கு வீட்டு வசதிகள் செய்து தரவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இவை அனைத்தையும் நான் பரிவோடும், பாசத்துடனும் பரிசீலனை செய்துள்ளேன். இந்த நல்ல விழாவிலேயே உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறவகையில் பல அறிவிப்புகளை நான் தெரிவிக்க விரும்பினாலும் சட்டப்பேரவைத் தொடர்க் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், அவற்றை வெளியிட இயலாத நிலையில் இருக்கின்றேன். உங்கள் நலன் காக்க உங்களது நியாயமான கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றி வைக்கப்படும். என்னைப் பொறுத்தமட்டில் உங்களுடைய எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருந்தாலும், மாநிலத்தின் தற்போதைய நிதிநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, என்னால் எவ்வளவு அதிக நன்மைகளை உங்களுக்கு வழங்க முடியுமோ, அதனை 23.9.1991 அன்று நான் கொண்டுவரும் காவல்துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையின் பொழுது அறிவிப்பேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்; சற்றே பொறுத்திருங்கள் விரைவில் நற்செய்தி உங்களுக்குக் கிடைக்கும்.

★ மதுவிலக்கை மகாத்மா காந்தியடிகள் ஒரு கொள்கையாக அல்ல, வாழ்க்கை முறையாகவே வலியுறுத்தினார். குடிகாரர்கள் தங்களை அழித்துக் கொள்வதுடன் தங்களைச் சார்ந்துள்ள மக்களையும் அழித்துவிடுகிறார்கள். சமுதாயத்தின் ஒழுக்கமும் சீரழிவுக்குள்ளாகிறது. மதுவிலக்கால் சமுதாயம் அடையும் நன்மைகள் தான், பிற எவற்றையும்விட முக்கியமானவை. உடல்நலமிக்க மக்களைக் கொண்ட நாடுதான் முன்னேற முடியும்.

-பேரறிஞர் அண்ணா



தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கும், தீயணைப்புத்துறை அலுவலர்களுக்கும், சிறைத்துறை அலுவலர்களுக்கும், ஊர்க்காவல் படையினருக்கும், அவர்கள் தங்களது உயிரினைத் துச்சமாக மதித்து உயரிய சாதனை படைத்த மக்கள் பாதுகாப்புப் பணியினைப் பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன. பதக்கங்கள் பெற்றுப் பாராட்டப்படும் சீருடை அலுவலர்களுக்கு என் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களைப் போல் வீரசாகசச் செயல் புரிந்த அலுவலர்கள் பலர் நிச்சயமாக இருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரையும் அழைத்து அணிவகுப்பு நடத்தி இந்நன்னாளில் சிறப்பிக்க இயலாத நிலையில்தான், அரசு அவர்களுள் ஒரு சிலரை மட்டும் அவர்களது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, இன்று விழாவிற்கு அழைத்துச் சிறப்பிக்கின்றது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் பார்த்தால், இன்று தமிழகத்திலுள்ள சிறப்பிக்கப்படும் நான்கு துறை அலுவலர்கள் அனைவருமே பாராட்டுதலுக்குரியவர் ஆவர். அவர்கள் அனைவருக்கும் என் பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக, அமைதிப் பூங்காவாக, ஒருமைப்பாட்டின் உறைவிடமாகத் திகழச் செய்யும் முயற்சியில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படுவோம் என்று உறுதிபூண்டு - அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! - எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

## காவல்துறை விழா நிகழ்ச்சிகள்

'**த**மிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா', சென்னையில் உள்ள நேரு விளையாட்டரங்கில் 15.9.91 அன்று மாலை மிகச் சிறப்போடு நடைபெற்றது.

சிறந்த தொண்டாற்றிய காவல்துறை, சிறைத்துறை, தீ அணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் 79 பேருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதக்கங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

அன்று மாலை, 3.30 மணி முதலாகவே, விழா நடந்த நேரு விளையாட்டரங்கத்தின் நிகழ்ச்சிகள் குறித்த நேர்முக வருணனை ஒலி பரப்பப்பட்டது.

விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை மாநகராட்சிக் கட்டடத்தின் அருகிலிருந்து அரசு மரியாதையுடன்



குதிரைப்படை வீரர்கள் அணிவகுத்து ஊர்வலமாக அழைத்து வந்தார்கள்.

சரியாக 4 மணிக்கு நேரு விளையாட்டரங்கத்தினுள் வந்து சேர்ந்ததும் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு சு. ஸ்ரீபால், இ.கா.ப., வரவேற்று அணிவகுப்பு மரியாதையேற்கும் மேடைக்கு அழைத்துச் சென்றார்.

அணிவகுப்புத் தலைவரின் அறிக்கை படிக்கப்பட்ட பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஜீப் வண்டியில் ஏறி அணிவகுப்பைப் பார்வையிட்டார். அப்போது பார்வையாளர் பகுதியிலிருந்து பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த பொது மக்கள் எழுப்பிய வாழ்த்து முழக்கம் மண்ணதிரச் செய்தது. மலர்ந்த முகத்தோடு மக்களைப் பார்த்துக் கையசைத்தார் மாண்புமிகு முதல்வர்.

அதன்பின், மேடைக்கு வந்தடைந்த அவர் - ஆண் பெண் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஐந்து பிரிவுகளாக நடத்தப்பெற்ற அந்த அணிவகுப்புகளை முறையே - காவல்துறை உயர் அதிகாரிகளான செல்வி மங்கையர்க்கரசி, திரு ரங்கநாதன், திரு அகஸ்டின், திரு கலியமூர்த்தி, செல்வி புவனேஸ்வரி ஆகியோர் தலைமை தாங்கி நடத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து காவல்துறைத் தலைமை இயக்குநர் திரு சு.ஸ்ரீபால் இ.கா.ப., வரவேற்புரையாற்றினார்.

அரசு உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., பாராட்டுரை வழங்கினார்.

அதன் பின் - காவல்துறை, சிறைத்துறை, தீ அணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் 79 பேருக்குச் சிறந்த தொண்டாற்றியமைக்காகப் பதக்கம் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து - பாண்டு வாத்தியப் பிரிவோடு, படையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தி விடைபெற்றுச் சென்றார்கள். முடிவில், படை அணிவகுப்புத் தலைவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் பெற்ற வீரர்கள்.' வீராங்கனையுடன் மாண்புமிகு முதல்வர் அவர்களும் சேர்ந்து புகைப்படம் பிடித்துக் கொண்டார்கள்.

தமிழ்நாடு தீயணைப்புத்துறைக்குப் புதிதாக வாங்கப்பட்டுள்ள நீட்டிப்பு ஏணியைத் தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

தீயணைப்புத்துறையின் இந்த நீட்டிப்பு ஏணி, பல மாடிக் கட்டடங்கள் தீக்கிரையாகாமல் தவிர்ப்பதற்காக ரூ.2.84 கோடியில் புதிதாக வாங்கப்பட்டதாகும். இந்தியாவில்



வேறெந்த மாநிலத்திலும் இப்படியொரு ஏணி இல்லை. 150 அடி உயரம் வரை உயரக்கூடியதான இந்த நீட்டிப்பு ஏணியை எந்தத் திசையிலும் செலுத்த முடியும்.

இந்த நீட்டிப்பு ஏணியை இயக்கி, தீயணைப்புப்படை வீரர்கள் நிகழ்த்திக் காட்டிய செய்முறை விளக்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வியப்புடன் பார்த்து மகிழ்ந்தார்.

விழா நிறைவாகக் காவல்துறையின் மாபெரும் பேண்டு வாத்தியக் குழுவினர் இசை நிகழ்த்தினார்கள்.

'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற...' - 'தாயில்லாமல் நானில்லை...' ஆகிய திரைப்படப் பாடல்களும், வரவேற்புப் பாடலான 'சுவாகதமும்', மெதுவான அணிவகுப்புக்குரிய 'நிலத்திலும் கடலிலும்' என்ற பாடலும், முதலமைச்சருக்குச் சமர்ப்பணமாக 'நியாயத்தைத் தந்தவர் நீர்...', 'ஐரிஸ் மெமோரிஸ்...', 'அபைட் வித் மி...' ஆகிய பாடல்களும் இசைக்கப்பட்டன.

பேரிகைகளின் எழுச்சியோடும், களிப்போடும் இந்த வண்ணமிகு விழா நிகழ்ச்சி நாட்டுப் பண்ணுடன் சரியாக 6.30 மணியளவில் நிறைவுற்றது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.எல்.ஆர்.**



# ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

**கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகா ார நிலையங்கள் எப்படிச் செயல்படு ின்றன என்பதை விளக்கிக் கூறுகிறது ிக்கட்டுரை.**

**ஊ**ரகச் சுகாதாரப் பணிகள் கி.பி.2000-க் ள் எல்லோருக்கும் நல்வாழ்வு என்ற இலக்கினை அடைந்திட 1,057 ஆரம்பச் சுகாதார நிலை ங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்திட வேண்டும் என குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி, 30,000 கிராமப்புற மக்கட் தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் என ஏற்படுத்தப்பட்டது. 31.3.91-இல் உள்ளபடி, தற்போது தமிழ்நாட்டில் 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 72 சமுதாய நல நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்களுடன் செயல்பட்டு வருகின்றன.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படும் விதம்**

கிராமப் பகுதிகளில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள், கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரப் பணிகள் ஆற்றி வருகின்றன.

**நோய்த் தடுப்பு:** இவ்வகையில் தகுந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் பல திட்டங்களின் மூலம், மலேரியா மற்றும் பல கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**பொதுப்படையான முத்தடுப்பு ஊசித் திட்டம்:** இத்திட்டத்தின்கீழ் கிராமப்புறக் குழந்தைகளுக்குக் கக்குவான் மலேரியா, காசநோய்த் தடுப்பு மற்றும் பெரியம்மை நோய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டு மேற்கண்ட நோய்களினால் கிராமப்புறக் குழந்தைகள் பாதிக்கப்படாவண்ணம் தடுக்கப்படுகிறது.

**சுகாதார முன்னேற்றம்:** இந்த வகையில் கிராமப்புற மக்களுக்குச் சுகாதாரம், சுற்றுப்புறத்தூய்மை, குடும்பநலம் போன்றவை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாக அறிவுறுத்தப்படுகிறது.

**சிகிச்சை:** கிராமப்புற மக்களுக்கு ஏற்படும் சிறு நோய்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்தும் சில சிறிய அறுவைச் சிகிச்சைகளும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செய்யப்பட்டு வருகின்றன. சிக்கலான நோய்கள் மற்றும் மேம்பட்ட மருத்துவ வசதிகள் தேவைப்படும் நோய்களுக்கு அருகிலுள்ள சமுதாயநல நிலையத்திற்கோ அல்லது மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கோ தகுந்த சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றன.

1989-90-ஆம் ஆண்டில், ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள் நோயாளிகள் 62,698; பேரும் வெளி நோயாளிகள் 1,61,47,486 பேரும் கிசிச்சை பெற்றனர்.



**படுக்கை வசதிகள்:** இந்தச் சுகாதார நிலையங்களிலும் சமுதாய நல நிலையங்களிலும் மொத்தம் 5,208 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன.

**மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதாரநிலையங்கள் சமுதாய நல நிலையங்கள்**
**செயல்படும் விதம்**

மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில், 72 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அல்லது சமுதாய நல நிலையங்கள் இவற்றில் 30 நிலையங்களில் கூடுதலாக 24 படுக்கை வசதிகள் மற்றும் அறுவை மருத்துவ அரங்கம், ஊடுகதிர்ப் பிரிவு, கூடுதல் உபகரணங்கள், ஆய்வக வசதிகளுடன் கிராமப்புற மக்களுக்குச் சிறப்புச் சிகிச்சை அளித்திடும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இந்த மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நான்கு, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஒரு சிறப்புச் சிகிச்சை அளித்திடும் மையமாகச் செயல்பட்டு வருகின்றன.

30 மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உள்ள உதவி சர்ஜன் பதவிகள் மேற்பட்ட படிப்புடன் சிவில் சர்ஜன் பதவிகளாக உயர்த்தப்பட்டு இந்தச் சிவில் சர்ஜன் பதவிகள் அனைத்தும் நிரப்பப்பட்டு உள்ளன.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு சமுதாய நல நிலையம் அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த வகையில் தன்னிறைவை அடைந்திட 384 சமுதாய நல நிலையங்கள் வட்டம் அல்லாத மருத்துவமனைகளை மாற்றியோ அல்லது தற்போது உள்ள ஒன்றிய ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்தியோ ஏற்படுத்தப்படும். 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் 78 சமுதாய நல நிலையங்கள் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

★ எவ்வுயிரையும் தம் உயிர்போல்
எண்ணும் ஆன்மநேய
ஒருமைப்பாட்டுரிமையைக்
கடைப்பிடிக்க வேண்டும்.

★ ஏழைகளின் பசிதவிர்த்தலாகிய
ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப
வீட்டின் திறவுகோல். —வடலூரார்

**பழங்குடியினர் நலத்துணைத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் 9 ஒன்றியப் பகுதிகள் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்பே இவ்வொன்றியப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வந்துள்ளது. அவைகளில் ஒன்று ஆலங்காயம் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையமாக்கப்பட்டுள்ளது. டேனிடா திட்டத்தின் கீழ் தென் ஆர்க்காடு மாவட்டம் கல்வராயன் மலையில் உள்ள கரியாலூர் கிராமத்தில் ஒரு சமுதாய நல நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பழங்குடியினர் வாழும் பகுதியிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

பழைய பிரதான ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 9, பழங்குடியினர் நலத்துணைத் திட்டத்தின் கீழ் செயல்படுவது 14, சிதறி வாழும் பழங்குடி மக்களுக்காக 1, டேனிடா திட்டத்தின் கீழ் கரியாலூரில் ஏற்படுத்தப்பட்ட சமுதாய நல நிலையம் 1 ஆக மொத்தம் 25 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கண்பார்வை குறைவுத் தடுப்புத் திட்டம்**

தேசியக் கண்பார்வை, குறைவுத் தடுப்புத் திட்டம், சாதாரண கண் நோய்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், கண்ணாடி வழங்கவும், பள்ளிக் குழந்தைகளுக்குக் கண் பாதுகாப்பு முறைகளை விளக்கவும் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம், 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் ஒரு கண் சிகிச்சை உதவியாளர் பணியில் அமர்த்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு 100 சதவிகிதம் மத்திய அரசு உதவி பெறும் திட்டமாகும். இதற்காக மத்திய அரசு ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் ரூ.3,000 மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. மாநில அரசு ரூ.2,000 மதிப்புள்ள உபகரணங்களை வழங்குகின்றது. இந்தத் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், ஒரு கண் சிகிச்சை உதவியாளர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

இந்தத் தேர்வு செய்யப்பட்ட 145 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் கண் சிகிச்சை உதவியாளரும், பயிற்சி பெற்ற மருத்துவ அலுவலரும் சாதாரண கண் நோய்களுக்குச் சிகிச்சை அளித்து, கண் பரிசோதனை செய்து மூக்குக் கண்ணாடிக்கும் குறிப்பு எழுதித் தருகின்றனர். இது தவிர, கண்புரை நோய்கள் மற்றும் சிக்கலான நோய்களும் பரிசோதிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்காக அருகில் உள்ள தலைமை மருத்துவமனை அல்லது நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவிற்கு அனுப்பப்படுகிறார்.

இது தவிர, பள்ளி செல்லும் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டு வைட்டமின் 'ஏ' மருந்தும் கொடுக்கப்படுகிறது.



நல்ல பேச்சு, இனிய பாட்டு
உடல் வலுவுக்கேற்ற இனிய விளை
யாட்டு முதலியவற்றிலே ஆசை
கொள்ளுங்கள். மனதிலே உறுதி,
உற்சாகம் ஆகிய குணங்களை உற்
பத்தி செய்து கொள்ளுங்கள்.
—பாரதியார்.



## சட்டப் பேரவையில்...

★ தமிழகத்தில் மதக் கலவரங்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கமுடியாது; இத்தகைய மதக் கலவரங்களும் வன்முறைச் சம்பவங்களும் நடைபெறாமல் இருக்கத் தமிழக அரசு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கும். தமிழகத்தில் மதக் கலவரங்களைத் தூண்டுபவர்கள் மீதும் அவற்றில் ஈடுபடுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் (6.9.91) தெரிவித்தார்.

★ நடப்பு ஆண்டில், தமிழகத்தில் 76 இடங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மருத்துவமையங்களில் மக்களுக்குத் தட்டுப்பாடின்றி மருந்துகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக மருந்துகள் வாங்க ஒதுக்கப்படும் தொகை தலா முப்பதாயிரம் ரூபாயிலிருந்து நாற்பதாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எஸ்.முத்துசாமி அவர்கள் சட்டமன்றத்தில் (8.9.91) அறிவித்தார்.

★ காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் விரைவில் துவக்கப்பட உள்ளது. 'புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம்' என்று பெயரிடப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சட்டப் பேரவையில் (14.9.91) அறிவித்தார்.

★ காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் தீர்வு காண முடியாத அளவுக்குக் கர்நாடகம் இந்தப் பிரச்னையைக் கொண்டு சென்று விட்டது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழகம் மிகவும் பாதிக்கப்படும் வகையில் அவசரச் சட்டம் ஒன்றையும் கர்நாடகம் பிறப்பித்துவிட்டது. எனவே, கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தையைத் தொடருவதால் எந்தவிதப் பயனும் ஏற்படாது என்ற வகையில், நடுவர் மன்றத்தின் மூலம்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்ற கருத்தைத் தமிழ்நாடு கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சட்டப் பேரவையில் (6.9.91) தெரிவித்தார்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப் படாவிட்டாலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குத் தேவையான வசதிகள் செய்ய தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தூனேரி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு மேல்நிலைத் தொட்டி குழாய் வசதியுடன் நிர்மாணித்திட ரூ.1.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பந்தலூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒரு மருத்துவ அலுவலர் குடியிருப்பு, ஒரு செவிலியர் குடியிருப்பு கட்ட ரூ.2.70 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ஊர்தியும் வழங்கப்பட்டுள்ளது.

**மருந்து வகைகள்**

மருந்து வகைகள் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் சமுதாய நல நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் தேவையான மருந்து வகைகள் ஆண்டிற்கு ரூ.30,000 மதிப்புள்ளது. இது, 1.4.90 முதல் விநியோகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு சமுதாய நல நிலையத்திற்கும் ஆண்டிற்கு ரூ.75,000 மதிப்புள்ள தேவையான மருந்து வகைகள் 1.4.90 முதல் விநியோகம் செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் செயலாற்றுகின்ற மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 719 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே மருந்தகக் கட்டடங்கள் கட்டுவதற்கான ஒப்பளிப்பு அரசால் வழங்கப்பட்டு உள்ளது. மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு 303 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே உள்ளது. மீதம் உள்ள 710 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். மீதம் உள்ள 1,126 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.

மொத்தம் உள்ள 1,429 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 496 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மட்டுமே ஊர்திகள் உள்ளன. இவைகளில் 37 ஊர்திகள் உபயோகிக்க தகுதியற்றவைகளாகக் கருதப்பட்டு புதிதாக மாற்றப்பட உள்ளன. •



தந்தை பெரியார் அவர்களின் 113-வது பிறந்த நாளான 17.9.91 அன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முக்கியப் பிரமுகர்களும் சென்னையில் அண்ணா மேம் பாலம் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 83-வது பிறந்த நாளான 15.9.91 அன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சென்னை-அண்ணாசாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா வின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித் தார்கள்.



# காந்தி வழி

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை



சாந்தவழி சத்தியத்தில் சலித்தாய் நெஞ்சே!
சன்மார்க்கப் பழக்கமிலாச் சகவா சத்தால்
காந்திவழி பழசாகப் போன தென்று
கதிமாற மதிமாறிக் கருது கின்றாய்;
மாந்தருக்குள் காந்தியைப்போல் புதுமை வாழ்க்கை
மற்றொருவர் நடத்தினரா? மனமே, சொல்வாய்!
ஆய்ந்தறிந்த அவன்தொடர்பை இகழ்வா யானால்
யாரும்இனி மீட்கவொண்ணா அடிமை யேநீ!

பெற்றெடுத்த தாய்மிகவும் பழசாய்ப் போனாள்
பிறிதொருதாய் வேண்டுமென்று பேசு வார்போல்,
நற்றவத்தால் நமக்கடுத்த தலைவன் காந்தி
நானிலத்தின் உயிர்க்கெல்லாம் தாயாம் நண்பன்
கற்றகதை சரித்திரங்கள் காணாச் சுத்தன்
கருணையென்ப தின்னதெனக் காட்டும் தீரன்
உற்றதுணை காந்திவழி பழசா மென்றால்
உய்வதற்கு வேறுகதி உண்டோ? நெஞ்சே!

நித்தம்ஒரு காற்றினையே மூச்சு வாங்கி
நீர்நெருப்பு நிலம்வானில் புதுசு மின்றி
மெத்தவும்நாம் சலித்துவிட்டோம் என்பா யானால்
மேதினியில் வேறுவழி உண்டோ நெஞ்சே!
சத்தியஞ்சேர் சாந்தவழி அதையே நித்தம்
சாதிப்பான் காந்திஎன்று சலிப்பா யானால்
பத்தியத்தைப் பாதியிலே முறித்தாற் போலப்
பாடுபட்டும் பயனடையாப் பதரே யாவாய்!

அச்சமிக்க இருட்டறையில் அடைபட் டாங்கே
அழுவதற்கும் ஜீவனற்றுக் கிடந்த உன்னை
மிச்சமுள்ள மூச்சுமற்றுப் போகு முன்னால்
மீட்டணைத்து மேனிசெய்து விட்டான் காந்தி
இச்சகத்தில் அறிவறிந்தோர் என்றும் வாழ்த்தி
இன்பமிகும் காந்திவழி பழசா மென்றால்
பச்சையிளங் காய்புதிய தென்று கொண்டு
பழுத்தபழம் பழசென்னும் பான்மை யாகும்!





உலக வங்கி நிதியுதவியுடன்...

# குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

'நீரின்றி அமையாது உலகு' என்பது வள்ளுவர் வாக்கு. சிறிய வாக்கியம் ஆயினும் சீரிய கருத்து. ஆழிசூழ் ஞாலமென்று போற்றப் படும் உலகில் 97 சதவிகிதம் நீர் கடல் நீராகவும் மீதி 3 சதவிகிதமே உட்கொள்ள உகந்ததாகவும் அமைந் துள்ளது. இதிலும் ஒரு சதவிகிதம் தான் நிலமட்ட நீராகவும், நிலத்தடி நீராகவும் சிதறிக் கிடக்கிறது.

தமிழ்நாட்டில் கிடைக்கும் நில மட்ட நீரின் அளவு மிகவும் குறைவு. ஆயினும் நிலத்தடி நீர்வளம் இன் றைய சூழ்நிலைக்கு ஓரளவு போது மானதாக இருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்கள் பெரும் பாலும் நிலத்தடி நீரையே நம்பி உள்ளன.

## மூன்று மண்டலங்கள்

தமிழ்நாட்டில் சென்னை மாநக ரைத் தவிர மற்ற அனைத்து உள் ளாட்சிகளுக்கும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணி யைத், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. அனைத் துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப் பட்ட சுத்தமான குடிநீர் வழங்கும் பொருட்டு மாநிலம் வடக்கு, மேற்கு, தெற்கு என மூன்று மண்டலங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தெற்கு மண்டலம் மதுரை, அண்ணா, பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராசர், இராமநாதபுரம், திருநெல் வேலி கட்டபொம்மன், வ.உ.சி. மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களைக் கொண்டதாகும். இவற்றில் குறிப்பாக இராமநாதபுரம், மதுரை, அண்ணா மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தின் குடிநீர் திட்டப் பணிகளை நேரில் கண்டறியும் பொருட்டு சென்னையிலிருந்து பத்திரிகையாளர் குழு ஒன்று அண்மையில் இந்த மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்தது.

## தென் மண்டலம்

தென் மண்டலத்திலுள்ள மொத் தம் 34 நகராட்சிகளில் 33 நகராட்சி களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு நகராட்சியான பத்மநாபபுரம் நகராட் சிக்கு (கன்னியாகுமரி மாவட்டம்) ரூ.231.10 இலட்சம் செலவில் குடி நீர் வழங்கும் பணி தற்சமயம் நடை பெற்று வருகிறது.

1.4.1990 தேதியன்று உள்ள படி, தென் மண்டலத்தின் மொத் தம் 8 மாவட்டங்களிலும் உள்ள 16,741 குடியிருப்புகளில் 5,797 குடியிருப்புகளுக்கு முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பட்டுள்ளன. 10,710 குடியிருப்பு களுக்கு ஓரளவு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளன. 234 குடியிருப்பு களுக்கு இன்னும் சுத்தமான குடிநீர் வழங்கப்படவில்லை. இதில் 185 குடியிருப்புகளுக்குத் தற்சமயம் குடி நீர் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 49 குடியிருப்புகளுக்கு இவ்வாண்டு இறுதிக்குள் குடிநீர் வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.17.81 கோடி செலவில் 2,114 குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரை ரூ.356.13 இலட்சம் செல வில் 265 குடியிருப்புகளுக்குக் குடி நீர் வழங்கப்பட்டுள்ளன.

## தொழில் நுட்ப மையம் (Technology Mission)

கிராமப்புறங்களுக்குப் பாது காக்கப்பட்ட சுத்தமான குடிநீர் வழங்கவும், கிராமக் குடிநீர்த் திட்டத் தினை மேம்படுத்தும் பொருட்டும் கிடைக்கும் அனைத்துத் தொழில் நுட்பங்களையும் ஒன்று சேர்த்து 'தொழில் நுட்ப மையம்' என்ற ஒரு புதிய அமைப்பினை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த மையத்தின் முக்கிய நோக்கமே குடிநீர்ப் பிரச் சினையுள்ள கிராமங்களைக் கண் டறிந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதாகும்.

## இராமநாதபுர மாவட்டத்தில் தொழில் நுட்ப மையத்தின் பணிகள்

இந்தியாவில் வறட்சிக்கு இலக் காகும் கடலோர மாவட்டங்களில் இராமநாதபுர மாவட்டமும் ஒன் றாகும். இந்த மாவட்டத்தின் தற் போதைய மக்கள் தொகை 11,35,887. இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை 14,48,605 ஆக உயருமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் அதிக அளவில் இருந்தாலும் அந்த நீரில் உப்புத் தன்மை அதிகமாக இருப்பதால் இந்த நீர் குடிப்பதற்குப் பயன்படுவதில்லை. இந்த மாவட் டத்தில் வைகை ஆறு ஓடினாலும் மழைக்காலத்தில் வெள்ளம் ஏற் பட்டால் தான் இதில் தண்ணீர் வரும். மற்ற காலங்களில் இந்த ஆறு வறண்டு காணப்படும்.

## உவர் நீரைக் குடிநீராக்கும் திட்டம்

இந்தத் திட்டத்தில் உவர் நீரி லிருந்து உப்பு தனியாக நீக்கப்பட்டு உவர் நீர் குடிநீராக மாற்றப்படு கிறது. இராமநாதபுரம் மாவட்டத் தில் 11 இடங்களில் ரூ.167 இலட் சம் செலவில் தொழில்நுட்ப மையத் தின் உதவியுடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தென் மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு எம். நடராசன் அவர்கள் இராமநாதபுரத்தில் நிருபர்களிடம் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் மூலம் 21 குடியிருப்புகள் முழுமை யாகவும் 19 குடியிருப்புகள் ஓரள வும் பயனடையும்.

இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும் 11 இடங்களில் நல்லிருக்கை, ஏனாதி, வன்னியக்குடி, குண்டு குளம், கரிசல்புளி ஆகிய 5 இடங் களில் இந்தத் திட்டம் ஏற்கெனவே பூர்த்தியடைந்து அதன் மூலம் 14 குடியிருப்புகளுக்குச் சுவையான குடிநீர் வழங்கப்படுகிறது. சிக்கல், சீரண்டை, மேலசிறுபோது, கருமல், பூசேரி ஆகிய 5 இடங்களில் இந்தத் திட்டம் தற்சமயம் முடியும் தறு வாயில் உள்ளன. வாலிநோக்கம் என்ற இடத்தில் உவர் நீரைக் குடிநீராக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

வைகை அணையிலிருந்து மதுரை மாநகருக்குக் குடிநீர் கொண்டுவர 1,100 மி.மீ. விட்டமுள்ள குழாய்கள் அமைக்கும் பணி.



தொழில்நுட்ப மையத்தின் உதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.465.199 இலட்சம் செலவில் 496 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகவும், இவற்றில் 334 குடியிருப்புகளுக்கு ரூ.355 இலட்சம் செலவில் இதுவரை குடிநீர் வழங்கப்பட்டிருப்பதாகவும் பரமக்குடியில் நடந்த மக்கள் விழிப்புணர்ச்சி முகாமில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தென் மண்டலத் தலைமைப் பொறியாளர் திரு எம். நடராசன் தெரிவித்தார்.

உவர் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தில் ஒரு லிட்டர் உவர் நீரைக் குடிநீராக மாற்ற சுமார் 8 முதல் 10 காசுகள் வரை செலவாகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 22 ஆயிரம் மக்கள் பயனடைவர்.

குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகளுக்கு மழை நீரைத் தேக்கி வைத்து ஊரணிகள் மூலம் குடிநீர் வழங்கும் முறை இராமநாதபுரம் மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டு, 28 குடியிருப்புகள் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 4 குடியிருப்புகளுக்கு ஊரணி மூலம் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி உதவியுடன் மதுரை குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

மதுரை மாநகராட்சியின் குடிநீர்ப்பிரச்சினையைச் சமாளிக்க வைகை அணையிலிருந்து குழாய் மூலமாக மதுரைக்குத் தண்ணீர் கொண்டுவரும் பணி விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வரும் இந்தத் துணைத் திட்டம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்தத் திட்டத்துக்கான தலைமைப் பொறியாளர் திரு எம்.என். ஹூசேன் மதுரை சென்ற நிருபர்களிடம் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.35.76 கோடி.

மதுரை மாநகராட்சியின் தற்போதைய மக்கட்தொகை சுமார் 10 இலட்சம். இன்னும் 20 ஆண்டுகளில் இது 17 இலட்சங்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் தேவைப்படும் குடிநீரின்




இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீரைக் குடிநீராக மாற்றும் கருவி.

அளவு 90 மில்லியன் லிட்டர். 20 ஆண்டுகளுக்குப் பிறகு (2011-இல்) இந்த மாநகரின் குடிநீர்த்தேவை 185 மில்லியன் லிட்டராக இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போது மதுரைக்குத் தினமும் 68 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. வைகை அணையிலிருந்து 1,500 மில்லியன் கனஅடி தண்ணீர் எடுப்பதற்கு அரசு உத்தரவு பெறப்பட்டுள்ளது.

## 65 கி.மீ. தூரத்திற்குக் குழாய் மூலம் தண்ணீர்

இத்திட்டத்தின்படி மதுரை நகரிலிருந்து சுமார் 65 கி.மீ. தூரத்திலுள்ள வைகை அணையின் பக்கத்திலுள்ள மதகு அணையிலிருந்து தேவைக்குரிய தண்ணீர் 1,100 மி.மீ. விட்டமுள்ள குழாய் மூலம் பண்ணைப்பட்டிக் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இங்கு சுத்திகரிக்கப்பட்டு, பின்னர் மதுரைக்குக் குழாய்கள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. மதுரைக்குக் கொண்டு வரப்பட்ட நீர் புதிதாகக் கட்டப்பட்டுவரும் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், மற்றும் தற்போதுள்ள 8 நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பல இடங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

வைகை அணையிலிருந்து குழாய்கள் மூலம் கொண்டு வரப்படும் நீர் மதுரை நகரில் பல்வேறு இடங்களில் கட்டப்படும் 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டு பின்னர் 133 கி.மீ. பகிர்மானக் குழாய்கள் மூலம் நகரின் பல்வேறு இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.





திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்க சித்தர்கள் நத்தம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள உறிஞ்சுக் கிணறுகள்.

கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் 4 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## தற்போதைய நிலை

மொத்த தூரத்தில் சுமார் 912 மீட்டர் தூரத்திற்குச் சுத்திகரிக்கப்படாத தண்ணீரும், சுமார் 19 கி.மீ. தூரத்திற்குச் சுத்திகரிக்கப்பட்ட நீரும் கொண்டு செல்லக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 133 கி.மீ. பகிர்மான்க் குழாய்களில் 81 கி.மீ. தூரத்திற்கு வேலைகள் முடிவடைந்துள்ளது.

இந்தத் திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டில் இதுவரை ரூ.17.32 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் சோதனைக்கூடம்

மதுரை நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரைப் பரிசோதிக்க அனைத்து வசதிகளுடன் கூடிய சோதனைக் கூடம் ஒன்று ஒரு வேனில் அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைந்துள்ள இடங்களுக்கு இந்த வேன் மூலம் நிபுணர்கள் சென்று குடிநீரைப் பரிசோதனை செய்வார்கள்.

## குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள்

மதுரை மாவட்டம் தேனி அல்லி நகரம் நகராட்சிக்குக் குறைந்த செலவிலான சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு, நபர் ஒருவருக்கு ரூ.200 முதல் 300 மட்டுமே. இந்தத் திட்டம் குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டம் என்றழைக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கான செலவு ரூ.71.28 இலட்சம். ஒரு கழிவிடம் கட்டுவதற்கு ஆகும் செலவு சுமார் ரூ.1,800. தேனியில் மட்டும் இதுவரை இத்தகைய கழிவறைகள் 2,615 கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## திண்டுக்கல் குடிநீர்த்திட்டம்

திண்டுக்கல் நகராட்சிக்கு காமராசர் சாகர் அணையிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் முதன் முதலில் 1962-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் தற்சமயம் 10 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்படுகிறது. திண்டுக்கல் நகராட்சியின் தற்போதைய மக்கட் தொகை 1,89,700. இந்த நகரின் மக்கட் தொகையும், குடிநீர்த் தேவையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருப்பதால், திண்டுக்கல் நகருக்குக் கூடுதலாகக் குடிநீர் வழங்கும் பொருட்டு வைகை ஆற்றின் தரைமட்டத்திலிருந்து தண்ணீர் எடுத்து விநியோகம் செய்ய ஒரு கூடுதல் திட்டம் 1986-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.8.97 கோடி. இந்தத் திட்டம் 1989-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

## பிற நகரங்கள்

இந்தத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் நகரிலிருந்து சுமார் 42 கி.மீ. தூரத்திலிருக்கும் சித்தர்கள் நத்தம் என்ற இடத்தில் வைகை ஆற்றின் தரைமட்டத்தில் 6 நீர் உறிஞ்சுக் கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த 6 கிணறுகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் அருகாமையிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து 500 மி.மீ. குழாய்கள் மூலம் திண்டுக்கல் நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்தப் புதிய திட்டத்தின் மூலம் திண்டுக்கல் நகராட்சி தவிர வழியில் 18 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படுகிறது.

உலக வங்கி நிதி உதவியுடன் மதுரை தவிர கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், 75 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டமும், மேலும் 14 நகராட்சிகளில் குறைந்த செலவில் துப்புரவுத் திட்டமும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்கள் மூலம் ஊரகம் மற்றும் நகரப் பகுதிகளைச் சார்ந்த சுமார் 39 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

- ஜே. சந்திரன்.

நீலகிரி மாவட்ட த்தில்

# வளர்ச்சிப் பணிகள்

**நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளர்ச்சிப் பணிகள் குறித்தும், மாவட்டத் தொழில் மைய வளர்ச்சிப் பணிகள் குறித்தும் விளக்குகிறது இக்கட்டுரை.**

நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 13,200 லிட்டர் மட்டுமே கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து வந்தது. இப்பொழுது இந்த நிலை மாறி தற்பொழுது நாளொன்றுக்குச் சுமார் 32,000 லிட்டர் பால் இவ் வொன்றியம் பெற்று வருகிறது. இதில் உள்ளூர் விற்பனை அளவான 26,000 லிட்டர் போக மீதி பால், வெளி மாவட்டங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய திட்டமான ஒருமுகப்படுத்தப்பட்ட நசியம் என்னும் திட்டத்தை இவ்வொன்றியம் நிறைவேற்றியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பால் உற்பத்தியின் பருவகால வித்தியாசத்தைச் சமநிலைக்குக் கொண்டுவர முடியும். ஒருமுகப்படுத்தப்பட்ட கன்று பிறப்புகள் உண்டாகும்.

பால் உற்பத்தித்தியாளர்கள் சங்கங்களின் மூலம் உள்ளூர் விற்பனை அளவு அதிக அளவில் இருந்து வந்ததைக் குறைத்ததன் மூலம் ஒன்றியம் பெறும் பாலின் அளவு கணிசமான அளவு உயர்த்தப்பட ஏதுவாகியது. இந்த முறையின் மூலம் பால் கறக்காத மாடுகளுக்குச் செயற்கை முறையில் பால் சுரக்கப்பட்டு கன்று ஈனாமலேயே பால் பெறும் சோதனை வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. இதனால் பால் உற்பத்தியைக் கணிசமான அளவு உயர்த்த முடியும்.

இம்மாவட்டத்தில் புதிதாக 250 நுண்ணிய பால் பண்ணைகள் அமைக்கும் திட்டத்தை நிறைவேற்ற துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வொன்றியம் தயாரிக்கும் உபபொருட்களை விற்பனை செய்ய புதிதாக மூன்று விற்பனைப் பிரிவுகள் வெலிங்டனிலுள்ள சங்கம் காம்ப்ளக்ஸ், கூர்கா ஹில்ஸ், எம்.ஆர்.சி. ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது.



பொக்காபுரத்திலுள்ள இவ்வொன்றியத்திற்குச் சொந்தமான நிலத்தில் தோடா எருமைப்பண்ணை அமைக்கும் திட்டம் மிக விரைவாகத் துவக்கப்பட்டு இன்னும் இரண்டு வாரங்களுக்கு இப்பண்ணை செயல்படத் துவங்கவுள்ளது.

கூட்டுறவுக் கல்வித் திட்டத்தின் மூலம், பால் உற்பத்தியாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒரு சுமுகமான இணக்கத்தை ஏற்படுத்தி நிர்வாகத்தில் அவர்களுக்கு இருக்கும் பங்கினை எடுத்துக் கூறுவதே ஆகும்.

பாலாடைக்கட்டி தயாரிக்கும் பொழுது மீதம் ஏற்படும் பால் கலந்த நீரிலிருந்து 'மிலி' என்று பெயரிடப்பட்டுள்ள பானமும், நெய்யிலிருந்து மீதமாகும் பொருளிலிருந்து இனிப்பும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பொக்காபுரத்திலுள்ள இவ்வொன்றியத்திற்குச் சொந்தமான 120 ஏக்கர் பரப்பளவுள்ள புல் பண்ணையில் மாட்டுத் தீவனப் பயிர்கள் பயிரிடப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கும் வேறு நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மலைப்பகுதியான நீலகிரி மாவட்டத்தில், இவ்வொன்றியத்தின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மாவட்டத் தொழில் மையம்

சிறு தொழில் வளர்ச்சிக்குத் தொழில்முனைவோரைக் கண்டறிந்து அவர்களுக்குத் திட்ட குறிப்புகளைக் கொடுத்தல், உரிமம் பெறல், இயந்திர ஏற்பாடு, நிதி வசதி, மூலப் பொருள் வசதி போன்றவைகளை மாவட்டத் தொழில்மையம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. படித்து வேலை



யற்றோருக்கான சுயவேலை வாய்ப்புத் திட்ட வகையில் மனுதாரரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் கடன் மனுக்கள் பெற்று வங்கிகள் மூலம் கடன் வசதி செய்வதுடன் தொழில் துவங்கப்படத் தேவையான தொடர் நடவடிக்கையை நீலகிரி மாவட்டத் தொழில் மையம் மேற்கொள்கிறது. சிறு தொழில்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள், மாவட்ட ஆலோசனைக்குழு மற்றும் ஒரு முனைத் தீர்வுக் குழுவின் மூலம் தீர்த்து வைக்கப்படுகின்றன.

தொழில் முனைவோரைக் கண்டறிந்து தற்காலிகச் சான்றிதழ் வழங்க மாநிலக் குறியீடு 400 ஆக நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டது. 31.7.91 முடிய 129 தற்காலிகச் சிறு தொழில் சான்றிதழ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புதிய சிறு தொழில்களுக்கான நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் வழங்க மாநிலக் குறியீடு 200 ஆக நீலகிரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 31.7.91 முடிய 68 நிரந்தரச் சிறு தொழில் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

1991-92-ஆம் ஆண்டிற்குக் கைத்திறன் தொழில்கள் பதிவு செய்வதற்கான குறியீடு 160 ஆகும். 31.7.91 முடிய 39 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட குறியீடு 31.3.92-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

1991-92-ஆம் ஆண்டிற்கான குடிசைத் தொழில் பதிவு செய்வதற்கான குறியீடு 160 ஆகும். 31.7.91 முடிய 37 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்ட குறியீடு 31.3.92-க்குள் அடையப்பட்டுவிடும்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 1983-84-ஆம் ஆண்டிலிருந்து 25 சதவிகிதம் மானியத்துடன் படித்து வேலையற்ற இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். நடப்பு நிதி ஆண்டில் (1991-92) இம்மாவட்டத்தில் 250 பேர்கள் பயன்பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

31.7.91 முடிய இத்திட்டத்தின் மூலம் 2,117 நபர்களுக்கு 356.15 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள தொகையில் அவர்களுக்கு 25 சதவிகிதம் மானியத் தொகையாக ரூ.88.75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு (1991-92) 250 நபர்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 69 விண்ணப்பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் 31 இளைஞர்களுக்கு 28.1.91-லிருந்து ஆறு வாரக்காலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்கள் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மேலும், எழுபத்தைந்து சதவீதத்தினர் கட்டுமானம் மற்றும் மின்சாரம் மற்றும் மின்னணு டிப்ளோமா பெற்றவர்களாகவும் உள்ளனர். இப்பயிற்சியின் மூலம் திறமைவாய்ந்த தொழில் முனைவோர்கள் மாவட்டத் தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் புதிய தொழில் தொடங்கிப் பயன் பெற வாய்ப்புண்டு.

## தமிழ்நாடு மதுவிலக்கு மாநிலப் பிரச்சாரக் குழு

மதுவின் தீமைகளைப் பற்றியும், போதை மருந்துகளின் கெடுதல்கள் மற்றும் மதுவிலக்கின் நன்மைகள் குறித்தும் மக்களிடம் எடுத்துக் கூறி பிரச்சாரம் செய்வதற்காக, தமிழ்நாடு மதுவிலக்குப் பிரச்சாரக் குழு மாநில அளவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்தக் குழுவில் மொத்தம் 23 பேர் உள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியன், திருமதி ஏ.எஸ்.பொன்னம்மாள், திரு இராம. ராமநாதன், திருமதி கவிநிலவு தர்மராஜன், திரு செ.கு.தமிழரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு தா.பாண்டியன், தவத்திரு சுந்தர சுவாமிகள், தொழிலதிபர் திரு என். மகாலிங்கம், ஆற்காடு இளவரசர் திரு முகமது அப்துல் அலி, ஓய்வு பெற்ற நீதிபதி திரு எஸ். சுவாமிக்கண்ணு, டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் என்.மதனகோபால், டாக்டர் சி.வி. கிருஷ்ணசுவாமி, திரைப்படத் தயாரிப்பாளர் திரு ஜி.வெங்கடேஸ்வரன், திரைப்பட நடிகர் திரு எம்.என். நம்பியார், திரைப்பட நடிகை திருமதி ஆர்.மனோரமா, 'அமுதசுரபி' ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் திருமதி சாந்தி ரங்கநாதன், சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு கே.பி.கே. நம்பியார், சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எஸ்.வேணுகோபால் ரெட்டி, செய்தி சுற்றுலாத் துறை முதன்மைச் செயலர் திரு கே.ஜே.எம்.ஷெட்டி, இ.ஆ.ப. ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைச் செயலர் திரு கே.மலைச்சாமி,இ.ஆ.ப. அவர்கள் இந்தக் குழுவின் உறுப்பினர் செயலாளராக இருப்பார்.

*காமராசர் மாவட்டம்:*

## சீரிய முறையில் செயல்படும் சிறுசேமிப்புத் திட்டம்

"சிறு துளி பெரு வெள்ளம்" என்பது போல, சிறுகச் சிறுகச் சேமித்து வருகின்ற பழக்கம் சிறு வயது முதற்கொண்டே ஏற்பட வேண்டும். இது நமது நாட்டிற்கும், நமது வீட்டிற்கும் பெரிதும் பயன் படும்.

இந்தியாவில், பொதுவாக அனைவரும் சிக்கனமாகத்தான் வாழ்ந்து வருகின்றனர். அண்மை ஆண்டுகளாக 21 முதல் 24 சதவீதம் வரை சேமித்து வருகின்றனர். சிக்கனத்திற்குப் பேர் பெற்ற ஜப்பான் மக்கள் தேசிய செல்வ உற்பத்தியில் 30 சதவீதம் வரை மிச்சம் பிடித்து சேமித்து உள்நாட்டு முதலீடுகளையும், பற்றாக்குறையையும் சமாளித்து வருகின்றனர்.

இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டுகளால் சிதைந்துபோன ஜப்பான் நகரம் இன்று உலகத்திலேயே தலைசிறந்த நாடாகக் காட்சி அளிக்கிறது. காரணம், அங்குள்ள மக்கள் கடினமாக உழைத்துச் சம்பாதித்து, ஒவ்வொருவரும் தங்களுடைய தேசிய நலனுக்காகச் சேமித்து வருகின்றனர். ஜப்பானுக்கு அடுத்தபடியாக, சேமிக்கும் பழக்கம் இந்தியாவில்தான் வளர்ந்து வருகிறது.

காமராசர் மாவட்டத்தில் சிறு சேமிப்புத் திட்டம் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவியரும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து சேமித்து வருகின்றனர். "இளமையில் கல்" என்பதுபோல மாணவ, மாணவியர் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமித்தலின் அவசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரைச் 'சஞ்சாயிகா' திட்டத்தில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் முனைப்பு இயக்கங்களை நடத்தி, அனைத்துக்

**சேமமுற வாழ்ந்திட சிறு சேமிப்பை நாம் கடைப்பிடித்திட வேண்டும். வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை நடத்தினால், வறுமையை விரட்டலாம். வளமையைச் சேர்க்கலாம்.**

குடும்பங்களையும் சிறுசேமிப்புத் திட்டத்தில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு அலுவலகங்கள், தனியார் துறையில் பணியாற்றும் பணியாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் சம்பளத்துடன் கூடிய சேமிப்புத் திட்டத்தில் சேர்த்து, சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் பணிகளும் நடந்து வருகின்றன.

இம்மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு, சம்பளச் சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 கணக்குகள். இது வரை 7,000 கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1989-90-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.11 கோடி ஆகும். மொத்த வசூல் ரூ. 16.05 கோடி, நிகர வசூல் ரூ.8.12 கோடி ஆகும். சிறுசேமிப்பு வசூலில் சாதனை புரிந்தமைக்காக, காமராசர் மாவட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ள ஊக்கத்தொகை ரூ.50.60 இலட்சம் ஆகும். 1990-91- ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 13 கோடியாகும். நிகர



வசூல் 15.86 கோடி. 1990-91-ஆம் ஆண்டு இலக்கில் 122 விழுக்காடு சாதனை புரிந்து மாநிலத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இம்மாவட்டத்திற்கு அரசு அனுமதித்துள்ள ஊக்கத்தொகை ரூ.59 இலட்சத்து 86 ஆயிரம் ஆகும். பல்வேறு வளர்ச்சிப் பணிக்கு இந்த ஊக்கத்தொகை செலவிடப்பட்டுள்ளது.

27.8.91 அன்று விருதுநகர் காமராசர் வித்தயாசாலை நடுநிலைப்பள்ளியில், ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சிறுசேமிப்புத்துறை இயக்குநர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 562 முதலீட்டாளர்களுக்கு ரூ.77,919 ஊக்கத்தொகையும், 42 முகவர்களுக்கு ரூ.2 இலட்சத்து 37 ஆயிரம் ஊக்கத்தொகையும், 49 பேர்களுக்குப் பரிசுப் பொருட்களையும் வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது:

"காமராசர் மாவட்டத்திற்கு 1989-90-ஆம் ஆண்டிற்கும், 1990-91- ஆம் ஆண்டிற்கும் நிர்ணயிக்கப்பட்ட தொகையைத் திரட்டியதற்கு ஒரு கோடியே 10 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாட்டில் வங்கிகளைக் காட்டிலும் அஞ்சலகங்கள் மொத்தம் 12 ஆயிரம் உள்ளன. மக்கள் சிக்கனத்தை மேற்கொண்டு வாழ்வில் செம்மையுறச் சேமிக்க வேண்டும். இந்தத் துறை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். அதன்மூலம் தான் எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்".

இவ்விழாவில் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகங்காதரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.





**நவராத்திரி என்றாலே பொம்மைக் கண்காட்சிகளே நம் நினைவுக்கு வரும். ஆண்டுதோறும் 'காதி கிராப்ட்' சார்பில் நடந்து வரும் 'பொம்மைக் கண்காட்சி' நம்மையெல்லாம் வெகுவாகக் கவரக்கூடிய ஒன்றாகும். அதை விளக்குகிறது இந்தக் கட்டுரை.**



## பொம்மைக் கண்காட்சி

நவராத்திரி என்றாலே பொம்மைக் கொலுதான் நம் நினைவுக்கு வரும்.

கண்ணைக் கவரும் வண்ணப் பொம்மைகள், நம் எண்ணத்தையும் ஈர்க்கும் வகையில், வகை வகையாகக் காட்சியளிக்கின்றன அங்கே!

ஆம். சென்னைக் குறளகத்தில். 'காதி கிராப்ட்' ஆண்டுதோறும் நடத்தும் அற்புதப் பொம்மைக் கண்காட்சி தான் அது!

தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் கைவண்ணத்தில் உருவான சிறிய பெரிய பொம்மைகள், சிறுவர்களை மட்டுமல்ல; பெரியவர்களையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

நாள்தோறும் நூற்றுக்கணக்கான ஆடவர் மகளிர் குழந்தைகள் கண்காட்சியைக் காணவருகின்ற காட்சியைப் பார்க்கும்போது, பொம்மைகள் நம்மை எப்படியெல்லாம் கவருகின்றன என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகின்றன.

மண், காகிதம், பீங்கான், கண்ணாடி, துணி ஆகியவற்றாலான பொம்மைகள் காட்சியில் ஏராளமாக இடம் பெற்றுள்ளன.

பொம்மைகள் எல்லாத் திறத்தாரையும் மகிழ்விக்கின்றன; அவற்றின் அழகில் மயங்காதார் யாரும் இல்லை. அவை எங்கெங்கெல்லாம் தயாராகி வருகின்றன?

சென்னையில் குயப்பேட்டை, கிண்டி, தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி, திண்டிவனம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களில்

பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தக் . கண்காட்சியில் ரூ.2-லிருந்து ரூ.1,650 வரை விலையுள்ள பொம்மைகள் விற்பனைக்கு உள்ளன.

பொதுவாக, கிராமப்புற ஏழை எளிய மக்கள் - கைவினைஞர்கள் பொம்மைத் தொழில் மூலம் வேலை வாய்ப்பினைப் பெறுகிறார்கள். அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கும், அதே சமயத்தில் கிராமப் பொருளாதாரம் உயரவும் வழி கோலுகிறார்கள்.

கண்காட்சியைப் பார்த்துக் கொண்டே வருகிறோம் -

இந்த ஆண்டு, புதிய வடிவமைப்புகளில் சிறப்பு வகைப் பொம்மைகள் காட்சிக்கு வந்திருக்கின்ற பாங்கினைப் பார்க்கிறோம்.

இராமாயணக் கதையை விளக்கிடும் பொம்மைகள், இதே - போல புத்திர காமேஷ்டி யாகம், அகல்யை சாப விமோசனம், வேளாண்மைத் தொழில் மற்றும் கிராமக் கைவினைஞர்களைச் சித்திரிக்கும் பொம்மைகள், பூம்புகார் சிற்பங்கள், பேரூர் கோவில் சிற்ப வடிவங்கள் ஆகியவை நுண்ணிய வேலைப்பாடுகளுடன் காட்சி தருகின்றன.

இவற்றுடன், யானை, புலி, மான் முதலான விலங்குகள், மயில், கிளி, அன்னம் முதலான பறவைகள், தென்னை, பனை முதலான மரவகைகள், கடவுளர் சிலைகள், தலைவர்களின் திருவுருவங்கள் முதலானவை காணக் கண்கோடி வேண்டும்!

கண்ணாடிக் குச்சியைக் கொண்டு, தம் கைத்திறமையால் அதை வளைத்தும் நெளித்தும் உருவாக்கிய கண்ணாடிப் பொம்மைகளும் நம் கண் முன்னாடி நிற்கின்றனவே!

பொம்மைக் கொலுவோடு, காதிகிராப்டில் வழக்கமாக விற்பனையாகும் உலோகம் முதலானவற்றாலான கலை நுணுக்கப் பொருள்களும் சேர்ந்து கண்காட்சிக்கு அணி சேர்க்கின்றன.

கிராமங்கள் என்கிறபோது, அங்கே குடிசைத் தொழில்களுக்குக் குறைவில்லை. குறிப்பாக, மண்பாண்டத் தொழில், அங்கே மலையாக வளர்ந்து வருவதைப் பார்க்கலாம்.









கலை நயம் மிக்க பூத்தொட்டிகள், தண்ணீர் ஜாடிகள், 'டெர கோட்டா' மாதிரிப் பொம்மைகள், மெருகேற்றிய மண்பாண்டங்கள், ஏழைகளின் குளிர்சாதனப் பெட்டிகள் (மண்ணாலான இவற்றில் காய்கறிகளைக்கெடாமல்பாதுகாத்து வைக்கலாம்) உள்ளிட்ட மக்களுக்குத் தேவையான நவீன பொருட்கள் மண்பாண்டத்தில் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே மண்பாண்டத் தொழில் மேம்பாட்டுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. மண்பாண்டத் தொழிலானது, வாரியத்தின் 3 அலகுகள், 99 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள், 10,673 நிதி உதவி பெற்ற தொழிலாளர்கள் மூலம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1990-91-ஆம் ஆண்டில் வாரியம் ரூ.12.80 கோடிக்கு மண்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்துள்ளது. இதுவரை 80,364 மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 37,400 பேர் மகளிராவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் மாற மாற கருத்துக்கள் மட்டுமல்ல; தொழிற் கருவிகளும் மாறத்தான் செய்கின்றன. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக, கையால் மண்பாண்டம் செய்வதோடு, மின் விசையாலும் மண்பாண்டங்கள் செய்கின்ற வசதி இன்று ஏற்பட்டுள்ளது. ஆம். மின்விசையால் இயக்கக் கூடிய மட்பாண்ட 'ஷைலா' சக்கரம், இன்று பழக்கத்துக்கும் வழக்கத்துக்கும் வந்துவிட்டன.



அதிக அளவில், பல்வேறு மட்பாண்டப் - பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஏற்ப, செவ்வாய்ப்பேட்டையில் 'மண்டல மட்பாண்டப் பயிற்சி நிலையம்' ஒன்று இயங்கி வருகிறது. தென் மாநிலங்களிலிருந்து வரும் மண்பாண்டக் கைவினைஞர்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் கால அளவு 5 மாதங்களாகும். பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

• மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ, மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டுமென்று கருதுகின்றோமோ, மற்றவர்கள் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் நினைக்கிறோமோ,' அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். அது தான் ஒழுக்கம்.

—தந்தை பெரியார்

கிராமப் பகுதிகளில் உள்ள மட்பாண்டக் கைவினைஞர்கள் அப்பகுதிகளிலேயே பயன்பெறும் வகையில், தமிழகத்தில் 4 இடங்களில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. விலை மதிப்பற்ற - கலை நுணுக்கங்கள் நிறைந்த - தொன்மையான இந்த மட்பாண்டத் தொழிலை முற்போக்கு அடைந்து வரும் சமுதாயத்தினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொருட்களையும், பொம்மைகளையும் உற்பத்தி செய்வதில் வாரியம் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

உற்பத்தி அலகுகள், கூட்டுறவுச் சங்கங்கள், கைவினைஞர்கள் மூலம் உற்பத்தியாகும் பொம்மைகள் ஆண்டு முழுவதும் விற்பனை செய்யப்பட்டு வந்தாலும், பெரும் அளவு விற்பனை நவராத்திரிப் பண்டிகைக் காலத்திலே தான் நடைபெறுகின்றது. களிமண் பொம்மைகளுடன் காகிதக் கூழில் தயாரிக்கும் பொம்மைகள் அதிக அளவில் வாரியத்தினால் விற்பனை செய்யப்படுகின்றன.

குறளகம் கதர் அங்காடியிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் விற்கப்படும் பொம்மைகளின் தரம் உயர்ந்தவையாகவும், கவர்ச்சிகரமாகவும் இருப்பதால், வாரியத்தின் பொம்மைகளுக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

1989-ஆம் ஆண்டில், ரூ.12.76 இலட்சத்திற்குப் பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டன. 1990-ஆம் ஆண்டில், ரூ.18.10 இலட்சம் அளவிற்குப் பொம்மைகள் விற்பனை செய்யப்பட்டன. இவ்வாண்டில், நவராத்திரிக் கொலு விழாக் காலத்தில், பொம்மை விற்பனை இலக்கு ரூ.22.50 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறளகத்தில் நடைபெறும் இந்தப் பொம்மைக் கண்காட்சி, 7.9.1991 முதல் 17.10.1991 முடிய நடைபெறுகிறது. காலை 10 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறு இந்தக் கண்காட்சி, கண்களுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விரு தூட்டுவனவாக அமைந்துள்ள என்றால் அது மிகையல்ல!

- பி.வி. கிரி

# போதையைத் துறந்தால் புது வாழ்வு!

**போ**தை மருந்துகளின் காரண மாக உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். நாக ரீகம் அடைந்த நமது சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் போதை மருந்துகளைப் பற்றிய விழிப்புணர்வு அண்மைக் கால மாகப் பெருகி வருகிறது.

போதை மருந்து அபாயம், சுகா தாரத்தையும், நலவாழ்வையும் மட்டும் சீரழிப்பதில்லை; நமது சமூக- அரசியல் மற்றும் பொருளாதார அடித்தளத்தையேகூட அது அதிர வைத்து விடுகிறது!

போதை மருந்தின் பிடியில் சிக்காத உலக நாடுகளே இல்லை எனலாம்; இந்தியா மட்டும் அதற்கு விதிவிலக்கா என்ன? மேற்கே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் இணைந்த தங்கப்பிறை பகுதி இருப்பதாலும், தங்க முக்கோணம் என்றழைக்கப்படும் பர்மா, தாய் லாந்து, லாவோஸ் ஆகியன கிழக்குப் பக்கம் இருப்பதாலும் போதை மருந் துகளின் புழக்கமும், போக்குவரத் தும் நம்நாட்டில் தாராளமாகவே நடைபெறுகிறது!.

### சட்டப்பூர்வ நடவடிக்கை

போதை மருந்தை எதிர்த்து சமூக அளவில் போராடுவது ஒருபுற மிருக்க, அரசும் சட்டப்பூர்வ நட வடிக்கைகளை எடுத்து வருகிறது. 1985-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்ட ''போதை மருந்துகள் மற்றும் மனநிலைக்கேடு மருந்துப்பொருள் சட்டம்'' இவ்வகையில் எடுக்கப் பட்ட முதல் நடவடிக்கையாகும். இதன்கீழ் கைது செய்யப்டுவோருக்குப் பத்து முதல் இருபது ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் ரூ.2 இலட்சம் வரை அபராதத் தொகை யும் விதிக்கப்படும்.

1989-ஆம் ஆண்டு இந்தச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தம் மூலம் இரண்டாம் முறை யாகக் குற்றம் நிரூபிக்கப்படுவோருக்கு மரண தண்டனை அளிக்க முடியும். போதை மருந்து தொடர்பான வழக் குகளை வேகமாகத் தீர்த்து வைப்ப தற்கும் நடவடிக்கை எடுக்கப்படு கிறது. சட்ட விரோதமான முறை யில் போதைப்பொருள் கடத்து வோர் அல்லது விற்போரின் சொத்து களைப் பறிமுதல் செய்வதற்கான வழிமுறையும் இந்தச் சட்டத்தில் உள்ளது.

1988-ஆம் ஆண்டு, போதைப் பொருள் கடத்துதல் மற்றும் மன நிலைக்கேடு மருந்துப்பொருள் விற் பனையை ஒழிப்பதற்காக 1988-ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வரும் பெரும் புள்ளிகளையும், திரை மறைவுக் கூட்டங்களையும் இதன் மூலம் தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

அரசின் இந்தச் சட்டங்களினால், ஓபியம், ஹீராயின், கஞ்சா, ஹஷிஷ் முதலிய போதை மருந்துகளைப் பெருமளவில் கைப்பற்ற முடிந்தது. சுங்கம் மற்றும் மத்தியக் கலால், மாநில காவல் துறையின் போதைப் பொருள் தடுப்பு பீரோ, வருவாய் புலனாய்வுத் துறை உட்படப் பல அரசு அமைப்புகள் போதை மருந்து கடத்துதலைக் குறைத்திட முயன்று வருகின்றன.

என்னதான் சட்டங்களும், அரசு அமைப்புகளும் இருந்தாலும் நன் றாக ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பல் முனை ஒழுங்கு அணுகுமுறையின் மூலம்தான் போதை மருந்துப் பிரச் சினையை முற்றிலும் ஒழிக்க முடியும் என்றும் உணரப்பட்டுள்ளது.

### மறுபக்கம்

இந்தியாவைப் பொறுத்தவரை யில் போதை மருந்துப் பிரச்சி னையை அணுகுவது, சம்பந்தப்பட்ட வரின் குடும்பத்தினரின் பிரச்சினை யாகவே இருந்து வந்திருக்கிறது. இருந்தபோதிலும் நிகழ்ந்துள்ள பல் வேறு சமூக-கலாச்சார-பொருளா தார மாற்றங்களினால் போதை மருந்துக்கு அடிமையானவர்களை மீட்கும் பணியில் அரசு தாராளமாக உதவிடும் நிலை தோன்றிவிட்டது. போதை மருந்துக்கு அடிமையான வர்கள் ஒரு சமூக சேவை அடிப் படையில் பொது அரசு மருத்துவ மனைகளில் சோதிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான மருத்துவமனைகளில் இவ்வகை நோயாளிகளுக்காக விரி வான வசதிகள் மனநிலை சிகிச் சைப் பிரிவினரால் அளிக்கப்படு கின்றன.



போதை மருந்து பயன்படுத்து வோர் இருவகையில் பாதிப்படை கிறார்கள். ஒன்று உடல்ரீதியான பாதிப்பு; மற்றது மனோரீதியான பாதிப்பு. போதை மருந்து பயன் படுத்துவது ஒரு மன-சமூக-மருத் துவப் பிரச்சினை என்று நம்பப் படுவதால் நோயாளிகளுக்கு இரு வகைகளில் சிகிச்சையளிக்கப் படுகிறது.

### இதர வழிமுறைகள்

போதை மருந்து நோயாளி களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி யில் ஈடுபட்டுள்ள சமூக சேவை அமைப்புகளுக்கு அரசு நிதி உதவி அளித்துவருகிறது. குடும்பத்தை மையமாக வைத்துச் சமூக சேவையா ளர்கள் மூலம் போதைப் பொருள் இல்லாத வாழ்க்கையை ஏற்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த விஷயத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் முக்கியப் பங்கினை ஆற்ற முடியும். இந்தப் பிரச்சினை ஒரு நோய் போன்றதுதான். சரி யான சமயத்தில் சிகிச்சையளித்தால் புதுவாழ்வைப் பெறமுடியும் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். போதையில் சிக்கித் தவிப்பவர் களைக் கரை சேர்ப்பதற்காகச் சமூக நல அமைப்புகள் மறுவாழ்வு முகாம் களை நடத்துகின்றன.

போதையைத் துறந்தால் புது வாழ்வு காணலாம்.

**என்.எஸ்.என்.முஹம்மது**
**(பத்திரிகைத் தகவல் அலுவலகம்)**



# நீரிழிவு நோய் - இன்னலும் நிவாரணங்களும்

**மனிதனுக்கு வரும் நோய் களில் நீரிழிவு நோயும் அபாயகரமான ஒன்றுதான். அந்த நோய் வருமுன் காப்ப தும் வந்தபின் நடப்பதும் எப்படி என்று விளக்கப் படுகிறது. விளக்குபவர் டாக்டர் பி.எஸ்.மோகன முருகன் எம்.டி.**

'**ச**ர்க்கரை வியாதி' என்று இனிப்பாகக் குறிப்பிடப்படும் நீரிழிவு (Diabetes, Mellitus) நோய் பற்றிய உண்மைகள் மிகவும் கசப் பானவைகளாகும்.

அந்த வியாதிக்கு ஆளானவர் களில் பெரும்பாலோர் காலை இழந் திருக்கிறார்கள்; கையை இழந்திருக் கிறார்கள்; கண்பார்வையையே பறி கொடுக்கும் பரிதாப நிலைக்கும்கூட ஆளாகியிருக்கிறார்கள்.

நீரிழிவு நோய் எதனால் உண்டா கிறது?... அந்நோய்க்கு ஆளாவோர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகள் யாவை? ... அந்த நோயின் அறிகுறி என்ன?... உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் தன்மை நீரிழிவு நோய்க்கு இருக்கிறதா? என் பவை போன்ற மருத்துவ உண் மைகள் பலவற்றை அறிந்து கொள் ளுவதால் எல்லோருக்கும் நல்ல பலன் உண்டுதானே?

இதன் காரணமாகவே, டாக்டர். பி.எஸ்,. மோகன முருகன், எம்.டி., அவர்களைச் சந்தித்து நம்முடைய சந்தேக வினாக்களைத் தொடுத் தோம்; படித்தவர்கள் மட்டுமின்றிப் பாமரரும் புரிந்துகொள்ளும் வகை யில் அவர் விடையளித்தார். நீரிழிவு நோய் பற்றிய அந்த வினா-விடைத் தொகுப்பே இந்தக் கட்டுரை:

**ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட அடிப்படையான காரணம் என்ன?**

நம் உடம்பின் உள்ளே உள்ள முக்கிய உறுப்புகளில் ஒன்று கணையம் (Pancreas). அதில் உள்ள Betacells எனப்படும் திசுக்களிலிருந்து இன் சுலின் (Insulin) எனப்படும் கணைய நீர் சுரக்கிறது. நம் உடல் இயக்கத் திற்குத் தேவையான அந்த நீர் (Hormone).தேவைப்படும் அளவுக் குச் சுரக்காத நிலைமை ஏற்படுகிற போது நீரிழிவு நோய் உண்டாகிறது.

**அந்த நோய் இன்ன வயதினருக் குத்தான் ஏற்படும் என்று வயது வரம்பு ஏதாவது உண்டா?**

எந்த வயதிலும் நீரிழிவு நோய் வரக்கூடும். இருபத்தைந்து, முப்பது வயது வரை வருகிற நீரிழிவு நோயை மருத்துவத் துறையில் 'இளமையான நீரிழிவு' (Juvenile Diabetes) என்றும், அதற்கு மேற் பட்ட வயதினர்க்கு வருகிற நீரிழிவு நோயை 'முதிர்ந்த நீரிழிவு' (Meturity Onset Diabetes) என்றும் குறிப்பிடு கிறோம்.

சிலபேருக்கு ஒருவிதக் காரண மும் இல்லாமலே இரத்தக் கொதிப்பு ஏற்படுவதைப் போல - காரணம் ஏதுமில்லாமலே ஏற்படும் நீரிழிவு நோய் Primary Diabetes எனப்படும். காரணம் எதுவுமின்றி ஏற்படும் நீரிழிவே மக்களிடையே அதிகம் காணப்படுகிறது. கணையத்தில் கல் இருப்பது - கணையம் நோய்க் கிருமி களால் தாக்கப்படுவது போன்ற காரணங்களால் வரும் நீரிழிவு Secondary Diabetes என்று சொல்லப் படும்.

ஆண்-பெண் என்கிற பால் வேறு பாடெல்லாம் இதற்கு இல்லை; இருபாலருக்கும் இந்த நோய் வரும்.

**நீரிழிவு என்பது தொத்து நோயா?**

அது ஒரு தொத்து நோயல்ல; பரம்பரை நோய். ஒருவரின் அம்மா வுக்கோ, அப்பாவுக்கோ அந்நோய் இருந்திருக்கும் பட்சத்தில், குறிப் பிட்ட அந்த நபருக்கும் நீரிழிவு வரு வதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

**ஒருவருக்கு நீரிழிவு நோய் வந் திருக்கிறது என்பதை எப்படிப்பட்ட அறிகுறிகளை வைத்து நாம் தெரிந்து கொள்ளலாம்?**

அந்த நோய்க்கு ஆளானவருக்கு அடிக்கடி களைப்பு ஏற்படும்; அடிக் கடி சிறுநீர் பிரியும்; எதிர்பாராமல் பசி அதிகரிக்கும்; எப்போதும் போலச் சாப்பிட்டுக் கொண்டிருந் தாலும், நோய் கண்டதும், உடல் மிகவும் இளைக்கத் தொடங்கும்; பார்வை மங்கும்; உடலில் புண் ஏற்பட்டால் ஆறவே ஆறாது; கைகள், கால்கள், தசைகளில் வலி ஏற்படும்- இப்படிப் பல அறிகுறிகள் உண் டென்றாலும் இவைகளே முக்கிய மானவைகளாகும்.

**நீரிழிவு நோயாளிக்குப் புண் ஏற்பட்டால் ஆறாது என்பது ஏன்?**

நம் உடலில் உள்ள, நோய்க் கிருமி எதிர்ப்புச் சக்திக்கான செல் Phagocytes என்பதாகும்; நீரிழிவு



டாக்டர் பி.எஸ். மோகனமுருகன்




நோயாளி உடலில் உள்ள அந்த செல்லின் எதிர்ப்புச் சக்தி குறைந்து விடுவதுதான், அவர்களுக்கு உண்டாகும் புண் ஆறாது என்பதற்கான முக்கியக் காரணம்.

குறிப்பாக - எல்லோரது உடலிலும் - காலின் கடைசிக்கோ, கை விரலின் கடைசிக்கோ போய்த்தான் இரத்தம் திரும்பி வரும். நீரிழிவு நோய் கண்டவருக்கு, அதேபோல இரத்த ஓட்டம் உடலெங்கும் சீராக இருக்காது. கால் அல்லது கைகளுக்குச் செல்லும் இரத்த் ஓட்டம் மிகவும் குறைந்தால் அந்த நோயாளியின் கை அல்லது காலைத் துண்டிக்கும் நிலை ஏற்படும். அப்போதுதான், அதற்கு மேல் உடல் முழுவதும் நோய்க் கிருமிகள் பரவாமல் இருக்கும். அப்படித் துண்டிப்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடாது; துண்டிக்காவிட்டால்தான் ஆபத்து.

அப்படி உறுப்பைத் துண்டிப்பதில் கூட, இரத்த ஓட்டம் சரியாக உள்ள இடத்தில்தான் துண்டிக்க வேண்டும்; அப்போதுதான் அந்த ரணம் ஆறும்; இல்லாவிட்டால், புண் ஆறாமல், நிலைமை மேலும் விபரீதமாகிவிடும்.

**இந்த வியாதி முற்றினால் கண் பார்வை போய்விடும்என்கிறார்களே; அப்படி ஆவது ஏன்?**

சில சமயங்களில் கண்களில் உள்ள இரத்தக்குழாய் நீரிழிவு நோயாளிக்குப் பலவீனப் பட்டு விடும்; இதை விரைவில் கவனிக்கா விட்டால், விழித்திரை (Retina) தடிப்பாகிப் பார்வை மங்கிவிடும்; (Diabetie Retinopaathy) அறவே பார்வை போய்விடுவதும் உண்டு. ஆனால் சில சமயங்களில் லேஸர் (Laser) சிகிச்சை மூலம், விழித்திரையில் நுண்ணிய துளைகள் இட்டு மீண்டும் அந்த நோயாளிக்குப் பார்வை கிடைக்கச் செய்துவிட முடியும்.

முக்கியமாகக் கண்ணுக்கு அந்த வகைச் சிகிச்சை அளிக்கும் கண் டாக்டர், முதலில் நோயாளிக்கு எதனால் பார்வை போயிருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்ததுபோல் சிகிச்சையளிப்பார்.

நீரிழிவு நோயாளி தனக்கு எந்த நோய் ஏற்பட்டு எந்த டாக்டரிடம் போக நேர்ந்தாலும் சரி; முதலாவதாக அந்த டாக்டரிடம், தான் ஒரு நீரிழிவு நோயாளி என்பதைத் தெரிவித்துவிட வேண்டும். அப்போது தான் அதற்கேற்றபடி மருந்து கொடுக்க அந்த டாக்டரால் முடியும்.

**எப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நீரிழிவு நோய் வரும் என்று கூறமுடியுமா?**

இந்த விஷயத்தில் அப்படி எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. உடல் பருமனாக இருப்பவர்களுக்கு நீரிழிவு நோய் வரும்; அப்படிப் பருமனாக இருப்பவர்களும் நல்ல உடல் உழைப்பாளியாக இருப்பாரேயானால் நீரிழிவு நோய் வருவதற்கான சர்த்தியக் கூறு குறைவாகவே இருக்கும்.

சாப்பிடும் உணவின் அளவு ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ஒருவர் பொதுவாக 2,000 முதல் 2,500 கலோரி வரை உணவு உட்கொள்ளலாம். அந்த அளவைக் கடந்து நாள்தோறும் சாப்பிட்டால், அதனால் கொழுப்புச் சத்து அதிகமாகி நீரிழிவு நோய் ஏற்படக்கூடும். ஆகவே, உணவைத் திட்டமாக உட்கொள்ளப் பழகவேண்டும்.

**சர்க்கரை அதிகம் சாப்பிட்டால் இந்த நோய் வரும் என்பது உண்மையா?**

அது அப்படியில்லை; குறிப்பாக எந்த உணவுப் பொருளை அளவு கடந்து அதிகம் சாப்பிட்டாலும் இந்நோய் வரும். உடனடியாக நம் உடலில் சர்க்கரைச் சத்தாக மாறும் பொருட்கள் உட்கொள்ளுவதை நாம் கட்டாயம் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோய் வந்த பிறகோ-சர்க்கரை, ஜீனி, கருப்பட்டி, வெல்லம் போன்றவை கூடவே கூடாது. திராட்சை, ஆப்பிள் பழங்களையும், இனிப்புப் பண்டங்களையும் அடியோடு விட்டுவிட வேண்டும். பீட்ரூட் போன்ற காய்கறிகளையும், கிழங்கு வகைகளையும் உண்ணாமல் தவிர்க்க வேண்டும்.

நம் இரத்தத்தில் அறவே சர்க்கரை இல்லாமல் போனாலும்கூட ஆபத்து தான். அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளான ஒருவரின் உடலில் வியர்வை பெருக்கெடுக்கும் (Hypoglycemia) கை கால்கள் வெடவெடவென்று நடுங்கும்; நெஞ்சில் தொடர்ந்து படபடப்பு ஏற்படும். இந்த அறிகுறிகள் ஏற்பட்ட ஒருவர், உடனே ஒன்று அல்லது இரண்டு டீஸ்பூன் சர்க்கரை போட்டு காபியோ, டீயோ சாப்பிடலாம்; பின்பு அந்த மாற்றங்கள் நீங்கி விடும். அதன்பிறகு, உடனே அவர் தகுந்த டாக்டரை அணுகி தன்னைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், உயிருக்கே ஆபத்தாகி விடும்.

**நகர மக்கள் - கிராம மக்கள் இருவரில் எந்தப் பிரிவினருக்கு நீரிழிவு நோய் அதிகம் வர வாய்ப்புள்ளது?**

இதில் நாம் அப்படிப் பேதம் பார்க்க முடியாது. ஆனால் - கிராம மக்களுக்கு உடல் உழைப்பு அதிகம் என்பதால், அவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக் குறைவு என்று சொல்லலாம்.

**நீரிழிவு நோய் கண்டவர்களுக்கு என்னென்ன பாதிப்புகளெல்லாம் ஏற்படக்கூடும்?**

அ. சாதாரண மனிதர் ஒருவருக்கு உடல் வியர்த்து, நெஞ்சு வலித்து மாரடைப்பு ஏற்படும் என்றால் - சர்க்கரை வியாதி உள்ளவருக்கு அத்தகைய எந்த முன்






அறிகுறியும் ஏற்படாமலே திடீரென்று மாரடைப்பு ஏற்படலாம்.

ஆ. நீரிழிவு நோயாளியின் இதயத்திற்கு, இரத்தத்தைச் செலுத்தும் தன்மை (Pumping) குறைவு. அதாவது இதயம் சரியானபடி சுருங்கி விரியாது. இதனால் இருதயம் வீங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இ. நீரிழிவு நோயினர்ல் சிறுநீரகமும் பாதிக்கப்படுகிறது. சிறுநீரில் உப்புச் சத்து வெளிப்படும்; இரத்தமும் வரும்; சிறுநீரகமும் நோய்க் கிருமிகளின் தாக்குதலுக்கு ஆளாகும்.

ஈ. மூளையின் செயல்பாடுகள் பாதிக்கும். மூளையின் இரத்தக் குழாய்களில் அடைப்பு, இரத்தக் கசிவு போன்றவைகள் ஏற்படும்.

உ. உடலின் உறுதிக்குக் காரணமாக உள்ள எலும்புகள் பலவீனப்பட்டு விடும். எலும்புகளில் மிக எளிதில் தேய்மானம் உண்டாகும்.

ஊ. நீரிழிவு கண்டு நீண்ட காலமான ஆண்களுக்கு ஆண்மைக் குறைவும், பெண்களுக்குக் கருத்தறிக்க முடியாத நிலைமையும் ஏற்படும்.

எ. படை, தேமல், சொறி (Eczema) போன்ற தோல் வியாதிகள் உண்டாகும்.

ஏ. நீரிழிவு நோயாளியின் இரத்தத்தில் எதிர்ப்புச் சக்தி குறைவு என்பதால், அவர்களுக்கு க்ஷயரோகம் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

**நீரிழிவு ஒருவருக்கு எந்த அளவுக்கு இருக்கிறது என்று எப்படிப்பட்ட பரிசோதனைகளாலெல்லாம் தெரிந்து கொள்ள முடியும்?**

சிறுநீரில் சர்க்கரை இருக்கிறதா, இரத்தத்தில் உப்போ சர்க்கரையோ இருக்கிறதா என்பதை டாக்டர் குறிப்பிடுகிற காலத்தில் தவறாமல் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக-ஒருவருடைய இரத்தத்தில் சர்க்கரை இருக்கிறதா என்று பார்க்கும் பரிசோதனைதான் நீரிழிவு நிலை பற்றித் திட்டவட்டமாகத் தெரிவிக்கும்.

சில நோயாளிகளுக்கு Glucose Tolerance Test (G.T.T) தேவைப்படும். பொதுவாக எல்லோருக்குமே Glycosylated Hemoglobin (Hb-A1c) என்ற இரத்தப் பரிசோதனை நல்லது.



இத்தகைய பரிசோதனைகள் மூலம் தான் ஒருவரது உடலில் உள்ள நீரிழிவின் நிலை என்ன என்று திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள ம்டியும்.

சர்க்கரை வியாதியால் மற்ற உறுப்புகள் - பாதிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிவதற்காக, எக்ஸ்-ரே, ஈ.ஸி.ஜி. இரத்தக் கொழுப்புச் சத்து அளவு (Cholesterol), இரத்தத்தில் உள்ள உப்புக்களின் அளவு (Blood Urea, Serum Creetinine) சிறுநீர்ப் பரிசோதனை, கண் பரிசோதனை (Opthalmic Exam) ஆகிய முக்கியமான பரிசோதனைகளைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**நீரிழிவு நோயாளிகளுக்கு, டாக்டர் என்ற முறையில் நீங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?**

அ. நீரிழிவு நோயாளிகள், காலில் செருப்பில்லாமல் - வெறுங் காலுடன் - வெளியே நடக்கக் கூடாது. உடலின் எந்தப் பகுதியிலும் காயம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ. உணவில் பச்சைக் காய்கறிகள், கீரை ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

இ. உடலைப் பிடித்தாற்போல, இறுக்கமான உடைகளை உடுத்திக் கொள்ளக் கூடாது.

ஈ. கொழுப்புச் சத்துள்ள பொருட்களை அதிகம் அல்லது அடிக்கடி உண்பதைத் தவிர்க்க வேண்டும். கொழுப்புப் பொருட்களில் பொதுவாக முழுமை அடையாத கொழுப்பு அமிலங்கள் (Unsaturated Fatty Acids) அதிகம் உள்ள சூரியகாந்தி எண்ணெய், நல்லெண்ணெய், நெல் உமி எண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய் முதலியவற்றைச் சமையலுக்குப் பயன்படுத்துவது நல்லது.

உ. தேங்காயெண்ணெய், நெய், டால்டா முதலியவற்றை முற்றிலும் தவிர்க்கலாம். பால், தயிர் மற்றும் மாமிசக் கொழுப்புப் பொருட்கள் குறைவாக உட்கொள்ள வேண்டும். கோழி, மீன் இவற்றில் ஆட்டிறைச்சியை விட குறைவாகக் கொழுப்பு உள்ளது. எனவே, அவற்றை உண்ணலாம்.

ஊ. சாப்பாட்டைப் பொறுத்த வரை ஒரே சீராக உணவு உட்கொள்ள வேண்டும். ஒரு நாள் அதிகமான அளவு உண்பதும் இன்னொருநாள் குறைவான அளவு உண்பதும் போன்ற மாறுபாடுகள் கூடாது.

எ. மருத்துவர் கூறும் அறிவுரைப்படி மாத்திரைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட அளவில் உட்கொள்ள வேண்டும் அல்லது இன்சுலின் ஊசி தேவையெனில் போட்டுக் கொள்ள வேண்டும். தானாகவே மாத்திரைகளைக் குறைப்பதோ, அதிகப்படுத்திக் கொள்வதோ கூடாது. அம்மாதிரி செய்வதால் இரத்தத்தில் திடீரென சர்க்கரைச் சத்து குறைந்து அதனால் உயிரையே இழக்கும் அபாயம் உள்ளது.

ஏ. நீரிழிவு நோயாளி, ஒரு நாளைக்கு இருபது அல்லது முப்பது நிமிஷம் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். அளவோடு உடற்பயிற்சியும் செய்யலாம். இவைகளை வாரம் முழுவதும் செய்ய இயலாவிட்டாலும், ஐந்து நாட்களாவது செய்வது நல்லது.

**நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் புதிதாக ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் யாவை?**

நாம் உபயோகிக்கும் இன்சுலின் ஊசியிலுள்ள மருந்து மாடு அல்லது பன்றியின் கணையத்திலிருந்து (Pancreas) எடுக்கப்பட்டதால், அதிலுள்ள அசுத்தப் பொருட்களால் (Impurities) சில சமயங்களில் ஒவ்வாமை (Allergy) மற்றும் இன்சுலின் வேலை செய்யாத தன்மை (Insulin Resistance) சிலருக்கு ஏற்படும் வாய்ப்புகள் இருந்தன. இதைத் தவிர்க்க, இப்போது Purified Insulins Preperations உள்ளன. Nordisulin Monosulin Insulatard Mixtard, Actranin, Monotard முதலான சுத்தம் செய்யப்பட்ட Porcine Insulin's ஆகும். மேலும், முற்றிலும் அசுத்தப்

# சட்டப்பேரவையில் ....

★ தமிழ்நாட்டில், சிறுதொழில் நிறுவனங்களுக்கு நிலக்கரி வழங்குவதில் பற்றாக்குறை எதுவும் இல்லை என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு முகமது ஆசிப் அவர்கள் சட்டப் பேரவையில் (11.9.91) தெரிவித்தார்.

★ மாநில அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களைச் சீர்திருத்தி இலாபத்தில் இயங்கச் செய்வது என்றும், அப்படிச் சீர்திருத்தவே இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களை மூடிவிடலாம்; தொடர்ந்து நட்டத்தில் இயங்கிவரும் இத்தகைய பொது நிறுவனங்களைத் தங்கள் நிறுவனத்துடன் நடத்தத் தனியார் முன் வந்தால் அவர்களுக்கு இந்த நிறுவனங்களை அளிக்கலாம் என்ற கருத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததாகச் சட்டமன்றத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் (11.9.91) தெரிவித்தார்.

★ அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 12,200 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன; இன்னும் சுமார் 4,400 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் எழுநூறு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது; இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு அவர்கள் சட்டமன்றத்தில் (11.9.91) தெரிவித்தார்.

★ தென்னார்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்; விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு வள்ளலார் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் (9.9.91) சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

★ திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து - திருச்சியைத் தலைநகராகக் கொண்டு திருச்சி மாவட்டமும், பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டமும், உருவாக்கப்படும்; இதற்கான ஏற்பாடுகள் அடுத்த ஆண்டில் செய்யப்படும் என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் (11.9.91) சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

★ தமிழ்நாட்டில், ஐந்தாண்டுகளுக்குள், ஐந்தாம் வகுப்புவரை கட்டாயக் கல்வி வழங்கும் திட்டம் கொண்டு வரப்படும். அண்ணாவின் இருமொழிக் கொள்கைதான் அரசின் கொள்கை.தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும். தமிழ்நாட்டில் கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவும், உயர்கல்வி மேம்பாட்டிற்காக மாநில உயர் கல்விக் குழுவும் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் அடுத்த ஐந்தாண்டுகளில் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்காக ரூ.400 கோடி செலவில் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. மத்திய அரசு மூலம், உலக வங்கியிடம் கடன்பெற்று இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் சட்டப்பேரவையில் (13.9.91) அறிவித்தார்.

பொருட்களே இல்லாமல் உள்ள Humulin (Human Mono Component Insulins) Humulin-S, Humulin-I, ஆகியவை தற்போது எளிதில் கிடைக்கின்றன.

இரத்தத்தில் உள்ள Hb A1C (Glycosylated Hb) பரிசோதனை செய்வதன் மூலம் 3 மாதகாலமாக உள்ள நீரிழிவு நோயின் அளவைக் கண்டு கொள்ளலாம்.

மேலும், சிறுநீரிலும் இரத்தத்திலும் உள்ள சர்க்கரையின் அளவைத் தெரிந்து கொள்ளச் சிறிய தாள்கள் (Strips) உள்ளன. அவற்றைச் சிறுநீரில் நனைத்து எடுத்தும், மற்றும் இரத்தத்தைத் தாட்களின்மேல் இரண்டொரு துளி விட்டும் அதில் ஏற்படும் மாற்றத்தை வைத்துச் சர்க்கரையின் அளவை அறியலாம். Uristix Dextrostix முதலியவை சிறுநீரில் சர்க்கரையை அறியவும் Glucostix, Haemo Glucostest முதலியவை இரத்தத்தில் சர்க்கரையை அறியவும் உதவுகின்றன.

உறுப்புகள் மாற்றுச் சிகிச்சை போல், உதாரணமாகச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை போல் வேறு மிருகங்களில் இருந்து கணையத்தை எடுத்து மனிதனுக்குப் பொருந்தும் முயற்சிகள் நடந்துவருகின்றன.

இன்சுலின் மருந்து 24 மணி நேரம் தொடர்ச்சியாகத் தேவையான அளவு இரத்தத்தில் செலுத்தும் சக்தியுள்ள (Infusion Pump) போன்ற வசதிகள் வெளிநாட்டில் உள்ளன. நமது நாட்டில் அது இன்னும் பரவலாக உபயோகத்தில் இல்லை.

புதிதாகக் கலோரிச் சத்து இல்லாத இனிப்பூட்டிகள் (Aspartame) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மாத்திரை வடிவில் உள்ள இவற்றைச் சர்க்கரைக்குப் பதிலாக காபி அல்லது டீ மற்றும் பானங்களில் அளவோடு உபயோகித்துக் கொள்ளலாம். இவை Sugar Free 1 up மற்றும் Equal என்ற பெயர்களில் விற்பனையாகின்றன.

எது எவ்வாறாயிலும்; நீரிழிவு நோயாளிகள் அவ்வப்போது டாக்டர்களிடம் தமது உடலைப் பரிசோதித்துக் கொள்ளுவது நல்லது.





# மதுவின் தீமை பற்றி அண்ணல் காந்தியடிகள்

★ தீண்டாமைக்கு அடுத்தபடியாக மிகவும் கண்டிக்கத்தக்கது ஒன்று உண்டென்றால், அது குடி என்ற சாபக்கேடுதான்.

★ குடிப்பழக்கத்திற்கு இரையான ஒரு நாட்டுக்கு அழிவைத் தவிர வேறொன்றும் கிடையாது.

★ நீங்கள் கண்ணியமாக வாழ விரும்பினால் குடிப்பழக்கம் தீமையை விலக்க வேண்டும்.

★ குடி என்பது வளர்ந்துகொண்டே வரும் ஒரு சமூகத்தீமை.

★ அபினி மற்றும் போதையளிக்கும் பொருள்கள், மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றன.

★ குடிப்பது ஒரு கெட்ட பழக்கம் என்பதைவிட, ஒரு வியாதி என்றே அதைச் சொல்லவேண்டும்.

★ என்னை ஒரு மணி நேரத்திற்கு இந்தியாவின் சர்வாதிகாரியாக நியமித்தால், நான் முதல் காரியமாகக் கள்-சாராயக் கடைகள் அனைத்தையும் நஷ்டஈடு தராமலேயே மூடிவிடுவேன்.

★ மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மதுபானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.

★ குடிப்பழக்கம் காரணமாகப் பேரரசுகளே அழிந்து போனதாக வரலாறு கூறுகிறது.

★ நம்மிடையே ஆயிரக்கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட, இந்நாடு ஒட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.

★ பிறருடைய துன்பத்தைத் தன்னுடையதாக ஏற்றுக் கொள்வதில் எவன் இன்பமடைகிறோனோ, அவனே உண்மையான தொண்டன்.

★ குடிபபழக்கம் நம் நாட்டிலிருந்து அகலுவதற்குச் சமூக ஊழியர்களும், சிறப்பாகப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.

★ கள்-சாராயத்தை அறவே ஒழித்துக் கட்டினாலன்றி, அதன் பிடியில் சிக்கியுள்ளவர்களைக் காப்பாற்ற முடியாது.

★ போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறாவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனிதமான கடமையாகக் கொள்வீர்களாக!

★ மதுவை ஒழிப்பதற்கு மருத்துவர்கள் சரியான வகையில் உதவக் கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண்களுக்கும் - மாணவர்களுக்கும் சிறப்பான உரிமையுண்டு.

## தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.309.29 கோடி செலவில் ஏழு ஆண்டுக் காலத்திற்கு, இம்மாநிலத்தில் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் என்ற பல துறைத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக நிதி உதவியானது, 31.7.91 முதல் (கடனளிப்பு) நடைமுறைக்கு வருகின்றது என்று உலக வங்கி இப்பொழுது தெரிவித்துள்ளது.

உலக வங்கி மற்றும் அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்கம் ஆகியவைகளிடமிருந்து கடன் மற்றும் வரவு உதவி நிதி 112.8 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இந்தத் திட்டத்திற்காகக் கடனளிப்பு நடைமுறைக்கு வருவதன் மூலம், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கி ஆகியவைகளுக்கிடையே 17.4.91 அன்று கையெழுத்திடப்பட்ட வளர்ச்சி வரவு ஒப்பந்தம் (The Development Credit Agreement) கடன் ஒப்பந்தம் (Loan Agreement) மற்றும் திட்ட ஒப்பந்தம் (Project Agreement) ஆகியவைகளும் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், மாநில திட்டக் குழு வலுப்படுத்தப்படும். வேளாண்மைத் துறையும், கால்நடை பராமரிப்புத் துறையும் வலுப்படுத்தப் படும். இதோடுகூட, வன வளர்ச்சி, கிராமச் சாலைகள், கிராமக் குடிநீர் வழங்கீடு ஆகிய திட்டங்களுக்கு உதவிகள் அளிக்கப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டில் வேளாண்மை மேம்பாட்டு நிலைகளை உயர்த்தும்.



# வீர வரலாறு படைத்த செண்பகராமன்

திருவனந்தபுரத்தில், புத்தன் சந்தை என்ற ஊரில் சின்னச்சாமி பிள்ளை - நாகம்மா தம்பதியரின் மகனாக 15.9.1891-இல் தோன்றியவர் செண்பகராமன்.

திருவனந்தபுரத்தில் மகாராஜா பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஆங்கில அரசை எதிர்த்துப் புரட்சியில் இறங்கினார் செண்பகராமன். சக மாணவர்களை ஒன்று சேர்த்து வெள்ளையருக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினார்.

சுதந்திர வேட்கை மிக்க செண்பகராமனை உலகம் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டியது. அவரது ஒளிமிக்க கண்கள் - வீரமிக்க தோற்றம் - உண்மை நிறைந்த செயல்கள் சர் வில்லியம் ஸ்டிரிக்லாண்ட் என்ற ஆங்கிலேயரைக் கவர்ந்தன.

திருவனந்தபுரத்தில், கால்நடை மருத்துவராகப் பணியாற்றிவந்த சர். வில்லியம், உண்மையில் ஜெர்மன் நாட்டின் உளவாளி. அவர், செண்பகராமனை அழைத்துத் தனது திட்டங்களை எடுத்துக் கூறினார். அந்தத் திட்டங்கள் செண்பகராமனைக் கவர்ந்தன. அந்தத் திட்டங்களை எளிதில் நிறைவேற்ற இயலாதபடி கண்காணிப்பும் அதிகமாக்கப்பட்டிருந்தது. என்றாலும் கண்காணிப்பையும் மீறி, சர் வில்லியத்துடன் திருவனந்தபுரத்தை விட்டு வெறியேறினார். பிறகு இலங்கைக்குச் சென்று, அங்கிருந்து ஒரு கப்பலில் இருவரும் இத்தாலி நாட்டுக்குச் சென்றனர்.

இத்தாலிக்குச் சென்ற செண்பகராமன் இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றைப் பயின்றார். இத்தாலிய மொழியையும் கற்றார். மேலும், பல மொழிகளையும் கற்றார். பின்னர் சுவிட்சர்லாந்துக்குச் சென்று அங்கு கல்லூரியில் பயின்று சிறந்த மாணவராக விளங்கினார்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**"டாக்டர் செண்பகராமன் பிள்ளையின் சுதந்திரப் போராட்ட நினைவுகளைப் போற்றும் வகையில், அம்மாவீரனுக்கு உருவச் சிலையும் நினைவுச் சின்னமும் எழுப்பப்படும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் (14.9.91) அறிவித்தார். 'ஜெய்ஹிந்த்' செண்பகராமன் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதே இந்தக் கட்டுரை.**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

பொறியியலில் தேர்ச்சி பெற்று, டாக்டர் பட்டம் பெற்றார்.

சுவிட்சர்லாந்தில் அவர் அவ்வப்போது ஆற்றிவந்த சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்தது. இந்திய நாட்டில் அந்நிய ஆட்சியினர் நடத்திய அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் கனல்தெறிக்கும் விதத்தில் எடுத்துச் சொன்னார். இந்திய மக்களின்பால் சுவிஸ் மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முயன்றார்.

இந்திய நாட்டின் போராட்டம் குறித்து ஜெர்மன் நாட்டின் பல பகுதிகளிலும் சொற்பொழிவாற்றி வந்தார். அதன் விளைவு, அந்த நாட்டிலே 'இந்திய ஆதரவு சர்வதேசக்குழு' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராகப் பொறுப்பேற்று அரும்பாடுபட்டார் செண்பகராமன்.

ஐரோப்பிய நாடுகளிடையே இந்தியாவைப் பற்றிப் பரவியிருந்த தவறான கருத்துக்களை நீக்கினார். இந்தியாவின் நன்மைக்காகப் பாடுபட்டார். தமது எண்ணங்களைத் தக்க விதத்தில் ஐரோப்பிய மக்களுக்குத் தெரிவிப்பதற்காக Pro India என்ற பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார்.

இந்தியா மட்டுமல்ல, உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாடாக இருந்தாலும் அதன் அடிமைத்தளை அகற்றப்படவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு League of Oppressed, People என்ற சங்கத்தைத் தொடங்கினார். இவற்றின் கிளைகளை நிறுவுவதற்காகப் பர்மா, சயாம், சீனா, எகிப்து, அமெரிக்கா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1930-ஆம் ஆண்டில் செண்பகராமன் இந்திய வர்த்தகச்,சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றார். அந்தச் சமயத்தில் அவர், திருமதி காமா என்னும் வீராங்கனையின் மகளான லட்சுமிபாயைத் திருமணம் செய்துகொண்டார்.

வியட்நாம் நகரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் செண்பகராமன் கலந்துகொண்டார். அந்த மாநாட்டில் பங்கு பெற்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸூடன் செண்பகராமனுக்கு நெருக்கம் ஏற்பட்டது.

நமது இந்திய நாட்டில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில், விடுதலைக்காக அறப்போர் நடைபெற்றது; என்றாலும், ஒரு சிலர் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர். அத்தகைய தீவிரவாதிகளுக்கு, செண்பகராமன் ஜெர்மனியிலிருந்தவாறே ஆயுத உதவிகளைச் செய்தார்

இந்திய ஆதரவு சர்வதேசச் சங்கத்தின் உறுப்பினர்களையும் ஆங்காங்கே, சிதறிக் கிடந்த இந்தியர்களையும் ஒன்று திரட்டி 'இந்தியன் நேஷனல் வாலண்டியர் கோர்ப்ஸ்' என்ற படை உருவாக்கப்பட்டது. இந்தப் படை, ஜெர்மன் அரசின் உதவியுடன் இந்தியாவை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற உடன்பாடு கெய்ஸரால் உருவாக்கப்பட்டது.

1914-ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் தொடங்கியது. பிரிட்டனுக்கும் ஜெர்மனுக்கும் இடையே கடும்போர் நடந்தது.

செப்டம்பர் 24-ஆம் நாள், புகழ்பெற்ற எம்டன் என்னும் நீர்முழ்கிக் கப்பல் சென்னைக்கு வந்து, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைத் தாக்கிச் சென்று, ஆங்கில அரசைக் கதி கலங்கச் செய்தது. மாவீரன் செண்பகராமன்தான் அந்தக் கப்பலை இயக்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. சூயஸ் கால்வாயில் நின்று கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல்கள் பல்வற்றை நிர்மூலமாக்கிவிட்டே அவர் சென்னைக்கு வந்தார்.

சென்னையில் தாக்குதல் நடத்திய செண்பகராமன் அடுத்து புதுச்சேரி சென்றார். அங்கே, ஏற்கெனவே கிடைத்த தகவலின்படி, துறைமுகத்தில் காத்துக் கொண்டிருந்த சுத்தானந்த பாரதியைச் சந்தித்து, அவரிடம் கைப்பெட்டி ஒன்றைக் கொடுத்து, சுப்பிரமணிய சிவாவிடம் சேர்க்கும்படி தெரிவித்து 'ஜெய்ஹிந்த்' என்று முழக்கமிட்டார். பின்னர் சிங்கப்பூர் சென்றார். துணிச்சல்மிக்க இந்தக் காரியங்களை அவர் ஆற்றும்போது அவருக்கு வயது 23 தான்.

> சென்னை பொது மருத்துவமனையின் சிறுநீரக மருத்துவத் துறைக்காக ரூ.2 கோடி செலவில் ''லித்தோ டிரிப்டர்'' என்னும் நவீன கருவியும் ரூ.1 கோடி செலவில் ஒரு ஸ்கான் கருவியும் வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தத் தொகை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ்.முத்துசாமி அவர்கள் 16.9.91 அன்று அறிவித்தார்.

பண்டித ஜவகர்லால் நேரு, மோதிலால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், தாதாபாய் நௌரோஜி ஆகியோர் செண்பகராமனின் ஜெர்மன் இல்லத்தில் விருந்தினராகத் தங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ரஷ்யப் புரட்சியை உருவாக்கிய மாவீரன் லெனின் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

காபூலில் செண்பகராமன், முதல் சுதந்திர அரசை அமைத்த போது லெனின் அதற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

செண்பகராமன் 26.5.1934-இல் ஜெர்மனியில் மறைந்தார். அவர் மறைவதற்கு முன் தன் மனைவி லட்சுமிபாயைத் தன்னருகில் அழைத்து, தனது இறுதி இலட்சியத்தை எடுத்துரைத்தார்:

'இந்திய நாட்டின் விடுதலையைக் காணாமலே என் ஆவி பிரியப் போகிறது. நான் இறந்த பின்னர் எனது சாம்பலைப் பாதுகாத்து வைத்து எனது பிறந்த நாட்டுக்கு எடுத்துச் சென்று, ஒரு பகுதி சாம்பலை என் அன்னையின் சாம்பல் சங்கமமான கரமனை ஆற்றில் கரைத்துவிடவும். மறு பகுதியை நாஞ்சில் நாட்டின் வளமிக்க வயல்களில் தூவிவிடவும். அது மட்டுமல்ல, பிரிட்டிஷ் அரசை நான் எதிர்த்துப் போராடியது போலவே, எனது மறைவிற்குப் பின்னர் நீயும் போராட்டத்தைத் தொடரவேண்டும்.'

கணவரின் வேண்டுகோளை நிறைவேற்ற ஒப்புக் கொண்டார் லட்சுமிபாய்.




### அட்டைப்பட விளக்கம்...

முதல் அட்டை:

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, அவரது திருவுருவப் படம் முகப்பை அலங்கரிக்கிறது.

இரண்டாம் அட்டை:

தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்விழா நிகழ்ச்சிகள்.

கடைசிப் பக்க அட்டை:

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா நிகழ்ச்சிகள்.

தமிழ் வளர்த்த பெரியார்:

# நாடகத்தந்தை பம்மல் சம்பந்தனார்

**நா**டகத் தந்தை என்று நாட்டோரால் போற்றிப் புகழப்படும் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள், தமிழ் நாடகத்திற்குப் புத்துயிர் ஊட்டி புதுமைகள் சேர்த்தவராவார்.

சம்பந்தனார் 1.2.1873 அன்று சென்னையில் பிறந்தார். பெற்றோர் விஜயரங்க முதலியார், மாணிக்கம்மாள்.

சம்பந்தனாரின் முன்னோர்கள் சென்னைக்கு அருகில் உள்ள பம்மல் என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆனால், இவரது தந்தையார் சென்னையில் பணி புரிந்ததால், அங்கேயே சொந்த வீடு ஒன்றைக் கட்டிக் கொண்டார். எண்.70, ஆச்சாரப்பன் தெருவில் உள்ள அந்தப் பழமையான வீட்டில் அவரது பேரப் பிள்ளைகள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

முதலில் சம்பந்தனார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தன் படிப்பைத் தொடங்கினார். 1880-இல் தமது ஏழாம் வயதில் சென்னை பிராட்வேயிலுள்ள இந்து புரொபஷன் பள்ளியில் சேர்ந்தார். 1882-இல் கீழ்ப்பாக்கத்திலிருந்த கோவிந்த நாயுடு பிரைமரி பள்ளியில் படித்தார். 1885-இல் இந்தப் பள்ளியின் இறுதி வகுப்பில் முதல்வராகத் தேறி, தங்கப்பதக்கம் பெற்றார்.



1887-இல் மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறினார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப்



பாடத்தில் முதலாவதாக வந்து 'நார்த்ஸிக்' விருதைப் பெற்றார்.

சட்டக் கல்லூரியில் சேர்ந்து, 1896-இல் தேர்வில் வெற்றிபெற்று, சுந்தரம் சாஸ்திரியார் என்னும் வழக்குரைஞரிடம் பயிற்சி பெற்றார்.

இவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, பொம்மலாட்ட நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அப்போது இரு வெள்ளையர் நன்றாகக் குடித்துவிட்டு கலாட்டா செய்தனர். அதில் ஒருவன் மண்டை உடைந்தது. சிறுவனான சம்பந்தத்தின் மனத்தில் இந்நிகழ்ச்சி ஆழப் பதிந்தது. குடியினால் வரும் தீமையை உணர்ந்தார். அன்றையிலிருந்து குடியை வெறுத்தார். பிற்காலத்தில் மதுவை எதிர்த்து நாடகம் எழுதுவதற்கு அந்த நிகழ்ச்சி அடித்தளமாக அமைந்தது.

சின்னஞ்சிறு வயதிலேயே இவருக்குத் தெய்வபக்தி உண்டு. இவர் விளையாடும் பொம்மைகூட கடவுள் திருவுருவங்களாகவே இருந்தன. இவர் தந்தையார் மிகவும் கண்டிப்பானவர். குழந்தைகள் நல்ல பழக்கவழக்கங்களுடன் வளரவேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவரே ஒரு முன் மாதிரியாகவும் விளங்கினார். இதை 'என் சுய சரிதை' என்னும் நூலில் சம்பந்தனாரே கூறக்கேட்டோம்:

''என் தகப்பனார் எங்களை மிகவும் கண்டிப்பான முறையில் வளர்த்து வந்ததற்குச் சில உதாரணங்களைக் கூறுகிறேன். தினம் காலை மாலைகளில் இத்தனை மணிநேரம் படிக்க வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளை. அதன்படி படித்து விட்டோமானால் மற்ற வேளைகளிளெல்லாம் நாங்கள் இஷ்டப் படி விளையாடலாம். விடுமுறை தினங்களில் கட்டாயமாய் விளையாட வேண்டும். அதற்காக எங்களுக்கெல்லாம் கோலி, பம்பரம் முதலிய விளையாட்டுக் கருவிகளைத் தானே வாங்கிக் கொடுப்பதுமின்றி, தன் வயதையும் பாராமல் எங்களுடன் எங்கள் விளையாட்டுக்களில் கலந்து கொள்வார்.

'இன்னொரு உதாரணத்தை இங்கு எழுதுகிறேன். நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்தபோது, என் பால்ய சிநேகிதரான வி.வி.ஸ்ரீனிவாச ஐயங்கார் என்னை அடிக்கடி பார்க்க வருவார். அச்சமயங்களில் நான் மேல் மாடியில் படித்துக் கொண்டு இருந்தால், அவரைக் கீழேயே நிறுத்தி 'சம்பந்தம் படித்துக் கொண்டு இருக்கிறான் 4 மணி வரையில் அவன் படிக்க வேண்டிய காலம்' என்று சொல்லி, அதுவரையில் அவருடன் பேசிக் கொண்டிருந்து, நான்கு அடித்தவுடன் அவரை மெத்தைக்கு அழைத்து வந்து என்னிடம் விட்டு நாங்கள் பேசுவதற்குத் தடையாயிருக்கலாகாதென்று கீழே போய்விடுவார்!'

சம்பந்தனார் வழக்குரைஞர் வேலையில் இருந்தபோது நிறைய சம்பாதித்தார். என்றாலும், அவருக்கு அத்தொழிலில் மிகுந்த ஈடுபாடு ஏற்படவில்லை. அவர் மனமெல்லாம் தமிழ் நாடகங்கள் எழுத வேண்டும், அவற்றில் நடிக்க வேண்டும் என்பதிலேயே இருந்து வந்தது.

இவர் தம் ஓய்வு நேரங்களில் சட்டப் புத்தகங்களைப் படிக்கவில்லை. 'சுகுண விலாச சபை' வளர்ச்சிக்காக உழைப்பதிலேயே நேரத்தைச் செலவழித்தார்.

சுமார் 25 ஆண்டுகள் இவர் வழக்குரைஞராகப் பணியாற்றி இருக்கிறார். அந்தச் சமயத்தில் எல்லாம் இவர் தனக்குத்தானே நிபந்தனை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். கட்சிக்காரர்கள் இவரிடம் வந்தால், அந்த வழக்குகளின் தன்மையை நன்கு ஆராய்ந்த பிறகே அவற்றை ஏற்றுக் கொள்வார். வருகிற வழக்கு பொய்யானது, தவறானது, நியாயமற்றது என்று இவர் மனதுக்குப்பட்டால், அவற்றைத் தயவு தாட்சண்யமின்றி ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுவார். 'சம்பந்தம் சாதாரணமாக தப்பான கேசுகளை எடுத்துக் கொள்ளமாட்டார்' என்ற பெயரே நிலைத்து வந்தது. 'குறுக்குக் கேள்விகள் கேட்பதில் வல்லவர்' என்று மற்றவர்களால் புகழ்பெற்ற சம்பந்தனார், 'சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல்' அமைந்து அவர்தம் வக்கீல் தொழிலை நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது!'

சம்பந்தனார் தமது 51-வது வயதில் ஸ்மால்காஸ்கோர்ட் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் கடமையில் கண்ணுங்கருத்தாய் இருந்தார். முதல் நாள் இரவு தன் மனைவி இறந்தநிலையல மறுநாள் அவரை அடக்கம் செய்துவிட்டு, நீதிமன்றத்துக்குப் போய் இருக்கிறார் சம்பந்தனார்! நீதிமன்றத்தில் பலர் கடிந்து கொண்டும், அவர்களுக்கு அவர் சாந்தமாக, 'இன்றைக்கு என் கோர்ட்டில் வாதிப் பிரதிவாதிகளும், சாட்சிகளும் சேர்த்து சுமார் நூறு பெயர்களிருக்கலாம். இத்தனைப் பெயர்களையும் மற்றொரு நாள் வரும்படியான கஷ்டத்திற்கு நான் அவர்களை உள்ளாக்கக் கூடாதென்று தீர்மானித்து வந்தேன் இங்கு...' என்று பதில் சொன்னாராம்.

1928-ஆம் ஆண்டு சம்பந்தனார் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெறுவதற்கு முன்பாகவே, வாழ்நாட்களை எப்படிக் கழிப்பது? என்று தினசரி அலுவல்களைப் பட்டியல் போட்டுக் கொண்டாராம் அவர். அந்தச் சமயம் ஒரு பத்திரிகை நிருபர். இவரை அணுகி, 'இனி உங்கள் காலத்தை எப்படிக் கழிக்கப் போகிறீர்கள்? என்று கேட்டபோது, 'கடவுள் எனக்கு இனி அருளும் ஆயுட்காலத்தையெல்லாம் தமிழ் நாடகத்திற்காகவும், தமிழ் மொழிக்காகவும் தொண்டு செய்யத் தீர்மானித்திருக்கிறேன்' என்றாராம். அன்று முதல் அவர் இறுதிக்காலம் வரையிலும் தமிழ் நாடக உலகிற்குத் தொண்டாற்றினார்.

**தமிழ் நாடகங்கள் தரமாகவும் திறமாகவும் நடத்தப்படுவதற்கு ஏற்ப, சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்த நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனாரின் வாழ்க்கைச் சித்திரம் இங்கே வெளியிடப் படுகிறது.**

தொடக்கத்தில் சம்பந்தனாருக்குத் தமிழ் நாடகங்கள் மீது அளவற்ற வெறுப்பே இருந்து வந்தது. இந்த வெறுப்பு நாளடைவில் மாறி, தமிழ் நாடகங்களை எழுத வேண்டும் என்னும் அளவுக்கு ஆர்வம் பிறக்கக் காரணமாயிருந்தது ஒரு நிகழ்ச்சியாகும்.

இவருக்குப் பதினெட்டு வயதானபோது, அதாவது 1891-ஆம் ஆண்டில் பல்லாரியிலிருந்து, கிருஷ்ணமாசார்லு என்பவர் 'சரச விநோதினி சபா' என்னும் தனது நாடகக் கம்பெனியுடன் சென்னைக்கு வந்திருந்தார். சென்னை மூர்மார்க்கெட்டில் உள்ள விக்டோரியா பப்ளிக் ஹாலில் (வி.பி. ஹால் - அது இன்றும் உள்ளது) நான்கைந்து தெலுங்கு நாடகங்களை நடத்தினார்.

அப்போது நாடக சபைகள் பெருமளவில் இல்லாத சமயம். சென்னைக் கொத்தவால் சாவடிப் பகுதியில் எப்போதோ தெருக்கூத்து நடக்குமாம். செங்காங்கடையில் ஒரு ஓட்டுக் கொட்டகையில் தமிழில் புராண நாடகங்கள் நடக்குமாம். சுப்பையாச்சாரி என்பவர் ஹரிச்சந்திர நாடகம் நடத்துவாராம். ஹரிச்சந்திரனாக நடிப்பதில் தனக்கு இணையானவர் எவருமில்லை என்று கூறுவாராம் இவர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கிருஷ்ணமாசார்லு நாடகம் சென்னையில் நடந்தது. நாடகத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சம்பந்தனாருக்குக் கொள்ளை ஆசை. அந்தச் சமயம் பார்த்து, இவரது தந்தையாருடைய நண்பர் ஒருவர், அந்த கிருஷ்ணமாசார்லுவையே இவரது இல்லத்துக்கு அழைத்து வந்தது, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று இவருக்கு.

வி.பி. ஹாலில் அன்று இரவு 'கிரகாரி' என்னும் நாடகம் நடக்க இருப்பதாகவும், அதற்கு வரும்படியும் இவரது தந்தையாரை அழைத்தார் அவர். அதற்குச் சம்மதித்த இவரது தந்தையார் சம்பந்தனாரையும் அழைத்து 'நாடகத்துக்கு வர விருப்பமா?' என்று கேட்டாராம். கரும்பு தின்னக் கூலியா என்ன? மகிழ்ச்சியுடன் சம்பந்தனார் வர ஒப்புக் கொள்ளவே அன்று இரவு நாடகம் காணப்புறப்பட்டார்.

இந்த நாடகம் எப்படி இருந்தது?

அதைச் சம்பந்தனாரே கூறக் கேட்போம்-

''ஹாலில் நுழைந்தது முதல் நாடகம் முடியும் வரையில், சற்றேறக் குறைய 5 மணி நேரமானபோதிலும், நாடக மேடையை விட்டு என் கண்களை எடுத்தவனன்று. அரங்கத்

தின் முன்பாகக் கட்டப்பட்டிருந்த திரையானது மேலே சென்றது முதல், கடைசியில் நாடகம் முற்றியபொழுது, அது மறுபடியும் விடப்பட்டது வரையிலும் நான் கண்ட காட்சிகள் பெரும்பாலும் என் ஞாபகத்தில் இன்றும் மறையாதபடி இருக்கின்றன.'

நாடகத்தைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்துக்கூட அவருக்குத் தூக்கம் வரவில்லை. நாடகக் காட்சிகள் அவர் மனத்திரையில் மீண்டும் மீண்டும் தோன்றின. ஆம். அவர், விடியும் வரை தூங்கவே இல்லை!

அன்ற இரவே அவர் மனத்தில் ஒரு உறுதி பிறந்தது.

கிருஷ்ணமாசார்லுபோல, தாமும் தமிழில் ஒரு நாடக சபை ஏற்படுத்தி, அதில் தான் நடிக்க வேண்டும் என்பதே அந்த உறுதிமொழி.

அந்த உறுதிமொழி நிறைவேறிய நன்னாளும் வந்தது.

'எனது ஆயுளில் 1891-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி ஒரு முக்கியமான தினமாம். அதற்குக் காரணம், நான் தமிழ் நாடகங்கள் எழுதுவதற்கும் நடிப்பதற்கும் இன்றியமையாத முக்கிய காரணமாயிருந்த 'சுகுண விலாச சபை'யானது அத்தேதியில் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டதேயாம்', என்று சம்பந்தனாரே மிக்க மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

பழைய புராண இதிகாச நாடகங்களையே திரும்பத்திரும்ப நடத்துவதை விட, புதிய புதிய நாடகங்கள் மேடைக்கு வரவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். புதிய தமிழ் நாடகங்கள் அரங்கேற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

அந்தக் காலத்தில் நாடகத்தை நடத்திய விதம் சம்பந்தனாருக்கு அறவே பிடிக்கவில்லை. காலம் தாழ்த்தி நாடகத்தைத் தொடங்குவது, அரைத்த மாவையே அரைப்பது, பின்பாட்டுப் பாடுவது, பக்க வாத்தியத்துடன் தாளம் போடுவது இவையெல்லாம் சம்பந்தனாருக்குப் பிடிக்கவில்லை. காலத்துக்கேற்ப புதிய முறைகளைப் புகுத்த அவர் எண்ணினார். நாடகத்தில் ஆபாசக் காட்சிகள் வருவதையும் வெறுத்தார், எதிர்த்தார். தம்முடைய புதுமைக் கருத்துக்



நாடகம் ஒன்றில் சம்பந்தனார் இப்படித் தோன்றுகிறார்.

களை நண்பர்களிடம் கூறியபோது சிலர் வரவேற்றார்கள்; சிலர் எதிர்த்தார்கள்.

அன்று நடந்த நாடகங்கள் பெரும்பாலும் பழைய வழக்கப்படியே எழுதப்பட்டிருந்தன.

குறை சொன்னால்தான் யாருக்கும் பிடிக்காதே! 'உனக்கு எப்போதும் குறை சொல்வதே வழக்கமாய் போயிற்று! குறை இல்லாதபடி நீதான் ஒன்றை எழுதிக் கொடேன்!' என்று சம்பந்தனாரின் நண்பர்களும் அவரைக் கோபித்துக் கொண்டார்கள். சம்பந்தனாரும் தயங்காமல் 'சரி' என்று ஒப்புக் கொண்டாராம்.

அன்று இரவெல்லாம் சம்பந்தனாருக்கு அதே சிந்தனை.

தன் தந்தையார் யோசனைப்படி, அன்று மறுநாள் கோவிந்தசாமிராவ் நாடகக் கம்பெனியார் நடத்திய 'ஸ்திரீசாகசம்' என்னும் நாடகத்தைப் போய்ப் பார்த்தார். நாடகத்தின் போக்கு அவருக்குப் பிடிக்கவில்லை. கதை ஆரம்பமாவதற்கு முன்பு பாட்டுப் பாடுவது, இஷ்ட தேவதைகள் துதி, தாளத்துடன் பாட்டுப்பாடுவது முதலான காட்சிகள் அவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்றாலும் நண்பர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டாமா?

சம்பந்தனார் தாம் பார்த்த 'ஸ்திரீ சாகசம்' கதையை நாடகமாக எழுதினார். அதுதான் 'புஷ்பவல்லி' என்னும் பெயரில் நடத்தப்பட்ட நாடகமாகும். இதுவே சம்பந்தனாரின் முதல் நாடகமாகும். இதில் மந்திரி குமாரன் புத்திசேனன் பாத்திரத்தில் சம்பந்தனார் நடித்தார்.

'புஷ்பவல்லி' நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்பாகவே, இன்னொரு நாடகத்தையும் எழுதித் தரும்படித் தூண்டினார்கள் நண்பர்கள். அதன் விளைவாக 'சுந்தரி அல்லது மெய்க்காதல்' என்னும் நாடகத்தை எழுதினார்.

இந்த இரண்டு நாடகங்களும், 1893-ஆம் ஆண்டு, வி.பி.ஹாலில் நடந்தது.

இந்த இரண்டு நாடகங்களை நடித்த வரையில் இவர்கள் சபைக்குக் கிடைத்த மாதாந்திர வரும்படி எவ்வளவு தெரியுமா? 5½ ரூபாய் மட்டுமே! அதில் 'பிடில் வாசிப்பதற்கு மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? 5 ரூபாய்! நாற்காலி, மேசை முதலியவற்றைத் தூசி இல்லாமல் துடைத்து, விளக்கேற்றி வைத்த வேலைக்காரனுக்குக் கொடுத்தது ½ ரூபாய். வரவு செலவு சரியாகப் போயிற்று. இப்படி அந்தக் காலத்தில் நாடகம் நடத்த அரும்பாடு பட வேண்டியிருந்தது.

ஒத்திகை நடத்தவும் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருந்தது. அதற்கு இடம் தேடுவதே பிரச்சினையாக இருந்தது. ஒத்திகை நடக்கும்போது இருட்டிவிட்டால் மண்ணெண்ணெய் விளக்கு ஏற்றி வைப்பார்கள். சில நாள் சபா செயலாளர் வீட்டிலிருந்து எண்ணெய் கொடுத்தனுப்புவார். சில நாள் சம்பந்தனார் வீட்டிலிருந்து எண்ணெய் அனுப்பி வைப்பார்கள்.

'சுந்தரி' என்னும் நாடகத்திற்கு மட்டும் 53 ஒத்திகைகள் நடத்தப்பட்டிருக்கிறது. ஒத்திகைகள் ஆறு அல்லது ஏழு மணி வரை நடக்குமாம். முக்கியமாக, ஞாயிற்றுக் கிழமைகளில் ஒத்திகை நடக்கும்.

சித்திரை மாதக் கொளுத்தும் வெய்யிலில் பகல் ஒரு மணிக்கு, தமது வீட்டிலிருந்து ஒரு தகரப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஒத்திகை நடக்கும் இடத்திற்கு நடந்து போவாராம் சம்பந்தனார். அந்தத் தகரப் பெட்டியில்தான், தமிழ்



நாடகத்தந்தையின் உரையாடல்கள் இருந்தன!

பம்மல் சம்பந்த முதலியார், மூன்றாவதாக எழுதிய நாடகத்தின் பெயர் 'லீலாவதி-சுலோசனா' என்பதாகும். இதுவே இவர் எழுதிய நாடகங்களிலெல்லாம் மிகச் சிறந்தது என்று இவரது பால்ய நண்பர் நீதிபதி சீனிவாச ஐயங்கார் கருத்து கூறியுள்ளார். இவர் நாடகங்களை விமர்சிப்பதில் வல்லவர். இவரைப் பலவகைகளிலும் குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார் சம்பந்தனார்.

'லீலாவதி-சுலோசனா' 336 முறை நடத்தப்பட்டிருக்கிறது. இன்று 50 தடவை நடந்தாலேயே பெரிய விழாவாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் ஒரு நாடகம் இத்தனைத் தடவை நடந்திருக்கிறதென்றால், அது இமாலயச் சாதனையாகும்.

இந்த நாடகத்திற்கு இன்னொரு சிறப்பும் உண்டு. இதுதான், முதல் முதல் அச்சு ஏறிய நாடகமாகும். இதனை அச்சிடத் தூண்டியவரும் சீனிவாச ஐயங்கார் அவர்களே யாவார். 1895-இல் நூலாக வெளிவந்தது. அப்போது சம்பந்தனாருக்கு வயது 22.

இந்த நூலை வெளியிடுவதற்கு முன்பு, பல தமிழறிஞர்களிடம் இதைக் கொடுத்து, சாற்றுக்கவிகள் கேட்டிருந்தார். அவர்களும் மனமுவந்து வழங்கினார்கள். அவற்றையெல்லாம் நூலின் முதற்பதிப்பிலே சேர்த்து மகிழ்ந்தார் சம்பந்தனார். சாற்றுக்கவிகள் கொடுத்தவர்களுள் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் முக்கியமானவர்.

சம்பந்தனார், டாக்டர் உ.வே.சாமிநாதய்யரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதற்கு, அவரது சாற்றுக்கவியை நூலில் முதலாவதாக அமைத்துள்ளதே சான்றாகும்.

மேலும், இந்த நூலுக்கு, முதன் முதல் பி.ஏ. பட்டம் பெற்ற தமிழ் அறிஞர் திரு சி.வை. தாமோதரம் பிள்ளை. ஆசிரியர் திரு மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் ஆங்கிலத்தில் சான்றிதழ் வழங்கியுள்ளனர். இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த திரு சீனிவாச ஐயங்கார். இந்நூலுக்கு முகவுரைவழங்கிச் சிறப்பித்தார்.

சம்பந்தனார் எழுதிய 'நாடக மேடை நினைவுகள்' முதற்பாகம் 1932-இல் வெளிவந்தது. தொடர்ந்து ஆறு பாகங்களாக இது வெளிவந்தது. இவற்றின் மூலம் சம்பந்தனாரின் நாடக அனுபவங்களைத் தெள்ளத் தெளிவாக நாம் தெரிந்து கொள்கிறோம்.

இந்த நாடகம் 1893-இல் வி.பி. ஹாலில் நடந்தது. இரவு 9 மணிக்கு ஆரம்பமான இந்த நாடகம் அதிகாலை 3.30 மணிக்கு முடிந்தது. ஒரு விந்தை! அதாவது ஆறரை மணிநேரம் இந்நாடகம் நடந்தும், ஒருவர் கூட எழுந்து போகாததேயாகும்.

இந்நாடகத்தில், சம்பந்தனாரும் நடித்தார், பாட்டிப்பாடி.

சம்பந்தனார் நாடகங்களை எப்படி எழுதுவார்?

நாற்பது ஆண்டுகளாக, நாடகங்களையெல்லாம் பென்சிலைக் கொண்டே எழுதி வந்தார். இந்த வழக்கம் கடைசி வரை இருந்து வந்தது.

சம்பந்தனார், நாடகம் எழுதுவதற்கு முன்பு, எழுதவேண்டிய வசனத்தை நன்றாக மனப்பாடம் செய்து கொள்வார். பிறகு எழுத உட்காருவார். அவ்வாறு மனப்பாடம் செய்ததை எழுதி முடித்து விட்டால், மறுபடியும் எழுந்து அதற்குமேல் எழுதவேண்டியவற்றை மனப்பாடம் செய்ய, உலவிக் கொண்டே இருப்பார்.

இப்படி எழுத ஆரம்பிக்கும் போது, கை தடையின்றித் தாராளமாகப்போகும் என்கிறார் அவர். இதற்குப்பென்சிலினால் எழுதுவதே அவருக்கு இலகுவாக இருந்ததாம்.

இவ்வாறு தொடர்ந்து பல நாடகங்களை எழுதிக் கொண்டே இருந்தார். சம்பந்தனார் எழுதிய நூல்கள் மொத்தம் 99. இவற்றுள் நாடக நூல்களே மிகுதியாகும்.

சம்பந்தனார் படைப்பாளி மட்டுமல்ல, சிறந்த நடிகருங்கூட. அவரே பல நாடகங்களில் நடித்திருக்கிறார்.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தமிழ் நாடகம் கீழ்நிலையில் இருந்தது. அதைக் கைத்தூக்கி விட்டவர் சம்பந்தனார். 'கூத்தாடிகள்' என்று இழிவாகப் பேசியோரின் வாயை அடைத்து, நடிகர்களை 'நாடகக் கலைஞர்கள்' என்று அழைத்துப் பெருமைப்படுத்தியவர் சம்பந்தனார்.

1924-இல் 'ஸ்மால்காஸ்கோர்ட் நீதிபதியானார். 1900-இல் சென்னைக் கபாலீஸ்வரர் கோயில் அறங்காவலராக இருந்து அரும் பணிகள் ஆற்றினார். சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் செனட் உறுப்பினராக இருந்தார். திரைப்படத் தணிக்கைக் குழுவிலும் ஓர் உறுப்பினராகவும் இருந்திருக்கிறார்.

1916-இல் இவருக்குப் பிரிட்டிஷ் அரசு, ராவ்சாகிப் பட்டம் வழங்கியது. 1951-இல், பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது.

பம்மல் சம்பந்தனாரின் மகன் திரு ப. வரதராஜ் அவர்களை அண்மையில் சந்தித்தபோது (திரு ப.வரதராஜ் 24.4.1991 அன்று காலமானார்) அவர் கூறினார்-

'என் தந்தையார் அவர்களுக்கு, மேடை நாடகங்களிலெல்லாம் நான் உதவியாக இருந்திருக்கிறேன். சில நாடகங்களில் நடித்துமிருக்கிறேன்.

'என் தந்தையார், ஷேக்ஸ்பியர் நாடகங்களை நிறைய படித்துள்ளார். இவர் நாடகம் எழுதுவதற்கு இவை தூண்டுகோலாக இருந்திருக்கின்றன. அவர் இறுதிக்காலம் வரையிலும் எழுதிக் கொண்டே இருந்தார். அவரது சிந்தனையெல்லாம் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டுவதாகவே இருந்தது.'

சம்பந்தனார் திரைப்பட உலகிலும் நுழைந்தார். லீலாவதி சுலோசனா, சதி சுலோசனா ஆகிய திரைப்படங்களை இவர் இயக்கியும் உள்ளார். மனோகராவும் படமாக வந்தது. அதில் புருசோத்தமனாக நடித்தார், இவர். இவரது வேதாள உலகம், ரத்னாவளி ஆகிய நாடகங்களும் திரைப்படங்களாக வெளிவந்துள்ளன.

தமிழ் நாடக உலகின் தந்தையாக இருந்து, விந்தைகள் பலபுரிந்த வித்தகர் பம்மல் சம்பந்தனார் அவர்கள், 25.9.1964 அன்று இயற்கை எய்தினார். தமிழ் நாடக உலகம் இருக்கிற வரை அவரது நினைவும் நீக்கமற நிறைந்திருக்கும்.

பி. [illegible] கிரி

# அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்

(இரு) பெருமாள்புரம்

தொலைபேசி எண் கன்னியாகுமரி: 241

புதிதாக அமைக்கப்படும் தங்கள் இல்லங்களுக்கு தேவையான உறுதியான நிலை ஜன்னல்கள் உங்கள் இல்லத்தை அழகுபடுத்தும் தரமான பர்னிச்சர்கள் மற்றும் இரும்புச்சாதனங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள், அலுவலகங்களுக்குத்தேவையான மர பர்னிச்சர்கள் மற்றும்இரும்புச் சாதனங்கள் ஆகியவற்றிற்கு குமரி மாவட்டத்தில் புகழ் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

அழகப்பபுரத்திலிருக்கும் எமது

கருமார் தச்சுத்தொழிற்கூடமே!

குறைந்த விலை!

குறித்த நேர விநியோகம்!

உங்கள் நிறைவே எமது குறிக்கோள்!

உகந்த தரம்!

விவரங்களுக்கு அணுகுங்கள்:

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்கள்
அகஸ்தீஸ்வரம் (இரு) பெருமாள்புரம்
கன்னியாகுமரி மாவட்டம்

With Best Compliments From:

# THANJAVUR TEXTILES LIMITED

**Regd Office:**

"Krishna Nivas"
28, Second Main Road
Gandhinagar
Adyar, MADRAS-600 020
Phone: 417340
Grams: GOODYARN
MILLS:
Vallam One Road
THANJAVUR-613005.
Phone: 22151, 22021,
22024, 22223
Telex: 0468-204 YARN IN

**Manufacturers of HIGH QUALITY YARN**
**COUNTS: 20s to 100s**
**(Hosiery & Warp)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927





# இந்த இதழில்...


ரட்சித்தலைவியின் 100 நாள் நிர்வாகம் புதிய தமிழகத்தின் விழிப்புணர்ச்சிப் பிரவாகம் ... 2

து விலக்கே நம் இலக்கு! மகாத்மா வழியே நமது வழி! -மாண்புமிகு முதல்வர் உரை ... 5

லயங்களைப் பராமரிக்க அறநிலையப் பணி சிறக்க அரிய திட்டங்கள் —மாண்புமிகு முதல்வர் உரை ... 9

7-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு —பேராசிரியர் க. பொன்னுசாமி —பேரவைத் துணைத் தலைவர் ... 14

நிலத்தின் மறுமலர்ச்சி மகத்தான தொழில் வளர்ச்சி —மாண்புமிகு முதல்வர் உரை ... 17

ரும்பு உற்பத்தி ... 21

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் எழுத்தறிவுத் திட்டம் ... 23

திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 24

மூளையை மாற்றி அமைத்தல் ... 27

வளர்ச்சிக்கு வழிகாட்டும் வணிகவரிச் சீரமைப்பு —மாண்புமிகு முதல்வர் உரை ... 33

தமிழகத்தில் வனமும், வன உயிரினமும் ... 38

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு தருக —மாண்புமிகு முதல்வர் உரை ... 41

காவல் துறை-தீயணைப்புத்துறை-மதுவிலக்கு ஆயத்தீர்வை: —மாண்புமிகு முதல்வர் அவர்களின் முக்கிய அறிவிப்பு ... 45





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:22 இதழ்:8

16-10-1991

162342



# புரட்சித்தலைவியின் நூறுநாள் நிர்வாகம் புதிய தமிழகத்தின் விழிப்புணர்ச்சிப் பிரவாகம்!

இந்தியாவின் முதல் தர மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கும் ஒப்பற்ற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாள் 1991 - ஜூன் திங்கள் 24-ந்தேதி. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எதிர்ப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஈடுகொடுத்து வெற்றிகரமான 100 நாட்களைக் கடந்து தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றார்.

ஏழை எளியோர் வாழ்க்கை வளம் பெற, சரித்திரம் படைக்கும் சாதனைத் தலைவியின் எண்ணத்தில் உதித்து, செயல்வடிவம் பெற்றுவரும் பணிகள், அனைத்துத் துறைகளிலும் தொடர்கின்றன.

- அரசுக்கு ரூ.322 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்ற போதிலும் தாய்மார்களின் விழி நீரைத் துடைக்கும் நோக்கத்துடன் மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்டன.
- 6 மாதத்திலிருந்து 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு.
- ரூ.5 கோடி செலவில் பால்வள மேம்பாட்டுத்திட்டம்.
- குடிநீர் ஆதாரம் எதுவும் இல்லாது இருக்கும் 2483 குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் ரூ.10 கோடி செலவில் குடிநீர் வசதி. இதுவரை குடிநீர் வசதியே செய்து தரப்படாத 1007 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.7 கோடி செலவில் தனித் திட்டம்.
- படித்து வேலையில்லாமல் இருக்கும் 1 லட்சத்து 50 ஆயிரம் இளைஞர்களைப் பயன்படுத்தி 15 லட்சம் பேருக்கு கல்வியறிவு வழங்கும் திட்டம்.
- தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் ஆதிதிராவிடர் வகுப்பில் 1000 தொழில் முனைவோர் உருவாக்கப்பட உதவித் தொகை மற்றும் தொடக்க உதவித் தொகை ரூ.4 கோடி.
- நகர்ப்புறங்களில் உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர், நடுத்தர வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு 10 ஆயிரம் வீடுகள் கட்ட ரூ.65 கோடி கடன் உதவி.
- கிராமப்புற வீட்டுவசித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.30 கோடி செலவில் 30 ஆயிரம் வீடுகள்.
- வரும் 5 ஆண்டுகளில் ஆதிதிராவிடர்களுக்கு 3 லட்சம் கான்கிரீட் வீடுகள். இந்த ஆண்டில் மட்டும் 50,000 வீடுகள்.
- நலிந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.40 கோடி முதலீட்டில் ஒரு லட்சம் வீடுகள்.





- சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவமனைக்கு ஸ்கேனர் கருவி வழங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.
- ஆண்டுக்கு ரூ.5 செலுத்தி அறுவை சிகிச்சைக்காக ரூ.25,000 வரை மான்ய உதவி பெறும் வகையில் அரசு ஊழியர்கள் நல்வாழ்வு நிதி.
- சென்னை தரமணியில் ரூ.25 கோடி செலவில் நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம்.
- கிராமப் பகுதிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் ரூ.1 கோடி.
- தமிழ்நாட்டில் முதன்முறையாக மாநிலம் தழுவிய அளவில் அனைவரின் உடல் நலத்தையும் முழுமையாக பரிசோதிக்க மிகப்பிரம்மாண்டமான மருத்துவ முகாம். இத்திட்டத்தில் 4 கோடி மக்கள் பயன்பெறுவர்.
- சென்னை தரமணியில் உட்புற, வெளிப்புற படக்காட்சிகள் எடுப்பதற்குரிய சகல வசதிகளுடன் ரூ.70 இலட்சம் செலவில் திரைப்பட நகர்.
- ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு வீட்டு மனைகள், வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, பாசனக் கிணறுகள், தெருவிளக்கு போன்றவற்றிற்கு புதிய 10 அம்சத் திட்டம்.
- ரூ.42.30 கோடி செலவில் 50 ஆயிரம் கைத்தறிகளை 5 ஆண்டுகளில் நவீனமயமாக்க சிறப்புத் திட்டம்.
- நடப்பாண்டில் 3 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு இலவச மனைப்பட்டா, 5 ஆண்டுகளில் 50 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா.
- கருவுற்ற பெணகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு எட்டு மாத கால அளவிற்கு சத்துணவு மற்றும் சுகாதார உதவி.
- அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் மரணம் அடைந்தால் வழங்கப்படும் குடும்பப் பாதுகாப்பு ரூ.60 ஆயிரமாக உயர்வு.
- ரூ.1000 கோடி திட்டச் செலவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி இரண்டாவது செய்தித் தாள் காகிதத் தொழிற்சாலை நிறுவ புதியத் திட்டம்.
- தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் ரூ.600 கோடி மதிப்பீட்டில் 9 தொழில் திட்டங்கள்.
- ரூ.395 கோடி செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தற்போதைய ஆண்டு உற்பத்தித் திறனை இரட்டிப்பாக உயர்த்த நடவடிக்கை.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.400 கோடி செலவில் ரப்பர் தொழிற்சாலை.
- தமிழ்நாடு மின் அணுவியல் நிறுவனம் சார்பில் ரூ.40.65 கோடி செலவில் சோளிங்க நல்லூரில் மின் அணுவியல் நகரம்.
- குறைந்த செலவில் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ 2 லட்சம் வீதம் ஆதரவு உதவித் தொகை 45 திரைப்படங்களுக்கு வழங்க ரூ 90 லட்சம் ஒதுக்கீடு.





- ஆயத்த ஆடைகளும் கைத்தறி ஆடைகளும் தயாரிக்க செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டத்தில் உள்ள காக்கலூரில் தொழிற்பேட்டை.
- புதிய தொழிற்பேட்டைகள் / தொகுதிகள் அனைத்திலும் மகளிர் தொழில் முனைவோருக்கு 30 சதவிகித தொழிற்கூடங்கள் / மனைகள் ஒதுக்கீடு.
- தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளுக்குள் 5-ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி வழங்கும் திட்டம்.
- பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு வரை மகளிரை மட்டுமே ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை.
- மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சேர்ந்த கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயிலும் மாணவியர்க்கு ரூ.57 லட்சம் செலவில் புதிய விடுதிகள்.
- அண்ணாவின் இருமொழிக் கொள்கைதான் அரசின் கொள்கை. தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும்.

- ரூ.310 கோடியில் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும்.
- தமிழகத்தில் இருக்கும் கோவில்களைச் சீரமைத்துப் பராமரிக்க 'திருக்கோவில் நிர்வாக வாரியம்.'
- சென்னை நகரில் குடிசையில் வசிக்கும் மக்களுக்காக ரூ.100 கோடி செலவில் 45 ஆயிரம் வீடுகள்.
- 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற கொள்கையின்படி நடப்பு ஆண்டில் 1,22,000 வீடுகள் கட்டித் தர திட்டம். அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 10 லட்சம் வீடுகள் கட்டித்தர இலக்கு.
- தருமபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில் பெண்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.22.47 கோடி செலவில் கூட்டுறவு நூற்பு ஆலை.
- சிவகங்கையில் ரூ.15 கோடி செலவில் 'கிராபைட்' தொழிற்சாலை.



**காலம் கனிகிறது; தமிழகம் வளர்கிறது!**





# மதுவிலக்கே நம் இலக்கு!

# மகாத்மா வழியே நமது வழி!

## அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு முதல்வர் பேச்சு

அண்ணல் காந்தியடிகளின் 123-வது பிறந்தநாள் விழா, அரசு செய்தித் துறையின் சார்பில் மிகச் சிறப்பாக 2.10.91 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டது.

அன்று காலையில் காமராசர் சாலையில் உள்ள அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.பீஷ்ம நாராயணன் சிங், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி ஆர். முத்தையா மற்றும் தமிழக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்தார்கள்.

அதைத் தொடர்ந்து, 'நூற்பு வேள்வி' இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**கருத்தரங்கம்**

அன்று பிற்பகல் 3.30 மணியளவில், கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில்- 'மது, போதை மருந்துப் பழக்கமும் இளைஞர் சமுதாயமும்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்திற்குத் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்.

பேராசிரியர் எஸ். ஜெயப்பிரகாசம், திரு. டி.டி.திருமலை, காவல்துறை ஆணையர் திரு. ரா. ராஜகோபாலன், டாக்டர் இரா. பொன்னுதுரை ஆகியோர் அந்தக் கருத்தரங்கில் பங்கேற்று உரை நிகழ்த்தினார்.

**சிறப்புக் கூட்டம்:**

அன்று மாலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் மேதகு தமிழக ஆளுநரும் மாண்புமிகு தமிழக முதல்வரும், மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.ஆர். பட்டாபிராமன், திரு. வாழப்பாடி கே.இராமமூர்த்தி எம்.பி., மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற- சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு உயர் அதிகாரிகளும், ஏராளமான மாணவ மாணவிகளும் கலந்து கொண்டார்கள்.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி.வெங்கட்டராமன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். ''சமூக சீர்திருத்தத்தைத் தலையாய கடமையாகக் கொண்டு, கிராமமக்கள் வாழ்வு வளம் பெற்றாலொழிய பூரண சுயாட்சி பெற்றதாகாது என்று பாடுபட்டவர் காந்தியடிகள்; தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்து நூறு நாட்கள் ஆனநிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் காந்தியார் கனவை நனவாக்கும் வகையிலேயே பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்'' என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

இதன்பின், மேதகு ஆளுநர் அவர்கள்- காந்தியடிகள் பிறந்த நாளில் உண்மை, அகிம்சை பற்றிய உறுதிமொழி படிக்க- அதைச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. க.கணேசன் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார். விழாவுக்கு வருகை தந்திருந்தோரனைவரும் அதை அப்படியே திரும்பச் சொன்னார்கள்.

**சிறப்புரைகள்:**

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி.ஆர்.பட்டாபிராமன் அவர்கள் தமது சிறப்புரையில்- தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் இந்தியர்களுக்காகப் போராடிய போது பட்ட இன்னல்களை விவரித்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த அவர் குணநலன்களைப் புகழ்ந்தார். ''மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட காந்தி அடிகளுக்கு ஒரு திறம்மிக்க பெண்மணியின் தலைமையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானதும் சிறப்புக்குரியதுமாகும்'' எனப் பாராட்டினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. வாழப்பாடி கே. இராமமூர்த்தி எம்.பி. அவர்கள் தம்முடைய சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''ஆட்சி அமைத்து நூறுநாட்கள் கண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தமிழக மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன். இதுபோல் மேலும் பல நூறு நாட்களைக் காண வேண்டும் என வாழ்த்துகிறேன். இதற்கெல்லாம் காரணம்- காந்தியடிகளின் கட்டளைக்கிணங்க இன்று தமிழ்நாட்டில் மதுக்கடைகள் மூடப்பட்டு, தாய்மார்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்; வன்முறை தவிர்ப்பதே நன்முறை என்று காந்தியடிகள் பெரிதும் பாடுபட்டார்; அதற்காகத் தமிழக முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். காந்தியாரின் கொள்கைகள், தமிழக அரசில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எதற்கானாலும் சரி, சத்தியத்தின் அடிப்படையில் போராட வேண்டும் என்று காந்தியார் சொன்னார்; தமிழக முதல்வர் அவர்களே, அப்படிப்பட்ட போராட்டத்தை முன் நின்று நடத்துங்கள்- உங்கள் பின்னாலே தமிழகம் இருக்கிறது.''

மாண்புமிகு தமிழ்நாடு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் தனது சிறப்புரையில்- காந்தியடிகள் பல இன்னல்களை ஏற்ற பிறகே சுதந்திரம் கிடைத்தது என்றும் அதே போல நாட்டுமக்கள் நலன்கருதிப் பல துன்பங்களை ஏற்ற பிறகே புரட்சித்தலைவி அவர்கள் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இலட்சியப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்றும் தெரிவித்து, ''அன்றைக்குக் காந்தியார்- இன்றைக்குப் புரட்சித்தலைவி'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

**விழா மேடையில்...**

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா நடத்தப்பட்ட காந்தி மண்டபத்தின் விழா மேடையில் காந்தியடிகள்- அவர் துணைவியார் கஸ்தூரிபா இருவரின் முழு உருவங்களும் வைக்கப்பட்டிருந்தன. மேடையின் முன்புறம் வைக்கப்பட்டிருந்த காந்தியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

விழா மண்டபம் முழுவதும், வண்ணப் பூச்சரங்கள் வனப்புறக் கட்டப்பட்டிருந்தன.

மண்டபத்தின் உள்ளும் புறமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள்.

**முதல்வர் உரை**

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

'மகாத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலக சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர், இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக்கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல். சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர், காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக்கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர். வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னலமற்ற வழியில், பொதுநலச் சேவைக்காகச் சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

**★ அகிம்சையும் உண்மையும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் ஏற்பட்டவையன்று. மனித இனம் அனைத்துமே அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவையாகும். என் சொந்த அனுபவத்தைக் கொண்டே நான் இதைக் கூறுகிறேன். இதுபோலவே, தன்னடக்கம் என்பதும், ஒரு சில மகாத்மாக்களுக்கு மட்டும் ஏற்பட்டதன்று; மனித இனம் அனைத்திற்குமே ஏற்பட்டதாகும்.**

**—அண்ணல் காந்தியடிகள்**

'சத்தியாக்கிரகம்' என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண்பாடல்ல, அது உண்மைக்கும் - பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் - கெட்டவைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம், என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒப்பற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழிமுறைகளையும் வகுத்துச் சொன்னார் அவர். எனவேதான் 'The first and foremost indigenous Social Scientist of India' என்று அவர் அழைக்கப்பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமன்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண்ணங்களிலும் மூலப்பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது.

'சத்தியம்', 'உண்மை' என்ற மாபெரும் தத்துவம் அவரது எண்ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணிகளுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடிகளைப் போன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண்மையாகும்.

**★ மது அருந்துவது மக்கள் அறியாமலே எத்தகைய கேடுகளை அவர்களுக்கு உண்டாக்குமோ, அதுபோல மக்கள் தொகைப் பெருக்கமும் நாம் அறியாமலேயே சமுதாயத்திற்குக் கேடுண்டாக்கக் கூடியவை!**

**— டாக்டர் எம்.ஜி.ஆர்.**

மகாத்மாவின் அகிம்சைக் கொள்கைகள், நடைமுறைக்கு உதவாதது என்ற சிலரது நினைப்பு, பொய்யாகி வருவதை நாம் கண்டுவருகிறோம். இன்றைய உலகிலும் சரி, எதிர்காலத்திலும் சரி, உலக நாடுகளுக்கு இடையே நிலவி வரும் சண்டைச் சச்சரவுகள், வன்முறைச் செயல்கள் ஆகியவற்றினைத் தடுப்பதில், இந்த அகிம்சை பெரும் பங்கு வகிக்கும் என்பதை, உலக அமைதியில் அக்கறை கொண்டவர்கள் பின்னரே தெரிந்து கொண்டனர். அதுபோலவே, எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்கு வன்முறை நாடாத மக்களுக்கு, சத்தியாக்கிரகத்தைவிட வேறெந்த எதிர்ப்பு முறைகளும் சரியான வழிமுறைகள் ஆகாது எனவும் காந்தியடிகள் கருதினார்.

அதுவன்றி, தீவிர வன்முறையினை அடிப்படையாகக் கொண்டு, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்க்க நினைக்கும் சிலர் ஆயுதம் தாங்கி, அமைதியைக் குலைத்து, சாதாரண மக்களை அன்றாடம் கடுத்துயரத்தில் ஆழ்த்தும் செய்கைகளை, நாம் இன்று எங்கும் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் விரும்புகிற வெற்றி, அவர்களுக்குக் கிடைக்காமல் தூரப் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால், காந்தியடிகள் வலுவாகத் திட்டம் தீட்டி, வன்முறையின்றி அமைதி வழியில், நமக்குச் சுதந்திரத்தினைப் பெற்றுத் தந்து, உலக வரலாற்றில் எவரோடும் ஒப்பிடமுடியாத சாதனையாளராகத் திகழ்கிறார்.

தனது அனுபவப் பாணியில், இந்திய நாட்டில் புரையோடிப் போயிருக்கிற பல்வேறு பிணிகளைக் களைய, மகாத்மா காந்தி எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். மகளிர் மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கிராமியத் தொழில் நலம் காத்தல், மதங்களிடையே ஒற்றுமை, ஆகியவற்றினை நடைமுறைப்படுத்த அவர் ஆற்றிய பணிகள் மகத்தானது, மறக்க முடியாதது.

**மகாத்மா காந்தி அவர்களின் முக்கியக் கொள்கையான மதுவிலக்கினை, இன்றைக்குத் தமிழகத்தில் எங்கள் அரசு குறிப்பாக, மகளிர் மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். எங்களின் இந்தச் செயல், இச்சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிணிகளையும் களைய, நாங்கள் தொடுத்திருக்கும் அறப்போரின் முதற்கணை என்பதனை, உறுதியோடு உங்கள் முன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மதுவை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளாமல், மகாத்மாவின் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், பெண்ணடிமையை நீரூற்றி வளர்த்துக் கொண்டு, தேசப்பிதாவின் பிறந்த நாளைப் பிரமாதப்படுத்துவதும், ஜாதியத்தைப் பேசி மக்களின் மனதில் ஜாதிய விஷத்தை விதைத்துக் கொண்டு, காந்திஜியின் பிறந்த நாளை விளம்பரப்படுத்துவதும், வெறும் சடங்குகளாக வேண்டுமானால் இருக்க முடியுமே தவிர, அவர் விரும்பிய கொள்கைகளை நாம் பின்பற்றுவதாக நிச்சயமாக இருக்க முடியாது.

**எனவேதான், மது ஒழிப்பில் இந்த அரசு காட்டிவரும் தீவிரத்தையும், மக்கள் அதற்காக வழங்கிவரும் ஆதரவையும், பாராட்டுக்களையும், மலர் மாலைகளாகக் கருதி, அவற்றை அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில், அவருக்கு அணிவித்து மகிழ்வதில் நான் பெருமைப்படுகிறேன்!**

மகாத்மா காந்தி தனது இதயத்தில் வைத்துப் போற்றிய இன்னொரு கொள்கை தீண்டாமை ஒழிப்பு. 'கடவுளின் குழந்தைகள்' என்று அவரால் கருதப்பட்ட ஆதி திராவிடர் மக்களை, தங்களது அரசியல் இலாபத்திற்காகத் தூண்டிவிட்டு, பலிகடாவாக ஆக்குகிற முயற்சிகள், நம்முடைய தமிழ்நாட்டிலேயே தற்போது நடந்து வருவதை,

நான் சட்டமன்றத்திலே பலமுறை எடுத்துரைத்துள்ளேன்.

வாழ வழியற்ற அந்த ஏழை மக்களுக்கு உதவுகிற எங்களது இந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தி, தங்களது வன்முறைத் திட்டத்திற்கு அவர்களைப் பலியாக்க நினைக்கின்றவர்களுக்கு, அண்ணல் காந்தி அடிகளின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுடைய ஆட்சியில் ஆடுகளை ஏமாற்றி, ஓநாய்கள் இரத்தமும் குடிக்க முடியாது; மிரட்டிச் சத்தமும் போடமுடியாது. ஏனென்றால், நான் ஓநாய்களைச் சந்தித்துவிட்டு, வெறிநாய்களை வீழ்த்திவிட்டுத்தான் இந்த ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறேன். எனது இந்த எச்சரிக்கை மக்கள் எதிரிகளுக்குப் புரியுமென்று நம்புகிறேன். இதைக்கேட்டு அவர்கள் திருந்துவார்கள் என்று நம்புகிறேன். இது மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாள் கொண்டாட்டம் என்பதால், இந்த நேரத்தில் நான் இந்த அளவுக்குத்தான் கூறமுடியும்.

அண்ணல் காந்தி அடிகளின் மனதைக் கவர்ந்த மற்றொரு அம்சம் கிராம ராஜ்யம். 'கிராம ராஜ்யம்' உருவாக்கப்படவேண்டுமென்ற காந்திஜியின் எண்ணம்தான், இன்றைக்குப் பல்வேறு உருப்பெற்று, கிராமங்கள் தன்னிறைவு பெறுகிற திட்டங்களை மத்திய அரசும், மாநில அரசுகளும் தீட்டி நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாய் அமைந்திருக்கிறது. 'தமிழ்நாட்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்படுவதன் நோக்கம், காந்தி அடிகளின் கனவுகளை நனவாக்கத் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதுதான்.

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில்தான் இருக்கிறது என்ற காந்தி அடிகளின் கூற்று வெறும் வார்த்தை ஜாலம் அல்ல; அது அவரது அனுபவத்தின் வெளிப்பாடு. குறிப்பாக சம்பாரன் (Champaran) என்ற கிராமப் பகுதி விவசாயிகளை, இந்தியாவிற்கு வந்தவுடன் முதன் முதலில் சந்தித்தபோது 'நான் அவர்களைச் சந்தித்ததன் மூலம் கடவுளை, அகிம்சையை, உண்மையை நேருக்கு நேர் சந்தித்தேன்' என்று கூறி மனம் மகிழ்ந்தார் அவர். அப்படிப்பட்ட கிராம ஏழைகளுக்கு உதவுகிற பணியைத்தான் எங்கள் அரசும் மனமுவந்து, தமிழகத்தில் செயற்படுத்தி வருகிறது. அதன்படியும் உண்மையான கிராம ராஜ்யம் உருவாக, மேலும் தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி சாதாரண மனிதனது மேம்பாட்டுக்காக வாழ்நாளெல்லாம் சிந்தித்து உழைத்ததால்தான் இன்றும், என்றும் இந்திய நாட்டு மக்களின் ஆத்மாவாக மகாத்மா திகழ்ந்து வருகிறார்!

பண்டித நேரு அவர்கள் தனது மாபெரும் தலைவரான காந்தி அடிகளைப்பற்றிக் கூறும்போது -

'Whether Gandhiji is a democrat
or not,
he does represent the peasant masses
of India;
he is the quintessence of the
conscious and
sub-conscious will of those millions'

என்று புகழாரம் சூட்டினார். மகாத்மா காந்தி அவர்களது நாட்டுப் பற்றும், இந்தியாவிற்காக அவர் எதையும் இழக்கத் தயாராக இருந்தார் என்பதும், உலகறிந்த உண்மையாகும். தென் ஆப்பிரிக்காவிலிருந்து அவர் இந்தியாவிற்கு புறப்படும்போது -

'I am about to leave a bhogabhumi for a Karmabhumi... Anyone who seeks deliverance must go to the sacred soil of India' என்று மனம் நெகிழ்ந்து பேசினார்.

**அண்ணல் காந்தி அடிகள் இப்படி வாழ்த்திய, வணங்கிய இந்தியாவை எவர் கூறுபோட நினைத்தாலும், எதிர்த்துப் பிரிவினைக் கூக்குரலிட முனைன்றாலும், அதை முறியடிப்பதும், அதற்கு முற்றுப் புள்ளி வைப்பதுமே, நமது தூளுரையாக இன்றைய தினத்தில் இருக்க வேண்டும்.**

அவர் வெள்ளையனை வெளியேறச் சொன்னது, நமது விடுதலைக்காக மட்டுமின்றி, இனி எந்த நாட்டுக் காரனும் இந்திய மண்ணில் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியாது என்பதை வலியுறுத்தவும், அது வரலாற்றுப் பாடமாக இருந்து, எதிர்காலச் சந்ததியினருக்கு உதவ வேண்டுமென்பதற்காகவேதான் என்று நான் எண்ணுகிறேன்.

மனித சமுதாயத்தில் இன்றைக்கு எத்தனையோ தத்துவங்கள், இயக்கங்கள், கொள்கைகள் ஆகியவை, மக்களால் நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், காந்தியக் கொள்கைகள் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கக் காரணம் அவை அனைத்தும் மனித நேயத்தினையும், நல்லெண்ணத்தினையும், சகோதரத்துவத்தினையும், மற்றும் அன்பு, அறம், அகிம்சை ஆகிய அரும்பெரும் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டு, உலகப் பொது நோக்கிற்கு உதவி வருவதால்தான், என்றால் அது மிகையாகாது.

எனவே, மகாத்மா காந்தி நமக்குக் காட்டிவிட்டுப் போயிருக்கிற புனித வழியில் தொடர்ந்து, கௌரவத்தோடு நாம தலை நிமிர்ந்து தைரியமாக முன்னேறவும், அவர் அமைத்துத் தந்துள்ள பாதையில் நடந்து, உலக அமைதிக்குப் பாடுபடவும், அவரது இந்தப் பிறந்த நாள், நமக்கு மீண்டும் வழிகாட்டி உள்ளது, ஒரு வாய்ப்பளித்துள்ளது.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார்.

கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவியரிடையே காந்தி அடிகள் பற்றி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ-மாணவியருக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பரிசுகள் வழங்கித்தலைமை உரை ஆற்றினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு க. கணேசன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழா நிறைவுற்ற பின் - பத்மஸ்ரீ அலர்மேலு வள்ளி வழங்கிய பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர் மற்றும் பிரமுகர்கள் அந்நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

- நிகழ்ச்சித் தொகுப்பு
பி.எல்.ஆர்.



# ஆலயங்களைப் பராமரிக்க, அறநிலையப் பணி சிறக்க, அரிய திட்டங்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 26.9.'91 அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகத்தின் மானியக் கோரிக்கை எண். 12-இன் மீது கொள்கை விளக்கக் குறிப்பு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாக அமைப்பு, ஆலய நிர்வாக வாரியம் அமைத்தல், சமய நிறுவனங்கள் மற்றும் கட்டளைகள் நிர்வாகம், உலோகத் திருமேனிப் பாதுகாப்பு, திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் மேம்பாடு, முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் ஆலய ஊழியர்கள் நலன் ஆகிய முக்கிய அம்சங்கள் பற்றி விளக்கப்பட்டிருக்கின்றன.

எங்கள் தேர்தல் அறிக்கையில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களைத் தவிர, தமிழகம் எங்கும் உள்ள கிராமங்களில் சிறு சிறு புராதனக் கோயில்கள் பல்லாயிரக் கணக்கில் பராமரிப்பு இன்றி பாழ்பட்டு கிடக்கின்ற நிலையில் அவைகளை நன்கு பராமரித்து, அவற்றின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம் என்று அறிவித்து இருந்தோம். சிறப்புக்குரிய இக்கோயில்களின் பராமரிப்புப் பணிகளையும் ஆலய நிர்வாகப் பணிகளையும் கவனிக்கத் தனியாக ஆலய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்றும் குறிப்பிட்டு இருந்தோம். அதனை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு ஆளுநர் உரையில் தமிழகத்தின் புகழ்மிக்க பெரிய கோயில்களில் பராமரிப்பும், வழிபாடுகளும் முறையாக நடைபெறத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்து இருந்தோம். அந்த அறிவிப்புக்குச் செயல் வடிவம் கொடுத்து, ஆலய நிர்வாக வாரியத்தை அமைக்கத் தற்போதைய 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்திற்குத் திருத்தம் ஒன்றை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்த உள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சட்டத்திருத்தத்தின் அடிப்படையில், புதிய நிர்வாக வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

அறிமுகப்படுத்தப்பட உள்ள இச்சட்ட முன் வரைவில், ஆலய நிர்வாக வாரியத்தின் அமைப்பு, அவற்றின் அதிகாரங்கள், மற்றும் பணிகள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மற்றும் துணை ஆணையர் ஆகியவர்களின் அதிகாரங்கள், அரசின் அதிகாரங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத் தன்மை காக்கப்பட வேண்டும்; மரபுகள் கெடாத வகையில் திருக்கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட வேண்டும்; அவற்றின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும், என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைக்க இருக்கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு உள்ளோம்.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக அமைப்பு பற்றி நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றேன். இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்கள், மடங்கள் குறிப்பிட்ட அறக்கட்டளைகள் மற்றும் சமண மத அறநிலையங்கள் ஆகியவைகள் மொத்தம் 35,150 ஆகும்.

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

இத்துறை 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், இம்மண்டலங்கள் 17 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டமும் ஒரு உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. தற்போது நம் மாநிலம், நிர்வாக வசதிக்காக 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மாவட்டங்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மாநிலம் முழுவதிலும் அறநிலையத் துறையைப் பொறுத்தவரை 8 மண்டலங்களாகவே இயங்கி வருகின்றது.

இந்த 8 மண்டலங்களில் குறிப்பாக சென்னை, சேலம், மதுரை போன்ற 3 மண்டலங்களில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலைமதிப்புள்ள நகர்ப்புற நிலங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகப் பணிகள் அதிகரித்துள்ளன. ஆலயங்கள் குறித்த வழக்குகளும் அதிகமான அளவுக்கு நிலுவையில் உள்ளன. மதுரை, சென்னை மண்டலங்களில் புகழ்பெற்ற, முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. நாளுக்கு நாள் வருமானம் அக்கோயில்களில் பெருகி வருகிறது.

அத்துடன் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக, ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் விலை மதிப்பும் தற்போது மிகவும் உயர்ந்து உள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு சென்னை, சேலம் மண்டலங்களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து வடஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும், அதேபோன்று மதுரை மண்டலத்தை 2 ஆகப் பிரித்து பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகெங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும் அமைக்கப்படும்.

அறநிலையங்கள் அவைகள் பெறுகின்ற ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தற்போது நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வகைப்படுத்தப்பட்ட அறநிலையங்களில் ரூபாய் ஒரு இலட்சமும், அதற்கு மேற்பட்ட வருமானம் பெறுகின்ற திருக்கோயில்களுக்கு அறங்காவலரைத் தற்போது அரசு நியமித்து வருகிறது. ரூ.50,000-லிருந்து ஒரு இலட்சம் வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ.10,000-லிருந்து ரூ.50,000 வரை வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள், ரூ.10,000-க்குக் கீழ் வருமானம் பெறுகின்ற திருக்கோயில்கள் ஆகியவற்றிற்கு அறங்காவலர்களை நியமிக்கும் அதிகாரத்தை முறையே ஆணையர், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் பெற்று இருக்கின்றனர். இம்முறையைப் பின்பற்றுவதால் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் காலதாமதம் ஏற்படுகின்றன. இந்த முறை ஆலயங்களின் திறமையான நிர்வாகத்திற்கு நலம் பயப்பதாக இல்லாததாலும், நடைமுறைச் சிக்கல்கள் தோற்றுவிப்பதாலும் பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்குத் தற்போதய நடைமுறையை மாற்றி அமைப்பது குறித்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், சட்டத் திருத்த மசோதா ஒன்று கொண்டு வரப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். பரம்பரை வழிமுறை சாரா அறங்காவலர்களை நியமிப்பதற்குக் கொண்டு வரப்படும் புதிய முறை சிறப்பான வகையில் செயல்படுவதாக அமையும்.

**ஆலய நிர்வாக வாரியம் அமைக்கப்படும்**

**வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைக்கப்படும்.**

திருக்கோயில்களின் திருப்பணிகள், பொதுமக்கள் நன்கொடை, அரசு மானியம், ஆணையரின் பொதுநல நிதி, ஆலயங்களின் உபரி நிதி ஆகியவைகளிலிருந்து கிடைக்கின்ற நிதிகளின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன. திருப்பணிக்காக அரசு ஒவ்வொரு நிதி ஆண்டிலும் ரூ.45 இலட்சம் ஒதுக்குகிறது. இந்த ஆண்டிலும் இதற்காக ரூ.45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 1985-86-ஆம் ஆண்டிலிருந்து 1990-91 வரை 322 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன. இவ்வாண்டில் அதாவது 1991-92-இல் 45 திருக்கோயில்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும்.

தமிழகத் திருக்கோயில்களில், ஒவ்வொரு பசலி வரவு- செலவுத் திட்டத்திலும், வரவுத் தொகையில் ஒரு சதவிகிதம், ஆணையர் பொது நல நிதிக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1988-89-லிருந்து 1991-92 வரை இந்நிதியின் மூலமாகப் பயன் அடைந்த கோயில்களின் எண்ணிக்கை 97 ஆகும். இதற்காக வழங்கப்பட்ட தொகை ரூ.49.17 இலட்சம் ஆகும். தற்போது இந்நிதியில் கையிருப்பு ரூ.16 இலட்சம் உள்ளது. இந்தத் தொகை தேவைப்படும் கோயில்களின் திருப்பணிகளுக்கு அளிக்கப்படும்.

உபரி நிதி உள்ள கோயில்களிலிருந்து 1988-89-ஆம் ஆண்டு 15 திருக்கோயில்களுக்கு ரூ.31.27 இலட்சமும், 1989-90-ஆம் ஆண்டு 26 திருக்கோயில்களுக்கு ரூ.22.65 இலட்சமும், 1990-91-ஆம் ஆண்டு 14 திருக்கோயில்களுக்கு ரூ.11.56 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு, அதாவது, 1991-92-இல் கும்பகோணத்தில் வருகிற பிப்ரவரி மாதத்தில் கொண்டாடப்பட இருக்கின்ற 'மகாமகம்' திருப்பணிக்கு ரூ.12 இலட்சம் உபரி நிதி மாற்றத்திலிருந்து வழங்கப்படும். மேலும் அரசு மானியமாக 'மகாமகம்' திருப்பணிக்கு ரூ.12.50 இலட்சம் வழங்கப்படும். மேலும் இத்திருப்பணிக்கு நிதி தேவைப்பட்டால் 'முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி'யிலிருந்து வழங்கப்படும்.

நலிவுற்ற திருக்கோயில்களில் குறைந்தபட்சம் ஒரு கால பூசை செய்வதற்காக நிதி வசதி உள்ள திருக்கோயில்களில் உபரி நிதியிலிருந்து ரூ.5 கோடி நிதி மாற்றம் செய்து 1984-85-ஆம் ஆண்டு ரூ.5 கோடி ஆலய மேம்பாட்டு நிதி உருவாக்கப்பட்டது. இத்தொகையிலிருந்து ஆண்டு தோறும் சுமார் ரூ.50 இலட்சம் வட்டி பெறப்படுகிறது. இதில் 50 சதவிகிதத்தை நலிவுற்ற திருக்கோயில்களில் ஒரு கால பூசை நடத்துவதற்கும், எஞ்சியுள்ள 50 சதவிகித வருமானத்தைப் பழமையான திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும் செலவிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இது வரை 3,915 திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசை நடத்த ரூ.132.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மங்களா சாசனம் மற்றும் பாடல் பெற்ற 12 திருக்கோயில்களுக்கு ரூ.25,000 வீதம் வைப்பு நிதி அளிக்கப்பட்டு அதன் வட்டியைக் கொண்டு இந்தத் திருக்கோயில்களில் ஒரு கால பூசை நிரந்தரமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிதியிலிருந்து திருப்பணிக்காக 1989-90-லிருந்து இதுவரை 32 திருக்கோயில்களுக்கு ரூ.195.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு கால பூசை நடத்துவதற்கு இத்திட்டத்தின் கீழ் தேவைப்படுகின்ற ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,500 மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடிக்கு, ஒரு நிலையான வைப்பு நிதி ஏற்படுத்தி அதன் வட்டி வருமானத்திலிருந்து நிதி வசதி இல்லாத திருக்கோயில் திருப்பணிக்காக அரசு அனுமதியுடன் ரூ.10,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இந்நிதி 1984-இல் தொடங்கப்பட்டது. இந்நிதி கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் தொகை தற்போது ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டிலிந்து 1989- 90-ஆம் ஆண்டு வரை 553 திருக்கோயில்களுக்கு ரூ.54.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 66 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு ரூ.16.50 இலட்சம் ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது துறையின் ஆளுகைக்குட்பட்ட 35,150 திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்களில் 476 திருக்கோயில்களுக்கு ரூ.7.10 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 294 திருக்கோயில்களின் திருப்பணியை மேற்கொள்வதற்கு ரூ.9.96 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு அவற்றுக்கான நிர்வாக அனுமதியும் ஆணையர், அறநிலையத் துறை அவர்களால் வழங்கப்பட்டு உள்ளது. இப்பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்து சமய அறநிலையத்துறை, திருக்கோயில்களுக்குச் செய்ய வேண்டிய திருப்பணிகளைப் பற்றி ஓர் ஆய்வு நடத்தியுள்ளது. அந்த ஆய்வு மொத்தம் 14,920 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இத்திருக்கோயில்களில், பட்டியலில் சேர்ந்த 1,137 ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதற்கு ரூ.28.57 கோடி தேவைப்படும் என்றும், பட்டியலில் சேராத 6,861 ஆலயங்களுக்கு ரூ.24.14 கோடி தேவைப்படும் எனவும், 6,688 சிறு ஆலயங்களுக்கு ரூ.21.81 கோடி தேவைப்படும் என்றும், ஆளுகைக்கு உட்படாத 234 திருக்கோயில்களுக்கு ரூ.56 இலட்சம் தேவைப்படும் என்றும், மதிப்பிடப்பட்டு இருக்கிறது. என்வே, திருக்கோயில்களைப் பராமரிப்பதற்கு ரூ.75 கோடி தேவைப்படும். இது அளவில் மிகப்பெரிய தொகையாக இருப்பதால், பொதுமக்கள் கொடை உள்ளம் படைத்தவர்கள் மற்றும் பொது நிறுவனங்கள் நிதியை வழங்கினால் திருப்பணிகளை மேற்கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். இதற்காக ஒரு நீண்டகாலத் திட்டம் வகுத்து இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணிய மேற்கொள்ள நடவடிக்கை எடுககலாம்.

இத்துறையின் கீழ் உள்ள திருக்கோயில் தவிர, தமிழகம் எங்கும் உள்ள கிராமங்கள் பலவற்றில், சிறுசிறு புராதனக் கோயில்கள், பல்லாயிரக் கணக்கில், பராமரிப்பின்றிப்பாழ்பட்டுக் கிடப்பது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அவற்றின் பராமரிப்பு, அன்றாடத் தேவைகளுக்கு என உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றிற்குள்ள நித்திய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று தேர்தல் அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் முதலமைச்சரின் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி எனது நன்கொடை ரூ.1,00,008 உடன் 2.8.91-இல் துவக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பாழடைந்த நிலையில் உள்ள சிறு கோயில்களுக்குத் திருப்பணி வேலைகளை மேற்கொள்ளவும் பல கோயில்களுக்கு அன்றாட வழிபாடுகள் நடத்த ஏற்பாடு செய்யவும் அவற்றைப் பராமரிக்கவும் இந்நிதியானது பயன்படுத்தப்படும். 25.9.91 வரை ரூ.1.51 கோடி இந்நிதியில் சேர்ந்துள்ளது. பொதுமக்கள், கொடையுள்ளம் படைத்தவர்கள், தொழிலதிபர்கள், இன்னும் சமுதாயத்தில் இருக்கின்ற பலதரப்பட்ட மக்கள் அவர்களாகவே மனமுவந்து நிதியை வழங்குகின்றனர்.

திருக்கோயில்கனில் இருக்கும் பழமை வாய்ந்த உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் தற்போது 1,785 திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த மையத்தில் இருந்து திரு

**பழம், காய்கறிகள் உற்பத்தியில் முன்னேற்றம்**

பழங்கள், காய்கறிகள் உற்பத்தியில் நமது நாடு மிக வேகமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. கடந்த 20 ஆண்டுகளில் இவற்றின் உற்பத்தி சுமார் 5 மடங்காக உயர்ந்திருக்கிறது. 1970-இல் 52,274 டன்களாக மட்டுமே இருந்த பழம், காய்கறிகளின் உற்பத்தி, 1989-இல் 2.40 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. 1970-இல் பழம் மற்றும் காய்கறி பதனிடும் தொழிற்சாலைகள் நமது நாட்டில் மொத்தம் 1,094 இருந்தன. 1991-இல் இவற்றின் எண்ணிக்கை 3,629.

பழம் மற்றும் காய்கறிகளின் ஏற்றுமதியிலும் நமது நாடு கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. 1980-இல் சுமார் 21.90 கோடி ரூபாய் மதிப்புக்கே இவற்றை ஏற்றுமதி செய்த நாம், 1989-இல் ரூ.79.48 கோடி மதிப்புக்கு அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம் எனில் இவற்றின் உற்பத்தியில் நாம் கண்டுள்ள முன்னேற்றம் நன்கு புலப்படும்.

இந்தியாவில் தற்சமயம் ஆண்டிற்குச் சுமார் 7 கோடி டன் அளவுக்குப் பழங்களும், காய்கறிகளும் உற்பத்தி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் பழங்களின் உற்பத்தி மட்டும் 33.6 சதவிகிதம்.

—நன்றி 'CO-OPERATION'

விழாக்காலங்களில் தேவைப்படும் திருமேனிகள் எடுத்துச் செல்லப்பட்டு, திருவிழாக்கள் முடிந்தவுடன் மீண்டும் திரும்பப் பெறப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திருமேனிகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படவும், அவற்றின்மீது அரிப்பு மற்றும் உலோக நோய்கள் (Metal diseases) ஏற்படாமல் இருக்கவும் இந்த மையத்தினைக் குளிர் சாதன வசதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிட்டுள்ளேன். இப்பணி அடுத்த மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

இந்த நேரத்தில் 1976-ஆம் ஆண்டு களவாடப்பட்டு லண்டனுக்குக் கடத்தப்பட்ட பத்தூர் நடராசர் உலேகத் திருமேனி, பல ஆண்டுகள் வழக்கு நடைபெற்று நமக்குச் சாதகமாக முடிவுற்ற பிறகு, இங்கிலாந்து நாட்டில் இந்தியத் தூதராகப் பணிபுரியும் டாக்டர் சிங்வி அவர்கள் தாமே அதை சென்னைக்குக்கொண்டுவந்து,நினைவு கூரத்தக்க விழாவில் என்னிடம் நேரில் வழங்கியதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தத் திருமேனி தற்போது பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திருமேனி சுமார் ரூ.7 இலட்சம் மதிப்பில் பத்தூரில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு விஸ்வநாதசுவாமி திருக்கோயிலில் பிரதிட்டை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களில் திருட்டுக்களைத் தடுக்க காவலர்கள் நியமிக்கப்படுகின்றனர். முக்கிய திருக்கோயில்களில் திருடர்கள் எச்சரிக்கை மணியும் (Burgler Alarm) மற்றும் விழிப்புப் பதிவுக் கடிகாரங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

திருக்கோயில்களால் 5 கல்லூரிகளும், 10 மேல்நிலைப் பள்ளிகளும், 9 உயர்நிலைப் பள்ளிகளும், 2 பாலிடெக்னிக்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மற்றும் வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை, தவில் நாதஸ்வரப் பள்ளி, காதுகேளாதோர் பள்ளி, சித்த மருத்துவ மனைகள், முதியோர் இல்லங்கள், அன்பு இல்லங்கள் ஆகியவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கீழ் ஆண்களுக்கென பராமரிக்கப்படும் பாலிடெக்னிக்கிற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் தொழிற்கூடங்கள் கட்ட, உலக வங்கியிடம் சுமார் ரூ.46.80 இலட்சம் கடனுதவி பெற்று பணிகள் நிறைவேற்றப்படும். இதுதவிர, பெண்களுக்கான பாலிடெக்னிக்கிற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்கவும், பாலிடெக்னிக்கை விரிவாக்குவதற்கும் ரூ.75.90 இலட்சம், உலக வங்கிக் கடன் உதவி பெற்று, நடப்பு ஆண்டில் பணிகளைத் தொடங்க இருக்கிறோம். பெண்கள் பாலிடெக்னிக் தற்போது பழனி மலையில் அடிவாரத்தில் நடைபெற்று வருகிறது. அதை விரிவாக்குவதற்கான இடவசதி அங்கு இல்லை. எனவே, அதை பழனி ஆண்டவர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் கல்லூரி விடுதிக்குப் பின்புறப் பகுதிக்கு மாற்றி, புதிய கட்டடங்கள் கட்டும் பணி, உலக வங்கித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

திருக்கோயில் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் இந்து சமய அறநிலைய குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10,000 உதவியாக வழங்கவும் திட்டம் தற்போது அமலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாத வருமானம் ரூ.100-க்கு மேல் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.2 சந்தாவாகப் பெறப்படுகிறது. மாத வருமானம் ரூ.100-க்குக் குறைவாகப் பெறும் திருக்கோயில் பணியாளர்களிடமிருந்து சந்தாத் தொகை பெறப்படுவதில்லை. ஆனால், அவர்களுக்கும் குடும்பநலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

> ★ என்னோடு கலந்திருப்பது உழைப்பு. நான் அதற்காகவே இருக்கிறேன். எனது கால்களை எவ்வளவு தூரம் உபயோகிக்க முடியும் என்ற அளவைக் கண்டு கொண்டேன்; எனது பார்வையை எவ்வளவு தூரம் செலுத்த முடியும் என்பதையும் அறிந்து கொண்டேன்; ஆனால், என் உழைப்பின் சக்தியை மட்டும் என்னால் காண முடியவில்லை!
>
> —மாவீரன் நெப்போலியன்.

தற்போது குடும்பநல உதவித் தொகையாக வழங்கப்படும் ரூ.10,000-த்தை ரூ.20,000-ஆக உயர்த்தி வழங்குவதற்குப் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் அடிப்படை ஊதியம் ரூ.100-ம் அதற்கு மேலும் வருமானம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் 16,640 நபர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.5 வீதமும், பட்டியலைச் சேராத 33,060 திருக்கோயில்களில் பணிபுரியும் மாதம் அடிப்படை ஊதியம் ரூ.100-க்குக் குறைவாக வருமானம் பெறும் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதமும், சந்தாத் தொகை வசூலிக்கப்பட்டு, இப்புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.13.95 இலட்சம் வருவாய் கிடைக்கும். ஆனால், இத்திட்டத்திற்கு ஆகும் செலவு ரூ.30 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள வருவாய்த் தொகையைவிட அதிகமாக உள்ள செலவினை, உபரி வருவாய் உள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியை வைப்புநிதியாக வைத்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஈடு செய்யலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்து சமயத்திற்கு ஆணிவேரா கக் கருதப்படுவது வேதங்களும், ஆகமங்களும் ஆகும் என்பது எல் லோரும் அறிந்ததே. தற்போது இந் அற்புதமான வேத ஆகமம் மற்றும் சாஸ்திரங்களை ஒருசில தனியார் மூலமாகவே பாதுகாக்கப்பட்டும் வளர்ச்சி செய்யப்பட்டும் வருகிறது இத்துறையின் கீழ் செயல்பட்டுவரு வேத ஆகமப் பள்ளிகள், மேலு சிறப்பாக ஆகம சாஸ்திரங்களை கற்றுக் கொடுக்க இயலாத சூழ்நிலை யிலேயே உள்ளது. காலப்போ கினால், வேத ஆகம சாஸ்திரிகள் இப்புனிதப் பணியை விட்டுவிட் மேலும் அதிக வருவாய் ஈட்டக்கூடி பல நவீன துறைகளில் ஈடுபட் உள்ளனர். எனவே, தற்போ திருக்கோயில்களில் முறையாக வே ஆகமம் மற்றம் சாஸ்திரங்களை கற்றுத் தெளிந்த வல்லுநர்கள் மி மிகக் குறைவாகவே உள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, வேத ஆகமம் மற்று சாஸ்திரங்களில் முழுமையா



தேர்ச்சி பெற ஒரு வேத ஆகம சாஸ்திரக் கல்லூரியை அமைத்து ஆதரவளிப்பது காலத்தின் கட்டாயம் எனக் கருதுகிறேன். இதன்படி (Tamil Nadu Institute of Vedic Science) என்ற ஒரு அமைப்பினை நமது மாநிலத்தின் தக்கதொரு இடத்தில் நிறுவுவது ஒரு அத்தியாவசியத் தேவையாகும். இந்தத் திட்டத்தில் வேதம், ஆகம சாஸ்திரம், வேதத்தின் உபசாஸ்திரம், திருமுறைகள் மற்றும் நாலாயிரத் திவ்யபிரபந்தங்கள் ஆகிய பாடத்திட்டங்கள் அமையும். சமஸ்கிருத மொழியிலுள்ள வேத ஆகம சாஸ்திரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லோரும் எளிதில் கற்றுக்கொண்டு சிறிய திருக்கோயில்களில் கூட சாஸ்திர முறையில் பூசைகள், வழிபாடுகள் நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்படும். நிதி உபரியாக உள்ள திருக்கோயில்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியாகத் திரட்டி இத்திட்ட வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படுமென்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட அரசு சார்ந்த மற்றும் அரசு சார்பற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ் நாட்டில் கலைப்பொக்கிஷமாகத் திகழும் திருக்கோயில்களைப் பழுதடையாமல் பாதுகாக்கவும், கோயில்களின் கலாச்சாரத்தை, தொன்மையைக் காலவெள்ளம் அழித்து விடாமல் அரவணைக்கவும் இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சட்டப் பேரவையில்...



மிகவும் மோசமாகப் பழுதுபட்டுள்ள சாலைகளைத் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் செப்பனிட்டுப் பராமரிக்கும் ஏற்பாடு முதன் முதலாகச் சோதனை அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் (28.9.91) சட்டப் பேரவையில் அறிவித்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட மாவட்டத்திலுள்ள சாலைகளைத் தனியார் தொழில் நிறுவனங்கள் அல்லது தொழில் அதிபர்கள் செலவு செய்து, செப்பனிட்டுப் பராமரிப்பார்கள். இதற்காக அந்தச் சாலைகளில் அவர்கள் ஒரு சிறிய அளவுக்குச் சுங்கக் கட்டணம் வசூலிக்கவும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் முதல்வர் அறிவித்தார்.

தமிழகத்தில் பட்டு நெசவுக்குத் தேவையான கச்சாப்பொருள் தட்டுப்பாட்டைச் சமாளிக்கக் கொடைக்கானல், குன்னூர் ஆகிய மலைப் பகுதிகளில் அரசு நிலத்தைக்கையகப்படுத்திப் பட்டுப் புழு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. முகமது ஆசிப் அவர்கள் சட்டப்பேரவையில் (26.9.'91) தெரிவித்தார்.

சென்னை மெரீனா கடற்கரையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கடல்மீன் அருங்காட்சியகம் ஏற்படுத்தப்படும் என்று மாண்புமிகு வனம் மற்றும் மீன் வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்கள் சட்டப்பேரவையில் (26.9.'91) அறிவித்தார்.

காவல் துறையில் பணியாற்றும்போது வீர மரணம் அடையும் காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் (24.9.'91) அறிவித்தார்.

மிக அதிக பட்ச விளைச்சலை ஈட்டித்தரும் விவசாயிகளுக்குப் பத்து இலட்சம் ரூபாய் வரை பரிசுகள் வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பரிசுகளை இந்த ஆண்டுமுதல் தமிழக முதல்வர் அளிக்க இருக்கிறார் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் சட்டப்பேரவையில் (25.9.'91) அறிவித்தார்.



# 37-ஆவது

# காமன்வெல்த்

# பாராளுமன்ற மாநாடு

பேராசிரியர் க. பொன்னுசாமி
பேரவைத் துணைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு புதுடெல்லி அசோகா ஓட்டல் மாநாட்டு அரங்கினில் 23.9.91 முதல் 28.9.91 வரை நடைபெற்றது.

1991-92-ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் உறுப்பு நாடான இந்தியாவின், தமிழ்நாட்டின் சார்பில் நான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் அரிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு எனது நன்றியினைக் காணிக்கையாக அவரது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

காமன்வெல்த் பாராளுமன்ற அமைப்பு 1911-இல் நிறுவப்பட்டு எம்பயர் பாராளுமன்ற சங்கமாக யுனைடெட் கிங்டம் பிரிவினால் நிர்வாகம் செய்யப்பட்டு 1948 முதல் தற்போதைய பெயருடன் செயல்பட்டு வருகிறது.

பாராளுமன்ற ஜனநாயகத்தினை நடைமுறைப் படுத்தும் காமன்வெல்த் நாடுகளைச் சார்ந்த பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் உறுப்பினராகத் தகுதி பெற்றவர்கள் ஆவர். தற்போது 50 நாடுகளைக் கொண்ட காமன்வெல்த்தில் 47 நாடுகள் காமன்வெல்த் பாராளுமன்ற நாடுகளாக உள்ளன.

அரசியலமைப்பு சட்டம், சட்டமன்றம், பொருளாதாரம்,சமூகம் மற்றும் பண்பாட்டு அமைப்புகளை, பாராளுமன்ற ஜனநாயக நெறிப்படி, காமன்வெல்த் நாடுகள் விரிவாக அறியவும், பயிலவும் இச்சங்கம் பணியாற்றுகிறது.

37-வது காமன்வெல்த் பாராளுமன்ற கூட்டத்தில் 23.9.91 முதல் 27.9.91 வரை கீழ்க்கண்ட பொருள்கள் மீது விவாதங்கள் மேற்கொள்ளப் பட்டன.

1. வளைகுடா நெருக்கடி
2. தென் ஆப்பிரிக்காவில் சீர்த்திருத்தங்கள்
3. உலகில் தற்போதைய அகதிகள் பிரச்சினை
4. ஜனநர்யகத்தில் பத்திரிகைகளின் பங்கு
5. மக்கள் தொகை அதிகரிப்பாலும், தொழில் வளர்ச்சியாலும் நகரமைப்பு அமைப்பாலும் ஏற்படும் சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு
6. வளரும் நாடுகளில் சுகாதார நலன்களை உயர்த்துதல்
7. உணவு. உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்தல் தொடர்பாக காமன்வெல்த் பாராளுமன்ற நாடுகளின் பணி
8. போதை மருந்து பிரச்சினை மற்றும் குற்றவியல் நடவடிக்கை
9. சிறிய காமன்வெல்த் உறுப்பு நாடுகளின் ஜனநாயகத்தினைப் பலப்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
10. மகளிர் மற்றும் குழந்தைகள் மீதான வன்முறை





★ நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் உள்ளத்திற்கும் உலகத்திற்கும் உண்மையாக நடந்து கொள்ளுங்கள்.

—அண்ணல் காந்தியடிகள்

23.9.91 அன்று பாராளுமன்ற மத்திய அரங்கில் பாரத குடியரசுத் தலைவர் மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் 37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். அன்று மதியம் "வளைகுடா நெருக்கடி" தொடர்பாக விவாதம் மேற்கொள்ளப் பட்டது.

24.9.91 அன்று காலை "தென் ஆப்பிரிக்காவில் சீர்திருத்தங்கள்" 'தலைப்பிலும், மாலை, "உலகில் தற்போதைய அகதிகள் பிரச்சினை", மற்றும் "ஜனநாயகத்தில் பத்திரிக்கைகளின் பங்கு"தொடர்பாகவும் விவாதம் மேற்கொள்ளப் பட்டது. அன்று மாலை சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் பாரத குடியரசு துணைத் தலைவர் மேதகு சங்கர் தயாள் சர்மா அவர்கள் விருந்து அளித்தார்.

25.9.91 அன்று காலை "சுற்றுப்புறச் சூழ்நிலை பாதுகாப்பும்", "சுகாதார நலன்களை வளரும் நாடுகளில் உயர்த்துதல்", தொடர்பாகவும் விவாதம் நடைபெற்றது. அன்று மாலை நடந்த "போதை மருந்து பிரச்சினைகள் மற்றும் குற்றவியல் நடவடிக்கை" தொடர்பான விவாதத்தில் நான் பங்கேற்று எனது கருத்துக்களைத் தெரிவித்தேன். அந்நிகழ்ச்சியில் நான் ஆற்றிய உரையின் சில முக்கிய குறிப்புகளைத் தெரிவிக்கிறேன்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

என்ற திருக்குறளுடன் எனது உரையினைத் தொடங்கினேன்.

"தொடர்ந்து போதை மருந்துகள் பயன்படுத்துவோர் பொதுவாழ்வில் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் ஆர்வமற்றவர்களாக இருப்பார்கள். சமூகப் பிரச்சினையில் விபசாரமும், சூதாட்டமும், போதை மருந்துகளுடன் தொடர்புடையவை. போதை மருந்து கடத்தல் என்பது மனிதநேயத்திற்கு எதிரான குற்றம் என உலகில் கருதப் படுகிறது. இந்தியாவில் கஞ்சாவும், ஓபியமும் பயன்படுத்தப்பட்டுவரும் போதைப் பொருள்கள் ஆகும்.

உயிர் குடிக்கும் போதை மருந்துகள் விற்பனையால் பெறப்படும் பணத்தின் மீது மையல் கொண்டு போதை மருந்து கடத்தல்காரர்கள் கஞ்சாவினைப் பயிரிடுகிறார்கள்.

கஞ்சா பயிரிடுவது மண்வளம் பாதிக்கப்பட்டு மரங்கள் விழக் காரணமாகிறது. இந்தியாவில், சமீப ஆராய்ச்சியில் கடத்தலும் தீவிரவாதமும் போதை மருந்து கடத்தலுடன் தொடர்புடையதாக உள்ளன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதை மருந்துகள் கடத்தலினால் அதன் மூலம் பெறப்படும் அதிக அளவு பணத்துடன் குற்ற நடவடிக்கைகள், லஞ்சம், ஆயுதக்கடத்தல் மற்றும் தங்கக் கடத்தல் ஆகியவைகள் பெருகி வருகின்றன.

குடி மற்றும் போதை மருந்துகளினால் ஏற்படும் தீமைகளைத் தக்க விளம்பரங்களின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தி, போதை மருந்துப் பழக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். போதை மருந்துக் கடத்தலை தீவிர சட்டங்கள் மூலம் தடுக்கலாம். ஓர் வலுவான பெண்கள் இயக்கம் தொடங்கி, போதை மருந்துப் பழக்கத்தினை இந்தியாவிலிருந்து விரட்டப் போராடலாம்."

அன்று மாலை குடியரசு தலைவர் மாளிகையில் குடியரசுத் தலைவர் மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் விருந்தளித்தார்.

உலக அளவில் பல்வேறு அறிஞர்கள், சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரபலமான பிரமுகர்கள் கலந்து கொண்ட 37-வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொண்டு, விவாதத்தில் பங்குபெறும் வாய்ப்பினைப் பெற்ற நான் இதனை என் வாழ்நாளில் ஓர் முக்கிய நிகழ்ச்சியாக கருதுகிறேன்.

இவ்வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியினைச் சமர்ப்பிக்கிறேன்.



# குடிசைப் பகுதியில் குடும்ப நலக் கருத்தரங்கம்

சென்னை மாநகராட்சியின் சார்பில் சைதாப்பேட்டை ஜோதியம்மாள் நகர் குடிசைப் பகுதியில் (25.9.91) குடும்பநலக் கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு திட்டக் குழுத் தலைவர் திரு. டி.வி.அந்தோணி குடும்ப நலத்தில், கேரளத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்றும் அடுத்த 5 ஆண்டுகளில் இப்போது 1000-க்கு 23.1 என்று உள்ள பிறப்புவிகிதம் ஆயிரத்துக்கு 16 அல்லது 17 ஆகக் குறையக் கூடும் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது: "22 வயது முதல் 27 வயது வரை பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வயது என்றும், இக்காலக்கட்டத்தில் பிறக்கும் குழந்தைதான் அதிக எடையுடன் (குறைந்த அளவு 3 கிலோ) ஆரோக்கியமாகப் பிறக்கும். மேலும் பிறவியிலேயே இறக்கும் குழந்தை விகிதம் குறைவு. பெண்கள் 27 வயதுக்குள் குழந்தை பெறுவதை நிறுத்தி விட வேண்டும். அப்போதுதான் குடும்பம் அளவோடு வளமாக விளங்கும். தந்தை 58 வயதை - ஓய்வுபெறும் வயதை - அடையும்போது குழந்தைகள் 25 வயதினராகி குடும்பப் பொறுப்பை ஏற்க இயலும். பெண் திருமணம் செய்து கொள்ள ஏற்ற வயது 21. அப்போதுதான் பெண் 3 கிலோ எடைக்குக் குறையாத ஆரோக்கியமான குழந்தையைப் பெறமுடியும். முதல் குழந்தை பிறந்தவுடன் தேவையானால் அடுத்த குழந்தை 3 ஆண்டு இடைவெளிக்குப் பிறகே பெறவேண்டும். அப்போதுதான் தாய்சேய் நலமுடன் வாழ முடியும். 4 அல்லது 5 குழந்தைகள் பெறுவோர்க்கு கருவாய்ப் புற்று நோய் வரவும்கூட வாய்ப்புள்ளது". என்றும் கூறினார்.

கருத்தரங்கத்திற்கு மாநகராட்சி ஆணையர் திரு. மா.இராமு தலைமை வகித்தார்.

இவ்விழாவில் இந்திய மக்கள் தொகைத் திட்ட இயக்குநர் திரு. வி.கே.சுப்பராஜ், சைதை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே.பாலன், இந்திய மக்கள் தொகைத் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர். ஹைமாபாலச்சந்தர் ஆகியோரும் பேசினார்கள்.

விழாவில் முன்மாதிரித் தாய்மார்கள், ஆரோக்கியமான குழந்தைகள், பொதுமக்களிடையே புகைப் பழக்கத்தைப் போக்கப் பிரச்சாரம் செய்த நரிக்குறவர் இன மாணவ, மாணவியர்கள் ஆகியோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. காலை 8.00 மணிமுதல் 1.00 மணி வரை மருத்துவப் பரிசோதனை முகாம், சத்துணவு, குடும்ப நலக் கண்காட்சி, "திரைக்கதம்பம்" படக்காட்சி, கலை நிகழ்ச்சி, மரம் நடுதல் ஆகியவையும் நடைபெற்றன.

விழா முடிவில்- துணைத் தகவல் தொடர்பு அலுவலர் திரு. தாமோதரன் நன்றி கூறினார்.





## வட சென்னையில் 30,000 குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பூசி

சென்னை மாநகராட்சியும், அரிமாச் சங்கங்களும் இணைந்து நடத்தும் தட்டம்மைத் தடுப்பூசி முகாம் 18.9.91 அன்று வட சென்னையில் இராயபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த ஆண்டு வடசென்னையில் ஒரு வயதுக்குட்பட்ட 30,000 குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தட்டம்மைத் தடுப்பூசி போட்டுக் கொள்வது அவசியம் என்றும், இந்நோயால் கண்பார்வை இழப்பு, வயிற்றுப்போக்கு போன்றவை ஏற்படும், பொதுமக்கள் மாநகராட்சியோடு ஒத்துழைத்துத் தம் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டுக்கொண்டு அக்கம்பக்கத்திலுள்ளோருக்கும் இதை எடுத்துக்கூறி இந்நோயை அறவே ஒழிக்கப் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.மா.இராமு.



# மாநிலத்தின் மறுமலர்ச்சி மகத்தான தொழில் வளர்ச்சி

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

தொழில்துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் 19.9.91 அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:

தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்திட வேண்டும், இதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் எண்ணற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் ஓர் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திட வேண்டும் என்பது இந்த அரசின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று. இப்பணியில் தொழில்துறை ஒரு சிறப்பான பங்கினை ஏற்றிட வேண்டும், முக்கியமான சாதனமாகப் பணியாற்றிட வேண்டும் என்று திட்டவட்டமான கருத்தினை இந்த அரசு கொண்டுள்ளது.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரை, எங்கள் கட்சியின் அணுகுமுறை தேர்தல் அறிக்கையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சான்றாக, புதிய தொழில் முனைவோர் ஊக்குவிக்கப்படுவர்; தொழில்கள் தோன்றி, வளர்ந்திட அரசு இயந்திரமோ, அல்லது விதிகளோ ஓர் தடையாக இருக்கலாகாது; அரசு அதிகாரிகள் தொழில் முனைவோருக்குத் தேவையான உதவிகளை நல்கி, உற்ற நண்பர்களாகச் செயலாற்றுமாறு அறிவுறுத்தப்படுவர். பெருரகத் தொழில்களைத் துவக்கிடத் தடையேதும் இராது; தமிழகத்தில் மேலும் அதிக அளவிற்குத் தொழில்களில் முதலீடு செய்யவேண்டுமென்று மைய அரசு கோரப்படும்; நாட்டின் இதர பாகங்களிலிருந்து தொழில் முனைவோர், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் இவர்களெல்லாம் உதவிகள் அளிக்கப்பட்டுத் தமிழகத்தில் சிறிய, பெரிய தொழில்களைத் துவக்குமாறு ஊக்குவிக்கப்படுவர்; மற்றும் ஏற்றுமதி சார்புடைய தொழில்களுக்கும், அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய தொழில்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பன போன்ற கருத்துக்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் செயற்படுத்திட, அரசு முனைப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. பதவியேற்ற ஒரு சில நாட்களுக்குள்ளாகவே (6.7.91 அன்று) பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில் அதிபர்களைக் கருத்துப் பரிமாற்றத்திற்கென அழைத்திருந்தேன். இது அரசின் திட்டவட்டமான அணுகுமுறையை அவர்களுக்குத் தெளிவுபடுத்திடவும், அவர்தம் பிரச்சினைகளையும், குறைகளையும் நேரிடையாகக் கேட்டு அறியவும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டவும் ஓர் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தது. தொழில் வளர்ச்சி விரைவு பெற்றிட வேண்டும், அதன் பயன் பிற்பட்ட பகுதிகளுக்கெல்லாம் பரவிட வேண்டும் என்பது அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள எந்த ஒரு தொழிலும் தமிழகத்தில் தோன்றி, வளர்ந்திட எதுவும் தடையாக இருக்காது என்பனவெல்லாம் அவர்களுக்கு அது சமயத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன; மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

பெரிய தொழில்களும், மிகப் பெரிய தொழில்களும் அமைந்தால்தான் அவற்றைச் சார்ந்து சிறு தொழில்களும், துணைத் தொழில்களும் வளர்ந்திட இயலும். இதனைக் கருத்திற்கொண்டு, மிகப்பெரிய தொழில்களுக்கு, அதாவது ரூ.50 கோடிக்கு மேற்பட்டு ரூ.100 கோடிக்கு உட்பட்ட முதலீடுள்ள தொழில்களுக்குச் சிறப்பு முதலீட்டு உதவித் தொகையாக ரூ.25 இலட்சமும், ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட முதலீடு கொண்ட தொழில்களுக்கு உதவித் தொகை யாக ரூ.50 இலட்சமும் வழங்கப் படும் என்று அரசு அறிவித்துள்ளது இவற்றிற்கு முறையே 5 ஆண்( விற்பனை வரி விலக்கு அல்லது 1( ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்தல், ( ஆண்டுகளுக்கு விற்பனை வா விலக்கு அல்லது 12 ஆண்டுகளுக் வரி தள்ளிவைப்பு போன்ற வச அளிக்கப்படும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்குப் போதி அளவில் மின்சக்தி கிடைத்தி

வேண்டியது மிகவும் அவசியம் என்பதனை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு செயல்பாட்டிலுள்ள திட்டங்களை விரைவு படுத்திடவும், புதிய திட்டங்களை உருவாக்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின்சக்தி உற்பத்தியில் தனியார் முயற்சியை ஊக்குவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மகளிர்தம் ஈடுபாட்டினை மேம்படுத்த சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த கீழ்க்காணும் முடிவுகளையும் அரசு எடுத்துள்ளது:-

தொழில்கள் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தோன்றி, வளர்ந்திட அடிப்படைத் தேவைகள் போதிய அளவில் கிடைக்கப் பெறுதல் மிகவும் அவசியமாகும். இதற்கென அடிப்படை வசதி அமைப்பு நிறுவனம் ஒன்று அமைக்கப்படும். இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டு முதலீட்டாளர்கள், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள், தொழில் முனைவோர் இவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், தேவையான உரிமங்களையும் ஒப்புதல்களையும் பெற்றுத்தருதல், இவற்றிற்கெனத் தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதன்மூலம் தமிழகத்தில் நடைமுறை இடர்ப்பாடுகள் இன்றித் தொழில்கள் மலர்ந்திட இயலும் என்று அரசு கருதுகிறது.

**உதவித் தொகை**

அ. தற்போது 31 மிகவும் பிற்பட்ட வட்டங்கள் உள்ளிட்ட 107 பிற்பட்ட வட்டங்களிலும், அரசுத் தொழில்பேட்டைகள் போன்றவற்றிலும் முதலீட்டு உதவித் தொகை முதலீட்டில் 15 விழுக்காடு உச்ச அளவாக ரூ.15 இலட்சம் அளிக்கப்படுகிறது. மிகவும் பிற்பட்ட வட்டங்களில் அமைந்திடும் தொழில்களுக்கு உதவித் தொகை முதலீட்டில் 20 விழுக்காடு உச்ச அளவு ரூ.20 இலட்சமாக இனி உயர்த்தப்படும்.

ஆ. தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காட்டிற்கு மேல் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக்காடு உச்ச அளவாக ரூ.5 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்படும். ஆனால் பொதுவாக ஏற்கெனவே மகளிருக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் அளித்து வந்துள்ள தைக்கப்பட்ட ஆடைகள், கையால் தீப்பெட்டி செய்தல் போன்ற தொழில்கள் இவற்றில் அடங்கா.

இ. மின்னணுத் தொழில், தோல் தொழில் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கெனச் சிறப்பு முதலீட்டு உதவித் தொகை வழங்கிடும் திட்டம் செயற்பாட்டில் உள்ளது. கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர், பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில் போன்ற தொழில்கள் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ளவை என்ற அடிப்படையில் முன்னுரிமை பெறவேண்டிய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளித்திடும்.

ஈ. அரசு சார்புடைய எல்லாப் புதிய தொழிற்பேட்டைகளிலும், தொழில் மையங்களிலும், தொழிற்கூடங்கள் மற்றும் மனைகள் இவற்றில் 30 விழுக்காடு மகளிருக்கு ஒதுக்கப்படும்.

புதிய தொழில்களை ஊக்குவிப்பது எந்த அளவிற்கு முக்கியமோ அந்த அளவிற்கு ஏற்கெனவே உள்ள தொழில்களும் சரிவரச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் விளைவாக ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் விரைவில் செயல்படத் துவங்கும். இதற்கான பூர்வாங்க வேலைகள் கடந்த மாதத்திலேயே துவக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி நிறுவனம் (டிட்கோ) ரூ. 600 கோடி மொத்த முதலீடு கொண்ட 9 தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும். இந்நிறுவனத்துடன் இணைந்து முதலீடு செய்யக்கூடிய தொழில் முனைவோர்களைத் தொடர்பு கொள்ளுமாறு இந்நிறுவனம் செய்தித்தாள்களில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனம் இது சம்பந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கும்.

ரூ.5,000 கோடி முதலீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பழுப்பு நிலக்கரி வளத்தை அடிப்படையாகக் கொண்டு 1,500 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்திடும் திட்டத்தை டிட்கோ நிறுவனம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத்துறையில் செயல்படுத்திடுதல் அரசின் பரிசீலனையில் உள்ளது. முதல் கட்டமாக ரூ.1,500 கோடி முதலீட்டில் 500 மெகாவாட் உற்பத்தியை இது மேற்கொள்ளும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு மைய அரசு கோரப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ரூ.395 கோடி செலவில் அதன் வருடாந்திர உற்பத்தித் திறனை 90,000 மெட்ரிக் டன்னிலிருந்து 1,80,000 மெட்ரிக் டன்னாக இரட்டிப்பாக்கத் திட்டம் கொண்டுள்ளது. இது சம்பந்தமான பணிகள் இவ்வாண்டில் துவங்கும்.

**● இந்த ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.**

**● தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.**



சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுத் தொழில் நகரம் ஒன்றினைத் தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் அமைத்திடும், சிறிய, நடுத்தர மற்றும் பெரிய மின்னணுத் தொழில்கள் ஒரே மையத்தில் அமைந்திட இது வழிவகுக்கும். இங்கு தேவையான எல்லா அடிப்படை வசதிகளும் அமைத்துத் தரப்படும்.

ரூ.25 கோடி முதலீட்டில் இத்தாலிய அரசு மற்றும் மைய அரசு உதவியுடன் கம்ப்யூட்டர் மூலம் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிலையம் ஒன்று அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. தமிழ்நாட்டில் பொறியியல் தொழில்களுக்குத் தேவையான கருவிகள், அச்சுகள் மற்றும் மோல்டுகள் இவற்றை இது உற்பத்தி செய்ய உதவும்.

தமிழ்நாடு கனிம வள நிறுவனம் (டாமின்) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் (சிவகங்கையில்) ரூ.15 கோடி முதலீட்டில் கிரானைட் பெனிபிசியேசன் திட்டம் ஒன்றினை அமைத்திட இந்த ஆண்டில் பணிகளைத் துவக்கும். இது முழு வடிவில் அமைந்திடும் போது ரூ.200 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டில் உயர் தொழில்நுட்பம் கொண்ட பல சார்புத் தொழில்கள் உருவாகிட வழிபிறக்கும்.

இதைத்தவிர, வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் கிரானைட் பாறைகள் வெட்டி மெருகேற்றும் பிரிவுகளை அமைத்திடும். தருமபுரி மாவட்டத்தில் பர்கூர் அருகே மாதப்பள்ளி கிராமத்தில் ரூ.15 கோடி முதலீட்டில் கிரானைட் தொழில் மையம் அமைத்திட அண்மையில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சென்னையில் தரமணியில் ரூ.25 கோடி முதலீட்டில் ஓர் நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம் அமைக்கப்படும். இது மாநில அரசும், மைய அரசின்

**● சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுத் தொழில் நகரம் ஒன்று அமைக்கப்படும்.**

**● சென்னை தரமணியில் ரூ.25 கோடி முதலீட்டில் ஓர் நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம் அமைக்கப்படும்.**

டிரேட் ஃபேர் அத்தாரிட்டியும் இணைந்து கூட்டுத்துறையில் அமைத்திடும் திட்டமாகும். இதில் பொருட்காட்சியகத்தோடு, பெரிய கூட்ட அரங்கு, புதுடெல்லியில் உள்ள அப்பு-கர் (Appu-Ghar) போன்ற பொழுதுபோக்குப் பூங்கா போன்றவை அடங்கும். இது சம்பந்தமான ஒப்பந்த மடல் டிரேட் ஃபேர் அத்தாரிட்டியுடன் ஒப்பமிடப்பட்டுள்ளது. இந்த வளாகம் சம்பந்தமான வேலைகள் விரைவில் துவங்கும்.

காக்களூரில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்றுமதி சார்புடைய ஆடைகள் உற்பத்தித் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்படும். இது பெருவாரியான வேலைவாய்ப்பினுக்கு வழிவகுப்பதோடு, நாட்டிற்கு அவசியமாகத் தேவைப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டவும் வகை செய்யும். இது சம்பந்தமான வேலைகளை சிட்கோ நிறுவனம் மேற்கொள்ளும்.

ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி நவீன மாதிரிகள் மற்றும் வடிவமைப்புகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் ஒன்று அரசால் அமைக்கப்படும். நெசவுத் தொழில் பொருள்களைப் பொறுத்தவரை, 1989-90-இல் நாட்டின் மொத்த ஏற்றுமதி ரூ.6,987 கோடியாகும். இதில் தமிழகத்தின் பங்கு ரூ.1,240 கோடியாகும். அதாவது 18 விழுக்காடு ஆகும். இதில் பருத்தி ஆடைகள் ஏற்றுமதி மட்டும் ரூ.500 கோடியாகும். பன்னாட்டுச் சந்தையில், நமது ஆடைகளும், தோல் பொருள்களும் இன்னும் அதிக அளவில் விலை போக வேண்டுமானால் அவை மாறிவரும் நவீனத் தேவைகளை நிறைவு செய்திடக்கூடிய வகையில் அமைந்திட வேண்டும். எனவே அயல்நாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ப நமது பொருள்களை உருவாக்கக்கூடிய திறன்பெற்ற மனித வளத்தை உருவாக்க இம்மையம் வகைசெய்யும். இது புதுடெல்லியிலுள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஃபாசன் டெக்னாலஜி (N.I.F.T.) நிலையத்தைப் போன்று அமையப் பெறும்.

பொருள் உற்பத்தியை அதிகரிப்பதிலும், குறைந்த முதலீட்டில் பரவலான முறையில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் இவற்றின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதனை அரசு உணர்ந்துள்ளது. இவற்றின் வளர்ச்சியினை மேம்படுத்தக்கூடிய வகையில் நடைமுறைகளை எளிதாக்குதல், நவீன உத்திகளில் பயிற்சி அளித்தல், மூலப்பொருள்கள் போதுமான அளவில் கிடைக்கச் செய்தல், பொருள் விற்பனைக்கு உதவி அளித்தல், ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றிற்கு அரசு முக்கியத்துவம் அளித்திடும்.

தற்போது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு-குறிப்பாக, சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு உரிய முயற்சிகளை மேற்கொண்டிடும் பணியில் 19 மாவட்டத் தொழில் மையங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றின் செயல்திறனை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கென அரசு

கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தும்:

அ. அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் ஒரு இலட்சம் சிறு மற்றும் ஊரகத் தொழில்கள் அமைக்கப்படும். இவற்றின் மூலம் உற்பத்திப் பெருக்கம், பரவலான வேலை வாய்ப்பு மற்றும் கூடுதலான ஏற்றுமதி இவற்றிற்கு வழிவகுக்கப்படும்.

ஆ. பிற்பட்ட பகுதிகளில் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் நோக்குடன், 107 பிற்பட்ட வட்டங்கள் ஒவ்வொன்றிலும் அடிப்படை வசதிகளுடன் கூடிய குறைந்தது 10 தொழிற்கூடங்களாவது அமைத்துத் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1,070 தொழிற்கூடங்கள் பிற்பட்ட பகுதிகளில் உருவாகும்.

இ. இந்த 107 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் தொழில்களுக்குரிய மின் இணைப்பு வசதி (Industrial feeder) குறைந்தது ஒன்றாவது அமைத்துத் தரப்படும்.

ஈ. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் செயல்படும் ஒருமுனைத் தீர்வுக் குழுக்களின் (Single Window Committees) செயல்திறன் தேவையான உரிமங்களும், ஒப்புதல்களும், விரைவாகவும் குறிப்பிட்ட கால அளவுகளுக்குள்ளும் கிடைத்திடக் கூடிய வகையில் மேம்படுத்தப்படும். முடிவுகளை மாவட்ட நிலையிலேயே மேற்கொள்ளக்கூடிய வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படும். விண்ணபப்பப்படிவங்களும் எளிதுபடுத்தப்படும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் வேகம் விரைவுபட வேண்டுமானால் இதில் மைய அரசின் முதலீடு மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கிறது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழகத்தில் மைய அரசின் முதலீடு எவ்வாறு குறைந்துள்ளது, இக்குறையினைப் போக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையெல்லாம் மாண்புமிகு பிரதமர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட மைய அமைச்சர் பெருமக்களிடமும் நேரிடையாக வலியுறுத்தியுள்ளேன்.

பாதுகாப்புத்துறை, தொலைத்தொடர்பு மற்றும் ரெயில் போக்குவரத்துத் துறைகளின் முதலீட்டினை உயர்த்துமாறு மைய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளெல்லாம் பெரும் முயற்சிக்குரிய ஓர் சிறிய துவக்கமே. இது சம்பந்தமாகத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழகம் ஓர் உயர்ந்த நிலையை எய்திட வேண்டும் என்பது அரசின் திட்டவட்டமான குறிக்கோளாகும். தமிழகத்தில் தொழில் உற்பத்தியினைப் பெருக்குதல், உற்பத்தித் திறனை உயர்த்துதல், பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல், நாட்டின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பொருள்கள் கூடுதலான பங்கினைப் பெறுதல் போன்ற குறிக்கோள்களை அடைந்திடத் தேவையான அனைத்து உதவிகளையும் அளித்திட அரசு முன்வரும். இவற்றைப் பயன்படுத்தி, அரசுக்கு ஒத்துழைப்புத் தந்து செயலாற்ற வேண்டியது தொழில் முனைவோரின் பொறுப்பாகும்.

**தொழிற்சாலைகள் சட்டத் திருத்தம்**

மிகச் சிறிய தொழிற்பிரிவுகள், தொழிற்சாலைகள் சட்டத்திலிருந்து விலக்குப் பெற ஏதுவாகத் தொழிற்சாலைகள் சட்டத்தின்படி குறிப்பிட்டுள்ள குறைந்தபட்சத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அதற்கேற்பத் தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும் எனவும் சிறு தொழில் சங்கங்கள் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திருத்தம் கொண்டுவரப்பட்ட பின், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் ஈர்க்கப்படும் வரம்பு, மின்சக்தி கொண்ட தொழிற்பிரிவுகளின் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 10 தொழிலாளர்களுக்குப் பதில் 25 தொழிலாளர்களாகவும்; மின்சக்தி அற்ற தொழிற்பிரிவுகளில் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 20 தொழிலாளர்களுக்குப் பதிலாக 50 தொழிலாளர்களாகவும் இருக்கும். 10 குதிரைத் திறன் வரை பயன்படுத்தும் தொழிற்சாலைகள், மின்சக்தியைப் பயன்படுத்தாத தொழிற்சாலைகளாகக் கருதப்படும். ●

## சேமித்து வைப்பதே சிறந்த வருமானம்!

பணம் செலவு செய்வதை எழுதி வை; செலவு செய்தது அவசியம் தானா என்பதை எண்ணிப் பார்; சிக்கனம் தானாக வந்து விடும்!

—காந்தியடிகள்

திறமையற்றவர்கள் சிக்கனமாயிருக்க முடிவதில்லை; சிக்கனமில்லாதவர்களிடம் பணம் தங்குவதில்லை.

—சிங்-செள

சீராகச் செலவு செய்து சேமித்து வைப்பதே ஒரு சிறந்த வருமானம்.

—எட்மண்ட்பர்க்

வறுமையை விட, சிக்கனமின்மை மிகக் கொடியது.

—சிங்-செள

பைசாவை நீ பத்திரப்படுத்தினால் போதும், ரூபாய்கள் தாங்களே தங்களைக் கவனித்துக் கொள்ளும்.

—ஃபிராங்க்லின்

சிக்கனம் வாழ்க்கைப் போராட்டத்தில் பாதியாகும். பணம் தேடுதல் அவ்வளவு கஷ்டமன்று, அதை முறையாகச் செலவழிப்பதே கஷ்டம்.

—ஸ்பர்ஜியன்



# கரும்பு உற்பத்தி



நமது நாட்டின் மிக முக்கிய பயிர்களில் ஒன்றான கரும்பு உற்பத்தியின் விலை மதிப்பானது, நாட்டின் மொத்த விவசாய உற்பத்தியின் விலை மதிப்பில் சுமார் 7 சதவிகிதமாக உள்ளது. நாட்டில் கரும்புப் பயிரைச் சாகுபடி செய்வதில் சுமார் இரண்டரைக் கோடி விவசாயிகள் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது கரும்பு பயிரானது, பூமத்திய ரேகையின் இரு பக்கங்களிலும் உள்ள வெப்பப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்தியாவிலும் சில பசுபிக் தீவுகளிலும்தான் கரும்பு முதன் முதலாகச் சாகுபடி செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்துதான் கரும்புச் சாகுபடியானது சீனாவிலும் அரபு நாடுகளிலும் பரவியது. பின்னர் கரும்புப் பயிரை சிசிலி தீவிலும், ஸ்பெயின் நாட்டு தென் பகுதியிலும் அராபியர்கள் கொண்டு போய் சாகுபடி செய்ய ஆரம்பித்தனர்.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கரும்புச் சாகுபடி, மேற்கு இந்தியத் தீவுகளுக்குப் பரவியது. அந்தத் தீவுகளில் முதன் முதலாக பார்படோஸ் பகுதியில் பயிரிடப்பட்டது. இந்தியா மட்டுமல்லாமல் பிரேசில், கியூபா, பாகிஸ்தான், மெக்சிகோ, பிலிபைன்ஸ், தாய்லாந்து, சீனா, அர்ஜென்டினா, அமெரிக்கா, கொலம்பியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் கரும்பைப் பயிரிடும் முக்கிய நாடுகளாகும்.

**கரும்பு பயிராகும் பகுதிகள்**

இந்தியாவில் மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டுமல்லாமல் பஞ்சாப், அரியானா, உத்திரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் கரும்பு பயிராகிறது.

நாட்டில் கரும்பு பயிராகும் மொத்த நிலப்பரப்பில் பாதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பு, உத்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரத்தில் பத்து சதவிகித நிலங்கள் உள்ளன. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் 45.5 சதவிகிதத்தை உத்திரப்பிரதேசமும் சுமார் 13 சதவிகிதத்தை மகாராஷ்டிரமும் உற்பத்தி செய்கின்றன.

பல்வேறு தட்ப வெப்ப நிலைகள் காரணமாக, கரும்புப் பயிர் ஜூலை

• • •

**கரும்பு உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கரும்பு வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முதல் செய்துள்ளதன் விளைவாக, சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் பெரும்பலன்கள் ஏற்பட்டுள்ளன.**

• • •

மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரைதான் வளருகிறது. உத்திரப் பிரதேசத்தில் கரும்பு பயிரிடப்படும் நிலங்களில் சுமார் 70 முதல் 75 சதவிகிதம் வரை நீர்ப்பாசன வசதி பெறும் நிலமாகும். அதைப்போல பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களில் கரும்பு பயிராகும் நிலங்களில் சுமார் 85 முதல் 90 சதவிகித நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறும் நிலங்களாகும். பீகார் மாநிலத்தில் இந்த அளவு சுமார் 25 சதவிகிதமாக உள்ளது.

### சர்க்கரைத் தொழில் வளர்ச்சி

இந்தியாவில் முதலாவது நவீன சர்க்கரை ஆலையானது உத்திரப் பிரதேசத்தில் 1903-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1932-ஆம் ஆண்டு வரை நாட்டில் சர்க்கரைத் தொழில் மிகவும் மெதுவாகவே வளர்ந்தது. 1950-51-ஆம் ஆண்டு வாக்கில் நாட்டில் இந்தச் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 139 தான். அவற்றில் உற்பத்தியான சர்க்கரையின் அளவு 11,34,000 டன்தான். ஆனால் இன்றோ இந்தியாவில் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 350ஆக உயர்ந்துள்ளது. அவற்றின் உற்பத்தி சக்தி சுமார் 73 இலட்சம் டன். 1981-82-ஆம் ஆண்டில் இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 84 இலட்சம் டன்னைத் தாண்டிவிட்டது. அதாவது பிரேசில், கியூபா ஆகிய நாடுகளையும் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முந்திவிட்டது.

கரும்பு உற்பத்தியான நிலங்களின் பரப்பு, உற்பத்தியளவு ஆகியவற்றைப் பொறுத்தவரை 1980-90-ஆம் ஆண்டு காலகட்டத்தில் தாறுமாறான நிலை காணப்பட்டது. 1981-82-ஆம் ஆண்டில் கரும்புச் சாகுபடியான நிலப்பரப்பு 31 இலட்சத்து 90 ஆயிரம் இருந்தது. அதற்கடுத்த ஆண்டில் இந்த அளவு 33 இலட்சத்து 60 ஆயிரம் எக்டேராக உயர்ந்தது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த அளவு படிப்படியாகக் குறைந்து 1985-86-ஆம் ஆண்டில் 28 இலட்சத்து 50 ஆயிரம் எக்டேர் அளவாக ஆயிற்று. 1986-87-ஆம் ஆண்டிலிருந்து இந்த அளவு ஏறுமுகமாயிற்று. 1989-90-ஆம் ஆண்டு இந்த அளவு 34 இலட்சத்து 10 ஆயிரம் எக்டேராக உயர்ந்தது. அதைப்போல 1982-83-ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தியளவு 18 கோடி 95 இலட்சம் டன்னாக இருந்தது. ஆனால், இந்த அளவு 1984-85-ஆம் ஆண்டில் 17 கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரம் டன்னாகக் குறைந்தது, என்றாலும் 1988-89-ஆம் ஆண்டில் நிலைமை மேலும் வளர்ந்து இந்த உற்பத்தியானது 20 கோடி டன்னைத் தாண்டிவிட்டது.

> ★ புதிய சமுதாயம் அமைக்க வேண்டும் என்ற மனப்பான்மை நமக்கு ஏற்பட வேண்டும்; பழைய வழக்கத்தை விடமாட்டேன்; ஆனால் புதுவாழ்வு மட்டும் வேண்டும் என்று சொல்லுவது எப்படிச் சரியாகும்?
>
> —காமராசர்

1990-91-ஆம் ஆண்டில் கரும்பின் மொத்த உற்பத்தியானது சுமார் 23 கோடியே 34 இலட்சத்து 50 ஆயிரம் டன்னாக இருந்தது. ஆனால், குறியளவு 22 கோடி டன்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்க்கரை உற்பத்தி 1990-91-ஆம் ஆண்டில் இத்தகைய உச்ச அளவை எட்டியதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்றால், 1. சிறந்த வித்துக்கள் கிடைத்தன. 2. பயிர்களில் ஏற்பட்ட பூச்சிகளை ஒழிக்க பூச்சிக்கொல்லி மருந்துகளை உடனுக்குடன் தெளிப்பதில் சிறந்த பலன்கள் கிடைத்தன. 3. பயிர் நடுவதில் சரியான சமயம் பார்த்து பணி நடந்தது. 4. அறுவடை தக்க சமயத்தில் நடந்தது. 5. பயிரிடுவதில் நவீன முறைகள் பின்பற்றப்பட்டன. 1991-92-இல் கரும்பு உற்பத்தியளவு 23 கோடி டன் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### உற்பத்தித் திறனை உயர்த்துதல்

இரண்டாயிரம் ஆண்டு வாக்கில் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் தேவை அளவுகள், முறையே சுமார் 2 கோடியே 40 இலட்சம் டன், 2 கோடியே 99 இலட்சம் டன் ஆக இருக்கும் என்று தேசிய விவசாயக் கமிஷன் மதிப்பிட்டுள்ளது. இந்தத் தேவையைச் சமாளிப்பதற்காகச்சுமார் 35 கோடி டன் அளவுக்கு கரும்பை நாடு உற்பத்தி செய்ய வேண்டியிருக்கும். ஆகவே, உற்பத்தித் திறனைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கரும்பு சாகுபடியாகிற நிலங்களின் மொத்தப் பரப்பை உயர்த்துவது அநேகமாகச் சாத்தியம் ஆகாது. ஆகவே, உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டியது மிக அவசியமாகிறது.

நாட்டில் கரும்புப் பயிர் பற்றிய ஆராய்ச்சியை இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், மாநில அரசுகளின் வேளாண்மைத் துறைகள் ஆகியவை நடத்தி வருகின்றன. லக்னோவில் உள்ள இந்திய கரும்பு ஆராய்ச்சிக் கழகம், கோவையில் உள்ள கரும்பு பயிர்க் கழகம் ஆகிய இரண்டு மத்திய கழகங்கள் மட்டுமல்லாமல் ஏற்கெனவே உள்ள பழைய ஆராய்ச்சி நிலையங்கள், நாட்டில் கரும்பாராய்ச்சி விஷயத்தில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளன.

### ஆராய்ச்சி நிலையங்கள்

புதிய ஆராய்ச்சி நிலையங்கள் சில இடங்களில் அமைப்பது மட்டுமல்லாமல், பழைய ஆராய்ச்சி நிலையங்களை வளப்படுத்துவதற்கும் இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கரும்புப் பயிர் வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் தங்கள் சொந்தப் பொறுப்பின் பாகமாகவே கருதி பல மாநிலங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. கரும்பு சாகுபடியாகும் நிலங்களின் பரப்பை விரிவாக்குவதில் இந்த நடவடிக்கைகள் பெருமளவுக்கு உதவுகின்றன. இதனால் கரும்பு உற்பத்தியும், சர்க்கரை உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

கரும்புப், பயிர் வளர்ச்சியில், சர்க்கரை ஆலைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முதலீடு செய்துள்ளதன் விளைவாக, சர்க்கரை ஆலைகளுக்கும், கரும்புச் சாகுபடியாளர்களுக்கும் பெரும் பலன்கள் ஏற்பட்டுள்ளன. கரும்பு உற்பத்தியாளர் சங்கங்களும், கரும்பு வளர்ச்சிக் கழகங்களும் சர்க்கரை ஆலைகளின் ஆதரவில் கரும்புப் பயிர் வளர்ச்சிப் பணியை நடத்துகின்றன.

—பத்திரிகைத் தகவல் அலுவலகம்



பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம்:

# எழுத்தறிவுத் திட்டம்

**'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க, எல்லார்க்கும் எழுத்தறிவு கிடைத்திட வேண்டும் என்னும் நோக்கில் 'அறிவொளித் தீபம் ஏற்றும் விழா' நடைபெறுகிறது. அதனை விளக்குகிறது இக்கட்டுரை.**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் முழு எழுத்தறிவுத் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாவட்டத் தலைநகரான சிவகங்கையில் 14.4.91 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி குத்சியா காந்தி, இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் சீரிய நோக்கம், எழுத்தறிவற்றவர்களுக்குக் கல்வி அறிவை வழங்குவதே ஆகும்.

இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 10,74,989 பேர்கள் ஆகும். மத்திய, மாநில அரசுகளால் இம்மாவட்டம் இத்திட்டத்தைச் செயல்படுத்திடத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. தனிமனித முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் எழுத்தறிவு மிகவும் இன்றியமையாதது. உலகிலேயே பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் நம் நாட்டில்தான், எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இந்தியாவில் 1991-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் எழுத்தறிவுற்றோர் (15-35 வயது வரை) எவ்வளவு பேர்கள் உள்ளனர் என்பதைக் கண்டறிய 6.7.91 அன்று இம்மாவட்டம் முழுவதும் ஒரு நாள் புள்ளி விவரச் சேகரிப்புப் பணி நடைபெற்றது. இப்பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. குத்சியாகாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 6.7.91 அன்று கொல்லங்குடியில் துவக்கி வைத்தார். இக்கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில் படிக்காதவர்களின் எண்ணிக்கை (15 முதல் 35 வயது வரை) ஒரு இலட்சத்து ஏழாயிரத்து நூற்று இருபத்து ஏழு) (1,07,127) பேர்கள் உள்ளனர். இதில் பெண்கள் 74,286, ஆண்கள் 32,841 பேர்கள்.

இவர்களுக்குக் கல்வி போதித்திட தொண்டுள்ளம் கொண்ட 12,000 தொண்டர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அரசுப் பணியாளர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் சேவை மனப்பான்மை கொண்ட படித்தவர்கள் தாமாக முன்வந்து இப்பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ளனர்.

எழுத்தறிவற்றவர்களைப் படிக்கத் தூண்டும் வகையில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்ற பேரணிகள், மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவை இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப் பெற்றன. காரைக்குடியில் பெண்கள் பெருமளவில் பங்குபெற்ற மாவட்ட மகளிர் பேரணியும், கருத்தரங்கமும் நடத்தப்பெற்றன. மேற்கண்ட நிகழ்ச்சிகளின் வாயிலாக, சாதாரண மக்களும் இந்த அறிவொளி இயக்கம் பற்றிய அறிய வாய்ப்பு ஏற்பட்டது.



மக்களிடம் எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்த, தொண்டர்களால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. இக்கலை நிகழ்ச்சிகள் 24.7.91 அன்று துவக்கப்பட்டு இம்மாவட்டத்தின் பதினொரு ஒன்றியப் பகுதிகளிலும் நடத்தப்பெற்றன. கலைக்குழுவில் மருத்துவர், பொறியாளர், கல்லூரி ஆசிரியர்கள், மட்டுமல்லாமல், சத்துணவு அமைப்பாளர், ஆட்டோ ஓட்டுநர், மாணவர்கள் என்று பலர் இடம் பெற்றுள்ளனர். கலை நிகழ்ச்சிகள் 18 நாட்கள் தொடர்ந்து நடந்தன.

இந்தக் கலைக்குழுவினர் இம்மாவட்டத்தில் 990 கிராமங்களில் கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். 3 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். 15.8.91 அன்று சிவகங்கையில் அறிவொளித் தீபம் ஏற்றும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேசுவரன் அவர்கள் அறிவொளித் தீபத்தை ஏற்றி வைத்தார். திருமதி திலகவதி, இ.கா.ப., அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்துப் பேசினார். அன்றைய தினம் இம்மாவட்டத்தில் 2 இலட்சம் வீடுகளில் அறிவொளித் தீபம் ஏற்றப்பட்டது.

17.8.91 அன்று இளையான்குடியில் அறிவொளி வகுப்பு தொடக்க விழா நடைபெற்றது. அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லெட்சுமி அவர்கள் அறிவொளி வகுப்பைத் துவக்கி வைத்து கற்போருக்குப் 'பட்டா' - 'படி' போன்ற வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுதிக் கல்வியைப் போதித்தார். திட்ட அலுவலர் திரு. எஸ். கதிரேசன் அவர்கள், கற்போருக்குப் புத்தகங்கள், சிலேட்டுகள், குச்சிகள் போன்ற எழுதுபொருட்களை வழங்கினார். ●

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:

# வளர்ச்சிப் பணிகள்

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், 1991-92-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் 233.65இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. சீரிய முறையில் மேற் கொள்ளப்பட்ட குடும்ப ஆய்வு களின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மிகவும் நலிந்த மக்களின் வாழ்வு மேம்பட திட்டமிட்டபடி 7,477 பயனாளிகள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அப் பயனாளிகளுக்கு வங்கிகளின் மூலம் ரூ.160.87 இலட்சம் மானியமாக வழங்கப்படும் என்றும், அத்தொகை யாவும் 31.12.91-க்குள் பயனாளி களுக்கு போய்ச் சேரும் வகையில் பணிகள் செய்யப்பட வேண்டுமென வும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்குத் தீர்மானிக்கப்பட்ட பய னாளிகளின் எண்ணிக்கை 10,000 ஆகும். எனவே, எஞ்சியுள்ள 2,523 பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அவர்கள் யாவரும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மிக நலிந்த மக்களாகவே இருக்க வேண்டுமெனவும்கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங் கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1991-92-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் ஒதுக் கீடு செய்யப்பட்ட தொகை ரூ.248 இலட்சமாகும். அவற்றில் மானிய மாக மட்டும் வழங்கப்பட்ட தொகை 200.25 இலட்சமாகும். மொத்தம் 7,894 பயனாளிகள் இலக்காக நிர் ணயிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 8,919 பயனாளிகள் தேர்ந்தெடுக் கப்பட்டு நிதியுதவி அளிக்கப்பட்ட னர். எனவே, நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு கூடுதலாக 1,025 பய னாளிகள் பயன் பெற்றுள்ளனர். இவற்றில் 8,097 சொத்துக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவர்களுள் 4,495 பயனாளிகள் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். 3,896 பெண்களும் அடங்குவர். பலவகை உதவிகளில் கறவை மாடுகள் மட்டும் 3,902 பேருக்கு வழங்கப் பட்டுள்ளன.



### ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசித்து வரும் கிராமப்புற மக்களி டையே வேலை வாய்ப்பினை ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தது நூறு நாட் களுக்கேனும் உறுதியளிக்கவும் அவர் தம் உழைப்பால் சமுதாயச் சொத் துக்களை உருவாக்கிடவும் வேண்டி 1989-90-ஆம் ஆண்டு முதல் முன்னர் இருந்த திட்டங்களை ஒருங் கிணைத்து ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை 2,878 ஆகும். இவற்றில் 2,604 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.757 இலட்சம் ஆகும். இதில் ஒதுக் கப்பட்ட தொகையில் 720 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் கீழ் 27 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டன. கடந்த ஆண்டில் ஆதிதிராவிடக் குடும்பங் களில் தொகுதி வீடுகள் 1,700 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் 2,150 வீடுகள் கட்டப்பட உள்ளன. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 450 வீடுகள் அதிகமாகும்

1991-92-ஆம் ஆண்டில் 16 பள்ளிக் கட்டடங்கள் கட்ட 22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 57 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்ட ரூ.39 இலட்சமும் 16 சத்துணவுக் கூடங்கள் அமைக்க ரூ.11 இலட் சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 45.6 கி.மீ. தார் சாலைகள் போடுவதற்காக ரூ.75 இலட்சமும் சரள் சாலைகள் 65 கி.மீ. அமைக்க ரூ.71 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 100 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டி முடிக்கப்பட வேண்டுமென நிர்ண யிக்கப்பட்டுள்ளது. சிறுபாசன வேலைகளுக்கென ரூ.142 இலட்சம் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டிற்கு மட்டும் 672 இலட்சமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ.153 இலட்சம் விடுவிக்கப்பட்டுச் செல விடப்பட்டுள்ளது.



### பெரு விவசாயத் திட்டம்:

பெரு விவசாயத் திட்டத்தின் கீழ், நிலம் மேம்பாட்டிற்காகரூ.4 இலட்சமும், சிறு பாசனத்திற்கென ரூ.26 இலட்சமும் நிதியாக ஒதுக்கப் பட்டுள்ளது. வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நிலத் தடி நீர்ப் பராமரிப்பு சிறு பாசனம், தோட்டக்கலை, கோழி வளர்ப்பு, சமூகக் காடுகள் வளர்த்தல் பணி களுக்கென 478 எக்டேர் பரப்பில் ரூ.15 இலட்சம் செலவிடத் திட்டமிடப் பட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2.60 இலட்சம் பலவகைச் செடிகளை இலவசமாக விநியோகித்து, மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவை யான மரக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட இருக்கின்றன.

"டிரைசம்" எனப்படும் தொழில் நுட்பப் பயிற்சி இலக்குப்படி. இவ் வாண்டின் இலக்கான 1,330 நபர் களில் 1,190 நபர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.56 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

"டோக்ரா" என்றழைக்கப் படும் மகளிர் குழந்தைகள் மேம் பாட்டுத் திட்டத்திற்கென 100 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 79 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. 1,441 நபர்கள் இலக் காக நிர்ணயிக்கப்பட்டுள்ளதில் 1,210 நபர்கள் பயனடைந்துள் ளனர். அவர்களில் தாழ்த்தப்பட்ட வர்கள் 499 நபர்கள் ஆவர். இத் திட்டத்திற்கென 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சாண எரிவாயுக் கலன்கள்

மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பு குறிக் கோளில் நவீன எரிபொருள் உற் பத்தியாக 1990-91-ஆம் ஆண்டில் சாண எரிவாயுக் கலன்கள் மானிய உதவியோடு 300 என்ற இலக்கை விட 372 கலன்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் சாதனை 124 சதவிகிதம். இவ்வாண்டில் இதன் இலக்கு 300 என நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை சாதனை 110 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

### சிறுசேமிப்புத் திட்டம்

சிறு சேமிப்பின் கீழ், இம்மாவட் டத்திற்கு கடந்த ஆண்டில் ரூ.20 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டி ருந்தும் மொத்தம் வசூல் 44.6 கோடியில் நிகர வசூலாக 19 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூ.24 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள் ளது. இவ்வாண்டு ஜூலைத் திங்கள் முடிய 12 கோடியே 44 இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதில் நிதி வசூல் மட்டும் 2 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஆகும்.

### கிராமக் குடிநீர்த் திட்டம்

கிராமக் குடிநீர் வழங்கலுக்கான போர்க்கால நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் மொத்தம் 577 கிரா மங்களும் 2,152 குக்கிராமங்களும் உள்ளன. இக்குக்கிராமங்களில் கடந்த ஆண்டில் 5 கிராமங்களுக்கு மட்டும் குடிநீர் வசதி செய்யப் படாமல் இருந்தது. அதையும் சேர்த்து தற்போது 1,210 ஊராட்சிகளில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது என்பது ஒரு சிறப்பான அம்ச மாகும். மேற்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 40 லிட்டர் குடிநீர்த் தேவையை அறிந்து, பழுதடைந்துள்ள குடிநீர்க் குழாய்களையும் விசைப் பம்புகளையும் ஆழ் குழாய்க் கிணறு களையும் முடிக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் குடிநீர் வசதிக்காக 20.4 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை இவ்வசதிக்காக ரூ.10.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன. மேலும் ரூ.10.2 இலட்சம் செலவிடத் திட் டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.



★ கல்வியும், பக்தியும் நிறைந்த தாய்மார்களின் இல்லங்களில்தான் உலகத் தலைவர்கள் பிறக்கிறார்கள்.

★ தைரியமே வாழ்வு; பயமே சாவு.

—விவேகானந்தர்



# மீன் வளம்

சென்ற ஆண்டு 38.36 லட்சம் டன்கள் மீன்கள் பிடிக்கப்பட்டன. 1950-51ல் மீன் உற்பத்தி 7.52 லட்சம் டன்களாக மட்டுமே இருந்தது இங்கே குறிப்பிடத்தக்கது. ஏழாவது திட்ட காலத்தில் மட்டும், மீன் பிடித்தல், 28 லட்சம் டன்களிலிருந்து 36.77 லட்சம் டன்களாக உயர்ந்தது.

1990-91ல் ஏற்றுமதி செய்யப்பட்ட மீன், நண்டு முதலிய கடலுணவுப் பொருட்களின் மதிப்பு ரூ. 890.40 கோடியாகும். 1961-62ல் வெறும் ரூ. 3.92 கோடி மதிப்புள்ள ஏற்றுமதியே நடைபெற்றது. ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நடவடிக்கைகளின் காரணமாகவே ஏற்றுமதி இந்த அளவு அதிகரித்துள்ளது.

1973-74ல் ஒரு எக்டேர் பரப்பளவில் 50 கிலோ மீன்கள் உற்பத்தியாயின. 1989-90ல் இந்த அளவு 1865 கிலோவாக பெருகிவிட்டது. அரசு நிர்வகிக்கும் 44 மீன் குஞ்சு பொரிக்கும் குட்டைகளுடன், தனியார் நிறுவனங்களும் இணைந்து 1990-91ல் 1300 கோடி மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தன.

இறால் வளர்ப்புக்கான உவர்நீர் பகுதிகளை மேம்படுத்துவதற்காக, 25 'உவர் நீர் மீன் வளர்ப்போர் வளர்ச்சி முகமைகள்' ஏற்படுத்தப்பட்டு 5000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு அவற்றின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடல்மீன் பிடித்தலைப் பொறுத்தவரை சென்ற ஆண்டில் 7328 சாதாரண படகுகளுக்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. கடற்கரைவரை வந்து கரைசேரக் கூடிய 202 புதுவகைப் படகுகளும் அறிமுகப்படுத்தப் பட்டன.

இதுவரை, நான்கு பெரிய மீன்பிடித் துறைமுகங்களும், 23 சிறிய மீன்பிடித் துறைமுகங்களும், 96 மீன் இறக்கப்படும் இடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

எட்டாவது திட்டகாலத்தில், 'மீன் வளர்ப்பு மேம்பாட்டு முகமைகள் இணையம்', 'மீன் வளர்ப்பு மேம்பாட்டு ஆணையக குழுமம்' ஆகியவற்றின் மூலம் மீன் வளர்ப்புத் திட்டங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

மீன் வளர்த்தலுக்காக மேலும் அதிக குளங்களை உருவாக்குதல், மீன் வளர்ப்போருக்கு மீன்/இறால் குஞ்சுகளை தாராளமாக அளித்தல், புதியவகை படகுகளை அறிமுகப்படுத்துதல்; பழமையான முறைகளில் கட்டுமரங்களைப் பயன்படுத்தி மீன் பிடிப்போர் டீஸலைப் பயன்படுத்தினால் அதற்கான ஆயத்தீர்வையை திருப்பிக் கொடுத்தல் முதலிய திட்டங்கள் வரும் ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

மீனவர்களுக்காக, விபத்து காப்புறுதித் திட்டம், தேசீய நலவாழ்வு நிதி, சேமிப்பு இணைந்த நிவாரணத் திட்டம் ஆகியனவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

—நன்றி: 'திட்டம்'

### சத்துணவுத் திட்டம்

இம்மாவட்டத்தில் 1,032 குழந்தைகள் நல நிலையங்களின் மூலம் சுமார் 50 ஆயிரம் குழந்தைகளும் ஏறக்குறைய 9,000 முதியவர்களும் பயன்பெற்று வருகின்றனர். 2,033 பள்ளி சத்துணவு நிலையங்கள் மூலம் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இன்னும் 180 குழந்தைகள் நல நிலையங்களுக்குப் புதிதாகக் கட்டட வசதிகள் செய்து தர வேண்டிய நிலை உள்ளது. மற்றும் மொத்தம் உள்ள சத்துணவு மையங்களில் 514 சத்துணவு மையங்கள் செப்பனிடப் பட வேண்டி உள்ளன. 447 மையங்களில் சமையல் கூடம் பழுது பார்க்கப்பட வேண்டி உள்ளது. இம்மாவட்டத்தில் இவற்றையெல்லாம் செப்பனிட தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த பெரியோர்கள் முன்வந்துள்ளனர்.

### சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டம்

இம்மாவட்டத்தில் நெல் தறுவைச் சாகுபடி மட்டும் 28,000 எக்டேரில் பயிரிடப்படுகிறது. இதுவரை 27,000 எக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஒரு எக்டேருக்குச் சராசரியாக 6 மெட்ரிக் டன் மகசூல் கிடைப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தில் 22,000 எக்டேரில் தறுவைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு ஆரம்பத்தில் நல்ல மழை பெய்ததின் காரணமாக 5,000 எக்டேரில் அதிகமாகத் தறுவைச் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தறுவைச் சாகுபடியில் மட்டும் நெல் உற்பத்தி 1 இலட்சத்து 69 ஆயிரம் மெ.டன் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 1 இலட்சத்து 55 ஆயிரம் டன் நெல் விளைந்துள்ளது. ஆகவே, இவ்வாண்டு 14 ஆயிரம் மெ.டன் நெல் அதிக விளைச்சல் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ●



# மூளையை மாற்றி அமைத்தல்

'தமிழம்' பன்னீர் செல்வம்

**உடலில் உள்ள மற்ற சில உறுப்புகளை மாற்றியமைக்கும் மருத்துவச் செய்திகளைப் பார்க்கிறோம்; மூளையை மாற்றியமைப்பது என்பது அவைகளிலிருந்து முற்றிலும் மாறுபாடானது; அதுபற்றி விளக்கும் கட்டுரை இது.**

நூற்றுக்கணக்கானவர்கள் 1980-களில் தங்கள் மூளையில் இல்லாத உயிரணுக்களை (Cells) அதில் வைத்துக் கொள்ள அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். குணப்படுத்த முடியாத சிலவகை மூளை நோயைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். மூளை தனிச் சிறப்புக் கொண்ட இலக்கங்கோடி (Billions) உயிரணுக்களால் ஆனது. அவை ஒவ்வொன்றும் ஆயிரம் தொடர்புகளைக் (Connections) கொண்டவை

மூளையை மாற்றி அமைத்தல் (Transplant) அல்லது மூளையில் ஒட்டுதல் என்பது, மற்ற உறுப்புகளை மாற்றி நடும் முறைகளுக்கு முற்றிலும் மாறானது. அறுவை மருத்துவர் முழு உறுப்பையே மாற்றி அமைப்பதில்லை. சிறுநீரகத்தை (Kidney) மாற்றுதல் வீட்டுக் குழாயின் வடிகட்டியை (Filter) மாற்றும் கம்மியர் வேலையைப் (Plumbing) போன்றது. மூளையை ஒட்டுதல் மின் பொறியியலைப் (Electric Engineering) போன்றது.

மூளை, பின்னிப் பிணைந்த சுற்றுக்களைக் (Circuits) கொண்டது. அவை ஒவ்வொன்றும் மற்றொன்றின் செயலில் மாற்றத்தை உண்டாக்கும். ஒரு வகையான சுற்றுப் பழுதடைந்தால் அதன் தொடர்பான பழுதடையாமல் இருக்கும் மற்ற சுற்றுகளும் சரிவர வேலை செய்யா. கோளாறுள்ள சுற்றுகளை மாற்றி அமைப்பதே ஒட்டுதலின் கொள்கை. அதனால் மூளையின் முழு அமைப்பும் மீண்டும் சரியாக வேலை செய்யும்.

**பொதுவான நோய்கள்:**

மனிதர்கள் பலவகை நோய்களால் துன்பப்படுகின்றனர். அவை மூளையைச் சேதப்படுத்துகின்றன. அதன் பாதுகாக்கப்பட்ட பகுதியை அல்லது உயிரணுக்கள் கூட்டத்தைத் தாக்குகின்றன. அவற்றில் பொதுவானவை:- (1) பார்க்கின்சன் நோய்- இது தசை நார்கள் (Muscles) ஒத்திசையும் தன்மையைப் பாதிக்கின்றது. (2) அல்ழெய்மர் நோய் - இது, முதியோர்களை நினைவிழக்கச் செய்கின்றது. (3) அன்டிங்டன் நோய் - இது, தலைமுறையாக வந்து நடுத்தர வயதில் நடமாட்டம், மனநிலை ஆகியவற்றைப் பாதிக்கின்றது.

உறுப்புக் குலைவுகள் (Strokes) இவ்வகையாக ஏற்படுவதில்லை. மூளையில் குருதிக் குழாய்கள் (Blood Vessels) அடைப்பட்டு அல்லது பிளவுபட்டுப் போனால் அதற்கு உயிர்வளி (Oxygen) செல்லாது; அதனால் ஒரு சிறிய பகுதி சேதமடையும். மூளையின் ஒரு சிறிய பகுதி அளவுக்கு மீறி இயங்குவதால்

**படம் 1-இன் சொற்கள்**

CORTEX - மேல் மூளை
SEPTUM - இடைத் தடுக்கு
HYPOTHALAMUS - கீழ்மூளை
PITUITARY GLAND - பசை நீர்ச் சுரப்பி
MID BRAIN - நடு மூளை
SPINAL CORD - தண்டு வடம்
CEREBELLUM - பின்தலை சிறுமூளை






படம் 2-இன் சொற்கள்

FOETAL RAT BRAIN - முதிர்க்கரு எலிமூளை
ADULT RAT BRAIN - முதிர்ந்த எலி மூளை
SUBSTANTIA NIGRA - நடுமூளை உள் உயிரணுத் தொகுதி
COLLECT - தொகுப்பு
TREAT WITH TRYPSIN - கணையச் சுரப்பி நீரில் பதப்படுத்துதல்
DISSOCIATE - தொடர்பறுத்தல்
INJECT - உட்செலுத்தல்
STRIATUM - மேல்மூளை உள் நரம்பிழைமம்
NIGRO STRIATAL PATHWAY - நட மூளை - மேல்மூளை வழிப்பாதை

உயிரணுக்களோடு தொடர்பு கொள்ளப் பயன்படும் நீளமான இழைமங்கள் அல்லது நரம்பணுவின் வால்கள் (Axons) சிதைந்து போகின்றன. மூளையின் உயிரணுக்களை ஒருமுறை பிரித்தால் அவை உயிரோடிருக்க ஒன்றுமே செய்ய முடியாது. மற்றொரு மூளையில் அமைத்தாலும் அவை உயிர் வாழா.

உடலின் உயிரணுக்களைப் போலல்லாமல் மூளையின் உயிரணுக்கள் பிறப்பின் பொழுதே முழு வளர்ச்சி அடைகின்றன. முதிர்கரு (Foetus) கருப்பையில் வளரும் பொழுதே மூளை நரம்பின் உயிரணுக்கள் பிரிந்து எண்ணிக்கையில் பெருகவும், புதிய தொடர்புகளைக் கொள்ளவும் ஆற்றல் பெறுகின்றன.

மூளையின் உயிரணுக்கள் ஒன்று போன்றவை அல்ல. செய்யும் பணியைப் பொறுத்தும் இருக்கும் இடத்தைப் பொறுத்தும் அவை உருவத்திலும் அளவிலும் வேறுபடுகின்றன. ஒவ்வொன்றும் வேதியல் (Chemical) தனித்தன்மை (Identity) உடையன. நரம்பின் உயிரணுக்கள் எல்லாம் நரம்பணு வால் முனைகளைக் கொண்டுள்ளன. அவற்றிலிருந்து ஒரு வேதியல் அல்லது நரம்புக் கடத்தியை (Neuro Transmitter) விடுவிப்பதன் மூலம் மற்றொன்றுடன் தொடர்பு கொள்கின்றன. சமிக்கையைப் (Signal) பெறும் உயிரணு தனக்கென்று தன்மீது எதிரடிப்பி (Receptor) என்னும்

காக்கை வலிப்பு நோய் (Epilepsy) ஏற்படுகின்றது. அது, பின்பு மூளை முழுவதும் ஆட்படப் பரவுகின்றது.

நரம்பறுவை மருத்துவர்கள் (Neuro Surgeons) இப்படிப்பட்ட நோய்களை நலமுள்ள மூளையின் இழைமத்தை (Tissue) எடுத்து நலமிழந்தோர் மூளையில் ஒட்டிக் குணப்படுத்த முடியும் என்று எண்ணுகின்றனர். இவற்றைக் குணப்படுத்த தகுந்த மருந்துகள் இப்பொழுது இல்லை.

அறுவை மருத்துவர் மூளையிலிருந்து உயிரணுக்களை எடுக்கும் பொழுது அதன் பரவலான தொடர்புகள் சிதைந்து போகின்றன. ஏனெனில் நரம்பு அமைப்பில் மற்ற




படம் 3-இன் சொற்கள்

SEPTUM - இடைத் தடுக்கு
VENTRICLES - மூளை உட்குழிவுப் பள்ளம்
PUTAMEN - மேல் மூளை உயிரணுத் தொகுதி
CAUDATE - வால்
STRIATUM - மேல் மூளை உள் நரம்பிழைமம்.
SUBSTANTIA NIGRA - நடுமூளை உள் உயிரணுத் தொகுதி
PITUITARY GLAND - பசை நீர்ச் சுரப்பி

HIPPOCAMPUS - மேல் மூளை
HYPOTHALAMUS - கீழ் மூளை



அணுத் திரண்மங்களைப் (Molecules) பெற்றுள்ளது. அப்படிப்பட்ட எதிரடிப்பிகள் அவைகளுக்குரிய நரம்புக் கடத்திக்கு மட்டுமே மறுமொழி (Reply) தரும்.

ஓர் உயிரணு, தனக்கு இடையேயுள்ள நுண்ணிய இடைவெளிக்குக் குறுக்காக தன் நரம்புக் கடத்தியை மற்றோர் உயிரணுவுக்கு விடுவிக்கும் நரம்பணு இடையிடத்தில் (Synapse) தான் அவற்றிற்கிடையில் தொடர்பு ஏற்படுகின்றது. ஒவ்வோர் உயிரணுவும் ஆயிரம் வரை நரம்பணு இடையிடத்தைக் கொண்டுள்ளது.

ஒருவகையான ஆராய்ச்சியில் ஓர் ஒட்டுதலுக்கு இழைமத்தின் (Tissue) சில் ஆயிரம் உயிரணுக்கள் தேவைப்படுகின்றன. அவற்றை ஒரு துண்டாகவோ (Solid Piece) அல்லது தொடர்பறுந்த (Dissociated) உயிரணுக் கூழாகவோ (Suspension) நுழைக்கின்றனர். ஒட்டுதலில் ஒட்டும் இழைமத்தின் அளவும், அதை மூளையினுள் நுழைப்பதற்குக் கைக்கொள்ளும் முறையும் தான், அது புதிய உடலில் நாம் விரும்பும்படி கால் கொள்கின்றதா என்பதை முடிவு செய்யும்.

ஒட்டியின் வாழுந்தன்மையை அதிகரிக்க ஒரே வழி, அதை மூளையின் உட்குழியில் (Ventricle) வைப்பதே ஆகும். மூளையின் இவ்விடங்களில் மூளை - தண்டுவட நீர்மம் (Cerebro Spinal Fluid) நிறைந்துள்ளது. ஒட்டி, தன் குருதி ஓட்டத்தைப் பெருக்கிக் கொள்ளும்முன் அது ஒரு வகை ஊட்டச் சத்தை அதற்கு அளிக்கின்றது. அதே நேரத்தில் ஒட்டி, வளர்வதற்கு உட்குழியில் உள்ள வெற்று இடம் வேண்டிய இடமளிக்கிறது.

ஒட்டி, மூளையின் உட்குழிவுச் சுவரில் ஒட்டிக்கொண்டு அருகிலுள்ள மூளை இழைமத்துடன் நாரிழையை (Fibers) வளர்க்கத் தொடங்கும். அது ஒட்டியை ஏற்றுக் கொண்ட மூளைக்குச் சிறிதளவு சேதத்தை ஏற்படுத்தினாலும் ஒட்டி, மூளையின் உட்குழிவுக்கு அருகிலுள்ள பகுதியை மட்டுமே அடையும்.

வாழ்வதற்கு வாய்ப்பு நலன்கள்:- நுண் குருதி நாளங்கள் (Blood - Capillaries) மிக அடர்த்தியாகப் பின்னிப் பிணைந்த மூளையின் மேற்பரப்புச் சாம்பல் நிறப் பகுதிக்குக் (Cortex) கீழே ஒட்டியை ஊன்றுவது மற்றொரு முறை. புதிய நாளங்கள் ஒட்டியை நோக்கிப் பாய்ந்து வளர்வதனால் உயிரணுக்கள் பிழைத்திருக்கும் வாய்ப்பு விரைவாக அதிகரிக்கின்றது. இவ்வுத்தியால் அவை அடையும் பரப்பிடங்கள் குறைவே.

எப்படியிருந்தாலும் நரம்பியலார் மூளையில் இப்படிப்பட்ட இடங்களை ஏற்படுத்த முடியும். வரும் நாளில் செய்யப்போகும் ஓர் ஒட்டு அறுவைக்கு மூளையில் நடப்போகும் இடத்திலிருந்து சிறிய அளவில் இழைமங்களை எடுக்கும் போது பொந்து (Cavity) ஏற்படும். அப்பொந்தில் புதிய குருதி நாளங்கள் பின்னலமைப்பை உருவாக்குகின்றன.

பொந்தை உருவாக்கிய ஓரிரண்டு கிழமைகளுக்குப்பின் அமைக்கப்படும் ஓர் ஒட்டி உடனடியாக அமைக்கப்படுவதைக் காட்டிலும் அதிகமாகப் பிழைக்கும் வாய்ப்பைப் பெறுகின்றது. சேதம்தான் புதிய இழைமங்களின் வளர்ச்சியைத் தூண்டி ஊட்டமளிக்கும் அணுத் திரள்களை உருவாக்க வழி செய்கின்றது.

ஒட்டுதலில் வெற்றி கிட்டுதல் கொடையாளி உயிரணுக்களின் வயதையுங்கூடப் பொறுத்துள்ளது. நரம்பணு வால்களை வளர்க்கும் உயிரணுக்கள் செப்பமானவை. மூளையின் எப்பகுதியிலிருந்து உயிரணுக்கள் வருகின்றனவோ அதைப் பொறுத்தே பல இடங்களில் இவை வளர்கின்றன.

புதிய மூளையில் ஒட்டி சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமானால் அதன் உயிரணுக்கள் பிழைத்திருக்க வேண்டும். அப்படி அவை பிழைத்திருந்தால் மட்டும் போதாது. புதிய மூளையின் உயிரணுக்களோடு அவை சிலவகைத் தொடர்புகளை ஏற்படுத்துதலும் வேண்டும். சரியான சூழ்நிலையில் ஒட்டப்படும் உயிரணுக்கள் நரம்பணு வால்களை வளர்க்கின்றன. அவை தம்மைச் சுற்றியுள்ள இழைமங்களின் உயிரணுக்களோடு நரம்பணுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு சிறிது தொலைவுக்கு ஊடுருவுகின்றன. ஒட்டியும்கூட புதிய இடத்தின் உயிரணுக்களைத் தன்னுள் புதிய நரம்பணு வால்களை வளர்க்கவும், தொடர்புகளைக் கொள்ளவும் தூண்டுகின்றது.

மூளையில் ஓரிடத்திற்கும், மற்றோரிடத்திற்கும் இடையில் தொடர்பு பல வகைகளில் நடைபெறுகின்றது. சில சுற்றுகள் (Circuits) அல்லது பாதை வழிகளுக்கு (Pathways) துல்லியமான செய்தியறிவிப்பு தேவைப்படுகின்றது. சான்றாக, கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் காட்சிப் பாதை வழிதான் நாம் பார்க்கும் பொருளை உணர்கின்றோம் என்பதைக் கூறலாம்.

மற்றப் பகுதிகளில் ஓர் இடம் மற்றோர் இடத்தின் நடவடிக்கைகளை ஓர் ஒலி கட்டுப்படுத்தியைப்



★ அகிம்சையின் அவதாரம் பெண். அகிம்சை என்பது அழியாத, முடிவில்லாத அன்பும் எல்லையில்லா சகிப்புத் தன்மையும் ஆகும். தாயாகி உலகை வழிநடத்திச் செல்லும் பெண்களைத் தவிர வேறு யார்தான் இந்த மகத்தான சகிப்புத் தன்மையைக் காட்ட முடியும்?

—காந்தியடிகள்

(Volume Control) போல் எளிதாக ஒழுங்குபடுத்துகின்றது. இவ்வேலையைச் செய்ய வேண்டிய ஒட்டுகளில் சுற்று துல்லிய நிலைக்குத் திரும்புதலைவிட, உரிய நரம்புக் கடத்தியைக் கொள்வது முக்கியமாகும். உடலசைவுகள், இயங்கிக் கட்டுப்பாட்டு மையமான (Motor Control Centre) நடுமூளை உள் உயிரணுத் தொகுதிக்கும், மேல்மூளை உள் நரம்பிழைமத்திற்கும் இடையிலான தொடர்புகளைப் பொறுத்தே நிகழ்கின்றன.

வட்டமாகச் செல்லுதல்:- ஓர் எலியின் ஒரு பக்க நடுமூளை - மேல்மூளை வழிப்பாதை சேதமடைந்தால் அது வட்டமாகவே நகரும். முதிர் கருவின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியிலிருந்து உயிரணுக்களை எடுத்து ஒட்டினால் திருகு சுருளாகச் சுற்றிச் செல்லும் எலியின் தன்மை குறையும். ஆராய்ச்சியாளர்கள் ஒட்டியை புதிய மூளையின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியில் ஊன்றாமல் நேரிடையாகவே மே.மூ.உ. நரம்பிழைமத்திற்குள் ஊன்றுகின்றனர். அங்கே அது புதிய இடத்தின் உயிரணுக்களோடு சில தொடர்புகளைக் கொண்டு சுரப்பிக் கடத்தியை விடுவிக்கின்றது. எலி மாறுபாடில்லாமல் இயங்குகின்றது.

இச்செயல் 'பார்க்கின்சன்' நோய் உடைய மனிதனைப் பொறுத்தவரை முக்கியமானதொரு சிக்கலாகும். மே.மூ.உ. நரம்பிழைமத்தில் சுரப்பிக் கடத்தி இல்லாமையால் அவர்களின் ந.மூ.உ. உயிரணுத் தொகுதியில் உள்ள உயிரணுக்கள் இறந்து போகின்றன.

நினைவாற்றல் குறைவு:- விலங்குகள் முதுமையடையும்பொழுது தங்கள் மூளை உயிரணுக்களில் பலவற்றைப் படிப்படியாக இழக்கின்றன. எலிகளில் இப்படிப்பட்ட இழப்புகள் சில ஒட்டுதல் வழி ஈடு செய்யப்படும். நரம்பிழைமத் தூண்டுதல் கடத்தியை நரம்புக் கடத்தியாகப் பயன்படுத்தும் ஒருபாதை வழியானது இடைத் தடுக்கிலிருந்து ஆற்றலைப் பெறுகின்றது. புதிய நினைவுகளைக் குவித்து வைக்கும் முக்கியச் செயல்களைப் பின்மூளை (Hippocampus) செய்கின்றது. மூளையில் உள்ள ந.து.க.யின் கூர்நோக்கு (Concentration) முதுமையில் குறைகின்றது.

முதிர் கருவின் இடைத்தடுக்கிலிருந்து உயிரணுக்களை எடுத்து ஒட்டினால், மறதித் தன்மையுடைய கிழ எலிகள் மீண்டும் கற்கவும் அவற்றின் சிக்கலான வழி முறைகளை நினைவு கொள்ளவும் கூடும்.

மூளையின் சில பகுதிகள் ஒரு வேதியல் சொடுக்கி போல் (Chemical Switch) தம்மை மாற்றிக் கொண்டு பிற பகுதிகளின் வேலையைச் செய்கின்றன. சான்றாக, கீழ்மூளை (Hypothalamus) ஒரு சுரப்பியை விடுவிக்கின்றது. அது, தன் முறையாகத் தன் அருகிலுள்ள பசைநீர்ச் சுரப்பியைத் (Pituitary Gland) தூண்டி அதிகமாகச் சுரக்கச் செய்கின்றது. அது, கருவகம் (Ovaries) விதைகள் ஆகியவற்றின்மீது பாலியல் பெருக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.

பாலியல் முதிர்ச்சி அடையாத ஓர் ஆண் அல்லது பெண் சுண்டெலிக்கு ஒரு சாதாரணச் சுண்டெலியிலிருந்து முதிர்க்கரு உயிரணுவை எடுத்து ஒட்டினால் அதன் சுரப்பி அருவி (Hormone Cascade) இயங்கும். அதனால் அவை இணைவுற்றுக் குஞ்சுகளை ஈனும்.

இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் மனிதர்களுக்குப் புதிய சிகிச்சை முறைகளை உறுதிப்படுத்துகின்றன. மரபியற் பொறியியல் (Genetic Engineering) உத்திகள் (Techniques) கொள்கையளவில் உடலின் ஏதாகிலும் ஒரு பகுதி உயிரணுவை மற்றொரு பகுதியின் தேவைக்கேற்றபடி உருமாற்றிப் பொருத்த முடியும் என்று கூறுகின்றன. சான்றாக நோயாளி ஒருவரின் உயிரணுவை எடுத்து, அது சுரப்பிக் கடத்தியை உண்டாக்கும்படி அதன் மரபியை (Genes) மாற்றலாம். அவற்றைக் கொண்டு "பார்க்கின்சன்' நோயைக் குணப்படுத்தலாம். அதனால் பலவகை நன்மைகள் உண்டு. வேற்று உயிரின் முதிர்க்கரு இழைமத்தை நோயாளிகளுக்குப் பயன்படுத்தும்போது, ஏற்படும் நெறிமுறைக் (Ethical) கேடு, புதிய உடலுறுப்பை ஏற்க மறுக்கும் சிக்கல் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு, அவர்கள் தங்கள் தோலின் உயிரணுக்களையே கொடையாக அளிக்கலாம்.

மனம் மனிதனின் தனித்தன்மை ஆகியவற்றுடன் பல வகைகளில் தொடர்பு கொண்டுள்ள மூளையில் ஒட்டு வேலை (Tinkering) செய்வதென்னும் கருத்தைப் பலர் இன்னும் ஏற்கவில்லை. மூளையைப் பழுது பார்க்கவும், அதன் இயக்கத் தன்மைகளை விளங்கிக் கொள்ளவும் தொடங்கியுள்ள நமக்கு அப்படிப்பட்ட கருத்துக்கள் இன்று காலங்கடந்தவையாகத் தோன்றுகின்றன. ஒரு மூளையை முற்றிலும் மாறுபட்ட வேறொரு உடலில் மாற்றி அமைக்கும் மர். பிராங்கெய்சுடீன் திட்டம் இன்னும் அறிவியல் நாவல் (Science Fiction) அளவிலேயே உள்ளது என்று கூறலாம்.

(இன்சைடு சயின்ஸ் (நியூ சயின்ஸ்) என்னும் நூற்பகுதி)

நன்றி: இந்து.



★ இந்த நாட்டிலே- சாதிதான்
மக்களுக்குள் பேதத்தை
ஏற்படுத்தும் முதல் சாதனம்;
மக்களின் இரத்தத்திலே
கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம்;
மனதிலே முடக்கு நோயைப்
புகுத்திவிட்ட முறை; எனவேதான்,
பேதமற்ற சமுதாயத்தை-
சமத்துவத்தை- சமதர்மத்தை நாம்
நாட வேண்டுமானால் முதலில்
சாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா



# நூல் நயம்

## 'இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்'

ஆசிரியர்: முனைவர் இரா. இளவரசு
வெளியீடு:
மநதம்
672, பெரியார் சாலை,
கருணாநிதி நகர், திருச்சி-620 021.
பக்கம்:122 விலை:ரூ.20/-

பகுத்தறிவுக் கவிஞர், சுயமரியாதைக் கவிஞர் என்றெல்லாம் மக்களால் போற்றிப் பாராட்டப் பெற்ற பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கும் நாட்டுப் பற்றுக்கும் தொடர்பே கிடையாது என்ற பிரச்சாரம் நாட்டில் நெடுங்காலமாக நிலவி வருகிறது. அந்தப் பிரச்சாரத்தைத் தகர்த்து எறிய உதவுகிறது இந்நூல். நூலாசிரியர், வழக்கறிஞரின் வழி நின்று, சாட்சியங்களை வழங்கி வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்.

நாட்டு விடுதலையில் நாட்டம், தலைவர்களின் திறம் போற்றல், ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தல், மதுவிலக்கை வலியுறுத்தல், அந்நிய மொழியாம் ஆங்கிலத்தை வெறுத்தல், தாயின் மணிக்கொடியைப் பணிந்து வணங்குதல், கதரியக்கத்தை ஆதரித்தல் போன்ற தன்னாட்டு உணர்வுகள் அனைத்தும் பாரதிதாசனிடம் மண்டிக் கிடந்தன. அதன் காரணமாகவே அவற்றைக் குறித்து அரிய கவிதைகளைக் கடமையுணர்வுடன் பாவேந்தர் படைத்திருக்கிறார் என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது.

தமிழ்ச்'சமுதாயத்துக்கு இந்நூல் ஒரு புதையலாகும். நூலின் நடை இனிமை! சான்று காட்டி நிறுவும் தன்மை, அதனினும் இனிமை. நூலாசிரியரின் கடும் உழைப்புக்குக் கட்டியங் கூறுகிறது இந்நூல்.

'கால ஓட்டத்தில் இன்னும் பல செய்திகள் கிடைக்கலாம்; அதனால் நூலின் அளவு பெரிதாய் வடிவெடுக்கலாம்' என நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது அவரது தன்னம்பிக்கையைத் தெரிவிப்பதுடன் நமக்கு நன்னம்பிக்கையையும் ஊட்டுகிறது.

## 'பாரதியாரும், பாவேந்தரும்'

ஆசிரியர்:
அமரர் டி.என். சுசிசுப்பிரமணியன்
வெளியீடு:
கதிர் வெளியீடு
7, பொன்னம்பலம் தெரு, சோழபுரம்
அம்பத்தூர், சென்னை-600 053.
பக்கம்:64 விலை:ரூ.7.50/-

டி.என். சுசிசுப்பிரமணியன் அவர்கள், தாம் வாழும் காலத்தில், பாரதியாரையும், பாவேந்தரையும் குறித்து எழுதிய இந்நூல் இப்போதுதான் தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைத்திருக்கிறது.

இருபெருங் கவிஞர்களின் கவித்துவத்தைக் குறித்த திறனாய்வுஇந்நூலில்காணப்படுகிறது. அவர்கள், ஒரு சிலரால் வரவேற்கப்பட்டதையும் வேறு சிலரால் கண்டனத்துக்கு ஆளானதையும் நூலாசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். நூலின் நடை இனிமை பயக்கிறது. அளவில் சிறியதுதான் எனினும் ஏந்தி வந்துள்ள செய்தியைப் பொறுத்தவரை இந்நூல் பெரியது என்றே சொல்லலாம்.

—தமிழ்ப்பித்தன்

## 'நம்பிக்கை நாற்றுக்கள்'

ஆசிரியர்: வாசவன்
வெளியிட்டோர்:
கதிர் வெளியீடு
7, பொன்னம்பலம் தெரு
சோழபுரம்
அம்பத்தூர், சென்னை-600 053.
பக்கம்: விலை:ரூ.10

தொழில் அதிபர், பத்திரிகையாளர், எழுத்தாளர், பதிப்பகத்தார், திரைப்படத் துறையினர் என்று பலதரப்பட்ட பெருமக்களை, தான் அறிந்தவகையில் சிறந்த நடையில் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறார் ஆசிரியர். அவர்களது அருமை, பெருமைகளை அழகாகக் கூறி உள்ளார்.

## 'தேன்துளிகள்'

ஆசிரியர்: புலவர் காவிரிச் செல்வன்
வெளியீடு: காவிரி வெளியீடு,
7/14, இணைவு 1 மறைமலை நகர்
செங்கை-எம்.ஜி.ஆர் மாவட்டம்-603209
பக்கம்:64 விலை:ரூ.6/-

சிறுவர்களுக்கான இசைப் பாடல்களைக் கொண்ட கவிதை நூல்.

வழக்கமான தலைப்பில் உள்ள கவிதைகளோடு உலகு உன் காலில் விழ, உன்னை நம்பு, இதயப் பூ, பொங்கும் எரிமலை, உயிர்-மெய் போன்ற சில வித்தியாசமான பாடல்களும் இந்நூலில் உண்டு.

என்.குமார்

## 'வீரமா முனிவர் இயற்றிய தமிழ் மருத்துவ நூல்'

ஆசிரியர்: முல்லை. பி.எல்.முத்தையா
வெளியீடு:
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.
41பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600 098.
பக்கம்:68 விலை:ரூ.8/-

'நச காண்டம்-100' என்ற தலைப்பில் வீரமாமுனிவர் எழுதிய நூலை புதிதாகப் பதிப்பித்திருக்கிறார்கள்.

இந்நூலில் நோயின் விவரங்களும் அதற்கான மருந்துகளும், செய்முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, மருத்துவர்களுக்கும் ஒரு நல்ல கையேடாக உதவும்.

## 'வீட்டு மின்சாதனங்களை பழுது பார்ப்பது எப்படி?'

ஆசிரியர்: ஏ.கே. சேஷய்யா
வெளியீடு:
கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026.
பக்கம்:120 விலை:ரூ.14/-

நமது இல்லங்களில் அன்றாடம் பயன்படுத்தப்படும், மின் கருவிகளான மின் அடுப்பு, ஹீட்டர்கள், மின்கெட்டில், மிக்ஸி, மின் ஆட்டுக்கல், மின்விசிறி குழல் விளக்கு போன்றவை பழுதுபட்டு விட்டால் நாமே அவற்றை எப்படிச் சரி செய்வது என்பதைக் கற்றுத் தருகிறது இந்நூல்.

பழுது பார்க்கத் தேவைப்படும் கருவிகள் நம்மிடம் இருக்குமாயின், இப்புத்தகத்தின் துணை கொண்டு நாம் பயன்படுத்தும் மின் கருவிகளை நாமே பழுது பார்த்துக் கொள்ளலாம்.

—என்.குமாரசாமி

### மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வித்துறையின் சென்னைத் தகவல் மையம் 298, தம்பு செட்டித் தெரு, சென்னை-1 என்ற முகவரியிலிருந்து தக்கர் புாபா வித்யாலயா, 36, வெங்கட நாராயணா சாலை, தியாகராயநகர், சென்னை-17 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று அஞ்சல் வழிக் கல்வித்துறை நெறியாளர் அறிவிக்கின்றார். (தொலைபேசி எண்: 44 65 49)






# வளர்ச்சிக்கு வழிகாட்டும் வணிகவரிச் சீரமைப்பு

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

வணிக வரித்துறை மீதான வாதத்திற்குப் பதிலளித்து, ாண்புமிகு முதல்வர் புரட்சித் லைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ;.9.'91 அன்று சட்டப் பேரவை ல் பேசியதாவது:

'வணிக வரிகள்' என்பதில் பாது விற்பனை வரி, கூடுதல் ிற்பனை வரி, விற்பனை மேல் ரி, மத்திய விற்பனை வரி, களிக்கை வரி, பந்தய வரி, தங்கும் ிடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர சதி மீதான வரி, விளம்பர வரி ற்றும் வாகனங்கள் மீதான நுழைவு ரி ஆகியவைகள் அடங்கும்.

விற்பனை வரியின் சரித்திரத் தைப் பின்னோக்கிப் பார்த்தால், தன் ஆரம்பம் நீதியை நிலை ாட்டிய 'மனுச் சக்கரவர்த்தி' ாலத்திலேயே தொடங்கப்பெற்றது ான்பது நமக்கு வியப்பளிப்பதாக ள்ளது. மனுச் சக்கரவர்த்தியின் ாலத்தில் அரசின் வருவாயில் முக் ியப் பங்காக விளங்கியது பிற்பனை வரி. இவ்வரி வாங்கி விற் பனை செய்யப்படும் பொருட்களின் பிலையில் 5 சதவிகிதமாக இருந்தது. ால்லாப் பொருட்களையும் பற்றி அறிந்த, அனுபவம் மிக்கவர்கள் மூலமாகப் பொருள்களின் விலை அறியப்பட்டு, அவற்றின் மீது 5 சதவிகித விற்பனை வரி வசூல் செய்யப்பட்டது. அக்காலத்தில் வரி யைப் பணமாக அன்றி அதற்கிணை யான பொருளாகவும் செலுத்திட வழி இருந்தது. மக்கள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாது காக்கும் அரசருக்கு விற்பனை செய் யப்படும் 50 பசுக்களுக்கு ஒரு பசு வும், தங்கத்தில் 50-இல் ஒரு பங்கும், தானியங்களில் பத்தில் ஒரு பங்கு மாக வரி செலுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை யில் விற்பனை வரியின் ஆரம்பம் 1939-ஆம் ஆண்டாகும். அரசின் மதுவிலக்குக் கொள்கையினால் அப்போது மிக அதிகம் எனக் கருதப் பட்ட ரூ.5 கோடி வருவாய் இழப் பினை ஈடுசெய்ய அன்றைய சென்னை மாகாணப் பிரதம மந்திரி மூதறிஞர் இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்படும் மாண்புமிகு சர்.சி. இராஜாகோபாலாச்சாரியார் அவர் களால் விற்பனை வரி மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வரப் பட்டது. மசோதாவை அறிமுகப் படுத்தி இச்சட்டத்தின் நோக்கத் தினையும் காரணங்களையும் விளக்கி ஆற்றிய உரையின் ஒருசில பகுதி களைப் படிப்பதற்கு உங்கள் அனு மதியைக் கோருகிறேன்.

'இந்த மசோதாவில் உத்தேசிக்கப் பட்டுள்ள வரி விற்பனைத் தொகை யில் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்ற அளவில் உள்ளது. தரும காரியங் களுக்காகப் பெரும்பான்மையான வணிகர்கள் வழக்கமாகத் தாங்கள் செய்யும் விற்பனைக்கு எந்த அள விற்கு வரி செலுத்த வேண்டுமோ, அதைவிட மூன்று மடங்கு அதிகமாக 'மகிமை' என்ற பெயரில் செலவிடும் வழக்கம் வேரூன்றி உள்ளது. அரசின் தேவைகளை ஈடுகட்ட புதிய வருவாய் வழிவகைகளைத் தேடும் தற்போதைய நிலையில் இந்தப் புதிய வரி அதிகச் சுமையாக இருக்காது எனக் கருதப் படுகிறது.'

1939-ஆம் ஆண்டு நிலவிய அதே நிலைதான் தற்போது நிலவு கிறது என்பதை உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். மதுவிலக்குக் கொள்கை யினைத் தீவிரமாக நடைமுறைப்படுத் துவதோடு பிற நல்வாழ்வுத் திட்டங் களையும் நடைமுறைப்படுத்த முற் படும் இவ்வேளையில் புதிய வருவாய் வழிவகைகளைத் கண்டறியும் நிலை யில் இந்த அரசு உள்ளது. விற்பனை வரி, அன்றிருந்ததைப் போன்றே இப்பொழுதும் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

மாநிலத்தின் மொத்த வருவாயில் வணிகவரியின் பங்கு 70 சதவிகித மாகும். அரசின் கொள்கைகள் மற்றும் வணிகர்களின் கோரிக் கைகள் ஆகியவற்றின்பேரில் விற் பனை வரி விகிதம் மற்றும் வரி விதிப்புமுறை ஆகியவற்றில் பல் வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள் ளன. வணிகவரிச் சட்டத்தினைச் சீரமைக்கும் பொருட்டு ஆரம்பத்தில் பொருளாதார நிபுணர் திரு. பி.எஸ். லோகநாதன் தலைமையில் அமைக் கப்பட்ட குழுவிலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து இந்திய ஆட்சிப் பணி யைச் சார்ந்த திரு எஸ்.ஆர்.கெய்வார், திரு எஸ்.பி. சீனிவாசன், திரு கே. கார்த்திகேயன் ஆகியோர் தலைமை யில் அமைக்கப்பட்ட குழுக்கள் வணிகவரிச் சீரமைப்பிற்கான பல் வேறு ஆலோசனைகளை நல்கி யுள்ளன.

எங்களது தேர்தல் அறிக்கையில் வரிச் சீரமைப்பிற்கு அதிக முக்கியத் துவம் கொடுத்துள்ளதை உறுப்

# வணிகவரிச் சட்டத்தினை எளிமைப்படுத்த - உயர்மட்ட விற்பனைவரி சீரமைப்புக் குழு

பினர்கள் நன்கு அறிவார்கள். வரி விதிப்பு அலுவலர்கள் நேர்மையற்றவர்களாக இருக்கும்போது வரி ஏய்க்கும் போக்கு நிலவுகிறது. அதே நேரத்தில், வணிகர்களில் சிலர் நேர்மையற்ற வழிமுறைகளைக் கடைப்பிடிக்கும்போது நேர்மையான அலுவலர்களின் நடவடிக்கைகள் கண்டிப்பானவையாகக் கருதப்பட்டு வணிகர்கள் தொல்லைப்படுத்தப்படுகின்றனர் என்ற புகார்கள் வருகின்றன.

உங்களுக்குத் தகவலுக்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் - ஏறத்தாழ 8,640 நீதிப்பேராணை மனுக்களும், சுமார் 2000 வரி வழக்குகளும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. இதிலிருந்து பல வழக்குகளைத் தீர்ப்பாயத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எடுத்துச் செல்லும் வணிகர்களின் மனப்போக்கினை நாம் அறிகின்றோம். இதுபோன்ற வழக்குகள் உச்சநீதிமன்றத்திலும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களிலும், மேல்முறையீட்டு உதவி ஆணையர்களிடமும் தேங்கியுள்ளன. வழக்குகள் தேவையற்ற முறையில் நீட்டிக்கப்பட்டு, அரசிற்கு வரவேண்டிய வருவாய் செலுத்தப்படாமல் தாமதப்படுத்தப்படுகிறது. எனவே, வணிகவரிச் சட்டத்தினை எளிமைப்படுத்திச்சீரமைக்க, ஆய்ந்து தகுந்த பரிந்துரைகள் அரசிற்கு வழங்க உயர்மட்ட விற்பனை வரி சீரமைப்புக்குழு ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளோம்.

அரசின் தற்போதைய நெருக்கடியான நிதி நிலையிலும், நாங்கள் விற்பனை வரிச் சலுகைகள் அறிவித்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இவற்றில் முக்கியமானது உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மீதான வரியில் அரை சதவிகிதம் குறைத்ததாகும். மத்திய அரசு உரங்கள் விற்பனை மீதான மானியத்தைக் குறைத்தும், சிலவகை உரங்களின் விற்பனை விலையையும் உயர்த்தியுள்ள கால கட்டத்தில் விலை உயர்வினால் அரசிற்குக் கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாயினையும் பொருட்படுத்தாது இந்த வரிக்குறைப்பு அறிவிக்கப்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் நாங்கள் இந்த வரிக்குறைப்பினைச் செய்துள்ளோம்.

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அனைத்து வரிச் சலுகைகளையும் மீண்டும் தற்சமயம் நான் குறிப்பிட விரும்பவில்லை. எனினும், இந்நேரத்தில் சில முக்கியமான தகவல்களைத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன். ஆண்டிற்கு ரூபாய் 5 இலட்சத்திற்குக் குறைவான மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள் பயன்படும் வகையில் புதிய 'தன் மதிப்பீட்டு' வரிவிதிப்பு முறையினை (Self Assessment) நாங்கள் அறிவித்துள்ளோம். சென்ற ஆண்டு வரையில், சில குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கணக்குத் தணிக்கையில்லாமல் முடிவுற்றதாகக் கருதப்படும் வரிவிதிப்பு முறை (Deemed Assessment) நடைமுறையில் இருந்தது. அதன் நிபந்தனைகள் பின் வருவன:-

1. வணிகரின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ஐந்து இலட்ச ரூபாய்க்கு அதிகமாக இருக்கக் கூடாது.
2. மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள் பெற்றிருக்கக் கூடாது.
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைக்குரிய படிவங்கள், படிவம் 17, 20, 20-பி ஆகியவற்றைப் பெற்றிருக்கக் கூடாது.

4. விற்பனை வரிச் சட்டம் மற்றும் விதிகளில் கூறப்பட்டுள்ள எந்தவொரு விதிமுறைகளையும் மீறியிருக்கக் கூடாது.

கடைசியாகக் குறிப்பிடப்பட்ட நிபந்தனையின் காரணமாக இம்முறையினைச் செம்மையாக நடைமுறைப்படுத்த இயலவில்லை. மிகச் சிறிய தவறுகளுக்காக வணிகர்கள் இம்முறையில் வரிவிதிப்பிற்கு உட்படும் தகுதியினை இழக்க நேரிட்டது. எனவே, எங்களது அரசு திருத்திய 'தன் மதிப்பீட்டு வரிவிதிப்பு' (Self Assesment) முறையினை அமல்படுத்த உறுதியாக உத்தேசித்துள்ளது. விற்பனை வரிச் சட்டம் மற்றும் விதிகளை மீறும் வணிகர்கள் மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படலாமெனவும், சிறிய தவறுகளுக்காகச் சுயமதிப்பீட்டு வரிவிதிப்புச் சலுகையினை, வணிகர்கள் இழக்க வேண்டாமெனவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். சில குறிப்பிட்ட விற்பனைக்குரிய படிவங்கள் பெற்றிராத, ஆண்டிற்கு ரூ.5 இலட்சத்திற்குக் குறைவாக. மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்கு, இப்புதிய திட்டம் பொருந்தும். வணிகர்கள் பல்வேறு தொல்லைகளிலிருந்தும் சிரமங்களிலிருந்தும் விடுபட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அறிவிக்கப்படும் இத்திட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேற வணிகர்கள் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இவ்வாண்டில் நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பிக்கும்பொழுது வணிகர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அதன் தொடர்ச்சியாகச் சில வரி விகிதங்களில் மாற்றங்களையும் மற்றும் சலுகைகளையும் அறிவிக்கின்றேன்.

தற்பொழுது, முயல், குரங்கு, பன்றி ஆகியவற்றின் தீவனங்கள், மனிதத் தலைமுடி மற்றும் டோபா (Wig) ஆகிய பொருள்களுக்கு 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. இந்தப் பொருள்களுக்கு முழுவதுமாக வரி விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மரவள்ளிக் கிழங்கின் உபபொருள்களான, திப்பி, திப்பி மாவு மற்றும் கப்பி, அத்துடன் புளியங்கொட்டை மற்றும் நார், பழைய அலுமினியம் (Aluminium Scrap) மற்றும் இரப்பர் பலூன்கள் ஆகிய பொருள்களுக்குத் தற்சமயம் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. அதை மாற்றி 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது.



மேலும், கழிவுத்தாளின் வரி விகிதம் 8 சதவிகிதத்திலிருந்து 6 சதவிகிதமாகவும், பாட்டில் மூடிகள் 8-இல் இருந்து 5 ஆகவும், இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பட்டு (Imported Raw Silk) 8-இல் இருந்து 2 சதவிகிதமாகவும் வரிக் குறைப்புச் செய்யப்படும் என்பதை அறிவிக்கிறேன்.

தற்பொழுது, பொது விற்பனை வரிச்சட்டத்தில் முதல் அட்டவணையில் 192 வரிசை எண்ணாகக் கிரேனைட் கருங்கல் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தப் பதிவை (Entry) மாற்றி, புதிய வரிசை எண்ணில் கிரேனைட் கற்கள் மற்றும் மெருகேற்றப்பட்ட கிரேனைட் பலகை ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றின் மீதும் 8 சதவிகிதம் வரி விதிக்கப்படும். இதனால் இப்பொருளின் வரிவிதிப்புத் தொடர்பான குழப்பங்கள் நீங்கும்.

கைவினைப் பொருட்களுக்கு 1.4.1990-லிருந்து 8 சதவிகிதம் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. ஆனால், ஒவ்வொன்றும் ரூ.1,000-க்குக் குறைவாக விற்பனை மதிப்புள்ள சில குறிப்பிட்ட கைவினைப் பொருட்களுக்கு 18.3.1987-லிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கடல் சங்குகளால் செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் பொருட்களும் அடங்கும். கடல் சங்குகளால் பலவிதமான கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களால் குடிசைத் தொழில் முறையில் செய்யப்படுகின்றன. இவ்வகைக் கைவினைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு கடல் சங்குகளால் செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் விற்பனை வரி விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்படுமென மதிப்பிடப்படுகிறது.

பொது விற்பனை வரிச்சட்டத்தில், முதல் அட்டவணையில் உள்ள 36-வது வரிசை எண்ணாகத் தேயிலை சேர்க்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள முறைப்படி, மொத்தமாகத் தேயிலைத்தூள் வாங்கி 20 கிலோவிற்குக் குறைவாகப் பிரித்து பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு மீண்டும் வரி செலுத்த நேரிடுகிறது. இதை மாற்றி, தேயிலை விற்பனை மீது

# உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மீதான வரியில் அரை சதவிகிதம் குறைப்பு

ஒரே கட்டமாக 6 சதவிகிதம் வரி விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் உணவிற்கு அரசாங்கம் தற்போது 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரியைக் குறைத்துள்ளது. ஹார்லிக்ஸ், விவா, ஸ்பார்ட் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவைகள் பால் உணவுகள் என்று தவறாகக் குறிப்பிட்டு 4 சதவிகிதக் குறைந்த வரி செலுத்தப்படுகிறது. அரசின் நோக்கம், குழந்தைகளுக்கான பால் உணவிற்கு வரியினைக் குறைத்திடுவதாகும். எனவே, இது தொடர்பான அறிவிப்பில் திருத்தம் செய்யப்பட்டு, குழந்தைகளுக்கான பால் உணவிற்கு மட்டுமே 4 சதவிகிதம் குறைந்த வரி வசூலிக்கப்படும்.

நீண்ட காலமாக நிலுவையிலுள்ள வரி பாக்கியை வசூலிப்பது சம்பந்தமான அறிக்கையைச் சமீபத்தில் அவையில் சமர்ப்பித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின் கீழ் மட்டும் 1.1.91 முடிய ரூ.270.49 கோடி வரி பாக்கியாக உள்ளது. இதில் உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் மேல் முறையீட்டு உதவி ஆணையர் ஆகியோரின் தடை ஆணையின் காரணமாக ரூ.163.99 கோடி வசூலிக்க முடியாமல் உள்ளது. இது தவிர வரி செலுத்தத் தவறியோர்களுடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் பொது ஏலத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரி நடவடிக்கையின் மூலம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை ரூ.44.18 கோடி ஆகும். அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பிறகு வசூலிக்க இயலாது எனக் கருதப்பட்டுத் தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை ரூ.34.08 கோடி ஆகும். இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு 'மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது' என்ற பழமொழிக்கு ஏற்ப ரூ.28.24 கோடிதான் வசூலிக்கக் கூடிய வரி பாக்கி என நான் அறிகின்றேன். வருவாய் மீட்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கையிலுள்ள சுமார் 50 கோடியையும் இத்துடன் சேர்த்தாலும் கூட பழைய பாக்கியை வசூலிப்பதன் மூலம் நமது வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்ய இயலாது. எனினும் 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்ற பழமொழிக்கு ஏற்ப வணிகவரித்துறை அலுவலர்கள் கடுமையான முயற்சி எடுத்து வசூலிக்கக் கூடிய வரி பாக்கியை விரைவாக வசூலித்திடுமாறு நான் அறிவுறுத்தியுள்ளேன்.

வணிகவரி வருவாய் கணிசமான அளவிலும், திருப்தி அளிக்கும் வகையிலும் உயர்ந்து வருவது உறுப்பினர்கள் அறிந்ததே. வணிகவரித், துறை அலுவலர்களின் உண்மையான உழைப்பினை மதிக்கும் பொருட்டு களப் பணியாற்றும் பணியாளர்களது அடிப்படைத் தேவைகளை ஓரளவிற்காவது அரசு நிறைவேற்றுவது நல்லது எனக் கருதுகிறேன். இதனைக் கருத்திற்கொண்டு சென்னைக்கு மாற்றலாகி வரும் உதவி ஆணையர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யும் பொருட்டு குடியிருப்புகள் கட்டித் தர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் வீட்டு வாடகை மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கணிசமான அளவில் குடியிருப்புகள் கட்டியிருந்தாலும் சென்னைக்கு மாற்றலாகி வரும் அனைத்து வலுவலர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவில் கட்டடங்கள் இல்லை. எனவே, முதற் கட்டமாக திருவான்மியூரில் வணிக

# வணிகர்கள் பயன்படும் வகையில் புதிய 'தன் மதிப்பீட்டு' வரிவிதிப்பு முறை அறிவிப்பு

வரித் துறைக்குச் சொந்தமாக உள்ள இடத்தில் 14 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடிக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இக்கட்டடம் கட்ட ஆகும் செலவினை அரசு நேரடியாக ஏற்காமல் இப்பணியினைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடு கட்ட ஹட்கோ அல்லது நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று இச்செலவினை ஈடு செய்யும். இதற்காகப் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக மட்டுமே அரசு வீட்டு வசதி வாரியத்திற்கு நிதி வழங்க நேரிடும்.

தற்போதுள்ள நடைமுறைப்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் வாடகைக்குக் குடியிருக்கும் அலுவலர்கள் தங்களது சம்பளத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை வாடகையாகச் செலுத்தி வருகிறார்கள். அதைப்போன்றே, தற்போது கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் தங்கும் உதவி ஆணையாளர்களும் குறிப்பிட்ட வாடகையைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வீட்டு வசதி வாரியம் திருப்பிச் செலுத்தும் கடன் தொகையில் வாடகை மூலம் வசூலாகும் தொகை போக மிகுதியை அரசாங்கம் மானியமாக அளித்திடும். இதனால் கட்டுமானப் பணிக்கு அரசாங்கத்தின் செலவு கணிசமாகக் குறைக்கப்படும்.

வணிகவரித் துறையை நவீனப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஒரு சில நடவடிக்கைகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தற்பொழுது கணக்குகள் பராமரிப்பதில் கணிப் பொறி இயந்திரங்கள் (Computer) பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன இதன் காரணமாக வணிகவரித் துறை அலுவலர்கள் கணிப் பொறி இயந்திரங்களின் பயன்பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு வணிகவரித் துறை பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.5 இலட்சம் செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிகவரி அலுவலர்கள் ஆகியோருக்குக் கணிப் பொறி மூலம் கணக்குகளைப் பராமரிப்பது சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்படும்.

அண்ணா மேலாண்மைக் கழகத்தில் உயர்நிலை அலுவலர்களுக்கு ஏற்கெனவே ஒரு வார காலப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது வணிகவரித் துறையில் இயங்கி வரும் கணிப் பொறி மையம் மேலும் பயன் உள்ள வகையில் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த மையம், வசூலிக்கப்படும் வரித்தொகை, அதிக அளவில் வரி செலுத்துவோர் பற்றிய விவரங்கள் மற்றும் வரிக்குட்படும் பலவகையான பொருட்கள் பற்றிய விவரங்களை உடனுக்குடன் அளிப்பதன் மூலம் வரிவசூலின் நிலைமை பற்றி விரைவாக ஆய்வு செய்து தக்க முடிவுகள் எடுக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மேலும், சோதனைச் சாவடிகளிலிருந்து எடுக்கப்படும் சில ஆவணங்களை உடனடியாகக் கணிப் பொறி மூலம் பாகுபாடு செய்து தேவையான விவரங்களைச் சேகரித்துச் சம்பந்தப்பட்ட வரி விதிப்பு அலுவலர்களுக்கு அனுப்பி மாநிலத்தில் பொருட்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வரி முறையாகச் செலுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க முடிகிறது.

மேலும், செயலாக்கப் பிரிவு அலுவலர்கள், சிறப்பாகப் பணியாற்றிட சோதனைச் சாவடிகள், சுற்றுப்படை ஆகியவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள கம்பியில்லாத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சென்னையிலுள்ள செயலாக்கப் பிரிவை நவீனப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தற்போது 301 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 102 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர் தலைமையிலும், 193 வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், ஏனைய 6 வட்டங்கள் உதவி ஆணையர் தலைமையிலும் இயங்குகின்றன. வரி விதிப்புத் தரத்தை உயர்த்தி, வணிகர்களின் கணக்குகளை நுணுக்கமாக ஆய்வு செய்து வருவாய் இழப்பு ஏற்படாதவாறு செயல்படுவது மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. இதன்பொருட்டு அதிக வரிப்பளுவுள்ள 15 வரி விதிப்பு வட்டங்களைப் பிரித்து, கூடுதலாக 11 வரி விதிப்பு வட்டங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள 4 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும், கோவையிலுள்ள 2 மத்திய வரி விதிப்பு வட்டங்களிலும் கூடுதலாக ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணை வணிக வரி அலுவலர் பணியிடம் ஏற்படுத்தி

## வணிகர்களுக்குக் கணிசமான அளவில் சலுகைகள் வரி விகிதங்களில் மாற்றங்கள்



பணித் தரத்தை உயர்த்தி, குறிப்பாகப் பெரிய வர்த்தக நிறுவனங்களின் கணக்குகளை மிகுந்த கவனத்துடன் பார்வையிட்டு வசூலைத் துரிதப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டங்களை அமல்படுத்துவதற்கு நடப்பாண்டில் ரூ.57.99 இலட்சம் தொடர் செலவிற்கும் ரூ.18.25 இலட்சம் தொடரா செலவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### வணிகர் நல வாரியம்

வணிகர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு வணிகர்கள் நலனுக்காகப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என எங்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளோம். இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சர் செயல்படுவார் மற்ற அலுவலரல்லாத உறுப்பினர்கள் 5 நபர்களும், அலுவல் சார்ந்த உறுப்பினர் 6 நபர்களும் உறுப்பினர்களாக இடம் பெறுவார்கள். ஏற்கெனவே அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக விளங்கும் வணிகவரித் துறைச் செயலர், நிதிச் செயலர், தொழில்துறைச் செயலர், வேளாண்மைத்துறைச் செயலர், வணிகவரி ஆணையர் மற்றும் இணை வணிக வரி ஆணையர் நிலையிலுள்ள உறுப்பினர்- செயலர், உறுப்பினராகச் செயல்படுவார்கள்.

இந்நலவாரியம் முன்பே நிறுவப்பட்டு ஒரு சில திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தும் அவைகள் சிறிதளவேனும் செயல்படுத்தப்படவில்லை. எந்த வணிகரும் உதவி அடையவும் இல்லை. இந்நிலையை மாற்றிப் பயனுள்ள திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வறிய நிலையிலுள்ள வணிகர்கள் பலருக்கு நலம் கிட்டும் வகையில் இவ்வாரியம் செயல்படுவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

இந்நலவாரியத்தில் தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் ஒரு ஆண்டு பதிவு பெற்று வணிகம் செய்து வரும் வணிகர்கள் அனைவரும் தலா ரூ.25 செலுத்தி உறுப்பினர் ஆகலாம். அவர்கள் தொடர்ந்து நபருக்கு ரூ.25, ஒவ்வொரு ஆண்டும் செலுத்தி தங்களுடைய உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக ஆயுள் உறுப்பினர் என்ற முறையை மேற்கொண்டு ஆயுள் உறுப்பினர்களுக்கு ரூ.150 என நிர்ணயித்து ஆயுள் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

இவ்வாரியத்தில் 1990-91-இல் உறுப்பினர்களாக உள்ளவர்களின் எண்ணிக்கை 1,009 நபர்கள் மட்டுமே. இந்த நிதியாண்டில் (1991- 92) இது 1,900 நபர்களாக உயர்ந்துள்ளது. மீண்டும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆண்டு வருவாய் ரூ.15,000-க்கு மேற்படாமல் பெறுகின்ற வணிகர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டாலோ அல்லது அவர்கள் இறக்க நேரிட்டாலோ அவர்களுடைய குழந்தைகள் பாலிடெக்னிக், கலைக் கல்லூரி அல்லது அதற்கு சமமான முதுநிலை பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு, ஆண்டுதோறும் அவர்களுக்கு ரூ.1,000-லிருந்து ரூ.1,500 வரை உதவித்தொகை வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

வணிகர் குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால், இறந்த உறுப்பினர் ஆண்டு வருமானம் ரூ.15,000-க்கு மேற்படாமல் உள்ள உறுப்பினர் குடும்பத்திற்கு ஒருமுறை உதவித்தொகையாக ரூ.5,000 வழங்கலாம் என்ற கருத்துருவும்,

ஆண்டு வருவாய் ரூ.24,000-க்கு மிகைப்படாமல் இருந்தால், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, இருதய அறுவைச் சிகிச்சை போன்றவற்றிற்கு அரசு அனுமதித்துள்ள மருத்துவ மனைகளில் ரூ.10,000 வரை வழங்கலாம் என்ற கருத்தும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்கள் பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படும். இதற்கு ஏறத்தாழ ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படும். ●

## கிராமக் குடிநீர்த் திட்டப் பணிகள்

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 1990-91-ஆம் நிதியாண்டில் 168 கிராமங்களுக்குக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டது. 168 கிராமங்களில் 110 கிராமங்களுக்குக் கையிறைப்பான் மூலமாகவும், 38 கிராமங்களுக்கு மின் இறைப்பான் மூலமாகவும், 9 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாகவும், எஞ்சியுள்ள 11 கிராமங்களுக்குக் குழாய் விரிவாக்கம் மூலமாகவும், திட்டங்கள் முடிக்கப்பட்டன. இதன் மூலம், சுமார் 93,600 மக்கள் பயன் பெறுகிறார்கள். இத்திட்டங்களைச் செயல்படுத்த ஆன தொகை ரூ.219 இலட்சமாகும்.

பருவமழை பெய்யாததனால், வறட்சி நிவாரணப் பணியின் கீழ், 92 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் 25,000 மக்கள் பயன் அடைந்தனர்.

மேலும், இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமிற்கு 19 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டன. ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின் கீழ் 40 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு 11,200 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டு 1991-92-இல், 207 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இவற்றில் 141 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படும். இதுவரை 16 கிராமங்களுக்குக் கையிறைப்பான் மூலமாகவும், 2 கிராமங்களுக்கு விசைப் பம்புத் திட்டமும், 3 கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், ஒரு கிராமத்திற்குக் குழாய் நீடிப்பு மூலம் குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப் பணியின் கீழ், இதுவரை 46 கிராமங்களில் கையிறைப்பான் பொருத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட கரும விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Programme), 123 கையிறைப்பான், 6 குழாய் நீட்டிப்புத் திட்டமும் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.



# தமிழகத்தில் வனமும் வன உயிரினமும்

தமிழ்நாடு நிலவளம், நீர்வளம், வனவளம் செறிந்த நல்லதொரு சூழ்நிலையைக் கொண்டுள்ளது தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,30,057 ச.கி.மீ. ஆகும். அதில் 22,699 ச.கி.மீ. காடுகளாக உள்ளது. நாட்டின் மொத்தப் பரப்பில் குறைந்தது 33 சதவிகிதம் வனப் பரப்பாக அமைய வேண்டும். ஆனால், தற்போதுள்ள வனப் பரப்பளவு சுமார் 17.45 சதவிகிதம் ஆகும்.

ஆந்திரா, கேரளா, கர்நாடகா மாநிலங்கள் அமைந்த பின்பும் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்திலிருந்து சில பகுதிகள் மேற்படி பகுதிகளுக்குத் தரப்பட்ட பின்பு, சுமார் 15 சதவிகிதம் தான் காடுகளாக இருந்தன. தற்போது தமிழகத்தில் 17.45 சதவிகிதம் காடுகளாக இருப்பதற்குக் காரணம் ஜமீன், ஜாகீர் வன நிலங்கள், ஒதுக்கக் காடுகளாக அறிவிக்கை செய்ததாலும், சமூகக் காடுகள் மூலம் பல்வேறு இடங்களில் வனத் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளதாலும் வனப்பரப்பு தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுமார் 25,000 எக்டேர் ஜமீன், ஜாகீர், வனப்பகுதிகள் ஒதுக்கக் காடுகளாக மாற்றத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### வனப் பொருட்கள்

வனத்தினைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல், கூழ்மரங்கள் அளித்தல் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.2.15 இலட்சம் பெறுமானமுள்ள மூலப்பொருட்கள் வனத்துறையிலிருந்து தரப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் முக்கிய மூலப் பொருட்கள் புளுகம், சிவப்புகம், மைசூர்கம், தோல் உரிக்கப்பட்ட மிலாறுபட்டை, மூங்கில் ஈத்தல், வாட்டில் பட்டை, தணுக்கு மரம், பைன்ஸ் பட்டுலா முதலியனவாகும்.

குறிப்பாகச் சொல்லப்போனால் சமூகக் காடுகள் திட்டம் மூலம் எழுப்பப்பெற்ற தோட்டங்களில் முதிர்ச்சியடைந்த கருவேல், வெல்வேல் மரங்கள் வெட்டப்படுவதன் மூலம் மக்களுக்குத் தேவையான விறகுத்தேவை பெருமளவில் பூர்த்தி செய்யப்படுகிறது.

### ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வனத்துறையின் வளர்ச்சிப் பணிக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ.140 கோடி ஆகும். இதன் மூலம் 1,73,000 எக்டேர் பரப்பளவில் பல்வேறு வனத்தோட்டங்கள் எழுப்பி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**எஸ். டட் இ.வ.ப.,**
**வன உயிரினக் காப்பாளர்**
**சென்னை**

### எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களைக் கொண்ட ஒரு குழு மூலம் தயாரிக்கப்பட்டது. அவரது அறிக்கையின் அடிப்படையில் வனத்துறைக்கு 8-வது திட்டக் கால இலக்காக ரூ.191 கோடி பல்வேறு திட்டப் பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவைகள் முக்கியமாக வன வளத்தைப் பாதுகாத்து வளர்த்தல் சுமார் ரூ.11 கோடி இயற்கை வளத்தினைப் பாதுகாத்தல் சுமார் ரூ.55 கோடி சமுதாயம் மற்றும் இடைப்படுவன அமைப்பு அமைத்தல் என்ற முறையில் ரூ.86 கோடி, வனப்பொருட்கள் உற்பத்திக்கு ரூ.22 கோடி, விஞ்ஞானம், தொழில் நுட்பப் பயிற்சிக்கு ரூ.11 கோடி, மண்வளப் பாதுகாப்புப் பணிக்காக ரூ.6.00 கோடி, மொத்தம் ரூ.191 கோடி ஒதுக்கப்பட்டு 8-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொண்டு வனத்துறையில் ஒரு மறுமலர்ச்சி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சிடா நிதி உதவியுடன் செயல்படும் சமூகக் காடுகள் திட்டம்

சமுதாய நிலக்காடுகள் 1.3 இலட்ச ஏக்கரில் எழுப்பி சமுதாய நிலங்களில் காடு வளர்க்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது. இப்பணி 1981-82-லிருந்து சிடா நிதி உதவியுடன் இவ்வனப் பண்ணைத் திட்டத்தைச் சமூகக் காடுகள் திட்டமாக மேம்படுத்தியுள்ளது. 1981-82-லிருந்து 1985-86 வரை ஐந்தாண்டுகளுக்கான முதல் கட்டம் 7 ஆண்டுகளாக ஆக்கப்பட்டு 1987-88 வரை செயல்பட்டது. அதற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.45 கோடிக்குப் பதிலாக ரூ.57 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

மேற்காண் நோக்கத்தினை மனதிற்கொண்டு, சிடா உதவியுடன் சமூகக் காடுகள் திட்டப்பணிகள் இரண்டாவது கட்டம் 5 ஆண்டுகளுக்கு 1988-89-லிருந்து 1991-93 வரை நீடிக்கப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட திட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை மரப்பட்டா திட்டத்தையும், வேளாண்மைத்துறை வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள் வளர்த்தல் திட்டத்தையும், வனத்துறை சமூக-வளப் பண்ணைத் திட்டம், விதை நாற்று உற்பத்தி, ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் பயிற்சி விளம்பரத்திற்கான ஒத்துழைப்பு வழங்கல் ஆகிய பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இவை தவிர புதிய திட்டமாக இடை முகதளக் காடு வளர்ப்புத் திட்டம் 3 கோட்டங்களில் (திண்டுக்கல்-அண்ணா, சேலம், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டங்களில், செயல்படுத்தப்படுகிறது. டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் தலைமையின் கீழ், சிடா உதவியுடன் இவ்விரண்டாம் கட்ட திட்டத்தில், சமூகக் காடுகள், ஆராய்ச்சி-வளர்ச்சி சங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விரண்டாம் கட்டத்தில், புதிய சமுதாயக் காடுகள் 56,300 எக்டேரில் எழுப்புதல் மற்றும் ஏற்கெனவே உள்ள தோட்டங்களை மேம்படுத்தவும் செய்யப்படுகிறது. வரிசைத் தோட்டங்கள், வறண்ட நிலங்களில் வேளாண்மைக் காடுகள் ஊரக வளர்ச்சித் துறையில் மரப் பட்டா திட்டம், ஒதுக்கக் காடுகளில் இடை முகத்தளக் காடுகள், தரமான நாற்றுக்கள் உற்பத்தி, ஆராய்ச்சி - கண்காணிப்பு, பயிற்சி - விரிவாக்கம் ஆகியவற்றிற்கென 2-வது கட்ட திட்டத்தில் ரூ.85.4 கோடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

வனப் பண்ணைக் காடுகளை அறுவடை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை 50:50 என்ற விகிதத்தில் ஊராட்சிகளுடன் வனத்துறை பகிர்ந்து கொண்டது. கடந்த 9 ஆண்டுகளில் சுமார் ரூ.750 இலட்சங்கள் ஊராட்சிகளுக்குப் பங்குப் பணமாக வழங்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இந்த வருமானத்தை ஊராட்சிகளும், வனத்துறையும் முறையே 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.



### வான்வழி விதை தெளிக்கும் திட்டம்

1989-90-ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் சுமார் 5000 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990-91- ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள 11 கோட்டங்களில் தரந்தாழ்ந்த காட்டுப் பகுதிகளில் சுமார் 16,000 எக்டேர் பரப்பளவில் ரூ.112 இலட்சம் செலவில் வான் வழி விதைத் தெளிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டும், வான் வழி விதைத் தெளிப்புத் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

தமிழகத்தில் திருச்சி, தென்னார்க்காடு, வட ஆர்க்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவரார்யர், தர்மபுரி, சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் வாழும் 2.10 இலட்சம் பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டம் சுமார் ரூ.1.18 கோடி அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 42 பழங்குடியினர் கிராமங்களில் வசிக்கும் 2,062 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன். சுமார் 2.85 இலட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு இத்திட்டத்தின் கீழ் கிடைக்கிறது. பழங்குடியினருக்காக 16 தொடக்கப் பள்ளிகளையும், ஒரு மேல்நிலைப் பள்ளி, ஒரு உயர்நிலைப் பள்ளியையும் வனத்துறை நடத்தி வருகின்றது. இப்பள்ளிகளில் மொத்தம் 2,485 மாணவர்களும், 109 ஆசிரியர்களும் உள்ளனர். தற்சமயம் பழங்குடியினர் நலனுக்காக இரண்டு உயர்நிலைப்பள்ளி விடுதிகளும், எட்டு ஆரம்பப்பள்ளி மாணவர் விடுதிகளும் திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் வட ஆர்க்காடு- அம்பேத்கர் மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பத்து விடுதிகளின் மூலம் மொத்தம் 750 பழங்குடி மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

தமிழகக் காடுகளில் சில பகுதிகளில் மதிப்புமிக்க சந்தன மரங்கள் இயற்கையாக அமைந்துள்ளன. சந்தன மரக்காடுகள் சுமார் பத்து இலட்சம் எக்டேர் அளவில் ஆங்காங்கே பரவலாக அமைந்துள்ளன. அவற்றின் விலை தற்போது டன்னுக்கு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இச்சந்தன மரச் செல்வத்தின் மதிப்பு மிகவும் உயர்ந்து வருகின்றமையால், இவற்றைப் பாதுகாப்பது மிகவும் கடினமானதொரு பணியாகி வருகிறது. கடத்தல்காரர்கள் நவீன ஆயுதங்களுடன் கூட்டாகச் சேர்ந்து திருட்டுச் செயலில் ஈடுபடுகின்றனர். எனவே, மதிப்பு மிக்க இந்த வனச் செல்வத்தைப் பாதுகாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு கட்டமாக, அதிகமாகச் சேதப்படுத்தப்படுகின்ற மற்றும் மிகவும் பரந்துள்ள வனப் பாதுகாப்பு இலக்குகளை (பீட்) பிரித்து அமைக்க பாதுகாப்புப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த, வனக்காப்பாளர், வனக்காவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தவும், பாதுகாப்புப் பணியாளர்களுக்குத் தற்காப்பு ஆயுதங்கள், தொலைத் தகவல் தொடர்புச் சாதனங்களை வழங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. சந்தன மரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் நிகழ்ந்து வரும் சந்தனமரக் கடத்தல்களைக் கட்டுப்படுத்தி ஒடுக்க, வனத்துறையும், காவல்துறையும் இணைந்து முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. வனத்துறைப் பணியாளர்கள்

இவ்வரிய செல்வத்தைக் காக்கும் பணியைச் செவ்வனே செய்ய முடுக்கி விடப்பட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் 8 பாதுகாக்கப் பட்ட இடங்கள் உள்ளன. அவை களின் விவரம் பின்வருமாறு:

1. புலிகாட் வன உயிரினச் சரணாலயம் 60 ச.கி.மீ.
2. கிண்டி தேசியப் பூங்கா 2.82 ச.கி.மீ.
3. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் 0.30 ச.கி.மீ.
4. வேட்டன்குடிபட்டி பறவைகள் சரணாலயம் 0.13 ச.கி.மீ.
5. வல்லநாடு வெளிமான் சரணாலயம் 16.41 ச.கி.மீ.
6. கரிக்கிளி பறவைகள் சரணாலயம் 0.60 ச.கி.மீ.
7. கஞ்சரான் குளம் பறவைகள் சரணாலயம் 0.38 ச.கி.மீ.
8. சித்தராங்குடி பறவைகள் சரணாலயம் 0.67 ச.கி.மீ.

புலிகள் காப்பகத் திட்டம், மன்னார்வளைகுடா பகுதிகளில் 21 தீவுகளை உள்ளடக்கிய பகுதியில் தேசிய கடல்வாழ் உயிரினப் பூங்கா என அமைக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலிகள் காப்பகத் திட்டம் போல், யானைகள் காப் பகத் திட்டம் ஒன்றும் (Project Elephant) தயாரிக்கப்பட்டு, மத்திய அரசுக் குழு ஒன்று இத்திட்டம் பற்றி ஆய்வு செய்து சென்றுள்ளது.

**நீலகிரி உயிரினச் சூழல் பாதுகாப்பு**

தமிழ்நாடு, கேரளம், கர்நாடக மாநிலங்களின் பகுதிகளைக் கொண் டதாக அமையப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் உயிரினச் சூழல் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே இது ஒரு முன்னோடித் திட்டமாக அமையப் பெற்று செயல்பட்டு வரு கிறது.

தமிழகத்தில் 3 வனக் கழகங்கள் உள்ளன. அவையாவன:-

1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், திருச்சி
2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்
3. அரசு ரப்பர் தோட்டக் கழகம், கன்னியாகுமரி

கோவை தென் வட்டார வனச் சரகக் கல்லூரியைத் தமிழ்நாடு அரசு மீண்டும் பிப்ரவரி 1990 முதற் கொண்டு, மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்று இயக்கி வருகிறது. இக்கல்லூரியில் வனச் சரகர்களுக் குப் பயிற்சி அளிப்பது, புத்தறிவுப் பயிற்சி அளிப்பது என்ற கோட் பாட்டுடன் செயல்படவுள்ளது.

தமிழக வனத்துறையில் பல்வேறு திட்டப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் மேம்படுத்த கூடுதல் உயர் அதிகாரிகள், பணியாளர்கள் 300 பணியிடங்கள் இந்த நிதி ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே மிருகக்காட்சிச் சாலையை முதன்முதலாக 1855-ஆம் ஆண்டில் சென்னையில் அமைத் தலின் மூலம் தமிழகம் பெருமை யடைகிறது. 1985-இல் வண்டலூர் உயிரியல் பூங்கா திறந்து வைக்கப் பட்டது.

பொதுவான அனைத்து விலங்கு இருப்பிடங்களும் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டு, அங்கு விலங்குகள் இயற்கைச் சூழ்நிலையை ஒத்த சூழ் நிலையில் வைக்கப்பட்டு பராமரிக் கப்படுகின்றன. சுமார் 14 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட யானை இருப்பிடத்தினுள் பல்வேறு வயது யானைகள் வைக்கப்பட்டு இயற்கையாகக் காணப்படும் யானைக் கூட்டம் போல் காட்சி அளிக்கிறது. மேலும் புதிய முறையில், புலியும், கடமானும், சிங்கமும், நீல்கை மானும் ஒரே திறந்தவெளியில் அவைகள் ஒன்றுக்கொன்று மிக அருகில் இருப்பது போன்று ஒரு காட்சியைத் தோற்றுவிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நவீன சிறப்பு இருப்பிடங்கள் வேறு எந்த உயிரியல் பூங்காவிலும் இல்லை.

இந்த உயிரியல் பூங்காவில் தற்பொழுது 350-க்கும் மேற்பட்ட 56 வகையான பாலூட்டி விலங்கு களும், 400-க்கும் மேற்பட்ட 103 வகையான பறவையினங்களும், 50-க்கும் மேற்பட்ட 20 வகையான ஊர்வனங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் சுமார் 30 வகையான அயல்நாட்டு விலங்குகளும் அடங்கும்.

**பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் விலங்குகள்**

இவ்வுயிரியல் பூங்காவில் அரிய விலங்கினங்கள் பலவற்றை இந்தியா மற்றும் அயல்நாடுகளிலுள்ள பல் வேறு உயிரியல் பூங்காவிலிருந்து பெறப்பட்டு வருகின்றன. இதுவரை அமெரிக்கா, (மனிதக்குரங்கு), யுகோஸ்லோவேகியா (தென் அமெரிக்க ஒட்டங்கள் மற்றும் பழுப்பு நிறக்கரடி), மலேசியா (கரடிப்பூனை), ஆஸ்திரேலியா (கங்காரு), நாடுகளிலிருந்து விலங்குகள் பெறப்பட்டுள்ளன.



தமிழ்நாடு வனத்துறையில், வன ஆராய்ச்சிப் பிரிவு, வனமேம்பாட்டுக் காகவும் வன மூலப்பொருட்கள் உற் பத்திப் பெருக்கவும் ஆராய்ச் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன முன்பு தேக்கு மரம் - பசுமை இலைக்காடு இனங்களில் தோட்ட எழுப்பும் முறைகள் பற்றி ஆய் செய்யப்பட்டது. தற்பொழுது கால திற்கு ஏற்றாற்போல் மர வளர்ப்பு கலையில் பல்வேறு பிரிவுகளி வன ஆராய்ச்சி நடைபெற்று வ கின்றது.

# பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இடஒதுக்கீடு தருக!



## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

30.9.91 அன்று சட்டப் பேரவை யில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், முன்மொழிந்து ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட வர லாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 340-வது விதி 'சமுதாய ரீதியாக வும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்களின் நிலைமை களை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றிய பரிந்துரைகளைத் தர ஒரு குழுவைக் குடியரசுத் தலைவர் நிய மிக்கலாம்' என்று குறிப்பிடுகிறது. இவ்வதிகாரத்தின் கீழ், முதலாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குழு, மத்திய அரசால் 29.1.53-இல் அமைக்கப்பட்டது. முதலாவது பிற் படுத்தப்பட்ட வகுப்பினர் குழு, "கலேல்கர் குழு" என்று பொது வாக அழைக்கப்பட்டது.

திரு.காகாசாகிப் கலேல்கர் தலைமையில் அமைந்த இக்குழுவின் உறுப்பினர்களிடையே ஒன்றுபட்ட மனப்போக்கும், ஏகமனதான கருத் துகளும் ஏற்படவில்லை. எனவே இக்குழுவின் அடிப்படைப் பரிந் துரைகளில் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. குழுவின் தலைவர் காகாசாகிப் கலேல்கரே தனது கடிதத்தில் மிகவும் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார் அதாவது, சாதி அடிப்படையில் பிற்படுத்தப் பட்ட வகுப்புகளைப் பிரிப்பதைத் தாம் எதிர்ப்பதாகவும், குழு அறிக்கை களில் தரப்பட்டுள்ள பல பரிந்துரை களில் தமக்கு வேறுபாடு இருப்பதா கவும் குறிப்பிட்டார். இக்குழுவின் அறிக்கை 30.3.1955 அன்று குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக் கப்பட்டு, அது 3.9.56 அன்று நாடாளுமன்றத்தின் முன் வைக்கப் பட்டது. கலேல்கர் குழுவின் பரிந் துரைகளின் மீது மத்திய அரசு எவ்வித உத்தரவுகளும் பிறப்பிக்க வில்லை.

கலேல்கர் குழுவின் அறிக்கை யில் அடிப்படை மாறுபாடுகள் இருந்தமையால், மத்திய அரசு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவை 1978-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாள் அமைத்தது. இதன் தலைவராகத் திரு. பி.பி.மண்டல் அவர்களையும், உறுப்பினர்களாகத் திருவாளர்கள் ஆர்.ஆர்.போலே, திவான் மதன்லால், தீனபந்துசாஹூ, கே.சுப்பிரமணியம் ஆகியோரையும் நியமனம் செய்தது. இவர்களுள் திரு.தீனபந்துசாஹூ உடல் நலக்குறைவால் உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகவே அவருக்குப் பதில் திரு.எல்.ஆர். நாயக், குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

திரு.மண்டல் அவர்களின் தலை மையிலான இரண்டாவது பிற்படுத் தப்பட்டோர் நலக்குழு தனது அறிக் கையை 31.12.80 அன்று அரசிடம் சமர்ப்பித்தது. 1982 ஏப்ரல் திங் களில் மண்டல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டது.

இப்பேரவை முந்தைய அரசின் ஆட்சிக் காலத்தில், 12.5.89 அன்று மண்டல் குழுவின் பரிந் துரைகளை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கோரி ஒரு தீர்மானத்தை ஏகமன தாக நிறைவேற்றியது. மத்திய அரசு 13.8.90-ஆம் நாளிட்ட தனது குறிப்பாணையில், மத்திய அரசு அலுவலகங்களிலும், அதன் கட்டுப் பாட்டிலுள்ள பொதுத்துறை நிறு வனங்களிலும் 27 சதவிகித இடங் களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு இட ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. ஆனால் இந்த ஒதுக் கீடு கல்வி நிறுவனங்களில் அனுமதி குறித்துப் பொருந்துமா என்பது பற்றி எவ்வித ஆணையும் பிறப் பிக்கவில்லை. எனினும், அன்றைய தமிழக அரசு இப்பேரவையில் 21.8.90-ஆம் நாளன்று மத்திய அரசின் இந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டு முடிவைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆனால், இந்த முடிவை மத்திய அரசு அறிவித்தவுடன் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை முழுமை யாகவும், அதன் நோக்கம் நிறை வேறத்தக்க வகையிலும் நடைமுறை படுத்த வேண்டும் என்றும், வற் புறுத்தி வந்த அ.இ.அ.தி.மு.கழகத் தின் சார்பில் நான் இந்த 27 சத விகிதம் மட்டுமே ஒதுக்கீடு என்பதை யும், கல்வித்துறையில் இதனை நடைமுறைப்படுத்த வேண்டியதில்லை என அன்றைய மத்திய அரசு முடிவு செய்திருந்ததை யும் வன்மையாகக் கண்டித்தேன் என்பதையும் அனைவரும் அறி வீர்கள்.

மண்டல் கமிஷன் தன்னுடைய பரிந்துரையில் பிற்பட்ட மக்களுக் கான ஒதுக்கீடு அம்மக்கள் தொகை யின் அடிப்படையில் 52 சதவிகிதம் இருக்க வேண்டும் எனத் தன்னு டைய பிரதான பரிந்துரையாகச்

செய்திருந்ததை மத்திய அரசு கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டதைக் கண்டித்து அ.இ.அ.தி.மு.க. ஏற்கெனவே தமிழகத்தில் கடைப்பிடித்து வரும் 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கை போன்று மத்திய அரசிலும் இருந்திட வேண்டும் எனத் தொடர்ந்து இக்கொள்கையைத்தான் தெரிவித்துள்ளோம்.

ஆனால், மத்திர அரசின் இந்த 27 சதவிகித ஒதுக்கீட்டு அறிவிப்பினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் பல 'ரிட்' மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யும் இந்த மத்திய அரசின் ஆணையினைச் செயல்படுத்தக்கூடாது என்று உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. மேற்படி தடையுத்தரவை நீக்கக் கோரி மத்திய அரசு, உச்சநீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசுக்கு ஆதரவாகத் தமிழ்நாடு அரசும் உச்சநீதி மன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளது. ஆனால் 30.6.90 அன்று இந்தியப் பிரதமருக்கு முந்தைய அரசு எழுதிய கடிதத்தில் 52 சதவிகித ஒதுக்கீடுதான் தமிழ்நாடு அரசின் நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தாலும் இட ஒதுக்கீட்டினை இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலைவாய்ப்பிலும் கல்வி நிலையங்களில் சேர்க்கையிலும் அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவில்லை என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உச்சநீதிமன்றம், தற்போதைய மாறிய அரசியல் சூழலில், இப்பொருள் மீது மத்திய அரசின் திட்டவட்டமான கொள்கையைக் கூறுமாறு அறிவுறுத்தி, இறுதி விசாரணை நாளை, 10.10.91-ஆம் தேதிக்குத் தள்ளி வைத்துள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றபின் 4.7.91-ஆம் நாளன்று இப்பேரவையில் ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையிலும், 4.9.91 அன்று நிதி அமைச்சர் அவர்களால் நிகழ்த்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீதான உரையிலும், 18.9.91-ஆம் நாளன்று கோரிக்கை எண் 32-ன் மீது நிகழ்ந்த விவாதத்திற்கு நான் அளித்த பதில் உரையிலும் இம்முக்கியப் பொருள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

நமது நாட்டின் மக்கட் தொகையில் (1981 Census) இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் அளவு 52 சதவிகிதமாக இருப்பதாலும், தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் 67 சதவிகிதம் இருப்பதாலும், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டினை மத்திய அரசு 27 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டும்; இந்த ஒதுக்கீட்டினை வேலைவாய்ப்புக்கு மட்டுமின்றிக் கல்வி நிறுவனங்களின் அனுமதிக்கும் பொருந்துமாறு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்பதே இந்த அரசின் உறுதியான நிலையாகும்.

சமூக நீதியைக் காத்திட, சமுதாய நிலையிலும், கல்வித்துறையிலும் பின்தங்கியுள்ள வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு மண்டல் குழுவின் பரிந்துரைகளை விரைந்து, முழுமையாக நிறைவேற்றிச் செயல்படுத்திட மத்திய அரசு மனப்பூர்வமாக முன்வரவேண்டுமென்றும், அப்படி மண்டல் கமிஷனின் பரிந்துரைகளைச் செயல்படுத்துகையில் பிற்பட்டோருக்கு மட்டும் 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகித இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இப்பேரவை மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசின் இந்த உறுதியான நிலையைத் தெளிவாக மைய அரசுக்குத் தெரிவித்து வலியுறுத்த வேண்டி, தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்தத் தீர்மானத்தை முன் வைத்து நிறைவேற்ற வேண்டுமெனக் கோரி தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

"அரசியல் அமைப்புச் சட்டத்தின் 340-வது விதியின்படி சமுதாய நிலையிலும், கல்வி நிலையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களை முன்னேறச் செய்வதற்கான முறைகள் பற்றி வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவ்தில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

இந்த நோக்கத்தினைச் சிறப்புடன் செயல்படுத்துகிற வகையில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவு 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாகத் தமிழக அரசால் 1980-ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ மாணவியர் தொழிற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதிலும், அரசுப் பணிகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதிலும் அதிகப் பயன்பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் மண்டல் குழுப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இன்றைய மத்திய அரசு 13.8.90 நாளிட்ட தனது குறிப்பாணையில் மத்திய அரசு அலுவலகங்களிலும், இதன் கட்டுப்பாட்டிலுள்ள பொதுத்துறை நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டளவினை 27 விழுக்காடு என்று ஆணை பிறப்பித்தது. இன்றைய மத்திய அரசும் தனது சமீபத்திய முடிவின் மூலம் அதே 27 விழுக்காட்டைத்தான் குறிப்பிடுகிறது. ஆனால் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பற்றி எந்தவித ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, சமுதாய நிலையிலும் கல்வித்துறையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு உதவுகிற வகையில் மண்டல் குழுவின் பரிந்துரைகளை, விரைந்து, முழுமையாக நிறைவேற்றிச் செயல்படுத்திட மத்திய அரசு முன்வரவேண்டும் என்றும், மேலும் மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் 27 விழுக்காடு என்பதற்குப் பதிலாக 50 விழுக்காடு என்று இட ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மத்திய அரசுத் துறைகள், மத்திய அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைவாய்ப்புகளில் மட்டுமின்றி, அனைத்துக் கல்வி நிலையங்களின் அனுமதியிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."



# தொழுநோய் ஒழிப்புக்கு மருந்துகள் மட்டுமல்ல, மாறிய கண்ணோட்டமும் தேவை!

**தொழுநோயை நிச்சயமாகத் தடுக்க முடியும் என்றாலுங்கூட, அதைப் பற்றிய தவறான கருத்துக்கள் நிலவுவதை முதலில் தடுக்க வேண்டும். இந்நோய் ஒழிப்புக்கு மருந்துகள் மட்டுமல்ல, மாறிய கண்ணோட்டமும் தேவை என்கிறது இக் கட்டுரை.**

மனித இனத்தை வாட்டுகின்ற இன்னல்களில் ஒன்றான தொழுநோயைப் பற்றி வேதங்களில்கூட சொல்லப்பட்டுள்ளது. இன்றும் அதன் தாக்கம் உலகின் பல பகுதிகளிலும் உள்ளது. தொழுநோயை நிச்சயமாகத் தடுக்க இயலும் என்ற அளவுக்கு மருத்துவ முறைகள் வளர்ந்துவிட்ட போதிலும், இன்றும்கூட அதைப்பற்றிய தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. குணப்படுத்தவே இயலாத நோய், பாரம்பரியமாக வருவது, தொற்றும் தன்மை வாய்ந்தது. ஏன், பாவத்தின் சம்பளம் என்று கூடத் தொழுநோயைப் பற்றி கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள், குடும்பத்தினரால் வெளியே துரத்தப்படும் நிலையும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த தள்ளிவைத்தலின் காரணமாக ஆங்காங்கே தொழுநோய்க் காலனிகள் தோன்றி, நவீன மருத்துவச் சிகிச்சைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத மனிதப் புழுக்களாகத் தொழுநோயாளிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதிக அளவில் தொழுநோய் பாதிக்கப்படும் பகுதிகளைக் கொண்ட நமது நாடு, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அதை முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டும் என்று உறுதி பூண்டுள்ளது. உலகில் உள்ள ஒன்றரைக் கோடி தொழுநோயாளிகளில் மூன்றிலொரு பங்கினர் இந்தியாவில் உள்ளனர். இந்தியாவில் உள்ள தொழுநோயாளிகளில் 88 சதவிகிதம் பேர், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், நாகாலாந்து, பீகார், கர்நாடகம், பாண்டிச்சேரி, இலட்சத் தீவுகள், அந்தமான்-நிகோபர் ஆகியவற்றில் வாழ்கிறார்கள்.

ஆர்மர் ஹவுஸன், 'எம்.லெப்ரே' என்ற தொழுநோய்க் கிருமியைக் கண்டுபிடித்ததிலிருந்து தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இன்று முழுமையாகக் குணப்படுத்தும் அளவுக்கு மருத்துவ முறை வளர்ந்துள்ளது. தொழுநோய் தடுப்பூசிகளை உருவாக்கும் பணி இறுதிக்கட்டத்தில் உள்ளது.

நாற்பதுகளில், தொழுநோய்க்கான ஒரே சிகிச்சை, அவர்களைத் தனிமைப் படுத்துவதே. அதன்பின்னர் 'டேப்ஸோன்' மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. என்றாலும், 1982-இல் 'குளோபாஸிமைன்', 'ரிபாம்பிஸின்' ஆகிய இரு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே, தொழுநோய்ச் சிகிச்சையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. இவ்விரண்டு மருந்துகளுடன் சேர்த்து டேப்ஸோனையும் கொடுக்கும் முறைக்குப் 'பன்மருந்து சிகிச்சை' என்று பெயர். இச்சிகிச்சையை அளிப்பதன் மூலம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தொழுநோயை முழுவதுமாகக் குணப்படுத்த முடியும்.

இந்தியாவில் தொழுநோய் எதிர்ப்புக்கான முதலாவது திட்டம் 'தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்' என்ற பெயரில், 1954-55-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர் 1983-இல் 'தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முற்றிலும் மத்திய அரசின் உதவியாலேயே நடத்தப்படும் இத்திட்டம் கட்டம் கட்டமாகத் துவக்கப்பட்டு, 1995-ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுவதும் செயல்படத் தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சரியான சிகிச்சையளித்தல் அனைத்து நோயாளிகளுக்கும் பன்மருந்து சிகிச்சையை அளித்தல், சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் நோயாளிகள் மறுவாழ்வில் சமூகசேவை அமைப்புகளை ஈடுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நோயால் பாதிக்கப்படும் அபாயம் உள்ள மாவட்டங்களில், திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகச் சிறப்பு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 4.5 இலட்சம் மக்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில் 758 தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையங்கள், ஐம்பதாயிரம் பேருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 902 நகர்ப்புறத் தொழுநோய் மையங்கள், 25,000 பேருக்கு ஒன்று என்ற விகிதத்தில் 6,099 கணக்கெடுப்புக் கல்வி மற்றும் சிகிச்சை மையங்கள் ஆகியன இயங்குகின்றன.

★ கற்களால் கட்டப்படும் கோயில்களைவிட, நரம்பாலும் தசையாலும் கட்டப்பட்டுள்ள மனித உடல்களே உண்மையான கோயில்கள்.

— அண்ணல் காந்தியடிகள்

# காவல்துறை-
# தீயணைப்புத்துறை-
# மதுவிலக்கு ஆயத்தீர்வை
# மாண்புமிகு முதல்வர் அவர்கள்
# அறிவிப்புகள்

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 24.9.91 அன்று, சட்டப் பேரவையில் காவல்துறை மானியம், தீயணைப்புத்துறை மானியம், மாநில ஆயத்தீர்வை மானியம் ஆகிய முப்பெரும் மானியங்களின்மீது பேரவை உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்குப் பதிலளித்து ஆற்றிய உரை விவரம் வருமாறு:

மொத்தம் 18 மாண்புமிகு உறுப்பினர்கள் தமது அரும்பெரும் கருத்துக்களைக் காவல்துறை, தீயணைப்புத்துறை, மாநில ஆயத்தீர்வை மானியங்களின் மீது கூறியிருக்கிறார்கள். காவல்துறை மானியத்தின்மீது 54 வெட்டுத் தீர்மானங்களும், தீயணைப்புத்துறை மானியத்தின்மீது 29 வெட்டுத் தீர்மானங்களும், மாநில ஆயத்தீர்வை மானியத்தின்மீது 12 வெட்டுத் தீர்மானங்களும் உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்களின் கருத்துரைகளும், வெட்டுத் தீர்மானங்களின் சாரமுமே இந்த மானியங்களின் கூறுபாடுகளையும், குறைபாடுகளையும் தெளிவாக்குகின்றன.

எந்தத் திட்டத்திலும், செயல்பாட்டிலும், குறையும் உண்டு, நிறையுமுண்டு. 'குணம்நாடிக் குற்றம்நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்பதே வள்ளுவம். இந்த அரசைப் பொறுத்த வரையில் குறைகள் இருந்தால் குறைக்கப்படவேண்டும்; நீக்கப்படவேண்டும் - நிறைகள் இன்னும் நீட்டிக்கப்படவேண்டும் என்பதுதான்.

மற்ற மாநிலத்தோடு ஒப்பிடும் போது, நமது மாநிலக் காவல்துறையினர் செயல்வீரர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த நேரத்தில் ஒரு சில புள்ளி விவரங்களைத் தருவது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன். தமிழ்நாட்டில் 1990-ஆம் ஆண்டு பதிவாகிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை 1,28,829 ஆகும். அதே ஆண்டில் ஆந்திராவில் 88,084 குற்றங்களும், கர்நாடகாவில் 56,873 குற்றங்களும், கேரளாவில் 75,649 குற்றங்களும் பதிவாகி உள்ளன. தமிழ்நாட்டில் 52,000 பேருக்கு ஒரு காவல் நிலையமும், ஆந்திராவில் 46,500 பேருக்கு ஒரு காவல் நிலையமும் அமைந்துள்ளன. இதை வைத்துப் பார்த்தால் தமிழ்நாட்டில் வேலைப்பளு அதிகம் என்பது தெரியும்.

இருப்பினும், பதிவான குற்றங்களின் எண்ணிக்கையில், தமிழகக் காவல்துறையிலும், 65.1 விழுக்காடு அளவிற்குக் குற்றங்களைக் கண்டுபிடித்து சிறந்த சேவை ஆற்றியுள்ளனர். அதேகாலத்தில், ஆந்திர மாநிலத்தில் 52.6 விழுக்காடும், கேரள மாநிலத்தில் 22.6 விழுக்காடும் என்ற அளவுதான் குற்றங்களைக் கண்டுபிடித்துள்ளனர். குறிப்பாகக் களவாடப்பட்ட பொருட்களை மீட்பதில், தமிழ்நாடு 65.5 விழுக்காடு அளவை எட்டி முதலிடம் வகிக்கிறது. கர்நாடகம் 52.9 விழுக்காடும், ஆந்திரா 45.6 விழுக்காடும், கேரளா 25.8 விழுக்காடும் பெற்றுள்ளன. களவுச் சொத்துக்களை மீட்பதில், அகில இந்திய அளவான 48 விழுக்காட்டை மிஞ்சும் அளவிற்குத் தமிழ்நாடு அதிக அளவில் கண்டுபிடித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் இழக்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் ரூ.13.50 கோடி. மீட்கப்பட்ட சொத்தின் மதிப்பு சுமார் 8.25 கோடி. இத்தனைச் சிறப்புக்குரிய காவல்துறையினருக்கு நமது மாநிலத்தில் 1,075 காவல் நிலையங்களும், 180 புறக்காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றை வைத்து 1.30 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவில், பரவிக் கிடக்கின்ற 5½ கோடி தமிழ் மக்களைப் பாதுகாத்தாக வேண்டிய பொறுப்பு அவர்களிடம் சுமத்தப்பட்டிருக்கிறது.

காவல்துறையின், மற்றொரு முக்கியப் பணியை என்னால் இது



**• மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே ஒருவன் கற்றுக்கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.**

**—தந்தை பெரியார்**



சமயம் நினைவு கூறாமல் இருக்க முடியவில்லை. சமீபகாலம்வரை அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த நமது மாநிலம், இலங்கைப் போராளிகள், குறிப்பாக விடுதலைப் புலிகளால் அமளிக்காடாக, ஆயுதக் கலாச்சாரத்தின் கிடங்காக மாறியதுதான், பேரதிர்ச்சியையும், பெரும் பயத்தையும் உண்டாக்குகிறது.

அண்டை நாட்டிலே ஏற்பட்ட அவர்களின் பிரச்சினை, நம் மாநிலத்தை இவ்வளவு தூரம் பாதிக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு விளைந்த இன்னலைக் களைய முற்பட்ட தமிழகம், இன்று அந்த நாட்டு விடுதலைப் புலிகளின் அட்டகாசத்திற்கும், அடாவடிச் செயல்களுக்கும் ஆட்பட்டு, அல்லோல கல்லோலப் படுவது தெளிவாகிவிட்டது.

எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில், தமிழ்நாட்டை இலங்கைத் தீவிரவாதிகள், தங்களுடைய பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இருப்பிடமாக ஆக்கிக் கொள்ள இம்மியளவும் அனுமதிக்கமாட்டோம் என்று குறிப்பிட்டிருந்தோம். அதன் அடிப்படையில் இலங்கைத் தீவிரவாதிகள், மற்றும் அகதிகள் ஆகியோரின் மீது எங்களுடைய தெளிவான கொள்கையை, மக்களுக்கும், மத்திய அரசுக்கும் எடுத்து வைத்துள்ளோம்.

அதாவது-

**1. இந்த அரசு அரசியல் மன உறுதியை (Political will) தெள்ளத் தெளிவாக்கியுள்ளது.**

**2. இலங்கையிலிருந்து வந்த தமிழ் அகதிகளுக்கும், உதவும் கரமாகவும், ஊட்டும் கரமாகவும், திகழும் அதே நேரத்தில் இந்த அரசு ஆயுதத்தையும், பலாத்காரத்தையும் பிரயோகப்படுத்தி, பல்வேறு கொடுஞ்செயல்களைச் செய்யும் விடுதலைப் புலிகளின் விஷயத்தில் இணக்கம் காட்டவோ, அவர்களை அடக்குவதில் தயக்கம் காட்டவோ தயாராக இல்லை, என்று தெளிவாகச் சொல்லியுள்ளது. இன்னும் சிறிது வெளிப்படையாகச் சொன்னால், அமைதியான தமிழகத்தில் இப்படிப்பட்ட கொடுமையாளர்களுக்கு இடமில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. காவல் துறையினரையும் நிர்வாக இயந்திரத்தையும் முடுக்கிவிட்டிருக்கிறது. இப்படி, விடுதலைப் புலிகளையும், பயங்கரவாதிகளையும் அடக்கியே தீருவது என்பதை முடிந்த முடிவாகக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளில் தமிழக அரசு தீவிரமாக இறங்கியது. ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே, 26.6.91-இல் காவல்துறை, கப்பல் படை, கடலோர உயர் அதிகாரிகளின் மேல் மட்டக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளை, குறிப்பாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் எப்படியும் ஒடுக்குவது என்பது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டது. இவர்களை அடக்கி ஒடுக்குவதில், காவல் துறையினர் எடுத்த அதிரடி நடவடிக்கை வெகுவாகப் பாராட்டத் தக்கது.**

**★ நம் நாட்டில் பெண்களின் நிலை உயர்த்தப்பட வேண்டும். அவர்கள் மூலம் தான் வருங்காலக் குழந்தைகள் உயர்ந்த கருத்துக்களைப் பெறுவார்கள். பெண்களின் வாழ்க்கை நிலை உயர்த்தப்பட்டால் அவர்கள் மூலம் பண்பாடு, கல்வி, பக்தி, நம்பிக்கை ஆகியவை நாட்டில் மலரும்.**

**—விவேகானந்தர்**

அகதிகள் முகாமில் இல்லாத இலங்கைத் தமிழர்கள், நம் மாநிலத்தில் தங்கியிருப்பதைச் சீராக்கவும், அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புகலிடம் கொடுப்பதைத் தடுக்கவும், முகாமில் தங்களைப் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்கள், தங்கள் அருகிலுள்ள காவல் நிலையங்களுக்குச் சென்று, தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று, எல்லாத் தினசரி பத்திரிகைகளிலும், தமிழ்நாடு அரசு 28.6.91 அன்று அறிவிப்புக் கொடுத்தது. இது தொலைக்காட்சியிலும் வானொலியிலும் அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 27,187 இலங்கைத் தமிழகர்கள் தங்களைப் பதிவு செய்து கொண்டனர். இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுத்த 3,569 வீட்டு உரிமையாளர்களும், இலங்கையைச் சேர்ந்த நபர்கள் தங்களது நிறுவனங்களில் பணி செய்து கொண்டிருப்பதாக 1,104 நிறுவனங்களும், அந்தந்த எல்லைக் இது குறித்த தகவல்களை அளித்துள்ளனர். இவ்வாறு காவல் நிலையங்களில் பதிவு செய்து கொள்ளும் கடைசித் தேதி முடிவடைந்த பின்னரும் பதிவு செய்து கொள்ளாத இலங்கைத் தமிழர்களைக் கண்டுபிடிக்கும் சிறப்பு நடவடிக்கை ஒன்றைக் காவல்துறையினர் மேற்கொண்டனர். இத்தகைய இலங்கைத் தமிழர்கள் சுமார் 500 பேர் தனி முகாம்களில் தற்போது வைக்கப்பட்டுள்ளனர்.

மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் கடத்தல்காரர்கள், மற்றும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் முக்கியமான இடங்களில், நவீன ஆயுதங்களைத் தாங்கிய ஆயுதப் போலீசாரின் 34 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடல் வழியே தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வண்ணம், மத்திய ரிசர்வ் காவல் படையின் 10 கம்பெனிகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 10 கம்பெனிகளும் கடலோரப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளை வெளிக்கொணர, மத்திய ரிசர்வ் காவல் படையின் மேலும் இரண்டு கம்பெனிகள் உட்பகுதிகளிலும் நிறுத்தப்பட்டுள்ளன. கடலோரக் கிராமங்களில், வாகனம் மற்றும் காலால் நடந்து செல்லும் ரோந்துப் பணியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடலோரத்தின் முக்கிய இடங்களில், தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டு விரைவு வாகனங்களில், அதிரடிப்படையினரும் நிலை கொண்டுள்ளனர்.

மீனவர்கள், அவர்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் படகுகளுக்குத் தேவையான அளவு எரிபொருட்களைத்தான் வாங்குகிறார்களா என்பதைக் கண்காணிப்பதற்கு, அனைத்து மீனவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டில் பரந்த கடலோரப் பகுதி, கப்பற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை, மற்றும் சுங்கத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்

போடு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கடற் பகுதிகளில், நம் எல்லை வரையிலும் சென்று மீன் பிடித்தல் சீராக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. காவல் துறையினரின் துணையோடு செல்லும் மீன்பிடிப் படகு அணிகள் மட்டுமே நமது கடல் எல்லை வரை சென்று மீன் பிடிக்க அனுமதிக்கப்படுகின்றனர். இத்தகைய நடவடிக்கை மீனவர்களோடு மீனவர்களாகக் கலந்து இலங்கையிலிருந்து இங்கு வந்து செல்வதற்கான ஒரு வாய்ப்பை, விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்காமல் செய்ய முடியும் என்று ஒரு உறுதிப்பாட்டை நமக்கு அளிக்கிறது.

**கடத்தல்காரர்கள் மீது நடவடிக்கை**

இதுவரை 10 விடுதலைப் புலிகளும், 21 இலங்கைத் தமிழர்களும், விடுதலைப் புலிகளின் உள்ளூர் ஆதரவாளர்கள் 40 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 4,760 லிட்டர் டீசல்; 2,444 லிட்டர் என்ஜின் ஆயில்; 150 லிட்டர் மண்ணெண்ணெய்; 1 லாரி; 6 மோட்டார் சைக்கிள்கள், 2 வேன்கள்; 3 பிளாஸ்டிக் படகுகள், 8 படகு என்ஜின்கள், ரொக்கம் ரூ.2,72,773, 5 பிஸ்டல்கள், 2 நாட்டு ரக ரிவால்வர்கள்; 13 நாட்டு ரக துப்பாக்கிகள்; 5,597 தோட்டாக்கள், 6 கையெறி குண்டுகள், 7,650 காலி கையெறி குண்டுகள், 19 பயன்படுத்தப்பட்ட ஏ.கே.47 துப்பாக்கித் தோட்டாக்கள், 46 கிராம் தங்கம், 26 வயர்லெஸ் செட்டுகள், 10 மீட்டர் விடுதலைப் புலிகளின் சீருடைத் துணி; 26,523 வெடிகுண்டுக் குச்சிகள், 38,440 மின்சார டிடொனேட்டர்கள், 1,21,853 சாதாரண டிடொனேட்டர்கள் மற்றும் 10,000 அடி ஃப்யூஸ் ஒயர் ஆகியவற்றைக் காவல்துறையினர் கைப்பற்றினர்.

**சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிப்பதிலும், குற்றத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்வதிலும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நமது காவல்துறையை நவீனப்படுத்துவது, தற்போது காலத்தின் கட்டாயமாகும். காவல்துறைக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்படுவதும், சரியான பயிற்சி அளிக்கப்படுவதும் முன்னுரிமையோடு கவனிக்கப்படவேண்டிய விஷயம் குறிப்பாக இலங்கைப் போராளிகள் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால், தமிழகக் காவல்துறை உடனடியாக நவீனப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.**

இன்னும் இலங்கைப் போராளிகள் அச்சுறுத்தல் தொடரும் நிலையுள்ளதாலும், மிகவும் நவீன சக்தி வாய்ந்த நுட்பமான ஆயுதங்களைப் போராளிகள் பயன்படுத்தி வருவதாலும், நமது காவல்துறையினரின் வசமுள்ள ஆயுதங்கள் போராளிகள் பயன்படுத்தும் ஆயுதங்களுக்கு நிகரானது இல்லை என்பதாலும், நமது காவல் படையினருக்கு நவீன ஆயுதங்கள், சிறப்புப் பயிற்சி மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அளிப்பது மிகவும் அவசியமாகிறது. அதன் அடிப்படையில், காவல் துறையை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும், ரூ.80.45 கோடிக்கு ஒரு செயற்குறிப்பை மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ளது.

இந்த உதவிகளைப் பெறுவதற்கு நான் புதுடில்லி சென்று பிரதமரையும், உள்துறை அமைச்சரையும் சந்தித்து இதற்கான நிதியுதவி கோரியுள்ளேன். இந்த உதவி,100 சதவிகித மானிய அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுள்ளேன்.

**மது ஒழிப்பு**

குடிப்பழக்கத்தை அகற்றிக் குடிகளைக்காக்க வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கைக்கு, குறிப்பாகத் தாய்மார்களிடமிருந்து வந்துள்ள பாராட்டும் ஆதரவும் பலரும் அறிந்ததுதான். இந்த அரசு ஆட்சிக்கு வந்த சில நாட்களிலே அதாவது 16.7.91-லிருந்து சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டாலும், அந்தச் சமுதாயக் கொடுமை மீண்டும் எந்த உருவிலும் திரும்ப வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், கள்ளச் சாராயத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்ற நோக்கத்திலும், இதற்கென ஒரு தனிக் காவல் பிரிவைத் தமிழக அரசு உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. இந்தப் பிரிவில் ஏறத்தாழ 1886 காவல்துறையினர் பணி புரிவர். காவல்துறையினருக்கு, இந்தப் பிரிவை விரிவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்புப் பெருகும். அதே நேரத்தில், கள்ளச் சாராயத்தைத் தமிழ்நாட்டில் ஒழிப்பதற்கும், இந்த முயற்சி பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்

அடுத்து, முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப்பிற்கென ஒரு தனிப் பாதுகாப்புக் குழு (Special Security Group) காவல் துறையைக் கொண்டு நிர்மாணிக்கப்படவிருக்கிறது. இதற்கெனச் சிறப்புப் பயிற்சிகளும், நவீன ஆயுதங்களும் பெறப்படவிருக்கிறது. இப்படை முழு அளவில் நிர்மாணிக்கப்பட்டால், முதலமைச்சர், முக்கியப் பெருமக்கள் ஆகியோரது பாதுகாப்பில் தனிக்கவனமும், தரமான பாதுகாப்பும் செலுத்த இயலும்.

காவல் நிலையங்களின் பற்றாக்குறை, காலம் காலமாகப் பேசப்பட்டு வருகிற கருத்தாகும். ஏற்கெனவே தமிழகத்தில் இருக்கின்ற காவல் நிலையங்கள் போதாது என்ற கருத்தினை இங்கே பேசிய உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தினார்கள், இதன் முக்கியத்துவத்தை அரசு நன்றாகவே உணர்ந்திருக்கிறது. நிதி வசதிக்கேற்ப இவை பரிசீலிக்கப்படும் எனக் கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில், இலங்கைப் போராளிகள் நடமாடும் கடற்கரைப் பகுதிகளில், புதிதாகச் சில கடற்கரைக் காவல் நிலையங்கள் (Marine Police Stations) அவசியம் காரணமாக உடன் நிறுவும் எண்ணம் அரசுக்கு உள்ளது.

**பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவற்றைக் களைந்து, பெண்ணுரிமை காக்கப்பட்டு, ஆணுக்குப் பெண் சமம் என்னும் சத்தியம் நிலை பெறச் செய்திட எங்கள் அரசு அயராது பாடுபடும்.**



**• பற்றற்ற முயற்சியே சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய விரும்பும் மக்களுக்கு வேண்டும்; ஆசையும் பற்றும் மயக்கத்தை உண்டாக்கி வேலையைக் கெடுத்துவிடக் கூடியவை.**

**—மூதறிஞர் இராஜாஜி**



**பெண்களின் குறைகளை, கோரிக்கைகளைப் பரிவோடும், கவனத்தோடும் கேட்டுப் பரிகாரம் காணுகிற வகையில், பெண்களே முழுவதும் காவல்துறைப் பணியாளர்களாக, அதாவது முழுக்க முழுக்க பெண் அலுவலர்கள், காவலர்கள் அடங்கிய ஒரு காவல் நிலையத்தை முதலில் சோதனை முறையில் அதாவது ஒரு** Experimental basis - இல் தொடங்கவிருக்கிறோம். இந்தக் காவல் நிலையம் சென்னையில் தொடங்கப்படும். அதன் செயல்படும் திறம் அறிந்து, பிறகு படிப்படியாக மற்ற இடங்களிலும் விரிவுபடுத்துவது பற்றி முடிவு எடுக்கப்படும். இப்படி சென்னையில் தொடங்கப்படும் இந்தப் பெண்கள் காவல் நிலையத்தில், தமிழகத்தில் உள்ள பெண்கள் யாரும், தமக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களைக் களைய நடவடிக்கை கோரி அணுகலாம்.

காவலர்களுக்கு வீட்டு வசதி வழங்க வேண்டுமென்பதில், இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அதுவும் காவலர்களை மொத்தமாக ஓரிடத்தில் தங்க வைக்கிற வகையில், வீட்டு வசதி செய்வதன்மூலம், அவர்களை விரைந்து கூட்டவும், வேலைக்கு அனுப்பவும் வாய்ப்பாகவும் இருக்கும். தற்போது சுமார் 42 விழுக்காடு காவலர்களுக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒட்டுமொத்தமாக ஒரு பரிகாரம் தேட வேண்டும் என்பதற்காகத்தான், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இவர்களுக்கெனத் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஒன்றை நிறுவி செயல்பட வைத்தார். அக்கழகம் 1,561 வீடுகளையும், 601 குடியிருப்புகளையும் கட்டியது. துரதிருஷ்டவசமாக அதற்குப் பின்வந்த தி.மு.க. அரசு, அந்தக் காவலர் வீட்டுவசதிக் கழகத்தைக் கலைத்துவிட்டது.

**காவலர் சமுதாயத்தின் நலத்தில் அக்கறை கொண்ட இந்த அரசு, அவர்களின் வீட்டுப் பிரச்சினையைப் போக்க அவர்களுக்கென ஒரு வீட்டுவசதிக் கழகத்தை மீண்டும் ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதன்மூலம் நடப்பு ஆண்டில் ரூ.8 கோடி செலவில் குறைந்தது 1000 வீடுகளையாவது கட்டி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

> **அட்டைப்பட விளக்கம்:**
>
> முதல் அட்டை:
>
> சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் நடந்த, அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிப் படம்.
>
> இரண்டாம் அட்டை:
>
> அக்டோபர்-5 வனவிலங்கு வாரத்தையொட்டி, சிங்கக் குட்டிகள் படம் வெளியிடப்படுகிறது.
>
> கடைசிப்பக்க அட்டை:
>
> ஆயுத பூசைப் பண்டிகையையொட்டி, உலோகத்தாலான கலைமகள் திருவுருவச்சிலையின் படம் வெளியிடப்படுகிறது.
>
> சிலையை உருவாக்கியவர்: சிற்பி எல்.ராதாகிருஷ்ணன், ஈரோடு.

**தீயணைப்புத் துறை**

**இயற்கை அளித்த அரும்பெரும் நன்கொடைகள் சில சமயம சீற்றமடைந்து சீறும்போது, விளைவுகளும் விபத்துக்களும் படுபயங்கரமாகி விடுகின்றன. மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன. நடக்கப் போகும் தீ விபத்துக்களைத் தடுப்பதும், தீ விபத்துக்களின்போது, உடனடி நடவடிக்கைகள் எடுத்து, அதில் சிக்குண்ட உயிரையும், உடமையையும் காப்பதும், தீயணைப்புத் துறையின் தலையாய கடமையாகும். மேலும் இயற்கைச் சீற்றத்தின்பாற்பட்ட புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற சமயங்களிலும், இத்துறையினரின் மீட்புப் பணி மகத்தானது.**

**நமது மாநிலத்தில் தீயணைப்புத் துறையில் 5,690 பேர் பணிபுரிகின்றனர். 201 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் 69 தீயணைப்பு நிலையங்களில் 75 ஆம்புலன்ஸ் வாகன வசதி உள்ளது.**

**ஆண்டுக்குச் சுமார் 10,000 தீ விபத்துக்களை இத்துறையினர் சந்தித்து வருகின்றனர். சென்ற ஆண்டில் மட்டும் விபத்தால் விளைந்த நட்டம் சுமார் ரூ.10 கோடி ஆகும். இதில் காப்பாற்றப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் ரூ.92 கோடி என்றால், இத்துறையின் பணித்திறனைப் பாராட்டத்தான் வேண்டும். மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் இத்துறையின் மீட்புப் பணி நிலை திருப்தி அளிக்கிறது.**

**வளரும் சமுதாயத்தின் தேவைகளை விரைந்து நிறைவேற்றுவது வலிமை மிக்க அரசாகும் என்ற தத்துவத்தை நான் நன்கறிந்தவள். எனவே, மக்களுக்கு வேண்டியதை உரிய காலத்தில், தொடர்ந்து, போதுமான அளவிற்கு, திருப்திகரமான வகையில், திறம்படச் செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறேன். அதாவது Timely Service, Adequate Service, Continuous Service, Efficient Service என்பதே எங்கள் குறிக்கோள்.**

**அரசின் நோக்கமும், செயலும்**

இந்த அரசைப் பொறுத்தவரையில், 25 கிலோ மீட்டருக்குள் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்படும். குறிப்பாகக் குடிசைவாழ் பகுதிகளுக்கும், தொழிற்சாலைகள் இயங்கும் பகுதிகளுக்கும் முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்கப்படும். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் தெரிவித்தபடி 6 தீயணைப்பு நிலையங்களைக் கும்முடிப்பூண்டி, அனுப்பானடி, நாவல்பட்டு, கணபதி, திரூர், பவானி ஆகிய இடங்களில் திறக்க உள்ளோம்.

விரைந்து இயங்க காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் ஒன்றாக இருந்த கோட்ட தீயணைப்பு அலுவலகத்தைக் காமராசர் மாவட்டத்திற்கு ஒன்றாகவும், இராமநாதபுரத்திற்கு ஒன்றாகவும், ஆக இரண்டு கோட்டத் தீயணைப்பு அலுவலகங்கள் தொடங்கப்படும்.

வளரும் தேவைகளை விரைந்து தர, இருக்கும் அமைப்பையும், வாய்ப்பு வசதிகளையும் நவீனப்படுத்த வேண்டும்; புதுப்புது முறைகளைக் கையாள வேண்டும் என்பதில் எங்கள் அரசு அக்கறை கொண்டுள்ளது. இருக்கும் ஊர்திகள், கருவிகள், ஆகியவற்றைச் செப்பனிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுப்புதுக் கருவிகளையும், இயந்திரங்களையும் சேர்க்க

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஜப்பான் நாட்டிலிருந்து ரூ.3.32 கோடிக்கு ஒரு சுழல் மேஜை நீட்டிப்பு ஏணி (Turn Table Ladder) ஒன்றைத் தமிழகத்திற்கு வாங்கி இருக்கிறோம். 46 மீட்டர் நீளமுள்ள இந்த ஏணி பொருத்தப்பட்ட வாகனம் விரைந்து சென்று, எந்தப் பக்கம் வேண்டுமானாலும் ஏணியை இயக்கி, பலமாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்தில் சிக்கியவர்களை இதன் மூலம் எளிதாக மீட்க உதவும். இதை இயக்க 50 பேருக்கு ஜப்பானியர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு, 15.9.1991 அன்று இந்தப் புதிய சாதனம் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னால் அர்ப்பணிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மதுவிலக்கு**

உங்களுக்கு அளிக்கப்பட்ட கொள்கைக் குறிப்பில் தமிழக அரசின் மதுவிலக்குக் கொள்கையும், குறிப்பாக மலிவுவிலை நாட்டு மதுவை இந்த மாநிலத்திலிருந்து ஒழித்ததையும், அதன்மூலம் நலிந்த, ஏழை, எளிய சமுதாயம் எப்படிக் காக்கப்படுகிறது என்பது பற்றியும், இந்தத் துணிவான கொள்கையால், அரசுக்குச் சுமார் ஆண்டுக்கு ரூ.400 கோடி வரை நட்டம் ஆனாலும், அதைத் தாங்கிச் செயல்படத் துணிந்ததையும் விளக்கியுள்ளேன். ஆட்சிக்கு வந்த உடனேயே, இவ்வளவு பெரிய முடிவு, சமுதாய நலன் கருதித் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு துணிந்து எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இதுவரை காவலர்கள் தமது கடமைகளுக்கு மத்தியில் மதுவிலக்கு குற்றங்களையும் கண்காணித்து வந்தார்கள். அதன்மூலம் அவர்கள் கவனம் சிதறுண்டது என்பதை அறிந்து இந்த அரசு, மதுவிலக்கைப் பிரத்தியேகமாக அமுலாக்க ஒரு பிரத்தியேகப் பிரிவை (Prohibition Enforcement Wing) ஒரு காவல் துறைத் தலைவரின் (Inspector General of Police) மேற்பார்வையில் உருவாக்க முன்வந்துள்ளது. இந்தப் பிரிவில் 1,800 பேர்களுக்கு மேல் பணிபுரிவார்கள். அவர்களுக்கு வேண்டிய வாகன வசதி, ஏனைய வசதிகள் கொடுக்கப்படும். அப்படிச் செய்வதன்மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், வைத்திருத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றை எளிதில் ஒழித்துக்கட்ட முடியும் என்று இந்த அரசு நம்புகிறது.** இவர்களைத் தவிர எப்பொழுதும் உள்ள காவல்துறையினருக்கும் இவ்விஷயத்தில் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குப் பிரிவு காவலர்களைக் கொண்டு மற்ற மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகள், திடீர் திடீரென்று நடவடிக்கை எடுக்கப் பறக்கும் படைகள் உருவாக்கப்பட இருக்கின்றன. சுருங்கக்கூறின் வெளி மாநிலங்களிலிருந்து கள்ளச்சாராயம் வருவதோ, இந்த மாநிலத்தில் காய்ச்சிப்பின் விற்கப்படுவதோ, இரும்புக் கரங்கொண்டு தடுக்கப்படும் என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

அடுத்து, இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே, கிராம நிர்வாக அலுவலர்களையும்,காவல்துறை அதிகாரிகளையும் அந்தந்த இடங்களுக்குப் பொறுப்பாக்கி, அவரவர்கள் அதிகார வரம்பிற்குள் நடைபெறும் கள்ளச் சாராய நடவடிக்கைகள், ஏனைய மதுவிலக்குக் குற்றங்கள் பற்றி நடவடிக்கை எடுக்கத் தவறினாலோ அதுவிஷயத்தில் திறமைக் குறைவாக நடந்து கொண்டாலோ அவர்கள்மீது கடுமையான ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும் என்ற இந்த அரசின் சமீபகால ஆணை ஒரு மகத்தான விளைவை உருவாக்கி இருக்கிறது. மதுவிலக்குக் கொள்கை அமுலாக்கத்தில் ஒரு Major break through என்று கூட இதைச் சொல்லலாம் இது விஷயத்தில் சட்டப் பேரவை உறுப்பினர்களும், ஏனையோரும், அரசுக்கு உதவ வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படும் எரி சாராயம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக, எங்கெல்லாம் தொழில் நீடிப்புச் சாத்தியக் கூறுகள் உள்ளனவோ, அங்கெல்லாம் இயல்பு மாற்றப்பட சாராவியை (Denatured spirit) வழங்க வேண்டும் என்று அ.இ.அ.தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தபின் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் கள்ளச் சாராயம் காய்ச்சப் பயன்படும் எரி சாராயத்தின் துஷ்பிரயோகம் தடுக்கப்படுகிறது.

**இத்தனை தத்துவங்களையும் ஊருக்கு உரத்த குரலில் எடுத்துரைக்க மாநில அளவிலான ஒரு பிரச்சாரக் குழுவை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது.** அந்தக் குழுவிற்குத் தமிழக முதலமைச்சரே தலைவராகவும், தமிழகத்தில் நன்கு அறிமுகமான, பிரபலமான, பல்வேறு துறைகளில் ஈடுபாடு உடைய பெருமக்கள் 22 பேரையும் சேர்த்து, மாநில மட்டத்தில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர மாவட்ட ரீதியில், வட்ட ரீதியில், வட்டார ரீதியில், கிராம ரீதியில் குழுக்களைத் திருத்தி அமைக்க இந்த அரசு விரும்புகிறது. வெவ்வேறு மாவட்டங்களில் இருக்கும் குழுக்கள் பெயரளவில் இருந்தனவே தவிர, அவை செம்மையாகச் செயல்பட்டதாகத் தெரியவில்லை. இந்தக் குழுக்களில் எல்லாம் பெண்கள் பங்கு பெற்றதாகத் தெரியவில்லை. இனிமேல் அமைக்கப்படும் குழுக்களில் அவர்கள் கணிசமான அளவிற்குப் பங்குபெறுவார்கள்

மதுவின் கொடுமைகளை விளக்க சினிமா படங்கள், பிரச்சார சாதனங்கள், சேவா சங்கங்கள் முழுக்க முழுக்க பயன்படுத்தப்படும். பள்ளிப் பாடப் புத்தகங்கள்கூட இதைப்பற்றி கருத்துக்கள் கூற முயற்சிக்கப்படும்.

குடிப்பழக்கத்தால் விளையும் கேடுகளை மக்களுக்கு உணர்த்த அரசின் செய்தித்துறை திரைப்படப் பிரிவு, விசேஷ திரைப்படங்களைத் தயாரித்து, தொலைக்காட்சியிலும், வீடியோ கேஸட்டுகள் மூலமாகவும், திரைப்பட அரங்குகளிலும் இப்பிரச்சாரப்படங்கள் மக்களுக்குக் காண்பிக்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு வாரத்தை மதுவிலக்கு எழுச்சி வாரமாக் கொண்டாடி, மக்களின் மனதில் இந்தத் தத்துவங்களை நன்கு பதிய வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் உள்ள 31 சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் கருப்பஞ்சாற்று கசண்டை (Molasses) தேக்கம் இல்லாது பார்த்துக் கொள்ளப்படும். அதேபோல வடிசாலைகளில் (Distilleries) உற்பத்தியாகும் சாராவி (Alcohol) தக்கபடி பயன்படுத்தப்படும். உபரியாக இருக்கும் மொலாசஸ், சாராவியை எப்படிப் பயன்படுத்தி என்னென்ன தொழில்களைத் தொடங்குவது என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927



தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழரசு

1-11-1991 ரூ.1

[illegible] மற்றும்
[illegible] ஆராய்ச்சி
15 [illegible] 1991
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்,
சென்னை - 600 008.





# இந்த இதழில்...


ஸ்ரீபெரும்புதூரில் பிரதமர், முதல்வர் அஞ்சலி ... 2

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் தொடக்க விழா ... 7

மதுவிலக்கு: மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள நடவடிக்கைகள் ... 15

பிற்படுத்தப்பட்டோர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட ... 17

கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட கதர் கிராமத் தொழில் வாரியப் பணிகள் ... 21

குடல் புண் ... 24

சிறப்புமிக்க சிறுசேமிப்பு ... 28

ஆடு வளர்ப்போம்! ... 30

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடக்க விழா ... 33

இடைப்படு காடுகள் திட்டம் ... 39

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் — ஒரு கண்ணோட்டம் ... 41

பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 44

நாகப்பட்டினம் — ஒரு வரலாற்றுப் பின்னணி ... 46



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஐப்பசித் திங்கள் - 15

மலர்:22 இதழ்:9

1-11-1991


## தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

தமிழக அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை உயர்த்த, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான இந்த அகவிலைப்படி உயர்வு 1991 ஜூலை முதல் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும். இதன்படி, மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கப் படும். இதனால் குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.67 ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.315 ஆகவும் இருக்கும்.

ஜூலை முதல் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் வரையிலான அகவிலைப்படியின் நிலுவைத் தொகை உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். அரசின் நெருக்கடி யான நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி நிலுவைத் தொகையினை அரசு ஊழியர்கள் தாமாக முன்வந்து சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்த அகவிலைப்படி உயர்வினால் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றுவோர், அரசு மானியம் பெறும் கல்வி நிலை யங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட சுமார் 10 இலட்சம் அரசு ஊழியர்கள் பயனடைவார்கள். இந்த அகவிலைப்படி உயர்வு காரண மாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.128.16 கோடியும், நடப்பு நிதியாண்டில் (1991-92) ரூ.85.44 கோடியும் செலவாகும்.



# ஸ்ரீபெரும்புதூரில் பிரதமர், முதல்வர் அஞ்சலி

முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிர்நீத்த இடத்தில் அஞ்சலி செலுத்துவதற்காக, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்ம ராவ் அவர்கள் ஒரு நாள் பயணமாக 25.10.91 அன்று சென்னை வந்தார். அன்று பிற்பகல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்த மாண்புமிகு பிரதமர் அவர்களை, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா, சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க.பொன்னுசாமி மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் பிரதமர் திரு நரசிம்ம ராவ் அவர்களும், முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும் ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபெரும்புதூர் புறப்பட்டுச் சென்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் சென்றடைந்ததும் உத்திரப்பிரதேசம் மாநிலம் அமேதியிலிருந்து பாதயாத்திரைக் குழுவினர் கொண்டு வந்த புனித மண்ணை, பிரதமர் அவர்கள் பெற்று, அமரர் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் தூவி, பாரதத்தின் பல புண்ணியத் தலங்களிலிருந்து கொண்டு வந்த புனித நீரை அதன் மீது தெளித்தார். பின்னர் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களும், முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களும் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். பிறகு, இருவரும் ராஜீவ் காந்தி நினைவிடம் அருகே தனித்தனியாக மரக்கன்றுகள் நட்டனர்.

பின்னர், ஸ்ரீபெரும்புதூர் அரசினர் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதமர் அவர்களும், முதல்வர் அவர்களும் பேசினார்கள்.

**மாண்புமிகு முதல்வர் உரை**

முதலில் திரு பி.வி.நரசிம்ம ராவ் அவர்களுக்கு முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொன்னாடை அணிவித்தார். பின்னர் முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

நம் அனைவர் நெஞ்சங்களிலும், நீங்காத்துயரச் சுமையைத் தாங்கி நிற்கும் நிலையை உண்டாக்கிவிட்ட அமரர் ராஜீவ் காந்தியின் படுகொலை நிகழ்ந்த மண்ணில், கூடியுள்ள உங்கள் அனைவர் சார்பிலும் எனது கண்ணீர் அஞ்சலியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதப் புனிதர்கள் வரிசையில் ஒருவராய் அமரத்துவம் பெற்றுவிட்ட அவரது ஆன்ம சாந்திக்கென, பாரத தேசத்தின் புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள புனித நீரைப் பெற்று, அவரது நினைவைப் போற்றி ஆராதிக்கும் நிகழ்ச்சி என்பதால், நம் விழி நீரைத் துடைத்துக் கொண்டு, இச்சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் பிரதமராகப் பதவியேற்றபின், முதல் முறையாகத் தமிழகத்திற்கு வருகை தந்துள்ளார்கள். அவரை என் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் அன்புடன் வரவேற்கின்றேன்.

அதோடு, இந்தியத் திருநாட்டின் பெருமையையும், புகழையும் காக்க, அவரது கரத்தை வலுப்படுத்த, தமிழகம் என்றென்றும் துணை நிற்கும் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'எனது இந்த உறுதிமொழிக்குப் பின்னால் ஒரு சரித்திரமே இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அன்னை இந்திராகாந்தி அவர்களும், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், அன்று ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடும், இன்று நாம் ஒன்றுபட்டு செயல்படுகின்ற அரசியல் பண்பாடும், தொடர்ந்து என்னாலும், அமரர் ராஜீவ் காந்தி அவர்களாலும் வலுப்படுத்தப்பட்டு, இன்று அது எல்லாவகையிலும் வலுவடைந்து, மக்களின் வாழ்த்துதலுக்குப் பாத்திரமாய் இருந்து வருகிறது என்பதை, இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக, தமிழக மக்களின் நலனுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்த உடன்பாடு, நமது இரு கட்சிகளிடையே ஏற்படும் சிறுசிறு கருத்து வேறுபாடுகளால் அறுந்துபோகாது, ஒரு சிலரின் த்னிப்பட்ட கோப தாபச் செயல்களினாலும், எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்பதை, இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்! இந்த உடன்பாடு மேலும் தொடரும்; வளரும்; வலுப்பெறும் என்ற எனது நம்பிக்கை வளர, மூத்த அரசியல் பாரம்பரியமும், சீரிய தலைமையும் கொண்டுள்ள தோழமைக் கட்சியும், நல்ல ஒத்துழைப்பு நல்குமென்று நம்புகிறேன்!

நமது பாரதப் பிரதமர் அவர்கள் மேற்கொள்ளும் நல்ல திட்டங்களுக்கும், சிறந்த முடிவுகளுக்கும், நாங்களும் என்றென்றும் உறுதுணையாக இருப்போம் என்று உறுதி கூறுகின்றேன்!

இந்த உறுதியினை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க, நாம் கலந்து கொண்டிருக்கிற இன்றைய நிகழ்ச்சி, நமக்கு மிகுந்த மன வேதனையையும், எண்ணிப் பார்ப்பதற்கே இதயம் நடுங்குகிற பின்னணியையும் கொண்ட சோக நிகழ்ச்சியாகும். தமிழகத்தையும், தமிழக மக்களையும் தன் உயிரினும் மேலாக மதித்து, அன்பு செலுத்தி வந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், தமது இன்னுயிரை இந்த மண்ணிலே ஈந்தார் என்று எண்ணும் பொழுது, என் இமைகள் நனைகின்றன; இதயம் கனக்கின்றது!

இந்தியத் திருநாட்டை இருபத்தி ஓராம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்ல முற்பட்ட இணையற்ற தலைவர்; உலகத்திலுள்ள அனைத்து



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரக்கன்று நடும் காட்சி.



மாண்புமிகு முதல்வர் அவர்கள், ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரக்கன்று நடும் காட்சி

இளைய தலைமுறையினருக்கும் வழி காட்டியாய் இருந்த பேராளர்; நட்பிற்கும், அமைதிக்கும், ஒழுக்கத்திற்கும் உறைவிடமாய்த் திகழ்ந்த பண்பாளர், இந்தத் தமிழ் மண்ணில் உயிரிழந்தார் என்று நினைத்துப் பார்க்கவே நெஞ்சமெல்லாம் குமுறுகிறது!

தமிழகம் என்பது தாயின்மடி என்று நினைத்து, அன்னையின் அரவணைப்புக்கு ஏங்கி, ஆசையுடன் வருகிற குழந்தையைப் போல, எப்போதும் தமிழகம் நோக்கி வருபவர் ராஜீவ் காந்தி அவர்கள்.

மக்களோடு மக்களாய் கலந்து பழகும் மகிழ்ச்சியான அனுபவத்தை, இங்குதான் பெறமுடியும் என்று நம்பியவர் அவர். ஏனென்றால், அப்படியொரு காலம் தமிழகத்தில் இருந்தது. அந்த நினைப்பில் எங்கு அச்சமில்லை என்று நினைத்து, எங்கு அமைதி குடியிருக்குமென்று நம்பி வந்தாரோ, அந்த மண்ணில் துரோகம் அவரைக் கொன்றிடக் காத்திருந்தது என்பதையும், எங்கு வஞ்சகமும் வன்முறையும் இல்லை என்று நினைத்து வந்தாரோ, அங்கு அவரது உயிரை உறிஞ்சிக் குடிக்கும் பயங்கரம் அவரைப் பலிகொள்ள ஒளிந்திருந்தது என்பதையும், இன்றும் நம்மால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

ராஜீவ் என்றால் 'தாமரை' என்பது பொருள். யாராவது பூவுக்கு வெடி வைப்பார்களா? மலருக்கு வெடி வைக்கும் அந்த மாபாதகம் தமிழ் மண்ணிலா நடக்க வேண்டும்? ஒரு அழகிய தாமரைப்பூ வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட இடமாகத் தமிழகத்தை மாற்றியவர்களே- உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். நீங்கள் செய்வது நியாயந்தானா?

இராமானுசர் அன்பு நெறியைப் பரப்ப அவதரித்த இந்த இடத்திலேயா, தமிழகத்தின் சரித்திரத்தை மாசுபடுத்துகிற பச்சைப் படுகொலை நடத்தப்படவேண்டும்!

தமிழகத்திற்கு வரும்போதெல்லாம், தன் தாய் வீட்டிற்கு வரும் பாச உணர்வோடு வந்து செல்லும் அந்த ஒப்பற்ற தலைவனின் உதிரம், இந்தத் தமிழக மண்ணிலே சிதறி, அவர் உயிர் நீங்கும் நிலை ஏற்பட்டதென்றால், அது நம் தமிழகத்தைப் பாவபூமி ஆக்கிவிட்டதே! ஆறு கோடி தமிழ் மக்களின் உள்ளமும் உடலும் கூனிக் குறுகச் செய்யும் நிகழ்ச்சியாக நிகழ்ந்து விட்டதே! உலகச் சரித்திரத்தில் படிந்துவிட்ட இப்பாவக் கறையை நாம் எப்படித் துடைக்கப் போகின்றோம்?

எது செய்தாலும் ராஜீவ் காந்தியின் இழப்பை ஈடுசெய்ய முடியாது தான். ஆனால், ஒன்றை மட்டும் நாம் நிச்சயமாகச் செய்யலாம்.

இக்களங்கத்திற்குக் காரணமானவர்களை அடையாளம் கண்டு கொண்டு, அவர்களை அடியோடு அரசியலிலிருந்தும், பொது வாழ்க்கையிலிருந்தும் புறக்கணித்து, ஒதுக்க வேண்டும். அதில் ஒருபகுதியைத் தான் தமிழக மக்கள், நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் செய்தார்கள் இனியும் தொடர்ந்து செய்யத் தயாராக இருக்கிறார்கள். குறிப்பாக, கயவர்களைத் தமிழகம் கண்டு கொண்டு விட்டது. எனவே, இது போன்ற கொடியவர்களின் செயலுக்கு உறுதுணையாக உடன் செல்பவர்களுக்கு, இனி தமிழக மக்கள் எந்தவகையிலும் உதவ மாட்டார்கள்.

அமரர் ராஜீவ் விரும்பிய நல்லாட்சி, தமிழகத்தில் மலர்ந்துள்ளதைக் காணவும், அவர் வெளியேற்ற விரும்பிய தீயசக்திகள் வெளியேற்றப் பட்டுள்ளனர் என்பதைப் பார்த்து மகிழவும், அவர் நம்மிடையே இல்லை என்ற ஏக்கம் நெஞ்சை நெருடுகிறது!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபொழுது, அவருக்கு உதவிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமரான அந்த மாறுபட்ட சூழ்நிலையிலும், புரட்சித் தலைவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அவர் செய்தார்.



ஒரு மாநிலத்தின் முதலமைச்சருக்கும், நாட்டின் பிரதமருக்கும் இடைய இருந்த நட்பாக, அவர்களது நட்பைக் கருதமுடியாது. அவர்களிருவரின் அன்பும் நட்பும், தாங்கள் வகிக்கும் பதவியின் அடிப்படையில் அமைந்ததாகவும் இருக்கவில்லை. அரசியல் வேறு, ஆத்ம நட்பும், பாசமும் வேறு என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, நம் கண்முன் வாழ்ந்த தலைவர்கள் இவர்கள் என்று குறிப்பிட்டால், அது மிகையாகாது. இவர்களைத் தமிழக மக்கள் என்றென்றும் மறக்க முடியாது. இவர்கள் ஏற்படுத்திய இணைப்பை எவராலும் உடைக்க முடியாது.

இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அரங்கில் நம் நாட்டின் பிரதமராக, ராஜீவ் கலந்து கொண்ட பல்வேறு மாநாட்டு மற்றும் கூட்ட நிகழ்ச்சிகளை, நாம் தொலைக் காட்சியில் கண்டிருக்கிறோம். அவர் கலந்துகொண்ட எந்த நிகழ்ச்சியிலும், அதில் சிலவற்றில் அவர் தலைமைப் பொறுப்பை ஏற்காவிட்டாலும் கூட, உலகின் கண்களுக்கு அக்கூட்டத்தின் ஒரே தலைவராகத் தோன்றியவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களே. பன்னாட்டுத் தலைவர்கள் கூடும் அப்படிப்பட்ட கூட்டங்களில், வழக்கமாக அவர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட ஒரே மாபெரும் தலைவர், ராஜீவ் என்ற உன்னதமான உயரிய நிலையை அவர் தமது செயல் திறனால், சொல்லாற்றலினால், சிறந்த அணுகுமுறையினால் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்கால இந்தியாவைத் தலை நிமிர்ந்த நாடாக உயரச் செய்திட, இளைய தலைமுறையினருக்கு வழி காட்டி, அழைத்துச் சென்ற ஒரு மாபெரும் தலைவரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். அண்டைய நாட்டின் விஷமிகள், தமிழகத்திலுள்ள சில தீய சக்திகளுடன் சேர்ந்து, தீட்டிய சதித் திட்டத்தின் காவுப்பொருளாய், ராஜீவ் கொல்லப் பட்டுவிட்டார். இந்தியத் திருநாட்டை எக்காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் துண்டாட விடமாட்டேன் என்று சூளுரைத்தவர், அமைதிப் பூங்காவிலேயே அமரர் ஆகிவிட்டார்.

கொடுமையான அந்தக் குண்டு வெடிப்பு - இதோ இந்த மண்ணில் தான், இங்குதானே நிகழ்ந்தது!



உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க ரூ.12 இலட்சத்திற்கான காசோலையை அ.இ.அ.தி.மு.க.-வின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வழங்கினார்.

கொடூரமான அந்தக் கொலைத் திட்டம் சதிகாரர்களால் இங்குதானே நிறைவேற்றப்பட்டது!! அந்தக் குண்டு வெளிநாட்டு வெடிமருந்துகளைக் கொண்டிருந்தாலும், உள்நாட்டவரின் உதவியுடன் உருவாக்கப்பட்டது என்று அறியும்பொழுது, நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது!!!

அந்த வெடிகுண்டின் சக்தியைக் கணக்கிட்டவர்கள், அதன் பயங்கரத் தன்மையையும் அழிப்புச் சக்தியையும் வெளியிட்டுள்ளனர். இவ்வளவு சக்திவாய்ந்த நவீன வெடிகுண்டு, தன் பாதங்களைத் தொட்டு வணங்கிய ஒரு பெண்ணால் வெடித்து, அது தன் நெஞ்சைப் பிளந்து நெற்றியைச் சிதறடித்த நேரத்திலும், என் இந்தியத் திருநாட்டைத் துண்டாட விடமாட்டேன் எனச் சூளுரைப்பதுபோல், தன் இரு கரங்களிலும் தன் தாய் நாட்டைப் பற்றி அரவணைத்த வண்ணமே, உயிர் துறந்தார் என்பதிலிருந்து, தன் தாயகத்தை எந்த அளவு தன் உயிரினும் மேலாக நேசித்தார் என்பதை நாம் உணர முடியும்.

இன்றைய தினம், இங்கு கூடியுள்ள நாம் மட்டு அல்ல, இந்தியத் திருநாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒரு சபதத்தை ஏற்க வேண்டும்; 'எக் காரணத்தைக் கொண்டும் நம் தாய் நாட்டை எவரும் துண்டாட அனுமதிக்கமாட்டோம்; அதுபோன்ற தீய எண்ணமுள்ளவர்கள் எவராயினும், அவர்களுக்குக் கூலிப்படையாக உள்ளவர்கள் எவராயினும், அவர்களை இந்தியத் திருநாட்டில் உலவிட இடமளிக்க மாட்டோம்! என்ற உறுதியான சபதம் எடுக்கவேண்டும்.

அதோடு அந்த நல்லவரின் நினைவைப்போற்ற, எதிர்காலச் சந்ததியினருக்கு அவரது வாழ்க்கையை, வரலாற்றை நினைவுபடுத்த, நாம் தேவையான அனைத்தையும் செய்தாக வேண்டும்.

அமரர் ராஜீவ் காந்தியின் நினைவாக, அவர் உயிர் பிரிந்த இடத்தில் ஓர் நினைவாலயம் அமைக்க தமிழக அரசு முடிவெடுத்து, இப்பகுதியில் 12.19 ஏக்கர் நிலத்தை ரூ.8,41,110 செலவில் வாங்கியுள்ளது. மைய அரசின் கோரிக்கைக்கிணங்க, தமிழக அரசு வாங்கியுள்ள 12.19 ஏக்கர் நிலத்தையும், ராஜீவ் காந்தி நினைவாலயக் குழுவிடம் விரைவில் ஒப்படைக்க உள்ளோம். இக் குழுவில் என்னையும் ஒரு முக்கிய உறுப்பினராகப் பணியாற்றச் செய்துள்ளார் பாரதப் பிரதமர் அவர்கள்.

அக்குழுவின் சார்பாக, இந்த நினைவாலயத்தை நிர்மாணிக்கும் பணியைத் தமிழக அரசே மேற்கொண்டு, செம்மையாகவும், சிறப்பாகவும், விரைந்தும் முடித்துக் கொடுக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரணத்தின்போதும், பாரத மாதாவைத் தொழுதுகொண்டே உயிர் துறந்த அமரர் ராஜீவ் காந்தியின் நினைவாலயத்தை, இனி வழி வழி வரும் கோடிக்கணக்கான இந்தி

யர்களுக்கு, நாட்டுப்பற்றை நல்குகிற வழிபாட்டைத் தலமாக ஆக்கிவைப்போம். சத்தியத்தால் ஏற்றப்பட்டு, துணிவால் உயர்த்தப்பட்ட இந்த இலட்சிய விளக்கு, அணையா தீபமாக ஸ்ரீபெரும்புதூரில் என்றும் எரியும்; இனி எட்டுத் திசைகளுக்கும் தனது வெளிச்சத்தை வழங்கும்!

ஆறுகோடித் தமிழக மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்களின் சார்பாகவும், அமரர் ராஜீவ் அவர்களுக்கு என் கண்ணீர் அஞ்சலியை மீண்டும் காணிக்கையாக்கி, நாம் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க, பிரதமர் அவர்களின் நிவாரண நிதிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ரூ.12 இலட்சத்திற்கான காசோலையை இப்போது வழங்க உள்ளேன். அதைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடைபெறுகிறேன் நன்றி! வணக்கம்!

பிறகு, அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிர்நீத்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் அடங்கிய கலசத்தை முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களிடம் வழங்க, பிரதமர் அதைப் பெற்று அமேதியிலிருந்து வந்த பாத யாத்திரிகக் குழுவின் தலைவர் திரு ஜெகதீஸ் பியூஸ் அவர்களிடம் கொடுத்தார்.

### மாண்புமிகு பிரதமர் உரை:

பின்னர் பிரதமர் அவர்கள் உரையாற்றினார். பிரதமர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"நாம் அனைவரும் ஒன்று. இந்தியாவை யாராலும் பிரிக்க இயலாது. எம்மதத்தவராக இருந்தாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராயினும், எந்த மொழியைப் பேசுபவராயினும் அனைவரும் சமம். அனைவரும் இந்தியர் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தவர்களில் முதன்மையானவர் ராஜீவ் காந்தி அவர்கள். அவர் விட்டுச் சென்ற தாரக மந்திரத்தை நம் வாழ்நாள் முழுவதும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவர் வழியில் நடந்து நாட்டின் ஒருமைப்பாட்டை நாம் பாதுகாக்க வேண்டும். அவர் விட்டுச் சென்ற நாட்டுப் பணிகளைச் செய்து முடிப்பது நமது முதல் கடமை. அதுதான் நாம் அவருக்குச் செய்யும் தொண்டு.

> ★ நம்மிடையே தீண்டாமையும், சாதியும் உள்ளவரை, சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற, இந்தக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.
>
> —பண்டித நேரு

"ராஜீவ் ஒரு மாமனிதர். அவர் இந்திய நாடு 21-ஆம் நூற்றாண்டை நோக்கி நடைபோட வேண்டும் என்று கருதினார். இந்த மண்ணில் வாழ்பவர்கள் சகோதர உணர்வோடு வாழவேண்டுமென விரும்பினார். அவர் நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அன்போடு மக்களுடன் பழகி வந்தார். இந்திய மக்கள் அனைவரும் அவரை அன்புடன் நேசித்தனர். நமது நாட்டுக்காக மட்டும் அவர் வாழ்ந்தவர் அல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் உலகில் எங்கிருந்தாலும், அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். உலகத் தலைவர்கள் அனைவரிடமும் ராஜீவ் தொடர்பு கொண்டிருந்தார். மாண்டுபோன அவரை நாம் மீண்டும் கொண்டுவர முடியாது. அவர் விட்டுச் சென்ற செய்தியைக் கடைப்பிடிப்பதுதான் நாம் அவருக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

"ராஜீவ் வகுத்துக் கொடுத்த தேர்தல் அறிக்கையையும், வாக்குறுதிகளையும் மத்திய அரசும், காங்கிரஸ் ஆட்சி நடத்தும் மாநிலங்களும் நிறைவேற்ற உறுதியாகப் பாடுபடும். தமிழ்நாட்டில் காங்கிரஸ்-அஇஅதிமுக அரசியல் கூட்டணியை உருவாக்கிய சிற்பி ராஜீவ் காந்தி அவர்கள். அவர் ஏற்படுத்திய இந்தக் கூட்டணி என்றும் நீடிக்கும். இந்த உறவு பலப்படுத்தப்படும். மேலும் உறுதிப்படுத்தப்படும். தமிழக மக்களுக்கு ராஜீவ் காந்தி என்னென்ன வாக்குறுதிகளை அளித்தாரோ அவை அனைத்தும் நிறைவேற்றப்படும் என்ற உறுதியையும் அளிக்கிறேன். ராஜீவ் மறைந்த இடத்தில் நினைவு மண்டபம் எழுப்ப தமிழக அரசு அதற்குரிய இடத்தை அன்போடு வழங்கி உள்ளது. இந்த இடத்தில் ராஜீவ் காந்தி பெயரில் தேசிய நினைவுச் சின்னத்தை எழுப்ப இருக்கிறோம். தமிழக அரசின் உதவியோடு மத்திய அரசு இங்கு நினைவு மண்டபம் அமைக்க உள்ளது.

"அடுத்து வருகிற 25 ஆண்டுகளுக்கு இந்தியாவிற்கு நிலையான தலைமைதர ராஜீவ் விரும்பினார். ஆனால், நெஞ்சில் ஈரமற்ற கொடூரப் பாவிகள் அவரைப் பயங்கரமாகக் கொலை செய்து விட்டனர். அவரைக் கொலை செய்த தீய சக்திகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். நமது சக்தி, திறமை ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தி இந்தத் தீய சக்திகள் ஒடுக்கப்படும்.

"உத்திரப்பிரதேச மாநிலத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, தமிழக முதல்வர் அவர்கள் ஒரு பெரும் தொகையை அன்போடு வழங்கியுள்ளார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் அளிக்கும் பணம் எவ்வளவாக இருந்தாலும், அது நாம் கொண்டுள்ள பற்றையும், பொறுப்புணர்வையும் உலகுக்கு உணர்த்துகிறது".

முன்னதாக, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேச, தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர்.. பாலசுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூறினார்.

மத்திய அமைச்சர்கள் திரு. ப.சிதம்பரம், திரு எம்.அருணாசலம், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், தமிழக அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
—ஜே.சந்திரன்





# மதுவிலக்கு
# மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ள நடவடிக்கைகள்

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், 22.10.91 அன்று தலைமைச் செயலகத்தில் மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசின் சார்பில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை அறிவித்தார்.

**கள்ளச்சாராயம் ஒழிந்திட...**

கடந்த 4 மாதங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு காவல்துறையினரின் ஒத்துழைப்போடு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, ஏறக்குறைய 90 சதவிகித கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது. முழுமையான அளவில் கள்ளச் சாராயம் ஒழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

**ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலை**

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வகையில் ஒரு இலட்சம் படித்த வேலையற்ற இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் மதுவின் தீமைகளைப் பொதுமக்களுக்கு விளக்கும் பிரச்சாரப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**பாடப் புத்தகங்களில்...**

பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் பாடப் புத்தகங்களில் மதுவின் தீமைகளைப் பற்றிய கருத்துக்கள் பாடத் திட்டங்களாக இணைக்கப்படும்.

**மதுவிலக்குப் பிரச்சாரம்**

நாடு முழுவதும் கிராம வாரியாகவும், நகர வாரியாகவும் குழுக்களை ஏற்படுத்தி, அவை மூலமாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்து மது ஒழிப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**ஊர்க்கட்டுப்பாடு**

கிராமங்களில் ஊர்க்கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதன் மூலம் குடிப் பழக்கத்தைக் களைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**முழு நீளத் திரைப்படம்**

தொலைக்காட்சி, வானொலி, வீடியோ, திரைப்படம், செய்தித்துறை ஆகியவற்றின் மூலமாக மதுவிலக்குப் பிரச்சாரம் முடுக்கி விடப்படும். மேலும், மதுவின் தீமைகளை மக்களுக்கு உணர்த்த அரசாங்கமே முழு நீளத்திரைப்படத்தைத் தயாரித்து வெளியிடும்.

**நாடு முழுவதும் நாடகங்கள்**

நாடு முழுவதும் நாடகங்கள் நடத்துவதன் மூலமாகவும், செய்தித்தாள்களில் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பிரசுரிப்பதன் மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரம் தீவிரப்படுத்தப்படும்.

**பத்திரிகைகளில்...**

நாளிதழ்களில் மதுவின் தீமைகளைப் பற்றி அவ்வப்பொழுது மக்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் விளம்பரங்கள் வெளியிடப்படும்.

**இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள்**

தமிழகம் முழுவதும் நடத்தப்படவுள்ள இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்களில் மதுவின் தீமைகளைப் பொதுமக்களுக்குப் புரிய வைக்கின்ற வகையில் பிரச்சாரமும், மதுவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையும் மேற்கொள்ளப்படும்.

**ஓட்டுநர்களின் உரிமம் ரத்து**

மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டுகின்ற ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாணவர்களுக்கான போட்டிகள்**

கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மதுவிலக்குப் பிரச்சாரம் குறித்த நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றில் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

**மீட்பு மையங்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியார் மற்றும் சேவை நிறுவனங்களின் உதவியோடு (De-Addiction Centres) குடிப்பழக்கத்திலிருந்து மீட்பு மையங்கள் நிறுவப்படும். ●

● தஞ்சைத் தரணியே விழாக்கோலம் பூண்டிருந்த காட்சியின் மாட்சி!

● தெருவெல்லாம் வாழ்த்து முழக்கங்கள்!

● எண்ணம் கவரும் வண்ண வரவேற்பு வளைவுகள்!

● பிரம்மாண்டமான பந்தலில் அலைகடலென மக்கள் வெள்ளம்!

● ரூ.88 கோடிக்கு நல்வாழ்வுத் திட்டங்கள்

# நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்

## தொடக்க விழா



அக்டோபர்த் திங்கள் பதினெட்டாம் நாள், தமிழக வரலாற்றில் ஓர் பொன்னாள் ஆகும். ஆம். அன்றுதான் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் உதயமாகியது!

தொடக்க விழாவினையொட்டி, தஞ்சை மாநகரமே நெஞ்சை அள்ளும் காட்சித் தொகுப்பாக விளங்கியது.

தெருவெல்லாம் தோரணங்கள் அசைந்தாடின. மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கும் பதாகைகளும், எண்ணம் கவரும் வண்ணமிகு வரவேற்பு வளைவுகளும் ஆங்காங்கே காட்சியளித்தன. தஞ்சைத் தரணியே திருவிழாக் கோலம் பூண்டிருந்த காட்சியின் மாட்சியைக் காண முடிந்தது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் என மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்க வழிமேல் விழி வைத்து ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் திரண்டிருந்தனர்.

விழா நடந்த நாகப்பட்டினம் வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் விளையாட்டுத் திடலில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான பந்தலில், அலைகடலென மக்கள் கூட்டம், மலரும் புதிய மாவட்டத் தொடக்க விழாவினைக் காண மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரையினைக் கேட்கவும் கூடியிருந்தது.

விழா மேடை, வண்ணமலர்களாலும், மின் விளக்குகளாலும் கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடைக்கு வருகை தந்தபோது, விண்ணதிர வாழ்த்து முழக்கங்கள் ஒலித்தன.

வண்ணமிகு விழா தொடங்கியது!
புதிய மாவட்டம் மலர்ந்தது!
குழுமியிருந்த மக்கள் முகங்களும் மலர்ந்தன!

### மாண்புமிகு முதல்வர் விழாப் பேருரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான, பெருந்தகை முகமது இஸ்மாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில்-எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த முடிவின்படி, சீர்மிகு கடற்கரை நகரான இந்நாகப் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட, 'நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தை' தொடங்கி வைப்பதில் மெத்தப் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

### மாவட்டத்தின் சிறப்பு

சோழ வளநாடென்னும் தஞ்சைத் தரணி மகிழ்ச்சி பொங்க, ஆனந்த வெள்ளத்தில் குதூகலிக்கும் இந் நன்னாளில், அலை கடலெனத் திரண்டுள்ள உங்கள் அனைவரையும் காணுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கரிகால் சோழனும், ராஜ ராஜ சோழனும் பிறந்த மண், காவிரி அன்னை காலங்காலமாக ஓடி வளப்படுத்திய கழனிகளின் சொர்க்கம்; கவிச் சக்ரவர்த்தி கம்பனும், கற்புக்கரசி கண்ணகியும் பிறந்த பூமி; உலகையே வசப்படுத்தும் இசையும், பாடலும், நடனமும் தோன்றிய இடம்; மக்களாட்சித் தத்துவத்திற்கு முதல் முதல் வழிகாட்டிய குடவோலை முறையையும், உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும் நமக்கு அறிமுகப்படுத்திய நாடு என்ற சிறப்பினை எல்லாம் பெற்ற பண்டைய சோழ நாட்டின் ஒரு பகுதி தான், இன்று புதிய மாவட்டமாக அமைகிறது.

அண்ணல் காந்தியடிகளின் அன்பைப் பெற்ற தில்லையாடி வள்ளியம்மையின் புகழும் பெருமையும், இம்மண்ணின் தியாகப் பெருமையை எடுத்துக்காட்டுவனவாகும். இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில், உப்பு சத்தியாக்கிரகம் நடந்த சிறப்புப் பெறும் இடங்கள் இரண்டு ஆகும். அவற்றில் ஒன்று வடநாட்டில் உள்ள தண்டி ஆகும். மற்றொன்று இம்மாவட்டத்தில் இடம்பெறும் வேதாரண்யம் என்ற பெருமையும் இப்பகுதிக்கு உண்டு.



இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவரே, இம்மாவட்டத்தில் பிறந்தவர் என்று சிறப்பையும் பெற்றிருக்கின்றோம். இவ்வாறு இம்மாவட்டத்திற்கு நானும் உரிமை கொண்டாடக் காரணம், எனது மூதாதையர்கள் பிறந்து வளர்ந்தது இதே சோழ மண்டலத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ஆகும்.

### புதிய மாவட்டம் உதயமாகிறது!

பல்வேறு சிறப்புக்களின் தொகுப்புத்தான் தஞ்சை மாவட்டம் ஆகும். இன்று புதிதாக அமையும் நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டம், உலகப்புகழ் பெற்ற திருத்தலங்களையும் தன்னகத்தே கொண்ட சீர்மிகு மாவட்டம் ஆகும். இந்துக்கள் பெரிதும் விரும்பும் சிக்கல் சிங்கார வேலன் திருக்கோயிலும், இஸ்லாமியர்கள் மனங்கவர்ந்த நாகூர் தர்காவும், கிறிஸ்தவர்கள் போற்றிப் புகழும் வேளாங்கண்ணி ஆலயமும், இங்கே அமைந்திருந்தாலும், அவை அனைத்தும் மத வேறுபாடின்றி அனைவரும் வழிபடும் ஸ்தலங்களாகத் திகழுவது நமது வரலாற்றின் மத ஒற்றுமைக் கொள்கைகளுக்கு ஓர் சீரிய எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இத்தனைப் புகழ், பெருமை, சிறப்பு ஆகியவற்றைப் பெற்ற இம் மாவட்டம், இதுவரையிலும் தீர்வா

# நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்




வசதிக்காகக் கீழத் தஞ்சை மாவட்டம் என்று அழைக்கப்பட்டு வந்திருந்தாலும், முறைப்படி ஒரு தனி மாவட்டம் என்று அழைக்கப்பெறும் வாய்ப்பு பெறாமல் இருந்தது பெருங்குறையாகவே இருந்தது. அந்தக் குறையைப் போக்கவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் வேட்கையைத் தீர்க்கவும், அரசு நலத் திட்டங்களின் பயன்கள் அவர்களை விரைந்து சென்று அடைய வேண்டும் என்பதற்காகவும் இன்று முதல் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பெயர் தாங்கி புதிய மாவட்டம் உதயமாகிறது.

தமிழ்நாட்டில் பிறந்து, இந்திய அரசியலில் பொது வாழ்வின் தூய்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த பெருந்தகை, காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் என்றால் மிகையாகாது. இந்தியத் திருநாட்டின் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த காயிதே மில்லத் அவர்கள், இந்தியாவின் பொது மொழியாக எம்மொழியை ஏற்றுக்கொள்வது என்ற சர்ச்சை ஏற்பட்ட போது, தொன்மைச் சிறப்பும், இலக்கியச் செறிவும், இலக்கண வளமும் மிக்க ஒரே இந்திய மொழியான, நம் தமிழ்மொழியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அன்றைக்கு உரத்த குரலில் வாதாடினார் என்பதிலிருந்து, அவர் பெயரில் இன்று சிறப்பிற்குரிய ஓர் மாவட்டத்தை நாம் உருவாக்கியிருப்பது, எவ்வளவு பொருத்தமான செயல் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

## உயிர்நாடியான பிரச்சினை

இம்மாவட்டத்தின் அனைத்துச் சிறப்பையும் பெருமையும், புகழையும் கூற வேண்டுமானால், கூறிக் கொண்டே போகலாம். இவ்வளவு சிறப்புக்களையும் ஒருசேரப்பெற்று நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை வளநாடு எனப் போற்றப்பட்ட இப்பூமி, அண்மைக்காலமாக எங்கே வறண்ட பாலையாகி விடுமோ என்ற அச்சம், தமிழக மக்கள் அனைவர் மனதிலும் குடிகொண்டுள்ளது. அத்தகைய அச்சத்தைப் போக்க வேண்டும், தஞ்சைத் தரணி என்றென்றும் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக நிலைபெற்றிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடுதான், காவிரி நீர்ப் பிரச்சினையில், சிறிதும் விட்டுக் கொடுக்க முடியாத ஒரு தீவிர நிலையினை நான் எடுத்தேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆனால், 'நான் காவிரித் தண்ணீர் குடித்து வளர்ந்தவன், இங்கே பிறந்தவன்' என்றெல்லாம் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பவர், இப்பிரச்சினையில் 1974-75 காலக்கட்டத்தில், எவ்வளவு பெரிய துரோகம் செய்தார் என்பதை நான் கூறாமலேயே இம்மாவட்ட மக்கள் நன்கு அறிவீர்கள். இம்மாவட்டத்தின் உயிர்நாடியான பிரச்சினை என்பது மட்டுமல்லாது, தமிழகத்திற்கே ஓர் ஜீவாதாரப் பிரச்சினை காவிரிப் பிரச்சினை ஆகும். ஓர் குழந்தையை அதன் தாய் பேணி வளர்ப்பதைப் போல், காவிரித்தாய் தஞ்சைத் தரணி மூலம் தமிழக மக்களை ஊட்டி வளர்த்து வருகிறாள். அந்தத் தாயை ஜீவனற்றதாக்க யார் முயற்சித்தாலும், அதைத் தடுப்பது என்னுடைய கடமை என்ற உணர்வோடுதான், உங்கள் உரிமைக்குரல் உலகிற்குத் தைரியமாக எடுத்துரைத்தேன். நம் பக்கம் இருக்கும் நியாயத்திற்கு நீதி கிடைக்கும் வரை, இறுதி வரை இதில் ஓய மாட்டேன், பின் வாங்க மாட்டேன் என்ற உறுதியை, இத் தஞ்சை மண்ணிலிருந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

## உங்கள் குரலுக்குத்தான் செவிமடுப்பேன்!

இப்படி நான் உரிமைக்குக் குரல் கொடுப்பது, சிலருக்கு எரிச்சலைத் தருகிறது. குறிப்பாக இப்பிரச்சினையில் தமிழகத்திற்குத் துரோகம்செய்தவர்களுக்கு என்னவோ போலிருக்கிறது.

எனவேதான்,

- நான் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசினால், எக்காளமாக ஏகடியம் பேசுகிறார்கள்.
- நான் கச்சத் தீவைப் பற்றிய உண்மையைச் சொன்னால், அவர்களுக்கு உளைச்சலாகத் தெரிகிறது.
- நான் கள்ளச் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டால், திசை திருப்ப முயற்சிக்கிறார்கள்.
- நான் வன்முறையை ஒடுக்க நினைத்தால், எப்படியேனும் அதற்கு எண்ணெயிட்டு ஊக்குவிக்கிறார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் ஏழைகளின் பக்கம் நின்று உழைக்கிறேன் என்பதால்தான். பேரறிஞர் அண்ணா வழியில் ஆணவக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கிறேன் என்பதால்தான். தந்தை பெரியார் வழியில் எவருக்கும் அஞ்சாமல், மக்கள் எதிரிகளை நேருக்கு நேர் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்பதால்தான்.

நான் இவர்களுடைய எந்த மிரட்டலுக்கும் அஞ்ச மாட்டேன். உங்களுக்காக நான் ஆற்றுகிற பொது நலப்பணியிலிருந்து பின் வாங்கமாட்டேன். எங்களுடைய உயர்விற்கும் வளர்ச்சிக்கும் உரமாகத் திகழும் உங்கள் குரலுக்குத்தான் செவிமடுப்பேன்.

## தக்க பாடம் புகட்ட வேண்டும்!

தமிழகத்தை ஆளுகிற வாய்ப்பைத் தமிழக மக்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்களே தவிர, இன்று என்னை வசைபாடும் ஆணவக்காரர்கள் அல்ல. இவற்றை எல்லாம் நான் மனம் திறந்து சொன்னால், சாதித்தீயை மூட்டி அதில் குளிர் காயத் திட்டமிடுகிறார்கள்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயரில் இன்று மாவட்டம் தொடங்குகிறோமே, இதை எந்த வருணாசிரமத்தை வளர்க்கும் திட்டம் எனச் சொல்வார்கள்?

1967-இல் பேரறிஞர் அண்ணாவும், மூதறிஞர் இராஜாஜியும், காயிதே மில்லத் சாகிப் அவர்களும், ஓர் உன்னத நோக்கத்திற்காக இணைந்து பணியாற்றினார்களே, அன்றைக்கு அவர்களிடம், இன்றைய இனபேதத் தீயை மூட்டுவது போன்ற உணர்வா இருந்தது? மக்கள் நலன், மக்கள் உயர்வு என்பது மட்டும் தானே பிரதான நோக்கமாக இருந்தது? அத்தகைய தலைவர்கள் கொண்டிருந்த உயரிய நோக்கத்தைத்தான், இன்றைய தினம் அமைந்திருக்கிற உங்கள் அரசு கொண்டிருக்கிறது என்பதை, இந்த நல்ல நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைத் தலை நிமிரச் செய்து, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக உயரச் செய்வதில், நாங்கள் எடுத்து வரும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட, சாதித் துவேசத்தைப் பயன்படுத்த முற்படுவோரை, நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். தக்க பாடமும் புகட்ட வேண்டும். புகட்டுவீர்களா?...

## ஆதிதிராவிடரும் அர்ச்சராகும் வாய்ப்பு

அரசின் சார்பில் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்க உள்ளோம் என்ற அறிவிப்பு ஒன்றினைச் சட்டமன்றத்திலே வெளியிட்டேன். அன்று முதல் ஒரு கட்சியின் தலைவர் அவராலே ஏவிவிடப்பட்ட நாலாந்தரப் பேச்சாளர்கள் பலரும், என்னை 'இனம்' சொல்லி வசைபாடி வருகின்றனர். இக்கல்லூரியில் வேதம், ஆகமசாஸ்திரம், திருமுறைகள் மற்றும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் ஆகியவை பாடத்திட்டங்களாக அமையும் என்றும், சமஸ்கிருத மொழியிலுள்ளவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்படும் என்றும், நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருந்தும், அதனை மூடி மறைத்து, என் மீது அவதூறு கூற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பேசி வருகின்றனர்.

அரசின் சார்பில் ஓர் நிறுவனம்- குறிப்பாக வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்குகிறோம் என்றால், சொல்லாமலே உங்கள் அனைவர்க்கும் தெரியும்; அங்கே 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது.

ஆக, நாளைக்கு இத்தகைய நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் தான், ஆலயங்களில் அர்ச்சகராகலாம் என்கிற நிலை உருவாகிற போது, அத்தகைய ஆதிதிராவிடர்களும் இத்திட்டத்தால் அர்ச்சகராகும் வாய்ப்புப் பெறவிருக்கிறார்கள். தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் கோரி வந்தபடி, 'ஆதிதிராவிடரும் அர்ச்சகராக வேண்டும்' என்ற கோரிக்கைக்கு, வலுச்சேர்க்கும் முயற்சி தான் எனது அறிவிப்பு என்கிற அடிப்படையைக் கூட உணராமல், அந்தக் கட்சியின் தலைவர் என்னைத் திட்டுகிறார்; இனபேதம் என்னும் விஷ வித்தைத் தூவுகிறார்.

மேலும், இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைப்பதற்கு அரசு நிதியிலிருந்து செலவிடப்படப் போவதாக ஒரு சிலர் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் குற்றம் சாட்டுகின்றனர்.

இது முற்றிலும் தவறான செய்தி மட்டுமல்ல, மக்களைத் திசைதிருப்பச் செய்யும் முயற்சியும் ஆகும். நான் சட்டப்பேரவையிலேயே இந்நிறுவனத்தை அமைத்து நடத்துவதற்கு, நிதி உபரியாக உள்ள திருக்கோவில்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் திரட்டி அதனை வைப்பு நிதியாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெளிவாகத் தெரிவித்துள்ளேன்; எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு நிதியோ, அல்லது முதலமைச்சரின் ஆலயத் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியோ பயன்படுத்தப்படமாட்டாது என்பதையும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

## இரட்டைவேடதாரிகளின் கூக்குரல்!

ஆலயங்கள் புனரமைக்கப்பட வேண்டும். அழிவிலிருந்து அவைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பது யாருக்குப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், தஞ்சை மாவட்ட மக்களுக்கு மிக நன்றாகப் புரிந்து இருக்கும் -

**வளரும் தமிழகத்தில் மலரும் புதிய மாவட்டம்!**

ஏனென்றால், தஞ்சை மாவட்டம் விண்ணைமுட்டும் கோயில்களின் பிறப்பிடம். உலகத்தை, அதன்மூலம் வியக்கவைத்த திருத்தலங்கள் பலவற்றைக் கொண்ட புண்ணிய பூமியாகும்.

அந்தத் திருத்தலங்கள் அனைத்தும், அவை உருவான காலத்தில் பெற்றிருந்த பெருமையைப் பெற வேண்டும், சிதைந்த கோயில்கள் அனைத்தும் சீரமைக்கப்பட வேண்டும், என்ற பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்கம் திட்டங்களை மேற்கொண்டால், இது வருணாசிரமத்தை வளர்க்கும் திட்டம் எனச் சிலர் கதைக்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றி குறிப்பாக தஞ்சை மாவட்ட மக்கள்தான் அபிப்பிராயம் சொல்ல வேண்டும். உங்களையே கேட்கிறேன்? அவர்கள் நல்லவர்களா?... நீங்களே கூறுங்கள்- நல்லவர்களா?...

தங்கள் மனைவி மக்கள் மட்டும் கோயிலுக்குச் செல்லலாம், தங்களுக்காக வழிபடலாம், ஏன் - வரம்கூட கேட்கலாம்; ஆனால், நாட்டு மக்கள் கோயில்களுக்குச் சென்று வழிபட வசதிகள் செய்து கொடுத்தால், திராவிடப் பண்பாடே சிதைந்து விட்டதே, சீரழிக்கிறார்களே, என வசைபாடுகிறார்கள் என்றால், இது நியாயமா?... தெய்வ பக்தியும், தேச பக்தியும்மிக்க இம்மாவட்ட மக்கள்தான் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். இவையெல்லாம் உங்களுக்கு நன்றாகவே தெரியும்; அந்த இரட்டை வேடதாரிகளின் கூக்குரல் அதிக நாள் எடுபடாது.

இப்படிப்பட்டவர்களிடமிருந்து - மக்களைக் காக்க வேண்டும், மக்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், உங்கள் சகோதரியான நான், என் உயிரையும் பணயம் வைத்து, உங்களை முடிந்தபோதெல்லாம் சந்தித்து, உங்களுக்கு நன்மை பயக்கிற திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறேன்.

### கிராம மக்கள் முன்வர வேண்டும்

மதுவிலக்குக் கொள்கையில் எங்கள் அரசு கொண்டிருக்கும் பிடிப்பு, உங்கள் அனைவருக்கும் தெரியும். அதற்காக எங்கள் அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பு மட்டும் தற்போது ஆண்டுக்கு ரூபாய் 390 கோடி ஆகும்.

ஒழிக்கவே முடியாது எனக் கூறப்பட்ட கள்ளச் சாராயத்தை, பெரும்பகுதி ஒழித்துள்ளோம் என்பதை, நியாய உள்ளம் படைத்தோர் ஒப்புக்கொண்டுள்ளனர். எங்கே அடித்தால் கள்ளச் சாராய சாம்ராஜ்யம் சரியும் என்பதை அறிந்து, சரியான ஓர் நடவடிக்கை எடுத்துள்ளோம். இன்னும் பூரண மதுவிலக்

## ஓயமாட்டேன்... பின்வாங்க மாட்டேன்...

**"தமிழகத்திற்கே ஓர் ஜீவாதாரப் பிரச்சினை காவிரிப் பிரச்சினை ஆகும். ஓர் குழந்தையை அதன் தாய் பேணி வளர்ப்பதைப் போல், காவிரித் தாய் தஞ்சைத் தரணி மூலம் தமிழக மக்களை ஊட்டி வளர்த்து வருகிறாள். அந்தத் தாயை ஜீவனற்றதாக்க யார் முயற்சித்தாலும், அதைத் தடுப்பது என்னுடைய கடமை என்ற உணர்வோடுதான், உங்கள் உரிமைக் குரலை உலகிற்குத் தைரியமாக எடுத்துரைத்தேன். நம்பக்கம் இருக்கும் நியாயத்திற்கு நீதி கிடைக்கும் வரை, இறுதி வரை இதில் ஓய மாட்டேன், பின் வாங்க மாட்டேன் என்ற உறுதியை, இத்தஞ்சை மண்ணிலிருந்து தெரிவித்துக் கொள்கிறேன்".**

கினை நடைமுறைப்படுத்த, மக்களின் பங்கு முக்கியமானது என்பது எனது அழுத்தமான நம்பிக்கை. அதற்கான ஒத்துழைப்பைத் தஞ்சை மாவட்ட மக்கள், மற்றவர்களைவிடப் பரிபூரணமாக வழங்குவீர்கள் என்பதும் எனது நம்பிக்கையாகும். கிராம மக்கள் தாங்களாகவே முன்வந்து, ஒரு கட்டுப்பாட்டோடு மதுவினை முழுவதும் ஒழிக்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது, அவரவர்களின் ஒரு சமுதாயக் கடமை எனக் கருதிட வேண்டும்.

பழம்பெருமை கொண்ட தஞ்சை மாவட்டத்திற்கு, பழமையான இன்னொரு பெருமையும் உண்டு. அதுதான் இந்த மாவட்டத்தின் சாலைகள். கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலும் பலமுறை நான் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களின் மூலம், நான் கண்டறிந்த மிக முக்கியமான உண்மை; சாலைகளில் மிகவும் குறுகலானது; சீர்கேடானது; வளைவானது தஞ்சை மாவட்டச் சாலைகள்தான் என்பதாகும்.

எனவேதான், தஞ்சை மாவட்டச் சாலைகளை மேம்படுத்த முன்னுரிமை தந்துள்ளோம். அவ்வகையில், மிக இன்றியமையாச் சாலைகள் சிலவற்றைச் செப்பனிடுகின்ற பணிக்கு, ரூபாய் 25.57 கோடி செலவில் இன்று இங்கு திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, சில சாலைகளைச் சீர்ப்படுத்துகிற பணிகளை, அதாவது அவைகளையும் பராமரித்துப் பாதுகாக்கிற பணியினை சில தனியார் தொழில் அதிபர்களிடம் ஒப்படைக்கிற ஒரு சோதனைத் திட்டம், (Experimental measure) ஒன்றினையும் முதன்முதலில் இந்த மாவட்டத்தில்தான் செயல்படுத்த உள்ளோம். ஒன்றாக இருந்த தஞ்சை மாவட்டத்தின் மிகப் பிரதான ஓர் சீர்கேட்டைக் களைந்திட, எந்த அளவுக்கு உங்கள் அரசு முன்னுரிமை கொடுத்துள்ளது என்பதை நீங்கள் உணரலாம்.

### பெட்ரோலியப் பொருட்கள் பொங்கி வழியும் பூமி

இயற்கையும் தஞ்சை மாவட்டத்திற்குப் பல்வேறு சீதனங்களையும் வழங்கி உள்ளது. ஏற்கெனவே நீண்ட கடற்கரையையும், வளமான மண்ணையும் தன்னகத்தே கொண்டு, 'தென்னகத்தின் நெற்களஞ்சியம்' என்கிற பெருமையைத் தாங்கியுள்ள தஞ்சை மாவட்டம், தற்போது எண்ணெய்க் களஞ்சியங்களையும், அதாவது பெட்ரோலியம் பொருட்களையும் பொங்கி வழியும் பூமியாகவும் உள்ளது. இது பொருளாதார நோக்கில் பார்த்தால், இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் மகிழ்ச்சி அளிக்கிற செய்தியாகும்.

பம்பாயிலிருந்து எரிவாயுவினைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரமுடியும் என்று, நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்தப் பகுதியில் உள்ள



நரிமணத்தில் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக, ரூ.22.57 கோடி செலவிலான ஒரு திட்டத்திற்கும், இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதோடு எரிவாயு, பெட்ரோலிய எண்ணெய் சார்ந்த தொழில்களை, மத்திய அரசு விரைந்து இப்பகுதியில் துவக்கினால், மாநில அரசு தேவையான அனைத்து உதவிகளையும் உடன் செய்யும் என்றும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### ரூ.88.41 கோடிக்குப் புதிய திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.12.13 கோடி செலவில், புதிய குடிநீர் வழங்கும் இனிய திட்டங்கள் இங்கே என்னால் துவக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு இன்னும் பல்வேறு திட்டப்பணிகளின் கீழ், இந்தப் புதிய மாவட்டத் தொடக்க விழாவில், மொத்தமாக ரூ.88.41 கோடி அளவில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை நகருக்கு அருகில் மத்திய அரசின் ஓர் சிறிய விமானத் தளம் உள்ளதே, அதனைப் பெரிய அளவில் விரிவுபடுத்த விமான தள விரிவாக்கப் பணிக்காக (Establishment of Air Force Station) ஏறத்தாழ 1732.69 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வழங்கிட, மாநில அரசு முடிவு எடுத்தது மட்டுமல்லாமல், நான் இந்த விழாவிற்கு வருவதற்குமுன்பே, அந்த அனுமதிக்கான கோப்பில் கையெழுத்தும் போட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியாவிலேயே முதல் தர மாநிலமாகத் திகழ்ந்திட...

கழக அரசு பொறுப்பேற்று ஒரு சில மாதங்களே ஆகி இருந்தாலும், நாங்கள் தொலைநோக்குப் பார்வையோடு அடுக்கடுக்காய் ஆற்றிவரும் செயல்கள், தீட்டிவரும் திட்டங்கள், தமிழக மக்களிடம் நல்ல நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது என்பதை நான் அறிவேன்.

என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை எப்போதும் வீண்போகாது. ஏனென்றால், நான் மக்களுக்கு உரிய உயர்வு தந்து, மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து, நீதிக்குத் தலைவணங்கிய புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் அரசியல் பாடம் பயின்ற மாணவி. அந்தத் தலை

## ஆதிதிராவிடரும் அர்ச்சகராக வேண்டும்

**"அரசின் சார்பில் ஓர் நிறுவனம் - குறிப்பாக வேத ஆகம. சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்குகிறோம் என்றால், சொல்லாமலே உங்கள் அனைவர்க்கும் தெரியும்; அங்கே 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது.**

**ஆக, நாளைக்கு இத்தகைய நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர்தான், ஆலயங்களில் அர்ச்சகராகலாம் என்கிற நிலை உருவாகிற போது, அத்தகைய ஆதிதிராவிடர்களும் இத்திட்டத்தால் அர்ச்சகராகும் வாய்ப்புப் பெறவிருக்கிறார்கள். தந்தை பெரியாரும்- பேரறிஞர் அண்ணாவும் கோரி வந்தபடி, 'ஆதிதிராவிடரும் அர்ச்சராக வேண்டும்' என்ற கோரிக்கைக்கு, வலுச் சேர்க்கும் முயற்சி தான் எனது அறிவிப்பு".**

வனின் புகழ் காக்கப் பொது வாழ்வில் ஈடுபட்டவள்.

எனவே, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வெற்றி இலக்கினை முழுமையாக எட்டிடவும், இந்தியாவிலேயே முதல் தர மாநிலமாகத் தமிழ்நாட்டைக் திகழச் செய்திடவும், உங்கள் பேரன்புமிக்க நல்லாதரவோடு எங்கள் இலட்சியத்தை அடைந்தே தீருவோம் என்று உறுதியளித்து, வாழ்க அண்ணா நாமம்! வாழ்க புரட்சித்தலைவர் நாமம்! என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி; வணக்கம்!

முன்னதாக, விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'நல்ல காரியங்களை செயல்படுத்துவதற்காக- அதை நிறைவேற்றுவதற்காக வீரமும் விவேகமும் உள்ள புரட்சித் தலைவியை நாம் பெற்றிருக்கிறோம்' என்று கூறினார்.

பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டதைத் தொடங்கி வைத்தார். பல்வேறு அரசுத் திட்டங்களைத் தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டினார். நலிந்த பிரிவினர்க்கு உதவிகள் வழங்கினார்.

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் புதல்வர் திரு ஜே. மியாகான் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன் , இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்தின் பகுதிகள் தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிந்து செல்வது 'சற்று' மனவருத்தத்தை அளித்தாலும், புக்ககத்துக்குப் பெண்ணைத் தாய் உரிய சீதனங்களுடன் (இயற்கை வளங்கள், நல்வாழ்வுத் திட்டங்களுடன்) அனுப்பி வைப்பதைப் போல நாங்களும் அனுப்பி வைத்திருக்கிறோம் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசுகையில், 'இந்தியாவிலேயே தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற மாநிலமாக்க புரட்சித் தலைவி அவர்கள் பணியாற்றி வருகிறார்' என்றார்.

திரு.ஆர்.கோடிமாரி, எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், நாகையை மாவட்டத் தலைநகராக்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்



மாண்புமிகு முதல்வர் அவர்கள், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் புதல்வர் திரு மியாகான் அவர்களுக்குப் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களும் உடன் உள்ளனர்.

டையும் தெரிவித்து, புரட்சித்தலைவி மீனவர்களின் காவலராக விளங்கு கிறார் என்றார்.

திரு. எம்.எம்.எஸ். அபுல் ஹசன், எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், 'இந்தப் புதிய மாவட் டத்திற்கு, காயிதே மில்லத் பெயரைச் சூட்டியதற்கு, மற்ற சமுதாயத்தினர் பாராட்டுவதுபோல, எங்கள் முஸ்லீம் சமுதாயமும் முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறது' என்றார்.

டாக்டர் பத்மா, எம்.பி., அவர்கள் பேசுகையில், முதல்வர் அவர்கள், பாரதியார் கனவை நனவாக்கி வரு கிறார் என்று பாராட்டி, நாகப் பட்டினத்தின் சிறப்பை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. முகம்மது ஆசீப் அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்திற்குக் காயிதே மில்லத் பெயரைச் சூட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்துக்கு வரவேற்பு நல்கி, வாழ்த்துக்கள் கூறினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ.அரங்க நாயகம் அவர்கள் பேசுகையில், புரட்சித்தலைவரின் விருப்பம் நிறை வேறுகிற நன்னாளாக இன்று விளங்கு கிறது என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், ஏழை எளிய வர்களின் வாழ்வில் ஒளியேற்ற பல திட்டங்களைச் செயலூற்றி வரு கிறார் புரட்சித்தலைவி அவர்கள் என்று கூறி, இன்று மது ஒழிக்கப் பட்டிருக்கிறது, வன்முறை அகற்றப் பட்டிருக்கிறது என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ரூ. 88 கோடிக்கு நலத்திட்டங்களைத் தொடங்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர் களைத் தமிழகமே பாராட்டுகிறது என்றார்.

★ எவன் தனக்குத் தானே கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொள் கிறானோ, அவனே சுதந்திர மனிதன்.

—அண்ணல் காந்தியடிகள்

இந்தச் சீர்மிகு விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்களும், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர் களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்களும் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப் பினர்களும் கலந்து கொண்டார்கள்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்ட ஆட்சியர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறை வேறியது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.வி. கிரி



# மூடிக்கிடக்கும் ஆலைகளின் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு

மூடப்பட்டிருக்கும் 13 ஆலை களில் பணியாற்றிய சுமார் 10,962 தொழிலாளர்களுக்கு உதவித்தொகை யாகத் தலா ரூ.400 வீதம் ரூ.43,84,800-ஐ அக்குடும்பத் தினர் அனைவரும் வருகின்ற தீபா வளியை மகிழ்ச்சிகரமாகக் கொண் டாட வேண்டும் என்ற நல்லெண் ணத்தின் அடிப்படையில் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்குவதற்கு 20.10.'91 அன்று உத்தரவிட்டுள்ளேன்.

அதே போன்று மேட்டூர் டெக்ஸ் டைல் மில் மீண்டும் திறக்கப்பட்டி ருந்தும் அதில் தொடர்ந்து பணி கிடைக்காமல் தவிக்கும் 2,175 ஆலை தொழிலாளர்களுக்கும் ஒரு தொழிலாளிக்கு ரூ.400 வீதம் ரூ.8,70,000-ஐ வழங்க தற்போது உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தொகையும் தீபாவளிக் குள் வழங்கப்படும் என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தம் 13,137 தொழிலாளருக்கு ரூ.52,54,800-ஐ தீபாவளிக்குள் நிவாரணத் தொகையாக முதலமைச் சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்க ஆணையிட்டுள்ளேன்.

தீபாவளியின்போது தொழி லாளர்கள் ஆலைகளிலிருந்து போனஸ் தொகை பெற்று தீபாவளியை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாட இருக்கின்ற இந்த நேரத்தில், சில ஆலைகள் மற்றும் நிறுவனங்கள் மூடிக்கிடப்பதினால் அங்கு பணி யாற்றிய தொழிலாளர்கள் வேலை யின்றி வறுமையில் வாடிக்கொண் டிருக்கின்ற நிலைமையில், என் றைக்கு மூடிக்கிடக்கின்ற மில்கள் திறக்கப்படும் என்ற ஏக்கத்தோடு, ஆலைகளின் வாயில்களை எதிர் நோக்கி இருக்கிறார்கள்.

சமீபத்தில் 'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் 8,000 பேர் களுக்கு, ஒரு தொழிலாளிக்கு ரூ.400 வீதம் மொத்தம் ரூ.32 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டதை தமிழகம் நன்கு அறியும். அதே போன்று, மூடிக்கிடக்கின்ற மற்ற மில் தொழிலாளர்களும் பயன் பெறுகின்ற வகையில், அவர்களும் தங்களுடைய குடும்பத்தோடு தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சி யுடன் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரு தொழி லாளிக்கு ரூ.400 வீதம் 10,962 தொழிலாளர்களுக்கு ரூ.43,84,800-ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்க உத்திரவிட்டுள் ளேன். இந்தத் தொகை தீபாவளிக் குள் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட வேண்டுமென்றும் ஆணையிட் டுள்ளேன்.

கீழ்க்கண்ட நிறுவனங்களில் பணி யாற்றிய தொழிலாளர்கள் இதன் மூலம் பயன் அடைவார்கள்.

1. அலெக்ஸ்சாண்டர் நூற்பிரிவு, மேட்டூர் டேம் 260
2. வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர் 1,562
3. கே.ஜி.எஸ்.ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர் 150
4. ராதாகிருஷ்ணா மில்ஸ், கோயம்புத்தூர் 1,100
5. காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், புதுக்கோட்டை 850
6. ஜெயலஷ்மி மில்ஸ், கோயம்புத்தூர் 558
7. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர் 500
8. ராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ், கோயம்புத்தூர் 400
9. எவரெஸ்ட் என்ஜினியரிங் வொர்க்ஸ், கோயம்புத்தூர் 330
10. ஸ்டேண்டர்டு மோட்டார் புராடக்டஸ், பெருங்களத்தூர் 3,086
11. சேஷசாயி இண்டஸ்டிரிஸ், வடலூர் 1,662
12. கேம்ப் இந்தியா லிமிடெட், கோயம்புத்தூர் 186
13. நியு சிடி என்ஜினியரிங் வொர்க்ஸ், கோயம்புத்தூர் 182

மேலும், 'பி அண்டு சி' மில்லில் இதுவரை நிவாரணம் பெறாத 136 தொழிலாளர்களையும் சேர்த்து மொத்தம் 10,962 தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

# நியாய விலைக் கடைகள் மூலமாக பாமாயில் எண்ணெய் வழங்குவது தொடங்கப்படும்!

## தீபாவளிப் பரிசாக மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழக மக்களின் விருப்பத்திற்கிணங்க, தீபாவளிக்குப் பாமாயில் நிச்சயமாக வழங்கப்படும் என்ற உறுதிமொழியினை நான் சட்டப் பேரவையில் அறிவித்தேன். மத்திய அரசு பாமாயில் எண்ணெய் இறக்குமதி செய்ய வேண்டுமென்று விடுத்த கோரிக்கையின் பேரிலும், பாரதப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தின் அடிப்படையிலும் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு தற்பொழுது 3,000 டன் பாமாயில் எண்ணெயை முதல் தவணையாகத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறது. இந்த எண்ணெய் முழுவதும் சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பாமாயில் எண்ணெய்யைப் பாக்கெட்டுகளில் அடைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்பதால், தீபாவளியை முன்னிட்டு மக்களுக்கு விரைவில் கிடைப்பதற்காகத் தற்போது சில்லரையாக நிறுத்துக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் 1-ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பாமாயில் எண்ணெய் வழங்குவது தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தமிழக மக்களுக்கு என்னுடைய தீபாவளிப் பரிசாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும் பாமாயில் எண்ணெய் குடும்ப அட்டை ஒன்றுக்கு 1 கிலோ வீதம் வழங்கப்படும். மற்ற பகுதிகளுக்குப் பாமாயில் எண்ணெய் மத்திய அரசின் அடுத்த ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சட்டப்பேரவையில் தெரிவித்த உறுதிமொழியினைத் தற்போது ஓரளவாவது நிறைவேற்ற முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், அதிக அளவு பாமாயில் எண்ணெய் தமிழகத்திற்குக் கிடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



★ மனிதனின் கல்வியறிவு வளரப் படிப்பு ஒன்று தான் உதவி செய்கிறதென்று நினைப்பது தவறு. எந்தக் கல்வித் திட்டத்திலும் உடல் உழைப்பு மிக மிக முக்கியம்.

★ மனித குல முன்னேற்றத்திற்காக மனிதன் உழைக்கின்ற இடமே உயர்ந்த கோயிலாகும். ஆயிரக் கணக்கிலே மக்கள் அன்றாடம் உழைத்து இரத்தமும் வியர்வையும் சிந்தி, ஏன், உயிரையும் கொடுத்து உருவாக்கியிருக்கும் தொழிற்கூடங்கள், அணைக்கட்டுக்களை விட தொழுகைக்குரிய கோயில்கள் வேறெங்கே இருக்க முடியும்?

★ உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.



# பிற்படுத்தப்பட்டோர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட...

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த பல செயல் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அவற்றைத் தெளிவுபடுத்துகிறது இக்கட்டுரை.**

தமிழ்நாட்டில் வாழும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர்களுக்கு ஒரு நிரந்தரத் தொழில் வாய்ப்பை அளித்து, அதன்மூலம் அவர்களுடைய பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த தனிப்பட்டதொரு அரசு நிறுவனமாக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு இக்கழகத்திற்கென அறிவிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடியாகும். அதில், ஏப்ரல் 1991 வரை இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.131.56 இலட்சமாக உள்ளது.

கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கொள்கையின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரால் அமைக்கப்படும் வரையறுக்கப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தப்படுகிற எல்லாத் தொழில்களுக்கும் மொத்த திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகிதம் (1/5 பாகம்) அதிகபட்சமாக ரூ.3.00 இலட்சம் வரை ஆரம்ப முதலீட்டுக் கடனாகக் கீழ்க்கண்ட எளிய வட்டி விகிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கி வருகிறது.

ரூ.25,000 வரை உள்ள கடன் தொகைக்கு வட்டி விகிதம் 4 சதவிகிதமாகும். அவ்வாறே ரூ.25,000 முதல் ஒரு இலட்சம் வரை உள்ள கடன் தொகைக்கு வட்டி விகிதம் 6 சதவிகிதமும், ரூ. ஒரு இலட்சம் முதல் 3 இலட்சம் வரை உள்ள கடன் தொகைக்கு வட்டிவிகிதம் 7.5 சதவிகிதமும், ரூ.3 இலட்சத்திற்குமேல் உள்ள கடன்தொகைக்கு வட்டி விகிதம் 9 சதவிகிதமும் ஆகும்.

இக்கழகம் தற்பொழுது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களால் ஏற்படுத்தப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.15 இலட்சம் வரை செலவாகும் திட்டங்களுக்கு ரூ.3 இலட்சம் வரை நிதியுதவி செய்து வருகிறது. ரூ.3.00 இலட்சத்திற்கும்மேல் விளிம்புத் தொகை கடன் கோரும் திட்டங்களுக்கு அரசின் பரிசீலனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. இக்கழகத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை நல அலுவலர்களின் பணியினையும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

1990-91 முடிய இக்கழகம் விளிம்புத் தொகைக் கடனாக ரூ.13.19 இலட்சத்தினை 42 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியதில் 2,500 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நிதியுதவி வேண்டி ரூ.18.49 இலட்சம் அளவுக்கு விண்ணப்பங்கள் இக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளன.

கீழ்க்கண்ட திட்டங்கள் பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 2. தச்சு, கருமார் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 3. சரிகை தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 4. எண்ணெய் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 5. முடி திருத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 6. சலவைத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 7. பாணைத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 8. கருமார் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 9. தச்சுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 10. மீன்பிடி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

11. ரெடிமேட் துணி தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 12. செங்கல், ஓடு தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 13. மூங்கில் பொருட்கள் தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 14. வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிற்

## சுற்றுச்சூழல் ஆய்வுக்கு செயற்கைக் கோள்!

உலகின் சுற்றுச்சூழல் பற்றி ஆய்வு நடத்துவதற்கான மிகப்பெரிய செயற்கைக் கோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஓடம் டிஸ்கவரி அண்மையில் விண்வெளியில் ஏவியது. அந்தச் செயற்கைக் கோள் மிகவும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

பூமியிலிருந்து 566 கிலோமீட்டர்கள் உயரத்தில் இந்தச் செயற்கைக்கோள் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு, இந்தச் செயற்கைக்கோளை இன்னும் உயரமான சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு உந்துவிசை ராக்கெட்டுகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் இந்தச் செயற்கைக்கோள், பூமிக்கு மேலே 595 கிலோ மீட்டர்கள் உயரத்தில் தனது சுற்றுப்பாதையை அடைந்து பூமியை வலம் வரத் துவங்கும்.

''மேல் வளிமண்டல ஆய்வுக்கோள்'' (Upper Atmospheric Research Satellite) என்று இந்தச் செயற்கைக்கோளுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. பூமியைச் சுற்றியுள்ள 'ஓஸோன்' ('ஓஸோன்' என்பது மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராண வாயுவின் ஒரு வகையே ஆகும்) பாதுகாப்புப் படலம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராயும் நோக்கத்துடனேயே இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது. இது, குறைந்தபட்சம் ஒன்றரை ஆண்டுக் காலம் பூமியை வலம் வரும் என்று மதிப்பிடப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கம், 15. கேஸ் வெல்டிங், கிரில் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 16. ஆட்டோமொபைல் தொழிற்பட்டறை, 17. பிளாஸ்டிக் மழைக் கோட்டுகள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 18. சூட்கேஸ்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 19. லாரி பாகங்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 20. டியூப் லைட் தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

21. நூல், பேப்பர் தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம், 22. ரப்பர் ஸ்டாம்ப் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 23. சமையலறைப் பவுடர்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 24. மர விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 25. விதைகளிலிருந்து பவுடர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 26. அச்சகத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 27. சாயம், அச்சிடுதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 28. நெசவுத்தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 29. கைத்தறித் துணி தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 30. கூடை தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

31. இயந்திரங்கள் வார்ப்படத் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 32. குழந்தைகட்கு எண்ணெய் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 33. கருங்கற்கள் மெருகேற்றும் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 34. சரிகை, எம்ப்ராய்டரி தொழிற் கூட்டுறவுச் சங்கம், 35. சைக்கிள் கடை, 36. டைப்ரைட்டிங் பயிலகம், ஜாப் டைப்பிங், 37. ஓட்டல் கடை, 38. கரிக்கடை, 39. பழம் மற்றும் காய்கறிக் கடை, 40. போட்டோ ஸ்டுடியோ, ஜெராக்ஸ் கடை

41. ஆட்டோ ரிக்ஷா சர்வீஸ், 42, பெட்டிக் கடை, 43. டீ ஸ்டால், 44. விறகுக் கடை, 45. ஊறுகாய், அப்பளம் தயாரித்தல், 46. காப்பிக் கொட்டை அரைத்தல், மாவு மில், 47. மளிகைக் கடை, 48. ஆட்டோ ரிக்ஷா வாங்கக் கடனுதவி, 49. மோட்டார் வைத்த ரிக்ஷா வாங்கக் கடனுதவி, 50. மருந்துக் கடை.

51. குளிர்சாதனத் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 52. மொசைக் கற்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 53. புத்தகப் பைண்டிங் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 54. இலகு வாகனங்கள் (கார் மற்றும் வேன்), 55. வீடியோ, ஆடியோ கடை, 56. டி.வி. பழுது பார்த்தல்.

### ஊரகக் கைவினைஞர் வளாகம்

தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த கைவினைஞர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு, ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 தனி நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகித விளிம்புத் தொகைக் கடன் ரூ.1.25 இலட்சத்துடன் கூடிய ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்க இக்கழகம் தீர்மானித்துள்ளது. ஆரம்பக் கட்டமாக, கீழ்க் கண்ட 6 மாவட்டங்களில் விளிம்புத் தொகைக் கடன் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்த இக்கழக இயக்குநர்கள் குழு தீர்மானித்து இருக்கிறது.

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
2. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்
3. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்
4. தென் ஆர்க்காடு மாவட்டம்
5. பெரியார் மாவட்டம்
6. தர்மபுரி மாவட்டம்.

மேற்கண்ட 6 மாவட்டங்களுக்கும் ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்கத் தலா ரூ.1.25 வீதம் செயல்முறை ஆணை வழங்கப்பட்டு, அதில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு ரூ.1.25 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது. இதர



★ ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும், நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.

—பண்டித நேரு

மாவட்டங்களில் ஆவணங்கள் எதிர்பார்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது 1991-92-ஆம் ஆண்டுக்கு அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 24 வளாகங்கள் அமைக்க பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தனி நபர் கடன்

கூட்டுறவுச் சங்கங்கட்கு மட்டுமே கடன் வழங்கி வந்த இக்கழகம், தற்போது இக்கழக நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு தகுதிவாய்ந்த தனி நபர்களுக்குக் கழகச் சங்க அமைப்பு விதிகளுக்குட்பட்டுக் கடனுதவி வழங்கத் தொடங்கியுள்ளது.

முதல் கட்டமாக, சர்க்கரை ஆலைகட்குக் கரும்பு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக டயர் பொருத்திய மாட்டு வண்டி வாங்குவதற்குத் தனி நபர்களுக்கு விளிம்புக் கடனாக 20 சதவிகிதம் (மொத்தத் திட்ட முதலீட்டில்) அல்லது உயர்ந்தபட்சமாக ரூ.5,000 வரை கழகம் கடன் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுகாறும் ரூ.26.362 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் 984 நபர்கள் ஆவார்கள்.

### பயிற்சி நிலையங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த கைவினைஞர்கள் தங்களது தொழில் திறமையை வளர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் ஏதுவாகப் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்க இக்கழகம் விழைகிறது. இந்த அடிப்படையில் கிருஷ்ணகிரியில் கறுப்புக் கல் வெட்டவும், அதனை மெருகேற்றவும் பயிற்சி அளிக்க தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் துணை கொண்டு ரூ.40 இலட்சம் செலவில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்கத்தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் சிற்பக்கலை, மர வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள் தமிழ்நாட்டில் மிகவும் புகழ்வாய்ந்த கலைத் தொழிலாகும். மேற்கண்ட சிற்பங்கள் நம் நாட்டில் மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. வெளிநாட்டுப் பயணிகள், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் இதனை மிகவும் விரும்பி வாங்குகின்றனர்.

தற்சமயம் இம்மாநிலத்தில் கைவினைஞர் வளாகங்கள் குறைந்த அளவில் உள்ளன. பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த இளைஞர்களுக்கு இக்கலையில் பயிற்சி தந்து சுயவேலைவாய்ப்பு பெறுவதற்குண்டான தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் வழங்கும் சான்றுக்கு இணையாகச் சான்று வழங்குவது போன்று ஒரு பயிற்சி நிலையம் அமைக்க, சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் மாமல்லபுரம் சாலையில் அமைந்த திருவிடந்தைக் கிராமத்தில் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கலாம் என முடிவு செய்து, முதல் கட்ட வேலையாகப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கத் தகுதியான இடம் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் பார்வையிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்கழகத்தின் மூலம் கடன் பெற அடிப்படைத் தகுதிகள்

1. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து பயனடையும் பயனாளிகள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இவைகளில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

2. இவர்களில் ஆண்டு வருமானம் ரூ.6,400-க்கு உட்பட்டதாக இருத்தல் அவசியம்.

### கடன் கோரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகள்

கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தத் துறைகளில் பதிவு செய்த பிறகே இக்கழகக் கடன் கோரும் விண்ணப்பங்களையும் இதர ஆவணங்களையும் அந்தந்தத் துறை மாவட்ட அலுவலரின், சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்பட்டோர், சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களது பரிந்துரையுடன் இக்கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

இதேபோல வங்கிக் கடன் பெறத் தேவையான கடன் விண்ணப்பம் மனுக்களை, வங்கிகளுக்குச் சம்பந்தப்பட்ட துறை மாவட்ட அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்பி, இதன் விவரத்தினை இக்கழகத்திற்குத் தெரியப்படுத்துதல் அவசியம். அத்துடன் இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியம் பெறத் தகுதி உள்ளவற்றிற்குத் தகுந்த பிரேரணையுடன் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித் திட்டம் அவர்களுக்கு அனுப்பி விவரத்தை இக்கழகத்திற்கு தெரியப்படுத்துதல் அவசியம்.

வங்கிகளிடமிருந்து இத்திட்டத்திற்குக் கடனுதவி பெற இக்கழகம் தகுந்த நடவடிக்கை எடுக்கும். வங்கிகள் இத்திட்டங்களுக்கு கடனுதவி வழங்கும் நேரத்தில் இக்கழகம் தனது ஆரம்ப முதலீட்டுக்

# பொய் சொல்லக்கூடாது பாப்பா!



அவன் சிறுவன்; இளம் கன்று; பயமறியாதவன். மானெனத் துள்ளி வீட்டை வலம் வந்தவன். தந்தை வீட்டில் இல்லை என்பதை உணர்ந்தான். வக்கீல் அப்பா ஆபீஸ் அறையைதான் பார்ப்போமே என்று நினைத்துக்கொண்டு மெதுவாக உள்ளே நுழைந்தான். அறைக்குள் இருந்த கண்ணாடி பீரரோக்களிலிருந்த கனமான புத்தகங்கள் அவனைக் கவரவில்லை. மேசைமீது இருந்த இரண்டு பேனாக்கள் மட்டும் அவனை ஈர்த்தன.

'இரண்டுமா அப்பாவிற்கு? எனக்கும் ஒன்று இருந்தால் என்ன?' என்று மனம் நினைக்க, கரம் அவைகளில் ஒன்றை எடுத்துச் சட்டைப் பையில் செருகிக் கொண்டது.

தந்தை வந்தார்; தம் அறைக்குச் சென்றார். மேசை மேலிருந்த பேனாவைக் காணவில்லை. வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை; மிக்க சினம் கொண்டார்.

சிறுவன் அந்தப் பக்கம் ஓடி வந்தான்; அவனை நிறுத்தி தந்தை அதட்டிக் கேட்டார்; ''மேசை மீதிருந்த பேனாவை எடுத்தாயா?

''இல்லையே...'' தந்தையின் கோபம் அவனைப் பொய் சொல்ல வைத்தது. ஒருவேளை அன்புடன் கேட்டிருந்தால் உண்மையைச் சொல்லியிருப்பானோ என்னவோ!

பொய் என்றும் நிலைப்பதில்லை. பேனாவை எடுத்து மறைத்து வைத்ததைத் தந்தை அறிந்தார். கோபம் குமுறிக் கொந்தளிக்கச் சிறுவனை நன்கு புடைத்து விட்டார்.

சிறுவன் அழுதுகொண்டே அம்மாவிடம் ஓடினான். மகனின் உடலெல்லாம் சிவந்து வீங்கியிருப்பதைக் கண்ட அன்னைக்கு மனம் பதைத்தது. கண்கள் நீர் சொரிய, ''பொய் சொல்லலாமா? பொய் சொன்னால்தானே அப்பா அடித்தார்'' என்று சொல்லிக்கொண்டே வீங்கியிருந்த இடங்களில் எல்லாம் மருந்து தடவினார். சிறுவன் எண்ணிக்கொண்டான்; 'பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னதற்குக் கிடைத்த தண்டனை நியாயமே!'

'இன்று எனக்கு என்ன ஏற்பட்டுவிட்டது? நம் அருமை மைந்தனிடம் இப்படி நடந்துகொள்ள எப்படித் துணிந்தேன்?' என்று எண்ணி எண்ணித் தனிமையில் தந்தையார் வருந்தியதை சிறுவன் அறிய நியாயமில்லை.

'பொய் சொல்லக்கூடாது; அதற்குத் தண்டனை நியாயமே' என்று அச்சிறுவயதிலும் உணர்ந்தவர் நமது மதிப்பிற்குரிய நேருஜியே ஆவார். மகனை நையப் புடைத்து அதற்காக மனம் வருந்தியவர் நேருஜியின் தந்தையான மோதிலால் நேரு. அருமைச் செல்வனைப் பொய் சொல்லக் கூடாது என்று அறிவுரை கூறி ஆறுதலளித்தவர் அன்னை சொரூபராணியார்.

**—'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' என்னும் நூலிலிருந்து.**

---

கடனை நேராகச் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி, வங்கிகள் மூலம் திட்டத்திற்குத் தேவைப்படும் முழுத்தொகையையும் பெற வகை செய்கிறது.

இக்கழகம் வழங்கும் கடன் தொகைக்குக் கடன் கொடுத்த 6-வது மாதத் தொடக்கத்திலிருந்து இக்கழகக் கடன் தொகையை 6 மாதக் காலத் தவணையிலோ அல்லது மாதத் தவணையிலோ தொழிலின் தன்மைக்கேற்ப வங்கிக் கடனுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலம் கடந்து செலுத்தப்படும் தவணைத் தொகைக்கு அபராத வட்டியாக ஒரு சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கப்படும்.

இக்கழகம் கொடுக்கும் கடனுக்கு அடமானமாக வங்கிக்கு ஒப்பளிக்கப்பட்ட சொத்தின்மேல் 2-வது அடமானமாக அடமானப் பத்திரமும் அதற்கு வங்கியின் ஒப்புதலும் (வங்கித் தடையின்மைச் சான்று) சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும்.

இக்கழகம் மூலம் நிதி உதவி பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது காலாண்டு வளர்ச்சி அறிக்கையைத் தவறாது இக்கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆர்வமுள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கூட்டுறவு முறையில் இணைந்து தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அதன்மூலம் வேலைவாய்ப்பு பெற்று மேன்மையடைய விரும்புவோர், இதுகுறித்து தங்கள் மாவட்ட பிற்பட்டோர் - சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். இதுகுறித்து பொது மேலாளர், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அவர்களை, கடிதம் மூலமாகவோ அல்லது வேலைநாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.00 மணி வரை, 807, அண்ணாசாலை (5-ஆம் தளம்), சென்னை-600 002 என்ற முகவரியில் நேரிலும் சந்திக்கலாம்.



# கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட கதர்கிராமத் தொழில் வாரியப் பணிகள்



**த**மிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்ட 1.4.60-லிருந்து கடந்த 31 ஆண்டுகளாக, கிராமப் பகுதிகளிலுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கதர் கிராமத் தொழில்கள் மூலமாக மேன்மை அடையச் செய்திட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

கிராமத் தொழில்கள் செயல்படுத்துவதில் அகில இந்திய அளவில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடத்தை வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கதர்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தை இவ்வாரியம் வகிக்கிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்கள், மூன்று அடுக்கு முறையில் இவ்வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை:

1. வாரியத்தின் அலகுகள் 1,239
2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1,587
3. கைவினைஞர்களுக்குத் தனி நபர் நிதியுதவி 67,170 (நபர்கள்)

இவ்வாரியத்தின் 1990-91-ஆம் ஆண்டின் சாதனைகளும், 1991-92-ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் வருமாறு:

| உற்பத்தி | 1990-91-ஆம் ஆண்டின் சாதனை (ரூபாய் | 1991-92-ஆம் ஆண்டிற்கான இலக்கு கோடியில்) |
|---|---|---|
| அ. கதர் ரகங்கள் | 20.29 | 25.00 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 251.59 | 275.00 |
| விற்பனை | | |
| அ. கதர் ரகங்கள் | 24.85 | 29.00 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 280.77 | 310.00 |

இதுவரை 10 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 1.85 இலட்சம் பேர். மகளிர் 4.05 இலட்சம் பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

### எதிர்காலத் திட்டங்கள்

★ நடப்பு 1991-92-ஆம் ஆண்டில் இவ்வாரியம் ஒரு இலட்சம் நபர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு அளித்திடத் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

★ 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாக 25 கதர் அங்காடிகள் திறக்கப்பட உள்ளன.

★ இவ்வாண்டில் புதிதாக 5 டிடெர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

★ தென்னார்க்காடு மாவட்டம் விருதாசலத்தில் செயல்படாமல் உள்ள அரசுக்குச் சொந்தமான பீங்கான் கலைக்கூடத்தை இவ்வாரியம் எடுத்துக் கொண்டு, அதனைப் புத்தாக்கம் செய்ய உள்ளது.

★ கதர்த் துணி ரகங்களின் வடிவமைப்புகளை நவீனப்படுத்திட தமிழ்நாடு அரசு இவ்வாரியத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இந்த நிதியைக் கொண்டு 1,000 நெசவாளர்களிடம் உள்ள அச்சுகளும் விழுதுகளும் மாற்றியமைக்கப்பட உள்ளன.

★ இந்தியாவிலேயே மிகப் பெரிய கதர் விற்பனை நிலையமான சென்னை குறளகம் கதர் அங்காடியின் விற்பனையை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன், கணிப்பொறியைப் பயன்படுத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

★ புகழ் பெற்ற குறளகம் கதர் அங்காடியில், குளிரூட்டும் சாதனம் அமைப்பதற்கான எடுத்துரையை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

★ இவ்வாண்டு முதல் செயற்கை வைரக்கற்களைப் பட்டைத் தீட்டும் தொழிலை மேம்படுத்திட வாரியம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும், தமிழ்நாடு அரசும் இவ்வாண்டு கதர்த் துணி விற்பனைக்குத் தலா 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது.

தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் கதர் ரகங்களுக்கு கீழ்கண்டவாறு மொத்த சிறப்புத் தள்ளுபடி இவ்வாண்டு அளிக்கப்படுகிறது:

1. கதர் பருத்தி 35 சதவிகிதம், 2. பாலியஸ்டர் 30 சதவிகிதம், 3. பட்டு ரகங்கள் 20 சதவிகிதம், 4. பாவ்டா 30 சதவிகிதம், 5. உல்லன் 20 சதவிகிதம்.

இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகைக் காலத்தில், கதர் விற்பனை இலக்கு ரூபாய் 24.10 கோடி அளவிற்கு வாரியம் நிர்ணயம் செய்துள்ளது. இதில் ரூபாய் 3.40 கோடிக்குக் குறளகம் கதர் அங்காடியில் மட்டும் விற்பனை செய்யப்பட உள்ளது.

## புகையால் பலி எட்டு லட்சம்

புகைப்பிடித்தல் உட்பட புகையிலை உபயோகித்தல் தொடர்பான நோய்களால் ஆண்டொன்றுக்கு நமது நாட்டில் எட்டு லட்சம் பேர் மரணம் அடைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சிகரெட் பற்றிய 1975ஆம் ஆண்டு சட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி சிகரெட் விளம்பரங்களில் 'புகை பிடித்தல் உடலுக்குத்தீங்கானது' என்ற சட்டப்பூர்வ எச்சரிக்கை கட்டாயமாக் இடம்பெற வேண்டும்.

புகைப்பதைத் தடுப்பதற்காக சில நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவமனைகள், இதர சுகாதார மையங்கள், கல்விக் கூடங்கள், மாநாட்டு அறைகள், உள்நாட்டு விமானங்கள், குளிர் சாதன வசதியுள்ள இரயில் வண்டி பெட்டிகள், பேருந்துகள் ஆகிய இடங்களில் புகை பிடித்தல் தடுக்கப்பட்டுள்ளது.

புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக பல்வேறு சுகாதாரக் கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## நெய்வேலி சுரங்கத்தில் உற்பத்தி சாதனை

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன், 1990-91 ஆம் ஆண்டில் தனது முதல் சுரங்கத்திலிருந்து 75.44 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியும், 2.55 லட்சம் டன் கோக் கரியும் வெட்டி எடுத்து உற்பத்தி சாதனை நிகழ்த்தியுள்ளது. இந்த உற்பத்தி அளவு, இந்த கார்ப்பொரேஷன் வரலாற்றிலேயே கண்டிராத உயர் அளவாகும்.

அதே ஆண்டில், கார்ப்பொரேஷனின் மொத்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியானது, நிர்ணயிக்கப்பட்ட 110 லட்சம் டன் இலக்கையும் மிஞ்சி 117.59 லட்சம் டன் ஆகவும், அனல் மின் உற்பத்தி 7,010 மில்லியன் யூனிட் என்ற இலக்கைத் தாண்டி 7,462.35 மி. யூனிட் அளவையும் எட்டியது.

கடந்த நிதியாண்டில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன் ரூ. 93 கோடி லாபம் ஈட்டியுள்ளது. தொடர்ந்து 14 ஆண்டுகளாக லாபம் ஈட்டி வரும் அரசுத்துறையாகும் இது.

—நன்றி: 'திட்டம்'



மாணவர் பக்கம்

## அறிவுச்சுடர்

**வினாக்கள்:**

1. ஆசியாவிலேயே இரு பெரிய ஜனநாயக நாடுகள் எவை?
2. எவரெஸ்டு சிகரத்தின் உயரம் என்ன?
3. உலகிலேயே மிகப் பெரிய பரிசு எது?
4. உலகிலேயே அதிக அளவு காப்பி உபயோகிக்கும் நாடு எது?
5. உலகின் மூன்றாவது உயரமான சிகரம் எது?
6. உலகிலேயே மிக அழகான இரண்டாவது கடற்கரை எது?
7. இந்தியாவில் இராணுவப்படை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
8. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் முதன்முதலாகக் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்கப்பட்டது?
9. தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஏரி எது?
10. 'வைக்கம் வீரர்' யார்?
11. மிகச் சுத்தமான வைரத்தின் நிறம் என்ன?
12. மின்சாரத்தின் வேகம் ஒரு வினாடிக்கு எவ்வளவு?
13. 'தங்கக் கதவு' என்ற பெயர் எந்த நகரத்தோடு தொடர்பு உடையது?
14. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய இராசராச சோழனின் இயற்பெயர் என்ன?

**விடைகள்:**

1. இந்தியாவும்-ஜப்பானும்
2. 29,028 அடி
3. நோபல் பரிசு
4. அமெரிக்கா
5. கஞ்சன்-ஜங்கா
6. சென்னை மெரீனா கடற்கரை
7. 1921-ஆம் ஆண்டு
8. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
9. மதுராந்தகம் ஏரி
10. தந்தை பெரியார்
11. வைரத்திற்கு நிறம் கிடையாது
12. ஒரு வினாடிக்கு 2,70,000 மைல்
13. சான் பிரான்சிஸ்கோ
14. அருள் மொழி

வீ. செங்கதிர்
XI-C புனித தசையப்பர்
மேனிலைப் பள்ளி
செங்கற்பட்டு-603 001.




புலவர் தணிகை உலகநாதன்




சுற்று லாவாம் சுற்றுலா
சுகமளிக்கும் சுற்றுலா!
கற்ற கல்வி மனத்தில் பதியக்
கருவி யாகும் சுற்றுலா.

காடும் மலையும் காணலாம்;
கடலும் வயலும் பார்க்கலாம்;
நாடு முற்றும் சுற்றி வந்தால்
நன்மை பலவும் அடையலாம்.

கோயில், குளங்கள், சோலைகள்
குலவும் நாட்டுப் புறங்களில்
பாயும் அருவி, ஆறு தம்மைப்
பார்த்துப் பார்த்து மகிழலாம்.

'உலகம் நமது பள்ளியாம்;
இயற்கை நமது புத்தகம்;
நிலவும் இந்த உண்மை தன்னை
நேரில் அறிந்து களிக்கலாம்.

பறவை, விலங்கு மக்களின்
பழக்க வழக்கம் அறியலாம்
உறவை வளர்த்து ஒருமைப் பாட்டின்
உயர்வை அளிக்கும் சுற்றுலா.




★ இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்போதும் நான் உணர்கின்றேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.



மருத்துவக் கட்டுரை:




**இரைப்பையிலும், சிறுகுடலிலும் 'அல்சர்' புண் வருவதற்கான காரணங்கள் யாவை?... அந்தத் துன்பத்திலிருந்து விடுபடுவது எப்படி?... என்றெல்லாம் விளக்குகிறார். டாக்டர் எம்.ஏ.அப்துல் சீதக்காதி எம்.டி.**

**வ**யிற்றை வலிக்கிறதா அல்லது எரிகிறதா... என்று இனங்காண முடியாத வேதனையோடு சிலர் துடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்; சுருட்டிக்கொண்டு கிடந்து புரளுவதைக் கண்டு நாமும் கண்கலங்கியிருக்கிறோம்.

அப்படிப்பட்ட உபாதைக்கு ஆளானவர்களை மருத்துவர்களிடம் கொண்டு சென்று பரிசோதிக்கச் செய்தோமானால் - நோயாளியின். வயிற்றுப் பகுதியை லாவகமாக அழுத்திப் பார்ப்பார் அவர்; குறிப்பாக இரண்டொரு இடங்களில் தட்டிப் பார்ப்பார்; மிகக் கவனமான பரிசோதனைக்குப் பிறகு, அவருக்குள்ள துன்பங்கள் பற்றி நேரிலும் கேட்டறிவார்.

முடிவாக - 'இவருக்கு அல்சர்' என்று சொல்லிவிட்டு, மருந்து மாத்திரைகளைக் கொடுப்பார்; உணவு முறைகளில் - வாழ்முறை நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டிய பழக்கவழக்கங்களைச் சொல்லுவார்.

'அல்சர்'(ULCER) எதனால் வருகிறது?... அதை வருமுன் தவிர்பதும் வந்த பின் ஒருவர் நடந்து கொள்ள வேண்டியதும் எப்படி என்பன போன்ற ஐயப்பாடுகளைக் களைவதற்காக டாக்டர் எம்.ஏ. அப்துல் சீதக்காதி, எம்.டி. அவர்களைச் சந்தித்தோம்.

'அல்சர்' பற்றி நாம் தொடுத்த வினாக்களும், அவர் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

**அல்சர் என்றால் என்ன - அது உடலின் எந்த உறுப்புகளிலெல்லாம் ஏற்படும்?**

அல்சர்(ULCER) என்றாலே புண் என்று தான் பொருள். நமது உடலில் இன்னின்ன உறுப்புகளில்



தான் அல்சர் வரும் என்பதில்லை; உடலின் உள் உறுப்புகளிலும், வெளி உறுப்புகளிலும் இது வருவதுண்டு. ஆனால், இப்போதெல்லாம், அல்சர் என்றாலே, பெரும்பாலும் வயிற்றில் வருவதுதான் என்றாகிவிட்டது.

**வயிற்றில் ஏற்படும் அல்சர் எத்தனை வகைப்படும் - அவை, வயிற்றின் எந்தப் பகுதிகளையெல்லாம் பாதிக்கும்?**

வயிற்றில் ஏற்படும் அல்சர் பெப்டிக் அல்சர் Peptic Ulcer) என்றுதான் குறிப்பிடப்படும்; அதாவது, இரைப்பையில் செரிமானக் கோளாறினால் ஏற்படும் புண்.

உணவுக்குழலின் கீழ்ப்பகுதி, இரைப்பை, சிறுகுடலின் முன்பகுதி ஆகிய இடங்களில்தான் பெரும்பாலும் இந்தப் புண் தோன்றும்.

இரைப்பையில் ஏற்படும் புண் காஸ்ட்ரிக் அல்சர் Gastric Ulcer) எனப்படும்; சிறுகுடலின் முன்பகுதியில் ஏற்படும் புண் டியோடெனால் அல்சர் Duodenal Ulcer) எனப்படும். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் பெப்டிக் அல்சர் Peptic Ulcer)

**ஒருவருக்கு அல்சர் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் யாவை?**

பசி எடுப்பதைப்போன்ற உணர்வுடன் வயிறு வலிக்கும்; வாந்தி வரும் அல்லது வாந்தி பண்ண வருவதுபோலிருக்கும்; உணவைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கும். சிறுகுடல் முன்பகுதியில் புண் Duodenal Ulcer) ஏற்பட்டுள்ள நோயாளிக்கு, ஏதாவது சாப்பிட்டவுடன் வயிற்று வலி குறையும்; ஆனால் இரைப்பையில் புண் Gastric Ulcer) உண்டான நோயாளிக்கோ வயிற்றுவலி அதிகமாகும். 40 சதவிகித இரைப்பைப் புண் நோயாளிகள் எடை குறைந்து, மிக மெலிந்து காணப்படுவார்கள்.

**பெப்டிக் அல்சர் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன?**

ஒருவர் உண்ணும் உணவு, உணவுக் குழல் வழியாக இரைப்பையை அடைகிறது; இரைப்பையில்



டாக்டர் எம்.ஏ.அப்துல் சீதக்காதி, எம்.டி.



சுரக்கும் ஹைடிரோகுளோரிக் அமிலமும், பெப்சின் என்ற நொதியும் அந்த உணவுப் பொருளைச் செரிக்கச் செய்கின்றன. இந்த இரண்டும் அளவுக்கு அதிகமாகச் சுரந்தால், பெரும்பாலும் சிறுகுடலின் முன்பகுதியிலும் இரைப்பைச் சுவரிலும் சளிபோல் படர்ந்து பாதுகாப்பளிக்கின்ற சிலேட்டுமப் படலம்நீர்த்துப் போய் வலுவிழந்து சீர்குலைந்துவிடும். இதன் காரணமாக, அந்த அமிலம் படுகிற இடமெல்லாம் புண்ணாகி விடும். இது தான் பெப்டிக் அல்சர். இரைப்பைச் சுவரும் சிறுகுடலின் முன்பகுதியும் இவ்வாறு அமிலத்தால் அரிக்கப் பட்டுப் புண்ணாவதற்குப் பாக்டீரியா கிருமிகளும்கூட காரணமாக இருக்கக் கூடும் என்று இப்போது கருதப் படுகிறது. ஆனால், இன்னமும் இது தான் காரணம் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலைமையிருக்கிறது.

**ஹைடிரோ குளோரிக் அமிலமும் பெப்சின் என்கிற நொதியும் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும் நிலை எதனால் உண்டாகிறது?**

இதனால்தான் அப்படி ஏற்படுகிறது என்று குறிப்பாக எதையும் சொல்லமுடியாது; ஆனால் - அடிக்கடி உணர்ச்சிவசப்படுவோர், மது அருந்துவோர், புகையிலை போடுவோர், காபி-டீ அடிக்கடி குடிப்பவர்கள், ஆறாத உணவை அவசர அவசரமாகச் சுடச்சுடச் சாப்பிடுவோர், மிகுந்த காரம் உண்போர், மசாலா அதிகமுள்ளவைகளையோ - வறுத்த பண்டங்களையோ அடிக்கடி விரும்பி உண்போர், Asprin போன்ற மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிடுபவர்கள் ஆகியோருக்கே பெரும்பாலும் பெப்டிக் அல்சர் உண்டாகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. காரணம் - மேலே குறிப்பிட்ட பழக்க வழக்கங்களால்தான் இரைப்பையின் சிலேட்டுமப் படலம் பாதிக்கப்பட்டும் அமிலத்தன்மை அதிகமாகிப் புண் வரவும் ஏதுவாகும்.

மேற்கண்ட பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் அதை நிறுத்தாவிட்டால், அளிக்கப்படும் சிகிச்சையும் கூட அவ்வளவாகப் பலனளிக்காது.

முன்சிறுகுடல் புண் உள்ளவர்களுக்கு அமிலம் சுரப்பது அதிகமாக இருந்தாலும், இரைப்பைப் புண் உள்ளவர்களுக்கு அமிலம் சுரப்பது சாதாரணமாகவோ அல்லது குறைவாகவோதான் இருக்கும்.

இதிலிருந்து அமிலம் அதிகமாகச் சுரப்பதனால் மட்டுமே அல்சர் வரும் என்று கூற இயலாது.

ஒருவர் உணவு உண்டபிறகு, வேகஸ் (Vagus) என்ற நரம்பின் தூண்டுதலால்தான் ஹைடிரோ குளோரிக் அமிலம் சுரக்கிறது. மனக்கவலை, அமைதியின்மை, பரபரப்புத்தன்மை, காபி, டீ, ஆகியவை அமிலம் சுரப்பதை அதிகரித்து, அதன் காரணமாகவே அந்த அமிலம் படும் இடம் புண்ணாகும் நிலை நேரிடுகிறது.

**அல்சருக்கு ஆளானவர்கள் காபி, டீ, சாப்பிடக்கூடாது என்றால், பால் குடிப்பது நல்லதா?**

பாலை, ஒரு அல்சர் நோயாளி, அல்சர் குணமாக்கும் மருந்து என்று கருதி அதிகம் அருந்துவது தவறாகும். ஏனெனில், பாலில் கால்சியமும் புரதச்சத்தும் அதிக அளவில் உள்ளது; இந்த இரண்டும் சேர்ந்து அதிக அளவில் அமிலம் சுரக்க வழி வகுத்துவிடும். இதனால், அல்சருள்ளவர்களுக்குப் பால் அதிகம் தருவதும் கூடாது. 'வயிற்றில் பால் வார்த்த மாதிரி இருந்தது' என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லிக் கொள்ளலாமே தவிர, அல்சர் உள்ளவர்கள் வயிற்றில், உள்ளபடியே அதிகமாகப் பால் வார்த்தால் வம்புதான்!

**அல்சர் என்பது பரம்பரை நோயா?**

அப்படிச் சொல்ல முடியாது என்றாலும், அல்சர் நோயாளியின் முதல் வாரிசுக்கு இதே பாதிப்பு ஏற்படுகிற வாய்ப்பு, மூன்று சதவிகிதம் இருக்கிறது என்று ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

**அல்சர் பொதுவாக ஆண்களை அதிகம் பாதிக்குமா, பெண்களை அதிகம் பாதிக்குமா?**

அல்சர், இருபாலருக்கும் பொதுவான நோய்தான். ஆனால், சிறுகுடல் புண்ணானது (Duodenal Ulcer) 5 முதல் 15 சதவிகிதம் வரை பெண்களைவிட ஆண்களையே அதிகம் பாதிக்கிறது. ஒரு சதவிகிதச் சிறுகுடல் புண் சிறுகுடலின் துவக்கத்திலேயே காணப்படும். இந்த அல்சர் புண்ணின் அளவானது ஒரு சென்டிமீட்டருக்கும் குறைந்த விட்டம் உள்ளதாகவே இருக்கும். மொத்தத்தில் பார்த்தோமானால், இந்தப்புண் உள்ள ஆண்களே 4 மடங்கு அதிகமாக இருப்பார்கள்.

அல்சர் நோய் 'ஓ' பிரிவு இரத்தம் உள்ளவர்களிடையேதான் அதிகம் காணப்படுகிறது. ஏன் இப்படி என்று இதற்கான அடிப்படைக் காரணம் இன்னும் திட்டவட்டமாகக் கண்டறியப்படவில்லை.

**டியோடினல் அல்சர், காஸ்ட்ரிக் அல்சர் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை எளிதாக அறியும் வழி என்ன?**

டியோடினல் அல்சர் உள்ளவர்களுக்கு, வயிற்றுவலி, சாப்பிட்டு 90 நிமிடத்திலிருந்து 3 மணி நேரத்திற்குள் வரும்; பெரும்பாலும் இரவில் தூக்கத்தில் வலி உண்டாகும். ஆனால், சாப்பிட்டவுடனோ அல்லது உட்கொள்ளுகிற Antacid மருந்தோ உடனே வயிற்று வலியைக் குறைக்கும். நீண்டநாளாகச் சிறுநீரகக் கோளாறு உள்ள[illegible]



ஆஸ்துமா, ஈரல் வீக்கம் இருப்பவர்களுக்கும் சிறுகுடல் புண்ணான டியோடினல் அல்சர் அதிகம் வரக் கூடும்.

இரைப்பைப் புண்ணான காஸ்ட்ரிக் அல்சர் உள்ளவர்களுக்கோ சாப்பிட்ட உடனேயே வயிற்று வலி தொடங்கிவிடும். வயிற்றின் மேல் புறம் நடுபாகத்தில் வலிக்கும். வாந்தி, குமட்டல் இருக்கும். இது பெரும்பாலும் இது 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வரும்.

***அல்சரிலிருந்து குணம் பெறும் எளிய வழிகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்களேன்?***

அப்படியொரு வழி எந்த நோய்க்கும் இல்லை; ஆனால், ஒன்று செய்யலாம்; அல்சர் உள்ளவர்கள் தன் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவைத் தவிர்த்து விடலாம். தலைவலி, மூட்டு வலி என்று வலி நிவாரணதிற்காக ஆஸ்பிரின் (Asprin) கார்டிசோன் (Cortisone) வகை மாத்திரைகளை விருப்பம்போல் தாமாக வாங்கிச் சாப்பிடக் கூடாது. மன அமைதி, காலாகாலத்தில் உணவு உட்கொள்ளல், எப்போதும் நிதானம், மகிழ்ச்சி, போதுமான ஓய்வு ஆகிய வைகளும் கூட அல்சர் வராமல் காக்கும் வழிமுறைகளேயாகும்.



★ கடந்த காலத்தில் சாதிமுறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில், சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம்!

அல்சருக்கு ஆளானவர்கள், தக்க மருத்துவர்களின் ஆலோசனைப்படி மூன்று மாத காலம் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் குணமாகி விடும். அப்படியும் குணமாகவில்லை என்றால், மீண்டும் நோயாளியைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அல்சர் ஆறாத தன்மைக்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

***அல்சர் நோய் புற்றுநோயாக மாறக் கூடிய வாய்ப்பு உண்டா?***

திட்டவட்டமாக அப்படிச் சொல்லி விட முடியாது. பெரும்பாலும், அல்சர் புண் புற்றுநோயாக மாறும் வாய்ப்பு மிகவும் குறைவு. Endoscopy சோதனை நடைமுறைக்கு வந்த பிறகு, அல்சர் புண்ணைப் பற்றி நிறைய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது, இரைப்பை அல்சர் புண் தொடக்கத்திலேயே சாதாரண அல்சர் புண்ணாகவோ (Benign Gastric Ulcer) அல்லது புற்று நோய்ப் புண்ணாகவோ (Malignant Gastric Ulcer) உருவாகும்; முன்பெல்லாம் கருதியதைப்போல் இரைப்பைப் புண் புற்றுநோயாகமாறும் வாய்ப்பு அவ்வளவாக இல்லையென்றே கூறலாம். அதேபோலச் சிறுகுடல் அல்சர் புண்ணும் புற்று நோயாக மாறும் வாய்ப்பு இல்லை.

***அல்சருக்கான சிகிச்சைகள் யாவை?***

பெரும்பாலும் சிறுகுடல் அல்சர் புண் முறைப்படி மருந்துகள் உட்கொண்டால் முற்றிலுமாகக் குணமாகிவிடும். தற்போது H2 Recepter Blocker, Anion Pump Inhibitor, Bismuth Salt போன்ற மருந்துகள் வந்தபின், அல்சருக்காக அறுவைச் சிகிச்சையே தேவையில்லை என்ற நிலைகூட ஏற்பட்டிருக்கிறது.

இரைப்பை அல்சர் புண்ணானது ஆரம்ப நிலையில் இருந்தால் Acute (Gastric Ulcer) மருந்துகள் கொடுத்து குணமாக்கலாம். நீண்ட நாள் ஆறாத இரைப்பைப் புண்ணுக்கு (Chronic Gastric Ulcer) அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவதுதான் சிறந்த வழியாகும்.

***பொதுவானதோர் கணக்கெடுப்பு நடத்தினால் எந்த வகையான அல்சர் புண் மக்களிடையே அதிகமிருக்கும்?***

பொதுவாகப் பார்த்தோமானால்- நம்நாட்டில் சிறுகுடல் அல்சர் புண்தான் அதிகம் காணப்படுகிறது. அதிகமான அளவில் காரம் சாப்பிடுகிறவர்களுக்கே இரைப்பை அல்சர் புண் வரும்; இந்த வகையில் பார்த்தால், இரைப்பை அல்சர் புண்ணானது ஜப்பானியர்களிடமே அதிக அளவில் காணப்படுகிறது. காரணம், அவர்களுடைய உணவுப் பழக்கம் அப்படி!

***இரைப்பையில் அல்சர்புண் வந்தால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமா?***

முடியும். இரைப்பை அல்சர் புண்ணை Partial Gastrectomy என்ற முறை அறுவைச் சிகிச்சை மூலமும், Radical Gastrectomy என்ற அறுவைச் சிகிச்சை மூலமும் குணமாக்கலாம்.

***அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டிய அளவிற்கு ஒருவருக்கு அல்சர் நோய் முற்றிவிட்டது என்பதை எப்படிக் கண்டறிவது?***

அல்சர் புண்ணால் பெருமளவில் பாதிக்கப்பட்ட நோயாளிக்குப் பேரியம் எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கப்படும். இதன்மூலம் சதவிகித அல்சர் புண்ணைக் கண்டுபிடித்து விடலாம். நோயாளிக்கு அல்சர் புண்ணிலிருந்து இரத்தக் கசிவு (Haemorrhage) சிறுகுடலில் அடைப்பு (Obstruction), சிறுகுடலிலோ இரைப்பையிலோ ஓட்டை (Perforation) போன்ற கோளாறுகள் - அதாவது மருந்துகளினால் குணமாக்க முடியாத நிலை ஏற்படும்போதுதான், 'என்டாஸ்கோப்பி' Endoscopy என்ற சோதனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் தகவலின்பின் அறுவைச் சிகிச்சைக்கு நாம் அல்சர் நோயாளியை உட்படுத்தவேண்டும்.

பேரியம் எக்ஸ்ரேயில்கூட ஒருவர் உடலினுள் சிறிய அளவில் உள்ள அல்சர் புண்கள், அவ்வளவு தெளிவாகத் தெரியாமல் போய் விடுகிற நிலைமை ஏற்படுவதும் உண்டு. அந்த நிலையில்தான் 'என்டாஸ்கோப்பி' என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. மிக மெல்லிய நூலிழைபோல் உள்ள இதன் நுனியில் துல்லியமான 'லென்ஸ்' பொருத்தப்பட்டிருக்கும்.

இதை நோயாளியின் வாய் வழியாக, உள்ளே இரைப்பை - சிறுகுடல் வரை செலுத்தமுடியும். அப்படிச் செலுத்தி, அல்சர் புண் எந்த அளவில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதையும் - இரத்தக் கசிவு ஏற்பட்டிருக்கிறதா, அதன் நிலைமை என்ன என்பதையும் மிகச் சரியாக ஒரு மருத்துவர் கண்டு பிடிப்பார். இந்தக் கருவி மூலமே அப்புண்ணின் சிறுபகுதியை வெளிக் கொணர்ந்து, அதை வைத்து முறையான பரிசோதனையை மேற்கொண்டு, அது அல்சர் புண்தானா அல்லது புற்றுநோய்ப் புண்ணா என்று கண்டறிந்து தக்கபடி சிகிச்சையளிக்கலாம்.

***அல்சர் நோயாளிக்கு, டாக்டர் என்ற முறையில் நீங்கள் கூறும் அறிவுரை என்ன?***

வயிற்றுவலி எல்லாமே அல்சரால்தான் வரும் என்று சொல்லுவதற்கில்லை; அதுதான் காரணம் என்று, ஒருமுறை மருத்துவர் கண்டுபிடித்துத் தகுந்த சிகிச்சைமூலம் சரிபடுத்திவிட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; மறுபடியும் அந்த நபருக்கு அல்சர் புண் வராது என்று கூறமுடியாது; அதே இடத்திலோ, வேறு இடத்திலோ கூட மறுபடியும் அதுபோன்ற புண் வரலாம்.

ஆனால், குறிப்பிட்ட அந்த நபருக்கு அதேபோல மறுபடியும் வயிற்றுவலி தோன்றினால், நோயாளி தாமாகவே முன்பு டாக்டர் சிபாரிசு செய்த பழைய மருந்தை உட்கொள்ளாமல், மீண்டும் பரிசோதித்துக் கொள்ளுவது நல்லது. ஏனென்றால் அந்த வயிற்று வலிக்கு வேறு ஏதாவது நோயும் காரணமாக இருக்கலாமல்லவா? ஆக மொத்தத்தில் அல்சர் நோயாளி எப்போதும் மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

***சந்திப்பு: பி.எல்.ஆர்.***




# நரிமணம் மின் நிலையம்

**இந்த நூற்றாண்டின் இறுதியில், தமிழகத்தின் மின்தேவை 8500 மெகாவாட் அளவு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்நோக்கும் பற்றாக் குறையை ஈடுகட்ட, சுமார் 4300 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. தமிழகத்தில் புனல் மின் ஆதாரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலக்கரி ஆதாரங்கள் இல்லை. அணுமின் உற்பத்தி ஒரு அளவிற்கே அதிகரிக்க முடியும். இந்த நிலையில் இயற்கை எரிவாயுவை மின் உற்பத்திக்குப்பயன்படுத்தும் முயற்சியில், தற்பொழுது நரிமணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் எரிவாயு சுழலி மின் நிலையம் முதற்படியாகும். நரிமணம் எரிவாயு சுழலி மின் திட்டத்திற்கு 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.30 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இம் மின்நிலையத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 660 இலட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கப் பெறும். உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.56 ஆகும். இந்நிலையத்தில் உற்பத்தி ஆகும் மின்சாரம் 110 கி.வோ. மின் அழுத்தத்திற்கு உயர்த்தப்பட்டு திருவாரூர் துணை மின் நிலையத்திற்கு அனுப்பப்படும். நாகப்பட்டினத்தில் புதிதாக 110 கி.வோ. அழுத்த துணைமின் நிலையம் நிறுவி அத்துடன் இம் மின் நிலையம் இணைக்கப்படும். மைய அரசின் மின்சக்தி முதலீட்டுக் கழகம் இத்திட்டத்திற்கு ரூ.11 கோடி கடனுதவி செய்துள்ளது.**

**காவிரிப்படுகையில் கிடைக்கவிருக்கும் எரிவாயுவைப் பெருமளவில் பயன்படுத்துவதற்காக தரங்கம்பாடி வட்டத்திலுள்ள பிள்ளைபெருமாள் நல்லூர் கிராமத்தில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் நிலையம் ஒன்பதாவது திட்டக் காலத்தில் அமைக்கப்படவுள்ளது என்பது தமிழக மக்களுக்கு மன நிறைவைத்தரும்.**

# சிறப்புமிக்க சிறுசேமிப்பு



**கே.அலாவுதீன் இ.ஆ.ப.,**
இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை.

**சிறுசேமிப்பு முகவர்களுக்கு இலவசப் பரிசுக் கூப்பன் மற்றும் போனஸ் திட்டம்**

முகவர் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ஒன்று, சிறுசேமிப்புத் துறையினால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

சிறுசேமிப்பு முதலீடுகள் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு வகையான சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவித்து ஆர்வத்துடன் செயல் படச் செய்வதற்காக 1987-88 முதல் தமிழக அரசு முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத் தைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது, இத் திட்டத்தின்படி மத்திய அரசு வழங்கும் கமிஷன் தொகைக்கு இணையாகத் தமிழக அரசும் முகவர் களுக்கு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்**

1991-ஆம் ஆண்டு முதல் சிறுசேமிப்பு முகவர் களைப் பெருமளவில் ஊக்கப்படுத்தும் நோக்கத் துடன் தமிழக அரசு சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வோருக்காகச் செயல்படுத்தும் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தைப் போன்று, சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு சேகரிக்கும் முகவர்களுக்கும் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத் தினை அறிமுகப்படுத்தி ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் 1.4.91 முதல் 31.3.92 வரை முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்கு, ஒவ்வொரு ரூ.10,000/-க்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பன் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு வரிசைக்கும், ஒரு இலட்சம் கூப்பன்கள் வெளியிடப்படுகின்றன. இத்திட்டம், முதல் கட்ட மாக மாநில அளவில் செயல்படுத்தப்படும். ஒரு இலட்சம் கூப்பன்கள் தமிழகம் முழுவதும் முகவர் களுக்கு வழங்கப்பட்ட பிறகு, குலுக்கல் நடத்தப் படும். சிறுசேமிப்பு முகவர்கள் மூலம் ஒவ்வொரு வரிசைக்கும் மொத்த வசூலாக ரூ.100 கோடி சிறு சேமிப்புத் திட்டங்கள் மூலம் திரட்டப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் பரிசுகள் விபரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| முதல்பரிசு | (5) | ஸ்கூட்டர் |
| 2-வது பரிசு | (10) | மொபட் |
| 3-வது பரிசு | (15) | 8 கிராம் தங்க நாணயம் (22 காரட்) |
| 4-வது பரிசு | (20) | மிக்ஸி |
| 5-வது பரிசு | (50) | சைக்கிள் |
| 6-வது பரிசு | (300) | சூட்கேஸ் |
| ஆறுதல் பரிசு | (500) | எல்காட் சுவர்க் கடிகாரம் |
| மொத்தம் | 900 | |

சிறுசேமிப்பு முகவர்கள் (எஸ்.ஏ.எஸ்) மகளிர் முகவர்/பி.பி.எப் முகவர்) பரிசுக் கூப்பன்களை சென்னை நகரில் சென்னை மாநகராட்சியின் சிறுசேமிப்புப் பிரிவிலும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவி யாளர் (சிறுசேமிப்பு) அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

1991-92-ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசு 1.4.91 முதல் முதலீடுதாரர்களைக் கவரும் வண்ணம்

அ. மாவட்ட அளவிலான மாருதி கார் பரிசுத் திட்டம் (1.4.91 முதல் 31.3.92 வரை) மற்றும் ஆ. மண்டல அளவிலான அடுக்கு மாடி வீடுகள் வழங்கும் பரிசுத் திட்டம் (1.4.91 முதல் 30.9.91 வரை)

. ஆகிய இரு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களில் முதல் மூன்று பரிசுகளை வெல்லும் முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடு திரட்டிய சிறுசேமிப்பு முகவர் களுக்குப் போனசாகப் பரிசுகள் வழங்கவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மாவட்ட அளவிலான மாருதிகார் பரிசு வழங்கும் திட்டம்:**
**(ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு கூப்பன்)**

| | முதலீடுதாரர் பெறும் பரிசு | முகவர்பெறும் பரிசு |
|---|---|---|
| ஒரு சூப்பர் பம்பர் பரிசு | மாருதி கார் | மோஃபா |
| ஒரு முதல் பரிசு | ஸ்கூட்டர் | சைக்கிள் |
| இரண்டு இரண்டாவது பரிசு | கலர் டி.வி. | பிரீப்கேஸ் |

**மண்டல அளவிலான அடுக்குமாடி வீடுகள் வழங்கும் திட்டம்**
**(ரூ.2,000/- முதலீட்டிற்கு 1 கூப்பன்)**

| | முதலீடுதாரர் பெறும் பரிசு | முகவர்பெறும் பரிசு |
|---|---|---|
| ஒரு முதல் பரிசு | எம்.ஐ.ஜி. பிளாட் | மோஃபா |
| ஒரு இரண்டாவது பரிசு | எல்.ஐ.ஜி. பிளாட் | சைக்கிள் |
| பத்து மூன்றாவது பரிசு | 165 லிட்டர் ரெபிரிஜிரேட்டர் | பிரீப்கேஸ் |

தமிழகம் முழுவதிலுமுள்ள சிறுசேமிப்பு முகவர்கள் அதிக அளவில் சிறுசேமிப்புத் திட்டங் களில் முதலீடுகளைத் திரட்டி இத்திட்டங்களின் பயனைப் பெறவேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம். ●

## ஆலைகள் வளர - தொழில் பெருக...
## அரசு அளித்திடும் பேருதவி

- புதிய தொழில்களை துவங்க வருவோர்க்கு அரசின் அமைப்பான I.S.D. கார்ப்பரேஷன் ஏற்கனவே அவர்களிடம் இல்லாத தொழிலுக்கு தேவைப்படுகிற - எல்லாவிதமான உதவிகளையும் தானே செய்து தருகிறது.
- இதுவரை அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகை 15% இனி 20% ஆக உயர்த்தப்படுகிறது. தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு 15 லட்சத்தில் இருந்து 20 லட்சமாக உதவித்தொகை அதிகரிக்கிறது.
- வேலைக்கமர்த்தும் பணியாளர்களில் 30%க்கும் மேல் - பெண்களைச் சேர்க்கும் தொழிற்கூடங்களுக்கு அளிக்கிற உதவித்தொகையிலும் - இன்னும் 5% அதிகம் தரப்படும். (அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை)
- சுயமாக தொழில் துவங்க வரும் பெண்களுக்கு - அரசின் புதிய தொழில்பேட்டைகளில், கட்டிடங்களாக உள்ள 'ஷெட்டுகள்' - 'பிளாட்டுகளில்' கண்டிப்பாக 30% இட ஒதுக்கீடு.
- தர்மபுரி மாவட்டம் - பர்கூர் தொகுதி மாதப்பள்ளியில் - முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்ட கருங்கல் தொழிற்சாலைக்கு மொத்த முதலீடு - 15 கோடி.
- தொழிற்சாலை சட்டங்களில் வரம்புக்கு உட்பட்ட சக்தியைப் பயன்படுத்தும் சிறுதொழில் நிறுவனங்களில் பணி புரிவோர் எண்ணிக்கை 10ல் இருந்து 25 ஆகவும் இதே சக்தியை பயன்படுத்தாத சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரிவோர் எண்ணிக்கை 20ல் இருந்து 50 ஆகவும் உயர்த்தப்படுகிறது. மின்சாரத்தில் 10 H.P வரை பயன்படுத்தும் நிறுவனங்கள் மட்டுமே 'சக்தி உபயோகிக்காத' சிறுதொழில் நிறுவனமாக கருதப்படும்.
- கிரானைட் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில், ''தொழில் தொடங்குவோர் பாலிஷிங் மற்றும் கட்டிங் செய்யும் தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்குள் நிறுவ வேண்டும்'' என்ற கொள்கையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

### திட்டங்கள்

- திருச்சி மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நிலக்கரி மின்விசைத் திட்டம் கூட்டுமுயற்சியில் நிறுவுதல்
- ரூ.600 கோடி முதலீட்டில் 9 புதிய திட்டங்கள் TIDCO மூலம் தொடங்கப்பட உள்ளது.
- இந்திய T.F. Authorityயின் கூட்டு முயற்சியோடு தரமணியில் ஆலோசனைக் கூடத்துடன் கூடிய நிரந்தர தொழில்துறைக் கண்காட்சி வளாகம் ஒன்றை நிறுவுதல்.
- கடலூரில் ரூ.17 கோடி முதலீட்டில் வருடத்திற்கு 1600 டன். பாஸ்பரஸ் இரசாயன பூச்சிமருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவுதல்.
- விவசாயத்தை மையமாகக் கொண்டு தொழிற்சாலைகள் நிறுவ பெரியார், நெல்லை-கட்டபொம்மன், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ஏற்றுமதிக்கான ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை SIDCOவினால் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் துவங்கப் பட உள்ளது.
- இந்திய அரசின் உதவியோடு ELCOT நிறுவனம் கோவையில் ரூ.8 கோடி முதலீட்டில் ஒரு சாப்ட்வேர் (கணிப்பொறி) நிறுவனத்தைத் தொடங்கவுள்ளது.
- சோழிங்க நல்லூரில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுவியல் தொழிற்சாலைகள் தொடங்கப்படவுள்ளது.





# ஆடு வளர்ப்போம்

**டாக்டர் எஸ். மாரிமுத்து,**
**டாக்டர் டி. பொற்செழியன்**
கால்நடைப் பராமரிப்புத்துறை
விவசாயக் கல்லூரி
மதுரை

பொதுவாக வெள்ளாடுகள் பாலுக்கும் இறைச்சிக்கும் வளர்க்கப்படுகின்றன. குளிர்ப்பிதேசங்கள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் ஆடுகளிலிருந்து பால், இறைச்சி நமக்கு கிடைப்பதோடு 'மொகைர் (Mohair) என்னும் உயர் ரக உரோமம் கிடைப்பதற்காகவும் வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. செம்மறி ஆடுகளில் நம் நாட்டில் இறைச்சிக்காகவும் உரத்துக்காகக் கிடை அமைக்கவும் (Penning) வளர்க்கப்படுகின்றன. ஆனால் அயல் நாடுகளில் பால் உற்பத்தித் திறன் கூடுதலாக உள்ளதால், செம்மறி ஆடுகளிலிருந்து இறைச்சி, கம்பளி மற்றும் பால் உற்பத்தி ஆகியவைற்றுக்காக அவை வளர்க்கப்படுகின்றன என்பது நமக்கு வியப்பாக இருக்கலாம்.

### கூண்டு முறையில் ஆடு வளர்ப்பு

கிராமங்களில் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை திறந்த வெளியில் ஓட்டிச் சென்று மந்தை மந்தையாக மேய்க்கப்படுவதைக் காணலாம். தொழில் வளம் பெருகி வரும் இத்தருணத்தில் மேய்ச்சல் நிலம் குறைந்து வருவதைக் காண்கிறோம். எனவே ஆழ்கூள முறையில் (Deeplitter System) ஆடுகளை வளர்க்கப் பரிந்துரைக்கப்படுகிறது. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளையும் ஆழ்கூள் முறையில் இலாபகரமான முறையில் வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆழ்கூள முறையில் வளர்ப்பதன் நோக்கம்: குறைந்த இடத்தில் ஆடுகளை வளர்க்கலாம். இதனால் மேய்ச்சலுக்காக நீண்டதூரம் சென்று வருவதைத் தவிர்ப்பதோடு இதனால் ஏற்படம் சக்தி வீணாவதைக் குறைக்க வழிவகை ஏற்படுகிறது. வெள்ளாடுகளால் பயிர்கள் அழிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். பராமரிப்பு முறைகள் எளிதாக இருப்பதோடு ஆடுகளில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். இம்முறையில் தேவையான தீவனம் கொடுத்து ஆடுகள் வளர்க்கப்படுவதால் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கவும், கூடுதலான எடை கொண்டதாக அவை வளரவும் வாய்ப்புள்ளதால் விரைவில் குட்டிகள் பருவமடையவும் குறிப்பிட்ட காலத்தில் இனப் பெருக்கம் செய்வதும் ஏதுவாகிறது. இதனால் ஆட்டுப் பண்ணையில் அதிக எண்ணிக்கையில் குட்டிகள் கிடைத்து பண்ணையின் பொருளாதாரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### இடவசதி

ஒரு வெள்ளாட்டுக்கு 15 முதல் 20 சதுர அடியும் செம்மறி ஆட்டிற்கு 15 சதுர அடியும் இடம் தேவைப்படுகிறது. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வளர்க்கும் போது தனித்தனியாக ஆழ்கூள முறையில் வளர்க்க வேண்டும்.

### ஆழ்கூள வீடு அமைத்தல்

ஆடுகளை ஆழ்கூள முறையில் வளர்க்க ஒரு ஆட்டுக்கு 7 கிலோ ஆழ்கூளம் தேவைப்படுகிறது. கடலைத் தோல், நெல்உமி, நெல் கருக்காய், மரத்தூள், தென்னை நார்க்கழிவு போன்றவற்றில் ஏதாவது ஒன்றினை ஆழ்கூளமாகப் பயன்படுத்தலாம். இம்முறையில் அமைக்கப்படும் வீடு நல்ல காற்றோட்ட வசதியுடன் அமையவேண்டும். தரை ஈரம்படாமலிருக்க வேண்டும். சுவர் தரை மட்டத்திலிருந்து 1.5 அடி உயரமுள்ளதாகவும் அதற்குமேல் பகுதியில் மூங்கில் படல் அல்லது கம்பி வலை கொண்டும் அமைத்தல் நல்லது.

இவ்வித எற்பாட்டில் நல்ல காற்றோட்டம் கிடைக்க வசதியாக இருக்கும். தீவனம் அளிக்க நீட்ட வாக்கில் தீவனத் தொட்டியும், தண்ணீர்த் தொட்டியும் அமைக்க வேண்டும். ஆழ்கூளத்தை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை நன்றாகக் கிளறிவிடுவது முக்கியம். ஈரப்பதம் அதிகமிருந்தால் 100 சதுர அடிபரப்பிற்கு 5 முதல் 7 கிலோ சுண்ணாம்புத்தூள் தூவி ஆழ்கூளத்தைக் கிளறிவிட்டால் துர்நாற்றம் வராமல் பாதுகாக்கலாம். 5 அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை ஆழ்கூளத்தை உரமாக்கி மண்



வளத்தைப் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கலாம்.

### ஆட்டுக்குட்டி பராமரிப்பு

பிறந்தவுடன் குட்டிகளை சுமார் 15 நிமிடத்திற்குச் சீம்பால் குடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குட்டிகளில் ஒருமாத வயதில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம். 3 மாத வயதில் குட்டிகளை பிரித்துத் தனியாகப் பராமரிப்பது அவசியம். இவ்வாறு செய்வதால் தாய் ஆடு எளிதில் மீண்டும் சினைப்பிடித்துக் குட்டிகள் போட ஏதுவாகும். தவிர, குட்டிகளுக்கு அடர்த்தீவனம் கொடுத்து வளர்த்தால் துரித வளர்ச்சி அடையும். இனப்பெருக்கத்துக்குத் தேவையற்ற கிடாய்க் குட்டிகளை 2 மாத வயதில் காயடித்தல் Castration அவசியம். இதனால் துரித வளர்ச்சியடைந்து கூடுதலான எடை கொண்டு வளர்ந்து, அவை விற்பனைக்கு தயாராகின்றன. 9 அல்லது 10 மாத கிடாய்க் குட்டிகள் சுமார் 20 கிலோ எடைக்குமேல் வளர்ச்சியுடனிருக்கும். இத்தகைய கிடாய்க் குட்டிகளை இறைச்சிக்காக விற்பனை செய்து இலாபமடையலாம்.

### தீவனம் அளித்தல்

ஒரு வளர்ந்த ஆட்டுக்கு 40 முதல் 50 செ.மீட்டர் குட்டிக்கு 30 முதல் 35 செ.மீட்டர் தீவன இடவசதி தேவை. எளிய மற்றும் விலை குறைவாகத் தீவனம் அளிக்க பனை மரத்தை மேல்பாகத்தில் சுமார் 20 முதல் 28 செ.மீட்டர் அகலத்திலும் 12 முதல் 15 செ.மீட்டர் ஆழமுள்ளதாகவும் செதுக்கு நீட்டவாக்கில் தீவனத் தொட்டியாகப் பயன்படுத்தலாம்.

### வயதுவந்த ஆடுகளுக்கு அடர்த் தீவனம் தயாரிக்க

மக்காச் சோளம் 50 பாகமும், கடலைப் புண்ணாக்கு 20 பாகமும், கோதுமைத் தவிடு 20 பாகமும், குதிரை மசாலா பவுடர் 5 பாகமும், துவரம் பொட்டு/உளுந்தம் பொட்டு 2 பாகமும், உப்பு ஒரு பாகமும், தாதுப்பு 2 பாகமும் கலவை செய்ய வேண்டும்.

### ஆட்டுக்குட்டி தீவனத்திற்கு

மக்காச் சோளம் 50 பாகமும், கடலைப் புண்ணாக்கு 20 பாகமும், கோதுமைத் தவிடு 17 பாகமும், குதிரை மசாலா பவுடர் 5 பாகமும், மீன்தூள் 5 பாகமும், தாது உப்பு 2.5 பாகமும், உப்பு 0.5 பாகமும் கலந்து வைக்க வேண்டும்.

### இனப்பெருக்கம்

வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளை விட அதிகமாக தீவனம் உண்ணும் திறன் கொண்டது. வெள்ளாடு அதன் எடையில் 3 முதல் 6 சதவிகிதமும், செம்மறி ஆடு 3 முதல் 4.5 சதவிகிதமும் உலர்தீவனம் உட்கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அன்றாடம் பசுந்தீவனம் 4-5 கிலோவும் உலர்ந்த தட்டு 1-2 கிலோவும் கொடுப்பது நல்லது. வயது வந்த ஆடு ஒன்றுக்கு அன்றாடம் 20 கிராம் அடர்த்தீவனமும், கொடுக்க வேண்டும். குட்டிகளுக்கு அன்றாடம் 50 கிராம் முதல் 100 கிராம் வரை அடர்த்தீவனம் கொடுக்க வேண்டும். கலப்புத் தீவனத்துடன் பசுந்தீவனம் 2 முதல் 3 கிலோ வரையும் உர்ந்த தட்டு 0.500 கிலோ முதல் 1 கிலோவும் கொடுக்க வேண்டும். சினைப்பருவத்தில் கூடுதலான தீவனம் கொடுத்து ஆடுகளை செழுமை செய்தல் (lushing) அவசியம். சுத்தமான தண்ணீர் எப்போதும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

### இனப்பெருக்கம்

20 ஆண்டுகளுக்கு ஒன்று அல்லது இரண்டு கிடாய் என்ற விகிதத்தில் இனப்பெருக்கத்திற்காக பராமரிக்க வேண்டும். இரண்டு குட்டிகள் மற்றும் மூன்று குட்டிகள் ஒரு ஈத்தில் போடும் ஆடுகளை தேர்ந்தெடுத்து பண்ணையில் பராமரித்தால் ஆடுகளின் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்கவும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் ஏதுவாகும். நன்கு பராமரிக்கப்படும் ஆட்டுப் பண்ணையில் ஆண்டில் இருமுறை குட்டிகள் போடும் அல்லது இரண்டு ஆண்டில் 3 ஈத்து குட்டிகள் பிறக்கும்.

ஆட்டுப் பண்ணையை சுகாதாரமான முறையிலும் முன்னேற்றமான தொழிற்நுட்பங்களுடனும் பராமரித்தால் ஆடு வளர்ப்பவர்களுக்கு சுயவேலைவாய்ப்பும், கூடுதல் வருவாயும் கிடைக்க வாய்ப்புள்ளது. வருவாய் குறைவாக உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நிலமற்றவேலைபார்ப்பவர்களுக்கும் ஆடு வளர்ப்பு, கறவை மாடு வளர்ப்புக்குச் சமமாகும். எனவேதான் வெள்ளாடுகளை 'ஏழைகளின் பசு' என்று கூறப்படுகிறது. ஆகையால் கிராமப்புறங்களில் மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும் ஆழ்கூள முறையில் ஆட்டுப் பண்ணை அமைத்துப் பயன் பெறலாம்.

---



## நேருவின் பொன்மொழிகள்

★ விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமன்றி, இயற்கையின் மீதும் அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

★ வாழ்க்கையே ஒரு விசித்திரமான சதும்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயல வேண்டும்.

★ உடலால் உழைப்பது தாழ்வானது என்ற எண்ணம், நம் நாட்டில் இருந்து வருகின்றது. கீழ்நிலையில் உள்ள வர்கள்தாம் உடலால் உழைக்க வேண்டும்; மேல்நிலை மக்கள் அறிவால் சம்பாதிக்கலாம் என்ற கருத்து மூடத்தனமாகும்; நாட்டிற்குக் கேடு விளைவிப்பது. இந்தக் கருத்து மக்களிடம் இருக்கின்ற வரை நாடு முன்னேற முடியாது.



மக்கள் நன்மைக்காக மக்களால் நடத்தப்படும்
மக்கள் இயக்கம் கூட்டுறவு

செல்வி ஜெ. ஜெயலலிதா,
மாண்புமிகு தமிழக முதல்வர்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் உங்களுக்காகக் குறைந்த விலையில் தரமான பொருட்களை தீபாவளிக்காகத் தர முன்வருகிறது. அருள்கூர்ந்து ஆதரிப்பீர்!

க. இராசாராம்
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்.

## கூட்டுறவு அங்காடிகளில் வாங்குவது ஒரு சுகமான அனுபவம்

★ கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மக்களின் தேவையை அறிந்து சேவை செய்கின்றன.
★ தேவைக்கேற்ப அனைத்துப் பண்டங்களையும் ஒரே இடத்தில் பெறலாம்.
★ நியாயமான விலை ★ தரமான பொருள்.
★ சரியான எடை அளவு.
★ தீபாவளிக்கேற்ற கண்கவர் ஆடைகள், பட்டாசுகள்.




கூட்டுறவுச் சிறப்பங்காடியினால்
உங்கள் வீட்டில் தீப ஒளி பரவட்டும்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை-600 010.







# தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் - தொடக்க விழா

தமிழக அரசால் ரூ.10 கோடி பங்கு முதலீட்டுடன், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 1956-ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின் பதிவாளரிடமிருந்து தேவையான பதிவுச் சான்றிதழும், நடவடிக்கையைத் தொடங்குவதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளன.

இந்நிறுவனம், தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பாக மின்விசைத் துறையில் ஈடுபட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவையான நிதியாதாரங்களைத் திரட்டும் மிக முக்கியமான பணியை நோக்கமாகக் கொள்ளும். பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகைகள், கடன் பத்திரங்கள், நிறுவனக் கடன் முதலீடுகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் வசதி மற்றும் முதலீட்டுத் தொகைகள் இந்நிதியாதாரங்களில் அடங்கும்.

இவ்வாறு திரட்டப்படும் நிதியானது, குறிப்பாக மின்விசைத் துறையில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானப் பணிகளுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களுக்கு, தவணை முறைத் தளவாடக்கடன் (Hire Purchase Finance), தளவாடங்களை வாடகை முறையில் உபயோகிக்கும் வசதிக்கான கடன்கள் (Leasing), குறுகிய மற்றும் இடைக் காலக் கடன்கள் ஆகிய நிதிவசதிகளை அளிக்கவும் மாநிலப் பொதுத் துறை நிறுவனங்களது அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பயன்படுத்தப்படும்.

மாநிலத்தில், மின்விசைத்துறையில், உற்பத்தி மற்றும் பகிர்மானப் பணிகளுக்குத் தேவையான முதலீடு போதிய அளவில் இல்லாத நிலையில், இப்பணிக்கெனக் கூடுதல் நிதியாதாரங்களைத் திரட்டும் சீரிய நோக்கம் பற்றி குறிப்பிட்டு விளக்கத் தேவையில்லை. பெருமளவில் நிதியாதாரங்களைத் திரட்டி அந்நிதி, மின்விசைத் துறைத் திட்டங்களுக்கென அளிக்கப்படுவதால் மாநில விவசாய மற்றும் தொழில்துறை முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒரு உந்துகோல் தானாகவே கிடைக்கப்பெறுகிறது. இவ்வகையில், முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் அருமையான முதலீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அரியதொரு பணியை ஆற்றும். மேலும், பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் துறைகளுக்கு நிதியுதவி செய்யும், இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (IDBI), இந்திய தொழில் நிதி நிறுவனம் (IFCI), இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டு நிறுவனம் (ICICI) வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் சிறந்ததொரு துணை நிறுவனமாகவும் விளங்கும். அதே போன்று, ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC), பொதுக் காப்பீட்டுக் கழகம் (GIC), இந்திய யூனிட் ட்ரஸ்ட் (UTI) போன்ற மத்திய நிதி நிறுவனங்களின் நிதியாதாரங்கள் இம்மாநிலத்தில் இன்றியமையாத பொருளாதார வளர்ச்சித்துறைத் திட்டங்களுக்குப் பயன்பெறும் வகையிலும், இந்நிறுவனம் உதவ இயலும்.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தற்போது, 25

மாத வைப்புத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு வட்டி வருமானம் 14.5 சதவிகிதம் என்றும், 36,48,60 மாத வைப்புத் தொகைகளுக்கு 15 சதவிகிதம் என்றும், முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்குகிறது. இந்திய ரிசர்வ் வங்கி விதிகளின்படி, வைப்புத் தொகைக்கு வட்டி, காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும். மேலும் வைப்புதாரரின் கோரிக்கைக்கேற்ப, சற்றே வட்டிக் குறைப்புடன் மாதமொரு முறையோ அல்லது இருமாதங்களுக்கொரு முறையிலோ வட்டி பெறவும், வைப்புத் தொகைத் தேதியிலிருந்து 6 மாதங்களுக்குப் பிறகு, வைப்புத் தொகையில் 75 சதவிகிதத்துக்கு மிகாமல் கடன் வசதி பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. வைப்புத் தொகையின் மீதான இக்கடன் வசதிக்கு, இயல்பான வட்டி வீதத்திலிருந்து 2 சதவிகிதம் கூட்டிய வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். மாநிலத்தில் சிறப்பாக பணியாற்றி வரும் ஏனைய தனியார் நிறுவனங்களையொத்த முதலீட்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்படும். முதலிலிருந்தே கம்ப்யூட்டர் வசதியுடன் கூடிய சிறந்த சேவையும், வைப்புதாரர்களுக்கு உடனுக்குடன் வேண்டிய தகவல்களை அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. நிறைந்த வருவாயும், மிக அதிகமான பாதுகாப்பும் கூடிய, கவர்ச்சியான முதலீட்டுத் திட்டங்களின் மூலமும், போதுமான விளம்பர மற்றும் முதலீட்டாளர் தொடர்பு நடவடிக்கைகளின் மூலமாகவும், இந்நிறுவனம், வைப்புதாரர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களது பொன்னான சேமிப்பைத் தக்க வைத்துக் கொள்ளும். வைப்புதாரர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதே இந்நிறுவனப் பணியாளர்களின் முன் நோக்கமாகவும் அமையும்.

இந்நிறுவனம் சென்னையில் ஆழ்வார்ப்பேட்டை சந்திப்புக்கு அருகில், எண்.84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18 என்ற முகவரியில் தனது பணியைத் தொடங்கியுள்ளது.

புதிய நிறுவனத்தின் தொடக்க விழா 16.10.91 அன்று சிறப்பான முறையில் நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில், "பொதுமக்களைக் கவரும் வகையில் இதில் வட்டி விகிதமும் கடன் வசதியும் வழங்கப்படுகிறது. இந்த நிதிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5,00,000 வழங்கித் தொடங்கி வைத்துள்ளார். முதலமைச்சர் இதில் கொண்டுள்ள ஈடுபாடே இந்த நிதியின் முக்கியத்துவத்தை விளக்கும். அகில இந்தியாவில் மின்சாரம் திருட்டுப்போவது தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவு. அதனை அடுத்து வருவது மகாராஷ்டிரா மாநிலம் ஆகும். மின்சார கட்டணத்தை தற்போது உயர்த்தியிருப்பது மிகவும் எச்சரிக்கையோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும். ஒரு நாளைக்கு இருபது மணிநேரம் உழைக்கும் நமது மாண்புமிகு முதல்வரின் சீரிய நிர்வாகத்தின் கீழ் மிகச்சிறந்த நிறுவனமாக இது திகழும் என்பதில் சந்தேகமில்லை" என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். தமது உரையில், "இந்த நிதி நிறுவனம் அரசின் சுமையைக் குறைக்க சிறந்த ஒரு அமைப்பாக விளங்கும். மக்களுக்கு விதிக்கப்பட வேண்டிய வரியை தவிர்ப்பதற்கு இதுபோன்ற நிறுவனங்கள் பயன்படும். அரசு அறிவிக்கின்ற பல்வேறு மானியங்களை ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய அரசின் அனுமதியுடன் பொதுக் கடன்களிலிருந்துதான் தரவேண்டியுள்ளது. வளர்ச்சிப் பணிகள் தொய்வின்றித் தொடர, பொது நிதியிலிருந்து எடுக்காமல், தேவையான நிதியினைப் பெற இது போன்ற நிதி நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன. மின்துறையில் பெரும்பாலும் நஷ்டம் ஏற்படுவதில்லை. ஏற்படும் நஷ்டத்திற்குக் காரணம் மின்சாரக் கட்டணத்திற்கு வழங்கும் மானியம்தான். இது போன்ற அரசு மானியங்கள் மற்றும் நிதியுதவிகள் பற்றி மக்களிடையே புதிய சிந்தனை உருவாக வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வரி விதித்தாக வேண்டும். இல்லையெனில் உற்பத்திச்செலவை வாங்குபவர்கள் தந்தாக வேண்டும்.

Government is to Govern. மின்சாரத் திட்டங்கள் தடைபடாமல் நிறைவேற இந்த நிதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தருவதைவிடக் கூடுதல் வட்டி தரப்படுகிறது. மக்கள் இதில் முதலீடு செய்யும் தொகைக்கு அரசு பாதுகாப்புத் தருகிறது.

தமிழக மக்கள் அனைவரும் தங்களிடம் புதைந்துள்ள எண்ணும் திறன் ஆற்றல்திறன், செயல்பாட்டுத் திறன் ஆகியவைகளைக் கொண்டு முனைப்போடு பணியாற்றினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரும்பியதைப் போல் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. இந்த இலட்சியத்தை நோக்கி விரைந்து சென்றிட மக்களின் மனதில் புதிய மாற்றம் ஏற்பட வேண்டும். புதிய சிந்தனை பிறக்க வேண்டும். அத்தகைய மகத்தான மாற்றத்திற்கு இந்த நிதி நிறுவனம் மிகவும் துணைபுரியும். மின்சக்தி பற்றாக்குறையால் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் தொழிலதிபர்களை நாம் ஈர்க்க இயலும். எனவே, இந்த நிதி நிறுவனம் நன்கு வளர வேண்டும்" என்றார்.

இந்த நிதியில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ரூ.5,000-மும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ரூ.6,000-மும் முதலீடு செய்தனர்.

முன்னதாக விழாவிற்கு வருகை புரிந்தவர்களைப் பொதுப்பணித் துறைச் செயலர் திரு.சி.செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார். நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. சி.இராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் அறிமுகம் செய்தார். விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. அன்பரசு டாக்டர்.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் பலராமன், டி.எம்.ரங்கராஜன் ஆகியோர் பேசினார்கள். இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
—என். இளங்கோ

---

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை:**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, ஆகியோர் வரவேற்றனர்.

**இரண்டாம் அட்டை:**

நவம்பர்-14 பண்டித நேரு பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படம் அட்டையை அலங்கரிக்கிறது.

**கடைசிப் பக்க அட்டை:**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத் தொடக்க விழாவில் அலைகடலெனக் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

---

## 39 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்களுக்காக ரூ.35 இலட்சம் வழங்கப்படும்.

**1989-90**-ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 39 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்களுக்காக இவ்வாண்டு ரூ.35 இலட்சம் வழங்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இதனால் பயன்பெறும் அரசு மேல்நிலைப்பள்ளிகளின் விவரம் வருமாறு:

**செங்கல்பட்டு-எம்ஜிஆர் மாவட்டம்:-** 3 பள்ளிகள் (போலம்பாக்கம், கத்திவாக்கம் மற்றும் நங்கநல்லூர்)

**வடார்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்கள்:-** 8 பள்ளிகள் (சந்தவாசல், குரும்பேரி, பேரணாம்பட்டு (பெண்கள்), செங்கம், புதுப்பேட்டை, பெண்ணாகர், பேராம்பத்தூர் மற்றும் விரிஞ்சிபுரம்)

**தென்னார்க்காடு மாவட்டம்:-** 4 பள்ளிகள் (பேர்பெரியன்குப்பம், களமருதூர், இளவஞ்சூர் மற்றும் முரார்பாத்)

**தஞ்சை மாவட்டம்:-** 4 பள்ளிகள் (திருநெய்ப்பேர், காரியப்பட்டினம், பெருகவாழ்ந்தான் மற்றும் திருக்குவளை)

**புதுக்கோட்டை மாவட்டம்:-** ஒரு பள்ளி (மேலசிவபுரி)

**திருச்சி மாவட்டம்:-** ஒரு பள்ளி (மனச்சநல்லூர்)

**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்:-** 2 பள்ளிகள் (ஜி. இராமநாதபுரம் மற்றும் செந்துறை)

**மதுரை மாவட்டம்:-** ஒரு பள்ளி (ஏ. வள்ளாளப்பட்டி)

**இராமநாதபுரம் மாவட்டம்:-** ஒரு பள்ளி (சண்முகநாதப்பட்டினம்)

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்:-** ஒரு பள்ளி (கீழடி)

**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:-** 2 பள்ளிகள் (சம்பவர் வடகரை மற்றும் கங்கைகொண்டான்)

**தருமபுரி மாவட்டம்:-** 3 பள்ளிகள் (இலக்கியம்பட்டி, நல்லம்பள்ளி மற்றும் கடத்தூர் (பெண்கள்)

**சேலம் மாவட்டம்:-** 3 பள்ளிகள் (கண்ணங்குறிச்சி, வலையப்பட்டி மற்றும் ஆர். புதுப்பாளையம்)

**கோவை மாவட்டம்:-** 2 பள்ளிகள் (இருகூர் மற்றும் குமாரலிங்கம்)

**நீலகிரி மாவட்டம்:-** 2 பள்ளிகள் (எடப்பள்ளி மற்றும் பிதிர்காடு)

**சிதம்பரனார் மாவட்டம்:-** ஒரு பள்ளி (காளிங்கப்பட்டி)

"நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பாத்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது... பால் நஷ்டம் தராமலே!"



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

**பன்மின்த்***

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது பன்மின்த் விளைவை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

**பன்மின்த்***

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

*பூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

**pfizer**

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு: ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 4000




## பார்த்தோம் படித்தோம்

*1.10.'91* இதழ் கண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்ட மன்றத்தில் ஆற்றிய உரையும் - 'உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர் தந்தை பெரியார்' என்ற தலைப்பிலான உரையும் - ''பேரறிஞர் அண்ணாவின்' எழுத்துச் செல்வங்கள் நாட்டுடைமை யாக்கப்படும்'' என்ற பேரறிவிப்பும், ''கடமை கண்ணியம் கட்டுப்பாடு இம் மூன்றும் இணைந்திருந்தால் உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?'' என்று அறைகூவல் விடுத்த உரையும் இவ்விதழுக்கு முத் தாய்ப்பு வைத்தது போல் அமைந் திருந்தன. பாராட்டுகின்றோம்!

நாடகத்தந்தை பம்மல் சம்பந்தனார் பற்றி இதுவரையிலும் நுனிப்புல்லாக மட்டுமே அறிந்திருந்தவர்களுக்கு இவ் விதழில் அவரைப்பற்றி மலர்ந்திருந்த கட்டுரை, நுண்மாண் நுழைபுலத்தோடு கூடியதாக அமைந்திருந்தது. பி.வி.கிரி அவர்கள், சந்தனமும் செந்தமிழும் கலந்ததுபோல் அல்லவா கட்டுரையைப் படைத்திருந்தார்கள்!

—பூபாளம் ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

அக்டோபர் முதல் இதழில் வெளி வந்த அறிஞர்கள், தலைவர்கள் பொன் மொழிகள் பயனுள்ள வகையில் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர் களின், தந்தை பெரியார் பற்றிய சிறப்புரை படித்துப் பயன்பெறவேண் டியதாகும்.

—டி.வசந்தா துரைராஜ்
கீழபழுவூர்
(திருச்சி மாவட்டம்)

'பொம்மைக் கண்காட்சி' பற்றிய கட்டுரையும், அது தொடர்பான படங் களும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. நவராத்திரி விழா கொண் டாடப்பெறும் சமயத்தில், இக்கட்டு ரையை வெளியிட்டமைக்கு என் பாராட்டுக்கள். காந்தி மகானின் அட்டைப்படம் கண்ணைக் கவர்ந்தது.

—பா. சிவகுமார்,
குஞ்சரம்,
(தென்னார்க்காடு மாவட்டம்)

## எங்கள் தமிழகம் - எங்கும் செயல்மயம்



* ரூ. 22.55 கோடி மதிப்பீட்டில் நரிமணம் மின் சுழலி எரிவாயுத் திட்டம்.
* சாலைகள் சீரமைப்பு, மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை விரிவாக்கம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை சாலை மற்றும் ஊரக சாலை வளர்ச்சித் திட்டத்திற்கென ரூ.15.17 கோடி.
* நன்னிலம், காரைக்கால், திருத்துறைப்பூண்டியில் ரூ.1 கோடி செலவில் புதிய பேருந்து பணிமனைகள்.
* ரூ.75 இலட்சத்தில் தஞ்சாவூர், கூத்தாநல்லூர், பேராவூரணி, பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையங்கள்.
* தஞ்சாவூர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி வீடுகள்.
* தஞ்சாவூர் புறநகர் மற்றும் நன்னிலம், நாகப்பட்டினம் பகுதிகளில் ரூ.12 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி.
* ரூ.1 கோடியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விடுதி மற்றும் பொதுப்பணித்துறை அலுவலகக் கட்டடம், சந்தை, காவல் நிலையம், சமுதாயக்கூடம்.
* ரூ.60 இலட்சம் செலவில் மருந்தகங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்.
* ரூ.58 இலட்சம் செலவில் மன்னார்குடி, ஆலத்தம்பாடியில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகள், மற்றும் வேட்டுக்காட்டில் பள்ளிக் கட்டடம்.
* ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடியில் தொகுப்பு வீடுகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூட கட்டடங்கள். பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்.
* ரூ.3 கோடி செலவில் தஞ்சையில் மின்சார கிளை நிலையம், மற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு வீட்டு வசதி.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக-அதன் முதன்மைக்காக வையகமெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் உயர்வுக்காக அனைத்துத் துறைகளிலும் உயர்தனி நூல்கள் பலவற்றை வெளியிட்டுப் பெருமை படைத்துள்ளது தமிழ்ப் பல்கலைக்கழகம்

அறிவியல் களஞ்சியங்கள்
வாழ்வியல் களஞ்சியங்கள்
மருத்துவம், சட்டம்,
பொறியியல் நூல்கள்
கல்வெட்டு, செப்பேடு ஆய்வுகள்
பெருஞ்சொல்லகராதிகள்
இலக்கண இலக்கிய ஆய்வுகள்
இசை, நாடகம் பற்றிய ஆய்வுகள்
ஆங்கில மொழிபெயர்ப்புகள்

போன்ற

இருநூற்றுக்கும் மேலாக எங்கள் வெளியீடுகள் உள்ளன.

விவரங்களுக்கும் விலைப்பட்டியலுக்கும்
தொடர்பு கொள்க:

உதவி இயக்குநர்,
பதிப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
அரண்மனை வளாகம்,
தஞ்சாவூர் 613 001

பதிவாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005




# இன்றியமையாத இடைப்படுகாடுகள் திட்டம்



சமூகக் காடுகள் திட்டத்தின் ஒரு புதிய கோட்பாடான 'இடைப்படு காடுகள் திட்டம்' (Inter-Face Forestry) தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமாகி வருகிறது. இத்திட்டத்தின் சிறப்பம்சம், வனப்பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்களையும் இதில் ஈடுபடுத்துவதுதான்.

வனப்பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் பொதுவாக, விறகு, கால்நடைத் தீவனம், ஆடுமேய்ப்பு முதலியவற்றிற்கு வனப்பகுதியைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இடைப்படு காடுகள் திட்டத்தின் மூலம் வனப்பகுதிக்கும், குடியிருப்புப் பகுதிக்கும் இடைப்பட்ட இடத்தில் மக்களை ஈடுபடுத்தி, காடு வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

வனப்பகுதியை வளம் நிறைந்ததாக வைத்திருக்க உதவுவதுடன், கிராம மக்களின் தேவைகளுக்குப் பயன் அளிக்கும் முகமாகவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

தமிழ்நாட்டில், பாதுகாக்கப்பட்ட பத்து வனப்பகுதிகளில் இடைப்படு காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுள் ஒன்பது திட்டங்கள் வனத்துறையாலும், ஒரு திட்டம் ஒரு சமூக சேவை அமைப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 1988-89-இல் மூன்று 'இடைப்படு காடுகள் திட்டக் கோட்டங்கள்' உருவாக்கப்பட்டன. இதுவரை இத்திட்டத்தில் ஈடுபடும் வாய்ப்புள்ளவைகளாக 3,072 கிராமங்கள் வனத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கிராம மக்களின் பங்கு**

தற்போது இடைப்படு காடுகள் திட்டம் 30 கிராமங்களில்

**இடைப்படு காடுகள் திட்டம்-அதனால் என்ன நன்மை? அவற்றை விளக்கிக் கூறுகிறது இக்கட்டுரை:**

செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இதற்காக 2,500 எக்டேர் நிலப்பரப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாண்டு ஏறத்தாழ 6,500 எக்டேர் நிலப்பரப்பில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏறத்தாழ நான்கு இலட்சம் எக்டேர் சிதிலமடைந்த வனப்பகுதி உடனடி கவனிப்பைப் பெறவேண்டிய நிலையில் உள்ளது.

திட்டம் செயல்படும் கிராமங்களுக்கு வனத்துறை அலுவலர்கள் அடிக்கடி சென்று கூட்டங்களை நடத்துகிறார்கள். புதிய மரக்கன்றுகளை நடுதல், கசிவு நீர்க்குட்டைகளை ஏற்படுத்துதல் உட்பட மண் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் கிராம மக்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதனால் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்போது கிராம மக்களுக்குத் தாங்களும் அதில் பங்களித்த திருப்தி கிடைக்கும். மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட இடங்களில் நீர் இருப்பைப் பாதுகாப்பதற்காகவும், 'முறையாக நீரைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம்' இடைப்படு காடுகள் திட்டத்தில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை இலகுவாகப் பெறுவதற்கும் இத்திட்டம் உதவி செய்கிறது.

மழை பிடிப்புப் பகுதிகளின் சுற்றுச்சூழல் இசைவுத் தன்மையை மேம்படுத்தவும், கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பரப்பு மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டு பலவகையான மரங்கள் நடப்படுகின்றன.

**அடுக்குகளின் விவரங்கள்**

மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ள திட்டப்பகுதியில், தாழ்ந்த அடுக்குக்கு "இடைப்படு மண்டலம்' என்று பெயர். இப்பகுதியில் கால்நடைத் தீவனம், பழங்கள், எரிபொருள், பசுந்தாள் உரம்

# மக்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட...

மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட மின்சாரம் ஒரு இன்றியமையாத ஆதாரமாகும். தொழில்வளம் மற்றும் உணவு உற்பத்தி பெருக போதுமான அளவு, மின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமென்பது தமிழக அரசின் முக்கிய குறிக்கோளாகும். இதன் பொருட்டு கீழ்க் கண்ட திட்டங்கள் நிறுவப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நரிமணம் எரிவாயு சுழலி மின் திட்டம் | 10 மெ.வா | 10/91 |
| தூத்துக்குடி அனல்மின் நிலைய விரிவாக்கத்திட்டம் | 420 மெ.வா | 1991-92 |
| வடசென்னை அனல்மின் திட்டம் | 630 மெ.வா | 1993-94 |
| பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் | 120 மெ.வா | 1992-94 |
| புனாச்சி நுண்புனல் மின் திட்டம் | 2 மெ.வா | 3/92 |
| மரவக்கண்டி நுண்புனல் மின் திட்டம் | 0.75 மெ.வா | 9/92 |
| சாத்தனூர் புனல் மின் திட்டம் | 7.5 மெ.வா | 3/95 |
| கீழ்பவானி வலதுகரைக் கால்வாய் புனல் மின் திட்டம் | 8 மெ.வா | 3/95 |
| பைக்காரா இறுதிநிலை புனல் மின் திட்டம் | 150 மெ.வா | 1997-98 |
| காற்றாலைகள் | 3 மெ.வா | 3/92 |
| மொத்தம் | 1351.25 மெ.வா | |

(மெ.வா: மெகாவாட்)

முதலியவற்றைத் தரக்கூடிய மரவகைகள் நடப்படுகின்றன. 'பொருள் சேர்ப்பு மண்டலம்' என்று அழைக்கப்படும் மத்திய அடுக்குப் பகுதியில், மரத்தடிகள் போன்றவற்றைக் கொடுக்கும் மரவகைகள் நடப்படுகின்றன. 'சுற்றுச்சுழல் இசைவை சமனப்படுத்தும் மண்டலம்' என்றழைக்கப்படும் மேல் அடுக்கில், வேம்பு, மூங்கில் முதலிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள வனப்பரப்பை இயல்பான நிலைக்குக் கொண்டுவருவதற்காக நில, நீர் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அய்யலூரில், 1988 முதல் ஒரு முன்னோடித் திட்டமாக இடைப்படு காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அய்யலூர் மலைகளையும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சார்ந்த சிதிலமடைந்த 7,212.13 எக்டேர் வனப்பகுதி இதற்காகத் தேர்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 600 எக்டேர் வனப்பகுதி இத்திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இப்பகுதி மக்கள் நடுவதற்காக மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுவரை 5,503 எக்டேர், இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு அடைந்துள்ளது.

**சமூகப் பொருளாதார வளர்ச்சி**

அய்யலூர் இடைப்படு காடுகள் திட்டத்தில், ஆறு கால்நடைத் தீவன வங்கிகள் உருவாக்கப்பட்டு கால்நடை வளர்ப்போரின் வருமான வரம்பு உயர்ந்துள்ளது. வனப்பகுதிகளை மேய்ந்துகொண்டிருந்த ஆடுகளுக்குப் பதிலாக கறவை மாடுகள் வாங்கப்பட்டுள்ளதால் வனப்பகுதி அழியும் நிலை தடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கிராமங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் இடைப்படு காடுகள் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

காம்போஸ்ட் உரத் தயாரிப்பு, தோட்டக்கலை, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வேளாண்-பண்ணை வனத்திட்டம் முதலியவற்றில் கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. காந்தி கிராமத்தில் உள்ள ஊரகப் பல்கலைக் கழகத்தின் பிரிவு ஒன்றும் கிராம மக்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது.

இடைப்படு காடுகள் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கிராமங்களின் சுற்றுப்புற மக்கள், தங்களது கிராமங்களிலும் இத்திட்டத்தைக் கொண்டுவருமாறு வனத்துறையிடம் கேட்பதிலிருந்தே திட்டத்தின் வெற்றியை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தத் திட்டம் நாட்டின் இதர மாநிலங்களாலும் பின்பற்றப்படும் என்பதிலும் ஐயம் இல்லை. எனவே, கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வரும் நமது வனப் பகுதிகளை மீண்டும் உருவாக்குவதில், இத்திட்டத்தால் பெரும் வெற்றி கிடைக்கும் என்று நம்புவோமாக!

—பத்திரிகைத் தகவல் அலுவலகம்





# நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
தஞ்சாவூர் மாவட்டம்

அலை பாய்ந்து கலை வளர்க்கும் அன்னைக்காவிரியின் அரவணைப்பில் வாழ்ந்து வளர்ந்து வருவது தஞ்சாவூர் மாவட்டம். வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்கு நல்லுணர்வாகப் பண்பாடு, கலை, இசை, ஓவியம், நாட்டியம், நாடகம் என பல்வேறு பண்பாட்டின் நிலைக்களனாக- உறைவிடமாகத் திகழ்வது தஞ்சாவூர். இம் மாவட்டத்தில் உள்ள கோயில்களும், கோட்டையும், அரண்மனைகளும், அகழிகளும், கல்வெட்டுகளும், சோழர் கால ஆட்சியின் மாட்சியையும், பின் வந்த நாயக்க, மராட்டிய மன்னர்களின் மாண்பையும் பறை சாற்றி நிற்கின்றன. முந்தைய சோழர் ஆட்சியில் கரிகாலன் (கி.பி.50-75) காவிரிக்குக் கரையமைத்து, கல்லணை கட்டி தஞ்சைத் தரணியின் கழனிகளில் ஒரு நெல் விதைத்தால் ஓராயிரம் நெல்லாக விளைந்த காட்சியை எண்ணி நம் மனம் இனிய வரலாற்று நினைவில் அசைபோடுகிறது.

தஞ்சாவூர்ச் சோழர்களின் புகழ் பெற்ற வரலாறு, விஜயாலயன் சோழன் (கி.பி. 846-881) காலத்தில் தொடங்குகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின், விஜயாலயன் காலத்திலே தஞ்சாவூர் நகரம் சோழர்கள் வரலாற்றின் பாதையில் முதல் சுவட்டை எடுத்து வைக்கிறது. மேலும் சிவபாதசேகரனான முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) உலகோர் போற்றும் உன்னத கலை இருப்பிடமான தட்சிண மேரு என அழைக்கப்பெற்ற பெரிய கோவிலை பெருவுடையாருக்கு எடுத்தான். 'தஞ்சை இராசராசேசுவரம்' என அழைக்கப்படும் இக்கோயில் காலங்கள் உள்ளளவும் சோழர்களின் கலையுணர்வையும் கட்டடச் சிறப்புணர்வையும் பறை சாற்றி நிற்கும். தஞ்சையில் அமைந்துள்ள கோட்டைகளும், அகழிகளும், அரண்மனைகளும், ஏகாச்சிறப்பும், எழிலழகும் பெற்றவை. எல்லாவற்றிற்கும் மேலாக இரண்டாம் சரபோஜி மன்னரால் நிறுவப்பட்டு தொகுக்கப்பட்ட ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளும், திரட்டப்பட்ட மேலை நாட்டு வரலாறுகளும், இசை, அறிவியல், நுண்கலை நூல்களும், இன்றளவும் அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஓவியர்களுக்கும், காவியம் படைப்போருக்கும் பெரிதும் துணை நின்று பெருமைப்படுத்துகின்றன. என்றால் அது மிகையாகாது. இதே போன்று கலைக் கூடத்தின் கவின் பெறும் சிறப்பையும் கூறலாம்.

இத்தகைய மாட்சியும், வரலாற்று மணத்தையும் அள்ளி வீசிக் கொண்டிருக்கும் தஞ்சாவூர் மாவட்டம் 6 வருவாய்க் கோட்டங்களையும் 20 வட்டங்களையும் கொண்டது. இதே போன்று ஆறு வளர்ச்சித்துறைக் கோட்டங்களையும் கொண்டது. இம்மாவட்டத்தில் வட எல்லை கொள்ளிடம் ஆற்றினாலும், கிழக்கு, தெற்குப்புறம் வங்கக்கடலாலும், மேற்கு எல்லை திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களாலும் சூழப்பெற்றது. இவ்வாறு பரந்து விரிந்த இந்த மாவட்டம் ஒரு மாவட்ட ஆட்சியரின் ஆளுகையிலும், கட்டுப்பாட்டிலும் இதுகாறும் இயங்கி வந்தது. இன்றைய சமுதாய பொருளாதாரச் சூழ்நிலையில் மக்களுக்கு மிக விரைவானதும், வலுவானதுமான நிர்வாகத்தைத் தர வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தமிழக அரசு இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, 'கீழ்த்தஞ்சை'

★ வரலாறு என்பது, ஒரு நாட்டின் சரித்திரம் அல்ல; மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கின்றது. ஏனெனில், இன்றைய உலகம் ஒரு பொது நியதிக்கு உட்பட்டே இயங்குகின்றது.

—பண்டித நேரு

என இதுகாறும் அழைக்கப்பட்டு வந்த பகுதிகளை உட்கொண்ட பரப்பினை ஒருங்கிணைத்து நாகப் பட்டினத்தைத் தலைமை இடமாகக் கொண்டு 'காயிதே மில்லத்' எனும் பெயரில் உருவாக்கிட ஆணையிட்டுள்ளது.

இந்த இடத்திலே இந்திய அரசியல் வரலாற்றில் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள திரு. காயிதே மில்லத் அவர்களின் பெயரை வைத்தது எவ்வளவு பொருத்தமானது என எண்ணி மகிழ வேண்டியிருக்கிறது. திருநெல்வேலியில் பேட்டையில் 5.6.1893-இல் பிறந்த திரு. காயிதே மில்லத் அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டதும், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டதும் அவர் அரசியலிலே காட்டிய கண்ணியமும், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட பாங்கும் 'பிறந்த நாட்டுக்கும், பெற்றெடுத்த சமுதாயத்திற்கும்' பேசிய மொழிக்கும் அவர்கள் ஆற்றிய சேவையும் இந்திய வரலாற்றிலே தனக்கென ஒரு தனியிடம் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அவர்கள் இந்திய அரசியல் நிர்ணயச் சபையில் உறுப்பினராக இருந்த காலம் 'எனது தாய்மொழியான தமிழை இந்நாட்டின் தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளும்படி உறுப்பினர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்' எனக் கூறி தமிழுக்குப் பெருமை சேர்த்த சிறப்பைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறவாது. அடுத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தராவிட்டால் அவை 'பளபளப்பான நகராட்சிகளாகவே காட்சியளிக்கும்' என வாதிட்டதையும் நாம் மறக்கவியலாது. அடுத்து சிறுபான்மையினருக்கெனக் கல்லூரிகள் அமைத்தல் கூடாது என அப்போதைய அரசு கருதியபோது திரு. காயிதே மில்லத் அவர்கள் சிறுபான்மையினரான முஸ்லிம் மக்களுக்கென திருச்சியில் 'ஜமால் முகமது கல்லூரி' மற்றும் ஏறத்தாழ பதினான்கு கல்வி அமைப்புகளை ஏற்படுத்தி கல்வித்துறையில் காட்டிய அளப்பரிய பணியையும் மறக்கவியலாது. எனவே, இத்தகைய சுதந்திரப் போராட்ட வீரர், அரசியலமைப்பு உறுப்பினர்-கல்விக் காவலர், எல்லாவற்றிற்கும் மேலாக இந்து- முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பெரியவர் பெயரால் இந்த மாவட்டம் அமைவது ஏற்றமுடையதாகும். புதிதாகத் தோற்றுவிக்கப்படும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரான நாகப் பட்டினத்திற்கு அருகாமையில் நாகூர் எனும் இஸ்லாமிய புனிதத் தலம் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்தத் தர்காவிற்குத் தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் தானங்களை வாரி வழங்கியுள்ளார்கள் என்றால் இந்த நாடு சமுதாயப் பொறையுடைமையுள்ள ஒரு நாடு என்பதற்குச் சான்றாகும்.

நாகப்பட்டினம் மிகப் புகழ் பெற்ற பண்டைய துறைமுகமாகும். கல்யாணிக் கல்வெட்டுக்கள் (கி.பி. 1476) பர்மாவிற்கும் இலங்கைக்குப் இடையில் சென்ற கப்பல்கள் நாகட பட்டினம் வந்து சென்றன என்று குறிப்பிடுவதிலிருந்து இதன் துறைமுகச் சிறப்பினை அறியலாம். இந்த நகரில் பல ஐரோப்பியர்கள் வாணிபத் தலங்கள் அமைத்திருந்தனர். கி.பி.1612 முதல் 1660 வரை இங்கு போர்ச்சுகீசியர்கள் வாணிபச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தஞ்சை நாயக்க மன்னர் விஜயராக நாயக்கரிடம் வாணிப உரிமை பெற்ற டச்சுக்காரர்கள் கி.பி. 1660 முதல் 1781 வரை வாணிப ஆதிக்கம் செலுத்தினர். தஞ்சை மராத்திய மன்னர் எகோஜி டச்சுக்காரர்கள் நாயக்கர் மன்னரிடம் பெற்ற உரிமையை உறுதிப்படுத்தினார். டச்சுக்காரர்களின் வீழ்ச்சியையடுத்து 1791-இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தில் வந்து கி.பி. 1799 முதல் 1845 வரை தஞ்சை மாவட்டத்தின் தலைமையிடமாக விளங்கிப் புகழ் பெற்றது நாகப்பட்டினம் நகர். கி.பி: 1845 வரை இது சிறந்த துறைமுகமாகவும் செயல்பட்டது.

இரு மாவட்டங்கள் ஏற்படுத்தும் இந்தப் பணியில் கோட்டங்கள் மற்றும் வளர்ச்சிக் கோட்டங்கள் தற்போது இயங்கி வரும் அடிப்படையில் அதிக மாற்றம் செய்யக்கூடாது என்ற கருத்திலும், தொடர்ச்சியாகவும் நடைமுறையில் இயங்கக் கூடியதாகவும் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டுள்ளன. இதே போன்று கீழ்க்காணும் துறைகள் முன்பே கிழக்கு-மேற்கு என்ற பிரிவின் அடிப்படையில் இயங்கி வருகின்றன:

1. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை
2. பதிவுத்துறை
3. வேளாண்மைத்துறை
4. கால்நடைப் பராமரிப்புத்துறை
5. கூட்டுறவுத்துறை
6. தொழிற்சாலைகள் ஆய்வாளர்

மேலும் கீழ்க்கண்ட 10 துறைகள் நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

1. தஞ்சாவூர் மாவட்டக் காவல்துறை (கிழக்கு)
2. மாவட்டக் கருவூலத்துறை
3. மண்டலப் போக்குவரத்துத்துறை
4. மாவட்டப் பதிவாளர்
5. மீன் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (பிரியாத தஞ்சை மாவட்டம்)
6. நிர்வாக அலுவலர் (துறைமுகம்)
7. மாவட்ட மருத்துவ அலுவலர் (பிரியாத மாவட்டத்தில் இயங்கியது)
8. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
9. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்)
10. திட்ட அலுவலர் (முதியோர் கல்வி)

இந்தப் பிரிவினைக்குப் பின், தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரிய கோயில் அரண்மனை, தஞ்சைக் கோட்டை, சரசுவதி மகால், கலைக் கூடம், போன்ற வரலாற்று அமைப்புகளும், கும்பகோணம் மகாமகக் குளம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் அநேகக் கல்வி நிறுவனங்களும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, இரு பொறியியற் கல்லூரிகள், தென் மண்டலப் பண்பாட்டு மையம், திருவையாறு தியாகராசர் சமாதி, மனோரா, கல்லணை ஆகியவையும் அடங்கும்.

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் திருவாரூர் தியாராச சுவாமி ஆலயம், பூம்புகார், தருமபுர மடம், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் தர்கா, தரங்கம் பாடி கோட்டை, திருக்கடையூர் கோயில், கோடியக்கரை வன விலங்கு சரணாலயம் மற்றும் உதய மார்த்தாண்டபுரம் பறவைகள் சரணாலயம் ஆகியவையும் இடம் பெறுகின்றன. எண்ணெய் எரிவாயுக் கண்டுபிடிப்பின் மூலம் இம்மாவட்டம் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணப் பல திட்டங்கள் உள்ளன. ●

## தமிழகத்தின் 22-வது மாவட்டம்

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் தமிழகத்தின் 22-வது மாவட்டம் ஆகும்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களாவன:

1. சென்னை 2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். 3. வட ஆர்க்காடு அம்பேத்கர் 4. திருவண்ணாமலை சம்புவராயர் 5. தென் ஆர்க்காடு 6. தஞ்சாவூர் 7. திருச்சிராப்பள்ளி 8. புதுக்கோட்டை 9. இராமநாதபுரம் 10. மதுரை 11. திருநெல்வேலி கட்டபொம்மன் 12. கன்னியாகுமரி 13. சேலம் 14. தருமபுரி 15. பெரியார் 16. கோயம்புத்தூர் 17. நீலகிரி 18. காமராஜர் 19. பசும்பொன்தேவர் திருமகன் 20. திண்டுக்கல் அண்ணா 21. சிதம்பரனார்.

## தஞ்சாவூர் 66/11 கி.வோ. துணை மின் நிலையம்

தஞ்சாவூர் நகரில், மின்சாரம் தஞ்சாவூர் நகராட்சியால் விநியோகிக்கப்படுகிறது. இந்நகரில் தற்பொழுது 28,600 மின்நுகர்வோர் உள்ளனர். அவர்களின் மின் தேவை 9000 கே.வி.ஏ. ஆகும். 1994-95ம் ஆண்டில், தேவை 13,500 கே.வி.ஏ. அளவிற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் நகருக்கு மின்சாரம்; நகருக்கு சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து இரண்டு 11 கி.வோ. கம்பித் தொடர்களின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்குவதில் 28.8 விழுக்காடுகள் இழப்பு ஏற்படுவதுடன், மின் அழுத்தமும் சீராக இல்லை. மேற்கூறிய குறைகளை நீக்கும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தஞ்சாவூர் நகர எல்லைக்குள் ரூபாய் 133.17 இலட்சம் செலவில் ஒரு 66/11 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவ முடிவெடுத்துள்ளது. இந்த நிலையத்தில் இரண்டு 10,000 கே.வி.ஏ. 66/11 கி.வோ. மின் மாற்றிகள் நிறுவப்படும். இந்த மின் நிலையம் 1992ம் ஆண்டு இயக்கத்திற்கு வரும். இந்த நிலையத்தை அமைப்பதின் மூலம் தஞ்சாவூர் நகர மக்கள் மின் சக்தி பெறுவதில் பெரும் பயனடைவார்கள் என்பதும் தஞ்சாவூர் நகராட்சிக்கு ரூபாய் 43 இலட்சம் சேமிப்பு ஏற்படும் என்பதும் எல்லோருக்கும் மனநிறைவை அளிக்க கூடியதாக இருக்கும்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

பெரியார் மாவட்ட

# வளர்ச்சிப் பணிகள்

**பெரியார் மாவட்டத்தில் வேளாண்மை, சுயவேலை வாய்ப்பு, பட்டு வளர்ச்சி, கதர் உற்பத்தி, மாவட்டத் தொழில் மையம் ஆகியவற்றில் பெருமளவு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றை விளக்கிக் கூறுகிறது இக் கட்டுரை**

பெரியார் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு 7,870 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.245.945 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் தகுதியுள்ள நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1990-91-ஆம் ஆண்டில் 700 கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 735 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடித்துள்ளனர். 1991-92-ஆம் ஆண்டுக்கு 1,400 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிவுற்ற பிறகு தொடர்புடைய தொழில் நடத்த மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டிற்கு 1959 தொகுப்பு வீடுகள் அமைக்கவும், 63 கி.மீ. தார்ச் சாலைகள், 90 கி.மீ. கப்பிச் சாலைகள் அமைக்கவும், 79 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் அமைக்கவும், 22 பள்ளிக் கட்டடங்கள் அமைக்கவும், 22 சத்துணவு மையக் கட்டடங்கள் அமைக்கவும், பாலங்கள் குடிநீர்த் திட்டப் பணிகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைப் பணிகள், சமூகக் காடுகள், மற்றும் ஜீவன்தாரா கிணறுகள் அமைக்கவும், ரூ.846.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மேற்கொள்வதற்கான பணிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

### போலி குடும்ப அட்டைகள்

போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருப்பதைத் தடுக்கும் பொருட்டு, தணிக்கை மேற்கொண்டதில், இதுவரை 13,724 போலி குடும்பு அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டன.

வட்டத்திற்கு 65 விவசாயிகள் வீதம் இம்மாவட்டத்திலுள்ள 7 வட்டங்களிலும், சுமார் 455 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பற்றிய பயிற்சி இரண்டு நாட்கள் வழங்கப்படவுள்ளது. ஈரோடு வட்டத்தில் கதிரம்பட்டி, காரணாம்பாளையம், குமிளன் பரப்பு, குருக்கபாளையம், கந்தசாமி பாளையம் ஆகிய கிராமங்களிலும், பெருந்துறையில் நல்லாம்பட்டி, பசுவபட்டி, வெட்டயங்கிணறு, காஞ்சி கோயிலிலும், கோபியில் பொலவக் காளிப் பாளையம், செய்யாம் பாளையம், நஞ்சைத்துறையம் பாளையம், கோசனம் ஆகிய கிராமங்களிலும், சத்தியில் செண்பகப் புதூர், பெரியூர், அய்யன்சாலை, சிக்கரசம்பாளையம், தாராபுரத்தில் மூல்னூர் தளவாய்ப்பட்டினம், கொளத்துப்பாளையம், கோவிந்தாபுரம், காங்கேயத்தில் பரம்சேர்வழி, மரவபாளையம், நத்தக்காட்டுவலசு, வள்ளியரச்சல், பவானியில் பருவாச்சி, கவுந்தபாடி, வைரமங்கலம் ஆகிய கிராமங்களிலும் சுமார் 20 முதல் 40 எக்டேர் வரையிலான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படவுள்ளன. இத்திடலில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ரூ.100 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்கள் பாதி விலையில் வழங்கப்படுகின்றன. பயிற்சிக்கும் இக்கிராம விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள். பயிற்சிக்கான உதவித் தொகை ரூ.60, பயிர்ப் பாதுகாப்புப் பற்றிய புத்தகங்களுக்காக ரூ.40 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இப்பணிகளுக்கென ரூ.1.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பல்வேறு ஆயக்கட்டுப் பகுதிகளில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதையடுத்து, அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் நெல் விதை விற்பனையில் என்றுமில்லாத வேகம் காணப்பட்டுள்ளது. 400 மெ.டன் நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விதை விநியோகம் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் இதுவரை 610 மெ.டன் நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல, மானாவாரி விதைப்பில் தீவிரம் காரணமாக 150 மெ.டன் நிலக்கடலை விதைகளும், 100 டன் ஜிப்சம் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 19 கிராமங்களில் தலா 100 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மானாவாரி தொழில் நுட்பச் செயல் விளக்கத் திடல், விவசாயிகள் டிராக்டர் மூலம் கோடை உழவு செய்வதற்காக எக்டேருக்கு ரூ.200 வீதம், 1,416 எக்டேருக்குச் சுமார் ரூ.2.5 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.



### ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தில் சாதனைகள்

நெல் விதை வாங்கும் விவசாயிகளுக்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் மானிய உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 456 மெ.டன் நெல் விதைகள் 9,173 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கென ரூ.4.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. விதை நேர்த்தி மருந்து ஜிப்சம் உரம், பயிர்ப் பாதுகாப்புக் கருவி மற்றும் மருந்துகள் ஆகிய இனங்களுக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.14 இலட்சம் மானிய உதவியுடன் பயிர்ப் பாதுகாப்புக் கருவி, வேளாண் கருவிகள், களைக் கொல்லி மருந்துகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிற்சி ஆகியன இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 13,300 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய் வித்துப் பெருக்கத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் இதுவரை 376 டன் தரமான நிலக்கடலை விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.2 இலட்சம் மானிய உதவியுடன் தலா 50 எக்டேர் பரப்பில் பவானி, பெருந்துறை, கோபி, நம்பியூர், பவானிசாகர் ஆகிய வட்டாரங்களில் பெரு விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 120 விவசாயிகள் அமைத்துள்ள மர நாற்றுப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 3.5 இலட்சம் மரக் கன்றுகளும், அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 10,000 மரக் கன்றுகளுமாக மொத்தம் 3.6 இலட்சம் மரக் கன்றுகள் இப்போது இலவச விநியோகத்திற்காகத் தயார் நிலையில் உள்ளன.

ஏறத்தாழ 2 இலட்சம் நெட்டை ரகத் தென்னங்கன்றுகள் தற்போது பவானிசாகரில் உள்ள 'மாதில மாபெரும் தென்னை நாற்றுப் பண்ணையில்' விற்பனைக்காகத் தயார் நிலையில் உள்ளன.

### மாவட்டத் தொழில் மையம்

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்கு 400 நபர்களுக்குப் பதிலாக இதுவரை 285 நபர்களுக்கு ரூ.59.49 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 பேர் என நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 156 நபர்களுக்குக் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. புதிய சிறுதொழில் கூடங்கள் நிறுவும் திட்டத்தின்கீழ், 71 நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவும் திட்டத்தின்கீழ், 19 சிறுதொழில் பதிவு, குடிசைத் தொழில் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் பெரியார் மாவட்டம் உட்பட 10 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்திற்கென உலக வங்கி ரூ.41.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டு (1991-92-ஆம் ஆண்டு) மூன்றாம் ஆண்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரியார் மாவட்டத்தில் சமவெளிப் பகுதியில் 2118.10 ஏக்கரில் இறைவைச் சாகுபடியில் கீழ் மல்பரி பயிர் செய்து, 2,545 விவசாயிகள் பட்டு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டில் (1990-91) 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ஜூன், ஜூலைத் திங்களில் 209 நபர்களுக்கு ரூ.11.35 இலட்சம் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூ.11.34 இலட்சம் மதிப்புள்ள 0.61 ஆயிரம் மீட்டர் கதர் உற்பத்தியும், ரூ.2.33 இலட்சம் மதிப்புள்ள நூல் உற்பத்தியும், கதர் விற்பனை மூலம் ரூ.1.63 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனையும் செய்யப்பட்டது. இதன்மூலம் 1,259 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ரூ.2,05,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.44 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 71 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. ●

## அவர்கள் சொன்னார்கள்..

★ உலகத்திலே மிகவும் மலிவான பொருள் அன்புதான். வாங்குகின்றவனுக்கும், கொடுக்கின்றவனுக்கும் அது பன்மடங்கு மிகுதியான இலாபத்தைத் தரும்.

—இங்கர்சால்

★ ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்வது ஒழுக்கமுறையிலும், சமய முறையிலும் கடமையாகும். ஏனெனில், உடல்நலமே சமூக ஒழுக்க முறைகளுக்கும் அடிப்படையாவது. உடல் நலமில்லாதபோது, நாம் யாருக்கும் பயன்பட முடியாது.

—ஜான்ஸன்

★ ஒழுக்கத்தில் சிந்தனையில்லாத இளைஞன், வாழ்க்கையில் எது உண்மை, எது போலி என்று கண்டு கொள்ளாமல், எல்லாக் காரியங்களிலும் ஏமாற்றம் அடைவான்.

—டால்ஸ்டாய்

★ மகிழ்ச்சி, மிதமான உணவு, போதிய ஓய்வு - ஆகியவை மருத்துவரை வீட்டுக்குள் விடமாட்டா.

—லாங்ஃபெல்லோ

# நாகப்பட்டினம்

## ஒரு வரலாற்றுப் பின்னணி


**நடன. காசிநாதன்**
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை


தமிழகக் கடலோரப் பட்டினங்களில் ஒன்றாகத் திகழும் நாகப்பட்டினம் 'கடல் சூழ் நாகை' என்று பழங்காலம் தொட்டு வழங்கி வந்திருக்கிறது. இவ்வூர் 'நாகப்பட்டினம்' என்றும், 'நாகைக் காரோணம்' என்றும், 'நாகநகரம்' என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வூர் இறைவனை நாகர்கள் வழிபட்டதால் 'நாகை' என்று பெயர் பெற்றதென்று ஒரு கருத்து உண்டு. நாகராசனாகிய ஆதிசேடனால் இவ்வூர் இறைவன் வணங்கப் பெற்றமையால் 'நாகை' எனப் பெயர் பெற்றது என்று மற்றொரு கருத்தும் நிலவுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த தாலமி என்பார் நாகப்பட்டினத்தை 'நிக்கௌவா' என்று குறிப்பிட்டுள்ளார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தமிழகம் வருகை புரிந்த இட்சிங் என்பார்

நாடாட்சி கொடுப்பேனென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் விரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர் பெற்ற கதை கூறினார்' ஆதலால் நாகப்பட்டினத்தில் சோழர்கள் ஆட்சி செய்து இருக்கின்றனர் என்பது இவ்வுரையின் மூலம் தெரிய வருகிறது.

நாகப்பட்டினம் சங்க காலத்தில் காவிரிபூம்பட்டினத்திற்கு அடுத்த நிலையில் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கி இருத்தல் வேண்டும் என்பது நாகப்பட்டினத்தில் கீழ்த்திசை நாடுகளைச் சார்ந்த மாமன்னர்கள் புத்த விகாரம் அமைத்து வழிபட்டு வந்ததன் மூலம் தெரிகிறது. நாகப்பட்டினம் சமயப் பொறை மிகுந்த ஒரு திருத்தலமாக விளங்கியிருந்தது என்பது இங்கு அமைந்திருந்த பௌத்த விகாரங்கள் மூலமாகவும் இந்து சமயக் கோயில்கள்

உரை நூலை பாலி மொழியில் எழுதினார் என்றும், இங்கிருந்த 'நாகாநன' விகாரையில் 'மகாகா சபதோர்' தங்கி இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

சைவ சமயக் குரவருள் முதல் மூவரான அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்து ஈசனை வாயாரப் புகழ்ந்து பாடியிருப்பது தேவாரத் திருப்பதிகங்கள் மூலமாகத் தெரிய வருகிறது.

''மனைவி தாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்றம் என்றும்
வினையுளே விழுந்தழுந்தி
வேதனைக்கு இடமாகாதே
கனையுமா கடல் சூழ் நாகை மன்னு
காரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலா
நெஞ்சினீரே''

'னகவதனா' என்று நாகையைக் குறிப்பிட்டுள்ளார். போர்ச்சுக்கீசிய நாட்டைச் சார்ந்த மார்க்கோபோலோ என்பவர் நாகப்பட்டினத்தை 'பட்டன்' என்றும், ரசீதுத்தீன் என்பவர் 'மலிபட்டன்' என்றும் அழைத்துள்ளனர். தம்மசேத்தீ என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் இவ்வூர் 'நௌட்டபட்டணா' என்று குறிக்கப்பிட்டிருக்கிறது. பெரும்பாணாற்றுப்படையில் காணப்பெறும்

''பல்வேற்றிரையர் படர்இவர் ஆவர்''

என்ற வரிக்குப் பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் தம் உரையில் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேனென்ற பொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசுவுரிமையை எய்துவித்து

மூலமாகவும் தெரிய வருகிறது. இத்தலம் தொன்று தொட்டு பௌத்தர்களின் மிக முக்கிய நகரங்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

''உற்றவர்க் குறுப்பறுத் தெரியின்க
ணுய்த்தலையன்ன
தீமை செய்வோர்க்கு மொத்த
மனத்ததாய்
நற்றவர்க்கு இடைமாகின்றது
நாகையே''

என்று பௌத்தர்கள் இந்நகரைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இங்கு மௌரியப் பேரரசன் அசோகன் எடுப்பித்த 'பதாதிட்ட விகாரை' இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த விகாரையில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆச்சாரிய தர்மபாலர் தங்கி இருந்து 'நெட்டிபகரண்ட்டகதா' என்னும்

என்று அப்பர் பெருமான் இவ்வூர் இறைவனைப் பாடியுள்ளார். இந்நாகப்பட்டினம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலும் கடலை ஒட்டியே அமைந்திருந்தது என்பது 'கடல் சூழ் நாகை' என்ற தொடரால் தெளிவாகிறது. மேலும் மற்றொரு பாடலில் 'கற்றவர் பயிலும் நாகை' என்று அப்பர் பாடியிருப்பதால் இந்நாகப்பட்டினத்தில் கற்றறிந்த பெருமக்கள் பலரும் வாழ்ந்து இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

மற்றொரு பாடலில் ''கடிகமழ் சோலை சுலவு கடல் நாகை' என்றும் 'வங்க மலி கடல் நாகை' என்றும் கூறியிருப்பதால் மணம் வீசும் சோலைகள் சூழ்ந்த கடல் அருகேயுள்ள நாகப்பட்டினம் என்றும்; கப்பல்கள் நிறைந்த கடலை உடைய நாகப்பட்டினம் என்றும் இந்நாகப்பட்டினத்தின் சிறப்பை வியந்து பாராட்டியுள்ளார். கப்பல்கள் மலிந்திருந்தன என்று கூறப்பெற்றிருப்பது இவ்வூர் ஒரு சிறந்த வணிகத் தலமாகவும் விளங்கியிருந்தது என்பதைப்



புலப்படுத்துவதாக உள்ளது. இந்நகரில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அதிபத்தநாயனார் அவதரித்தார் என்றும் கூறப்படுகிறது.

கி.பி.720-இல் ப்ல்லவ மன்னன் இராசசிம்மன் காலத்தில் இந்நாகப்பட்டினத்தில் சீன அரசனின் வேண்டுகோளின்படி பௌத்த விகாரம் ஒன்று எழுப்பப்பட்டது. பிற்காலத்தில் அவ்விகாரைச் 'சீனா கோயில்' என்று வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது.

மார்க்கோபோலோ தம்முடைய பயண நூலில் நாகப்பட்டினத்தில் 'சீனா கோயில்' என்னும் பெயருள்ள ஒரு கோயில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப் பெரியாருள் ஒருவராகிய திருமங்கையாழ்வார் நாகப்பட்டினத்தில் உள்ள பௌத்த விகாரையில் இருந்த முழுவதும் பொன்னால் செய்யப்பட்டிருந்த புத்தர் உருவச் சிலையைக் கவர்ந்து கொண்டு போய், அதனை உருக்கி அப்பொன்னைக் கொண்டு திருவரங்கத் திருப்பதியில் திருமதில் எழுப்புதல் போன்ற திருத்தொண்டுகளைச் செய்தார் என்பது குருபரம்பரை சுபாவம் முதலிய வைணவ நூல்களினால் தெரிய வருகிறது.

கி.பி. 985 முதல் 1014 வரை சோழ நாட்டை ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்த நிலையில் அரசாட்சி செய்த மாமன்னன் இராசராசன் காலத்தில் நாகப்பட்டினத்தில் 'ஸ்ரீசைலேந்திர சூடாமணி விகாரை' என்னும் பௌத்த பள்ளி ஒன்று கட்டப்பட்டது. இப்பள்ளி சுபத்திரா தீவில் ஸ்ரீ விஜய என்னும் ரர்ஜ்யத்தையும் பர்மாவில் கடாரம் என்னும் ராஜ்யத்தையும் ஆண்ட ஸ்ரீமாற விஜயோதுங்கன் என்னும் அரசனின் வேண்டுகோளினை ஏற்று இராசராசன் ஆணை பிறப்பித்ததை யொட்டி கட்டப்பட்டது. இவ்விகாரை ஸ்ரீமாறவிஜயோதுங்கர்மனின் தந்தையான சூடாமணி என்பவன் பெயரால் கட்டப்பட்டதால் சூடாமணி விகாரை என்று பெயர் சூட்டப் பெற்றது. இவ்விகாரைக்கு 'இராசராசன் பெரும்பள்ளி' என்ற பெயரும் வழங்கப் பெற்றதாகத் தெரிய வருகிறது. இவ்விடத்திலேயே மற்றொரு விகாரை எழுப்பி அதற்கு 'இராஜேந்திர பெரும்பள்ளி' என்ற பெயரைக் கடாரத்தரசன் சூட்டினான் என்பதும் செப்புப் பட்டயத்தின் மூலம் அறிய முடிகிறது. இப்பள்ளிக்கு இராசராசன் சத்திரிய சிம்ம வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து ஆனைமங்கலம் என்ற ஊரைக் கொடையாக அளித்தான் என்று பெரிய லெய்டன் செப்பேட்டின் மூலமாகத் தெரிய வருகிறது. இராசராசன் அளித்த கொடையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் குலோத்துங்க சோழன் மற்றொரு செப்புப் பட்டயத்தையும் வெளியிட்டான். அச்செப்புப் பட்டயம் தற்போது சிறிய லெய்டன் செப்புப்பட்டயம் என்று வழங்கப்படுகிறது.

> ### இந்த மாவட்டத்தில்...
>
> **புதிதாக மலர்ந்துள்ள நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம், குடவாசல், மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி, மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைப் பூண்டி, வேதாரண்யம் ஆகிய 11 வட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.**
>
> **இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை 23,95,000 ஆகும். இம் மாவட்டத்தில் 19 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, சீர்காழி, மன்னார்குடி ஆகிய 5 நகராட்சிகள் உள்ளன. மொத்தம் 1,185 கிராமங்கள் இந்த மாவட்டத்தில் இருக்கும்.**
>
> **தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட இந்த மாவட்டத்தின் முதலாவது மாவட்ட ஆட்சித் தலைவராக திரு கே. ஸ்கந்தன் இ.ஆ.ப. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இவ்வூரில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் மிகவும் பழமையானது சோழ அரசன் முதலாம் இராசராசன் காலத்தவையே. இவன் காலக் கல்வெட்டுக்களில் இவ்வூர் பட்டினக் கூற்றத்து நாகப்பட்டினம் என்று குறிக்கப்படுகின்றது. இவனது மகனான முதலாம் இராசேந்திரனின் தொடக்கக் காலக் கல்வெட்டுகளிலும் நாகப்பட்டினம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்சியின் இறுதிக் காலத்தில் 'சோழகுல வல்லிப் பட்டினம்' என்று மட்டுமே வழங்கிப் பின் இரண்டாம் இராசராசன் காலத்தில் நாகப்பட்டினமாகிய சோழகுல வல்லிப்பட்டினம் என்று வழங்கிவந்துள்ளது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் ஸ்ரீ விஜய அரசனின் நிகரான் (பிரதிநிதி) ஏறன் சடையனாயன தேவரகண்ட ஆச்சார்யன் என்பான் பாவை விளக்கு, குறுக்கு விளக்கு, மட்ட விளக்கு போன்ற பல விளக்குகளால் ஒப்பனை செய்தான் என்றும், (161/1956-57) வெள்ளியால் செய்து எழுந்தருளச் செய்யப்பட்ட 'நாகை அழகர்க்கு' விலையிலா பச்சைக் கற்களாலும், மணி கற்களாலும் ஆன அணிகலன்களைக் கொடையளித்தான் என்றும் தெரிவிக்கின்றன.

மேலும் கிடாரத்தரையனின் (கடாரத் தரசன்) நிகராளி ஸ்ரீ குறுத்தன் கேசவனாகிய அகரலோகை என்பான் அர்த்தநாரி படிமத்தை எழுந்தருளச் செய்து, திருக்காரோணமுடையார்க்கு ஒவ்வொன்றும் 87.50 கழஞ்சுச் சீனப் பொன்னாலான அணிகலன்களையும், 60.75 கழஞ்சு உண்டிகைப் பொன்னாலான அணிகலனையும் கொடையளித்துள்ளான்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் சீனர்கள் வியாபாரத்தின் பொருட்டு வந்து தங்கி இருந்தார்கள் என்றும், இவ்வூர் புத்தப் பள்ளியில் சீனர்கள் ஒரு கல்வெட்டு எழுதி வைத்தார்கள் என்றும் தெரிய வருகிறது. கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுதப்பெற்ற தாலோ-இ- சிலியோ என்ற சீன நூலும், சீன மொழியில் எழுதப் பெற்ற கல்வெட்டு, நாகப்பட்டினம் பௌத்தப் பள்ளியில் இருந்ததாகக் கூறுகிறது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பர்மா தேசத்தில் ஹம்சபதி நாட்டை ஆண்ட ராமாபதிராசன் அனுப்பிய 11 பௌத்த பிட்சுகளும் சித்திரதூதன் என்ற தூதனும் இலங்கை சென்று தங்கள் பணியினை முடித்துக் கொண்டு மீண்டும் தங்கள் நாட்டிற்குக் கப்பலில் செல்கையில் கப்பல் புயலில் அகப்பட்டு சிதைந்து போக, [illegible] நாகப்பட்டினத்துக் கடற்கரையை அடைந்து உயிர் பிழைத்துள்ளனர் என்றும்; நாகப்பட்டினத்தில் "[illegible]" என்னும் பௌத்தப் பள்ளியில்

தங்கி இருந்தார்கள் என்றும், அப் பள்ளிக்கு அருகில் இருந்த சீன தேசக்குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த பள்ளியில் புத்த தேவரை வணங்கினார்கள் என்றும் பர்மா தேசத்துக் கல்யாணி நகரத்துக் கல்வெட்டு கூறுகிறது. இந்நிகழ்ச்சி 1474-ஆம் ஆண்டு நிகழ்வுற்றது.

கி.பி. 1725-ஆம் ஆண்டில் சீனா கோயில் என்னும் பெயருள்ள ஒரு கோயில் நாகப்பட்டினத்தில் இருந்ததாக வேலண்டின் எழுதி இருக்கிறார், அதேபோன்று நாகப்பட்டினத்திற்கு வடக்கே ஒன்று அல்லது இரண்டு கல் தொலைவில் 'புதுவெளிக்கோபுரம்' என்றும் 'சீனா கோயில்' என்றும் 'கருப்புச் கோயில்' என்றும் பெயருள்ள கோபுரம் இருந்தது என்றும், இக் கோபுரம் நாகப்பட்டினத்தில் ஓர் அடையாளமாகக் கடலில், தோன்றியது என்றும் இதனைத்தாம் நேரில் 1849-இல் ஆண்டில் கண்டதாகவும் சர் வால்டர் எலியட் எழுதியுள்ளார். இந்தக் கோபுரம் இருந்த இடத்தில் யேசுவின் பாதிரிமார் சர்ச் அமைத்து இருக்கிறார்கள். இக் கோபுரத்தை இடிப்பதற்கு 1867-இல் அரசாணை பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு அங்கிருந்த பழைய கோயிலை இடித்துவிட்டு புதிய சர்ச் அமைப்பதற்குத் தோண்டிய பொழுது ஐந்து சிறிய பௌத்த விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் நான்கு விக்கிரகங்கள் உலோகத்தினாலும் ஒன்று பளிங்கினாலும் செய்யப்பட்டுள்ளன. அவ்விக்கிரகங்களில் ஒன்று புத்தர் நின்று கொண்டு உபதேசம் செய்வது போல் அமைந்திருப்பது ஆகும். அந்நாள் ஆளுநர் நேபியர் பிரபு நாகைக்குச் சென்ற பொழுது அங்கிருந்த பாதிரிமார்கள் மேற்காணும் அச்சிலையை அவருக்குப் பரிசாக அளித்தது தெரிய வருகிறது அந்த விக்கிரகத்தில் கி.பி.11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்தில் 'சுவஸ்த ஸ்ரீ கமபண்டிதர் உய்ய கொண்ட நாயனார்' என்று எழுதியிருந்தது அறிய முடிகிறது. நாகப்பட்டினத்தில் தற்போதுள்ள 'புத்த கோட்டம்' என்னும் பெயருள்ள அக்கிரகாரம் பண்டைய பௌத்தக் கோயில் இருந்த இடமாக இருந்திருக்கும் என்றும், கோயில் அழிந்த பிறகு இந்த அக்கிரகாரம் தோன்றி இருக்க வேண்டும் என்றும் டாக்டர்




கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

நாகப்பட்டினத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட வேறு சில பௌத்த உருவச்சிலைகள் தற்போது சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**கவி காளமேகமும்-நாகையும்**

கவி ரத்தினம் என்று புலவர்களால் போற்றப்பட்டவர் கவி காளமேகம் ஆவார். இவர் தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் என்ற ஊரில் பிறந்தவர் என்பது கல்வெட்டு வழி தெரிய வருகிறது. இவர் தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்று அங்கு தங்கி, பாடல்கள் இயற்றும் தன்மை பெற்றவர். அவ்வூரினர் நன்கு உபசரித்தால் வாழ்த்துக் கவிதையும், சரியாக உபசரிக்கவில்லை என்றால் வசையும் பாடுவது இவரது வழக்கம்.

அவ்வாறு செல்லுகையில் தஞ்சை மாவட்டம் நாகைப் பட்டினத்துக்கும் சென்று அங்குள்ள 'நாகைக்காத்தான் சத்திரம்' என்ற உணவு வழங்கும் சத்திரத்தில் தங்கினார். இரவு நெடு நேரம் ஆகியும் சத்திரத்தார் அவருக்கு உணவு வழங்கவில்லை. கவி காளமேகத்திற்குப் பசி அதிகம் மேலிடவே, சிலேடையாக ஒரு பாடல் பாடினார்.

கத்துங்கடல் சூழ்நாகைக் காத்தான்தன்
சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும்-குத்தி
உலையிலிட ஊரடங்கும்;
ஒரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி
எழும்.

இப்பாடலை உணர்ந்த சத்திரத்தார், கவிஞர் தம் சத்திரம் மீது வசை பாடியதாக உணர்ந்து, பிறகு நிலைமையைக் கூறி விரைவில் உணவு படைத்தனர். அதன் பிறகு புலவர் அதே பாடலுக்கு, சிறந்த பொருள் படும்படி, உலைக்கொதிக்கும் நேரத்தில் எங்கிருப்பினும் அரிசி வந்து விடும். உணவை ஊரில் உள்ள அனைவரும் உண்டு பசி அடங்குவர். அன்னம் இலையிட்டுப் பார்த்தால் வெள்ளிக் கிண்ணம் போல் தூய வெளுப்புடன் காணப்படும் எனக் கூறியதும் பாடலின் சிலேடை நயத்தை அறிந்து அனைவரும் அக மகிழ்ந்தனர்.

நாகையில் டச்சு நாட்டுப் போர் வீரர்களின் கல்லறைகள் காணப் படுகின்றன. இவற்றின் அருகில் ஒரு சர்ச் இருந்திருக்கிறது. கி.பி.1758-இல் கோல்கோப் மற்றும் ஸ்க்வார்ட்ஸ் ஆகிய வெளிநாட்டார் இங்கு வருகை புரிந்து இங்கு வாழ்ந்து வந்த 200 ஜெர்மானியர்களுக்கு உபதேசம் செய்ததாகத் தெரிய வருகிறது.

மேற்காணும் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு பார்க்கையில் இந்நகரம் மிகப் பழங்காலந் தொட்டே சீரும் சிறப்பும் பெற்ற வணிகத் தலமாகவும், வழிபாட்டுத் தலமாகவும் கடற்கரையையொட்டி மிளிர்ந்திருக்கிறது என்பதையும் அறியலாம். அத்தகைய பெருமையையுடைய இந்நகர், 18.10.'91 அன்று காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரமாக மாண்புமிகு முதல்வரால் ஆக்கப்படுவது, தங்கத்தால் அமைக்கப்பட்ட விக்கிரத்துக்கு வைரக் கிரீடம் சூட்டுவது போன்றதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927




தமிழரசு



# இந்த இதழில்...


சென்னையில்
மேதகு குடியரசுத் தலைவர் ... 2

— புதுடில்லியில் நடந்த தேசிய
ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு முதல்வர் உரை ... 4

அறியாமை இருள் அகற்றிட
அரிய பணிகள் ... 7

கூட்டுறவால் கோடி நன்மை (கவிதை) ... 9

மகளிர் நலம் ... 11

சமுதாய வளத்துக்கு சமுதாயக் காடுகள் ... 13

தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு
உற்பத்தியாளர் இணையம் ... 15

தருமபுரி மாவட்ட
வளர்ச்சிப் பணிகள் ... 17

நீலப்புரட்சி ... 21

சேலம் அரசு அருங்காட்சியகம் ... 24

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 27

எயிட்ஸ் நோய் — ஓர் அறிவுரை ... 29

வெண்மைப் புரட்சியில் பால்வளத்துறை ... 33

இராமநாதபுரம் மாவட்டத்தில்
தொழில் வளர்ச்சி ... 37

பெரியார் மாவட்டத்தில் கூட்டுறவு ... 40.

மழைக்கால நோய்கள் ... 41

நானிலம் காத்த நேருவின்
நடுநிலைக் கொள்கை ... 45



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022
ஐப்பசித் திங்கள் - 30
மலர்:22 16-11-1991 இதழ்:10


38-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழாவினையொட்டி, கூட்டுறவு தொடர்பான கட்டுரைகள், கவிதைகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.



மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்கவேண்டும.

—தந்தை பெரியார்



கூட்டுறவு என்ற சொல்லில் 'கூட்டு', 'உறவு' என்று இரண்டு சொற்கள் அடங்கியுள்ளன. 'கூட்டு' மட்டும் என்றால் இலாபம் மட்டும் என்று தான் பொருள்படும். உறவு கூட்டுடன் சேர்ந்தால்தான், தோழமையின் அடிப்படையான இலாபமற்ற நோக்கம் தெளிவாகிறது.

—பேரறிஞர் அண்ணா



கூட்டுறவு என்பது மனிதனுக்கு மனிதன் தகுதியை உணர்வது மட்டுமல்ல-தரத்தை மட்டுமல்ல-அவர்களை மதிக்கக் கூடிய பணியைப் பெறுவது மட்டுமல்ல-தங்களுக்கு முடிவதை- பிறர் இயலாமையை எண்ணி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய அந்த எண்ணமே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை மூலதனமாகும்.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.




# சென்னையில் மேதகு குடியரசுத் தலைவர்

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தமது துணைவியாருடன் இரண்டு நாள் பயணமாக 9.11.91 அன்று காலை சென்னை வந்தார். சென்னை விமான நிலையத்தில் குடியரசுத் தலைவருக்குச்சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா, சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி ஆர்.முத்தையா, துணைத் தலைவர் பேராசிரியர் க.பொன்னுசாமி, அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் குடியரசுத் தலைவருக்கு மாலை அறிவித்து வரவேற்றனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குடியரசுத் தலைவருக்குப் பொன்னாடை போர்த்திச் சந்தன மாலை அணிவித்தார்.

விமான நிலைய வரவேற்புக்குப் பின் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஆளுநர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றார். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆளுநர் மாளிகைக்குச் சென்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

அன்று மாலை சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வைர விழாவினை, மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்,

''இப்போது மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் முதலிய நாடுகளின் வேகப்பந்து வீச்சாளர்களின் சவாலை இந்தியா எதிர் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தில் மேலும் அதிக வலுவூட்டப்பட வேண்டும். வளர்ந்து வரும் சவால்களைச் சந்திப்பதற்காக வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்குவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. எனவே, காலப்போக்கில் இந்தியாவிலும் வேகப்பந்து வீச்சாளர் அணி வரிசை உருவாகும்'' என்று நம்பிக்கை தெரிவித்தார். தமிழ்நாட்டில் கிரிக்கெட் விளையாட்டுக்காக எம்.ஏ. சிதம்பரம் ஆற்றிய தொண்டினை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பாராட்டிப் பேசினார்.

விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் தலைமையேற்றுப் பேசுகையில், 'டெஸ்ட்' போட்டியாக இருந்தாலும், ஒரு நாள் ஆட்டமாக இருந்தாலும் ஏராளமான வரவேற்பைப் பெறும் அளவுக்குக் கிரிக்கெட் இப்போது மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறது. சர்வதேசப் போட்டிகளை நடத்தும் அளவுக்கு விளையாட்டு வசதிகளைப் பெருக்கும் திட்டங்களுக்கு முதல்வர் ஆதரவு காட்டி வருகிறார்' என்று கூறினார்.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் வைரவிழா மலரை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டுப் பேசுகையில்,

''நான் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் என்பதை அறிவதில் உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும். கிரிக்கெட் விளையாட்டில் நம் நாட்டின் பெண்களிடம் ஏராளமான திறமை இருக்கிறது. இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். இந்தியக் கிரிக்கெட் அரங்கில் தமிழகம் பல ஆண்டுகளாகப் பெரும் பங்கு ஆற்றியுள்ளது. தமிழக வீரர்கள் கடுமையாக உழைத்து இந்திய அணியில் இடம் பெற்றுள்ளனர். விளையாட்டுத் துறையில் தகுதி வாய்ந்த இளைஞர்களைக் கண்டுபிடித்து, ஊக்கம் அளிக்கத் தமிழக அரசு ஆர்வம் கொண்டுள்ளது. மாநிலம் முழுவதும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்களின் உதவியுடன் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை முயன்று வருகிறது.

''விளையாட்டு அரங்கில் உன்னத நிலையை எட்ட விரும்பும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களின் விருப்பத்தை அரசு நிறைவேற்றி வைக்க முடியும் என நம்புகிறேன். விளையாட்டுத் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முன்னுக்குக் கொண்டுவரும் பணியை அரசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் போன்ற விளையாட்டு



**தமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகுமுறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.**

அமைப்புகளுக்குத் தமிழக அரசு ஆதரவு கொடுக்கும். அதே நேரத்தில் எந்த ஒரு திறமை வாய்ந்த வீரரோ, வீராங்கனையோ விளையாட்டுத் துறையில் முன்னேற்றம் காண, அரசு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும், ஊக்கத்தையும் அளிக்கும்'' என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், வைரவிழா மலரின் முதல் பிரதியை வெளியிட, அதை மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரும், இந்தியக் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் தலைவருமான திரு. மாதவ்ராவ் சிந்தியா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கிரிக்கெட் அரங்கில் புகழ்பெற்று விளங்கிய பழம் பெரும் வீரர்களான சி.ஆர்.பட்டாபிராமன், எம்.ஜே.கோபாலன், ஏ.ஜி.ராம்சிங், எஸ்.ஸ்ரீராமன் ஆகியோருக்கு ஆளுநர் நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

முன்னதாக, தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் திரு. ஆர்.பாலு அழகனன் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கச் செயலர் யு.பிரபாகர்ராவ் நன்றி கூறினார்.

தமது மூன்று நாள் தமிழ்நாடு பயணத்தை முடித்துக் கொண்டு குடியரசுத் தலைவர் அவர்கள் 10.11.'91 அன்று விமானப்படை தனி விமானம் மூலம் புதுடெல்லி புறப்பட்டுச் சென்றார்.

—நமது செய்தியாளர்





புதுடில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டம்

# மாண்புமிகு முதல்வர் உரை

நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானதொரு பொருள் பற்றி விவாதிக்க, நாம் சோதனையான இந்தக் காலகட்டத்தில் இங்கு கூடியிருப்பது மிகவும் பொருத்தமேயாகும். நம் நாட்டின் ஒருமைப்பாட்டையே பாதிக்கும் மத வெறிகளைத் தூண்டும் சக்தி படைத்த ஒரு பொருள் பற்றி விவாதிக்க குறுகிய காலத்தில், இந்த மாநாட்டைக் கூட்டிய இந்தியப் பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறேன். நான் பாபர் மசூதி - ராம ஜென்மபூமி விவகாரத்தையே குறிப்பிடுகிறேன்.

ராம ஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையைத் தனிமைப்படுத்திப் பார்க்கக் கூடாது. இந்த விஷயத்தை உத்திரபிரதேசத்திலுள்ள இரு இன மக்களின் பிரச்சினையாகவோ - வேறு எந்த வட மாநிலத்தின் பிரச்சினையாகவோ கருதக் கூடாது. இரு முக்கிய இன மக்களின் பிரதிநிதியாக இருக்கும் சில சுயநல அரசியல்வாதிகளிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினையாகவும் இதைக் கருத முடியாது. இதன் வரலாற்றையும், பல்லாண்டுக் கால வளர்ச்சியினையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. ஒரு இன மக்கள் வேறு இன மக்களுக்கு எதிராகத் தங்களின் உரிமையை நிலை நாட்டும் பிரச்சினையாகவும் இதை நாம் கருத முடியாது. நம் நாட்டின் உயிர்நாடியாக விளங்கும் தேசிய ஒருமைப்பாடு, சமூக அமைதி, நல்லெண்ணம், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ராம ஜென்மபூமி - பாபர் மசூதி பிரச்சினையை அணுக வேண்டும் என்பது என் பணிவான கருத்தாகும்.

இப்பிரச்சினையின் வரலாற்று விவரங்களுக்குள் நான் போகப் போவதில்லை. ஏனெனில் அது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் பணியாகும். நம் நாட்டின் வரலாறு எழுதப்பட்ட கடந்த கால பின்னணியின் காரணமாக முக்கிமான அம்சங்களில்கூட நம் வரலாற்று ஆசிரியர்கள் ஒன்றுபடவில்லை என்பதனையே நான் காண முடிகிறது. நம் நாட்டைச் சேர்ந்த இரு இன மக்கள் தங்களின் வரலாற்று உரிமையை நிலை நாட்டிட முற்படும்போது நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதே கேள்வி.

நமது அரசியல் நிர்ணய சட்டம் மதச்சார்பற்ற ஜனநாயகத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. அனைத்து மத வளர்ச்சிக்கும் சுதந்திரம் அளிப்பதில் புகழ் பெற்றது நம் நாடு என்பதும், நம் நாட்டு மதங்களும் இனங்களும் பண்பாட்டுப் பரிமாற்றங்களைச் செய்துகொண்டு சிறந்த நட்போடு வாழ்ந்து வந்துள்ளன என்பதும் உலகறிந்த உண்மைகள். அமைதி





உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத் தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது.

—அண்ணல் காந்தியடிகள்

யோடும், நல்லிணக்கத்தோடும் வாழ்ந்து வந்த சமூகச் சூழ்நிலைக்கு ஊறுவிளைத்த சோகச் சம்பவங்கள் அவ்வப்போது நம் சரித்திர ஏட்டில் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் அதை நாம் பெரிதுபடுத்தலாகாது. இந்த உணர்வோடு, ராம ஜென்மபூமி விவகாரத்தில் யாருக்கும் மற்றவரைவிட வெற்றி தோல்வி எனும் நிலை ஏற்படா வண்ணம், பார்த்துக் கொள்ள வேண்டும் என உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பிரச்சினையில் அரசியல் நுழையாமல் நாம் பார்த்துக் கொண்டால், இது பெரிதும் சாத்தியமே. அதாவது நம் அரசியல் நிலையைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் அணி சேர்வது கூடாது.

ராம ஜென்மபூமி - பாபர் மசூதி போன்ற மத, வரலாற்றுப் பிரச்சினைளை அரசியலால் மட்டும் தீர்க்க முடியாது. இதை அரசியல் மூலமே தீர்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் இந்நாட்டின் மேதைமையையும், பண்பாட்டினையும் திரட்டக் கூடிய மிக உன்னதமான அரசியல் வித்தகர்களால் மட்டுமே முடியும். இங்கே கூடியிருக்கும் தலைவர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்ளுவதென்னவென்றால், குறுகிய கண்ணோட்டம் நம்மை வெல்வதற்கு நாம் இடம் அளிக்காமல் நாட்டின் நலனை முன்னிறுத்தி, சிறந்த அரசியல் வித்தகர்களாக நாம் இப்பிரச்சினையை அணுக வேண்டும்.

ஒவ்வொரு மதமும், ஒவ்வொரு கலாச்சாரமும் அதன் வழியிலேயே சுதந்திரமாக வளர நாம் வழிவகுக்க வேண்டும். ஆனால் அவ்வளர்ச்சி அடுத்த மதத்தையோ கலாச்சாரத்தையோ அழிக்கக்கூடாது. மற்ற மதத்திற்கோ, கலாச்சாரத்திற்கோ ஆபத்தாக அமையக் கூடாது. உலகின் அனைத்துப் பெருஞ்சமயங்களும் உன்னத இலட்சியங்களான, பெருந்தன்மை, கருணை, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் தன்மை - மற்றவர்களின் கொள்கைகளைச் சகித்துக் கொள்ளும் தன்மை, ஆகியவற்றையே போதிக்கின்றன. உலகின் மாபெரும் இரு மதங்களான இந்து மதமும், இஸ்லாமும் இவ்வுயர்ந்த மரபுகளின் வழித்தோன்றல்களாகச் செம்மாந்து நிற்பவை. வரலாற்றைச் சரியாக புரிந்து கொள்ளாமல் கோவில்கள், மசூதிகள் ஆகியவற்றின் இடங்களைக் குறித்து மக்கள் சண்டை போடுவதைத் தவிர்ப்பது நமது கடமையாகும்.

இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானது என்பது எனக்குத் தெரியும். நீதிமன்றங்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன. ஆனால் சட்டங்களால் மட்டும் இது போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற தவறான எண்ணத்தில் நாம் இருந்துவிடக் கூடாது. நீதிமன்றங்களுக்குச் செல்வதின் மூலம் நாம் சற்றுக் கால அவகாசத்தைப் பெற்றுவிடலாம். நீதிமன்றங்களை எவ்வகையிலும் அவமதிக்கும் நோக்கம் எனக்கு இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இலட்சக்கணக்கான மக்கள் இது குறித்து



தமிழகத்தின் புதிய உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக
திரு. ஜி.விஸ்வநாதன் அவர்கள் 1.11.'91 அன்று ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்றார்.



முன்னாள் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்த நாளையொட்டி சென்னை கத்திப்பாராவிலுள்ள நேருவின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு. பீஷ்மநாரராயண்சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்தார்கள் (14.11.'91).

உணர்ச்சிக் கொந்தளிப்பில் உள்ளார்கள் என்பதும் உண்மையே. எனவே இந்தச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நாம் எடுக்கும் எந்த முடிவும் மக்களின் இறுதி ஒப்புதலைப் பெறுவதை நாம் உறுதிப்படுத்தவேண்டும்.

ஒரு கோவிலை உருவாக்கும் எண்ணத்தோடு உத்திரப்பிரதேச அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இங்கு ஒரு கோவில் வேண்டுமென்று இந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. முஸ்லீம் சகோதரர்களின் மனம் புண்படாத வண்ணம் உத்திரப்பிரதேச அரசும், மத்திய அரசும், ஏப்படி நடந்து கொள்ளப்போகின்றன. என்பதே இப்போதைய கேள்வி. இச்சூழ்நிலையில், இரு மதத் தலைவர்களும் ஒரு சுமுகமான சூழ்நிலையில் கூடிப் பேசினால், அரசியல் ரீதியாகவோ, நீதிமன்றங்கள் மூலமாகவோ எடுக்கப்படும் முடிவுகளைவிடச் சிறந்த முடிவுகளை எடுக்க இயலும் எனும் கருத்தை நான் வரவேற்கிறேன்.

பெரும்பாலும் இந்துக்கள் வாழும் நாடாக இந்தியா இருப்பினும், ஆண்டாண்டுக் காலமாக அனைத்து மதங்களையும் மதித்து, அவைகளை வளர அனுமதித்து, மத உணர்வுகள் தனிப்பட்ட நட்பு உறவுகளை பாதிக்காதவண்ணம் விளங்கி வந்துள்ளது. நம் முஸ்லீம் சகோதர்கள் இத்தன்மையைப் பாராட்டி, உத்திரப்பிரதேச இந்துக்களின் விருப்பங்களுக்கு வழிகோலுவார்கள் என நம்புகிறேன். இந்த இடத்தில் ஒரு முஸ்லீம் புனிதத் தலம் உள்ளது எனும் உண்மையை நாம் மதிக்கிறோம். அதுபோல் முஸ்லீம் சகோதரர்களும், இதனருகில் ஒரு கோவில் இருக்கலாம் எனும் நிலையை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஆலயமும் மசூதியும் அருகருகே ஆண்டுக்கணக்கில் இருந்து இன உணர்வுகளைத் தூண்டாத இடங்கள் இந்தியாவில் ஏற்கெனவே நூற்றுக்கணக்கில் உள்ளன. என்வேண்டுகோள் என்னவென்றால், பெரும்பான்மைக் கருத்து என்றோ, சிறுபான்மைக் கருத்து என்றோ, எந்த ஒரு கருத்தையும் ஏற்கவேண்டியது கட்டாயம் என்றோ, இதைக் கருதக் கூடாது எப்பதாகும்.

இப்பிரச்சினையை முழுமை யாகப் புரிந்து கொள்ளாமல், ஒ முடிவை நாம் மேற்கொண்டால் அது அகில இந்திய அளவில் இந்து மூஸ்லீம்களிடையே உள்ள உறவி பாதிப்பை ஏற்படுத்தும் என்பன என் உரையை நிறைவு செய்யும்மு நான் நினைவுபடுத்த விரும்ட கிறேன்.

எங்கள் கட்சியைப் பொறுத் மட்டில், சிறுபான்மையினரின் உரிமை களை மதித்து, சுதந்திரமாகவு உரியமுறையிலும் வழிபாடு செய்ய பெரும்பான்மையினருக்கு உள்ள உரிமைகளை ஒப்புக்கொண்டு மக்களின் ஆவல்களைப் பூர்த்தி செய்யும் எந்த முடிவுகளையு ஆதரிக்கும். ராம ஜென்மபூமியா பாபர் மசூதியா? என்பதல்ல விவாதம் ராம ஜென்மபூமியும் பாபர் மசூதி யும் என்பதுதான் விவாதம். அப் படித்தான் அது இருக்கவேண்டும்.

**(புதுடெல்லியில் 2.11.1991 அன்று நடந்த தேசிய ஒருமைப் பாட்டுக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)**



# அறியாமை இருள் அகற்றிட அரிய பணிகள்



இந்திய நாட்டில் 40 கோடிக்கும் மேற்பட்டோர் எழுத்தறிவற்றவராக உள்ளனர். - அறியாமை இருளில் சிக்கிக் கிடக்கும் நமது நாட்டில் அந்த இருளை அகற்றப் புதிய தீர்வு தேவைப்பட்டது. 1988-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதியன்று தோன்றிய தேசிய எழுத்தறிவு முனையம் (National Literacy Mission) ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

தேசிய எழுத்தறிவு முனையம் - எழுத்தறிவு தருவது ஒரு துறையின் (Department) பணி என்றிருந்த நிலையைச் சமுகத்தின் (Community) பணியாக மாற்றத் தீர்மானித்தது. தன்னார்வத்துடன் (Voluntary) புறப்படும் மக்கள் இயக்கங்கள் மூலமே கல்லாமை இருளைத் துரத்த முடியும் என்ற முடிவுக்கு வந்தது. 'மக்கள் மேன்மையானவர்கள்' கூட்டாகச் சேர்ந்து செய்யும் ஆக்கப் பணியில் கட்டாயம் தங்களை இணைத்துக் கொள்வார்கள்' என்ற நம்பிக்கை வழங்கியது.

தேசிய எழுத்தறிவு முனையத்தின் வழிகாட்டுதலின்படி இந்தியாவில் எர்ணாகுளம், பாண்டிச்சேரி, பர்த்வான் போன்ற பல இடங்களில் சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முயற்சிகளில் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். உற்சாகத்துடன் ஒத்துழைத்தனர். இப்போது இந்தியாவில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் எழுத்தறிவுப் பணி மக்கள் இயக்கமாக நடைபெற்று வருகிறது.

கேரளாவில் அது 'அட்சர கேரளம்' என்ற, பெயரில் நடைபெற்றது. அரியானாவில் 'நான்காவது பானிபட்' யுத்தம்' என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் அது 'அறிவொளி இயக்கம்' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது.

காமராசர் மாவட்டத்தில், எழுதப் படிக்கத் தெரியாத அனைத்து மக்களுக்கும் எழுத்தறிவு கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மத்திய-மாநில அரசுகளின் நிதி உதவிகளுடன் அறிவொளி இயக்கம் என்ற தலைப்பில் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்திலேயே காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு தற்பொழுது இத்திட்டம் நடைபெற்று வருகிறது.

இதற்காக மத்திய-மாநில அரசு இம்மாவட்டத்திற்கு மட்டும் ரூ.1.50 கோடி நிதி உதவி அளித்துள்ளது. இம்மாவட்டத்தில் 6.7.91 அன்று கணக்கெடுப்புப் பணி நடைபெற்று எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் மொத்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் உள்ளதாக ஒருநாள் கணக்கெடுப்பில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 14 ஆயிரம் தொண்டர்கள் கண்டறியப்பட்டனர். இவர்கள் அறிவொளி தொண்டர்கள் அறிவொளி ஆசிரியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

தற்போது ஆண்களைவிட, பெண்கள் அதிக அளவில் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருக்கின்ற காரணத்தால் பெண்கள் அதிக அளவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த ஜூலை 15-இல் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் விழாவின்போது மகளிர் மாநாடு விருதுநகரில் நடைபெற்றது. கலைப்பயணத் தொடக்கவிழா செப்டம்பர் 8-ஆம் தேதி அன்று அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. 14 கலைக்குழுவினர்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று தினமும் 4 நிகழ்ச்சிகள் வீதம் 1,064 கலை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர். கலைப்பயணத்தின்போது ஆயிரக் கணக்கானோர் ஆர்வத்துடன் முன் வந்து தங்களை எழுத்தறிவுத் தொண்டராகப் பதிவு செய்துள்ளனர். கலைப்பயண நிறைவு விழா 27-ஆம் தேதி சிவகாசியில் நடைபெற்றது. திரைப்பட இயக்குநர் திரு. பாரதிராஜா அவர்கள் இவ் விழாவில் கலந்துகொண்டு கலைப் பயணக் கலைஞர்களைப் பாராட்டிப் பரிசுகளை வழங்கி அனைவரையும் சிறப்பித்துப் பேசினார்.

பிரச்சாரக்கட்டம் பூர்த்தி அடைந்த பிறகு, அறிவொளித் திட்டத்தின் அடுத்தகட்டமான, கற்பிக்கும் பணி மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் அக்டோபர் 7-ஆம் தேதி விருதுநகரில் துவக்கப்பட்டது. விழாவிற்கு மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவரும்,



**மக்கள் ஒருமைப்பாட்டின் மறு உருவமாக விளங்குவது கூட்டுறவு. மக்களாட்சி மலர்ச்சியடையும்போது கூட்டுறவு உணர்வும் மலர்ச்சி அடைகிறது.**

மாவட்ட ஆட்சியருமான திரு கு.ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களால் அக்டோபர் 7-ஆம் தேதி இப்பணி விருதுநகரில் துவக்கப்பட்டது விழாவிற்கு மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவரும், மாவட்ட ஆட்சியருமான திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் குத்துவிளக்கேற்றி எழுத்தறிவுப் பணியைத் தொடங்கி வைத்தார். அறிவொளி இயக்கத் தொண்டர்களுக்கு வாழ்த்துக்கூறி கற்போருக்குக் கற்பிப்பதற்கான கருவிகளை வழங்கி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

இங்கு பேசிய அறிவொளி இயக்கத் தலைவரும் மற்றவர்களும் - இம்மாவட்டத்தில் 15 முதல் 35 வயது வரை எழுதுப்படிக்கத் தெரியாதவர்கள் 2 இலட்சத்து 40 ஆயிரம் உள்ளனர் என்றும், அவர்களுக்குக் கற்றுத்தர 24 ஆயிரம் தொண்டர்கள் உள்ளனர் என்றும் தெரிவித்தனர். இந்தத் தொண்டர்கள் எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி இந்த நாட்டுக்குத் தொண்டு செய்ய முன் வந்துள்ளனர். இந்தியத் துணைக் கண்டத்திலேயே எழுத்தறிவு பெற்றவர்கள் அதிகம் உள்ளவ்ரகள் என்ற அளவில் கேரளத்திற்கு அடுத்தபடியாகத் தமிழகம் 2-வது இடத்தைப் பெற்றுள்ளது. 63 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள தமிழகத்தில் புரட்சித்தலைவர் காலத்தில் தொடங்கப்பட்ட முறைசாராக் கல்விப் பயிற்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கான மத்திய அரசின் பரிசினைத் தமிழகம் தொடர்ந்து பெற்று வந்துள்ளது. ஒருவர் 10 பேருக்கு எழுத்தறிவிக்க வேண்டும் என்று இங்கு கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் 50 பேருக்கு எழுத்தறிவு தர முன் வரவேண்டும். அடுத்த ஆண்டு ஏப்ரல் 13-ந் தேதியுடன் முடிவடைந்த இம்மாவட்டம் முழுமையான எழுத்தறிவு பெற்றுவிட்டது என்று உலகுக்கு அறிவிக்கின்ற நாளில் அதிகப்பேருக்கு எழுத்தறிவு கற்றுத்தந்த சட்டமன்ற உறுப்பினருக்குத் தமிழக முதல்வர் பெயரில் பரிசு வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

'இந்த மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் இருப்பார்கள். கைநிறையச் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் வருவாய் தரக்கூடிய டியூசனுக்கு ஒதுக்கும் நேரத்தில் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் இந்த அறிவொளி இயக்கத்திற்கு ஒதுக்குங்கள். என்னிடம் நிறைய கோரிக்கைகள் தருகின்ற ஆசிரியர்களிடம் நான் கேட்கும் கோரிக்கை இது ஒன்று தான்.

2 இலட்சத்து 40 ஆயிரம் மக்களின் இதயங்களில் இடம்பெறப் போகின்ற 24 ஆயிரம் பேர்களுடன் ஆயிரம் ஆசிரியர்களாவது இடம் பெற மாட்டார்களா? என்ற எண்ணத்தால்தான் இதைக் கூறினேன். அரசு அலுவலர்களும் இந்த இயக்கத்தில் ஈடுபடவேண்டும். இந்த அரசியல் சார்பற்ற - மனமாச்சரியங்கள் இல்லாத இயக்கத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுகிறேன்'.

சிவகாசியில் - நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கனககோவிந்த ராஜுலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பாலகங்காதரன், திரு. சஞ்சய் ராமசாமி, திருமதி. மணிமேகலை, திரு. டி. சாத்தையா, அரசு தேர்வாணையரும், முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவருமான திரு. டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. ரங்கநாதன், முதியோர் கல்வி இயக்குநர் திரு. தெய்வமணி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முன்னதாக அறிவொளி இயக்கத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ச. மாடசாமி வரவேற்றார். திட்ட அலுவலர் பேராசிரியை பி.பி. திலகம் நன்றி கூறினார்.

முதலில் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்ற ஊர்வலம் நடைபெற்றது. அறிவொளி இயக்கத்தின் அவசியம் குறித்தும், எழுத்தறிவுத் தேவை குறித்தும் வாசகங்கள் அடங்கிய அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன. இறுதியில் அறிவொளி கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

**ஆர். பரதன்**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**காமராசர் மாவட்டம்**

## பல்லவன் பேருந்துகளில் முதியோருக்காக இடம் ஒதுக்கப்படும்!

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக, உலக வங்கி, பல்லவன் போக்குவரத்துக் கழகம் 550 பேருந்துகள் வரை வாங்குவதற்காக ஒப்பந்தப் புள்ளிகளை அனைத்து நாடுகளிலும் கேட்பதற்கு அனுமதி அளித்து உள்ளது. இதுபற்றி உடனடியாக, பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. 1992 மார்ச் மாதம் முதல் புதிய பேருந்துகள் இந்தத் திட்டத்தின் கீழ் பல்லவனுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் படி, பல்லவன் பேருந்துகளில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர், அமர்ந்து செல்வதற்காக இரண்டு இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படும். இது, இம்மாதம் 16-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.

ஏற்கெனவே பல்லவன் பேருந்துகளில் மகளிருக்காக 16 இருக்கைகளும், இரண்டு இருக்கைகள் உடல் ஊனமுற்றோருக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன. நடத்துநர் இருக்கைக்கு எதிராக உள்ள இரண்டு இருக்கைகள் முதியோர்களுக்காக ஒதுக்கப்படும். அந்த இருக்கைகளுக்கு மேல், ''முதியோர்களுக்காக'' என்று எழுதப்படும். முதியோர்கள் வேறு இருக்கைகள் இல்லாமல் நிற்க வேண்டி நேர்ந்தால், அவர்களுக்கு இந்த இரண்டு இடங்களும் கட்டாயமாக ஒதுக்கித் தரப்படும்.

# கூட்டுறவால் கோடி நன்மை!



வானம் நெருப்பு நிலம் நீர் வளியாம்-ஐம்
பூதத்தின் கூட்டுறவே-உலகாம்!
மானிடம் மன்னுயிர் யாவுமே-ஐம்பூதக்
கூட்டுற வென்னும் வகை அறிவோம்!

அருமைக் குழந்தையாய் நாமெல்லாம்-தோன்றிடல்
அன்னை தந்தையன்பின் கூட்டுறவே!
அரும்புகழ் சேர்க்கும் பதினாறு-பேறுகள்
கருவுள் திருஆறின் கூட்டுறவே!

உயிர்மெய் ஒருமித்த கூட்டுறவே-வாழும்
உயிர்கள் எனும்மெய்ப் பொருளறிவோம்!
உயிர்மெய் எழுத்தசை சீர்தளை-அடிதொடை
கவிஞனின் கூட்டுறவே பாடலென்பாம்!

அன்பும் அறனும்சேர் கூட்டுறவே-மாந்தர்
இல்வாழ்க்கைப் பண்பும் பயனும் என்பார்!
இன்பத்தை நல்கும் அறம்பொருள்-இரண்டின்
கூட்டுறவே நிறை வாழ்க்கை என்பார்!

ஒன்று பலவாய்ப் பெருகிட-ஒன்றுடன்
ஒன்றொன்றாய்க் கூட்டல் கணக்கியலாம்
நன்றும் பயனும் விளைத்திடும்-நன்னோக்கில்
நாம் ஒன்று கூடலே கூட்டுறவாம்!

நாட்டிலும் வீட்டிலும் மக்கள் நல்-வாழ்வினில்
நலவளம் சேர்ப்பது கூட்டுறவே!
கூட்டிக் கழித்துப் பெருக்கி-வகுத்திடில்
தரும் கோடி நன்மைகள் கூட்டுறவே!

நாட்டிலும் வீட்டிலும் நாளுக்கு-நாள்பல
நன்மை புரிவது கூட்டுறவே!
நாட்டின் உயர்வுக்கும் வீட்டின்-உயர்வுக்கும்
நல்லுற வாவதும் கூட்டுறவே!

**கவிஞர் முருகுவண்ணன்**

# அன்னியச் செலாவணி ஈட்டும்
# மணப்பாடு பெண் தொழிலாளர்
# பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குலசேகரப்பட்டினம், மணப்பாடு ஆகிய இரண்டு கிராமங்களில் பனை ஓலையினால் கைவினைப் பொருட்கள் செய்யும் பெண் தொழிலாளர்களின் நலனுக்காக 26.9.57-இல் மணப்பாடு பெண் தொழிலாளர் பனை ஓலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 1.10.57-இல் உற்பத்தி தொடங்கி தனது பணியை இச் சங்கம் செய்து வருகின்றது.

இச்சங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன், இவ்வூரில் உள்ள பெண்கள் பனை ஓலையினால் பிளாப் பெட்டி மற்றும் அடுக்குத் தையற் பெட்டிகள் செய்து வந்தனர். அரசு, இவ்வூரில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக, உதவித் தொகையுடன் கூடிய இரண்டு பயிற்சி நிலையங்களை நடத்தி 50 பெண்களுக்குப் பனை ஓலையினால் அழகிய தட்டுகள் மற்றும் உடைகள் செய்வதற்குப் பயிற்சி அளித்தனர். பின்னர் அப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறையின்கீழ் இருந்த இச்சங்கம், 1.10.77 முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது.

தொடக்கக் காலத்தில் 94 உறுப்பினர்களையும், ரூ.517 செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தையும் கொண்டிருந்த இச்சங்கம், 31.3.91 அன்று, 768 உறுப்பினர்களுடன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.89,405 ஆக உயர்ந்துள்ளது. இதில் அரசின் பங்கு ரூ.2,500. 1974-க்குப்பின் அரசு கடன் எதுவும் இன்றி நிதி நிலையில் தன்னிறைவு பெற்று தனது சொந்த மூலதனத்திலேயே இச்சங்கம் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கத்தின் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு பெற்று வரும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 503 ஆகும்.

தொடக்கத்திலிருந்து 1971-72 வரை தனது உற்பத்திச்சரக்குகளைத் தனியார் வியாபாரிகளிடம் விற்பனை செய்து வந்தது. இதனால் சங்கத்திற்குச் சொற்ப லாபமே கிடைத்து வந்தது. 1972-73-லிருந்து சங்கமானது தனது தயாரிப்புகளை நேரடியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ஆண்டுதோறும் ரூ.1 இலட்சம் முதல் ரூ.2 இலட்சம் வரை தாய் நாட்டிற்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியை ஈட்டி வரும் சங்கமாகச் செயல்பட்டு வருகின்றது.



## 38-வது இந்தியக் கூட்டுறவு வார விழா

38-வது இந்தியக் கூட்டுறவு வார விழா நவம்பர்த் திங்கள் 14 முதல் 20 வரை நடைபெறும். பின்வரும் தலைப்புகளில் ஒவ்வொரு நாளும் விழா நடைபெறும்.

14.11.91: கூட்டுறவு மக்களாட்சி முறை

15.11.91: கூட்டுறவு நிதியும் வறுமை ஒழிப்பும்

16.11.91: கூட்டுறவும் சுற்றுச் சூழலும்.

17.11.91: கூட்டுறவு விற்பனையும் நுகர்வோரும்.

18.11.91: கூட்டுறவு முறையில் பதனிடும் அமைப்புகள்

19.11.91: கூட்டுறவில் மகளிர் மற்றும் இளைஞர்

20.11.91: நகரக் கூட்டுறவுகளும் வீட்டுவசதியும்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு மற்றும் கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையாளர் அலுவலகம் இவர்களின் முழு மானிய உதவியின் கீழ் 6 மாதம் மற்றும் ஓராண்டுக் காலப் பனை ஓலைப் பயிற்சிகள், சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அளித்து தரம் உள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

ஆண்டிற்கு ரூ.300-க்குக் குறையாமல் பொருட்கள் செய்து சங்கத்திற்கு அளிக்கும் உறுப்பினர்களுக்கு சங்கத்தின் ஏற்றுமதி ஊக்குவிப்பு மானியத்திலிருந்து பாத்திரம் ஒன்றும் அவர்களின் குழந்தைகளுக்கு பிளஸ் 2 வரை புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. உறுப்பினர்களுக்கு அவர்கள் செய்து கொடுத்த பொருட்களின் மதிப்பில் 25 சதவிகிதம் ஊக்குவிப்புத் தொகையும் 20 சதவிகிதம் போனசும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வளவு சிறப்புடன் செயல் புரியும் இச்சங்கம், 1981-82-லிருந்து மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக தேர்வு செய்யப்பட்டுத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கேடயம் வழங்கப்பட்டு வருகின்றது.



# மகளிர் நலம்

திருமதி தங்கம் சங்கரநாராயணன் இ.ஆ.ப.,
இயக்குநர், சமூக நலத்துறை.

தங்கள் குடும்பத்திற்குக் கூடுதல் ருமானம் கிடைக்கப்பெறும் பாருட்டு வறுமைக்கோட்டின் கீழ் ாழும் மகளிருக்கு வேலைவாய்ப்பு ல்க வேண்டி 1987-88, 1988-89 ற்றும் 1990-91-ஆம் ஆண்டு ளில் பல மகளிர் மேம்பாட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வக்கப்பட்டன. தற்பொழுது இம் களிர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் அனைத்தும், அரசுக்கும் அரசுத் றையைச் சார்ந்த நிறுவனங்களுக்தும் வினியோகம் செய்யப்படுவதால் இத்திட்டங்கள் அனைத்தும் அரசு அமல்படுத்தும் திட்டங்களாகவே இத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றன.

**தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

இத்துறையில் 1987-88-ஆம் ஆண்டில் 13 தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இருந்தன. பிறகு அதே ஆண்டில் 16 புதிய தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அத்துடன் 43 மகளிர் தொழிற் கூட்டுறவுத் தையற் சங்கங்கள், தொழில் வணிகத் துறையிடமிருந்து இத்துறைக்கு மாற்றப்பட்டன. 1989-90-இல் மேலும் 3 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தற்சமயம் மொத்தத்தில் 74 மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன.

**காலணி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு அரசு இலவசக் காலணிகள் வழங்கும் பொருட்டு அக்காலணிகளைத் தயாரிப்பதற்காகச் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 39 மகளிர் காலணிக் கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இரண்டாயிரம் ஆதிதிராவிடர் மகளிர்க்கு இச்சங்கம் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.—காலணிகளைத் தயாரிப்பதற்குச் சங்க உறுப்பினர் அனைவருக்கும் ஒரு மாதக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக் காலத்தில் மகளிர் ஒவ்வொருவருக்கும் ரூ.200 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. காலணிகளைத் தயாரிப்பதற்காக ரூ.250 மதிப்புள்ள கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு மகளிர்க்கும் இலவசமாக அரசால் வழங்கப்பட்டுள்ளன. இம்மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் 1987-88 மற்றும் 1988- 89-ஆம் ஆண்டுகளில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 11.64 இலட்சம் இணை காலணிகளைத் தயாரித்து கல்வித் துறைக்கு வழங்கியுள்ளன. மகளிர்க்குக் கூலியாகவும் காலணி கூட்டுறவுச் சங்கங்களுக்கு சேவைக் கட்டணமாகவும் ரூ.40 இலட்சம் 1987-88- ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு உள்ளது. அரசுக்குத் தேவையான காலணிகள் தயாரிப்பதோடு மட்டுமின்றிப் பிற காலணிகளைத் தயார் செய்வதற்கும் மகளிர் காலணி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குச் செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது. பள்ளி மாணவ மாணவியருக்குச் சீருடை வழங்குவது தவிர கிராமப்புறத்தில் உள்ள ஏழை மகளிருக்கு 1988-89-ஆம் ஆண்டில் இத்துறையால் ரூ.3.27 இலட்சம் இணை காலணிகள் தயாரிக்கப்பட்டன. 1988-89-ஆம் ஆண்டில் ரூ.11.45 இலட்சம் கூலியாகப் பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் முதல் கட்டத்தில் 3 இலட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்டன. அதற்காக ரூ.10.50 இலட்சம் கூலியாகவும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் 42,005 காலணிகள் தயாரிக்கப்பட்டு ரூ.1,47,017.50 கூலியாகவும் சேவைக் கட்டணமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 1990- 91-ஆம் ஆண்டிற்கு இத்துறை 6.00 இலட்சம் காலணிகள் தயாரித்து வழங்க வேண்டும். அதற்காக அரசு கூலிக்காகவும் சேவைக் கட்டணத்திற்காகவும் ரூ.24 இலட்சம் வழங்கியுள்ளது.

**சமூக நலத்துறையில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மகளிருக்கு - குறிப்பாக விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் ஊனமுற்ற மகளிருக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.**

**இலவசச் சீருடை தைக்கும் பணியின் மூலம் 20,000 மகளிருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. மூன்று கோடியே எண்பத்தேழு இலட்சம் ரூபாய் தையற் கூலியாக வழங்கப்படுகிறது.**

**1990-91-ஆம் ஆண்டு 6 இலட்சம் காலணிகள் தயாரிக்கப்பட்டன. அதற்காகக் கூலியாகவும் சேவைக் கட்டணத்திற்காகவும் அரசு ரூ.24 இலட்சம் வழங்கியுள்ளது.**

பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு இலவசக் காலணி வழங்கு திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலு தொடர்கிறது. இத்திட்டத்தின் கீ 1991-92-ஆம் ஆண்டிற்கு இ துறை 3.00 இலட்சம் காலணிக

## தமிழகத்தில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள்

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்கள் இயக்கம் கூட்டுறவு. இதில் இன, மொழி, சமய வேறுபாடின்றி அனைவரும் சேர்ந்து பயன் பெறலாம்.

வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கும் மகளிருடைய முன்னேற்றத்திற்கும் கூட்டுறவு நிறுவனங்கள் கைகொடுத்து உதவுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் 30 விழுக்காடு மகளிர் உறுப்பினராகச் சேரவேண்டுமென்பது அரசின் குறிக்கோள். மகளிர் மேம்பாட்டிற்காகவும் சுயவேலைவாய்ப்புப் பெறவும், ஆதரவற்ற மகளிருக்கு வாழ்வு தரவும் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவுகின்றன. தமிழகத்தில் மொத்தம் 74 மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், சமூகநலத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவியர் மற்றும் பிற்படடோர் நல இயக்ககக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பயிலும் மாணவ மாணவியர் ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளை இந்த 74 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தயாரித்து வழங்குகின்றன.

கடந்த ஆண்டில் (1990-91) இச்சங்கங்கள் மூலமும் சில தொண்டு நிறுவனங்கள் மூலமும் சுமார் 64 இலட்சம் சீருடைகள் தயாரிக்கப்பட்டுப் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. சீருடை தைக்கும் பணியின் மூலம், 20 ஆயிரம் மகளிர் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். சுமார் ரூ.3.87 கோடி அளவிற்குத் தையல் கூலி வழங்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு மகளிர் உறுப்பினரும் ஏறக்குறைய மாதம் ஒன்றுக்கு ரூ.400 முதல் ரூ.500 வரை குடும்பத்திற்குத் தேவையான கூடுதல் வருமானம் பெறமுடிகிறது. மேலும், காவல்துறை மகளிர் தங்கள் குடும்பத்திற்குத் தேவையான வருமானம் பெறுவதற்கு வசதியாக அவர்களுக்கென்றே தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன.

தயாரிக்கவேண்டும்.

### மகளிர் எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

1979 முதல் 1981 வரையிலான ஆண்டுகளில் 15 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் 2 சங்கங்கள் சரிவர வேலை செய்யாததால் அவைகள் கலைக்கப்பட்டன. 1987-88 மற்றும் 1988-89-ஆம் ஆண்டுகளில் மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வியாபாரத்தை மேம்பாடு செய்யும் பொருட்டு 7 சங்கங்களுக்கு அச்சு இயந்திரங்களும், 13 சங்கங்களுக்கு இரு கோடிடும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. 12 சங்கங்களுக்குக் காகித உறை தயாரிக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கும் ஆணைகள் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டன., ஏறக்குறைய 700 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச்சங்கங்களில் உறுப்பினராக உள்ளனர்.

### மகளிர் கயிறு பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

1981-ஆம் ஆண்டில் கயிறு மற்றும் கயிறு சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இத்துறையின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நல்லூரில் தொடங்கப்பட்டது. இச்சங்கம் உற்பத்தி நிலையமாகவும், மகளிருக்குப் பயிற்சி அளிக்கும் நிலையமாகவும், கயிறு தயாரிப்பதில் பயிற்சி அளித்து வருகிறது. இது தவிர 75 மகளிர்க்கு முறையாக வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

### சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

ஏற்கெனவே இத்துறையின் கீழ் இயங்கும் இரண்டு மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்களோடு 19 சாக்குக் கட்டி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 1988-89-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இம்மகளிர் சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரிக்கும் சாக்குக் கட்டிகள் அனைத்தையும் கல்வித் துறையினர் எடுத்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. 20 கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. சுமார் 1,150 மகளிர்க்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

### இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்

1988-89-ஆம் ஆண்டில் 22 மகளிர் இணை உணவு தயாரிக்கும் மகளிர் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. சுமார் 1,650 மகளிர்க்கு ஒரு வாரக் காலம் இணை உணவு தயாரிப்பதில் பயிற்சி அளிக்கப்பட்டது. உதவித் தொகையாக ரூ.50 இம்மகளிருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### திரவச் சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

சென்னையை அடுத்த நாராயணபுரத்தில் திரவச் சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இக்கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாடு சத்துணவு மையங்களிலுள்ள பாத்திரங்களைச் சுத்தம் செய்வதற்குத் தேவையான திரவ சோப்பு மற்றும் சோப்புத் தூள்களை விநியோகம் செய்து வருகிறது.

இவற்றின் மூலம் இச்சங்கம் சுமார் 27 மகளிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்துவருகிறது.

சமூக நலத்துறையில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் மகளிருக்கு-குறிப்பாக விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர் மற்றும் ஊனமுற்ற மகளிருக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.






பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் அதிகப் பரப்பினை வனப்பரப்பின்கீழ் கொண்டு வர, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### சிடா உதவி பெறும் தமிழ்நாடு சமூகக்காடுகள் திட்டம்

மாநிலத்தில் சமூகக்காடுகளை மிக அதிகப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து சிடா உதவியுடன் 1981-இல் சமூகக்காடுகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பெரிய அளவில் காடுகள் வளர்ப்பது இதனால் கிராமப்புறங்களில் விறகு தடைபடாமல் கிடைக்கவும், மூங்கில் சிறுமரம், தீவனம், புல், பழம் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காடுபடு சிறுபொருள் ஆகியவை கிராமத்து மக்களுக்கு வேண்டிய வரை கிடைக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டும், அன்றாடத் தேவைக்காக விறகுகள் சிறுமரங்கள் மற்றும் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்கள் முதலியன கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டும், கண்மாய் உள்வாய்த் தோட்டங்கள் பெரிய அளவில் எழுப்பப்படுகின்றன. இத்தோட்டங்கள் எழுப்பப்படுவதால் விவசாயப் பணியாளர்கட்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெற்று, தங்களது பொருளாதார நிலையினை உயர்த்திக் கொள்ள உதவுகின்றது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ், 1981-82 முதல் 1990-91 வரை சுமார் 12,500 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இக்கண்மாய்களில் எழுப்பப்படும் மரங்கள் பத்தாண்டுக்கு ஒரு முறை சுழற்சிமுறையில் வெட்டப்பட்டு, கிடைக்கும் வருவாயில் 50 சதவிகிதம் பங்குத் தொகையாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. 1990-91 முதல் பங்குத் தொகை 60 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1989-90 முடிய ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்ட பங்குத்தொகை 17.482 இலட்சம் ஆகும். 1990-91-இல் கிடைத்த வருவாயில் ஊராட்சிப் பங்கு மட்டும் சுமார் ரூ.33 இலட்சமாகும். 1991-92-இல் இவ்வாறு கிடைக்கும் ஊராட்சி வருமானம் சுமார் ரூ.60 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பங்குத் தொகையினைக் கொண்டு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் மேம்பாட்டுத் திட்டங்களுக்குச் செலவு செய்ய வழிவகை செய்கிறது. நடப்பு ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் சுமார் 560 எக்டேர் பரப்பில் தோட்டங்கள் உற்பத்தி செய்யப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

> **தமிழ்நாட்டில், சமூகக் காடுகளை மிகவும் அதிகப் படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து, சிடா உதவியுடன் 1981-இல் சமூகக்காடுகள் திட்டம் தொடங்கப்பட்டது.**
>
> **பெரிய அளவில் காடுகள் வளர்ப்பது, இதனால் கிராமப்புறங்களில் விறகு தடைபடாமல் கிடைக்கவும், மூங்கில் சிறுமரம், தீவனம், புல், பழம், எண்ணெய் வித்துக்கள், காடுபடு சிறு பொருள் ஆகியவை கிராமத்து மக்களுக்கு வேண்டிய வரை கிடைக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.**

### புறம்போக்கு நிலத் தோட்டங்கள்

இதுவரையில் இம்மாவட்டத்தில் 300 எக்டேர் பரப்பளவில் புளியந் தோட்டங்கள் எழுப்பப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. ஊராட்சிகளின் வேண்டுகோளின்படி இவை ஏழு ஆண்டுகள் வரை வனத்துறையால் பராமரிக்கப்பட்டு, பின்பு சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்பட உள்ளன. இதில் கிடைக்கும் வருமானம் ஊராட்சிகளுக்கே சேரும்.

### சாலை ஓரத் தோட்டங்கள்

சாலையோரத்தில் இரு மருங்கிலும் நிழல்தரும் மரங்கள் நடவு செய்யப்படுவதால் சாலைப் பயணிகள் இனிய பயணத்தை மேற்கொள்ள வழிவகை செய்கின்றன. இப்பணியிலும் வேலைவாய்ப்புகள் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் வறுமைக் கோட்டிலிருந்து, விடுபடும் அளவிற்கு அளிக்கப்படுகின்றன. இதுவரையில் சமூக வனவியல் கோட்டம், சிவகங்கை மூலமாகச் சுமார் 450 கி.மீ. நீளத்தில் சாலையோரத் தோட்டங்கள் வெற்றிகரமாக எழுப்பப்பட்டுள்ளன.

### விவசாய நாற்றங்கால் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வனத்துறையின் மூலம் எழுப்பப்படும் தோட்

டங்களுக்குத் தேவையான நாற்றுகளை சிறு விவசாயிகள் மூலம் உற்பத்தி செய்து அவற்றைத் தோட்டம் எழுப்பிடப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாயிகள் இந்த நாற்றுக்களை எழுப்புவதற்கு வேண்டிய எல்லாவிதமான உதவிகளும் செய்யப்படுகின்றன. நிலமற்ற ஏழை விவசாயிகளும் இந்தத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இடம் கிடைக்கச் செய்வதில் உதவி செய்தல் அல்லது வனத்துறை நாற்றங்காலிலேயே அவர்களுக்கு ஓர் இடத்தை ஒதுக்கிக் கொடுத்து நாற்றங்கால் எழுப்பிட உதவி செய்யப் படுகின்றத. இதில் ஈடுபடும் விவசாயிகள் இதை ஓர் பகுதி நேரப் பணியாகச் செய்து அதில் லாபம் பெறுகின்றனர். நாற்றங்கால் எழுப்ப நிர்ணயிக்கப்பட்ட தொகை அவர்கள் பெயரிலேயே காசோலையாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரையில் (1988 முதல் 1990 வரை) ரூ.32 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் இதுவரை சுமார் ரூ.2.00 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

### இடைப்படு காடுகள் திட்டம்

இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் காப்புக் காடுகள் மட்டுமல்லாமல், காப்புக் காடுகளை ஒட்டியுள்ள அரசுக்குச் சொந்தமான பல்வகைப்பட்ட நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தைப் பொருத்தவரை உசிலமலை மற்றும் மாமலை என்ற இரண்டு காப்புக் காடுகள் தேர்வு செய்யப் பட்டு 1989 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுமார் 100 எக்டர் பரப்பில் தோட்டம் எழுப்பபப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில், 150 எக்டேர் காப்புக்காடுகள் இரண்டு இடங்களிலும் தேர்வு செய்யப்பட்டு சுமார் ரூ.10 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீரை முன்னேற்றமடையச் செய்யும் வகையில் காப்புக்காடு மற்றும் அதன் அருகாமையில் உள்ள தனியார் நிலங்களில் மண் அரிமானத்தைத் தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றியுள்ள கிராம மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்குமாறு திட்டம் செயல் படுத்தப்படுகின்றது. அருகிலுள்ள மக்களின் விறகுத் தேவை, சிறு மரங்களின் தேவை, பசுந்தழைத் தேவை மற்றும் கால்நடைகளுக்குத் தீவனத்தேவை போன்றவற்றைக் கணக்கில் கொண்டு அவற்றை முன்னேற்றும் முகமாகத் திட்டம் செயல் படுகின்றது. அருகிலுள்ள கிராம மக்களுக்கு இலவசமாகப் பழக் கன்றுகள் தீவனக்கன்றுகள் போன்றவை வழங்கப்படுகின்றன. நடப்பு 1991-92-ஆம் ஆண்டில் சிடா திட்டப் பணிகளுக்கு ரூ.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், சிவகங்கை சமூக வனவியல் கோட்டத்தால் இத்திட்டம் 1988-89 முதல் செயல் படுத்தப்பட்டு வரப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் கண்மாய் உள்வாய்த் தோட்டம் சுமார் 600 எக்டேர் பரப்பிலும், புளியன் தோட்டம் சுமார் 200 எக்டேர் பரப்பிலும், சாலை ஓரத் தோட்டம் சுமார் 140 கிலோமீட்டர் நீளத்திலும் தோட்டங்கள் எழுப்பப் பட்டுள்ளன. நடப்பு 1991-92-ஆம் ஆண்டில், ரூ.15.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன.

தேசீய வனக்கொள்கையின்படி, மொத்தப் புவியியல் பரப்பில் 33 சதவிகிதம் வனப்பரப்பின் கீழ் இருந்திடல் வேண்டும். ஆனால் இம் மாவட்டத்தில் மொத்த பரப்பான 4.04 இலட்சம் எக்டேரில் வனப் பரப்பு 18,136 எக்டேர் மட்டுமே. அதாவது 4.49 சதவிகிதம் மட்டுமே வனப்பரப்பில் உள்ளது. எனவே, அதிகப்படியான பரப்பினை வனப் பரப்பின் கீழ் கொண்டுவருவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சிவகங்கை சமூகவனவியல் கோட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் அதிகப் பரப்பினை வனப்பரப்பின் கீழே கொண்டு வந்திட தனது சீரிய பணியினைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

## தேசிய ஒருமைப்பாட்டு விழாவில் தமிழகக் கலைஞர்களுக்கு முதல் பரிசு

தேசிய ஒருமைப்பாட்டினை விளக்கும் ''பூல்-வாலோங்கி-சாயர்'' எனும் மலர்ப் பேரணி விழா ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் டெல்லியில் நடத்தப்படுகிறது. இவ்விழாவின் தலைமைப் புரவலராக மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரும், புரவலராக டெல்லி துணை நிலை ஆளுநரும் இருந்து வருகிறார்கள்.

அனைத்து மாநிலங்களில் இருந்தும் அரசால் அனுப்பப்படும் நடனக் குழுக்கள் அவ்விழாவில் கலந்துகொண்டு தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் கிராமிய நிகழ்ச்சியினை நடத்தி இவ்விழாவைச் சிறப்பிக்கின்றன. இந்த ஆண்டு, செய்தி சுற்றுலாத்துறையின் மூலம் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட கரகம், காவடி, நடனக் குழுக்கள் விழாவில் கலந்துகொண்டு, அகில இந்திய அளவிலான முதல் பரிசைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.





# தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம்

காஞ்சிபுரத்தில் உள்ள, தமிழ்நாடு கூட்டுறவுப் பட்டு உற்பத்தியாளர் இணையம், தனது உறுப்பினர்களுக்குத் தேவையான கச்சாப்பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டு நூலினை கொள்முதல் செய்து விநியோகித்து வருகின்றது.

இணையத்திற்குக் காஞ்சிபுரம், ஆரணி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, கும்பகோணம் ஆகிய ஆறு இடங்களில் கிளைகள் உள்ளன.

இணையம் தனது உறுப்பினர்களுக்குத் தேவையான கச்சாப் பட்டினை, காஞ்சியிலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்தும் முறுக்கேற்றிய பட்டு நூலினை அசோசியேட் உறுப்பினர்கள், பட்டு விவசாயிகள், முறுக்கேற்றுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்தும், கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்தான், இணையத்தில் அதிக அளவில் பட்டுநூலினை வாங்கி வியாபாரம் செய்து வருகின்றன.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி இணையத்திற்கு ரூ.100 இலட்சம் காசுக்கடன் அனுமதித்து, இணையம் அந்தக் காசுக்கடனில் அன்றாடம் வரவு செலவு செய்து வருகின்றது. இது தவிர, இணையத்திற்குத் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம், புதுடில்லி 1989-இல் ரூ.47 இலட்சம், 14 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய பங்கு மூலதனமாகத் தமிழக அரசு மூலம் வழங்கியுள்ளது. மேற்படி தொகை கிடைத்ததால் இணையத்தின் கொள்முதல் மற்றும் விற்பனை மிக அதிக அளவில் முன்னேறியது.

1989-90-ஆம் ஆண்டிற்கான அரசு குறியீட்டால் 1,65,000 கிலோ கொள்முதல் மற்றும் விற்பனைக்கு இணையம் கொள்முதல் மற்றும் விற்பனையில் முறையே 2,59,000 கிலோ மற்றும், 2,58,000 கிலோ அடைந்துள்ளது. இந்த மகத்தான முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, புதுடில்லியில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், 1990-91-ஆம் ஆண்டில் மீண்டும் ரூ.85 இலட்சம் 14 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தக்கூடிய பங்கு மூலதனமாகத் தமிழக அரசு மூலம் வழங்கியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டுக்கு இணையத்தின் கொள்முதல் மற்றும் விற்பனையாக இணைய வரலாற்றிலேயே இல்லாத அதிக அளவு கொள்முதல் மற்றும் விற்பனை செய்து ஒரு பெருமையை நிலை நாட்டியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு கொள்முதல் மற்றும் விற்பனைக் குறியீடான 2,50,000 கிலோவுக்கு எதிராக, 3,84,000 கிலோ கொள்முதலும், 3,92,000 கிலோ விற்பனையும் செய்துள்ளது. மேலும் 1991-92-ஆம் ஆண்டிற்கு அரசு 3,30,000 கிலோ கொள்முதல் மற்றும் விற்பனைக் குறியீடாக நிர்ணயம் செய்துள்ளது. அதில் இணையம் 31.8.91 வரை கொள்முதலில் 1,68,614 கிலோவும், விற்பனையில் 1,68,455 கிலோவும் அடைந்தும் ரூ.19.41 இலட்சம் உத்தேச இலாபத்தில் இயங்கி வருகின்றது.

இணையம் 1985-86-இல் ரூ.107.21 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்கி வந்தது. பிறகு எடுத்த உயராத முயற்சி மற்றும் கடும் உழைப்பின் மூலம் மேற்படி குவிந்த நட்டமான ரூ.107.21 இலட்சத்தை 30.4.90-இல் சரிகட்டி, 1990-91-ஆம் ஆண்டில் இணையம் ரூ.14.67 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

1990-91-ஆம் ஆண்டில் இணையம் அதன் 'அ' வகுப்பு உறுப்பினர்களுக்காக விற்பனை ஊக்குவிப்பாக ரூ.24,09,775 வழங்கி, மேற்படி ஊக்குவிப்புத் தொகை அந்தந்த சங்கங்களின் விருப்பத்தின் பேரில் இணையத்தில் அந்தச் சங்கங்களின் பங்குத் தொகையாக வரவு வைக்கப்பட்டுள்ளது.

1990-91-ஆம் ஆண்டு தணிக்கையில் இணையம் ரூ.14.67 இலட்சம் இலாபம் ஈட்டியதால் இணையத்தின் பேரவைக் கூட்டத்தில் பங்குத் தொகைக்கான ஈவு 11 சதவிகிதம் எனக் கொடுக்கப் பேரவை அனுமதித்து, அரசின் ஈவுத் தொகையாக ரூ.5,62,728/-ஐ 12.8.91 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் 'அ' வகுப்பு உறுப்பினர்களுக்கான ஈவுத்தொகை ரூ.65,134.75-ம் வழங்கப் பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித்துறை, காஞ்சிபுரத்தில் அண்ணா பட்டு பரிமாற்றகத்தை 9.1.91-இல் தொடங்கியது. மேற்படி பட்டு பரிமாற்றகத்தில் கச்சாப் பட்டு ஏலம் மூலம்

# வாக்காளர் பட்டியல்கள்

## ஒரு முக்கியக் குறிப்பு

சென்னை மாநகரத்தில் உள்ள 14 சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட எண்: 17. திருவொற்றியூர், 18. வில்லிவாக்கம், 19. ஆலந்தூர், 20. தாம்பரம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்கள் நவம்பர் மாதம் 4-ஆம் தேதி முதல் டிசம்பர் மாதம் 3-ஆம் தேதி வரை பொதுமக்களின் பார்வைக்காகக் கீழ்க்கண்ட மையங்களில் வைக்கப் படும்.

1. சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 155 கோட்ட அலுவலகங்கள் மற்றும் 10 வட்ட அலுவலர்கள்.

2. வட்டாட்சியர் அலுவலகங்கள்

3. வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அலுவலகம், சென்னை மாநகராட்சி, சென்னை-3.

4. அந்தந்த வாக்குச்சாவடி அமைந்துள்ள கட்டடங்கள்

வாக்காளர் பட்டியல்கள் பெயரைச் சேர்க்கத் தகுதியுள்ள ஆனால் பெயர் சேர்க்கப்படாமல் இருக்கும் எவரும் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் ஒரு பெயரை அல்லது விவரத்தைப் பதிவு செய்ததற்கு ஆட்சேபணைகளையும் தெரிவித்துக் கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு வேண்டிய தகுதிகள்:

1. **ஆண்-பெண்** ஒரு இந்திய குடிமகனாக/குடிமகளாக இருத்தல் வேண்டும்.

2. 1.1.1992-ஆம் தேதியன்று 18 வயது பூர்த்தி ஆகியிருத்தல் வேண்டும்.

3. குறிப்பிட்ட தொகுதியில் சாதாரணமாக வசிப்பவராய் இருத்தல் வேண்டும்.

ஒரு பெயரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தைப் படிவம் எண். 6-ஆம் பெயரைச் சேர்த்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்க படிவம் எண். 7-ஆம் மற்ற விவரத்திற்கு மறுப்பு தெரிவிக்க படிவம் எண்.8-ஆம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் ரிப்பன் கட்டடத்திலுள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலும் முக்கிய வெளியீட்டு மையங்களிலும் மற்றும் 5 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒவ்வொரு படிவமும் 15 காசு விலையில் விற்கப்படும். கையால் எழுதப்பட்ட, அச்சடிக்கப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்தலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட முக்கிய வெளியீட்டு மையங்களிலோ அல்லது வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்களிடமோ நேரிலோ அல்லது அஞ்சலிலோ வழங்கலாம்.

தேர்தல் ஆணைக்குழு இந்த புதிய வாக்காளர் திருத்தப் பட்டியலைத் தயாரிக்க உத்தரவிட்டுள்ளது. தங்கள் பெயர்கள் பட்டியலில் இல்லாத எல்லா வாக்காளர்களும் மற்றும் தங்கள் பெயர்கள் சம்பந்தப்பட்ட திருத்தங்களையும், நீக்கங்களையும் கொடுக்க விரும்புபவர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் கோரிக்கைகளைச் சரியான படிவங்களில் விவரமாகப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், வாக்காளர் பட்டியலைப் பார்வையிடும்போது பொதுமக்கள், 1988, 1989, 1990, 1991-ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல்கையும், இறுதித் திருத்தப் பட்டியல்களையும் பார்வையிடுமாறு குறிப்பாகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் கடைசியாக 3.12.1991 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பப்பட வேண்டும்.

---

சுற்றியுள்ள இடங்களில் டி.வி.எஸ். அசோக்லேலண்டு, இங்கிலிஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் இந்துஸ்தான் மோட்டார்ஸ், டைட்டான் வாட்ச் கம்பெனி ஆகிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைத் துவங்கவும், பென்னாகரம் 22-தாலுக்காவில் புங்கம் மற்றும் வேப்பங் கொட்டைகளைக் கொண்டு எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகளை அமைக்கவும், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெருகிவரும் நூற்பாலைகளுக்கு வேண்டிய பேப்பர் கோன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கவும், தேங்காய் மட்டைகள் மற்றும் கற்றாழை கொண்டு கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், மரங்களைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மரக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கவும், இம்மாவட்டத்தில் தரமான மண் இருப்பதால் ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலைகளைத் தொடங்கவும், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் தாலுக்காக்களில் பணியன் தொழிற்சாலைகளை அமைக்கவும், மேலும் கால்நடைகளின் எண்ணிக்கை இம்மாவட்டத்தில் அதிகரித்துள்ளதால் ஆடு, மாடுகளின் தோல்களைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைகளை அமைக்கவும் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளதால் தொழில் தொடங்க முன்வருமாறு தொழிலதிபர்களையும், சிந்தனையாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் (I.C.D.P.) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவி பெற்று மேற்படித் தொழில்களைத் தொடங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், இவ்வரிய சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திக் கொள்ளுமாறு தொழில் அதிபர்களையும், சிந்தனையாளர்களையும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.



தருமபுரி மாவட்டத்தில்

# கயிற்றுத் தொழில்

தருமபுரி மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகும். நெல், வாழை, கரும்பு போன்ற நன்செய் பயிர்கள் சில இடங்களில் விளைந்தாலும், குறிப்பிட்ட சில பகுதிகளில் தென்னைச் சாகுபடியும், விவசாயமும் முழுநேரத் தொழிலாகச் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக, தென்பெண்ணையாறு பாயும் பகுதிகளில் அரசம்பட்டி, காவேரிப்பட்டிணம், மாராண்டஹள்ளி, பர்கூர் போன்ற பகுதிகளில் தென்னைச் சாகுபடி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. இதன் காரணமாக தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி பல வேறு தொழில்கள் இங்கே பாங்காய் நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் கிராமப்புற மக்கள் தென்னை ஓலையைப் பயன்படுத்திக் கூரை வேயும் கீற்றுகள் தயாரிப்பது, குடிசைத் தொழிலாக பரவியுள்ளது. அதே போன்று, தேங்காயிலிருந்து உரிக்கப்படும் தென்னை மட்டையைப் பயன்படுத்தி தேங்காய் நார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பரவலாக அமைந்துள்ளன; சுமார் 30 நார்த் தொழிற்சாலைகள் தருமபுரி மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இதனால், தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கும் தென்னை மட்டைகள் பெரும்பாலும் ஒரு காலத்தில் எரிப்பதற்குப் பயன்பட்டு வந்த நிலை மாறி, தற்பொழுது நார்த் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாகப் பயன்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக தருமபுரி மாவட்டத்தில் கயிற்றுத் தொழில்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்துள்ளது. தென்னை நாரில் இருந்து கயிறு தயாரிப்பது ஒரு குடிசைத் தொழிலாக, காரிமங்கலம் அதன் சுற்றுப்புறங்களில் பரவி வளர்ந்துள்ளது. இங்கு வாழும் கிராம மக்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு இத்தொழிலில் மிகவும் விரும்பி ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தங்களது தொழிலுக்குத் தேவைப்படும் நார்களைத் தனியார் தொழிற்சாலைகளில் இருந்து பெற்று கயிறு தயாரித்து பிறகு தனியாருக்கும், சந்தையிலும் விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு கயிற்றுத் தொழில்கள் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதனை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியுள்ளது. இவ்வாறாக கயிற்றுத் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களும், ஆதிதிராவிடர்களும், உறுப்பினர்களாக உள்ளனர். இம்மாதிரி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் 5 அமைக்கப்பட்டுள்ளன. அவை:

**தருமபுரி மாவட்டத்தில் கயிற்றுத் தொழிலில் கணிசமான அளவிற்கு வளர்ந்து வருகிறது. இதன் மூலம் மகளிர் உட்படப் பலர் வேலைவாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இதனை விளக்குகிறது இக்கட்டுரை.**

1. வாடமங்கலம் தென்னை நார் உற்பத்தி, கயிற்றுத் தொழிற்கூட்டுறவுச் சங்கம், வாடமங்கலம், காவேரிப் பட்டினம் ஒன்றியம்.

2. சின்னமஞ்சவாடி மலைவாழ் மக்கள் தென்னை நார் உற்பத்தி, கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், பாப்பிரெட்டி ஒன்றியம்.

3. நவலை கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், நவலை, மொரப்பூர் ஒன்றியம்.

4. பாலவாடி ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், பாலவாடி.

5. கடமடை ஆதிதிராவிடர் தயிற்றுத் பாய்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், கடமடை, பாலக்கோடு ஒன்றியம்.

மேற்படி சங்கங்கள் தமிழ்நாடு அரசின் மூதலீட்டுடன் சுமார் 27 இலட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்நாடு அரசு பங்கு மூலதனமாக ரூ.5 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மற்ற நிதிகள் ஐ.ஆர்.டி.பி. மானியமாகவும், தாட்கோ மானியமாகவும், பங்கு மூலதனக் கடனாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் வாடமங்கலம் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் நார் மெத்தைகள் தயாரிக்கத் தேவைப்படும் சுருள் கயிறு முழுவீச்சில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இங்கு சுமார் 10 முதல் 20 வரை பெண்களும், ஆண்களும் தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சின்னமஞ்சவாடி தென்னை நார் உற்பத்தி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் தென்னை மட்டையில் இருந்து நார் தயாரிக்கும் தொழில் நடைபெற்று வருகின்றது. இங்கும் சுமார் 10 உறுப்பினர்கள் வேலை செய்து வருகின்றனர். நவலை கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆதிதிராவிடர் உறுப்பினர்களைக் கொண்டு இயங்குகிறது. இந்தச் சங்கத்தில் சுமார் 60 பெண் உறுப்பினர்கள் நாரில் இருந்து கயிறு தயாரிக்கும் தொழிலில் முழு நேரமாக ஈடுபட்டு வருகின்றனர். இச்சங்கத்திற்கு அம்பாலப்பட்டி, மோட்டூர், ஆகிய கிராமங்களில் கிளை மையங்களைக்

ளன. இச்சங்க உறுப்பினர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.300 வீதம் கூலியாகப் பெற்று வருகின்றனர். இச்சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் சூடிக் கயிறும், பரூர் சூடிக் கயிறும், சேலம் மத்திய விற்பனை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வடமாநிலங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இச்சங்கம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.60,000 வீதம் கூலியாக உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றது. இதேபோல பாலவாடி ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் நாரில் இருந்து கயிறு திரிக்கும் தொழிலுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கமும், தாட்கோ நிதியுதவியுடன் அமைக்கப் பட்டுள்ளது. இச்சங்கத்தில் தற் பொழுது சுமார் 24 உறுப்பினர்கள் கயிறு உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

கடமடை ஆதிதிராவிடர் கயிற்றுப் பாய் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், சன்னரகக் கயிற்றில் இருந்து கயிற்று மிதி யடிகள், கயிற்றுப்பாய் தயாரிக்கும் தொழிலுக்காக ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இத்திட்டம் தற்பொழுது ஆரம்ப நிலையில் உள்ளது. விரை வில் உற்பத்தி துவங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இங்கு 30 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதிகள் உள்ளது. இந்தக் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங் கங்கள் திறம்பட நடைபெறுவதற்குத் தேவைப்படும் பயிற்சியினையும், மற்ற உதவிகளையும் மத்திய கயிறு வாரியம் சிறப்பாக அளித்து வரு கின்றது.

கயிறு வாரியத்தின் மூலம் பால வாடி கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் 24 உறுப்பினர்களுக்கும், கடமடை கயிற்றுத் தொழிற் கூட்டுற வுச் சங்கத்தில் 12 உறுப்பினர்களுக் கும் இலவசமாகக் கயிறு திரிக்கும் ராட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர கயிற்றுப் பொருட்கள் விற்பனையினை ஊக்கப்படுத்து வதற்கு மாநில அரசும், கயிறு வாரி யமும் இணைந்து கயிறு தள்ளுபடி விற்பனையினையும் செயலாக்கி வரு கின்றன. இந்தத் தள்ளுபடித் தொகை யினைச் சங்கத்திற்கு மானியமாக மாநில அரசும், கயிறு வாரியமும் 50:50 என்ற விகிதத்தில் வழங்கி வருகின்றது.

இச்சங்கங்கள் தமது உறுப்பினர் களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு அளித்து வந்தாலும், விரிவாக்கப் பணியாக இச்சங்கங்கள் மூலம் கிராமப்புற மக்களுக்குக் கயிற்றுப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின் றது. நலலைக் கயிற்றுத் தொழி லாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங் கத்தின் மூலம் அம்பாலபட்டி, மோட்டூர் ஆகிய கிராமங்களில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் 60 உறுப் பினர்களுக்குக் கயிற்றுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, இக்கிராம மக்கள் கயிறு உற்பத்தி யில் ஈடுபட்டுள்ளனர்.

அவ்வாறே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் திட்டத்தின் உதவியுடன் சுமார் 65 பெண்களுக்குச் சென்ற நிதி ஆண்டில் கயிற்றுப் பயிற்சி மொரப்பூர் ஒன்றி யத்தில் அடங்கிய 3 கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற இப்பெண்களுக்கு ஐ.எப்.எ.டி. நிதியில் இருந்து 50 சதவிகித மானி யமும் இந்தியன் வங்கியில் இருந்து கடனும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, கீழ் வரும் மூன்று கிராமங்களில் உள்ள உறுப்பினர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது:

1. மாரப்பநாயக்கன்பட்டி
2. போளயம்பள்ளி
3. அம்பாலப்பட்டி

தற்பொழுது இயங்கி வரும் கயிற்றுச் சங்கங்களைத் தவிர மேலும் மூன்று கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 15 இலட்ச மதிப் பீட்டில் அமைப்பதற்குத் திட்டங்கள் அரசின் அனுமதிக்கு அனுப்பப் பட்டுள்ளது.

1. அம்பாலப்பட்டி கயிற்றுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், அம்பாலப்பட்டி, மொரப்பூர் ஒன்றியம்.

2. குப்பாங்கரை ஆதிதிராவிடர் கயிற்றுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், குப்பாங்கரை, காரிமங்கலம் ஒன்றியம்.

3. தூளக்கரை ஆதிதிராவிடர் கயிறுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், தூளக்கரை ஊத்தங்கரை (வழி) மத்தூர் ஒன்றியம்.

இச்சங்கங்கள் அமைக்கப்பட்டால் சுமார் 180 உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உதவியாக அமையும், இது தவிரவும், பர்கூர் ஒன்றியத்தில் ஒரு சுருள் கயிறு உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

இவ்வாறு தருமபுரி மாவட்டத் தில் தொழில் வணிக இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் கயிற்றுத் தொழிற் கூட்டுறவுச் சங் கங்கள் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக் கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வளர்ச்சிப் பணி களில் மத்தியக் கயிறு வாரியமும், மாநில அரசும் ஆக்கமும் ஊக்கமும் தந்து கயிற்றுத் தொழில் வளர்ச்சிக் குப் பெருந்துணை புரிகின்றன.

- சி.க. சரவணன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி மாவட்டம்

## பொன்மொழிகள்

★ உனக்குள் இருக்கும் ஆற்றல் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு யாரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாரும் இல்லை.

—விவேகானந்தர்

★ பயன் கருதிச் செய்யப்படும் வேலை தொண்டாகாது. பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணி.

—தமிழ்த்தென்றல் திரு.வி.க.

★ மனதைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக வைத்திருக்கக்கற்க வேண்டும்.

—டாக்டர் மு. வரதராசனார்.



காயிதேமில்லத் மாவட்டங்களில:

# நீலப்புரட்சி



த. இளங்கோவன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம் இயற்கை யாகவே மண் வளமும், நீர்வளமும் உடையதாகும். ஆகவே, இங்கு நவீன முறையில் மீன்வளர்க்கத் தொழில்நுட்பமும் மற்றும் மீன்கள் வளர்ப்பதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் ஏராளம்.

தஞ்சை மாவட்டத்தில் வயல் களைக் குளமாக்கி மீன்வளர்ப்புச் செய்வது 1990 ஜனவரி மாதத்தில் துவக்கப்பட்டு, மக்களிடத்தில் வேக மான வரவேற்பைப் பெற்று வரு கிறது. விவசாயத்தின் மூலம் குறைந்த வருவாயைப் பெற்றுச் சோர்வடைந்து வரும் விவசாயிகள், வயல்களைக் குளமாக்கி மீன்வளர்ப்புச் செய் வதன் மூலம் மற்ற பயிர்களைக் காட்டிலும் அதிக வருவாயை ஈட்டி வருகின்றனர்.

தஞ்சை மாவட்டத்தில் உள் நாட்டு மீன்வளர்ப்பில் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முக மையால் வேகமாக வளர்ந்துவரும் நீலப்புரட்சியினைக் கண்டு வெளி நாட்டில் வாழும் தமிழர்களும் - விவசாயிகள் மற்றும் ஆர்வமுள்ள வர்கள் மிகவும் ஆர்வத்தோடு இத் திட்டத்தில் பங்குகொண்டு செயல் படுத்தத் துடிக்கின்றனர்.

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையினால் வழங்கப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் கடந்த நான்காண்டுகளில் செய்த சாதனைகள்:**

★ வயல்களில் ஆழமில்லாத குறைந்த செலவில் குளம் அமைத்தல்.

★ மீன்குஞ்சுகளின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சி குன்றிய மீன்களைப் பிரபலப்படுத்துதல்.

★ இரண்டு இன மீன்களைக் கொண்டு, குறுகிய கால அறுவடை செய்தல்.

★ ஒருங்கிணைந்த மீன்பண்ணை அமைத்தல்.

★ மீன்குஞ்சுகள் வளர்ப்புடன் பலன்தரும் பயிர்கள் வளர்ப்பதால் அதிகமான வருவாயினை ஈட்டுதல்:

★ மீன்குஞ்சு உற்பத்தி.

**குறைந்த செலவில் குளம் அமைத்தல்:**

சுமார் 40 விழுக்காட்டுக்கு மேல் களிப்புக் கலந்த மண் அமைந்துள்ள வயல்களே குளம் அமைப்பதற்கு ஏற்றதாகும். வயல்களில், சுற்றி யுள்ள நான்கு புறங்களிலும் சுமார் அடிமட்டத்தில் 3 மீட்டர், மேல் மட்டத்தில் 4.2 மீட்டர் அகலத்திற்கு 0.6. மீட்டர் ஆழத்திற்கு மண்ணை வெட்டி எடுத்து, ஏற்கெனவே உள்ள கரையில் மண்ணைச் சேர்த்துக் கரையை உயர்த்த வேண்டும். இவ் வாறு நான்கு பக்கங்களிலும் பள்ள மாக வெட்டி எடுப்பதன் மூலம் சுமார் 850 கனமீட்டர் மண்மட்டுமே வெட்டி எடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பல நன்மைகள் ஏற்படுகின் றன. செலவு ரூ.7,000/- முதல் 10,000/- வரைதான்.

ஆனால் பழைய முறைப்படி முழுப்பகுதியையும் தோண்டினால் 70,000/- வரை செலவாகும். 10,000 கன மீட்டர் தண்ணீருக்குப் பதிலாகச் சுமார் 1,000 கனமீட்டர் தண்ணீர் தேக்கினால் போதுமானது. முழுவதுமாகக் குளமாக வெட்டு வதற்கு 106 நாட்கள் என்றால் புதிய முறைப்படி ஒரு எக்டேர் ஆழ மில்லாத குளத்தை உண்டாக்க வெட்டுவதற்கு 9 நாட்களே போது மானது.

இக்குட்டையில் இருவகை இன மீன்வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கட்லா மற்றும் ரோகு மீன்குஞ்சு களை விட்டு, நான்கு முதல் 5 மாத காலம் வரை வளர்ப்பதன் மூலம், சுமார் 2 டன் வரை மீன்உற்பத்தி செய்யலாம். இதனால் அதிக அளவு தண்ணீர் வீணாகாதது மட்டுமல்லா மல், சுமார் ரூ.25,000/- வரை நிகர வருமானமும் கிடைக்கும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மத்தியில் இந்தப் புதிய அமைப்பு மீன்வளர்ப்பிற்குச் சிறப் பான வரவேற்பு இருந்து வருகிறது. நாளுக்குநாள் பெருகியும் வருகிறது.

பொதுவாகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா வட்டங்களிலும் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதன் மூலம், தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்வளர்ப்பில் ஒரு நீலப்புரட்சியை உண்டாக்க வழி செய்துள்ளது.

**மீன்குஞ்சுகளின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தி, வளர்ச்சி குன்றிய மீன்களை வளர்ப்புக்குக் கொண்டுவருதல்:**

தமிழ்நாட்டிலேயே தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையினால் முதன்முதலாக இம்மாவட்டத்தில் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்ட வயதடைந்த மீன் குஞ்சுகளை விட்டு வளர்ப்பதன் மூலம் நல்ல பலனைத் தந்துள்ளது. இம்மாதிரி மீன்குஞ்சுகள், நாற்றங்கால்களில் பலமடங்கு அதிக அளவு இருப்புச் செய்து 6 மாதம் முதல் ஓராண்டு வரை வளர்த்தெடுக்கப் படுகின்றன. இதன் மூலம் மீன் குஞ்சுகள் 50 கிராம் முதல் 100 கிராம் வரை வளர்ச்சியடைகிறது. இம்மாதிரி வளர்க்கப்படும் மீன்குஞ்சு ஒன்றின் விலை ரூ.1/- முதல் '2/- வரை ஆகும். மேலும் இவ்வகையில் வளர்த்தெடுக்க மீன்குஞ்சுகளை எக்டேருக்கு 5,000-க்குப் பதில் 2,500 மட்டுமே இருப்புச் செய்யுமாறு பரிந்துரை செய்யப்படுகிறது. இவ்வகை மீன்குஞ்சுகள் குட்டையில் விட்டு வளர்க்கப்படும்போது 4 முதல் 5 மாதத்தில் அதன் வளர்ச்சி 800 கிராம் முதல் ஒரு கிலோ வரை வளர்கின்றது. பிழைப்புத் திறன் 100 விழுக்காடாகவும் இருப்பதால் அனைவரும் இவைகளையே விரும்பி இருப்புச் செய்கிறார்கள். எனவே இம்மாவட்டத்தில் உள்ள மீன் உற்பத்தியாளர்களுக்கு அம்மாதிரி மீன்குஞ்சுகளை வளர்க்கப் போதுமான பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இம்மாதிரி வளர்ச்சி குன்றிய மீன்கள் ஆர்.கே. மீன்பண்ணை, ஒரத்தநாடு, துர்கா மீன்பண்ணை பட்டீஸ்வரம், இ.எம்.கே. மீன் பண்ணை பள்ளி அக்ரகாரம், காட்டூர் மீன்பண்ணை காட்டூர், மகேஸ்வரி மீன்பண்ணை, நல்லாடை சீர்காழி போன்ற பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

**இரண்டு இன மீன்களைக் கொண்டு குறுகிய கால அறுவடை செய்தல்:**

புதிய முறையில் வயல்களில் வெட்டப்பட்ட குட்டைகளில் ஆறு வகை மீன்களை விட்டு வளர்ப்பதற்குப் பதில் இரண்டுவகை மீன் குஞ்சுகளான கட்லா மற்றும் ரோகு இன மீன்குஞ்சுகளைவிட்டு வளர்க்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது.

**ஒருங்கிணைந்த மீன்பண்ணை:**

தஞ்சை மாவட்டத்தில் பல நோக்கு மீன்பண்ணைகள் அமைத்தல் சம்பந்தமாக விவசாயிகளின் கூட்டத்தின் மூலமாகவும் மற்றும் தீவிரப் பயிற்சி அளிப்பதன் மூலமாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் சுமார் 10 பண்ணைகளில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.

அதிக உற்பத்தியினைப் பெருக்கும் நோக்கத்தில் கோழி, வாத்து, மாடு, முயல், ஆடுகள் வளர்க்கப் பட்டு அதன் கழிவுகளை மீன்பண்ணையில்போட்டு வளர்ப்பதனால் மீன் வளர்ப்பு ஏற்றம் பெற்று வருகிறது. இம்மாதிரி திட்டத்திற்குத் தஞ்சை மாவட்டத்தில் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நல்ல வரவேற்பிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**மீன்குஞ்சுகள் வளர்ப்பதுடன் பல வகைப்பயிர் செய்தல் மூலம் கூடுதல் வருவாயை ஈட்டுதல்:**

தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் அறிவுரையின் பேரில், திருவாரூர் அருகில் உள்ள காட்டூர் கிராமத்தில் ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள மீன் நாற்றங்கால்களில் வளர்த்த மீன்குஞ்சு விற்பனை மூலம் ரூ.48,000/- வரை வருவாய் ஈட்டியதுடன் அதன் கரைகளில் வாழை மற்றும் தென்னை வைத்து அதன் மூலமாகவும் வருவாயை ஈட்டியுள்ளார். இவைகளின் மூலம் 5 ஆண்டிற்குப் பின்னர் வருமானம் ரூ.52,000/- ஆக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மீன்குஞ்சு உற்பத்தி:**

தஞ்சை மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவில் இவ்வாண்டில் 12 தனியார் மீன்பண்ணை மூலமும், 3 அரசு மீன்பண்ணைகள் மூலம் சுமார் 800 இலட்சம் நுண் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து பெரிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. அவைகளிலிருந்து சுமார் 160 முதல் 175 இலட்சம் வரையான விரலிகளை வளர்த்தெடுக்க முடியும். 1988-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் இரண்டு தனியார் மீன் பண்ணை மற்றும் 3 அரசு மீன் பண்ணை மூலம் 200 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து சுமார் 40 இலட்சம் விரலிகள் மட்டுமே உண்டாக்கப்பட்டு வந்தது. தவிர, தஞ்சை மாவட்ட மீன்வளர்ப்போர்கள் மற்றும் முகமை 1989 வரை வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் மீன்குஞ்சுகளை எடுத்து வந்து இருப்புச் செய்தன. ஆனால் சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் ஏராளமான மீன்குஞ்சுகள் உற்பத்தி இம்மாவட்டத்திலேயே செய்யப்பட்டு இருப்புச் செய்யப்பட்டு வருகிறது.

தஞ்சை மாவட்டம் மாநிலத்திலேயே, இவ்வகையில் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதோடு மட்டுமல்லாமல் மற்ற மாவட்டங்களுக்கும், மாநிலத்திற்கும் விநியோகம் செய்கிற அளவிற்கு முன்னிலையில் உள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். இப்படி 12 தனியார் மீன்குஞ்சுப் பண்ணைகளை ஊக்குவித்து, உற்பத்தியைப் பெருக்கிய பெருமையுடையது தஞ்சை மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை.



★ நவீன முறையில் வளர்க்கப்பட்ட மீன் வகை.

**மீன்உற்பத்தி மற்றும் விவசாயத்தின் மூலம் பெற்ற வருவாயினையும் ஒப்பிட்டுப் பார்த்து நிகர வருமானம் கணக்கிடல்:**

ஒரு எக்டேர் வயலில் விவசாயம் செய்தல் மூலம் 5 வகைப் பயிர்கள் கத்தரி, உருளை, வாழை, மஞ்சள், பூண்டு ஒரு அறுவடையில் கிடைக்கும் வருமானம் ரூ.20,000/- முதல் 27,000/- வரையும், ஆனால் அதே அளவு குளத்தில் மீன்உற்பத்தி மூலம் கிடைக்கும் வருவாய் ஓர் ஆண்டில் இரு அறுவடையில் ரூ.50,000/-மும், மூன்று அறுவடையில் ரூ.75,000/-மும் கிடைக்கிறது. எனவே வருவாயில் மீன்உற்பத்தி முதலாவதாக நிற்கிறது.



**மேலத் தஞ்சையின் மண்வளம்:**

தஞ்சை மாவட்டத்தில் நன்னீர், உவர்நீர் மற்றும் கடல்நீர் பகுதிகள் நிறைய உள்ளன. அவைகள் சுமார் 8,21,263.47 எக்டேர் பரப்பளவு உள்ளன. அதில் 2,72,952.95 எக்டேர் பரப்பளவே மீன் வளர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அது மொத்தப் பரப்பில் 33.22 சதவிகிதம் ஆகும். தண்ணீரை அதிகமாக இழுக்காமல் உள்ள களிமண் வளத்தன்மை மிகவும் முக்கியமானதாகும். தவிர உவர்நீர்ப் பரப்பு சுமார் 20,727 எக்டேர் அளவு பரந்து கிடக்கிறது.

**கீழத்தஞ்சையில் உள்ள உவர்நீர் மற்றும் கசிவுத்தன்மை மண்ணின் உபயோகம் பற்றி:**

இதில் மொத்தம் 7,832 கி.மீ. பரப்பளவு உள்ளவைகளில் 4,917 கி.மீ. பரப்பளவினை நீர்வளத்தை அதிகரிக்கச் செய்யவும் மீதம் உள்ள 2,915 கி.மீ. கசிவுத் தன்மையுள்ள மண் அமைப்பில் 6 வித உவர் நீர் மீன்களை வளர்க்கவும் நிலத்தடி உவர்நீர் மீன் பண்ணைகளை உண்டாக்கவும் பயன்படுத்த வாய்ப்பு உண்டு.

**உவர்நீரில் வளர்க்கப்படும் மீன் வகைகள்:**

1. திலேப்பியா
2. கொடுவா
3. செத்தக்கெண்டை
4. பால்கெண்டை
5. கருப்பு இறால் அல்லது புலி இறால்.

**கடைமடைப்பகுதி பரப்பு:**

முன்மாதிரித் திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் அளவுள்ள பண்ணையில் ஏற்கெனவே திருத்துறைப்பூண்டி மற்றும் முத்துப்பேட்டைப் பகுதியில் சென்ற ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் குளம் தனியாக 2 மீ. அளவு ஆழம் உள்ளதாக வெட்டப்பட்டு, அதன் கரைகளில் பயன்தரும் மரங்கள் நடப்படுகின்றன. இக்குளங்களில் காவிரியிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரும் மற்றும் மழையினால் கிடைக்கும் நீரும் தேக்கி வைக்கப் படுகிறது. இது பயிருக்குப் பாசனமாகவும், மீன்வளர்ப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ.50,000/- வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றுத் தந்து, அதற்காக 20 சதவிகிதம் மானியமும் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

**எதிர்காலத்தில் வேதாரண்யம் பகுதிகளில் மீன்வளர்ச்சிக்கு:**

| | எக்டேர் |
|---|---|
| தேங்கிய நீர்ப்பகுதி | 1,137.00 |
| சேற்றுப் பகுதி | 455.28 |
| ஆழமான நீர்ப்பகுதி | 377.40 |
| உப்பங்கழி | 133.28 |
| | 2,102.96 |

பழஞ்சூர் பகுதி மரங்காடு பகுதி, முத்துப்பேட்டை, வேகூன் செருதலைக்காடு பகுதி வேதாரண்யம் பகுதி 10,000 எக்டேர் வரை மீன் வளத்தைப் பெருக்க வாய்ப்பு உண்டு

தஞ்சை மாவட்டத்தில் தற்போதைய நன்னீர் மீன்உற்பத்தி 16,000 டன்கள். மேற்சொன்ன குளங்கள், ஏரிகள், பயன்படுத்தப் படாத குட்டைகள், தாழ்வான பகுதிகளை, மீன்வளர்ப்பிற்குப் பயன் படுத்தினால், நிச்சயமாக மீன் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க முடியும்.



# சேலம் அரசு அருங்காட்சியகம்

ஜா.ரா. அசோகன்,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்

**சேலத்தில் உள்ள அரசு அருங்காட்சியகம் சிறப்புடைய தாகும்; அதன் படப்பிடிப்பாக விளங்குவது இந்தக் கட்டுரை:**

தமிழகத்தில் மாவட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்ட அருங்காட்சியகங்களில் சேலம் அரசு அருங்காட்சியகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. 1976-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் பதினோராம் நாள் இவ்வருங்காட்சியகம் தொடங்கி வைக்கப்பட்டது. ஏனைய அரசு அருங்காட்சியகங்கள் தொடங்கப்பட்ட விதத்திலிருந்து இது சற்று மாறுபட்டதாகும்.

சேலம் மாவட்டத்திலுள்ள, இத்துறையில் ஈடுபாடுடைய சில அறிஞர்களாலும், கலைஞர்களாலும், இவ்வருங்காட்சியகம் மேற்குறிப்பிட்ட நாளில் தோற்றுவிக்கப்பட்டதுதான். மேலும் அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.மு.சுவாமிநாதன் அவர்களும் இவ்வருங்காட்சியகத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்தார். இம்முறையில் தோற்றுவிக்கப்பட்ட இவ்வருங்காட்சியகம் 11.2.76 முதல் 1.3.79 வரை மூன்று ஆண்டுகள் மாவட்ட ஆட்சியத்தின் கீழ் இயங்கி வந்தது, பின்பு மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்கள் அரசு அருங்காட்சியகத் துறையால் தொடங்கப்படுவது கண்டு, தனித்து இயங்கி வந்த இவ்வருங்காட்சியகமும் 1.4.79 முதல் அரசு அருங்காட்சியகங்களுடன் இணைக்கப்பட்டு, தற்பொழுது அருங்காட்சியக இயக்ககத்தின் கீழ் செவ்வனே இயங்கி வருகிறது. இம்முறையில் சேலம் மாவட்டத்தின் கலை, கல்வி, கலாச்சாரம் இவற்றை எடுத்தியம்பும் ஓர் அரிய கல்விக் கூடமாகத் திகழ்ந்து வருகிறது.

சேலம், ஓமலூர் சாலையில் இரண்டு கட்டடங்களில் இயங்கி வரும் இவ்வருங்காட்சியகம் ஒரு பலநோக்கு அருங்காட்சியகமாகும். இதில் தொல்பொருளியல், விலங்கியல், தாவரவியல், நாணயவியல், புவியமைப்பியல், பண்பாட்டியல், முந்துவரலாறு, மாவட்டக்கூடம், ஓவியங்கள், தபால்தலைகள், தொழிற்கூடம், போர்க்கருவிகள் ஆகிய காட்சிக் கூடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

அருங்காட்சியகத்திற்கு வருபவர்களை முதலில் வரவேற்பது இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஏழு அடி நீளமுள்ள பீரங்கியாகும். மாவட்ட ஆட்சியரகத்தில் வைக்கப்பட்டிருந்த இந்தப் பீரங்கி, அரசு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டபோது இங்கு மாற்றப்பட்டு மக்களை வரவேற்கிறது.

அண்மையில் ஓமலூர் அருகே தோண்டியெடுக்கப்பட்ட மிகப் பெரிய முதுமக்கள் தாழியும், மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் பற்றிய விளக்கங்களும் முதல் கட்டடத்தின் முகப்பில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கட்டடத்தினுள் முதலில் எதிர்ப்படுவது தொழிற்கூடமாகும். இங்கு சேலம் மாவட்டத்தின் தொழில் தலைநகரமான மேட்டூரில் அமைந்துள்ள முக்கியத் தொழிலகங்களின் அன்பளிப்புகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

அடுத்துக் காணப்படுவது மாவட்டக் கூடமாகும். இங்கு சேலம் மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் புகைப்படங்களும், சுற்றுலாத் தலங்களின் புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இவ்வகையில் நாமக்கல் கோட்டை, சங்ககிரிக் கோட்டை, ஆத்தூர் கோட்டை, ராமர் கோவில், கொல்லமலை அறப்பளீஸ்வரர் கோவில், தாரமங்கலம், ஏர்க்காடு ஆகிய இடங்களின் புகைப்படங்களும், சேலம், தருமபுரி மாவட்டங்களைச் சார்ந்த பல்துறை அறிஞர்களின் புகைப்படங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றோடு நாமக்கல் கவிஞர் திரு வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பயன்படுத்திய மேலங்கி, பணவுரை, ஜெயில் அடையாள அட்டை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

சேலம் மாவட்டம் கனிமப் பொருட்களுக்குப் பெயர் பெற்றது. இங்கு கிடைக்கும் முக்கியக் கனிமப் பொருட்கள் எழில்மிகு முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தின் கனிம வளத்தைக் காட்டும் வரைபடமும், அரியலூரில் இருந்து சேகரிக்கப்பட்ட கற்படிவங்களும், பீங்கான்களால் செய்யப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அரிய கலைப் பொருட்களும் இக்காட்சிக் கூடத்தை அலங்கரிக்கின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரமாக இருப்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுமேரிய மக்களின் எழுத்துக்கள் அடங்கிய கற்செங்கல்லாகும். அடுத்து வருவது விலங்கியல் கூடமாகும். இக்கூடம் பொதுமக்களைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முக்கியக் காட்சிப் பொருட்களாக வலம்புரிச் சங்கு, கடற்குதிரைகள், பலவகைப் பறவைகள், பாம்புகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. வலம்புரிச்சங்கு என்பது கடலில் காணப்படும் ஒரு அரிய சங்காகும். பல்லாயிரம் சங்குகளில் ஒரு சங்குதான் வலம்புரிச் சங்காகக் கிடைக்கிறது. மக்கள் வலம்புரிச் சங்கை இடம்புரிச் சங்கிலிருந்து வேறுபடுத்தி காணும்பொருட்டு இருவகைச் சங்குகளுமே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய நீர்த்தேக்கமான மேட்டூரில் கிடைக்கப் பெறும் அரிய மீன் வகைகளும், கடல்மீன் இனங்களும், கடல்சுறா, கடல் ஆமை ஆகிய விலங்கினங்களும் காட்சிக்கூடத்தை அலங்கரிக்கின்றன. ஏர்க்காட்டில் காணப்படும் பறவையினங்களும், இந்திய வன விலங்குச் சரணாலயங்களின் விவரம் அறியும் மின் இயக்கியும் சிறப்பு அம்சமாக விளங்குகிறது.



திப்பு சுல்தான் காலத்தில் பயன் படுத்தியதாகக் கருதப்படும் மருந்து கிட்டிக்கும் துப்பாக்கிகள் (Muzzle Loading Guns)

தாவரவியல் மற்றும் நாணயவியல் பிரிவுகளில் ஏர்க்காடு மற்றும் கொல்லிமலைகளில் காணப்படும் 31 வகையான மரவகைகளும் பலவகைக் கொடிகளின் தண்டுகளும் பலவகைத் தாவரங்களின் வண்ண ஓவியங்களும் அழகுற இடம் பெற்றுள்ளன. இப்பிரிவின் ஒரு பக்கத்திலேயே நாணயவியலுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியரின் நாணயங்கள்-ஹைதர் அலி, திப்புசுல்தான், மைசூர் உடையார் வெளியிட்ட நாணயங்கள் - போர்ச்சுகீசிய, டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நாணயங்களுடன் அயல் நாட்டு நாணயங்களும் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தபால் தலைப்பிரிவில் இந்தியாவில் முதன்முதலாகப் பொதுமக்களுக்காக வெளியிடப்பட்ட தபால் தலைகள், இந்தியாவின் கட்டடக் கலை, போக்குவரத்துத் துறைகளுக்காக வெளியிடப்பட்ட தபால்தலைகளும் காட்சியில் இடம் பெறுகின்றன.

முதல் கட்டடத்தைப் பார்த்து விட்டு, இரண்டாம் கட்டடம் செல்வோமேயானால், அங்கு நம்மை வரவேற்பது அழகிய கல்லினாலான நந்தி உருவச் சிலையாகும். நாமக்கல் வட்டத்திலிருந்து திரட்டப்பட்ட இச்சிலையும், வாயிற்புறம் படிக்கட்டுகளின் அருகே அமைந்துள்ள சேந்தமங்கலத்திலிருந்து கொணரப்பட்ட வீரன் புலியுடன் சண்டையிடும் புலிக்குத்திக் கல்லும், மிகவும் எழில் மிகு சிற்பங்களாகும். பொது நலத்திற்காகச் சண்டையிட்டு மடிந்த வீரனின் அடையாளமாக இவ்வீரக்கற்கள் எழுப்பப்படுகின்றன. இவை மட்டுமின்றிப் பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப்பட்ட வீரக்கற்களும், இதர வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிற்பங்களும் கட்டடத்தின் முன்புறத்தை அலங்கரிக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை ஈஸ்வரவர்ம பல்லவன் காலத்திய 7-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்து வீரக்கல், சுந்தர பாண்டியன் காலத்திய 12-ஆம் நூற்றாண்டு வீரக்கல், காளையுடன் போராடி மடிந்த வீரனின் 14- ஆம் நூற்றாண்டு நடுகல் ஆகியவை ஆகும்.

இரண்டாவது கட்டடத்தின் முதல் அறையில் எதிர்ப்படுவது முந்துவரலாற்றுக் கூடமாகும்.

கூடத்தின் நடுவே, மோகனூரிலிருந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி பாங்குற அமைக்கப்பட்டுள்ளது. இத்தாழியினுள் இருந்து எடுக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் ஒருபுறம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முதுமக்கள் தாழிகள் சேலம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. இவை இறந்தோரைப் புதைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தாழிகள் பூமியினுள் காணப்படும் விதத்தை இங்குள்ள ஒரு படம் சித்திரிக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கற்கால மனிதன் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் வரிசைப் படி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலில் காணப்படுவது பழங்கற்காலக் கருவிகளாகும். இவற்றைத் தொடர்ந்து இடைக்கற்கால கருவிகளும், புதிய கற்காலக் கருவிகளும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டம் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு பழந்தமிழகத்தின் ஐந்து பிரிவுகளில் ஒன்றான கொங்கு

**மோகனூர் அருகே தோண்டியெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி**



மண்டலத்தை ஆண்ட அரசர்களான, சோழர், ஒய்சளர், விஜயநகரப் பெருமன்னர்கள், கொங்குச் சோழர், மதுரை நாயக்கர்கள், மைசூர் உடையார்கள் ஆகியோரின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த கற்சிலைகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரையிலான பல்வகைக் கற்சிலைகள் இங்குக் காட்சியளிக்கின்றன. காலத்திற்கேற்றபடி மாறுபட்ட சிலை அமைப்பை இங்கே கண்டு மகிழலாம். இவற்றுள் முக்கியமானவை சேந்தமங்கலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட நர்த்தனக் கண்ணன், மேட்டூரிலிருந்து திரட்டப்பட்ட அம்மன் சிலை, நாமக்கல் வட்டத்திலிருந்து திரட்டப்பட்ட விநாயகர் சிலை ஆகியவையாகும்.

சேலம் மாவட்டத்தில் நிறைய மலைகள் அமைந்துள்ளன. இம்மலைகளில் மலைவாழ் பழங்குடிகள் வசிக்கின்றனர். இக்கண்ணோட்டத்தில் பண்பாட்டியல் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. கொல்லிமலை, மலைவாழ் மக்கள் பயன்படுத்திய பல்வேறு இரும்பு ஆயுதங்கள், உடுக்கை, மரக்கால், ஊது-கொம்புகள், பலிக்கொடுவாள்கள், இரும்பு விளக்குகள், கோவில் தீர்த்த பாத்திரங்கள் ஆகியவை • காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் போத மலைப்பகுதியில் திரட்டப்பட்ட மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் பொருட்களும் விரைவில் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

போர்க்கருவிகள் கூடத்தில் பீரங்கிகள், பீரங்கிக் குண்டுகள், திப்பு சுல்தான் காலத்தில் பயன்படுத்திய தாகக் கருதப்படும் மருந்து கிடிக்கும் துப்பாக்கிகள், மரத்தினால் செய்யப்பட்ட கேடயங்கள், ஈட்டிகள், போர்வாள்கள், கட்டாரிகள், ஆகியவை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகம் சிறந்த ஓவியக் கூடத்தையும் கொண்டு விளங்குகிறது. இக்கூடத்தைத் தற்கால எண்ணெய் வண்ண ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை உலகப்புகழ் பெற்ற ஓவியர் டி.பி. ராய்சௌத்திரியின் 'மழையில் நனைந்த காக்கை', 'தாயும் சேயும்'; நாமக்கல் கவிஞர் அவர்களின் 'காந்தியடிகள்' ஆகிய ஓவியங்களாகும்.

சேலம் அருங்காட்சியகம், மேற்குறிப்பிட்ட காட்சிப் பொருட்களை மட்டும் காட்சிக்கு வைத்திராமல், சிறந்த கல்வி நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. அருங்காட்சியகத்தில் கல்வி சம்பந்தமான படக் காட்சிகளும் - பல்வேறு வல்லுனர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளும் சிறப்புக் கண்காட்சிகளும் - பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குக் கல்வி சம்பந்தப்பட்ட பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அருங்காட்சியக நூலகம், ஆராய்ச்சியில் ஈடுபாடுடைய மாணவர்களுக்குப் பேருதவியாய் உள்ளது. இவ்வகையில் சேலம் அரசு அருங்காட்சியகம் பொதுமக்களுக்கு ஒரு சிறந்த கல்வி நிறுவனமாகவும், பொழுதுபோக்கு இடமாகவும் சிறப்புறச் செயலாற்றி வருகிறது. அருங்காட்சியகம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்ந்து பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படுகிறது. வாரவிடுமுறை நாள் வெள்ளிக்கிழமையாகும். தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய அரசு நாட்களிலும் திறந்திருக்கும். இந்த அருங்காட்சியகத்தில் அனுமதி இலவசமாகும்.

---

## தூக்கம் வரவில்லையா?

**தூக்கம் வரவில்லையா? நன்றாகத் தூக்கம் வர என்ன செய்ய வேண்டும்?**

அமெரிக்காவில் பாஸ்டன் பல்கலைக் கழக மருத்துவமனையில் தூக்கம் பற்றிய ஆராய்ச்சிக்கூடம் ஒன்று இயங்கி வருகிறது.

உணவு, மனநிலை, தூங்கும் இடத்தின் சூழ்நிலை, படுக்கைக்குச் செல்லும் போது உள்ள பழக்க வழக்கங்கள் ஆகியவை காரணமாக ஒருவருக்குத் தூக்கம் பிடிக்காமல் போகலாம் என்று இந்த ஆராய்ச்சிக் கூடத்தின் இயக்குநராக உள்ள சான்போர்ட் ஆவர்பாக் என்னும் நிபுணர் கூறுகிறார்.

உடலை அயர்ச்சியுற வைக்கும் உடற்பயிற்சியானது தூக்கத்தை வரவழைக்கக் கூடிய நல்ல மருந்தாகும். ஆனால், படுக்கப் போகும் நேரத்தில் இத்தகைய உடற்பயிற்சிகளைச் செய்யக் கூடாது. சற்று முன்னதாகப் பகலிலேயே இந்த உடற்பயிற்சிகளைச் செய்வது நல்ல பலன் தரும்.



தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் பிற்பகல் நேரங்களில் காபி, டீ, கோலா போன்ற பானங்களை அருந்தக்கூடாது. மது அருந்துவதுகூடத் தூக்கத்தைப் பாதிக்கும்.

வெதுவெதுப்பான நீரில் குளிப்பது, தியானத்தில் ஈடுபடுவது, ஓய்வாக இருப்பது, படுப்பதற்கு முன்னால் ஒரு குவளை பால் அருந்துவது ஆகியவை தூக்கத்தை வரவழைப்பதற்கு மிகுந்த துணை புரியும்.

மற்றொரு விஷயம். தூங்கியாக வேண்டுமே என்று கவலைப்படுவதை விடுங்கள். தூக்கம் வரவில்லையென்றால், படுக்கை அறையை விட்டு வெளியேறி வேறு ஏதேனும் பணியில் ஈடுபடுங்கள். வெளியே சற்று உலாவுங்கள். அல்லது ஏதேனும் புத்தகம் படியுங்கள். களைப்பு ஏற்பட்டால் மீண்டும் படுக்கைக்குச் செல்லுங்கள். தூக்கம் தானாக வரும். ஒன்றை மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். படுக்கைக்குச் செல்லும்போது உங்கள் மற்ற பிரச்சினைகளையெல்லாம் மறந்து விடுங்கள்.

—இவை இந்த ஆராய்ச்சிக் கூட இயக்குநரின் அறிவுரைகள்.

—அமெரிக்கத் தகவல் அலுவலகம்





பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட

# வளர்ச்சிப் பணிகள்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசு மாதிரி பட்டுப் பண்ணைகளில் தாய் மரச் செடிகள் அமைத்துப் பராமரிக்க, பட்டு வளர்ச்சித் துறைக்கு அரசு நடப்பாண்டிற்கு ரூபாய் 6.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 4 இலட்சம் நாற்றங்கால் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது. மேலும், நடுத்தர மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படும். பயிர் வளர்க்கும் காலத்தில் விவசாயிகட்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படும். இதனால் இம்மாவட்டத்தைத் சார்ந்த சுமார் 160 குடும்பங்கள் பயன்பெறும்.

### நெடுஞ்சாலைத் துறை

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 60 கி.மீ. நீளத்திற்குச் சாலைகளைப் புதுப்பிக்கவும், சிறுபாலங்கள் கட்டவும் நடப்பாண்டிற்கு அரசு ரூ.240.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதில் மாநில அளவில் 101 சிறு பாலங்கள், மற்றும் ஒன்றியச் சாலைகளில் கட்டப்படும் திட்டத்தின்கீழ், 5 சிறுபாலங்கள் ஆகியவை கட்ட ரூ.24.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், பாலங்கள் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளன. மாநிலச் சாலைகள் திட்ட வேலைகளின் ஒதுக்கீட்டில் பெரம்பலூர் மானாமதுரை சாலையில் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. காரைக்குடி அருகில் சேர்மன் மெய்யப்பன் செட்டியார் சாலையில் ரூ.22 இலட்சம் செலவில் கட்டப்படும் பாலவேலைகள் அடுத்த மாதம் முடியும். கண்ணங்குடி புதுக்கோட்டை சாலைப் பராமரிப்புக்கு ரூ.17.70 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது.

ஆர்.எஸ்.மங்கலம்-இளையாங்குடி செல்லும் சாலையில் பிரிந்து அண்டக்குடி செல்லும் சாலை புதுப்பித்திட ரூ.6.50 இலட்சமும், நந்திக்கோவில்பட்டி-அரசானிபட்டி சாலையைப் புதுப்பித்திட ரூ. 19.25 இலட்சமும், மானாமதுரை-தொளி சாத்தநல்லூர் சாலையில் பிரிந்து சிவகங்கை இளையான்குடி செல்லும் சாலையை ரூ.20 இலட்சத்தில் புதுப்பிக்கவும், சிறப்புப் பழுது வேலைகளுக்காக ரூ.73.63 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மதுரை- தொண்டிச் சாலையைச் செப்பனிடவும் ரூ.20 இலட்சம் அரசு ஒதுக்கியுள்ளது. இவ்வகையில் இம்மாவட்டத்தில் ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீட்டின் மூலம் மொத்தம் 160 கி.மீ. நீளத்திற்குச் சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளன.

### பிற்பட்டோர் நலத்துறை

இம்மாவட்டத்தில் உள்ள பிற்பட்டோர் நலத்துறைக்குப் பல்வேறு நலத்திட்டப்பணிகளை நிறைவேற்றத் தமிழக அரசு ரூ.23 இலட்சம் நடப்பு ஆண்டிற்கு (1991-92) ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டில் கல்லூரி இலவசக் கல்வி உதவித்தொகையாக ரூ.10 இலட்சமும், நிலம் கையக செய்ய ரூ.1.50 இலட்சமும், முதல் தலைமுறையினருக்கு இலவச தொழில்கல்வி வழங்க ரூ.50,000 விடுதிகள் பராமரிப்புக்கு ரூ.30,00 மற்றும் பல்வேறு இனங்களுக்கு எ ரூ.12,61,000 ஒதுக்கீடு செய்து

- என். பாலையா
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன்
முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்

ளது. இதன் மூலம் சுமார் 3,700 பேர் பயன் பெறுவார்கள். மேலும் கல்லூரி விடுதிகள் செலவுக்கென ரூ.5,50,000, இலவசக் கல்லூரிக் கல்வி உதவித் தொகையாக ரூ.3,70,000 வழங்கியுள்ளது. மேலும் இதர இனங்களுக்கும் சேர்த்து ரூ.9,22,000 வழங்கியுள்ளது. இதன்மூலம் 625 பேர் பயன் பெறுவார்கள்.

**தாட்கோ**

இம்மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டப் பணிகளில் கடன் உதவி வழங்கிட ரூபாய் ஒரு கோடி வாழங்கியுள்ளது. இதன் மூலம் 800 ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஏழை மக்கள் பயன் பெறுவார்கள்.

இந்த நிதி ஒதுக்கீட்டில், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 200 நபர்களுக்கு ரூ.20 இலட்சம் கடன் வழங்கப்படும். சுயவேலை வாய்ப்புப் பயிற்சி ரூ.4 இலட்சம் செலவில் 150 நபர்களுக்குத் தரப் படும். வண்டி மாடுகள் வாங்க 125 நபர்களுக்கு ரூ.12 இலட்சம் வழங் கப்படும். தொகுப்பு வளர்ச்சித் திட் டத்தின்கீழ் 100 நபர்களுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படும். தனிநபர் தொழில் கடன்தரும் திட்டத்தின்கீழ் 30 நபர்களுக்கு ரூ.45 இலட்சம் கடன் தரப்படும். பெட்டிக்கடை வைத்துக்கொள்ள 20 நபர்களுக்கு ரூ.40,000 வழங்கப்படும். இரும்புப் பெட்டிக்கடை வைக்க 5 நபர்களுக்கு ரூ.45,000, சைக்கிளுடன் கூடிய விசைத் தெளிப்பான் வாங்க 10 நபர்களுக்கு ரூ.40,000, உழவு மாடு வாங்க 100 நபர்களுக்கு ரூ.4.50 இலட்சம், டயர்வண்டி மாடுகள் வாங்க 20 நபர்களுக்கு ரூ.3 இலட்சம், பம்புசெட் வாங்க 5 பேர்களுக்கு ரூ.50,000 இந்த ஆண்டு தாட்கோ மூலம் கடன் உதவி வழங்கப்படும்.

**பட்டு வளர்ச்சி, பிற்பட் டோர் நலன், ஆதிதிராவிடர் நலம், மண்வளப் பாதுகாப்பு முதலான பல துறைகளில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் வளர்ச் சிப் பணிகள் வேகமாக நடை பெற்று வருகின்றன. இவற் றைக் கோடிட்டுக் காட்டு கிறது இக்கட்டுரை.**

**கல்வித்துறை**

இம்மாவட்டம் திருப்புவனம் ஒன் றியத்தில் உள்ள கல்லூரணி நடு நிலைப்பள்ளியும், சிங்கம்புணரி ஒன்றியத்தில் உள்ள திருக்களாப்பட்டி நடுநிலைப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இம்மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம், நில மேம் பாட்டுத் திட்டம், இயந்திரக் சாகு படித் திட்டம், தனியார் குழாய்க் கிணறு திட்டம், கிணற்றை வளப் படுத்தும் திட்டம், வறட்சிக்கு இலக் காகும் பகுதித் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கு 1991-92-'ஆம் ஆண்டிற்குத் தமிழக அரசு ரூ.60 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இம்மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 3,500 எக்டேர் நிலம் பயன்பெறும். இதனால் 2,783 விவசாயிகள் பயன்பெறுவார்கள். மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் இந்து ஆதிதிராவிடருக்காகச் செயல் படுத்தப்படும் சிறப்பு நலத்திட்டத் திற்கு ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் 66 எக்டேர் நிலம் பயன்பெறுவதோடு 72 இந்து ஆதிதிராவிட மக்கள் பயன்பெறுவார்கள்.

நிலமேம்பாட்டுத் திட்டத்தில் டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு அரசு ரூபாய் 4.30 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் 90 எக்டேர் நிலப் பரப்பு பயன்பெறும். இயந்திரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் அரசு ரூபாய் 4.30 இலட்சம் நிதி ஒதுக்கி யுள்ளது. இதன்மூலம் 350 எக்டேர் நிலப்பரப்பு பயன்பெறும். தனியார் குழாய்க் கிணறுத் திட்டத்திற்கு ரூ.88 ஆயிரம் ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் 180 கிணறுகள் தோண் டப்படும். 269 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கிணறு களை வளப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.1.69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது. இதன்மூலம் 130 கிணறுகள் வளப்படுத்தப்படும். இதனால் 52 எக்டேர் நிலம் மேலும் பாசன வசதி பெறும் வாய்ப்புள்ளது.

வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் அரசு ரூ.31 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. இதன்மூலம் சமுதாயக் கிணறுகள் 9, தடுப்பணைகள் 111, கட்டப் படும். இதன்மூலம் சுமார் 4,300 பேர் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகமொத்தம் 1991-92-ஆம் ஆண்டிற்கு, பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூ.60 இலட்சத்தின் மூலம் 5,529 விவசாயிகள் பயன் பெறுவதோடு, 675 எக்டேர் நிலம் வளப்படுத்தப்படும்.

## அவர்கள் சொன்னார்கள்

★ நாம் எவ்வளவு செய்யப் போகி றோம் என்பது முக்கியமல்ல; எவ் வாறு செய்யப் போகிறோம் என் பதே முக்கியம். அதிகமாகச் செய் வதைக் காட்டிலும், செய்வதைத் திருத்தமாகச் செய்வதே சிறப்பு.

—ரஸ்கின்

★ நிலத்திற்கு அழகு நெல்லும் கரும்பும். குளத்துக்கு அழகு தாமரை, பெண்ணுக்கு அழகு நாணம். ஒரு தனி மனிதனுக்கு அழகு அவன் செய்யும் நற்செயல்கள்.

—விளம்பி நாகனார்



# 'எயிட்ஸ் நோய்' ஓர் அறிவுரை

டாக்டர் கே.எம். ராதாகிருஷ்ணன்
துணை இயக்குநர்
மருத்துவக் கல்வி இயக்ககம்

தனி மனித ஒழுக்கம் என்பது ஒரு சமுதாயத்திற்கு மிகவும் இன்றிய மையாதது என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் நேரம் வந்துவிட்டது. 'ஒரு மனிதனின் ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைகள் தவறு செய் யாத பல மனிதர்களை ஒரு பயங்கர மான நோயின் மூலம் தண்டிக்கின் றது என்ற உண்மை கண்டறியப் பட்டிருக்கும் இந்த நிலையில், அந்த ஒழுக்கமற்ற வாழ்க்கை முறைகளை அகற்றுவதன் மூலம் - இந்தச் சமு தாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றதொரு தீவிர முடிவை நமது அரசு எடுத்துள்ளது. அது என்ன அப்படிப்பட்ட பயங்கரமான நோய்? அதுதான், 'எயிட்ஸ்' என்று எல் லாரையும் அச்சுறுத்தும் பயங்கர நோய்.

'எயிட்ஸ்' என்பது (Acquired Immuno Deficiency Syndrome) என் பதன் சுருக்கமாகும். முதன் முதலில் இந்த நோய் 1981-இல் அமெரிக்கா வில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில், 'ஒரு பாலருக் கிடையே' நிகழ்கின்ற உடலுறவால், சில ஆண்கள் பாதிக்கப்பட்டனர். உடல் மெலிந்து, நுரையீரல்கள் சில 'சந்தர்ப்பவாத ஒட்டுண்ணிகளால்' பாதிக்கப்பட்டன. புற்றுநோயும் இவர்களில் சிலருக்குக் காணப் பட்டது. சில ஆண்டுகளில் இத் தகைய நோய்களை குறித்து நடை பெற்ற தீவிர சோதனைகள், இன்று 'எயிட்ஸ்' நோயின் இரகசியங்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்குக் கொணர்ந்திருக்கின்றன.

**நோய் ஏற்படக் காரணங்கள்**

'எயிட்ஸ்' நோய் ஏற்படுவதற்கு முக்கியமான காரணமாக விளங்கு வது HIVI என்னும் 'அதிநுண் ணியிரி'யாகும். மனித உடலின் தற் காப்புச் சக்தியைத் தணித்துவிடும் அதிநுண்ணியிரி என்பதுதான் இந்த எழுத்துக்களின் விளக்கம்.

**நோய் தாக்கும் முறை**

நமது உடலின் போர் வீரர்கள் இரத்தத்தில் காணப்படும் வெள்ளை அணுக்கள் எனப்படும் W B C-க்கள். இந்த வெள்ளை அணுக்கள் பல வகைப்படும். அவற்றில் (Lymphocyte) லிம்போஸைட் என்பது உடற்பாது காப்புத் துறையின் மிக முக்கிய அதிகாரி. இது நோயைத் தாக்கு வதற்குப்பல வழிகளைக் கையாளு கிறது. தானே முன்னின்று நேரடித் தாக்குதல் ஒருவகை. பிற அணுக் களை ஊக்குவித்து அவற்றைத் 'தாக் கும் அணுக்களாக' மாற்றுவது ஒரு வகை. தாக்குதலுக்கு உதவியாகச் சில நேரங்களில் தன் வகை அணுக் களையே மாற்றி 'உதவியாளர் களாக'த் தயாராக வைத்திருத்தல் ஒரு வகை.

இப்படிப் பலவகைகள் இருந்த போதும், மேற்கூறிய 'உதவியாளர் களாகப் பணிபுரியும் அணுக்களை (Helper cell) அதிக அளவில் குறைத்து விடுவதுதான், எயிட்ஸ் நோய் வைரஸ் செய்யும் முக்கிய செயலாகும்.

**நோய் பரவும் முறை**

உடல் உறவு (இருபாலர் உடல் உறவாக இருந்தாலும் சரி - ஒருபால் உடலுறவாக இருந்தாலும் சரி - ஒருவருக்கு இந்த நோய் இருந்தால் போதும் மற்றவருக்குள் நிச்சயமாக இது ஊடுருவி விடும்). 1%

சுத்திகரிக்கப்படாத ஊசிகள், ஊசிக்குழாய்களின் மூலம், இரத்தம் செலுத்துதல், இரத்தத்தின் பகுதி களைச் செலுத்துவதன் மூலமாக 90%

பாதிக்கப்பட்ட தாயின் மூலம், அவள் தாங்கும் சிசுவுக்குள் 20-30%.

மேற்கூறிய முறைகளால் நிச்சய மாகப் பரவக்கூடிய எயிட்ஸ் நோய், சில பழக்கங்களை மேற்கொண்டவர் களைத் 'தாக்கும் அபாய' விளிம்பில் நிற்க வைக்கிறது. அவர்கள் -

1. இருபாலர் உறவு மூலம்
- விலை மாதர்கள்

- பால் வினை நோய்க்காக மருத்துவ மனைக்குச் செல்பவர்கள்.
- ஆண்களின் அழைப்பின் பேரில் செல்லும் பெண்கள்.
- அலிகள்.

2. போதைப் பொருள் உபயோ கிப்போர் - முக்கியமாக 'இரத்தக் குழாயுள் நேரடியாக மருந்தைச் செலுத்திக் கொள்ளும் போதை அடிமைகள்.

3. பணத்திற்காக 'இரத்ததானம் அளிக்கும் பழக்கம் கொண்டவர்கள்

4. இரத்தமும் அதன் பல்வேறு பகுதிகளும் (அதாவது பெறு வார்கள்).
- இரத்தம் உறையா நோய் கொண் வர்கள்.
- கர்ப்பிணிப் பெண்கள்.

**நோயின் அறிகுறிகள்**

மிக விரைவாகவும், முதலிற் பாதிககப்படுவது...

1. நிணநீர்க் கழலைகள், பொரிது தல் கழுத்தின் பின்புறத்தில்...
காதுக்குப் பின்புறம்
கழுத்து எலும்புக்கு மேற்புறம்

## தொழுநோய் ஒழிப்புக்கு ரூபாய் 282 கோடி

நம் நாட்டில் தொழுநோயை ஒழிப்பதற்காக வங்கி நிதி உதவியுடனான ரூ. 282.95 கோடி திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, அடுத்த ஐந்தாண்டுகளில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும். கேரளம் உட்பட ஏழு மாநிலங்களில் உள்ள 143 மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

சென்ற ஆண்டு மார்ச் 30ஆம் தேதி நிலவரப்படி, நாட்டில் 25.6 லட்சம் தொழுநோயாளிகள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 21.4 லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சென்ற நிதியாண்டில் புதிதாக 1,81,971 தொழுநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, 1,30,419 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

—நன்றி திட்டம்,

இரண்டு அக்குள்களில்
முழங்கை அருகில்
தொடை இடுக்குகளில்
முழங்காலுக்குப் பின்புறம்

2. தொடர் காய்ச்சல்

3. காரணம் சொல்ல முடியாத பலவீனம்

4. இரவில் வேர்த்து விடுதல்

5. எடை குறைதல்

6. பேதியாதல்

நிண நீர்க்கழலைகள் உருப்பெருகுதல் மிக முக்கியமானதொரு அறிகுறியாகும். இந்த நிலை வந்தவர்களில் 30 சதவிகிதத்தினர் நிச்சயமாக 'எயிட்ஸ்' நோயினால் தாக்கப்பட்டு விடுகின்றனர். இவர்கள் நாளடைவில் உருக்குலைந்து நோய் எதிர்ப்புச் சக்தியின்றி இறந்து விடுகின்றனர். நோய்க்கிருமி உடலினுள் புகுந்து சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் சிலர் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகாமல் ஆரோக்கியமானவர் போலக் காணப்படுவார். ஆனால் அடுத்தவர்களுக்கு இந்த நோயைப் பரப்பக்கூடிய அளவு தன் உடலினுள் நோய்க் கிருமிகளைச் சுமந்து திரிவார் (Carrier).

### நோய் வராமல் தடுப்பது எவ்வாறு?

உடலின் 'நோய்த்தடுப்புச் சக்தியை'த் தாக்குவதன் மூலம் நோயை ஏற்படுத்தும் இந்த அதிநுண்ணுயிரிகளை உடனே அழிப்பது அத்தனை சுலபமல்ல, அதனால், உடலின் தடுப்புச் சக்தி'யை அதிகரிப்பதுதான் இந்த நோயின் மிக முக்கியமான சிகிச்சை. ஆனால் நோயின் தீவிரம் சிகிச்சையின் தீவிரத்தை முறியடித்து விடும் என்பது மருத்துவர்கள் அனுபவத்தில் கண்ட உண்மை. மேலும் நோய்க் கண்டவர்கள் பிறர்க்குப் பரப்பும் நிலையில் இருப்பவர்களாக இருப்பின் மனித குலத்திற்கு இது ஒரு அபாயம். அதனால், 'எயிட்ஸ்' வந்து குணப்படுத்துவதை விட வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும் என்பதை இன்று அரசு வலியுறுத்துகிறது.

### தடுப்பு முறைகள்

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நமது இந்தியக் கலாச்சாரத்தை மக்கள் உணர வேண்டும். 'ஒழுக்கம்' என்பது மனித குலத்தின் விலை மதிப்பில்லாச் சொத்து. 'மனைவி' அல்லாத மற்ற பெண்களுடன் உறவு கொள்ளும் பழக்கத்தை ஆண்கள் அறவே விட்டுவிடுவது அவர்களுக்கு நல்லது. அதுவும் விலைமாதர்களிடம் செல்லும் பழக்கமுடையவர்கள் நிச்சயமாக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். பிரயாணம் மேற்கொள்ளுபவர்கள், நீண்ட தூரம் வண்டி ஓட்டிக்கொண்டு வருபவர்கள், ஆகியோர் சில ஊர்களில் சில குறிப்பிட்ட பெண்களைச் சந்தித்து உறவு கொள்ளுவார்கள். இத்தகையோர் 'நிரோத்' போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதால் ஒரு உறுப்பிலிருந்து மற்றொரு உறுப்புக்குள் (ஒரு வேளை எயிட்ஸ் நோய்க்கிருமி அந்த ஆண் உடலிலோ அல்லது பெண் உடலிலோ இருந்தால்) நோய்க்கிருமி செலுத்துப்படுவதைத் தவிர்க்க முடிகிறது. இந்த முறை, மற்ற நோய்களும் பரவாமல் தடுக்கிறது.

2. முறையற்ற உடறவுகளை முடிந்தவரை தடுப்பது நலம். (ஆணோடு ஆண், பெண்ணோடு பெண் போன்றவை).

3. ஊசிகளின் மூலம் பரவுதலைத் தடுக்கச் சிறந்த வழி. 'ஒரு முறை பயன்பட்டு எறிந்துவிடக் கூடிய' (Disposable) சிரிஞ்ச் - ஊசியைப் பயன்படுத்தும் முறையாகும். ஒரு முறை பயன்படுத்தி - அந்த சிரிஞ்ச்-ஊசிஇரண்டையும் மீண்டும் கொதிக்க வைத்து வேறு நோயாளிகளுக்குப் பயன்படுத்துவது முந்தைய பழக்கம். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது கடைகளில் 'பக்குவப்படுத்தப்பட்ட சிரிஞ்சும், ஊசியும் 'பாலிதின் பைகளினுள் பொதியப்பட்டுக் கிடைக்கின்றன. எனவே, மருத்துவர்கள் ஊசிபோடும் போது 'ஒரு முறை பயன்பட்டு எறி யப்படும் ஊசியைப் பயன்படுத்தா தீர்கள் என்று நோயாளிகள் கேட்ட தில் தவறில்லை.

4. இரத்தம் செலுத்தப்படு இரத்த வங்கிகளில், 'சேகரித்து வைக்கப்பட்ட இரத்தத்தில் எயிட்ஸ் நோய்க்கிருமி உள்ளதா' என்று சோதனை செய்த பிறகுதான் அதை செலுத்துகிறார்கள். இது மிக நல் முறை. இரத்தம் பெறுபவர்க இந்தத் தகவலைக் கேட்டுத் தெரிந் கொள்வதிலும் தவறில்லை.

சமுதாயத்தின் நலம், அத உறுப்பினராகிய தனி மனிதனி நலத்தில்தான் அடங்கியுள்ளது எ றால் அது மிகையாகாது. உடலை சிறிது சிறிதாக அழித்து விடக்கூடி 'எயிட்ஸ்' நோய் பரவாமல் பார் துக் கொள்ளுவது நாட்டின் நல நாடும் ஒவ்வொருவரின் கடம யாகும்.






### பல்லவ பவனி

ஆசிரியர்: மு. குப்புசாமி
வெளியிட்டோர்:
ஜெயசக்தி பதிப்பகம்,
45-ஏ, பம்மல் நெடுஞ்சாலை,
பம்மல், சென்னை-600 075.
பக்கம்:224 விலை:ரூ.26/-

சுற்றுலாத்தலம் என்பது வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாய் அமையும் புனிதமான தலங்களும் ஆகும்.

பண்டைய பெருமை, வரலாற்றுச் சிறப்பு, தற்கால நிலைமை முதலான பல செய்திகளை அறிந்து கொள்வதற்குச் சுற்றுலாத் தலமும், சுற்றுலாப் பயணமும் நமக்கு உதவுகிறது. அந்த வகையில், இந்த நூலில் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பத்து ஊர்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

சென்னை, முத்துக்காடு, திருப்பெரும்புதூர், திருத்தணி, வேடந்தாங்கல், மாமல்லபுரம், திருக்கழுக் குன்றம், உத்திரமேரூர், காஞ்சிப்ரம் ஆகிய திருத்தலங்களோடு, வி.ஜி.பி. தங்கக் கடற்கரை பற்றிய செய்திகளும் உள்ளன. சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லோருமே படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

### பாண்டிச்சேரி மாநிலச் சுற்றுலாத் தலங்கள்

ஆசிரியர்: அ. ராம்கோபால்,
வெளியிட்டோர்:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.
பக்கம்:48 விலை:ரூ.8/-

தமிழருக்கான மத்திய ஆட்சிப் பிரதேசம் தமிழ்நாடு மட்டுமல்ல; புதுவை மாநிலமும்தான். இந்தச் சிறப்புடைய அந்த மாநிலம், பிரஞ்சுக் காலனியாக இருந்த காலத்தில் பெற்றிருந்த பெருமை குறிப்பிடத்தக்கதாகும். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் சிலர், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கெடுபிடியிலிருந்து தப்பிச் சென்று புதுவையைச் சரணாலயமாக்கிக் கொண்டார்கள்.

அந்தச் சிறப்புமிக்க மாநிலம் மிகச் சிறிய அளவினதே என்றாலும், அங்கே நாம் பார்த்து மகிழத்தக்க இடங்கள் பல உண்டு.

என்னவெல்லாம் பார்க்கலாம்- எப்படியெல்லாம் செல்லலாம்- எங்கெல்லாம் தங்கலாம் என விவரிக்கும் நூல் இது. பயண நூல் ஆர்வலர்கள் படித்துக் களிக்கலாம்.

—'ராஜு'

### மனக்கதவுகள்

தொகுப்பாசிரியர்கள்:
ஸ்வீட்லின், பிரியா
வெளியிட்டோர்:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பூங்கா நகர், சென்னை-600 003.
பக்கம்:186 விலை:ரூ.30/-

இருபத்திரண்டு சிறுகதைகளை ஏந்தி வந்திருக்கும் இந்தத் தொகுப்பு சமுதாயத்திற்கு நீதி போதனைகளை ஓதி உரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மனித நேயம், கருணை நெஞ்சம், வாழ்க்கை முறை, பிறர்க்குதவும் பெரும் நோக்கு, நற்பாதையிலிருந்து விலகாத நெஞ்சுரம், இவை போன்ற தூய பண்புகளை வலியுறுத்துகின்றன இந்தச் சிறுகதைகள். விதவை மணத்தை வாழ்த்தி வரவேற்கும் வீரவரலாற்றுக் கதைகளும் இத்தொகுப்பில் ஒளி வீசுகின்றன.

டமார், டுமார் நடை இல்லாமல் அனைத்துக் கதைகளும் ஆற்றொழுக்கு நடையில் இதயத்தைத் தொடும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. கருத்துச் செறிவில் ஒன்றை ஒன்று போட்டியிடுகின்றது. குறிப்பாக 'ஓட்டல் சாப்பாடு' என்னும் சிறுகதை உள்ளுறை உவமம் செறிந்த சங்க இலக்கியத்தின் தரத்தை எட்டியிருக்கிறது என்று கூறலாம்.

—தமிழ்ப்பித்தன்

### வண்ணப் பூங்கொத்து

ஆசிரியர்: கவிஞர் அழகுக் கண்ணன்
வெளியிட்டோர்:
ஆனந்தகுமரன் வெளியீட்டகம்,
மனை எண்:960, அண்ணாநகர் மேற்கு
விரிவாக்கம், சென்னை-600 101.
பக்கம்:148 விலை:ரூ.15/-

இலக்கணம் கெடாத மரபுக் கவிதைகள், இசை நயம்மிக்க சந்தப் பாடல்கள் ஆகியவற்றின் தொகுப்பு நூல் இது. பதினைந்து தலைப்புகளிலான பிரிவுகளில் ஏராளமான கவிதைகள் அணிவகுத்துள்ளன.

எளிய சொற்களால் உருவாக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான கவிதைகளில் நல வாழ்வுக்கான அறிவுரைகள் பொதிந்துள்ளன.

துணைவியாருக்குக் காணிக்கையாக ஆசிரியரால் படைக்கப்பட்டுள்ள இந்த நூலில்- 'மாமியார் புலம்பல்', 'மருமகள் முறையீடு', 'இணையில்லாப் பாட்டி', 'எங்கள் வீட்டு ஆயா' எல்லாம் கூட உண்டு. படித்து மகிழலாம்.

—'இந்திரன்'

### நீயும் நானும்... நானும் நீயும்...

ஆசிரியர்: ஹம்லா தனகோபால்
வெளியீடு:
தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு,
ஆலந்தூர், சென்னை-600 016.
பக்கம்:88 விலை:ரூ.11/-

ஒரே தலைப்பைக் கொண்ட நீண்ட உரைக் கவிதை

கவிஞர், 'நீ' என்று அழைக்கும் 'அவன்' வரவை எண்ணிக் காத்திருக்கும் போது ஏற்படும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளே இவ்வுரைக் கவிதை. கோபம், தாபம், வெறுப்பு, விருப்பு என்று அத்தனை உணர்வுகளையும் 'அவன்' மீது அள்ளி வீசி இருக்கும் புதுமை, ஆரம்பித்ததும் முடித்துவிட்டுத்தான் வைக்கத் தோன்றும் துரித நடை. நல்ல உரைக் கவிதை நூல்.

—என். குமாரசாமி






# வளர்ச்சிக்கு வழிகாட்டும் வணிகவரிச் சீரமைப்பு

## சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வர் உரை

**வணிக வரித்துறை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 25.9.'91 அன்று சட்டப் பேரவையில் பேசியதாவது:**

'வணிக வரிகள்' என்பதில் பொது விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, விற்பனை மேல் வரி, மத்திய விற்பனை வரி, கேளிக்கை வரி, பந்தய வரி, தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதி மீதான வரி, விளம்பர வரி மற்றும் வாகனங்கள் மீதான நுழைவு வரி ஆகியவைகள் அடங்கும்.

விற்பனை வரியின் சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்த்தால், அதன் ஆரம்பம் நீதியை நிலை நாட்டிய 'மனுச் சக்கரவர்த்தி' காலத்திலேயே தொடங்கப்பெற்றது என்பது நமக்கு வியப்பளிப்பதாக உள்ளது. மனுச் சக்கரவர்த்தியின் காலத்தில் அரசின் வருவாயில் முக்கியப் பங்காக விளங்கியது விற்பனை வரி. இவ்வரி வாங்கி விற்பனை செய்யப்படும் பொருட்களின் விலையில் 5 சதவிகிதமாக இருந்தது. எல்லாப் பொருட்களையும் பற்றி அறிந்த, அனுபவம் மிக்கவர்கள் மூலமாகப் பொருள்களின் விலை அறியப்பட்டு, அவற்றின் மீது 5 சதவிகித விற்பனை வரி வசூல் செய்யப்பட்டது. அக்காலத்தில் வரியைப் பணமாக அன்றி அதற்கிணையான பொருளாகவும் செலுத்திட வழி இருந்தது. மக்கள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாக்கும் அரசருக்கு விற்பனை செய்யப்படும் 50 பசுக்களுக்கு ஒரு பசுவும், தங்கத்தில் 50-இல் ஒரு பங்கும், தானியங்களில் பத்தில் ஒரு பங்குமாக வரி செலுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் விற்பனை வரியின் ஆரம்பம் 1939-ஆம் ஆண்டாகும். அரசின் மதுவிலக்குக் கொள்கையினால் அப்போது மிக அதிகம் எனக் கருதப்பட்ட ரூ.5 கோடி வருவாய் இழப்பினை ஈடுசெய்ய அன்றைய சென்னை மாகாணப் பிரதம மந்திரி மூதறிஞர் இராஜாஜி என்று அன்புடன் அழைக்கப்படும் மாண்புமிகு சர்.சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களால் விற்பனை வரி மசோதா சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. மசோதாவை அறிமுகப்படுத்தி இச்சட்டத்தின் நோக்கத்தினையும் காரணங்களையும் விளக்கி ஆற்றிய உரையின் ஒருசில பகுதிகளைப் படிப்பதற்கு உங்கள் அனுமதியைக் கோருகிறேன்.

'இந்த மசோதாவில் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி விற்பனைத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா என்ற அளவில் உள்ளது. தரும காரியங்களுக்காகப் பெரும்பான்மையான வணிகர்கள் வழக்கமாகத் தாங்கள் செய்யும் விற்பனைக்கு எந்த அளவிற்கு வரி செலுத்த வேண்டுமோ, அதைவிட மூன்று மடங்கு அதிகமாக 'மகிமை' என்ற பெயரில் செலவிடும் வழக்கம் வேரூன்றி உள்ளது. அரசின் தேவைகளை ஈடுகட்ட புதிய வருவாய் வழிவகைகளைத் தேடும் தற்போதைய நிலையில் இந்தப் புதிய வரி அதிகச் சுமையாக இருக்காது எனக் கருதப்படுகிறது.'

1939-ஆம் ஆண்டு நிலவிய அதே நிலைதான் தற்போது நிலவுகிறது என்பதை உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையினைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதோடு பிற நல்வாழ்வுத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த முற்படும் இவ்வேளையில் புதிய வருவாய் வழிவகைகளைத் கண்டறியும் நிலையில் இந்த அரசு உள்ளது. விற்பனை வரி, அன்றிருந்ததைப் போன்றே இப்பொழுதும் அரசாங்கத்தின் முக்கிய வருவாயாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

மாநிலத்தின் மொத்த வருவாயில் வணிகவரியின் பங்கு 70 சதவிகிதமாகும். அரசின் கொள்கைகள் மற்றும் வணிகர்களின் கோரிக்கைகள் ஆகியவற்றின்பேரில் விற்பனை வரி விகிதம் மற்றும் வரி விதிப்புமுறை ஆகியவற்றில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. வணிகவரிச் சட்டத்தினைச் சீரமைக்கும் பொருட்டு ஆரம்பத்தில் பொருளாதார நிபுணர் திரு. பி.எஸ். லோகநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிலிருந்து ஆரம்பித்து தொடர்ந்து இந்திய ஆட்சிப் பணியைச் சார்ந்த திரு எஸ்.ஆர்.கெய்வார், திரு எஸ்.பி. சீனிவாசன், திரு கே. கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுக்கள் வணிகவரிச் சீரமைப்பிற்கான பல்வேறு ஆலோசனைகளை நல்கியுள்ளன.

எங்களது தேர்தல் அறிக்கையில் வரிச் சீரமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதை உறுப்

★ மக்களின் தேவைக்கு ஏற்ப, பாலை உற்பத்தி செய்யத் திட்டமிடுவது.

★ நவீன விஞ்ஞான முறைகளைக் கடைப்பிடித்து, தரமான கறவை மாடுகளைப் பராமரிக்கச் செய்து பால் உற்பத்தியைப் பெருக்க வழி வகை செய்வது.

★ உற்பத்தியாகும் பாலை நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பச் சாதனங்களைக் கொண்டு பக்குவப்படுத்தி பாலின் தரம் குறைவுபடாமல் பாதுகாத்து, ஒழுங்கான முறையில் விநியோகம் செய்வது.

★ முன்னேற்றமான நிர்வாகத் தொழில்நுட்பம், உன்னதமான வியாபார நிர்வாகம் மூலம். (Advanced Management Technics and Business Administration) உற்பத்தியாளர்களுக்கு நல்ல பலனும், நல்ல விலையும் இதரப் பயன்களும் கிடைக்கச் செய்வது.

இந்த உன்னதமான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றைச் செயல்படுத்தி மக்களுக்கு அரும்பணியாற்றி வருகிறது பால் வளத்துறை.

தமிழ்நாட்டில் 8,492 ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இவற்றில் விவசாயிகளும் ஏனைய பிரிவினரும், ஆதிதிராவிடப் பிரிவினரும், குறிப்பாகப் பெண்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த உறுப்பினர்கள் தினமும் காலையிலும், மாலையிலும், தரும் பாலை நவீன மின்னணுப் பால் சோதனை மூலம் (Electronic Milk Tester) பாலின் தரத்தைச் சோதனை செய்து, அதன் அடிப்படையில் பால் உற்பத்தியாளர்கள் தரும் பாலின் தரத்திற்குத் தக்கவாறு விலையை நிர்ணயம் செய்து கொடுப்பதால் பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கின்றது.



சங்கம் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யும் பாலை உள்ளூர் தேவைக்கு விற்பனை செய்தது போக மீதி உள்ள மாவட்டப் பாலை உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள், மாவட்டத்தில் பல இடங்களில் நிறுவியுள்ள பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கிறது. அரசு நிர்ணயம் செய்த விலையில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் தரத்தின் அடிப்படையில், சங்கங்கள் கொள்முதல் விலை கொடுப்பதால் உறுப்பினர்கள் தங்கள் பாலுக்கு நல்ல விலையைப் பெற்றுப் பயனடைகிறார்கள். இதனால் தமிழ்நாடு முழுவதும் பாலுக்கு ஒரே மாதிரியான விலை நிர்ணயம் செய்யப்பட்டு, நல்ல விலை கிடைக்க ஆவன செய்யப்பட்டு உள்ளது.

பால் பெருக்குத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், தரமான உயர்ந்த இன கறவை மாடுகளை வாங்குவதற்கு, தாராளமாகக் கடன் வசதி செய்து கொடுக்க முன்வந்துள்ளன. மாடு ஒன்றுக்கு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள விவசாயக் கூலிகள் மற்றும் இதர பிரிவினருக்கு ரூ.3,200 வரை கடன் கொடுத்து உதவி செய்கின்றன. இவ்வாறு வழங்கப்படும் கடன்களை எளிமையான தவணை முறையில் பால் பணத்திலிருந்து பிடித்தம் செய்வதன் மூலம் உறுப்பினர்களுக்கு எவ்விதமான சிரமமும் இல்லாத வகையில் வசூல் செய்யப்படுகிறது. ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கும், ஆதிதிராவிடராக இருந்து கிருஸ்தவர்களாக மாறிய உறுப்பினர்களுக்கும் கறவை மாட்டுக் கடனில் 50 சதவிகிதம் அதாவது ரூ.1,600 அரசு மானியம் வழங்கப்படுகின்றது. இவ்வாறு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் முழுவதும் கட்டுறுதி செய்யப்பட்ட கடன்கள் ஆகும். கடன் வாங்கிய காலத்தில் கறவை மாடுகள் நோய் வாய்ப்பட்டு இறந்து போனாலோ அல்லது எதிர்பாராத விபத்துக்களில் சிக்கி கால்நடை இறந்து போனாலோ, உறுப்பினர்களின் நிலுவைக் கடன் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

தகுதி வாய்ந்த கால்நடை மருத்துவர்கள் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சென்று கறவை மாடுகளைச் சோதித்து சங்க உறுப்பினர்களின் மாடுகளுக்கு இலவச மருத்துவ வசதி செய்துகொடுக்கிறது. சங்கத்தில் பணிபுரியும் செயலாளர்களுக்கு மாடுகளின் நோய்களுக்கு முதலுதவி அளிப்பதற்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் சினை ஊசிபோடப் பயிற்சியும் அளிக்கப்பட்டு உள்ளது. கறவை மாடுகளுக்குத் தேவையான அனைத்து வகை மருந்துப் பொருட்களும் இலவசமாகக் கிடைத்திடச் சங்கம் ஆவன செய்துவருகிறது.

பால் வற்றிய கால் நடைகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் செய்வதற்கும், உறை விந்துக் குடுவைகள், மற்றும் தேவையான கருவிகள் வாங்குவதற்கும் தகுதி வாய்ந்த மருத்துவர்களைக் கொண்டு செயற்கை முறைக் கருவூட்டல் செய்யவும் சங்கங்கள் ஆவன செய்கின்றன.

கறவை இனங்களுக்கு அதிக அளவில் பால் கொடுக்கக்கூடிய ஊட்டச் சக்தி மிக்க கால்நடைத் தீவனங்களைத் தருவித்துக் கொடுப்பதற்கும், நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பசும்புல் வளர்த்து உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்வதிலும் சங்கங்கள் செயலாற்றி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் சங்கம், உறுப்பினர்களின் பங்குத்தொகைக்கு இலாப ஈவு வழங்குவதுடன், சங்கத்தில் கிடைக்கும் அதிகப்படியான வருவாயிலிருந்து அங்கத்தினர்கள் ஆண்டு முழுவதும் சங்கத்திற்கு வழங்கிய பால் அளவின் அடிப்படையில். உறுப்பினர்களுக்கே மீண்டும் கூடுதல் விலை ஆதரவு கழிவுத் தொகை (Patrnage Rebate) கொடுத்து உறுப்பினர்களை ஊக்கப்படுத்தி அவர்தம் நலன்களைப் பாதுகாத்து வருகின்றன.

## முதல் மகளிர் வங்கி

சுதந்திரத் திருநாளன்று மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாயில் மகளிரால், மகளிருக்காக நடத்தப்படும் மகளிர் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே முதல் மகளிர் வங்கியாகும். முன்னாள் முதல்வர் திரு. பாபாசாகிப் போஷ்லேயின் மகள் திருமதி சரோஜ் போஷ்லே இதன் தலைவராவார். மகளிர் நலம் பேணும்நோக்கில் இவ்வங்கி செயல்படும். முற்றிலும் பெண்களே பணிபுரியும் இவ்வங்கியின் பெயர், 'பிரியதர்ஷினி மகளிர் கூட்டுறவு வங்கி' என்பதாகும்.

இவ்வாறு பல வகைகளிலும், பால் உற்பத்தியாளர்களின் நலன்களையும், கறவை இனங்களின் தரத்தை உயர்த்துவதில் அதிக அக்கறை உணர்வுடன் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் கவனித்து வருவதால், கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆற்றும் பணி போற்றத் தக்கதாகும்.

இவ்வாறு ஆரம்பப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பாலில், உள்ளூர் விற்பனை போக, பெரும் அளவு பால், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் செயல்படும் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் மாவட்டத்தின் பல இடங்களில் நிறுவியுள்ள தங்கள் சங்கத்திற்கு அருகாமையிலுள்ள குளிரூட்டும் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ்வகையில் குளிரூட்டும் நிலையங்களில் சேகரிக்கப்படும் பால் பதப்படுத்தப்பட்டு மாவட்டத் தலைநகரில் உள்ள ஒன்றியங்களுக்கு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதிலும் 17 மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் மதுரை, பெரியார், சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள ஒன்றியங்கள் பாலைப் பக்குவப்படுத்துவதோடு, வெண்ணை, நெய், பால் பவுடர் ஆகிய துணைப் பொருட்களையும் தயாரிக்கும் வசதி மிகுந்த பெரிய பால் பண்ணைகளாகும் (Feeder balancing Dairy) ஒவ்வொரு ஒன்றியத்திலும் அந்த மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. ஒன்றியம் உறுப்பினர் சங்கங்களிடமிருந்து பாலை தினமும் காலையிலும், மாலையிலும் சேகரித்துக் கொண்டு வந்து, குளிரூட்டும் நிலையங்கள் மூலம் குளிர்வித்துப் பதப்படுத்தி தலைமைப் பால் பதனத் தொழிற்சாலைக்குக் கொண்டு வந்து, பாலைப் பதப்படுத்தி மொத்தமாகவும் அரை லிட்டர், ஒரு லிட்டர் கொள்ளளவுள்ள பாலித்தீன் பைகளில் நிரப்பி மக்களுக்குச் சில்லரையாகவும் விற்பனை செய்கின்றது. மாவட்டப் பால் பண்ணைகளின் தேவைக்கு அதிகமான பால், மாநிலத் தலைநகரான சென்னைக்கு அனுப்பி, ஆவின் நிறுவனம் மூலம் விற்கப்படுகின்றது. மீதியுள்ள பாலை, துணைப் பொருட்களாகத் தயாரித்துப் பொதுமக்களுக்கு நேரடியாகவும், சென்னையிலுள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் இணையம் எனப்படும் ஆவின்நிறுவனம்மூலமும் விநியோகம் செய்கிறது.

சென்னை மற்றும் அதனைச் சுற்றி உள்ள புறநகர்ப் பகுதிகளிலும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 397 விற்பனை நிலையங்கள் மூலமும் மற்றும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமும்,காலையிலும் மாலையிலும் சேர்ந்து தினசரி 6.59 இலட்சம் லிட்டர்கள் பால் விநியோகம் செய்யப்படுகிறது. நிலைப்படுத்தப்பட்ட பால் (Standardised Milk) லிட்டர் ஒன்றுக்கு 5.00-க்கும் சுவையூட்டிய பால் (Toned Milk) ரூ.4.90-க்கும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மேலை நாடுகளில் உள்ளதைப்போல் சென்னை நகரில் 150 தானியங்கிப் பால் விற்பனை நிலையங்களின் மூலமும் பைபர் பிளாஸ்டிக் டாங்கிகள் மூலமும் சுகாதார முறையில் தரமான பால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருவது, ஆவினின் மக்கள் சேவையில் ஒரு பகுதியாகும்.

பால் விநியோகம் செய்வதோடு மட்டும் அல்லாமல் பால் துணைப் பொருட்களான, வெண்ணெய், நெய், பால் பவுடர், கோவா, ஐஸ் கிரீம், நறுமணப் பால், பாலாடைக் கட்டி ஆகிய உப பொருட்களையும் தயாரித்து நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. இவ்வகையான பால் பொருட்களுக்குப் பொதுமக்களிடையே பெரிதும் வரவேற்புள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

1958-இல் மாதவரத்தில் முதலாவது பால் பண்ணை ஆரம்பித்த போது ஒரு சில நூறு லிட்டர் பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் தினசரி 13 இலட்சம் லிட்டர்கள் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ்வாறு மக்கள் தொகை வளர்ச்சிக்கு ஏற்ப, மக்களின் தேவைக்கு ஏற்பத் திட்டங்களைத் தயார் செய்து அவைகளைச் செயல்படுத்துவதிலும் பால்வளத்துறையும், ஆவின் நிறுவனமும் மிகுந்த முன்னோட்டத்துடன் செயல்பட்டு வருகின்றன. குஜராத் மாநிலத்தில் செயல்படுவதைப்போல், தமிழ்நாட்டிலும் மூன்று பால் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்தி பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையப்பட்டு உள்ளது. தற்பொழுது மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தின்மூலம் ரூ.69 கோடி அளவிற்குத் திட்டப்பணிகளைச் செயலாக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த மூன்றாவது பால் பெருக்குத் திட்டத்தில் கீழ்க்கண்ட திட்டப்பணிகள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுச் செயலாக்கப் பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

1. சென்னை அடையாறு பகுதியில், சோளிங்கநல்லூரில் தினசரி நான்கு இலட்சம் லிட்டர் பால் பதனப்படுத்த வசதிமிக்க புதிய பால் பதனத் தொழிற்சாலை நிறுவத் திட்டமிட்டு கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன.

# இலவசத் தொழிற்கல்வித் திட்டம்

சட்டமன்றப் பேரவையில் 18.9.91 அன்று பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப் பட்டோர் நல மானியக் கோரிக்கை விவாதத் திற்குப் பதிலளித்துப் பேசும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சட்டம் ஆகிய தொழிற் கல்லூரிகளில் படிக்கும் பிற்படுத் தப்பட்ட மாணவ மாணவியருக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் மற்றும் கட்டாயமாகச் செலுத்தத்தக்க ஏனைய கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து இனி விலக்கு அளிக்கப்படும் என அறிவித்தார்.

1. பெற்றோரின்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ.12 ஆயிரத்திற்கு மேற்படக்கூடாது.

2. இதுவரையில் பட்டதாரி எவரும் இல்லாத ஒரு குடும்பத்தைச் சார்ந்தவ்ராக அம்மாணவ, மாணவியர் இருக்கவேண்டும்.

அவ்வறிவிப்பிற்கேற்ப, பிற்படுத்தப்பட்ட வகுப் பைச் சார்ந்த மாணவ மாணவியருக்குத் தொழிற் கல்வி வரை இலவசக் கல்வி வழங்குவதற்குரிய அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இலவசக் கல்வித் திட்டம், சுய நிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடுகளின் கீழ் அனுமதிக் கப்பட்டு, பயின்று வரும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் பொருந்தும். அவர்களுக்குத் தொழிற்கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் மற்றும் சட்டக் கல்வி இயக்குநர் ஆகி யோர் அரசு கல்லூரிகளுக்கு நிர்ணயித்த கட் டணங்கள்படி விலக்கு அளிக்கப்படும்.

பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான இந்த இலவசத் தொழில் கல்வித் திட்டம் 1991-92-ஆம் கல்வி ஆண்டிலிருந்தே அமலுக்கு வருகிறது.

---

2. திருச்சி மாவட்டத்தில் தினசரி 1.50 இலட்சம் லிட்டர் பாலைக் குளிர்விக்க குளிர்ப் பதன இயந் திரங்கள் நிறுவப்பட உள்ளன.

3. விழுப்புரம் பால் பண்ணை யில் தினசரி ஒரு இலட்சம் லிட்டர் பாலைக் குளிர்ப்படுத்த குளிர்ப் பதன இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன.

4. சென்னை அம்பத்தூரில், தற்பொழுது தினசரி மூன்று இலட்சம் லிட்டரில் திறனிலிருந்து நான்கு இலட்சம் லிட்டர் அளவுக்குத் திறன் கொண்ட பால் பக்குவப்படுத்த தொழிற்சாலை விரிவாக்கப்பட் உள்ளது.

5. இவை தவிர, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் உள்ள கீழ்க் கண்ட பால்பதன ஆலைகள் விரிவு படுத்தத் திட்டமிடப்பட்டுத் திட்டப் பணிகள் செயலாக்கப்பட்டு வரப் படுகின்றன.

*மதுரை:* நாள் ஒன்றுக்குப் பால் பதனப்படுத்தும் திறன் 1.5 இலட்சம் லிட்டரில் இருந்து 2 இலட்சம் லிட்டர்கள்.

**சேலம்:** நாள் ஒன்றுக்குப் பால் பதனப்படுத்தும் திறன் 2 இலட்சம் லிட்டரில் இருந்து 3 இலட்சம் லிட்டர்கள்.

**கோவை:** நாள் ஒன்றுக்குப் பால் பதனத்திறன் 1 இலட்சம் லிட்டரில் இருந்து 2 இலட்சம் லிட்டர்கள்.

**கிருஷ்ணகிரி:** நாள் ஒன்றுக்குப் பால் பதனத்திறன் 1 இலட்சம் லிட்டரில் இருந்து 1.50 இலட்சம் லிட்டர்கள். இவை தவிர மதுரை மாவட்டம் தேனி, திருச்சி மாவட்டம் பெரம்பலூர், கரூர், சேலம் மாவட்டம் நாமக்கல், குடக்கல் ஆகிய இடங் களில் புதியதாகப் பால் குளிரூட்டு நிலையங்கள் (Chilling Center) அமைக்கப்பட உள்ளன.

பால் உற்பத்தி செய்யும் உறுப் பினர்களின் கறவை மாடுகளுக்குப் போதுமான அளவு ஊட்டச்சத்து மிக்க கால்நடைத் தீவனம் கிடைப்ப தற்காக, கப்பலூரில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக்டன் அளவு உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைத் தீவனத் தயாரிப்புத் தொழிற்சாலை நிறுவப் பட உள்ளது. பெரியார் மாவட்டம் ஈரோட்டில் 30 மெட்ரிக் டன் உற் பத்தித்திறன் கொண்ட பால் பவுடர் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப் பட உள்ளது.

இத்திட்டத்தின் குறிக்கோள் நாள் ஒன்றுக்குப் பால் பதப்படுத் தும் கொள்திறனைத் தற்போதுள்ள 11.00 இலட்சம் லிட்டரில் இருந்து 21.30 இலட்சம் லிட்டராக உயர்த் துவதாகும். அவ்வாறே பால் கொள் முதல் மற்றும் விற்பனையின் அள வும் நாள் ஒன்றுக்கு 13 இலட்சம் லிட்டரில் இருந்து 18 இலட்சம் லிட்ட ராக அதிகரிக்கச் செய்யவும் திட்டக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட உள்ளதால், தமிழ்நாட்டில் அடுத்த பத்து ஆண்டு களுக்குப் பால் தட்டுப்பாடு ஏற் படாது என்று பொதுமக்கள் உறுதி யாகவும் திடமாகவும் நம்பலாம். ●



இராமநாதபுரம் மாவட்டத்தில்

# தொழில் வளர்ச்சி

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்டத் தொழில் மையம் 1986-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. தொழில் வளர்ச்சியை மாவட்டத் தின் எல்லாப் பகுதிகளிலும் விரி வாக்கும் நோக்கத்துடன், அனைத் துப் பணிகளையும் ஒரு குடையின் கீழ் வழங்கும் அமைப்பாக இது செயல்பட்டு வருகிறது.

தொழில் வளர்ச்சி மேம்பாடு அடைய மத்திய அரசும் மாநில அரசும் பல சலுகைகளையும் மாநிலத் திட்டங்களையும், வசதிகளையும் செய்து வருகிறது. மேலும் இம் மாவட்டத்தில் உள்ள இராமநாத புரம், பரமக்குடி, கமுதி, முது குளத்தூர், திருவாடானை, இராமேஸ் வரம் ஆகிய 6 வட்டங்களும் தொழில் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக் கப்பட்டுள்ளன. எனவே, சிறப்புச் சலுகைகள் பெறுவதற்கும் இம் மாவட்டத்தில் தொழில் தொடங்கு வதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

ஆர்வமுள்ள இளம் தொழில் முனைவோர்களைக் கண்டறியும் பொருட்டு மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் தொழில் ஊக்கு விப்பு முகாம்கள் இதுவரை 82 கூட்டங்கள் நடத்தப்பட்டு, சுமார் 580 தொழில் முனைவோர்கள் கண்டறியப்பட்டு, தொழில் தொடங்க தகுந்த அறிவுரைகளும் உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

1991-92-ஆம் ஆண்டில் இது வரையில் 13 தொழில் ஊக்குவிப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 165 தொழில் முனைவோர்கள் புதி தாகக் கண்டறியப்பட்டுத் தொழில் தொடங்க தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் தொடங்க உள்ள வாய்ப்புகளை விளம்பரப்படுத்தும் பொருட்டு இரண்டு தொழில் கருத்தரங்குகளை யும் 25 நபர்களுக்குத் தொழில் மேம்பாட்டுப் பயிற்சியை நடத்தி அதில் 7 நபர்கள் தொழில் தொடங்கும் நிலையில் உள்ளனர். தற்சமயம் இராமேஸ்வரத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனத்தின் உதவி யுடன் 25 நபர்களுக்குத் தொழில்

**தொழில் முனைவோர் களுக்கு அரசு வழங்கும் சலு கைகளையும் இதர வசதி களையும் முன்னுரிமையில் பெறுவதற்குத் தேவையான தற்காலிகச் சிறுதொழில் சான்றிதழை மாவட்டத் தொழில் மையம் வழங்கு கிறது.**

**இராமநாதபுரம் மாவட்டத் தில் 265 கி.மீட்டர் தூரத் திற்கு அமைந்துள்ள கட லோரப் பகுதியில் மீன் பதனிடும் தொழில்கள், கோழித் தீவனம், மீன் வளங்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.**

முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி 24.9.91 முதல் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.

தொழில் முனைவோர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளையும் இதர வசதிகளையும் முன்னுரிமை யில் பெறுவதற்குத் தேவையான தற் காலிகச் சிறுதொழில் சான்றிதழ் மாவட்டத் தொழில் மையம் வழங்கு கிறது. இம்மையம் தொடங்கப்பட்ட பின்னர், 2,952 தொழில் முனை வோர்கள் கண்டறியப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 700 தொழில்களில் 30.9.91 வரை 369 தொழில் முனைவோர்கள் கண் டறியப்பட்டு தற்காலிகப் பதிவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் தொடங்கப்பட்ட நிறு வனங்களுக்கு அரசு வழங்கும் மானி யங்களும் வசதிகளும் பெறுவதற்கு அடிப்படைத் தேவையான நிரந்தரப் பதிவுச் சான்றிதழை மாவட்டத் தொழில் மையம் வழங்கி வருகிறது. 406 தொழில் இயங்கி வந்த இம் மாவட்டத்தில் 31.3.91 முடிய 1,149 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றின் மூலமாக 6,398 நபர் களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 250 தொழில் களில் 30.9.91 முடிய 125 தொழில்கள் புதிதாகப் பதிவு செய் யப்பட்டு 326 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களை பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள் இயங்கி வருகின்றன. இதுபோன்று தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து கைவினைத் தொழில் சான்றிதழ் வழங்குவதுடன் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும் மற்றும் கடனுதவி பெறுவதற்குப் பரிந்துரை யும் செய்யப்படுகின்றன. 31.3.91 முடிய 1,577 கைவினைத் தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள் ளன. 1991-92-ஆம் ஆண்டில் குறி யீட்டு அளவான 220 தொழில் களில் 30.9.91 வரையில் 143 கைவினைத் தொழில்கள் பதியப் பட்டுள்ளன. இதுபோல் 31.3.91 முடிய 1,761 குடிசைத் தொழில்கள் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப் பட்டுள்ளது. 1991-91-ஆம் ஆண்டு குறியீட்டு அளவான 370 தொழில் களில் 30.9.91 வரையில் 213 குடிசைத் தொழில்கள் பதிவு செய் யப்பட்டு உதவிகள் செய்யப் பட்டுள்ளன.

கிராமப் பகுதிகளில் தொழிலை விரிவாக்க விதைப் பணமாக ஊரகத்

தொழில் கடன், குறைந்த வட்டியில் அதிகப்பட்சம் ரூ.25,000 வரை மாவட்டத் தொழில் மையம் வழங்கு கிறது. இத்திட்டத்தின் கீழ் 30 நிறுவனங்களுக்கு 6.04 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 18 வயது நிறைவுபெற்ற 35 வயது நிறைவு பெறாமலும், பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றும் குடும் பத்தின் ஆண்டு வருமானம் ரூ.10,000-க்கு உட்பட்டு இருப்ப வர்களுக்குத் தொழில், தொழி லுடன் கூடிய சேவைத் தொழில் மற்றும் வியாபாரம் செய்ய முறையே ரூ.35,000, ரூ.25,000 மற்றும் ரூ.15,000 அதிகப்பட்சமான கடன் வழங்க தேர்வுக் குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 31.3.91 முடிய 446 நபர்களுக்கு 72.3 இலட்சம் ரூபாய் வங்கிகள் மூலம் பட்டுவாடா செய்யப்பட்டு தொழில் செய்யப்பட்டு வருகின்றது 1991-92-ஆம் ஆண்டில் குறியீட்டு அளவான 250 நபர்களில் 71 நபர் களுக்கு 13.68 இலட்சம் ரூபாய் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந் துரை செய்யப்பட்டுள்ளது..

மேலும், தொழில் முனைவோர் களுக்கு அரசு வழங்கும் சலுகை களாக முதலீட்டு மானியமாக நிரந் தர மூலதனத்தில் 15 சதவிகிதம் மானியமும், சிறப்பு முதலீட்டு மானிய மாக தோல் தொழில், மின் அணுச் சாதனை, மருந்துப் பொருட்கள் போன்ற தொழில்களுக்கு 20 சத விகித மானியமும், மின்சார உற் பத்திக் கலன் வாங்கி பொருந்தும் நிறுவனங்களுக்கு 15 சதவிகித மானியமும், குறைந்த அழுத்தம் மின்சாரம் பயன்படுத்தும் சிறு தொழில் நிறுவனங்களுக்கும் செலுத் தப்பட்ட மின்கட்டணத்தில் முறையே 30 சதவிகிதம், 20 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக வழங் கப்படுகிறது.

சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தனது அசையாத சொத்தில் 8 சதவிகிதம் அல்லது செலுத்தப்பட்ட விற்பனைவரி அல்லது ரூபாய் 1.25 இலட்சம் இதில் எது குறைவோ அத் தொகை வட்டியில்லா விற்பனை வரிக் கடனாக 6 ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. பின்தங்கிய வட்டங்களில் புதிய தொழில் துவங் கும் நிறுவனங்களுக்கு 9 ஆண்டு களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக்கடன் ஒத்திவைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகத் தொழில் உருவாக்கும் பொருட்டு முதல் கட்டமாகக் கீழ நாகாச்சிக் கிராமத்தில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 30 தொழில் கூடங்கள் கட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்க கட்டுமானப்பணி தொடங் கப்பட்டுள்ளது. இதுபோல் பரமக் குடியிலும், இராமேஸ்வரத்திலும் தொழிற் பேட்டைகள் அமைக்க பூர் வீக வேலைகள் நடைபெற்று வரு கின்றன.



இராமநாதபுரம் மாவட்டத்தில் 265 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைந்துள்ள கடலோரப் பகுதியில் தொழில் நுட்ப ஆய்வு அறிக்கையின் படி, சுமார் 49,102 டன் மீன்கள் ஆண்டிற்குக் கரையேற்றப்படுவதால் இவற்றைப் பயன்படுத்தி மீன் பதனிடும் தொழில்கள், கோழித் தீவனம், மீன்வளங்கள் மற்றும் அதைச்சார்ந்த தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன. மேலும், இம்மாவட்டத்தில் கிடைக்கின்ற ஜிப்சம், சுண்ணாம்புக் கற்கள், களிமண் போன்ற தாதுப்பொருட் களைப் பயன்படுத்தி சுத்திகரிக்கப் பட்ட உப்பு, சுண்ணாம்புப்பொடி, ஜிப்சம் அட்டைகள், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், சாக்பீஸ் போன்ற தொழில்கள் உருவாக்க வாய்ப்புகள் உள்ளன. இம்மாவட்டத்தில் கிடைக் கின்ற விளைபொருட்களாகிய தேங்காய், வத்தல் மிளகாய், மல்லி போன்றவற்றைப் பயன்படுத்தி சாம்பார்பொடி, மல்லிப்பொடி, மிளகாய்ப் பொடி தொடங்க வாய்ப் புகள் உள்ளன.

சிறுதொழில் அதிகம் உருவாக்க வும் மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் பெருக்கிடவும், புதிதாகத் தொடங் கும் சிறு தொழில்களின் இயந்திர மூலதன உச்சவரம்பு ரூ.35 இலட் சத்திலிருந்து ரூ.60 இலட்சம் ஆக வும், துணைத்தொழில் தொடங்கும் நிறுவனங்களுக்கு இயந்திர மூலதன உச்ச வரம்பு ரூ.45 இலட்சத்தி லிருந்து ரூ.75 இலட்சமாகவும் உயர்த்தி தமிழக அரசு ஆணை பிறப் பித்துள்ளது.

இவ்வாறு அரசு செய்து வரும் புரட்சிகரமான தொழில் திட்டங் களால் தொழில் திட்டத் தில் பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், விரை வில் தொழில் வளர்ச்சியில் தன்னி றைவு பெறும் மாவட்டமாக விளங் கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**வி.ஜி.பிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்**



## அறிவுச் சுடர்

1. சிதம்பரம்நடராஜர்கோயிலுக்குப் பொற் கூரை மேய்ந்த மன்னர் யார்?

2. S.A.I.L. என்பதன் விரிவாக்கம் யாது?

3. ஆசியாவில் உள்ள மிக நீளமான பாலம் எது?

4. ஜப்பான் பாராளுமன்றத்தின் பெயர் எது?

5. L.I.C. நிறுவனம் தோன்றிய ஆண்டு?

6. அஜந்தா நகைகள், எத்தனை குகைகளைக் கொண்டது?

7. 'ஓரியன்' என்பது என்ன?

8. சூரியனின் குறுக்களவு எவ்வளவு?

9. நோபல் பரிசு எவ்வளவு மதிப் புடையது?

**சி. காந்தி**
முதலாம் ஆண்டு
லேடி வெலிங்டன் சீமாட்டி
ஆசிரியர் பயிற்சிப் பள்ளி
சென்னை-5.

### விடைகள்:

1. பராந்தக சோழன்
2. Steel Authority India Limited.
3. சேது பாலம்
4. டயட்
5. செப்டம்பர் 1, 1956
6. 29 குகைகள்
7. நட்சத்திரக் கூட்டம்
8. 13,96,000 கி.மீ.
9. 2,12,000 டாலர்கள்

## கூட்டுறவு

—நீரை. அத்திப்பூ

துளித்துளியாய் மழைபொழிந்து
தூயமணல் வெளிவிழுந்து
ஆறுநதி யாகிகடல் ஆகுது-அதனால்
ஆயிரமாய் உயிரினங்கள் வாழுது.

மணித்துளிகள் பலகூடி
மண்ணுலகில் நாள்வாரம்
மாதமென ஆகி ஆண்டு ஆகுது-அது
மக்கள்வாழ்வு கணக்காகிப் போகுது.

ஒன்றிரண்டு மூன்றுஎன
உருவான எண்களினை
ஒன்றுகூட்டிப் பலகோடி ஆகுது-கணக்கு
உயர்மடங்கில் தத்துவத்தைக் கூறுது.

கூட்டுறவுக் கொள்கையினால்
குவலயத்தை வாழ்விக்கும்
திட்டமதும் இணைந்துஇது போலவே-இதில்
திகழுகின்ற அங்கத்தினர் வாழவே.

மாடுமனை வீடுதொழில்
மக்கள்நலம் காப்பதுவும்
மாறாத கூட்டுறவு ஆகுமே-அதை
மனமேற்றால் இவ்வுலகம் வாழுமே.

## நல்ல புத்தகங்கள்

படிக்கும்போது, சோர்வை உண் டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல நூல்களே!

—வால்டேர்

புத்தகங்கள் இளமையில் வழி காட்டி; பருவத்தில் பொழுதுபோக்கு பவை; நாம் தனிமையில் இருக்கின்ற போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன், நாமே நமக்கு ஒரு பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.

—கோலியர்



# பெரியார் மாவட்டத்தில் கூட்டுறவு

வேளாண்மைக்குத் தேவைப் படும் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் வசதிகளைப் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும் அதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் வழங்கி வருகின்றன. செப்டம்பர் '91 திங்கள் முடிய குறுகிய காலக் கடன் 624.40 இலட்சமும், மத்திய காலக் கடன் 29.41 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. இதில் குறுகிய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 396.74 இலட்சமும், மத்திய காலக் கடன் நலிவுற்ற பிரிவினருக்கு 29.41 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன.

**நீண்ட காலக் கடன்:**

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் தேவையான நீண்ட காலக் கடன் வசதிகளை அளிக்கப் பெரியார் மாவட்டத்தில் 12 கூட்டுறவு நிலவள வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் நிதியாண்டுக்குச் செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.36.79 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**நகைக்கடன் வழங்குதல்:**

பெரியார் மாவட்டத்தில் 6 கூட்டுறவு நகர வங்கிகள் மற்றும் பெரியார் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் 27 கிளைகள், 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் மூலம் செப்டம்பர் '91 திங்கள் முடிய 1991-92-ஆம் நிதியாண்டுக்கு ரூ.1071.83 இலட்சம் நகைக்கடன் வழங்கியுள்ளன.

**உரம் விற்பனை:**

விவசாயத்திற்குத் தேவையான உர விநியோகம் பெரியார் மாவட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் விற்பனைச் சங்கங்கள் மூலம் நடைபெறுகின்றது. 1991-92-ஆம் நிதியாண்டுக்கு உரம் விற்பனை செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.285.62 இலட்சத்திற்கு செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மை விளைபொருள் விற்பனை:**

விவசாய உறுப்பினர்களின் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யும் பணியினைப் பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் சிறப்பாகச் செய்து வருகின்றன. 1991-92-ஆம் நிதியாண்டுக்கு செப்டம்பர் '91 திங்கள் முடிய இச்சங்கங்கள் ரூ.589.90 இலட்சத்திற்குச் சங்க உறுப்பினர்களின் வேளாண் விளை பொருள்களைக் கொள்முதல் செய்து விற்பனை செய்துள்ளன.

பெரியார் மாவட்டத்தில், கூட்டுறவு நிறுவனங்களில் இட்டு வைப்புகளாக ரூ.7064.56 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் செயல்படும் 6 கூட்டுறவு நகர வங்கிகள் செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.67.84 இலட்சமும், பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி ரூ.25.87 ஆக மொத்தம் ரூ.93.71 இலட்சமும் சிறுதொழில் கடன் வழங்கியுள்ளன.

**மலைவாழ் மக்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்:**

தலைமலை மற்றும் சத்தி வனச் சரகத்திலுள்ள மலைவாழ் மக்களின் நலனுக்காகச் சத்தியில் மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் 1991-92-ஆம் நிதியாண்டில் செப்டம்பர் '91 திங்கள் முடியக் கடன் ஏதும் ஒதுக்கவில்லை. செப்டம்பர் '91 திங்கள் முடிய ரூ.4.68 இலட்சத்திற்குச் சிறுவனப் பொருட்கள் சேகரம் செய்துள்ளது. மலைவாழ் மக்களுக்குச் சிறு வனப் பொருட்கள் சேகரக் கூலி வழங்கப் படவில்லை. ரூ.4.19 இலட்சம் கூலியாக வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டிற்கான 400 நபர்களுக்கு எதிராக செப்டம்பர் '91 திங்கள் முடிய 350 நபர்களுக்கு ரூ.71.17 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் '91 வரை 401 நபர்களுக்கு ரூ.92.91 இலட்சம் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் 11 நபர்களுக்கு ரூ.1.95 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

புதிய சிறுதொழில் கூடங்கள் நிறுவும் திட்டத்தின் கீழ் 57 நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் 23 நிறுவனங்களுக்குச் சிறுதொழில் பதிவு மற்றும் குடிசைத் தொழில் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளன. சிறு தொழில் பதிவுத் திட்டத்தின் கீழ் இம்மாதத்தில் 83 நிரந்தர மற்றும் 494 தற்காலிகச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

கைவினைத் தொழில் சான்று வழங்கும் திட்டத்தின் கீழ் 29 நபர்களுக்குச் சான்றுகள் வழங்கப் பட்டுள்ளன. குடிசைத் தொழில் சான்று வழங்கும் திட்டத்தின் கீழ் 27 நபர்களுக்குச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒருவழிக் கருத்துக் குழுக் கூட்டத்தில் 18 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டது. வட்டியில்லா விற்பனை வரிக்கடன் பின்பு செலுத்தும் திட்டத்தின் கீழ் தகுதிச் சான்று இரண்டு நபர்களுக்கு ரூ.2.27 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது. தொழில் முனைவோர் ஊக்குவிப்புப் பயிற்சி முகாம்கள் மூன்று நடத்தப்பட்டுள்ளன.

—இரா. பா. கார்மேகம்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்.



# மழைக்கால நோய்கள்

**மழைக்காலம் வந்து விட்டது; இக்காலத்திற்கே உரிய சில நோய்கள் நம் வீட்டுக்கு அழையா விருந்தாளிகளாக வரக்கூடும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் யாவை - அவை வராமல் தவிர்ப்பதும் - வந்த பின் நடந்துகொள்ளுவதும் எப்படி என்று விளக்குகிறார் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்.,**

வானத்திலிருந்து அமிழ்வதால்-மழையை அமிழ்தத்திற்கு ஒப்பானது என்று அந்தக் காலத்துத் திருவள்ளுவரும், அண்மைக் காலத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் - மழைக்காலம், மனிதர்களுக்குச் சில வகைத் துன்பங்களைத் தரும் காலமாக அமைந்து விடுவதும் உண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப சில நோய்கள் உண்டாகும்; அல்லது அதிக அளவில் வேகமாகப் பரவும்.

அந்த வகையில் மருத்துவக் கண் கொண்டு பார்த்தால், சிலவகை நோய்கள் நமக்குத் தெரியவரும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் பற்றிய நம் வினாக்களும் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்., அவர்கள் அளித்த விடைகளும் பின்வருமாறு:

**மழைக்காலத்தில் எப்படிப்பட்ட நோய்கள் மக்களிடையே பரவக் கூடும்?**

**ஒன்று:-** மழை நீரில் அசுத்தங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் கலந்து வரும் மாசுபட்ட நீரை அருந்துவதால் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள்; இதில் முக்கியமாக வயிற்றுப்போக்கு - அதாவது Diarrhoeal diseases; காலரா; டைபாய்டு ஜுரம்; மஞ்சள் காமாலை; போலியோ ஆகியவற்றைச் சொல்லலாம். இவற்றை நீர் மூலம் பரவும் நோய்கள் - அதாவது Water-bone Diseases என்கிறோம்.

இரண்டாவதாக, மழைநீர் தேங்குவதால் கொசுக்களும், ஈக்களும் பெருகி, அவற்றால் பரவும் நோய்களைச் சொல்லலாம்.

ஈக்களால் ஏற்கெனவே நான் கூறிய தொற்றுநோய்கள் அனைத்தும் பரவலாம்;

கொசுக்களினால் மலேரியா மற்றும் ஃபைலேரியாஸிஸ் எனப்படும் யானைக்கால் வியாதி ஆகியவை பரவலாம்.

மேற்கூறிய நீர்மூலம் பரவக் கூடிய நோய்கள் தவிர, மழைக் காலத்தில் ஈரத்தன்மையால் ஜல தோசம், இருமல், சளி, ஆஸ்த்மா போன்ற நோய்களும் அதிகமாக நம்மைப் பாதிக்கலாம்.

**இவ்வாறான நலக்கேடுகள் ஏற்பட அடிப்படைக் காரணங்கள் யாவை?**

உலகில் - பொதுவாக வளரும் நாடுகளில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு, அடிப்படைக் காரணம் சுத்தமான குடிநீர் இல்லாமைதான் என்று கூறலாம்; உலகச் சுகாதார நிறுவனம் 1975-இல் நடத்திய ஓர் ஆய்வின்படி இந்திய நாட்டில், நகரத்தில் வசிக்கும் மக்களில் 80 சதவிகிதத்தினருக்கும் - கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களில்18 சதவிகிதத்தினருக்கும் மட்டுமே குடிக்கத் தகுந்த பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதாகத் தெரிகின்றது. போதிய நீர் வசதி இல்லாததால் மிகப் பெரும்பான்மையானோருக்குப் பாதுகாப்பான குடிநீர் இன்னும் அளிக்கமுடியவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இந்திய மக்களில் 80 சதவிகிதத்தினர் கிராமப் புறங்களில் வாழ்வதால் மாசுபட்ட நீரினால் ஏற்படும் நோய்களும் பெரும்பாலும் கிராமப்புற மக்களையே பாதிக்கின்றன.



குடிக்கத் தகுந்த நீர் என்று எதைச் சொல்லலாம்?

பெருகிவரும் மக்கள் தொகைக் கேற்பக் குடிநீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குடிக்கத் தக்க நீர் என்பது சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் அதில் இருக்கக் கூடாது.

தீங்கிழைக்கக்கூடிய வேதிப் பொருட்கள் (Chemicals) அதில் இருக்கக் கூடாது.

நீர் சுவையாக இருக்க வேண்டும்.

நீர் வீட்டு உபயோகத்திற்கு ஏற்ற தாக இருக்க வேண்டும்.

**மழைக்கால நோய்களில் முக்கியமான நோய் பற்றியும் அது அணுகாமல் தடுக்கும் முறைகள் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களேன்?**

மழைக்காலத்தில் பரவக்கூடிய தொற்றுநோய்களில் மிக முக்கிய மானது வயிற்றுப்போக்கு நோய். இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் குறைந்தபட்சம் 15 இலட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் வயிற்றுப்போக்கினால் இறக்கின் றனர். மருத்துவமனைகளில் குழந்தை களுக்கான வார்டுகளில் 30 சத விகிதக் குழந்தைகள் வயிற்றுப்போக் கிற்காகவே சேர்க்கப்படுகின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் இந்நோய் எவ்வளவு சமூக முக்கியத் துவம் வாய்ந்தது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். நோய்க் கிருமிகள் சிறுகுடலின் உட்புறத்தைச் சேதப்படுத்துவதால் நீர்ச்சத்து குட லுக்குள் உறிஞ்சப்படாமல் வெளி யேறுகிறது. இதனால் வயிற்றுப் போக்கு - அதாவது Diarrhoea ஏற் படுகிறது.

**வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட முக்கியக் காரணம் என்ன?**

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. வைரஸ் கிருமிகள்தான் வயிற்றுப்போக்கு ஏற்பட மிகமுக்கிய மான காரணமாகும். ரோட்டா வைரஸ், எக்கோ வைரஸ், காக் சாக்கி வைரஸ், அடினோ வைரஸ், பார்வோ வைரஸ், கொரோனோ வைரஸ் போன்ற பல வைரஸ்கள் குடலைச் சேதப்படுத்தி வயிற்றுப் போக்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் முக்கியமாக ரோட்டா வைரஸ்தான்




குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட மிகவும் முக்கியமான காரண மாகும்.

வைரஸ் கிருமிகள் மட்டுமின்றி E.Coli ஸால்மோனெல்லா, ஷிகெல்லா, Vibrio cholera போன்ற பாக்டீரியாக்களும் ஜியார்டியா மற்றும் அமீபா போன்ற நுண்ணுயிர்க் கிருமிகளும் வயிற்றுப் போக்கு ஏற்படுத்தலாம். இந்நோய்க் கிருமிகள் மனித மற்றும் மிருகங் களின் மலக்கழிவுகளின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுகின்றன. மாசுபட்ட நீர், உணவு மற்றும் சரிவர கைகளைக் கழுவாமையால் இவை பரவுகின்றன. ஈக்களின் உடலில் ஒட்டிக்கொண்டும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இவை பரவுகின்றன. மழைக்காலத் தில் குடிநீரில் கழிவுகள் கலக்க வாய்ப்பு அதிகம். இதனால்தான் மழைக்காலத்தில் வயிற்றுப்போக்கு நோய் அதிகம் ஏற்படுகிறது. வயிற்றுப் போக்கு நோய் கண்டால் நோயாளி உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

கிருமிகளைக் கொல்ல நல்ல பல மருந்துகள் உள்ளன; மற்றும் Oral Rehydration Theraphy (ORT) என்ற முறையில் வயிற்றுப்போக்கினால் உடல் இழக்கும் நீர் மற்றும் பல்வேறு உப்புச் சத்துக்களை ஈடுசெய்யும் புதியதோர் சிகிச்சைமுறை உள்ளது. இது ஓர் உயிர்காக்கும் எளிய, செல வற்ற சிகிச்சை முறையாகும். இம் முறை 1971-இல் உலக சுகாதார நிறுவனத்தால் அறிமுகம் செய்யப் பட்டது. இம்முறையில், குளுக் கோஸ், சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சிட் ரேட் போன்ற உப்புக்கள் கலந்த நீர் வயிற்றுப்போக்குள்ள நோயாளிக்கு அடிக்கடி கொடுக்கப்படுகிறது.

இப்பொருட்கள் Oral Rehydration Mixture என்று பாக்கெட்டில் பவுட ராக விற்கப்படுகின்றன. இப்பாக் கெட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து அடிக்கொருதரம் கொடுக்கலாம். இதை விலைகொடுத்து வாங்க முடியாதவர்கள், வீட்டிலேயே ஒரு லிட்டர் குடிநீரில் 5 கிராம் சமையல் உப்பையும், 20 கிராம் சர்க்கரையை யும் கலக்கி உபயோகிக்கலாம். நீரைக் கொதிக்க வைக்க வேண்டிய அவசியம்கூட இல்லை.

அதிக அளவு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறைந் தால், 'நரம்பு ஊசி' எனப்படும் Intravenous திரவங்களை உடலில் ஏற்றும் சூழ்நிலை வரலாம்.

**காலரா நோய் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் நோயா?**

காலரா எனப்படுவது, விப்ரியோ காலரே Vibrio cholerae எனப்படும் நோய்க்கிருமிகளால் ஏற்படும் மிகக் கடுமையான வயிற்றுப்போக்காகும். தக்க தருணத்தில் மருத்துவக் கவனிப்பு இல்லாவிட்டால் காலரா நோய் கண்டவர்களில் 100-க்கு 30 முதல் 40 சதவிகிதம் பேர்வரை உயி ரிழக்க நேரிடலாம். காலராவின்

**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை**

**மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றார்.**

(கட்டுரை: 2-ஆம் பக்கம்)

**மாண்புமிகு மத்திய நிதி யமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் சந் தித்தார் (1.11.'91).**

**கடைசிப்பக்க அட்டை:**

**புதுடெல்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கௌன்சில் கூட டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பங்கேற்ற காட்சி.**

(மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை: 4-ஆம் பக்கம்)

அறிகுறிகள் கி.மு. 7-ஆம் நூற் றாண்டிலேயே நமது ஆயுர்வேத மருத்துவ நூலான 'அஸ்ருத சம்ஹிதா' வில் 'விஷுசிகா' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காலரா நோய் கண்டவர்களுக் குத் திடீரென, மிக அதிக அளவில், வயிற்றில் வலியின்றி, தெளிந்த நீர் போன்று அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படலாம். ஒரே நாளில் ஏறக் குறைய 40 முறை வரை வயிற்றுப் போக்கு உண்டாகலாம். வாந்தி, கண்களில் குழிவிழுதல், நாவறட்சி போன்றவை உண்டாகலாம். அவசர மருத்துவக் கண்காணிப்பு இதற்குத் தேவை. நோய் ஓரிடத்தில் பரவத் துவங்கினால், பாதுகாப்புக்கெனத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம்.

**டைபாய்டு, மஞ்சட்காமாலை நோய்க் கூறுகள் பற்றிக் கொஞ்சம் விவர மாகச் சொல்லுங்களேன்?**

டைபாய்டு நோய் சால்மனெல்லா எனப்படும் நுண்ணுயிர்க் கிருமி களினால் ஏற்படும் ஒரு கொடிய ஜுர நோயாகும். பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிறுநீர், மலக்கழி வின் மூலம் இந்நோய் பரவுகிறது. இந்நோயும் நீர், பால் உணவுப் பொருட்கள், மற்றும் ஈக்களின் மூலமாகப் பரவுகின்றது. டைபாய்டு நோய்க்குத் தக்க மருந்துகளும், நோய் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசியும் உள்ளன.

மஞ்சள் காமாலை நோய் பல் வேறு வைரஸ் கிருமிகள் ஈரலைத் தாக்குவதால் ஏற்படலாம். பொது வாக Hepatitis-A வைரஸ் மூலமே நமது நாட்டில் இந்நோய் ஏற்படு கிறது.

இந்த வைரஸ் கிருமி மாசு பட்ட நீர் மூலம் பரவுகின்றது. குடிநீரை நன்கு கொதிக்க வைத்துக் குடிப்பதனாலும், முறையாகக் குளோரின் கலக்கப்பட்ட நீரைப் பருகுவதனாலும், சாப்பிடும் முன்ன ரும், சாப்பிட்ட பின்னரும், கழி வறை சென்று வந்த பின்னரும், கைகளை நன்றாகக் கழுவுவதன் மூலம் இந்த வைரஸ் பரவாமல் தடுக்க முடியும். நோய் ஏற்பட்டு விட்டால் முழுமையாக ஓய்வு எடுப் பதே இந்நோய்க்கு மிக முக்கிய மானதும் முதலாவதுமான சிகிச்சை

**போலியோ நோய் என்பது எப்படிப் பட்டது?**

மூன்று வகையான போலியோ வைரஸ்களினால் ஏற்படக்கூடிய இது ஒரு கொடிய நோய். Type 1 எனப்படும் வைரஸ்தான் அதிக அளவில் போலியோ நோய்க்குக் காரணமாக அமைகிறது. பொது வாக நீர் மூலம் பரவும் இந்நோயும் மழைக்காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. 4 வயதுக்குட் பட்ட குழந்தைகளையே அதிகம் தாக்கும் இந்நோயையும் பெருமள வில் கட்டுப்படுத்த முடியும். குழந்தை களுக்குச் சரியான பருவத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுப் பதன் மூலம் போலியோ வராமல் தடுக்கலாம்.

**கொசுக்களால் பரவக்கூடிய நோய்கள் யாவை?**

கொசுக்கடியினால் ஏற்படும் இரண்டு முக்கியமான நோய்கள் மலேரியாவும், யானைக்கால் வியாதி யும் (Filariasis) ஆகும். இந்நோய் களைப் பரப்பும் கொசுக்கள் தேங்கி நிற்கும் நீரில் பெருகி வளர்கின்றன. மேலும், மழைக்காலத்தில் சுற்றுப் புறத்தில் நிலவும் ஈரப்பதம் இக் கொடிய நோய்களைப் பரப்பும் கொசுக்களின் வளர்ச்சிக்குச் சாதக மாக அமைகின்றன.

**எந்த வகைக் கொசுக்கள் அந்நோய் களைப் பரப்பும் - அதிலிருந்து தப்பு வதுதான் எப்படி?**

மலேரியாநோய், அனாபெலஸ் என்ற வகைக் கொசுக்கள் கடிப்ப தனால் ஏற்படுகின்றது. மலேரியா நோய்க்கிருமிகள் பிளாஸ்மோடியம் என்ற இனத்தைச் சேர்ந்தவை.



பிளாஸ்மோடியம் வைவாக்ஸ், Falciparem, Ovale, Malariae என்ற 4 வகையான கிருமிகள் மூலம் மலேரியா ஏற்படலாம். இவற்றுள், நமது நாட்டில் பிளாஸ்மோடியம் வைவாக் ஸும் ஃபால்சிபேரமும் மட்டுமே மலேரியாவிற்குப் பெருமளவில் காரணமாக அமைகின்றன. கொசு மனிதனைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் நேரம், கொசுவின் உமிழ் நீர் மூலம் மலேரியா நோய்க் கிருமிகள் மனித ரத்தத்தில் கலக் கின்றன. இவை இரத்த அணுக் களில் பெருகி, இரத்த அணுக்களைச் சிதைக்கின்றன. அவ்வாறு இரத்த அணுக்கள் சிதைவுறும்பொழுது வெளியேறும் சில நச்சுப் பொருட் களே ஜுரம் ஏற்படக் காரணமாக அமைகின்றது. இரத்த அணுக்கள் சிதைந்து, எண்ணிக்கையில் குறைவ தால் இரத்தச் சோகை (Anemia) ஏற்படுகின்றது.

மலேரியா நோய்க்குத் தக்க மருந்துகள் பல உள்ளன; மலேரியா வைத் தடுக்க முக்கியமாக நாம் கொசுக்கடியைத் தவிர்க்க வேண்டும். கொசு வலைகள். ஜன்னல்களின் பொருத்தப்படும் வலைகள், பல வேறு கொசுவத்திச் சுருள்கள் மற்றும் வில்லைகள் இதற்கென உள்ளன. தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத் தின்கீழ் கொசுக்களுக்கான மருந் தடிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவது பொது மக்கள் கடமையாகும். தீவிரமாக முயன்றால் மலேரியாவை நிச்சய மாக நாம் முழுமையாக வென்று விடலாம்.

**யானைக்கால் வியாதி எதனால் வருகிறது?**

Filariasis எனப்படும் யானைக் கால் வியாதி Culex என்ற இனத் தைச் சேர்ந்த கொசுக்கள் மூலம் பரவுகின்றது. மழைநீரும், மழைக் காலத்தின் ஈரப்பதமும், மழைக் காலங்களில் ஏற்படும் கழிவுநீர்க் குழாய் அடைப்புகளும் Culex இனக் கொசுக்களின் வளர்ச்சிக்கு உறு துணையாக அமைகின்றன! Pistia என்ற ஒரு வகை நீர்த்தாவரங்களும் இக்கொசுக்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும்.





## கலைவாணர் ஒரு சகாப்தம்!

—பேரறிஞர் அண்ணா

கலைவாணர் தனி ஒரு மனிதர் அல்லர்; அவர் ஒரு 'சகாப்தம்'!

அவரோடு அந்தச் 'சகாப்தம்' முடிந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு சகாப்தம் இனித் தோன்றுவது அரிது!

எந்த ஒரு நடிகனும் மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கமுடியும்; மக்களின் கை தட்டலையும், மாலைகளையும் பெற முடியும்; நல்லதோர் புகழையும் பெற முடியும். ஆனால், நம்முடைய கலைவாணரைப் போல, மற்ற எவரும் புகழ் பெற்றிருக்க முடியாது; புகழ் பெறவும் முடியாது.

கலைவாணர் - மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் சிரிக்க வைத்தவர்; உலகிலேயே இவர் ஒருவர்தான் மக்களிடம் தொடர்பு கொண்டு மக்களுக்காக உழைத்த கலைஞர் ஆவார். இவரைப் போன்ற நல்லுள்ளம் கொண்டோர் மிகச் சிலரே!

கலைவாணர் வெறும் நடிகராக மட்டும் வாழ வில்லை. உலகத்தைத் திருத்திய உத்தமராக- தாமும் நல்லவராக - மற்றவர்களையும் திருத்துப வராக - கருத்துக் கருவூலமாக வாழ்ந்தார்.

மக்களின் மன அழுக்கு நீங்க - மூட நம்பிக்கை அகல - குருட்டுப் பழக்கவழக்கங்கள் ஒழிய - தாழ்ந்த மக்கள் தன்னுணர்ச்சி பெற - இதுவரை, இந்நாட்டில் எந்த நடிகரும் கலைவாணரைப் போல் பணியாற்ற முனைந்ததில்லை. இந்நாட்டில் மட்டும் அல்ல; வேறு எந்த நாட்டிலும் கூட இப்படிப்பட்ட நடிகர் ஒருவர் இருந்தது இல்லை; இனி இருக்கப் போவதும் இல்லை.

(கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் பிறந்த நாள்: நவம்பர்-29)

கொசுக்கடியைத் தவிர்த்தும், கொசுக்களை ஒழிக்கத்தக்க மருந்து களைத் தெளித்தும், பிஸ்டியா வகை நீர்த்தாவரங்களை ஒழித்தும் யானைக் கால் நோய் பரவுவதைப் பெருமளவு தடுக்கலாம்! மலேரியா வுக்கு இருப்பது போன்றே தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் ஒன்றும் நமது நாட்டில் செயல்படத்தப்பட்டு வருகின்றது.

**மழைக்கால நோய்களிலிருந்து தப்ப வேண்டுமானால் எப்படிப் பட்ட நடவடிக்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டும்?**

மழைக்கால நோய்களைத் தடுக்க நாம் கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை களை மேற்கொள்ளலாம்:

- குழந்தைகளை மழைநீரில் விளையாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- குடிநீரை நன்கு கொதிக்க வைத்து ஆறவைத்தே அருந்த வேண்டும்.
- சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்; குப்பைக் கூளங்களை அகற்ற வேண்டும்; நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்;
- ஈ, கொசு முதலியவை பெருகு வதை இது தடுக்கும்.
- கிணற்று நீரை உபயோகிப்ப வர்கள் அவ்வப்பொழுது கிணற்றில் மாநகராட்சி ஊழியர்கள் மூலம் மருந்து தெளித்துக் கொள்ளலாம்.
- கொசு மருந்து அடிக்க வரும் பொழுது முழு ஒத்துழைப்புத் தர வேண்டும்.
- கொசுக்கடியிலிருந்து தப்பிக்க, கொசுவலை மற்றும் கொசுவத்திச் சுருள், வில்லைகள் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும்.
- உணவுப் பண்டங்களை, நன்கு மூடிவைக்க வேண்டும்.
- காய்கறிகள், பழங்களைச் சுத்த மாகக் கழுவிய பின்புதான் சாப்பிட வேண்டும்.
- சாப்பிடும் முன்னரும், கழிவறைக் குச் சென்ற பின்னரும் கைகளைச் சோப்புப் போட்டு நன்கு கழுவ வேண்டும்.
- சிறுவர்களை வீட்டில் வெளிப் புறங்களைக் கழிவிடங்களாக மாற்ற அனுமதிக்கக் கூடாது.
- சிறுவர்களானாலும் பெரியவர் களானாலும் வெளி இடங்களில், சுகாதாரமற்ற முறையில் விற்கப் படும் தின்பண்டங்களை வாங்கி உண்ணக்கூடாது.
- இவ்வாறான முறைகளைக் கையாண்டாலே போதும்; மழைக் கால நோய்கள் நம்மை அணுகாமல் நல்வாழ்வு வாழலாம்!

- சந்திப்பு: பி.எல்.ஆர்.

• • •

★ உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள். —தந்தை பெரியார்



# நானிலம் காத்த நேருவின் நடுநிலைக் கொள்கை



— ந. இளங்கோ

**ப**ண்டித நேரு யாரையும் வெறுக் காதவர். எவரையும் பகைக்காதவர். எந்த நாட்டையும் பகைத்து எந்த நாட்டுடனும் கூட்டுச் சேராதவர். படைபலம்மிக்க நாட்டைக் கண்டு பயப்படாதவர். பல மில்லாத நாட்டைப் புறக்கணிக்காதவர். அவர் தந்த கொள்கைதான் கூட்டுசேராக் கொள்கை.

### உலக நாடுகளின் நிலை

உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்து முதலாளித்துவ அணி என்றும், பொதுவுடைமை அணி என்றும் பிளவு பட்டு பேதங்கொண்டு நின்றது. இரு பெரும் வல்லரசுகளான அமெரிக்காவும், ரஷ்யாவும் ஆயுதங்களைப் பெருக்கிக் கொண்டு ஆர்ப்பரித்து நின்றன. அகி லத்தை அழிப்பதற்குப் போட்டி போட்டு எழுந்தன.

அணுகுண்டுகளை அமெரிக்கா குவித்தது. நீர்வாயுக் குண்டுகளையும் ஏவு கணைகளையும் ரஷ்யா பெருக்கியது. அழிவின் உச்சத்திற்கே அவை சென்று விட்டன. அமெரிக்காவுடன் பல நாடுகள் நின்றன. ரஷ்யாவுடன் பல நாடுகள் இணைந்தன.

ஏனைய நாடுகளோ இந்த அணிகளில் ஏதாவது ஒன்றைப் பற்றினால்தான் வாழமுடியும் என்ற நிலை இருந்தது. வல்லரசுகளின் மோதலால் உலகமே அழியும் என்ற நிலை இருந்தது. வல்லரசு களின் உதவியைச் சிறிய நாடுகள் நாடிச் சென்றால் அவை அடிமைப்பட்டே தீரும் என்று எச்சரித்து வல்லரசுகளுடன் சேர வேண்டாம் எனத் தடுத்தார் நேரு.

எந்த வல்லரசு அணியிலும் இந்தியா சேரவேண்டாம் என்பதை வலியுறுத்தி நேரு தனது கருத்தைக் கூறும்போது:

'நாம் ஒரு பலவீனமான அல்லது தரம் தாழ்ந்த நாட்டின் குடிமக்களல்ல. வல்லரசு களைக் கண்டு பயந்து நமக்கும் படை பலம் வேண்டும் என்பதற்காக ஏதாவது ஒரு வல்லரசோடு நாமும் சேர்ந்தாக வேண்டும் என்று கருதுவதும், வல்லர சைக் கண்டு பயப்படுவதும் மடமை யாகும். படை பலமிக்க ஒரு நாடு நமக்கு எதிராகக் கிளம்பினால் என்ன ஏற்படும் என்பதை உணராமல் நான் என்னை ஏமாற்றிக் கொள்ளவில்லை. நிச்சயமாக அது நமக்கு அழிவைத்தான் தரும். ஆனால் இதற்கு முன்பு, கடந்த காலத் தில், நாம் ஒரு தேசிய இயக்கமாக இயங்கியபோது உலகின் மிகப்பெரிய வல்லரசுகளில் ஒன்றைத்தான் எதிர்த்து நின்றோம். அந்த வல்லரசை நாம் நமக்கே உரிய வழிமுறையில் எதிர்த்து நின்றோம். அதே வழிமுறையில் வெற்றியும் பெற் றோம். ஒருவேளை ஒரு மோசமான படை பலத் தாக்குதலுக்கு நமதுநாடு உள்ளாக நேர்ந்தால், நாம் நமக்குரிய வழியிலேயே அதை எதிர்த்துப் போராடுவோம். நமது கொள்கைகளை விட்டுக் கொடுத்துக் பணிந்து போவதைவிட நாம் போராடு வோம். எனவே, இந்த அணி அந்த அணி என்று வல்லரசுகளின் அணிகளைக் கண்டு அஞ்சிக் கலங்கக் கூடாது. நான் அஞ்சவில்லை. இந்த நாடு எந்த அணியை யும் கண்டு அஞ்சவில்லை என்பதை உலக நாடுகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது கொள்கை ஒதுங்கிப் போகிற, உறங் கிப் போகிற கொள்கை அல்ல. அது நிமிர்ந்து நின்று செயற்படுகிற கொள்கை தான்' நேருவின் கொள்கை என வென்பதை மிகத் தெளிவாகப் பட பிடித்துக்காட்டுகிறது இப்பகுதி.

### பல்வேறு நாடுகளின் கூட்டமைப்புகள்

உலக நாடுகள் நேருவின் காலத்தி பல்வேறு குழுக்களாக இணைந் நின்றன.

### நேட்டோ அமைப்பு நாடுகள்

வட அட்லாண்டிக் உடன்படிக் அமைப்பு 'நேட்டோ' அமைப்பு என படுகிறது (NATO - North Atlantic Trea Organisation)

இவ்வமைப்பு 1949-ஆம் ஆண் அமெரிக்க நாட்டிலுள்ள வாஷிங் நகரில் உருவாகியது. பெல்ஜிய பிரான்சு, நெதர்லாந்து, பிரிட்ட

கனடா, டென்மார்க், ஐஸ்லாந்து, இத்தாலி, நார்வே, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் தலைமையில் அணிவகுத்து நின்றன. இந்நாடுகளுக் கிடையே சமாதானத்தை நிலைநாட்டவும், பாதுகாப்புக்கு உதவவும் உடன்படிக்கை செய்து கொண்டன.

### சீட்டோ அமைப்பு நாடுகள்

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்பாட்டு அமைப்பு 'சீட்டோ' அமைப்பு எனப்படுகிறது. (SEATO - South East Asia Treaty Organisation) இவ்வமைப்பில் ஆஸ்திரேலியா, பிரான்சு, நியூசிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றிருந்தன. பிறநாட்டு ஆக்கிரமிப்பின் போதும், உள்நாட்டுக் குழப்பங்களின் போதும் உறுப்பு நாடுகள் ஒன்றுக் கொன்று உதவவேண்டும்' என்பதும் கம்யூனிசக் கொள்கையை எதிர்ப்பது என்பதும் இவ்வமைப்பு நாடுகளின் உடன்படிக்கையாகும்.

வார்சா ஒப்பந்த நாடுகள் (Warsha Pact Countries) ரஷ்யா, அல்பேனியா, பல்கேரியா, செக்கஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, ருமேனியா, ஆகிய நாடுகள் 1955-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் போலந்து நாட்டின் வார்சாவில் ஓர் உடன்படிக்கைக்கு வந்தன. பொருளாதார உதவி, பாதுகாப்பு உதவி ஆகியன இதில் அடங்கும்.

### சென்டோ அமைப்பு நாடுகள்

மத்திய உடன்பாட்டு அமைப்பு 'சென்டோ' அமைப்பு எனப்பட்டது. (CENTO - Central Treaty Organisation) இவ்வமைப்பு 1955-இல் துருக்கி, ஈராக் ஆகிய இரு நாடுகளாலும் பாக்தாத்தில் உருவாக்கப்பட்டது. பின்னர் பாகிஸ்தான், ஈரான், பிரிட்டன் ஆகிய நாடுகள் இதில் உறுப்பினர்களாக இடம் பெற்றன. அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்பு நாடாக இடம் பெறாமல் இவ்வமைப்பை ஆதரித்தது.

மேற்கண்ட நான்கு அமைப்புகளும் வல்லரசுகளின் சார்பு கொண்டே அமைந்திருப்பதைக் கண்ட நேரு இவற்றைப் புறக்கணித்தார்.

### இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை

"வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை, ஒன்றோடு ஒன்று மோதி நிற்கிற எந்த வல்லரசு அணியுடனும் சேராத தனியான கொள்கையை இந்தியா பின்பற்றும். அமைதிநாடுகிற நாடுகளுடன் இணைந்து அனைத்து நாடுகளுக்கிடையேயும் ஒத்துழைப்பையும், நல்லெண்ணத்தையும் உருவாக்க இந்தியா பாடுபடும். எந்த நாடும் எந்த நாட்டையும் சுரண்டாமல் தடுத்து நிறுத்த இந்தியா உழைக்கும்'
என்று தம்முடைய வெளிநாட்டுக் கொள்கையை உலகுக்கு அறிவித்தார் நேரு. தாம் அறிவித்தபடி அதற்குச் செயல் வடிவமும் கொடுத்தார்.

**உலக அமைதிக்காகப் போராடிய நேருவை 'மனித இனத்தின் மனச்சாட்சி அவர்' (Nehru is the expression of the Conscience of Mankind) என்று போற்றினார் எகிப்து அதிபர் நாசர்.**

### பஞ்சசீலக் கொள்கை

ஆசிய நாடுகளின் மாநாடு ஒன்று இந்தோனேசிய நாட்டிலுள்ள பாண்டுங் நகரத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ஆசிய நாடுகளிடையே ஒற்றுமை நிலவ ஐந்து விதிகளை முன்வைத்தார் நேரு. அவை:

1. பிற நாட்டின் எல்லை அமைப்பையும் அரசாண்மையையும் மதித்தல் (Respect for Territorial Integrity and Sovereignty)

2. பிற நாடுகளைத் தாக்காதிருத்தல் (Non-aggression)

3. பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல். (Non-interference in others' internal affairs)

4. நாடுகளுக்கிடையே சமத்துவம் நிலவச் செய்தல் (Equality).

5. அமைதியுடன் இணைந்து வாழ்தல் (Peaceful Co-existence) என்பனவாகும். இவற்றை ஆசிய நாடுகள் மகிழ்ச்சியோடு ஏற்றன. இக்கொள்கைகளே பின்னர் பஞ்சசீலக் கொள்கைகள் என்று போற்றப் பெற்றன.

### அணிசேரா இயக்கம் (Non-Aligned Movement)

வல்லரசுகளைக் கண்டிக்கவும் வலிவில்லாத நாடுகளைக் காப்பாற்றவும் இயக்கமொன்று தேவை என்பதை உணர்ந்தார் நேரு. யூகோஸ்லாவியா நாட்டின் பிரியோனி நகரில் யூகோஸ்லாவியா நாட்டுத் தலைவர் மார்ஷல் டிட்டோ, எகிப்து அதிபர் நாசர், நேரு ஆகிய மூன்று தலைவர்களும் ஒன்று கூடினர். நேருவால் பண்டுங் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கொள்கைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க முனைந்தனர். ஜூலை 1956-ஆம் ஆண்டு இம்மூன்று தலைவர்களும் மேற்கொண்ட முடிவுகளின் அடிப்படையில் அணிசேரா இயக்கம் பிறந்தது.

யூகோஸ்லாவியா நாட்டுத் தலைநகரான பெல்கிரேடில் 1961 செப்டம்பரில் முதல் அணிசேரா இயக்க மாநாடு நடைபெற்றது. இருபத்து ஐந்து நாடுகள் இம்மாநாட்டில் பங்கு பெற்றன. அன்று முதல் இவ்வியக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்வருமாறு விவரித்தார் நேரு: 'மோதுவதற்காகவே கூடிநிற்கும் வல்லரசு அணியிலிருந்து விலகி நிற்பதே நமது நோக்கம். எல்லா நாடுகளுடனும் நெருங்கி நட்பு கொள்ளவே நாம் விரும்புகிறோம், அவை தாமாகவே சிக்கல்களை உருவாக்காத வரை அமெரிக்காவுடன் நட்புக் கொண்டு ஒத்துழைப்பதே நமது எண்ணம். சோவியத் யூனியனுடனும் முழுக்க ஒத்துழைப்பதே நமது குறிக்கோள்'.

### அணிசேரா இயக்கத்தின் தற்போதைய நிலை

அணிசேரா இயக்கம் உலகத்தின் மிகப் பெரிய அமைதி இயக்கமாகத் திகழ்கிறது. உலகின் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொகை கொண்ட 101 நாடுகள் இவ்வியக்கத்தில் இணைந்துள்ளன. நேரு பெருமகனின் பெருமுயற்சியால் யூகோஸ்லாவியா நாட்டின் தலைநகரான பெல்கிரேடில் தொடங்கப்பட்ட அணிசேரா இயக்கம் தனது இருபத்தைந்தாவது வயதில், 1986-ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஜிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் கூடி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை எழுச்சியோடு நிறைவேற்றியது. உலகின் பெரும்பான்மை மக்களின் மனச்சாட்சிக் குரலாக அந்தத் தீர்மானம் திகழ்ந்தது. அதுதான் தென்னாப்பிரிக்காவின் வெள்ளையர் அரசின் இனவெறிக்கு எதிரான தீர்மானம்.

தென் ஆப்பிரிக்க அரசுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளையும், பிறதடைகளையும் ஐக்கிய நாடுகள் அவை விதிக்க வேண்டும் என்று அம்மாநாடு ஒருமனதாக வலியுறுத்தியது. மேலும் தென் ஆப்பிரிக்காவுக்குப் பொறியியல் சாதனங்கள் வழங்குவது, எண்ணெய் ஏற்றுமதி, விமானத் தொடர்பு வசதி போன்ற எல்லாவற்றையும் உலக நாடுகள் நிறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப் பட்டது.

ஈரான், ஈராக் நாடுகளிடையே நடைபெற்றுவந்த போரினை நிறுத்த வேண்டும் எனவும், லெபனான், ஆப்கானிஸ்தான், நிகாரகுவா, லிபியா, இலங்கை, மொராக்கோ, வியட்நாம், கம்பூச்சியா போன்ற நாடுகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்தியது.

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நமீபியாவுக்கு விடுதலை வழங்கிட வலியுறுத்தும் தீர்மானத்தை நிறைவேற்ற ஐ.நா.வின் பொதுக்குழு சிறப்புக் கூட்டம் நடத்தவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்தியது. நமீபியாவின் கோரிக்கையை ஐ.நா.வில் வலியுறுத்த அணிசேரா நாடுகள் சிலவற்றைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இப்படி, நாடுகளிடையே போரைத் தவிர்க்க, அடிமை நாடுகளை விடுவிக்க, இனவெறியை முறியடிக்க முனைந்து நிற்கிறது இந்த இயக்கம். உலக அமைதிக்கு நேரு மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது இவ்வியக்கம்.

### அனைத்து நாட்டுப் பிரச்சினைகளில் நேருவின் நிலை

#### சீனப்போர்

சீனப் பிரதமர் சூ.என்.லாய் நேருவின் பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். சீனாவை நேரு மிகவும் நம்பினார். ஆனால், 1962 செப்டம்பரில், இந்தியா மீது படையெடுத்தது சீனா. வடகிழக்கு எல்லையைக் கடந்து மக்மோகன் கோட்டைக் கடந்து தாக்கியது. 36,000 சதுர கிலோ மீட்டர் வடகிழக்கு எல்லைப் பகுதியைக் கைப்பற்றியது. அந்த நிலையிலும் நேரு தனது நடுநிலைக் கொள்கையைக் கைவிடவில்லை. வல்லரசுகளின் உதவியை நாடவில்லை. அமைதி வழியிலேயே முடிவு காண முயன்றார்.

#### சூயஸ்கால்வாய் தேசியமயமாக்கம்

1956-இல் சூயஸ்கால்வாயை எகிப்திய குடியரசுத் தலைவர் நாசர் தேசியமயமாக்கினார். அங்கு ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த பிரிட்டன் படையை அனுப்பியது. பிரிட்டனின் பிரதமர் அந்தோணி ஈடன், நாசர் கருத்தை ஏற்க மறுத்தார். இப்பிரச்சனையில் நேரு பிரிட்டனுக்கு எதிராக, எகிப்துக்கு ஆதரவாக நின்றார்.

#### ஹங்கேரியில் ரஷ்யத் தலையீடு

1956-இல் ஹங்கேரியில் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு எதிராக உள்நாட்டில் எதிர்ப்புக் கிளம்பியது. வார்சா ஒப்பந்தத்தின் படி அந்தக் கிளர்ச்சியை அடக்க ரஷ்யா தனது படைகளை அனுப்பியது. ஹங்கேரியின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவது தவறு என்று ரஷ்யாவை நேரு கண்டித்தார்.

#### வடகொரியத் தாக்குதல்

1950-ஆம் ஆண்டு வடகொரியா தென்கொரிய நாட்டைத் தாக்கியது. இச்செயலை நேரு வன்மையாகக் கண்டித்தார். தென்கொரிய நாட்டுக்கு இந்திய இராணுவ மருத்துவக் குழு ஒன்றையும் அனுப்பி உதவினார்.

#### நேருவின் வெறுப்பின்மை

பிரிட்டன் பல்லாண்டுக்காலம் இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அதை எதிர்த்துச் சிறை சென்று பல்லாயிரம் பேரைச் சிறைக்கு அனுப்பியும் பல நூறு உயிர்களை இழந்தும், அண்ணல் காந்தியின் அகிம்சை நெறி நின்று போராடி இந்தியா விடுதலை பெற்றது. தன்னை அடக்கி வைத்திருந்த பிரிட்டனின் தலைமையில் இயங்கிய காமன்வெல்த் (Commonwealth) நாடுகளின் கூட்டமைப்பில், கசப்பை மறந்து இந்தியாவும் இடம்பெற நேரு உதவினார். பலர் எதிர்த்தனர். ஆனால் நேரு உறவையே நாடினார். அதனால்தான் நேருவைப் பாராட்டினார் பிரிட்டனின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில். 'நேரு அச்சமற்றவர். வெறுப்பும் கொள்ளாதவர்' (Nehru is a man who knows neither fear nor hate) என்று கூறினார்.

#### தன் நிலைபற்றிய நேருவின் கருத்துகள்

எந்த நாட்டு மக்களையும் புண்படுத்தாமல் உலக மக்களின் ஆதரவை நேருவால் திரட்ட முடிந்தது.

'நீங்கள் எந்த அணியையும் சாராமல் நிற்பது நடைமுறைக்கு ஒத்துவராது. நடைமுறைக்கு ஏற்றது எதுவோ நடைமுறையில் நமக்குச் சாதகமானது எதுவோ அதைத்தான் பின்பற்ற வேண்டும். நீங்கள் அளவுக்கு மீறி இலட்சியவாதியாக இருக்கிறீர்கள். அதுநடைமுறைக்கு ஏற்றதல்ல' என்றனர் பலர். இதற்கு விளக்கமாகப் பதிலளித்தார் நேரு.

நடைமுறை, நடைமுறை என்றும், சாத்தியமானது, சாத்தியமானது என்றும் பார்த்துச் செயல்படுகிற மனிதர்களும், நாடுகளும் என்னவாகின்றன என்பது தெரிந்ததே. இந்த நடைமுறை அணுகுமுறையினால் பல நாடுகள் இடைவிடாத போராட்டத்துக்கும், போருக்கும், வேதனைக்கும், சோதனைக்கும் உள்ளாகித் தவிப்பதைக் காண்கிறோம். சாதகமானது, சாத்தியமானது என்ற பெயரால் அல்லல்களையும், அவலங்களையுமே அடைய வேண்டியதிருக்கிறது. இதற்குப் பெயர் நடைமுறை அணுகுமுறை என்பது சரியல்ல.

நமக்குச் சாதகமாக இருக்க வேண்டும். நமக்கு நன்மை தருவதாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தாலும், அதற்காக ஒரு பக்கம் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்பது சரியல்ல. அதற்கும் நேர்மையான, ஒளிவு மறைவற்ற, சுதந்திரமான நடுநிலை வழியே சிறந்தது. இந்த நடுநிலைப்போக்கு என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நிகழ்ச்சிகளும், நிலைமைகளும் மிகவும் விரைவாக மாறிக்கொண்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இரண்டு தீமைகளில், கடுமை குறைந்த தீமையே சிறந்தது என்று தெரிந்தெடுக்க வேண்டியதுவரும்.

இந்தியா மக்களாட்சி முறையையே நிலைநாட்ட விரும்புகிறது. எனவே, மக்களாட்சிக்கு எதிரான எதையும் இந்தியா எதிர்க்க வேண்டும்.

இந்தியா, தான் விரும்பியதைச் செய்வதிலும் உலக அமைதியைக் காப்பதிலும் உலக நாடுகளின் ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும் தனி உரிமையுடன் செயல்பட முடிந்தது. நடுநிலைமையுடன் நின்றதால், சூயஸ்கால்வாய் பிரச்சினை, ஹங்கேரி, சைப்ரஸ், காங்கோ, தென் வியட்நாம், ஆயுத ஒழிப்பு போன்ற எல்லா பிரச்சினைகளிலும் இந்தியா தனியாகச் சொந்தமுடிவினை எடுக்கும் உரிமையுடன் விளங்கியது.

நடுநிலைக் கொள்கை என்றால் எந்த நிலையிலும் பனிப்போரில்கூடப் பங்கு பெறுவது கிடையாது என்று பொருள். எந்தப் பக்கமும் சாயாத நிலையில் அரசு இருக்க வேண்டும். மக்கள் அமெரிக்காவை ஆதரிப்போராக இருக்கலாம் அல்லது சோவியத் யூனியனை ஆதரிக்கலாம். அவர்கள் பொதுவுடைமையை ஆதரிக்கலாம். ஆனால், அரசாங்கம் எந்தப் பக்கமும் சாயாது இருக்க வேண்டும்.

இந்திய அரசின் கொள்கை சில வேளைகளில் அமெரிக்காவை ஆதரிக்கிறது. சில வேளைகளில் ரஷ்யாவை

**'நேரு ஒரு கம்யூனிஸ்ட் என்று சிலர் கூறுகிறார்கள். நேரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. நேரு நேருவாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்' (Some say Nehru is a Communist. I do not want him to be a Communist I want Nehru to be Nehru) என்றார் ரஷ்ய நாட்டுத் தலைவர் குருச்சேவ்.**

ஆதரிக்கிறது, என்று குறை கூறப்பட்டது உண்டு. ஐக்கிய நாடுகளின் அவையில் இந்தியா சுதந்திரமாக தனது கருத்துகளை எடுத்துரைக்கும்போது அமெரிக்கா ஐயம் தெரிவித்தது; சோவியத் யூனியன் சந்தேகப்பட்டது.

அமெரிக்கா 'சீட்டோ' (SEATO), 'சென்டோ' (CENTO),போன்ற அணிகளை உருவாக்கி, பாகிஸ்தானுக்கு உதவியபோதும் இந்தியா தனது நடுநிலைக் கொள்கையிலிருந்து நழுவவில்லை. இது அன்றைய அமெரிக்க அதிபர் ஐசன் ஹோவருக்கு எரிச்சலூட்டியது என்றாலும் இந்தியா எந்தப் பக்கமும் சாயவில்லை.

சோவியத் யூனியனின் சோசலிசக் கொள்கை இந்தியாவுக்கு ஏற்றதாக இருந்தது. அதனை இந்தியா ஏற்றது. ஆனால் ஜனநாயக உரிமைகள் என்று பார்க்கும்போது, அமெரிக்காவின் கொள்கையை இந்தியா ஏற்று தனது அரசியல் அமைப்பில் அதற்கு இடம் கொடுத்தது.

இந்தியாவின் இந்த நடுநிலைக் கொள்கை அதன் கலப்புப் பொருளாதாரத்திலும் இடம் பெற்றது. புதிதாக விடுதலை பெற்ற ஆப்பிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள் இந்தியாவின் நடுநிலைக் கொள்கையை ஏற்றுக் கொண்டன.

நீரண்டைவில் அணிசேராக் கொள்கையைக் கொண்ட இந்தியாவை, அமெரிக்காவும் ஆதரித்தது; ரஷ்யாவும் ஆதரித்தது ஆதரித்தது மட்டுமல்ல, நிதியுதவியுமளித்தன.

### இரும்புத் திரையை உடைத்தவர் நேரு

நேரு அமெரிக்காவுக்கு 1949-இல் சென்றார். 1954-இல் சீனாவுக்குச் சென்றார். 1955-இல் அவர் ரஷ்யாவுக்குச் சென்றார்.

1955 ஜூலைத் திங்களில் நேரு ரஷ்யாவுக்குச் சென்றபோது அவர் பெற்ற வரவேற்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது. வேறு எந்த வெளிநாட்டுத் தலைவருக்கும் அத்தகைய வரவேற்பு மக்களிடமிருந்து ரஷ்யாவில் கிடைத்ததில்லை. ரஷ்யாவுக்குச் சென்ற பிறகு நேருவின் புகழ் மிகவும் பரந்து விரிந்தது.

ரஷ்யாவுக்குச் சென்ற நேரு, ரஷ்யத் தலைவர்கள் குருச்சேவையும் புல்கானினையும் இந்தியாவுக்கு வருமாறு அழைத்தார். 1955-ஆம் ஆண்டு இறுதியில் அவர்கள் இந்தியாவுக்கு வந்தனர். இரும்புத் திரை எனக் கருதப்பட்ட ரஷ்யாவின் திரையைக் கிழித்து அதன் தலைவர்களை வெளியுலகுக்குக் காட்டிய பெருமை நேருவையே சாரும். இந்திய நாட்டுக்கு வந்தபின்னர்தான் ரஷ்ய நாட்டுத் தலைவர்கள் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்றனர்.



தன்னலமற்ற சேவையின் அடிப்படையில் தோன்றிய தூய்மையான இயக்கத்தில் தகாத முறையில் ஒரு சிலர் நடந்து கொள்வதால் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றித் தரக்குறைவான கருத்துக்கள் நாட்டில் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாசு துடைக்கப்பட வேண்டும். கூட்டுறவில் ஈடுபட்டோர் சுயநலத்தை ஒதுக்கித் தள்ளி, பொது நலத்தையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

நேருவின் அணிசேராக் கொள்கையை யூகோசுலேவியா அதிபர் டிட்டோ ஏற்றார் என்பது மட்டுமல்ல, சீனத்துத் தலைவர்களும் வரவேற்றனர். இப்படி அனைத்து நாடுகளும் அனைத்துத் தலைவர்களும் போற்றிய நேருவின் நடுநிலைக் கொள்கைதான் உலகில் போரைத் தவிர்த்து அவருக்குப் புகழைச் சேர்த்தது.

உலக அமைதிக்காகப் போராடிய நேருவை 'மனித இனத்தின் மனச்சாட்சி அவர்' (Nehru is the expression of the conscience of Mankind) என்று போற்றினார் எகிப்து அதிபர் நாசர்.

'நேரு ஒரு கம்யூனிஸ்ட் என்று சிலர் கூறுகிறார்கள். நேரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. நேரு நேருவாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறேன்' (Some say Nehru is a Communist. I do not want him to be a Communist. I want Nehru to be Nehru) என்றார் ரஷ்ய நாட்டுத் தலைவர் குருச்சேவ்.

'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பலமும் பலவீனமும் ஒரே மாதிரிதான் ஆனால், இந்தியாவுக்கு ஒன்றே ஒன்று கூடுதல். அது நேருதான்' (India and Pakistan have the same strengths and weaknesses but India has one plus - Nehru) என்று இந்தியாவுடன் மோதிக் கொண்டிருக்கும்போதே, பாகிஸ்தான் அதிபர் காஜா நஜிமுதீன் கூறினார்.

நேருவை இப்படி நட்பு நாட்டாரும், நடுநிலை நாட்டாரும், பகை நாட்டாரும் பாராட்டிப் பேசக் காரணம் நேருவின் நடுநிலைக் கொள்கைதான்.

படைபலம் இல்லாத நாட்டின் தலைவரான நேரு படைபலமிக்க வல்லரசுகளால் பெரிதும் மதிக்கப்பட்டார். அந்த நாடுகள் அவரது கருத்துக்கும் ஆலோசனைக்கும் காத்துக்கிடந்தன. அவரது கருத் ஆலோசனையாக மட்டுமல்ல; ஆணையாகவே அமைந்தது. வல்லரசு நாடுகள் கூட அவரை வணங்கின. இந்தச் செல்வாக்கு வேறு எந்தத் தலைவருக்கும் இருந்ததில்லை.

இந்த உலகம் பண்புடையவர்களால்தான் வாழ்கிறது. பண்புடையவர்கள் இல்லை என்றால் இவ்வுலகு மண்ணோடு மண்ணாக மறைந்து போகும் என்றார் வள்ளுவர்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்'

என்றார் வள்ளுவர்.

உலகின் வல்லரசுகள் போர்க்கருவிகளைப் பெருக்கிக் கொண்டே போகின்றன. அழிவுக்கு அழவு எதிர் அழிவு என்ற நிலைதான் இன்றுள்ளது. எனவே யாராலும் அழிக்க முடியாத அரண் அறிவு என்னும் அரண் என்கிறார் வள்ளுவர். அழிவினைத் தடுக்கும் கருவி என்கிறார்.

'அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்'

என்றார் வள்ளுவர்.

வள்ளுவர் வழி நின்று அறிவு என்னும் அரண் கொண்டு உலகத்தை அழிவினின்றும் காத்தவர் நேரு. அவரது வெளிநாட்டுக் கொள்கை எந்த நாட்டையும் வெறுக்காத கொள்கை. எல்லா நாடுகளும் விரும்பிப் போற்றிய கொள்கை.

நேரு தனது நடுநிலைக் கொள்கையால் உலக ஒற்றுமையை நிலைநாட்டினார். உலக அமைதியைக் காத்தார். மூன்றாவது உலகப் போர் ஒன்று வராமல் தடுத்தார்; உலக அழிவினைத் தவிர்த்தார். அதற்குக் காரணம் அனைத்து நாடுகளும் போற்றிய அவரது நடுநிலைக் கொள்கையேயாகும்.

அழிவினின்றும் அகிலத்தைக் காக்க இன்று ரஷ்ய அதிபர் கார்பச்சேவ், அமெரிக்க அதிபர்கள் ரீகன், புஷ் ஆகியோர் நடுநிலையுடன் நின்று செயற்படுகிறார்கள். நேரு காட்டிய நேர்மையான அன்பு வழி, அறவழியே அவர்களை இணைத்துள்ளது என்றால் அது மிகையாகாது. ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.



# இந்த இதழில்...


தமிழ்நாட்டில் மத்தியக் குழு ... 2

காவிரி: நீதிமன்றத் தீர்ப்புக்கு முதல்வர் வரவேற்பு ... 4

எல்லாத் துறைகளிலும் மகளிர் ... 7

சென்னையில் சர்வதேசக் கால்பந்துப் போட்டி ... 8

மழை பாதித்த இடங்களில் முதல்வர் ... 10

தமிழன்னையின் புதிய அணிகலன் ... 12

உலகிலேயே தலைசிறந்த செல்வம் கல்வியே! ... 17

மீன் வளர்ப்பு வினா-விடை ... 20

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 24

சேமிப்போம் சேமமுற வாழ்வோம் (கவிதை) ... 28

உணவே மருந்து (மருத்துவம்) ... 31

புயல் மழை வெள்ள இடர்ப்பாடுகள் — முதல்வரின் தொலைக்காட்சி உரை ... 33

சருகுமலைப் பழங்குடி மக்கள் ... 37

பசுக்கள் அதிகம் பால் கறக்க ... 40

புயல்-வெள்ள விளைவால் நோய்கள்: முதல்வர் நடவடிக்கை ... 41

சிறுநீரக இயல் துறை மாநாடு ... 42

காவிரி: மத்திய அரசு அறிக்கை ... 44

மதுவினால் அழிந்த சாம்ராஜ்யம் ... 45

மாணவர் பக்கம் ... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

கார்த்திகைத் திங்கள் - 15

மலர்:22 இதழ்:11

1-12-1991


அடுத்த இதழில் — எழில்மிகு சென்னை 2000... மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழா... துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக்கோட்டு வழங்கும் விழா நிகழ்ச்சிகள் தொகுப்பு.



ரூ.340 கோடி வெள்ளச்சேதம்

# தமிழகத்தில் மத்தியக் குழு

தமிழ்நாடு முழுவதும் பெய்த கடும் மழையினால் 340 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் செய்திக் குறிப்பில் இது குறித்துக் கூறப்பட்டுள்ளதாவது:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் மழையினாலும், புயலினாலும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து 20-11-1991 அன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் டெலிபோன் மூலம் கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முதல் கட்ட மதிப்பீட்டின்படி தமிழகம் முழுவதும் வெள்ளம் மற்றும் புயலால் 340 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் சேதத்துக்கான தமிழக அரசின் நிவாரண நிதி 39 கோடியில், இதுவரை ஒன்பது கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது.

தமிழக அரசிடம் இப்போது இதற்கான நிதியில் 30 கோடி ரூபாய் மட்டுமே உள்ளது. இந்த நிதியை மட்டும் வைத்துக் கொண்டு 340 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்பட்டுள்ள சேதத்துக்கு நிவாரணம் காண முடியாது என்பதைப் பிரதமரிடம் முதல்வர் எடுத்துக் கூறினார். பிரதமர் நரசிம்மராவ் அவர்களிடம் தமிழக வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்து, நிதி உதவி செய்ய வசதியாக மத்திய நிபுணர் குழு ஒன்றை உடனடியாக அனுப்பும்படியும் கோரிக்கை விடுத்தார். முதல்வர் அவர்களின் கோரிக்கையை ஏற்ற பிரதமர் தமிழக வெள்ள, புயல் சேதங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்ய உடனடியாக மத்திய நிபுணர் குழுவை அனுப்புவதாக உறுதி கூறினார்.

## மத்தியக் குழு தமிழகம் வருகை

அதன்படி மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர், திரு. பல்ராம் ஜாக்கர், மாண்புமிகு மத்திய பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்டத் துறை இணையமைச்சர், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் மற்றும் மத்திய உயர் அலுவலர்கள், திரு. பந்த், திரு. நரசிம்மன் ஆகியோர் 24.11.1991 அன்று காலை 10 மணிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை, அவர்தம் இல்லத்தில் சந்தித்து வெள்ளச் சேதம் பற்றி விவாதித்தார்கள்.

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் பெருமழையின் காரணமாக விளைந்த வெள்ளச் சேதங்கள் குறித்தும், வெள்ள நிவாரணப் பணிகளுக்கான மத்திய அரசு உதவி குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் அவர்கள் விவாதித்தனர். அப்பொழுது தமிழக அரசினால் தயாரிக்கப்பட்ட 'சேத-மதிப்பீட்டு அறிக்கை' ஒன்றினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய குழுவினரிடம் கொடுத்தார்.

ஆரம்ப கட்டச் சேத மதிப்பீடு ரூ.340 கோடி என்று கணக்கிடப்பட்டது. தற்போது பெறப்பட்ட முழுமையான மாவட்ட அறிக்கைகள் அடிப்படையில் மொத்தச் சேத மதிப்பீடு ரூ.390.53 கோடி என்ற விவரமும், சமீபத்திய வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களில் மொத்தம் 185 பேர் உயிரிழந்தனர் என்பதும் இக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 2,62,287 குடிசைகள் மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன; 362 கால்நடைகள் இறந்துள்ளன; 7,048 கி.மீ. நீளம் சாலைகள் பழுதடைந்துள்ளன; 809 குளங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளன; 1,40,500 எக்டேர் பரப்பிலுள்ள நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாண்டிற்கான தமிழக அரசு துயர் துடைப்பு நிதி ரூ.39 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டது. ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்கான ரூ.9 கோடி செலவிடப்பட்டுள்ளதால், தற்போது ரூ.30 கோடி மட்டுமே மாநில அரசிடம் உள்ளது. அடுத்த ஆண்டிற்கான துயர் துடைப்பு நிதியை இப்பொழுதே மத்திய அரசிடமிருந்து பெறலாம் என்ற யோசனை மத்திய அரசின் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. முதல்வர் அந்த யோசனையை வரவேற்ற போதிலும், அடுத்த ஆண்டிற்கான துயர் துடைப்பு நிதியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் குழுவினரிடம் முன்வைத்தார்.

இதைத்தவிர, தமிழ்நாடு முழுவதிலும் சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசன ஏரி, குளங்கள், மின் இணைப்புக் கம்பிகள், போன்ற இன்றியமையாத தேவைகள், பெருமளவில் சேதம் அடைந்திருப்பதால், இவற்றையெல்லாம் உடனடியாகச் சீரமைத்தே ஆகவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இத்தகைய பணிகளுக்கு மாநில அரசுக்கு வழங்கப்படும் துயர் துடைப்பு நிதிக்கு மேல் பெருமளவில் மத்திய அரசு நிதி உதவி அளித்தால்தான், தமிழகத்தின் அன்றாட வாழ்க்கையை இயல்பான நிலைக்குத் திரும்பக் கொண்டு வரமுடியும் என்பதை முதல்வர் குழுவினரிடம் எடுத்துரைத்து வலியுறுத்தினார்.

மத்திய அமைச்சர்கள் இருவரும், அவருடன் வந்த மத்திய அரசு உயர் அலுவலர்கள் குழு, இதைப்பற்றி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் விவரங்களைத் தெரிவித்து, முடிந்த அளவிற்குத் தமிழகத்திற்கு, நிதி உதவியை அளிக்க ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்த பிறகு, சென்னை விமான நிலையத்தில் இருந்து அன்று காலை 11.15 மணிக்கு, விமானப் படைக்குச் சொந்தமான ஆவ்ரோ விமானத்தில் மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர், மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றனர். அவர்களுடன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு, மேதகு பாண்டிச்சேரி துணைநிலை ஆளுநர் ஹர்ஸ்வரூப் சிங். மாண்புமிகு பாண்டிச்சேரி முதல்வர் திரு வைத்தியலிங்கம், தமிழக அரசு நிலச் சீர்திருத்த ஆணையர் மற்றும் செயலர் திரு சி.என். ராமதாஸ். தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி.இ. ராமகிருஷ்ணன் ஆகியோர் சென்றனர்.

அவர்கள் கடலூர், சிதம்பரம், நாகப்பட்டினம், தஞ்சை திருச்சி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் காலை 11.15 மணி முதல் பிற்பகல் 1.45 மணி வரை வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டனர்.

அன்று காலை 11 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் மத்தியக் குழுவைச் சேர்ந்த அலுவலர்கள் திரு. பந்த், திரு. நரசிம்மன் ஆகியோர், தலைமைச் செயலர், வருவாய்த்துறைச் செயலர், சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., நாகப்பட்டினம்-காயிதே மில்லத் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் வெள்ளச் சேத விவரம் குறித்து விரிவாக விவாதம் நடத்தினார்கள்.

—என். இளங்கோ





# காவிரி நீர்ப் பிரச்சினை: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு:

## மாண்புமிகு முதல்வர் வரவேற்பு

காவிரித் தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாகத் தமிழ்நாட்டுக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையே நீண்ட நாட்களாகத் தகராறு இருந்து வந்தது. பலமுறை இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடந்தது. எனினும் எந்த முடிவும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து காவிரி நீரப் பிரச்சினையை விசாரிக்க, நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைத்தது.

1990-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2-ஆம் தேதி இந்த நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

1990-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28-ஆம் தேதி நடுவர் மன்றம் முதன் முதலாக விசாரணையைத் தொடங்கியது. 'தஞ்சையில் வறண்டு கிடக்கும் பயிர்களைக் காப்பாற்றுவதற்காகத் தண்ணீர் திறந்து விடும்படி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடுவர் மன்றம், தமிழ்நாட்டுக்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

நடுவர் மன்றம் பிறப்பித்த இந்த உத்தரவை மத்திய அரசு 'கெசட்'டில் வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் வற்புறுத்தி வந்தார். மத்திய அரசு 'கெசட்'டில் வெளியிட்டால்தான் இந்த உத்தரவை அமல்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக மத்திய அரசு பரிசீலனை செய்து வந்தது.



இதற்கிடையில் கர்நாடக அரசு திடீரென்று இந்த இடைக்கால உத்தரவுக்கு எதிராக, 'அவசரச் சட்டம்' ஒன்றைப் பிறப்பித்தது. அதாவது, 'காவிரியில் தண்ணீர் விட வேண்டும்' என்று நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவதற்கு இந்த அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தது. நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் கிடையாது என்று கர்நாடக அரசு வாதாடி வந்தது.

இதன் எதிரொலியாகச் 'சட்டச் சிக்கல்' ஏற்பட்டது. தமிழக அரசு இது குறித்து மீண்டும் மத்திய அரசிடம் முறையிட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து இது பற்றி முறையிட்டார்..

இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி விவாதித்தது. கூட்டத்தில், 'சட்டச் சிக்கல்' உள்ள காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து குடியரசுத் தலைவர் மூலம் டெல்லி உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அறிந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசு இது சம்பந்தமாக இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியது. அவர் இது குறித்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குக் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கடிதம் எழுதினார்.

நடுவர் மன்றத்திற்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உண்டா? கர்நாடக அரசு அவசரம் அவசரமாகப் பிறப்பித்த 'அவசரச் சட்டம்' செல்லுமா? என்பதைப் போன்ற கேள்விகளுக்குப் பதில் தருமாறு அக்கடிதத்தில் அவர் கேட்டிருந்தார்.

டெல்லி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையில் 5 பேர் கொண்ட 'பெஞ்ச்' குடியரசுத் தலைவர் கடிதம் பற்றி விசாரணை நடத்தியது.

தமிழக அரசின் சார்பில் பிரபல வக்கீல் பராசரன், அட்வகேட் ஜெனரல் கே. சுப்பிரமணியன் ஆகியோர் வாதித்தனர். மத்திய அரசின் சார்பில் அட்டர்னி ஜெனரல் ஜி. இராமசாமி வாதித்தார். கர்நாடக அரசு இதை எதிர்த்து மனு தாக்கல் செய்தது. அந்த மாநிலம் சார்பில் வக்கீலும் வாதாடினார்.

இந்த வழக்குச் சம்பந்தமான விவாதம் கடந்த செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்தது.

தீர்ப்பு பின்னர் கூறப்படும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

22.11.1991 அன்று டெல்லி உச்ச நீதிமன்றம் 'காவிரியில் தண்ணீர் திறந்து விட வேண்டும்' என்று தீர்ப்புக் கூறியது.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா தலைமையில், நீதிபதி கே.என். சிங், ஏ.எம். அகமது, குல்திப் சிங், பி.பி. சாவந்த் ஆகிய 5 நீதிபதிகள் கொண்ட 'பெஞ்ச்' இந்தத் தீர்ப்பை வழங்கியது.

'கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது' என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை குறித்து விவாதிக்க நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அதில் மாநில அரசு தலையிட முடியாது. எனவே, கர்நாடக அரசு அவசரச் சட்டம் மூலம் இதைத் தடுக்க முடியாது. அரசியல் சட்டத்திலும் இதற்கு இடமில்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

அதோடு நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் உரிமை உண்டு. எனவே, கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிடலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் பாண்டிச்சேரி, தமிழ்நாட்டுக்கு ஆதரவாக வாதாடியது.

அதே நேரம் கேரளா, கர்நாடக அரசுக்குச் சற்று ஆதரவாக இருந்து வந்தது.

22.11.1991-இல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம், தமிழ்நாட்டின் உயிர்நாடியாக உள்ள காவிரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வந்த முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள முழு விவரம் வருமாறு:-

**''தமிழ்நாட்டுக்கும்,கர்நாடகமாநிலத்துக்கும் இடையேயான காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டிருந்த கருத்துக்கு உச்ச நீதி மன்றம் அளித்திருக்கும் தீர்ப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.**

**காவிரி நடுவர் மன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசு கால தாமதம் இல்லாமல் 'கெசட்'டில் வெளியிடும் என்று நான் நம்புகிறேன்.**

**உச்ச நீதிமன்றத்தின் தெளிவான இந்தத் தீர்ப்பானது இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினையைச் சுமுகமாகவும், நிரந்தரமாகவும் தீர்க்க வழி வகுக்கும் என்று நான் நம்புகிறேன்.**

- இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார். ●

**உலகக் குழந்தைகள் திரைப்பட விழா**

**7-வது உலகக் குழந்தைகள் திரைப்பட விழா 14.11.'91 அன்று திருவனந்தபுரத்தில் தொடங்கியது. 10 நாள் நடைபெற்ற இந்த விழாவில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட குழந்தைகள் கலந்து கொண்டனர். 24 நாடுகளிலிருந்து சுமார் 75 திரைப்படங்கள் இந்த 10 நாள் விழாவில் திரையிடப்பட்டன.**



## பார்த்தோம்! படித்தோம்!

1.11.91 இதழில், மருத்துவக் கட்டுரை என்ற தலைப்பில், குடல்புண்ணைப் பற்றி விரிவாகவும் தெளிவாகவும், புரிந்து கொள்ளும்படி எழுதியிருந்த ஆசிரியர் அவர்களுக்கு என் வாழ்த்து. இதுபோன்ற மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

—கு.ஜெயமுருகன்,
திருத்தங்கல்.

'பொய் சொலலக்கூடாது பாப்பா' என்ற தலைப்பில் இடம் பெற்ற கட்டுரை படித்தேன். பொய் சொன்னதால் என்னென்ன தீமைகள் ஏற்படும் என்பதனை விளக்கியது அது.

—த. வசந்தராஜா,
வாழப்பட்டாம் பாளையம்.

'அறிவுச்சுடர்' படித்தேன். அதில் நம் நாட்டைப் பற்றிய கேள்விகளையும் அதற்குத் தகுந்த பதிலையும் அளித்து, மாணவருக்குப் பாடம் புகட்டியமைக்கு எனது நன்றி.

—த. மணி
கீழ்குமாரமங்கலம்.

'குடல்புண்' கட்டுரை போன்று ஒவ்வொரு இதழிலும் ஒரு நோய் குறித்து மருத்துவக் கட்டுரை ஒன்றை வெளியிட்டு வரலாம்.

—அரிமா. பூபாளம்.
ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி.

'நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம் தொடக்கவிழா', 'நாகப்பட்டினம் ஒரு வரலாற்றுப் பின்னணி'. ஆகியவை பட்டைத் தீட்டிய வைரமென ஜொலித்தன.

—மதி. தமிழரசன்
திருவாரூர்-2

மாணவர் பக்கம் மற்றும் நாகை வரலாற்றுக் கட்டுரை அருமை.

பி.ஜி.அழகிரி,
பெரம்பூர்

நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம் உதயமான விழாவில், தமிழக முதல்வர் அவர்களின் பேச்சு மிகமிகச் சிறப்பாக இருந்தது.

—எஸ். ஆறுமுகம்
தென்காசி.

## பாடத்திட்டத்தில் விளையாட்டுப் பயிற்சி



புதுடெல்லியில் மாநில விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறை மாநில அமைச்சர்களின் 4-வது தேசிய மாநாடு இம்மாதம் 18-அம் தேதி நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழக அரசு பின்வரும் கோரிக்கைகளை மத்திய அரசின் பரிசீலனைக்காக விடுத்துள்ளது.

1. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் விளையாட்டுப் பயிற்சியினைத் தமிழ்நாட்டிலுள்ள. அனைத்துப் பள்ளிகளிலும், பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக வரும் கல்வி ஆண்டிலிருந்து சேர்க்கலாம் என்று அறிவித்துள்ளார். இதன் அடிப்படையில் மத்திய அரசையும் ஏனைய மாநில அரசுகளையும் இதே கொள்கையினைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளுதல்.

2. 1993-ஆம் ஆண்டு நடைபெற உள்ள 10-வது நேரு தங்கக் கோப்பை கால்பந்து விளையாட்டுப் போட்டித் தொடரினை சென்னையில் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடத்திட ஏதுவாக இந்த விளையாட்டு அரங்கினை நவீனப்படுத்தி மேம்படுத்த ஏற்படும் செலவுத் தொகையில் (ரூ.10 கோடி) 50 விழுக்காடு தொகையினை மைய அரசு ஏற்க வேண்டும்.

3. ஆதார விளையாட்டு வசதிகளைப் பெருக்கிட மைய அரசு வழங்கும் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 5 இலட்சம், இதில் எது குறைவோ என்ற உச்ச வரம்பினை நீக்கி மொத்த திட்ட மதிப்பீட்டுச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை மைய அரசு ஏற்க வேண்டுதல்.

4. வீர விளையாட்டுப்பயிற்சி மையம் ஒன்றினை வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி குன்றில் அமைத்திட மைய அரசு நிதி உதவி வழங்கிட வேண்டுதல்.

5. அரசியல் சட்ட அமைப்பில் விளையாட்டு என்ற பொருளை மாநிலப் பட்டியலில் தக்க வைத்துக் கொள்ளவும், மத்திய பட்டியலில் இப்பொருளைக் கொண்டுவர வேண்டும் என்ற மைய அரசின் கொள்கையினை மாநில அரசு ஏற்காது என்பதையும் தெரிவித்தல்.

6. உதக மண்டலத்தில் உயர் மலைப் பயிற்சி உபமையம் அமைத்திட இந்திய ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டியினரைக் கேட்டுக் கொள்ளல்

தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த 6 கோரிக்கைகள் தேசிய மாநாட்டில் வைக்கப்பட்டன. ●

## ஐ.நா. சபைக்குப் புதிய பொதுச் செயலாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளராக எகிப்து நாட்டின் துணைப் பிரதமர் திரு. பொட்ரோஸ் காலியை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் தேர்ந்தெடுத்துள்ளது. தற்போதைய பொதுச் செயலாளர் திரு. சேவியர் பெரெஸ்டி கொய்யர் இவ்வாண்டின் இறுதியில் இந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால், இந்த உயர் பதவிக்குத் திரு. காலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சிறந்த நிர்வாகியும், பொருளாதார நிபுணரும், சர்வதேசச் சட்டத்தில் நிபுணருமான திரு. காலி, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் மொத்த வாக்குகள் பதினைந்தில் 11 வாக்குகளைப் பெற்றார்; 4 பேர் வாக்களிக்கவில்லை.

இவரை எதிர்த்து 12 பேர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக சரித்திரத்தில் மிக முக்கியமான கால கட்டத்தில் ஐ.நா. சபையின் மிக உயர்ந்த பதவிக்குத் திரு. காலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

69-வயதான திரு. பொட்ரோஸ் காலி, ஐக்கிய நாடுகள் சபையின் ஆறாவது பொதுச் செயலாளராகப் பதவி ஏற்பார். ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒருவர் ஐ.நா. சபை பொதுச் செயலர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இவர் 5 ஆண்டுக்காலம் இந்தப் பதவியில் இருப்பார்.

இந்தத் தேர்வு அணிசேரா இயக்கத்துக்கும் ஆப்பிரிக்க நாடுகளின் குழுவுக்கும் கிடைத்த வெற்றி என்று கருதப்படுகிறது.



# எல்லாத் துறைகளிலும் மகளிர்!

## மகளிர் நாளில் முதல்வர் செய்தி

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி அனுசரிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தில், 25.11.91 அன்று மகளிர் நாள் கொண்டாடப்பட்டது.

அந்நாளில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட செய்தி விவரம் வருமாறு:

'ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டு வாரம், மறைந்த பாரத பிரதமர் அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் பிறந்த நாள் விழாவில் தொடங்கி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்களைப் பற்றி சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம், ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது. அந்த தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தில் மகளிர் தினம் 25.11.1991 அன்று அனுசரிக்கப்படுவதை நாம் அனைவரும் அறிவோம்.

'மக்கள் தொகையில் சரிபாதியாகவுள்ள பெண்களின் பிரச்சினைகள், அவர்களின் முன்னேற்றம், மகளிர் சமுதாயத்தில் ஆற்றுகின்ற பங்கு, அவர்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுக்கின்ற வாய்ப்புகள் ஆகியவற்றை எடுத்துரைத்து மகளிருடைய நலனை மேம்படுத்துவதற்காகவே மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. நம் நாட்டில் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கூட, இன்னமும் பெண்களுடைய எழுத்தறிவு என்பது முழுமை அடைந்துவிட்டது எனக் கூற முடியவில்லை. பெண் குழந்தைகள் விரும்பத்தக்கவர்களாக இருப்பது இல்லை. இவற்றையெல்லாம் களையவும், மேலும் எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக பெண்களையும் அழைத்துச் செல்ல சமுதாயமும், அரசும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன.

'இத்தகைய சிந்தனைகளை எல்லாம் நமது நெஞ்சத்தில் தேக்கி, அவற்றிற்கு செயல் வடிவம் கொடுத்து, மகளிர் எல்லா நலன்களும் பெற வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கமாகும். எல்லாத் துறைகளிலும், மகளிர் புதிய உயர்நிலைகளை அடையவேண்டுமென்ற, என் பெரு விருப்பத்தினை தெரிவித்து, மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் பயன் முழுமையாக மகளிரைச் சென்றடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ●



★ கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும், அழுது சுதறும் குழந்தைகளின் உருவங்களும், நலிந்துவிட்ட குடும்பங்களும் என்னுடைய மனக் கண்முன் காட்சியளித்தன; சிறிது நேரம் சிந்தித்தேன்; மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட தாய்மார்களின் மகிழ்ச்சி பொருந்திய குடும்பங்கள்தான் தமிழக அரசுக்கு முக்கியம்; 'இதற்கு எதிராக இந்த வருமானம், எந்த வகையிலும் ஈடல்ல' என்று முடிவு கட்டினேன்; ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை மூடி-திட்டத்தை இன்னும் உறுதியாக அமுலாக்கி- அத்துறையில் வெற்றி காண முனைவோம்'.

# சென்னையில் சர்வதேசக் கால்பந்துப்போட்டி

சென்னையில் 1993 ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ள 10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் முதற் கூட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 22.11.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இது குறித்துத் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டி 1993 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற உள்ளது. தமிழகத்தில் விளையாட்டுப் போட்டிகளை நல்ல முறையில் நடத்துவதில் அக்கறை கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இப்போட்டியினை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இக்கால்பந்து, போட்டியினைச் சிறப்பாக நடத்தும் வண்ணம், சென்னையிலுள்ள நேரு விளையாட்டரங்கத்தைச் சர்வதேசத் தரத்திற்கேற்ப மேம்படுத்தி அமைப்பது குறித்து விரிவாக இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

இப்போட்டியினைச் சிறப்பாக நடத்துவதெற்கென ரூபாய் ஒரு கோடி அளிப்பதாக இந்தியன் வங்கியின் தலைவர் திரு எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்து, முதல் தவணையாக ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

தொழிலதிபர் திரு ஏ.சி. முத்தையா அவர்களும் ரூபாய் ஒரு கோடி வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புக் குழுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

தலைவர் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, துணைத் தலைவர் - மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, உறுப்பினர்கள் - தமிழக அரசின் தலைமைச் செயலாளர், திரு. டி.வி. வெங்கட்ராமன், செயலாளர், நகர்ப்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, செயலாளர், கல்வித்துறை, மாநிலக் காவல்துறைத் தலைவர் (டி.ஜி.பி.), காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்-ஒழுங்கு), நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம், திரு. எம். கோபாலகிருஷ்ணன், தலைவர் இந்தியன் வங்கி, திரு. பி. சிவந்தி ஆதித்தன், தலைவர் இந்திய ஒலிம்பிக் சங்கம், திரு. எம்.ஏ.எம். ராமசாமி, தொழிலதிபர், திரு. ஏ.சி. முத்தையா, தொழிலதிபர், திரு. ஆர். வீரமணி, ஜெம் கிரானைட்ஸ், திரு. வினு மாமென் எம்.ஆர்.எப். நிறுவனம், திரு. எல்.ஜி. ராமமூர்த்தி, தொழிலதிபர் மற்றும் தலைவர் தமிழ்நாடு கால்பந்து சங்கம், திரு ஆர். பழனியப்பன், தொழிலதிபர் மற்றும் தலைவர், தமிழ்நாடு கால்பந்து சங்க உயர்மட்டக் குழு, திரு. சி.ஆர். விஸ்வநாதன், தலைவர் தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் மற்றும் அமைப்பாளர், தமிழ்நாடு கால்பந்து சங்க உயர்மட்டக் குழு, திரு. கே. முருகன், இணைச் செயலாளர், இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் செயலாளர், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம்.







## முதல்வர் கூட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் 12.11.91 அன்று பதினொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில்- கோவை, மதுரை, வடஆர்க்காடு அம்பேத்கர், பெரியார், சேலம், நீலகிரி, திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, தென் ஆர்க்காடு, சிதம்பரனார் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள், பொது விநியோக முறை, சட்டம் ஒழுங்கு நிலைமை, இலவச மருத்துவ முகாம்கள், குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு, சத்துணவுத் திட்டம் முதலியவைகளைச் செயல்படுத்துதல் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மறுநாள் 13.11.91-அன்று சென்னை, திண்டுக்கல்-அண்ணா, காமராஜர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், நாகப்பட்டினம்-காயிதேமில்லத், தஞ்சாவூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பதினொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்.





சென்னை நகரில்

# மழை பாதித்த இடங்களில் முதல்வர்

சென்னை நகரில் சமீபத்தில் யல், மழையால் பாதிக்கப்பட்ட டங்களை மாண்புமிகு முதல்வர் ரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா வர்கள் 16.11.1991 அன்று நரில் சென்று பார்வையிட்டார். காட்டும் மழையில் நனைந்தபடி வள்ளப்பகுதிகளைச் சுற்றிப் ார்த்து, வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களிடம் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.

வங்கக் கடலில் உருவான புயல் காரணமாகச் சென்னை நகரிலும் தமிழ்நாட்டிலும் பல்வேறு மாவட்டங் களிலும் சமீபத்தில் பலத்த மழை பெய்தது. சென்னை நகரில் வியாசர்பாடி, கே.கே.நகர், போஜ ராஜநகர், அரும்பாக்கம், பெரம்பூர், சைதாப்பேட்டை, நுங்கம்பாக்கம் போன்ற தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்தப் பகுதிகளில் உள்ள குடிசைகள் பல வெள்ளத்தால் மிதந்தன. கடலோரப் பகுதிகளான இராயபுரம், பூங்காவன குப்பம் போன்ற பகுதிகள் கடல் அரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

புயல், மழை சேதங்களைப் பார்வையிட்டு-பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறவும் மீட்புப் பணிகளைப் பார்வையிடவும் முதல்வர் அவர்கள் 16.11.1991 அன்று காலையில் தமது இல்லத்திலிருந்து 'ஜீப்' மூலம் புறப்பட்டார். முதல்வர் அவர்கள் இராயபுரம் வழியாகச் சென்று காசிமேடு தேசிகன் நகரில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று குறைகளைக் கேட்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச உணவுப் பொட்டலங்களையும், ரொட்டிகளையும் வழங்கினார். பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் குறித்துக் கொண்டு உடனடியாக மேல்நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

பின்னர், ஸ்ரீனிவாச நகரில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் பார்வையிட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக போஜராஜன் நகர் சென்றார். அங்கு 400-க்கும் மேற்பட்ட குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு முதல்வர் அவர்கள் முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று குடிசை மக்களுக்கு ஆறுதல் கூறி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொட்டியும், உணவுப் பொட்டலங்களும் வழங்கினார்.

பிறகு வள்ளலார் பேருந்து நிலையம், மூலக்கொத்தளம், வியாசர்பாடி வழியாகச் சென்று எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் டாக்டர் அம்பேத்கர் கல்லூரி அருகே உள்ள குடிசைப்பகுதி மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு - பேசின்பாலம், தங்கசாலை, கடற்கரை இராஜாஜி சாலை வழியாகச் சென்றபோது தலைமைச் செயலகம் அருகே உள்ள திடீர் நகர்ப் பகுதியில் சாலையோரத்தில் திரளான மக்கள் நிற்பதைப் பார்த்து, தமது ஜீப்பை நிறுத்தி அப்பகுதி மக்களிடம் முதல்வர் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர், பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியாக அரும்பாக்கம் சென்றபொழுது, வண்டியிலிருந்து இறங்கி மழையினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, 'தேவையான மீட்புப் பணிகள் உடனே நடைபெறும்' என்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் உறுதி அளித்தார்.

முதல்வர் அவர்கள் பிறகு அங்கிருந்து புறப்பட்டு கோயம்பேடு 100 அடி சாலை வழியாகச் சாலிகிராமம், வடபழனி, அசோக் நகர் வழியாக - கே.கே.நகர் சென்றார். அங்கு வெள்ளத்தால்பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வர் ரொட்டி, உணவுப் பொட்டலங்களை வழங்கி ஆறுதல் கூறினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஈக்காடுதாங்கல், கிண்டி வழியாக முதல்வர் அவர்கள் சைதாப்பேட்டைக்குச் சென்றார். சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலம் அருகே சென்றபோது, முதல்வர் வண்டியிலிருந்து இறங்கி அடையாறு ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுவதைப் பார்த்து, கரையோரம் தங்கியிருக்கும் மக்களுக்குச் செய்துள்ள மீட்புப்பணிகள் குறித்து விவரம் கேட்டறிந்தார். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அருகே உள்ள குடிசைப்பகுதி மக்களுக்கு முதல்வர் இலவச உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

முதல்வர் அவர்கள் பார்வையிடச் சென்ற பகுதிகளில் எல்லாம் சாலையின் இருமருங்கிலும் திரளான மக்கள் கூடியிருந்தனர். பிற்பகல் 2.00 மணி வரை சுமார் 4 மணிநேரம் முதல்வர் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்த்தார். வெள்ளம் சூழ்ந்த குடிசைப் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் நீரை 'பம்ப்' செய்து உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. இ. மதுசூதனன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. டி.எம். செல்வ கணபதி, திரு. முகமது ஆசிப், திரு. எம். ஆனந்தன், திரு. டி. ஜெயக் குமார் மற்றும் முதல்வர் அவர்களின் செயலாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., இணைச் செயலாளர் திரு. க. கணேசன், இ.ஆ.ப. சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராமு இ.ஆ.ப., தனி அதிகாரி (பொறுப்பு திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப. ஆகியோர் உடன் சென்றனர்.

- நமது செய்தியாளர்



## வெள்ளம், பெருமழையால் சேதம் — குடிசைகளுக்கு நிதியுதவி
## மாண்புமிகு முதல்வர் உத்தரவு

வெள்ளம், பெருமழையால் சேதம் அடைகின்ற குடிசைகளுக்கு புதைத் திரும்பவும் சீர்படுத்த அரசு நிதியுதவி அளித்துவருகிறது.

வெள்ளம், பெருமழையினால் சென்னையில் முழுமையாகச் சேதமடைந்த (Fully Damaged) குடிசைகளுக்கு ரூ.500/-ம், பகுதிச் சேதமடைந்த (Partially Damaged) குடிசைகளுக்கு ரூ.250/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோலத் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.400/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.200/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

விலைவாசி ஏற்றத்தைக் கருத்தில் கொண்டும், தமிழக அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், சென்னையில் வெள்ளத்தால் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.600/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.300/-மாக அதிகரித்தும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் முழுமையாகச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.500/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.250/-மாக அதிகரித்து வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்தது.

# தமிழன்னையின் புதிய அணிகலன்!

## 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் புகழாரம்

**டாக்டர் நாவலரின் 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழாவின் போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (18.11.1991).**

'நடமாடும் பல்கலைக்கழகம்' எனப் பாராட்டப்படும் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை' என்ற இந்த நூலைத் தமிழ் மக்கள் பயனுறும் வகையில் இன்று வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப் பெயராகத் தன் பெயர் விளங்க வேண்டும் என்கிற உணர்வும், தந்தை பெரியாரின் பகுத்தறிவின்பால் அவருக்கு இருந்த ஈடுபாடும்தான், நாவலரைச் சமுதாயத்திற்குத் தனித்தன்மையோடு முதலில் அடையாளம் காட்டின.

வெறும் 'நாராயணசாமியாக'த் தனது வாழ்க்கையைத் துவங்கி, 'நெடுஞ்செழியனாக' அறிமுகமாகி, 'நாவலராக'ச் சிறந்து, 'நடமாடும் பல்கலைக் கழகமாக' உயர்ந்து திகழும் நாவலர் அவர்கள், இனிவரும் தலைமுறையினர் என்றென்றும் அவரைப் போற்றும் வகையில் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

தனது அரசியல் வாழ்வின் ஆரம்ப நாட்களைப் 'பாதி நாள் இரயிலிலும், பாதி நாள் ஜெயிலிலும்' கழித்த தலைவர்களில் நாவலர் முன்னணி வரிசையில் இருக்கின்றார். அவரது பெருந்தன்மையும் அடக்கமும் நாம் அனைவரும் விரும்பிப் பின்பற்ற வேண்டிய உயரிய பண்புகளாகும்.

இளமைக் காலந்தொட்டுச் சமுதாயப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நாவலர் அவர்கள் நடந்து வந்த பாதை, கல்லும் முள்ளும் நிறைந்தது; எதிர்ப்பும் ஏளனமும் கொண்டது!



அவரது இளமைக்கால ஆவேசத்தைப் பார்க்கிற சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவரது அமைதியான மனப்போக்கையும், ஒழுக்கமான அரசியல் அணுகுமுறைகளையும் பார்க்கிற சந்தர்ப்பம், நமக்கு நிறையவே கிடைத்திருக்கிறது.

உழைப்பை மட்டுமே அவர் எப்போதும் முழுமையாக நம்பக் கூடியவர். எந்தப் பொறுப்பையும் நாவலரிடம் நம்பி ஒப்படைக்கலாம் என்பதும் நாடறிந்த உண்மை ஆகும்.

ஏனென்றால், அவரை வளர்த்த தலைவர்கள், நமது வணக்கத்திற்குரிய பெரியவர்கள், அவற்றை நமக்கு வரலாற்றுப் பெருமைகளாக எடுத்துரைத்துச் சென்றுள்ளனர்.

'நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்லவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் தயாராக இருக்கிறேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே 1956-இல் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் குறிப்பிட்டார் என்றால், நமது நாவலர் அன்றே எத்தனைப் பாராட்டுதலுக்கு உரியவராக இருந்துள்ளார் என்பதை நாம் அறிய முடிகிறது.

'அறியாமை இருள் அகன்றிட, அறிவு ஒளி பரவிட, வளம் பெருகி வறுமை நீங்கிட, துன்பம் போக, இந்நாட்டு மண்ணில் இன்பம் மிக, வாட்டம் நீங்கி வாழ்வு மலர, அய்யா அவர்கள் சுயமரியாதைச் சுடர் கொளுத்திக் குரல் கொடுத்த நேரத்தில், அப்பெரியாரின் பாசறையிலே இளந்தாடி வேந்தராக - பாசமிகு நல் தொண்டராக விளங்கியவர்தாம் நமது நாவலர் அவர்கள்!' - என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் புகழப்பட்டவர் என்றால், அவரது உயர்ந்த நிலையை நாம் உணரமுடிகிறது.

தனக்கென்று ஓர் தனிப் பாணியை வகுத்துக் கொண்டு, அதிலிருந்து சிறிதும் மாறுபடா வண்ணம் தனது பேச்சையும் எழுத்தையும் அமைத்துக் கொண்டிருப்பவர் நாவலர் அவர்கள். நாவலரின் எழுத்துக்களிலே மென்மையான தென்றலை மட்டுமல்ல; வெப்பமான எரிமலையின் வேகத்தையும் காணலாம். எந்தக் காலகட்டத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விட்டுக் கொடுக்காதவர்.

'நாவலர் என் பக்கத்தில் இருக்கிறார் என்றால் அறிஞர் அண்ணாவே என் பக்கத்தில் இருப்பதாக நான் கருதுகிறேன்' - என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இந்த இயக்கத்தில் எவரை இழக்கத் தயாராக இருந்தாலும் நாவலரை இழக்க மட்டும் புரட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கவில்லை.

## டாக்டர் நாவலரின் 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழா

தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 18.11.1991 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விழாவில் 'திருக்குறள் தெளிவுரை' நூலின் முதல் பிரதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதனைச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. இராம. வீரப்பன் ஆகியோருக்கும் நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நூல் வழங்கினார்.

நினைவுப்பரிசு: முதல்வர் அவர்களுக்கு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப்பல்கலைக் கழகங்களின் சார்பில் முதல்வர் அவர்களுக்குக் கல்வி அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

'திருக்குறள் தெளிவுரை' நூலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்புரையும் நன்றியுரையும் ஆற்றுகையில் - 'திருவள்ளுவர் திருக்குறளை எழுதி சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அதற்கு உரை எழுதப்பட்டது. பல நேரங்களில் பல அறிஞர்களால் திருக்குறள் தொகுக்கப்பட்டது என்றார். மேலும் பேசுகையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை 1992 அல்லது 1993-இல் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்த முதலமைச்சர் ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, வருவாய்த் துறை அமைச்சர், திரு. எஸ்.டி. சோமசுந்தரம், கல்வி அமைச்சர் திரு. இராம. வீரப்பன், திருக்குறளார் திரு. வீ. முனுசாமி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினார்கள்.

முன்னதாக டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.

## கிராமப்புற மாணவ மாணவிகளுக்கு இலவசக் கம்ப்யூட்டர் பயிற்சி

கிராமப்புற மாணவ மாணவிகள் இலவசமாகக் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு அண்ணா பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

கம்ப்யூட்டர் பயிற்சியில் நகர்ப் புற மாணவர்கள் பெற்றுள்ள வளர்ச்சியைக் கிராமப்புற மாண வர்கள் பெறவில்லை. நகரிலுள்ள மாணவ-மாணவிகள் தங்கள் பள்ளி, கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுகிறார்கள். ஆனால் கிராமப் புறங்களில் படிப்பவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. இந்தக் குறையைப் போக்கும் பொருட்டு, தற்சமயம் அண்ணா பல்கலைக் கழகம் கிராமப்புற மாணவ மாணவி களுக்கு இலவசமாகக் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு அமெரிக்கா விலுள்ள 'தமிழ்நாடு பவுண்டேஷன்' என்ற அமைப்பு 20 ஆயிரம் அமெரிக்க டாலர்களையும், தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பக் கவுன் சில் ரூ.1.50 இலட்சமும், நன் கொடையாக வழங்கியுள்ளன.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சி முதலில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் 6 அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் நடைபெறும்.

கம்ப்யூட்டர்கள் பொறுத்தப்பட்ட கம்ப்யூட்டர் வேன் மூலம் மாதத் திற்கு 9 நாட்கள் வீதம் 6 மாதத் திற்குப் பள்ளிக் கூடங்களில் இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சி தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்றுத் தரப்படும்.

---

அதனால்தான் புரட்சித் தலைவர் வழிவந்த நானும் அவரது அடியொற்றி, நாவலரை என் பக்கத்திலே வைத்திருக்கிறேன். என்றும் தொடர்ந்து வைத் திருப்பேன். அவரது நாணயத்தை மதித்துப் பெருமை வாய்ந்த நிதி அமைச்சராக்கிப் பெருமைப் படுகிறேன்.

'அமைச்சர்களிலேயே நான்தான் அதிகப் பணக்காரன்' என்று அவர் அடிக்கடி கூறுவார். அதற்குக் காரணம் - அவர் நமது அரசின் நிரந்தர நிதி அமைச்சர் என்பதால்தான்! இந்தப் பெருமை யெல்லாம் அவர் ஒரே நாளில் பெற்ற அதிர்ஷ்ட மல்ல; கடுமையான உழைப்பும், முயற்சியும் அவருக்கு, வழங்கிய காலத்தின் பரிசுதான் இவை.

குறிப்பாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல் வரிகளை இன்றைய இளைய தலைமுறை யினர் கற்றுக் கொள்வதற்கும், நடுத்தர வயதினர் நினைவூட்டிக் கொள்வதற்கும், முதிய தலைமுறை யினர் கேட்டு மகிழ்வதற்கும், அண்ணாவின் முதல் தம்பி, ஒரு அரிமாத் தமிழன் இப்போது தமிழகத் தில் உண்டென்றால் 'அது நாவலர் மட்டும் தான்...! நமது நாவலர் மட்டும் தான்!' என்று நான் மீண்டும் மீண்டும் கூற விரும்புகிறேன். இதனை எவரும் மறுக்க இயலாது.

பல்லாண்டுகளாகத் தாம் ஏற்றுக் கொண்ட இலட்சியக் கொள்கைகளின் அடிப்படையில், சமுதாய முன்னேற்ற மற்றும் அரசியல் மேம் பாட்டுப் பணிகளை அயராது ஆற்றிவரும் நாவலர் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கிடையே, 801 பக்கங்கள் கொண்ட, இலக்கியச் செறிவும், ஆராய்ச்சி நுணுக்கங்களும் அமையப்பெற்ற, இத் தகைய நீண்டதொரு தெளிவுரையைப் படைத் துள்ளது ஒரு மாபெரும் சாதனை என்றே நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு குறளுக்கும், நாவலர் அவர்கள், பொழிப்புரை, கருத்துரை என்று இரண்டு பகுதி களாகப் பிரித்து, அவைகளில் தெளிவுரையை வழங்கியிருக்கிறார்.

பொழிப்புரையை ஆராய்ச்சிக் கண்ணோட்டத் தோடு, குறளில் வருகின்ற சொற்களின் பொருட் செறிவுகள், மற்ற குறள்களில் வள்ளுவர் அவற்றி னைக் கையாண்டிருக்கும் பாங்கு, மற்றும் அக் குறளின் கருத்தாழம், ஆகியவற்றைத் திறனாய்வு நோக்கோடு தொகுத்து வழங்கியிருக்கிறார். மற் றொரு பகுதியான கருத்துரையை, எளிமையான தமிழில் அழகுற அமைக்கப் பெற்ற வார்த்தை களால், எல்லோரும் எளிதில் படித்து அறிந்து கொள்ளத்தக்க வகையில் வழங்கியிருப்பது, பாராட்டிற்குரியது.

இந்நூலினைத் தாம் எழுத முற்பட்டது எதற் காக என்பதை நாவலர் அவர்களே தனது முன்னு ரையில், 'குறட்பாக்களின் உண்மைப் பொருளைப் பகுத்து, ஆராய்ந்து பார்க்கும் கண்ணோட்டத் தோடு, இனிய, எளிய, நல்ல, தெளிவான தமிழ் நடையில் உணர்த்துவது' என்று தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார். அந்த நல்ல முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளார்.

நாவலர் அவர்களின் திருக்குறள் தெளிவுரை யானது, இனிய, எளிய, தெளிவான நூல் என்ப தில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

அதுபோன்றே 'உலகியலுக்கு ஒத்த முறையில், உலக மக்கட் சமுதாயத்தோடு பொருந்திய வகை யில், இயற்கை நிகழ்வுக்கு முரண்படாத வகையில் தெளிவுரை அமையப் பெறவேண்டும்' என்று, மற்றோர் இடத்தில் அவர் தெரிவித்துள்ள விருப் பத்தையும் முழுமையாக நிறைவேற்றியுள்ளார்.

ஒவ்வொரு குறளுக்கும் அவர் தெளிவுரை வழங்கியுள்ள விதத்தினைப் பார்த்தால், நாவலர் அவர்கள் எவ்விதம் வள்ளுவப் பெருந்தகையின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்ப தாமும் தமது தெளிவுரையை 'நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களுக்கு' ஆட்படாத வகையிலும், கற்பனைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவமில்லாத வகையிலும், 'சாதி, சமய, இன வேறுபாட்டுக் கொள்கைகளை' முற்றிலும் அந்நியப்படுத்துகின்ற வகையிலும் அமைத்திருக்கிறார் என்பது விளங்கும். மேலும்,



நாவலர் அவர்கள் தமது நோக்கத்தினைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'வள்ளுவர் வகுத்த அறநெறியின் உண்மைப் பொருளை, உள்ளது உள்ளவாறு, உலகியலுக்கு ஏற்ற முறையில், மக்களினம் உணர்ந்து செயல்படவேண்டும் என்பதுதான், இந்தக் குறள் விளக்க உரையின் தலையாய நோக்கமாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கருத்தினை, ஒரு அறிவுரையினை, ஒருவர் கூற முற்படும்போது, அதனை அவர் தமது வாழ்க்கையிலும் பின்பற்றுபவராக இருந்தால்தான் அது சிறப்புடையது ஆகும்.

ஒரு சிலரைப் போன்று தாங்கள் சொல்வது ஒன்றும், செய்வது மற்றொன்றுமாக இராமல், நமது நாவலர் அவர்கள் வள்ளுவப் பெருந்தகை யின் நெறிமுறைகளுக்கு ஏற்ப, தமது வாழ்க்கையை அமைத்து, நடத்தி வருபவர் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தமிழக நிதியமைச்சரான அவர், தான் அறி வித்த நிதிநிலை அறிக்கையில் -

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த<br>வகுத்தலும் வல்லது அரசு'

என்ற பொருத்தமான குறளினை மேற்கோள் காட்டி, இன்றைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, பொருள் வரும் வழிவகை உண்டாக்கிக் கொள்ளுதல், அப்படி வரும் பொருள்களை ஒரு வழிச் சேர்த்தல், அவ்வாறு சேர்த்ததைப் பாது காத்தல், அப்படிக் காத்ததைப் பகுத்து, நாடு, மக்கள், கலை வாழ வளர நல்ல வழிகளில் செலவு செய்தல், என்ற நான்கு வழிகளில் வல்லதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அழகாகவும், பொருத்தமாகவும் சட்டமன்றப் பேரவையில் எடுத் துரைத்தார். திருக்குறள் நூலின் மீது இவர் கொண்டுள்ள மோகத்தையும், வள்ளுவப் பெருந் தகை கூறியுள்ள குறள் நெறிகளில் இவருக்கு உள்ள ஈடுபாட்டையும் நாம் இவரிடம் தினமும் காண முடிகிறது.

வள்ளுவர் அவர்கள் மனைவி என்ற சொல் லினைக் கூற முற்படுகையில், 'வாழ்க்கைத் துணை நலம்' என்று கூறுகிறார். மனைவி என்பதற்கு 'வாழ்க்கைத் துணை நலம்' என்று வள்ளுவர் சொல்லாட்சி செய்திருப்பது, வேறெந்த மொழி யிலும் காணாத, அரிய சொல்லாட்சி. நாவலர் அவர்களும், தமது வாழ்க்கைத் துணை நலத்துடன் இயைந்து, குறள் நெறிமுறைக்கு ஏற்ப வாழ்ந்து வருவது, அனைவராலும் போற்றுதற்குரியது, பாராட்டுதலுக்குரியது.

நாவலர் அவர்கள் இந்தத் திருக்குறள் தெளி வுரையை உருவாக்குவதற்கு, எத்தனை முயற்சி,

---

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர் களின் பிறந்தநாளான 19.11.91 அன்று, நாடெங்கும் தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாடப்பட்டது. அன்றையதினம், அரசு தலைமைச் செயலக இராணுவத் திடலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருமதி இந்திராகாந்தி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்; அரசு ஊழியர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.





ன்னெச்சரிக்கை, கவனம் செலுத்தியிருக்க வண்டும் என்பதற்கு, காலத்தின் அருமை கருதி ரேயொரு எடுத்துக்காட்டினை மட்டும் இங்கு ங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

திருக்குறளின் முதல் குறளில் வருகிற 'ஆதி கவன்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் லக்கணம் கூறும்பொழுது, அதனை இரு பயரொட்டுப் பண்புத்தொகை என்று கூறு றார். அதனை, நமது நாவலர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், 'ஆதிபகவன்' ான்ற சொல் உள்ளபடியே இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக இருந்திருக்குமேயானால், ஆடித்திங்கள்' போன்று அது 'ஆதிப்பகவன்' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 'ஆதிபகவன்' என வள்ளுவர் அச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளதால், அதற்குரிய உண்மைப் பொருளைக் கண்டறிய வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

அந்த முயற்சியிலும் வெற்றி பெற்று, அதற் குரிய பொருளாக, 'ஆவதற்குக் காரணமான 'பகவன்' அல்லது 'அறிவன்' என்ற பொருளைத் தான் நாம் கொள்ள வேண்டும், என்று சரியாகக் கூறி, ஆழ்ந்த இலக்கணச் சொல்லாராய்ச்சி செய்திருக்கிறார். நாவலர் அமைதியானவர்தான், ஆனால் அறிவுப்போர் நிகழ்த்த அவர் எந்தக் காலத்திலும் பின்வாங்கியதில்லை. அதனால்தான் பழகுவதற்கு இனிமையான நமது மூத்த தலைவர் களில் ஒருவரான டாக்டர் நாவலர், திருக் குறளுக்கு இனிமையான, எளிமையான, தெளிவுரை எழுதியிருப்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சி யைத் தருகிறது.

நாவலரின் இந்தச் சீரிய இலக்கிய முயற்சி, அவரைத் திருக்குறள் உரையாசிரியர்கள் வரிசை யில் செம்மாந்து நிற்க வழிவகுத்துள்ளது. தமிழ் கற்கும் மாணவர்கள், தமிழ் நூல் திறனாய் வாளர்கள், மற்றும் வள்ளுவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவலோடு உள்ள அத்தனைப் பேருக்கும், இந்த நூல் சிறந்த விருந் தாக அமையும் என்று நான் உளமாற நம்புகிறேன்.

நாவலர் அவர்களின் திருக்குறள் - தெளிவுரை, திருக்குறளுக்கான புதிய தெளிபொருள் விளக்க உரையாக, சிறப்பாக எழுதப்பட்டு, இன்று என் னால் வெளியிடப்பட்டதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

நமது நாவலர் அவர்கள் இதுநாள் வரை பல தமிழ்த் தொண்டுகள் புரிந்தபோதிலும், இன்று அவர் தமிழ் அன்னைக்குச் சூட்டியுள்ள இந்தப் புதிய அணிகலன், என்றென்றும் ஒளி வீசித் தமிழ் உலகில் நிலைத்து நிற்கும் என்று கூறி, நாவலரின் இந்தத் தமிழ்ப்பணி மேலும் தொடர வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து, அவரை வாழ்த்துகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில் - நூலாசிரியரும் மாண்புமிகு நிதியமைச்சருமான டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்புரையும் நன்றியுரையும் ஆற்றினார்.



# உலகிலேயே தலைசிறந்த எவராலும் பறிக்கமுடியா செல்வம் கல்வியே!

## நேரு பிறந்தநாள் விழாவில் முதல்வர் உரை

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 102-வது பிறந்தநாள் விழா, 14.11.1991 அன்று தமிழக மெங்கும் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது.

மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மற்றும் அமைச்சர் பெருமக்களும் அன்றைய தினம், சென்னை-கத்திப்பாராவில் உள்ள நேரு பெருமகனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்கள்.

விடாது மழை பெய்து கொண் டிருந்தபோதிலும் - அன்றைய தினம் காட்டாங்கொளத்தூர் சிவானந்தா சரஸ்வதி சேவாஸ்ரமத்தில் நடை பெற்ற குழந்தைகள் நாள் விழா விற்கு வருகை தந்தார் மாண்புமிகு முதல்வர். 1945-இல் நிறுவப்பட்ட அவ்வில்லத்தில், அவர் பாண்டு வாத்திய இன்னிசையோடு வர வேற்கப்பட்டார்.

குழந்தைகள் நலனில் பெரு நாட்டங்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிவானந்தா குருகுலத்திற்குத் தமது சொந்தப் பொறுப்பில் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பேருந்து ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்; அந்தக் குருகுலத்தின் நிறுவனர் திரு. எஸ்.வி. ஐயர் நூற்றாண்டு விழா நினைவாகப் புதிதாக அமைக்கப் பட்ட கலையரங்கத்தைக் குத்து விளக்கேற்றித் திறந்துவைத்தார்.

சிவானந்தா சரஸ்வதி சேவாஸ்ர மத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலை மையில் நடைபெற்ற இவ்விழாவில் - மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், டில்லியில் உள்ள மாண்புமிகு தமிழக அரசுப் பிரதி நிதி திரு. தம்பித்துரை அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீல பிரியா, இ.ஆ.ப., மற்றும் அர உயர் அதிகாரிகளும் கலந்துகொண் சிறப்பித்தார்கள்.

காலை 10.30 மணியளவி விழா தொடங்கியது. மாண்புமி முதல்வருக்கும், தலைமையேற்





மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் குருகுலக் குழந்தைகள் மாலையணிவித்தார்கள்.

சிவானந்தா குருகுலக் குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்து, குருகுலப் பாடல் ஆகியவற்றை இசைத்தபின் - அந்நிறுவனத்தின் தாளாளர் திரு. எஸ். ராஜாராம் வரவேற்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து அவ்வமைப்பின் தலைவர் திருமதி சுசீலா இந்தர்சென் வாழ்த்துரை வழங்கினார்.

அதன்பின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நேரு பிறந்தநாள் - குழந்தைகள் நாள் விழா சிறப்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

'இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் அன்புக் குழந்தைகளுக்கு என் இனிய வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிக்கொள்கிறேன்.

இன்று குழந்தைகள் தினம். பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை நாம் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறோம். இந்த ஆண்டு, நான் முதலமைச்சராகிய பிறகு நடைபெறும் இந்தக் குழந்தைகள் தினத்தை எப்படிக் கொண்டாடுவது, எங்கே கொண்டாடுவது என்று யோசித்தேன். அப்பொழுதுதான், நான் தஞ்சாவூருக்குச் செல்லும்பொழுது வழியில் உங்களைச் சந்தித்தது ஞாபகத்திற்கு வந்தது. உங்களுடனே இன்று இந்த விழாவில் கலந்து கொள்ளலாம் என்று முடிவு செய்தேன். இப்பொழுது உங்களுடன் இருக்கின்றேன்.

எனதருமைக் குழந்தைகளே, நீங்கள் அனைவரும் பொலிவோடும், புத்துணர்வோடும் அமர்ந்து விழாவினை ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, நானும், உங்களைப் போல் பள்ளியில் மாணவியாய்ப் பயின்ற நாட்கள் என் நினைவிற்கு வருகின்றன. படிப்பு, விளையாட்டு மற்றும் புதியவற்றைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம், ஆகியவை மட்டுமே உள்ள குழந்தைப் பருவத்தில், உங்களைப் போன்றே நானும் பள்ளி விழாக்களில் பங்கேற்றிருக்கிறேன்; அவைகளைக் கண்டு மகிழ்ந்துமிருக்கிறேன்.

உற்சாகமான உங்கள் முகங்களையும் அவற்றில் வீற்றிருக்கும் கபடமில்லாச் சிரிப்பினையும் காணும்பொழுது, தெய்வத்தைத் தரிசித்தது போன்ற உணர்வு எனக்கு ஏற்படுகின்றது. பரந்த இவ்வுலகத்தில் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும், மற்றவரை நேசிக்க வேண்டும். இவ்வுலகில் உண்மையானதும், நிலையானதும் அன்பு ஒன்றே. மற்றவற்றில் பொய்மை கலக்க வாய்ப்பு உண்டு. ஆனால், அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்படுவதிலும் பொய்மையைக் கலக்க முடியாது.

அத்தகைய உண்மையான அன்பு உங்களுக்கு இந்தச் சிவானந்தா குருகுலத்தில முழுவதுமாகக் கிடைத்திருக்கின்றது. இங்குள்ள பெரியோர்களும, ஆசிரியப் பெருமக்களும் அனபாக அன்றாடம் உணவூட்டி, கல்வி புகட்டி, உங்களைப் பெரியவர்களாக வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் உங்கள் சார்பாக, என் உள்ளம் கனிந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இல்லத்தின் நிறுவனர் திரு. எஸ்.வி. அய்யரின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள நூற்றாண்டு விழாக் கலையரங்கினை இன்று திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் குழந்தைகள் மீது அளவிடமுடியாத அன்பு உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தான் சிறுவயதில் பசியால் வாடியதைப் போலத் தமிழகத்திலுள்ள எந்தக் குழந்தைக்கும் அந்தத் துன்பம் வரக்கூடாது என்பதற்காகச் சத்துணவுத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தொடங்கினார். அதன் மூலம் தமிழகத்தின் இலட்சோப இலட்சம் குழந்தைகளின் பசிப் பிணியைப் போக்கினார். அவரை - குழந்தைகள் தினமான இன்று நாம் நினைவுகூருவது பொருத்தமாக அமையும். இயற்கையின் சோதனையால் பெற்றோர்களை இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவி செய்வதைப்போல வேறு எந்தப் புண்ணியமும் இல்லை என்று நம்புபவள் நான். என் இதயத்தில் என்றும் உங்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. என்னால் முடிந்த எல்லா உதவிகளையும் உங்களுக்குச் செய்ய வேண்டியது எனது தலையாய கடமை என்றே கருதுகிறேன்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு அரசும், இதுபோன்ற தனியார் நிறுவனங்களும் இல்லங்கள் நடத்திப் பாதுகாத்து வருகின்றன. இந்த நல்ல பணி, மென்மேலும் வளர வேண்டும், பரவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தமிழகத்திலுள்ள அனைத்து ஆதரவற்ற குழந்தைகளும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.



அவர்களுக்கு உணவு, உடை மட்டும் வழங்கினால் போதாது. உயர் கல்வியையும் போதித்து, அவர்களை உயர்ந்த உள்ளத்தைக் கொண்டவர்களாகவும் வளர்க்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து அரவணைக்க வேண்டும்.

ஒரு சில நல்ல உள்ளங்களினால் உங்கள் வாழ்க்கையை வழிப்படுத்த முற்பட்டுள்ள நீங்கள், உங்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். உலகத்திலேயே தலை சிறந்த செல்வம் கல்விதான். ஏனென்றால் ஒருவரிடத்தில் உள்ள உடைமைகளையும், உரிமைகளையும், பணத்தையும், பொருளையும், சொத்துக்களையும் ஏனைய பிற செல்வங்களையும் சந்தர்ப்பச் சூழ்நிலையால் இழக்க நேரிடலாம். அல்லது பிறர் பறிக்க நேரிடலாம். ஆனால் எவராலும் பறிக்கமுடியாத செல்வம், உங்களால் இழக்க முடியாத செல்வம் ஒன்று உண்டென்றால், அது உங்களின் கல்விச் செல்வம்தான்.



• மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு 11.11.91-இல் வருகை தந்தபோது- உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

எனவே-நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். உங்கள் கல்வி அறிவைப் பெருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையை உயர்ந்ததாக அமைத்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு தொழிற்பயிற்சி நிறுவனமும், மகளிர் கல்லூரியும் இங்கே அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது; அது பற்றிப் பரிசீலித்து, நல்ல முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் உங்களைச் சந்திக்கும் இந்த நேரத்தில் உங்களுக்கு என் சார்பாக, முதலமைச்சர் என்ற முறையில் அல்ல, ஜெயலலிதா என்ற தனிப்பட்ட முறையில், என்னால் சிறு உதவிகளைச் செய்ய நினைத்தேன். அதன்படி உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்புப் பரிசாகப் புத்தாடை வழங்க உள்ளேன். இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களுக்கு இனிப்புகளும் வழங்க உள்ளேன். எனது இந்த அன்புப் பரிசுகளை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பாசத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிவானந்தா குருகுலத்தின் முக்கியத் தேவையான பேருந்து ஒன்றையும், இன்று அன்பளிப்பாக நான் வழங்க உள்ளேன். அதனையும் குருகுல நிர்வாகத்தினர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்தித்தது எனக்கு மிக்க மனநிறைவினை அளித்துள்ளது. சிவானந்த சரஸ்வதி குருகுலத்தின் பாதுகாப்பில் வளரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமென்றும், உங்கள் வாழ்வு உயர்ந்து சிறந்திட வேண்டும் என்றும் என் அன்பு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

- இவ்வாறு உரையாற்றிய பின், சிவானந்தா சரஸ்வதி குருகுலத்தைச் சேர்ந்த 300 குழந்தைகளுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது திருக்கரத்தாலேயே இனிப்புகளும், புத்தாடைகளும் வழங்கி மகிழ்வித்தார். தனக்கு மாலையணிவித்த இரண்டரை வயதுச் சிறுமிக்கு அன்பு முத்தமிட்டு ஆசி வழங்கினார்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம், எம்.எல்.ஏ., திரு. ஈ.வி. பெருமாள் இருவருமாகக் குருகுலத்திற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கினார்கள்.

அதற்குப்பிறகு - குருகுலக் குழந்தைகள் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடைசிவரை இருந்து அந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்.

விழா நிறைவாக அக்குருகுலத்தைச் சேர்ந்த செல்வி வேலாயி நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி.எல்.ஆர்.**

# மீன்வளர்ப்பு வினா-விடை

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை குறித்தும்- நவீன முறையில் மீன் வளர்க்கும் வகை பற்றியும்- நன்னீர் இரால் என்பதென்ன என்றும் - இவைகளால் என்ன பலன் என்பது குறித்தும் வினா-விடைகள் மூலம் இந்தக் கட்டுரையில் விளக்கப் படுகிறது:**

**இ. நல்லு சின்னப்பன்,**
முதன்மை நிர்வாக அலுவலர்
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை,
திருச்சி.

**★ மீன் சிறந்த உணவு. ஏன்?**

எளிதாகச் செரிக்கக் கூடிய புரதச் சத்து அதில் மிகுந்து இருப்பதால்.

**★ மாமிச உணவுகளில் இரண்டு வகைக் கொழுப்புச் சத்துக்கள் உள்ளன. அவற்றில் மீன் மாமிசத்தில் இருப்பது பூரிதக் கொழுப்புச் சத்தா? அபூரிதக் கொழுப்புச் சத்தா?**

அபூரிதக் கொழுப்புச் சத்து.

**★ தமிழ்நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் எத்தனை மாவட்டங்களில் செயல்படுகின்றன?**

13 மாவட்டங்களில் செயல்படுகின்றன.

**★ மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளில் இடுபொருள் கடன் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின்றது. அதில் எவ்வளவு விழுக்காடு மானியமாக வழங்கப்படுகின்றது?**

25 விழுக்காடு.

**★ நாற்றங்கால் தயார் செய்யும் போது அடிஉரம் போடுவதற்கு முன் சுண்ணாம்பு எதற்காக உபயோகப் படுத்தப்படுகிறது?**

கார அமிலத் தன்மையைச் சரி செய்யவும், நுண் கிருமிகளை அழிக்கவும்.

**★ குளங்கள் தயார் செய்யும்போது குளத்தில் தப்பியுள்ள எதிரி இன மீன்களை அழிக்கப் பயன்படுத்தப் படும் பிண்ணாக்கு எது?**

இலுப்பைப் பிண்ணாக்கு.

**★ நாற்றங்கால் குளங்களில் ''நோட்டோ நெக்டிடா'' என்ற ஒருவகை பூச்சி அதிகமுள்ளது. இது நாற்றங்கால் குளங்களில் இருப்புச் செய்யப்படும் நுண் மீன் குஞ்சுகளுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றது. அதனால் அவற்றை அழிக்க என்னென்ன பொருட்கள் உபயோகிக்க வேண்டும்?**

சோப்பு எண்ணெய் கலந்த கரைசல் பயன்படுத்தினால் போதும்.

**★ நாற்றங்கால்களில் இருப்புச் செய்யப்படும் நுண் மீன் குஞ்சின் எடை எவ்வளவு?**

0.0014 கிராம்.

**★ இருப்புச் செய்யப்படும் இள மீன் குஞ்சுகள் எடையில் தினந்தோறும் எத்தனை விழுக்காடு அளவு உணவு கொடுக்கப்படுகின்றது?**

ஐந்து விழுக்காடு

**★ நுண் மீன் குஞ்சுகளுக்கு உணவாகத் தவிடு, கடலைப் பிண்ணாக்கு கொடுக்கின்றோம். இதனை எந்த விகிதத்தில் கலந்து கொடுக்க வேண்டும்?**



ஒரு பங்கு தவிடு, ஒரு பங்கு கடலைப் பிண்ணாக்கு என்ற விகிதத்தில் கலந்துகொடுத்தல் வேண்டும்

**★ நாற்றங்கால்களுக்கு இயற்கை உரம், செயற்கை உரமிட்டு மீன் குஞ்சுகள் இருப்புச் செய்கிறோம். எதற்காக?**

நுண் உயிர்களை உற்பத்தி செய்திட

**★ தாவர நுண்ணுயிர்களை உண்ணும் மீன் எது?**

வெள்ளிக் கெண்டை.

**★ வெள்ளிக்கெண்டை மீன் எந்த நாட்டினைச் சார்ந்தது?**

சீன நாட்டைச் சார்ந்தது.

**★ தமிழ்நாட்டிலுள்ள ஆற்றுப்பகுதியில் கல்பாசு, சேல் கெண்டை, கோழி மீன் போன்றவைகள் இருக்கின்றன. இவற்றைவிட அதிவிரைவில் வளரக்கூடிய 3 மீன்களை வட இந்திய ஆற்றுப்பகுதியிலிருந்து கொண்டு வந்து இருப்புச் செய்து தீவிர முறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவை யாவை?**

கட்லா, ரோகு, மிர்கால் எனும் கெண்டை இன மீன்கள்.

**★ இந்த மூன்று மீன்களில் மிதக்கும் விலங்கின நுண்ணுயிர்களை உண்டு வளரும் மீன் எது?**

கட்லா.

**★ ரோகு மீன் மீன் குளத்தில் எந்த மட்டத்தில் வாழக்கூடியது?**

இடை மட்டம்.





★ குளத்திலுள்ள புல்லைத் தின்னக் கூடிய மீன் இனம் எது? இது எந்த நாட்டைச் சார்ந்தது?

புல்கெண்டை. இது சீன தேசத்தைச் சார்ந்தது.

★ குளத்தின் அடிமட்டத்திலுள்ள அழுகிய தாவர, விலங்கு மற்றும் புழுப்பூச்சிகளைத் தின்று வளரக் கூடிய இரண்டு மீன்கள் வளர்ப்பில் இருப்புச் செய்யப்படுகின்றது. இதில் ஒரு மீன் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது, எது?

சாதாக்கெண்டை. இது ஐரோப்பா கண்டத்தினைச் சார்ந்தது.

★ குளங்களில் விரலிகள் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்கின்றோம். அதன் சராசரி நீளம் 5 செ.மீ. இருக்கும். அப்படி இருப்புச் செய்யப் படும் விரலிகளின் எடை எவ்வளவு?

1.5 கிராம்.

**★ நுண் மீன் குஞ்சுகள் வளர்ந்து, இள மீன் குஞ்சுகளாக எடுக்கச் சுமார் எத்தனை நாட்கள் ஆகும்?**

15 நாட்கள் ஆகும்.

★ நாற்றங்கால் தொட்டிகளுக்குப் பதிலாக நுண் மீன் குஞ்சுகளை வேறு ஏதேனும் முறையில் வளர்க்கலாமா? எப்படி?

வளர்க்கலாம். வெலான் வலைக் கூண்டுகளை நீரில் மிதக்க வைத்து அதனுள் வளர்க்கலாம்.

★ சாதாரணமாகத் தமிழ்நாட்டில் நைலான் வலைக்கூண்டுகள் நிறைய மீன் வளர்ப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு மீன் குஞ்சுகள் வளர்க்கப் பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. அவற்றின் சராசரி நீள அகலமென்ன?

10 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம்.

★ மேலே கூறியுள்ள அளவுள்ள 40 பி நைலான் வலைக் கூண்டில் எவ்வளவு நுண் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப் படுகின்றன?

ஒரு இலட்சம்.

★ 40 பி வெலான் வலைக்கூண்டில் நுண் மீன் குஞ்சுகளை எத்தனை நாட்கள் வைத்திருக்கலாம்?

15 முதல் 20 நாட்கள் வரை வைத்திருக்காலம்.

★ 16 பி வெலான் வலைக் கூண்டில் எவ்வளவு இள மீன் குஞ்சுகள் இருப்பு செய்யலாம்?

25 ஆயிரம்.

★ இள மீன் குஞ்சுகளின் சராசரி எடை என்ன?

1 கிராம்.

**★ மீன் வளர்ப்புக்குக் குளங்கள் தேர்வு செய்யப்படும் போது மண்ணின் தன்மை எவ்வாறு இருக்க வேண்டும்?**

களிமண் கலந்த மண் பகுதியாக இருத்தல் வேண்டும்.

**★ குளங்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யுமுன் சுண்ணாம்பு இட வேண்டும். ஒரு எக்டேர் பர பிற்கு எவ்வளவு சுண்ணாம்பு இ வேண்டும்?**

200 கிலோ கிராம்.

★ அமிலத் தன்மை அதிகமுள்ள நீர்மண் பகுதியில் காரத்தன்மைக் மாற்றப்பயன்படுத்தப்படும் பொரு எது?

சுண்ணாம்பு.

★ குளங்களில் நீர் ஏற்றும் போ சல்லடை பயன்படுத்தி வடிகட் நீரை ஏற்ற வேண்டுமா? ஏன்?

ஆம்; ஏற்ற வேண்டும். ஏனெ றால் இயற்கையிலுள்ள எதிரி இ மீன்களும், முட்டைகளும் குள திற்கு வருவதைத் தவிர்த்திட.

★ விரோதி இன மீன்களை அழி பதற்கு எக்டேருக்கு எவ்வள இலுப்பைப் பிண்ணாக்குப் பய படுத்த வேண்டும்?

200 கிலோ இலுப்பைப் பிண ணாக்கு.

**★ இலுப்பைப் பிண்ணாக்கை பயன்படுத்தி விரோதி இன மீ களை அழித்த உடன் மீன் குஞ் களை இருப்புச் செய்யலாமா?**

நச்சுத் தன்மை இருப்பதால் மீ குஞ்சுகள் இறந்துவிடும். எனவே இருப்புச் செய்யக்கூடாது.

★ அப்படி எனில் எத்தனை நா களுக்குப் பிறகு இருப்புச் செ யலாம்?

15 நாட்களுக்குப் பிறகு இருப்பு செய்யலாம்.

★ மீன் குஞ்சுகள் இருப்புச் செய்ய பட்டுள்ள குளங்களில் ஆடுமா களைக் குளிப்பாட்டலாமா?

குளிப்பாட்டாலாம்; தவறில்லை

**★ அப்படிக் குளிப்பாட்டுவதா மீன் வளர்ப்புக்கு என்ன நன்மை?**

மீன்களின் உணவான நுண்ணுயிர்களின் உற்பத்தி அதன் மூல அதிகமாகும்.

**★ ''பிளாங்டான்'' என்பது என்ன அது எப்படி மீன் வளர்ப்பில் மு கியப் பங்கு வகிக்கிறது?**

தாவர மற்றும் விலங்கு நுண்ணு யிர்களை ''பிளாங்டான்'' என் அழைக்கிறோம்; அவற்றை உண் தான் மீன்கள் வளர்கின்றன.

★ வெவ்வேறு உணவுப் பழகக முள்ள வெவ்வேறு மட்டங்களில் வாழக்கூடிய மீன்களை ஒன்றாகச் சேர்த்து மீன் வளர்ப்புச் செய்கி றோம். இம்முறைக்கு என்ன பெயர்?

கலப்பின மீன் வளர்ப்பு முறை என்று பெயர்.

★ கலப்பின மீன் வளர்ப்பில் குளங் களில் எத்தனை வகையான மீன் களை இருப்புச் செய்யலாம்? அவை யாவை?

ஆறு வகை, அவை கட்லா, ரோகு, மிர்கால், புல்கெண்டை, வெள்ளிக்கெண்டை, சாதாக் கெண்டை.

★ முகமைக் குளங்களில் கலப்பின மீன் வளர்ப்பில் ஒரு எக்டேருக்கு இருப்புச் செய்யப்படும் மீன் குஞ்சு களின் எண்ணிக்கை எவ்வளவு?

5,000 மீன் குஞ்சுகள்.

★ இனத்திற்கு எத்தனை இருப்புச் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| கட்லா | 1,250 |
| ரோகு | 1,000ரு |
| மிர்கால் | 1,000 |
| வெள்ளிக்கெண்டை | 750 |
| புல்கெண்டை | 250 |
| சாதாக்கெண்டை | 750 |

குளத்தின் உற்பத்தித் திறனை அனுசரித்து இதனை மாற்றம் செய்து கொள்ளலாம்.

★ தமிழ்நாட்டில் மக்களால் மிகவும் விரும்பப்படும் மீன் எது? அதனைக் கலப்பின மீன் வளர்ப்பிற் சேர்த்து வளர்க்கலாமா?

அதிகம் விரும்பப்படுவது விரால். அதைக் கலப்பின மீன் வளர்ப்பில் சேர்த்து வளர்க்கக் கூடாது.

★ ஏன் அப்படி?

விரால் மீன்கள் தன் இனத்தைச் சாப்பிடுவதோடன்றி மற்ற இன மீன்களையும் சாப்பிட்டு விடும். ஆகவே, இருப்புச் செய்யப்படும் மீன்கள் விரால் மீன்களால் அழிக்கப் பட்டுவிடும்.



★ கலப்பின மீன் வளர்ப்பில நன்னீர் இராலைச் சேர்த்து வளர்க் கலாமா?

வளர்க்கலாம்.

★ நம் நாட்டில் கிடைக்கக்கூடிய நன்னீர் இரால்களில் வளர்ப்புக்குத் தகுதியுடைய வகைகள் எத்தனை? அவை யாவை?

அவை இரண்டு வகைப்படும்.

1. மேகீரோ பிராக்கியம் மால்கம்சோனி
2. மேகீரோ பிராக்கியம் ரோசன்பர்கி

★ கெண்டை இன மீன்களுடன் நன்னீர் இரால் மீன்களைச் சேர்த்து வளர்த்தால் கெண்டை இன மீன் குஞ்சுகளைத் தின்று விடாதா?

அப்படித் தின்று விடாது.

★ நன்னீர் இரால் மீன்கள் நீரின் எந்த மட்டத்தில் வாழக் கூடியவை?

நீரின் அடிமட்டத்தில் வாழக் கூடியவை.

★ ஏன் நன்னீர் இராலைக் கெண்டை இன மீன்களுடன் சேர்த்து வளர்க்க வேண்டும்?

நன்னீர் இரால் வளர்ப்பதால் அதிக இலாபம் கிடைக்கிறது.

★ நன்னீர் இரால் வளர்ந்து மகசூல் தர எவ்வளவு மாதங்கள் போதும்?

நான்கு மாதங்கள் போதும்.

★ உயர்ரகக் கெண்டை இன மீன்க ளான கட்லா, ரோகு, மிர்கால் பெண் மீன்கள் வளர்ச்சி பெற்ற பின் பருவமடையும் ஆண்டுகள் எத்தனை?

இரண்டு ஆண்டுகள்.

★ உயர்தரக் கெண்டை இன மீன் களாகிய கட்லா, ரோகு, மிர்கால் குளங்களில் தானாக முட்டையிடும் தன்மையற்றவை. அவற்றை இனப் பெருக்கம் செய்ய மீன் பிட்யூட்டரி யின் கரைசல் தயார் செய்து அதை ஊசி மூலம் ஆண், பெண் மீன் களுக்கு ஏற்றி இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன. இதற்குப் பதி லாகத் தற்போது ஒரு இரசாயனப் பொருள் பயன்படுத்தப்படுகிறது. என்ன?

ஓவாபிரிம்.

★ மருத்துவர்கள், இரத்த அழுத்த நோயாளிகள், வயதானவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய் மார்கள் மீனை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்களே, ஏன்?

மீன் மாமிசத்தில் புரதச் சத்து மிகுந்து இருப்பதால் தான் அப்படி மருத்துவர்களே கூறுவார்கள்.

**இயக்கத்தின் வெற்றியை அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடக் கூடாது. ஆனால், கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருப்பவர்களின் தார்மீக நிலை யைக் கொண்டே அளவிட வேண்டும்.**

**—அண்ணல் காந்தியடிகள்**






தமிழகத்தில் 648 மீனவர் கூட்டு றவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்பகுதியும், ஆறுகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவை யாவும் நல்ல மீன்வளம் பெற்றுள்ளவையாகும். 442 மீனவர் குப்பங்கள் கடற்கரை யோரப் பகுதிகளிலும், 163 மீனவர் குடியிருப்புகள் உள்நாட்டுப் பகுதி யிலும் உள்ளன. மீனவர் சங்கங்கள் இந்தக் குப்பங்களிலும், குடியிருப்பு களிலும் செயல்படுகின்றன. இச் சங்கங்கள் மீனவர் சமுதாயத்திற்காக வும் அவர்களின் மேம்பாட்டிற் காகவும் பல வகைகளில் கீழ்க்கண்ட பிரிவுகளின்படி உள்ளன.

| | |
|---|---|
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | ... 246 |
| கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | ... 316 |
| மீனவர் கூட்டுறவு இணையங்கள் | ... 10 |
| மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கம் | ... 54 |
| விற்பனை மற்றும் இதர சங்கங்கள் | ... 22 |

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,85,128 உறுப்பினர்கள் உள் ளனர். இவர்கள் பங்குத்தொகை ரூ.247.49 இலட்சம் செலுத்தி யுள்ளனர். அரசும் ரூ.98 இலட்சம் பங்குத்தொகை செலுத்தி சங்கங் களில் நேரடித் தொடர்பு கொண் டுள்ளது. முழுநேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட எல்லா மீன் வர்களும், 18 வயதிற்கு மேற்பட்ட வர்கள் சங்கத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்குத்தொகை ரூ.10 செலுத்தி அங்கத்தினர் ஆகலாம்.

சங்க உறுப்பினர்களுக்குச் சங்கத் தின் மூலம் கடன் உதவி, அவர் களின் தொழிலை மேம்படுத்தப் பல வகைகளில் நேரடியாக அரசு, வங் கிகள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங் கப்படுகிறது. முக்கியமாகத் தொழில் உபகரணங்கள் ஆகிய கட்டுமரம், விசைப்படகு மற்றும் வலைகள் வாங்கவே கடன் வழங்கப்படுகிறது.

சங்கங்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கப் பங்குத்தொகை கடனாக ரூ.5,000 முதல் அதிக பட்சத் தொகையாக ரூ.25,000 வழங்கப்படுகிறது. இதனைப் பெற்ற சங்கம், உறுப்பினர்களுக்குவேண்டிய கட்டுமரம் வலை மற்றும் நுகர் பொருட்கள் வாங்கி விநியோகம் செய்கிறது. 1990-91-ஆம் ஆண்டில் ரூ. இலட்சம் 24 கூட்டுறவுச் சங் கங்களுக்கு வழங்கியுள்ளது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் 31.3.91 முடிய 98 சங்கங் களுக்கு ரூ.468 இலட்சம் விசைப் படகுகள், வலைகள், கட்டுமரம் முதலியன வாங்க நிதி வழங்கி யுள்ளது.

## இரா.பூரணலிங்கம் இ.ஆ.ப.

**ஆணையாளர், மீன்துறை.**

இதன் மூலம் 15,653 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**மீனவர்களுக்கான திட்டங்கள்**

தமிழ்நாடு கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் குறிப் பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டம் கடுமையான பருவமழை காரண மாகக் கடலுக்கு மீன்பிடி தொழி லுக்குப் போக முடியாத நிலையி னால் ஆண்டில் 3 மாத காலம்

**தமிழ்நாட்டில் 648 மீனவர் கூட்டுறவுச் சங் கங்கள் செயல்படுகின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கங் களில் 1,85,128 உறுப் பினர்கள் உள்ளனர்.**

**புயல் மற்றும் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ், தமிழக அரசு 1990-92-ஆம் ஆண்டில், 3,300 மீனவர் களுக்கு ரூ.28,38,750 வழங் கியுள்ளது.**

நிரந்தர வேலை இல்லாமல் இருக்கும் காலத்தில், மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60 வீதம் 3 மாதங் களுக்கு வழங்குகிறது. இதற்கு மீன வர்கள் ரூ.10 வீதம் 9 மாதங்கள் ரூ.90/- செலுத்தினால் அரசு ரூ.90 சேர்த்து ரூ.180/- என்று 3 தவணை களில் ரூ 60 வழங்குகிறது.

1990-91-ஆம் ஆண்டில் ரூ.50,42,130 இத்திட்டத்தின்கீழ் 57.777 மீனவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

**மீனவர் விபத்துக் காப்புறுதி**

மீனவர்களுக்கான முக்கியத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இத் திட்டத்தின் கீழ், உள்நாட்டு மற்றும் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங் களில் உறுப்பினர்களாக உள்ள யாவரும் பயன் அடைகிறார்கள். இத்திட்டத்தின் கீழ். உறுப்பினர்கள் எந்தவிதமான தொகையும் செலுத்த வேண்டியது இல்லை. இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண் டிய பிரிமியத் தொகை முழுவதும் இந்திய மற்றும் மாநில அரசுகளே செலுத்தி விடுகிறது.

1990-91-ஆம் ஆண்டில் 116 மீனவர்கள் குடும்பங்களுக்கு இன் சூரன்ஸ் நிறுவனம் ரூ.16.95 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கியுள்ளது.

**நிவாரணத் திட்டங்கள்**

இயற்கையின் சீற்றத்தால் ஏற் படும் துன்ப விளைவுகளுக்கு அரசு உடனடி நிவாரணம் மீனவர்களுக்கு வழங்குகிறது. இதன்படி மீனவர்கள், தங்கள் தொழில் புரியும்போது காணாமல்போன மற்றும் தொலைந்து போன கட்டுமரம், வலைகள் முதலி யன வாங்க அரசு மானியமாக நிவா ரணம் அளிக்கிறது. 1990-91-ஆம் ஆண்டு 3,300 மீனவர்களுக்கு ரூ.28,38,750/-ஐ அரசு வழங்கி யுள்ளது.

**நுகர்பொருள் விநியோகம்**

தமிழகத்தில் 53 மீனவர் கூட்டு றவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய அரிசி, சர்க்கரை, மண் ணெண்ணெய் முதலிய பொருட்கள் 56 கடைகளின் மூலம் விநியோகம் செய்கின்றன. இதனால் கடலோர மற்றும் சிறிய கிராமங்களில் உள்ள மீனவர்கள் பெரிதும் பயன் அடைந் துள்ளனர்.

திண்டுக்கல் அண்ணா மாவட்ட

# வளர்ச்சிப் பணிகள்

## வேளாண்மைத் துறை

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டில் கூடுதல் சோள உற்பத்திக்கு அரசு மானியத்துடன் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 75 ஆயிரம் எக்டேர் சோளம் சாகுபடி பரப்பிலிருந்து ஒரு இலட்சத்து 7 ஆயிரம் டன் சோள தானியம் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் சான்று விதைகள், விதை நேர்த்தி, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், களைக் கொல்லி மருந்துகள் போன்றவற்றிற்கு ரூ.3.78 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

விதை ஒரு கிலோவிற்கு 2 ரூபாய் வீதம் 80 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு 37.500 டன் சோள விதை மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதில் 10 டன் சோள விதை ரூ.20 ஆயிரம் மானியத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

50 சதவிகித மானிய விலையில் ரூ.50 ஆயிரம் மானியத்தில் 500 எக்டேருக்கு களைக் கொல்லி மருந்தும், விதை நேர்த்தி மருந்துகள் 2 ஆயிரம் எக்டேருக்கு ரூ.16 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். பூச்சி பூஞ்சாள நோய்கள் பொருளாதாரச் சேத நிலையைத் தாண்டிய நிலையில், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்தில் ஆயிரம் எக்டேருக்கு ரூ.25 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.



பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், வேளாண்மைக் கருவிகளும் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படும். பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் ஒரு விவசாயிக்கு ரூ.500 வரை மானியத்திலும், விவசாயப் பண்ணைக்குக் கருவிகள் ஒரு விவசாயிக்கு ரூபாய் ஆயிரம் வரை மானியமாகவும் வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் கொடைக்கானல் நீங்கலாக உள்ள 13 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 எக்டேர் தொடர்ச்சியாக உள்ளவாறு கூட்டுச் செயல் விளக்கங்கள் அமைக்க ஒரு எக்டேருக்கு ரூ.500-க்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் 50 விவசாயிகளுக்குச் சோளம் சாகுபடி பற்றிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூ.2 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சிறப்புத் திட்டத்தில் ரூ.99 ஆயிரம் அளவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மானாவாரிப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 100 எக்டேர் செயல் விளக்க மையங்கள் 17 இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. இச்செயல் விளக்கம் ஒவ்வொன்றிற்கும் ரூ.42 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் 4 இலட்சத்து 60 ஆயிரம் மரக் கன்றுகள் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு இம்மாவட்டத்தில் 95 விவசாயிகளின் நாற்றங்கால்களில் இலவம், புளி, வேம்பு போன்ற கன்றுகள்





வளர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 3.5 இலட்சத்திற்குப் பழமரக் கன்றுகள் வழங்கப்படுகிறது.

தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 8 வட்டாரங்களில் தீவனப் பயிராக சுபா புல் மற்றும் இதர வகை மரக் கன்றுகளும் 80,000 எண்ணிக்கையில் வளர்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உழவர் நண்பர்களுக்கு மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு மற்றும் மானாவாரி சாகுபடி தொழில்நுட்பங்களைப் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்துக்கள் பயிற்சி செய்யும் விவசாயிகளுக்கு அரசின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் 33.83 இலட்சம் பல்வேறு திட்டங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## தோட்டக்கலைத் துறை

மலையடிவாரத் -தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுவரையில் 2000 எக்டேர் பரப்பு, பழ மரங்கள் சாகுபடியில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 450 எக்டேர் பரப்பு சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் 8,900 எக்டேர் பரப்பு காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 3,000 எக்டேர் ஆண்டுப்

### கடல் நீரில் மின்சாரம்

சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (I.I.T.) கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகிலுள்ள விழிஞ்சம் என்ற கிராமத்தில் கடல் சக்தியிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் திட்டத்தை விரைவில் தொடங்கவிருக்கிறது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 71 சதவிகிதம் கொண்ட கடல் நீர் சுத்தமான மின்சக்தி பெற ஒரு முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகிறது. சுமார் ஒன்று முதல் ஐந்து சதவிகித சூரிய சக்தி காற்றுச் சக்தியாக மாற்றப்பட்டு, இந்தக் காற்றுச் சக்தியின் மூலம் கடலில் அலைகள் உண்டாக்கப்பட்டு, அந்த அலைகள் மூலம் மின்சக்தி தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

—நன்றி 'ஹிந்து'

பயிர்களாகக் காய்கறிப் பயிர்களிலும், 300 எக்டேர் பழ மரங்கள் பரப்பிலும் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுமலைப் பகுதிக்கான தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் 247 எக்டேர் பரப்பு நிரந்தரப் பலன் தரும் தோட்டக்கலைப் பயிர்களின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 300 எக்டேர் பரப்பு ரூ.2.955 இலட்சம் செலவில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல், தாண்டிக்குடி, சிறுமலை தோட்டக்கலைப் பண்ணையின் மூலம் இதுவரை 19.3 இலட்சம் பழச்செடிகள், செடிகள் மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 3.78 இலட்சம் அளவில் பழச் செடிகள், காப்பி, ஆரஞ்சு, மிளகு, எலுமிச்சை மற்றும் ஓக் மர நாற்றுகள் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் மேல் பழனிமலைப் பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தேயிலை சாகுபடியை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிபுணர்கள் குழு தேயிலைச் சாகுபடிக்கு ஏற்ற பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. இதன் தொடர்பாகத் தேயிலை அறிமுகப்படுத்தும் திட்டம் ரூ.17.82 இலட்சம் செலவில் தீட்டி அரசின் ஒப்புதலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மலர்க் கண்காட்சி கொடைக்கானலில் நடத்துவதற்கு, ஊட்டியில் இருப்பதுபோல நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்க ரூ.3.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

## ஐ.ஆர்.டி.பி., ஜே.வி.வி.டி. திட்டப் பணிகள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் வழங்கவும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு ரூபாய் 11 கோடி நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்கு ரூ.172.164 இலட்சம் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,509 நபர்கள் பயனபெறுவார்கள் இத்திட்டத்தில் இதுவரை ரூ.49.05 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள் ளது. இதன்மூலம் இதுவரை 2,240 பேர்கள் கடன் பெற்றுள்ளார்கள். இதில் 16.35 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 1,161 பேர்கள் தாழ்த்தப்பட்டோர் பழங் குடியினர். 1,042 பெண்கள் 68 உடல் ஊனமுற்றோர் அடங்குவர்.

கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 490 பேர்களுக்குப் பயிற்சி அளிக் கப்பட உள்ளது. இதற்காக ரூ.4.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 48 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 123 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இதில் இரண்டு சக்கர வண்டி பழுதுபார்த்தல், வயரிங், கணிப் பொறி, தேனீ வளர்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி பழுதுபார்த்தல், பட்டுத் தொழில், தச்சுச் தொழில் ஆகிய தொழில் களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத் தின்கீழ் இம்மாவட்டத்திற்கு ரூ.920.860 இலட்சம் நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

இத்தொகையைக் கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ருக்கு 2,240 தொகுப்பு வீடுகள் கட்டப்படும். இதுதவிர, 22 பள்ளிக் கட்டடங்களும், 48 ஊராட்சி அலு வலகக் கட்டடங்களும், 37 கிலோ மீட்டர் தார்ச் சாலைகளும், 172 கி.மீ. கல் சாலைகளும், 27 சத்துண வுக் கூடங்களும் கட்டப்படும்.

இதன்மூலம் நடப்பு ஆண்டில் 35.52 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட உள்ளது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் இந்த ஆண்டில் ரூ.26.930 இலட்சம் செலவில் சமூகக் காடு வளர்க்கப் பட உள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை 14.82 இலட்சம் நாற் றுகள் வளர்க்கப்பட்டு 1.45 இலட்சம் நாற்றுகள் நடப்பட்டுள்ளன.

## பல்லவன் பேருந்துகளில் அனைத்து வழித்தடங்களிலும் பயணம் செய்ய 10 ரூபாய் டிக்கெட்!

சென்னை நகரில் விடுமுறை நாட்களில் பல்லவன் பேருந்துகளில் விருப்பம் போலப் பயணம் செய்ய ரூ.10/- மதிப்புள்ள பயணச் சீட்டுக்கள் 5.11.'91 முதல் (தீபாவளித் திருநாள்) விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் பயணச் சீட்டு வைத்திருப்பவர்கள் பயணச் சீட்டு வாங்கப்பட்ட விடுமுறை நாளில் காலை முதல் இரவு 11.00 மணிவரை பல்லவன் போக்குவரத்துக் கழக இரவு மற்றும் விரைவு பேருந்துகள் தவிர அனைத்து வழித்தட பேருந்து களிலும் பயணம் செய்யலாம்.

இந்தப்பயணச் சீட்டுக்கள் பணி மனையுடன் இணைந்த பேருந்து நிலையங்களில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை யிலும் நேரக்காப்பாளர் அறைகளில் காலை 6.00 மணியிலிருந்து பகல் 12.00 மணி வரையிலும் விற்கப் படும். அனைத்து அரசு விடுமுறை நாட்களிலும் (சனி, ஞாயிறு உட் பட) இந்த விடுமுறை நாள் பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும்.

சாண எரிவாயுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டிற்கு 350 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 104 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தூளா அடுப்பு திட்டத்தின்கீழ், 5,500 அடுப்புகள் அமைக்கத் திட்ட மிடப்பட்டு இதுவரை 654 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### குடிநீர் திட்டப் பணிகள்

கொடைக்கானல் நகரியத்தில் ரூ.275.93 இலட்சம் மதிப்பில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இதில் ரூ.215 இலட்சத்திற்குப் பொதுப் பணித் துறையும், ரூ.60.93 இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியத் தால் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியும் நடை பெற்று வருகிறது.

பழனி நகராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.420 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசு ஒப்புதலுக் காக அனுப்பப்பட்டுள்ளது.

பாளையம் பேரூராட்சிக்குக் குடி நீர் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.36.91 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

ஸ்ரீராமபுரம் கிராமப் பேரூராட் சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத் தின்கீழ் ரூ.16.20 இலட்சம் செல வில் திட்டம் தயாரிக்கப்பட்டு, பகுதிப் பணி முடிவுற்று ஊராட்சி யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீத முள்ள பணிகள் முடிவுறும் நிலை யில் உள்ளன.

சேவுகம்பட்டி கிராமப் பேரூராட் சிக்கு ரூ.23.63 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டப் பட்டுச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது.

வடமதுரை கிராமப் பேரூராட் சிக்கு ரூ.19.07 இலட்சம் மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு, கிராமக் குடி நீர்க் கோட்டம் மூலம் செயலாக் கத்தில் உள்ளது. அய்யலூர், கன்னி வாடி, தாடிக்கொம்பு, அகரம் மற்றும் எரியோடு ஆகிய கிராமப்புறப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிக்காகத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கலின் பொருட்டு, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கிராமக் குடியிருப்புகள் பற்றிய மறு ஆய்வு எடுக்கப்பட்டது. இதில் மொத்தம் 2,543 கிராமக் குடியிருப் புகள் உள்ளன. குடிநீர் வழங்கலில் கிராமங்கள் தனித்தனியாகப் பகுக் கப்பட்டதில் 1,005 கிராமங்கள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள், 1,489 பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடி யிருப்புகள், 52 குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள் எனப் பகுக் கப்பட்டன.

1991-92-ஆம் ஆண்டில் 205 குடியிருப்புகளுக்கு ரூ.200 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டி, செயல்படுத்தப்பட்டு வரு கிறது. இதில் 49 குடியிருப்புகளுக்கு ரூ.57.31 இலட்சம் மதிப்பில் குடி நீர் வழங்கும் பணி முடிவுற்றது. மீத முள்ள பணிகள் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன.





வறட்சி நிவாரணப் பணி திட்டத் தின்கீழ், குடிநீர்க் குழாய் அமைக்கும் பொருட்டு 120 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.45 இலட்சம் செல வில் அனைத்து இடங்களிலும் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

மேலும் இத்திட்டத்தின்கீழ் ரூ.15 இலட்சம் செலவில் 40 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தண்ணீர் இன்றி வறண்டு போன 50 ஆழ் துளை கிணறுகளுக்குப் பதிலாகப் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ரூ.17 இலட்சம் அனுமதிக் கப்பட்டு பணிகள் செயது முடிக்கப் பட்டுள்ளன.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத் தில், இவ்வாறாகக் குடிநீர் தட்டுப் பாடற்ற நிலை காணும் முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளது.

—மு.பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

## நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றினார் முதல்வர்

திரு. வி.சி. சுப்பிரமணியன் என்பவர் பொதுப்பணித்துறையில் கட்டட மேஸ்திரியாக 1934 முதல் 1951 வரை 17 ஆண்டுகள் தற்காலிக ஊழியராகவும், அதன்பிறகு 17 ஆண்டுகள் நிரந்தரப் பணியாளராகவும் பணிபுரிந்து 30.9.68 அன்று ஓய்வு பெற்றார். அவர் ஓய்வுபெற்ற நாளில் வகித்த பதவிக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அப்போதைய விதிமுறைகளில் இடமில்லை.

தமிழக அரசு 1974-ஆம் ஆண்டில் அவர் வகித்த பதவியான அரசு கட்டட மேஸ்திரி பதவியையும் 30.6.69-ஆம் நாள் முதல் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையது என அறிவித்தது. திரு வி.சி. சுப்பிரமணியன் அவர்கள் 30.9.68 அன்று பணியிலிருந்து ஓய்வுபெற்றதால் அவருக்கு மேற்படி ஆணைகளின்படியும் ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

திரு. வி.சி. சுப்பிரமணியம், தமக்கு 30.9.68 முதல் ஓய்வூதியம் வழங்கவேண்டுமெனத் தமிழக முதல்வருக்குக் கருணை மனு ஒன்றினை அனுப்பியிருந்தார். அவருடைய வேண்டுகோளைப் பரிவுடன் பரிசீலித்து மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30.6.69 முதல் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.375/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பெறும். நிலுவைத்தொகை ரூ.40,625/-ம் அவருக்குக் கிடைக்கும்.

# சேமிப்போம் சேமமுற வாழ்வோம்!



ஆல மரம்போல் உறுதியுடன்
அடங்காச் செலவைக் குறைத்திடுவோம்;
சீல முடனே வாழ்வதற்குச்
சீரிய முறையில் சேமிப்போம்;
காலம் கருதிச் சிற்றெறும்பும்
கவன மாகச் சேமிக்கும்;
ஞாலம் சிறக்க வேண்டுமெனில்
நாமும் இங்கே சேமிப்போம்!

வறுமை நிலையை ஒழிப்பதற்கும்
வளமாய் நாடு திகழ்வதற்கும்
பொருளா தாரம் உயர்வதற்கும்
பொன்னும் மணியும் நிறைவதற்கும்
இருண்ட வாழ்வின் ஒளிவிளக்காய்
இலங்கும் திட்டம் சேமிப்பு;
சிறுசே மிப்பில் முதலீடு
செய்து வந்தால் சிறந்திடுவோம்!

சிறுவர் கல்வி வளர்ச்சிக்கும்;
சிறப்பாய் நாளை வருவதற்கும்;
சிறுசே மிப்பைப் போற்றிடுவோம்;
சிறந்த பயனை அடைந்திடுவோம்;
சிறுகச் சிறுக எதையும்நாம்
சேர்த்து வைத்தால் பெருகிடுமே!
சிறுசே மிப்புத் திட்டம்நம்
தேசம் செழிக்க அவசியமே!

சிந்து கின்ற சிறுதுளியும்,
சேர்ந்தே பெருவெள்ளம் ஆதல்போல்,
ஐந்தும், பத்தும் இருபதென்றே
ஆன வரைக்கும் சேமித்தால்,
பிந்திய ஓய்வு காலத்தில்,
பிறர்தய வின்றி வாழ்ந்திடலாம்;
சந்ததி யர்க்கும் உதவிடலாம்;
சஞ்சல மின்றி இருந்திடலாம்!

**கவிஞர் பூங்கோவன்**



## தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மத்திய மாநில அரசு பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது, கால்நடை வளர்ச்சிக்கும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நாய் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கி பராமரித்துப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதும் இத்துறையின் நோக்கமாகும்.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கபூர்வமான திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள் வாத்து மற்றும் பன்றி இனங்கள் விநியோகிக்கப்படுவதுடன் அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம், ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கால்நடைத் தீவனம், பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு போன்ற இதரப் பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது.

இத்திட்டங்களின் மூலமாகப் பழங்குடியினர், மலைவாழ் மக்கள் மற்றும் வறட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.

**தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் ஆடு, கோழி, நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன.**

**தமிழ்நாட்டில் 22 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 1,653 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், உள்ளன.**

**ஐரோப்பிய சமூக பொருளாதாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

### கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் 31.3.91 முடிய 22 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒரு கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் மட்டும் விருதுநகரில் நல்ல முறையில் செயலபடுகின்றது. கால் நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் கோழியின விரிவாக்க நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும் கோழிகளும் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவி யுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல் பட்டு வருகின்றது.

1990-91-இல் மாநில மாதிரி வரைவுத் திட்டப் புள்ளிவிவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தின் கோழி முட்டை உற்பத்தி 2,551 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.

### பயன்பெற்ற உறுப்பினர்கள்

31.8.91 முடிய கோழி வளர்ப் புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 6,888 உறுப்பினர் களும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,06,674 உறுப்பினர்களும் பயன்பெற்று வரு கின்றனர்.

### ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

1971-72 முதல் தமிழகத்தின் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங் கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 31.3.91 முடிய உள்ள காலத்தில் 1,653 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்றுத் தரமான ஆடு களை வாங்கிப் பராமரித்துப் பயன் அடைந்து வருகின்றனர்.

உறுப்பினர்களின் கால்நடை களுக்கு மருத்துவ வசதிகளான குடற் புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் கவனித்து வரு கின்றனர்.



ஆடுகளுக்கு இறப்பின் மூலம் அதிக நட்டம் அடையாவண்ணம் காப்பீடு செய்வதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர, ஆடுகள் மரண நிதி என்ற நிதி யினையும் ஒவ்வொரு சங்கமும் பராமரித்து வருகின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டததின் கீழ், 1990-91-ஆம் ஆண்டு முடிய 6,249 ஆடு அலகுகள் விநியோகிக் கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக் கப்படுகின்றன. மேற்கூறிய காலம் முடிய 171.04 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழ், 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.83 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது. அவற்றில் ரூ.38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகை யாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கால்நடைப் பராமரிப் புத் திட்டம் மத்திய அரசால் உரு வாக்கப்பட்டு 1976-77 முதல் 1990-91 முடிய 28,791 யூனிட் டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட்டு என்பது (அலகு) 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் ஆகும். 1990-91-இல் யூனிட் ஒன் றுக்கு ரூ.8,000 வீதம் சேலம் மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத் திலும் ரூ.7,500 வீதம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலும் யூனிட் மதிப்பாக வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25 சத விகிதமும் நடுத்தர விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழி லாளர்கட்கு 33% சதவிகிதமும் மானியமாக வழங்கப்படுகிறது. மீதி உள்ள தொகை அரசுடைமையாக்கப் பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1990-91 முடிய இத்திட்டத்தில் 364.44 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1990-91 ஆண்டிற்கு 2,102 யூனிட்டுகள் வழங்கப்பெற்று ரூ.54.37 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆர்க்காடு- அம்பேத்கர், தென் னார்க்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 6 மாவட்டங்களில் வாழும் 17,173 பழங்குடி மக்கள் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1990-91 வரை இத்திட்டத் தின் கீழ், அரசு மானியமாக 290.31 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

மேச்சேரி இன ஆடுகள் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும் இராமநாதபுரம், வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும் வளர்க்கப்படுகின்றன. ஓசூர் பண் ணையில் மாண்டியா, கொரிடல் கலப்பு இன ஆடுகள் வளர்க்கப்படு கின்றன. செட்டிநாடு, திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணை களில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. புதுக் கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகளும், சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகளும் வளர்க்கப் படுகின்றன.

ஐரோப்பிய சமூக பொருளா தாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயிரின டார்செட் பெட்டை ஆடுகளும் 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து அமெரிக்கா (டெக்ஸாஸ்) அல்லது ஆஸ்திரேலியா இறக்குமதி செய்து ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண் ணையில் வைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.



# உணவே மருந்து

டாக்டர் மோகனமாலா



நாம் எல்லோரும் எப்போதும் ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்றே விரும்புவோம். நோயின்றி வாழ்ந்தால்தான் வாழ்வை நன்கு சுவைக்க முடியும். நோய் தோன்றிய பின், அதைப் போக்கப் பல வழி களிலும் முயன்று சிரமம் அடை வதைக் காட்டிலும், வருமுன் காப் போராக இருப்பதே நல்லது.

நம் உடலை இயற்கையாகவே வலிவுள்ளதாக வைத்துக்கொண்டால், நம்மை நோய் அணுகாது. சிறந்த உணவை உட்கொள்வதன் மூலம் உடலை வலிவுள்ளதாக வைத்துக் கொள்ள முடியும். உணவுக்குப் பயன்படும் பொருள்களின் மருத் துவக் குணங்களை அறிந்து பயன் படுத்தினால் சிறந்த வாழ்வு வாழலாம்.

### கீரை வகை

கீரை வகைகளின் மருத்துவக் குணங்களை நம் முன்னோர் தெளிவு பட உரைத்துச் சென்றுள்ளனர்.

தூது புத்திரியூண் சுவை யாக்கும் பூ
தாது வைத்தழைப் பித்திடும் காயது
வாத பித்த கபத்தையும் மாற்றும் வே
ரோதும் வல்லிபன் னோயு
மொழிக்குமே
- தேரையர் குணபாடம்

### தூதுளை

தூதுளை, கொடியினத்தைச் சேர்ந்த மூலிகைகளில் ஒன்று. நமது தமிழ்நாட்டில் வேலிகளிலும், வேலியை அடுத்துள்ள மரங்களின் அருகிலும் வளர்ந்து, வேலியையோ, மரத்தையோ ஆதாரமாகப் பற்றி நிற்கும். வளைந்த முட்கள் அடர்ந்து இருப்பதுடன் அதன் இலைகளின் மத்தியிலும் முட்கள் இருக்கும். இதனை முட்கள் நீக்கித்தான் உப யோகிக்க வேண்டும். சுக்ல நஷ்டம், சுவாச காசம் முதலிய நோய்களை நீக்க, தூதுளை இலை உணவில் சுவையுடன் பயன்படுகிறது. தூதுளைப் பூ தாதுவை விருத்தி செய்வதுடன், வாத, பித்த, கப தோஷங்களை நீக்கி, உடலைச் சம நிலையில் வைத்துக் கொள்ளவும், உதவுகிறது. இதன்மூலம் (கொடி, காய், பூ) கபம், க்ஷயம், சுவாசகாசம் முதலிய கொடிய நோய்களைப் போக்கும் தன்மை கொண்டது.

நமது கிராமங்களில் இந்தத் தூதுளையை அன்றாட உணவுடன் சேர்க்கும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. தூதுளை இலையை (கீரையை) கூட்டு, பச்சடி, துவையல் முதலான வகைகள் செய்து உண் ணலாம்.

தூதுளையில் ஒரு பிடியை நன்கு ஆய்ந்து, சிறிது பசு நெய் விட்டு வதக்கிச் சாப்பிட்டால், நெஞ்சு வலி, இருமல், நீர்க்கோவை, உடல் வலி, புளியேப்பம் முதலிய நோய்கள் நீங்கும்.

ஐயமுடன் பித்தமகலுமரோசகம் போந்
தையலே வாதந் தணியுங்காண் -
வையமிசை
யோதுங் குடல் வாதமோடு
மலமொழியுந்
தூதுளங் காயுண்ணச் சொல்.

### உடல் உறுதி பெற

தூதுளம் பூவில் 200 பூக்கள் எடுத்து, அதில் 350 மி.லிட்டர் பசுவின் பால் விட்டு, 60 கிராம் சர்க்கரை சேர்த்து, நன்றாய் பாலில் சுண்ட வேகவைத்து, லேகிய பதமுடன் வந்தவுடன், (கையில் ஒட்டாமல் இருக்கும் பதத்திற்கு) பசு நெய் விட்டு லேகியமாகத் தயாரித்து, நெல்லிக்காயளவு காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டு வரலாம்.

நெஞ்சில் தயிர் போன்ற இறுகிய கபம், இரத்தத்தில் சேர்ந்துள்ள நாள்பட்ட விஷம், நாள்பட்ட நீர்க் கோவை ஆகியவை நீங்குவதுடன் உடல் உறுதியும், சரீர வனப்பும் இதனால் உண்டாகும். இதனை உண்டால் ஆச்சரியம் அடையும் படியான பல மாற்றங்களைக் காணலாம்.

### பசலைக் கீரை

பசலை இலைகளில் இயற்கை யின் அதி அற்புதமான சக்திகள் பொதிந்துள்ளன. மனித வாழ்வின் ஆயுட்காலத்தை நீடிக்கச் செய்வதற் குப் பசலைக் கீரை பெரிதும் உதவும். இதில் இரும்புச் சத்து உள்ளது. இரத்த சோகையுள்ளவர்களுக்கு

---

## ரிப்பன் கட்டடத்தில் 24 மணி நேரமும் புகார்களைப் பெற புதுத் தொலைபேசி

சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டடத்தில் குப்பையகற்றுதல், எரி யாத தெரு விளக்குகள், சாலைப் பராமரிப்பு இவை குறித்த பொது மக்கள் புகார்களை 24 மணி நேரமும் பெறுவதற்கு வசதியாக 584670 என்ற புதிய தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் முறையாகப் பதிவு செய்யப் பட்டு உடனடியாக அவற்றைப் போக்க முயற்சி மேற்கொள்ளப் படும். பொதுமக்கள் இந்த வசதி யைப் பயன்படுத்தித் தங்கள் குறை களுக்குத் தீர்வு காணுமாறு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகராட்சி ஆணையர் திரு. மா.இராமு கேட்டுக் கொள்கிறார்.

இது மிகச் சிறந்த மருந்தாகும். வைட்டமின் சத்துக்களும், கால்சியம், ஹிமோ குளோபின், புரதப் பொருள் சம்மந்தமான அமினோ திரவங்கள் முதலியனவும் இக்கீரையில் அடங்கியுள்ளன. தொற்று வியாதிகள் உடலை அணுகா வண்ணம் பசலைக்கீரை பாது காக்கும் பலம் படைத்தது. உடம்பின் உஷ்ணத்தை அடக்கக் கூடிய தன்மை வாய்ந்தது.

நீர்க்கடுப்பு நீரடைப்பு நீங்காத
மேகமும் இவ்
ஊர்க்கடுத்து வாராமல் ஓடும்காண்-
பார்க்கவொண்ணா
அற்பஇடை மாதே அரோசி
வாந்தியும் தொலையும்
நற்பசலைக் கீரையத னால்.

கொடிப் பசலை உண்பதால் வயிற்றுக் கடுப்பும், சிறுநீரக அடைப்பும், மேக ரோகமும் அண்டாமல் நீங்கும். அரோசிகமும் வாந்தியும் தொலையும்,

**பொன்னாங்காணிக் கீரை**

கற்ப மூலிகைகளில் ஒன்றாகிய பொன்னாங்காணி மக்களுக்கு உணவு வகையாகவும், மருந்து வகையாகவும் நோய்களை எளிதில் நீக்கவல்லது. இதில் இரண்டு வகை உண்டு. 1. நாட்டுப்பொன்னாங்காணி 2. சீமைப் பொன்னாங்காணி, நாட்டுப் பொன்னாங்காணி பசுமை நிறமுள்ளதாக இருக்கும். சீமைப் பொன்னாங்காணி சிவப்பு நிறமுடையது.

நாட்டுப் பொன்னாங்காணியே சிறந்தது. இக்கீரையில் பொன் சத்து உண்டு. இதைக் கிரமப்படி பாகம் செய்து தினந்தோறும் உண்டு வருபவர்களது உடல் பொன் போன்று பிரகாசிக்கும் என்பது சித்தர்களின் வாக்கு. பொன் + ஆம் + காண் + நீ = பொன்னாங்காணி. அதாவது இதை உண்டால் உடல் வண்ணம் பொன்னாகக் காண்பாய் என்னும் பொருள் குறிப்பிடத்தக்கது.

பொன்னாங்காணிக் கீரையைத் துவரம் பருப்புடன் மிளகு சேர்த்துச் சமைத்து உண்டுவந்தால், மூன்று மாதங்களில் ஸ்தூல சரீரம் கரைந்து பருமன் குறைந்து வருவதைக் காணலாம்.

**மூல நோய் நீங்க**

பொன்னாங்காணிக் கீரையைப் பூண்டுடன் சேர்த்துச் சமைத்து உண்டால், ஆரம்ப காலத்து மூலம் நீங்கும். மூன்று மாதங்கள் விடாமல் உண்டால், மூல வியாதி முற்றிலும் நீங்கிவிடும்.

பொன்னாங் காணிக் கீரையைக் கொண்டு தைலம் காய்ச்சி, வாரம் ஒருமுறை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், பித்த ரோகம், சிரோ ரோகம், நேத்திர ரோகம் முதலியன நிவர்த்தியாகி, தோல் குளிர்ச்சி அடையும். மூன்று மாத காலத்தில் கண்ணொளி அதிகரித்துப் பிரகாசிக்கும்.

**பித்த சம்பந்தமான கண் மங்கல் நீங்க**

பொன்னாங்காணியின் பழுத்த இலைகளைப் போக்கி, நல்ல இலைகளை எடுத்து அரைத்து, சிறு வில்லைகளாகச் செய்து, தண்ணீர் நிறைந்த புதுப்பானை மீது அப்பி, மறுநாட் காலையில் அதனை எடுத்துக் கண்கள் மீது வைத்துக் கட்டினாலும், பற்று இட்டாலும், பித்த சம்பந்தமான கண் ரோகங்கள் எல்லாம் தீரும்.

மிகினுங் குறையினு நோய்செய்யு
நூலோர்
வளி முதலா வெண்ணிய மூன்று

- என்பது திருவள்ளுவர் வாக்கு.

ஒருவன்தான் உண்ணும் உணவும், செய்யும் செயல்களும் அவன் தகுதிக்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், அதனில் மிகுமானாலும், குறையுமானாலும் வைத்திய நூலோரால் சொல்லப்படும் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்றும் அவனுக்கு நோயை உண்டாக்கும் என்கிற உண்மையை நாம் ஒருபோதும் மறத்தலாகாது. ●

## மாரடைப்பை முன்கூட்டி அறிவது எப்படி?

**மா**ரடைப்பினால் திடீர் மரணம் ஏற்படும் அபாயம் உள்ளதா என்று முன்கூட்டியே கண்டறிய உதவும் பரிசோதனை முறை ஒன்றை, அமெரிக்காவில் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக மருத்துவ மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மாரடைப்பினால் தாக்கப்படுவோரில் பாதிப்பேருக்குத் திடீர் மரணம் நேருகிறது. மாரடைப்பினால் மட்டும் அமெரிக்காவில் ஆண்டுதோறும் 4 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பரிசோதனை முறையானது ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படுமா என்பதை முன்கூட்டியே கண்டறிந்து தக்க சிகிச்சை அளிக்க உதவும் என்று மதிக்கப்படுகிறது.

மாரடைப்பு ஏற்படுவதற்கு முன்னதாக, ஒருவரது இதயத்தில் குறிப்பிடத்தக்க மின்சார மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மின்மாற்றங்களைக் கண்டறிந்து நாம் இ.ஸி.ஜி. எடுப்பதுபோல - ஆனால் இதயத்தின் உள்ளேயே நுண்ணிய ஊசியைச் செருகி கடும் மாரடைப்பு ஏற்படக்கூடுமா என்பதை டாக்டர்கள் முன்கூட்டியே மதிப்பிட முடியும் என்கிறார்கள் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

மாரடைப்பு ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன என்கிறார் டாக்டர் வெர்ரியர். இதயத்தின் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதும், அந்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதும்தான் மாரடைப்புக்கு முக்கியக் காரணம் எனமருத்துவர்கள் வெகுகாலமாகவே கூறிவருகின்றனர். ஆனால், உடலின் நரம்பு இயக்கம் பாதிக்கப்படுவதும் மாரடைப்புக்கு முக்கிய காரணம் என்கிறார் டாக்டர் வெர்ரியர். கோபம், மன அழற்சி ஆகியவை காரணமாக நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாக மாரடைப்பு திடீர் மரணம் நேரிடுகிறது என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதய நோயாளிக்கு மட்டுமல்ல; இரத்த அழுத்த நோயாளிகளுக்கு வழக்கமாக அளிக்கப்பட்டு வரும் மருந்துகள் அவர்களுக்கு எந்த அளவுக்கு ஒத்துக் கொள்கின்றன என்பதைக் கண்டறியவும் இந்தப் புதிய முறை துணை புரியும் என்று அவர் கூறினார்.

-அமெரிக்கத் தகவல் நிலையம்.

# புயல்-மழை-வெள்ள இடர்ப்பாடுகள்: அரசு நிவாரணமும் வேண்டுகோளும்!

## வானொலி - தொலைக்காட்சியில் முதல்வர் உரை

"**பா**சத்திற்குரிய தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு வணக்கம்!

வங்கக் கடலில் அண்மையில் உருவான புயல் காரணமாகத் தமிழ்நாட்டில் பெய்த பெருமழை, வெள்ளப் பெருக்கு மற்றும் சூறைக்காற்று ஆகியவைகளின் மூலம் ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கும் பாதிப்புகளுக்கும் நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள்.

இந்த நேரத்தில் வங்கக் கடலில் புதிதாக இன்னொரு காற்றழுத்த மண்டலம் உருவாகிற அறிவிப்பு வந்திருக்கிற காரணத்தினால் உங்களோடு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

### ரூ.340 கோடி சேதம்

இதுவரை எடுக்கப்பட்ட கணக்குகளின்படி ரூபாய் 340 கோடி அளவில் தமிழ்நாட்டில் இந்தப் புயலின் மூலம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, விளை பயிர்களை இழந்த வகையில் மட்டும் ரூ.72 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. 53 நபர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள். 833 நீர் நிலைகளில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன. 95,000 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

7,048 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 416 பாலங்கள் பழுதடைந்துள்ளன. சுமார் 1,50,000 எக்டேர் அளவுக்குப் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கின்றன.

புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர் செய்யவும், இழப்புகளை ஈடுகட்டவும், உயிர், உடைமை மற்றும் குடிசை ஆகியவற்றை இழந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நான் சென்னை நகரில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நேரடியாகப் பாதிப்புக்குள்ளான இடங்களைப் பார்வையிட்டு, உடனடியாகச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்த அந்த இடங்களிலேயே ஆணையிட்டு வந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

நான் சென்னை நகர மக்களைக் கொட்டும் மழையில் சந்தித்து ஆறுதல் கூறியதுபோல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தப் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்திக்க விரும்பினேன். ஆனால், காவல் துறையினருக்குக் கிடைத்த சில தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புக் கருதி, இந்தச் சுற்றுப் பயணத்தை நான் மேற்கொள்ளக் கூடாது என்று தடுத்துவிட்டனர். எனவேதான், என் சார்பில் சில அமைச்சர்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

இருந்தாலும்- தமிழகத்திலுள்ள ஏழை எளியவர்களுக்கு உடனடியாக உதவுகிற வகையில்,

வெள்ளத்தால், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை- விலைவாசி உயர்வினைக் கருத்தில் கொண்டு- உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன். அந்த வகையில் சென்னைக்கு ரூ.500/-லிருந்து ரூ.600/-ஆகவும், மாவட்டங்களுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/- ஆகவும் உதவித் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. உயிர் இழந்தோர் குடும்பத்திற்கு அரசின் சார்பில் ரூ.2,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தார்க்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் 500 வெள்ள நிவாரண மையங்கள் உடன் திறக்கப்பட்டு, மருத்துவ வசதி, தங்கும் வசதி ஆகியவற்றோடு மக்களுக்கு உணவும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புயல் மூலம் ஏற்பட்டுள்ள இழப்புகளை மத்திய இரயில் துறை அமைச்சர் திரு. ஜாபர் ஷெரீப் அவர்கள் தனது நேரடி வருகை மூலம் கண்டறிந்துள்ளார். அதுபோலவே, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஷரத்பவார் அவர்கள் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, மீட்புப் பணிகளுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

### பிரதமருடன் பேசினேன்

இன்று காலை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுடன் தொலைபேசியில் நான் தொடர்புகொண்டு மழையாலும், புயலாலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதத்தைக் கண்டறிந்து அறிக்கை கொடுக்க மத்திய அரசு அதிகாரிகளின் குழுவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதுவரை சமர்ப்பித்த அறிக்கைகளின்படி, மொத்தம் ரூபாய் 340 கோடி அளவிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதையும் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

மாநில அரசின் வறட்சி மற்றும் புயல் நிவாரண நிதியில் ரூபாய் 39 கோடி இருந்தது. அதில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஏற்கெனவே ரூ.9 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தற்சமயம் நிவாரணப் பணிகளுக்கு என ரூ.30 கோடி மட்டுமே இருக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசு சந்தித்து வரும் மிக நெருக்கடியான நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக ரூ.340 கோடி அளவிற்குப் புயல் நிவாரணப் பணிகளுக்காக மாநில அரசே செலவிடுவது என்பது இயலாத காரியம் என்பதையும் பிரதமர் அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

எனவே, மத்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும் என்று பிரதமர் அவர்களிடம் கோரினேன்.

### மத்திய அரசுக் குழு

பிரதமர் அவர்களும் நான் கேட்டுக் கொண்டபடி புயலால் விளைந்துள்ள சேதங்களைக் கணக்கிட மத்திய அரசு குழு ஒன்றினை உடனடியாக அனுப்புவதாக உறுதி அளித்தார்.

தஞ்சை, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தென்னார்க்காடு, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் பெருமழையும், வட ஆர்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கனத்த மழையும் பெய்திருக்கின்றது. நான் வருகை தர முடியாத பகுதிகளில் வாழும் என்னருமைத் தமிழக மக்களாகிய உங்களது துன்பங்களை, நானும் பகிர்ந்து கொள்ளவே வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் உங்களோடு இப்போது தொடர்பு கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்களின் நல்வாழ்விலும், நலனிலும் மிகுந்த அக்கறை கொண்ட உங்கள் அரசு, உங்களது இன்னல் களைய, துயர் துடைக்க, எப்போதும் ஓடி வந்து அரவணைப்புத் தரும் என்பதை இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே மழை, புயல், வெள்ளம் ஆகிய இடர்ப்பாடுகள் ஏற்படும்போது, அரசு வழங்கும் நிவாரணப் பணிகளுக்கும், புயல் மற்றும் வெள்ளத் தடுப்புச் செயல்பாடுகளுக்கும், உங்கள் ஒத்துழைப்பை நல்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்."

**—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.11.'91 அன்று வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஆற்றிய உரை.**

**இரசாயனத் துறையில் உயர் பட்டப்படிப்பு**

அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் பெட்ரோலிய இரசாயனத் துறையில் புதிய முதுகலை பட்டபடிப்பை (எம்.டெக்) தொடங்குகிறது. இந்தப் பட்டப்படிப்பைத் தொடங்க அண்ணா பல்கலைக் கழகத்துக்கு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் சார்பில் ரூ.5 இலட்சம் வழங்கப் பட்டது.

இந்த முதுகலை பட்டப்படிப்பு 1992 ஜனவரி மாதம் தொடங்கப் படும். ஒன்றரை ஆண்டுப் படிப்பான இந்தப் பட்டப்படிப்பில் 10 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

பெட்ரோலியம் மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறை தொடர்பான படிப்பு இந்தியாவில் 6 இடங்களில் மட்டுமே உள்ளன. இவை அனைத்தும் வட இந்தியாவில் தான் இருக்கின்றன.




## தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை லிட்.,
## பேட்டை, திருநெல்வேலி - 627 010.

தந்தி: "COOPSPIN"
டெலக்ஸ்: 0433-232 SPIN-IN

தொலைபேசி எண்:
ஆட்சியர் (தனி): 23610
ஆட்சியர் (இல்லம்): 72899
அலுவலகம்: 23284, 85, 86

### நிறுவப்பட்ட கதிர்கள் - 50,080

எங்களது ஆலை தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறையில் முதன் முதலில் துவங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இதுவே பெரிய ஆலையாகும்.

20ஸ், 26ஸ், 40ஸ், 100ஸ், 2/17ஸ், 2/40ஸ், 2/60ஸ், 2/80ஸ் கார்டட் நூல் ரகங்களும் 60ஸ், 80ஸ் கோம்புடு நூல் ரகங்களும் மற்றும் கார்டட் ரகங்களில் கோன் நூல்களும் இங்கு உற்பத்தியாகி இந்தியா முழுவதும் விற்பனையாகின்றன.

ஆலை நவீனப்படுத்தப்பட்டு நூதன மின் சோதனைக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறந்த முறையில் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டு நூல் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆட்சியர்

# நூல் நயம்

### பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு

**ஆசிரியர்:**

டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ,

**வெளியீடு:**

ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

பக்கம்:1012 விலை:ரூ.170/-

"பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு" என்னும் நூல் தமிழ் இனம் விழிப்புற்றெழுந்து வீறு நடைபோட்டு தனது பழம் புகழை மீட்கப் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நாடகங்கள் எவ்வாறெல்லாம் பயன்படத் தக்கவை என்பதைப் பற்றி ஆழ்ந்து அகன்ற 1,012 பக்கங்கள் கொண்டதோர் ஒப்பற்ற ஆய்வுப் படைப்பாக அமைந்துள்ளது.

இந்நூல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நாடகங்களை மட்டுமல்ல, தமிழக நாடக வரலாறு, திராவிட இயக்கத்தால் தமிழ் மொழியும், நாடகமும், கலைகளும் பெற்ற மாற்றங்கள் நாடக உலகம் பெற்ற ஏற்றங்கள் போன்றவற்றை விரிவாகவும் தெளிவாகவும் காட்டுகின்ற ஓர் ஒளிப்படச் சுருளாகவும் அமைந்துள்ளது.

பாவேந்தரோடு நூலாசிரியர் ஒன்றித் தோய்ந்துவிட்ட நிலையைத்தான் இந்நூல் காட்டுகிறது. பாவேந்தர் பற்றி யாருக்கும் தெரியாத பல அரிய செய்திகளைத் தேடி பலரை நாடி ஆசிரியர் தொகுத்துள்ளார்.

பாரதிதாசன் நாடகங்கள் நாற்பத்தேழு என்பதும், அவற்றுள் நூல் வடிவம் பெற்றவை, நூல் வடிவம் பெறாதவை, அச்சு வடிவம் பெறாதவை எவை எவை என்பதும் பட்டியலிட்டுக் குறிப்பிடப் பட்டுள்ளது. அச்சு வடிவம் பெறாத கையெழுத்துப் படிவப் படைப்புகளும்கூட இவ்வாய்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"பாரதிதாசன் நாடக மாந்தர்களில் இரணியன், பிசிராந்தையார் போன்ற ஆள் பாத்திரங்கள் மரபு நோக்கிப் பீடுள்ளவர்களாகப் படைக்கப்பட்டுள்ள போதிலும், பொதுவாக அவருடைய படைப்பு உத்தியின்படி பெண் பாத்திரங்களே அழுத்தமும் உயர்வும் பெற்றிருப்பது" குறிப்பிடத்தக்க ஒன்றென ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

பாவேந்தரின் தனித் தமிழ்ப் பற்றிற்கு அரிய சான்று ஒன்றும் தரப்பட்டுள்ளது. காதலா? கடமையா? என்ற காப்பியம் பல்லாண்டுகளுக்கு முன்னர் 'ஏழை உழவன்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தது. அதில் வட சொற்கள் கலந்திருந்ததால், பின்னர் அதனைத் தனித் தமிழ்ச் சொல்லோவியமாக்கி 'காதலா? கடமையா? என்ற தலைப்பில் பாவேந்தர் வெளியிட்டார்.

பாரதிதாசன் நாடகங்கள் கால வரிசை, அகரவரிசை, என்று பகுக்கப் பட்டுள்ளதோடு பாரதிதாசன் நூல்கள் அனைத்துமே அகர வரிசையில் தரப் பட்டுள்ளது பலருக்கும் பல்வேறு வகையில் பயன்படும்.

— சீ.ந

### சுந்தரப் பெருமாள் கோயில் இராமலிங்கம் கவிதைகள்

**வெளியீடு:**

எஸ்.பி.என். இராமலிங்கம்
388, 5-வது முதன்மைச் சாலை,
மகாகவி பாரதிநகர், வியாசர்பாடி,
சென்னை-39.

பக்கம்:96 விலை:ரூ.14/-

மரபுக் கவிதை மலர் மாலை எனத் திகழும் இந்நூலில் முப்பத்தைந்து மலர்கள் காட்சி தருகின்றன. கவிதைகளில் நயம் உண்டு; நன்னோக்கம் உண்டு; நல்ல வாதம் உண்டு; நல்ல தீர்ப்பும் உண்டு. இவற்றில் தென்றலும் வீசுகிறது; புயலும் மோதுகிறது. அருளுள்ளமும் தெரிகிறது; அடுபோர்த் திறனும் புலப்படுகிறது. அகப்பொருளும் உறைந்துள்ளது; புறப் பொருட்சுவையும் பொருந்தியுள்ளது. நகைச்சுவை உணர்வும் ஆங்காங்கே தலை காட்டுகிறது.

'தொன்னையிலே வீடுகட்டி அதற்குள் மாட்டுத்
தொழுவத்தை யும்கட்டும் வித்தை கற்றீர்'

—சென்னை நகர் குறித்து 'நகரமும் நகரமும்' என்னும் தலைப்பில் உள்ள கவிதையில் காணப்படும் இந்த வரிகள் நகைச்சுவை உணர்வையும், யதார்த்த நிலையையும் எடுத்துரைக்கிறது.

ஓரிரு கவிதைகளில் கவியரசர் கண்ணதாசனின் தாக்கம் காணப்படுகிறது. அதைத் தவிர்த்திருக்கலாம்.

—தமிழ்ப்பித்தன்

### டாக்டர் தயாவின் இசைப் பாடல்கள்

**ஆசிரியர்:**

அருள்மிகு
டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-3

பக்கம்:76 விலை:ரூ.15/-

இந்நூலாசிரியர், கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலக் கட்டத்தில் எழுதப் பெற்ற பாடல்களின் தொகுப்பே இந்நூல்.

இந்நூலில் 63 இசைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் ஆண்டவருக்கு நன்றி மணி மாலையாக ஒளி விடுகின்றன. 'மீட்பர் சிலுவை சுமப்பேன்' என்பதிலிருந்து 'இல்லற வாழ்வினிலே' வரை இனிய கருத்துக்களின் சிதறல்களாகச் சிறகு விரிக்கின்றன. படிக்கவும், பாடவும் ஏற்ற பைந் தமிழ்ப் பாடல்கள்.

—பி.வி.கிரி

### சிறுநீரக நோய்களுக்குச் சித்த மருத்துவம்

**ஆசிரியர்: சீதாராம் சுப்ரமணியம்**

**வெளியிட்டோர்:**

பல்கலைப் பதிப்பகம்,
36, தெற்குச் சிவன்கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.

பக்கம்:96 விலை:ரூ.10/-

சிறுநீர், சிறுநீர் சோதனை, நோயும்-மருந்தும் தாவரப் பொருட்கள், நவீன மருத்துவத்தில் சிறுநீரகச் சிகிச்சை, சிறுநீரும் மருந்து செய்யப் பயன்படுகின்றது. சிறுநீரே மருந்து, நோய்நீக்க இன்னும் சில மருந்துகள் ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

கல்லடைப்பு, நீர்ச் சுருக்கு போன்றவைகளுக்கான எளிய மருத்துவ முறைகளும் சொல்லப்பட்டுள்ளன.

நூலாசிரியரே வைத்தியர் எனினும்-சாமான்யர்களுக்கும் புரியும்படி கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. —பி.எல்.ஆர்.

### வாழ வழி காட்டிய வள்ளல்

**ஆசிரியர்: ஓவியப்பாவலர் மு. வலவன்**

**வெளியீடு:**

முத்தையன் பதிப்பகம்
65, பெரிய தெரு, சென்னை-5

பக்கம்:188 விலை:ரூ.25/

வள்ளலார் பெருமானின் வரலாற்றையும், தத்துவங்களையும் புதிய முறையில் எடுத்துக் கூறும் நூல். வடலூர் அடி[illegible]களைப் பற்றிய கலைக் களஞ்சியமா[illegible] இந்நூல் விளங்குகிறது.

—சுகுமாரன்





## சேலம் மாவட்டம்

# சருகு மலைப் பழங்குடி மக்கள்

சேலம் மாவட்டம் மலைகளுக்குப் பெயர் பெற்றது. 'சேலம்' என்ற பெயர் இம்மாவட்டத்திற்கு வரக் காரணமாக இருந்ததே மலைகள் தான் என்பது ஒரு சாரார் கூற்று. 'சைலம்' என்றால் வடமொழியில் மலைகள் என்று பொருள். இதுவே காலப்போக்கில் சேலம் என்று மாறுதலடைந்தது என்றும் கருதப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, பச்சை மலை, போத மலை, சருகு மலை என்று பல்வேறு மலைகள் காணப்படுகின்றன. இம்மலைகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கும் இம்மாவட்டம் சிறப்புப்பெற்று விளங்குகிறது. மலைகளில் வசிக்கும் இம் மக்களை 'மலையாளிகள்' என்றே அழைக்கின்றனர். மலையாளிகள் என்ற இப்பழங்குடி வகை தமிழ்நாட்டில் காணப்படும் மொத்தப் பழங்குடி வகைகளில் 54 சதவிகிதத்தை வகிக்கிறது. அதிலும் சேலம் மாவட்டத்தில் இப்பழங்குடி மக்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். சேர்வராயன் மற்றும் கல்ராயன் மலைகளில் காணப்படும் மலையாளிகளைப் பெரிய மலையாளிகள் என்றும், கொல்லி மலையில் காணப்படுபவர்களைக் கொல்லி மலையாளிகள் என்றும், பச்சை மலையினரைப் பச்சை மலையாளிகள் என்றும் அழைக்கின்றனர்.

சேலம் நகரத்தை அடுத்துக் காணப்படும் மலைகளில் மிகவும் அருகிலுள்ளது சருகு மலையாகும். கிழக்கு மேற்காக அமைந்துள்ள இம்மலை சுமார் 10 கிலோ மீட்டர் நீளமும் 3,500 அடி உயரமும் கொண்டுள்ளது. இம் மலைக்கு இப்பெயர் வருவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் மரங்கள் நிறைந்து காணப்பட்ட இம்மலை தற்காலத்தில் ஒரு சில மரங்களையே கொண்டு காய்ந்து காணப்படுவதால் சருகு மலை என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.

மேலும் வட மொழியில் 'ஜர' (Jara) என்றால் புராணக் கதைகளில் வரும் 'ஜரசந்தன்' (Jarasandhan) என்ற உருவகத்தைக் குறிப்பதாகும். இவ்வுருவம் வயதான தோற்றத்தையும், அழிவையும் காண்பிப்பதாக அமைவதால் இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதேபோல் சமண, புத்த மதங்களைக் குறிக்கும் வகையில் 'அருகு மலை' என்ற பெயரிலிருந்து (Arugan being a Tamil word for Arhat a Jain Hierophant) இப்பெயர் வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் போதமலை என்ற பெயர் கொண்ட மலை அருகிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மலை கிழக்கிலிருந்து தொடங்கும் இடத்தில் சேலத்தில் புகழ் பெற்ற 'கந்தாஸ்ரமம்' அமைந்துள்ளது. அதற்குச் சற்று வடக்குத் திசையில் குமரகிரி முருகன் கோவில் காணப்படுகிறது. அதையொட்டி சருகு மலையின் ஒரு பகுதியான 'நாம மலை' அமைந்துள்ளது. நாம மலையின் பின்புறமாகத் 'தேங்கல் மலை' என்ற மிகப்பெரிய தனித்து நிற்கும் பாறை அமைப்பு காணப்

- ஜா.ரா. அசோகன்
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சேலம்

படுகிறது. இம்மலையில் ஒரு காலத்தில் தேன் கூடுகள் மிகுந்து காணப்பட்டு, தேன் சேகரிக்கப்பட்டதால் தேன் மலை என்று பெயரைப் பெற்று தற்பொழுது தேங்கல் மலை என்று பெயர் மருவி அழைக்கப் படுகிறது. சருகு மலையின் உயரமான பகுதியில் பெருமாள் மலையும் அமைந்துள்ளது. சருகு மலையின் தென்புறம் தனியாகப் பிரிந்து காணப்படும் கூரான மலைப்பகுதிக்குக் 'கத்தி மலை' என்று பெயர்.

மொத்தத்தில் இவ்வமைப்புகளைக் கொண்ட இம் மலையில் மலையாளிப் பழங்குடிகளின் குக்கிராமங்களான கீழூர், மேலூர், ஓட்டப்பள்ளிக்காடு என்ற மூன்று ஊர்கள் காணப்படுகின்றன. இம்மலையை அடைவதற்குச் சேலம் நகரை ஒட்டி அமைந்துள்ள சன்னியாசி குண்டை அடைந்து ஒற்றையடி மலைப்பாதையில் நடக்க வேண்டும். இம்மலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்துப் பாதைகள் ஏதும் கிடையாது. மலையில் மிகச் சிறிய மூன்று குக்கிராமங்களே உள்ளதால் பாதைகள் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

சன்னியாசிகுண்டு என்ற சிற்றூர் தேங்கல் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. சன்னியாசிகுண்டு என்ற பெயர் இவ்வூருக்கு வந்ததற்கான காரணம் புதிராக உள்ளது. சருகு மலையின் அடிவாரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த முஸ்லீம் மத ஞானி ஒருவர் தேங்கல் மலையில் இருந்து உருண்டோடி வந்த மிகப்பெரிய பாறையைத் தம் வெறும் கைகளாலும் கால்களாலேயுமே தடுத்து நிறுத்தியதாகவும் பின்பு அப்பாறையின் அடியிலேயே குழி தோண்டி ஆசிரமம் அமைத்து இருந்தார் என்றும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக அப்பாறையில் காணப்படும் கை மற்றும் கால்களின் பதிவுகளாகச் சில பகுதிகளையும் காண்பிக்கின்றனர். மேற்கூறிய காரணங்களால் இப்பகுதி சன்னியாசிக்குண்டு என்ற பெயரைப் பெற்றதாகக் கூறுவர். சன்னியாசிக்குண்டிலிருந்து மலைப்பாதையில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றால் மேலூரைச் சென்றடையலாம். செல்லும் வழி ஒரே ஏற்றமாக இல்லாமல் இரண்டு பகுதிகளில் உயரமான பீடபூமியாய்ச் சமதளம் காணப்படுகிறது. இவ்விடங்களில் இருந்து தேங்கல் மலையைப் பார்த்தால் கண்கொள்ளாக் காட்சியாய்த் தேங்கல் மலை தனிப் பாறையாக உயர்ந்து நிற்கிறது. மேலூரை அடையும் உயரத்தில் நின்று பார்த்தால் கந்தாஸ்ரமும், குமரகிரி கோவிலும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. இவ்வழிகள் மட்டுமின்றி பனைமரத்துப்பட்டி பக்கம் வந்து, குரால் நத்தம் வழியாகவும்; ராசிபுரம் அடைந்து நிலவாரப்பட்டி வழியாகவும் மலை மேல் நடந்து மேலூரை அடையலாம்.

ஓட்டப்பள்ளிக் காடு என்ற கிராமம் மேலூரின் ஒரு பகுதியாகவே தனித்து வீடுகளைக் கொண்டு விளங்குகிறது. இதில் சுமார் 25 வீடுகள் காணப்படுகின்றன. மேலூரில் சுமார் 70 வீடுகள் காணப்படுகின்றன. மேலூரிலிருந்து ஒற்றையடிப் பாதையின் வழியாக அரை கிலோ மீட்டர் தூரம் மலையின் மறுபக்கச் சரிவில் இறங்கி நடந்தால் கீழூரை அடையலாம். இதில் சுமார் 40 முதல் 50 வீடுகள் காணப்படுகின்றன. மூன்று கிராமங்களிலும் சேர்ந்து மொத்தமாகச் சுமார் 800 மலைவாசிகள் சருகு மலையில் வாழ்கின்றனர்.

## தலைமை நீதிபதி

**டெல்லி உச்ச நீதிமன்றத்துக்குப் புதிய தலைமை நீதிபதியாகத் திரு. கே.என். சிங் நியமிக்கப்பட்டிருக்கிறார்.**

**தற்போதைய தலைமை நீதிபதி திரு. ரங்கநாத் மிஸ்ரா சென்ற மாதம் 24-ஆம் தேதி ஓய்வு பெற்றதையடுத்து அந்தப் பதவிக்குத் திரு.கே.என். சிங் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிபதி திரு. கே.என். சிங் இம்மாதம் 25-ஆம் தேதி தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றார். நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் உச்ச நீதி மன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

இக்குக்கிராமங்களில் அமைந்த வீடுகளில் பெரும்பாலானவை மண்ணால் சுவர் எழுப்பி கூரை வேயப்பட்டவையாகும். காட்டுப்புறங்களிலிருந்து சேகரிக்கும் 'கணாங்கு' என்ற புல்லை கூரை வேயப் பயன்படுகின்றனர். மேலூரில் சில வீடுகள் கருங்கற்களால் கட்டப்பட்டு கூரை வேயப்பட்டுள்ளன. மேலூரில் இவ்வகை வீடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இன்னும் சில வீடுகள் ஓடுகளால் வேயப்பட்டுள்ளன. சருகு மலையில் பாறைகள் நிறைந்து காணப்படுவதால் கல்லால் அமைக்கப்படும் வீடுகள் எண்ணிக்கையில் அதிகரித்திருக்கின்றன.



இம்மக்களின் முக்கியத் தொழில் விவசாயமாகும். விவசாயத்திற்கான பட்டா நிலங்கள் பெரும்பாலோர் வசம் உள்ளன. பட்டா நிலமற்றோர் புறம்போக்கு நிலத்திலும், ஏனையோர் மற்றோர் நிலத்தில் தொழிலாளிகளாகவும் வேலை செய்கின்றனர். விவசாய முறை இங்கு படிக்கட்டுப் பாசன முறையாகச் (Terrace cultivation) செய்யப்பட்டு வருகிறது. இம்முறையில் கேழ்வரகு, தினை, சாமை, நெல் ஆகியவை பயிரிடப்படுகின்றன. மழையை நம்பியே விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. வைகாசி மாதத்தில் பயிரிடப்படும் பயிர்கள் தை அல்லது மாசி மாதங்களில். அறுவடை செய்யப்படுகின்றன. மழையின்றிப் பயிர்கள் வாடி காய்ந்து போவதும் உண்டு. பொதுக் கிணறுகள் இரண்டைத் தவிர சுமார் 10 தனியார் கிணறுகளும் உள்ளன. எண்ணெய் இயந்திரத்தை வைத்து வசதியான மலையாளிகள் நீர்ப் பாசனம் செய்து பயிர் செய்கின்றனர். விவசாயத்திற்கான கடன் வசதிகள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பெறப்படுகின்றன. இப்பயிர் தானியங்களிலிருந்து சமைக்கப்படும் கஞ்சி, கூழ், களி முதலயவற்றையே பெரும்பாலும் உணவாக இம்மக்கள் உட்கொள்கின்றனர். மண்வாகு காரணமாக இங்கு அவரையும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. சேகரிக்கப்படும் அவரையும், நிலங்களின் ஓரங்களில் காணப்படும் புளியமரங்களில் இருந்து சேகரிக்கப்படும் புளியும் சேலம் நகருக்குத் தலைச் சுமையாகக் கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகின்றது. பெண்கள் சுள்ளி சேகரிப்பதையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவை பெரும்பாலும் வீட்டு உபயோகத்திற்கே பயன்படுத்தப் படுகின்றன. இது மட்டுமின்றி, காடுகளில் சேகரிக்கப்படும் பாலை, ஊஞ்சை, நமை, புருஷம் ஆகிய மரச் சுள்ளிகள் விறகுக் கட்டுகளாக எடுத்துச் செல்லப்பட்டு சேலத்தில் விற்கப்படுகின்றன.

இதரத் தொழிலாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகியவையும் காணப் படுகிறது. ஆடுகள் கீழே ஓட்டிச் செல்லப்பட்டு சேலத்தில் விற்கப் படுகின்றன. இதர மலைகளில் சாதாரணமாக வளர்க்கப்படும் பன்றி வளர்ப்பு இங்கு காணப்படவில்லை. விவசாயப் பயிர்களைப் பன்றிகள் சேதப்படுத்துவதே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. மாடுகளின் சாணத்தை உரத்திற்காகச் சேகரிப்பதும் பெண்களின் [illegible] வேலையாக அமைகிறது. கிரா[illegible]ருந்து 4 அல்லது 5 கிலோ மீட்டர் [illegible] தூரத்திலேயே சேலம் [illegible], இவர்கள் உணவுப் பொருட்கள் [illegible]ங்குவதற்கும், விற்பதற்கும் [illegible] மூன்று அல்லது நான்கு நாட்கள் [illegible]திற்கு இறங்கி ஏறுகின்றனர். [illegible]மத்திற்கு அருகில் மலையின் உச்சியில் மட்டும் சிறு காடுகள் [illegible] காணப்படுகின்றன. இவற்றில் மா, பலா, புளி, தேக்கு, தென்னை, சீத்தா ஆகிய மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவிக் காணப்படுகின்றன.



எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்டுள்ள இவர்கள் எங்கிருந்து இம்மலையில் குடியேறினார்கள் என்பதற்குச் சரிவர ஆதாரங்கள் காணப்படவில்லை. ஒரு கூற்றார், கொல்லி மலையில் இருந்து வந்தனர் என்றும், மற்றொரு பிரிவினர் பால மலையிலிருந்து இடம் பெயர்ந்தனர் என்றும் கூறுகின்றனர். இவர்களின் உறவினர்கள் கொல்லிமலை, போத மலைகளில் காணப்படுவதிலிருந்து வெளி மலைகளிலும் இவர்கள் திருமண உறவை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இதர மலையாளிப் பிரிவினரைப் போலவே இக்கிராமங்களும் ஊர்த் தலைவனைக் கொண்டுள்ளன. ஓட்டப்பள்ளிக் காடு, மேலூர் ஆகிய இரு ஊர்களுக்கும் சேர்த்து ஓர் ஊர்க்கவுண்டரும், கீழூருக்கு ஓர் ஊர்க்கவுண்டரும் தனித்துக் காணப் படுகின்றனர். இரு கிராமங்களுமே தனித்தனியாக 5 பேர் கொண்ட ஊர்க் கவுண்டர்கள் குழு இயங்குகிறது. ஊரில் ஏற்படும் பிரச்சினைகளைப் பஞ்சாயத்து கூட்டி இக்குழுவே நீதி வழங்குகிறது. திருமணங்கள் பெற்றோர்களால் முறை பார்த்து முடிவு செய்யப்படுகிறது. தாமே துணையைத் தேடிக் கொள்பவர்கள் இணைந்து வாழ்ந்தால் பிரச்சினை ஏதும் ஏற்படுவதில்லை. அவ்வாறு இல்லையெனில் ஆண் மகனுக்கு அதிகத் தொகை அபராதமாக விதிக்கப்படுகிறது. இத்தொகை சேகரிக்கப்பட்டு கைவிடப்பட்ட பெண்ணிற்கு இனாமாகக் கொடுக்கப்படுகிறது.

மேலூரில் ஓர் அரசுப்பள்ளி உள்ளது. இதில் 5-வது வரை மாணவர்கள் படிக்க வசதி செய்யப் பட்டுள்ளது. இங்கு இலவசமாகப் புத்தகங்களும், சீருடையும், உணவும் அளிக்கப்படுகின்றன. இருந்தும் அனைத்துக் குழந்தைகளும் பள்ளி செல்வதில்லை. ஐந்தாவது படிப்பதற்கு மேல் படிக்கும் குழந்தைகள் சேலத்தில் பெற்றோரால் படிக்க வைக்கப்படுகின்றன. ஊரில் பிரதானமாகக் கண்ணில் படுவது சூரிய வெளிச்சத்தினால் ஒளிவிடும் குழல் விளக்காகும். ஊரில் மின்சார வசதி இல்லாததால் இவ்விளக்குப் பேருதவியாய் இருக்கிறது. இவ்விளக்கு மூன்று ஊர்களிலும் ஊரின் நடுவே நிறுவப்பட்டுள்ளது. குடிநீர் வசதிக்காக மேலூரிலும், கீழூரிலும் துளைக் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒன்றில் நீர் வற்றிப் போனதால் தற்பொழுது குடிநீருக்குச் சற்றுச் சிரமம் ஏற்பட்டு உள்ளது. மருத்துவ வசதிகளுக்குப் பெரும்பாலும், சேலம் வந்து செல்கின்றனர். ஊர் முழுவதும் ஏதும் நோயால் தாக்கப் பட்டால் பனைமரத்துப்பட்டி வந்து தகவல் தெரிவிக்கின்றனர். மருத்துவர்கள் மலையேறிச்சென்று மருத்துவம் பார்க்கின்றனர். இருந்தும் கிராம மக்கள் பிரசவ உதவிக்குச் சிரமப்படுகின்றனர். பிரசவங்கள் பெரும்பாலும் ஊர் மருத்துவச்சி அல்லது கிராமப் பெண்களால் பார்க்கப்படுகிறது. குழந்தை பிறப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாகக் கட்டிலில் படுக்க வைத்துத் தூக்கிக் கொண்டு சேலம் வந்து விடுகின்றனர். இடையில் கோளாறு ஏற்பட்டு இறப்பவர்களும் உண்டு. இறந்தவர்களைப் பொதுவாகப் புதைக்கும் பழக்கம் உள்ளது. அசாதாரணமாக இறந்தவர்களை எரித்து விடுகின்றனர். ●

# பசுக்கள் அதிகம் பால் கறக்க உதவும் 'ஹார்மோன்'

பசுக்கள் அதிக அளவில் பால் கறப்பதற்கு ஊக்குவிக்கக்கூடிய 'ஹார்மோன்' ஒன்று செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை ஹார்மோன் மிகவும் பாதுகாப்பானது. பசுக்களுக்கோ அல்லது அவற்றின் பாலை அருந்துபவர்களுக்கோ எந்தவிதமான தீய விளைவையும் இது ஏற்படுத்தாது.

'பொவைன் சொமடோட்ரோபின்' (Bovine Somatotropin) என்னும் பெயர்கொண்ட இந்த ஹார்மோன் மரபியல் முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

அமெரிக்க நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'திருப்புமுனைக் கட்டத்தில் அமெரிக்கப் பால்பண்ணைத் தொழில். உயிரியல் தொழில் நுட்பமும், புதிய கொள்கை வாய்ப்புகளும்' என்பது இந்த அறிக்கையின் தலைப்பாகும். அமெரிக்க அரசின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அலுவலகம் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

பசுக்களின் பால் சுரக்கும் திறனை ஊக்குவிக்கக்கூடிய ஹார்மோன், பசுக்களின் 'பிட்யூட்டரி' சுரப்பிகளில் இயற்கையாகவே உற்பத்தி ஆகிறது. 'பொவைன் சொமடோட்ரோபின்' என்னும் இச் செயற்கை ஹார்மோனைப் பசுக்களுக்குச் செலுத்தும்போது இந்தத் திறன் மேலும் அதிகமாகிறது.

'பொவைன் சொமடோட்ரோபின் மிகவும் நூதனமானது. பசுக்களுக்கு இதனைச் செலுத்துவதன் மூலம் ஒரு பசுவின் பால் சுரப்புத் திறனை 12 சதவிகிதம் அளவுக்குப் பெருக்க முடியும். தற்போது பயன்படுத்தப்படும் இதர முறைகள் மூலம் இந்த அளவை எட்டுவதற்குப் பத்து முதல் இருபது ஆண்டுக்காலம் வரையில் பிடிக்கும்' என்று இந்த அறிக்கையைத் தயாரித்துள்ள மைக்கேல் பிலிப்ஸ் குறிப்பிடுகிறார்.

இந்தப் புதிய ஹார்மோன் பாதுகாப்பற்றதாக இருக்குமோ என்று அச்சம் எழுப்பப்பட்டது. இதற்கு அவசியமே இல்லை. இந்த ஹார்மோன் எந்தவிதமான தீய விளைவையும் ஏற்படுத்துவதில்லை. இந்த ஹார்மோன் அளிக்கப்பட்ட பசுக்களிடமிருந்து பெறப்பட்ட பாலிலோ அல்லது இறைச்சியிலோ விரும்பத்தகாத மாறுதல்கள் ஏதும் இல்லை. முதல் சில வாரங்களில், சில பசுக்கள் அளித்த பாலின் கொழுப்புச் சக்தி அளவில் சொற்ப மாறுதல்கள் இருந்தனவே தவிர, அவைகூட தற்காலிகமானவையே. பசுக்களின் ஆரோக்கியத்தை இது எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. இவ்வாறு பிலிப்ஸ் கூறினார்.

இந்தச் செயற்கை ஹார்மோனைக் கூடப் பழையதாக்கி விடக்கூடிய அளவுக்குத் தொழில்நுட்பம் மிகவும் வேகமாக முன்னேறி வருவதாக பிலிப்ஸ் குறிப்பிட்டார். பொவைன் சொமடோட்ரோபின் பசுக்களின் உடலில் இயற்கையாகவே பெருமளவுக்குச் சுரக்கும் வகையில், பசுக்களின் உடலில் சில மரபுக்கூறுகள் மாற்றப்படும் காலம் வந்தாலும் வரலாம் என்றார் அவர்.

- அமெரிக்கத் தகவல் நிலையம்





## ஜவகர்லால் நேரு விருது

சர்வதேச நல்லிணக்கத்துக்கான 1989-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு விருது ஜிம்பாப்வே அதிபர் திரு. ராபர்ட் முகாபே அவர்களுக்கு 14.11.'91 அன்று புதுடெல்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் வழங்கினார்.

1990-ஆம் ஆண்டுக்கான ஜவகர்லால் நேரு விருதைப் பெற ஜெர்மனி பிரதமர் டாக்டர் ஹெல்மெட்கோல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1982-ஆம் ஆண்டு முதல் மேற்கு ஜெர்மனியின் பிரதமராக இருந்துவந்த திரு. ஹெல்மெட்கோல் இரண்டு ஜெர்மனிகள் இணைந்த பின் ஒன்றுபட்ட ஜெர்மனியின் முதல் பிரதமராக இருக்கிறார்.

கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனிகள் இணைவதில் முக்கியப் பங்காற்றியவர் திரு. ஹெல்மெட்கோல் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு ஜவகர்லால் நேரு விருதைப் பெற்றவர்கள்-பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் திரு. யாசர் அராபட் (1987), சுவீடன் நாட்டு முன்னாள் பிரதமர் ஒலப் பாமே (1985) ஆகியோராவர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட சுகாதாரக் கேடுகள் காரணமாக-பின் விளைவாக ஏற்படும் காலரா போன்ற நோய்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கு இணங்க, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களின் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத்



5. வெள்ளத்தால் அடித்துக் கொண்டு வரப்படும் இறந்த பிராணிகளின் இறைச்சி விஷத்தன்மை உடையதாக இருக்கலாம் எனக் கருதி அதை உண்ணக் கூடாது என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. வீட்டில் உள்ள ஈக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். உணவுப் பண்டங்களைச் சரியான முறையில் மூடி வைக்க வேண்டும். வீட்டின் அருகில் உள்ள குப்பைத் தொட்டிகளில்தான் பயன்படாத பொருட்களைப் போட வேண்டும்.

தண்ணீர் காரணமாக ஏற்படும் நோய்கள் பரவாமலிருக்க சுகா

# புயல்-வெள்ளம் விளைவாக ஏற்படும் நோய்களைத் தடுக்க முதல்வர் நடவடிக்கை

துறை மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் கூட்டம், 19.11.91 அன்று காலை 11 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட ஆயத்த ஏற்பாடுகளையும், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் பற்றியும் விவாதித்துப் பொதுமக்களின் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்களின் நலன் கருதிப் பின் கண்டவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. குடிநீரைக் காய்ச்சி ஆற வைத்த பிறகே பருக வேண்டும்.

2. கூடிய மட்டும் சூடான உணவையே உண்ணுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உணவைச் சாப்பிடுவதாக இருந்தால், அதை மீண்டும் சூடாக்கி உண்ண வேண்டும்.

3. பள்ளிகளிலும், வீடுகளிலும் அவ்வப்போது போடப்படும் காலரா மற்றும் டைபாய்டு தடுப்பூசி வசதிகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாவட்டங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மற்றும் சென்னையிலுள்ள பொதுச் சுகாதார நிலையங்களிலும் தடுப்பூசி போட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

4. மக்களின் பாதுகாப்பைக் கருதி தண்ணீர் வழங்கும் நிலையங்களுக்கு குளோரினேஷன் செய்வதற்காக வரும்போது சுகாதாரப் பணியாளர்களுக்குப் பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். குளோரினேஷனால் உண்டாகும் விரும்பத்தகாத வாசனையைக் கருதி, குளோரினேஷனைத் தடை செய்யக் கூடாது.

● நான் தமிழினிடத்து அன்பு வைத்திருக்கிறேன் என்றால், அதன் மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையையும், அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பு ஏற்படும் அளவையும் உத்தேசித்தே நான் தமிழினிடத்து அன்பு செலுத்துகிறேன்.

-தந்தை பெரியார்

தாரத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்க்காணும் தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டிருக்கிறது.

1. பாதிக்கப்பட்ட இடங்களில் காலரா மற்றும் டைபாய்டு தடுப்பூசி வெளியிடங்களில் போடுவதற்கான வசதிகள் செய்தல்.

2. தெருக்களில் உள்ள குப்பைகளை அவ்வப்போது எடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. எல்லாத் தண்ணீர் வழங்கும் நிலையங்களிலும் குளோரினேஷன் செய்வதற்கான நடவடிக்கைகள்.

4. உணவு விடுதிகள் மற்றும் டீ கடைகளில் ஈக்கள் மொய்க்காத நல்ல தரமான பொருட்கள் துப்புரவான முறையில் தரப்படுகின்றனவா என்பதைச் சென்று பார்த்து ஆய்வு செய்தல். மற்றும் உணவு விடுதிகளில் காய்ச்சப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளல்.

- இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. ●

**சென்னையில் ...**

# சிறுநீரக இயல் துறை மாநாடு

இந்திய சிறுநீரக இயல்துறைக் கழகம் 1970-ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறது. இந்தியாவிலுள்ள அனைத்துச் சிறுநீரக இயல் துறை நிபுணர்களும் சிறப்புப் பயிற்சியாளர்களும் இதன் அங்கத்தினர்கள். தவிர, சில அயல்நாட்டு நிபுணர்களும் கூட இதன் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றனர்.

இக்கழகத்தின் 22-வது ஆண்டு மாநாடு சென்னையில் நவம்பர் மாதம் 22-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் திரு. கே.இன்பசாகரன், இ.ஆ.ப., அவர்கள் 22.11.1991 அன்று குத்து விளக்கேற்றி மாநாட்டினைத் துவக்கி வைத்தார். மாநாட்டிற்குத் தலைமையேற்று அவர் பேசுகையில் 'தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாதம் (போலியோ) நோய் பற்றி மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு 100 சதவிகிதம் வெற்றி அடைந்து, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. அது போலச் சிறுநீரகக் கோளாறுகள் பற்றியும் ஓரளவு தெரிந்துவைத்திருக்கிறார்கள். இதன் அறிகுறிகள் குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும். இதற்குச் சிறுநீரகச் சிகிச்சை நிபுணர்களின் ஒத்துழைப்புத் தேவை. மக்களுக்குச் சுகாதாரக் கல்வி அளிப்பது மிகவும் இன்றியமையாதது. சுகாதாரக் கல்வியின் மூலம்தான் நாம் 'கி.பி. 2000-ஆம் ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரம்' என்ற நிலையை அடைய முடியும்' என்றார்.

பிரபல நரம்பியல் நிபுணர் பேராசிரியர் டாக்டர் பி. இராமமூர்த்தி அவர்கள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் 'தற்போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு நெருங்கிய உறவினர்களின் சிறுநீரகம் மட்டுமே அரசு மருத்துவமனைகளில் பொருத்தப்படுகிறது. இதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆனால், இந்தியாவில், சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குத் தற்போது சிறுநீரகம் தேவைப்படுகிறது. இவர்கள் எல்லோருக்கும் உறவினர்களின் சிறுநீரகம் கிடைப்பது கடினம். எனவே, உறவினர் அல்லாதவர்களின் சிறுநீரகத்தைப் பயன்படுத்துவது பற்றி இம்மாநாட்டில் நிபுணர்கள் விவாதிக்க வேண்டும்.

### சட்டத் திருத்தம்

இறந்தவர்களின் உடலிலிருந்து சிறுநீரகத்தை எடுத்து, தேவையானவர்களுக்குப் பொருத்த நடப்பு மக்களவைக் கூட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. சட்டத் திருத்தம் கொண்டுவந்தால் மட்டுமே போதாது. அதை மாநில அரசுகளும் அமல்படுத்தச் சிறுநீரக இயல்துறை நிபுணர்கள் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துச் செயல்பட வேண்டும்..

அதுமட்டுமின்றிச் செயற்கை இதயவால்வு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதைப் போல மின்னணுவினால் இயங்கக்கூடிய சிறிய அளவிலான செயற்கைச் சிறுநீரகத்தைக் கண்டு பிடிக்கச் சிறுநீரக நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும்'. என்று கேட்டுக் கொண்டார்.







● மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு மத்திய விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் (9.11.91) சென்னையில் சந்தித்தார்.

முன்னதாக, மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரியின் சிறுநீரக இயல்துறைப் பேராசிரியரும் இம்மாநாட்டின் அமைப்புச் செயலாளருமான டாக்டர் ஜே.சி.எம். சாஸ்திரி அவர்கள் வரவேற்றுப் பேசினார். டாக்டர் சி.கே. ஜேகப் நன்றியுரை ஆற்றினார்.

மாநாட்டில் பிரபல ரஷியச் சிறுநீரக இயல்துறை நிபுணர் டாக்டர் மாயா இக்னதோவா, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனையின் சிறுநீரக இயல்துறை தலைமைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி உட்பட இந்திய, வெளிநாட்டு நிபுணர்கள் சுமார் 137 பேர் கலந்து கொண்டனர்., இம்மாநாட்டில் சிறுநீரக இயல் சார்ந்த சுமார் 70-க்கும் மேற்பட்ட பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத்தரங்கங்கள் மற்றும் நவீன முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

### சிறுநீரக இயலில் சென்னை அரசு பொது மருத்துவமனையின் சாதனை:

சென்னை அரசு பொது மருத்துவமனையின் சிறுநீரக இயல்துறையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை 1987-ஆம் ஆண்டு முதல், முறையாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே இலவசமாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் ஒரே அரசு மருத்துவமனை சென்னை அரசு பொது மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு, அறுவைச் சிகிச்சைக்கு முன்பு நோயாளியைக் கவனித்தல், டயாலிசிஸ், அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் நோயாளிக்கு வழங்கப்படும் மருந்துகள் உட்பட அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு இங்கு உறவினர்களின் சிறுநீரகமே பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் மற்ற மருத்துவமனைகளுடன் ஒப்பிடும்போது இங்கு நடைபெறும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை முழு வெற்றியை அடைந்திருப்பதாக இந்தத் துறையின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி குறிப்பிட்டார்.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையின் சிறுநீரக இயல் துறை, இதுவரை 171 சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துள்ளது. தமிழ்நாடு தவிர அண்டை மாநிலங்கள், மேற்கு வங்காளம், அந்தமான் தீவுகள் போன்ற தொலை தூர இடங்களிலிருந்தும் இங்கு வந்து சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். இது தவிர, அண்டை நாடுகளான இலங்கை, நேபாளம் போன்ற நாடுகளிலிருந்தும் வந்த நோயாளிகளுக்கு இங்கு வெற்றிகரமாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தத் துறையில் தற்சமயம் வாரத்திற்கு ஆறு மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. சிறுநீரகக் கோளாறினால் இங்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே, இந்த அறுவைச் சிகிச்சையை வாரத்திற்கு எட்டாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு ஆண்டிற்குச் சுமார் 9,000 புற நோயாளிகளும், 2,000 நோயாளிகள் மருத்துவமனையில் தங்கியும் சிகிச்சை பெறுகிறார்கள். இங்கு அறுவைச் சிகிச்சை பெற்ற அனைத்து நோயாளிகளின் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவது மகிழ்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.



# காவேரி

## மத்திய அரசின் அறிக்கை

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக் குறித்து நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை மத்திய அரசு தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:-

'தமிழ்நாட்டிற்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையே காவிரித் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதுபற்றி எழுந்துள்ள பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பை, மத்திய அரசு நிச்சயம் அமல்படுத்தும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

'காவிரித் தகராறு பற்றிய வழக்கில் உச்ச நீதிமன்றம் 2 அம்சங்களை மிகத் தெளிவாகத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

முதலாவதாக- தன்னிச்சையாகப் புதிதாக அவசரச் சட்டம் பிறப்பித்துக் கொள்ள கர்நாடக மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் அரசியல் சட்டப்படி இல்லை. எனவே, கர்நாடக மாநில ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது.

இரண்டாவதாக, உச்ச நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட டிரிபியூனல் அமைப்பிடம், இடைக்கால உத்தரவு வழங்க வேண்டும் என்று பரிசீலிக்கப்பட்ட அல்லது வழக்கில் உள்ள ஏதாவது ஒரு மாநிலம் கேட்டுக் கொள்ளும்போது, அது பற்றி விசாரித்து இடைக்காலத் தீர்ப்பு வழங்க டிரிபியூனலுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இதற்கு 1956-ஆம் ஆண்டு தண்ணீர்த் தகராறு சட்டம் பிரிவு 5 உட்பிரிவு 2-இன் படி அரசியல் சட்டத்தின் மூலம் அதிகாரம் உள்ளது.

மேற்கண்ட இரு அம்சங்களும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் மிக முக்கியமானவை.





# மதுவினால் அழிந்த சாம்ராஜ்யம்

எம்.ஏ. வேங்கடகிருஷ்ணன்



எத்தனையோ சாம்ராஜ்யங்களைக் குடிப்பழக்கம் அழித்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், கிருஷ்ண பரமாத்மாவின் குலமே குடிப்பழக்கத்தால்தான் அழிந்தது என்பது ஓர் ஆச்சரியமான செய்தி.

ஒரு சமயம் துவாரகையில் ஏதோ ஒரு விழா. அப்போது அவ்வூரிலிருந்தவர்கள் பலர் குடித்துவிட்டுத் தன்னிலை மறந்திருந்தனர். அப்போது விஸ்வாமித்ரர், கண்வர், நாரதர் ஆகிய மூவரும் துவாரகைக்கு வந்தனர். குடிபோதையிலிருந்த வீரர்கள் சிலர், ஸாம்பன் என்பவனுக்குக் கர்ப்பிணிப்பெண் வேடமிட்டு, அம்முனிவர்கள் முன்னால் அழைத்துச் சென்றனர். 'முனிவர்களே! இவனுக்கு என்ன குழந்தை பிறக்கும்?' என்று வினவினர். உண்மையை உணர்ந்தவர்களான முனிவர்கள் 'இவனுக்கு ஓர் உலக்கை தான் பிறக்கும். 'குடிபோதையால் மதிமயங்கிக் கிடக்கும் உங்கள் குலத்தவர்கள் அனைவரும் அந்த உலக்கையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாகப் போகிறீர்கள்; அதனால் உங்கள் விருஷ்ணி குலமே நாசமாகப் போகிறது' என்று சாபம் அளித்துவிட்டனர். கண்ணபிரானுடைய குலம் விருஷ்ணி குலம். அதைப்போலவே ஸாம்பனுக்கு ஓர் உலக்கை பிறந்தது!

இச்செய்தி அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அரசன் 'இன்று முதல் யாரும் கள்ளையோ, சாராயத்தையோ குடிக்கக் கூடாது; அப்படி யாராவது குடித்ததாகத் தெரிந்தால் குடும்பத்துடன் அவர்கள் கழுவில் ஏற்றப்படுவார்கள்' என்று முரசு அறைவித்தான். ஸாம்பன் பெற்ற இரும்பு உலக்கையைப் பொடிப் பொடியாக்கிக் கடலில் கரைத்துவிடுமாறும் செய்தான்.

மகாபாரத யுத்தம் முடிந்து 36 வருடங்கள் கழிந்தன. விருஷ்ணி குலத்தவர்கள் அனைவரும் ஒரு விழாவுக்காகப் பிரபாஸக்ஷேத்ரம் சென்றனர். அங்கு ஒரே பார்ட்டும் கூத்தும் கும்மாளமுமாக இருந்தனர். நன்றாகக் குடித்தும் விட்டனர். அப்போது ஒருவரோடொருவர் பேசும்போது வார்த்தைகள் தடித்துச் சண்டை மூண்டுவிட்டது. கடற்கரையில் வளர்ந்திருந்த கோரைப் புற்களைப் பிடுங்கி ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளத் தொடங்கினர். அங்கேதான் முனிவருடைய சாபம் பலிக்கத் தொடங்கியது.

கடலில் கரைக்கப்பட்ட உலக்கைத் தூள்தான் கோரைப் புற்களாக வளர்ந்திருந்தது. அவை பிடுங்கப்பட்டபோது, உலக்கைகளாகவே மாறிவிட்டன. குடிபோதையில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு அனைவருமே இறந்து விட்டனர். இதைக் கண்ணனாலும் தடுக்க முடியவில்லை!

உலக்கையைப் பொடி செய்து கடலில் கரைத்தபோது, ஒரு சிறு துண்டு இரும்பு மட்டும் மீதமிருந்தது. அதையும் கடலில் எறிந்துவிட்டனர். அதை ஒரு மீன் விழுங்கியது. அந்த மீன் ஒரு வேடன் கையில் கிடைத்தது. மீனை (உணவுக்காக) அறுத்த வேடன் அந்தக் கூரான இரும்புத் துண்டைத் தன் அம்பின் முனையில் பொருத்திக் கொண்டான். கண்ணபிரான் ஒருநாள் ஒரு மரத்தடியில் சயனித்திருந்தபோது தூரத்திலிருந்து அதைப் பார்த்த வேடன், ஒரு மிருகம் என்று எண்ணி கண்ணன் கால்மீது விஷம் தோய்ந்த அம்பை எய்ய, அது காரணமாகவே கண்ணன் உயிர் பிரிந்தது. ஆக, கண்ணனையும் முனிவர் சாபம் விட்டுவைக்கவில்லை.

இப்படியாகக் குடிப்பழக்கத்தினால் ஒரு குலமே - அதுவும் கண்ணபிரானின் குலமே அழிந்தது என்கிற செய்திகள் மகாபாரதத்தின் கடைசியில் (மௌஸல பர்வத்தில்) உள்ளன.

- நன்றி: ஆனந்த விகடன்.





# 'நீலகிரி மாவட்டத்தில் காடுகள் வளர்ப்புத் திட்டம்!

தமிழ்நாட்டில் இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதிகளால் அமைந்தது நீலகிரி மாவட்டம். இம் மாவட்டத்தில் பாய்ந்தோடும் நீரோடைகளும், வானளாவிய மரங்களும், பசுமைமாறா புல்வெளிகளும், கவின்மிகு சோலைகளும், சுவைமிகு பழமரங்களும் மூலிகைச் செடிகளும், காப்பி, தேயிலைத் தோட்டங்களும் வாசனைத் திரவியங்களும், சந்தனம், தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்களும், துள்ளியோடும் மான்களும், பிளிரும் களிறுகளும், அகவும் மயில்கள் உட்பட பல்வகை உயிரினங்களும் பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை பூத்துக்குலுங்கும் குறிஞ்சி மலர்களும், பல்வகை மணம் வீசும் மலர்களும் மலர்ந்து அழகுக்கு அழகூட்டுவனவாய் கவின் மிகு வனப்பகுதிகளைக் காணலாம்.

இயற்கைத்தாய் நமக்களித்த வரப்பிரசாதம் வனப்பகுதிகளாகும். வனம் இல்லையேல் மரங்கள் இல்லை. மரங்கள் இல்லையேல் மழையில்லை. மழையில்லையேல் நீரில்லை; நீரின்றி அமையாது உலகு. ஆனால் மனிதன் இயற்கையை அழித்து தன்னையே அழித்துக் கொள்கிறான். மரங்களை வெட்டி-விலங்குகளை வேட்டையாடி காட்டை அழிக்க முற்படுகிறான். இதனால் நம் நாட்டின் வனப்பகுதி நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு அரசு வனங்களைப் பாதுகாக்கப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்நடவடிக்கைகளில் ஒன்றுதான் காடு வளர்ப்புத் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் இப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இப்பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வனத்துறையினர் ஆங்காங்கு மரக்கன்றுகள் நடுதல், புல்வெளிகள் அமைத்து மரக்கன்றுகளை விலங்குகள் அழிக்காமல் இருக்கப் பாதுகாப்பு வேலிகள் போடுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர்.

மக்கள் செல்லக்கூடிய பகுதிகளில் இதுபோன்ற பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மக்கள் செல்ல முடியாத வனப்பகுதிகளிலும் மரங்களை வளர்க்க அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதன் பலனே விமானத்தின் மூலம் விதை தூவும் பணியாகும்.

நீலகிரி வடக்கு வனக்கோட்ட மலைப்பகுதியில் ரூ.13 இலட்சம் செலவில் தற்போது விமானம் மூலம் விதைகள் 2,000 எக்டேரில் துவப்பட்டது.

நீலகிரி வடக்கு வனக்கோட்டத்தில், இவ்வாண்டு விமானம் மூலம் விதை தூவும் பணிக்காகப் பால் தட்டி பட்டி-மங்கலப்பட்டி- மாசி கோயில்- அரக்கடவுப்பட்டி-கூட்டுறவுப்பட்டி மற்றும் டவர் லைன் ஆகிய சரகங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை தெங்குமரா ஹாடா-மாயார் ஆற்று ஓரப்பகுதியாகும்.

நீலகிரி கிழக்குச் சரிவுக் காடுகள் வரை செல்லும் மேற்கண்ட பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் ஆட்கள் சென்று மரக்கன்றுகள் நடுவதரிது. எனவே, இவ்விடங்களில் விமானம் மூலம் விதை தூவி இயற்கை வளத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ விதை தூவுதற்கு முன்னதாக இப்பகுதிகளில் தனி முயற்சி எடுத்து- தடுப்பு அணை கட்டுதல் நீளக்கால் வாய்கள் வெட்டுதல் போன்ற மண்ணரிப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன. விமானம் மூலம் தூவும் விதைகள் நல்லமுறையில் விரைவில் முளைக்க நிலம் தகுந்தவாறு கொத்தி தயார் செய்யப்பட்டுள்ளது. 14 வகை விதைகள் தூவப்பட்டன. தேக்கு, வாகை, புளி, எலந்தை, சந்தனம், வேம்பு, மூங்கில் உட்பட சுமார் 50 கோடி விதைகள் தூவப்பட்டன.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்து வருவதால் இந்த விதைகள் அனைத்தும் நன்றாக முளைக்கும் என்ற நிலையுள்ளது. மேலும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடமாக இருப்பதால் தூவும் விதைகள் அழிவு இல்லாமல் முளைத்து விரைவில் மரம் ஆகும். நல்ல மழை பெய்யும். இதனால் நீர் மட்டம் உயரும். வன உயிரினங்களும் பெருகும். சுற்றுப்புறச்சூழல் தூய்மை அடையும். வனவளம் பெருகும். அதனால் நாட்டு வளமும் பெருகும்.

விமானம் மூலம் விதை தூவும் நிகழ்ச்சியை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனாநாயர், இ.ஆ.ப., அவர்கள் அண்மையில் துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. பி.மகேந்திரன், மாவட்ட வன அலுவலர் (வடக்கு) திரு. வி. நாகராஜன், மாவட்ட வன அலுவலர் (தெற்கு) திரு. கிருஷ்ண குமார், கூலூர் கோட்ட அலுவலர் திரு. பிரபாகரன், நீலகிரி மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநர் டாக்டர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மூ.நா. கிருஷ்ணமூர்த்தி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**நீலகிரி மாவட்டம்**



# காலம் போற்றி வாழ்க!

**சீனி. விஜயராணி**



காலம் போற்றி வாழ்க;-நாளும்
கடமை யாற்றி வளர்க!
ஞாலம் மெச்சும் வெற்றி;-தானே
நாடும் உன்னைச் சுற்றி!

நாளை நாளை என்று,-மெல்ல
நகர்த்திக் காலம் தள்ளி
வேளை வரட்டும் என்போர்;-அவரே
வெட்டிச் சோறு தின்போர்!

அற்ப மான நொடிகள்;-உனக்கே
ஆகும் வெற்றிப் படிகள்!
அற்பு தங்கள் நிகழும்;-உன்னை
அவனி போற்றிப் புகழும்!

கல்விக் கேற்ற இளமை;-அதுவே
கலையில் தேக்கும் வளமை!
நல்ல பணிகள் நாடி - செய்க
நல்கும் நன்மை கோடி!

இமைக்கும் தாம தத்தில்-சரியும்
இயங்கும் கோள்கள் மொத்தம்!
அமைக்கும் உனது பணியை;-கூட
அந்தக் கதியில் கணிப்பாய்!





## உலக மொழிகளில் திருக்குறள்

வான் புகழ் வள்ளுவன் இயற்றிய திருக்குறளை உலகமே போற்றி வருகின்றது. அது உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 10 மொழிகளில் குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதேபோல, ஆசிய மொழிகளில் 5, ஐரோப்பிய மொழிகளில் 11 என்று பட்டியல் போட்டுக் கொண்டே செல்லலாம். ஆங்கிலத்தில் மட்டும் 36 மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.



# அறிவுச் சுடர்

1. யுரேஷியாவில் அடங்கியுள்ள நாடுகள் (கண்டங்கள்) எவை?

2. ஆந்திரத்தில் அமைந்துள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் எங்கு உள்ளது?

3. இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள இயற்கைத் துறை முகங்கள் எத்தனை? அவையாவை?

4. உலகில் ஆழமான ஏரி எது?

5. சீக்கியர்களின் புனித நூல் எது? புனிதத் தலம் எது?

6. இந்தியாவின் மிகப் பெரிய உரத் தொழிற்சாலை எது?

7. எந்த நாட்டில் கிரிக்கெட் தேசிய விளையாட்டு?

8. கயானா (டச்சு) புதிய பெயர் எது?

9. "மூவருலா" என்னும் நூலை எழுதியவர் யார்?

10. இரத்தச் சிவப்பணுக்களைப் பற்றி ஆய்வில் பயன்படும் ஐசோடோப்பு எது?

**விடைகள்**

1. யுரோப் (ஐரோப்பா), ஏஷியா (ஆசியா)
2. ஸ்ரீஹரிகோட்டா
3. ஐந்து.
   (i) கண்டலா
   (ii) பம்பாய்
   (iii) மர்மகோவா
   (iv) மங்களூர்
   (v) கொச்சி
4. பைகால்
5. (I) ஆதிகிரகந்தம்
   (II) அமிர்தசரஸ்
6. சிந்தரி (பீஹார்)
7. ஆஸ்திரேலியா
8. சூரினாம்
9. ஒட்டக்கூத்தர்
10. ரேடியோ சோடியம்

ஜெ. நாராயணன்,
IX - D அரசினர் மேல்நிலைப் பள்
வாலாசாப்பேட்டை
(வ.ஆ.அ.மா)- 632513



## குமரிமாவட்டம்:

# அத்தியாவசியத் தேவைகளுக்கும் கடன் வசதி

**வி**வசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பனைக்கூடங்களில் உள்ள ஊரகத் திட்டங்களில் இருப்பு வைத்துக்கொண்டு, அத்தியாவசியத் தேவைகளுக்குக் கடன் பெறும் வசதிகளைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி விற்பனைக்குழு, தனது கட்டுப்பாட்டில் உள்ள வடசேரி, திங்கள்சந்தை, தொடுவெட்டி, குலசேகரம் மற்றும் களியக்காவிளை ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இந்த ஈட்டுக்கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

அறுவடைக்காலங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய நேரிடுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு ஈட்டுக்கடன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சரக்குகளை இருப்பு வைக்க, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஊரகத் திட்டங்கள் விஞ்ஞானமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே இருப்பு வைக்கப்படும் சரக்குகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

சரக்கின் மதிப்பில் 50 சதவிகிதம் வரை ஈட்டுகடன் வழங்கப்படுகிறது. முதல் 30 நாட்களுக்கு வட்டி இல்லை. அடுத்துள்ள நாட்களுக்கு 12 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதிகபட்சம் ரூ.10,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

இதனை உழவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு விளக்கக் கூட்டங்களை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் ஆளுகைக்கு உட்பட்ட புத்தேரி கிராமத்தில் அரசு பள்ளியில் 22.10.91-இல் விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு உழவர்மன்ற அமைப்பாளர் திரு. ப.சரவணப் பெருமாள் அவர்கள் தலைமை வகித்தார். திரு. சி.நடேசன், வேளாண்மை அலுவலர் தரம் பிரிப்பு மையம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ஹெச்.எம். அப்துல்கரீம், செயலாளர் கன்னியாகுமரி விற்பனைக்குழு, திரு. ஆர்.பொன்னம்பலம், பிரச்சாரக்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி விற்பனைக்குழு, திரு. க. தருமர், கண்காணிப்பாளர் தொடுவட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியோர் ஈட்டுக்கடன் குறித்து விளக்கஉரை ஆற்றினார்கள். திரு. பிள்ளையார் பிள்ளை, திரு. அம்பலவாணபிள்ளை ஆகியோர் ஈட்டுக்கடன் பெறுவதில் உள்ள தங்கள் அனுபவங்களை எடுத்துரைத்தார்கள். திரு. ஆர்.நயினார் அய்யாவு, கண்காணிப்பாளர் வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பாடு குறித்து உழவர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களுக்குத் தெளிவுரை வழங்கி நன்றி கூறினார்கள்.

—எச்.எம். அப்துல்கரீம்
செயலாளர்
கன்னியாகுமரி விற்பனைக்குழு
நாகர்கோவில்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927





## காவிரி நதிநீர்ப் பங்கீடு: பிரதமருக்கு முதல்வர் நன்றி

காவிரி நீர்ப் பங்கீடு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டதற்காக, பிரதமர் மாண்புமிகு திரு. பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நன்றி தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 11.12.'91 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், ''காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றியதற்காக தமிழக மக்களின் சார்பில், அதிலும் குறிப்பாக காவிரிப் பாசனப் பகுதி விவசாயிகள் சார்பில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு என்னுடைய ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பிரதமர் அவர்கள் தமிழகத்துக்கு நீதி வழங்கியுள்ளார். தமிழக மக்களின் உயிர்நாடியான பிரச்சினையான காவிரி எப்போதும் உயிரோட்டமுள்ளதாகவும், தமிழக மக்களின் வாழ்க்கைக்குத் தொடர்ந்து ஆதரவாக இருக்கும் என்றும் உறுதிப்படுத்தியதற்காக, தமிழக மக்கள் பிரதமருக்கு எப்போதும் நன்றியுடைய வர்களாக இருப்பார்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்த இதழில்...


அனைத்துக் கட்சிக் குழுவினருடன் முதல்வர் டெல்லி பயணம் ... 2

காவல் துறையை நவீனமாக்குவோம்! காலத்துக்கேற்ற திறன்களை வளர்ப்போம்! -மாண்புமிகு முதல்வர் உரை ... 4

ஐந்து ஆண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும்! —மாண்புமிகு முதல்வர் ... 10

தொழுநோய் - சமுதாயத்தின் கண்ணோட்டம் மாற வேண்டும் ... 17

வெற்றிலையின் ரகசியம் ... 18

கோழி முட்டையின் பிற பயன்கள் ... 19

மரம் வளர்ப்போம்! (கவிதை) ... 24

ஞானம் (இலக்கியக் கட்டுரை) ... 25

இரத்தக் கொதிப்பு ... 27

தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் ... 31

படைவீரர் புகழ்பாடும் கொடிநாள் —மாண்புமிகு முதல்வர் உரை ... 3..

கல்லும் சொல்லாதோ கதை! ... 36

முக்கிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்க முதல்வர் நடவடிக்கை ... 41

படமும் செய்தியும் ... 42

முன்னாள் படைவீரர் நலத்துறையின் முனைப்பான பணிகள் ... 45



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மார்கழித் திங்கள் - 1

மலர்:22 இதழ்:12

16-12-1991




காவிரிப் பிரச்சினை

# நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக் கோரி அனைத்துக் கட்சிக் குழுவினருடன் முதல்வர் டெல்லி பயணம்

**கா**விரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை, மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களின் வாதங்களைக் கேட்டறிந்த பின்னர் தனது கருத்துக்களை 22.11.1991 அன்று தெரிவித்தது.

கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை குறித்து விவாதிக்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அதில் மாநில அரசு தலையிட முடியாது. எனவே, கர்நாடக அரசு அவசரச் சட்டம் மூலம் இதைத் தடுக்க முடியாது. அரசியல் சட்டத்திலும் இதற்கு இடமில்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். அதோடு நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் உரிமை உண்டு. எனவே, கர்நாடகம் தமிழ்நாட்டுக்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிடலாம் என நீதிபதிகள் தங்கள் கருத்தினைக் கூறியுள்ளனர்.

காவிரி நதி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக நடுவர் மன்றம் அளித்த தீர்ப்பினை அரசிதழில் வெளியிடக் கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களைச் சந்தித்து வற்புறுத்த, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுடன் 2.12.1991 அன்று மாலை விமானம் மூலம் சென்னையிலிருந்து புறப்பட்டு டெல்லி சென்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், திரு. மணிவர்மா, திரு. வி. தண்டாயுதபாணி (இந்திய தேசிய காங்கிரஸ்), திரு. ஜி. வெங்கடராமன், எம்.பி., திரு. ஜே.எஸ். ராஜூ, எம்.பி.(தி.மு.க.), திரு. வி. விஜயராகவலு (பாரதிய ஜனதா கட்சி), திரு. நல்லக்கண்ணு (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி), திரு. தஞ்சை ராமமூர்த்தி (ஜனதா தளம்), திரு. பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன், எம்.எல்.ஏ (பாட்டாளி மக்கள் கட்சி), திரு. ஜி.ஜி. குருமூர்த்தி (ஜனதா தளம் - சமாஜ்வாடி), திரு. ஆண்டித் தேவர், எம்.எல்.ஏ. (பார்வர்ட் பிளாக்), திரு. என்.எல். பழனிசாமி, எம்.எல்.ஏ. (உழைப்பாளர் கட்சி), திரு. செ.கு. தமிழரசன், எம்.எல்.ஏ. (குடியரசுக் கட்சி), திரு. கே. வீரமணி (திராவிடர் கழகம்), திரு. அப்துல் சமது (முஸ்லீம் லீக்), திரு. அப்துல் லத்தீப் (முஸ்லீம் லீக்-லத்தீப் பிரிவு), திரு. எஸ். ரங்கநாதன் (காவிரிப் படுகை உழவர் சங்கச் செயலாளர்), திரு. சி. வையாபுரி (தலைவர், ஐக்கிய உழவர் சங்கம்) தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மாண்புமிகு பிரதமர் அவர்களை 3.12.91 அன்று டெல்லியில் சந்தித்தனர். அப்பொழுது மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. ப. சிதம்பரம், திரு. எம். அருணாசலம், திரு. பி. ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் உடனிருந்தனர்.

அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம், காவிரி நதி நீர்ப் பங்கீடு பற்றிய, நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை, அரசிதழில் உடனடியாக வெளியிடக் கோரி மனுவினை அளித்தனர். மிகவும் சுமூகமான சூழ்நிலையில் சுமார் அரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது. தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இம்மனுவைத் தாம் அளிப்





பதாகவும், நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவினை உடனடியாக அரசிதழில் வெளியிட வேண்டுமெனவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும் வலியுறுத்திப் பேசினர். அனைவரது கருத்துக்களையும் அமைதியாகக் கேட்ட மாண்புமிகு பிரதமர் அவர்கள் உச்ச நீதிமன்றக் கருத்துக்களை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதாகவும், தமிழக முதல்வர் அவர்கள் கொடுத்த மனு உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்றும் உறுதி கூறினார்.

அதையடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு பிரதமருடன் தனியாக, தமிழகத்தைப் பற்றிய முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாத்தார். குறிப்பாக பொது வினியோகத்திற்குக் கூடுதலாக ஒரு இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, தமிழகத்தின் நெருக்கடியான நிதி நிலையைச் சமாளிக்க சிறப்பு நிதி உதவி, உடனடி புயல் நிவாரண நிதி ஆகியவைகளைக் கோரினார். மேலும், சென்னைத் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றவும், எண்ணூரில் துணைத் துறைமுகத்தை உடனடியாக நிறுவிடவும், அரோமேடிக் திட்டத்திற்கு உடனடி அனுமதி வழங்கவும், தெலுங்கு-கங்கைத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றிடவும் பிரதமரின் உதவியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டு உடனடியாகக் கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.





காவல் துறை திறன் போட்டி

# காவல் துறையை நவீனமாக்குவோம்!

# காலத்துக்கேற்ற திறன்களை வளர்ப்போம்!

## மாண்புமிகு முதல்வர் உரை

**ப**ல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை புரிந்து போட்டிகளில் கலந்து கொண்ட 1,800-க்கும் மேற்பட்ட காவல் துறையினருக்கும், சென்னையில் மூன்றாவது முறையாக நடைபெறுவதும், 1974-ஆம் ஆண்டுக்குப்பின் தற்போதுதான் நடைபெறுவதுமாகிய இவ்விழாவினைச் சிறப்பாக நடத்திட அயராது பாடுபட்ட அனைத்துக் காவல் துறை அலுவலர்களுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு முழுவதிலுமுள்ள காவல் துறையினர் தங்களது திறமைகளைப் போட்டி போட்டுக் கொண்டு இங்கு கடந்த சில நாட்களாக வெளிப்படுத்தியுள்ளனர். காவல் துறையினைச் சிறந்த முறையில் நிர்வகிக்க இன்றியமையாத அம்சங்களான துப்பறிவதில் உதவும் சாதனங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், தடயவியல் விஞ்ஞானம், துப்பாக்கிச் சுடுதல், முதலுதவி போன்றவற்றில் காவல் துறையினருக்கு உள்ள மிகச்சிறந்த திறமைகளைக் காணுகின்ற வாய்ப்பு பொது மக்களுக்கும் கிடைத்தது என நான் அறிந்தேன்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களை நான் வாழ்த்துகிறேன். இம்முறை வெற்றி பெறாதவர்கள், தங்கள் திறமைகளை நன்கு வளர்த்துக் கொண்டு அடுத்தமுறை வெற்றிபெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். போட்டிகளில் வெற்றி பெறுவது முக்கியம்தான். ஆனால், இப்போட்டிகளில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவதும், அதன் மூலம் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதும், அந்தத் திறமைகளைச் சமுதாயத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துவதும்தான் மிகவும் முக்கியம்.

புகழ்மிக்க 'யுலிசிஸ்' (Ulysses) கவிதையில் டென்னிசன் எழுதிய 'முயற்சி செய்ய, தேட, கண்டு பிடிக்க, தளர்ந்துவிடாமல் இருக்க' எனும் வரிகளை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். உலகில் பெரிய சாதனைகளைச் சாதித்த பலரும், தம் இளம் வயதில் அச்சாதனைகளைப் பற்றிக் கனவுகூடக் காணாமல், தம் விடாமுயற்சியால், எடுத்த காரியத்தை



# அனைத்திந்தியக் காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்க்கு முதல்வர் விருந்து



35-வது அனைத்திந்திய காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 9.12.'91 அன்று கோவளத்தில் விருந்தளித்தார். அப்போது நாட்டிய நிகழ்ச்சி நடத்திய ராஜா ரெட்டி, ராதா ரெட்டி ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

4.12.91 முதல் 10.12.91 வரை சென்னையில் நடைபெற்ற 35-வது அகில இந்தியக் காவல் துறையினர் திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் 9.12.91 அன்று சென்னை அருகே கோவளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருந்து கொடுத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா, துணைத் தலைவர் பேராசிரியர் கா. பொன்னுசாமி, அரசு கொறடா க.பா. பட்டாபிராமன் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

விழாவில் ராஜாரெட்டி, ராதாரெட்டி ஆகியோரின் குச்சுப்புடி நாட்டியம் நடைபெற்றது.

அந்தக் கலை நிகழ்ச்சிக்குப்பின் அனைத்து மாநிலங்களில் இருந்து சென்னையில் நடந்த திறனாய்வுப் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கும், தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறை உயர் அலுவலர்கள், வெளி மாநிலக் காவல் துறை உயர் அலுவலர்கள் ஆகியோருக்கும் நினைவுப் பரிசுகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தம் சொந்தச் செலவில் வழங்கினார்.

முடிக்கும் மனத்திட்பம், அதற்காகவே தன்னை அர்ப்பணித்தல் போன்ற உயர்ந்த பண்புகளால் சாதித்துள்ளனர். காவல் துறையினரின் இதுபோன்ற விழாக்கள் அவர்களது திறமைகளை வளர்க்கவும், அறிவினைப் பெருக்கிக் கொள்ளவும் அவர்களது தகுதி நிலைகளை உயர்த்திக் கொள்ளவும் உதவும் என நம்புகிறேன்.

கடந்த சிலபல ஆண்டுகளில் காவல் துறையினரின் கடமைகளிலும் பொறுப்புகளிலும் பெருத்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களது முன்னோர்களுக்குத் தெரியாத பல புதிய கடினமான சோதனைகளை அவர்கள் சந்திக்க வேண்டி உள்ளது. சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்கள், தொலைத் தொடர்பு, போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களினால் மற்ற நாட்டினருடன் ஏற்பட்டுள்ள நெருங்கிய தொடர்பு, வளர்ந்து வரும் மக்களின் எதிர்பார்ப்பு, நவீனமயமாக்குதல் ஆகிய அனைத்தும் சேர்ந்து காவல் துறைனர், குற்றங்களைத் தடுப்பதையும், குறைப்பதையும் மிகவும் கடினமாகவும் சிக்கலாகவும் ஆக்குகின்றன. காவல் துறையினர் தங்களது முன்னோர்களின்

திறமையை மட்டும் வைத்துக் கொண்டு இப்போது எதையும் சாதிக்க முடியாது. மாறிவரும் காலத்தின் தேவைகளுக்கேற்ப இவர்களின் திறமைகளும், நுணுக்கங்களும், அறிவும், வசதிகளும் பெருக வேண்டும். பழங்காலத்து முறைகளும், சாதனங்களும் ஒத்துவராது. இந்தச் சூழ்நிலையில்தான் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகிறது.

குற்றங்களைக் கட்டுப்படுத்தத் தேவையான அதிநவீன புலன் விசாரணைக் கருவிகளையும் புதுமையான சாதனங்களையும் காவல் துறைக்கு வழங்க வேண்டியது மத்திய-மாநில அரசுகளின் பொறுப்பாகும். மனித சக்தியையும் பொருள் வசதிகளையும் ஒன்று சேர்த்து, திறமையுடன் உபயோகித்து, நாட்டில் அபாயத்தை உருவாக்கிட விழையும் சமூக விரோதச் சக்திகளை அடியோடு ஒழிக்கப் பாடுபட வேண்டியது காவல் துறையினரின் கடமையாகும்.

இந்தத் தேவைகளைத் தமிழக அரசு நன்கு உணர்ந்து, தமிழகக் காவல் துறையினருக்கு, புலனாய்வு, தகவல் தொடர்பு, போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றுக்கான நவீன கருவிகளை வழங்குவதில் முன்னணியில் நிற்கிறது. தகவல் தொடர்பு சாதனங்களில் தமிழகக் காவல் துறை நாட்டிலேயே முதல் இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டின் காவல் துறை வானொலிப் பிரிவு நாட்டிலேயே மிகச் சிறந்ததாகும். குற்றங்களைத் தடுப்பதிலும், குறைப்பதிலும் தமிழகக் காவல் துறை மின்னணுக் கருவிகளையும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்களின் முன்னேற்றங்களையும் தகவல் தொடர்பு சாதனங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்கிறது. ஆசியாக் கண்டத்திலேயே பழைமையான நிறுவனங்களில் ஒன்றும், நம் நாட்டின் மிகச் சிறந்த நிறுவனமுமான தடயவியல்துறையின் தமிழ்நாட்டுப் பிரிவிற்கு மிகச்சிறந்த வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டு உள்ளன. ஆயுதங்கள், தோட்டாக்கள், போக்குவரத்து, திறன்களை வளர்க்கும் பயிற்சி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் காவல் துறையை நவீனப் படுத்தி, காலத்திற்கு ஏற்றதாகச் செய்ய வேண்டிய தேவையை



அமெரிக்காவிலுள்ள கோல்கேட் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையைச் சார்ந்த 20 மாணவ, மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கொண்ட குழு மாண்புமிகு முதல்வர் அவர்களை, அவர்களது இல்லத்தில் சந்தித்தது (11.12.91).

மாநில அரசு செவ்வனே உணர்ந்திருக்கிறது. இவ்வகையில் தமிழகக் காவல் துறையினைப் பலப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில், இலங்கைத் தீவிரவாதிகளை ஒடுக்குவதிலும், நம் மாநிலத்தில் அவர்களுக்கிருந்த செல்வாக்கினை அழிப்பதிலும், மாநில மக்கள் மனதில் நம்பிக்கையை மீண்டும் நிலை நிறுத்தியதிலும், சட்டம் ஒழுங்கை நீதியுணர்வோடும், அழுத்தந்திருத்தமாகவும் நிலைநாட்டும் தகுதியிலும், தமிழகக் காவல் துறையினர் சாதித்த வெற்றியை நான் பாராட்டக் கடமைப்பட்டு உள்ளேன்.

எனினும், நம் பணி முடிந்து விடவில்லை. நம் திறமைகளை நாம் வளர்த்துக் கொள்ளாவிடில், சில சமூக விரோத சக்திகளின் காரணமாக, சட்டம், ஒழுங்கு பிரச்சினைகளும், குற்றங்களைத் தடுப்பது மிகவும் சிக்கலாகிவிடும். இது அனைத்து மாநிலப் பிரச்சினையாக விளங்கப் போகிறது. இதைச் சமாளிக்க நிறைய நிதி வசதி தேவை. ஆனால், பல மாநிலங்கள் தங்களது காவல் துறையை நவீனப் படுத்துவதற்குரிய நிதிவசதி இல்லாத நிலையில் உள்ளன. எனவே, நிதி நிலை தேவையுள்ள மாநிலங்களுக்கு, குறிப்பாக தீவிரவாதிகளாலும் பயங்கரவாதிகளாலும் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு, நிலைமையையுணர்ந்து நிதி உதவி அளிக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

தமிழக அரசு இது குறித்து மத்திய அரசை அணுகி உள்ளது. நமது கோரிக்கையை மத்திய அரசு சாதகமாகப் பரிசீலிக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு என்னை முக்கிய விருந்தாளியாக அழைத்தமைக்கு மீண்டுமொருமுறை என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலத்தில் நிறைய சவால்களை வெற்றிகரமாகச் சமாளித்த நம் காவல் துறை, மக்கள் நலன்களை உறுதியுடன் காப்போம் என்னும் நம்பிக்கையுடன் எதிர் காலத்தை நோக்கி நடைபோடும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியக் காவற்படை உலகிலேயே இணையற்ற காவற்படைபடைகளில் ஒன்றாகவும், இந்த நாடு நியாயமாகப் பெருமை கொள்ளத் தக்க நல்லதோர் படையாகவும் விளங்கும் என்னும் என் நம்பிக்கையைப் புலப்படுத்திக் கொண்டு, என் நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.





# அனைத்திந்தியக் காவல் துறையினர் செயல் திறன் போட்டி - 1991

35-வது அனைத்திந்தியக் காவல் துறையினர் செயல் திறன் போட்டி நிறைவு விழா 10.12.91 அன்று [illegible]லை சென்னை எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிகள் வழங்கினார்.

விழாவிற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை 4.30 மணிக்கு, எழும்பூர் இராஜரத்தினம் விளையாட்டரங்கத்திற்குள், குதிரைப்படை வீரர்கள் புடைசூழ்ந்து வரவேற்க வருகை தந்தார். காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள், முதல்வர் அவர்களுக்கு மற்ற அலுவலர்[illegible]ள அறிமுகம் செய்துவைத்தார்.

பின்னர், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த காவல் துறையினரின் அணி வகுப்பு நடைபெற்றது. அணி வகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

திரு. எஸ்.சி. மேத்தா (தனி ஐ.ஜி.-ஐ.பி.) அவர்கள் வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தமிழகக் காவல் துறை அலுவலர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாடு காவல் துறை சார்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, நினைவுப் பரிசு ஒன்றைத் தமிழகக் காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், ஐ.பி.எஸ். அவர்கள் வழங்கினார். பின்னர் பிரதமரின் போலீஸ் பதக்கங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள், வீர தீரச் செயல் புரிந்த பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 11 காவல் துறையினருக்கு வழங்கினார். பிறகு, பல்வேறு துறைகளில் வெற்றி பெற்ற காவல் துறையினருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதக்கங்களையும், பரிசுக் கோப்பைகளையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

காவல் துறை அணிவகுப்பு முடிவுற்ற பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், துப்பாக்கியைச் சுட்டு மாலை நேர நிகழ்ச்சிகளைத் தொடக்கி வைத்தார்.

இரயில்வே பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள், வீர விளையாட்டுக்களைச் செய்து காட்டினர். ஆங்கிலத்தில் WELCOME என்று வடிவமைத்து அழகுற நின்றார்கள்; பிறகு மூன்று பேர்கள் சேர்ந்து ஒட்டமாக வடிவெடுத்து, அதன்மேல் ஒருவர் சவாரி செய்வதுபோல் செய்து காட்டினர். பிறகு அவர்கள் ஹௌரா பாலம் போன்று ஒருவர் மேல் ஒருவர் [illegible] தோற்றமளித்தனர். பிறகு, [illegible]

நின்றுகொண்டு போருக்குச் செல்வது போலவும் செய்து காட்டினர். பின்னர் தேன்கூடு போலவும், கோபுரம் போல வும் அணிவகுத்துக் காண்போரை மெய்சிலிர்க்க வைத்தனர்.

அதன்பின் அனைவரும் அணி வகுத்து உடற்பயிற்சி செய்துகாட்டினர். வரிசையாக நின்று மனித அலை (Human Waves) உருவாக்கி, காண் போரைக் களிப்புறச் செய்தனர். பிறகு நீரூற்றுப் போலவும், நடனம் போலவும் குறுக்கும் நெடுக்குமாக நடந்தும் வியக்கச் செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து, காவல் துறை துப்பறியும் நாய்களின் சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. ஒரு துப்பறியும் நாய், மலர்க்கொத்து ஒன்றை வாயில் கவ்[illegible] கொண்டுவந்து, மாண்புமிகு முத[illegible]ர் அவர்களுக்குக் கொடுத்தது; முதல்வர் அவர்கள் அதை மகிழ்ச்சி யுடன் பெற்றுக் கொண்டு, அதைத் தட்டிக் கொடுத்தார்; பிறகு அது முதல் வருடன் கை குலுக்கியது.

நாய்கள் வளையங்களில் தாவியும், நெருப்பு வளையங்களுக்குள் தாவியும் சாதனை பல நிகழ்த்திக் காட்டின. பிறகு சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து சவாரி செய்தன. உயரமான, படிகளைக் கொண்ட ஏணியில்ஏறித் தாவிக்காட்டின.

பின்னர், இரயில்வே பாதுகாப்புப் படையினர், கையில் தீப்பந்தங்களை ஏந்தி வந்து உடற்பயிற்சி செய்து காட்டினர். அவர்கள் தீப்பந்தங்களுடன் பல எழுத்து வடிவங்களையும் அமைத்து-பார்ப்போரை மகிழ்ச்சி கொள்ளச் செய்தனர்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து, ரிவால்வர் சுடும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற தமிழகக் குழுவுக்கு ரூ.10,000-மும், ரைபில் சுடும் போட்டியில் வெற்றி பெற்ற எல்லைப் பாதுகாப்புப் படைக்கும், மத்திய ஆயுதக் காவல் படைக்கும் தலா ரூ.5,000-மும், தமிழக இரயில்வே காவல் படையைச் சேர்ந்த குழுவிற்கு ரூ.10,000-மும் வழங்கினார்.

விழா முடிவில் வண்ணமிகு வாண வேடிக்கைகள் கண்ணைக் கவர்ந்தன!

- **நிகழ்ச்சித் தொகுப்பு: இரா. இராஜசேகரன்**





அனைத்திந்தியக் காவல் துறைத் துப்பறியும் போட்டி களில் 'சாம்பியன் பட்டம்' பெற்ற தமிழகக் காவல் துறைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக் கோப்பையைத் தமிழக காவல் துறைத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால் அவர்களிடம் வழங்கினார்.

சிறந்த துப்பாக்கி சுடும் மாநில அணிக்கான வெள்ளிக் கோப்பையைப் பெற்ற தமிழகக் காவல் துறைக்கு, அதன் ஐ.ஜி. திரு. டபிள்யூ. ஐ. தேவாரம் அவர்களிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ளிக் கோப்பை வழங்கினார்.





## தீரச்செயல் புரிந்த காவலருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.10,000 வழங்கினார்

***6.12.1991*** அன்று இரவு ***11.30*** மணி யளவில், சென்னை வண்ணாரப்பேட்டையில் உள்ள, தொற்றுநோய் மருத்துவமனை வளாகத் தில் ஆந்திரச் சாராயத்தைக் கள்ளத்தனமாகக் கடத்தி வந்த ஒரு வாகனத்தை திரு. ராமர் என்ற முத்தியால்பேட்டைக் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் தடுத்து நிறுத்திப் பிடிக்க முயலுகின்றார்.

அப்போது, வாகனத்தைக் காவலர் மீது மோதி இடித்துத் தள்ளிவிட்டுச் செல்ல முயன்றிருக் கிறார்கள். ஆனாலும், போலிஸ் காவலர் திரு. ராமர், வாகனத்தில் தொற்றிக் கொண்டு வீர ஆவேசத்துடன் போராடியதுடன் உடலில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டும், குற்றவாளி யைப் பிடிக்கவேண்டும் என்ற கடமையுணர்வுடன் தொடர்ந்து போராடி அந்த வாகனத்தைப் பிடித்த அவர் வீரமும் கடமை உணர்வும் பாராட்டத் தக்கதொன்றதாகும்.

உடலில் படுகாயத்துடன் ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள போலிஸ் காவலர் திரு. ராமரை 8.12.91 அன்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று பார்த்து ஆறுதல் கூறியதுடன், அவருடைய தீரத்தையும், கடமையுணர்வையும் பாராட்டி ரூ.10,000 தன்னு டைய சொந்தப் பணத்திலிருந்து அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார்

மருத்துவமனையில் திரு. ராமரின் மனைவி மற்றும் மகன் ஆகியோர் கண்கலங்கி நின்றபோது அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆறுதல் கூறித் தேற்றினார் காவலர் திரு. ராமருக்கு மிச் சிறப்பான மருத்துவ வசதிகள் செய்து கொடுக் கும்படி தலைமை மருத்துவருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்தத் தீரச்செயல்களின் மூலம் காவலர் திரு. ராமர் காவல் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் மற்றும் தமிழகத்தில் உள்ள இளைஞர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்றும் அவருடைய செயல்களின் மூலம் திரு. ராமர் காவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட் டினார்.

மருத்துவமனைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ.மதுசூதனன், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், காவல்துறைத் தலைவர் திரு. எஸ்.ஸ்ரீபால், காவல் துறை ஆணையர் திரு. ஆர்.ராஜகோபாலன், இன்ஸ்பெக்டர் ஜெனரல் (மதுவிலக்கு) திரு. அலெக்ஸாண்டர் ஆகியோர் உடன் சென்றனர். மாண்புமிகு முதல்வர் அவர் களின் வருகையை அறிந்து சாலைகளின் இருமருங் கிலும் மருத்துவமனை அருகிலும் ஏராளமான பொதுமக்கள் கூடியிருந்தனர்.

# ஐந்து ஆண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும்!

## புதிய மூர்மார்க்கெட் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சென்னை நகரத்தின் இதய மாய் இருக்கிற இந்த இடத்தில், பல்வேறு சிறப்புகள் நிறைந்த பல் பொருள் விற்பனை அங்காடியான புதிய மூர்மார்க்கெட்டைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடை கிறேன்.

இந்த நல்ல திட்டத்திற்கு வித் திட்டவர் நமது இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஏறத்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன் சென்னை மூர்மார்க்கெட்டில் ஏற் பட்ட தீ விபத்து அதனை முழுமை யாக அழித்தது. அன்று அந்த இடத்தைப் பார்வையிட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தன் முன்னே கதறி அழுதவர்களைக் கண்டு கண் கலங்கினார்; ஆறுதல் கூறினார். ரூபாய் 10 கோடிக்கும் மேலான தீ விபத்து சேதத்தைப் பார்த்து மனம் வருந்தினார். இனி இதுபோல ஒரு கோரச் சம்பவம் நிகழக்கூடாது என்று முடிவெடுத் தார். அதன்படி மூர் அங்காடியில் கடை வைத்திருந்த 857 பேர்களுக் கும் இனி அல்லிக்குளம் பகுதியில் கடைகளை அமைக்க வேண்டுமென ஆணையிட்டார். அவரது நல்ல எண்ணம்தான் இன்று மூன்றடுக்கு மாடியுடன் புதிய மூர்மார்க்கெட் டாக உருவெடுத்துள்ளது. அதனைத் திறந்து வைக்கும் நல்வாய்ப்பினை நான் இன்று பெற்றுள்ளேன். உங் களுக்கு நன்றாகவே தெரியும். புரட்சித் தலைவர் விட்ட பணி களைத் தொடர்வதையும், அவர் தொட்டுச் சென்றுள்ள செயல்களை முடித்து வைக்கவேண்டியதையும், எனது தலையாய கடமையாக நான் கொண்டிருக்கிறேன் என்று.

இந்த விழாவிற்கு வருகின்ற வழியில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் திருவுருவச் சிலைகளைப் பார்த்துக்கொண்டே வந்தேன். அந்த மகத்தான மாமனி தர்கள் மக்களுக்கு ஆற்றிய பணி களை நினைவில் கொண்டேன். அவர்கள் விட்டுச் சென்ற பணி களைத் தொடர்ந்து தொய்வில்லாது ஏற்று நடத்துவது என் கடமை. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற அவர்களது தத்துவத்தைத்தான் நான் கடைப்பிடித்துக் கொண்டிருக் கிறேன்; அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பேன் என்ற உறுதியை நான் இந்த விழாவில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'குஜிலி பஜார்' என்று வழங் கப்பட்ட இடம், பிறகு 'மூர்மார்க் கெட்' என்று அழைக்கப்பட்டு, மக்களின் மனதில் நீங்காத இடத் தைப் பெற்றது. முன்பு பிராட்வே பகுதியிலிருந்த அங்காடியை மாற்றித் தான், இந்த மூர்மார்க்கெட் 1900-இல் திறக்கப்பட்டது. இப் போது மூர் அங்காடி அல்லிக்குளம் பகுதியில் அவசியம் காரணமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

அன்றைக்குச் சென்னை மாநகராட் சியின் தலைவரால் கட்டப்பட்ட மூர் அங்காடியை, சென்னையின் ஆளுநர் திறந்து வைத்தார். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டிய இந்த அங்காடியை இன்று உங்கள் அன்புச் சகோதரியான நான் திறந்து வைக்கிறேன்.

ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தால் கட்டப்பட்டுள்ள இந்த அங்காடி, மூன்று அடுக்கு மாடி களைக் கொண்டது, கட்டடத்தின் நாற்புறமும் எழில் சேர்க்கும் வண் ணம், அமைக்கப்பெற்றுள்ள மினா ரட் அமைப்புகள், முகலாயக் கட் டடக் கலையை நமக்கு நினைவுபடுத் துகின்றன.

ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் சதுரஅடி பரப்பு கொண்ட இந்த மூன்றடுக்குக் கட்டடத்தில், 859 கடைகள் அமைக்கப்பட்டு உள்ளன. அங்காடிக்குள்ளேயே உணவகம், அங்காடி வளாகத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல வசதி களும் செய்து தரப்பட்டுள்ளன. நவீன தீத்தடுப்பு அமைப்புகள் அனைத்தும் இக்கட்டடத்திலேயே பொருத்திவைக்கப்பட்டுள்ளன.

மூர்மார்க்கெட், சீரிய கருத்துக் கள் கொண்ட பழமை வாய்ந்த அரிய புத்தகங்கள் கிடைக்கக்கூடிய இடமாக இருந்ததைப் பற்றிச் சிறப் பாக எவரும் பேசியதில்லை. ஆனால், பல்வேறு நாடுகளைச் சார்ந்த பழைய பொருட்கள் குறைந்த விலை யில் விற்கப்படும் அங்காடி என்கிற அதன் சிறப்பே பலராலும் பேசப் பட்டது; இன்றைக்கும் பேசப்படு கிறது.

இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

சொல்லப்பட வேண்டிய உண் மைகளும், பெருமைகளும், சரியான நேரத்தில் சொல்லப்படாவிட்டால், தள்ளப்பட வேண்டிய சிலரின் தற்காலிகப் புகழ் நிரந்தரமாகி விடு வதற்கு வழி வகுத்துவிடும்.

சுருக்கமாகச் சொன்னால், தலைமை சரியாக இருந்தால்தான் நாட்டின் நிலைமையும் சரியாக இருக்கும்.

பல ஆண்டுக் காலமாகவே நகரத்தை நரகமாக்குகிற முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வ திலும், பொது இடங்களைத்தங்களது பொழுதுபோக்கு மையமாக மாற்று வதிலும், சொந்த நலனுக்காகப் பொதுச் சொத்துக்களைப் பயன் படுத்திக் கொள்வதிலும் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கும், சமுதாயத்திற்கும் ஏற்படுகிற கஷ்டங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற தத்துவத்தையே மாற்றி, கூடி வாழ்வதே கோடிப் பிரச்சினை என்று மாற்றும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களது முயற் சிகளை முற்றிலுமாக முறியடிப் போம் என்று திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன்.

மக்களுக்காக அரசு திட்டமிட்டுச் செலவழிக்கின்ற பணம், அதன் நோக்கத்தை நிறைவு செய்கிறதா, மக்களைப் போய் அடைகின்றதா என்கிற கேள்விக்குறி, சில கால மாகவே நம் முன்னே எழுந்து நிற் கிறது.

ஒரு கை தட்டினால் ஓசை எழாது, இரு கைகளும் இணைந் தால்தான், ஒலி எழும்பும். அரசு ஒரு கை; மக்கள் மறு கை. ஆகவே, அரசோடு மக்கள் ஒத்துழைத்தால் தான், மக்களின் நல்வாழ்விற்குரிய நல்ல பல திட்டங்கள் காலத்தோடு செயல்படுத்தப்பட்டு அதன் பலன் மக்களைச் சென்றடையும். எந்தக் காரணத்திற்காகத் திட்டங்கள் தொடங்கப்படுகின்றனவோ, அதனை நாம் நிறைவு செய்ய இயலும்.

விஞ்ஞானத்தின் விளைவுகளால் நமது ஆயுளைப் பெருக்கிக்கொள்ள பல வழிவகை கண்டறிந்த நாம், நம்மைச் சுற்றியிருக்கிற சூழ்நிலை யைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ள அக்கறை எடுத்துக்கொண்ட தாகத் தெரியவில்லை.

நாம் வாழ்கிற சுற்றுப்புறங் களைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ள நாம் இன்னும் பக்குவப் படவில்லை என்றால், நாம் இது வரை பெற்ற நாகரிகத்திற்கு அர்த் தமே இல்லை.





"எழில்மிகு சென்னை 2000" எனும் திட்டத்தின்கீழ் சென்னையில் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

நடை பாதைகள் கடைவீதிகளாக மாறியுள்ளன; நமது நாட்டில் நடை பாதைகளே நம்மை நடக்கவிடாமல் கட்டுப்படுத்துகின்ற காரியத்தைச் செய்கின்றன. வயிற்றுப் பிழைப் பிற்காக நடைபாதைகளில் கடைகள் அமைத்து வருவாய் ஈட்டும் ஏழை எளியவர்களைப் பாதிக்காத வகை யிலும், அவர்களது தொழில் நடை பாதைகளில் நடந்து செல்வோருக்கு இடையூறு விளைவிக்காவண்ணமும் இருக்குமாறு, ஒரு திட்டம் வகுக்க நினைத்தேன்.

**நடைபாதைக் கடைகளை நடத்தி வரும் நலிவுற்றோருக்கு, நல்ல இடங்களில் கட்டடங்கள் அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தையும் பரிசீலனை செய்து வருகிறேன். இத்திட்டத்தின்கீழ், தற்போது அவர்கள் தொழில் புரிந்து வரும் பகுதிகளிலேயே, நிரந்தரக் கடைகளை வாடகைக்கு அமைத்துக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். இதற்கான திட்டம் விரைவில் வகுக் கப்பட்டுச் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஏழ்மை அசுத்தமாகத்தான் இருக்க வேண்டுமென்பதல்ல; எளிமை சுகாதாரமானது என்பதே நமது நாட்டின் கொள்கை. சமீபத் தில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத் தினால் பாதிக்கப்பட்ட மக்களை நான் சந்தித்தபொழுது, அவர்கள் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வசிப் பதைக் கண்டேன். குடிசை மாற்று வாரியம் அமைக்கப்பட்டு, பலமாடிக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப் பட்டும், அவற்றில் உண்மையாகவே குடிசையில் வாழ்ந்தவர்கள்தான் குடியிருக்கின்றார்களா என்ற சந் தேகம் எனக்கு ஏற்பட்டது. அரசு திட்டங்கள் உரியவரைப் போய்ச் சேரவேண்டும் என்பதில் நான் மிக உறுதியாக இருக்கின்றேன்.

**சென்னை நகரில் புதிய குடிசைப் பகுதிகள் தோன்றாமல் தடுக்கவும், ஏற்கெனவே குடிசைகளில் வாழும் மக்களுக்கு ஒரு நிரந்தர ஏற்பாடு செய்யவும், அரசு உடனடி நடவடிக் கைகளை மேற்கொள்ளும்.** எனவே, இருக்கிற குடிசைகளை அகற்றுவ தோடு, இனி அவைகள் எந்த உரு விலும் சென்னை நகரில் உருவா காமல் தடுப்பதும் அரசின் கடமை யாகும். அதில் வாழ்ந்துவரும் ஏழை எளிய மக்களுக்கு நிரந்தரக் குடியிருப் புகளை உருவாக்கித் தருவதில், இந்த அரசு முன்னுரிமை கொடுத்து செயல் படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் முயற்சிகளுக்கு குடிசைவாழ் மக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரின் குடிநீர் வசதிக்கு ஆதாரமாக அமைந்துள்ள மூன்று ஏரிகளும் சமீபத்தில் நிறைந்து, அவை உடைபடாமல் தடுக்க, சென்னை நகருக்குத் தேவையான ஓராண்டுக் காலக் குடிநீர் அள விற்குக் கடலில் திறந்துவிடப்பட் டதை நீங்கள் அறிவீர்கள். அதிகப் படியான மழை நீரைச் சேமித்து வைக்கப்போதிய வசதிகள் இல்லாத நிலையில், குடிநீர் வீணானது. இனி யும் இதுபோல் நிகழாவண்ணம் தடுப்பதற்காக, சென்னை அருகே மேலும் இருபெரும் நீர்நிலைகளை உருவாக்கி, குடிநீரைச் சேமித்து வைக்கவேண்டுமென ஆணையிட் டுள்ளேன். அப்பணி நிறைவு பெற்ற



பின்பு, கூடுமான அளவிற்குச் சென்னை நகரில் குடிநீர்த் தட்டுப் பாடு ஏற்படாமல் தடுக்கவும், தேவை யான அளவு குடிநீர் வழங்கவும் முடியும்.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்ப தற்காக தெலுங்கு-கங்கைத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் அத் திட்டத்தை, கடந்த இரண்டு ஆண்டு களாகக் கவனம் செலுத்தாது கிடப் பில் போட்டுவிட்டனர். எங்கள் அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற வுடன், தொடங்கப்பட்ட அனைத் துத் திட்டங்களையும் முடுக்கிவிட்டு, அவை துரிதமாக முடிக்கப்பெற வேண்டுமென்றும், அவற்றின் பலன் மக்களை விரைவில் வந்தடைய வேண்டுமென்றும் உறுதியான முடிவு எடுத்து, அதன் அடிப்படை யில் எல்லா முயற்சிகளையும் மேற் கொண்டுள்ளது. அதன்படி தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவில் முடிப்பதற்காக நாங்கள் எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளின் பலனாக, ஆந்திர மாநிலத் தலைமைச் செயலர் மற்றும் உயர்மட்ட அரசு அலுவலர்கள், சென்ற 25.11.1991 அன்று சென்னை வந்து, நமது மாநிலத் தலைமைச் செயலர் மற்றும் அரசு அலுவலர்களுடன் கலந்துரை யாடிச் சென்றுள்ளனர். நானும் விரைவில் ஆந்திர முதல்வர் டாக்டர் ஜனார்த்தன ரெட்டி அவர்களை நேரில் சந்தித்து, இத்திட்டத்தைத் துரிதப்படுத்தி முடிக்க, தேவையான வழிமுறைகளை வகுக்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பயன் படுத்தப்படாமல் கிடக்கின்ற வீராணம் குழாய்களையும், சென்னை மாந கரை அழகுபடுத்தும் திட்டத்தில் பயன்படுத்த இயலுமா என்றும், அரசு பரிசீலனை செய்து வருகின் றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு தொடர்ந்து, அடுத் தடுத்து மென்மேலும் கொத்துக்கொத் தான நன்மைகளை, மக்களிடம் கொண்டுவந்து குவிக்கும் எண்ணம் கொண்டுள்ளது என்பதை, இவ் வினிய நிகழ்ச்சியோடு இணைக்கப் பட்டுள்ள பிற விழாக்களைப் பார்த்தாலேயே உங்களுக்குத் தெரியும். 'எழில்மிகு சென்னை 2000' திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பதிலும், மாநகர வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பதிலும் நான் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

**சென்னை மாநகர் சிறப்படைய, வரும் ஐந்தாண்டுகளில் 1,250 கோடி ரூபாய் செலவில், பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதை, இந்த நேரத்தில் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். 600 கோடி ரூபாய் செலவில் குடி நீர் வடிகால் வசதிகள், கழிவுநீர் அகற்றும் பணிகள் ஆகியவைகளை யும், 225 கோடி ரூபாய் செலவில் மின் வசதிப் பெருக்கமும், 200 கோடி ரூபாய் செலவில் மேல் நிலைப் பேருந்துப்பாதை உள்ளிட்ட போக்குவரத்து வசதியும், 135 கோடி ரூபாய் செலவில் தெரு விளக்கு, மழைநீர் வடிகால் கழிவுப் பொருட்கள் அகற்றும் பணிகளும், 75 கோடி ரூபாய் செலவில் வீட்டு வசதி குடிசைப்பகுதி மேம்பாடு, மற்றும் 15 கோடி ரூபாய் செலவில் புறநகர் வளர்ச்சிப் பணிகள் ஆகிய வைகளும் நிறைவேற்றப்படவுள்ளன என்பதை அறிவிப்பதில், பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். இன்னும் ஐந்தாண்டுகளில் சென்னை மாநகர் அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெறும் என்பது திண்ணம். இத் தகைய பணிகள் சென்னை நகருக்கு மேலும் எழில் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.**

இந்த நேரத்தில் என் மனதில் சில பழைய நினைவுகள் நிழலாடு கின்றன. நம் இதயதெய்வம் புரட்சித்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டுகளை வழங்கினார்.





மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கினார்.

தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்ப காலத்தில் சென்னையில் ரிக்ஷா தொழிலாளர்களுக்குத் தன்னுடைய சொந்தச் செலவில் மழைக் கோட்டு வழங்கி, நடிகர்களும் ஏழை எளியவர்களுக்கு உதவ முடியும் என்ற புதிய மனிதாபிமான தத்துவத்தைத் தொடங்கி வைத்தார். அந்த வள்ளலின் கொடைத்தன்மையின் வழியில், இன்று இலவச மழைக் கோட்டு வழங்கும் நிகழ்ச்சியும் அமைந்துள்ளது.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் நகரப் பஞ்சாயத்து, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரியும் ஏறத்தாழ 33,000 துப்புரவுப் பணியாளர்களுக்கு, 95 இலட்சம் ரூபாய் செலவில் மழைக் கோட்டுகளை இலவசமாக வழங்க உள்ளேன். இந்த நிகழ்ச்சியில் நான் துப்புரவுப் பணியாளர்களுக்கு இலவசமாக மழைக்கோட்டு வழங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

நகரிலுள்ள பூங்காக்களை நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சாலைகளைச் சீரமைத்து சிறப்பாகப் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஒருசில பகுதிகளில் சமூகசேவை அமைப்புகள் தாமாகவே முன்வந்து, ஒரு சில தெருக்களைத் தற்போது நல்லமுறையில் பராமரித்து வருகின்றன. இப்பணியில் ஈடுபட்டுள்ள Exnora போன்ற அமைப்புகளை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை மாநகரை அழகு படுத்த அரசும், ஆர்வமுள்ள ஒரு சில அமைப்புகளும் பல திட்டங்கள் கொண்டு வரலாம். ஆனால், அவற்றின் முழு வெற்றி, அத்திட்டங்களில் மக்களின் ஈடுபாடு எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்தே அமையும்.

எனவே மாநகர மக்களின் மத்தியில், ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாநகராட்சி மட்டுமல்ல, எல்லா மக்கள் தொடர்புச் சாதனங்களும் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு ஒருமித்த செயலைத் தொடர்வோமேயானால், எழில்மிகு சென்னை 2000-த்தின் தோற்றம், வடிவெடுப்பதை இரண்டே ஆண்டுகளில் நாம் காண முடியும்; சென்னை நகரைத் தூய்மைப் பகுதியாகப் பார்த்துப் பரவசமடைய முடியும்.

நாம் எய்தத் திட்டமிட்டுள்ள இலக்கான 'எழில்மிகு சென்னை 2000' என்பது வெகுதூரத்தில் இல்லை. வெறும் அடுக்குமாடிக் கட்டடங்களும், அகலமான சாலைகளும் மட்டுமே, எழிலான சென்னை நகரமாக ஆகிவிடாது. இந்த நகரத்தில் வாழுகிற ஒவ்வொரு மனிதனுக்கும் பாதுகாப்பு, அடிப்படை வசதிகள், ஆரோக்கியப் பின்னணி ஆகியவற்றினை வழங்குகிற நிலையில்தான், எழில்மிகு சென்னையின் இதயத்துடிப்பு இருக்கிறது. அந்த இதயத்தைத் தொடர்ந்து இயங்க வைக்கிற ஆற்றல், பொதுமக்களாகிய உங்களிடம்தான் இருக்கிறது என்பதை நினைவூட்டி, சென்னை மாநகரை அழகுபடுத்துவோம். அனைத்து வசதிகளையும் அமைத்து தருவோம்.

**(எழில்மிகு சென்னை 2000-மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை)**



# எழில்மிகு சென்னை 2000

சென்னை மாநகரத்தை எழில் கொஞ்சும் நகரமாக விளங்கச் செய்திட 'எழில்மிகு சென்னை 2000' எனும் திட்டத்தின்கீழ் சீர்மிகு திட்டங்கள் செவ்வனே தீட்டப்பட்டுள்ளன. இதன்கீழ் ஐந்தாண்டுகளில் நிறைவேற்ற ரூ.1,250 கோடி மதிப்பீட்டில் மகத்தான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றலுக்கு ரூ.600 கோடி - மின் வசதிப் பெருக்கத்திற்கு ரூ. 225 கோடி - மேல்நிலை பேருந்து பாதை உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளுக்கு ரூ.200 கோடி - தெரு விளக்கு மழைநீர் வடிகால் கழிவுப் பொருட்கள் அகற்றுதல் முதலான மாநகரப் பணிகளுக்கு ரூ.135 கோடி - வீட்டுவசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டிற்கு ரூ.75 கோடி - புறநகர் வளர்ச்சிக்கு ரூ.15 கோடி என மொத்தம் ரூ.1,250 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

22.11.1991 அன்று மாலை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்ட கோலாகலமான இவ்வினிய விழா 'எழில்மிகு சென்னை 2000'-த்தின் தொடக்க விழாவாகவே திகழ்ந்தது.

நவீன பொருட்கள், அபூர்வமான பழைய புத்தகங்கள், மீன்கள் என எந்தப் பொருட்களும் இங்கு கிடைக்கும் என்ற வகையில் புகழ் பெற்று, மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்று இருந்த 'மூர் மார்க்கெட்', லெப்டினன்ட் கர்னல் ஜார்ஜ்மூர் என்பவரால் 1899-ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பெற்றது. 1900-ஆம் ஆண்டில் அவர் பெயராலேயே 'மூர் மார்க்கெட்' என வழங்கப்பெற்றது. அத்தகைய வரலாற்றுச் சின்னமாக விளங்கிய மூர் மார்க்கெட் 1985-ஆம் ஆண்டு மே திங்கள் 29-ந் தேதி நள்ளிரவில் தீக்கிரையாகியது. அதில் இருந்த 857 கடைகளும் எரிந்து சாம்பலாயின.

இந்த விபத்தையடுத்து, பழைய மூர்மார்க்கெட் இருந்த இடத்துக்குப் பின்னால் உள்ள அல்லிக்குளம் பகுதியில் ரூபாய் ஏழு கோடி செலவில் மூன்று அடுக்கு மாடிகளுடன் இந்தப் புதிய மூர்மார்க்கெட்டைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இதில் 859 கடைகள் அமைந்துள்ளன. பழைய மூர் மார்க்கெட்டில் கடை வைத்திருப்பவர்களுக்குப் புதிய மூர்மார்க்கெட்டில் கடை வைத்துக்கொள்ள முன்னுரிமை வழங்கப்படும். சென்னை நகரில் அழகுக்கு அழகு சேர்க்கும் கட்டடங்களில் ஒன்றாக விளங்கும் புதிய மூர்மார்க்கெட் புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

எழில்மிகு சென்னை 2000 - மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழா மற்றும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டு வழங்கும் இவ்வினிய விழாவிற்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், திரு அழகு திருநாவுக்கரசு அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், திரு இ. மதுசூதனன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு நிதியமைச்சர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தைத் திறந்து வைத்தார். 33.269 துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ரூ.95 இலட்சம் செலவில் இலவச மழைக் கோட்டு அரசு வழங்குவதன் அடையாளமாக, சென்னை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மழைக்கோட்டுகளை வழங்கினார்.

பிறகு, வண்ணாரப்பேட்டைக் கோட்ட அலுவலகம், பேசின் பாலத்தில் தொழிலாளர்களுக்கான இரவு நேரத் தங்குமிடம், மேட்லி சாலையில் சுரங்கப் பாதை, ஏழு கிணறு, வியாசர்பாடி, கொளத்தூர் பகுதிகளில் குடும்ப நல மையங்கள், ராதாகிருஷ்ணன் நகர், செரியன் நகர், மறைமலை அடிகள் நகர், கீழ்ப்பாக்கம்(தெற்கு) புதுப்பேட்டை, தியாகராய நகர் (தெற்கு) நாகம்மை நகர் ஆகிய பகுதிகளில் நல வாழ்வு மையங்கள் முதலானவற்றிற்கு அடிக்கல் நாட்டினார்.

கண்ணப்பர் திடலில் தொழிலாளர்களுக்கான இரவு நேரத் தங்குமிடம், வேளச்சேரி பாலம், கற்பகம் நகர் இணைப்புப் பாலம், அயனாவரம் யுனைடெட் இந்தியா நகர் குடும்ப நல மையங்கள் மூர் மார்க்கெட் குடும்பநல வளாகம் ஆகியவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். சென்னையில் அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு இலவச அரிசியும், வெள்ள நிவாரணத் தொகையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். நகராட்சிகளின் சார்பில் சென்னை மாநகராட்சியின் தனி அலுவலர் (பொறுப்பு), திரு என். ஹரி பாஸ்கர், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோவில் பராமரிப்பு நிதிக்கு ரூ.1,08,000 வழங்கினார்.

சென்னை மாநகராட்சி ஆணையர், திரு மா. இராமு, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

விழாத்தொடக்கத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக இசைக்குழுவின் இன்னிசைக் கச்சேரி நடத்தப்பட்டது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**என். இளங்கோ.**



# வெற்றிலையின் ரகசியம்!

டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

நம் முன்னோர்கள் கால காலமாகவும் 'அனுபவ ரீதியாகவும்' பல மூலிகைகளின் சிறப்பை அறிந்து வந்துள்ளனர். மூலிகைகளைக் கொண்டு, நாமே செய்முறையில் தயாரித்து, நல்ல பயனையும் அடைந்து, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அடைய அவர்கள் வழிவகுத்தனர்.

நோய் அகற்றும் மூலிகைகளில் சஞ்சீவி போல் திகழ்வது வெற்றிலை.

இந்தியாவில் வெப்பம் மிகுந்த பாகத்திலும், சதுப்புள்ள இடங்களிலும் வெற்றிலை வளர்க்கப் படுகிறது.

'கம்மாறு வெற்றிலை' கருமையும், காரமும் மிகுந்தது. 'கருப்பூர வெற்றிலை' கற்பூர மணமும், சிறு காரமுமுடையது.

வெற்றிலையைத் தாம்பூலமாகப் போடும்போது, முக்கியமாக வெற்றிலையின் காம்பு, நுனி, நடு நரம்பு, பின்புறத்தில் அமைந்துள்ள தோல் இவற்றை நீக்கியே போடவேண்டும்.

பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு இவைகளை ஒன்றாக மெல்லும் போது, அதில் முதலில் ஊறிய முதல் நீர் நஞ்சு. இரண்டாவது நீர் மிகு பயித்தியம் தரும். மூன்றாவது நீர் அமிர்தம். நான்காவது நீர் அதி இனிப்பு. ஐந்தாவது நீர் பித்த தோஷம், அக்கினி மாந்தம், பாண்டு நோய் ஆகியவற்றை வரவழைக்கும்.

**தாம்பூலம் போடும் கால நியதிகள்**

காலையில் பாக்கை அதிகமாகச் சேர்க்கில், தாராளமாய் மலம் போகும், பகலில் சுண்ணாம்பு அதிகப்படுத்த நல்ல பசி எடுக்கும், மாலையில் வெற்றிலையை அதிகப் படுத்த வாயில் மணம் வீசும் என்று கால நியதிகளை நம் முன்னோர்கள் வகுத்தார்கள்.

**கம்மாறு வெற்றிலை:**

அ. கம்மாறு வெற்றிலையைத் தாம்பூலத்திற்குச் சதா உபயோகித்து வந்தால், கபம், கோழை ஆகிய இவை நீங்கும். சீதளம் பிரிக்கும். இவ்வெற்றிலையைப் பிட்டவியல் செய்து பிறகு சாறு பிழிந்து கஸ்தூரி, கோரோசனம் சேர்த்துக் குழந்தைகளுக்கு ஊற்றுவது உண்டு.

ஆ. இதை நெருப்பினால் வதக்கிக் கசக்கிப் பிழிந்தெடுத்த சாற்றில் கஸ்தூரி, கோரோசனை முதலியவை சம்பந்தப்பட்ட மாத்திரையில் சேர்த்துக் குழந்தைகள் அல்லது பெரியவர்களுக்குக் கொடுக்க, அது சீதளம் சம்பந்தமான நோயை விரைவில் குணப்படுத்தும்.

இந்த வெற்றிலையால் பல நன்மைகள் உண்டு. குரல் கம்மல், தொண்டையடைப்பு, நுரையீரல் நோய், இருமல், கடின சுவாசம், தலைபாரம், காது குத்தல், சீதளம், கோழைக்கட்டு, செரியாமை, வயிற்று வலி, தீப்பட்ட ரணம் ஆகியவை தீரும்;

**நோய் தீர்க்கும் முறையும் பயன்படுத்தும் முறையும்**

1. வெற்றிலையையும், சாம் பிராணிப் பதங்கத்தையும் மென்று சுவைக்கும்படி செய்தால், தொண்டையடைப்பு, குரல் கம்மல் இவை நீங்கும்.

2. பால் சுரக்கவும், பால் கட்டி உண்டாவதைக் குணப்படுத்தவும், மார்பக வீக்கத்தைக் கரைக்கவும், வெற்றிலையைத் தணலில் வாட்டி அடுக்காக வைத்துக் கட்டலாம்.

3. வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாற்றையும் சேர்த்து, நுரையீரல் சம்பந்தமான நோய் நீங்குவதற்கு அருந்தலாம்.

4. வெற்றிலையை நல்லெண்ணெய்யில் நனைத்து. விளக்கில் வாட்டி மார்பின் மேல் வைக்க இருமல், கடின சுவாசம், குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் ஆகியவை விலகும். அல்லது வெற்றிலைச் சாற்றுடன் சுண்ணாம்பு சேர்த்துத் தொண்டையில் தடவ குணம் ஆகும்.

5. வெற்றிலையைச் சாறெடுத்துக் காதில் 2-3 துளிகள் விட, தலைப்பாரம், காது குத்தல் ஆகியவை குணம் உண்டாகும்.

6. தீப்பட்ட ரணம் மீது வெற்றிலையை வைத்துக் கட்ட, நாளடைவில் குணம் ஆகும்.

7. வெற்றிலைச் சாற்றில் கொஞ்சம் கோரோசனை சேர்த்துக் கொடுத்தால், கோழைக்கட்டு, இருமல், மூச்சுத் திணறல் ஆகியவை விலகும்.

8. வெற்றிலையுடன் 4 அல்லது 5 மிளகு சேர்த்துக் குடிநீரில் கொடுக்க, சிறுவர்களுக்குக் காணும் செரியாமை குணமாகும்.

9. பாடகர்களின் தொண்டை வளம் பெற, வெற்றிலையினுடைய வேரைச் சுவைத்து வாவேண்டும்.

10. தாம்பூலத்துடன் ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிபத்திரி, சுக்கு, சாய்ச்சுக்கட்டி ஆகியவற்றைத் தகுந்தபடி கலந்து சாப்பிட மலம் சுத்தி ஆகும். கிருமி, கபம், தாகம், பல்நோய் ஆகியவை நீங்கும். மற்றும், தாம்பத்திய உறவில் நீட்டிப்பும், தாது விருத்தியும் ஏற்படும்.

**தாம்பூலம் போடக் கூடாதவர்கள்**

ரத்தகாசம், ரத்தப்பித்தம், வறண்ட கண்கள், கண் வீக்கம் உள்ளவர்கள், க்ஷயம் தலை நோய், ஜன்னி வாதம், மூர்ச்சை மற்றும் வெறி உள்ளவர்கள் இவற்றால் துன்பப்படுவோர் தாம்பூலம் போடாமல் இருப்பது நல்லது.

வெற்றிலை அரியதொரு மருத்துவப் பொருளாகத் திகழ்வதை அனுபவரீதியாக நாம் அறிந்து கொள்ளலாம்.





# கோழி முட்டையின் பிற பயன்கள்

டாக்டர் ந. இராமமூர்த்தி,
டாக்டர் பா. மோகன்,
டாக்டர் தே. தியாகராஜன்
டாக்டர் ச. நாகராசன்,
டாக்டர் பி. ரெங்கா ரெட்டி
கோழியின அறிவியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-2.

கோழி முட்டையானது முட்டையிலுள்ள கரு வளர்வதற்குத் தேவையான உணவாகவும் மக்களின் அன்றாட உணவுத் தேவைக்காகவும் மிகுந்த அளவில் பயனாகிறது. ஆனால், இதே முட்டையின் பிற பயன்கள் எண்ணிக்கையிலடங்கா. அத்தகைய பயன்கள் யாவை எனில்-

1. வீட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கு உணவு தயாரிக்க.
2. அன்றாடம் மக்கள் உபயோகிக்கும் ஷாம்பு போன்ற ஆடம்பரப் பொருட்கள் தயாரிக்க.
3. கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான மருந்து தயாரிக்க.
4. சோதனைச்சாலைகளில் நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர்களை வளர்க்க.
5. செயற்கைக் கருவூட்டல் முறையில் விந்துவைப் பதப்படுத்த.

- இப்படிப் பல வழிகளில் அது பயன்படுகிறது.

**வீட்டு வளர்ப்புப் பிராணிகளுக்கான உணவு தயாரிப்பதில் கோழி முட்டையின் பங்கு:**

வீட்டு வளர்ப்புப் பிராணிகளான நாய் மற்றும் பூனைகளின் உணவில் முட்டை மிகுந்த அளவில் பயன்படுத்தப் படுகிறது. இளம் பிராணிகளுக்குக் கோழி முட்டையைச் சிறப்பு உணவாகக் கொடுக்கலாம். கோழித் தீவனத்தில் சுண்ணாம்புச் சத்திற்காக, நத்தை ஒடு, சுண்ணாம்புக்கல் இவற்றைக் கலப்பதற்குப் பதிலாக அரைத்த முட்டை ஓட்டை உபயோகித்தால் சிறந்த பயன் கிடைக்கும்.

இவ்வாறு பயன்படுத்துவதற்கு முன் முட்டையின் ஓடு தூய்மையானதாகவும், நோய்க் கிருமிகள் அற்றதாகவும், நன்கு பதப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு பதப்படுத்திய பின்னரும் கால்சியம் சத்து உள்ள பிற பொருட்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சரியான அளவில் இருந்தால்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும். கோழி முட்டையைப் பன்றித் தீவனத்தில் கலந்து பரிசோதனை செய்து பார்த்ததில், கோழி முட்டை வெகு எளிதில் செரிமானம் ஆவதாகக் கண்டறிந்துள்ளனர்.

**பரிசோதனைச் சாலையில் கோழி முட்டையின் பங்கு**

கோழி முட்டை சிறந்த புரதச் சத்து நிரம்பிய முழுமையான உணவுப் பொருளாகும். அமினோ அமிலங்கள் சரியான விகிதத்தில் நிறைந்தது. உயிரியல் மதிப்பு (Biological Value) அதிகமுள்ளதும் ஆகும். முட்டையின் வெண்கரு மற்ற உணவுப் பொருட்களில் உள்ள புரதச் சத்துக்களின் அளவை அளக்க ஒப்பிடுவதற்கு அளவுகோலாகப் பயன்படுகிறது.

முட்டையின் மஞ்சள் கரு பரிசோதனைச் சாலையில் மிக நுண்ணிய நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகிறது. ஒருசில நுண்ணுயிர்களைச் சாதாரண நுண்ணுயிர் வளர்க்கும் உணவுச் சத்தில் வளர்த்தால் வளராமல் போக வாய்ப்புண்டு. ஆனால், அதே உணவுச் சத்தில் முட்டையின் மஞ்சள் கருவைச் சிறிதளவு சேர்த்தால் நன்கு வளர்வதைக் காணலாம். 'கிளாஸ்ட்ரிடியம் பெர் பிஞ்சன்ஸ்' போன்ற நுண் கிருமிகளால் உற்பத்தியாகும் நச்சுப் பொருளை உணவுப் பொருளில் இருந்து கண்டுபிடிக்க முட்டை மஞ்சள் கரு மிகவும் அத்தியாவசியமாகிறது. முட்டையின் சில உபபொருட்கள் பரிசோதனைச் சாலையில் நுண்ணுயிர்களை வளர்க்கப் பயன்படுகின்றன.

**உயிரியல் ஆராய்ச்சியில் முட்டையின் பங்கு**

1. முட்டையின் வெண்கரு கரையும் தன்மையுடையது ; நீர்த்தன்மை அகற்றி



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி (பொறுப்பு) திரு. எஸ்.நயினார்சுந்தரம் அவர்கள் 30.11.91 அன்று சந்தித்தார்.

யது. முழு முட்டை கரையும் தன்மை யுடையது - நுண்ணுயிர் அறிவியல் ஆராய்ச்சியாளர்களுக்கு நுண்ணுயிர் களின் வளர் சிதை மாற்றத்தைச் சோதிக்க உதவுகிறது.

2. முட்டை வெண்கரு (உறைந்த நிலை); முட்டை மஞ்சள் கரு (உறைந்த நிலை) முழு முட்டை (உறைந்த நிலை) - இதனை மற்ற நுண்ணுயிர் உணவுடன் சேர்த்து காற்று அற்ற நிலையில் வளரும் நுண்ணு யிர்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத் தலாம்.

3. முட்டை, இறைச்சி மூலம் (Media) - காற்றற்ற நிலையில் வளரும் நுண்ணு யிர்கள் புரதச் சத்தைச் செரிக்கச் செய்யும்.

4. கிளிசரால் கலந்த முட்டை மூலம் மாட்டு இறைச்சி - காசநோய் ஆராய்ச் சிக்கு.

5. டெல்லூரைட் - பாலி மிக்சின் முட்டை மஞ்சள் கரு - ஸ்டாஃபைலோ காக்கஸ் சோதனைக்கு.

**மருந்து மற்றும் மருத்துவப் பணியில் முட்டையின் பங்கு**

உயிர்க்கருவுள்ள குஞ்சு பொரிக்கும் முட்டை தடுப்பூசி தயாரிப்பதற்குப் பெரிதும் உபயோகமாகிறது. டாக்டர், குட் பாஸ்ட்சர் முதன் முதலாகக் கோழிக் குஞ்சுவின் கருவில் நச்சுயிரிகளை (Virus) வளர்த்து, தடுப்பூசி தயாரிக்க வழி செய்ய லாம் என்ற பேருண்மையைக் கண்டு பிடித்தார். அதன்பிறகு மற்ற விஞ் ஞானிகள் கோழி முட்டையைப் பயன் படுத்தி தடுப்பூசி தயாரிப்பதில் பெரு வெற்றியடைந்துள்ளனர்.

1937-ஆம் ஆண்டு மேலை நாட்டில் தூக்கநோயினால் 1,70,000 குதிரைகள் இறந்து போயின. கிளார்க் (1940) என்னும் விஞ்ஞானி இந்நோய்க்கான தடுப்பு மருந்தினைக் கோழி முட்டையின் கருவைப் பயன்படுத்தித் தயாரித்துத் தடுத்து நிறுத்தினார். காக்ஸ் (1952) கண்டுபிடிப்பின் மூலம் விலங்குகளைத் தாக்கும் நோய்க்கிருமிகள் குறித்த ஆராய்ச்சி நன்கு வளர்ச்சியுற்றது. ரிக்கெட்சியா, நச்சுயிர்கள் போன்ற நோய்க் கிருமிகளை கோழி முட்டைக் கருவில் வளர்த்து கால்நடைகளுக்குத் தடுப்பூசிகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

கோழி முட்டைக் கருவில் நச்சுயிரி மற்றும் நுண்ணுயிர்களை வளர்த்துக் கீழ்க்கண்ட நோய்களுக்குத் தடுப்பூசி தயாரித்து வருகின்றனர்.

1. குதிரை இன நோய்
2. நாய் இன டிஸ்டெம்பர் நோய்
3. கோழி டைபாய்டு
4. கோழி அம்மை
5. பசு அம்மை
6. கியூ சுரம் ('Q' Fever)
7. கோழி ஜலதோஷம்
8. இராணிக்கெட் நோய்
9. லேரிங்கோ டிரக்கியைடிஸ்
10. வெறி நாய்க்கடி நோய்
11. புறா அம்மை
12. மஞ்சன் சுரம்
13. செம்மறியாட்டு நீல நாக்கு நோய்

**செயற்கைக் கருவூட்டலில் கோழி முட்டையின் பங்கு:**

நமது நாட்டில் வெண்மைப் புரட்சி மலர்ந்து வெற்றி பெறச் செயற்கை முறைக் கருவூட்டல் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. அத்தகைய செயற் கைக் கருவூட்டலில் பொலி காளைகளின் விந்துவைப் பதப்படுத்துவதற்குக் கோழி முட்டையின் மஞ்சட்கரு அத்தியாவசிய மாகத் தேவைப்படுகிறது. இதில் ஆண் அணுவினுடைய உணவிற்கும், கருவூட்டல் திறன் அதிகப்படுத்துவதற்கும் முட்டை யின் மஞ்சள் கரு தேவைப்படுகிறது.

**நிலத்திற்குப் பயன்படும் உரமாக முட்டையின் பயன்கள்:**

மிக நீண்ட காலமாகக், குஞ்சு பொரிப்பு நிலையங்களில் இருந்தும், கோழி பதப்படுத்தும் நிலையங்களில் இருந்தும் எண்ணிலடங்கா முட்டைகள் மற்றும் ஓடுகள் பயன்படுத்தப்படாமல் ஒதுக்கித் தள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இத்தகைய முட்டைகள் மற்றும் ஓடுகளை உலரவைத்து, நோய்க்கிருமி களை அழித்து விலங்குகளுக்கு உணவா கவோ, நிலத்திற்கு உரமாகவோ பயன் படுத்தி பொருளாதாரத்தை உயர்த்த புதி தாக ஆராய்ந்து கண்டுபிடித்துள்ளனர்.

முட்டையிலுள்ள வெண்கரு மண் ணிற்கு அம்மோனியா சத்தை அளிக் கிறது. வியாபார ரீதியில் இத்தகைய முட்டைகளின் ஓடுகளையும் பயன்படுத்தி உரம் தயாரித்து காய்கறித் தோட்டத்தில் மக்கிய சத்தாகப் பயன்படுத்தி பொருளா தாரத்தில் முன்னேறலாம்.



# நூல் நயம்

## பள்ளி மாணவர்களுக்குப் பாவேந்தர்

ஆசிரியர்: நீலவன்
வெளியீடு: அலைகள் வெளியீட்டகம்
36, தெற்கு சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600 024.
விலை:ரூ.13 பக்கம்:117

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், நாளைய தலைமுறைகள் நலம்பெற நல்ல நல்ல பாடல்களையும் தந்துள்ளார். 'இளைஞர் இலக்கியம்' அதற்குத் தக்க சான்று.

'நூலைப்படி-சங்கத்தமிழ் நூலைப்படி' என்று குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்கள் ஏராளம். அந்தப் பாடல் களை, குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையிலே, உரையாடல் வடிவில் கூறுகிறார் ஆசிரியர். பாவேந் தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் ஆங் காங்கே இடம்பெற்றுள்ளன. பள்ளி மாணவர் படித்துப் பயன் பெறலாம்.

## திருமலை-திருப்பதி சுற்றுலாத் தலங்கள்

ஆசிரியர்: அ. ராம்கோபால்
வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-98.
பக்கம்:56 விலை:ரூ.8/-

திருமலை-திருப்பதி இந்தியத் திரு நாட்டின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்கள் மட்டுமல்ல, தெய்வமணம் கமழும் திருக் கோயில் உள்ள புனிதத் தலமும் ஆகும்.

இந்த நூலில், இத்தலங்கள் குறித்த பொது விவரங்கள், போக்குவரத்து வசதிகள் குறித்த விவரங்கள் முதலான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்கும், பக்தர் களுக்கும் பயன்படும் நூல்.

—பி.வி.ஜி.

## தமிழ் மருந்துகள்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்
வெளியீடு:
குமரன் பதிப்பகம்,
2, முத்துக்கிருஷ்ணன் தெரு,
சென்னை-17
பக்கம்:80 விலை:ரூ.9/-

பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை முறையும், அவற்றுக்கான மருந்துகளும் இந்நூலில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. அதாவது 34 வகையான நோய்களுக்கு இந்நூலில் மருந்துகள் உள்ளன.

நோயைக் கட்டுப்படுத்த அல்லது குறைக்க அல்லது வராமலேயே இருக்க உணவுக் கட்டுப்பாடு மிகமிக இன்றிய மையாதது என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். பயனுள்ள நூல்.

—பி.வி.கிரி

## விண்வெளியில் விஞ்ஞான விந்தைகள்

ஆசிரியர்: டாக்டர் எஸ்.எஸ். மணியம்
வெளியீடு:
தமிழ்மணி பதிப்பகம்,
107-ஏ, பெரியார் பாதை (மேற்கு)
சென்னை-94
பக்கம்:112 விலை:ரூ.12.50/-

விண்வெளியில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. விஞ்ஞானத் தின் வளர்ச்சியால் அவை பற்றிய தகவல்கள் மனித குலத்துக்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

விண்வெளி, வாயுமண்டலம், மேகமும் மழையும், தாரகைகள், கிரகங்கள் முதலானவை பற்றிய தகவல்களும், அணுசக்தி, செயற்கைக் கோள், ராக்கெட் இவை பற்றிய செய்திகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இவையன்றி, சந்திரமண்டலத்திற்குச் சென்ற அனுபவங்கள் குறித்த நிறைவான செய்திகளும் இதில் இடம் பெற்றுள்ளன.

—பொ. மறைமலை

**உண்மையான அறிவு**

**உண்மையான அறிவு என்றால் என்ன? எது நேர்மையான பாதையைக் காட்டுகின்றதோ, அதுவே உண்மை யான அறிவு.**

**—ஜேம்ஸ் ஆலன்.**

## மாணவர் கல்விக்கு மனவியலின் உதவி

ஆசிரியர்: திருமதி ஜாய்டேவிட் சித்தையா
வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம், மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை-600 004.
பக்கம்:400 விலை:ரூ.42/-

இன்றைய இளம் தலைமுறையினரின் அறிவாற்றலுக்கு வேகமும் அதிகம், கற்றுக்கொள்ள வேண்டும் என்ற தாகமும் அதிகம். கண்டிப்பும், கட்டாயமும் இருந் தால் கட்டறுத்துக் கொண்டு ஓடத் துடிக்கும் இளம் உள்ளங்களை நெறிப் படுத்தி, நிலைநிறுத்தி நல்ல செய்திகளை அவர்தம் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிக்கும் வழிகாட்டும் நூல். ஆசிரியர், பெற்றோர் இரு பாலருக்குமே உப யோகப்படும்.

## திருக்குறள் அறிவுரைகள்

ஆசிரியர்: முல்லை பி.எல். முத்தையா
வெளியீடு:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
(பி) லிமிடெட்
சென்னை-600 098.
பக்கம்:216 விலை:ரூ.22/-

தமிழுக்குத் தனிச் சிறப்பு தந்து தலைமுறைக்கும் வழிகாட்டியாகத் திகழ வல்லது திருக்குறள். திருக்குறளுக்குப் பழைய உரைகளன்றி, புத்துரை, விளக்க உரை, மரபுரை எனப் பல உரைகள் உண்டு. முல்லை முத்தையா அவர்கள் இந்நூலின் வழியே அறத்துப்பால், பொருட்பால் என்ற இரு பால்களுக்கும் நேருரை வழங்கியுள்ளார். பள்ளிச் சிறுவர்களுக்குப் பயன்தரவல்ல நூல்.

—சுகுமாரன்

## சிறுவர் செந்தேன்

ஆசிரியர்: புலவர் வே. பிரபாகரன்
வெளியிட்டோர்:
அழகம்மை பதிப்பகம்
R-56/11, கோட்டூர்புரம்
சென்னை-600 085
பக்கம்:88 விலை:ரூ.10

சிறுவர்களுக்கான அறிவுரைகள், விளக்கங்கள் ஆகியவைகளைக் கொண்ட கவிதைத் தொகுப்பு.

இனிய சந்தத்தோடு, எளிய நடை யோடு 'அளவாய் நடந்தால்', 'மும் மூன்று' போன்ற சற்று வித்தியாசமான சிந்தனைகளும் இக்கவிதைத் தொகுப்பில் உண்டு.

- என்.கே. சாமி





**மாணவர் பக்கம்:**



# சாரண இயக்கத்தின் கதை!

சாரண, சாரணிய இயக்கத்தின் தந்தை பேடன் பவல் 1857-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் இலண்டனில் பிறந்தார்.

1876-ஆம் ஆண்டு இராணுவத் தேர்வில் குதிரைப் படையில் சப்- லெப்டினன்ட் ஆக நியமனம் செய்யப்பட்டு, இந்தியாவிற்கு வந்தார். இந்தியாவில் ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். ஐந்து ஆண்டுகள் முடிந்ததும் பேடன் பவல் இராணுவப் படை இங்கிலாந்து திரும்பியது. நெட்டால் என்னும் இடத்தில் மலைப் பாதையை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். சூலுப் போர் நடைபெற்றபோது சூலுத் தலைவர்களைப் பிடித்து, அடக்கும் வேலையில் அமர்த்தப்பட்டார். அதன் பின்னர் சில நாட்கள் மத்தியத் தரைக்கடலில் உள்ள மால்டா தீவில் எதிரிகளைப் பற்றி ஒற்றறியும் பணியில் ஈடுபடுத்தப்பட்டார். அதற்குப் பின்னர் அஷான்டி (Ashanti) என்ற இடத்தில் பாலங்கள் அமைக்கும் ஆக்கல் கலையில் (Pioneering) ஈடுபடுத்தப்பட்டார். இங்குதான் மக்கள் இடது கையைப் பிடித்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும் பழக்கத்தைக் கண்டு, அதைச் சாரண இயக்கத்தில் புகுத்தினார்.

1896-ஆம் ஆண்டு மட்டபலிலாண்டு என்ற இடத்தில் ஒற்றறிதல் வேலையில் ஈடுபட்டபொழுது, குடு என்ற மானின் கொம்பு கிடைத்தது. அக்கொம்பைக் கொண்டு, ஊதி, அழைப்பு ஒலி ஏற்படுத்தினார். 1897-இல் கர்னல் பதவி பெற்று இந்தியாவிற்கு மீண்டும் வந்தார். 1899-இல் போயர் யுத்தத்தில் 217 நாள்கள் முற்றுகையிட்டு வெற்றியடைந்தார்.

நம் நாட்டுச் சிறுவர்களை நல்வழிப்படுத்த 1907-ஆம் ஆண்டு பிரௌன்சித் தீவில் 20 சிறுவர்களைக் கொண்டு ஒரு பாடி வாழ்க்கையை ஒரு வாரம் நடத்தினார். 1908-ஆம் ஆண்டு சிறுவர் சாரணியம் (Scouting for Boys) என்ற நூலை வெளியிட்டார்.

நம் நாட்டில் 1909-ஆம் ஆண்ட சாரண இயக்கம் தொடங்கப்பட்டது.

இவ்வியக்கத்தில் ஆங்கிலேய-ஆங்கிலோ இந்தியச்



தற்கு ஒவ்வொருவரும் தாங்களே முயல வேண்டும். இக் கருத்தினை ... யார்

... ன் தன்னை

... னை

19 ...
சாரண ...
தோன்ற...

1950-ஆ ... பர்த்
திங்கள் 7-ஆம் ... ல
இந்திய மாணவர் ... மும்
இணைந்து, தற்போதுள்ள பாரத சாரண, சாரணியச் சங்கம் தோன்றியது. 1951-ஆம் ஆண்டு வரை தனித்தியங்கி வந்த இந்திய மாணவியர் வழிகாட்டிச் சங்கமும் இணைந்து பாரத சாரண, சாரணியச் சங்கமாகச் செயல்பட்டு வருகிறது.

- நன்றி:
டாக்டர் கோ. பெரியண்ணன்
எழுதிய 'சிறுவர் சாரண இயக்கம் வளர்ந்த கதை'

# கல்விச் செல்வம்

—கவிஞர் பா. திருநாவுக்கரசு



பள்ளி செல்லும் பிள்ளைகளே
பாடம் நன்றாய்க் கற்றிடுங்கள்
கல்விச் செல்வம் ஒன்றேதான்
காலம் முழுதும் உதவி செய்யும்!

மற்ற செல்வம் வற்றிடினும்
மாறாச் செல்வம் கல்வியன்றோ
உற்ற துணையாய் இறுதிவரை
உன்னைக் காப்பது கல்வியன்றோ!

உயர்ந்த கல்வி உனக்கிருந்தால்
உலகம் முழுதும் உனக்கடிமை!
உண்மைக் கல்வி உதவியுடன்
விலகும் அடிமை இருண்மடமை!

கற்றவர்க் கென்றும் மதிப்பிருக்கும்
கல்லார்க் கென்றும் இழிவிருக்கும்
பெற்றவர் மகிழக் கற்றிடுவாய்
பெரியோர் வழியில் சென்றிடுவாய்!



## வளமா... வளர்ப்போம் !

மரத்தை வளர்க்க வாருங்கள்-அதன்
மகிமை கேட்டு மகிழுங்கள்
தரணி காத்து நின்றிடும்-நம்மைத்
தாயைப் போலக் காத்திடும்!

அழகு வண்ண மலர்களும்-சுவை
அளிக்கும் காயும் கனிகளும்
வழங்கி மக்கள் வாழவே-உலகில்
வள்ளல் போல வாழ்ந்திடும்!

காற்றில் உள்ள நச்சினை-மரம்
களைந்து நம்மைக் காத்திடும்
சுற்றுப் புறத்தைப் பேணிடும்-என்றும்
சுகத்தைக் கொடுக்கும் மருத்துவர்!

பறவைக்கூட்டம் வாழவே-பாரில்
பசுமை காட்டி அழைத்திடும்
உறவை நினைக்க நிழலினை நமக்கு
உதவி நிற்கும் தோழனாம்!

அன்பு கொண்டு உலகினில்-மரங்கள்
அழகு செய்யும் ஓவியம்
கண்கள் பார்த்து மகிழவே-பரில்
காட்சி தரும் செல்வமாம்!

காட்டில் உள்ள மரங்களை-நெஞ்சில்
கருணை இன்றி நாமுமே
வெட்டி வீழ்த்தல் ஆகுமோ-இந்தக்
கெட்ட செயலும் நீங்குமோ?

மனிதர் வாழ உலகினில்-என்றும்
மழையைக் கொடுத்து உதவிடும்
புனிதம் மிக்க மரங்களை-நாமும்
போற்றி என்றும் வளர்ப்போமே!

புலவர் க. அண்ணாமலை

## இலக்கிய விருந்து: ஞானம்

இன்பத்தில் இன்புறாமலும் துன்பத்தில் துன்புறாமலும் இருக்கும் மனநிலையினை ஞானம் எனக் குறிப்பிடலாம். இம் மனநிலையினைப் பெற்றவர்கள் ஞானிகள். ஞானிகளைத் தமிழ் இலக்கியங்கள் அறிவர் என்றும் சித்தர் என்றும் குறிப்பிடுகின்றன. ஒருவர் ஞானம் பெறுவதற்குத் தடையாய் இருப்பது அறியாமை. அறியாமைக்குக் காரணம் அவரின் இயலாமையும் முயலாமையுமே ஆகும்.

நமக்காக வேறொருவர் முயற்சி செய்து ஞானத்தைப் பெற்றுத் தந்துவிட முடியாது. பகவான புத்தா குறிப்பிட்டதைப் போல ஒவ்வொருவரும் தங்களுடைய ஞான விளக்கைத் தாங்களேதான் ஏற்றிக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றும்பொழுது காற்றடித்தாலும், கடும்புயல் வீசினாலும், பெருமழை பொழிந்தாலும் அவர்களேதான் தடுத்துக்கொள்ள வேண்டும். ஞானம் என்பது ஒரு மனநிலை அதாவது ஒரு பக்குவப்பட்ட உணர்வு. அதை அவரவர் சொந்த முயற்சியின் வழியேதான் பெற முடியும்.

பூதத்தாழ்வார் தம் ஞான விளக்கை எப்படி ஏற்றுகிறார் தெரியுமா! அவர் ஏற்றும் விளக்கிற்குத் தகளி அதாவது அகல் எது தெரியுமா! அன்பே அந்த விளக்கின் தகளியாம்; ஆர்வமே அதற்கு இடும் நெய்யாம்; பக்தியால் உருகும் அவரின் மனமே அந்த விளக்கிற்கு உரிய திரியாம். இவ்வாறு எம் பெருமான் நாராயணனுக்கு ஞானத் தமிழை விரும்பிப் பாடிய பூதத்தாழ்வார் நன்றாக மனமுருகி ஞான விளக்கு ஏற்றியதை,

"அன்பே தகளியா
ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை
இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு
ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்கிறார். பல்லாண்டுகள் உடலை வருத்திக் கடுந்தவம் புரிந்து இறைவனைக் காண முயற்சிப்பதைக் காட்டிலும் உள்ளன்போடு மனமுருகி வழிபட்டால் இறைவனைக் காணலாம் என்பதே ஆழ்வார்களின் கருத்தாகும். "அழுதால் உன்னைப் பெறலாம்" என்கிறார் மாணிக்க வாசகர்.

ஒருவருக்காக மற்றொருவர் உணவு உண்ண முடியுமா! இன்பத்தையும் துன்பத்தையும் அவரவர்கள் அனுபவிக்க வேண்டும். ஞானமும் அப்படித்தான். இக்கருத்தைப் புலவர் கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் குறிப்பிடுகிறார்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ
ரன்ன"

இந்த உண்மையை உணர்ந்தால்,

"பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும்
இலமே"

என்ற ஞானநிலை வந்து அமைந்து விடும். இந்நிலையினைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தாங்களே முயல வேண்டும். இக் கருத்தினை நாலடியார்

"நன்னிலைக்கண் தன்னை
நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழ்இடுவானும்
நிலையினும்
மேன்மேல் உயர்ந்து
நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"

எனக் குறிப்பிடுவதை நாம் ஒவ்வொருவரும் மிக ஆழமாக நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

ஞானநிலை பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் முழு முயற்சியோடு ஒருவர் முயலுவாரேயானால் நிச்சயம் அவர் ஞானத்தைப் பெற



டாக்டர் அரங்க. இராமலிங்கம்
தமிழ் விரிவுரையாளர்
அஞ்சல்வழிக்கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005.

# குழந்தைகள் அருங்காட்சியகம்

'தொட்டுப் பாருங்கள்!' அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனிலுள்ள 'குழந்தைகள் அருங்காட்சியகம்' குழந்தைகளுக்கு விடுக்கும் அழைப்பு இதுதான். காட்சிப் பொருட்களைத் தொட்டு அனுபவிப்பதன் மூலமே குழந்தைகள் அவற்றைப் பற்றிய உண்மையை அறிய முடியும் என்பதுதான் இந்த அருங்காட்சியகத்தின் சித்தாந்தம். 'தொடாதீர்கள்' என்னும் அறிவிப்பு இங்கே இல்லை!

'ஓடாதீர்கள்', நடந்து செல்லுங்கள்' என்பது இந்த அருங்காட்சியகத்தில் காணப்படும் அறிவிப்புப் பலகைகளில் ஒன்றாகும். 'படித்தால் மறந்து போகிறது பார்த்தால் நினைவில் நிற்கிறது. செய்து பார்த்தால் நன்றாகப் புரிகிறது' என்று சீனப் பழமொழி ஒன்று கூறுகிறது. இந்தப் பழமொழியின் வாசகமும் இங்கே எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்துக்கு வருகின்ற குழந்தைகள் இங்கே வைக்கப்பட்டுள்ள காட்சிப் பொருட்களைத் தொட்டுப் பார்க்கும்படியும், பரிசோதனைகளைச் செய்து பார்க்கும்படியும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இங்கு வரும் குழந்தைகள் இங்குள்ள கம்ப்யூட்டர் களை இயக்கிப் பார்க்கலாம்; என்னென்ன வாங்கினோம் என்று அதில் கணக்கு போட்டுப் பார்க்கலாம். இங்குள்ள இயந்திரத்தின் துணையுடன் தங்கள் பார்வையைப் பரிசோதித்துக் கொள்ளலாம். இங்கு வைக்கப்பட்டுள்ள பழங்கால இறகுப் பேனாவால் எழுதிப் பார்க்கலாம். ஆப்பிரிக்க நாட்டு முரசை முழக்கிப் பார்க்கலாம். இங்கே கட்டி வைக்கப்பட்டுள்ள செம்மறியாட்டைத் தடவிக் கொடுக்கலாம்; மெக்சிகோவின் சூடான சாக்லெட் பானத்தைப் பருகலாம்.

இந்த அருங்காட்சியகத்திற்குள் நுழைவதற்கு முன்பாக, ஒரு விந்தையான பூங்காவை இங்கு வரும் குழந்தைகள் கடந்து வரவேண்டி இருக்கும்.

பெயர்தான் பூங்காவே தவிர இங்கே செடி கொடிகள் இல்லை; பூ இல்லை; காய் இல்லை; கனி இல்லை. கந்தைத் துணிகள், கண்ணாடித் துண்டுகள் மற்றும் இதர துண்டுப் பொருட்களைக் கொண்டு உருவானதுதான் இந்த விந்தைப் பூங்கா. இதனை உருவாக்கியவர் யார் தெரியுமா? இந்தியாவைச் சேர்ந்த பிரபல கட்டடக் கலை நிபுணர் ஆவார். இந்தியாவில் அவர் உருவாக்கியுள்ள விந்தைப் பூங்காவைப் போலவே இங்கும் சிறிய அளவில் அவர் அமைத்துக் கொடுத்தார். பொம்மைகள் நிறைந்தது இந்தப் பூங்கா. இளம் உள்ளங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துபவை இவை.

பழைய அலுமினிய டப்பாக்களை அழித்து அவற்றை அலுமினியத் தகடுகளாக மாற்றி, மீண்டும் புதிய டப்பாக்கள் செய்வது எப்படி என்று குழந்தைகளுக்கு விவரிக்க 'அல்கோ ரிசைக்ளிங் கம்பெனி' என்னும் நிறுவனம் இந்த அருங்காட்சியகத்தில் ஒரு காட்சிக் கூடத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஓர் அலுமினிய டப்பா எத்தகைய மாற்றங்களைப் பெறுகிறது என்பதை அறிய, இங்கு வரும் குழந்தைகளையே அலுமினிய டப்பாவாக நடிக்க வைக்கிறார்கள்.

'அடுத்த ஐந்து நிமிடங்களுக்கு நீ உன்னை ஓர் அலுமினிய டப்பாவாக நினைத்துக் கொள்ள வேண்டும்' என்று இங்கு வந்த 4 வயதுப் பையன் ஒருவனிடம் கூறினார் இங்குள்ள கண்காணிப்பாளர். அதன்பின், அந்த அலுமினிய டப்பா - அதாவது அந்தச் சிறுவன் - ஒரு திரையைக் கடந்து செல்ல வேண்டி இருந்தது. அது நசுக்கப்படுகிறது என்பதைப் புரிய வைப்பதற்காக ஒரு குறுகிய துளைக்குள் புகுந்து செல்ல நேர்ந்தது. பின்பு அந்த டப்பா உருக்கப்பட்டு, தகடாக்கப்படும் அனுபவத்தையும் அந்தச் சிறுவன் அறிந்து கொண்டான். இறுதியில், மெல்லிய அலுமினிய உடை ஒன்றை அவனுக்கு அணிவித்தார் அந்தக் கண்காணிப்பாளர். இப்போது அந்தச் சிறுவன் புதிய அலமினிய டப்பா ஆகிவிட்டானாம்.

குழந்தைகளை மகிழ்விக்கும் இந்த அதிசயக் காட்சிக் கூடத்தை உருவாக்கியவர் ஆன் டபிள்யூ. லெவின் என்னும் பெண்மணி ஆவார். ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான குழந்தைகள் இந்த அருங்காட்சியகத்தைப் பார்த்து மகிழ்கின்றனர்.

- அமெரிக்கத் தகவல் அலுவலகம்.

முடியும்.

''சேவடி படரும் செம்மல்
உள்ளமொடு
நலம்புரி கொள்கைப்
புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை
ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து
இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ
முன்னிய வினையே''

என்கிறார் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர். இறைவனுடைய திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற உண்மையான உள்ளத்துடனும் உறுதியினுடனும் ஒருவர் முயலுவாரேயானால் அவர் ஞானத்தை நிச்சயம் பெறமுடியும் ' என உறுதிபடக் கூறுகிறார் நக்கீரர்.

இறைவனின் திருவடிகளை ஞானம் பொதிந்திருக்கின்ற இடமாகச் சான்றோர் குறிப்பிடுவர். இறைவனின் திருவடிகளைப் பற்றுதல் என்றால் ஞானத்தைப் பெறுதல் என்று பொருள். அதனால்தான் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து எனும் முதல் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களில் ஏழு குறட்பாக்ளில் இறைவனின் திருவடிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாகவும்; பேரறிவாளனாக்வும்; வாலறிவனாகவும் விளங்குகின்ற இறைவனின் திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் ஞானப் பேரொளியாகிய இறைவன் பற்றுகின்றவர் உள்ளத்தில் ஞான ஒளியாக தானே வந்து அமர்வான். உள்ளத்தில் உண்மையான ஞான ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும். இவ்வாறு நமது உள்ளத்தில் ஒளிரும் ஞானஒளி மிகச் சிறியதாக இருந்தாலும் அது கணக்கற்ற பிறவிகளுக்குக் காரணமாக அமையும் அறியாமை அனைத்தையும் அழித்துவிடும். மிகச்சிறிய நெருப்புப் பொறி மிகப்பெரிய காட்டினையும் எரித்து அழித்து விடுவதைப்போல ஞானஒளி அறியாமை இருளை அகற்றிவிடும் என்பதை,

''அக்கினிக் குஞ்சொன்று
கண்டேன்-அதை
அங்கொரு காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு- தழல்
வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்று முண்டோ?''
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

என உருவக நெறியில் பாரதியார் குறிப்பிடுகிறார்.

வாழ்க்கையில் நிகழும் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமாக அமையும் அறியாமையை அகற்றுவோம். பேரின்ப நிலையாகிய ஞானநிலையைப் பெற முயலுவோம். அப்பொழுதுதான் யான் எனது என்னும் செருக்கு அற்று, வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய பேரின்ப நிலையினை எய்த முடியும். ●





# இரத்தக் கொதிப்பு



ஒரு நோயாளியைப் பரிசோதிக்கிற மருத்துவர், 'உங்களுக்கு அதிக இரத்த அழுத்தம் (Blood Pressure) இருக்கிறது' என்றோ - 'இரத்தப் பேரழுத்தம் (Hyper Tension) இருக்கிறது' என்றோ சொல்லிவிட்டால் போதும்; அந்த நோயாளி தன்னுடைய சாவுக்கே நாள் குறிக்கப்பட்டு விட்டது போலச் சகலமும் ஒடுங்கிப் போவார்.

இரத்த அழுத்தம் என்றாலே பொதுவாக உயர் இரத்த அழுத்தம் தான் (High Blood Pressure) எல்லோருக்கும் நினைவு வரும்.

உயிருக்கு ஆபத்தான சில நோய்களுக்கு, இந்த வகை இரத்த அழுத்தமே அடிப்படைக் காரணமாக இருப்பதால் - இது ஒரு அஞ்சத்தக்க விஷயம்தான்.

ஆகவே, இதைப்பற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்ளும் ஆர்வம் எல்லோருக்கும் இருக்கத் தானே செய்யும்?

மிகச் சாதாரணமானவர்களும் இரத்த அழுத்தம் பற்றிய வினாக்களுக்கு விடையறிந்து தெளிவடைய விரும்பவே செய்வர் என்ற எண்ணத்தோடு - டாக்டர் சி. இராமகிருஷ்ணன், எம்.டி., அவர்களுடன் நாம் கலந்துரையாடினோம். எல்லோருக்கும் விளங்கவைக்கும் நோக்கத்தோடு கேட்கப்பட்ட நம் வினாக்களுக்கு அவர் விடையளித்தார். இதோ, நமது வினாக்கள் - அவரளித்த விடைகள்:



டாக்டர். சி.இராமகிருஷ்ணன் எம்.டி.

**உயிருக்கு ஆபத்தை உண்டாக்கக் கூடிய பல நோய்களுக்கும் அடிப்படையாக இருப்பது உயர் இரத்த அழுத்தம்; ஆகவே, அதைப்பற்றிய முக்கிய விவரங்களை அறிந்து கொள்ளுவது நல்லதுதானே? இந்த அடிப்படை நோக்கத்தோடு நாம் கேட்ட கேள்விகளும், அவற்றிற்கு டாக்டர் சி.இராமகிருஷ்ணன் எம்.டி., அவர்கள் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.**

**சந்திப்பு: பி.எல்.ஆர்.**

**★ இரத்த அழுத்தம் (Blood Pressure) என்றால் என்ன?**

நம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் ஓடும் இரத்தம் ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தம் உள்ளதாக ஒரே சீரான துள்ளலோடு ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த அழுத்தம்தான் இரத்தம் உடலின் பல்வேறு உறுப்புக்களையும் சென்றடைய உதவுகிறது. இரத்தத்தின் அழுத்தம் இதயம் சுருங்கும்போது அதிகமாகவும், விரிவடையும்போது குறைவாகவும் இருக்கிறது. இவ்வாறு இதயம் சுருங்கிய நிலையில் உள்ள இரத்த அழுத்தத்தை Systolic Blood Pressure அல்லது உயர் இரத்த அழுத்தம் என்றும், இதயம் விரிவடைந்த நிலையில் உள்ள இரத்த அழுத்தத்தை Diastolic Blood Pressure அல்லது குறைந்த இரத்த அழுத்தம் என்றும் கூறுகிறோம். நோய் நொடிகள் ஏதுமின்றிப் பூரண நலத்துடன் இருப்பவர்களின் உயர் இரத்த அழுத்தம் பாதரசமானியில் சுமார் 120 மி.மீ.-ம், கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் சுமார் 80 மி.மீ.-ம் இருக்கும். இதைத்தான் மருத்துவர்கள் குறிப்பிடும்போது ஒரு கோடிட்டு, அக்கோட்டிற்கு மேல் உயர் அழுத்தத்தையும், கோட்டிற்குக் கீழ் குறைந்த அழுத்தத்தையும் எழுதுகிறார்கள். எனவேதான், சாதாரண நிலையில் ஒருவரின் இரத்த அழுத்தம் 120/80 மி.மீ. என்று குறிப்பிடப்படுகிறது. பெண்களின் இரத்த அழுத்தம் ஆண்களை விடப் பொதுவாக சுமார் 10 மி.மீ. குறைவாகக் காணப்படுகிறது.

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக எப்படிக் கண்டறிவது?**

பொதுவாக ஒருவருடைய மேல் மட்ட நிலை இரத்த அழுத்தம் 140 மி.மீ.-க்கும் கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் 90 மி.மீ.-க்கும் அதிகமாக இருந்தால் அவருக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதாகக் கருதுகிறோம்.

நோயின் ஆரம்ப நிலையில், இரத்த அழுத்தம் 24 மணி நேரமும் உயர்ந்து காணப்படுவதில்லை. அதிகமாக உணர்ச்சி வசப்பட்டாலோ, அதிகமாக உடல் வருந்தி உழைத்தாலோ, கோபாவேசப்பட்டாலோ அந்த நேரத்தில் மட்டுமே அதிகரித்து, பின் ஓய்வெடுக்கும்போது சாதாரண நிலையை அடைந்துவிடுகிறது. இதற்கு Labile Hypertension அல்லது இடைநிலை உயர் இரத்த அழுத்தம் என்று பெயர். நாளடைவில், 24 மணி நேரமும் இரத்த அழுத்தம் உயர்ந்தே

காணப்படுகிறது. இது Established Hyper Tension எனப்படும்.

இந்நோயின் தீவிரத்தைக் கீழ் மட்ட நிலை இரத்த அழுத்தத்தின் அளவினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். கீழ்மட்ட நிலை இரத்த அழுத்தம் 90 முதல் 105 மி.மீ. இருந்தால், மிதமான உயர் இரத்த அழுத்த நோய் என்றும், 105 முதல் 115 மி.மீ. வரை இருந்தால், சற்றே தீவிர உயர் இரத்த அழுத்த நோய் என்றும், 115 மி.மீ.-க்கு மேல் இருந்தால் அதிதீவிர உயர் இரத்த அழுத்த நோய் என்றும் கூறுகிறோம் இவ்வாறு வகைப்படுத்திப் பார்க்கும் போது, உயர் இரத்த அழுத்த நோயாளிகளில் 90 முதல் 95 சதவிகிதத்தினருக்கு மிதமான நோயே இருக்கிறது. 5 முதல் 10 சதவிகிதத்தினருக்குச் சற்றே தீவிர மற்றும் அதிதீவிர உயர் இரத்த அழுத்தம் காணப்படுகிறது.

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் எப்போது ஏற்படும்?**

உயர் இரத்த அழுத்தம் என்பது பரம்பரை நோய்களில் ஒன்றாகும். இது தவிர, சுற்றுப்புறச் சூழ்நிலையும்கூட இந்நோய் ஏற்படக் காரணமாக அமைகிறது. உதாரணமாக, உணவில் அதிகமாக உப்புச் சேர்த்துக் கொள்ளும் மக்களிடையே இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஜப்பானியர்களைக் கூறலாம். அவர்கள் உணவில் உப்பின் அளவு அதிகமாகும். எனவேதான், ஜப்பானியர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய் அதிகம் ஏற்படுகிறது.

மேலும், இந்நோய் உள்ளவர்களின் சிறுநீரகங்களுக்கு இரத்தத்திலிருந்து சோடியம் என்னும் தாது உப்பினைச் சிறுநீரில் வெளியேற்றும் திறன் குறைவாக உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உணவில் உப்பின் அளவு அதிகமாக இல்லாவிட்டால் கூட, சிறுநீரகங்கள் இந்த உப்பினைச் சிறுநீரில் வெளியேற்றுவது குறைவதாலேயே இந்நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. அதே போல், உடல் பருமனாக இருப்பதும் இந்நோய் ஏற்பட ஒரு காரணமாகும். மேலும், கடின நீர் உள்ள இடங்களில் வாழும் மக்களைவிட, மென்மையான நீர் உள்ள இடங்களில் வாழ்பவர்களுக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள். இவை தவிர, மனக்கவலை, பதற்றம், அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களும் இந்நோய் உண்டாவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றன.

**★ இரத்த அழுத்தம் என்பது எத்தனை வகைப்படும்?**

இரத்த ஓட்டமானது உடல் முழுவதும் ஒரே சீராக, ஒழுங்கான அழுத்தத்துடன் நிகழவேண்டும்.

இதயமானது விரிகிற போது (Diastolic) 75-முதல் 90 மி.மீ. என்ற அளவிலும், இதயம் சுருங்குகிறபோது (Systilic) 100 முதல் 140 மி.மீ. என்ற அளவிலும் இரத்த அழுத்தம் இருக்கலாம்.

இதையே இயல்பான இரத்த அழுத்தம் (Normal Blood Pressure) என்று குறிப்பிடுகிறோம்.

ஒருவருடைய உடலில் இந்த இரத்த அழுத்தமானது இருக்க வேண்டிய சரியான அளவைத் தாண்டி 140/90 என்கிற அளவுக்கு மேலே போனால், அது உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure) அல்லது இரத்தக் கொதிப்பு (Hypertension) என்று சொல்லப்படும். 90/70 என்ற ரீதியில் அந்த அளவு இறங்கிவிட்டால், அதுவே குறைந்த இரத்த அழுத்தம். இதை Hypotension என்றும் கூறுவது உண்டு.

Hypertension -ஐ 1. Mild, 2. Moderate, 3. Severe, 4. Malignant என்று நான்கு வகையாகக் குறிப்பிடுவது வழக்கம்.





**• சீர்திருத்தம் என்பது தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையானதை மட்டும் வைத்துக் கொள்ளுதலேயாகும்.**

உயர் இரத்த அழுத்தம் Systolic Diastolic, Isolated Systolic Hypertension என்றெல்லாம் வகைப்படுத்தப்படும்.

**★ உயர் இரத்த அழுத்தம் என்பது எல்லா வயதினருக்கும் வரக் கூடியதா?**

எல்லா வயதினருக்கும் வரலாம். ஆனால் பெரும்பாலும் வயதானவர்களுக்கே வரும். 18 வயதிற்கு மேற்பட்டவர்களில் 30 சதவிகிதம் பேர் அதிக இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது.

**★ ஒருவருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட என்னவெல்லாம் காரணங்கள் இருக்கின்றன?**

உயர் இரத்த அழுத்தம் உண்டாக இன்னதுதான் மூலகாரணம் என்று இன்னமும் திட்டவட்டமாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நோயாளிகள் காரணம் ஏதும் இன்றி அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள்; அதை Essential Hypertension என்று கூறுவது உண்டு. ஆனால், சில வியாதிகள் காரணமாகப் பத்து சதவிகிதத்திற்கும் குறைவானோருக்கு இரத்த அழுத்தம் அதிகரிப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது (Secondary Hypertension).

உதாரணமாகச் சொல்லுவதென்றால் - Secondary Hypertension உள்ளோர், Steroid மற்றும் கருத்தடை மாத்திரை உண்போர், சிறுநீரக வியாதி உடையவர்கள், Coaretation of aorta Pheochrmocytoma, Cusing's - Syndrome போன்ற நோய்களுக்கு ஆளானோர் உயர் இரத்த அழுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.



**★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் தகுந்த சிகிச்சை பெறாமல் அலட்சியமாக இருந்தால் என்ன ஆகும்?**

அது மிகவும் ஆபத்து. அப்படிப்பட்டவர்களுக்குச் சில உடல் உறுப்புகள் பாதிக்கப்படக்கூடும். இதய நோய், பக்கவாத நோய் (Cerobro Vascular accident) சிறுநீரகக் கோளாறு, கண் பார்வை மங்குதல் ஆகியவற்றுக்கு அவர்கள் ஆளாகக் கூடும். அதிக அழுத்தம் உள்ள இரத்தத்தைச் சுருங்கி விரிந்து இரத்தக் குழாய்களில் சிரமத்தோடு செலுத்தவேண்டியிருப்பதால், வேலைப்பளு அதிகமாகி நாளடைவில் இதயம் தன் செயல் திறனை இழந்து-மாரடைப்பு (Heart attack) வரைகூட போய்விடக் கூடும். சிலருக்கு Uraemic Coma என்ற சுய நினைவில்லாத நிலைமையும் ஏற்பட்டுவிடும்.




**★ ஒருவர், மருந்து மாத்திரை சாப்பிடாமலே உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடியாதா?**

முடியும். உயர் இரத்த அழுத்தமானது அதிக அளவில் இருக்கின்றவர்கள் - முதலில் தமது உடல் எடையைக் குறைக்க வேண்டும்; ஒரு நாளைக்கு மொத்தமே ஐந்து கிராம் தான் என்கிற அளவிற்குச் சாப்பாட்டில் உப்பைக் குறைவாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; நாள் தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்; மது குடிப்பவரானால் அதைத் தவிர்க்க வேண்டும்; ஆத்திரம், ஆவேசம், பதற்றம் எதுவும் இல்லாமல் அமைதியாக இருக்கவேண்டும். தியானம், - யோகாசனப் பயிற்சி மூலமும் உயர் இரத்த அழுத்தத்தை ஓரளவு குறைக்கலாம்.

ஒருவர் மிகுந்த மன உறுதியுடன் இவ்வாறெல்லாம் இருப்பாரானால், இரத்த அழுத்தத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்து விடலாம்.

**★ இரத்த அழுத்தம் உள்ளோர், உப்பை அடியோடு நிறுத்தி விடலாமா?**

அப்படிச், செய்யத் தேவையில்லை; அவற்றின் அளவைக் குறைத்துக் கொண்டாலே போதும். சுருங்கச் சொல்வதனால் அதிக உப்புள்ள உணவு வகைகளான ஊறுகாய், வத்தல், வடகம் போன்றவற்றை அறவே தவிர்த்து, தயிர்ச்சாதத்திலும் உப்பைத் தனியாகப் போடுவதைத் தவிர்த்தாலே போதும் - ஒரு நாளைய உப்பின் அளவு 5 கிராம் அளவிற்குள் வந்தவிடும்.

**★ இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குக் கண்பார்வை மங்கும் என்கிறீர்களே, அதற்கு அடிப்படைக் காரணம் என்ன?**

அதிக உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு விழித்திரையில் (Retina) உள்ள இரத்தக் குழாய்களில் சில மாற்றங்கள் ஏற்படும். Hypertensive Retinopathy எனப்படும் அதில் நான்கு வகைகள் உண்டு.

விழித்திரையில் உள்ள இரத்தக் குழாய்கள் முதலில் சிறுத்தும் பின்பு ஒன்றின் மீது இன்னொன்று குறுக்கிட்டும் சிக்கலாகி அழுத்தம் உண்டாக்கிவிடும்; இரத்தச் சிதைவு உண்டாகும். மிகவும் அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு Papillaedema என்கிற பார்வை நரம்பினுடைய துவக்கத்தில் தடிப்பு உண்டாகும். அதனால் பார்வை கெட்டுப்போய்விடும்.

**★ ஒருவருக்கு, அதிக இரத்த அழுத்தம் இருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?**

பெரும்பாலானவர்களுக்கு அதிக இரத்த அழுத்தம் என்பது ஏதேச்சையாகவே கண்டுபிடிக்கப்படுகிறது; அதாவது, வேறு ஏதாவது நோய் கண்டு மருத்துவரிடம் செல்லும் போது, பலவகைச் சோதனைகளை அவர் மேற்கொள்ளுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அப்போது இந்த விஷயமும் தன்னால் தெரிய வரும்.

**★ ஒருவர், அதிக இரத்த அழுத்தம் உடையவரானால் எப்படிப்பட்ட அறிகுறிகள் அவரிடம் காணப் படும்?**

சிலருக்குத் தலைவலி பலமாக இருக்கும்; ஒரு சிலருக்குத் தலை சுற்றும்; சிலருக்கு மூக்கில் இரத்தம் வரலாம்; ஒரு சிலருக்கு மயக்கம் ஏற்படும். பெரும்பான்மையானோருக்கு எவ்வித அறிகுறிகளும் இருக்காது.

**★ ஆண்களுக்கா, பெண்களுக்கா - யாருக்கு உயர் இரத்த அழுத்தம் அதிக அளவில் வரும்?**

பெண்களைவிட ஆண்களுக்குத் தான் அதிக அளவில் உண்டாகும்.

**★ உயர் இரத்த அழுத்தம் குறிப்பாக எப்படிப்பட்டவர்களுக்கு ஏற்படும்?**

தொடர்ந்து புகைபிடிப்பவர்கள், உடல் பருமனாக இருப்பவர்கள், இரத்தத்தில் அதிகக் கொழுப்புச் சத்து உள்ளவர்கள் ஆகியோருக்கு அதிக அளவில் வரும் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. பெற்றோர்களுக்கு இரத்தக் கொதிப்பு இருந்தால் பிள்ளைகளுக்கும் வர அதிக வாய்ப்பு உள்ளது.

**சினம் தவிர்**



★ சாதாரணமாக ஒருவருடைய இரத்தத்தில் எந்த அளவில் கொழுப்புச் சத்து (Cholesterol) இருக்கலாம்?

நூறு மில்லி இரத்தத்தில், சுமார் 150 முதல் 200 மில்லி கிராம் அளவு கொழுப்புச் சத்து இருக்கலாம்; இதைத் தாண்டினால் தொல்லைதான்.

★ உயர் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு எவ்வாறான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்?

சிறுநீரையும் - இரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பு, கால்சியம், Uricacid, Urea, Creatinine, Ecg., X-ray, I.Vp. என்ற வகையிலும் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். முப்பதுக்குக் கீழும், அறுபதுக்கு மேலும் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கு இவைகள் தவிர வேறுசில பரிசோதனைகளும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

★ கர்ப்பிணிப் பெண்களுக்கும் உயர்ந்த இரத்த அழுத்தம் வருமா?

வரலாம்; இது 'கர்ப்பம் சார்ந்த இரத்தக் கொதிப்பு' (Pregnancy related hypertension) எனப்படும். ஆனால், கருவுற்றிருக்கும் பெண்கள் அதற்கு ஆளானால் பிரசவமும் துன்பமாயிருக்கும்; பிறக்கும் குழந்தையும் பாதிக்கப்படும். கருவுற்றிருக்



கும் பெண்ணுக்கு, கால்வீக்கம், சிறுநீரில் அதிக உப்பு (Albumin) ஆகியவை கண்டாலே அவர்கள் மருத்துவரை அணுகிப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும் (Toxemia of Pregnancy).

★ அதிக இரத்த அழுத்தத்தைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திவிட முடியுமா?

ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளித்தால் நோயின் வீரியத்தைக் கட்டுப்படுத்தலாம். கட்டுப்படுத்தப்பட்ட பிறகும் பெரும் பாலானோர் தொடர்ந்து மாத்திரை உட்கொள்ள வேண்டியிருக்கும். மிகச் சிலருக்கு மாத்திரைகளை நிறுத்திவிட்டாலும் பாதிப்பிருக்காது. உயர் இரத்த அழுத்தம் மிக அதிக அளவில் இருந்தால் அவர் உடலில் ஊசி மூலம் மருந்தை உட்செலுத்தவும் நேரிடும். (Hypertensive Emergencies) இந்த நோய் வராமலே தடுப்பது கடினம் என்றாலும், அதனால் உண்டாகும் தீயவிளைவுகளை மருந்து மாத்திரையால் மட்டுப்படுத்தலாம்.

★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உணவு முறைகள் எவ்வாறிருக்கலாம்?

உப்புக் குறைவாகவும், கொழுப்புச் சத்து உள்ளவற்றைத் தவிர்த்தும் சாப்பிட்டு வந்தால் போதுமானது. காபி, டீ ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். மது அருந்துவதைத் தவிர்க்கலாம். முட்டையின் மஞ்சள் கரு, ஆடு - மாடு இறைச்சி உண்பதை விட்டுவிடலாம். மீன் சாப்பிடலாம். சூரியகாந்தி எண்ணெய் அல்லது நல்லெண்ணெயைச் சமையலுக்குப் பயன்படுத்தலாம்.

இதற்கு மேலும் உயர் இரத்த அழுத்தம் மட்டுப்படாவிட்டால் அவரவரும் தங்கள் குடும்ப டாக்டருடன் கலந்து பேசி அவர் ஆலோசனைப்படி நடக்கலாம். இவற்றின் மூலம் - 'Down with Hypertension' என்கிற உலக சுகாதார நிறுவனத்தின் குரலுக்கு நாமும் வலிவூட்டலாம் அல்லவா?

## சென்னையில் குடிநீர் விநியோகம் அதிகரிப்பு

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை ஆரம்பமானதைத் தொடர்ந்து கடந்த சில நாட்கள் சென்னையில் பெரும் மழை பெய்தது. இதன் பயனாகச் சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய மூன்று ஏரிகளிலும் நீர் மட்டம் உயர்ந்தது.

இந்த மூன்றுஏரிகளின் மொத்தக் கொள்ளளவு 6,483 மில்லியன் கன அடியாகும். தற்போது 6,200 மில்லியன் கனஅடி தண்ணீர் இந்த ஏரிகளில் நிரம்பியுள்ளது. ஏரிகளில் நீர்மட்டம் உயர்ந்திருப்பதால் சென்னைக்குக் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தற்போது சென்னை நகருக்கு நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலன் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த அளவை 55 மில்லியன் காலனாக உயர்த்தும்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருகிறது.

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்தில் ஏரிகளின் நீர் மட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டு, தேவையேற்படின் குடிநீர் விநியோகம் தினசரி 60 மில்லியன் காலனாக உயர்த்தப்படும்.

## கூடுதல் ரயில் பெட்டி தயாரிப்பு

சென்னையிலுள்ள இரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில் (ஐ.சி.எப்.) ஆண்டொன்றுக்குச் சராசரி ஆயிரம் இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இனிமேல் இங்குக் கூடுதலாக இரயில் பெட்டிகள் தயாரிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன்படி இனி ஆண்டொன்றுக்குச் சராசரி 1,150 இரயில் பெட்டிகள் தயாரிக்கப்படும்



# தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம்

தமிழ்நாட்டிலேயே தொழில் வளர்ச்சியில் கோவை மாவட்டம் முன்னணியில் உள்ளது. 'இந்தியாவின் மான்செஸ்டர்' என அழைக்கப்படும் கோவை மாவட்டத்தில் இந்தியாவின் மொத்த நூல் உற்பத்தியில் 30 சதவிகிதம் தயாராகிறது. 134 நடுத்தர மற்றும் பெருந்தொழில்கள் இங்கு இயங்கி வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தொழிற்சாலைத் துறையில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உற்பத்தி ரூ.1,56,924 இலட்சங்களாகும்.

இது தவிர 500 வார்ப்படச்சாலைகள் உள்ளன. இவை மின் மோட்டார், நெசவு இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்கள் ஆகியவற்றைத் தயார் செய்து வருகின்றன. கோவை மாவட்டத்தில் மின் மோட்டார், பம்புகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், மிக்சிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் முதலியவை. தயாரிக்கப்படுகின்றன. இத்துறையில் கோவை, இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது. இந்தியா முழுவதுக்கும் இங்கு தயாரிக்கப்படும் இயந்திரங்கள் அனுப்பப்படுகின்றன. இங்கு 16,481 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டு, ரூ.276 கோடி முதலீட்டில் 1,61,799 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

தொழில்களைப் பெருமளவு தொடங்கி, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவது முகமாக, இம்மாவட்டத்தில் பொள்ளாச்சி, வால்பாறை, பல்லடம் வட்டங்கள் தொழிலில் பின்தங்கியவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனால் இங்குத் தொடங்கும் தொழில்களுக்கு நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம் மானியம் அளிக்கப்படுகிறது.

மேலும், விற்பனை வரி தள்ளிவைப்பு, ஜெனரேட்டர் மானியம், மின் மானியம் முதலியவையும் அளிக்கப்படுகின்றன. இந்தச் சலுகைகளால் சிறுதொழில் வளர்ச்சி, இந்த மூன்று பின்தங்கிய மாவட்டங்களிலும் பெருகும் என்பது திண்ணம்.

தொழிற்சாலைகள் பெருக இடவசதி முதல் தேவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு இம்மாட்டத்தில் ஏற்கெனவே கோவை (குறிச்சி மற்றும் பீளமேடு) திருப்பூர், அனுப்பர்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, சிறுமுகை முதலிய இடங்களில் தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. மேலும், மேட்டுப்பாளையம், மடத்துக்குளம், சூலூர், மலுமிச்சம்பட்டி, கோவை முதலிய இடங்களில் தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் ஏற்றுமதி பெருமளவில் பெருக்கப்பட வேண்டிய அவசியம் ஆகிறது. இதனால் பின்னலாடை ஏற்றுமதி செய்யும் தொழில் முதலியவைகளைத் தனியாகத் தொடங்க, திருப்பூர் அருகில் உள்ள முதலிபாளையத்தில் 86.65 ஏக்கர் நிலப்பரப்பில் 150 தொழிற்கூடங்கள் நடத்த திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 75 தொழிற்கூடங்கள் கட்டும் பணி முடிவடையும் தறுவாயில் உள்ளது. தற்போது ஏறத்தாழ ரூ.600 கோடி வரை பின்னலாடை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் ஏற்றுமதி ரூ.1,000 கோடியை எட்ட உள்ளது.



இத்தொழில் வளர்ச்சியால், பின்னலாடைத் தொழிலைச் சேர்ந்த பல துணைத் தொழில்கள் வளர்ச்சியடையும்.

இது தவிர, கூட்டுறவு அடிப்படையில் கீழ்க்கண்ட சங்கங்கள், தொழிற்பேட்டை நிறுவுவதற்காகத் தொடங்கப்பட்டுள்ளன.

1. சேரன் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, கோவை.
2. அறிஞர் அண்ணா கூட்டுறவுத் தொழிற்பேட்டை, தெக்கலூர்.
3. தென்னிந்திய பின்னலாடைக் கூட்டுறவுத் தொழிற்பேட்டை, திருப்பூர்.

கம்பளி நெசவுத் தொழிலில் தற்போது ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் உள்ளதால், இம்மாவட்டத்தில் பொள்ளாச்சி அருகே ஓர் தொழிற்பேட்டை அமைக்க நிலத் தேர்வுப் பணி நடந்து வருகிறது.

பல்லடம் வட்டம் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு இருப்பதால், இந்த வட்டத்தில் உள்ள கோவை-பல்லடம் சாலையில் பெருமளவில் தொழில்கள் வரவாய்ப்பு உள்ளது. எனவே, இந்தச் சாலையை ஓர் தொழில் வளர்ச்சி இடைவெளியாக அமைக்க உத்தேசிக்கப்பட்டு தொழில் அதிபர்களுடனும் தொழில் சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களுடனும் ஓர் கூட்டம் நடத்தப்பட்டு, இதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

கோவை மாவட்டத்தில் சுமார் 17,000 சிறுதொழில் நிறுவனங்களும், 140 நடுத்தர மற்றும் பெருந்தொழில்களும் இயங்கி வருகின்றன. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் இயந்திரங்கள் மற்றும் பொருட்கள் பற்றித்தெளிவாக விளக்க, கோவையில் ஒரு நிரந்தரத் தொழில் காட்சிக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. அரசிடம் இதற்கான நிலம் கோரப்பட்டு இருக்கிறது.

இம்மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டு 850 புதிய சிறு தொழில்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 8,300 தற்காலிகச் சான்றிதழ்கள் அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இரசாயனத் தொழில்கள், மருந்துப் பொருள் உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், பொறியியல், மின்னணு, தாமிரக் கம்பி, அலுமினியம், பி.வி.சி. கட்டடப் பொருட்கள், பருத்தி நூல், துணி, பின்னலாடை, கம்பளப் பின்னலாடை, கயிற்றுப் பொருட்கள் முதலிய தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் உள்ளன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழகத்தைத் தொழில் துறையில் முதலிடமாக, முதல் மாநிலமாக ஆக்குவதற்கு எடுத்துவரும் நடவடிக்கைகளையும், அரசு வழங்கும் சலுகைகளையும் பயன்படுத்தி படித்த இளைஞர்களும், தொழிலதிபர்களும் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், நமது தமிழ்நாடு தொழில் துறையில் முதலிடம் வகிக்கப்போவது உறுதி.

- நா. மனோகரன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர் மாவட்டம்.





## பேரூராட்சிகளில் சாலைகளைப் பராமரிக்க ரூ.40 இலட்சம் மானியம்

தமிழ்நாட்டில் பேரூராட்சிகளின் பொறுப்பில் சுமார் 10,000 கி.மீ. அளவுக்கு மண், சரளை, கப்பிச் சாலைகள் இருக்கின்றன. இப் பேரூராட்சி சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும், நிலைப்படுத்துவதற்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1991-92-ஆம் ஆண்டிற்காக ரூ.40 இலட்சம் மானியமாக வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இத்தொகையுடன் பேரூராட்சிகளும் அவற்றின் நிலைகளுக்கேற்ப 20 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை செலவிட்டுச் சாலைகளை மேம்படுத்தும்.

## தனியார் பள்ளி ஊழியர்களுக்கு புதிய சலுகை

அரசு ஊழியர்கள் பணியின் போது இறந்து போனால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் திட்டம் 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை அளிக்கும் திட்டம் 1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17-ஆம் தேதி முதல் தான் அமலில் இருந்து வருகிறது. இதை, சுமார் 6 ஆண்டுகள் முன்தேதியிட்டு, அரசு ஊழியர்களுக்கு அளித்ததைப்போல் 1977 ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் அமல்படுத்த தற்போது தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.






# படைவீரர் புகழ்பாடும் கொடிநாள்

## மாண்புமிகு முதல்வர் உரை

பெருமதிப்பிற்குரிய தமிழகப் பெருங்குடி மக்களே!

பாரத நாட்டினைப் பரிவுடன் பாதுகாக்கும் முப்படைவீரர்களைப் பாராட்டி மகிழும் நாள், பெருமைமிகு படைவீரர் புகழ்பாடும் 'கொடி நாள்'! எண்ணற்ற தியாகங்களைச் செய்து, நாட்டைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக்கும் இவ்வீரர்களின் மகத்தான சேவையைப் போற்றி, தியாகத்தை மதித்து அவர்களின் நலனில் நாம் அக்கறை காட்டி, நன்றி செலுத்தும் நாள்தான் கொடி நாள்.

தேசத் தலைவர்கள் பலர் அரும்பாடுபட்டுப் பெற்ற நமது சுதந்திர நாட்டினை எந்நாளும் கட்டிக் காத்திட வேண்டிய அவசியத்தை நாம் அனைவரும் அறிவோம். இந்த மாபெரும் பொறுப்பினை முன்னுரிமையோடு வகிக்கின்ற முப்படை வீரர்களின் கடமையுணர்ச்சிக்கு நன்றிக் கடன் செலுத்த நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். நமது நாட்டினை அன்னியர்களின் ஆதிக்கத்திலிருந்தும், எதிரிகளின் ஊடுருவலில் இருந்தும் காப்பாற்ற, தம்மை மெழுகுவர்த்தி போல் அழித்துக்கொள்ளும் அற்புதமான தியாகத்தைப் புரிவோர்தான் முப்படை வீரர்கள்.

நமது படைவீரர்கள் ஏற்றிருக்கிற பணியின் தன்மை, அபாயங்களும், இன்னல்களும் [illegible] நமது தாய்த்திருநாட்டினைக் காக்க [illegible] இன்னுயிரையும் தயங்காமல் ஈந்திட்ட [illegible] வீரர்களைக் கொண்டதுதான் நமது முப்படை

இந்தியச் சுதந்திரத்திற்குப் பின, இந்தியாவின் மீது போர் தொடுத்த நாடுகளின் ஆக்கிரமிப்புகளை வெற்றிகரமாக முறியடித்து, இன்றைக்கு நாம் சுதந்திரக் காற்றினைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் என்றால், அது தியாக சீலர்களான படைவீரர்கள் புரிந்த கைம்மாறு கருதாத வீரப் பணியின் விளைவினால்தான்!

1962, 1965 மற்றும் 1971 ஆகிய ஆண்டுகளில் இந்தியா மீது தொடுக்கப்பட்ட போர்களில், எண்ணற்ற படைவீரர்கள் இரத்தம் சிந்தி, இன்னுயிரை வெற்றிக்குக் காணிக்கையாக்கி, நாட்டைப் பாதுகாத்த வீர வரலாறு நம் கண்முன் இன்னமும் நிழலாடுகிறது. மேலும் நமது படைவீரர்கள் தன்னலம் கருதா அமைதி காக்கும் பணியினை, உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆற்றிய சிறப்பு மகத்தானது. **இந்தியப் படைகளுக்கு உள்ள மற்றொரு சிறப்பு என்னவென்றால், நமது இந்தியப் படை, எதிர்க்க வேண்டியதை எதிர்த்து, காக்க வேண்டியதைக் காத்து, அழிக்க வேண்டியதை அழித்ததோடு, அற்புதமாக அமைதிப் பணியினையும் பொறுப்போடு ஆற்றி வருவதுதான்.**

அடுத்து இயற்கையின் சீற்றங்கள், தாங்கொணா இன்னல்கள் விளைவிக்கும்போதும், பாதிக்கப்பட்டோரின் அல்லல்களைத் தீர்க்கும் பணியிலும் துடிப்புடன் தங்களை ஈடுபடுத்திச் செயல்படுவோர் நமது முப்படை வீரர்களே. இப்படி பல்வேறு வகையில் பரந்து விரிந்துள்ள நமது படைவீரர்களின் சிறப்புமிகு சேவை, எண்பது கோடி மக்கள் நலனைப் பாதுகாக்கின்ற மகத்தான பணியிலும் அன்றாடம் பயன்படுகின்ற பாங்கினைக் கண்டு நாம் பெருமிதம் அடைகிறோம். எனவேதான், இவர்களது சேவையைப் பாராட்டி, இந்திய அரசு தீரச் செயல்கள் புரிந்த படைவீரர்களுக்குப் 'பரம் வீர் சக்ரா' போன்ற உயர் விருதுகளை வழங்கி மகிழ்கிறது.

பரிசுகள் மட்டும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். எனவே, **நம்மைப் பாதுகாக்கின்ற படைவீரர்களின் குடும்பங்களை, அவர்கள்தம் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியோரைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்ததாகும்.** படைவீரர்களது குடும்பங்களின் நல்வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும், பொருள் உதவியும், பிற உதவிகளும் செய்திட வேண்டும் என்கிற கூளுரையை நாடு முழுவதும் கொண்டாட இருக்கும் இந்தக் கொடி நாளில் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



தமிழ்நாட்டில் முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் ஆகியோரது நலம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றினைக் காத்திடவும், காலத்தோடு அவர்களுக்கு உதவிடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பல்வேறு திட்டங்கள் இவ்வாறு செயல்பட்டு வந்தாலும், குறிப்பாக ஒருசிலவற்றை மட்டும் சுட்டிக்காட்டி, தமிழக அரசு படைவீரர்கள் மேல் என்றென்றும் கொண்டுள்ள பெருமதிப்பையும், அன்பினையும் எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

- முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்புத் தர சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவு;
- அவர்களைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவ, தொழில்நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு;
- தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சிபெற ஏதுவாகச் சிறப்பு முன் பயிற்சி;
- முன்னாள் படைவீரர் வாணிபக் கழகத்தின் மூலம் சுயவேலைவாய்ப்பு;
- இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடன் இணைந்து செயல்படுத்தப்படும் சுயதொழில் கடனுதவித் திட்டம்;

ஆகியவை முன்னாள் படைவீரர் தாங்களே சொந்தமாகத் தொழில் செய்து வளர வழிவகுக்கின்றன.

இதுபோன்றே முன்னாள் படைவீரர்களின் விதவைகள், அவர்களைச் சார்ந்த குடும்பத்தினருக்குக் கல்வி, திருமணம், மற்றும் தொழில் ஏற்படுத்தித் தருதல், வீட்டுவசதி வாரியத்தில் 7½ சதவிகித ஒதுக்கீடு ஆகியவையும் அளிக்கப்படுகின்றன.

இவைகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், **கடந்த ஐந்து ஆண்டுகளாக கொடி நாள் நன்கொடை நிதி வசூலில், இந்தியாவிலேயே நாம் முதலிடம் வகிக்கிறோம் என்கிற பெருமையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டு வருகிறோம்.** 1981-இல் ரூ.17 இலட்சங்களாக இருந்த கொடி நாள் நன்கொடை வசூல் 1990-இல் ரூ.1.45 கோடியாக உயர்ந்திருக்கிறது. இவ்வாண்டு இந்த நன்கொடைகள் இன்னமும் பல்கிப்பெருகும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இந்த நலப்பணிகள், மேலும் சீரிய முறையில் செவ்வனே தொடர தமிழக மக்கள், தங்கள் நன்கொடையினைப் படைவீரர் கொடி நாளின் பொருட்டு, தாராளமாக மனமுவந்து வழங்க வேண்டுமென்ற இந்த வேண்டுகோளை நான் உங்கள் முன் வைத்து விடைபெறுகிறேன்!

**கொடி நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வானொலி (5.12.91) மற்றும் தொலைக் காட்சியில் (4.12.91). ஆற்றிய உரை**

# கொடிநாள் நிதி வசூல் மூலம் முன்னாள் படைவீரர்கள் பெறும் பயன்கள்.

**வேலைவாய்ப்பு**

வேலையில் அமர்த்தப்பட்டோர் 1,074

**பயிற்சி**

| | |
|---|---|
| தையற்கலை | 6,653 |
| தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து | 1,565 |
| பிஎஸ்ஆர்பி | 211 |

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம்:**

முன்னாள் படைவீரர் கழகம் நிறுவப்பட்டு, கீழ்கண்ட பணிகளில் முன்னாள் படைவீரர்/சார்ந்தோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| அச்சுக்கூடம் | : 7 |
| சிற்றுந்துகள் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கும் திட்டம் | : 80 |
| சிற்றுந்துகள் நிறுத்தக்கட்டணம் வசூலிக்கும் புதிய திட்டம் | : 25 |
| பல்லவன் மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து பயணச் சீட்டுகள் விற்கும் திட்டம் | : 80 |
| மின்னணு/தொலைதொடர்பு | : 48 |
| நிர்வாகத் திட்டம் | : 12 |
| மின்னணுச் சங்கம் | : 544 |
| பாதுகாவலர்கள் | |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் தண்ணீர் வழங்குதல் | : 18 |
| ஓட்டுநர் | : 1 |

**சுயவேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| ப்ளிஸ் | : 3,953 முன்னாள் படைவீரர்கள் ரூ.7.40 கோடி கடன் பெற்றுள்ளனர். |
| பெக்சம் | : 783 நபர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். |
| செம்பெக்ஸ் 1 | : 641 நபர்கள் ரூ.21 கோடி கடன் பெற்றுள்ளனர். |
| செம்பெக்ஸ் 2 | : 169 நபர்கள் ரூ.51.38 இலட்சம் கடன் பெற்றுள்ளனர். |
| மொத்த மானியம் | : 287 நபர்கள் பெற்றுள்ளனர். |
| ஜெய்ஜவான் கடைகள் | : 305 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. |
| ஆவின் நிலையங்கள் | : 230 நபர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. |
| தொழில்மனை ஒதுக்கீடு | : 10 விழுக்காடு. |
| உடைகள் தைப்பதற்கான ஆணைகள் | : 1,89,410 சீருடைகள் |
| யுனிட் ரிஸ்டு முகவர்கள் | : 54. |

**ஜவான்ஸ் பவன்**

தற்போது 8 மாவட்டங்களில் உள்ளது. மேலும் கீழ்க்கண்டவை கட்டுமானப் பணியில் உள்ளன.

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி | ரூ.27.65 இலட்சம் |
| 2. இராமநாதபுரம் | ரூ.31.60 இலட்சம் |
| 3. திருநெல்வேலி (சி.எஸ்.டி.கேன்டீன்) | ரூ.13.04 இலட்சம் |

**முன்னாள் படைவீரர் மையங்கள்:**

தற்போது 14 மாவட்டங்களில் உள்ளது.

| | |
|---|---|
| இறுதிச் சடங்கு | ...ரூ.6.94 இலட்சம் |
| ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களின் செயற்கை உறுப்புகளுக்காக | ...ரூ.0.20 இலட்சம் |
| வயதான முன்னாள் படைவீரர்/புற்றுநோய், தொழுநோய் மற்றும் பார்வையிழந்தோருக்கு உதவி | ...ரூ.4.04 இலட்சம் |
| குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை | ...ரூ.5.41 இலட்சம் |
| தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் தையற்கலைக் கூடங்கள் | ...ரூ.4.87 இலட்சம் |
| விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | ...ரூ.0.81 இலட்சம் |
| முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர் முன்னாள் படைவீரர்கள்/விதவைகள் ஓய்வூதியம் | ... ரூ.10.50 இலட்சம் |
| உடனடி நிவாரணம் | ...ரூ.5.33 இலட்சம் |
| ப்ளிஸ் வட்டி மானியம் | ... ரூ.5.20 இலட்சம் |
| போரில் இறந்த வீரர்களின் விதவைகள்/போரில் ஊனமுற்றோருக்கு உதவி | ...ரூ.2.17 இலட்சம் |
| மாதாந்திர மானியம் | ...ரூ.3.66 இலட்சம் |
| திருமண மானியம் | ...ரூ.8.31 இலட்சம் |
| மொத்த மானியம் | ரூ.5.52 இலட்சம் |
| இருதய அறுவை சிகிச்சை | ...ரூ.0.70 இலட்சம் |
| தொழிற்கூடம் கட்டுவதற்கான மானியம் | ...ரூ.1.25 இலட்சம் |
| பயன்பெற்ற மொத்த முன்னாள் படைவீரர்கள் | ...25,000 |
| பயன்படுத்தப்பட்ட தொகை | ...ரூ.100.76 இலட்சம் |

# கல்லும் சொல்லாதோ கதை!

ம. காந்தி
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
கடலூர், தென்னார்க்காடு மாவட்டம்.

மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பணியாற்றி வரும் நிறுவனங்களுள் அருங்காட்சியகமும் ஒன்றாகும். அருங்காட்சியகங்கள் இந்நிலையில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் அருங்காட்சியகம் அமைத்தல் என்ற தமிழ்நாட்டு அரசின் கொள்கையின்படி தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில், ஓர் அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு 30.11.1989 முதல் இயங்கி வருகின்றது. இது தமிழ்நாட்டு அரசின் அருங்காட்சியகத் துறையைச் சேர்ந்தது.



கடலூர்-சித்தூர் நெடுஞ்சாலையில் இருந்து அருங்காட்சியகத்தைப் பார்த்தாலே அருங்காட்சியகத்தின் வெளிச்சுவரில் 'டயோனசரஸ்' என்ற பண்டைய காலத்துப் பெரிய விலங்கு, கண்ணாடி இழையிலான மூன்று மீட்டர் உயர மாதிரி ஒன்று பதித்து வைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. அது, காட்டில் சுற்றுவது போல் அமைக்கப்பட்டுள்ளது. அதுவே அருங்காட்சியகத்தை மக்கள் பார்க்க வேண்டும் என்ற அவாவை எழுப்பும் காட்சிப் பொருளாகும்.

கடலூர் அரசு அருங்காட்சியகம் பல நோக்குடையதாகும். இதன் கண் மாவட்ட அறிமுகக் கூடம், கற்சிற்பக் கூடம், படிமக் கூடம், தொழிற்சாலைக் கூடம், மானிடவியல் கூடம், மரச் சிற்பம் - ஓவியக்கூடம், இயற்கையியல் கூடம் என்று பலவகை அடங்கியுள்ளன.

அருங்காட்சியகத்தின் நுழை வாயிலில் வலது பக்கத்தில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் கற்சிலை நிற்கின்றது. இது அழகும் கலை நுணுக்கமும் மிகுந்தது. நுழைவு வாயிலின் இடது பக்கத்தில் அடக்கமும், கம்பீரமும் கொண்ட கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சண்டிகேசுரர் கற்சிலை பொலிவுடன் விளங்குகின்றது. இவை பார்வையாளர்களுக்கு எழிலையும், ஆய்வாளர்களுக்குக் கலையின் தன்மையையும், காலத்தையும் மன்னர்களையும் நினைவுபடுத்துகின்றன. இவ்விரு சிலைகளின் இருமருங்கிலும் அமர்ந்த நிலையில் இருக்கும் குரங்குகளின் புடைப்புச் சிற்பங்களின் நிலை வியப்பிற்குரியது. இந்தக் குரங்குகளின் சிற்பங்கள் கல் தூண்களின் பகுதிகளாகச் செதுக்கப்பட்டவை. குரங்குகளின் தோள் அணி ஐரோப்பியர்களின் தோள் அணியை ஒத்துள்ளதால் இச் சிற்பங்கள் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டு இருக்கலாம் என்று எண்ணக்கூடிய நிலை வருகின்றது.

இவைகளைக் கடந்து அருங்காட்சியகத்திற்குள் நுழைகையில் பார்வையாளர்களுக்கு இடது பக்கத்தில் 1.70 மீட்டர் உயரமுள்ள கண்ணாடி இழையிலான காளியின் மாதிரி, காட்சியில் காணலாம். அடுத்து வருவது தென்னார்க்காடு மாவட்டத்தின் அறிமுகக் கூடம். இங்கு செஞ்சி கோட்டைகளின் நிழல் படங்களும், திருவதிகையிலுள்ள புத்தர் சிலையின் நிழல் படமும் மேலும் பல கோயில்களின் நிழல் படங்களும் காண வருவோரை அவ்வூர்களுக்கும் அக்கோயில்களுக்கும் சென்று நேரில் பார்க்கத் தூண்டுவனவாம்.

கற்சிற்பக் கூடத்தில் காட்சியில் இருக்கின்ற சுப்பிரமணியர் சிலை புடைப்புருவமாக இருப்பினும், கலை நயம் மிக்கது. நிற்கும் அழகே அழகு. இடது மேல் கையில் சேவல் கொடியை ஏந்தி இருக்கிறார். போர் வீரன் சிலையில் காணப்படும் மிடுக்கான மீசையே அவன் பெரும் வீரம் படைத்தவன் என்பதை இயம்புகின்றது. கைகளில் வில்லும் அம்பும் இருக்கின்றன. இக்கூடத்தில் மேலும் வீரபத்திரர், பைரவர், சூரியன், கற்சிலைகள் காண்பவரைக் கவர்ந்து இழுப்பவனவாகும்.

அடுத்து இருப்பது படிமக் கூடம். நடராசர் செப்புத் திருமேனி கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இச்சிலையை வார்த்து அழகுபடுத்திய கலைஞனின் திறத்தை இத்திருமேனி எடுத்துரைக்கின்றது. சோமாஸ்கந்தர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதில் பிற்காலச் சோழர்களின் சிற்பத்திறன் சிறப்பாகக் காணப்படுகிறது. படிமக் கூடத்தின் பெருமையைப் பகரவே கல்பட்டு கிருஷ்ணன் படிமம் நிற்கின்றது. காட்சிக்கு எளிதானாலும், தெய்வ மணம் திகழ திரட்சியாகச் செய்துள்ளான் கலைஞன். தலையணியின் அழகும் இடுப்பிலுள்ள எளிய அணிகலன்களும் இயற்கையாக உள்ளதைக் கூறுகின்றன. அப்பரும், திருஞான சம்பந்தரும், மாணிக்க வாசகரும் தங்களுடைய இறை பக்தியை முகத்தில் காட்டுவது சிலையைச் செய்து வார்த்த ஸ்தபதிகளை எப்படி நினைக்காமல் இருக்க முடியும்.

தொழிற்கூடத்தில் நெய்வேலியின் பழுப்பு நிலக்கரி உள்ளது. பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் திறந்த வெளிச் சுரங்கம் நிழல் படமாக வைக்கப்பட்டிருக்கின்றது.

அருங்காட்சியகத்தின் மேல் மாடியில் ஒரு பகுதியில் மானிட வியல் பிரிவும் வரலாற்றிற்கும் முற்பட்ட காலப்பிரிவும் உள்ளன. தென்னார்க்காட்டில் மலை வளம் மிக்கது கல்வராயன் மலையாகும். கல்வராயன் மலையில் மலையாளிகள் என்ற மலை வாழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் வீட்டில் பயன்படுத்தும் தட்டு முட்டுச் சாமான்களும் விவசாயக் கருவிகளும் காட்சியைக் கவின்மிக்கதாக்குகின்றன.

இசைக் கருவிகளில் தோல் கருவிகளும், பேரி, எக்காளம், கொம்பு போன்ற காற்றுக் கருவிகளும் மக்கள் அறிந்துகொள்ளக்கொலு வீற்றிருக்கின்றன. வரலாற்றிற்கு முற்பட்ட மனிதன் பயன்படுத்திய பழைய கற்காலக் கருவிகளும் புதிய கற்கால மக்களின் கல் ஆயுதமும் கற்போர்க்கு களிப்பளிப்பன. இக்கூடத்தில் தோல் பொம்மைகள் உயிருள்ளோரே நேரில் ஆடுவது போல் இருக்க அவ்வளவு பெரியதாகவும் அணிகலன்கள் விளங்குவதாகவும் இருக்கின்றன. முற்காலத்தில் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வெடிக்க வெடி மருந்து பயன்பட்டது. அது ஈரமாகாமல் இருக்கவும் எரிந்து போகாமல் இருக்கவும் இரும்புக் குடுவைகளில் போட்டுப் பாதுகாத்தனர். அந்த வகையில் மூன்று இரும்புக் குடுவைகளைக் கண்டு வியக்கலாம். திருக்கோயிலூர் வட்டம் தனக்களந்தல் கிராமத்தில்திருமணங்களின் போது பவனி வந்த காட்டுநாயக்கன் மலைவாழ் மக்களின் பல்லக்கு இங்குள்ளது.

ஓவியங்களும் இந்திய நாணயங்களும் மரச் சிற்பங்களும் ஓர் அறையில் பார்க்கலாம்: வளர்கலை ஓவியங்கள் பெரிய அளவில் கண்கவர் பல வண்ணங்களில் தீட்டப்பட்டுள்ளன. ஓவியர்களின் கை வண்ணம் தெளிவாக விளங்குகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் வெளியிட்ட முத்திரை நாணயங்கள் முதல் குப்தர் கால நாணயங்கள், தென்னிந்தியாவை ஆண்ட சோழர், பாண்டியர், விஜய நகர மன்னர்கள் நாணயங்கள், கிழக்கிந்திய நாணயங்கள் வரையுள்ளவை அவ்வக்கால வரலாறு, கலை, பொருளாதாரம் ஆகியவற்றை அறிய உதவியாகின்றன. கோயிலின்



விடுமுறை நாட்களில், படிப்பு வாசனை இல்லாத உழவர்களுக்கும், எளியவர்களுக்கும் எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பது, சுகாதார முறைகளை எடுத்துச் சொல்லி அவற்றைப் பரப்புவது போன்ற ஆக்க வேலைகளில் மாணவர்கள் ஈடுபடலாம்.

—அண்ணல் காந்தியடிகள்

# தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களில் அறிவொளி இயக்கங்கள் நடத்த முதல்வர் அவர்கள் உத்தரவு

தமிழ்நாட்டில் எழுத்தறிவின்மையை முற்றிலுமாக நீக்க முதலிடம் வழங்கப்படும் என அண்மையில் நிதிநிலை அறிவிப்பின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

அரசின் தொடக்க நடவடிக்கையாக 1991-92-இல் அறிவொளி இயக்கங்கள் நடத்த ஏழு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. இத்திட்ட செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்கினை மத்திய அரசும் மூன்றில் ஒரு பங்கினை மாநில அரசும் ஏற்றுக்கொண்டுள்ளன.

மேற்கண்ட திட்டப்படி காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், புதுக்கோட்டை, கன்னியா குமரி, திருநெல்வேலி-கட்டபொம்மன், மதுரை, வட ஆர்க்காடு- அம்பேத்கர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற அறிவொளி இயக்கங்கள் குறித்து தலைமைச் செயலகத்தில் 1.12.91-இல் ஆய்வு செய்யப்பட்டது.

தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., திரு சாம் பிட்ரோடா, பிரதமரின் அறிவுரைஞர், திரு அனில் போர்டியா, மத்திய அரசின் கல்வித்துறைச் செயலாளர், திரு எல். மிஸ்ரா, (தேசிய எழுத்தறிவு இயக்கத் தலைமை இயக்குநர், புதுடெல்லி) மற்றும் மாநிலக் கல்வித் துறைச் சிறப்புச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா, இ.ஆ.ப., ஆகியோர் மேற்கண்ட ஆய்வை நடத்தினர். காமராசர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி- கட்டபொம்மன், மதுரை, வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சியர்களும் இக்கூட்டத்தில பங்குபெற்றனர்.

அறிவொளி இயக்கமானது மிகச்சீரிய பாதையில் இயங்குவதாகத் தெரிகிறது: காமராசர், புதுக்கோட்டை, பசும்பொன்-முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் 1992 தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் 90 சதவிகிதம் விழுக்காடு எழுத்தறிவு இலக்கினை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிற நான்கு மாவட்டங்களும் இந்த இலக்கினை 1992-ஆம் ஆண்டின் இறுதியில் பெறும்.

# ஒய்வூதியம் பெறுவோர்க்குக் கூடுதல் அகவிலைப் படி

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு மாநில அரசு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மத்திய அரசு கொடுத்திருப்பது போல் மேலும் ஒரு அகவிலைப்படி தவணையை 1.7.1991 முதல் வழங்க ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க, ஓய்வூதியம் ரூ.1,750-க்குள் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதமும், ரூ.1,750-லிருந்து ரூ.3,000 வரை பெறுபவர்களுக்கு 45 சதவிகிதமும் ரூ.3,000-க்கு மேல் பெறுபவர்களுக்கு 39 சதவிகிதமும்திருத்தியஅகவிலைப்படியாகஅளிக்கப்படும். இதனால் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதத்திற்குக் குறைந்தபட்சம் ரூ.33 அதிகப்பட்சம் ரூ.234 பணப்பயன் அடைவார்கள்.

மேற்குறிப்பிட்ட திருத்திய அகவிலைப்படி தமிழ்நாடு மாநில ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், அதாவது உள்ளாட்சி மன்றம், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் இறந்துவிட்ட உதவித்தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய - ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களின் குடும்பங்கள் (மாதம் ரூ.150 கருணைத்தொகை பெறுபவர்கள்) உட்பட, எல்லோருக்கும் வழங்கப்படும். இதனால் ஏறக்குறைய 2.30 இலட்சம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் நன்மை அடைவார்கள்.

இதனால் அரசிற்கு மொத்தக் கூடுதல் செலவு ரூ.20 கோடியும்,1991-92-இல் ரூ.13.33 கோடியும் கூடுதல் செலவு ஏற்படும்.

தேர்களிலிருந்து பெறப்பட்டுக் கார்ட்சியில் காணப்படும் மரச்சிற்பங்கள் மக்களின் பாராட்டுதலைப் பெறுவனவாக அமைந்திருக்கின்றன.

கடைசியில் காணக்கிடப்பது இயற்கையியல் காட்சிக்கூடம். நீர்ப்பரப்பில் அன்னம் நீந்துவது போன்ற காட்சியும், கார்ட்டில் கரடி ஈசல்களைத் தின்னப்புற்றை நோக்கி வருவது போன்ற காட்சியும், காட்சியின் அமைப்பின் சிறப்பைக் காட்டுகின்றன.

இவைதானா? கடலின் நண்டு வகைகளும், சங்கு வகைகளும், எங்கள் பங்கைப் பாங்குடன் பாருங்கள் எனக் காட்சியில் தங்கி இருப்பது காண்பவர்களுக்குப்பெரு விருந்தாகும். பூமியில் கல்-மண் வகைகளில் பல பார்ப்பதற்குள்ளன. பூமியின் மீது வளரும் செடி, மரங்களின் நார்கள், மரங்கள் காட்சியகத்தை அலங்கரிக்கின்றனவா? இல்லை. மக்களுக்குத் தங்களைப் பற்றித் தெரிவிக்கின்றன.

கடலூர், அரசு அருங்காட்சியகம், கடலூர்-சித்தூர் நெடுஞ்சாலையில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் திறந்திருக்கின்றது. அருங்காட்சியகத்திற்கு விடுமுறை நாட்கள் வெள்ளிக்கிழமைகள் இரண்டாம் சனிக்கிழமைகள் மற்றும் மூன்று தேசிய விடுமுறை நாட்கள்.



# தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய ஊழியர்கள் ஊதிய உயர்வு குறித்த ஒப்பந்தம்

தமிழநாடு கூட்டுறவு விறபனை இணைய ஊழியர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகள் குறித்து 9.12.1991-ஆம் தேதி மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. ஜி. விசுவநாதன் அவர்கள் முன்னிலையில் பேசசு வார்தகை நடைபெற்றது.

திரு. ஆச்சாரியலு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின பதிவாளர் மற்றும் திரு. இ.தனராஜ். தனி அலுவலா, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியோர் அப்போது உடன் இருந்தனர். திரு. வெ.மாயன், டான்பெட் அண்ணா தொழிலாளர் ஒன்றியத் தலைவர் திரு. குப்புசாமி தலைவர் தொழிலாளர் முன்னேறற சங்கம் மற்றும் டான்பெட் ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பட்டதாரி சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் பேச்சு வார்த்தையில் கலந்து கொணடனர். பேச்சு வார்த்தையின் முடிவில், ஒப்பந்தத்தை ஏற்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி கீழ்க்கண்ட சலுகைகள் அறிவிக்கப்பட்டன.

1. 20 சதவிகிதத்திற்குக் குறையாமல் ஊதிய உயர்வு, இதனால் ஒவ்வொரு பணியாளருக்கும் கிடைக்கக்கூடிய குறைந்த பட்ச மாதாந்திர நி… பயன் ரூ.400/-

2. சென்னை நகர ஆலைத் தொழிலாளர்க… கான நுகர்பொருள் விலைப்புள்ளி அடிப்ப… யில் ஒவ்வொரு 8 புள்ளி உயர்வுக்கும் … அகவிலைப்படி உயர்வு.

3. வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டு… அரசு ஊழியர்களுக்கு உள்ளதுபோல் வழங்கு…

4. அரசு ஊழியர்களுக்கு உள்ளதுபோல் எல… நிலையிலும் ஸ்பெஷல் கிரேடு நிர்ணயித்தல்.

5. ஒவ்வொரு பணியாளர்க்கும் மாதந்தோ… மருததுவபபடியாக ரூ.100/- வழங்குதல்.

6. பட்டப்படிப்புப் படித்த பணியாளர்களுக்குச் கூடுதல் ஆண்டு ஊதிய உயாவு வழங்குதல.

7. பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் செலவிற்காகக் கல்விச்செலவுப படி வழங்குதல்- மற்றும் குறிப்பிட்ட பணியாளாகளுககுச் சிறப்பு ஊதியம.

8. விருப்பு ஓய்வுத் திட்டம் அமலாக்குதல்.

9. ஒப்பந்தக் காலம் 4 ஆண்டுகள.

—இந்தச் சம்பள விகித மாற்றத்தினால் பயன் பெறும் பணியாளர்களின எண்ணக்கை 700.

இதனால் இணையத்திற்குக் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுககு ரூ.50 இலட்சம் ஆகும்.

பேச்சு வார்த்தை முடிவில் பணியாளர்கள மிக்க மகிழ்ச்சியுடன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் பதிவாளர் அவர்களையும். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர்




''கூட்டுறவால் கோடி நன்மை'' என்ற தலைப்பில் கவிஞர் முருகு வண்ணன் இயற்றிய கவிதைப் படைப்பு மிகவும் அருமை.

—ப. அருணாசல சண்முகம்,
களம்பூர்
(திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்)

''எயிட்ஸ் நோய் பற்றிய ஆய்வுக் கட்டுரையைப் படித்தேன். இதன் மூலம் எயிட்ஸ் நோய் என்பது என்ன? இது எவ்வாறு பரவக் கூடியது? இதனை எளிய முறையில் தடுக்க வேண்டிய முறைகள்- இவையனைத்தும் பயன் அளிக்கும் விதத்தில் அமைந்திருந்தன.

—த.வசந்தராஜா,
வாழப்பட்டாம்பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

''நானிலம் காத்த நேருவின் நடுநிலைக் கொள்கை'' பற்றிய கட்டுரையின் மூலம் நேருவின் ஆக்கப்பூர்வமான அரிய கருத்துக்களை எடுத்துக்கூறி இருந்தது பாராட்டத்தக்கதாகும்.

—க.காவேரி
வாழப்பட்டாம்பாளையம்
(தென்னார்க்காடு மாவட்டம்)

''மழைக்கால நோய்கள், எயிட்ஸ் நோய்- ஒரு அறிவுரை என்னும் கட்டுரை பயன்மிக்கவை.

—எஸ்.பி. வேலுசாமி,
கே.பி. சத்தரம்
நஞ்செய்தலையூர்,
(பெரியார் மாவட்டம்)

''மருத்துவப் பகுதி மிகவும் பயனுள்ள வகையில் இருக்கிறது - தொடரட்டும்.

—வே. கதிரவன்
திருவாரூர்.

## தமிழக அமைச்சரவையில் இரு அமைச்சர்களின் துறைகளில் மாறுதல்

தமிழக அமைச்சரவையில் சில அமைச்சர்கள் துறைகள் மாற்றப்பட்டுள்ளன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் பரிந்துரையின்படி, மேதகு ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் இது தொடர்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதன்படி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் அவர்களிடமிருந்த வனம் மற்றும் சின்கோனா ஆகிய துறைகள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி அவர்களிடமிருந்த நகர்ப்புறம் மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறை மாற்றங்களுக்குப் பிறகு இந்த அமைச்சர்களின் புதிய துறைகள் வருமாறு:

திரு டி. ஜெயக்குமார்: கால்நடைப் பராமரிப்பு, பால் வளம், மீன் வளம்.

திரு டி.எம். செல்வகணபதி: வீட்டுவசதி, குடிசைப் பகுதி மாற்று வாரியம், கிராம வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டம், வீட்டு வாடகைக் கட்டுப்பாடு, நகர்ப்புறத் திட்டம், நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

திரு கே.ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம், துறைமுகங்கள், வன வளம், சின்கோனா.

திரு அழகு திருநாவுக்கரசு: நகராட்சி நிர்வாகம், கிராமப்புற வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமப்புறக் கடன் ஒழிப்புத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், நகர்ப்புற மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்கள்.





## இந்திய விமானப் படையில் மகளிர்!

நாட்டின் பாதுகாப்புக்கு அரணாகத் திகழும் இந்திய இராணுவத்தில் மகளிரின் பங்கு உயரப் போகிறது. இந்திய விமானப் படையில் மகளிரைச் சேர்த்துக் கொள்வதென்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கெனவே இந்தியக் கடற்படையில் மகளிர் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இதைத் தொடர்ந்து தற்போது விமானப் படையும் மகளிரைப் பணிக்கு அமர்த்திக் கொள்வதென்று முடிவு செய்துள்ளது. இதன்படி விமானப்படையின் தொழில் நுட்ப வகையில் சேராத 5 பிரிவுகளில் மகளிரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

விமானப்படையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். மகளிரில் முதல் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு 1992-ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கித் தொடர்ந்து 54 வாரங்கள் அந்தந்தப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படும்.

முதலில் 5 ஆண்டுக் காலம் பணிக்காக மகளிர் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பின்னர் அவர்களின் வேலைத் தகுதியைப் பொறுத்து 11 ஆண்டுக் காலப் பணிக்கு அவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதுமட்டுமின்றி, தரைப்படையிலும் மகளிரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வது பற்றி பாதுகாப்புத் துறை யோசித்து வருகிறது. ●

## முக்கிய உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முதல்வர் நடவடிக்கை



தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி உயர்வைக் குறைக்க மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்துச் சென்னையில் தலைமைச் செயலகத்தில் 9.12.91 அன்று நடந்த கூட்டத்தில், தமிழ்நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைவாசி நிலைமைகளைப்பற்றி முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.ஜி.விஸ்வநாதன், அரசு தலைமைச் செயலர் திரு.டி.வி.வெங்கட்ராமன், உணவுத்துறைச் செயலர், நிதித் துறைச் செயலர், சட்டத்துறைச் செயலர், நுகர்பொருள் வாணிபக் கழக ஆணையர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், முதல்வர் அவர்களின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய முதல்வர் அவர்கள் தமிழக மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் உயர்ந்து வரும் விலைவாசிகள் குறித்துக் கவலை தெரிவித்தார். அரிசி, பருப்பு வகைகள், சமையல் எண்ணை, மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதிகபட்ச விலையைச் சட்டபூர்வ அடிப்படையில் நிர்ணயிப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

### குழு:

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதிகபட்ச விலையை நிர்ணயித்து, அதற்கு அதிகமாக வெளிச் சந்தையில் அந்தப் பொருட்கள் விற்கப்படக் கூடாது என்பதை ஆராய, குழு ஒன்றை அமைக்க மாண்புமிகு முதல்வர் உத்தரவிட்டார். இந்தக் குழுவில் உணவு மற்றும் நிதித்துறைச் செயலர்கள், நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் ஆணையர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். ஒரு வார காலத்துக்குள் இந்தக் குழு தனது அறிக்கையை அரசிடம் தாக்கல் செய்ய - வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

> ● நான் மூட்டை தூக்குவதில் பாரத்தினால்
> வேதனைப்பட்டிருப்பேனே யொழிய, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒருபோதும் வேதனைப்பட்டதில்லை.
>
> — தந்தை பெரியார்

### தீவிர நடவடிக்கை

விலைவாசி உயர்வைக் குறைக்கும் வகையில் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்குவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை முதல்வர் வற்புறுத்தினார். கடத்தல் மற்றும் பதுக்கல் தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாகத் தீவிரப்படுத்த வேண்டுமென்று உணவு வழங்கல் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

### விலைப்பட்டியல்

கடைகள் மற்றும் கிடங்குகளின் முன்னால் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் அவற்றின் விலைவிவரங்களை எழுதிவைப்பதை உறுதிப்படுத்தத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட வேண்டுமென முதல்வர் உத்தரவிட்டார். இதுகுறித்து, தேவையான குறிப்புகளை வழங்கித் தொடர் நடவடிக்கைகளை எடுக்குமாறு உணவு வழங்கல் துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



# படமும்

மகாகவி பாரதியாரின் பிறந்த நாளையொட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா மற்றும் அமைச்சர் பெருமக்கள் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தனர் (11.12.'91).

# செய்தியும்

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை பாரிமுனையிலுள்ள மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்தனர் (10.12.'91).



## குடும்ப அட்டை வினாத்தாள் குறித்து அரசின் விளக்கம்

குடும்ப அட்டைகளில் உள்ள விவரங்களைப் புதுப்பிப்பதற்காக அரசு விநியோகித்துள்ள வினாத்தாள் குறித்து அட்டைதாரர்கள் எழுப்பியுள்ள சில சந்தேகங்களுக்குக் கீழ்க்கண்ட விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

1. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ள இந்த வினாத்தாளை முழுவதுமாக நிரப்பி நியாயவிலைக் கடைகளில் விரைவாக, எப்படியும் 31.12.1991-க்குள் திருப்பித் தந்துவிட வேண்டும்.

2. சம்பளம் பெறுபவர்கள் சம்பளச் சான்றிதழை அளித்தால் போதுமானது. இந்தச் சம்பளச் சான்றிதழை தற்போது வழங்கப்பட்டுள்ள வினாத்தாளிலேயே அளிக்கலாம். அல்லது வேலை செய்யும் நிறுவனம் அதை வேறு ஒரு தாளிலும் வழங்கலாம். நில/கட்டடச் சொந்தக்காரர்கள், சொந்தத் தொழில்கள் செய்பவர்கள், வணிகர்கள் மற்றும் சுயவேலை செய்பவர்கள் போன்றோர் தாசில்தார் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ்ப் பெறத் தேவையில்லை. தம்து வருமான விவரங்களைக் குடும்ப அட்டைதாரர் வினாத்தாளில் தானே வழங்கலாம்.

3. ஓய்வூதியம் பெறுபவர்கள் சான்றிதழ் எதுவும் அளிக்கத் தேவையில்லை. அவர்கள் தமது ஓய்வூதியத் தொகையையும் ஓய்வூதியம் வழங்கப்படும் ஆணை எண்ணையும் குறிப்பிட்டால் போதும்.

4. இந்தத் தகவல்கள் குடும்ப அட்டைகளில் 1982-இல் பதியப்பட்ட விவரங்களை இன்றைய நிலைக்குப் புதுப்பிப்பதற்காகவே பெறப்படுகின்றன. இவை குடும்ப அட்டைகள் வழங்கவோ, பெயர்களை நீக்கவோ அல்லது சேர்க்கவோ அல்லது முகவரி மாற்றத்துக்காகவோ பெறப்படவில்லை. தற்போதுள்ள முறைப்படியே இவை தொடர்ந்து நடைபெற்று வரும்.

5. தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகள் 31.12.1992 வரை உபயோகத்தில் இருக்கும்.

6. சமையல் வாயுத் தட்டுப்பாட்டுக் காலங்களில் தேவைப்படும் அதிக மண்ணெண்ணெயின் தேவைகளை அறியும் பொருட்டே சமையல் வாயு குறித்த தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

## ஊனமுற்ற மகளிருக்கு வேலை வாய்ப்பு



தமிழ்நாட்டில், ஊனமுற்ற மகளிர் 8,244 பேர், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். இந்த ஊனமுற்ற மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கத் தமிழக அரசு புதிய திட்டம் வகுத்துள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ், 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாகச் சீருடைகள், தமிழகம் முழுவதுமுள்ள சுமார் 74 மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், ஆண்டொன்றுக்கு 64 இலட்சம் ஜோடி சீருடைகள் உற்பத்தி செய்யும் பணியில் ஊனமுற்ற மகளிரை ஈடுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி, சீருடைகள் தைத்துத் தருகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஒவ்வொரு மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கத்திலும் கண்டிப்பாக ஊனமுற்ற மகளிர் சேர்க்கப்பட வேண்டும் எனவும், அச்சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 10 பேர் ஊனமுற்ற மகளிர் சேர்க்கப்பட வேண்டும் எனவு அறிவுறுத்தப்படுகின்றது.

31.1.92-க்குள் மகளிர் தைய கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ள ஊனமுற்ற மகளி எத்தனைப் பேர் என்ற விவரம் அரசு குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பஞ்சாலைகளின் போனஸ் பிரச்சினை: மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தை

தமிழ்நாட்டிலுள்ள 524 பஞ்சாலைகளில், போனஸ் பிரச்சினை குறித்துத் தீர்வு காணப் படாமல் எஞ்சியிருந்த 22 ஆலைகளின் நிர்வாகத் தினரையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 6.12.91 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.

அன்றைய பேச்சுவார்த்தையில், 22 பஞ்சாலை களில் 4 ஆலைகளில் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது குறித்து சுமுகமான தீர்வு காணப்பட்டது. மீதமுள்ள 18 ஆலைகளின் நிர்வாகத்தினர் இம்மாதம் 12-ஆம் தேதிக்குள் போனஸ் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. இந்தப் பிரச்சினை யில் தமிழ்நாடு அரசின் நிலையைத் திரும்பவும் வலியுறுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பஞ்சாலைகளின் போனஸ் குறித்து 15.11.91 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தென் இந்திய ஆலை சங்கத்தின் (SIMA) பிரதிநிதி களுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது எடுத்த முடிவின் அடிப்படையில் இந்த 18 ஆலைகளின் நிர்வாகத்தினரும் போனஸ் பிரச்சினை குறித்து முடிவு எடுக்கவேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., முதலமைச் சரின் செயலாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., தொழிலாளர் நலத்துறை செயலாளர் திரு. ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப., தொழிலாளர் நல ஆணையர் திரு. என். ஆதிமூலம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தார்கள்.

இப்பேச்சுவார்த்தையில் ஆலை உரிமையாளர்களும், தொழிற்சங்கத் தலைவர் களும் கலந்து கொண்டனர்.

### கண்புரை அறுவைச் சிகிச்சையில் நவீன முன்னேற்றங்கள்!

கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்வோர், அந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு மருத்துவமனை யில் சில நாட்கள் தங்கி இருக்கவேண் டிய கட்டாயம் நிலவியது ஒரு காலத்தில். அத்துடன் அவர்கள் தடிமனான மூக்குக் கண்ணாடிகளைத் தங்கள் வாழ்நாள் முழுதும் அணிந்து தீரவேண் டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

இந்த நிலை இப்போது அப்படியே மாறிவிட்டது. அமெரிக்காவில் இப் போது கண்புரை அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள், அன்றைய தினமே வீட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டு விடுகின்றனர். அன்றியும், மூக்குக் கண்ணாடிகளுக்குப் பதிலாகக் கண்ணுக்கு உள்ளேயே பொருத்திக் கொள்ளக்கூடிய லென்சுகளும் புழக்கத் திற்கு வந்துவிட்டன.



# முன்னாள் படைவீரர் நலத்துறையின் முனைப்பான பணிகள்

தமிழ்நாட்டில் சுமார் 8 இலட்சம் முன்னாள் படைவீரர் களும் அவர்களைச் சார்ந்தோர் களும் உள்ளனர். இது தவிர ஆண்டுதோறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 5,000 வீரர்கள் படைப் பணியிலிருந்து இளம் வயதி லேயே ஓய்வு பெற்று, கடினமான இராணுவப் பணிக்குப்பின் அமைதி யான மறுவாழ்வை எதிர்நோக்கி, தங் களது சொந்த ஊருக்குத் திரும்புகின் றனர்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் நலம், மறுவாழ்வு ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகவும், தலை யாய கடமையாகவும் கொண்டு முன்னாள் படைவீரர் நலத்துறை, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந் துள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள் மூலம் பல மறு வாழ்வுப் பணிகளையும், அரசின் நலத் திட்டங்களையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மற்றும் தொகுப்பு நிதி ஆகிய இரண்டு நல நிதிகள் அவற் றிற்கென அமைந்த குழுக்களால் நிர் வகிக்கப்பட்டு, முன்னாள் படை வீரர் நல இயக்கத்தால் பராமரிக் கப்பட்டு வகின்றன. மேதகு ஆளுநர் தலைமையில் அமைந்துள்ள கொடி நாள் அமைப்புக் குழுவினால் ஒவ் வொரு ஆண்டும் கொடிநாள் வசூல் குறியீடு ஒவ்வொரு மாவட்டத்திற் கும் நிர்ணயிக்கப்பட்டு, மக்கள் மனமுவந்து அளிக்கும் கொடிநாள் நன்கொடைகள் முன்னாள் படை வீரர் நல நிதியில் சேர்க்கப்பட்டு, அவர்களின் நலனிற்காகவும், புணர் வாழ்விற்குமான பல்வேறு திட்டங் களுக்குப் பயன்படுத்தப்பட்டு வரு கின்றன. 1981-ஆம் ஆண்டு 17 இலட்சங்களாக இருந்த கொடிநாள் வசூல், 1990-ஆம் ஆண்டு 1.45 கோடியை எட்டியிருப்பது தமிழக மக்கள் முன்னாள் படைவீரர்கள்பால் கொண்டுள்ள பெருமதிப்பையும் அன்பையும் காட்டுகின்றது.

முன்னாள் படைவீரர் நலத்துறை யின் பணிகள் கீழ்க்கண்ட பிரிவு களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமல்படுத்தப்படுகின்றன.

1. வேலைவாய்ப்பு
2. சுய வேலைவாய்ப்பு
3. நிதியுதவி மானியம் மற்றும் இதர நலப்பணிகள்.

### வேலைவாய்ப்பு

முன்னாள் படைவீரர் அவரவர் களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றதான, அரசின் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கும், தனி யார் நிறுவனப் பணிகளுக்கும், மாநில மற்றும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் இயங்கும் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவுகளினால் பரிந்துரைக்கப்படு கிறார்கள். முன்னாள் படைவீரர்கள் இத்தகைய சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டால் போது மானது. 1990- ஆம் ஆண்டு வரை சுமார் 11,000 முன்னாள் படை வீரர்கள் சிறப்பு வேலைவாய்ப்புப் பிரிவின் மூலம் பணிகளில் அமர்த் தப்பட்டுள்ளனர். சுமார் 15,000 முன்னாள் படைவீரர்கள் உயர்பதி வேட்டில் உள்ளனர். மாநில அர சின் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் முன்னாள் படைவீரர்களால் நிரப் பப்படுகின்றவா என்பதைக் கண்

**தேர்தல் காலப் பாதுகாப்புப் பணிகளுக்குச் செல்லும் முன்னாள் படைவீரர்களுக்குப் பயிற்சி.**





முன்னாள் படைவீரர்களின் வாரிசுகளுக்குத் தையற் பயிற்சி அளித்தல்.

காணிக்க மாநில அளவிலான ஒரு குழு செயல்பட்டு வருகிறது. இக் குழு முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்காக மருத்துவத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் சரியான முறையில் நிரப்பப்படுகின்றனவா என்பதையும் கண்காணித்து வருகிறது.

வங்கிகளின் தேர்வாணைக் குழுவினால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு முன்னாள் படை வீரர்களுக்கு உதவித் தொகையுடன் கூடிய சிறப்பு முன்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இதர அரசுப் பணிகளுக்கான தேர்வுகள், பொறியியல் வேலைக்கான சிறப்புப் பயிற்சிகள் ஓட்டுநர் உரிமம் பெறப் பயிற்சிகள் ஆகியன உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. மேலும், டி.வி. (விசிஆர்) ஆகியவற்றைத் தயாரிக்கவும்; பழுதுபார்க்கவும், சிறப்புக் கம்ப்யூட்டர் பயிற்சிகளும் உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. இவற்றின் மூலம் அவர்கள் வேலைவாய்ப்பினையும் சுய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொள்ளவும் உதவியாக அமைந்துள்ளது. 1991-ஆம் ஆண்டு சுமார் 250 முன்னாள் படைவீரர்களுக்கு வங்கித் தேர்வுகளுக்கான சிறப்பு முன் பயிற்சியும் சுமார் 50 முன்னாள் படைவீரர்களுக்குக் கம்ப்யூட்டர் சிறப்புப் பயிற்சியும் உதவித் தொகையுடன் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அளிக்கப்பட்டன. முன்னாள் படைவீரரின் ஒரு மகனுக்கோ, அல்லது மகளுக்கோ மத்திய-மாநில அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்பட்டு அதற்கான முன்னுரிமைச் சான்றுகள் முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களால் வழங்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்கிட முன்னாள் படைவீரர் வாணிபக் கழகம் (Texco) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, சுமார் 500 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள், மாநகராட்சியின் இடங்களில் நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிக்கும் பணிகள், எண்ணெய் எரிவாயுக் கமிஷன், தனியார் நிறுவனங்களில் காவலர் பணிகள், ரேடியோ ஆப்ரேட்டர் பணிகள், பல்லவன் போக்குவரத்து டிக்கெட்டுகள், சீசன் டிக்கெட்டுகள் விற்கும் பணிகள் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## சுய வேலைவாய்ப்பு

சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் சிறுதொழில்கள் செய்ய முன்னாள் படைவீரர்கள் பெருமளவில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியுடன் இணைந்து வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் செம்பெக்ஸ் 1 என்ற 'திட்டத்தின் கீழ் 57 வயதிற்குட்பட்ட முன்னாள் படைவீரர்கள், ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் விதவைகள் ஆகியோர் சுயமாகத் தொழில் தொடங்க சுமார் 12 இலட்சம் வரையிலான எளிய தவணைக் கடனுதவி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் 10 சதவிகித தொழில் முனைவோரின் பங்கோடு வழங்கப்படுகின்றது. தொழில்களைத் தேர்ந்தெடுப்பது பயிற்சி, தொழில்நுட்ப ஆலோசனை, திட்ட அறிக்கை தயாரிப்பது ஆகியன ஒரு முழு உதவியாக இத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சுமார் 641 முன்னாள் படைவீரர்கள் சுமார் 2158.37 இலட்சங்கள் வரை கடனுதவி பெற்று தொழில்கள் தொடங்கியுள்ளனர்.

சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்த இவர்களை மேலும் தொழில் முனைவோர் ஊக்குவிப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

செம்பெக்ஸ்- II என்ற திட்டத்தின் கீழ் நிலவள வங்கி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுடன் இணைந்து தங்கள் நிலத்தைச் சீர்படுத்தி விவசாயத்தைப் பெருக்கிடவும், குடிசைத் தொழில்களை மேற்கொள்ளவும் முன்னாள் படைவீரர்



ளுக்கு எளிய தவணைக் கடனுதவி ட்டிச் சலுகையுடன் வழங்கப்படு ன்றது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 59 முன்னாள் படைவீரர்கள் .51.38 இலட்சங்கள் வரை கடனுதவி பெற்றுப்பயனடைந்துள்ளனர்.

'பெக்சம்' என்ற திட்டத்தின் கீழ் ன்னாள் படைவீரர்களுக்குத் தாழிற்பயிற்சி, பால்பண்ணை, காழி வளர்ப்பு ஆகியவற்றில் றப்புப் பயிற்சிகள் உதவித் தொகை டன் அளிக்கப்பட்டு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கடனுதவி டன், வட்டிச் சலுகை மானியமாக ழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் ழ் சுமார் 783 முன்னாள் படை ரர்கள் ரூ.44.30 இலட்சங்கள் ரை கடனாகவும், ரூ.8.21 இலட் ங்கள் வரை மானியமாகவும் பற்றுள்ளனர்,

வங்கிக் கடன் வட்டி மானியத் ட்டத்தின் கீழ் ரூ.75,000 வரை தாழில் தொடங்கவோ அல்லது செய்து வரும் தொழிலை விரிவு டுத்தவோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு 7 சதவிகிதத்திற்கு மேலான வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 2,042 முன்னாள் படைவீரர்கள் ரூ.3.75 கோடி வரை கடனாகப் பெற்றுப்பலனடைந்துள்ளனர். வட்டிச் சலுகையாக ரூ.11 இலட்சங்கள் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

மேலும், தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்கள் மற்றும் காலிமனைகளில் முன்னாள் படைவீரர்களுக்கு 10 விழுக்காடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இடஒதுக்கீட்டின் அடிப்படையிலோ அல்லது பொது ஒதுக்கீட்டின் கீழோ தொழிற்கூடங்கள், மனைகள் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு அவற்றின் மொத்த விலையில் 25 சதவிகிதம் அல்லது ரூ.25,000-க்கு மிகைப்படாத தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

வங்கிகளில் இருந்து கடன் பெற்று தொழில் தொடங்க இயலாத முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் விதவைகளுக்கு நல நிதியிலிருந்து பெட்டிக்கடை, காய்கறி பழ வியாபாரம் போன்ற சிறிய அளவிலான தொழில்களுக்கு ரூ.5,000 வரை மானியமாக வழங்கப்படுகின்றது. 1987-ஆம் ஆண்டிற்கு முன் சுமார் 397 படைவீரர்கள் ரூ.2.10 இலட்சங்கள் வரை மானியமாகப் பெற்றுப்பயனடைந்திருக்கின்றனர். விலைவாசி உயர்வைக் கவனத்தில் கொண்டு ஒரு ஆண்டிற்குச் சுமார் 6 இலட்சங்கள் வரை மானியமாகக் கொடுக்க முடிவு செய்ததைத் தொடர்ந்து சுமார் 959 முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்கள் ரூ.6 இலட்சங்கள் வரை மானியமாகப் பெற்று, சிறிய தொழில் தொடங்கி தங்களுக்கு ஒரு நிரந்தர வருவாயைத் தேடிக் கொண்டுள்ளனர்.

## திண்டுக்கல்லில் கூடுதல் சார்பு நீதி மன்றம்.

தமிழக அரசு 1991-92-இல் அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல்லில் கூடுதல் சார்பு நீதி மன்றம் அமைப்பதற்காக ஆணை பிறப்பித்துள்ளது. இந்தக் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஏற்கெனவே இருந்துவரும் திண்டுக்கல் நீதிமன்ற வளாகத்திலேயே இயங்கும்.

முன்னாள் படைவீரர்கள் விதவைகள், அவர்களைச் சார்ந்தோர்களுக்குத் தையற்பயிற்சி, தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சிகள் உதவித் தொகையுடன் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு இலவசமாகவோ அல்லது மானியத்துடன் கூடிய சுலபமான தவணைகளிலோ நிரந்தர வருவாய் ஈட்டும் பொருட்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், தையல் பயிற்சி பெற்ற சுமார் 595 முன்னாள் படைவீரர்களின் விதவைகள் மற்றும் மகள்கள் சுமார் 1,90,063 இணைச் சீருடைகள் தைத்து ரூ.4.80 இலட்சங்கள் வரை ஊதியமாகப் பெற்றுள்ளனர். மேலும் முன்னாள் படைவீரர்களின் மகள்களுக்கு வானொலிப் பெட்டி தயாரிப்பது, தோல் ஆடைகள் தைப்பது ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர வருவாய் ஈட்டிடும் வகையில் தொழில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஊனமுற்ற படையினர், போரில் வீரமரணம் எய்தியோரின் கைம்பெண்கள், தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள் மற்றும் கைம்பெண்கள் ஆகியோரின் மறுவாழ்விற்கெனத் தமிழ்நாட்டில் சுமார் 305 ஜெய் ஜவான் பெட்டிக் கடைகள் ரூ.13.85 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இவர்கள் மாதம் சுமார் 400-இல் இருந்து ரூ.1000 வரை வருமானம் ஈட்டி வருகிறார்கள்.

## நிதியுதவி, மானியம் மற்றும் இதர நலப்பணிகள்

வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு உடனடி நிவாரண நிதியுதவி, சிறப்பு நிவாரண நிதியுதவி, மாதாந்தர நிதி உதவி, ஓய்வூதியம் ஒப்பளிப்பு ஆகும் வரையில் இடைக்கால நிவாரண நிதி உதவி, முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற நிலையில் முதல்- இரண்டாம் உலகப் போர்களில் பணியாற்றிய 63 வயதிற்கு மேற்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்ட அவர்தம் விதவையர்க்கும் ஆயுட்கால மாதாந்தர நிதி உதவி போரில் வீரமரணம் எய்திய படைவீரர்களின் விதவையர்க்கு ஆண்டுப் பராமரிப்புப் படி, வீடு கட்ட நிதி உதவி ஆகியன அளிக்கப்படுகின்றன.

முன்னாள் படைவீரர் மற்றும் விதவையின் ஒரு மகளின் திருமணத்திற்கு நிதி உதவி, முன்னாள் படைவீரர்களின் விதவைகளுக்கு மட்டும் வீட்டு வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு மற்றும் முன்னாள் படைவீரர் இறந்தால் அவர்களின் ஈமச் சடங்கு நிதி உதவி ஆகியன வழங்கப்படுகின்றன.

அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகளில் 12 படுக்கைகள் கொண்ட தனி வார்டும், காசநோய் மருத்துவமனைகளில் 10 படுக்கைகள் கொண்ட தனி வார்டும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

காச நோய், தொழுநோய், புற்று நோய் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் முன்னாள் படைவீரர்களுக்குச் சத்துணவிற்கான நிதி உதவியும், நிரந்தரத் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட மற்றும் முற்றி

லும் கண்பார்வை இழந்த முன்னாள் படைவீரர்களுக்கும், விதவையர்களுக்கும் ஆயுட்கால மாதாந்தர நிதி உதவியும்அளிக்கப்படுகின்றன இருதய மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.20,000 வரை மானியமாக வழங்கப்படுகின்றது.

ஊனமுற்ற படைவீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி மற்றும் செயற்கை உறுப்புகள் வாங்க நிதி உதவி மற்றும் முன்னாள் படைவீரர்களுக்குச் செயற்கைப் பற்கள், மூக்குக் கண்ணாடி, காதுகேட்கும் கருவிகள் வாங்க நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. ஓய்வூதியம் பெறும் ஆதரவற்ற முன்னாள் படைவீரர்களுக்கான இல்லம் ஒன்று வேலூரில் ரூ.6,29,931 செலவில் கட்டப்பட்டுள்ளது. குறைந்த கட்டணமாக மாதம் ரூ.100 இவர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டு இவர்களுக்கு உணவு, மற்றும் பொழுதுபோக்கு வசதிகளுடன் கூடிய இருப்பிடம் அளிக்கப்படுகிறது.

முன்னாள் படைவீரரின் குழந்தைகளுக்கு மருத்துவப் பொறியியல், தொழில்நுட்பம், சட்டம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இக்கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, புத்தகப் படி, சீருடைப் படி, விடுதிக் கட்டணங்கள் ஆகியன வருமான வரம்பிற்கு உட்பட்ட விதி முறைகளின்படி வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படும் வீடுகள் அடுக்குக் கட்டடங்கள் ஆகியவற்றில் படையில் பணிபுரியும் வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கு 7½ சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், படையில் பணிபுரியும் வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்களுக்கு நீதிமன்றம் மூலம் தீர்வு செய்ய வேண்டிய வழக்குகளில் இலவசச் சட்ட உதவி, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கும் புதுப்பித்தலுக்கும் கட்டண விதிவிலக்கு ஆகியன அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 7 மாவட்டத் தலைமையகங்களில் 7 ஜவான்ஸ் பவன்களும். 2 ஜவான்ஸ் மார்க்கெட்டுகளும் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் மாவட்டத் தலைமையகங்களுக்கு வரும் முன்னாள் படைவீரர்கள் தங்குவதற்கு இடவசதி ஏற்படுத்தித் தருவதோடல்லாமல் இதில் கட்டப்பட்டுள்ள கடைகளிலிருந்து கிடைக்கும் வாடகையானது முன்னாள் படைவீரர் நலநிதியில் சேர்க்கப்பட்டு, முன்னாள் படைவீரர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், ஐந்து மாவட்டத் தலைமையகங்களில் ஜவான்ஸ் பவன் கட்டும் பணி துவக்கப்பட்டிருக்கிறது. 14 மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் நல மையங்கள் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் நலனுக்காக இயங்கி வருகின்றன. குறைந்த கட்டணத்தில் அவர்கள் தங்குவதற்கு வசதியும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் நூலகம் முதலிய பொழுதுபோக்குச் சாதனங்களும் இந்த மையங்களில் இடம்பெற்றுள்ளன. இந்த மையங்களிலேயே மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்கள், இயங்குவதால் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பற்றிய தகவல் மையங்களாகவும் இவை விளங்குகின்றன. கொடைக்கானலில் முன்னாள் படைவீரர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்று ரூ.5.70 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. மேலும் கன்னியாகுமரி, ராமேஸ்வரத்திலும் இத்தகைய விடுதிகள் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நமது நாட்டிலேயே முதன்முறையாகத் தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்கு முன்னாள் படைவீரர்களை ஈடுபடுத்தியது தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகும்.

1991-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-இல் நடைபெற்ற பாராளுமன்ற, சட்டமன்றத் தேர்தல் பாதுகாப்புப் பணியில் சுமார் 25,000 முன்னாள் படைவீரர்கள் ஈடுபட்டு சுமார் ஒரு கோடியே ஒரு இலட்சம் ரூபாய் வரை ஊதியமாகப் பெற்றனர்.

தேசிய எழுத்தறிவிப்பு இயக்கத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் ஈடுபட்டிருப்பது நமக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும். நாட்டு முன்னேற்றத்தின் ஒரு முக்கிய திட்டத்தில் பங்கேற்ப ... மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஒரு கணிசமான வருவாயையும் இது ஈட்டித் தருகிறது.

இவ்வாறு முன்னாள் படைவீரர்களின் திறமைகளை நாட்டு முன்னேற்றத் திட்டங்களிலும், சமுதாயப் பணிகளிலும் பயன்படுத்தி, அவர்களின் மறுவாழ்வுத் திட்டங்களை அமல்படுத்திட முன்னாள் படைவீரர் நலத்துறையின் பணிகள் தொடருகின்றன.

---

182383 அட்டைப்பட விளக்கம்:

**முதல் அட்டை:**

காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் உடனடியாக வெளியிடக்கோரி, அனைத்துக் கட்சியினருடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லி சென்று மாண்புமிகு பிரதமரிடம் மனு அளித்தார் (3.12.'91).

**இரண்டாம் அட்டை:**

கொடி நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னாள் படைவீரர் நல இயக்குநர் திரு. கிறிஸ்து தாஸ் காந்தி இ.ஆ.ப. அவர்களிடம் கொடிநாள் நிதியளித்தார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெய்ஸ்ரீ பாலசந்தர் இ.ஆ.ப. அவர்கள் உடனிருந்தார் (5.12.91).

**நான்காம் அட்டை:**

'எழில்மிகு சென்னை-2000'-என்ற திட்டத்தின்கீழ் சென்னையில் புதிய மூர்மார்க்கெட் வளாகத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார் (28.11.'91).

---

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்ட
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

